Documentation
complete

தமிழரசு

திங்கள் இருமுறை ஜன 1.1972 35 காசு

அரசு-மிகவுயர்ந்த தரமான

போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே [illegible] ஒரே அரசினர் [illegible] சிமெண்ட் ஆலை [illegible]

[illegible] உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
(தமிழ்நாடு அரசுத் [illegible])
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

தமிழரசு

மலர் 2] 1—1—1972 [இதழ் 13

Verified
JL
V211m1 N70
N72.2
69599

சட்டப் பேரவையில் தமிழரசு
முத்துப் பல் முறுவலிக்க ...!
நடமாடும் மருத்துவமனை
கோழிப் பண்ணை
உலகத்திலேயே மிகப் பெரிய
தோல் ஆராய்ச்சி நிலையம்
ஒரு ரொட்டியின் கதை
படைத்தவர் யார்? (கதை)
வெ[illegible]டிப் போட்டி
ஏழுமுனையில் போர் முனை (சிறுகதை)
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
வங்கதேச வரலாற்றுக் கட்டுரைகள்

முதல்வரின் முத்துக்கள்

ஆட்காட்டி விரலின் அகராதிப் பொருள்.

கடந்த உலகப் போரில் இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் சர்ச்சில் தன் இரண்டு விரல்களை 'V' என்பது போல் காட்டி(வி-ஃபார்-விக்டரி)வெற்றி நமதே என்று கூறினார். ஆனால், இன்று சிலையாக நிற்கும் அண்ணா அவர்கள் ஒரு விரலைக் காட்டுகிறார்கள். அதன் பொருள்....

நெருக்கடி நேரத்தில்—பொதுவான காரணங்களுக்காக நாங்கள் ஒன்றுபடுவோம் என்பதுதான்.

தாயைப் போல் பிள்ளை

காய்ச்சல் உள்ள தாயின் பாலை அருந்தும் குழந்தைக்கும் அந்தக் காய்ச்சல் வரும்; அதுபோல, இந்தியத் தாய்க்கு வருவது தமிழ்ச் சேய்க்கும் வரும்.

படுவது கால்; பதறுவது வாய்

இந்தியாவின் ஒரு மூலையில் நடைபெறும் போரினால் இன்னொரு மூலையில் இருக்கும் தமிழ்நாட்டையும் அது பாதிக்குமா என்றெல்லாம் கருதாமல், கால் மீது கல் இடித்ததும் வாய் அலறுவது போன்ற உணர்வுடன் தமிழகமும் ஆக்க பூர்வமான ஆதரவுகளைச் செயல் பூர்வமாக ஆற்ற என்றைக்கும் காத்திருக்கிறது.

போரிலே விளைந்த புதிய போர்

யுத்தம் அறவே முடிந்துவிட்டதாக நாம் எண்ணிக்கொள்ளக் கூடாது; யுத்தத்தின் விளைவுகளை எதிர்த்து நாம் இனி ஒரு யுத்தம் நடத்த வேண்டியிருக்கிறது.

நாடுதான் நாம்; நாம்தான் நாடு

ஒரு கோடி அகதிகளைப் பற்றி எழுந்த பிரச்சினையால் மேலும் ஆறரைக் கோடிப் பேருக்கு வாழ்வு தரவும், அத்துடன் இந்தப் போரில் தொண்ணூறாயிரம் இராணுவச் சிப்பாய்களைக் காப்பாற்றித் தரவும் வேண்டிய பொறுப்பையும் யாஹியாகான் இன்று நம்மிடம் தந்திருக்கிறார்.

இதனால், அவர்களின் வாழ்வுக்கு வழி செய்யும் அறவழியில் நாம் அந்தப்பொறுப்புக்களையெல்லாம் பிறழாமல் காக்க வேண்டியிருக்கிறது. அதற்கு நாடு உங்களையெல்லாம் நம்பியிருக்கிறது.

பழகிய சொல்; புது விளக்கம்.

நட்சத்திர இரவு என்கிறார்கள். இரவு என்றால் நட்சத்திரம் இருக்கத்தானே செய்யும்! இது வியப்புக்குரியதல்ல. இரவில் நட்சத்திரங்கள் இருப்பதுண்டு. அப்படியிருக்க நட்சத்திர இரவு என்றால் என்ன பொருள் என்று சிந்தித்துப் பார்த்தேன்,

இரவு என்றால் ராத்திரி என்று சொல்லலாம். இரவு என்பதற்கு யாசிப்பது என்று இன்னொரு பொருளும் சொல்லலாம். ஆகவே, இங்குக் காட்டப்பட்டுள்ள நட்சத்திர இரவு, நட்சத்திரங்களையெல்லாம் திரட்டித் தேசியப் பாதுகாப்பு நிதியை யாசிக்கும் நட்சத்திர இரவு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

எல்லையில் வீரர்கள்; இங்கே நாம்!

நாட்டைப் பாதுகாப்பது என்பது எல்லையில் போர் வீரர்களை நிறுத்தி எதிரியை முறியடிப்பது என்பது மாத்திரமல்ல—எல்லையில் இருக்கும் போர் வீரர்கள் வெளியிலிருந்து வருகிற பகையை எதிர்த்து நாட்டைக் காப்பார்கள்.

அதே நேரத்தில், உள் நாட்டிலுள்ள வறுமை, இல்லாமை அறியாமை, ஏழ்மை, இங்கே யிருக்கிற வன்முறைகள், ஐந்தாம் படைகள், சோர்வு இவை அனைத்தையும் போக்கி, நாம் நாட்டில் ஒரு விறுவிறுப்பு ஏற்படுத்தவேண்டும்.

வீரமும் இரக்கமும்!

பொதுவாகப் பெண்களுக்கு வீரமும் உண்டு—இரக்கமும் உண்டு. வெலிங்டன் மகளிர் கல்லூரியில் நடைபெறும் இந்த நிதியளிப்பு விழாவில், வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு நிதியாக 6,000 ரூபாயும், இரக்கத்தை வெளிப்படுத்தப் பிச்சைக்காரர் நிதியாக 12,000 ரூபாயும் அளித்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். பாதுகாப்பு நிதிக்குக் குறைவாகக் கொடுத்ததால் வீரம் குறைவு, இரக்கம் அதிகம் என்று நான் சொல்ல மாட்டேன். இப்போது எதிரிகளால் ஏற்படுகிற ஆபத்தின் அளவு குறைவு என்பதால் இதற்குக் குறைவாகவும், அதற்கு அதிகமாகவும் தந்திருக்கிறீர்கள் எனக் கருதுகிறேன்.

புதிய சகாப்தத்தை உருவாக்குவோம்!

எல்லாரும் இந்நாட்டுமன்னர் என்று பாடிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. எல்லாரும் இந் நாட்டு மன்னராக, ஒரேயொரு நாள்தான்— தேர்தல் நாளில் கையில் வாக்குச் சீட்டு இருக்கிறவரை—அந்த ஒரு நாள் தான் எல்லாரும் இந்நாட்டு மன்னராக இருக்கிறார்கள்.

வாக்களிக்கும் அந்த ஒரு நாள் மாத்திரம் எல்லாரும் இந்நாட்டு மன்னராக இல்லாமல் எல்லா நாளும்—எல்லா மக்களும் இந்நாட்டு மன்னர் என்கிற அளவிற்கு ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு—கடமை நமக்கிருக்கிறது.

சட்டப் பேரவையில் தமிழரசு

திரு எம். தேவராசன் : தலைவர் அவர்களே, 'தமிழரசு' வார ஏட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றி ஒரு தொடர் கட்டுரை வெளியிடப்படுமா என்பதை அறிய அவாக் கொண்டுள்ளேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அளிக்கின்ற ஓய்வைப் பொறுத்தது.

திரு விளநகர் சி. கணேசன்: 'தமிழரசு' இதழ் துவக்கப்பட்டதிலிருந்து இப்பொழுது விற்பனை அதிகரித்திருக்கிறதா ? வேறு மாநில அரசுகள் நடத்தும் பத்திரிகைகளைவிடச் சிறப்பான பத்திரிகை இந்த மாநிலத்தில் வெளியிடப்படுகிறதல்லவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் இல்லை. ஆனால், விற்பனையாளர்களைக் கொண்டிருக்கிற இதழ் ஒன்றை ஓர் அரசு மிகுந்த திறமையோடும் வெற்றிகரமாகவும் நடத்துகிறதென்றால் அது தமிழக அரசே என்று சொன்னால் மிகை ஆகாது. இன்றைக்குத் 'தமிழரசு' இதழ் 52,000 பிரதிகள் விற்பனை ஆகின்றன.

திரு நா. வீராசாமி : வாரத்திற்கொரு முறை கொண்டுவருகிற செயற்குறிப்பு இல்லை என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். வேலை வாய்ப்புகள், ஒப்பந்தப் புள்ளிகள் போன்ற அரசாங்க விளம்பரங்கள் 'தமிழரசி'ல் வெளிவருகின்றன. இவற்றினால் வியாபாரிகளும், வேலை வாய்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்களும் படித்துப் பயன் பெறுகிறார்கள். 'தமிழரசு' மக்கள் பலருக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் வெளிவருவதால் இதை வாரத்திற்கொரு முறை கொண்டுவர உடனடியாக அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை வார ஏடாகக் கொண்டுவர வேண்டும் என்கிற ஆர்வம் இப்பொழுது அரசுக்கு இருக்கிறது. அச்சகம் முதலிய வசதிகளை நல்ல முறையில் பெருக்கிக்கொண்டு, அந்த இதழை அழகான முறையில் அச்சிடுவதற்கேற்ற வகையில் அந்த வாய்ப்புகள் பெருகியதும் வார இதழாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறும்.

திரு ரா. ரா. முனுசாமி : 'தமிழரசு' இதழை ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் பெற்று, அங்குள்ள மக்கள் அவற்றைப் படிக்க வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். விவசாயிகள், மற்றும் எல்லாத் தரப்பிலுள்ளவர்களும் அவற்றை வாங்கிப் படிக்கவும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அதனால், நம்முடைய முதல்வர் அவர்கள் தம்முடைய அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றி அதிலே கட்டுரையாக எழுதி வெளியிட்டால் எல்லா விவசாயிகளும் படித்து அமெரிக்காவிலுள்ள நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். தமிழக முதல்வர் அவர்கள் அதில் கட்டுரை எழுதுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அமெரிக்கச் சுற்றுப் பயணத்தைப் பற்றிக் கட்டுரை எழுதுவதாக இருந்தால், அதைத் 'தமிழரசு' பத்திரிகையில்தான் எழுதுவேன்.

திரு வி. கே. இராஜாப் பிள்ளை : தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் அந்தத் தொடரில் நடந்த சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையும் அடுத்து வருகிற 'தமிழரசு' ஏட்டில் ஒன்றாக வெளியிட்டால் அது பொது மக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மிகவும் பயன்படுவதாக இருக்குமாதலால் அரசு அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூடுமானவரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் நாளேடுகளில் வந்துவிடுகின்றன. இருந்தாலும் முக்கியமான நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் 'தமிழரசு' இதழில் வெளியிடுவதற்கு முயற்சி செய்யலாம்.

Dr. H. V. Hande.—Sir, can the Hon. Chief Minister give us an assurance that he will be able to direct the Publicity Department concerned to see that this publication does not, as far as possible, give any indication that it is moving on a party line or a political party line or a ruling party line but purely on a non-party line or impartial Government publication, so that whatever publications or whatever statements on matters like Cauvery issue, whatever it is, are made in it, it will be purely a Government publication as a sort of connection between the Government and the Press and Press also, if they want, they can take out from that and publish certain portions? Will the Government not only see to it that it is a non-party publication but it also gives an impression to the public that it is not published on party lines or that it is not a party publication?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்ட 'இம்ப்ரஷன்' எதுவும் பொது மக்களிடத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பத்திரிகையினுடைய குறை அல்ல. சில பேருக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படுகிறது. அமைச்சர்களைப் பற்றிய செய்திகளைப் போட்டாலே, அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அது கட்சிச் செய்தி என்று இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. 'தமிழரசு' பத்திரிகையில் வெளிவரும் செய்திகள் அனைத்தும் பொதுவான விஷயங்கள்தான். காந்திஜி பிறந்த நாள் விழாவின்போது காந்திஜியினுடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு அவர்களுடைய படம் முகப்புப் படமாக வெளிவரும். பண்டித நேரு அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது அவருடைய வாழ்க்கை வரலாறும் அவருடைய படமும் வெளிவரும். இது போன்று எல்லாக் கட்சிகளைப் பொறுத்தும் அனைவரையும் சமமாக நடத்தும் அளவுக்குத்தான் 'தமிழரசு' பத்திரிகைச் செய்திகள் வெளிவருகின்றன. அமைச்சர்களைப் பற்றி வெளியிடும் செய்திகளை வைத்துக்கொண்டு, அமைச்சர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதற்காக அதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது நல்லதல்ல.

திரு கா. காளிமுத்து: 'தமிழரசு' ஏட்டில் ஆண்டுதோறும் நாவல் போட்டி போன்றவைகளை ஏற்படுத்தி, இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படிப்படியாக ஏற்பட வேண்டிய முன்னேற்றங்களில் அதுவும் ஒன்று.

[தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த 10—12—1971 அன்று திரு கா. வேழவேந்தன் அவர்கள் கேட்ட கேள்வியை ஒட்டி உறுப்பினர்கள் கேட்ட துணைக் கேள்விகளுக்கு முதல்வர் கலைஞர் அளித்த பதில்கள் மேலே தரப்பட்டுள்ளன.]

புறநானூற்றுச் சொல்லுக்குப் பொருளாக வந்த மகன் !

களத்திலே பெரும்போர்; வீரனொருவன் சுழன்று சுழன்று போரிடுகிறான். மதங்கொண்ட யானையொன்று அவனைநோக்கி விரைந்தோடி வருகிறது; தன்னிடமுள்ள ஒரே வேலினை அவ்வேழத்தினை நோக்கிக் குறிவைத்து வீசியெறிகிறான்; வேல்பட்ட வேழம், அலறி வீழ்கிறது.

கையிலிருந்த ஒரே வேலினால் வேழத்தை விரட்டிய வீரன், அடுத்துவரும் பகைமுடிக்க வேல் வேண்டுமே என எண்ணுகிறான்; எங்கிருந்தோ ஒரு வேல் விரைந்துவந்து அவன் உடம்பிலே பாய்ந்தது. கைவேல் எறிந்து, அடுத்துவரும் பகைமுடிக்க வேல் தேடி நின்ற வீரன், குருடன் விழி பெற்றாற்போல, பசிநோயாளன் பாற்சோறு பெற்றாற்போல மகிழ்ச்சியில் திளைத்து மெய்பாய்ந்த வேலினைக் கையிற் பறித்துக் கண்களை அகல விரித்துச் சுற்றிலும் பகை தேடி நிற்கிறான். வேல் பாய்ந்த புண்ணிலிருந்து வழிந்துவரும் வெங்குருதியையும் அவன் பொருட்படுத்தவில்லை. வீர நகை புரிகிறான்.

ஆம்! இத்தகையதொரு வீரத் தமிழ்மகனை நமக்குக் காட்டுகிறது,

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.''

—என்னும் குறட்பா.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன்னர்க் குறள் காட்டிய அத்தகையதொரு வீரத் தமிழ்மகனை—வெற்றித் திருமகனை நம் கண்முன்னே மீண்டும் கொணர்ந்து நிறுத்துவது போல, அண்மையில் நம் இந்திய எல்லையில் நடந்த போரிலே, வீரம் விளைத்திருக்கிறார் ஆறுமுகம் என்னும் தமிழ் வீரன். ஆம்! ஆறுமுகம் ஒரு வீரத் திரு.

வீரத்திரு ஆறுமுகம் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்புத்தூரையடுத்த தாதவள்ளியில் பிறந்தவர்., இராணுவத்தில் சேர்ந்து கன்னர் (Gunner) ஆகப் பணிபுரிந்தார். அவருக்கு ஓராண்டுக்கு முன்புதான் திருமணம் நடைபெற்றது.'

அண்மையில், நடைபெற்ற எல்லைப் போரில், வீரத்திரு ஆறுமுகம், ஸ்ரீநகர் விமான நிலையத்தில் காவல்புரிந்து கொண்டிருந்தார். பாகிஸ்தான் விமானங்கள், அங்கே வட்டமிட்டுத் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலின்போது வீரத்திரு ஆறுமுகத்தின் தலையில் குண்டு பாய்ந்தது. குண்டடிபட்ட ஆறுமுகத்தின் தலையிலிருந்து குருதி கொட்டியது. அவர் சாவோடு போராடிக். கொண்டிருந்த அந்த நிலையிலும் தான் நின்ற இடத்தைவிட்டு அணுவளவும் நகரவில்லை. அது மட்டுமன்று, கையில் வைத்திருந்த தன் துப்பாக்கியால், வானத்தே பறந்த பாகிஸ்தான் விமானம் ஒன்றை நோக்கிச் சுட்டார். குறி தப்பவில்லை! விமானம், எரிந்து கருகி வீழ்ந்து கொண்டிருந்ததைத் தான் பார்த்து மகிழ்ந்த வண்ணமே அவர் வீர மரணமடைந்தார். ஆம்! வீரத் திரு வீழ்ந்தது!

வீரத்திரு ஆறுமுகத்திற்கு 'வீரச் சக்கர' விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது பற்றி இந்திய இராணுவ அதிகாரி பால் என்பவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்,

''பாகிஸ்தான் விமானத்தை வீழ்த்த, தான் குண்டடிபட்ட நிலையிலும் இந்திய இராணுவ வீரர் ஆறுமுகம் வீரப்போர் புரிந்தார்; தன் உடலில். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த கடைசி வினாடிவரை அவர் போர்புரிந்து வீரச் சாதனை புரிந்தார்; அவருடைய மன வலிமையையும் தைரியத்தையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

வீரர் ஆறுமுகத்திற்கு அண்மையில் திருமணம் நடந்தது; அவர் தன் இளம் மனைவியை—அந்த வீரரின் குடும்பத்தைப் பராமரிப்பது நமது பொறுப்பு'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், வீரத்திரு ஆறுமுகத்தின் அன்பு மனைவிக்கு—ஆம் இளம் வயதிலேயே, திருமணமான ஓராண்டிலேயே கைம்மைத் துயரை அனைத்துக்

கொண்டுள்ள திருமதி முனியம்மாளுக்கு எழுதிய கடிதத்தில்,

'' ஆறுமுகம் போரில் இறந்துவிட்டார்; அவர் நாட்டிற்குச் செய்துள்ள தியாகம் என்றும் மறக்க முடியாதது; நாட்டு மக்கள் என்றைக்கும் அதனை, நினைவில் வைத்திருப்பார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரச்சக்கர விருது பெற்ற வீரத்திரு ஆறுமுகத்தின் குடும்பத்திற்குத் தமிழக அரசு, 3 ஏக்கர் நிலமும், 5,000 ரூபாய் ரொக்கமும் கொடுக்கிறது என்னும் செய்தியை வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியாளர் அறிவித்திருக்கிறார்.

தற்போது ஆறுமுகத்தின் மனைவியார் திருமதி முனியம்மாள் திருப்புத்தூர் அரசாங்க மருத்துவ மனையில், குழந்தைப் பேற்றுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். அவர், அண்மையில் செய்தியாளருக்கு அளித்த ஒரு பேட்டியில்,

''நாட்டைக் காக்கும் வீர முயற்சியில் என் கணவர் வீர மரணம் அடைந்துள்ளார் என்னும் செய்தியைக் கேள்விப் பட்டதும் நான் பெருமையடைந்தேன்.

''இப்போது எனக்குப் பிறக்கப் போவது பெண் குழந்தையாக இருந்தால் அதற்கு இந்திரா காந்தி என்று பெயரிடுவேன்; ஆண் குழந்தையாக இருந்தால் 'வீரச்சக்கரம் ஆறுமுகம்', என்று பெயரிடுவேன். அவனை வீரனாக வளர்த்து, அவனையும் இராணுவத்திற்கு அனுப்புவேன்.

''எங்கள் பரம்பரையே இனி நாடு காக்கும் வேலையில் ஈடுபடும்.

''என் கணவர் அனுப்பிய பணத்தை வைத்து வீடுகட்டத் தொடங்கினேம்; தமிழக அரசு கொடுக்கும் ரொக்கப் பணத்தைக் கொண்டு அந்த வீட்டைக் கட்டி முடித்து, அதற்கு '' ஆறுமுகம் இல்லம்'' என்று பெயரிடுவேன். அரசு தரும் நிலத்தில் விவசாயம் செய்து வாழ்க்கை நடத்துவேன்'' என்று கூறியிருக்கிறார். அந்த வீரத்திரு—ஆம்—வீரச்சக்கர ஆறுமுகம் மனைவி, புறநானூற்றுக் காலத்து வீர மகளிரை—வீரத்தாயை—மூதின் மகளிரையே நமக்கு நினைவூட்டுகிறார்.

''முன்னர் நடைபெற்ற போரிலே இவளுடைய தந்தை யானையை வென்று களத்தில் மாண்டான்; நேற்றைய போரிலே இவள் கணவன் திரளான பசுக் கூட்டத்தைக் காத்தும் அப்போரில் இறந்தனன். இன்றும் 'போர் முரசு' கேட்கிறது. களத்திலே தன் குடிப் பிறந்தவரும் போரிட வேண்டுமெனக் கருதுகிறாள்; அவளோ, ஒரே மகனன்றி வேறு குழந்தைகள் இல்லாதவள்; என் செய்வாள்?



இருதயத்துடிப்பை அறிவிக்கும் ரேடியோ

ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளியை ஆம்புலன்ஸ் வண்டியில் தூக்கிப்போட்டுக் கொண்டு மருத்துவ மனைக்கு விரைகிறேம். போகும்போது அவரது இருதயத்துடிப்பு எப்படி இருக்கிறது என்பதை, தொடர்ந்து மருத்துவமனைக்குத் தெரிவிக்கும் ஒரு ரேடியோ சாதனம் பிரிட்டனில் அறிமுகமாகியிருக்கிறது.

இருதயத்துடிப்பை ஒலி அலைகளாக மாற்றி அதனை ரேடியோ ஒலிபரப்புப் போல் மருத்துவ மனைக்கு அனுப்புவதற்கு இந்தப் புதிய சாதனம் பயன்படுகிறது. மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ள ஒரு பிரத்தியேக ரிசீவிங் செட், அந்த ஒலி அலைகளை மீண்டும் இருதயத் துடிப்பு சிக்னல்களாக மாற்றி, 'கார்டியோகிராப்' கருவியை இயக்குகிறது. இதுதான் புதிய சாதனங்கள் இயங்கும் விதம்.

கேம்பிரிட்ஜ் விஞ்ஞானக் கருவிகள் நிறுவனம் ஒன்று இந்தப் புதிய சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளது.

அந்த வீரத்தாயின் ஒரே மகனும் மிகச் சின்னஞ் சிறியவன்; அவன், அழுக்குக் கந்தையோடு, தலையிலே எண்ணெய் கூடத் தடவாமல் தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கிறன். அவனை அழைத்துவந்தாள்: அவன் தலையிலே எண்ணெய் தடவி நீவி விட்டாள். கந்தல் களைந்து, வெள்ளாடையணிவித்தாள். கையிலே வேல் கொடுத்துக் களம் நோக்கிச் செல் மகனே! சென்றுவா! பகையை வென்றுவா? என்று கூறி அனுப்புகிருள்! ஆம்.

''கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவன்தன்னை
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட்டனனே
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீ இப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே!''

என்பது பழந்தமிழ் நாட்டு 'மூதின்மகள்' ஒருத்தியை நமக்குப் படம் பிடித்துக் காட்டும் ஒக்கூர் மாசாத்தியார் பாடல். புறநானூறு கூறும் 'மூதின் மகளிர்', இருக்கின்ற ஒரு மகனை—சின்னஞ்சிறு சிறுவனைப் போர்க்களம் நோக்கியனுப்பினுள். வீரத்திரு ஆறுமுகத்தின் மனைவி முனியம்மாளோ தன் கணவனைப் போர்க்களத்தில் இழந்துவிட்ட நிலையிலும், தனக்குப் பிறக்கப் போவது ஆண் குழந்தையாக இருந்தால், அவனை வீரனாக்கிப் போர்க்களத்திற்கு அனுப்புவேன் என்று சூளுரைக்கின்றார்! புறநானூற்று வீரம் புது மலர்ச்சி பெறுகிறது. ஆம்? இருபதாம் நூற்றாண்டின் மூதின் மகளிரான திருமதி முனியம்மாளும் இந்த நாட்டின் வீர வரலாற்றில் இடம் பெறுகிறார்.

வாழ்க வீரத்திரு ஆறுமுகம்!

வளர்க அவர்தம் வீரப் பரம்பரை

வங்க தேசமே!

தங்க மானஎன் இன்ப வங்கமே!
மனத்தைக் கவருமுன் வானமும் காற்றும்
என்னுளத் திழையும் இன்ப கீதம்!
தாயே! எனக்குநீ தந்தனை வசந்தம்.
மணத்தைப் பரப்புமுன் தேமாஞ் சோலைகள்
மனத்தை மயக்கும் மென்மலர்க் காற்று!
கதிர்கள் குலுங்கும் கழனியின் சிரிப்பு!
எத்தனை அற்புதம்! எத்தனைஒளி! எத்தனைநிழல்!
எத்தனை எத்தனை காந்தக் கவர்ச்சிகள்!
ஆல மரத்தின் அடிமணற் பரப்பில்
கோலம் சொரியும் ஆற்றங் கரையில்
பச்சை மரகதப் பட்டின் பரப்பு!
அன்னய்! அன்னய்! அரியஎன் செவிகளில்
தேனய்ப் பாயும் உனது தீங்குரல்!
ஆடு மாடுகள் மேய்க்கும் சேய்கள்
மண்ணை உழுது வளஞ்செய் மக்கள்
அன்னவர் என்றன் உடன்பிறப் பாளரே
தாயே! உனது தாளினை வணங்குவன்!
அன்னய் உனது அடிமலர்த் தூளினை
தூயநன் மணியாய் என்தலையில் சூடுவேன்
உலகில் உள்ளஎன் உடைமைகள் அனைத்தையும்
உவப்புடன் வைப்பேன் உன்திரு வடியில்!
அன்னையே! அன்னையே! வாழ்கநீ வாழி!

(கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில்
இயற்றிய கவிதையின் நேரடித் தமிழ் வடிவம்)



விடுதலை பெற்ற வங்க தேசம்

வங்கத்து மண் ஒரு தங்கச் சுரங்கம்; வற்ருத நதிகளால் வளம் பெருகும் பூமி. வறண்டுவிட்ட மேற்குப் பாகிஸ்தானை வாழ வைத்த தேசம். ஏற்றுமதிச் சரக்குகளை இயற்கையிலேயே பெற்ற நாடு அது. எனவே, வெளிநாட்டு நாணயங்கள் விரைந்து வந்து குவியுமங்கே. இத்தகைய செல்வத்தை யார்தான் இழந்திடுவர்? யாகியாதான் இழப்பாரா? பூட்டோதான் பொறுப்பாரா?

வங்கத்து மக்கள் கொதித்தெழுந்து விடுதலைப் போரிட, மேற்குப் பாகிஸ்தானின் இருபதாண்டுக் கால மொழி ஆதிக்கமும், அரசியல் சர்வாதிகாரமும் மட்டும் காரணமல்ல. பொருளாதாரச் சுரண்டல் ஆதிக்கமும் பெரும் காரணமாகும். மேற்கு வளர்ந்தது. கிழக்கு தேய்ந்தது. அதுவும் வளம் பெற்றுத் திகழும் வங்கத்தின் செல்வமெல்லாம் மேற்கு நோக்கிக் கடத்தப்பட்டது. வங்க தேசம் சுரண்டப்பட்டது; வஞ்சிக்கப்பட்டது; வளமிருந்தும் வறுமை நாடாக்ககப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணியை அதிகமாகத் தேடித் தந்தது வங்கத்தின் சணல் ஏற்றுமதிதான். சணலை ஏற்றுமதி செய்வது வங்கம். அதற்குரிய வெளிநாட்டு நாணயத்தை இறக்குமதி செய்து கொள்வது மேற்குப் பாகிஸ்தான். வளம் பெருக்க வேண்டியது வங்கத்தின் கடமை. வருவாயைப் பிடுங்கிக் கொள்வது மேற்குப் பாகிஸ்தானின் திருப்பணி. ஆலைகள் எல்லாம் மேற்குப் பாகிஸ்தானில்; அதற்குரிய கூலிகள் எல்லாம் கிழக்கு வங்கத்து மக்கள்தாம். குறைந்த கூலி கொடுத்து வங்கத்து மக்களை ஏமாற்றிவிட்டு, நிறைந்து குவியும் இலாபத்தை மேற்குப் பாகிஸ்தான் அள்ளிக் கொண்டிருந்தது. மூலப் பொருட்களை வழங்குவது வங்கம். முதலாளிகள் ஆனவர் மேற்குப் பாகிஸ்தானியரே.

''இந்தச் சுரண்டலை இனியும் சகியோம்'' என எழுச்சி முரசினை முழக்கினர் வங்கத்துச் சிங்கங்கள். கிழக்கு வங்கம் இல்லையென்ருல் மேற்குப் பாகிஸ்தான் என்ன ஆகும் என்பதை அதன் பொருளாதார நிலையை நன்ருகத் தெரிந்து கொண்டால்தான் புரியும்.

'வங்கம் தனி நாடாவதைச் சகிக்க மாட்டேன்; ஒருமைப்பாட்டைக் காத்திடுவேன், என்று இராணுவத்தை அவிழ்த்துவிட்ட யாகியாகான், ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக எதையும் செய்யவில்லை. உண்மையான ஒருமைப்பாடு உள்ளத்து அன்பில் மக்கள் ஒரே நாடாக வாழ விரும்பினுல்தான் ஏற்படமுடியும். ஆனல் யாகியாகான் தனது அதிகாரம் ஒரு பரந்த பூபாகத்தின் மேல் பரவிட வேண்டும் என்றும், அந்தப் பூமி, தனது சர்வாதிகாரம் நீடிக்கப்போதிய பொருளைத் தரவேண்டும் என்றும் தான் விரும்பினர். அவர் வங்கத்து மக்களை நேசிக்கவில்லை; மண்ணையே காதலித்தார். அதனுல்தான் மக்களைக் கொன்று குவித்துவிட்டு மண்ணைமட்டுமே சொந்தமாக்க முனைந்தார். ஏனென்ருல் வங்கத்து மண் பொன்விளையும் பூமியாகும்.

1947-ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிந்தபோது அந்த நாட்டைப் பொருளாதார வளம் நோக்கித் திட்டமிட்டு முன்னேற்றத் தக்க தெளிவும் திறமையுமுள்ள பொருளியல் மேதைகள் அங்கே இருந்ததில்லை. மேலும், இயற்கைத் தாதுப்பொருட்கள், உலோகங்கள், ஆலைகள், நல்ல துறைமுகங்கள், தொழில் நுணுக்கம் தெரிந்த மேதைகள் எல்லாம் இந்தியப் பகுதிக்கே கிடைக்க நேர்ந்தது. அத்துடன் திறமையான நிருவாகிகளும் இந்தியப் பகுதியில் அதிகம் இருந்தனர். எனவே ஆட்சித் திறன் மிக்க நிருவாகிகளும் பாகிஸ்தானில் குறைவாகவே இருந்தனர். எல்லாவற்றுக்கும் மேலான, தெளிவான இலட்சியங்கள் எதுவுமே இல்லாமல் இருந்ததால், பொருளாதார முன்னேற்றம் முடங்கிக் கிடந்தது.

தெளிவான கொள்கை இல்லாமற் போனதற்குக் காரணம் தலைவர்கள்தாம். பாகிஸ்தான் பிரிந்து சென்றபோது முஸ்லீம் லீக் கட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 503. அதில் 163 பேர் நிலக்கிழார்களாகவும் பணக்காரர்களாகவும் இருந்தனர். அந்தக் கிழார்களில் பெரும்பாலோர் பஞ்சாப், சிந்து மாநிலத்தவர்களாவர். வங்கத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைவு. பாகிஸ்தானின் இராணுவம், ஆட்சி ஆகிய அதிகார மட்டங்களில் பஞ்சாப்பைச் சேர்ந்த முதலாளிகளே செல்வாக்கும் பெற்றிருந்தனர். இந்தப் பஞ்சாப் கிழார்கள் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காக ஏங்கி நின்ற கிழக்கு வங்காள மக்களைப் புறக்கணிக்கத் தொடங்கினர். ஆட்சிக்கு வந்தோர் எல்லாம் மேட்டுக் குடியினராக இருந்தனர். அவர்கள் முதலாளிகள், பணக்காரர்கள் ஆகியோரையே ஆதரிக்கத் தொடங்கினர். பொதுமக்கள் தம்து உரிமைகள் மதிக்கப்படாமல் இருப்பதை உணரவில்லை. உணர்த்துவாரும் இல்லை. ஆ வே, பொருளாதாரத் துறையி தீவிரத் திட்டங்கள் எதுவுமே தீட்டப்படவில்லை.

தீட்டப்பட்ட திட்டங்களும் மேற்குப் பாகிஸ்தானுக்குச் சாதகமாகவே தீட்டப்பட்டன. முதல் பத்தாண்டுகளாகத் தொழில் வளர்ச்சி என்பது சில பணக்காரர்களின் வளர்ச்சியே என்ருகி விட்டது. 1955-ல் தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டது; அது அரசினரால் 1957-ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே, 1957 வரை திட்டம் எதுவும் இல்லாமல், விவசாயம் போன்ற அடிப்படைப் பொருளாதாரத் துறை புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தது. பொருளாதாரம் தேய்ந்து கிடந்தது.

புறக்கணிக்கப்பட்ட கிழக்கு-வங்கம்

கிழக்கு வங்கத்தில் மக்கள் தொகை அதிகம். சதுர மைல் ஒன்றுக்கு 510 பேர். மேற்குப் பாகிஸ்தானில் சதுரமைலுக்கு 230 பேர் தான். என்றாலும் மக்கட் தொகை பெருகிக் கிடக்கும் கிழக்கு வங்கத்தைப் புறக்கணித்துவிட்டு, மேற்குப் பாகிஸ்தானில்தான் தொழில்கள் பெருகுவதற்கு வழி செய்யப்பட்டது. முதலீடுகள் தொழில் தொடக்கம் எல்லாம் மேற்கு வங்கத்தில்தான். வெளிநாட்டுக்கு ஏற்றுமதிச் சரக்குகளை அதிகம் அனுப்பி வருவாய் சேர்ப்பது கிழக்கு வங்கம்தான். ஆனால், சராசரி வருமானம் ஓர் ஆளுக்கு 30 சதவீதமேயாகும். மேற்குப் பாகிஸ்தானில் சராசரி வருமானம் அதிகமாக இருந்தது.

பாகிஸ்தான் பிரிந்தபோது, கிழக்கு வங்கத்தில் தொழில்கள் குறைவாகத்தான் இருந்தன. ஆனாலும், அதற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் எல்லாவற்றிலும் மேற்குப் பாகிஸ்தானியரே முதலாளிகளாயினர். அதாவது, தொழில் தொடங்கும் வாய்ப்பும், வசதியும் மேற்குப் பாகிஸ்தானியருக்கே வழங்கப்பட்டது. பாகிஸ்தானின் மொத்த மக்கட்தொகையில் கிழக்குப் பாகிஸ்தானில்தான் மக்கள் பெரும்பான்மையாக இருந்தனர். என்றாலும் பெரும்பான்மை மக்கள் வாழும் கிழக்கு வங்கத்தைப் புறக்கணிப்பதால் ஏற்படவிருக்கும் பின்விளைவுகளை எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனர், மேற்குப் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள். கிழக்கு வங்கத்தைப் புறக்கணித்ததால் பாகிஸ்தான் முழுவதுமே பாதிக்கப்பட்டது. கிழக்கு வங்கத்தின் விவசாயத்தைப் புறக்கணித்ததால் உணவு உற்பத்தி குறைந்தது. அதன் விளைவாக 1952 வரை உபரியாக உணவுப் பெருக்கம் செய்துகொண்டு இருந்த பாகிஸ்தான், உணவுக்கு வெளிநாட்டில் கையேந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஓரவஞ்சகப்போக்கு, பாகிஸ்தானின் இரண்டு பகுதிகளுக்குமிடையே ஏற்றத்தாழ்வை வளர்த்தது. இதனை 1955-ஆம் ஆண்டிலேயே பாகிஸ்தானின் திட்டக் குழுவின் தலைமைப் பொருளியல் மேதையான டாக்டர் எம். ஐ. குரேஷி என்பார் தெளிவாகச் சுட்டிக் காட்டி எச்சரித்தார். "1947-ஆம் ஆண்டில் இருந்ததைவிட, 1954-55-ல் சராசரி வருமானம் குறைவாகவே இருக்கும், என்று தெரிகிறது. மக்களின் வருமானத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரித்துவிட்டது. நாட்டின் தேசிய வருமானமோ குறைவாக இருக்கிறது. மக்கள் தொகையோ பெரிதாக இருக்கிறது. கிடைக்கின்ற வருவாயும் சமமாக முறையாகப் பங்கிட்டு மக்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் ஏற்கனவே தாழ்ந்துகிடந்த மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் தாழ்ந்துவிட்டது," என்று அவர் கூறினார். பாகிஸ்தானின் பொருளாதார நிலையைப் படம் பிடித்துக் காட்ட வேறு யார் வர வேண்டும்?

வங்கத்தின் சொத்து கடைத் தேங்காயானது

வங்கத்தின் செல்வம் எல்லாம் மேற்குப் பாகிஸ்தானுக்கே பயன்பட்டது. தொடர்ந்து ஆண்டு வந்த பாகிஸ்தானின் சர்வாதிகாரிகள் கிழக்கு வங்கத்து மக்களை வஞ்சித்து அவர்களின் செல்வத்தை மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளுக்கே காணிக்கையாக்கிக் கொண்டிருந்தனர். இதை வேறு வகையாகவும் சொல்லலாம். அதாவது காளியிடம் திருடி மூளியிடம் கொடுத்தது போல என்பார்களே அப்படிச் சொல்லலாம். முதல் பதினான்கு ஆண்டில் கிழக்கு வங்கத்தின் வெளிநாட்டு வாணிபத்தால் கிடைத்த இலாபம் ரூ. 474 கோடி. அந்தத்தொகை முழுவதும் மேற்குப் பாகிஸ்தானின் பற்றாக்குறையைச் சரிக்கட்டவே பயன்படுத்தப்பட்டது. அது மட்டுமல்லாது உள்நாட்டு வாணிபத்தில் கிழக்கு வங்கத்தை வஞ்சித்து மேற்குப் பாகிஸ்தான் ஈட்டிய தொகை மேலும் ரூ. 253 கோடியாகும். இவ்வாறு மேற்குப் பாகிஸ்தான் வளர்ந்தது; வங்கத்தின் வளம் தளர்ந்தது. கிழக்கு வங்கத்தின் வெளிநாட்டு வருமானத்திற்கு ஈடாக எதுவுமே கொடுக்காமல் மேற்குப் பாகிஸ்தான் முழுவதும் ஏப்பமிட்டது.

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்.

- * 'தமிழரசுக்'குக் கடிதம் எழுதும் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா எண்களைத் தவறாது குறிப்பிடவேண்டும்.
- * சந்தாவைப் புதுப்பிக்கும் போது சந்தா எண்ணுடன் 'புதுப்பித்தல்' என்பதையும் குறிப்பிடவேண்டும்.
- * தங்களின் முகவரிகளைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.
- * சந்தா தமிழ் இதழுக்கு அல்லது ஆங்கில இதழுக்கு என்பதையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மேற்குப் பாகிஸ்தானில் வளர்கின்ற தொழில்களின் மூலம் பயனடைவோர் மேற்குப் பாகிஸ்தானியர் மட்டுந்தான். அத்தொழில்களின் மூலம் கிடைக்கும் வருவாய், கிழக்கு வங்கத்துக்கு வழங்கப்படுவதில்லை. மேற்குப் பகுதியின் வளம் கிழக்குப் பகுதிக்குக் கிடைக்காமல் தடைப்பட்டுப் போனதால், இரண்டு பகுதிகளும் சீரான பொருளாதார அமைப்பைப் பெறாமல், முரண்பட்டு நின்றன; மோதிக் கொள்ள நேர்ந்தது. இந்த உண்மையை உணராமல், உணர்ந்தும் மறைத்துவிட நினைத்து முறிவுக்கே வழிவகுத்து விட்டனர் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள்.

நிதி நிலையைக் கணக்கிட்டுக், கிழக்கு வங்கத்துக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் தொகையைவிட அதிகமாகவே அங்கிருந்து பறிக்கப்பட்டது. இவ்வகையில், கிழக்கு வங்கம் ஆண்டுதோறும் 21 கோடி ரூபாய் இழந்துவந்தது. நிதிநிலை அறிக்கையிலும் 2/3 பகுதி மேற்குப் பாகிஸ்தானுக்கே ஒதுக்கப்பட்டது.

கிழக்கு வங்கத்தில் தொழிலில் முதலீடு செய்வது மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளேயாகும். அரசாங்கம் மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளுக்கு ஊக்கம் கொடுத்துக் கிழக்கு வங்கத்தில் கிடைத்த இலாபத்தை மேற்குப் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும்படிச் செய்தது. மேற்குப் பாகிஸ்தான் முதலாளிகளை ஊக்கப்படுத்திவிட்டுக், கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள பணம் படைத்தவர்களை அடக்கி ஒடுக்கியது அரசாங்கம்.



வெண்பாப் போட்டி 26

ஈற்றடி : ஓயா துழைத்துயர் வோம்

முடிவுத் தேதி : 17—1—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

கிழக்கு வங்கம் விவசாய நாடாகும். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு கிழக்கு வங்கத்தில் தொழில்களை வளர்ப்பது பற்றியே அக்கறை காட்டாமல், மேற்குப் பாகிஸ்தானில் மட்டுமே தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தியுள்ளது அரசு. மேற்குப் பாகிஸ்தானில் உற்பத்தியாகும் பொருட்களுக்குக் கிழக்கு வங்கம் ஒரு சந்தையாக மட்டுமே பயன்பட்டு வந்தது. இவ்வாறு கிழக்கு வங்கத்தில் தொழிலதிபர்களும் தலைதூக்க முடியாமலே பொது மக்களும் மேற்குப் பாகிஸ்தானில் உற்பத்தியாகும் பொருட்களையே வாங்கவேண்டிய கட்டாயத்திலிருந்து மீளமுடியாமல் தவிக்கும் ஒரு சிக்கலான நிலையைப் பாகிஸ்தானின் மத்திய அரசு ஏற்படுத்தியது.

வங்கதேசத்தில் விடுதலை முழக்கம் ஏன், எப்படிப் பிறந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னர் இத்தகைய அரச தந்திர சுரண்டல் வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும். வங்க தேசம், மேற்குப் பாகிஸ்தானின் தொழில் வளர்ச்சிக்கு மூலப் பொருள் வழங்கும் பூமி. வருவாவாய் பெருக்க உதவும் சந்தை. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் ஏராளமான இயற்கைச் செல்வங்களைக் கொண்ட பூமி.

வெளிநாட்டுச் செலாவணி வங்கத்தால் வருவதால் அது வங்கத்திற்கே என்று ஆகிவிட்டதால், மேற்குப்பாகிஸ்தானின் தொழில்களுக்கு முதலீட்டுத் தொகை இல்லாமல், நடக்கும் தொழில்களும், தவழும் தொழில்களும், ஓடும் தொழில்களும் நலிந்து தளர்ந்து முடங்கிப் போய்விடும். அதைச் சரிக்கட்ட வெளிநாடுகளிடமிருந்து கடன் பெறலாம். ஆனால், காலமெல்லாம் கடன்கார நாடாகவே பாகிஸ்தான் இருக்க வேண்டியதிருக்குமே?

வங்க தேச விடுதலைக்குரிய பொருளாதாரக் காரணங்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டதல்ல; சுரண்டப்படும் எந்த நாடும் மெல்ல மெல்லத்தான் தனது நிலையை உணரும். ஆங்கிலேயரின் சுரண்டலைக் கண்டுபிடித்து, உணர்ச்சி கொண்டு, வெளியேற்றிடப் போராடுவதற்கு எவ்வளவு காலமாகியது! சுரண்டப்படும் நாடுகளின் வரலாறு ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. சுரண்டல் என்பதே மறைமுகமாக நடைபெறுவதுதான். அதனால் தான் அதைக் கண்டுபிடிக்க நாளாகிறது. ஆனால் 'சுரண்டப்படுகிறோம்' என்பதை உணர்ந்துகொண்ட எந்த நாடும் விடுதலை பெற்றே தீரும். அதற்கு வங்க தேசம் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும்.

அகதிகள் சுமை!

வங்க தேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த அகதிகளினால் இந்தியாவிற்குத் தாங்கமுடியாத சுமைஏற்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அகதிகளின் மொத்த எண்ணிக்கை 1 கோடி

(ஐ.நா. சபையில் உறுப்பினராக உள்ள பெரும்பாலான நாடுகளின் மக்கட்தொகையைவிட அதிகமாகும்).

முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகள் 67 இலட்சம் பேர்

	கோடி ரூபாய்
1972-ஆம்ஆண்டு மார்ச்சு மாதம் வரை ஏற்படக் கூடிய மொத்தச்செலவு	525
நவம்பர் 1971 வரை ஏற்பட்டுள்ள செலவு.	190
திட்ட ஒதுக்கீடு	260
துணை வரி விதிப்பு	100
பொருளாகவும், தொகையாகவும் கிடைத்த அந்நிய உதவி	77.6
எதிர்பார்க்கப்படும் அந்நிய உதவி மொத்தம்	187

* *

அகதிகள் முகாம்	896
அகதிகளைக் கவனிக்கும் டாக்டர்கள்	800
துணை மருத்துவ ஊழியர்கள்	2,100
குழந்தைகள், பெண்களுக்கான சத்துணவு நிலையங்கள்	70
காலிசெய்து கொடுக்கப்பட்டுள்ள பள்ளிக் கூடங்கள்	2,500
பள்ளிகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்	5 இலட்சம்

திரிபுரா மாநிலத்திலும், எல்லையோர நகரங்களிலும் வாழும் மக்கள் தொகைகளை விட, அகதிகளின் தொகை அதிகமாகிவிட்டது.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

19/20, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1.

தந்தி விலாசம் : ‘அப்பாங்க்’
தபால் பெட்டி எண் : 226
தொலை பேசி எண் : 20367

	(வருடத்திற்குச் சதவீதம்)
கரண்ட் அக்கௌண்ட்	0·50
சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்ட்	4·00
சீசன் டெபாஸிட்டுகள்—ரூ. 1000ம் அதற்கு மேலும்	
15 நாட்கள்	2·00
46 நாட்கள்	3·00
பிக்செட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும்	
91 நாட்கள்	4·75
6 மாதங்கள்	5·25
12 மாதங்கள்	6·25
2 வருடங்கள்	6·76
3 வருடங்கள்	7·25
4 வருடங்கள்	7·50

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஷிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களில் டெபாஷிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தைவிட ½ சதவீதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டிபாஸிட்டுகள் :

மாதத் தவணை	தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.						
	12	24	36	48	60	72	84
ரூ. 5-ம் அதன் மடங்குகளும்	ரூ. 62	128·50	201	278	362·50	452	548·50

ஆர். கனகசபை
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.

நெய்வேலியும்...நமது நாடும்



நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உரப்பட்ட (46%) அளவுக்கு நைட்ரோஜன் கொண்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

[illegible]

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் [illegible] முதலாவது.

கட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி—லிக்கோ:
[illegible]

நெகோலின்:
[illegible]

தார்ப்பொருள்கள்:
[illegible]

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—!

15

வங்கத்தின் தங்கம்

“ வங்காளத்தின் நண்பன் ” (பங்காள பந்து) என்று வங்காள மக்களால் அன்புடன் அழைக்கப்படும் செய்கு முஜிபுர் ரகிமான் கண்ட கனவு நனவாகி விட்டது!

ஆம்! ‘ வங்காள தேசம் ’ மேற்குப் பாகிஸ்தானின் கோரப் பிடியிலிருந்து விடுபட்டு 16—12—1971-ல் விடுதலை பெற்றுவிட்டது!

ஆனால் வங்காள தேசத்தை உருவாக்க முயன்ற முஜிபுர் ரகிமான் மேற்கு பாகிஸ்தானில் எங்கோ ஓர் இடத்தில், யாருக்கும் தெரியாமல் வெஞ்சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்!

மேற்குப் பாகிஸ்தானின் ஆதிக்கத்தில் காலங் காலமாகக் கண்ணீர் சிந்திய வங்காள மக்கள், கடைசியில் தங்கள் செந்நீரைச் சிந்தி, வங்காளத்தைப் பிரித்து விட்டாலும், தங்கள் தலைவன் முஜிபுர் ரகிமான் விடுதலை பெறும் நாள் எந்நாளோ என்று ஏங்கித் தவிக்கின்றனர்!

வங்காள தேசத்திற்காகத் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைச் (10 ஆண்டுகளுக்கும் மேலாக) சிறையிலேயே கழித்து வரும் முஜிபுர் ரகிமான் 1920-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாள் பரித்பூர் மாவட்டத்தில் உள்ள தங்கிபரா என்ற ஊரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில், பிறந்தார். அவர் உயர்தரக் கல்வியைக் கல்கத்தாவில் கற்றார்; சட்டப் படிப்புப் பட்டத்தையும் அங்குதான் பெற்றார். 1947-ஆம் ஆண்டில் பட்டதாரி ஆதவற்கு முன்பே, முஜிபுர் அரசியலில் ஈடுபட்டார்.

விளையும் பயிர் முளையிலே!

பதினேழு வயதில், பள்ளிக்கூட மாணவனாக இருக்கும் போதே அரசியல் போரணியில் கலந்து கொண்ட காரணத்திற்காக ஒரு வார சிறைத்தண்டனை அனுபவித்தார். முஜிபுர் ரகிமானின் அறிவுத் திறனையும், ஆற்றலையும், மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற துடிப்பையும், துணிவையும் கண்ட எச். எஸ். சுராவர்த்தி (பிற்காலத்தில் பாகிஸ்தானின் தலைமை அமைச்சராக இருந்தவர்) முஜிபுர் ரகிமானை முஸ்லீம் லீகில் சேருமாறு தூண்டினார். இஸ்லாமியக் கல்லூரி மாணவனாக இருக்கும்போதே முஸ்லீம் லீக் தலைவர்களுடன் முஜிபுர் ரகிமானுக்குநெருங்கிய தொடர்பு உண்டு.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, இஸ்லாமிய மதத்தின் பேரால், கிழக்கு வங்காளம் சுரண்டப்படுவதையும், கிழக்கு வங்காள மக்கள் தாழ்த்தப்படுவதையும் கண்ட முஜிபுர் ரகிமானுக்கு முஸ்லீம் லீகின் கொள்கைகள் பிடிக்கவில்லை. ஆயினும் அவர் முஸ்லிம் லீகுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் டாக்கா நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்று முஜிபுர் ரகிமானின் கண்களைத் திறந்தது !

மொழிப்போர் !

“ உருது மொழியே இந்த நாட்டின் தேசிய மொழியாக ஆகப் போகிறது............ எவரேனும் இதை ஒப்புக் கொள்ளாமல், வேறு ஏதேனும் சொன்னால், அவர்கள் பாகிஸ்தானின் பகைவர்களாவார்கள்” என்று 1948-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21-ஆம் நாள் டாக்காவில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் ஜனப் ஜின்னா அவர்கள் குறிப்பிட்டார். அதைக் கேட்டவுடன் முஜிபுர் ரகிமானின் கண்கள் திறந்தன. மேற்குப் பாகிஸ்தானியர்களின் ஆதிக்க மனப்பான்மை அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. உடனே ஒரு சில மாணவர்களைக் கூட்டிக் கொண்டு ஜனப் ஜின்னாவின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்தார் முஜிபுர் ரகிமான். அதனால் அங்கேயே முஜிபுர் ரகிமானும், மாணவர்களும் கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர்.

கிழக்கு வங்க மக்களின் மேல் உருதுமொழி திணிக்கப்பட்டதால், முஜிபுர் ரகிமான் முஸ்லிம் லீகிலிருந்து எதிர் முனைக்குச் செல்ல நேர்ந்தது. உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் கிழக்கு வங்காளம் முழுவதுமே ஈடுபட்டது: கைது செய்யப்பட்ட முஜிபுர் ரகிமான் 7 நாள் தண்டனை விதிக்கப்பட்டார்.

விடுதலையடைந்த பின்பு, ரகிமான் தன் கொள்கைக்கு ஆதரவு தேட மேலும் தீவிரமாகப் பாடுபட்டார்.

மேற்குப் பாகிஸ்தான் அரசு, கிழக்குப் பாகிஸ்தான் மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்துவதையும், அரசியல் பொருளாதாரத் துறைகளில் கிழக்குப் பாகிஸ்தான் புறக்கணிக்கப்படுவதையும் கண்டிப்பதில் முஜிபுர் ரகிமான் முழு மனத்துடன் ஈடுபட்டார். மத அடிப்படையில் வங்காள மக்கள், எவ்வாறு வாய்ப்பூட்டுப் போடப்படுகிறார்கள் என்பதையும், முஸ்லீம் லீக் மேற்கொண்டு வரும் தந்திரங்கள் யாவை என்பதையும் விளக்கி, “ மேற்குப் பாகிஸ்தானியர்களை நம்ப வேண்டாம் ” என்று கூறி உடன் பிறந்த வங்காளிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். முஜிபுர் ரகிமானின் கருத்துக்கள் காட்டுத் தீ போல் பரவியதுகண்ட ஆட்சியாளர், அவரைக் கைது செய்து இரண்டரை ஆண்டுக் காலம் சிறையில் வைத்திருந்தனர்.

விழிப்பு உணர்ச்சி

முஜிபுர் சிறையில் இருந்தாலும், அவருடைய கொள்கைகள் மக்களிடையே பரவிய

தால், மக்களுக்காகப் பரிந்து பேசும் முக்கிய மனிதராக, மக்கள் மனத்திலே இடம் பெற்று விட்டார். அதனால் 1954-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநிலத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓராண்டிற்குப் பிறகு பாகிஸ்தான் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954-ஆம் ஆண்டில் கொஞ்ச காலம் கிழக்கு வங்காளத்தில் ஆட்சி செய்த பசல் ஹக் அமைச்சரவையில் வணிக அமைச்சராகப் பணியாற்றினார். மீண்டும் சிறிது காலம் அட்டர் ரகிமான் அமைச்சரவையிலும் பொறுப்பேற்றிருந்தார்.

பாகிஸ்தானில் புதிய அரசியலமைப்பு 1956-ஆம் ஆண்டில் பிரகடனப் படுத்தப்பட்டது. முஜிபுர் ரகிமானும் இதர அவாமி லீக் தலைவர்களும் அதைப் பலமாக எதிர்த்தனர். கிழக்குப் பாகிஸ்தானுக்கு முழு சுய ஆட்சி வேண்டுமென்றும், மேற்கு, கிழக்குப் பாகிஸ்தான்களுக்கிடையே பொருளாதார வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதிலும், நிதி ஒதுக்குவதிலும் மிகுந்த பாகுபாடு காட்டப்படுவதற்கு முடிவு கட்ட வேண்டுமென்றும் தீவிர இயக்கம் நடத்தினர்.

அடிக்கடி சிறைவாசம்!

அயூப்கான் 1958-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தார். அதன்பின் முஜிபுர் ரகிமான் அடிக்கடி சிறைப்பிடிக்கப்பட்டார். 1958 அக்டோபரிலும், 1962-ஆம் ஆண்டிலும், 1966-ஆம் ஆண்டிலும் முஜிபுர் ரகிமான் தண்டிக்கப்பட்டார்.

முஜிபுர் ரகிமான் 1968-ஆம் ஆண்டில் விடுதலை செய்யப்பட்டார். விடுதலையாகிய சற்று நேரத்திலேயே, வரும் வழியிலேயே, முஜிபுர் ரகிமான் மீண்டும் கைது செய்யப்பட்டு, அகர்தலா சதி வழக்கில் தொடர்புப் படுத்தப்பட்டார். அச்சதி வழக்கு 1969-ஆம் ஆண்டு ஜனவரியில் திருப்பிப் பெறப்பட்டு, மீண்டும் முஜிபுர் ரகிமான் விடுதலையானார்.

அயூப் வீழ்ச்சி

இந்தியாவுக்கும், கிழக்குப் பாகிஸ்தானுக்கும் எண்ணற்ற தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்து வந்த ஜெனரல் அயூப்கான் 1969-ஆம் ஆண்டு மார்ச்சு 25-ஆம் நாள் ஆட்சி பீடத்திலிருந்து கவிழ்ந்தார். அயூப்பின் வீழ்ச்சிக்கு முஜிபுர் ரகிமான் மேற்கொண்ட நடவடிக்கைகளே முக்கிய காரணம் என்றால் மிகையல்ல.

அயூப்கானுக்குப் பிறகு ஆட்சி பீடமேறிய ஜெனரல் யாகியாகான், பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஆட்சியை ஒப்படைப்பதாக உறுதி கூறினார். 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், பாகிஸ்தானின் பிரிவினைக்குப் பிறகு முதன் முதலாக, வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

மடக்கு சைக்கிள்

ஆடைகளை மடித்துப் பெட்டிக்குள் வைத்துக் கொள்வது போல், சைக்கிளை நான்காக மடக்கிக்'கார் டிக்கி'யில் வைத்துக் கொள்ளலாம். மறுபடியும் எடுத்து விரித்தால் முழு சைக்கிள் உருவாகும். கார் செல்ல முடியாத இடங்களில் இதைப் பயன்படுத்தலாம். ஜெர்மன் கூட்டாளிங் ருடியாரில் உருவாக்கப்படும் இந்தச் சைக்கிளின் விலை ரூ. 200.

அவாமி லீக்கின் பெரும் வெற்றி

கிழக்குப் பாகிஸ்தானுக்கு முழு சுய ஆட்சி வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, 6 அம்சத் திட்டத்துடன், முஜிபுர் ரகிமானைத் தலைவராகக் கொண்டு தேர்தல் களத்தில் அவாமி லீக் இறங்கியது. நாடாளுமன்றத்துக்கான 313 இடங்களில் 167 இடங்களையும், கிழக்குப் பாகிஸ்தான் மாநில சட்டமன்றத்துக்கான 300 இடங்களில் 288 இடங்களையும் அவாமி லீக் கைப்பற்றியது!

பெரும்பான்மை இடங்களைப் பெற்ற அவாமி லீகிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டிய யாகியாகான், பூட்டோவைக் கலந்து கொண்டு, முஜிபுர் ரகிமானிடம் கிழக்கு வங்க சுய ஆட்சிபற்றிப் பேரம் பேசினார். டாக்காவில் முஜிபுர் ரகிமானுக்கும் யாகியாகானுக்கும் இடையில் 10 நாட்களுக்கும் மேலாகப் பேச்சு வார்த்தை நடந்தது. 98 சத மக்கள் விரும்பும் 6 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பூட்டோ குறுக்கிட்டார். ‘‘ஆறு அம்சத் திட்டத்தில் எந்தவிதத் திருத்தமும் செய்யப் பூட்டோவுக்கு உரிமை இல்லை’’ என்று கூறினார் முஜிபுர் ரகிமான்.

நயவஞ்சகம்

முஜிபுரின் வல்லமையைக் கண்ட யாகியாகான் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போதே பெரும்படையை வரவழைத்துவிட்டு, மார்ச்சு 25-ஆம் நாள் பேச்சு வார்த்தையைத் திடீரென்று, நயவஞ்சகமாக முடித்துக் கொண்டார். முஜிபுர் ரகிமானை மார்ச்சு 26-ஆம் நாள் காலையில் கைது செய்து மேற்குப் பாகிஸ்தானுக்குக் கொண்டு சென்று விட்டார் யாகியாகான்.

நாட்டுக்காகப் பாடுபட்ட நல்லவர் முஜிபுர் ரகிமான், யாகியாகானின் கொடுஞ்சிறையிலே வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார். முன்பே 10 ஆண்டுக் காலத்திற்கும் மேலாகப் பாகிஸ்தான் சிறையிலே கடுந்தண்டனை அனுபவித்த முஜிபுர், இப்பொழுது சிறையில் இருப்பதைப் பற்றிக் கவலைப்படமாட்டார். ஆனால் ‘‘நமக்காக வல்லவோ ஓர் உயிர் சிறையிலே ஊசலாடிக் கொண்டிருக்கிறது’’ என்று எண்ணுகின்ற வங்காள தேச மக்கள் தங்கள் தலைவனை விடுவித்து, ‘‘வங்க தேசத்தின் தங்கமே! வருக! வருக!’’ என்று வாழ்த்துக் கூறக் காத்திருக்கின்றனர்.

வங்கதேச வாழ்த்து!

என்னுயிர் வங்க நாடே!
இனிமைசால் தங்கத் தாயே!
உன்னரும் நில வானம்,
உலவிடும் இனிய காற்று,
மன்னிடும் இதய மெல்லாம்
மயக்கிடும் குழலின் கீதம்
கன்னலின் இனிய சாறு
கனியுமாஞ் சோலைக் காட்சி!

மதுவென மயக்கும் காற்று,
மலர்ந்திடும் இனிய வேனில்,
விதமுறு மணிகள் தாங்கும்
விளைநிலக் கதிர்கள் காட்சி,
புதுமைசால் என்றன் தாயே!
போற்றுமென் செல்வ மன்றோ!
இதமுறு வங்கத் தாயே!
எங்கும்நீ இன்ப மன்றோ!

வீங்கிள வேனிற் காலம்
வியத்தகு தோற்ற மன்றோ!
ஓங்குயர் ஆலின் நிழல்
ஒளிதிகழ் ஆற்றின் ஈரம்
தாங்கிடு மென்மை மேய
தண்ணிய பசும்புல் மெத்தை
ஈங்கெலாம் வழங்கு நாடே
என்னரும் வங்கத் தாயே!

தேனினும் இனிய தாகச்
செவியிலுன் குரல்தான் பாயும்;
ஆனிரை மேய்க்கும் மக்கள்,
அயர்விலா துழுவோர், மற்றோர்,
வானினும் உயர்ந்தாய்! என்றன்
மாண்புடன் பிறப்பே யன்றோ!
ஊனினிற் கலந்த தாயே!
உயிரினும் இனிய நாடே!

உன்னிணை அடிகள் போற்றி
உச்சிமேற் கொண்டு வாழ்வேன்;
மின்னிடும் மணிக ளாக
மேவியே தாங்கி நிற்பேன்!
அன்னையே! என்றன் ஆவி
உடலொடு பொருளை யுன்றன்
பொன்னடி வைத்தேன்; வாழி!
போற்றியே வணங்கு கின்றேன்.

கரு: கவியரசர் இரவீந்திரநாத் தாகூர்
உரு:— "பாசொளி"

“வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிடுவதால் தீமைகள் ஏற்படலாம் என்பது வைத்திய மேதைகளின் கருத்து”

பிரபல பழனி

வைத்திய திலகம்

வைத்திய ராஜ்



DR. S. காளிமுத்து
R. M. P. (IND.) V. V. C.,
A. M. I. H.

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்த வாலிப' வயோதிக அன்பர்களுக்கு பிரபல-பழனி வைத்திய திலகம்-வைத்தியராஜ் S. காளிமுத்து R.M.P. (IND), V.V.C., A.M.I.H. அவர்களின் ஆலோசனையும்—கருத்தும்.

ஆடவர்கள், படித்த பட்டதாரியும், பாமரரும் தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் தங்கள் உடல் பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி-உஷ்ணம்-சோம்பல், கைகால் அசதி, உடல்மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் அதிருப்தியும், சஞ்சலமும், நிம்மதியில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வருடக் கணக்கில் மருந்துகள் சாப்பிட்டுப் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம்.... ‘வீட்டு வாடகை தருவதுபோல் மாதாமாதம் பணம் செலுத்தி வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டேன்; ஒன்றும் பலனில்லை’ என்றும் ஏராளமான கடிதங்கள் நமக்கு வந்து தினசரிகுவிகின்றன! பழனி மருந்தைப் பற்றித் தெரியாதவர் பாரில் உண்டோ! மருந்தை உபயோகிக்கும் போதே பலனைப்பெறும் அன்பர்கள் மட்டும் எம்மிடம் சிகிச்சை பெறலாம்—வருடக் கணக்கில் சிகிச்சை பெற நினைக்கும் அன்பர்களுக்குக் கண்டிப்பாக நாம் சிகிச்சை தர இயலாது. கேம்புகளில் நேரில் மருந்துகள் பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். போஸ்டேஜ் இலவசம்.

—: 1 மாத சிகிச்சை மருந்துகள் :—

மிக உயர்தரம்	தங்க பஸ்பம்	உயர்தரம்	முதல் தரம்	இரண்டாந் தரம்
ரூ. 90-00	ரூ. 120-00	ரூ. 42-00	ரூ. 33-00	ரூ. 24-00

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1. போன்: 21448.
சென்னை கிளை ஆபீசில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்
GOVT. REGD. T. M. No. 204841
வைத்திய திலகம், வைத்திய ராஜ் டாக்டர் S. காளிமுத்து R.M.P., (IND.), V.V.C., A.M.I.H. REGD 15443.
பழநி சித்தர் வைத்தியசாலை (T) பழநி S.I.
போன் : 316
தந்தி : சித்தர்

வெற்றிப் பயணம்

மாண்புமிகு அரிசன நல அமைச்சர் சிறப்புப் பேட்டி

“அந்தமான் நிக்கோபார் தீவுகளில்வாழும் தமிழர்கள், தமிழகஅரசு தமிழ் நாட்டுமக்களுக்கு அளிக்கும் நிலப்பட்டா, இலவச வீட்டுமனை போன்று மத்திய அரசும் செய்து தர வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் கூட்டத்தில் ஏறத்தாழ முந்நூறு தீவுகள் உள்ளன. இந்தத் தீவுகள் அனைத்திலும் மக்கள் வாழ முடியாது. தீவுகளில் சில காடுகளாக உள்ளன. வாழக் கூடிய வசதிகள் உள்ள தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கிறார்கள்.

“சுற்றுலா வளர்ச்சிக்கு அருமையான இடங்களாகத் திகழ்கின்றன அந்தமான் நிக்கோபார் தீவுகள்”—என்கிறார் அரிசன நல அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள்.

கடந்த நவம்பர்த் திங்களில் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் ஏறத்தாழ பன்னிரண்டு நாட்களுக்கு மேல் சுற்றுப் பயணம் செய்த அமைச்சர் அவர்கள் தமிழரசு இதழுக்கென அளித்த பேட்டியின் போதுதான் மேற்கண்டவாறு கூறினார்கள். அரிசன நல அமைச்சர் தொகுத்துத் தந்த செய்திகள் கீழே தரப்படுகின்றன.

* * *

இலங்கையிலிருந்து நாடு பெயர்ந்து தாயகம் திரும்பும் 1,000 குடும்பங்களை அந்தமான், நிக்கோபார் தீவுகளில் குடியமர்த்துவதன் தொடர்பாகவே நான் அந்தமான் சென்றேன்.

அங்கே இலங்கையிலிருந்து திரும்புவோரைக் குடியமர்த்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

இந்த வகையில் என் பயணம் வெற்றிப் பயணம் என்பதுடன் முழு நம்பிக்கை தருவதாகவும் அமைந்தது.

இலங்கையிலிருந்து தாயகத்துக்குக் குடிபெயர்வோரைக் குடியமர்த்த அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 6,000 ஏக்கர் வரை மத்திய அரசு ஒதுக்க முடிவு செய்துள்ளது. இப்பொழுதே 850 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம் ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. இலங்கையிலிருந்து வருபவர்களைப் பயன்படுத்தி அந்தமான் நிக்கோபார் தீவுகளில் சிறந்த வகையில் ரப்பர்த் தோட்டங்களை உருவாக்க முடியும்.

விலை உயர்ந்த மரங்கள் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் ஏராளமாக உள்ளன. பல தீவுகள் காடுகளாகவே உள்ளன. அந்தமானில் மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் ஆலை ஒன்றும் உள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சுற்றி ஆழமான கடல்கள் உள்ளன. மீன் வளமும் ஏராளமாக உள்ளது. ஆனால், போதிய அளவு மீன்பிடி தொழில் வளர்ச்சி பெறவில்லை. **நவீன** படகுகளில் சென்று மீன் பிடிக்கத் தேவையான அளவுக்குப் பயிற்சி பெற்ற மீனவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள்.

நவீனமுறையில் மீன்பிடிக்கத் தெரிந்தவர்களை அங்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

* * *

ஒரு காலத்தில் குற்றவாளிகள் பரம்பரையினர் தான் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இருக்கின்ற

காட்டுப் பகுதிகள் ரப்பர்-தோட்டங்களாக மாற்றப்படுகிறது.

அந்தமான் சிறையையும் அமைச்சர் பார்வையிட்டார்.

கொரங் நல்லா மக்கள் அமைச்சருக்கு அளித்த வரவேற்பு.

னர் என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று அந்நிலை கிடையாது. பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த இந்திய மக்களும் இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் உள்ள எல்லா இடங்களுக்கும் சென்று வந்தேன். தார்முக்கிலி என்ற கப்பலில் மாயபந்தர், ரங்கத், கூர் நிக்கோபர், கச்சால்—லிட்டில் அந்தமான்ஸ் மற்றுமுள்ள தீவுகளுக்குச் சென்று வந்தேன்.

நிம்புதேரா என்னும் இடத்தில் பர்மாவிலிருந்து வந்த அகதிகள் உள்ளனர்.

தமிழ் மக்கள் வாழுமிடங்களில் எல்லாம் மக்கள் எங்கள் குழுவுக்கு வரவேற்பு அளித்தனர்.

செப்பிகாட் என்னும் இடத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் பெரிய பண்ணை உள்ளது. அங்கு காய்கறிகளும் நெல்லும் பயிரிடுகிறார்கள்.

நான்கௌரி, காமோட்டா, கச்சால், நிக்கோபர் தீவுகளில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். லிட்டில் அந்தமானில் உங்கிஸ் என்ற பழங்குடியினர் உள்ளனர்.

வடமத்திய அந்தமானில் 'ஜாரவாஸ்' என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்கள் மனிதர்களையும் வேட்டையாடும் மனிதர்கள். வில்—அம்புடன் காணப்படும்இவர்களைப்பிடித்துத் திருத்த வேண்டும் என்று அரசு எவ்வளவோ முயற்சி எடுத்தது. ஆனால், மனிதர்கள் நெருங்கினாலே வேட்டையாடும் இவர்களைத் திருத்தவும் முடியவில்லை.

அந்நியர் யாரைக் கண்டாலும் முதலில் வேட்டையாடுவதே இவர்கள் வேலையாகும்.

ஆண்களும் பெண்களும் மிகக் குறைந்த அளவிலே அரையிலே மட்டும் இலைகளையும் மரப்பட்டைகளையும் கட்டிக் கொண்டிருக்கின்றனர் என்று பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

இவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

* * *

அந்தமான் நிக்கோபர் தீவுகளின் வளர்ச்சிக்கு ஏராளமான வாய்ப்புகள் இருப்பினும் துறைமுகங்கள் போதிய வசதியுடன் உள்ளவைகளாக உள்ளன.

இப்பொழுது கல்கத்தாவிலிருந்துதான் அந்தமானுக்கு விமானப் போக்குவரத்தும் கப்பல் போக்குவரத்தும் உள்ளன. ஆனால் அங்குள்ள தமிழர்கள் சென்னையிலிருந்து விமானப் போக்குவரத்தும் கப்பல் போக்குவரத்தும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

* * *

லிட்டில் அந்தமானில் 1,000 ஏக்கர் பரப்பளவில் பெரிய பண்ணை ஒன்று அரசுக்குச் சொந்தமாக உள்ளது.

சில்காட் பண்ணையில் ஏராளமான அளவில் நெல் பயிரிடப்படுகிறது.

வளமான பூமி அது !

இயற்கையன்னை அளித்துள்ள ஈடில்லாச் செல்வங்கள் ஏராளம்! ஏராளம்!

மைய அரசு இன்று அங்கு செய்து வரும் பணிகளை இன்னும் அதிக அளவில் தொடருமானால்—தமிழகத்தைப் போல் மிகுந்த முன்னேற்றம் அந்தமான் நிக்கோபர் தீவுகள் அடையும் என்பதில் ஐயமில்லை.

* * *

அந்தமான் நிக்கோபர் தீவுகளுக்குச் செல்ல நமக்குக் கிடைக்கும் போக்குவரத்து வசதிகளைக் கொண்டே இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தாயகம் வருபவர்களை அங்குக்குடியமர்த்துவதை விரைந்து செயல்படுத்த முடியும். அதற்கு மைய அரசும் துணை செய்ய வேண்டும்.

பெரார் கஞ்ச ரப்பர் தோட்டம் பர்மா அகதிகள் இங்கு பணியாற்றுகிறார்கள்.

அரிசன நல அமைச்சருடன் பர்மா அகதிகள் குழந்தைகள்

நிம்பூதேரா பண்ணையை அமைச்சர் பார்வையிட்டார்.

ஒளிமயமான
வருங்காலத்திற்கு
BHEL
அளிக்கும்
மின்சக்தி வளம்

BHEL-திருச்சி, தொழிற்சாலைகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும், வீடுகளுக்கும் வேண்டிய அனல் மின்சக்தியை உற்பத்தி செய்ய துரிதமாக நிறுவப்படும் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான கன ரக கொதிகலன்களைத் தயாரித்து கொடுக்கிறது. மேலும், உர, ரசாயனத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய நீராவிக்கொதிகலன்களையும் தயாரித்துக் கொடுக்கிறது.

வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்திப்பணியில்...
BHEL

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், (இது ஒரு அரசாங்க நிறுவனம்), யூனிட் ஹைபிரஷர் பாய்லர் பிளாண்ட், திருச்சிராப்பள்ளி-14
பதிவு பெற்ற அலுவலகம் : 5, பார்லிமெண்ட் தெரு, புதுடில்லி-1

என் இந்தக் காதல் ?

அ. மறைமலையான்

12. எப்படிச் சோதிப்பது ?

தன்னுடைய அறையினுள் அழைத்துச் சென்றதும், டாக்டர் பூங்கொடியை நோக்கி,

'' காபி கொண்டு வரச் சொல்லட்டுமா? இல்லை ஆர்லிக்ஸ் கொண்டுவரச் சொல்லட்டுமா?'' —என்று கேட்டாள் தேன்மொழி

'' இரண்டும் வேண்டாம் ; இப்போ உங்கள் மனத்திலே இருக்கிற முக்கியமான செய்தியை வெளியே கொண்டு வாருங்கள், அது போதும்.''

—என்று சிரித்தாள் பூங்கொடி.

ஆனால் தேன்மொழி விடவில்லை ; சமையற்காரி சண்பகத்தை அழைத்து ஆர்லிக்சே கொண்டுவரச் சொன்னாள்.

அதைக் குடித்து முடித்த பிறகும் தேன்மொழி தான் கேட்க நினைத்ததைக் கேட்காமல் அங்கும் இங்குமாக உலவிய வண்ணமே இருந்தாள். அவளுடைய பார்வை சன்னல் வழியே தோட்டத்துப் பக்கமே சென்றது. அவளுடைய வெறித்த விழிகளில், ' எப்படி இதைப்பற்றி மனம் விட்டுக் கேட்பது ? ' —என்கிற தயக்கமும் நிழலாடியது.

பூங்கொடிக்கோ அதற்கு மேலும் பொறுமையோடு இருக்க முடியவில்லை.

'' என்ன தேன்மொழி ! ஏதோ முக்கியமான சேதி என்றீர்கள்; ஆனால் அதைப்பற்றிப் பேசாமலே இருக்கிறீர்களே ! நானும் நோயாளிகளைப் போய்க் கவனிக்க வேண்டும் இல்லையா?'' —என்று இரங்கிய குரலில் கேட்டாள்.

தேன்மொழி துணிச்சலை வரவழைத்துக் கொள்பவளைப் போலத் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். ஒரு வறட்டுப் புன்னகையை உதிர்த்த வண்ணம் பூங்கொடியை இப்படிக் கேட்டாள்.

'' தொழுநோய் உள்ளவரைப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளலாமா, டாக்டர் ? ''

'' இது என்ன அசட்டுத்தனமான கேள்வி ! எதற்கு அப்படிச் சிக்கிக்கொள்ள வேண்டும்? கண்ணைத் திறந்து கொண்டே யாராவது பள்ளத்தில் போய் விழுவார்களா, என்ன ? ''

—பூங்கொடி நகைத்தாள்.

'' அதற்கில்லை, டாக்டர் ! ஒரு பெண் மனமார ஒருவரைக் காதலித்து விடுகிறாள் ; பிறகு தான் அவருக்குத் தொழுநோய் என்று தெரிவதாக வைத்துக் கொள்ளுங்கள் ; அம்மாதிரியான இக்கட்டான நிலையிலே அவள் காதலைத் துறப்பதா ? இல்லை, அவரையே மணப்பதா ? என்று தான் கேட்கிறேன்.''

'' காசு கொடுத்துத்தான் தேங்காயை வாங்கி வருகிறோம் ; வீட்டுக்கு வந்து உடைத்துப் பார்த்தால் அது அழுகலாக இருக்கிறது. காசு கொடுத்துவிட்டோமே என்பதற்காக அழுகல் தேங்காயை யாராவது குழம்பிலே சேர்த்துக் கொள்வார்களா ? அதன் நாற்றத்தைத்தான் சகித்துக் கொள்வார்களா ? காதலித்தே இருந்தாலும் கூட தொழுநோய்க்காரர் என்று தெரிந்து விட்டால் பிறகு தூர விலகி வந்துவிட வேண்டியது தானே ! ஆமாம், நீங்கள் ஏன் இப்படிக் கேட்கிறீர்கள் ? உங்கள் தோழிகள் யாராவது அப்படிச் சிக்கிக் கொண்டு விட்டார்களா ! ''

'' என் தோழிகள் என்ன, நானே தான் அப்படி அகப்பட்டுக் கொண்டு விட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!''

'' நீங்கள் என்ன சொல்கிறீர்கள், தேன்மொழி ? ''

—திடுக்கிட்டுப் போய்க் கேட்டாள் பூங்கொடி.

'' உண்மையைத்தான் சொல்கிறேன், டாக்டர் ''

—தேன்மொழியின் கண்கள் பளபளத்தன, நீரில் மிதந்தது ! குரலும் தழுதழுத்தது.

'' என்னால் நம்பவே முடியவில்லையே ! மாதவனின் தோற்றத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவே இல்லையே ! ''

'' வெளிப்படையாக எனக்கும் அந்தமாதிரித் தெரியவில்லை தான் ; எந்தவித அறிகுறியும் தென்படவும் இல்லைதான். ஆனாலும் என்னால் சந்தேகப்படாமலும் இருக்க முடியவில்லை.''

'' ஏன், அப்படிச் சந்தேகப்படுகிறீர்கள் ? ''

'' அவருடைய அக்காளுக்கு அந்தக் கடுமையான நோய் வந்திருக்கிறது. அவளுடைய உருவத்தையே அது சீரழித்து

ஊரை விட்டே அவளைத் துரத்தியும் இருக்கிறது.''

'' அப்படியா ? ''

'' ஆமாம், டாக்டர்; அதுவும் அவர் கைப்பட எழுதிக்காட்டிய உண்மை இது ; அக்காளுக்கு வந்த அந்த நோய் இவருக்கும் வருவது இயற்கைதானே ? ''

'' ஓ ! நீங்கள் அந்தக் கண்ணோட்டத்திலேதான் மாதவனைப் பற்றியும் சந்தேகப்படுகிறீர்களா ? ''

'' ஆமாம், டாக்டர் ''.

'' ஆனால் உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்லட்டுமா?''

'' என்ன டாக்டர் ? ''

'' தொழுநோய் என்பது, அம்மை அல்லது வாந்திபேதி போல, ஒருவருக்கு வந்தால் உடனே மற்றவர்களைத் தொற்றிக் கொள்ளக்கூடிய ' ஒட்டுவார் ஒட்டி ' இல்லை ; பரம்பரை நோயும் இல்லை; ஆகையால், அவருடைய அக்காளுக்கு இருந்த காரணத்தால் மாதவனுக்கும் அது வந்திருக்குமோ என்று நீங்கள் அச்சப்படுவதில் அர்த்தமே இல்லை.''

'' அப்படியானால், அந்த நோய் இலட்சக்கணக்கான மக்களிடம் எப்படிப் பரவி இருக்கிறது ? ''

'' அதற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. சாதாரணமாக மென்மையான தோல் அல்லது சதைப் பகுதிகள் தான் தொழுநோய்க் கிருமிகளுக்குச் சுவையான இருப்பிடம் ஆகும். அதனால்தான் குழந்தைகள் மூலமே அந்நோய் பரவக்கூடும் என்று மருத்துவ வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

'' அது எப்படி, டாக்டர் ? ''

'' தொழுநோய் உள்ள ஒரு பெரியவர், பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தையொன்றைத் தொட்டுத் தழுவி முத்தங் கொஞ்சுகிறார் என்று வைத்துக் கொள்வோம் ; அப்போது அந்தக் குழந்தையின் மிருதுவான உடலில் எளிதில் இறங்கி விடுகின்றன கிருமிகள் ! அதே சமயம் தடித்த, அதாவது முதிர்ந்த தோலுடைய பெரியவர்களிடம் அவைகளால் அவ்வாறு ஊடுருவ முடிவதில்லை: அப்புறம், அளவுக்கு மீறித் தவறான நடத்தையின் மூலம் அந்த நோய் கொண்டவர்களிடம் உடலுறவு கொள்வதன் காரணமாகவும் அது பரவுவது உண்டு. மாதவனைப் பொறுத்த மட்டில் அந்த மாதிரி எதுவும் இருக்கும் என்று எனக்குத் தோன்றவே இல்லை. அவருக்கு இப்போது முப்பது வயதாவது இருக்கலாம் இல்லையா ! ''

'' இருக்கலாம் ''.

'' அவருடைய அக்காளுக்கு இருந்த நோய் இவருக்கும் தொற்றியிருக்கலாம் என்றால் இந்நேரம் அதற்கான அறிகுறி கொஞ்சமாவது தென்பட்டிருக்கலாமே ? அவருடைய காதுமடலோ, மூக்கு நுனியோ, மிளகாய்ப் பழம் மாதிரிப் பளபளவென்று சிவப்பாகத் தெரிகிறதா ? ''

'' அப்படி ஒன்றும் இல்லையே!'

'' உடம்பிலே முதுகு, மார்பு, தொடைகள்—இங்கு எங்காவது திட்டுத் திட்டாகத் தோல் தடித்துக் கருஞ்சிவப்பாகக் காணப்படுகிறதா ? ''

'' அந்த அளவுக்கு நான் எங்கே அவரை நெருங்கிப் பார்த்தேன் ? ''

'' நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இரண்டு பேருமே மிகவும் கட்டுப்பாடாகத்தான் இருக்கிறீர்கள் என்று தெரிகிறது !'' அவர் பனியனைக் கழற்றிக்கூட நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் போல் இருக்கிறதே! ''

—குறும்பு நெளியச் சிரிப்பை சிந்தினாள் பூங்கொடி.

'' ஆமாம், டாக்டர்.''

—நாணத்துடன் தலைகவிழ்ந்தவாறே கூறினாள் தேன்மொழி.

சிறிது நேரம் இருவரும் வாயைத் திறக்கவில்லை. தத்தம் போக்கில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப்போயினர். பின்னர்—

'' ஒன்று செய்வோமா ?''

'' என்ன, டாக்டர்? ''

'' மாதவனுக்கும் அந்த நோய் இருக்குமோ என்று அச்சமும் ஐயப்பாடும் கொண்டு நீங்கள் மனத்தைப் போட்டு அலட்டிக் கொண்டே இருப்பதைவிட, அவருக்கு அது உண்டா இல்லையா என்று ஒரு வழியாகத் தெளிவுப்படுத்திக் கொண்டுவிடுவது நல்லதுதான் இல்லையா ?''

'' ஆமாம், டாக்டர்.''

'' அதற்கு ஒரு தொழுநோய் டாக்டரிடம் போய்ச் சோதனை செய்து பார்த்துவிட்டால் போகிறது .''

'' அவரை எப்படி நான் அந்த மாதிரியான மருத்துவச் சோதனைக்கு வெளிப்படையாக அழைக்க முடியும்? நான் ஏதோ சந்தேகப்பட்டுத்தான் அத்தகைய ஏற்பாட்டைச் செய்கிறேன் என்று அவர் தவறாகக் கருதி விடமாட்டாரா? பிறகு, என்மீது அவருக்கு ஒருவித வெறுப்புணர்ச்சி உண்டாகி விடாதா? ''

'' நீங்கள் சொல்வதும் சரிதான். மிகவும் சிந்தனையைக் குழப்பும் சிக்கல்தான் இது. மற்ற எந்த நோயாக இருந்தாலும் நாம் மனந்திறந்து—வாய்விட்டுக்—கேட்டு விடலாம். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, தொழுநோயைப் பொறுத்தமட்டில் ஏதோ ஒரு வித்த் தயக்கம் வந்து நம் குரல்வளையிலே தடைச் சுவரையே எழுப்பி விடுகிறது. கணவனிடம் மனைவிகூடக் கேட்க முடிவதில்லை ; மனைவியிடம் கணவனும் அதைப் பற்றிப் பேச முடிவதில்லை; அந்த நோய் வந்திருப்பவர்களும் அதைப்பற்றி வெளியிலே சொல்லவே வெட்கப்பட்டு, அது நன்றாக முற்றி வெளிப்படும் வரை மூடி மறைக்கவே முயலுகிறார்கள் ; அது வந்திருப்பவர்களைப் பார்ப்பவர்களும் எப்படி விசாரிப்பது—என்னதான் ஆறுதலைக் கூறுவது—என்று தெரியாமல் திணறி எதையும் கண்டு கொள்ளாதவர்களைப் போலவே, வாயை மூடிக் கொள்கிறார்கள். நாம் இப்படிப் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தாலேகூட மாதவன் எப்படி எடுத்துக்கொள்வாரோ? ''

'' அதுதான் டாக்டர் என்னுடைய மூளையையும் ஈட்டியாய்த் துளைக்கிறது! மற்ற மனிதர்களைவிட மனப்பக்குவம் படைத்தவர்தான் அவர் ! ' எதையும் தாங்கும் இதயம் ' படைத்தவர்தான் அவர் ! என்றாலும், தங்களுக்கு என்று ஒரு

தாங்கொணாத அதிர்ச்சியைச் சந்திக்க நேரும்பொழுது எவ்வளவு திடமான நெஞ்சங்கொண்டவர்களும் நிலைகுலைந்து தடுமாறுவது இயற்கைதானே ! அதுவும் தொழுநோயைப்போல அருவருப்பானது மட்டுமல்ல, அதிர்ச்சி தரத்தக்க நோயும் வேறு என்ன இருக்கிறது? நாம் நல்ல எண்ணத்தோடேயே அதைப் பற்றி விவாதித்துச், சோதனை செய்து கொள்ளலாம் என்று அழைத்துப்போக 'நமக்கும் அந்த நோய் இருக்குமோ?' என்று எண்ணிய அளவிலேயே அவரது இதயம் இடிந்து நொறுங்கி விட்டால் என்ன செய்வது? அவரைப் பிறகு யார்தான் தேற்ற முடியும்? எப்படித்தான் தேற்ற முடியும்?''

'' சரி ; அவருடைய உள்ளம் ஒடிந்து விடுமே என்று நீங்கள் ஒதுங்கி நின்றாலும்—அவருக்குச் சோதனை செய்து பார்க்காமல் விட்டு விட்டாலும்—உங்களுடைய உள்ளத்திலே ஆழமாகப் பாய்ந்திருக்கும் அந்தக் கூரான அச்சமுள்ளை எப்படித்தான் கீறி எடுத்து எறிவது? ' இவருக்கும் தொழுநோய் இருக்குமோ? .. தொழுநோய் இருக்குமோ? .. நமக்கும் அது வந்து விடுமோ? ....அது வந்து விடுமோ?' என்று பயந்து பயந்து அந்தப் பீதி நெருப்பிலேயே நீங்களும் எத்தனை காலத்திற்குத்தான் வெந்து வெந்து கருகுவது ? வேதனையில் புழுங்கியே சாவது?''

'' அதை நினைத்தால்தான் டாக்டர், என் நெஞ்சே வெடித்து விடும்போல் இருக்கிறது !''— என் நெஞ்சே வெடித்து விடும்போல் இருக்கிறது !''

—சன்னல் அருகே நின்று பேசிக் கொண்டிருந்த தேன்மொழி, குமுறிக்குமுறிக் கதறியவாறே சட்டென்று அந்தச் சுவர் ஓரமாகவே சரிந்து விழுந்தாள். தன் உள்ளங்கைகளிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அவளுடைய அழுகுரலைக் கேட்டு—அவல நிலையைப் பார்த்து—டாக்டர் பூங்கொடிக்கும் துயரச் சுமையைத் தாங்க முடியவில்லை ; அவளது நெஞ்சு விம்மியது ; கண்கள் பனித்தன.

சோபாவிலிருந்து எழுந்து போய்த் தேன்மொழியை ஒட்டித் தானும் கீழே அமர்ந்து கொண்டு அவள் தோளை ஆதரவாகப் பற்றினாள் ; சின்னக் குழந்தை மாதிரிச் செருமித் தேம்புகின்ற அவளைத் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டு அவளது முதுகை வருடிக் கொடுத்தாள் பரிவாக.

அந்த அழுகை—ஆறுதல்—நிலையிலேயே சில மணித்துளிகள் ஆவியாகப் பறந்தன.

பின்னர், பூங்கொடி இப்படித் தணிந்த குரலில் மொழிந்தாள்;

'' கவலைப்படாதீங்க, தேன்மொழி ! உங்களுடைய வேதனைக்கெல்லாம் ஒரு விடிவு காலம் ஏற்படாமல் போகாது ; நானும் எப்படிவாவது இதற்கொரு வழி கண்டுபிடிக்காமல் விடமாட்டேன்.

—என்றவள், திடீரென்று ஏதோ ஒரு புதிய திட்டம் தன் மூளையிலே மின்னலிட்டவளைப் போல,

''ஆமாம், இப்படிச் செய்தால் என்ன ?''

—என்று தேன்மொழியின் காதிலே கிசுகிசுத்தாள்.

அதைக் கேட்டதும் அந்த வேதனைப் புறாவின் விழிகள் சற்றே அகல விரிந்தன வியப்பினால்.

•   •   •

மறுநாள் காலையிலேயே தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றிவிட மாதவனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் தேன்மொழி.

அவனோ......அன்று மட்டும் அல்ல, அடுத்த ஐந்தாறு நாட்களும் கூட அந்தப் பக்கம் தலைகாட்டவே இல்லை.

' பேரின்பமுத்து நிறுவன'த்தைச் சார்ந்த பல்வேறு நிருவாக அலுவலகங்களையும், தொழிற்சாலைக் கூடங்களையும் நேரடியாகவே சோதனை செய்யவும் மேற்பார்வையிடவும் அவன் கிளம்பிவிட்டான்.

பகலில் எப்போதாவது ஒரு முறை தொலைபேசியில் அழைப்பான் தேன்மொழியை.

'' நலமாக இருக்கிறாயா? ஏதாவது தேவையா ? பணியாட்கள் எல்லாம் வீட்டில் ஒழுங்காக வேலை பார்க்கிறார்களா ? நேரா நேரத்திற்குச் சாப்பிடுகிறாயா? பொழுது போகாவிட்டால் ஏதாவது திரைப்படத்துக்குப் போவது தானே ?''

—என்று பொதுப்படையான கேள்விகளைத் தொடுப்பான்.

'' தினம் ஒரு தடவையாவது இங்கே வீட்டுக்கு வந்து முகத்தைக் காட்டிவிட்டுப் போகக் கூடாதா ?

—என்று தேன்மொழி எவ்வளவோ கெஞ்சலாகக் கேட்டும் அவன் வரவில்லை.

"எனக்கு எங்கே தேன்மொழி நேரம் ஒழிகிறது? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலுவலகத்தையும் சுற்றி வருவதற்கே பொழுது போதமாட்டேன் என்கிறது! பெரியவர் தான் இல்லையே—நாம் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம்—என்கிற பொறுப்பில்லாத போக்கு நம் ஊழியர்களிடம் ஏற்பட்டுவிடக்கூடாது பார்; அதற்காகத்தான் நான் இப்படி அலைந்து அலைந்து திடீர்ச் சோதனைகள் செய்ய வேண்டியிருக்கிறது."

—என்று தான் அவளை வந்து சந்திக்க முடியாமைக்குத் தொலைபேசியிலேயே முகாந்திரம் கூறிக் கொண்டிருந்தான் மாதவன்.

"எனக்கு உடம்பு முடியவில்லை; உங்களோடு சேர்ந்து போய் யாராவது நல்ல டாக்டரிடம் காட்டிக் கொண்டால் தேவலாம்போல் தோன்றுகிறது".—என்று பொய்யையும் அவிழ்த்துவிட்டுப் பார்த்தாள் தேன்மொழி.

"உங்களுடைய குடும்ப டாக்டர், பூங்கொடி ஊரில் இல்லையா? அவரைவிட இன்னொரு கெட்டிக்கார டாக்டர் வேறே யார் இருக்கிறார்கள்? நீ உடனே காரை எடுத்துக்கொண்டு போய் அவரிடம் காட்டிக்கொள்ள வேண்டியது தானே? அல்லது அவரையே வீட்டுக்கு வரச் சொன்னாலும் போச்சு...... நான் கூட வராவிட்டால் என்ன, தேன்மொழி? இதற்கு முன்னெல்லாம் நான்தான் உன் கூடவே வந்தேனா? நேரங் கிடைக்காததால் தான் இப்படிச் சொல்கிறேன். நீ ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ளாதே!"

—என்று அவன் தட்டிக் கழித்தும் விட்டான் தந்திரமாக.

மாதவன் இப்படித் தொடர்ந்து தன் இல்லத்திற்கு வந்து தன்னைச் சந்திக்காமலே போனது தேன்மொழியின் நெஞ்சிலே புதியதொரு சந்தேக விதையைத் தூவிவிட்டது.

'ஒருவேளை நானும் டாக்டர் பூங்கொடியும் அன்றைக்குப் பேசிக் கொண்டிருந்தது அவருடைய காதிலும் விழுந்திருக்குமோ? அதனால்தான் வேலையைச் சாக்குச் சொல்லி இப்படி ஒதுங்கிப் பார்க்கிறாரோ!

—என்று அஞ்சித் தவித்தாள் அவள்.

'அப்பா எவ்வளவோ எடுத்துச் சொல்லி எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்த பிறகு, இவர் எங்கள் வீட்டிலேயே வந்து தங்கிக் கொள்ள வேண்டியதுதானே! இவர் எப்படி முன்போலவே வாடகை வீட்டிலே தங்கிக் கொள்ளலாம்? இதைப்பற்றி அப்பாவுக்கும் எழுத வேண்டியதுதான்; அதற்கு முன்னே இவரையும் ஒரு வார்த்தை கண்டிப்பாகக் கேட்டுவிட வேண்டியதுதான். ஆனால், போனில்தான் இவர் சரியாகப் பேசவே இடங்கொடுக்காமல் உடனே உடனே வைத்துவிடுகிறாரே!......இருக்கட்டும் இருக்கட்டும்; ஒருநாள் காலையிலேயே அவர் குடியிருக்கிற வீட்டிற்கே போய் அவரைக் கேள்வி கேட்டு மடக்காமலா விடுவது?'

—தன் இதயத்தில் அலைபாய்ந்த எண்ண ஓட்டங்களுக்கு உடனே வடிவங் கொடுத்துவிடத் துடித்தாள் தேன்மொழி.

அவ்வாறே ஒருநாள் காலை தன் பியட் காரை எடுத்துக் கொண்டு மாதவனின் வீடு நோக்கிப் பறந்து சென்றாள்.

அங்கோ......அவன் ஒரு பெண்ணிடம் முகமலர்ச்சியோடு உரையாடிக் கொண்டிருந்தான்.

(வளரும்).

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை. மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த வகை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB
உயர் ரகத்தைக் குறிக்கும் வர்த்தக முத்திரை



கேளுங்கள்? கொடுக்கப்படும்

வேளாண்மை வினாக்களே
கேட்கப்படவேண்டும்

வினா : 'தமிழரசு' டிசம்பர் 1-ஆம் தேதி இதழ், பக்கம் 23-ல் 'நெல்லடிக்கும் பொறி' என்ற கட்டுரையைப் படித்தேன். அந்தக் கருவி எங்கு கிடைக்கும் என்ற விவரத்தைத் தெரிவித்தால் பேருதவியாக இருக்கும்.

—என். ஆர். வெங்கடேசன்,
துறையூர்.

விடை : தாங்கள் கேட்டுள்ள நெல்லடிக்கும் பொறி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சிக் கூடத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாகும். அக் கருவியைப் பெறுவதற்குக் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

உதவி வேள்ாண்மைப்
பொறியாளர் (ஆராய்ச்சி),
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

* * *

வினா : நான் 85 சென்ட் நிலத்தில் ஐ.ஆர். 8 நெல் பயிரிட்டு இருக்கிறேன். நல்ல முறையில் யூரியா முதலிய உரங்கள் இட்டும், பயிர் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. சில இடங்களில் செழித்து வளர்ந்து இருக்கிறது. நாற்று நட்டு 34 நாட்கள் ஆகின்றன. இப்பயிர் செழித்து வளர என்ன செய்ய வேண்டும்?

—கே. நாகப்பன்,
ஞாரேடு.

விடை : ஐ. ஆர். 8 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவு இரசாயன உரத்தைப் பரவலாகவும், ஒரே சீராகவும் நிலத்தில் இட்டிருந்தால், பயிர் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக செழித்து வளர்ந்திருக்கும். தாங்கள் அவ்வாறு செய்யாததனாலேயே ஒரே மாதிரியாகச் செழித்து வளராமல் சில இடங்களில் மட்டும் வளர்ந்திருக்கக்கூடும். பூச்சிகள் அல்லது நோய்களின் தாக்குதலாலும் சில இடங்களில் பயிர்கள் கரைந்து காணப்படலாம். எனவே தவறாமல் மருந்து தெளிக்க வேண்டியதும், மேலுரமிட வேண்டியதும் அவசியமாகும். ஐ. ஆர். 8 நெல்லிற்கு நடவு செய்த 25-ஆம் நாளும், 55-ஆம் நாளும் அ[illegible] இருமுறை மேலுரம் இ[illegible]டும். எனவே நட[illegible] 55-ஆம் நாள், 15 கிலோ [illegible]ழைச் சத்து அளிக்க, 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியா[illegible] மேலுரமாக இடுங்கள். இவ்வாறு செய்தால், மகசூ[illegible] [illegible]த்தியாகக் கிடைக்கக் கூடும்.

*

வினா : உருளைக்கிழங்குகளை [illegible] எம்மாதங்களில் பயி[illegible]லாம்? விதை உருளை[illegible]ங்குகளை எங்கே பெறலாம்?

—எஸ். எம். வேலு,
பனசக்காடு, புதுக்கோட்டை.

விடை : சமவெளிப் பிரதேசங்களில் கோ-சிம்லா உருளைக் கிழங்கு ரகத்தைப் பயிரிடலாம். இந்த ரகத்தைக் கீழ்க்கண்ட 3 பருவங்களில் பயிரிடலாம்:—

1. ஏப்ரல் முதல் ஆகஸ்டு.
2. செப்டம்பர்முதல் டிசம்பர்.
3. பிப்ரவரி முதல் மே.

இதில் செப்டம்பர்-டிசம்பர் பருவமே நல்ல மகசூல் தருகிறது.

புதுக்கோட்டைப் பகுதியின் காலநிலை உருளைக்கிழங்குச் சாகுபடிக்கு ஏற்றதாக இருக்க முடியாது. எனவே புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலரின் ஆலோசனையைக் கேட்டுக் கொண்ட பிறகு, உருளைக்கிழங்கு சாகுபடியில் ஈடுபடுவது சிறந்தது.

* * *

வினா : கோ-9 என்ற கேழ்வரகு ரகம், கோ-7 என்ற கேழ்வரகு ரகத்தை விட எவ்வகையில் சிறந்தது?

—வாதானூர் கிராம
வானொலி மன்றம்,
புதுவை மாநிலம்.

விடை : கோ-9 என்ற கேழ்வரகு ரகம் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் பயிரிடச் சிறந்தது. கோ-7 ரகத்தை விட அதிக மகசூல் தரக்கூடியது. பூச்சிகளாலும், நோய்களாலும் அதிகம் தாக்கப்படாது; களர் தன்மையை அதிகம் தாங்கக் கூடியது; அதிக அளவு புரதச் சத்தையும் கொண்டுள்ளது.

வினா : கரும்புக் கரணைகளை நடுவதற்கு முன்பு, எந்த மருந்திலாவது நனைத்து நடவேண்டுமா?

—மேல்மாயில் கிராம
வானொலி மன்றம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

* *

[illegible] 224 கிராம் அகலால் அல்[illegible] 2 கிராம் அரிட்டான் மருந்[illegible] 5 லிட்டர் தண்ணீரில் கரை[illegible]கொண்டு, அந்தக் கரைச[illegible] கரும்புக் கரணைகளின் வெ[illegible]டு முனைகளை நனைத்து நடவே[illegible] சிறந்தது.

[illegible] : சூரியகாந்தி பயிரிட [illegible] உள்ளவனாக இருக்கிறேன். [illegible]பட்டம், செயல்முறை, விதையளவு தெரிவிக்கவும். விதை கிடைக்குமிடமும் தெரிவிக்கவும்.

டி. பாலகுருநாதன்,
விருத்தாசலம்.

விடை : சூரியகாந்தி பயிரிடுவதற்குரிய பட்டம், ரகம், விதையளவு, உரமிட வேண்டிய அளவு, பின்செய் நேர்த்தி ஆகியவைகளைப் பற்றி அறிவதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

69599

JL
V211 m, N70
N72-2

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

TANSI

தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை ஏேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

ஆராய்ச்சியின் முடிவு தெரிந்தவுடன் 'தமிழரசு' இதழில் விளக்கமாகத் தெரிவிக்கப்படும். அதுவரைத் தயவு செய்து பொறுத்திருங்கள்.

* * *

வினா : 'காரட்' பயிர் செய்வது எவ்வாறு? விதைகள் எங்கே கிடைக்கும்? புன்செய் நிலங்களில் செவ்வல் மண்ணில் பயிராகுமா ? விவரமாக விளக்குமாறு வேண்டுகிறேன்.

—ஆர். சேஷாத்திரி,
தலைவர், ஊராட்சி மன்றம்,
துளசேந்திரபுரம்,

விடை : 'காரட்' பயிர் செய்வதற்குத் தண்ணீர் நன்கு வடியக்கூடிய குறுமண் நிலமே மிகவும் ஏற்றது. மழைக் காலம் தவிர, ஆண்டு முழுவதும் காரட்டைப் பயிரிடலாம். 'லேட் நான்டிஸ்', 'பூசா கேசன்' என்ற 2 ரகங்களும் தமிழ் நாட்டிற்கு மிகவும் சிறந்தது. ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு உரமிட்டு நிலத்தை நன்கு புழுதியாக உழ வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 100 கிலோ அமோனியம் சல்பேட், 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும். அதன்பின் வயலில் ஒரு அடி தூரத்திற்கு ஒரு பார் வீதம் அமைக்க வேண்டும். பார்களில் தண்ணீர் விட்டு 6 அங்குல இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். ஒரு ஏக்கர் காரட் பயிரிட 2 கிலோ விதை வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். களைகளை அவ்வப்பொழுது அகற்றிவிட வேண்டும். விதை ஊன்றிய 3-வது வாரத்தில் 50 கிலோ அமோனியம் சல்பேட் மேலுரமாக இட வேண்டும். கிழங்கு வெளியே தெரியாமல் மண் அணைத்து விடவேண்டும். இல்லாவிட்டால் கிழங்குகள் பச்சை நிறமாகி, விற்பனை மதிப்பை இழந்து விடுகின்றன. ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 4,500 முதல் 5,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

* * *

வினா : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பேப்பர் மரத்தைப் பற்றிப் பேசி வருகிறார்கள். அது விவசாயிகளுக்கு நல்ல வருவாய் தருவதாகவும் கூறப்படுகிறது. ஆகவே ஒரு ஏக்கரில் சாகுபடி செய்வதற்குள்ள நடைமுறைத் திட்டங்களையும், பலனை எங்கு அனுப்பினால் பணம் கிடைக்கும் என்ற விவரத்தையும் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

—கணபதி,
சங்கரநயினார்கோவில்.

விடை : மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது பேப்பர் மரமல்ல; புளிச்சைக் கீரைச் செடிகளையே அவர் குறிப்பிட்டுள்ளார். புளிச்சக் கீரைச் செடியின் தண்டுகளை அறைத்துக் கூழாக்கிக் காகிதம் தயாரிக்கலாம். இதைப் பயிரிடத் தண்ணீர் அதிகம் தேவைப்படாது. 5 மாதங்களில் நன்கு வளர்ந்து, ஏக்கருக்கு 40 டன் வரை தண்டுகள் கொடுக்கும். இதனால் அதிக வருவாயும் கிடைக்கும். 1,000 ஏக்கரில் பயிராகும் புளிச்சைக் கீரைகளின் தண்டு, ஒரு தொழிற்சாலை அமைப்பதற்குப் போதுமானதாகும். தமிழ் நாட்டில் 10 இடங்களில் இத்தகைய தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. எனவே இத்திட்டம் அனுமதிக்கப்பட்ட பிறகே, இது பற்றிய விவரங்கள் வெளியிடப்படும்.

குடிசை மாற்று வாரியம் அமைப்பதற்குமுன் கட்டப்பட்ட கட்டடங்கள், தீப்பிடிக்காத விடுகள், ஒதுக்கப்பட்ட மனைகள் முதலியன.

1	குடியிருப்புகள்	7,366
2	தீப்பிடிக்காத வீடுகள்	5,122
3	திறந்தவெளி மனைகள்	7,979
4	தற்காலிகக் குடியிருப்புகள்	630

குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்ட பின் துவக்கப்பட்டுக் கட்டடங்கள் முடிவடைந்து ஒதுக்குவதற்குத் தயாராக உள்ளவை.

1	மாம்பலம் ஏரிக்கரை (போக்ரோடு ஓரம்)	232
2	மாம்பலம் ஏரிக்கரை (அண்ணாசாலை ஓரம்)	128
3	சுபேதார் தோட்டம்	126
4	அப்பாவு நகர்	36
5	பிருந்தாவனம்	108
6	ஆண்டிமானியம்	84
7	டொம்மிக் குப்பம்	128
8	வெங்கடாபுரம்	242
9	நொச்சி நகர்	259
		1,343



கனிச்சாறு பாயும் கல்லாறு

பாளை கமுகு பரிசுடைப் பந்தல் இட்ட பாதையில் மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்வோருக்கு நான்காவது மைலில் ஒரு தித்திப்பான அனுபவம் கிடைக்கும்.

இடது புறத்தில் சிறியதோர் பாதை பிரியும். அதில் நுழைந்து நுழைந்து நான்கு பர்லாங்குகள் நறுமணக் காற்றை முகர்ந்த வண்ணம் தொடர்ந்து சென்றால் பழமுதிர்சோலை ஒன்று பார்வையில் தெரியும். வகை வகையான வண்ணங்களிலும் அளவுகளிலும் குலை விடும் வாழைகள், பலா, அன்னசி, சப்போட்டா, மங்குஸ்தான், ரம்பூத்தான், ரோஸ் ஆப்பிள், செர்ரி, திராட்சை, சீனத்துலிச்சி, கேரம்போலா, பேரிக்காய், கிச்சிலி என எத்தனை கனி வகைகள் அங்கே !

நினைக்கும் பொழுதே நாவில் நீர் ஊறுகிறதல்லவா !

1900-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் தோட்டம் இது. 1,300 அடி உயரத்தில் அமைந்திருக்கும் இந்தப் பண்ணையில் பழ வகைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடக்கின்றன. 22—23 ஏக்கர் நிலத்தில் ஒவ்வொரு அடி மண்ணையும் அருமையுடன் பண்படுத்திச் செடிகளை வளர்த்து வருகிறார்கள். மெத்தென்ற மண்ணின் மீது இந்தச் சோலைக்குள் நடந்து செல்வதே தனிச் சுகம்தான்.

விதையே இல்லாத எலுமிச்சை இங்கே விளைகிறது. ரம்பூத்தான் என்றொரு பழம்; குட்டிப் பலாப் பழத்தைப் போன்று தோற்றமளிக்கிறது. மேல் தோலுக்கும் கொட்டைக்கும் இடையே உள்ள வெண்மையான பகுதி கற்கண்டு கலந்த பாலைப்போல இனிக்கிறது.

பாக்கு மரத்தைப் போன்று நெடிது வளர்ந்திருக்கும் பலா மரத்தில் மாங்காயைப் போன்று பழங்கள் தொங்குகின்றன. இந்த விந்தையான பலாமரம் சிங்கப்பூரைச் சேர்ந்ததாம். நம்முடைய நாட்டுப்பலாமரங்கள் பயன்தர ஏழு முதல் பத்து ஆண்டுகள் ஆகும். ஆனால், சிங்கப்பூர் பலா 42 திங்களில் நிறமும் மணமும் மிக்க கனிகளை அதிக அளவில் தருகிறது.

செர்ரி வகைகள் இங்கு உண்டு. மங்குஸ்தான், மலேசியன் ஆப்பிள் ரகங்களும் நிறையப் பயிராகின்றன.

ஊட்டச் சத்து இயல்பாக உள்ள வளமான மண்ணில் செடிகள் செழித்து வளர்ந்திருக்கின்றன. கூனூர் நதியிலிருந்து பாசனத்திற்கு நீர் கொண்டு வரப்படுகிறது.

பழ வகைகளோடு, கிராம்பு, இலவங்கம், சாதிக்காய் போன்ற நறுமணப் பொருள்களும் கோக்கோ போன்ற பான வகைகளும் சத்துமிக்க தவசிக் கீரையும் கூட, கல்லாற்றுப் பண்ணையில் செழித்து வளர்கின்றன.

கடையிலே சென்று கனி வகைகளை வாங்குவதைவிட, தோட்டத்தில் நுழைந்து அவற்றைப் பெறுவதில் ஒரு தனிச்சுவை இருக்கத்தானே செய்கிறது! உதகைக்கு வழக்கமாகச் செல்வோர், வழியில் கல்லாறைக் காணாமல் செல்வதில்லை. பருவக் காலத்தில் இந்த ஆராய்ச்சிப் பண்ணை ஒரு சந்தையைப் போலத் தோற்றமளிக்கும். ஆண்டுக்கு 55,000 ரூபாய்க்கு மேல் இங்கு விற்பனை ஆகிறதென்றால் பண்ணையின் பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும்?

முற்றிலும் பயன்தரும் மரம்

தலைவலி பொறுக்க முடியவில்லையா! உங்கள் கரம் நீலகிரித் தைலத்தைத் தானே தேடுகிறது!

யூகலிப்டஸ் மரத்தில் நூற்றுக் கணக்கான வகைகள் உண்டு. அவற்றில் தைலம் அதிகமாகத் தருகின்ற ப்ளூ கம் (Blue gum) எனப்படும் யூகலிப்டஸ் க்ளோபுலஸ், தன் பிறந்த அகமான ஆஸ்திரேலியாவிலிருந்து, 'உதகமண்டலத்துக்கு வந்து 130 ஆண்டுகள் ஆகின்றன.

யூகலிப்டஸை முதன் முதலில் நீலகிரியில் உருவாக்கியவர் கேப்டன் எப். பகாட்டன் என்பவர். ஆனால், ஆரம்பத்தில் பெரும்பாலான செடிகள் வளராமலேயே பட்டுப் போய்விட்டன. 1863-ல் கவர்னர் வில்லியம் டெனிசன் பரவலாகப் பயிரிடத் திட்டமிட்டார்.

தொடக்கத்தில் யூகலிப்டஸ் அடுப்புக்கு உதவும் கட்டையாகவே பெரும்பாலும் பழக்கத்தில் இருந்தது. இன்று, அடி முதல் நுனிவரை அது முற்றிலும் பயன்தரும் மரமாகிவிட்டது.

அதன் கசக்கப்பட்ட இலையிலிருந்து பாக்டீரியாவை முறியடிக்கும் உலகப் புகழ்பெற்ற நீலகிரித் தைலம் எடுக்கின்றனர். அதன் பூக்களிலிருந்து நிறைந்த தேன் கிடைக்கிறது. மரத்தின் கூழ், காகிதம் தயாரிக்க மிகவும் உகந்ததாகிறது. யூகலிப்டஸைப் பயன்படுத்தி மேட்டுப்பாளையத்தில் ரேயான் தயாரிக்கும் தொழிற்சாலை, ஈராயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருப்பதுடன் ஆண்டுக்கு மூன்றரைக் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப் படுத்துகிறது. யூகலிப்டஸின் வளர்ச்சியால் அது விளையும் மண்ணும் நல்ல சத்தினைப் பெறுகிறது. காற்றின் வேகத்தைத் தடுத்து உதவுகின்ற இம்மரத்தின் கட்டைகள், கூரைகளில் அமைக்கவல்ல எழில் விரிப்பு களாக

Kaḷattil iṭa neruk…

களத்தில் இட நெருக்கடியை நினைத்தே, கால்வாயில் தண்ணீர் வந்தவுடன், அவசரத்துடனே நட்டு முடிப்பதில் முந்திக்கொள்வார்கள். அறுவடையும் முந்தி வரும்; களத்தில் ஆற அமரக் கதிரடித்து முடிக்கலாம்.

முந்திக் கொண்டவன் அறுவடையை, அவன் அளந்தெடுக்கும் கண்டு முதல் எவ்வளவு என்பதைக் கிராமமே உன்னிப்பாகக் கவனிக்கும். மேடேறி விட்டால், அடுத்த போகம் களம் காணும் வரையிலும், தலை நிமிர்ந்து நடக்கலாம். இல்லையெனில் முந்திக் கதிரறுத்து, குத்தகைக்கே கட்டி வராமல், அதோ தலையிலே கை வைத்து உட்கார்ந்து விட்டானே பெருமாள்—இந்தக் கதிதான்.

முதல் போகத்தை விட இரண்டாம் போகம் மேலும் சுழித்து விட்ட அதிர்ச்சியில் கதிகலங்கிப் போய் விட்டான் பெருமாள். இப்படியும் கையைக் கடிக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவே இல்லை. மூச்சுத் திணறியது.

அடுத்துச் சோத்துக்கு என்ன செய்வது? அடுத்த போகம் நடவுக்கான செலவுக்குத்தான் எங்கே போவது. கூட்டுறவுச் சங்கத்தில் நுழையலாமென்றாலோ, பழைய கடன் தலைக்குமேல் நிற்கிறதே! மறுபடியும் 'நெல் வட்டி'க்குக் கடன் வாங்கி அதிலேயே மூழ்கிப்போக வேண்டியது தானா? குடும்பம் பூராவும் அல்லவா உட்கார்ந்து அழப்போகிறது!

பெருமாளுக்கு நெஞ்சு கனத்தது.

3) எதிரே-சூட்டடி நெல் ஐந்து மூட்டைகள் தேறுமா? அதையும் அறுவடைக் கூலிக்கு அளந்து விட்டால், ஆள் மட்டும் தப்பி, களத்திலிருந்து வெளியேறிக் கொள்ளலாம். தலையடி நெல் பூராவையும் காலையிலேயே 'ஐயா' கொண்டு போய் விட்டார். முதலாளியை நொந்து கொண்டு என்ன பயன்? முதல் போகத்தில் குத்தகை நெல்லே கொடுக்கவில்லை. இப்போதும் கையை விரிக்க முடியுமா?

வீட்டிற்கு மதியச் சோறு கொண்டு வரச் சென்றிருந்த சீனியம்மாளின் தலையைக் கண்டதும், பெருமாளுக்கு மேலும்

ஏர்முனையில் போர்முனை

சோம. மகாதேவன்

இரக்கம் உண்டாயிற்று. அவளுக்குப் பொருமல் அடங்கவில்லை.

அவனுக்கு எதிரே வந்து நின்ற சீனியம்மாள், தூக்குப் போணியையும், தண்ணீர்ச் செம்பையும் அவன் முன்னால்வைத்துவிட்டு, முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே புருசனைத் திரும்பிப் பார்த்தாள்.

''பிடிச்சுவச்ச பிள்ளையார் மாதிரிஎதுக்கு உட்கார்ந்திருக்கே? களத்தைக் காலி பண்ணு'' என்றாள்.

காலமும் நேரமும் ஒத்து வரவில்லை என்ற பெருமூச்சோடு எழுந்து, செம்புத் தண்ணீரால் கைகளைக் கழுவிக் கொண்டான் பெருமாள்.

இந்த மனச் சுமையில் சோறுதான் வாய் நிறையுமா? உண்ணும் போதாவது இவள் பேசாதிருக்கப் போகிறாளா?

பெருமாள் சாப்பிட உட்கார்ந்தான்.

ரசமும் ஊறுகாயும் தானா? இதை இப்போது வாய் திறந்து கேட்டு விட முடியுமா?

களத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் புலம்பிக்கொண்டே முன்னால் வந்து நின்றாள் சீனியம்மாள்.

'' மண்ணு விளையலையின்னா என்ன செய்யச் சொல்றே? சும்மா பாத்துப் பாத்துப் பொருமுறியே'' என்றான் பெருமாள் சோத்தைப் பிசைந்தபடியே.

சீனியம்மாள் சீறினாள்.

''இதை வேறு யாருகிட்டேயும் போய்ச் சொல்லு. முதல்லே ஒழுங்கா விதை நெல்லைக் கட்டி வச்சியா? நாத்துப் பாவுற வரைக்கும் நினையாமத் திரியிறது. ஆத்திர அவசரத்துக்கு யாருகிட்டயோ கடனுக்கு விதை நெல்லை வாங்கியாந்து அவுத்துக் கூடப் பாக்காம முளைக்கப் போட்டியே. குறுகிப் போயி நின்ன பயிருக்கு மேலுரமாவது தூவுனியா? நான் அப்பவே நினைச்சேன். அப்படியே தான் ஆகிப் போச்சு; நல்லா நிமிந்து பாரு. வைக்கோல்தான் மிச்சமாகப் போகுது. இதுக்கு மேலே நீயும் நானும் அதைத்தான் திங்கணும்'' என்றாள் ஆவேசத்தோடு.

பெருமாளுக்கு வாயிலிருந்த சோறு தொண்டையிலே இறங்கவில்லை. ஆனாலும் இந்தச் சூட்டோடு, அடுத்துச் சொல்ல இருந்ததையும் சொல்லி விட்டான்.

'' வைக்கோலையும் களத்திலேயே வித்துப் போடப் போறேன் '' என்றான் முணுமுணுத்த குரலில்.

'' ஏன் இதையும் வித்துப் போட்டா—மாடுக மண்ணையா தின்னும்? திட்டம் போடுறியாக்கும் '' என்று பொரிந்தாள்.

பெருமாளும் தொடர்ந்தான்.

'' மாட்டையும் தான் கொடுத்திடப் போறேன். கூலிக்கி ஏர்ப் பிடிச்சு நடுறது. அப்புறம் மாடு வாங்கிக்கலாம்'' என்று சொல்லிவிட்டு, கைகளைக் கழுவிக் கொண்டான்.

''புத்திதான் போகுது பாரு. நீ தலைகீழா நின்னாலும் மாட்டை விக்க விடமாட்டேன். இருக்கிற காணியையும் விட்டுப் போட்டு, தெருவிலேதான் நிக்கப் போறோம்'' என்றாள் ஆத்திரத்தோடு.

பெருமாளுக்குக் கோபம் வந்துவிட்டது.

எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இவளுக்குப் பேச்சு மீறுதே!

'' இப்ப நீ. . . . ஒப்பாரி வைக்காமப் போறியா இல்லையா ? '' என்று சிம்பினான்.

தவுல் போன்ற இசைக் கருவிகளுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கான காலணிகள், பைகள், அழகுச் சாமான்கள், கால்பந்து போன்ற விளையாட்டுப் பொருள்கள் முதலியன செய்ய இதன் தோல் பயன்படுகிறது.

'' தலையிலே கையை வச்சு உட்கார்ந்திட்டதிலே குறைச்சலில்லே. ரோசம் வருதாக்கும் ரோசம்'' என்றாள் கைகளை வீசியவாறு.

அவ்வளவுக்குள் பெருமாளுக்குக் கோபம் பொங்கித் தட்டிவிட்டது. துள்ளி எழுந்தான்.

'' இன்னிக்கி உனக்குப் போங்காலந்தான் வந்திருக்கு '' என்று பெருங் குரலில் சொல்லிக் கொண்டே அவளை நெட்டித் தள்ளினான்.

இமைக்கும் நேரத்தில் கதிரடிக்கும் பலகையில் நெற்றி மோதி, குப்புற விழுந்தாள் சீனியம்மாள். அவளை மேலும் அடிக்க பெருமாள் பாய்ந்த போது, சுற்றியிருந்தவர்கள் ஓடி வந்து அவனைப் பிடித்துக் கொண்டனர்.

சீனியம்மாள் தட்டுத்தடுமாறி எழுந்தாள். அவள் நெற்றியில் பட்டிருந்த காயத்திலிருந்து இரத்தம் வழிந்தது.

அதே சமயத்தில், பெருமாளின் மகள் செல்வி, வீட்டிலிருந்து முக்கியமான செய்தியை மடியிலே கட்டிக் கொண்டு, மேல் மூச்சு வாங்க ஓடி வந்தவள், தாயின் கோலத்தைக் கண்டு திகைத்து நின்றாள்.

பெற்றோரைப் பார்த்துக் கண் கலங்க நிற்கும் மகளை, பக்கத்திலே இழுத்து அணைத்துக் கொண்டு, '' என்னம்மா ? '' என்று கேட்டாள் சீனியம்மாள்.

'' பட்டாளத்து மாமா வந்திருக்கு '' என்று பரபரப்போடு சொன்னாள் மகள். அவளுக்குப் பத்து வயதிருக்கும்.

சீனியம்மாளுக்கு மெய் சிலிர்த்தது. அந்த நிலையிலும் பூரித்துப் போனவளாக, '' யாரு. . . . . முருகனா வந்திருக்கான் '' என்று ஆவலோடு கேட்டாள்.

தனது ஒரே தம்பி பட்டாளத்தில் இருப்பதில் அவளுக்கு எவ்வளவோ பெருமை. அந்த உடையில் கம்பீரமாக நிற்கும் தம்பியின் புகைப்படத்தைத் தினமும் சற்று நேரமாவது நின்று பார்க்காமல் தீராது அவளுக்கு.

வடக்கே சண்டை நடக்கும் எல்லையில் இருப்பதாக எழுதி இருந்தான் முருகன்.

தம்பி வந்திருக்கானா ?

பரபரப்புடன், சூழ்நிலையையே மறந்தவளாக, மகளையும் இழுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள் சீனியம்மாள்.

தன்னைத் திரும்பியே பார்க்காது செல்லும் அவளைத் திகைப்போடு பார்த்துக் கொண்டு நின்றான் பெருமாள்.

இந்த நேரங்காலம் பார்த்துத்தான் மச்சினன் வந்து நிற்க வேண்டுமா ? அக்காளிடம் உயிரையே வைத்திருப்பவன். இவள் நெற்றியில் காயத்தோடு போய் நிற்கும்போது, அந்தப் பட்டாளத்துக்காரன் கையில் துப்பாக்கி இருந்தால், பெருமாளை இங்கேயே சுட்டுத் தள்ளி விட மாட்டானா ?

தயங்கினாலும், தூரம் தொலைவிலிருந்து அவன் வந்திருக்கும் போது வீட்டிற்குப் போகாதிருக்க முடியுமா ?

* * *

பெருமாள் வீட்டிற்குள் நுழைந்த போது, '' என்னக்கா இது நெத்தியிலே காயம்? ரெத்தம் வருதே!'' என்று பதட்டத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான் முருகன்.

பெருமாளுக்கு உள்ளுக்குள்ளேயே உதறியது.

'' வா மாப்பிள்ளே '' என்று சுரத்தில்லாமல் கேட்டு விட்டு, சற்றுத் தள்ளி, உள் திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டான். நேருக்கு நேராகத் தம்பியிடம் சொல்லி விடத்தான் போகிறாள் என்பதை எதிர்பார்த்தே சீனியம்மாளை ஏறிட்டுப் பார்த்தான்.

சீனியம்மாள் நெற்றியைத் துடைத்துக் கொண்டாள்.

எட்டாக் கையிலே—உயிரைப் பணயம் வைத்து பகையாளிகளிடம் போராடி விட்டுவந்திருக்கும் தம்பியிடம், இந்தப் போராட்டத்தை முன்னால் வைத்துச் சொல்ல வேண்டுமா ? அவனுக்கு மனம் நொந்து போகாதா ?

அவள் தம்பியைக் கண்நிறையப் பார்த்தாள்.

''என்னக்கா காயம்?'' என்று மலும் சற்றுக் கோபத்தோடு கட்டான்.

இதன் தோலை மயிருடன் பதனிட்டு உடைகளும் மேசை விரிப்புகளும், தயாரிக்கிறார்கள். இதன் உடலில் பஞ்சு அடைத்து வீட்டில் அழகுக்காகவும் வைக்கிறார்கள்.

''களம் கூட்டுறப்ப பலகையிலே முட்டிக்கிட்டேன்'' என்று சொல்லிச் சிரித்தாள் சீனியம்மாள்

நன்றியோடு அவளைத் திரும்பிப் பார்த்த பெருமாளுக்கு நெஞ்சு படபடத்தது.

'' மாமா எதுக்கு இப்படி உக்காந்திருக்காரு?'' என்று திரும்பிப் பார்த்துக் கேட்டான் முருகன்.

'' அறுவடையிலே பதக்குக் கூட மிஞ்சலே; அந்தக் கவலை அவருக்கு'' என்றாள் சீனியம்மாள்.

'' மாமா—உங்க போக்கு இன்னமும் மாறலையா ? நிலத்திலே வர்ற வருமானத்தை நாலு வழியிலேயும் செலவழிச்சுப் போட்டு, விவசாயம் ஏனோ தானோன்னு செய்தா எப்படி மிஞ்சும்? இதுனாலே வீட்டுக்கும் கேடு, நாட்டுக்கும் நட்டம். மனுசத் தன்மையே மருந்துக்குக் கூட இல்லாத எதிரிகளை முறியடிக்கிறதுக்கு, இங்கே உங்க ஏர்முனை செம்மையா இருக்கணும் மாமா'' என்றான் முருகன்.

'' மெத்தனமா இருந்தா இப்படித்தான் முடியும். இப்பத்தான் தெரியுது'' என்று கவலையோடுதான் சொன்னான் பெருமாள்.

'' வந்து நிக்கிறவன் இந்தப் பேச்சை ஆரம்பிச்சா இது தீரப் போகுதா? சோறு போடுறேன்'' என்றழைத்தாள் சீனியம்மாள்.

'' அக்கா இப்ப எதுக்கு வந்திருக்கிறேன் தெரியுமா ? நானே சம்பாதிச்சு உனக்கு நகை செய்து போடணும்னு ரொம்ப நாளாவே நினைச்சுக்கிட்டே இருந்தேன். யுத்த முனையிலேயே ஆறுமாசம் இருந்ததுக்காக தனி அலவன்ஸ் கொடுத்தாங்க. லீவும் கிடைச்சது. எல்லாத்தையும் சேர்த்து உனக்காகவே எண்ணூறு ரூபா கொண்டாந்திருக்கேன்.'' என்றான் முருகன் பொங்கும் உவகையோடு.

தம்பியின் பாசத்தை நினைக்கும் போது சீனியம்மாளின் கண்களில் நீர் பொங்கியது. தம்பியின் கரங்களைப் பற்றிக் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள்.

முருகன் மாமனின் பக்கமாகத் திரும்பினான்.

'' எந்திரிச்சு வாங்க மாமா '' என்றான்.

பெருமாளுக்கும் புதிய உணர்வுகள் நெஞ்சை நிறைத்தது.

இந்த இளம் வயதில், உயிரையே துச்சமென மதித்து, மழையிலும், பனியிலும், கடும் புயலிலும் எதிரிகளின் இலக்குக்கு முன்னால் நின்று நாட்டைக் காத்ததற்குக் கிடைத்த பரிசை, ஊதாரியாக, யாருக்கும் பயனில்லாதவனாக நிற்கும் பெருமாளிடமே கொண்டு வந்து கொடுக்கிறானே! இந்தப் பணத்தின் அருமையை அளவிட முடியுமா ?

முகத்தைத் துடைப்பதுபோல கண்களையும் துடைத்துக்கொண்டு எழுந்து வந்தான் பெருமாள்.

முருகன், பையில் கைக்குட்டையில் சுற்றி வைத்திருந்த பணத்தை எடுத்து, மாமன் கையில் கொடுத்து, '' இனிமேலாவது கருத்தோட பாடுபட்டு, செட்டும் சிக்கனமாய் இருந்து, அக்காளுக்கு நகை செய்து போடுங்க'' என்றான்.

'' எனக்கெதுக்கு? மகளுக்குச் செய்து போடட்டும். நாளைக்கு அது உனக்குத்தான் சேரும் '' என்று சொல்லிச் சிரித்தாள் சீனியம்மாள்.

முத்துப்பல் முறுவலிக்க..!

டாக்டர்
பி.பி. ராஜன்

“பல் இல்லையேல் சொல் இல்லை'' என்பதற்கிணங்கப் பற்கள்தான் மனிதனுக்கு இன்றியமையாதனவாகும். உடலுக்கு வாயிற்படியாக இருப்பது வாய்தான். அந்த வாயினுள் இருக்கும் பற்களைச் சரியாகப் பாதுகாக்காவிடின் மக்களுக்கு ஏற்படும் மற்ற நோய்களுக்கு அதுவே மூலகாரணமாக அமையும்.

காரணம் என்ன ?

நல்ல உடம்பிற்கும் தோற்றத்திற்கும், தூய்மையான உள்ளத்திற்கும், உச்சரிப்பிற்கும் பற்கள் மிக அவசியமானவையாகும்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதுபோல் உடற்கூறுகளின் தன்மையை வாயின் மூலமாக அறிய வாய்ப்பு உண்டு. பண்டைக்காலப் பழக்க வழக்கங்களின்படி பற்களை நன்றாகப் பாதுகாக்க அக்காலத்து ஆகாரங்களே பெரிதும் உதவியிருக்கின்றன. இக்காலத்தில் நாமும் மேல் நாட்டுப் பழக்கங்களை அனுசரித்து மிருதுவான ஆகாரங்களை அதிகமாக உட்கொள்வதால் பற்கள் வேலையற்றுப் போய்விடுவதுடன் அத்தகைய ஆகாரங்கள் பற்களின் மீது படிந்து விடுகின்றன. இவ்விதம் தங்கிப் போகும் ஆகாரங்கள் மீது கிருமிகள் வளர்ந்து பற்கள் சொத்தையாவதற்கு ஏதுவாகின்றன. தவிர, அடர்ந்த பற்களும் இரத்தக் கசிவு உள்ள ஈறுகளும் மேலும் பற்களைச் சேதமடையச் செய்து அவைகளை மற்ற உடல் உறுப்புகளையும் பாதிக்கக் காரணமாக விளங்குகின்றன.

உடலே பாதிக்கிறது!

உதாரணமாக, கெட்டுப்போன பற்கள் வாயில் விஷப்பொருளாக இருந்து அருகிலுள்ள கண், காது, தொண்டை முதலிய முக்கிய உறுப்புகளைப் பாதிப்பதுடன் அல்லாமல், இரத்தத்தின் மூலமாகப் பிற உறுப்புகளையும் முக்கியமாக இருதயம், சிறு நீரகம், குடல், தோல் முதலியவற்றையும் பாதிக்கின்றன. வாயிலிருந்து வரும் துர்நாற்றம் பிறரை அருவருக்கச் செய்கிறது.

அறிகுறி என்ன?

அடர்ந்த பற்களும், அழுக்கடைந்த பற்களும், முழு வளர்ச்சியடையாத பற்களும் சொத்தையாவதற்கு அடிப்படைக் காரணம் பற்களில் எளிதில் ஒட்டிக்கொள்ளும் ' சாக்கலேட் ' போன்ற இனிப்புப் பொருள்களை நொறுக்குத் தீனியாக உட்கொள்ளுதலேயாகும். சிலருக்குப் பற்சொத்தை முன்னோர்கள் வழிவரும் வியாதியாகும். பற்களின் இயற்கையான பளபளப்பு மங்கலாக மாறுவதும், பற்களில் கூச்சம் தோன்றுவதும், அவைகளில் கருப்புப் புள்ளி தோன்றி குழிகளாக மாறுவதும் பல் சொத்தையாவதற்கான ஆரம்பக்கால அறிகுறிகளாகும்.

பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் பைந்தமிழ்.

பஞ்சாப் மாநிலப் பல்கலைக் கழகத்தில் தமிழைப் போதிக்கப் பஞ்சாப் அரசு ரூபாய் மூன்று இலட்சம் ஒதுக்கியுள்ளது. உஸ்மானியா பல்கலைக்கழகம் தமிழ்மொழிப் பயிற்சிக்கு வகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசு அம்முயற்சிக்குத் தன் ஆதரவைக் காட்டும் வகையில் ரூ. 25 ஆயிரம் வழங்கியுள்ளது. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்துக்குத் தமிழ் மொழி வகுப்புகள் நடத்த ரூ. 10 ஆயிரமும் தமிழ்ப் பண்பாட்டியல் வகுப்புகள் நடத்த ஆக்ரா பல்கலைக் கழகத்துக்கு ரூ. 1,532-ம் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

வேண்டாம் மிட்டாய் !

பற்கள் சொத்தையாகாமல் தடுக்க நாள் தோறும் இருமுறை பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும். புதிய காய்கறிகளையும் பழ வகைகளையும் சாப்பிட வேண்டும். சத்தான உணவு உட்கொள்ள வேண்டும். அடிக்கடி மிட்டாய் சாப்பிடும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

ஒழுங்கீனமான பற்களையும், அடர்ந்த பற்களையும், முன்தள்ளிய பற்களையும் சரிப்படுத்திவிடலாம். குழந்தைகளுக்குப் புட்டியில் பாலூட்டுவதும் குழந்தைகள் விரல்களைச் சூப்புவதும், எழுதுகோல் போன்றவைகளைக் கடிப்பதும் பற்களை ஒழுங்கீனமாகச் செய்துவிடும். சில குடும்பங்களில் வழிவழியாக இப்படிப்பட்ட பல் அமைப்பு ஏற்படுவதும் உண்டு. இவைகளுக்கெல்லாம் தகுந்த மருத்துவச் சாதனங்கள் பொருத்திச் சரிப்படுத்திவிட இன்று வாய்ப்பும் வசதியும் உள்ளது.

ஆலும் வேலும் !

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி', 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பதுபோல், ஆலும் வேலும் போன்ற பிரஷ்ஷையும் பற்பசையையும் கொண்டு, நாலும் இரண்டும் போன்று, நாள் தோறும் இருமுறை பற்களைத் துலக்குவோமாயின் பற்கள் ஆரோக்கியத்துடன் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பற்கள் நலமாயின் வாய் நலமாகும் ; வாய் நலமாயின் உடல் நலமாகும் ; உடல் நலமாயின் நாடு நலமாகும் ; எனவே, வீடும் நாடும் செழித்து வளரப் பல்லும் வாயும் பாங்குடன் இருக்க வேண்டியது அவசியம்.



நல்வாழ்வுக்கு நடமாடும் மருத்துவமனை

நவம்பர் பதினெட்டு!

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூர் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. கொட்டும் மழையிலும் மக்கள் திரளாக வந்திருந்தார்கள். அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் இப்படி எல்லாத் துறையினரும் அங்குக் குழுமியிருந்ததற்குக் காரணம், அன்று நடந்த 'சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவமனை'யின் துவக்க விழாவே !

நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், இந்த நடமாடும் மருத்துவமனையைப் பெருமிதத்துடன் துவக்கி வைத்தார். ஏழை, எளியவர்கள் அடையப் போகும் பயனை எண்ணிஎண்ணி அவர்முகம் மகிழ்வால் மலர்ந்தது.

பட்டி தொட்டிகளிலே வாழும் பாமர மக்களின் பிணிபோக்கி, அரும்பணி ஆற்றுவதுதான் இந்த மருத்துவமனையின் நோக்கம். இளம் மருத்துவர்கள் பலர் இந்த அரும்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்றனர். நோயாளிகளிடத்திலே அவர்கள் காட்டும் கனிவு ஒன்றே போதும், கடும் பிணியும் நீங்கிவிடும்.

சுமார் அறுபது கூடாரங்கள், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் பக்கத்தில் காட்சியளிக்கின்றன. நல்ல காற்றோட்டமும், அமைதியும் மிக்க இந்தச் சூழ்நிலையில் நோயாளிகள் பலர் தங்கிச் சிகிச்சை பெற்று நலமுடன் திரும்பியிருக்கிறார்கள்; பலர் தங்கிச் சிகிச்சை பெற்றும் வருகிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் இந்த நடமாடும் மருத்துவமனையால் பெரும் நன்மைகள் அடைந்து வருகின்றனர். இந்த மருத்துவமனையின் சிறப்புகளை இன்றைக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

மழை, வெய்யில் இவற்றால் பாதிக்காத இந்தக் கூடாரத்தில் நோயாளிகள் படுக்க நல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக 'வார்டு'கள் இருக்கின்றன. மருத்துவர்கள் மிக நல்லமுறையில் அவர்களைக் கவனித்து ஆவன செய்வதால் அவர்கள் நலத்துடன் வீடு திரும்பி வருகின்றனர். தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு நல்ல சத்துள்ள உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

இந்த மருத்துவமனை இந்த இடத்தில் மூன்று மாதங்கள் இருக்கும். முதலில் கும்மிடிப்பூண்டியில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட இந்த நடமாடும் மருத்துவமனை, ஊர் ஊராகச் சென்று மக்கள் நல்வாழ்வுக்காகத் தொண்டாற்றும்.

இங்கு இது துவக்கப்பட்ட செப்டம்பர் திங்கள் முதல் நாளில், புறநோய்ப் பகுதியில் சிகிச்சை பெற

பிறகு படிப்படியாக ஊராட்சி ஒன்றியத்தின் உதவியால் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை வளர்ந்து வந்தது. சராசரி ஒரு நாளைக்கு 300 பேர் வரை சிகிச்சை பெறும் அளவுக்கு உயர்ந்தது. நவம்பர் 15-ஆம் தேதி வரை மொத்தம் 14,683 பேர்கள் புறநோய்ப் பகுதியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

முதலில் நான்கு பேர்களே தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த இந்த மருத்துவமனையில், இன்று சுமார் 150 பேர்வரை சிகிச்சை பெற்றுள்ளனர்.

குடும்பநல அறுவைச் சிகிச்சைக்கான ஒரு பகுதியும் இம்மருத்துவமனையோடு சேர்க்கப்பட்டுள்ளது. ஆடவருக்கும், மகளிருக்கும் அறுவைச் சிகிச்சை இங்கு நாள்தோறும் நடைபெற்று வருவதைப் பார்த்தால், 'அளவான குடும்பமே வளமான வாழ்வு' என்பதனை மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் குடும்பநலத்திட்டத்தில் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும் வைத்திருக்கிறார்கள் என்பதையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

அக்டோபர் 4-ஆம் நாளிலிருந்து 15-ஆம் நாள்வரை 57 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதில் ஆண்கள் 52, பெண்கள் 5. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேட்டி, புடவைகளை அமைச்சர் வழங்கிய காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மகப்பேற்றுக்காகவும் இங்கு ஒரு பிரிவு இருக்கிறது. மூன்று மகப்பேறுகள் நடந்துள்ளன. இதில் இரண்டு ஆண் குழந்தைகள். ஒன்று பெண் குழந்தை. முதலில் பிறந்த ஆண் குழந்தைக்கு மருத்துவமனையின் நினைவாக 'சித்தரஞ்சன்தாஸ்' என்னும் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இந்த மருத்துவமனையில் கண் நோய்க்கான ஒரு பிரிவும் இருக்கிறது. இதுவரை ஒன்பது பேர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. இவை மட்டுமா ?

கிரா

சென்று வீடுகளிலும் பள்ளிகளிலும் இம்மருந்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் காலரா, அம்மை மற்றும் தொத்து நோய்களுக்கான தடுப்பு ஊசிகள் போட்டு வருகின்றனர். படித்துப் பட்டம் பெற்ற இம் மருத்துவ இளைஞர்கள் 'நகரத்திலேயே வாழ்க்கை நடத்த வேண்டும்' என்று பிடிவாதம் பிடிக்காமல் பட்டிக்காடுகளில் உழவர் பெருமக்கள் வாழும் கிராமப்புறங்களில் சிறிதும் சோர்வில்லாமல் தொண்டாற்றுகிறார்களென்றால், அவர்களை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் கிராமப் புறங்களில் தொண்டாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன், தொடங்கப் பட்டதுதான் 'இளைஞர் அணி'. இப்படி இளைய சமுதாயம் அணி அணியாகத் திரண்டு தம் பணிகளைச் செவ்வனே செய்வதுதான் நாட்டிற்கு அணிகலனாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணக் கனவு கண்டு கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை, இன்று, முதல்வர் கலைஞர் அவர்கள் நனவாக்கிக் கொண்டு வருகிறார்கள்: அதற்காக அவர் அமைத்துள்ள பல்வேறு அமைப்புகளில் ஒன்றுதான், இந்த நடமாடும் மருத்துவமனை.

இந்த மருத்துவ மனையில், 27 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஒருவர் மருத்துவ அதிகாரி, மூவர் செவிலியர்கள்; ஒருவர் மருந்தாளுநர். மற்றும் எக்ஸ்-ரே நிபுணர், சமையல்காரர்கள், உதவியாளர்கள், ஏவலாளர்கள் ஆகியோர் உள்ளனர்: இவர்களெல்லாம் கிராமப் பணியில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும்.

இந்த நடமாடும் மருத்துவ மனை மற்ற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்கப் போகிறது. அண்மையில், ஆந்திர மாநிலத்திலிருந்து சில அதிகாரிகள் வந்து, நடமாடும் மருத்துவமனையைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இதன் அருமை பெருமைகளை உணர்ந்த அவர்கள், இதேபோல் ஒரு நடமாடும் மருத்துவமனையை அமைக்க எண்ணியுள்ளனர்.

தமிழகம் பல் வேறு துறைகளில் முன்னேடியாகத் திகழ்ந்து வருவதை, இந்தியா மிக உன்னிப்பாகக் கவனித்து வரும் இவ்வேளையில், இளைஞர்கள்—படித்துப் பட்டம் பெற்றவர்கள் தங்களை நாட்டுப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள முன்வர வேண்டும். அப்போதுதான் நாளுக்கு நாள் தமிழகம் நலம் பல எய்தும்; வளம்பல கொழிக்கும். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறது இந்த நடமாடும் மருத்துவமனை!

மாப்பிள்ளையும், மாமனாரும் !

''ஒரு மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவர் படித்துப் பட்டம் பெற்று வெளிவருகிறவரை, அவருக்காக அரசு சுமார் ரூ. 35 ஆயிரம் செலவிடுகிறது. இந்தக் காலத்தில் எந்த மாமனாரும் மாப்பிள்ளைக்கு இவ்வளவு சீதனத்தைத் தரமாட்டார் ! ஆனால், அரசு உங்களுக்கு இந்தச் சீதனத்தை அளிக்கிறது என்றால், நீங்கள் பொறுப்புடனும், கடமையுணர்ச்சியுடனும் நடந்து, நாட்டுக்கும் வீட்டுக்கும் தொண்டாற்ற முன்வர வேண்டும்.''

—செங்கை மருத்துவக் கல்லூரி மாணவியர் விடுதி அடிக்கல் நாட்டு விழாவில் நல்வாழ்வுத்துறைஅமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்.

மலையின் மேலொரு மருத்துவ நிலையம்

நமது இரத்தத்தில் சில விஷக் கிருமிகள் புகுந்துகொள்வதால்தான் நமக்கு நோய் வருகிறது. இவ்விஷக்கிருமிகளைக் கொன்று நோயைக் குணப்படுத்தும் வகையை ஆராய்ந்து கண்டுபிடித்தார் பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி லூயி பாஸ்டியர் என்பவர். இவரின் சாதனையின் பலனால்தான் நீலகிரி மாவட்டத்தில் கூனூர் என்னுமிடத்தில் 1906-ல் "தென்னிந்திய பாஸ்டியர் இன்ஸ்டிடியூட்" ஆரம்பிக்கப் பட்டது.

பொதுமக்கள் கொடுக்கும் நன்கொடையைக் கொண்டும், சில "அறக்கட்டளை"களிலிருந்தும், மருந்தை விற்றுக் கிடைக்கும் பணத்திலிருந்தும்தான் இந்த நிலையம் நடைபெறுகிறது.

வெறிநாய்க் கடியிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், பொது மக்களுக்கு அந்த நோயைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்து, அதிலிருந்து அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தையும், அது சம்பந்தமான ஆராய்ச்சிகளிலும் இன்னும் சில வியாதிகள் பற்றிய ஆராய்ச்சிகளிலும் இந்த நிலையம் ஈடுபடுகிறது.

1922 வரை கூனூர் சென்றால்தான் நாய்க்கடிக்கு வைத்திய வசதி கிடைக்கும் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால், பிறகு பல்வேறு இடங்களிலும் இதற்கான சிகிச்சை அளிக்க வசதி செய்யப்பட்டது.

கூனூர் நிலையத்தில் பல்வேறு மிருகங்கள் மீதும் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள். முக்கியமாக வெறிநாய்க் கடிக்கும், இன்ஃபுளுயன்சா போன்ற நோய்க்கும் கூட மருந்து தயாரித்து வருகிறார்கள்.

6,000 அடி உயரத்தில் மிகவும் அமைதியான சூழ்நிலையில் உள்ள இந்தப் பாஸ்டியர் நிலையத்தினுள் நுழைந்தாலே ஒருவிதப் புத்துணர்ச்சி உண்டாகும். இங்குள்ள நூல் நிலையத்தில் உலகிலுள்ள எல்லா மருத்துவச் சம்பந்தப்பட்ட நூல்களும் இருக்கின்றன. பல மருத்துவர்கள் சில மாத காலம் இங்குத் தங்கி விஷயங்களைத் தெரிந்து கொண்டு செல்வதுண்டு.

கூட்டுறவு முறையில் கோழிப்பண்ணை

"முட்டை முந்தியதா?கோழி முந்தியதா?' என்னும் ஒரு வினாவை எழுப்பி, அதற்கு விடை சொல்ல வருவோரையும் மடக்கி, விதண்டா வாதம் புரிந்து, தங்களது பொன்னான நேரத்தை வீணாக்குவோர் பலர் உண்டு.

''திருமணம் நடந்தால்தான் பைத்தியம் தெளியும்'' என்பதற்குப் பைத்தியம் தெளிந்தால்தான் திருமணம் நடக்கும்'' என்று கூறும் பிரிவைச் சார்ந்தவர் அவர்கள்.

இவர்களது வாதங்களில் எது முந்தி வந்து நிற்கிறதோ, இல்லையோ, இன்று சத்துள்ள உணவுப் பொருட்களின் வரிசையில் கோழிமுட்டை முந்தி வந்து நிற்கிறது.

''அப்படி என்ன தனிச் சிறப்புகள் அதற்கு?''

''ஒரு முட்டையானது உருவாகாத ஒரு கோழிக் குஞ்சுக்கு நிகர்'' என்பார் டாக்டர் ஹட்சிஹன் என்னும் அறிஞர்.

மாவுச்சத்து, கொழுப்புச் சத்து, புரதச்சத்து, உலோகச் சத்து, நீர்ச்சத்து, நார்ச்சத்து —எனப் பிரிக்கப்பட்டுள்ள உணவின் பல பகுதிகளில், புரதச் சத்து மிகவும் இன்றியமையாதது என்பது பள்ளிப் படிப்பு மட்டுமல்ல ; வாழ்வுக்குப் பாடமுமாகும்.

தசைகளின் வேலைக்கும், உடலில் கெட்டுப்போன பாகங்களை ஈடு செய்வதற்கும், காயங்கள், புண்கள் விரைவினிலே ஆறுவதற்கும், இரத்த ஊட்டத்துக்கும், நோய்களை எதிர்க்கும் 'ஆண்டிபயாடீஸ்' என்னும் தடுப்புகளை உருவாக்குவதற்கும், சுரப்பிகள் நன்கு சுரப்பதற்கும், எலும்புகளின் வளர்ச்சிக்கும், அவைகளின் உறுதிக்கும், புரதமே துணை செய்கிறது என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல; நூற்றுக்கு நூறு உண்மை.

13 சதவிகிதம் புரதம்; உயிர்ச் சத்துக்கள், உலோகப் பொருட்கள் கோழியில்—கோழி முட்டையில் அடங்கியுள்ளன என்னும் வல்லுநர்களின் கணிப்பு புள்ளிவிவரம் மட்டுமல்ல; புரிந்து கொள்ள வேண்டிய நுணுக்கங்கள்.

நாம் உட்கொள்ளும் உணவில் போதுமான அளவு (புலால் உணவென்றால் 85 கிராம்) புரதம் சேராவிட்டால் இரத்தம் நீர்த்துத் தசைகள் சுருங்கும்; உடல் தளர்ச்சி அடையும்; ஈரல் நோய் வரும்; சோகை பிடிக்கும்; வீக்கம் காணும்-என்பது மருத்துவர்கள் மட்டும் உணரக் கூடிய உண்மை அல்ல; எல்லார்க்கும் தேவையான விளக்கம்.

இத்துணைச் சத்து நிறைந்த முட்டையை நாம் எத்தனைபேர் இன்று உட்கொள்கின்றோம்?

ஏன வைத்துக் கொண்ட நாட்டிலுள்ள கோழ் அவைகள் இடுகின்ற முட்டைகளையும் கணக்கெடுத்துப் பார்ப்போமானால் ஆளுக்குப் பாதி முட்டை கூட வரவில்லை என்பது ஆய்வாளர்கள் தரும் புள்ளி விவரம்.

இந்தக் குறைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, அவற்றைத் தன்னளவிலாவது இயன்றமட்டும் நீக்க முன்வந்துள்ளது செங்கை மாவட்டம். அப்பணியை வரவேற்போம்! வாழ்த்துரைப்போம்!

செங்கை மாவட்டத்தின் தலைநகராம் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு சிற்றூர் ...... ஆறு தேக்கிய நல் வாய்க்கால்களும், வரப்பெடுத்த வயல்களும் சூழ்ந்துள்ள செவிலிமேடு கிராமம்........ அங்கேதான் கடந்த 10–11–71 அன்று வீசு தென்றல் தாலாட்ட, மாலை மதியம் புத்துணர்ச்சி ஊட்ட, செங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் கோழி வளர்ப்பு முன்னோடித் திட்டத்தைக் கூடி நின்ற மக்களின் முன்னே தொடங்கி வைத்தார்.

நிலமற்ற ஏழை விவசாயப் பெருமக்களுக்கு ஒரு பகுதிநேர வேலை வாய்ப்பாகவும்; குறைந்த அளவு மூலதனத்தைக் கொண்டு ஓரளவு கணிசமான வருவாய் பெறுவதற்காகவும்; எளியவர்தம் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் வளர்ச்சி பெற்றிட நாளும் ஒரு முட்டை வீதமாகிலும் சாப்பிட ஊக்குவிப்பதற்காகவும்; மேலும் இச்சிறு பண்ணைகளின் வாயிலாக ஏற்படும் அனுபவத்தைக்கொண்டு, கோழிவளர்ப்பை ஒரு பெருந் தொழிலாகவே ஏற்று நடத்த வழியாகவும்; மாவட்டத்தில் உள்ள ஏனைய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஆட்சித் தலைவரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு எளிய குடும்பங்களைச் சேர்ந்த 20 நபர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பல வங்கிகளுடன், கடன் வசதி பெறுவதற்குத் தொடர்பு கொள்ளப்பட்டு முடிவில் காஞ்சிபுரம் இந்தியன் வங்கி ரூ. 18,000 அளிக்க முன்வந்து, மனமுவந்து கொடுத்திருக்கிறது. ஊர்மக்களின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது.

"கொத்தித் திரியுமந்தக்
கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா"

என்று பாரதி சொன்னது பிள்ளைகளுக்கு மட்டுமின்றி, இன்று பெரியவர்கள் தங்கள் வாழ்வையே மேம்படுத்திக் கொள்ளவும் பயன்படுகிறது.

முதலிலே திட்டமிட்டபடி 'கோழி வளர்ப்போர் சங்கம்' அமைக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் 20 பேரும் அதன் உறுப்பினர்கள் ஆவார்கள். தலைவர், துணைத் தலைவர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சங்கத்திற்கென விதிகளும் இயற்றப்பட்டுள்ளன.

'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதுபோல், கடன் சுமையை, அதன் அழுத்தத்தை இவர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் வங்கியிலிருந்து வாங்கப்பட்ட கடன் தொகையைச் சங்க உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் (ஆளுக்கு ரூ. 900 வீதம்) தனித்தனியே அதே வங்கியிலேயே பற்று வரவுப் புத்தகங்களில் கணக்கு ஆரம்பித்து அந்தந்த மாதத் தவணைகளைச் சங்கத்தின் பொறுப்பிலேயே வைத்துக் கொள்ளுகின்றார்கள். கோழித் தீவனமும் மொத்தமாக வாங்கி உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. உற்பத்தியாகும் முட்டைகளை உறுப்பினர்களிடமிருந்து சேகரித்தும் அவைகளை விற்பனை செய்தும், வங்கிக்குச் சேர வேண்டிய கடனைச் செலுத்தும் பொறுப்பையும் சங்கமே ஏற்றுக்கொண்டுள்ளது மிகச் சிறந்த பணியாகும்.

இவர்கள் எல்லாரையும், கோழி வளர்ப்போர் சங்கத்தின் சார்பில் கவனித்து வருவதற்குச் செவிலிமேடு கால்நடை வளர்ச்சி அலுவலர், சங்கத்தின் அதிகாரப் பற்றற்றச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கால்நடை உதவி இயக்குநர், கால்நடை விரிவாக்க அதிகாரி, உதவி மருத்துவர் இவர்களின் ஆய்வுரைகளைக் கேட்டு அவர் செயலாற்றுகின்றார்.

இந்த இருபது பேர்களுக்கும், அவரவர் வீட்டுக்கருகிலேயே, ஆழ்குப்பை, கோழிவீடு அமைப்பதற்குக் கீற்று, மூங்கில், கம்பிவலை போன்ற பொருட்களைச் சங்கமே மொத்தமாக வாங்கி வழங்கியுள்ளது.

முப்பது முட்டையிடும் பெட்டைகளை வைத்து வளர்ப்பதற்கு வசதியாகக் குறைந்தது 10'× 10' அளவுள்ள ஆழ்குப்பை, கோழி வீடுகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 250-க்கு மேற்படாமல், சிக்கனமாகக் கட்டியிருக்கின்றார்கள். எளிய முறையில் குடிநீர்த் தொட்டிகள், தீனித் தொட்டிகள் மொத்தமாக வாங்கி வழங்கியுள்ளார்கள். உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க உயர் இனக்கோழிகள் திருநின்றவூரில் தனியார் ஒருவரிடமிருந்தும், செங்கற்பட்டு அரசினர்



கோழிப் பண்ணையிலிருந்தும், சென்னையிலிருந்தும் வாங்கி வழங்கியிருக்கின்றார்கள்.

"கூட்டுறவு என்னும் சொல் புனிதமானது. கூட்டுறவு இயக்கத்தின் தத்துவமும் புனிதமானது. கூட்டுறவுத் துறையில் சிலருடைய நடவடிக்கைகளால் களங்கம் ஏற்படுவதும் உண்டு. மேகங்கள் கூடுவது மழை பொழிவதற்கு; காகங்கள் கூடுவது பகிர்ந்து கொள்வதற்கு; கூட்டுறவு நிருவாகத்தில் இருப்பவர்கள் மேகங்களைப் போல் கூடி, ஏழை எளிய மக்களுக்கு நன்மை என்ற மழை பொழியச் செய்ய வேண்டும்; காக்கைகளைப் போல் கூடி இருப்பதைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது" என்றுரைத்த நமது முதல்வர் கலைஞர் அவர்களின் பொன்மொழியை இந்தச் சங்கம் தன் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கடைப்பிடித்து வருகிறது.

அரசுத் துறையில் குறைந்த விலையில் பக்குவப்படுத்தி வழங்கப்படும் தீவனம் உறுப்பினர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் எல்லாரும் கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களே. ஆனாலும் ஆழ்குப்பை, கோழி வீடு வளர்ப்பு முறையில் அதிக அனுபவம் இல்லாதவர்கள். எனவே, அவர்களுக்கு நாள்தோறும் பண்ணைகளில் அனுசரிக்க வேண்டிய முறைகள் அனைத்தையும் தெளிவாகக் ற்றுத் தருகின்றார்கள். மேலும் கால்நடைத்துறை அலுவலர் ளும் இந்தப் பண்ணைகளைப் பார்வையிட்டு அறிவுரைகள் வழங்குகின்றனர்.

கோழிகளுக்கு நோய் வருவது இயல்பு. அதுவும் சில குறிப்பிட்ட நேரங்களில் வருகின்ற நோய்கள் அவைகளை அப்படியே பூண்டோடு அழித்து விடுகின்றன. இதை யுணர்ந்து நல்ல முன்னேற்பாடுகளைச் சங்கம் செய்துள்ளது. கோழிகளுக்கு அன்றாடம் அளிக்க வேண்டிய தீவனம், மருந்து வகைகள் முதலியவற்றைக் கால்நடை விரிவாக்க மருத்துவ அதிகாரி கவனிக்கின்றார். கோழிகளைப் பாதுகாக்க உயிர்ச்சத்துப் பொருட்களைத் தண்ணீரில் கலந்து கொடுத்து வருகிறார்கள்.

பண்ணைகளில் உள்ள கோழிகள் இப்போது முட்டையிட ஆரம்பித்து விட்டன. நாள் ஒன்றுக்கு 200 முட்டைகள் உற்பத்தியாகின்றன. இனி எல்லக் கோழிகளும் முட்டையிடுமானால் 400 முட்டைகள் நாள்தோறும் கிடைக்கும் என்கிறார்கள்.

முட்டைகளை விற்பனை செய்து அதில் வரும் இலாபத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பு நிதியாக அவர்கள் பற்று வரவுப் புத்தகத்தில் பதிய வைக்கிறார்கள். இத்தொகையைக் கொண்டு புதிய கோழிகளை வாங்கித் தொடர்ச்சியாக—முட்டை உற்பத்தி பாதிக்காமல் பார்த்து வருகிறார்கள். இந்தியன் வங்கியிலிருந்து வாங்கியுள்ள கடன் தொகையைத் திட்டமிட்டபடி ஒரே ஆண்டுக்குள் திருப்பிச் செலுத்தி விட்டு விரைவில் முழுப் பலனையும் உறுப்பினர்களே அடையப் போகிறார்கள்.

இன்று செவிலிமேடு கிராமத்தில் உள்ள இந்த 20 விவசாயப் பெருங்குடி மக்களும், தங்களது உழைப்பால் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ளக் கோழிப் பண்ணை என்னும் ஊன்றுகோலைப் பற்றியுள்ளார்கள். இதைத் தளர விடாமல், தன்னம்பிக்கையோடு பற்றி நின்று வெற்றி பெறுவார்கள் எனும் நம்பிக்கை நமக்குண்டு. அந்த வெற்றிதானே மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இந்த அரசுக்கும்—நாட்டுக்கும் அவர்கள் ஆற்றும் நன்றிக்கடன்:

"உழைப்பின்வாரா உறுதிகள் உளவோ ?" நிச்சயம் உண்டு!

— இளங்கோ

தந்தையும் மகனும்

மோதிலால் நேரு மிகப் புகழ் பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தவர். தனது மகன் ஜவகர்லாலும் தன்னைப் போலவே ஒரு வழக்கறிஞராக வேண்டும் என்று நினைத்த மோதிலால், ஜவகரை மேல் நாட்டுக்கு அனுப்பிச் சட்டக் கல்வியைப் படிக்க வைத்தார். ஜவகரும் திறம்படத் தேர்ந்து வெளிவந்தார்.

அவரிடம் தனது வழக்கைக் கொடுக்க நினைத்தார் ராஜா மகாராஜ் சிங் என்பவர். நேருவின் தந்தை மோதிலால் நேருவுக்கு 500 ரூபாயை அனுப்பி "தங்கள் மகன் நேரு எனக்காக வழக்கறிஞராக வாதாட வேண்டும்" என்று எழுதியிருந்தார். அதனைப் பெற்ற மோதிலாலுக்கு மகிழ்ச்சியும் பெருமையும் தாங்கவில்லை. உடனே மகனை அழைத்தார்.

"எனக்கு முதல் வழக்கில் கிடைத்த தொகை எவ்வளவு தெரியுமா ? ஐந்தே ஐந்து ரூபாய் தான் ! ஆனால் உனக்கு 500 ரூபாய் ! உன்னுடைய மதிப்பும் தகுதியும் என்னைப் போல் நூறு மடங்கு உயர்ந்துள்ளது" என்றார்.

உலகிலேயே மிகப் பெரிய தோல் ஆராய்ச்சி நிலையம்

“ இந்தத் தோல் பெட்டி எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா ?”

“ இந்தப் பையைப் பாருங்கள், எப்படிப் பளபளவென மின்னுகிறது... .....”

“ எல்லாவற்றையும் விட நான் அணிந்திருக்கும் செருப்புதான் சிறப்பாக இருக்கிறது!”

இப்படி ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள தோல் பொருட்களின் நேர்த்தியைப் புகழ்ந்து பேசுகிறார்களென்றால் இதற்கெல்லாம் மூல காரணம், சென்னை அடையாறிலுள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம்தான். அடிப்படையிலிருந்து, எல்லா விதமான ஆராய்ச்சி வசதிகளும் கொண்ட தோல் ஆராய்ச்சி நிலையம், உலகிலேயே இதுவே மிகப் பெரியதாகும். இத்தகைய பெருமைக்குரிய இந்நிலையம் தோன்றிய வரலாறு மிகச் சுவையானதாகும்.

நம்நாட்டில் கால்நடைகள் அதிகமிருந்தும், அவைகளால் முழு அளவு பயனில்லையே, இதற்குக் காரணம் என்ன ? 1. அவை சரியானபடி பராமரிக்கப்படவில்லை. 2. தோல்களை முறைப்படியாகத் திரட்டிப் பதப்படுத்தி, அறிவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் இல்லை. இந்த இரண்டு காரணங்களால் இத்தொழிலில் போதுமான அளவுக்கு நமக்கு வருவாய் கிடைக்கவில்லை. இந்நிலையிலும் நாம் ரூ.24 கோடிக்குப் பலரகத் தோல்களை ஏற்றுமதி செய்திருக்கிறோம் ; ஆனால் அப்போது நாம் தோல் இறக்குமதி செய்தது ரூ. 1.30 கோடிதான்.

நாட்டு விடுதலைக்கு முன் இத்தோல் தொழில்கள் கிராமங்களில் குடிசைத் தொழிலாக இருந்து வந்தது. தோலைச் சரியானபடி பதப்படுத்தவோ, பக்குவப்படுத்தவோ அவர்களுக்கு ஏற்ற கல்வி அறிவு இல்லை. இந்நிலையில் மேலும் மேலும் இத்துறையை வளரச் செய்ய பலர் முயன்றனர். நல்ல வருவாய் வரக்கூடிய இந்தத் தொழிலை மேம்படுத்தும் தீவிரமான திட்டங்கள் பல உருவாக்கப்பட்டன. விஞ்ஞான முறைப்படி தோல் ஆராய்ச்சி செய்து, அதனைப் பதப்படுத்தி விதப்படுத்திப் பல்வேறு துறைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று பலர் தங்கள் மேலான எண்ணங்களைத் தெரிவித்தார்கள். தோல் துறை வல்லுநர் பேராசிரியர் வி. எம். தாஸ் தலைமையின் கீழ், 'தோல் ஆராய்ச்சிக் குழு' ஒன்று செயற்கரிய பல செயல்களுக்குத் திட்டங்கள் தீட்டியது. அதன் விளைவாக, 1948-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் நாள் சென்னை அடையாறிலுள்ள 'மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்துக்கான அடிக்கல் மத்திய அமைச்சர் திரு சியாம் பிரசாத் முகர்ஜி அவர்களால் நாட்டப்பட்டது. 1958 சனவரித் திங்கள் இந்த அரும்பெரும் நிலையம் —உலக அரங்கிலே உச்சநிலை அடைந்துள்ள இவ்வாராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டது. அப்போது இந்நிலையத்தின் முதல் இயக்குநராகப் பேராசிரியர் வி.எம். தாஸ் பொறுப்பேற்றார். இந்த நிலையம் நிறுவப்படுவதற்குப் பண்டித நேரு அவர்களின் முயற்சியும் ஒரு காரணம் என்பதை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். இக்கட்டடம் கட்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு இலவசமாக நிலத்தை வழங்கி உதவியிருக்கிறது.

திரு வி. எம். தாஸ் அவர்களின் அரிய யோசனைகளால், செயல்திறனால் இந்த ஆராய்ச்சி நிலையத்தின் புகழ் எங்கும் பரவத் தொடங்கியது. ஆனால் 1956-ல் அவர் திடீரென காலமானார். அந்தப் பொறுப்பை இத்துறையில் நிபுணரான திரு ஒய். நாயுடம்மா அவர்களிடம் ஒப்படைத்தனர். அன்று முதல் இன்று வரை இவரே இயக்குநராக இருந்து பல அரிய செயல்களைச் செய்து வருகிறார்.

93 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த நிலையம் இங்கே நிறுவப்பட்டதற்குப் பிறகுதான், இந்தியத் தோல் தொழிலின் வளர்ச்சியும், வருமானமும் நாளுக்கு நாள் வளர்ந்தது. 1969–70-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தோல் பொருட்களின் மதிப்பு ரூ. 985.5 மில்லியன்கள். இத்துடன் உள்நாட்டிலும் இதற்கு நிறைய கிராக்கி இருந்து வருகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம், விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து தோல்களைப் பதப்படுத்துவதே ஆகும். இங்கு 15 பரிசோதனைக் கூடங்கள் (Laboratories) உள்ளன. இவை தவிரக் கால்நடைகள், தோல் வியாதிகள் சம்பந்தமான ஆராய்ச்சிக் கூடங்களும் உள்ளன. தோல்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்க இது உதவுகிறது.

இந்தியாவிலேயே தோல் ஆராய்ச்சிக்காகவே கட்டப்பட்ட நிலையம் இது ஒன்றேயாகும். இந்த நிலையத்தில் 224 விஞ்ஞானிகள் நிரந்தரமாகப் பணியாற்றுகின்றனர். இந்த விஞ்ஞானிகளின் அரிய ஆராய்ச்சித் திறனாலும், இங்கு அடிப்படையிலிருந்து எல்லா விதமான பரிசோதனைக்கூடங்கள் இருப்பதாலும் உலக நாடுகள் பலவற்றிலிருந்து பலர் இங்கு வந்து படித்துப் பட்டம் பெற்றுச் செல்கின்றனரென்றால் நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா ?

சூடான், ஜப்பான், பர்மா, தைவான், இந்தோனேசியா, உகாண்டா, நைஜீரியா, எகிப்து, பிலிப்பைன்ஸ், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்தும் வந்து இங்கு பயிற்சி பெறுகிறார்கள். இது வரை சுமார் இருநூறு பேர்கள் இங்குப் பயின்று பட்டம் பெற்றுத் திரும்பியுள்ளார்கள். இம்மாதிரியான பயிற்சியில் பட்டம் தரும் நிலையம் இது ஒன்றுதான். ஆனால், கல்கத்தா, பம்பாய், சென்னை, பஞ்சாப் போன்ற நகரங்களில் ' தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்' உள்ளன. இவை 'டிப்ளமா' மட்டுமே தருகின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவான தோல் தொழில் பற்றிப் படிப்போர்களும் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

தோல் நல்லதா ? கெட்டதா? என்று அறிந்துகொள்வது எப்படி ? சில தோல்களைப் பார்த்தாலே தெரியும் இது மட்டம்தான் என்று; சில தோல்களை இரசாயன ஆராய்ச்சி செய்தால்தான் கண்டுபிடிக்க முடியும். நம்நாட்டில் மாட்டுத் தோல் அவ்வளவாகக் கிடைப்பதில்லையாதலால், சில சமயங்களில் அவைகளை நாம் வெளி நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியிருக்கிறது.

இவர்களுடைய நோக்கமெல்லாம் புதுமை, புதுமை, புதுமைதான்! பழைய முறைகளை மாற்றியமைத்து, விஞ்ஞானத்தின் துணைகொண்டு புதுமையைப் புகுத்துவதுதான் இவர்களுடைய கவனமெல்லாம். கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் பொருட்களைத் தயாரிக்கவும் தற்கால நாகரீகத்துக்கு ஏற்ற எழில்மிக்க ஆடை வகைகளை உருவாக்கவும், வண்ணங்கள் பலவற்றைப் பூசித் தோலில் அலங்கார வேலைகள் செய்யவும் இவர்கள் தங்கள் எண்ணங்களை முழுக்க முழுக்க ஈடுபடுத்தியிருக்கிறார்கள்.

பெட்டி, பை, பொம்மை, ஆடை, விளையாட்டுக் கருவிகள், மருத்துவச் சாதனங்கள், போன்றவற்றுக்கெல்லாம் தோல்கள் பெருமளவு பயன்பட்டு வருகின்றன. இது போன்ற தோல் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் இந்தியாவில் நிறைய இருக்கின்றன. இவர்களுக்கு, எப்படியெல்லாம் தோலில் புதுமைகளைப் புகுத்தலாம் என்று ஆலோசனை சொல்வவோடு. புதிய கண்டுபிடிப்புகளையும் அவர்களுக்குக் கொடுத்து உதவுகிறார்கள்.

இந்தியாவில், பம்பாய், ராஜ்கோட், கல்கத்தா, கான்பூர், ஜலந்தர், ஆகிய நகரங்களில் வட்டார நிலையங்கள் இருக்கின்றன. இவர்களின் தலையாய பணி அந்தப் பகுதிகளில் நடைபெற்று வரும் தோல் தொழிலகங்களுக்கு உதவுவதே ஆகும். மேலும் ஊர்தி ஒன்றில் இத்தொழில் ஆராய்ச்சி சாதனங்களான உருப் பெருக்காடி (Microscope) போன்ற கருவிகளுடன் ஆங்காங்குச் சென்று, தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விஞ்ஞான முறையைக் கற்றுத் தருகிறார்கள்.

இதன் தோல் மிகவும் கெட்டியானது. இயந்திரங்களுக்கு வேண்டிய பெல்ட்டுகள், வாஷர்கள், சைக்கிள் சீட்டுகள், குதிரைச் சேணம் ஆகியவையும், இதன் கொம்புகளிலிருந்து சீப்புகளும், பொம்மைகளும் ; குளம்புகளிலிருந்து சிகரெட் சாம்பல் கிண்ணமும் தயாரிக்கப்படுகின்றன. தண்ணீர் இறைக்கும் இறவைக்கும், படகுகள் செய்யவும் இதன் தோல் பயன்படுகிறது.

இவர்கள் பணி இதோடு நின்றுவிடவில்லை. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் தோல் துறை வல்லுநர்கள், சூடான், நைஜீரியா, சோமலியா, எதியோப்பியா, பர்மா, ஜோர்டான் போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்குஇத் தொழிலிலுள்ளவர்களுக்கு, மேலும் இதனை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பன போன்ற ஆலோசனைகளையும், வழிவகைகளையும் சொல்லி வருகின்றனர்.

அடையாறிலுள்ள இந்த நிலையத்தில் பார்வைக்காகச் சில தோல்பொருட்களையும், கண்ணைக் கவரும் வண்ணந் தீட்டிய தோல் வகைகளையும் வைத்திருக்கிறார்கள். 16-ஆம் நூற்றாண்டில் இத்தாலிய நாட்டுத் தோல் பொருள் ஒன்றும், 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தயாரித்ததோல்பெட்டியும், தோலிலே வரைந்த ஓவியமும் ஜாவா நாட்டின் தோல் பொம்மையும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. மற்றும், யானை, ஒட்டகம் தவளை, பாம்பு போன்றவற்றின் தோலினால் செய்த பலவிதப் பொருட்கள் கண்ணாடிப்பெட்டிக்குள்ளே வைக்கப்பட்டுள்ளன. அவைகளையெல்லாம் பார்க்கும் போது, ஒரு சாதாரண தோல் எப்படியெல்லாம் உருவாகி, உள்ளத்தைக் கவர்கிறது என்று நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை உதாரணமாக ஓர் எலியின் தோலைக் கூட வீணாக்காமல் அதையும் பயன்



இதன் கொழுப்பு, உயர்தர 'ஷேவிங் சோப்' தயாரிக்கப் பயன்படுகிறது. இதன் இரைப்பையிலிருந்து எடுக்கும் "பெப்சின்" மனிதனின் இரைப்பை நோய்களுக்கு மருந்தாகிறது. இது நன்ருக உழைப்பது. இதிலிருந்து கால்பந்து, பெல்ட், கையுறை, காலணிகள், முதலியன செய்யப் படுகின்றன. இதன் எலும்புத் தூள் உரமாகவும், குளம்புகள் வச்சிரமாகவும் பயன்படுகின்றன.



படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் 'காட்டியிருக்கிருர்கள். எலியின் தோலில் குழந்தைகளுக்குக்கான காலணிகள், பர்ஸ், பை முதலியன செய்யப்படுகின்றன. இதன் வால் கடிகாரப் பட்டைக்குப் பயன்படுகிறது. காரணம் இந்த வால் இயற்கையிலேயே கடிகாரப் பட்டைப்போல் அமைந்திருப்பதுதான்,

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் வெளியேற்றப்படும் கழிவுநீர்களைக் கூட வீணாக்க இவர்களுக்கு மனம் வரவில்லை. அதற்கும் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிருர்கள். வெளியேற்றப்படும் கழிவு நீர்களைக் கால்வாய்கள் வழியாகக் கொண்டு வந்து சுமார் 4 ஏக்கர் பரப்பளவுள்ள பயிர் வகைகளையும், பழ மரங்களையும் வளர்க்கிருர்கள். ஐ. ஆர். 8 நெல் கூட இங்குப் பயிரிடப்படுகிறது. வாழை, தென்னை போன்ற மரங்கள் நன்கு வளர்ந்துள்ளன இக்கழிவு நீரால் !

இந்நிலையத்தில் புத்தகப் 'பைண்டிங்' வேலையும் நடக்கிறது. அதாவது தோலால் செய்யப்படும் 'பைண்டிங்'. பெண்களும் ஆண்களும் இந்தப் பிரிவில் பணியாற்றுகின்றனர். இந்நிலயத்தின் சார்பில் 'லெதர் சயின்ஸ்' என்ற திங்கள் இதழ் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவருகிறது. இந்த இதழில், தோலைப் பதப்படுத்தும் முறைகள் பற்றிய கட்டுரைகளும் தோல் சம்பந்தமான செய்திகளும் இடம் பெற்றுள்ளன. மேலும் இவர்கள் குறைந்த விலையில் ஆங்கிலத்திலும், தமிழிலும், புத்தகங்களையும் வெளியிட்டிருக்கிருர்கள். 1972 சனவரித் திங்கள் தோல் பொருள் கண்காட்சி ஒன்றும் இங்கு நடைபெறவிருக்கிறது. இதில் பல நாட்டு நிறுவனங்கள் கலந்து கொள்ளப்போகின்றன.

சீரிய பணி பல புரிந்துவரும் இவ்வாராய்ச்சி நிலையம் தோன்றியிராவிட்டால், தோல் தொழில் இந்த அளவுக்கு வளர்ந்திருக்குமா? இந்தியாவில் 1952—53-ல் ரூ. 27 கோடியே 39 இலட்ச ரூபாய்க்கு ஏற்றுமதியான தோல், 1969—70-ல் 98 கோடியே 50 இலட்ச ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்ருல் இதற்குக் காரணம் இந்நிலையே அல்லவா ?



வெண்பாப் போட்டி

23. மாண்பதனைக் காத்தல் மரபு

●வீட்டிற் கொருபிள்ளை வீதம் அளிக்கின்ற
நாட்டினர்நாம்! இந்நாள்நம் நாடுற்ற—கேட்டினைக்
காண்பதுவோ ? வீரக் கலைசெறிந்த பைந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வங்கனூரான், வங்கனூர்.

இகலால் படையதனை எல்லைப் புறத்தே
மிகையாக ஊடுருவ விட்டுப்—பகைவர்செய்
வீண்வம்பை வெஞ்சமரால் வேரறுத்துப் பாரதத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

தெள்ளு தமிழ்ப்பாவைத் தேர்ந்தே எழுத்தசை
தள்ளாமல் சீர்தளை தட்டாமல்—உள்ளத்தில்
மூண்ட கவிதை முடித்தேநற் காரிகையின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் நா. கோதண்டபாணி, ஒரத்தநாடு.

ஆண்மகனய்த் தோன்றி அறிவொழுக்கந் தானின்றிக்
காண்பார் சிரிக்கமனக் காவலின்றி—ஊண்விரும்பி
வீண்காலம் போக்கி வினைகேட ஞகாமல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

வெங்குருதிச் சாக்காட்டில் வெற்றிபெறப் போராடும்
வங்கத்துச் சிங்கங்காள்! வாழ்கவெனப்—பொங்குகின்ற
ஆண்மையுடன் பாடுவோம் ; ஆர்வமுடன் நாம்உதவி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—எழிலன், பி.ஏ.,பி.இடி., வெற்றியூர்.

முக்கரணம் போட்டு முயன்றே எழுதினும்எப்
பக்கமும் என்றும்என் பாஇல்லை—துக்கந்தான்
ஆண்மைக் கழகோ அழாதிருத்தல்! போட்டியின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சுப. அறவாணன், முதலிப்பட்டி.

கருதாமல் தூண்போலக் காதளவுக் கப்பால்
கிருதாவை ஏன்வளர்க்க வேண்டும்?—கிருதாவைக்
காண்பவர்கள் எல்லாரும் கண்டு நடுங்காமல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—இராம. ஆதிரத்தினம், மேலூர்.

மாணுக்க ரென்ருலே மாண்புடையர் ; அப்பொருளை
வீணுக்கும் செய்கை விழையாதீர்—சேணேக்கி
ஆண்பெண் ணிருவருமே ஆற்றலுடன் கற்றடங்கி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் துரை. முருகு, திண்டுக்கல்-1.

நாட்டினைக் காத்திடவே நல்லபல போர்முறைகள்
நாட்டியவர் நம்மவர்கள் நன்கறிவோம்—கூட்டுறவாய்
மூண்டெழுவோம் ; மோதுகளம் வெற்றிகொள்வோம்; முந்தையர்நம்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மூ. செல்லையா, விளாத்திகுளம்.

●பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு வங்கனூரான், பாரதிதாசன் இல்லம்,
வங்கனூர் அஞ்சல், திருத்தணி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

முன்னோர் நெறிநின்று மூத்த தமிழ்வளர்த்தே
என்றுந்தன் மானம் இழக்காமல்—அன்னியர்க்கு
வேண்டும் உதவிசெய்து வீரராம் செந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மா. கணபதி, சங்கமங்கலம்.

தென்றல் திரு.வி.க. தெய்வ மறைமலையார்
நன்றுணர்ந்த பாரதியார் நம்முன்னோர்—தொன்றுதொட்டுத்
தூண்போலப் போற்றிநிதம் காத்துவந்த நம்நாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வித்துவான் க. சேதுராமலிங்கன், இராமேச்சுரம்.

தங்கள் விடுதலையைத் தாயகத்தில் தாமிழந்து
இங்கே வருகின்றார் வங்கத்தார்—அங்கவர்க்கு
வேண்டுவன நாமளித்து வேதனையை நீக்குமந்த
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வித்துவான் முல்லை. நெல்லையப்பன், தச்சநல்லூர்.

தன்னுயிரைத் தந்து தமிழ்கேட்டான் நந்திவர்மன்
இன்னுயிரைச் சங்கரனார் ஈந்திட்டார்—தென்மொழிக்கே
காண்கின்றோம்; யாதுபயன்? காலமெல்லாம் நாமந்த
மாண்பதனைக் காத்தல் மரபு.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

சித்தருடன் யோகிகளும் சீராட்ட விஞ்ஞானம்
புத்தொளியாம் விந்தை புரிந்ததுவே!—இத்தனையும்
ஆண்டாண்டுச் செல்ல அழிந்ததுவோ? நம்நாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—இரா. ஜெயபால், காந்திக்கிராமம்.

வாய்மணக்க நெஞ்சினிக்க வந்தாரை 'வா' வென்றே
தாய்போல் அரவணைத்த தண்டமிழர்—நாய்போல
ஊண்வேண்டி ஊர்ஊராய் ஓடினுமே மாத்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சேரை இரத்தினக்குமார், கொலாபா, பம்பாய் 5.

கோவலனின் வாழ்வழித்த குற்றத்தால் உள்ளழிந்து
மேவியதன் னாவியையே விட்டொழித்த—காவலனும்
பாண்டித் திருநாடன் பண்பு குலையாமல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் தி.செ. கந்தசாமி, சங்ககிரிதுர்க்கம்.

தாய்போன்ற அன்பும் தரங்குறையா நற்பண்பும்
சேய்போன்ற தன்மையும், சீற்றத்தில்—பாய்புலியாய்க்
காண்பார்க்குத் தோன்றிடும் கண்போன்ற செந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—க. தியாகராசன், பி.ஏ., நெய்வேலி-2.

மாற்றானின் தோட்டத்து மல்லிகைப்பூ வாசனையை
ஏற்கும் குணங்கொண்ட எம்மன்னன்—கூற்றினை
வீண்போக்கா தென்றும் விதியாய்க் கடைப்பிடித்து
மாண்பதனைக் காத்தல் மரபு.

—பொ. வேலம்மாள், கொட்டாரம்.

வீட்டுக் குடித்தனத்தை வீழ்ச்சியுறச் செய்யாது
நாட்டிற்குத் தொண்டுசெய்து நல்லவராய்க்—கூட்டுறவின்
தூண்போல வாழ்ந்துவரும் தூயகுலப் பெண்ணினத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—கோ. கிருட்டினசாமி, பூனா-11.

புவிசெழிக்க வெண்மைப் புறாப்பறக்கும் நாட்டைத்
தவிதவிக்கச் செய்யத் தருக்கர்—குவித்தபடை
காண்பதென்றுந் தோல்வியாகக் காலனாகி இந்தியத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—கிரி, கோவை.

முல்லைக்குத் தேரீந்த முத்தமிழ்சேர் நன்னாட்டில்
இல்லையெனும் பேச்சுக் கிடமில்லை—அல்லலுறக்
காண்பவர்கள் யாருமில்லை காணீர் எனச்சொல்லும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் க. பசுவையன், குடியாத்தம்.

முப்பால் முதலான மூதறிவு நூல்களை
இப்பார்க் களித்துள்ளோம் என்றுநாம்—எப்பொழுதும்
வீண்பெருமை பேசுவதை விட்டொழித்து நம்முன்னோர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ஆய்மதி, அதிராம்பட்டினம்.

கடமை வழிநின்ற காந்தியுடன் நேர்மைக்(கு)
இடமாய் இலங்கிய நேரு—மடமைகள்
வேண்டா வெனஉரைத்த அண்ணா இவர்மூவர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மயிலை வை. வாணி, பி.ஏ., சென்னை-4.

காவிரிச் செம்பியனும் கன்னித் தமிழ்காத்துப்
பாவிரித்த பாண்டியனும் பைம்பனையில்—பூவிரித்த
காண்டகுதார்ச் சேரலனும் காட்டிய முத்தமிழ்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ந. சிவஞானம், புதுக்கோட்டை.

துஞ்சா விழியோடு துன்பச் சுமையோடு
தஞ்சமென் றிங்குவந்து தங்குவார்க்கு—வஞ்சமின்றி
ஊண்படைத்து நல்லுயிரை ஓம்பும் உயரிய
மாண்பதனைக் காத்தல் மரபு.

—எஸ். வைத்தியநாதன், III-பி. காம், மதுரைக் கல்லூரி

குப்பைப் புழுவொன்று கோழியினை வென்றகதை
எப்பொழுதும் இப்பாரில் இல்லையே—எப்படியோ
வீண்பழியால் யாகியாகான் வீழ்ந்தழிந்தான் என்றோங்கு
மாண்பதனைக் காத்தல் மரபு.

—என். சி. கிருட்டினசாமி, பொன்மலை.

வங்கத் தகதிகளை வாழ்விக்க நம்மால்ஆம்
பங்கதனைச் செய்வம் பகிர்ந்துகொள்வம்—துங்கமுற
வேண்டுவன தந்து விருந்தோம்பி வந்ததமிழ்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

பாரறியச் செய்துவிட்டோம் பாகிஸ்தான் அக்கிரமம்
யாரறியப் போவா ரவன்வீழ்ச்சி—நேராகக்
காண்பதே வெற்றிக் களத்திடை நம்நாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வே. சாமுவேல், போடிநாயக்கனூர்.

தாயைப்போல், தங்கையைப்போல், தம்மருமைக் கண்மணி
நேர்
சேயைப்போல் பெண்களிடம் சிப்பாய்கள்—தூயமனம்
பூண்டொழுகிப் போரிற் புறங்காணா வீரஞ்சேர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

— சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

நானும் எழுதுகிறேன் நல்லதமிழ் வெண்பாக்கள்!
ஏனோ வருவதில்லை ஏந்திழையே!—ஆனாலென்?
காண்பதெலாம் ஏட்டில் கவிவடிவே; ஆயினும்,பா
மாண்பதனைக் காத்தல் மரபு.

—அடைக்கலக்குணாளன், கோவிலூர்.

நல்லவனாய்த் தானிருந்தும், நஞ்சை உமிழ்கின்ற
பொல்லா இனத்தாரைப் போற்றுவதால்—எல்லையிலா
வீண்பழிதான் சேரும் விரைவினிலே; ஆதலினால்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சி. செள. கருப்பன்செட்டி, திருச்சி-15.

எல்லையிலே வாலாட்டும் ஈனப் பதர்களுயிர்
கொல்லுதலே திண்டோள் குறித்தசெயல்—பல்லுயிர்கள்
வீண்பழியில் சாதல் விரும்போம்! எனினும்நம்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சு. பொன்னுராசு, வானவாடி.

தந்தைதாய்க் கேற்ற மகளாகத் தற்கொண்டான்
சந்தப் புகழ்மிக்க நங்கையாய்ப்—பந்தமுடன்
தான்பெற்ற மக்கள் நலங்காக்கும் தாயாய்ப்பெண்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—எம். சீதாலெட்சுமி, ஆத்தூர்.

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணியென் றைந்தாய்
வழுத்து மிலக்கணம் வாய்ந்த—விழுத்தமிழில்
சேண்மொழிச்சொல் சேர்த்துரையோம் செந்தமிழர்
தம்மொழி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—தா. சுப்பிரமணியன், குகை.

ஆடைக் குறைப்பெல்லாம் அந்நியரின் நாகரிகம்
நாடுவதோ ஈதெல்லாம் நம்பெண்கள்?—கூடிநாம்
வீண்பெருமை நீக்கிவிட்டு மெச்சுகின்ற பண்டைய
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

அல்லல் படுவதைக்கண் டாற்றாத வேள்பாரி
முல்லைக்குத் தேரீந்தான் முன்னொருநாள்—எல்லையிலா
வான்பொருளை ஈந்தே அகதிகட்கு வாழ்வளிக்கும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் தி.செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

எத்தனைவெண் பாநா னெழுதி விடுத்தாலும்
அத்தனையில் ஒன்றேனும் அச்சேறா—இத்தாளைக்
காண்பதே யென்றன் கடனென்று வீற்றிருக்கும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—பாவை. மயிலோன், பாரதிநகர்.

நாட்டின் நிலைமறத்தல் நல்லவரை நோகடித்தல்
காட்டிக் கொடுக்கும் கயமைஎன—ஏட்டினிலே
காண்பதனை யெல்லாம் கருத்தெனவே கொள்ளாது
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புவனை கலைச்செழியன், அரியூர்.

மெய்வருந்த வாழ்ந்தாலும் மெய்பேசி வாழ்ந்திடுவோம் !
செய்தொழில் மேன்மைதனைச் சேர்த்திடுவோம்!—பொய்
யில்லை
காண்கின்ற எச்செயலும் கண்ணியமே என்றுசொல்லி
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

தொல்லைகள் பன்னாள் தொடர்ந்து வருமெனினும்
எல்லையைத் தாண்டாம லேந்திழையர்—தொல்லுலகில்
ஆண்டிருந்தார் நற்புகழை, அன்னமே! நீயுமந்த
மாண்பதனைக் காத்தல் மரபு.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

ஏட்டினிலே செய்திகளை ஏறுக்கு மாறாகப்
போட்டுவிடின் பொங்கும் புரட்சிகள்—நாட்டினிலே;
சாண்வயிற்றுக் காகச் சதிபுரியேல்! பத்திரிகை
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் மு. சிக்கந்தர், கோபிக்கடவு.

நல்லாட்சி நாவளமை நங்கையரின் கற்புநெறி
சொல்லாட்சி, காதல், துணிவுடைமை—எல்லாம்நாம்
காண்பதெனில் செந்தமிழ் காட்டும் இலக்கியத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—விரு. இராசு. மாரியம்மன் கோவில்பட்டி.

பொன்னிற மேனியைப் பூத்தசெவ் வாயிதழை
இன்னும் எனக்களிக்க அச்சமேன்?—மன்னவரே
'நாண்'ஏறு முன்னே நலமழியாப் பெண்மையெனும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—வ. பெ. இராமசாமி, சென்னை-18.

அன்புடைமை, இன்சொல், அடக்கம், பிறர்வாழ
இன்புறுதல், செய்ந்நன்றி யெண்ணுதல்—மன்புவியில்
காண்பரிய நேர்மை கமழும் தமிழினத்தின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—அ. குமரப்பன், சீர்காழி.

அன்புப் பிணைப்பினிலும் ஆற்றல் விரிப்பினிலும்
இன்பக் களிப்பினிலும் இன்னலிலும்—இன்றமிழர்
வேண்டுமறை யாட்சியிலும் வேற்றுரைக் காப்பதிலும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—கவிஞர் எழிற்கோவன், ஓசூர்.

செந்நீருங் கண்ணீருஞ் சிந்துங்கீழ் வங்கத்தில்
எந்நாளோ நல்லமைதி ஏற்படுநாள்?—அந்நாளைக்
காண்பதற்கே முற்படுக காசினியே! எந்நாளும்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—க. இரத்தினம், திருத்துரைப்பூண்டி.

கூழைக் குடித்துக் குடிசையிலே வாழ்கின்ற
ஏழை எளியவர்கள் இன்பமுடன்—வாழவழி
காண்பதற்குப் பாடுபடும் கன்னித் தமிழரசின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—குழ. அண்ணாமலை, கோவை

வஞ்சகம் நானறியேன் வாதிடவும் எண்ணுகிலேன்
நஞ்சினும் கொல்விழி நாயகியே!—வஞ்சியே
ஊண்மறந்தேன் நாண்துறந்தேன் உன்நினைவால்; நின்
பெண்மை
மாண்பதனைக் காத்தல் மரபு.

—ஆ. இரா. சந்திரன், ஆத்தங்குடி.

குன்றாய் நிமிர்ந்தூக்கம் குன்றுமல் பேரியக்
குன்றருகே யாகியாவின் கூட்டத்தை—வென்றுபெரும்
தூண்போல நிற்பபார்க்குத் தோள்கொடுத்துச் செந்தமிழர்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—க. ஒப்பிலான், திருச்சி-

பெற்ற திருநாட்டைப் பேணிச் செழுந்தமிழைக்
கற்ற பெரியோர் கருத்தேற்றுச்—சுற்றமெனக்
காண்பவரை அன்பால் கவர்கின்ற நற்செயல்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூ

சிங்கத் தமிழா! சிறுநரியாய் அன்னியர்கள்
பொங்கும் பொறுமையால் பொங்குகிறார்—இங்கவரைச்
சேண்விளங்கும் வானுலகம் செல்லவழி காட்டியுன்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் செல்வி. வ. இராஜரத்தினம், திருவெகம்பத்து

புலவர் தமைப்புரந்து பொல்லாரைக் காய்ந்து
நலம்பலவும் செய்திந்த நாட்டைக்—குலமன்னர்
ஆண்ட வரலா றறிவோம்நாம்; அத்தகைய
மாண்பதனைக் காத்தல் மரபு.

—செ. தங்கவேல்சாமி, இராமேச்சுரம்

உள்ளத்தில் ஊற்றும்; உணர்ச்சிப் பிழம்பாமே
கள்ளமிலாக் கண்ணகியின் காவியந்தான்—அள்ளுசுவைத்
தோண்டியெடு கற்கோவில்! தூயபுகார்த் தேசொளியாம்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—புலவர் கோ. பொன்னுசாமி, அயன்கரிசல்குளம்.

துன்னலர் போரைத் தொடர்ந்திடும் போதுநாம்
இன்னல் வடக்கிலென் றெண்ணுமல்—முன்னெழுந்(து)
ஆண்மையுடன் போரிடுவோம்; அன்னைத் திருநாட்டின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—முத்துச்சோழன், கோயம்புத்தூர்.

சீரோடு தோன்றிட்ட செல்வத் திருமனைக்கும்
ஏரோடு சென்ற எழில்மனைக்கும்—பேரோடு
காண்பவர்தான் போற்றிடக் காரிகை தன்கற்பின்
மாண்பதனைக் காத்தல் மரபு.

—மு. ப. சங்கரலிங்கம், உடுமலை.

உலக நாடுகளைக் கவர்ந்த

ஒரு ரொட்டியின் கதை

'இந்த இனிப்பு ரொட்டி எவ்வளவு சுவையாக இருக்கிறது ....'' என்று ஒருவன் அந்த ரொட்டியின் துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தான். எதிரிலிருந்த அவன் நண்பனே ஒரு பழ ரொட்டியைக் காட்டி, '' இதைச் சுவைத்து விட்டுப் பதில் சொல். ஆகா! நினைக்கும்போதே நாவில் நீர் ஊறுகிறதே ......'' என்றான். உடனே மூன்றாமவன், '' நீங்கள் இருவரும் இந்த ரொட்டியைச் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள். இதன் பெயர் பால் ரொட்டி !'' என்றான்.

இப்படி ரொட்டியின் சுவையை அனுபவித்தவர்கள் பேசும்போது, இத்தகைய அருமைக்கும் பெருமைக்கும் உரிய அந்த ரொட்டி எது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா ?

அதுதான் மத்திய அரசு நிறுவனமொன்றால் தயாரிக்கப்படும் ' மாடர்ன் ரொட்டி '. இதன் மகிமையை உலக நாடுகளே அறிந்து பாராட்டும் அளவுக்கு அதில் என்ன இருக்கிறது ? அதைத் தெரிந்துகொள்வதற்கு முன், முதலில் இதைத் தெரிந்து கொள்வோம் :

மாடர்ன் பேக்கரீஸ் (இந்தியா) லிமிடெட் [Modern Bakeries (India) Ltd.] என்னும் இந்த மத்திய அரசின் நிறுவனம் சென்னை அடையாறில் மூன்று ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டிருக்கிறது. 1968-ல் துவக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை கட்டியது.

' மாடர்ன் ரொட்டி' என்னும் பெயரில், சத்துள்ள வகை வகையான ரொட்டிகளைத் தயாரிக்கும் இந்த நிறுவனத்தில் 96 பேர் வேலை செய்கிறார்கள். மூன்று 'ஷிப்ட்'டாக 24 மணி நேரமும் இங்கு ரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இங்கு வேலை செய்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையைத்தான் செய்வார்கள் என்று இல்லை ; இத்தொழிற்சாலையிலுள்ள எல்லா வேலைகளும் அவர்களுக்குத் தெரியும்.

இங்குள்ள விந்தையான கருவிகளையெல்லாம் ஆஸ்திரேலிய அரசு இலவசமாக வழங்கியிருக்கிறது. கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்த உதவி நமக்குக் கிடைத்திருக்கிறது. கோதுமை மாவைச் சலித்துத்தண்ணீர் விட்டுப் பிசைவது முதல் ரொட்டி சுட்டு, ' பேக்கிங் ' செய்வது வரை எல்லாம் இயந்திரம்தான் செய்கிறது. நம் கண்களை நம்மால் நம்ப முடியாத அளவுக்கு, அத்தனைத் துரிதமாக ரொட்டி தயாரித்து வருகிறது. இந்த விந்தை இயந்திரங்கள் !

இங்குள்ள பெரிய கிடங்கில் மூட்டை மூட்டையாக உயர்தரக் கோதுமை மாவு, சர்க்கரை, பால் பவுடர் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கோதுமை மாவு மூட்டையை ஓர் இயந்திரத்தில் கொட்டுகிறார்கள். அது மிக விரைவில் மாவைச் சலித்து ஒரு பெரிய பக்கமும் தள்ளி விடுகிறது. வாயகன்ற பெரிய பாத்திரத்திலுள்ள மாவை எடை போடுகிறார்கள். அந்தப் பாத்திரத்தில் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தள்ளிக் கொண்டு போவதற்கான சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

சுமார் 800 ரொட்டிக்குத் தேவையான மாவுள்ள அந்தப் பாத்திரம் இன்னொரு கருவியில் பொருத்தப்படுகிறது. அங்கு மாவோடு, சர்க்கரை, பால் பவுடர், கொழுப்புப் பதார்த்தங்கள், வைட்டமின்கள் எல்லாம் போடுகிறார்கள். மாவுடன் அவைகளைக் கலப்பது இயந்திரமே. பிறகு அந்த மாவில் நீர்விட்டு மாவை நன்றாகப் பிசைவது மனிதரல்ல ; அதுவும் இயந்திரமே ! இந்த வேலை அரை மணிநேரத்தில் முடிந்துவிடுகிறது. பிசைந்த மாவில் ' ஈஸ்ட் ' என்னும் பொருளை, மாவு புளிப்பதற்காகச் சேர்க்கிறார்கள் ; நாம் வீட்டில் தோசைமாவைப் புளிக்க வைக்கிறோமே, அதைப்போல. பிசைந்த மாவு உள்ள பாத்திரத்தைத் தள்ளிக்கொண்டு, வெப்ப அறைக்குள் (Fermentation Room) போகிறார்கள். அங்கு அந்தப் பாத்திரத்தை வெள்ளைத் துணியால் மூடி வைத்துவிட்டுக் கதவை மூடிவிடுகிறார்கள். மின்சாரப் பட்டனைத் தட்டியதும் அந்த அறையில் ஒரே சீரான வெப்பம் பரவுகிறது. வெப்பத்தில் கெட்டியான மாவு, பொங்க வைக்கப்படுகிறது ; அதாவது, மிருதுவாக்கப்படுகிறது. மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் இந்த வேலை முடிந்துவிடுகிறது. மிருதுவான இந்த மாவுள்ள பாத்திரத்தைத் தள்ளிக் கொண்டு போய், மாவைத் துண்டு போடும் இயந்திரத்தில் பொருத்துகிறார்கள். பாத்திரத்திலுள்ள மாவை அப்படியே ஓர் இயந்திரம் கொட்டுகிறது. கண் சிமிட்டும் நேரத்தில் துண்டு துண்டாக மாவு வெளியே வந்து



விழுகின்றது. நமக்கு எந்த அளவு ரொட்டி தேவையோ, அந்த அளவுக்குத் துண்டுகள் கிடைக்கின்றன.

200, 400, 800 கிராம் ரொட்டிகளுக்குத் தேவையான மாவுத் துண்டுகளை இக்கருவி மூலம் நாம் பெறலாம். அந்தத் துண்டுகள் அடுத்த கருவியில் உருண்டையாக்கப்பட்டு, ரொட்டிக் கிண்ணத்தில் இந்த உருண்டைகள் விழுந்து, ரொட்டி உருவைப் பெறுகின்றன. இவையெல்லாம் விஞ்ஞானத்தின் விந்தையே! விரைந்து செயல்படும் இவ்வியந்திரங்களை நேரில் கண்டு வியக்கலாம்.

இப்போது பச்சை ரொட்டி தயார். அதைச் சுட வேண்டும். இதற்காகவாவது அடுப்பு வைத்து வீட்டில் சுடுவதைப் போல் சுடுகிருர்களா என்ருல், நெருப்பு இல்லாத, புகை இல்லாத மின்சார இராட்சத அடுப்பல்லவா இதனைச் சுடுகிறது! இரண்டு வகையான அடுப்புகள் இருக்கின்றன. ஒன்று 100 டிகிரியும், மற்றது 430 டிகிரியும் வெப்பமுள்ளது. முதலில் கிண்ணத்திலுள்ள பச்சை ரொட்டிகள் வரிசையாக 100 டிகிரி வெப்ப அடுப்புக்குத் தானுகவே 'கன்வேயர்' மூலம் செல்கின்றன. அந்தக் கிண்ணங்கள் அடுப்பிலுள்ள தட்டுகளில் எடுத்து வைக்கப்படுகின்றன. பிறகு மின்சாரத்தின் மூலம் அவை சுடப்பட்டுப் பக்குவப்படுத்தப்படுகின்றன. இந்த அடுப்புக்கு ஃபைனல் ப்ரோவர் (Final Prover) என்று பெயர். இதற்குப் பிறகுதான் நாம் சாப்பிடும் அளவுக்கு ரொட்டி நன்ருகச் சுடப்படுகிறது.

பக்குவப்படுத்தப்பட்ட ரொட்டிகள் மீண்டும் 'கன்வேயர்' மூலம் அடுத்த 430 டிகிரி வெப்ப அடுப்புக்குச் செல்கின்றன. இந்த அடுப்பில் தான் ரொட்டிகள் நன்ருகச் சுடப்படுகின்றன. இந்த அடுப்புக்கு ஓவன் (Ovan) என்று பெயர். சுட்ட ரொட்டிகள் அப்படியே கிண்ணத்தோடு வெளியே வருகின்றன. அப்போது அதன் வெப்பம் கையில் தொட முடியாத அளவுக்குச் சுடும். எனவே, கொதிக்கும் கிண்ணத்திலுள்ள ரொட்டியைப் பக்குவமாக எடுக்கவும் ஒரு கருவி இருக்கிறது.

'கன்வேயர்' மூலமாகத் தொட்டால் கொதிக்கும் ரொட்டிகள் வரிசையாகச் செல்கின்றன. அங்குள்ள டிபேன்னர் (Depanner) என்னும் கருவிதான் சூடான கிண்ணத்திலுள்ள ரொட்டியை எடுத்தெடுத்து வைக்கிறது. கிண்ணத்திலிருந்து எடுக்கப்பட்ட ரொட்டிகள் சூடாக இருக்குமாதலால், அவை குளிர் ''டுத்தக்குளிர்ப்பதன (Cool Room) அறைக்குக் கொண்டு போகப்படுகின்றன. இந்த அறையில் ரொட்டிகள் இரண்டு மணி நேரம் இருக்கும். இதற்குப் பிறகுதான் 'பேக்கிங்'.



ரொட்டிகளைச் சிறு சிறு துண்டுகளாக அரிவது, மெழுகுத்தாளை அதன்மேல் சுற்றுவது, பிறகு பசையால் அதனை ஒட்டுவது எல்லாம் இந்த விந்தை இயந்திரம்தான்!

ரொட்டியின் கதையை ஓரளவு தெரிந்து கொண்ட நாம், இந்த ரொட்டி உலக நாடுகளை எப்படிக் கவர்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

மாடர்ன் ரொட்டி தயாரிக்கும் இந்த நிறுவனத்தில், தரக் கட்டுப்பாடு பரிசோதனைக் கூடம் (Quality Control Lab) ஒன்றும் இருக்கிறது. ரொட்டி தயாரிப்பில் உபயோகப்படுத்தப்படும் மூலப் பொருள்கள் தரமாக இருக்கின்றனவா என்பது இங்குப் பரிசோதிக்கப்படுகிறது. முற்றிலும் சுகாதார முறைப்படி தானுகவே இயங்கும் இயந்திரங்களைக்கொண்டு செய்யப்படும் இது போன்ற தொழிற்சாலைகள், இந்தியாவில் ஒன்பது நகரங்களில் உள்ளன. சென்னை உட்பட அகமதாபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கொச்சின், டில்லி, ஐதராபாத், கான்பூர் ஆகிய நகங்களிலும் மாடர்ன் ரொட்டிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் உள்ளன. பம்பாய், கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 400 கிராம் எடையுள்ள 72,000 ரொட்டிகளைத் தயார் செய்கிறது; சென்னை உட்பட மற்ற இடங்களில் நாளொன்றுக்கு 36,000 ரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. தேவை ஏற்படும்பொழுது இந்தத் தொகை மேலும் அதிகரிக்கவும் இத்தொழிற்சாலைகளில் வசதிகள் இருக்கின்றன.

இந்த நிறுவனங்களின் நோக்கமென்ன?

உணவுப் பழக்கங்களை மாற்றித் தரத்தை உயர்த்தி சத்துப் பொருள் கொண்ட உணவை அளிப்பது, மற்றும் பல தரப்பட்ட உணவு வகைகளை வழங்கிச் சத்துணவை மக்களிடம் பரப்புவது. சத்துப் பொருட்கள் கொண்டு ஊட்டம் செய்யப்பட்ட இந்த ரொட்டிகளை எந்த நேரத்திலும், எந்த உணவுடனும் எளிதாகக் கலந்து உண்ணலாம்.

உணவில் சத்துப்பொருள் பற்ருக்குறைவினுல் இலட்சக் கணக்கான மக்கள் நோய்வாய்ப்பட்டு அல்லலுறுகின்றனர். அவர்கள் உணவில் எல்லா வைட்டமின்களும், புரதச்சத்தும், தாதுப் பொருட்களும் அதிகரிக்க வேண்டும். இச்சத்துப் பொருட்களை எல்லாம் ரொட்டி போன்ற ஓர் அன்ருட உணவில் சேர்த்து மக்களுக்கு வழங்குவது என்பது இந்திய அரசின் ஒரு தீவிரமான நோக்கம்

K \ மாடர்ன் ரொட்டியில் கீழ்க் காணும் சத்துக்கள் அடங்கியுள்ளன :—

1. **வைட்டமின்-ஏ :** நல்ல கண்பார்வைக்கும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் உகந்தது.

2. **வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ் :** பசியை உண்டாக்குவதற்கான தியாமின், ரிபோபிளாவின், நியாஸின் ஆகிய சத்துக்களை விசேடமாகப் பெற்றுள்ள இது இதயமும், தசைநார்களும் நன்கு செயல்படச் செய்கிறது.

3. **தாதுப் பொருட்கள் :** சிறப்பாக அயச்சத்து—இரத்தம் சுத்தமாயிருக்க இன்றியமையாதது.

4. **புரதச் சத்துக்கள் :** நல்ல ஆரோக்கியத்திற்கும், குழந்தைகளின் துரித வளர்ச்சிக்கும் அவசியமாகும்.

5. **கார்போஹைடிரேட் :** நாள் முழுவதும் உடலுக்குச் சக்தியளித்து ஊக்குவிக்கிறது.

இந்த அளவுக்கு ரொட்டியில் அதிகமான சத்துப் பொருட்களைச் சேர்த்து ஊட்டம் செய்து பெரிய அளவில் தயாரிப்பது, உலகிலேயே இதுதான் முதன் முறையாகும். இந்த ரொட்டி உண்ணுவதற்கு மிகச் சுவையாக இருப்பதற்கு, இதன் மூலப் பொருள்கள் தரமாக, துல்லியமாக இருப்பதுதான் காரணம். இந்த ரொட்டி செய்வதற்கான பால் பவுடர் நியூசிலாந்திலிருந்து வருகின்றது; மாடர்ன் ரொட்டியில் 'லைசின்' என்னும் பொருள் சேர்க்கப்படுவ



தால், கோதுமையில் உள்ள புரதச்சத்தை இது மேலும் அதிகரித்துக் கொடுக்கிறது.

இந்தத் தொழிற்சாலையில் நான்கு விதமான ரொட்டிகளைத் தயாரிக்ககிறார்கள். அவை 1. சாதாரண ரொட்டி, 2. இனிப்பு ரொட்டி. 3. பழவகை ரொட்டி, 4. பால் ரொட்டி.

சாதாரண ரொட்டியில் பால், இனிப்பு எல்லாம் சமஅளவில் இருக்கும்; இனிப்பு ரொட்டியில் கொஞ்சம் இனிப்பு அதிகமாக இருக்கும்; பழவகை ரொட்டியில் எல்லாவிதமான பழக்கலவையும் இருக்கும். முக்கியமாகத் திராட்சை இருக்கும். இந்தப் பழக்கலவை பம்பாயிலிருந்து வருகிறது; பால் ரொட்டியில், மற்றச் சத்துக்களோடு அதிகமாகப் பால் சேர்க்கப்பட்டிருக்கும்.

இதைத் தவிரச் சிறந்த பால் ரொட்டியும் (Special Milk Bread) தமிழ்நாடு அரசுக்காகத் தயாரிக்கப்படுகிறது. இந்த ரொட்டிகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ், குடிசை வாழ் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்படி 1,50,000 குழந்தைகள் இந்த உணவுத் திட்டத்தில் பயன் பெறுகிறார்கள். ஆறு மாதத்திலிருந்து மூன்றுவயதுகுட்பட்ட குழந்தைகளுக்கு இந்த ரொட்டிகள் வழங்கப்படுகின்றன. வாரத்தில் ஐந்து நாட்கள் இந்த ரொட்டிகள் தமிழகத்திலும், சென்னையிலுமுள்ள ஒரு குறிப்பிட்ட நிலையங்களில் (Centres) விநியோகிக்கப்படுகின்றன.

மாடர்ன் ரொட்டிகளுக்குத் தமிழகத்திலும், சென்னையிலும் நல்ல கிராக்கி உள்ளது. திருச்சி, மதுரை, கோவை, சேலம், ஈரோடு, வேலூர், காஞ்சி, திருப்பூர், பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற ஊர்களுக்கு இந்த ரொட்டிகள் பெருமளவு அனுப்பப்படுகின்றன. மாவட்ட ஆட்சியாளர் அல்லது நகர மன்ற ஆணையாளர் மூலமாக இந்த ரொட்டிகள் அந்தந்த ஊர்களில் வழங்கப்படுகின்றன. சென்னை நகரில் உள்ள அரசினர் மருத்துவமனைகளுக்கும், மதுரை இரயில்வே மருத்துவமனைக்கும் இந்தச் சத்தான ரொட்டி மெத்தவும் பயன்படுகிறது. முகவர்கள் மூலமாகவும் தமிழகத்தின் சில ஊர்களில் ரொட்டி விற்பனை நடைபெறுகிறது.

கண் நோய் ஏன் வருகிறது ?

வைட்டமின் 'ஏ' யாவருக்கும் தேவையானது. குறிப்பாக ஒன்றுமுதல் ஆறுவயது வரை உள்ள குழந்தைகளுக்கு மிகவும் தேவை. அண்மையில் எடுத்த மதிப்பீட்டின்படி 25 இலட்சம் இந்தியக் குழந்தைகள் வைட்டமின் 'ஏ' பற்றுக்குறையினால் பீடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் கண் நோய்கள் ஏற்பட்டு, பார்வையை இழக்கும்படியும் நேரிடுகிறது. உட்கொள்ளும் உணவில் தேவையான அளவு வைட்டமின் 'ஏ' இருந்தால் இந்த நோய்கள் வராமல் தடுத்துவிடலாம். வைட்டமின் 'ஏ' சேர்ந்த உணவை ஒவ்வொரு நாளும் உட்கொள்ள வேண்டும். ஒரு பெரிய மாடர்ன் ரொட்டியில் இந்தச் சத்து முழுதும் இருக்கிறது.

இந்த ரொட்டிகள் எத்தனை நாள் கெடாமல் இருக்கும்?

பொதுவாக இந்த ரொட்டிகள் மூன்று நாட்கள் வரை கெடாமல் இருக்கும். ரொட்டிகள் தவிர புரதச் சத்துக்கள் நிறைந்த பிஸ்கட்டுகளைத்தயாரிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது, வரவேற்கத்தக்கது.

இரத்தச் சோகை வருவதேன்

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு இரும்புச் சத்து தேவைப்படுகிறது. இந்த முக்கியமான தாதுப்பொருளின் பற்றுக்குறையால் இரத்தச் சோகை உண்டாகிறது. இந்த நோய் நம் நாட்டில் பொதுவாகக் காணப்படுகிறது. பெண்கள், குறிப்பாக இளம் வயதினர் இந்த நோய்க்கு இலக்காகின்றனர். இவர்கள் இரும்புச்சத்து மிகுந்த உணவை அதிகம் உட்கொள்ள வேண்டும். பெரிய மாடர்ன் ரொட்டியில் நாளொன்றுக்கு ஒருவருக்கு வேண்டிய இரும்புச் சத்தில் 75 சதவிதம் கொடுக்கிறது.

இந்திய மக்களின் உணவின் தரத்தை உயர்த்த மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி வெளிநாடுகளின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. பல நாடுகள் இதைபோற்றியுள்ளன. நம்மைப்போல உணவுத்திட்டப் பிரச்சினையுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகள் இம்முயற்சியை ஆர்வத்துடன் கவனித்து வருகின்றன.

" மாடர்ன் ரொட்டி, இந்திய அரசினரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய முயற்சி. லைசின் வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் கொண்டு ஊட்டம் செய்து ரொட்டியை மேலும் சத்துணவாக்குகிறது. உலகத்திலேயே பெரும் அளவில் லைசின் சேர்த்து ஊட்டம் செய்யும் திட்டம் இது ஒன்றே " என்று லத்தீன் அமெரிக்கப் பத்திரிகைகள் பாராட்டுகின்றன.

" உலகத்திலேயே பெருந்துறையில் அமைனோ அமிலம் சேர்த்துச் சத்துணவாக்குவது இந்தியா ஒன்றே " என்று ஒரு ஜப்பானிய இதழும், " குறிப்பாகக் குழந்தைகளுக்கும், கருவுற்றிருக்கும் காலத்திலும், மகப்பேறு பெற்ற சமயத்திலும் மகளிருக்கு மிகவும் நன்மை பயக்கும் " என்று அமெரிக்க ஏடு ஒன்றும் இத்திட்டத்தை வரவேற்கின்றன.

பிரேசில் நாட்டினரும் மாடர்ன் பேக்கரி முறையைக் கடைப்பிடிக்க, இங்குத் தொடர்புகள் வைத்திருக்கின்றனர். அமெரிக்காவில் சத்துணவுத்திட்டத்திற்காக அமைக்கப்பட்ட அரசினர் குழு ஒன்று, மாடர்ன் ரொட்டியின் உதாரணத்தை தம் நாட்டிலும் கடைப்பிடிக்கலாம் என்று கருத்தறிவித்துள்ளது.

குறைந்த விலையில் நிறைந்த சத்துக்களைத் தரும் இந்த எளிய உணவை எல்லாரும் விரும்பி வரவேற்க வேண்டும். 'நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்' அல்லவா? அந்தச் செல்வத்தைப் பெற நாள்தோறும் நாம் உணவில் சத்துக்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம்

முதல்வரின் செயல்திறன் வேகமே குடிநீர் வடிகால் வாரியம்!

குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் அவர்கள் பேட்டி

" வழிகாட்டும் தமிழ்நாடு ",

" தமிழ்நாட்டில் உள்ள இது போன்ற அமைப்பு வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது "

" இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலத்தவர்கள் நம்முடைய இம்முயற்சியைப் பாராட்டி இது போன்ற அமைப்புகளைத் தமது மாநிலத்திலும் அமைக்க விரும்புகிறார்கள் "

இதுபோன்ற சொற்றொடர்களைப் பலமுறை எழுத நமக்கு வாய்ப்பு ஏற்பட்டது உண்டு.

அதற்கு இன்னொரு வாய்ப்பைத் தருகிறது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

ஆமாம்! இந்தியாவில் வேறு எங்கும், மாநில அளவில் இப்படி ஓர் அமைப்புக்கிடையாது. கடந்த தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தன்று தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மிகக் குறுகிய காலத்திலேயே மகத்தான செயல்களைச் செய்துள்ளது.

இதைப் பற்றி நாம் கேட்கும் பல்வேறு கேள்விகளுக்கு இதன் தலைவர் திரு செ. கந்தப்பன் அவர்கள் அளிக்கின்ற பதில்கள் வருமாறு:—

தன்னுள் தனி அதிகாரம் பெற்று விளங்கும் அமைப்பான தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் முதல்வர் கலைஞரின் நேரடியான பொறுப்பின் கீழ் இயங்குகிறது.

குடிநீர், வடி

பெருக்கவும், இத்திட்டங்களை ஒருங்கிணைத்து விரைவுபடுத்தவும் நமது அரசால் இவ்வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. நாடு விடுதலை அடைந்த பின்னர் நிறைவேற்றப்பட்ட முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக மொத்தத்தில் 15 கோடி ரூபாய் தான் செலவிடப்பட்டிருக்கிறது.

ஆனால் 1967-ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக ரூ. 12 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பல்வேறு குடிநீர், வடிகால் திட்டங்களுக்காகச் செலவிட ரூ. 18.31 கோடிக்கு வழிவகை காணப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டங்களை மேற்கொண்டுள்ளதால் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படுகின்றன.

இப்பொழுது வாரியம் 81 குடிநீர்த் திட்டங்களையும் 9 வடிகால் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளது. மேலும் 81 திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் ஒன்றேகால் கோடி மக்களுக்கு மேல் வாழ்கின்றனர். இவர்களில் எழுபது சதவீதத்தினர் மட்டுமே இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெற்று வருகின்றனர். எஞ்சியுள்ள நகர்ப்புற மக்களும் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்ட தண்ணீரைப் பெறுவதற்குத் தேவையான முயற்சிகளைக் குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது.

புதை வடிகால்—சில சிக்கல்கள்

புதை வடிகாலைப் பொறுத்த வரையில் நகர்ப்புற மக்களிலேயே பத்து விழுக்காட்டுக்குக் குறைந்த அளவு மக்களே இதுவரை அந்தப் பயனைப் பெற்று வந்தனர்.

புதை வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல சிக்கல்கள் உள்ளன.

நம்முடைய நகர அமைப்புகள் திட்டமிடப்படாத நகர அமைப்புகள்—புதைகுழிச் சாக்கடைகளையோ, சுகாதாரப் பயன்களையோ நகர மக்களே உணராத காரணத்தால் இப்பணிகளை வேகப்படுத்துவதில் இடர்ப்பாடு உண்டு. முன்னரே வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்ட

இடங்களில் கூட முழுமையான பயனைக் காண முடியவில்லை.

வீட்டின் புறக்கடையிலிருந்து முன்புறத்திலே செல்லும் புதை வடிகாலோடு கழிவு நீரை இணைக்கச் செலவு காரணமாகப் பலர் முன்வருவதில்லை.

தண்ணீர்த் திட்டங்களைப்போல வருவாய் தரும் திட்டங்களாகப் புதை வடிகால் திட்டங்கள் இல்லாமையால், நகராட்சி மன்றங்களும் பேரூராட்சி மன்றங்களும் புதை வடிகால் திட்டங்களை மேற்கொள்ளத் தயங்குகின்றன.

கழிவு நீரைக் கொண்டு புல் பண்ணை, தீவன உற்பத்தி முதலியன செய்வதன் மூலமும், கழிவு நீரை நன்னீராக்கி அதிலிருந்து கிடைக்கும் நீரைப் பாசனத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்துவதன் மூலமும் வடிகால் திட்டங்களை ஓரளவுக்கு ஆதாயம் தரும் நிலைக்குக் கொண்டுவரக் குடிநீர், வடிகால் வாரியம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்பாகச் சென்னைக்கு அருகில் கொடுங்கையூரில் ஓர் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது.

சென்னை நகரில் மட்டும் தற்போது ஒரு நாளைக்குச் சுமார் 40 மில்லியன் காலன் கழிவுநீர் கடலில் கலக்கிறது.

வீராணம் திட்டம் நிறைவு பெறும்போது இதன் அளவு இரட்டிப்பாகும். இதிலிருந்து பாசனத்திற்குத் தேவையான அளவு நீரை உற்பத்தி செய்வதால் சுமார் 7,500 ஏக்கர் நிலம் ஆண்டு முழுமைக்கும் பாசனம் பெறும்.

இப்பொழுது கோவை, புதுக்கோட்டை, மதுரை போன்ற நகரங்களில் தீவனப் பண்ணைகள் இயங்கி வருகின்றன.

பண்ணைகளைப் பெரிதுபடுத்தி இதைப்பெருமளவில்செய்வதற்கு வழிவகைகள் காணப்பட்டால் நகரங்களில் வருமானத்தைப் பெருக்க முடியும். இதனால் வடிகால் திட்டங்களை நிறைவேற்றுவதில் நகராட்சி, பேரூராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டலாம்.

கிராமப் புறங்களில்......

கிராமப் புறங்களில் இதுவரை குடிநீருக்காக ஏறத்தாழ 41,000 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேல்நிலைத் தொட்டிகள் சுமார் 4,500.

1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை குடிநீர் கிணறுகளுக்காக ரூ. 10.98 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் 1967-க்குப் பிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 6.55 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் கிணறுகள் தோண்ட 2 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிணறுகள் பெருமளவுக்குக் கோடைக்காலத்தில் வற்றி விடுகின்றன. ஊற்றுக்கள் நல்ல வண்ணம் உள்ள கிணறுகளில் கிடைக்கும் நீர், சில இடங்களில் குடிப்பதற்கு ஏற்றதல்ல என்று கருதப்படுகிறது. இது போன்ற பிரச்சினைகளில் குடிநீர் வடிகால் வாரியம் மிகுந்த கவனம் செலுத்துவதுடன், ஊற்றுக்கள் வற்றுவதையும் கருத்தில் கொண்டு ஏறத்தாழ 8,850 துளைக் கிணறுகளைத் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் தோண்டும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. (UNICEF) யுனிசிஃப் நிறுவனத்தின் உதவியுடன் துவக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நமது அரசு 271 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தை விரைந்துசெயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் நாட்டுப்புறத் தேவைகளை நிரந்தரமாகத் தீர்க்க ஆழ்துளைக் கிணறுகளினால் தான் முடியும் என்பதால் குடிநீர் வடிகால் வாரியம் மேலும் சில இயந்திரங்கள் வாங்கி இத்திட்டத்தைப் பரவலாக்க எண்ணியுள்ளது.

இது மட்டுமல்ல; பல கிராமங்களை இணைத்து அதற்கெனத் தனிப்பெரும் திட்டங்களைத் தயாரித்துச் செயலாக்கும்முயற்சியிலும் வாரியம் இறங்கியுள்ளது.

சில நகர நீர்த்திட்டங்களுக்காகத் தொலைவிலிருந்து தண்ணீரை எடுக்கும்போது வழியிலுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் அளிக்கும் வகையில் இப்பொழுது திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

நாட்டுப்புறம் முழுமைக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீரைத் தொட்டிகள் மூலமாகக் கோடைக் காலத்திலும் பற்றாக்குறை ஏற்படாமல் வழங்குவதற்கான நகல் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்கிடையில் கடுமையான தண்ணீர் பஞ்சம்உள்ள இடங்கள், தண்ணீர் காரணமாக நோய்க்கு இரையாகும் பகுதிகள் ஆகிய பிரச்சினைகளை விரைவில் சீர்செய்ய ரூ. 8 கோடி அளவில் ஒரு மாபெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடன் கோரி அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

* * *

வாரியத்தின் மிகப் பெரிய திட்டம் வீராணம் குடிநீர்த் திட்டம். நீண்ட நெடுங்காலத் தயக்கத்திற்குப் பிறகு, 1967-ஆம் ஆண்டில் புதிய அரசு அமைந்தவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டமாகும்.

1974-ஆம் ஆண்டின் இடையில் சென்னை நகருக்கு வீராணம் திட்டம் மூலம் தண்ணீர் கிடைக்கும் என்ற தகவலை முதல்வர் அவர்கள் அண்மையில் சட்டப் பேரவையில் தெரிவித்தார்கள்.

வீராணம் திட்டம் நிறைவேறினாலும் தொழில் வகைகளில் வேகமாக வளர்ந்து வருகின்ற சென்னையில் நீண்ட நெடுங்காலத் தேவையைக் கருத்திற் கொண்டு வேறு பல நல்ல திட்டங்களுக்கான யோசனையை இப்போதிருந்தே குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது.

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளப்போகும் பெரிய திட்டம் நெல்லித்துறைத் திட்டமாகும்.

* * *

ரூபாய் 14 கோடி செலவில் மேற்கொள்ளவிருக்கும் இத்திட்டத்தால் கோவை, சிங்காநல்லூர், சூலூர், பல்லடம் போன்ற வறட்சிப் பகுதிகளின் குடிநீர்த் தேவைகளையும், தொழிற்சாலைகளின் தேவைகளையும் நிறைவேற்ற இத்திட்டம் பயன்படும். விரைவில் தொடங்கவிருக்கும் இத்திட்டம், தமிழ்நாட்டின் ஒரு பகுதியின் பெரும் பிரச்சினையைத் தீர்க்கும்.

ஏறத்தாழ 700 பொறியாளர்கள் குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுகிறார்கள்.

நிலத்தடி, நீரின் தன்மை, ஆழம், அளவுகளை ஆய்வு செய்ய வாரியத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட இருக்கின்றது.

நல்ல நீரின் தேவை வேகமாகப் பெருகி வருகிறது. உலகம் முழுமைக்கும் இந்தநிலை என்று சொல்லப்படுகிறது. எனினும் தமிழகத்தில் இந்த வகையில் எதிர் காலத்தில் நெருக்கடி எதுவும் தோன்றாது இருக்கவே இன்று பல முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு மிகுந்த கவனத்தோடும் அக்கறையோடும் இருப்பதால் இப்படி ஒரு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியம் என்ற அமைப்பை உருவாக்கிய பெருமை நமது முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும். பயனுள்ள எந்தத் திட்டத்தையும் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக உள்ள முதல்வர் அவர்கள் குடிநீருக்கும் வடிகாலுக்கும் தனியான வாரியம் அமைத்திருப்பது இப்பணியை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்ற உளப்பாங்கைக் காட்டுவதாகும்.

இதன் தோலை உரோமத்தோடு பதனிட்டு உடைப் பெட்டிகள், காலணிகள் செய்கிறார்கள். இதன் உரோமம் கம்பளத்துக்கும், இதன் தாடிமயிர், சித்திரம் வரையும் பிரஷ், ஷேவிங் பிரஷ் ஆகியவை செய்யவும் பயன்படுகின்றன.

இப்படி வாரியம் அமைத்ததால் எல்லாப் பணிகளும் விரைந்து செயல் படுத்தப்படுகின்றன. வாரியம் துவங்கியதிலிருந்து இதுவரை 31 புதிய குடிநீர்த் திட்டங்களும், 9 வடிகால் திட்டங்களும் தொடங்கப்பட்டிருப்பதிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம்.

பஞ்சாப் மாநில அரசு நமது குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைப்பு முறைகளையும் விதிகளையும் விளக்கமாகக் கேட்டுள்ளது.

சென்னைக்கு வந்திருந்த உலக வங்கியின் பிரதிநிதிகள் நமது குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்முறைகளை அறிந்து பாராட்டியுள்ளனர்.



நன்றாக வளர்ந்த யானையின் தோல் ஒரு டன் எடை இருக்கும். இதன் தோலைப் பதனிட்டு மேஜையாகவும், யானையின் கால்களைப் பாதியாக வெட்டி நகத்தோடு பதனிட்டு ஸ்டூலாகவும், உபயோகிப்பர். யானை இறைச்சி பர்மா ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் உணவாகப் பயன்படுகிறது.

தமிழக அரசு அமைத்திருக்கும் மாநிலத் திட்டக்குழு, சுகாதாரம் என்ற தலைப்பில் துணைக் குழு ஒன்றினை நியமித்துக் குடிநீர் வழங்குதல், வடிகால்கள் அமைத்தல், தொழில் நிறுவனங்களாலோ வேறுவகையாலோ தண்ணீர் கெட்டுவிடாமல் பாதுகாத்தல், மக்கள் வாழுமிடங்களைச் சாக்கடை மற்றும் குப்பை கூளங்களால் சுகாதாரக்கேடு விளையாத வண்ணம் தடுத்தல் ஆகியவற்றை விரிவாக ஆய்ந்து ஒரு சில மாதங்களில் திட்ட நகல் ஒன்றைக் கொடுக்க இருக்கிறது.

இத்துணைக் குழுவின் தலைவராகவும் வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன் அவர்களே பணியாற்றுகின்றார்கள்.

இவ்வளவு குறுகிய காலத்திலேயே மிக வேகமாகப் பல திட்டங்களைத் தொடங்கியுள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனைகளைப் பற்றி நாம் பெருமிதப்படும் பொழுது வாரியத் தலைவர் திரு. செ. கந்தப்பன் அவர்கள் கூறுவது என்ன தெரியுமா ?

" இத்தனை வெற்றிக்கும் முழுமையான காரணம் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். அவர்களுடைய நேரடியான பொறுப்பின் கீழ் இயங்குவதாலும், முதல்வரைக் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பதாலும் விரைந்து செயல்பட முடிகிறது " என்பதுதான்.

வாரியத்தில் இப்பொழுது பத்து உறுப்பினர்கள் உள்ளனர். வாரியச் சட்ட அமைப்புப்படி மூன்று திங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்தவேண்டும். என்றாலும் குடிநீர் வடிகால் வாரிய உறுப்பினர்களின் கூட்டம் மாதந்தோறும் நடைபெறுகின்றது.

விரைந்து செயல்பட இதுவும் பயன் தருகிறது.

மாபெரும் திட்டங்களைக் கொண்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்—

செயல்படும் வேகம்—
சீரமைப்புத் திறன்—
சிக்கனம்—இந்த இலட்சியங்களின் அடையாளமே தமிழ்நாட்டின் குடிநீர் வடிகால் வாரியம்.

செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெறலாமே ! ஆமாம் செல்வி கன்னு தனது ஓய்வு நேரத்தைச் சிறுசேமிப்பு முகவராகப் பணியாற்றுவதில் செலவிட்டாள்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி **சுசிலா ரோஹட்கி** யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறிவீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
தேசிய சேமிப்பு நிறுவனம்
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
தமிழ்நாடு அரசு

இடம் : வேலூர் வாழை மண்டி.
காலம் : 1971-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 30-ஆம் நாள் காலை 7 மணி.

சந்தித்தவர்கள் : 1. வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியில் உதித்த பச்சை வாழை. 2. வட ஆர்க்காடு மாவட்டம் ஒடுகத்தூர் பகுதியில் உதித்த ரஸ்தாளி வாழை.

ரஸ்தாளி வாழை :—என்ன தம்பி! எங்கோ பார்த்தது போல் இருக்கு, எந்த ஊரோ ?

பச்சை வாழை :— நாங்க இதே மாவட்டம் தானுங்க. எங்க ஊர் குடியாத்தம் பக்கம் இருக்குங்க.

ரஸ்தாளி :—ஓகோ அப்படிங்களா தம்பி—நானும் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவன் தான். எங்க ஊர் ஒடுகத்தூர் பகுதியில் இருக்குது.

பச்சை :—ஓகோ அப்படியா அண்ணே ! எங்க உறவினர்கள் கூட அங்கு இருக்கிறாங்களே!

ரஸ்தாளி:—ஓகோ அப்படியா ! ஏதோ ஒரு வீட்டார் அல்லது இரு வீட்டார் மட்டும் இருப்பார்கள் போல் தெரிகிறது.

பச்சை :—அப்படியா ! அந்த இரு வீட்டாரைக் கொண்டே நாங்கள் குடும்பத்தைப் பெரிய தாக்கி விடுவோமே !

ரஸ்தாளி :—நாங்கள் அங்கு தான் வாழ்க்கைப்பட்டிருந்தோம். சமீபத்தில் தாக்கிய சூறாவளியாலும், வாடல் நோயினாலும் எங்களுடைய குடும்பம் அழிந்து மேலும் வளர முடியாமல் போய்விட்டோம்.

பச்சை :—அப்போ நாங்கள் அங்கு வந்து குடியேறலாமா அண்ணே ! ஏனென்றால், எங்கள் பகுதியிலே தண்ணீர் பஞ்சம் அதிகமாகி விட்டதால் உயிர் வாழ முடியாமல் இருக்கிறோமுங்க.

ரஸ்தாளி :—அப்படியா தம்பி! —நாங்களே அங்கு வரலாம் என்று நினைத்தோம். அதற்குள் நீங்கள் முந்திவிட்டீர்களே!

பச்சை :—நாங்களே தண்ணி இல்லாம அவதிப்படும்போது நீங்கள் எதுக்கு அங்கு வரணும்? இத்தோட உங்களைத்தான் வாடல் நோயும் சூறாவளியும் தாக்கும்போது அங்கு மட்டும் எப்படி வாழ்க்கை நடத்துவீங்க? அதனாலே நீங்க அங்கேயே கொஞ்சமா ஓட்டிக்கிட்டிருங்க.

ரஸ்தாளி :—அப்போ தம்பி உன்னைச் சூறாவளியும் வாடல் நோயும் தாக்குவதில்லையா ?

பச்சை :—என்னை எந்த நோயும் தாக்குவதில்லை. இலைப்புள்ளி என்ற நோய் மட்டும் தாக்கும். அதற்கு ஒரு கிலோ பிளைடாக்ஸ் அல்லது பைடோலானை 100 படி தண்ணீரிலே கரைத்து விசைத் தெளிப்பான் மூலம் இலை, காய் எல்லாப் பகுதியிலேயும் வாரம் ஒருமுறை வீதம் மூன்று அல்லது நான்கு முறை தெளித்துவிட்டால் இலைப்புள்ளி நோய் எங்க குடும்பத்தை ஒன்றும் செய்வதில்லீங்க!

ரஸ்தாளி :—எங்களுக்கு அம்மாதிரி மருந்து எதுவும் இல்லையா தம்பி ?

பச்சை :—உங்களுக்கு நோய் தாக்கினால் ஊசியோ—மருந்தோ எதுவும் கிடையாதுங்க.

ரஸ்தாளி :—ஆமாம், உங்களுடைய ஆயுசு எவ்வளவு தம்பி?

பச்சை :—12 மாதம் தானுங்க

ரஸ்தாளி :—எங்களுக்கு 18 மாதம் ஆகிறது.

பச்சை :—அப்போ உங்களுக்கு ஆயுசும் கொஞ்சம் நீடிச்சிருக்கு.

ரஸ்தாளி :—உங்க இனத்தை எப்போது பயிரிடுவாங்க? உங்களுக்கு என்ன வசதி தேவை என்பதைக் கொஞ்சம் சொல்லு தம்பி !

பச்சை :—எங்களை வருடம் முழுதும் பயிரிடுவாங்க. முக்கியமா ஜனவரி, மார்ச்சு காலத்தில், அதிகம் பயிரிடுவாங்க. எங்களுக்கு முக்கியமா வடிகால் வசதி உள்ள செம்மண் நிலம் தேவை அண்ணே.

இடைவெளி

ரஸ்தாளி :—உங்க இனத்துக்கு எவ்வளவு இடைவெளி விடுவாங்க? எங்க இனத்துக்கு 7' × 7' இடைவெளி விடுவாங்க. இப்படி விட்டால் ஒரு ஏக்கருக்கு 889 பேர் தான் நாங்கள் குடியேற முடியும்.

பச்சை :—எங்க இனத்துக்கு இடைவெளி 5½' × 5½' விட்டால் போதும். இப்படி விட்டால் ஏக்கருக்கு நாங்கள் 1,440 பேர் குடியேறுவோம்.

ரஸ்தாளி :—அப்போ உங்களுக்கு இடைவெளியும் குறைவு. வயதும் குறைவு. காற்றினாலும் வெய்யிலினாலும் உங்கள் இனம் பாதிக்காது.

வெளிநாட்டிற்கு ஏற்றது

பச்சை :—அண்ணே ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் எங்களுக்கு நிறைய கிராக்கி இருக்கின்றதாம். அத்துடன் எங்க உள்நாட்டு மக்களும் எங்களைத்தான் விரும்பிச் சாப்பிடுறாங்களாம். அதனால்தான் நம்ம அரசு தீவிரச் சாகுபடித் திட்டத்தை ஏற்படுத்தி எங்களை நல்ல முறையில் சாகுபடி செய்து வெளிநாட்டிற்கு விரைவில் ஏற்றுமதி

செய்யப் பாடுபடுகிறோம் என்று வேளாண்மைத் துறையினர் கூறுகிறார்கள்.

ரஸ்தாளி :—ஏன் ? எங்களுக்கு வெளிநாட்டுக் கிராக்கி எதுவும் கிடையாதா தம்பி ! ஏதாவது அவங்களைக் கேட்டீங்களா ?

பச்சை :—கேட்டேங்க ! வெளிநாட்டவர் எங்களைத்தான் விரும்பிச் சாப்பிடுகிறாங்க; உங்களைத் தேவை இல்லையென்று சொல்லிட்டாங்களாம். அதனால்தான் வேளாண்மைத் துறையினர் எங்கள் இனத்துக்கு முக்கியத்துவம் தருகின்றனர்.

கடன் வசதி

ரஸ்தாளி :—ஆமாம். ஏற்றுமதி என்றால் சிறிய விவசாயிகள் எல்லாம் அதிகம் உங்களைச் சாகுபடி செய்வார்களே ! அதுக்கு ஏதாவது கடன் வசதி கொடுக்கிறாங்களா?

பச்சை :—கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும், தனியார் துறை வங்கி மூலமாகவும், எங்கள் இனத்துக்கு ஏக்கருக்கு 1,000 ரூபாய் கடன் வசதி தர்றாங்க.

ரஸ்தாளி :—அது உங்க இனத்துக்குத்தானா? எப்படித் தருகிறார்கள் என்பதைக் கொஞ்சம் விளக்குகிறீர்களா ?

பச்சை :—எங்க இனத்துக்குத்தான் கொடுக்கின்றார்கள். அதுவும் பாதி உரமாகவும், பாதி பணமாகவும் கொடுக்கின்றார்கள்.

ரஸ்தாளி :—அதை எப்போது திருப்பிக் கட்டுவது ? மான்யம் கொடுக்கிறார்களா ?

பச்சை :—நல்ல கேள்வி கேட்டே அண்ணே ! எப்போதும் கடன்தான் தருவாங்க. தவிர இவ்வளவு பேருக்கு மானியம் எங்கிருந்து கொடுப்பாங்க? கடனை எங்க இனம் அறுவடை முடிந்ததும் அதாவது கடன் வாங்கிய 14 மாதத்திலே திருப்பிச் செலுத்திவிடணும்.

உரமிடல்

பச்சை :—உங்களுக்கு என்ன உரம் வைக்கிறாங்க ?

ரஸ்தாளி :—வாழைக்கு உரம் வைக்கிற முறையை எங்கள் பகுதி விவசாயிகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிஞ்சி வருகிறாங்க. முன்பு எல்லாம் செடி ஒன்றுக்கு ஒரு கூடை எரு போட்டு வந்தாங்க. அதுக்கு மேலே ஏக்கருக்கு 20 முதல் 25 மூட்டை கடலைப் பிண்ணாக்கும் 1—2 மூட்டை யூரியாவும் வைப்பாங்க.

ஆயிரமாயிரம் வேலைகள்

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டு அவர்கள் இதுவரையில் 48 திட்டவேலைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். மேலும் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளது அரசு.

பச்சை :—நாங்களும் முன்னே எல்லாம் அப்படித்தான் வைச்சிருந்தோம். இப்போ பிண்ணாக்கு விலையும் ஏறிப்போச்சு. அத்துடன் மாட்டுக்கும் நல்ல தீனியாகி விட்டது. அதனால் நம்ம தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் ஊழியர்கள் எல்லாம் எங்களை அடிக்கடி வந்து பார்த்துப் பிண்ணாக்கு வீணாக அதிகமாக வைக்காதீங்க என்று சொல்கிறார்கள்.

ரஸ்தாளி :—எங்க பக்கமும் கூட வேளாண்மைத் துறை ஊழியர்கள் எல்லாம் இருக்கிறாங்க. ஆனால் அவங்க மட்டும் என்ன செய்வாங்க ? பச்சை வாழையான உங்களுக்குத்தான் அதிகமாகக் கவனம் செலுத்துறாங்க.! "உங்களைக் கவனிப்பது கஷ்டம். ஏனெனில் காற்று மழை எல்லாம் உங்களைத் தாக்குது ; அதனால் நீங்க இங்கே இருக்காதீங்க" என்று கூறுகிறார்கள். இருந்தாலும் நான் சொல்லறது சொல்லிடுறேன். கன்று நட்ட மூன்றாவது மாதம் தொழு உரம் 12 கிலோவும், அதோடு அம்மோனியம் சல்பேட் 284 கிராம், சூப்பர் பாஸ்பேட் 284 கிராம், மியூரியேட் ஆப் பொட்டாஷ் 340 கிராம், பிண்ணாக்கு 284 கிராம், இந்த உரத்தை எல்லாம் கலந்து ஒரு மரத்துக்கு வைக்கணுமாம். இதே போல ஐந்தாவது மாதத்திலும் அம்மோனியம் சல்பேட் 142 கிராம், மியூரியேட் ஆப் பொட்டாஷ் 340 கிராம் பிண்ணாக்கு 142 கிராம், ஆகியவைகளைக் கலந்து ஒரு மரத்திற்கு வைக்க வேண்டுமாம்.

வங்கியின் உதவி

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 18 நிலவள வங்கிகள் மூலம் டிராக்டர்கள், பம்பு செட்டுகள் வாங்குவதற்கு இதுவரையில் ரூ. 1 கோடியே 28 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

பச்சை :—எங்கள் பகுதியிலே இருக்கிற வேளாண்மைத் துறை ஊழியர்களும் இதைத்தான் சொல்லுறாங்க. ஏன், கிட்ட இருந்து உரம் வைக்கிற வரைக்கும் ஆளை விடறது கிடையாதுங்க. அதோடு மருந்தும் கூட அடிக்கடி தெளிக்கும்படி கூறித் தெளித்துவிட்டும் செல்லுறாங்க.

நீர்ப் பாய்ச்சுதல்

ரஸ்தாளி :—உங்களுக்கு எத்தனை நாளைக்கு ஒரு தடவை தண்ணி பாய்ச்ச வேண்டும்.

பச்சை :—அண்ணே ! நிலத்திற்கேற்றவாறு வாரம் இருமுறை நீர் பாய்ச்சினால் போதும்.

ஆனால் தண்ணீர் தேங்கக்கூடாது. ஏன் என்று கேட்டீங்கன்னா தண்ணி தேங்கினால் நாங்கள் பழுத்து, வேர் அழுகி மரம் சாய்ந்து விடும். அப்புறம் எதுவும் செய்ய முடியாது.

ரஸ்தாளி :—எங்களுக்கும் இப்படித்தான். ஆனால் எங்களுக்குத் தேங்கினாலும் கொஞ்சம் பரவாயில்லை.

பக்கக் கன்று அகற்றுதல்

பச்சை :—உங்களுக்குப் பக்கத்தில் உள்ள கன்றுகளை எப்படி எடுப்பார்கள் ?

ரஸ்தாளி :—பக்கக் கன்றுகளை அரிவாளால் அறுத்தும், கடப்பாறையால் கன்றைக் குத்தி அதில் மண்ணெண்ணெய் ஊற்றியும் அகற்றுவார்கள். ஆனால் மரம் போகும் வரை அகற்றுவார்கள். அதன் பிறகு அவ்வாறு செய்வதில்லை.

பச்சை :—எங்களுக்கு அப்படித்தான் செய்யறாங்க. ஆனால் தாரு போட்ட பிறகு எடுப்பதில்லையே! ஏன் கொஞ்சம் சொல்றீங்களா ?

ரஸ்தாளி :—தம்பி, தாரு போட்ட பிறகு எடுத்தா நமக்குப் பலம் குறைந்து குலைகள் சீக்கிரத்தில் முதிராது.

பச்சை :—அதுதானா, இல்லை, இன்னும் ஏதாவது காரணம் இருக்காண்ணே !

ரஸ்தாளி :—அது என்னமோ தெரியலே தம்பி !

பச்சை : என்னமோ தெரியலேன்னு சொல்றியே, முக்கியமான காரணம் ஒன்று இருக்கு. அதாவது நம்ம வேளாண்மைத் துறையினர் நடும்போது 3—4 மாதக் கன்றை நடவு செய்யணும்னு சொல்லுறாங்க. அதுக்குத் தாரு போட்ட 100—105 நாளில்தான் தாரு வெட்ட முடியும். உடனே தேவையான கன்றையும் எடுத்துப் பூமியைக் சாலி செய்து வேறு பயிர் செய்ய நலமாக இருக்கும்னு சொல்லுறாங்க.

ரஸ்தாளி : அப்போ அவங்க சொல்லறது எல்லாம் நன்மைக்குத்தான் போலிருக்கே!

பச்சை : அவர்கள் நன்மைக்குச் சொல்லாமல் தீமைக்கா சொல்லுவார்கள் ?

அறுவடை

ரஸ்தாளி : தம்பி உங்களை எப்படி அறுவடை செய்கிறார்கள்?

பச்சை : அண்ணே குலைவிட்ட 100—105 நாளில் காய் நன்றாக முதிர்ந்ததும் எங்களை அறுவடை செய்வாங்க.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரவை
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath

விற்பனை

ரஸ்தாளி : எங்களையும் அப்படித்தான் அறுவடை செய்றாங்க. அப்புறம் நீங்கள் எல்லோரும் எங்கு விற்பனைக்குச் செல்லுகிறீர்கள். ?

பச்சை : அதான்னே கேட்டேன். எங்கள் 2—3 வீட்டாரையும் ஒன்று சேர்த்து, எங்க குலையின் மேலே இலைகளைப் போர்த்தி, லாரியில் மொத்தமாக அடுக்கிக்கொண்டு சென்னை, வேலூர், பெங்களூர் போன்ற பெரிய இடங்களுக்கு ஏற்றிச் சென்று மொத்தமாக விற்பனை செய்துவிட்டு வராங்க. பணமும். மொத்தமாகக் கிடைக்குது அண்ணே.

ரஸ்தாளி : அப்படியா தம்பி! நாங்கள் இருப்பது கொஞ்சம் தான். அதனாலே எங்களை ஒரு வண்டியிலே ஏற்றி வேலூருக்குக் கொண்டு வந்து சில்லறை வியாபாரியிடம் விற்றுவிட்டுத் தினந்தோறும் கொஞ்சம் செலவிற்குப் பணத்தைச் செலவிட்டும், வீணாகச் செலவு செய்தும், கைக்கு மொத்தமாகக் கிடைக்காமலே எங்கள் குடும்பம் அழிந்து வருகிறது தம்பி.

பச்சை: இன்னொன்றைச் சொல்ல மறந்துவிட்டேன்.

ரஸ்தாளி : என்ன தம்பி அந்த ரகசியம் ?

பச்சை : எங்க இனத்துக்கு ரஷ்யா, ஜப்பான் போன்ற வெளிநாட்டிலே பழத்துக்குக் கிராக்கி இருப்பதோடு, பச்சை வாழைப் பழப் பவுடர், பழச் சாறு போன்றவற்றிற்கும் நல்ல கிராக்கி இருக்குதண்ணே !

ரஸ்தாளி : அப்படியா தம்பி! அப்போ நாங்களே எங்கள் பகுதியிலே இருக்கிற உழவர்களுக்கும், சொல்லி உங்களையே (பச்சை வாழையையே) அதிகம் பயிரிடும்படி சொல்லுகிறேன் தம்பி. வணக்கம் தம்பி. வரட்டுமா? அடிக்கடி கடிதம் எழுது தம்பி.

பச்சை : அப்படியே ஆகட்டும் அண்ணே ! வணக்கம். விடை பெறுகிறேன் !

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசுக்கு உரியது)
150-*A*, அண்ணா சாலை, மத்திய நூலகக் கட்டிடம், சென்னை-2.
(நிறுவனத்தின் நெறியாளர் குழுவினரால் 26-10-71ல் ஏற்கப்பெற்ற விளம்பரத்தின் வாசகம்)

நிறுவப் பெற்ற தேதி : 21-5-1965
பதிவுத் தலைமை அலுவலகம் : மத்திய நூலகக் கட்டிடம், 150-*A*, அண்ணா சாலை, சென்னை-2.

பொது மக்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து ஆயிரம் ரூபாயோ அல்லது அதற்கு மேற்பட்டு (ஆயிரக் கணக்கில்) செலுத்தப்படும் டிபாசிட் தொகைகளை இத் தொழில் நிறுவனம் கீழ்க்கண்ட வருடாந்திர வட்டி விகிதங்களில் ஏற்றுக்கொள்ளும்.

ஓர் ஆண்டும் அதற்கு மேலும் ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள் **9%**

இரண்டு ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் **9½%**

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி கொடுக்கப்படும்

நெறியாளர்கள் குழு:

திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்
தொழில்துறை,
தமிழ்நாடு அரசு — தலைவர்

திரு. எஸ். வெங்கிட்டரமணன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்
நிதித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஆர். நடராசன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்,
பொதுப் பணித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறு தொழிற் வளர்ச்சி
நிறுவனம், சென்னை. — நெறியாளர்

திரு. சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்.,
நெறியாளர்
தொழில்-வணிகத்துறை,
சென்னை. — நெறியாளர்

திரு. பி. சிவலிங்கம், பி.இ., (ஆனர்ஸ்)
தொழில் நுட்பக் கல்வி நெறியாளர்,
சென்னை. — நெறியாளர்

திரு. ஜி. துவாரகாநாதன், ஐ.ஏ., & ஏ.எஸ்.,
— நெறியாளர் (நிதி)

திரு. டி. எஸ். விஜயராகவன், ஐ.ஏ.எஸ்.,
— நிர்வாக இயக்குனர்

கம்பெனி மேற்கொண்டுள்ள அலுவல்கள்:

(*A*) தமிழக அரசுக்கு சொந்தமான தொழிற்கூடங்களை நிர்வகித்தல்
தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம். எஃகு தொடர்பு வார்ப்பு ஆலை, அரக்கோணம்.
(*B*) கூட்டுத் துறையில் தொழில்களை துவங்க ஊக்குவித்தல்.
தூத்துக்குடி உர ஆலை, ஹைட்ரோ சல்பைட் ஆலை,
ஆட்டோமோபைல் டயர் & டியூபுகள், சிகரெட்டுகள் முதலியன.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை 5-2-70ல் உற்பத்தியை துவக்கியுள்ளது. இந்தத் தேதிக்கு முன் செய்யப்பட்ட செலவுகள் எல்லாம் மூலதனத்தோடும், தொழிற்சாலை கட்டுமானச் செலவுகளுடனும் சேர்க்கப்பட்டுள்ளன.

1970—71ல் நஷ்டம்: ரூ. 78,80,009
அறிவிக்கப்பட்ட பங்கு வீதம்: ஒன்றுமில்லை

		(லட்சத்தில்)
செலுத்தப்பட்ட மூலதனம் (31—3—71ல் உள்ளபடி)		ரூ. 686.74
அரசு வழங்கிய கடன்	,,	ரூ. 444.88
ரிசர்வ் தொகை	,,	ரூ. *Nil*
கடன் பத்திரங்கள் மூலம் (*Debentures*)	,,	ரூ. 75.00
ரொக்க கடன்	,,	ரூ. 75.00
அதிகப்பற்று (*Overdraft*)	,,	ரூ. *Nil*

விண்ணப்ப நமூனக்களுக்கும் விதிமுறைகளுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தாருக்கு (டிபாசிட் பிரிவு), 150-*A*, அண்ணா சாலை, சென்னை 2-க்கு எழுதிக் கேட்கவும்.

ஜெர்மனியில் நீலகிரி மண் சிலைகள்

ஜெர்மனியில் மேற்கு பெர்லின் நகரில் சர்வதேச "இந்திய ஆராய்ச்சி" மாநாடு சமீபத்தில் நடந்தது. பல்வேறு நாடுகளிலிருந்து 200 அறிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பல அரிய புராதனப் பொருள்களும், ஆராய்ச்சிகளின் முடிவுகளும், பெர்லின் நகரில் அரும் பொருட் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருந்தன. கடந்த உலகப் போரின்போது குண்டு வீச்சில் ஒரு பகுதி நாசம் அடைந்தது. நாசத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட பல அரிய புராதன இந்தியப் பொருள்கள், இப்போது புதிய கூடத்தில் இடம் பெற்று இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் தோண்டி எடுக்கப்பட்ட புராதன மண் சிலைகள் இங்கு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த மண் சிலைகள் 2,000 ஆண்டுகளுக்கு முந்தியவை எனக் கருதப்படுகிறது.

மனிதன்:

பஞ்சுவடம் போல்ஒளிரும் அருவி தன்னைப்
பாலாடை ஆக்கிவைத்தாய் மலைப்பெண் ணுக்கு
கொஞ்சுகின்ற ஓடையினைத் துள்ளும் ஆற்றைக்
கொடுக்கின்றாய் ; பெருநன்றி ; இயற்கைத்
தாயே !

இயற்கை :

மிஞ்சிவிட்டாய் எனைமகனே ! குளிர்ந்த ஆற்றை
வெள்ளருவி யெலாம்படைத்தேன் ; அவற்றி
னின்று
வெஞ்சூட்டு மின்னாற்றல் படைத்தோன் யாராம் !
வித்தகனே ! இரவினைநீ பகலாய்ச் செய்தாய் !

மனிதன் :

அன்னைஎனைத் தாங்கிநின்றாள் ! அவளைத் தாங்க
அவனிமண்ணை நீபடைத்தாய் ! தாயே ! அங்கே
பொன்படைத்தாய் ! வளிபடைத்தாய் ! படைத்த
உன்றன்
பூம்பாதம் தனில்கண்ணீர் சிந்து கின்றேன் !

இயற்கை :

என்னைவிட நீமுந்தி விட்டாய் தம்பி !
இருக்கின்ற அணுவெல்லாம் படைத்தேன் ;
ஆனால்
மின்னணுவை நீதானே பிளந்தாய் ! பின்னர்
மிகஅரிய நீள்சக்தி படைத்தோன் யாராம் !

மனிதன் :

காயாம்பூச் சாறெடுத்துக் கடலைச் செய்தாய் !
கடலகத்தின் அடிவயிற்றில் முத்தை வைத்தாய்!
நாயாட்டம் ஆடுகின்ற திமிங்கி லத்தை
நல்லவளே ! அங்கேஏன் காவல் வைத்தாய் !

இயற்கை :

ஓயாத சீர்மகனே ! திமிங்கி லத்தை
ஒப்புக்குப் படைத்திட்டேன், உண்மை ! ஆனால்
பேயோடி விரட்டுதல்போல் அதைவி ரட்டப்
பெருநீர்மூழ் கிக்கப்பல் படைத்தோன் யாராம் !

மனிதன் :

சிந்திவிட்ட வைரத்தைப் பொறுக்கு தற்குத்
திக்குண்டா ? நாதியுண்டா ? வான கத்தில் !
தந்திரமாய்க் கருடனுக்கும் இறக்கை வைத்தாய் !
தாயே !ஏன் எமக்குமட்டும் குறையை
வைத்தாய் ?

இயற்கை :

முந்திவிட்டோன் நீதானே மகனே ! தாவி
முன்னேறும் பறவைஎட்டா வெளியில் கூட
வந்துசெல்ல வான்கப்பல் படைத்த னுப்பி
வாய்மீதில் விரல்வைக்க வைத்தோன் யாராம் !

மனிதன் :

கவிஞர்க்கும் காதலர்க்கும் விருந்து நல்கக்,
கள்வருக்கும், கொடியவர்க்கும் வேலி கட்டப்,
புவிமகளை மஞ்சளினால் குளிக்க வைக்கப்,
பொன்நிலவை நீபடைத்தாய் ! நன்றி, தாயே !

இயற்கை :

குவிக்காதே புகழ்மொழியை ! மகனே ! நானோ
குறைநிலவைத் தான்படைத்தேன்! நீயோ இன்று
புவிசுற்றும் பலநிலவைப் படைத்த னுப்பிப்
புகழ்சுமந்து நிற்கின்றாய்! பெருமை யார்க்கு ?

முயற்சியால் முன்னுக்கு வந்த சார்லஸ் டிக்கன்ஸ்

"ஆகா, இந்த நாவல் எவ்வளவு சுவையாக இருக்கிறது.." என்றார் இளங்கோ, அந்தப் புத்தகத்தை மேசைமீது வைத்தவாறே.

கையில் காப்பியுடன் வந்த கண்ணகி, "எந்த நாவல் அண்ணா?" என்று கேட்டுக்கொண்டே எதிரில் வந்து உட்கார்ந்தாள்.

"இதோ, இந்த நாவல்தான்! 'ஆலிவர் டுவிஸ்ட்' என்பது அதன் பெயர். ஓர் அனாதைச் சிறுவனைப் பற்றி இதன் ஆசிரியர் மிக அழகாக வருணிக்கிறார். படிக்க விறுவிறுப்பாக உள்ள இந்த நாவலை எழுதியவர் இவர்தான். பெயர் சார்லஸ் டிக்கன்ஸ்" என்று அவர் படத்தைக் காட்டினார் இளங்கோ.

"ஒரு குமாஸ்தாவின் மகனாகப் பிறந்தவர்தான், சார்லஸ் டிக்கன்ஸ். அவர்கள் குடும்பம் பெரியது. அளவான குடும்பமாக இருந்தால் தானே அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும்? அவர்கள் குடும்பத்திலோ நிறையப் பேர்கள் இருந்தார்கள். இதனால் தரித்திரம் தலைவிரித்தாடியது. டிக்கன்ஸின் தந்தை ஆடம்பரமானவர். தாயோ சிக்கனமில்லாதவள். இதனால் குடும்பம் கடன் தொல்லைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

"டிக்கன்ஸ் வீட்டுப் பக்கத்தில் ஒரு பாதிரியார் இருந்தார். அவர் ஒன்பது வயதுச் சிறுவனை டிக்கன்ஸைப் படிக்க வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஒரு நாள் டிக்கன்ஸ் தம் வீட்டுப் பரணையில் என்ன இருக்கிறது என்று ஆராய்ந்தான். மேலே தூசு படிந்த சில புத்தகங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் கீழே இறக்கி ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். ராபின்சன் குருசோ போன்ற வீரர்களின் வாழ்க்கை வரலாறுகள்தான் அவை. அவைகளையெல்லாம் ஆர்வமுடன் படிக்க ஆரம்பித்தான் டிக்கன்ஸ்."

"சிறு வயதிலேயே இப்படியொரு ஆர்வம் எல்லாருக்கும் வர வேண்டும் இல்லையா அண்ணா?"

"ஆமாம் கண்ணகி. படிக்கப் படிக்கத்தான் அறிவு வளரும் என்பார்கள். அதைப்போல டிக்கன்ஸின் அறிவும் நாளுக்கு நாள் வளர்ந்தது. அதோடு அவர்கள் குடும்பத்தில் கடன் தொல்லைகளும் வளர்ந்து வந்தது! பசி, பட்டினியால் குடும்பம் தவியாய்த் தவித்தது. ஒரு நாள் கடன் கொடுத்தவர்கள் வந்து டிக்கன்ஸ் வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் பறிமுதல் செய்து கொண்டுவிட்டார்கள். அப்படியும் கடன்கள் தீராததால், டிக்கன்ஸின் தந்தை ஜான் டிக்கன்ஸைக் கைது செய்து கடன்பட்டவர்களுக்காக உள்ள ஒரு தனிச்சிறையில் அடைத்து விட்டார்கள் . . ."

"பாவம்! பதினொரு வயது சிறுவனான அவன் என்ன செய்வான்? வீட்டு வேலைகளைக் கவனிப்பது, கடைகளுக்குச் செல்வது, தம்பி, தங்கைகளுக்கு ஆதரவாக இருப்பது, சிறையில் இருக்கும் தந்தையைப் போய்ப் பார்த்து வருவது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்தான். தந்தையின் துன்பநிலையை எண்ணி எண்ணி வேதனை அடைந்தான். எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று ஏக்கம் கொண்டான்."

"டிக்கன்ஸ் ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்தால் குடும்பத்துக்குக் கொஞ்சம் உதவியாக இருக்குமல்லவா?"

"ஆமாம். இவர்கள் உறவினர் ஒருவர், காலணிகளுக்கு மை பூசும் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்தார். அதில் டிக்கன்ஸுக்கு ஒரு வேலை கிடைத்தது. கறுப்பு மைப்புட்டிகள் மீது காகிதத்தைச் சுற்றிக்கட்டி 'லேபில்'களை ஒட்டுவதுதான் அந்த வேலை. இந்த வேலையில் அவன் தன் திறமையை நன்கு வெளிப்படுத்தினான். ஆனால் தன் தந்தையின் நினைவு அடிக்கடி வந்து அவனை வாட்டியது. படிக்க வேண்டிய பருவத்தில் அவன் வேலையில் அமரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால் அவன் மனம் படிப்பிலேயே லயித்திருந்தது. அதற்குத் தடையாக இந்த வேலை இருக்கிறதே என்று அவன் சலித்துக்கொண்டான்."

"சிறையில் அவன் தந்தை என்னென்ன துன்பப் பட்டாரோ?"

"அதை ஏன் கேட்கிறாய்? மனைவியையும் மக்களையும் நினைத்து அவர் ஏங்கினார். இந்தச் சிறை ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் இருந்தது. சிறைக்கு உள்ளே கடைகள் பல இருந்தன. சிறையிலிருப்பவர்களைப் பார்க்க நாள்தோறும் பெருங்கூட்டம் வந்து போய்க் கொண்டிருந்தது. சிறையில் இருப்பவரின் சொந்தக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட வாடகையைக் கொடுத்தால், அவர்களும் சிறைக்குள்ளேயே கைதியுடன் வசிப்பதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். ஆகவே, தன் பெரிய குடும்பத்தைத் தான் ஒருத்தியே இருந்து நடத்துவது சிரமமாயிருந்ததால் டிக்கன்ஸின் தாய் தன் கணவனுடன் சிறையிலேயே தங்கிவிட்டாள்"

"டிக்கன்ஸும் சிறையிலேயே இருந்தானா?"

"இல்லை. டிக்கன்ஸ் தவிர மற்றெல்லாரும் சிறையிலேயே இருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை மட்டும் டிக்கன்ஸ் தம் பெற்றோர்களுடன் சிறையில் இருப்பான். மற்ற நாட்களிலோ தனக்குப் பிடிக்காத கறுப்பு மை தொழிற்சாலையில் இருப்பான். சிறுவன் டிக்கன்ஸ் காலையில் ஒரு துண்டு ரொட்டியையும், கொஞ்சம் பாலையும் உண்டு விட்டுத் தொழிற்சாலைக்குக் கால்நடையாகவே செல்வான். வழியில் ஆப்பக் கடைகளைப் பார்க்கும் போது, அவனுக்கு நாக்கில் நீர் ஊறும். அவன் ஒரு ஆப்பத்தை வாங்கித் தின்று கொண்டே செல்வான். பகல் உணவு ஒரு துண்டு ரொட்டி மட்டும்தான். வேலை முடிந்ததும் அவன் நேரே சிறைச்சாலைக்குச் சென்று தம் பெற்றோர்களைப் பார்ப்பான். இந்தச் சிறை வாழ்க்கை அவன் மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது.."

"அவன் அங்குக் கண்ட காட்சிகளும், தாயார் சொன்ன கதைகளும் அவன் மனத்தில் நன்கு பதிந்திருந்தன. இவற்றையெல்லாம் ஒன்று திரட்டிப் பின்னால் இந்தச் சிறுவன், அதாவது வருங்காலத்தில் புகழ்பெற்ற நாவலாசிரியரான சார்லஸ் டிக்கன்ஸ் 'லிட்டில் டோரிட்' என்ற நாவலில் மிக அருமையாக இதனை விளக்கியுள்ளார்."

"டிக்கன்ஸின் தந்தை விடுதலை ஆகவே இல்லையா?"

"எதிர்பாராதவிதமாக அவருக்கு வாரிசு உரிமை மூலம் கொஞ்சம் பணம் கிடைத்தது. அந்தப் பணத்தைக் கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுத்து விட்டு, சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். டிக்கன்ஸ் கறுப்பு மை வேலையிலேயே இருந்தான். ஆனால் அது நீடிக்கவில்லை. டிக்கன்ஸின் பெற்றோர்களுக்கும் கம்பெனிக்காரருக்கும் ஏற்பட்ட தகராறினால் டிக்கன்ஸ் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். பிறகு பெற்றோர்கள் டிக்கன்ஸை ஒரு பள்ளியில் சேர்த்தார்கள். கொஞ்ச காலம் படித்துக் கொண்டிருந்த அவன், குடும்பத்தில் மீண்டும் வறுமை வரவே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியாகிவிட்டது. மீண்டும் அவன் வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது."

"பாவம் அவனுக்கு வேலை ஏதாவது கிடைத்ததா?"

"டிக்கன்ஸ் ஓரளவு எழுதவும் படிக்கவும் இலத்தீன் மொழியைக் கொஞ்சம் பேசவும் கற்றுக் கொண்டிருந்தான். அடுத்த ஊரில் வக்கீலாயிருந்த மிஸ்டர் பிளாக்மூர் என்பவரிடம் 'குமாஸ்தா'வாக வேலை கிடைத்தது."

"இவரது தந்தை வேலை ஏதேனும் செய்தாரா?".

"கையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்து விட்டது. டிக்கன்ஸின் தந்தை சுருக்கெழுத்தைக் கற்றுக் கொண்டு, ஒரு பத்திரிகையில் நிருபராக வேலை பார்த்தார். டிக்கன்ஸ் தந்தையைப்போலவே தானும் ஒரு நிருபராகவேண்டும் என்று விரும்பினார். உடனே ஒரு பழைய சுருக்கெழுத்துப் புத்தகத்தை வாங்கி வந்து ஆழ்ந்து படிக்கலானார். அவரது முயற்சியால் ஒரு நீதிமன்றத்தில் வேலை கிடைத்தது. பிறகு படிப்படியாக அவர் 'ட்ரூஸன்', 'மிர்ரர் ஆ·.ப் பார்லிமெண்ட்' ஆகிய நாடாளுமன்ற பத்திரிகைகளில் நிருபராக வேலை பார்த்தார்.

"டிக்கன்ஸ் பிறகு 'மார்னிங் கிரானிக்கிள்' என்ற பத்திரிகையின் விசேட நிருபராகப் பணியாற்றினார். இதனால் அவருக்கு இந்தத் துறையில் நல்ல அனுபவம் ஏற்பட்டது. விழாக்கள், தெருச் சண்டைகள், கலவரங்கள், தேர்தல் முதலிய சம்பவங்களை மிகச் சுவையாக எழுதி, மற்ற நிருபர்களைப் போட்டி போட முடியாமல் திணற அடித்தார். இப்போதுதான் டிக்கன்ஸ் பணமுடை இல்லாமல் வாழ்ந்தார். ஆகவே, கதைகள் எழுதுவதற்கு நல்ல சமயம் கிடைத்தது. தம் இருபத்திரண்டாம் வயதில் முதன் முதலாக ஒரு சிறு கதையை 'போஸ்' என்ற பெயரில் எழுதி ஒரு பத்திரிகைக்குப் பயந்து கொண்டே அனுப்பினார்."

"அந்தக் கதை வெளிவந்ததா?"

"வெளிவந்தது. டிக்கன்ஸ் அதைப் பார்த்துவிட்டு மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். இதைத் தொடர்ந்து கதைகள் எழுதுவதில் அவருக்கு ஊக்கம் பிறந்தது. 'மார்னிங் கிரானிக்கிள்' என்னும் பத்திரிகையாளர்கள் கதைகளைத் தொடர்ந்து எழுதும்படி அவரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அன்பளிப்புத் தருவதாகவும் சொன்னார்கள். உடனே, டிக்கன்ஸ் அதில் தொடர்ந்து கதைகளை எழுதி வந்தார். இப்போது டிக்கன்ஸுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. பிறகு இந்தக் கதைகளெல்லாம் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக வெளிவந்தது. இந்தப் புத்தகத்திற்கு இலண்டன் வாசகர்கள் பெரிதும் ஆதரவு தந்தார்கள். இதன் விளைவு? டிக்கன்ஸ் நிருபர் வேலைக்கு முழுக்குப்போட்டு விட்டுப் புத்தகங்கள் எழுதும் முயற்சியில் முழு நேரத்தையும் செலவிட்டார்!"

ஏழையாய்
இருந்து
ஏற்றம்
பெற்றவர்

இளங்கோ எழுந்து போய் த்தக அலமாரியிலிருந்து ஒரு த்திரிகையை எடுத்து வந்தார்.

''கண்ணகி! இந்தப் பத்திரிகை ன் பெயர் 'பிக்விக் பேப்பர்'. லண்டனில் உள்ள ஒரு புத்தகக் ம்பெனியார், டிக்கன்ஸிடம் ஒரு ட்டுரைத் தொகுதி வேண்டும் ன்று கேட்டனர். டிக்கன்ஸும் தற்கு இணங்கிக் கட்டுரைகளை ரைந்து கொடுத்தார். அக் ாலத்தில் பிரபல ஓவியராக ருந்த சீமர் என்பவர் இதற்குச் த்திரங்கள் வரைந்திருந்தார். ந்தக் கட்டுரைகளைத் தாங்கி ந்த 'பிக்விக் பேப்பர்' என்னும் த்திரிகைக்கு மக்கள் பெரும் வரவற்பை அளித்தார்கள். நாள டவில் டிக்கன்ஸின் நகைச்சுவை க்க அந்தக் கட்டுரைகளுக்குப் ட்டி தொட்டிகளிலெல்லாம் தரவு பெருகியது. முதலில் 00 பிரதிகளே அச்சிடப்பட்ட பிக்விக் பேப்பர்' 40 ஆயிரம் ரதிகளுக்கும் மேலாக அச்சிட வண்டிய நிலை ஏற்பட்டது''.

''இன்னும் கேள். 'பிக்விக் பப்பர்' நடந்துகொண்டிருந்த பாதுதான் டிக்கன்ஸ் திரு ணம் செய்து கொண்டார். னைவி பெயர் கேதரின் ஓகார்த். ந்தப் பத்திரிகை இலண்டன் கரிலும் சக்கைபோடு போடவே ங்குள்ள புத்தக வெளியீட் ாளர்கள் போட்டி போட்டுக் காண்டு டிக்கன்ஸின் கதைகளைப் த்தகமாக வெளியிட முன்வந்த ர்! டிக்கன்ஸ் இப்போது ன்னைவிடச் சுறுசுறுப்பாக எழு க் குவித்துக் கொண்டேயிருந் ார்.''

''இப்போது டிக்கன்ஸ் புகழ் பெற்ற பெரிய நாவலாசிரியராகி ட்டார். இல்லையா?''

''ஆமாம். அவர் இப்போது ரபல நாவலாசிரியராகிவிட் ார். அவர் எழுதியவைகளை ாங்கிக் கொண்டுபோக, அவர் ீட்டு வாசலில் அச்சகப் பையன் ால்கடுக்கக் காத்துக் கொண் ருப்பான் என்றால் பார்த்துக் காள்ளேன். டிக்கன்ஸ் பெரும் ாலும் காலை வேளைகளில்தான் எழுதுவார். இவர் எழுதிய 'ஓல்டு கியூரியாஸிடி ஷாப்' என்ற தொடர்கதை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் பெருத்த அளவுக்கு விற்பனை ஆயிற்று. இந்தக் கதையின் கதாநாயகி என்ன ஆனாள் என்று தெரிந்து கொள்வதற்காக அமெரிக்க வாசகர்கள் இந்த நாவலின் கடைசிப் பகுதியை ஏற்றி வந்த கப்பலை எதிர் பார்த்து நிற்பார்களாம்!''

அன்பான இதயத்தோடு அணுகி, இதமாகப் பேசினால் யாரையும் திருத்த முடியும். மனிதர்களில் யாரும் பிறக்கும் போதே கெட்டவர்களாகப் பிறப்பதில்லை.

''புகழ் என்றால் இப்படியல்லவா பெறவேண்டும்.''

''டிக்கன்ஸைப் பார்க்க அமெரிக்க மக்கள் பெரிதும் விரும்பினார்கள். தவிரத் தம் நாட்டுக்கு வரும்படியும் அழைத்தார்கள். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு டிக்கன்ஸ் அமெரிக்கா சென்றார். அங்கு அவருக்கு மிகச் சிறப்பான முறையில் வரவேற்புத் தந்து போற்றிப் புகழ்ந்தார்கள்.''

''அவர் குடும்பம் என்ன ஆயிற்று அண்ணா?''

''குடும்பத்துக்கென்ன? குதூகல வாழ்வுதான்! சிறுவயது முதலே பல துன்பங்களை அனுபவித்து வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்ட டிக்கன்ஸ் இப்போது பேரும் புகழும் பணமும் வந்த பின் குடும்பத்தை மறந்து விடுவாரா என்ன? அமெரிக்கா போய் வந்த பிறகு, ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் சென்ற போது தம் குடும்பத்தாரையும் உடன் அழைத்துச் சென்றார். டிக்கன்ஸின் கற்பனையிலிருந்து, மாஸ்டர் அம்பிரியின் கடிகாரம், கிறிஸ்துமஸ் கரோல், மணியோசை, டாம்பே அண்டு சன் போன்ற ஏராளமான நாவல்கள் வெளிவந்து கொண்டேயிருந்தன. டிக்கன்ஸ் தாம் கண்டதையும், கேட்டதையும் நாவலாக்கினார். இது மக்கள் மத்தியிலே அவருக்கு நிலைத்த புகழை ஏற்படுத்திக் கொடுத்தது. நாவல் எழுதுவதில் மட்டுமல்ல, நாடகத்துறையிலும் அவர் சிறந்து விளங்கினார்.''

''அப்படியா?''

''ஆமாம். தாமே நாடகம் எழுதி, அதில் தாமே முக்கியப் பாத்திரங்களில் நடித்தார். நடிகர்களுக்கு அலங்காரம், மேடை நிர்வாகம் அனைத்தையும் தாமே செய்தார். இந்த நாடகத்துக்கு மக்கள் பெரும் ஆதரவு அளித்தார்கள். பல ஊர்களில் இந்த நாடகத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் இரவு பகல் உழைத்த டிக்கன்ஸின் உடல் நிலை நாளுக்கு நாள் குன்றியது. இருந்தும் அவர் மனம் குன்றாமல் 'டெய்லி நியூஸ்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். சிலகாலம் இருந்துவிட்டு அதில் விருப்பமில்லாமல் ஆசிரியர் பதவியை விட்டு விலகி, 'குடும்பப்பேச்சு' என்னும் வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகை எட்டாண்டுக் காலம் சிறப்பாக நடந்தது.''

''இதற்குப் பிறகு வேறு என்னென்ன முயற்சிகளில் ஈடுபட்டார்?''

''டிக்கன்ஸ் ஊர் ஊராகச் சென்று பேசினார். இரவு பகல் என்று பாராமல் எழுதி எழுதிக் குவித்தார். சமுதாயச் சீர்கேட்டைத் துணிந்து எடுத்துக் காட்டினார்; மக்கள் வாழ்வதற்கான வழிவகைகளை நாவல்களிலே வடித்துத் தந்தார். ஓயா உழைப்புக் காரணமாக அவர் உடல் நிலை கெட்டது. அவர் கடைசியாக 'எட்வின் ட்ரூடின் மர்மம்' என்ற துப்பறியும் நாவலை எழுதிக் கொண்டிருந்த போது காலமானார். அப்போது அவருக்கு வயது ஐம்பத்தெட்டு.''

''பல்வேறு நாட்டு மக்களின் உள்ளங்களையும் உணர்ச்சிகளையும் தம் ஏராளமான கதைகள் மூலம் கவர்ந்து வந்த நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸின் உடல், கவிஞர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடுகாட்டில் புதைக்கப்பட்டது. அவரது புகழ் அன்று முதல் இன்று வரை அழியாப் புகழாக விளங்கி வருகிறது. அவருடைய நாவல்கள் இன்றும் எல்லா நாட்டு மக்களாலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. அவரது வாழ்க்கை தம்பி தங்கைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும்கூட ஒரு பாடமாகும்.''

செய்திகள் செய்திகள் செய்திகள்!

திடீர் எக்ஸ்-ரே சாதனம்

கண் இமைக்கும் நேரத்தில் மூடிய பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதை, பெட்டியைத் திறக்காமலேயே படம் பிடித்துக் காட்டும் திடீர் எக்ஸ்-ரே சாதனம் ஒன்று பிரிட்டனில் அறிமுகமாகியிருக்கிறது.

ஒரு மேஜையின் மேல் பகுதிபோல் இருக்கும் கண்ணாடித் தகடுதான் இந்தப் புதிய எக்ஸ்-ரே சாதனம். இதன் அடியில் எல்லாவித எலக்ட்ரானிக் சாதனங்களும் வைத்திருக்கிறார்கள். இந்தக் கண்ணாடியின் மேல், பெட்டியை வைத்து எடுத்தால் போதும், அதனுள் இருப்பவை என்னென்ன என்பதை இந்த நுண்கருவிகள் படம் பிடித்து, அதே வினாடியில் போட்டோ தந்துவிடும். சாதாரண எக்ஸ்-ரே யூனிட்டைப் போல 'டெவலெப்' செய்துதான் படம் தரும் என்ற நிலை இதில் இல்லை. பெட்டியை வைத்து எடுத்த அதேநேரத்தில் அதன் உட் பகுதியைப் படம் பிடித்து, போட்டோவையும் தரவல்லது இந்தச் சாதனம்.



விமானப் பயணங்களில் பெட்டிகளில் வெடிகுண்டுகளை அல்லது ஆயுதங்களை எடுத்துச் செல்கிறார்களா என்று கண்காணிக்கவும், பெட்டிக்குள் கடத்தல் பொருள்கள் உள்ளனவா என்று பார்க்கவும் இச்சாதனம் உதவும். இச்சாதனம் இதன் வகைகளிலேயே மிக நவீனமானது; சிக்கனமானது. பெட்டியைத் திறக்காமல், உரிமையாளருக்குக் கோபம் ஏற்படுத்தாமல் சோதித்துவிடக்கூடியது. தெற்கு இங்கிலாந்தில் உள்ள 'தார்ன் லைட்டிங் ஒர்க்ஸ்' என்ற நிறுவனத்தினர் கண்டுபிடித்துள்ள இந்தச் சாதனம் ஆயிரக் கணக்கான படங்களை எடுக்க வல்லது. சாதாரண எக்ஸ்-ரே யூனிட்டில் ஒவ்வொரு முறையும் பிலிம் மாற்றிடவேண்டும். இதில் அந்தத் தொல்லையும் இடையாது.

மருத்துவ உபயோகத்திற்கு இதனைப் பயன்படுத்த முடியாது. அதற்கேற்ற சாதனம் தயாரிப்பதில் இந்நிறுவனத்தினர் தீவிரமாக உள்ளனர்.

சைவ இறைச்சி

தயிரிலிருந்து இறைச்சியின் பண்புகள் உள்ள மிகு புரத உணவுப் பொருள் ஒன்றை அமெரிக்க வேளாண்மைத் துறை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இதைச் சைவ இறைச்சி என்று கூறலாம். நெடுநேரம் சூடுபடுத்தினாலும் இது உடைந்து துண்டாகி விடுவதில்லை. பிடித்தமான மணம், காரம் முதலியன சேர்த்து உண்ணலாம்.

குறிப்பாக வளர்ச்சி குறைவான நாடுகளில் கோடிக் கணக்கான மக்கள் பால் பருகுவதில்லை. அவர்கள் இந்தப் புதிய சைவ இறைச்சியைத் துணை உணவாக உண்டு, தம் சாப்பாட்டிலுள்ள ஊட்டச் சத்துக் குறைகளை நிறை செய்து கொள்ளக்கூடும். இச் சைவ இறைச்சியில் அதிக அளவு (பால்) புரதச் சத்து உள்ளது.

வாஷிங்டன் நகரிலுள்ள வேளாண்மைத் துறையின் ஊட்டச் சத்து ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த நோயின் பி. வாங், ஒவன் டபிள்யூ. பார்க்ஸ் என்னும் இரு இரசாயன வல்லுநர்கள் இப்புதிய தயிர் உணவை உருவாக்கியுள்ளார்கள். ஏடு எடுத்த பாலோடு கால்ஸியம் குளோரைடு சேர்த்து, தயிர் தயாரித்து, பின்பு அதைச் சூடு படுத்துகிறார்கள். அடுத்துச் சிறு சிறு துண்டுகளாக அதை வெட்டி, கொதிக்கும் எண்ணெயில் வறுக்கிறார்கள். சற்றுப் பழுப்புநிறம் வந்ததும் எடுத்துவிடுகிறார்கள்.

வறுத்த தயிரைத் தண்ணீரில் போட்டு, குளிர் பெட்டியில் இரு வாரங்கள் வரையில் கெடாமல் வைத்திருக்கலாம். உரிய காப்புப் பொருள் சேர்த்து, வீட்டு வெப்ப நிலையில், மூன்று மாதம் வரையில் கூடக் கெடாமல் வைத்திருக்கலாம். வறு தயிரைப் பயன்படுத்தி, இறைச்சி மணமுள்ள குழம்பு தயாரித்து, டப்பாக்களில் அடைத்து வைக்கலாம். உண்பதற்குரிய பண்டங்கள் செய்யலாம். இனிப்புப் பண்டங்களும் செய்யலாம்.

வறு தயிரை வாணிப முறையில் விற்பனை செய்யத் தொடங்குவதன் பொருட்டு, மேற்கொண்டும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள்.


அண்ணன் காட்டிய வழி
13
இளங்கோ! உனக்குத் தெரியுமா சேதி? நேற்று அண்ணாமலை முத்துவின் வீட்டுக்குப் போனாராம்....
முத்துவையும் வேலனையும் சேர்ந்து ஒத்துழைக்கணும்னு கேட்டிருப்பார் அவனும் சரின்னு சொல்லியிருப்பான்!
அதுதான் இல்லை! முத்துவை எதிலும் கலந்து கொள்ள வேண்டாம் என்று சொல்லப் போறாராம்!
இதுவும் வேலனுக்காக இருக்கும்! இதையெல்லாம் இப்படியே வளரவிடக் கூடாது, அண்ணாவுக்கு நீங்க எல்லாரும் பயந்தாலும் நான் மட்டும் தனியா நின்னு முடிவு கட்டுறேன் பாருங்க!
செல்வன் வீட்டில்
அப்பா! எனக்கு ஒண்ணுமே புரியலையே!
எனக்கு மட்டும் புரியுதா என்ன?
புரியாமலா இப்படிப்பேசுறீங்க?
நான் என்ன சொன்னேன்?
தவறு செய்தால் தண்டனை தானு கிடைக்கும்னு சொன்னீங்களே!
இந்தப் புத்தகத்தைப் படித்தால் நீ என்னமோ சொல்றியே?
செந்தாமரை! புரியும்படியாச் சொல்லுன்னு எத்தனை தடவை கேட்கிறது? சொல்லேன்!
வந்து.... வந்து நம்ப திட்டம் எல்லாம் கெட்டுப் போச்சு.... கடிதத்தை மாற்றி நம்ப ரகசியத் திட்டத்தை எடுத்துக் கொண்டுபோய் வேலன் கொடுத்திட்டான்!
அப்படியா?
ஐயய்யோ.... அண்ணாகிட்டே கொடுத்திட்டேனே!
தொடரும

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலியவற்றை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழே
கொடுக்கப்பட்டுள்ள அரசு மருத்
துவமனைகளுக்கு 1972-ஆம் ஆண்டு
ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள்
முதல் ஆரம்பமாகும் அல்லது
ஒவ்வொரு விஷயத்திலும் அதி
காரியால் ஒப்பந்தப் புள்ளி ஏற்
றுக்கொள்ள குறிப்பிடப்படும் அத்
தகைய இதர நாளிலிருந்து 1973-
ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள்
31-ஆம் நாளோடு முடிவடையும்
காலத்திற்கு உணவு மற்றும் இதர
மருத்துவ மனைகளுக்குத் தேவை
யான பொருள்கள் வழங்குவதற்
கான முத்திரையிட்ட ஒப்பந்தங்
கள் 1972-ஆம் ஆண்டு ஜனவரித்
திங்கள் 7-ஆம் நாள் வெள்ளிக்
கிழமையன்று மாலை 2 மணிவரை
சம்பந்தப்பட்ட மருத்துவ அலு
வலர்கள், கண்காணிப்பாளர்
அவர்களால் பெற்றுக்கொள்ளப்
படும் என்று இதனால் அறிவிக்கப்
படுகிறது—

(1) அரசு மாவட்ட தலைமையிட மருத்துவ மனை, நாகப்பட்டினம்.

(2) கும்பகோணம், மன்னார்குடி, மாயூரம், திருவாரூர், பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி, சீர்காழி, நன்னிலம், அதிராம்பட்டினம், அறந்தாங்கி, பொறையார், திருக்காட்டுப்பள்ளி, கூத்தாநல்லூர், திருப்பனந்தாள், பேராவூரணி ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகள் மற்றும் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசுப் பெண்கள் மற்றும் சிசு மருத்துவமனை.

(3) பாபநாசம், குற்றாலம், குடவாசல், சுவாமிமலை, அம்மாப்பேட்டை, வைத்தீஸ்வரன் கோவில், திருவிடமருதூர், நாச்சியார் கோயில், வலங்கைமான், சுந்தரப் பெருமாள் கோயில் மற்றும் கிளியனூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருந்தகங்கள்.

குறிப்பு:—திருத்துறைப்பூண்டி பெண்கள் மற்றும் சிசு மருத்துவ மனைக்கான ஒப்பந்தப் புள்ளி, திருத்துறைப் பூண்டி அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர், அவர்களால் அவரது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

தேவைப்படும் பொருள்களின்
அட்டவணையுடன் ஒப்பந்த நிபந்
தனைகளின் பிரதியும் மற்றும்
ஒப்பந்த நமூனாவின் பிரதியும்
மேற்படி அலுவலர்களிடமிருந்து
மேற்படி நமூனாக்களின் விலையான
ரூ. 5-ம், விற்பனை வரிக்காக
காசு (15) பதினைந்தையும்சேர்த்து
ஒரே செலானில் கட்டிப்
பெற்றுக் கொள்ளலாம். இத்
தொகைகள் திரும்பப் பெறக்
கூடியதல்ல. இக்கட்டணம்
ரூ. 5.15-ஐ சென்னை ஸ்டேட்
பாங்க் ஆப் இந்தியாவிலோ
அல்லது ஸ்டேட் பாங்க் ஆப்
இந்தியாவின் எந்தக் கிளைகளிலோ
அல்லது ஏதேனும் அரசுக்
கருவூலங்களிலோ தமிழ்நாடு
அரசின் கணக்கிற்கு முறையே,
"XXIII. Medical—I Director of
Health Services and Family plan-
ning—G. Miscellaneous other
receipts" "XII Sales Tax receipts
under the State Sales Tax Act.—
General Sales Tax" என்ற தலைப்
பின்கீழ் செலுத்தப்படவேண்டும்.
விற்பனை வரி செலுத்துவதை
விவரமாக செலானில் குறிப்பிட்
டுள்ள (on what Account with autho-
rity if any Head of Account-ன்)
கீழ் குறிப்பிட வேண்டும்.
நமூனாக்களைப் பெறுவதற்காக
சம்பந்தப்பட்ட மருத்துவ மனை
அல்லது நிறுவனங்களில் அலுவ
லகத்தில் எந்த வேலை தினத்தி
லும் காலை 11 மணி மற்றும் மாலை
5 மணிக்கு இடையில் செலான்
கள் தாக்கல் செய்யப்பட வேண்
டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் ரொக்கம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு:—(1) ஒவ்வொரு
ஒப்பந்தத்துடனும் 1971-ஆம்
ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல்
நாளன்றோ அல்லது அந்த நாளுக்
குப் பிந்திய ஏதாவதொரு நாளி
லோ பெறப்பட்ட சால்வென்சி
சர்டிபிகேட்டை, அதற்கென
நிர்ணயிக்கப்பட்டுள்ள நமூனாவில்
ஒரு தாசில்தார் கையொப்பத்
துடனோ அல்லது அரசிதழ் பதிவு
பெற்ற அலுவலரின் நற்சான்று
டன் கூடிய அதன் நகல் பிரதி
யையோ கட்டாயமாக இணைத்து
அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் மதிப்பீ
டானது ரூ. 10,000-க்கும் மேம்
பட்டதாக இருப்பின் அத்தகைய
இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்டி
பிகெட் ஒன்றை இணைத்துஅனுப்ப
வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் கிளி
யரன்ஸ் சர்டிபிகேட் ஒன்றையும்
ஒப்பந்தத்துடன்இணைத்துஅனுப்ப
வேண்டும்.

(3) ஒவ்வொரு ஒப்பந்தத்
துடனும் 1971-ஆம் ஆண்டு அக்
டோபர் திங்கள் முதல் நாளன்றோ
அதற்குப் பிந்திய ஏதா
வது ஒரு நாளிலோ தாசில்தார்
அந்தஸ்திற்குக் குறையாத
ரெவின்யூ அலுவலர் அல்லது
தாசில்தார் சார்பில் செயல்படும்
ஹெட்குவாட்டர்ஸ் டெபுடி தாசில்
தாரிடமிருந்து பெறப்பட்ட நேஷ
னலிடி சர்டிபிகேட் அல்லது அர
சிதழ் பதிவு பெற்ற அலுவலர்ஒரு
வரின் நற்சான்றுடன் கூடிய
அதன் நகல் பிரதியையோ
இணைத்து அனுப்ப வேண்டும்.

(4) ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர், ஒப்பந்தத்தைக் கொடுத்த பின்பு தன்னுடைய ஒப்பந்தம் சம்பந்தமாக இவ்வலுவலகத்திற்குத் தனிப்பட்ட முறையில் எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளக்கூடாது.

டாக்டர் கா. குழந்தைவேலு,
எம். பி. பி. எஸ்., மாவட்ட
மருத்துவ அலுவலர், தஞ்சை
இருப்பு, நாகப்பட்டினம்,

21-10-1971.

(த.ஆர்.7)

சைனிக் பள்ளி

அமராவதி நகர்,
கோயம்புத்தூர் மாவட்டம்,
5-வது வகுப்புக்கு 1972-ஆம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு.

1972 பிப்ரவரி மாதம் 19, 20 தேதிகளில் நுழைவுத் தேர்வு நடைபெறும். (விடைகளை, தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிகளில் எழுதலாம்.) இந்த தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று நேர்முகப் பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு தேர்வு போர்டு முன் ஆஜராகவேண்டும்.

வயது :—1962 ஜுலை 2 மற்றும் 1963 ஜுலை 1-ந் தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உட்பட).

தமிழ் நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள்—

சென்னை.	திருநெல்வேலி.
கடலூர்.	சேலம்.
தஞ்சாவூர்.	வேலூர்.
திருச்சிராப்பள்ளி.	அமராவதிநகர்.
மதுரை.	

பள்ளி பாடத்திட்டம்—

திறமையான கல்வி, உணவு வசதி மற்றும் விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற்பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசீய பாதுகாப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும் மத்திய செகண்டரி கல்வி போர்டால் நடத்தப்படும் அகில இந்திய உயர் செகண்டரி தேர்வுக்கும் (புகுமுக வகுப்பிற்கு சமமானது) சிறுவர்களைத் தயார் செய்யும். போதனை மொழி ஆங்கிலம். தவிர உயர்-கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியை கட்டாய பாடமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

ள்ளிக் கட்டணம்—

ஆண்டுக்கு ரூ. 2,050 (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உட்பட); உடை வகைகள் கட்டணம் (outfit charges) ரூ. 300 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 150 பின்வரும் ஆண்டுகளிலும், செலுத்த வேண்டும். எச்சரிக்கைத் தொகை ரூ. 150 (இது பள்ளியை விட்டுச் செல்லும்போது திருப்பித் தரப்படும்). கைச்செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100.

தகுதி மற்றும்—வருமான அடிப்படையில் அரசாங்க உதவித் தொகை திட்டங்கள்—

தமிழ்நாடு :—தமிழ் நாட்டில் நிலைத்து வாழ்ந்து வரும் சிறுவர்களுக்கும் மற்றும் இதற்குச் சேர்த்துக்கொள்ளும் வருடத்தில் ஜனவரி 1-ஆம் தேதியன்று உள்ளபடி குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்குத் தமிழ் நாட்டில் தொடர்ந்து உத்தியோகத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

கூட்டாகப் பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 400, ரூ. 500, ரூ. 700, ரூ. 1,000 வரையில் இருக்குமானால் அப்பொழுது அளிக்கப்படக்கூடிய உபகாரச் சம்பளத்தின் மதிப்பு முறையே முழுதும், முக்கால், பாதி, கால் பாகம்.

பாதுகாப்பு அமைச்சகம் :—பணிபுரிந்து வரும் மாஜி JCOக்கள், ORகள் மற்றும் அவர்களுக்குச் சமமான கடற்படை விமானப்படைகளில் பதவிகளை வகித்தவர்களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

உள்துறை அமைச்சகம் :—மத்திய அரசு நேரடி ஆட்சியின் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்குத் தாராளமான உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

விண்ணப்பம் மற்றும் விளக்கக் குறிப்புகள் :—விண்ணப்பப்படிவம், பள்ளி விளக்கக் குறிப்புகள், மாதிரி வினாத்தாள் ஆகியவைகள் வேண்டுவோர் 90 காசு தபால் தலையும் அதனோடு 5 காசு வரித்தபால் தலையும் ஒட்டிய 42 செ. மீ.×15 செ. மீ. அளவுள்ள சுயவிலாசமிட்ட உறையுடன் முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதி நகர் தபால் அலுவலகத்தில் பெறுமாறு), அவர்கள் பெயருக்கு ரூ. 3-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச்செய்து பெறலாம். மேலும் மனுவில் எந்த மொழியில் வினாத்தாள் தேவை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கடைசி தேதி :—குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி பெற்ற விண்ணப்பங்களுடன் ரூ. 5-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டரை இணைத்து முதல்வருக்கு 20—1—1972-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

(த.ஆர்.2)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

திண்டுக்கல் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பாகவும், திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) கோட்டப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் சாலைகளில்1972-73-ஆம்ஆண்டிற்கான பராமரிப்பு வேலைகளுக்கான முடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) அட்டவணையில் திண்டுக்கல் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில்20-1-1972-ஆம் தேதி பிற்பகல் 4-00 மணி வரையில் கோட்டப் பொறியாளர் அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும் பெற்றுக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 4-05 மணி அளவில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப் பட்டியல்களிலும் பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும் மற்படி விவரக் குறிப்புக்களும் திண்டுக்கல் (நெடுஞ்சாலைகிராமப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 10-1-1972-ஆம் தேதி முதல் 19-1-1972-ஆம்தேதிவரை (இருநாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலில் அடக்க விலை விற்பனை வரி உட்பட ரூ. 5.18(ரூபாய் ஐந்து காசு பதினெட்டு மட்டும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தர இயலாது. 20-1-1972-ஆம் தேதி ஒப்பந்தப் புள்ளிகள் விற்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வேலைக்கான வேலை விவரங்கள் முன் வைப்புத் தொகை, விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் அனைத்து உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெ. கி. ப. து.) அலுவலகங்களிலும், இதன் அனைத்துப் பிரிவு அலுவலகங்களிலும் (நெ.) உள்ள அறிவிப்புப் பலகையில் 10-1-1972-ஆம் தேதி முதல் 19-1-1972-ஆம்தேதிவரைவிளம்பரம் செய்யப்படும். முன்வைப்புத் தொகை திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் “ ரெவின்யூ டெபாசிட் ” என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத்தவிர கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) திண்டுக்கல் சார்பில் மாற்றப்பட்ட பன்னிரண்டு ஆண்டுதேசிய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல்டு வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், முன்வைப்புத் தொகைக்காகப் பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

வி. எம். ராமதாஸ் ராவ்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.து.), திண்டுக்கல்.

(த.ஆர்.1)

அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி

பாளையங்கோட்டையில் இருக்கும் அரசாங்க இந்தியமுறை வைத்தியக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனைக்கு 1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி, முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரி குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை தேவைப்படும் உணவுப் பொருள்களும், இதரச் சாமான்களும் வழங்குவதற்கு (சப்ளை செய்வதற்கு) முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தமிழக அரசின் ஆளுநரின் சார்பில் அவருக்காகவும், உத்தரவின் படியும் மேற்படி வைத்தியக் கல்லூரியின் முதல்வரால் 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி பிற்பகல் 2·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் படிவங்கள், தேவைப்படும் சாமான்களின் பட்டியல், விதிகள் அடங்கிய அட்டவணை முதலியவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) XXIII Medical Miscellaneousஎன்ற தலைப்பிலும், விற்பனை வரி 15 காசு மட்டும் XII Sales Tax என்ற தலைப்பிலும் ரிசர்வ் பாங்கியில் அல்லது ஸ்டேட் பாங்கியில் அல்லது அரசினர் கருவூலங்களில் செலுத்தி. மேற்படி இரண்டு செலான்களையும் வைத்தியக் கல்லூரித் தலைவரிடம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம்வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமானச் சான்றிதழ் (Solvency Certificates) அல்லது அதன் உண்மையான நகல் கெஜட் பதிவான அலுவலரால் கையொப்பமிட்டாவது அனுப்ப வேண்டும்;

(2) ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000 மேற்பட்டால் வருமானவரி பாக்கியில்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும் ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும் தேசீய இனச்சான்றும் (Nationality Certificate) ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பப்படவேண்டும்;

(3) ஒப்பந்த நிபந்தனை நமூனைவையும் பொருள்களின் அட்டவணையையும் நன்குகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். சம்மதத்திற்கு அறிகுறியாக மேற்படி நமூனை வையும் அட்டவணையையும் கையெழுத்திட்டுஒப்பந்தத்துடன் திருப்பித் தர வேண்டும்.

முதல்வர்,
தமிழ்நாடு அரசாங்க இந்திய முறை மருத்துவக் கல்லூரி;

(த.8).

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசிய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை வட்டம்).

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 12—1—1972 புதன்கிழமை அன்று பிற்பகல் 3-30 மணிவரையில் (அலுவலகக் கெடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கு திறக்கப்படும்.

எண்.	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம்.
1	மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7—கி.மீ. 37/6-55/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	32,100	கோட்டப்பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, மதுரை-2.
2	ஷை கி.மீ. 55/0-65/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	24,800	ஷை
3	,, கி.மீ. 65/0-77/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,500	ஷை
4	,, கி.மீ. 77/0-88/4 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	29,100	ஷை
5	,, கி.மீ. 95/0-105/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	25,900	ஷை
6	,, கி.மீ. 105/0-115/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	30,000	ஷை
7	,, கி.மீ. 115/0-125/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	27,800	ஷை
8	,, கி.மீ. 125/0-134/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	19,000	ஷை
9	,, கி.மீ. 134/0-146/4 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,300	ஷை
10	,, கி.மீ. 170/0-183/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	25,600	ஷை
11	,, கி.மீ. 183/0-195/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	36,200	ஷை
12	,, கி.மீ. 195/0-203/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	21,400	ஷை
13	,, கி.மீ. 203/0-213/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	20,200	ஷை
14	,, கி.மீ. 213/0 224/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,700	ஷை
15	,, கி.மீ. 224/0-231/6 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	21,700	ஷை
16	சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை 7—கி.மீ. 345/0-355/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,000	கோட்டப்பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை திருச்சி கோ-1.
17	தேசிய நெடுஞ்சாலை எண் 45—கி.மீ. 403/0-417/250 சாலையை அகலப்படுத்தி விரிவுபடுத்துதல்.	33,700	ஷை

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2, மேலும் கோட்டப் பொறியாளர் அலுவலகம், தேசிய நெடுஞ்சாலை, திருச்சி கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 5—1—1972 முதல் 11—1—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயபாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது;

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்டதனிக் கோட்டப்பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை)அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும் இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

(த. ஆர். 3)

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2.

ஒப்பந்தப் புள்ளி

திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல் நகராட்சியின் நல அலுவலகத்திற்குத் தேவையான துப்புரவு வேலைக்காகக் கருவிகள் வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10—1—1972-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

தேவையான பொருட்களின் பட்டியலையும் இதர நிபந்தனைகளையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. வீரகேசவன்,
ஆணையர்,
திண்டுக்கல் நகராட்சி.

(த.7)

எழுதுபொருள் அச்சுத் துறை

தமிழக ஆளுநருக்காகக், கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—1—1972 மாலை 3·00 மணி வரை அரசு அச்சகத்திற்குத் தேவையான பலவிதமான பொருள்கள் வழங்குவதற்கு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் விவர அட்டவணையில் டைப் செய்து அனுப்பப்படவேண்டும். விவர அட்டவணைகளை ரூபாய் இரண்டு மட்டும் செலுத்தி, விற்பனை அலுவலர், அரசு வெளியீட்டு அலுவலகம், சென்னை-2 அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

அரசினர் எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம்
சென்னை-1,

3—12—1971.

(த. ஆர். 6)

ஏலம்

வனத்துறை

தமிழக அரசினர் மரக்கிடங்கு,
பொள்ளாச்சி.

சுமார் 500 கன மீட்டர் முதல் 800 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பலஜாதி) மரங்கள் ஆகியவைகளை 25—1—1972-ஆம் தேதி தமிழக அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென்கோவை மாவட்ட வன அலுவலர் அவர் களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடத்தப்படும்.

மற்ற விவரங்கட்கு பொள்ளாச்சியிலுள்ள தமிழக அரசினர் மரக்கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர்,
தென் கோவை பிரிவு.

7-12-1971.

(த. 4)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித்துறை

டி.என்.வி. 25/71-72.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலையை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்களால் 12-1-1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் ..	R.C.C. Box for the reach 0-0-486 to 0-1-275 of Karungal distributary. ஒன்று கட்டுதல்.
ஒப்பந்த வடிவம் ..	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை ..	ரூபாய் 4,300
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூபாய் 20
விற்பனை வரி ..	ரூ. 0.70
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	4 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்தில் "P. W. III O. R. Receipts" என்ற தலைப்பில் நிருாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, இராதாபுரம் ால்வாய் கோட்டம், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட் -ம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை ரி "XII S.T. (b) Receipts under the State Sales tax act—eneral Sales Tax என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும் ற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திரு ல்வேலி-கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர் r அலுவலகத்தில் 16-12-71-லிருந்து 7-1-72 வரை ரிலோ அஞ்சல் மூலமோ, மேலாளருக்கு, ஒப்பந்தப் புள்ளிப் திர விலையையும் விற்பனை வரியையும் செலுத்தியதற்கான தை உடன் வைத்து மனுச் செய்து பெற்றுக்கொள்ளலாம். தேதிக்குப் பிறகு வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டா. ற்கொண்டு விவரங்களை அலுவலகத்தில் அலுவல் நேரத் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

ஆர். 4)

ஒப்பந்தப் புள்ளி

பாளையங்கோட்டை நகராட்சி

நகராட்சி ஆணையாளர் அவர்களால் அடியிற் குறிப்பிட்ட வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 12-1-72-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இதர விவரங்களை அலுவலக நேரங்களில் நகராட்சிப் பெறியாளர் அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம்.

வேலை முடிக்க வேண்டிய காலம் இரண்டு மாதம்.

மதிப்பீடு எண்.	வேலையின் விவரம்.	மதிப்பீட்டு தொகை.	கட்டுத் தொகை முதலில்.	கட்டுத் தொகை பிறகு.
		ரூ.	ரூ.	ரூ.
1971 72	காந்திமார்க்கெட்டில் வடபக்கம் மேல் கடைசியில் உள்ள இரும்பு கேட் உள்ள இடத்தில் இரண்டு கடைகள் கட்ட.	8,500	213	212

(த.9)

ஜி. கே. அருணாசலம்,
ஆணையர் (பொறுப்பு).

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள் 18 காவலர்கள்ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை : தமிழரசு தேதி 1-11-1971, 16-11-71-இல் வெளியிட்ட ஒப்பந்த அறிக்கை.

மேற்கண்ட வேலைக்கான ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 6-1-'72 அன்று மாலை 3.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 5-1-'72 அன்று மாலை 5·00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

ரா. வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.5)

ஒப்பந்தப் புள்ளி

நாகர்கோவில் நகராட்சி

நாகர்கோவில் நகராட்சி மகாத்மா காந்தி நூற்றுண்டு நினைவு மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்குவதற்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அல்லது அவரது ஆணை பெற்றவரால் 12-1-1972 மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு ரூ. 1·03 நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்த அட்டவணைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதிப்புத் தொகை—ரூ. 3,000.
பொறுப்புத் தொகை—ரூ. 100.

நாகர்கோவில், **பி. தங்கவேலு,**
10-12-1971. ஆணையர்.

(த.1)

ஏல விளம்பரம்

திருச்சிராப்பள்ளி நகராட்சி

திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு சொந்தமான கீழ் அரண் சாலையில் ஊர்துசாமி பிள்ளை பூங்காவுக்குத் தென்புறத்தில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் 3 கடைகளில் வியாபாரம் செய்து கொள்ளும் குத்தகை உரிமையை 31-3-1973 உள்ள காலத்திற்கு நகராட்சி அலுவலகத்தில் தனித்தனியே, ஆணையரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 20-12-71-ம் தேதி காலை 11·00 மணிக்கு ஏலம் விடப்பெறும். ஏலக்கட்டுப்பாடும் மற்ற நிபந்தனைகளும் அலுவலக நாட்களில் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தே. கோவிந்தராசன்,
ஆணையர்.

திருச்சி,

ஒப்பந்தப் புள்ளி

அரக்கோணம் நகராட்சி

இந் நகராட்சி உபயோகத்திற்குத் தேவையான மின்சார விளக்குகள், உபகரணங்கள்சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 11-1-72 தேதி மாலை 4·00 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே 4·15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மேலும் விவரங்களும், ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் ரூ. 1·00 விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

க. ரா. குட்டியப்பன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
அரக்கோணம்

4-12-71.
(த. 3)

ஒப்பந்தப் புள்ளி

நாகர்கோவில் நகராட்சி

நகர் மன்றத்திற்குச் சுமார் ரூ. 32,000 மதிப்புள்ள பொது மராமத்து வேலைகளுக்குரிய குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைப்பதற்கும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-1-72 மாலை 4 மணி வரை ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும். ஏனைய கூடுதல் விவரங்கள் நகர்மன்ற பொறியர்அலுவலகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பி. தங்கவேலு,

நாகர்கோவில்,
9-12-1971. ஆணையர்.
(த. 6)

ஏல விளம்பரம்

ந.க.எண். 1945/71, பி2.

பொருள் :— பழைய ஆங்கில ரெத்தை

அம்பத்தூர் நகரியத்திற்குச் சொந்தமான நீண்ட காலம் உடயோகத்திலிருந்து வந்த ஒரு ஆங்கிலத் தட்டெழுத்து இயந்திரம் மாடல் எண். J 667632 உள்ளதை 10-1-1972-ஆம் தேதி அன்று அம்பத்தூர் நகரியத்தில் மாலை சுமார் 3·00 மணியளவில் நிருவாக அதிகாரி அவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் ரூ. 50 டிபாசிட்டாக முன் பணம் செலுத்திக் கேட்க வேண்டும். இது சம்பந்தமாக மேற்கொண்டு விவரங்கள் அறிய அலுவலக நேரத்தில் நிருவாக அதிகாரியை நேரில் சந்திக்கவும்.

டி.எம். வெங்கட்டராமன்,
நிருவாக அதிகாரி.

அம்பத்தூர்,
2-12-1971.
(த. 5)

ஏல விற்பனை

சேலம் மாவட்ட நில அளவை அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எம்.எஸ். எக்ஸ். 3649 எண்ணுள்ளதான ஒரு பழுதடைந்த வில்லீஸ் ஜீப் மாவட்ட நில அளவை அலுவலகம் கோட்டை சேலம்-2 என்ற விலாசத்தில் 17-1-1972 காலை 11 மணிக்கு சேலம் மாவட்ட நில அலுவலக அளவை அலுவலக உதவி இயக்குநர் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனை நிபந்தனைகள் போன்றவை விற்பனையின்போது அறிவிக்கப்படுவதுடன் 1971 நவம்பர் மற்றும் 1971 டிசம்பர் சேலம் ஜில்லா கெஜட்டிலும் பிரசுரிக்கப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்கண்ட ஜீப் காரை அலுவலக வேலை நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை பார்த்துக்கொள்ளலாம். இது சம்பந்தமான விவரங்களை அடியிற் கண்ட அதிகாரியிடம் தெரிந்து கொள்ளலாம்.

வெ. க. வெங்கடாசலம்,
உதவி இயக்குநர்,
நில அளவை அலுவலகம்,

சேலம்-1,
31-12-1971.

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்), பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவைபோன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 12—1—1972 பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—

மேலூர் குடிநீர்த் திட்டம்—450 எம்.எம். (18'') உள் விட்டமுள்ள சிமெண்டு குழாய்கள் (ஆர்.சி.சி. பைப்புகள்) விநியோகிப்பது.

ஒப்பந்த வகை:— மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை ரூ. 3,780.—இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரம் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு :—6 மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை ரூ. 10·37—(விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராமமூர்த்தி ரோடு, சின்னசொக்கிகுளம் என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினை 5—1—1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு. பொ.),
குடிநீர், வடிகால் வாரியம்;

மதுரை-2,
3--12--1971;

(த.7)

ஒப்பந்தப் புள்ளி

வேலையின் பெயர் :—நந்தலாற்றிலிருந்து பிரியும் ஏ.14 இடியார் கால்வாய் 0/0 முதல் 7·520 கி. மீ. வரை நவீனப்படுத்துதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் கடைசியாக பெறும் நாள் 12—1—1972-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப் பத்திரங்கள் பெறுவதற்கான மனு 10—1—1972 வரை பெற்றுக்கொள்ளப்படும். மற்ற நிபந்தனைகள் ஏற்கனவே 16—11—1971 அரசு இதழில் அறிவித்திருந்த அன்று வெளியான தமிழரசு இதழில் அறிவித்திருந்த ஒப்பந்த நிபந்தனைகள் மாற்றம் ஏதும் இல்லை.

தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி
வட்டம், தஞ்சாவூர்.

(த.3)

ஒப்பந்தத் தேதி நீடிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கோடியக்கரையில் ஒரு ஆய்வாளர் மாளிகைக் கட்டுதல் பற்றி.

பார்வை—தமிழரசு
15—11—1971-ல் வெளி
வந்த ஒப்பந்த அறிவிப்பு.

மேற் கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்டஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 20-1-1972 அன்று மாலை 3-00 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 19—1—1972 அன்று மாலை 5-00 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் எவ்வித மாறுதலும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறி
யாளர், தஞ்சாவூர்
வட்டம், தஞ்சாவூர்.

(த.4)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை, சேலம் கோட்டம்.

அரசாங்கச் சாலைகளின் 1972–73-ஆம் வருடத்திய வருடாந்திர பராமரிப்பு வேலைகள்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும் உத்தரவுப்படியும் சேலம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் (டிவிஷனல் இஞ்சினியர்) அவர்களால் சேலம் கோட்டத்திற்குட்பட்ட அரசாங்கச் சாலைகளின் 1972–73ஆம்வருடத்திற்கான எல்லாப் பராமரிப்பு வேலைகளுக்கும் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சேலம் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் சேலம்-5. 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை (அலுவலகக் கடிகார மணிப்படி) பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் 21—1—1972 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் சேலம் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3-11 (விற்பனை வரி உட்பட) வீதம் கட்டணம் செலுத்தி (இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது) அலுவலக நாட்களில் அலுவலக நேரப்படி நாள் 5—1—1972 முதம் 20—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்; ஒப்பந்தப் பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளி தேதியன்று (அதாவது 21—1—1972) கொடுக்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. கட்டுத் தொகை கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப) சேலம் அவர்கள் சார்பில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டை (சலான்) ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். தமிழ்நாடு அரசுக் கடன்பத்திரங்கள் கோட்டப் பொறியாளரின் சார்பில் மாற்றியதும், பேங்க் டிமாண்ட் டிராப்ட்டும், கட்டுத் தொகைக்குப் பெற்றுக்கொள்ளப்படும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்துடன் வருமான வரி, விற்பனை வரி, சான்றிதழ் ஆகியவைகளை ஏற்கனவே சமர்ப்பிக்காமலிருந்தால் ஒப்பந்தத்துடன் வைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பாவிடில் அவர்களுடைய ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாகும்.

வேலை விவரங்கள் ஒவ்வொரு வேலைக்குண்டான முன் வைப்புத் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் அதன் உட்கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகங்களிலும், பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 10—1—1972 லிருந்து விளம்பரப்படுத்தப்படும்.

ஜே. ர. கொர்னிலியஸ்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.), சேலம்-5.

(த.2)

ஒப்பந்தப் புள்ளி

சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்குப் பூந்தமல்லி, சைதாப்பேட்டை, செங்கற்பட்டு மற்றும் மதுராந்தகம் கிளைச் சிறைச்சாலைகளுக்கு உணவுப் பொருள் முதலியன ஒவ்வொரு நாளும், அன்றையத் தேவைக்கேற்ப வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ் கையொப்பமிட்டவரால் 2—2—1972-ஆம் நாள் பகல் மூன்று மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அனுப்பப்படும் உறையின் மேல் உணவுப் பொருள்கள் கிளைச் சிறைச்சாலைக்கு வழங்குவதற்கான ''ஒப்பந்தப் புள்ளி'' என்று எழுத வேண்டும். (எந்த கிளைச் சிறைச்சாலைக்குரிய ''ஒப்பந்தப் புள்ளி'' என்பதை இங்குத் தவறுமல் குறிப்பிட வேண்டும்). எக்காரணத்தை முன்னிட்டும் ''ஒப்பந்தப் புள்ளிகள்'' நேரில் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. 'ஒப்பந்தப் புள்ளிகள்' பதிவு அஞ்சல் மூலம் கீழ் கையொப்பமிட்டவரின் பெயருக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒப்பந்தங்கள் 3-3-72-ஆம் நாள் மாலை 4 மணிக்குத் திறக்கப்படும்.

'ஒப்பந்த' நமூனு மற்றும் விவரங்கள் சென்னை மத்திய சிறை அலுவலகத்திலும் குறிப்பிட்ட கிளைச் சிறைச்சாலையிலும் ரூ. 1.05 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை திருப்பியளிக்கப்படமாட்டாது.

மு. பகவதி முருகன்,
கண்காணிப்பாளர்,
மத்திய சிறை, சென்னை-3.

(த.24)

ஏல விற்பனை

பொதுப் பணித்துறை

இத்துறைக்குச் சொந்தமான லாரி எம்.டி.சி. 6493 (ஆஸ்டின் 1951 மாடல்) 28–1–72 அன்று முற்பகல் 11 மணிக்கு தஞ்சை முதலாம் உட்கோட்ட உதவிப் பொறியாளரால் பூதலூர் பிரிவு அலுவலகத்தில் ''எப்படி எங்குள்ளதோ'' அந்நிலையில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

பூதலூர் பிரிவு அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்த லாரியைப் பிரிவு அலுவலரின் அனுமதியுடன் பார்வையிடலாம். ஏல விற்பனையை அங்கீகரிக்கவோ, ரத்து செய்யவோ, அல்லது தள்ளிவைக்கவோ பொதுப்பணித்துறைக்குப் பூரண உரிமை உண்டு. இது சம்பந்தமான இதர விவரங்களைத் தஞ்சை முதலாம் உட்கோட்ட உதவிப் பொறியாளரிடமிருந்து பெறலாம்.

நிருவாகப் பொறியாளர்,
சு.கா. கோட்டம், தஞ்சாவூர்.

(த.27)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 19–1–1972 (புதன் கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: பெரியகுளம் வடிகால் திட்டம்—வடிகால் நீரேற்றிகள் அளித்தல்— நிருமாணித்தல் — சம்பந்தமாக.

ஒப்பந்த வகை : மொத்தத்தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 4,875 (ரூபாய் நான்காயிரத்து எண்ணூற்று எழுபத்தைந்து).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச்சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஆறு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை. ரூ. 15·55 (விற்பனை வரி உட்பட) (ரூபாய் பதினைந்தும், ஐம்பத்தைந்து காசும்).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, கே. இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்னும் முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17–1–1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை-2,
4—12—1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால், வாரியம்.

(.த 14)

விளம்பரம்

மீஞ்சூர் பேரூராட்சி

சைதைக் கோட்டம்

செங்கை மாவட்டம்

1958-ஆம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் பிரிவு 120-ன் படியும் அதையொட்டி விதிக்கப்பட்ட வீட்டு வரி விதிப்பு, வசூல் பற்றிய விதி 6 (4)-ன்படியும் செங்கை மாவட்டம், மீஞ்சூர் பேரூராட்சியில் இருந்து தெரியப்படுத்துகிற விளம்பரம்.

மீஞ்சூர் பேரூராட்சி தனது 29–11–1971, 172-வது தீர்மானத்தில் மீஞ்சூர் பேரூராட்சி எல்லையிலுள்ள வீடுகளுக்கு விதிக்கப்படுகிற வரி விகிதத்தை கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கத் தீர்மானித்திருக்கிறது. கீழே குறிப்பிடுகிற திருத்தி அமைக்கப்படுகிற வரி சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 15—1—1972-க்கு முன் மீஞ்சூர் பேரூராட்சி நிருவாக அதிகாரிக்குத் தங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளலாம். 15—1—1972-க்கு பின் வரும் ஆட்சேபனைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. திருத்தியமைக்கப்படுகிற வரி விகிதம் 1—4—1972 முதல் அமுலுக்கு வரும்.

ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதம்.	1–4–1972 முதல் விதிக்கப்பட இருக்கும் வரி விகிதம்.	காலம்.
வாடகை விகிதத்தில் ஆறுமாத காலத்திற்கு 5 (ஐந்து) சதமானம்.	வாடகை விகிதத்தில் ஆறு மாத காலத்திற்கு 10 சதமானம் (பத்து சதமானம்.)	1—4—1972 முதல் திருத்திய. வரி விகிதம் அமுலுக்கு வரும்.

குறிப்பு:—1–4–1972 முதல் வருடத்திற்கு ஒரு தடவை வசூல் செய்து வந்ததை, ஆறு மாத காலத்திற்கு ஒரு தடவையாக ஒரு வருடத்திற்கு இரண்டு தடவை வசூலிக்கப்படும்.

பேரூராட்சி அலுவலகம்,
மீஞ்சூர்,
10—12—1971.

நிருவாக அதிகாரி,
பேரூராட்சி மன்றம்,
மீஞ்சூர்.

(த. 8)

ஒப்பந்தப் புள்ளி.

போக்குவரத்துத் துறை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில் தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களால் கீழ்க் கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3-00 மணி வரை கீழே ஐந்தாவது காலத்தில் குறிக்கப்பட்டுள்ள தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலை விவரமும்.	முடிக்கும் காலம்.	முன்வைப்புத் தொகை	ஒப்பந்தத் தேதி.	ஒப்பந்த விதிகளின் விலை (விற்பனை வரி உட்பட).
		ரூ		ரூ. காசு.
1. அசோக் நகர் பணி மனையின் உள்ளே மின்சார வசதி அமைத்தல்.	ஒரு மாதம்.	200	19–1–72	5-20
2. அசோக் நகர் பணி மனையில் பராமரிப்புக் கூடத்திற்கும், சாலை விளக்கிற்கும் மின் வசதி அமைத்தல்.	ஒரு மாதம்.	1,600	19–1–72	20-80

ஒப்பந்தம் : மொத்தத் தொகை

ஒப்பந்தங்கள் மேலே குறிப்பிட்ட தேதியில், மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைப்படங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொகைகளைக் கட்டி, கீழ்க்கண்ட (2—1—72 விருந்து 18—1—1972) முடிய தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகைகளை ' நிருவாகப் பொறியாளர் ' தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களுக்கு, அரசாங்கக் கருவூலத்தில், ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத்தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

சி. சிவானந்தா,
தலைமைப் பொறியாளர்.

(த. 1)

ஏல விற்பனை

வேளாண்மைத் துறை

திருவாரூர் வேளாண்மைக் கருவிகள் பணிமனை பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17—1—1972 மாலை 3 மணிக்கு நிலம் சமன்படுத்தும் TD 14, TD 9, TD 6, T 6 இயந்திரங்களும் அதன் புதிய உதிரி உறுப்புகளும் (Bulldozer Spare Parts) மற்றும் இயந்திரக் கலப்பையின் உதிரி உறுப்புகளும் (Tractor Spare Parts கலப்பையின் உறுப்புகளும் (Plough Parts) பொது ஏலத்தில் விடப்படும்.

மேற்கூறிய உதிரி உறுப்புகளின் அட்டவணையையும், ஏலம் பற்றிய குறிப்புரைகளும் மேற்படி அலுவலகத்தில் 1—1—1972 முதல் 13—1—1972 வரை ரூபா. 1·04 (ரூபா ஒன்றும் 4 காசு மட்டும்) ஐ காசோலை மூலமாகவோ, அல்லது ' டிமாண்ட் டிராப்ட் ' மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். (இந்த ரூபா திருப்பிப் பெற இயலாது) மேற்கூறிய இனை உறுப்புகளை எல்லா அலுவலக வேலை நேரத்திலும் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்திவைக்கவோ, பொதுக் கண்காணிப்பாளருக்கு உரிமை உண்டு.

ஆர். குப்புராஜ்,
பொதுக் கண்காணிப்பாளர்,
வேளாண்மைக் கருவிகள் தொழிற் கூடம்,
திருவாரூர்.

(தூ5)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 12–1–1972 தேதி மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் வேண்டுவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5 விற்பனை வரி ரூபாய் 3½ சதவிகிதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச்சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 11–1–1972 வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்கட்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.

வரிசை எண்.	கட்டின் நடப்பு எண்.	வேலையின் விவரம்.	தொகை. மதிப்பீடு	முன் வைப்புத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.
			ரூ.	ரூ.	
1	இ1/18531/71.	காந்தி சந்தையில் ' எ1 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	.8,085	202	இரண்டு மாதம்.
2	௸	காந்தி சந்தையில் 'எ2 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	9,900	248	,,
3	௸	காந்தி சந்தையில் 'பி1' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	9,273	232	,,
4	௸	காந்தி சந்தையில் 'பி2' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	9,273	232	,,
5	௸	காந்தி சந்தையில் 'சி1' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விதியோகம் செய்தல்.	5,610	140	ஒரு மாதம்.
6	௸	காந்தி சந்தையில் 'சி2' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	5,610	140	,,
7	௸	காந்தி சந்தையில் 'டி' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	7,029	175	',
8	௸	காந்தி சந்தையில் ' இ1 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,435	160	,,
9	௸	காந்தி சந்தையில் ' இ2 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,435	160	,,
10	௸	காந்தி சந்தையில் ' எப்1 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,105	153	,,
11	௸	காந்தி சந்தையில் ' எப்2 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,105	153	,,
12	௸	காந்தி சந்தையில் ' ஜி1 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	7,920	198	இரண்டு மாதம்:
13	௸	காந்தி சந்தையில் ' ஜி2 ' பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	7,920	198	,,

வரிசை எண்:	கட்டின் நடப்பு எண்.	வேலையின் விவரம்.	மதிப்பீடு தொகை.	முன் வைப்புத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்:
			ரூ.	ரூ.	
14	இ1/18531/71	காந்தி சந்தையில் மாட்டிறைச்சிக் கடைகளைச் சுற்றிலும் உள்ள இடத்திற்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	11,507	288	இரண்டு மாதம்.
15	இ1/14382/71	செல்லக்குமாரக் கவுண்டர் வீதி கந்தன் செட்டி வீதி, அய்யாவு செட்டி வீதி, ரயில்வே லயன் சந்து ஆகியவற்றில் சாக்கடை மராமத்து செய்தல் மற்றும் ரயில்வே சந்துக்கு வடபுற ரோடுக்குத் தார் தளம் போடுதல்.	16,335	404	மூன்று மாதம்.
16	இ1/18050/71.	உடுமலை ரோடு நகரமன்ற குறைந்த வருவாய் ஊழியர் குடியிருப்பில் 42 வீடுகளுக்கு மராமத்து செய்தல்.	11,608	290	இரண்டு மாதம்:
17	இ1/16263/71.	நகராட்சி தினசரிக் காய்கறிச் சந்தையில் புதிய லேயவுட் பிரகாரம் பாதைகளுக்கு சிமென்ட் காங்க்ரீட் தளம் அமைத்தல்.	7,304	183	,,
18	இ1/18069/71.	பாலகோலபுரம் நடுநிலைப் பள்ளி வகுப்பறைகளுக்கு காங்க்ரீட் தளம் போடுதல்:	7,403	185	,,

பொள்ளாச்சி,
14–12–1971.

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்,

(த.19)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்:—வடார்க்காடு மாவட்டம், செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட .வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 29–1–1972 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 29–1–1972 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 12–1–1972 முதல் 28–1–1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர் 1:

(த.12.)

ஒப்பந்தப் புள்ளி

திருப்பூர் நகராட்சி

நகராட்சி சிப்பந்திகள் சீருடைக்கான கீழ்க்கண்ட உருப்படிகள் தைத்துக் கொடுக்க மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12–1–72-ஆம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் அல்லது அவர் அங்கீகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

புஷ் கோட்டுகள், ஷர்ட்டுகள், முழுக்கால் சட்டைகள், அரைக் கால் சட்டைகள். மொத்த உருப்படி உத்தேசமாக 1050.

மற்ற விவரங்களைச் சுகாதாரப் பிரிவில் அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை தெரிந்து கொள்ளலாம்.

ஆர். சீனிவாசன்,
ஆணையர்.

(த.21)

குடிநீர் வடிகால் வாரியம்

எண் 19029/71 டி-1

நாள் : 6—12—1971

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித் துறை உரிய பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து உரிய வடிவத்தில் 17—1—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. வேலையின் பெயர்	சென்னை கூவம் ஆறு காலேஜ் பாலத்துக்கும் ஆண்ட்ரூஸ் பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ரிவெட்மெண்ட் வேலைகளுக்காக 'Manufacturing and supplying mechanically viberated precast Cement Concrete slabs' வழங்குதல்.
2. ஒப்பந்த வடிவம் ..	கே-2.
3. கட்டுத் தொகை ..	ரூ. 2,500.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம்.	..
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.	ரூபாய் 10.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் காலம்.	20—12—1971-லிருந்து 12—1—1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர், கூவம் அபிவிருத்திக் கோட்டம், சென்னை-5 அவர்கள் கணக்கில் P. W. III O. R. என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் கட்டிப் பெறலாம். இதற்கான விற்பனை வரி, அமலில் உள்ள விகிதத்தில் XII b. Sales tax miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். தனித் தனி சலான்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் பெறுவதற்கும், இதர விவரங்கள் பெறுவதற்கும் ஆன விவரங்களைக் கீழ்க்கண்டவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

எந்தவிதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிராகரித்துவிட ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்களுக்கு—மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.), அவர்களுக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.)

(த.18)

சங்கரன்கோயில் நகராட்சி

கீழ்க்கண்ட சாலைகளுக்குத் தார் பூசும் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சங்கரன்கோயில் நகராட்சி ஆணையர் அவர்களால் 12—1—1972-ஆம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். வேலைகளுக்கு எதிராகக் குறிப்பிட்டத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் முதல் டெபாசிட்டாகக் கட்ட வேண்டும். பாக்கியுள்ள அதே டெபாசிட் தொகையை ஒப்பந்தப் புள்ளி ஒப்புக்கொண்ட ஒரு வார காலத்தில் கட்ட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவங்களும், விவரங்களும் நகராட்சி அலுவலகத்தில் ரூ. 2.56 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் தெரிந்துகொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி டெபாசிட் கட்டவும், படிவங்கள் வாங்கவும் கடைசித் தேதி 10—1—1972 ஆகும்.

வேலை விவரம்.	மதிப்பீடு.	கட்டுத் தொகை.
	..	ரூ.
1. திருமஞ்சணக்கிணற்றுத் தெருவிலிருந்து சத்திரம் வடக்குத் தெரு வரை நாடார் தெரு வழியாக தூசு படியாத ரோடு போட.	9,200	230
2. கழுகுமலை ரோட்டிலிருந்து குழுவர் தெரு வரை திருநீலகண்ட ஊரணி மேலக்கரை வழியாக.	17,000	425

13—12—1971.

(த.20)

ஞானகிராமன்,
ஆணையர்.

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

வேலூர் கோட்டம்

தமிழ்நாடு அரசு ஆளுநர்க்காகவும், அவர் சார்பிலும், வேலூர் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப.) அவர்களால் 1972—73-ஆம் வருட சாலைகளின் பராமரிப்பு வேலைக்கான முத்திரையிடப்பட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 21—1—1972-ஆம் தேதி (அலுவலக கடிகாரப்படி) மாலை 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலையே 3-15 மணிக்கு கோட்டப் பொறியாளர் அவர்களால் ஒப்பந்தக்காரர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி வடிவங்களை மேற்படியார் அலுவலக மேலாளரிடமிருந்து விண்ணப்பித்து ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ரூ. 6.21 வீதம் செலுத்தி (சலான் மூலமாக) 10-1-72 ஆம்தேதி முதல் 19-1-72 தேதி வரையிலும் எல்லா அலுவலக நாட்களில் காலை 10-30 மணி முதல் மாலை 5 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

வேலையின் விவரங்கள் ஒவ்வொரு வேலைக்கும் கட்டுத் தொகை போன்ற விவரங்களைக் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) வேலூர் மற்றும் உதவிப் பொறியாளர் (நெ.கி.ப.), பிரிவு அலுவலர், (நெ.) அலுவலகங்களில் விளம்பரப் பலகையில் அறிவிக்கப்படும்.

கட்டுத் தொகையைக் ''கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), வேலூர்'' ''ரெவின்யூ டெபாசிட்'' கணக்கு என்ற தலைப்பின் கீழ் அரசாங்கக் கருவூலங்களில் அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் செலுத்தி அந்தச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அப்படி இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஆ. அப்பாசாமி,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.), வேலூர், வ.ஆ.

(த 13)

ஏலம்

கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான ஆர்.எஸ். புரம் சாஸ்திரி மைதானத்தில் 1—3—1972 முதல் தொடர்ச்சியாக 45 நாட்களுக்கு பொருட்காட்சி நடத்தும் உரிமையை நகராட்சி அலுவலகத்தில் 19—1—72-ஆம் தேதி காலை 11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் அடங்கிய பட்டியலுக்கு ரூ. 2 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த 15)

ஏல விற்பனை

வனத்துறை

மதுரை தெற்கு வனக்கோட்டம், மதுரை-20.

மதுரை தெற்கு வனக்கோட்டம் 1972—73-ஆம் வருடத்திய விறகு கப்புகளும், அரைவெட்டுக் கப்புகளும், மதுரை தெற்கு வனக் கோட்ட அலுவலகத்தில் 7—2—72 காலை 10 மணிக்கும், 8—2—72-ல் காலை 10-30 மணிக்கும் முறையே பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேல் விவரங்களுக்கு இவ்வலுவலகத்திற்கு அல்லது சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பம் செய்யவும்.

இரா. செல்லையா,
மாவட்ட வன அலுவலர்,
மதுரை தெற்குக் கோட்டம்.

மதுரை-20,
7—12—1971

(த.16)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு தொழில்கள் சபார்டினேட் சர்வீஸில் இரண்டு பட்டுத் தொழில் ஆய்வாளர் நியமனத்திற்கான மனுக்கள் 25—1—1972 மாலை 5-00 மணிக்கு வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்:—

ரூ. 325—15—475—20—575—25—650 மாதத்திற்கு.

வயது:—

1—7—1972-ல் 28 வயதிற்குக் குறைவாக.

தகுதி:—

(1) பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. அல்லது பி.எஸ்ஸி. (விவசாயப் பட்டம்).

(2) பட்டுத் தொழிலில் 6 மாதத்திற்குக் குறையாத அனுபவப் பயிற்சி.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீஸர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னுள் தேசிய மாணவர்ப் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—4—72 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1—1—64-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0.30 காசு நால் அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு நால் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த.9)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்.—சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் அமைக்க இருக்கும் புற்று நோய்க் கட்டடத்திற்கு பைல் (pile) கடைக்கால் அமைக்க;—

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களால் சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 12–1–1972 பிற்பகல் 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், பொதுப்பணித் துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை ..	ரூ. 5,250.
3. வேலை முடிக்க வேண்டிய காலம் —	ஆறு மாதங்கள்.
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை..	ரூபாய் 30 (ரூபாய் முப்பது மட்டும்) கருவூலத்திலோ (அல்லது) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ ''P.W. remittances III Other remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம் (1) சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.
5. விற்பனை வரி..	ரூபாய் 1.05 (ரூபாய் ஒன்றும் ஐந்து காசுகள் மட்டும்) அதே சலானில் குறித்துக் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கியிலோ '' XII '' விற்பனை வரி 'B' மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி.	3–1–1972 முதல் 11–1–1972 முடிய.
7. ஒப்பந்தப் புள்ளி தேதி ..	12–1–1972 (பிற்பகல் 3-00 மணி வரை).

மேற்கண்ட விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப் பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை 5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளிகளையும் (அல்லது) எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக்காரணமும் கூறுமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.,) சென்னை-செங்கற்பட்டு வட்டம் சென்னை-5 அவர்களுக்கு உரிமையுண்டு.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த. 26)

பட்டுக்கோட்டை நகராட்சி

பட்டுக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான லாரி, டிராக்டர் முதலானவைகளுக்குத் தேவையான கீழ்க்கண்ட அளவுகள் உள்ள டயர்கள் தேவைப்படுகின்றன. இவைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 10–1–1972 மாலை 4 மணி வரை கீழே கையொப்பமிட்டிருக்கும் நகராட்சி ஆணையர் அவர்களால் வாங்கப்படும்.

1. லாரி டயர்கள்—8×25—20	இரண்டு.
2. லாரி ட்யூப்புகள்—8×25—20	இரண்டு.
3. டிராக்டர் பின் சக்கர டயர்கள்—11—36.	இரண்டு.
4. டிராக்டர் பின் சக்கர ட்யூப்புகள்—11—36.	இரண்டு.
5. டிராக்டர் முன் சக்கர டயர்—600—19	இரண்டு.
6. டிராக்டர் முன் சக்கர ட்யூப்புகள்—600—19.	இரண்டு.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புபவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 50 காப்புத் தொகை செலுத்தி, ஒப்பந்தப் புள்ளியுடன் ரசீதை இணைத்து அனுப்ப வேண்டும். இது சம்பந்தமாக மற்ற எல்லா விவரங்களையும் அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் வேண்டுவோருக்கு வழங்கப்படும்.

கே. வெங்கடேஸ்வரன்,
ஆணையர்.

(த.22)

ஒப்பந்தப் புள்ளி

இராஜபாளையம்
நகராட்சி

நகராட்சி சுகாதாரப் பிரிவிலுள்ள எம்.டி. ஆர். நிர் 5712 ஹிந்துஸ்தான் டிராக்டருக்குத் தேவையான புதிய ஸ்பேர் சாமான்கள் மாற்றி ரிப்பேர் செய்து பெயிண்ட் அடித்துக் கொடுக்கவும், எம்.டி.ஆர் 5713 டேங்கருக்கு ஏற்பட்ட சில்லரை ரிப்பேர்கள் செய்து பெயிண்ட் அடித்துக் கொடுக்கவும் எம்.டி.ஆர் 5714 டிரெய்லருக்குச் சில்லரை ரிப்பேர்கள் செய்து பாடியில் தகடு அடித்துப் பெயிண்ட் அடித்துக் கொடுக்கவும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 19–1–1972-ஆம் தேதி மாலை 3-30 மணிக்கும் அதற்கு முன்பும் நகராட்சி ஆணையர் அவர்களாலும் அவர்கள் அதிகாரம் பெற்றவர்களாலும் பெறப்படும். ஸ்பேர் சாமான்கள் சப்ளை செய்வதற்கும், ரிப்பேர் வேலைகளுக்கும் பெயிண்ட் அடிப்பதற்கும் ஆகும் கூலிக்குத்தனித்தனியே ஒப்பந்தங்கள் கொடுக்கலாம். ஒப்பந்தம் அனுப்பும் உறைமேல் ''டிராக்டருக்குப் பழுது பார்க்கும் வேலைக்கு'' என்ற விவரம் குறிப்பிடவேண்டும். மேலும் அத்துடன் ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) கட்டுத் தொகை நகராட்சி கஜானாவில் கட்டி அதன் அத்தாட்சியுடன் அனுப்பவேண்டும். ஒப்பந்தங்கள் 19—1—1972-ஆம் தேதியில் மாலை 4–00 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிக்கப்படும். நகராட்சி ஆணையர் ஒப்பந்தங்களைக் காரணமன்னியில் ஒப்புக்கொள்ளவோ நிராகரிக்கவோ செய்யலாம். வண்டிகளுக்குச் செய்ய வேண்டிய வேலை விவரங்களையோ தேவையான சாமான்கள் விவரங்களையோ நகரசபை அலுவலக நேரத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

டி. எஸ். சுப்பையா, பி. ஏ.
ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி.

16–12–1971.

(த. 45)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்கீழ்க் குறிப்பிட்டவேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம்; பாளையங்கோட்டை, அவர்களால் 28–1–1972 மாலை 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர் : ஆத்தங்கரை கிராமத்தருகில் வைப்பாறு குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்: மொத்தத் தொகை.
கட்டுத் தொகை : ரூ. 17,500.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 20.
விற்பனை வரி : ரூ. 0.70
வேலை முடிக்கவேண்டியகாலம். 18 மாதங்கள்.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது) எந்தக், கருவூலத்திலாவது "P. W. III O. R. receipt" என்ற தலைப்பில், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, தூத்துக்குடிக் கோட்டம், தூத்துக்குடி அவர் தம் கணக்கில் விற்பனை வரி '' XII. S. T. (b) under the State Sales-tax Act, General Sales-Tax" என்ற தலைப்பிலும் செலுத்த வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் படிவம், மற்ற விவரங்களை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர் தம் அலுவலகத்தில் 10–1–1972 முதல் 23–1–1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில், ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலை, விற்பனை வரி செலுத்தப்பட்ட செல்லுச் சீட்டை மேலாளர் அவர்களிடம் தபால் மூலமாகவோ நேராகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மனுக்கள் பெறப்படும் தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டாது.

4. மற்ற விவரங்கள், இந்த அலுவலகத்தில், எல்லா வேலை நாட்களிலும் அலுவல் நேரங்களில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.
திருநெல்வேலி,
கன்னியாகுமரி வட்டம்.

(த. 41)

ஒப்பந்தப் புள்ளி

மதுரை மருத்துவக் கல்லூரி

மதுரை மருத்துவக் கல்லூரி எரிவாயு உற்பத்திப் பகுதிக்கு விறகு கொடுப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி, கல்லூரி முதல்வரால் 20—1—1972 தேதி பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இதன் விவரம் :

நன்ருகக் காய்ந்து, உடைக்கப்பட்டு 18 அங்குலம் நீளத்திற்கு வெட்டப்பட்டு எரிவாயு உற்பத்திக் கருவிக்கு உதவும் வகையில் பலஜாதி காட்டு விறகு கொடுத்தல்.

ஒப்பந்தப் புள்ளிக் காலம்:— 1—4—1972 முதல் 31–3–1973 வரை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 5-00. விற்பனை வரி ரூ. 0·18. மற்ற விவரங்கள் முதல்வர் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் எஸ். ஏ. கபீர்,
முதல்வர்.

(த.56)

திருத்தம்

'தமிழரசு' 1—12—1971 இதழின் 76-ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள 'தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை ஒப்பந்தப் புள்ளி' விளம்பரத்தில் விற்பனை வரி மூன்று சதவிகிதம் என்றிருப்பதற்குப் பதிலாக 3½ சதவிகிதம் என்றும், 'விற்பனை வரி....XXII' என்றிருப்பதற்குப் பதிலாக 'விற்பனை வரி..XII' என்றும் திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வீராணம் திட்டம்

வேலையின் பெயர்:—அழுத்தப்பட்ட காங்ரீட் குழாய்களைத் தென் ஆர்க்காட்டிலுள்ள வெல்லாறு மேலாகத் தூக்கிப்பிடிக்க அழுத்தப்பட்ட காங்ரீட்டினுல் ஒரு பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காக, பொதுப் பணித்துறை அல்லது மற்ற அரசுத்துறைகள் பெரிய நிறுவனங்களில்பதிவுசெய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், வீராணம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில், 19—1—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வர வேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத்தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 10,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10; விற்பனை வரி ரூ. 0·37.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்—10 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை "III. Suspense-G. Remittance-(iii)Other Remittances-TWAD Board Funds" " என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், வடக்கு அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5, அவர்தம் அலுவலகத்தில் 3–1–1972 முதல் 17–1–1972 வரை தொகை செலுத்திய செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

தனித் தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. 37)

அரசினர் பொது மருத்துவ மனை

1972–73-ஆம் ஆண்டுக்காகக் கீழ்க்கண்டவைகளுக்கான ஒப்பந்தம் குறித்து, டீன், அரசினர் பொது மருத்துவமனை, சென்னை-3, அவர்களால் 1972 ஜனவரி 3-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 2 மணி வரை மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. மருத்துவமனையின் 'கேஸ்' இயந்திரத்தில் (Coal tar குவியல்களை அப்புறப்படுத்தல்.
2. கயிறு, பஞ்சு மெத்தைகள், தலையணைகள் செய்தல்.
3. தங்காத நோயாளிகள் (அவுட் பேஷன்ட்) பிரிவின் சைக்கிள் ஸ்டாண்டு குத்தகை.

ஒப்பந்த நிபந்தனைகள், பத்திரங்கள் படிவங்கள் முதலியவைகளைப் பெற, இந்திய ரிசர்வ் பாங்கியிலோ, இந்திய ஸ்டேட் பாங்கு கிளையிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ "XXIII Medical II Director of Medical Education J miscellaneous" என்ற தலைப்பில் ரூ. 5 செலுத்திச் சலானை உடன் வைத்து டீன் அவர்களின் அலுவலகத்துக்கு மனுச்செய்து பெறலாம். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

அரசினர் பொது மருத்துவமனை,
சென்னை-3,
15–12–1971.

எம். நடராஜன்,
டீன்.

(த. 42)

பழைய சாக்குகள் விற்பனை

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட இடங்களிலுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பழைய சாக்குகள் விற்பனை செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறைகளில், மாவட்டவருவாய்த் துறை அலுவலர், தஞ்சாவூர் என்ற விலாசமிட்டு 8–2–1972 பகல் 1-00 முடிய வரவேற்கப்படுகிறது. அவைகள் அதே நாளில் மாலை 3-00 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்த விதி முறைகள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள தாலூகா விநியோக அலுவலர் அலுவலகங்களிலும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

அட்டவணை.

1. கோபால் செட்டியார் ரைஸ்மில், சாக்கோட்டை	3,770
2. கோபால் செட்டியார் ரைஸ்மில், பேரளம்.	22,750
3. கோபால் செட்டியார் ரைஸ்மில் மருங்கூர்.	6,200
4. மத்திய சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர்	3,500
5. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு, தஞ்சாவூர்.	1,492
6. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு, மாயூரம்.	5,529

மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்,
தஞ்சாவூர்.

(த. 25)

ஏல விற்பனை

கால்நடை பராமரிப்புத் துறை

கீழ்க்கண்ட விவரப்படி அபிசேகப்பட்டியிலுள்ள 17 மாடுகள் திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 10—1—1972 காலை 10-00 மணியளவில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். தேவைப்பட்டால் மறு நாளும் தொடர்ந்து ஏலம் விடப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் ரூ. 50 முன் பணமாகக் கட்ட வேண்டும். கால்நடைகளைப் பண்ணை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

1. முர்ரா எருமை	1
2. முர்ரா எருமைக் கிடாரி.	2
3. கிர் காளைகள்	2
4. கிர் காளைக் கன்று.	2
5. முர்ரா காளை ..	3
6. வேலை மாடுகள் ..	6
7. முர்ரா காளைக்கன்று	1
	17

கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப்
பண்ணை, திருநெல்வேலி.

(த-54)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

செங்கற்பட்டு தெற்குக்கோட்டம்
செங்கற்பட்டு.

1972–73-ஆம் வருடாந்திர சாலை பராமரிப்பு வேலைக்கான ஒப்பந்த அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), செங்கற்பட்டு தெற்குக் கோட்டம், செங்கற்பட்டு அவர்களால் 1972–73-ஆம் ஆண்டு அரசாங்க சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள், எண் 12/13, வரதாரெட்டித் தெரு, வேதாசலம் நகரில் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 19—1—1972-ஆம் தேதி (அலுவலகக் கடிகாரப்படி) பிற்பகல் 2-00 மணி (இரண்டு மணி) வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் அன்று மாலை 2-05 மணிக்கு (இரண்டு மணி ஐந்து நிமிடம்) ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள் முதலியன மேற்படியார் அலுவலக மேலாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்குமான ஒப்பந்தப் பத்திரங்களுக்கு ரூ. 3·11 (ரூபாய் மூன்றும் காசு பதினொன்று மட்டும்) விற்பனை வரி உட்பட செலுத்தி (இத் தொகை எக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது) 10—1—1972-ஆம் தேதி முதல் 18—1—1972-ஆம் தேதி வரை அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

முன் வைப்புத் தொகையை செங்கற்பட்டு கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அவர்களின் பெயருக்கு "வருவாய் வைப்புத் தொகை" என்னும் தலைப்பில் இக்கோட்ட எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். செல்லுச் சீட்டு இன்றி வரும் ஒப்பந்தப் பத்திரங்கள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் உண்டான வேலை விவரங்கள் வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 10—1—1972 லிருந்து விளம்பரம் செய்யப்படும்.

அ. வெங்கட்ட ரங்கராஜு,
கோட்டப் பொறியாளர்
(நெ.கி.பொ.ப.),
செங்கற்பட்டுதெற்குக்கோட்டம்,

18—12—1971

(த.55)

ஒப்பந்தப் புள்ளி

கோட்டப் பொறியாளர் அலுவலகம்
(நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை)
சைதாப்பேட்டை, சென்னை-15

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் சோதனை செய்யப்பட்ட பல அளவுகளில் M. S. ராடுகள் ஜனவரி 72 முதல் மார்ச் 72 வரை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, சைதாப்பேட்டை, சென்னை-15 அவர்களால் 5—1—1972 மாலை 3-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை எழுத்து மூலம் வேண்டி விற்பனை வரி உட்பட ரூ. 5·18 (ஐந்து ரூபாய் பதினெட்டு காசு மட்டும்) செலுத்தி சைதாப்பேட்டைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை) 29—12—1971 முதல் 4—1—1972 முடிய அலுவலக நேரங்களில் (காலை 10-30 மணி முதல் மாலை 5-00 மணி வரை) ஒப்பந்த நிபந்தனை விவரங்களைப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்காக செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

த. மோகன்,
கோட்டப் பொறியாளர்
(நெ.கி.ப.).

(த. 52)

தொழில் வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

(1) மதுரை தொழில் பேட்டையில் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) உள்ளதாக, தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள் மொத்தம் 3 பிளாக்குகள் கட்டுதல். இந்த வேலைக்கு கட்டுத் தொகை ரூ.3,300. இந்த வேலையை முடிக்க வேண்டிய காலம் 8 மாதங்கள்.

(2) மதுரை தொழில் பேட்டையில் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) உள்ளதாக தொழிலாளர்களுக்கான குடியிருப்புகள் இரண்டு பிளாக்குகள் கட்டுதல். இந்த வேலைக்கு கட்டுத் தொகை ரூ. 2,200. இந்த வேலையை முடிக்க வேண்டிய காலம் 6 மாதங்கள்.

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்தப் படிவம் : மொத்தத்தொகை.

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 10·40.

இவ்விரண்டு வேலைகளிலும் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 24–12–1971.

இந்த இரண்டு வேலைகளுக்கும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறக் கடைசித் தேதி 11–1–1972.

ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அலுவலகம், மதுரை கோட்டம், தொழில்பேட்டை மதுரையில் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து அலுவலக நேரத்தில் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூ திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Ind tries—Other receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாள (கட்டுமானம்) மதுரைக் கோட்டம், தொழில் பேட்ட மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலோ, கா டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியி டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாக பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம் அவர்கள கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திர களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து, கட்டு தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசீய சேமிப்பு பத்திரங்களும் சம்மந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி பி மேத்யூ,
சென்னை-2. மேற்பார்வைப் பொறியாளர்.
கட்டுமானப் பகுதி.

(த. 44)

ஈரோடு நகராட்சி

ஈரோடு நகராட்சி காவேரி ரோடு உயர்நிலைப்பள்ளி என்.சி.சி. அறை, உடற்பயிற்சி ஆசிரியர் அறை மற்றும் தச்சுத் தொழிற்கூடம் ஆகியவற்றிற்கு மின் ஒயரிங் செய்து மின் விளக்குகள் அமைத்திட 18–1–1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி 'முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்று கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட் சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

13-12-1971.

(த. 40)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசீய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை வட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 12–1–1972-ஆம் தேதி அன்று பிற்பகல் 3-30 மணிவரையில்(அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை	ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம்.
	ரூ.	
1 தொண்டி—சுந்தரபாண்டியன்பட்டிணம் சாலை கி.மீ. 3/2 (மைல் 1/7) பாலம் கட்டுதல்.	9,095	கோட்டப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை) பிரிவு எண் 1 திருச்சி.
2 தொண்டி-சுந்தரபாண்டியன் சாலை கி.மீ. 1/8 (மைல் 1/1) பாலம் கட்டுதல்.	8,080	ஷெடி

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உள்பட ரூ 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் தேசீய நெடுஞ்சாலை திருச்சிக் கோட்ட எண்-1, திருச்சி-1 விலாசத்திலிருந்து 5–1–1972 முதல் 11–1–1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசீய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பணம் வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை),
மதுரை-2.

(த.51)

போக்குவரத்துத் துறை

அண்ணா சாலை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களால், வரும் மூன்று வருடத்திற்குக் கீழ்க்கண்ட கடைகள் குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் 20–1–1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

பெரம்பூர் பேருந்து நிலையம்—

1. 1-வது நம்பர் ஸ்டால் ..	தேநீர் விற்பது.
2. 2-வது நம்பர் ஸ்டால் ..	குளிர் பானங்கள் விற்பது, வெற்றிலை, பாக்கு விற்பது.
3. 3-வது நம்பர் ஸ்டால் ..	பழங்கள், காய்கறிகள் விற்பது.

அயனாவரம் பேருந்து நிலையம்—

1. 1-வது நம்பர் ஸ்டால் ..	தேநீர் விற்பது.
2. 2-வது நம்பர் ஸ்டால் ..	பழங்கள், காய்கறிகள் விற்பது.
3. 3-வது நம்பர் ஸ்டால் ..	குளிர் பானங்கள், வெற்றிலை, பாக்கு விற்பது.
4. 4-வது நம்பர் ஸ்டால் ..	புத்தகங்கள் விற்பது.

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங்கள் 20–1–1972 மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித்தரமாட்டாது.

இயக்குநர்.

(த.49)

பொதுப் பணித் துறை

ஆர்சி. 10956/71/டி5. நாள் 14–12–71.

வேலையின் பெயர் :—

(1) ஓசூர் அரசினர் மருத்துவமனையில் 25 படுக்கைகள் வார்டு கட்டுதல்.

(2) ஓசூர் அரசினர் மருத்துவமனையில் அவுட்பேஷன்ட் பிளாக் கட்டுதல்.

(3) ஓசூர் அரசினர் மருத்துமனையில் மகப்பேறு-அறுவைச் சிகிச்சை பிளாக் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலைகளை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, சேலம்-தர்மபுரி வட்டம், சேலம்-4 அவர்களால் 24–1–72 மாலை 3-00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

	வேலை (1)	வேலை (2)	வேலை (3)
1 ஒப்பந்த வடிவம்.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
	ரூ.	ரூ.	ரூ.
2 கட்டுத் தொகை (சலான் வடிவம் அல்லது தேசீய சேமிப்புப் பத்திரம், ஷெட்யூல் பாங்குகளில் கால் ரசீது டிபாசிட் அல்லது டிமாண்டு டிராப்ட், மாநில அரசுக் கடன் பத்திரங்கள், மின்சார வாரியக் கடன் பத்திரங்கள் வடிவில் ஏற்கப்படும்).	2,000	4,000	3,500
3 ஒப்பந்தப் பத்திரங்கள்விலை (கருவூலத்தில் அல்லது இந்திய ரிசர்வ் பாங்கில் "P. W. Remittances III other remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் பொ. ப. து. கட்டடக் கோட்டம், சேலம்-5 கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.	20·00	20·00	20·00
4 விற்பனைவரி (XII Sales Tax (d) Miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.	0·70	0·70	0·70
5 வேலையை முடிக்க வேண்டிய காலம்.	6 மாதங்கள்.	9 மாதங்கள்.	8 மாதங்கள்.
6 ஒப்பந்தப் பத்திரங்கள் விலைக்குக் கிடைக்கும் தேதிகள் (மேற்பார்வைப் பொறியாளர், பொப.து. சேலம்-தர்மபுரி வட்டம், சேலம்-4 அவர்கள் அலுவலகத்தில்).	3–1–72 லிருந்து 21–1–72 வரை.	3–1–72 லிருந்து 21–1–72 வரை.	3–1–72 லிருந்து 21–1–72 வரை.

மாநில அரசுக் கடன் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்கள் ஆகியவையும் மதிப்பில் 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

கால் ரசீது டெபாசிட்டுகள், பிக்சட் டெபாசிட் ரசீதுகள் ஆகியன கட்டுத் தொகைக்காக, வசூலாவதைப் பொறுத்து ஏற்கப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 43)

திருப்பூர் நகராட்சி

நகராட்சி செவிலித்தாய், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள் ஆகியவர்களுக்கு 1971–72-ஆம் ஆண்டிற்குச் சீருடைகள் வழங்குவதற்கான ஜவுளி ரகங்களுக்கு மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 17–1–'71-ஆம் தேதி மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் அல்லது அவர் அதிகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் பொதுச் சுகாதாரப் பிரிவில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆர். சீனிவாசன்,
ஆணையர்

(த.23)

பொதுப்பணித் துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்:—தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் (T. B Sanatorium) பணிபுரியும் செவிலியர்களுக்காகக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும். மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 11–1–1972 மாலை 3·00 மணிவரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·15 மணிக்கு அங்கே வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிக்காரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் எல்லா அலுவலக நாட்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

1. ஒப்பந்த வடிவம் ... மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை ... ... ரூ. 7,500
3. வேலையை முடிக்க வேண்டிய காலம். .. ஆறு மாதங்கள்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. .. ரூ. 40 (நாற்பது) விற்பனை வரி 3 சதவீதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை திருப்பித் தரமாட்டாது. P.W.D. Remittances III Other Remittances என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடக் கோட்ட எண் (1), சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் கருவூலத்திலோ, ரிசர்வ் பாங்கியிலோ கட்ட வேண்டும். விற்பனை வரி (3 சத வீதம்) அதே சலானில் "XII Sales Tax (b) Receipt under States Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பில்கருவூலத்திலோ ரிசர்வ் பாங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்காக மனுக்கள் மேற்கண்ட சலான்களில் அசலுடன் அனுப்பப்படவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை சென்னை-செங்கற்பட்டு வட்டம் அவர்கள் எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்கும் உரிமை பெற்றுள்ளார். மற்ற விவரங்கள் மேற்கண்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை.,
சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5.

(த.50)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12–1–1972 மாலை 3 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத்தொகை.
சென்னை, திருச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் மைல் (106–8-ல்) கி.மீ. 173/8-ல் பாலம் கட்டுதல்.	3,930

ஒப்பந்தப் புள்ளிகள் 12–1–1-72 அன்றே மாலை 3·15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்காக நமூனைக்கள் வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II கிண்டி அலுவலகத்தில் 5–1–1972 முதல் 11–1–1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும், திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் II கிண்டி, சென்னை-25 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தினின்றும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் II , கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப் புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 57)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர் : மதுரை கப்பலூர், அபிவிருத்தி செய்யப்பட்ட மனை எஸ்டேட்டில் Tansi Furniture and Engineering Workshopக்கு அலுவலகக் கட்டடம் தொழில் கூடக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளில் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 11—1—1972 அன்று மாலை 3·00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1	ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2	கட்டுத் தொகை	ரூபாய் 3,000 (ரூபாய் மூவாயிரம் மாத்திரம்).
3	மாதிரி வரைப்படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. ..	ரூபாய் 10·40
4	வேலை முடிக்க வேண்டிய காலம். ...	6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), மதுரைக் கோட்டம் தொழில்பேட்டை, மதுரை அவர்களது அலுவலகத்தில் 28—12—1971 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்படத் தொகையான ரூபாய் 10·40ஐ எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " XXIX. Industries–other receipts என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம் தொழில் பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலோ, 'கால்டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மதுரைக் கோட்டம் மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீயச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாகப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூடக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுப் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

சென்னை-2.

(த. 71)

வேளாண்மைத்துறை ஏலம்

திருவாரூர் வேளாண்மைக் கருவிகள் பணிமனை பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17–1–1972 மாலை 3 மணிக்கு நிலம் சமன்படுத்தும் இயந்திரங்களும், அதன் புதிய, மற்றும் உதிரி உறுப்புகளும் (TD 14, TD. 9, TD 6, T. 6 மற்றும் இயந்திரக் கலப்பையின் உதிரி உறுப்புகளும் (Bulldozer Spare Parts) கலப்பையின் உறுப்புகளும் (Tractor Spare Parts) பொது ஏலத்தில் விடப்படும். மேலும் பழைய தள்ளுபடி செய்யப்பட்ட இயந்திரங்களின் உதிரிப் பாகங்களும், அதே தினத்தன்று காலை 10 மணிக்கு ஏலம் விடப்படும்.

மேற்கூறிய புதிய உதிரி உறுப்புகளின் அட்டவணையையும், ஏலம் பற்றிய குறிப்புக்களும், மேற்படி அலுவலகத்தில் 1–1–1972 முதல் 11–1–1972 வரை ரூபா 1.04 (ரூபா ஒன்றும் 4 காசு மட்டும்) காசோலை மூலமாகவோ அல்லது 'டிமாண்ட் டிராப்ட்' மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் (இந்த ரூபா திருப்பித் தர இயலாது). மேற்கூறிய இனை உறுப்புகளை எல்லா அலுவலக வேலை நேரத்திலும் பார்வையிடலாம்.

அரசின் நலம் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக்கவோ, பொதுக் கண்காணிப்பாளருக்கு உரிமை உண்டு.

பொதுக் கண்காணிப்பாளர்,
அரசு வேளாண்மைக் கருவிகள்
தொழிற்கூடம்,
திருவாரூர்.

(த-58)

ஏல விளம்பரம்

விழுப்புரம் நகராட்சி

தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாதுரை நகராட்சிப் பேருந்து நிலையத்தில் புதியதாகக் கட்டியுள்ள சிற்றுண்டிச் சாலையை 25–1–1972 முதல் 31–3–1973 வரை பயன்படுத்திக் கொள்ளும் உரிமையை 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கும், தேவைப்பட்டால் அதற்குப் பின் ஒத்தி வைக்கப்படும் தேதிகளிலும், நகர்மன்ற அலுவலகத்தில் நகராட்சி ஆணையரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் விழுப்புரம் நகர்மன்றம் அல்லது ஒப்பந்தக் குழுவின் உறுதிக்கு உட்பட்டது. ஏலம் கேட்க விழைவோர் முதலில் பொறுப்புத் தொகை ரூ. 200 செலுத்த வேண்டும். ஏல உறுதி செய்த பின்னர் கூடுதல் பொறுப்புத் தொகையாக ரூ. 100 செலுத்த வேண்டும். மற்ற சிறப்பு நிபந்தனைகள் சம்பந்தமாக அலுவலகத்தில் நேரிலோ கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

விழுப்புரம் நகராட்சி,
17–12–1971.

(த. 39)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெடின் யூனிட், தமிழ்நாடு அரசின் நிறுவனம்)

நாளொன்றுக்குச் சுமார் 50 டன் கருங்கற்களை கலனிவாசல் கிராமம், காரைக்குடி துணைத் தாலுகாவிலிருந்து உடைத்து, நமது தொழிற்சாலை, ஆலங்குளத்திற்கு ஜனவரி, 1972 முதல் ஓராண்டுக் காலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு 21—1—1972 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

நிபந்தனைகள், ஒப்பந்தப் புள்ளிப் படிவம், இதர விவரங்களை பொதுமேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல் (வழி) ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம் அவர்களிடம் ரூபாய் 10.35 மட்டும் 21—12—1971 முதல் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். (இந்தத் தொகைத் திருப்பித் தரப்பட மாட்டாது).

பொது மேலாளர்.

(த. 32)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் கோட்டம்

கோயம்புத்தூர் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் (டிவிஷனல் இன்ஜினியர்) அவர்களால் 1972–73-ஆம் வருடத்திய அரசாங்கச்சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-15 மணிக்கு கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோயம்புத்தூர் நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3-11 வீதம் (விற்பனை வரி உட்பட) கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 10—1—1972 முதல் 20—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. 21—1—72 ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தினத்தன்று எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கொடுக்கப் படமாட்டாது. முன் பண வைப்புத் தொகையைக் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளரின் பெயரில் அரசினர் கருவூலத்தில் " வருவாய் வைப்புத் தொகை " க்கு (ரெவின்யூ டெபாசிட்) செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை (செலவான) அல்லது கோடிட்ட (கிராஸ்டு) பேங்க் டிராப்ட் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். மேற்படி முன்பண வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரி, விற்பனை வரி செலுத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். பாங்க் காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமேயானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன் பணவைப்புத் தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய நிபந்தனைகள் முதலிய முழு விவரங்கள் அடங்கிய விளம்பர அறிக்கையைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில், மற்றும் இக்கோட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் மற்றும் பிரிவு அலுவலர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கு. வெங்கட்ராம்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப), கோவை.

கோயம்புத்தூர்,
1—12—1971

(த. 53)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

ஆர்.சி. 38700/71-டி5. நாள் : 13—12—1971.

வேலையின் பெயர்:—சேலம் அரசினர் கல்லூரியில் பட்டமேல் படிப்புக்குக் கூடுதல் வகுப்பு அறை கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப்பொறியாளர், பொதுப்பணித் துறை, சேலம். தர்மபுரி வட்டம் சேலம்-4 அவர்களால் 17—1—1972 மாலை 3·00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதார்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2 கட்டுத்தொகை (சலான் வடிவில் (அ) தேசியச் சேமிப்புப் பத்திரம் ஷெட்யூல் பாங்கின் டெபாசிட், கால் ரசீது டிராப்டுகள், மாநில அரசுக் கடன் பத்திரங்கள் (அ) தமிழ் நாடு மின்வாரியக் கடன் பத்திரங்கள் ஏற்கப்படும்.	ரூ. 4,000.
3 ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (இதனைக் கருவூலத்தில் (அ) இந்திய ரிசர்வ் பாங்கில் "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம் சேலம்-5 அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்).	ரூ. 20·00
4 விற்பனை வரி (இதனை XII Sales Tax (d) Miscellaneous என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்).	ரூ. 0·70 (எழுபது காசுகள் மட்டும்.)
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	8 மாதங்கள்.
ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாட்கள் (கிடைக்குமிடம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித் துறை, சேலம்—தர்மபுரி வட்டம், சேலம்-4).	29—12—1971லிருந்து 13—1—1972 வரை.

மாநில அரசுக் கடன் பத்திரங்கள் தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்களும், மதிப்பில் 25 சதவிகிதம் கழித்து விற்கப்படும். கால் ரசீது டிபாசிட்டுகள், பிக்சட் டிபாசிட்டுகள் ஆகியவை வசூலாவதைப் பொறுத்துக் கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

ஆர். ராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, சேலம்—தர்மபுரி வட்டம்,
சேலம்—4.

(த. 67)

ஏலம்

செங்கோட்டை நகராட்சி

1972–73-ஆம் ஆண்டுக்கு செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான சந்தை, சந்தையின் முன் பக்கமுள்ள கடைகள், கறிக் கடைகள், (Mutton Stalls) ஆடடிக்கும் சாலை, பேருந்து நிலைய சிற்றுண்டி விடுதி, ஸ்டால்கள், மற்றும் பலன்தரும் மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமை, தெருக்களில் விழும் பன்றி எருவைப் பொருக்கி எடுக்கும் உரிமை, புல் அறுக்கும் உரிமை, பழைய கம்போஸ்டு டிப்போ நிலத்தில் பயிரிடும் உரிமை ஆகியவைகளை 27–1–1972 வியாழக்கிழமை காலை 10-00 மணி முதல் தொடர்ந்து செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் வைத்து ஆணையரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் ஏல விளம்பரத்தில் கண்டுள்ள கட்டுத் தொகையைக் கட்டி செல்வ நிலைச் சான்றிதழ் தாக்கல் செய்து ஏலம் கேட்க வேண்டும். மற்ற விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

அத்துடன் நகராட்சிக்கு 1972–73-ஆம் வருடத்திற்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள், கன்சர்வன்சி வண்டிகளின் டியூப் வல்கனைசிங், வாகன வரித் தகடுகள், டிராக்டருக்குத் தேவையான டீசல், என்ஜின் ஆயில், பொதுச் சுகாதாரப் பிரிவிற்குத் தேவையான சுண்ணும்பு புத்தூள், மண்வெட்டி, பிக்காஸ், சாக்கடை அள்ளும் கரண்டி, குப்பைக் கூடைகள், லைப்பாய் சோப்புகள், உணவு கலப்பதற்கு ஜாதிக்காய் பெட்டி, பாட்டில்கள், சுகாதார வண்டிகள் இழுக்கும் மாடுகள் சப்ளை செய்யவும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 27-1-1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3-00 மணி வரை ஆணையரால் பெற்றுக்கொண்டு அன்று மாலை 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஏனைய விவரங்களை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ஆணையர்,
செங்கோட்டை நகராட்சி.

18–12–1971.

(த. 72)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972-ஆம் தேதி மாலை 3 மணிவரை நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972-ஆம் தேதி மாலை 3·30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான ஷெட்யூல் பாரங்கள் நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணித் துறைப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஷெட்யூல் பாரம் விலை.	முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ. காசு.	
1. கோவையில் ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் அலுவலகமும் கட்டுதல்.	1,130	10·35	6 மாதங்கள்.
2. கோவையில் இராமலிங்கம் காலனி ஆரம்பப்பள்ளியில் முதல் மாடிக் கட்டடம் கட்டுதல்.	1,400	10·35	ஷை
3. கோவை, செல்வபுரத்தில் நகராட்சிக்குச் சொந்தமான இடம். டி.எஸ். எண் 483/3-ல் சுற்றிலும் மதில் சுவர் கட்டுதல்.	763	5·18	3 மாதங்கள்.

கி. அப்பாதுரைநாராயணன்,
ஆணையர்.

நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித் துறை

சிவகங்கைக் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் சிவகங்கை நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அவர்கள் சிவகங்கைக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர் சாலைகளில் 1972-73-ஆம் வருடப் பராமரிப்பு மற்றும் தனி பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் சிவகங்கைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு 19—1—1972-ஆம் நாள் (புதன்கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அன்று பிற்பகல் 3-15 மணிக்கு ஒப்பந்தங்கள், ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் முன்னிலையில் கோட்டப் பொறியாளரால் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும் குறிப்பிட்ட நமூனக்களும் நிபந்தனைகளும் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடமிருந்து 10—1—1972 தேதி முதல் 18—1—1972 (இரண்டு நாட்களும் உட்பட) எல்லா அலுவல நேரங்களிலும் ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் சதவீதம் ரூ. 3.11, பட்டியல் 5.18 விற்பனை வரி உட்பட செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தர மாட்டாது. 18—1—1972-க்குப் பின் எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனை செய்யப்பட மாட்டாது.

முன் வைப்புத் தொகைக்கான கருவூல ரசீதுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், கால தாமதமாக வரும் ஒப்பந்தங்களும் கோட்டப் பொறியாளர் பெயருக்கு மாற்றப்படா. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் இணைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். அப்படி மாற்றப்பட்ட பத்திரங்களைக் கோட்ட அலுவலகத் தலைமை எழுத்தாளரிடம் கொடுத்து, அதற்கான ரசீதைப் பெற்று, அந்த ரசீதை மட்டும் ஒப்பந்தங்களுடன், வேலையின் பெயர் விவரத்துடன் இணைக்க வேண்டும். இது தவிர, முன் வைப்புத் தொகைக்கான உத்தரவாதம் இணைக்கப்பட்டால், ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் பெற்று அத்துடன் இணைக்கப்படல் வேண்டும். இவ்விதம் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரமும் இணைக்கப்படாத வங்கி உத்திரவாத ரசீதுகள் இணைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

எஸ். நடராஜன்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.)

(த.64)

ஏல விளம்பரம்

இராசிபுரம் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு அடியிற்கண்ட குத்தகைகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 19—1—1972-ஆம் தேதி புதன்கிழமை மாலை 3·00 மணிக்கு இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

குத்தகை விவரமும் காலமும்.		கட்டுத் தொகை. ரூ.
1. செவ்வாய்க்கிழமை வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் பாத்யதை.	1—4—1972 முதல் 31—3—1973 முடிய.	500
2. தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் பாத்யதை.	டிை	500
3. பேருந்து வண்டி நிலையமும் (பஸ் ஸ்டாண்டும்) குதிரை ஜட்கா மாட்டு வண்டிப் பட்டையும் சேர்ந்து.	டிை	300
4. கால்நடை வெட்டுமிடம் (ஸ்லாட்டர் ஹவுஸ்).	டிை	200
5. நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களைத் தங்கள் செலவில் சேகரம் செய்து எடுத்துக்கொள்ளும் பாத்யதை.	டிை	500
6. தினசரி சந்தையிலுள்ள 16 கசாப்பு கடைகள்.	டிை	200

II ஒப்பந்தப் புள்ளி

இராசிபுரம் நகராட்சிக்கு 1972–73-ஆம் ஆண்டிற்கு (1—4—1972 முதல் 31—3—1973 முடிய) கீழே குறிப்பிட்டவைகள் விநியோகம் செய்வதற்காக 20–1–1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4·00 மணிவரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகரவை ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—1972-ஆம் தேதி மாலை 4·30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன் திறக்கப்படும்.

இதர விவரங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1 நகராட்சி குப்பை வண்டிகளுக்கு மாடுகள் விநியோகம் செய்ய.	100·00
2 நகராட்சிக்கு வேண்டியவைகளை அச்சிடுதல்.	25·00
3 எழுது பொருள்கள் முதலிய சாமான்கள் விநியோகம் செய்ய.	25·00
4 கூடை, விளக்குமாறு, சுண்ணும்பு விநியோகம் செய்ய.	25·00

நகராட்சி அலுவலகம்,
இராசிபுரம்.
17—12—1971
(த. 65)

வே. பாலசுப்பிரமணியன்,
ஆணையர்.

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி

சத்திரம் தெரு பிரசவ ஆஸ்பத்திரிக்கு 4 எண்ணம் 4' 0'' சீலிங் பேன் சப்ளை செய்ய விலைப் புள்ளிகள் 17–1–1972 மாலை 4 மணி வரை ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு உடைக்கப்படும். நகரமன்றத்திற்கு ஒரு விலைப் புள்ளியையோ அல்லது எல்லா விலைப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்கு பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

கட்டுத் தொகை ரூ. 60.

கே. என் கிருஷ்ணமூர்த்தி,
பி.ஏ.,பி.இ..
தூத்துக்குடி. பொறியர்.
(த.62)

ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 17—1—1972 மாலை 4 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4·30 மணிக்கு உடைக்கப்படும். நகரமன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

வேலையின் விவரம்.	கட்டுத் தொகை ரூ.
1 பெரியகாட்டன் ரோட்டிற்கு வடபகுதியில் உள்ள கான்களைப் பழுது பார்க்க.	450
2 பெரியகாட்டன் ரோட்டிற்கு தென்பகுதியில் உள்ள கான்களைப் பழுது பார்க்க.	315
3 நகரில் குறுக்குக் கான்களையும் மடைகளையும் பழுதுபார்க்க.	250

தூத்துக்குடி. **கே. என். கிருஷ்ணமூர்த்தி,** பி.ஏ.பி.இ.
பொறியர்.
(த. 61)

அரக்கோணம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கோணம் நகராட்சி ஆணையரால் 12—1—1972-ஆம் தேதி மாலை 4 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அன்று மாலை 4·15 மணிக்கு அப்பொது வந்துள்ளவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களும், முழு விவரங்களையும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் 11—1—1972-ஆம் தேதிவரை மனுசெய்து ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 5·00 (விற்பனை வரி நீங்கலாக) நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	மதிப்பீட்டுத் தொகை. ரூ.	முதல் கட்டுத் தொகை. ரூ.
1 காந்திரோடுலிருந்து வட தர்மராஜா கோவில் தெரு வரை, சத்தியமூர்த்தி தெரு ராஜாஜி 1-வது தெரு வழியாக ராஜாஜி 2 மற்றும் 3 தெருக்களும் உட்பட தார் சமதளம் அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல், மற்றும் குறுக்குப் பாலங்களைப் பழுது பார்த்தல்.	51,000	1,275
2 காவனூர் ரோடிற்கு கம்புருட்டி தெரு சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லை வரை தார் சமதளம் அமைத்தல், தாங்குசுவர் கட்டுதல், மற்றும்குறுக்குப் பாலங்களுக்கு மராமத்து வேலைகள்.	51,000	1,275

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் மேற்கொண்டு 4-வது காலத்தில் குறிப்பிட்டுள்ள முதல் கட்டுத் தொகைக்குச் சமமான தொகையை மறுபடியும் செலுத்த வேண்டும்.

அரக்கோணம்,
18—12—1971.
(த. 63)

கா. ரா. குட்டியப்பன்,
நகராட்சி ஆணையர்.

பொது (செய்தி, மக்கள் தொடர்பு) துறை.

தமிழ்நாடு திரைப் படப் பிரிவில் ரூ. 350—15—500—20—600 சம்பள விகிதத்தில் வணிகக் கணக்கர் (Commercial Accountant) நியமனத்திற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. மனுதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் வணிக இயல் பட்டம் (Degree in Commerce) பெற்றவராகவும் 30 வயதுக்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். ஏதாவது வணிக நிறுவனம் ஒன்றில் திரைப்படத் தொழிலில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் வேண்டும். அரசுச் சார்பு நிறுவனத்தில் அல்லது அரசு வணிக நிறுவனத்தில், வணிகக் கணக்குப் பொறுப்பு வகித்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு. மனுக்கள் 25–1–1972-க்குள் கீழ்க்கண்டவருக்கு வந்து சேர வேண்டும்.

அரசுச் சார்புப் பணிகளில் அல்லது அரசு அலுவலகப் பணிகளில் உள்ளவர்கள் முறை வழி மூலம் மனுச் செய்யலாம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்பு,
பொது (செய்தி- மக்கள் தொடர்புத்) துறை, சென்னை-9.

(த.59)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

ஆர்.சி. எண் : டி1/45580/71-4, 16—12—1971.

வேலையின் பெயர்:—தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம், நாளபள்ளி கிராமத்துக்கு அருகில் காட்டு ஓடைக்குக் குறுக்கே குளம் அமைப்பு.

மேற்கண்ட வேலைக்காக, மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சேலம்—தர்மபுரி வட்டம், சேலம்-4 அவர்களால் 24—1—1972 மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்த வடிவம் .. — கே-2.
கட்டுத் தொகை .. .. ரூ. 6,900.
(சலான் வடிவில் அல்லது தேசியச் சேமிப்பு பத்திரமாக அல்லது ஷெடியூல் பாங்கின் டிபாசிட்கால் ரசீதாக அல்லது டிமாண்ட் டிராப்டாக ஏற்கப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் மின்சார வாரியக் கடன் பத்திரங்களும் ஏற்கப்படும்).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை .. ரூ. 15·00 (ரூபாய் பதினைந்து மட்டும்).

(கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ "P. W. Remittances III other Remittances" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, தர்மபுரி கோட்டம், தர்மபுரி அவர்கள் கணக்கில் செலுத்த வெண்டும்).

விற்பனை வரி .. .. .. ரூ. 0·53 (ஐம்பத்து மூன்று காசுகள்).

XII Sales Tax, miscellaneous என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் காலம். 13—1—1972லிருந்து 22—1—1972வரை.

பத்திரங்கள் கிடைக்கும் இடம். மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித் துறை, சேலம்—தர்மபுரி வட்டம், சேலம்-4.

(மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்சார வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் 25 சதவிகிதம் கழித்து ஏற்றுக் கொள்ளப்படும். கால் ரசிப்ட் டிபாசிட்டுகள், பிக்சட் டிபாசிட்டுகள் ஆகியவை வசூலாவதைப் பொறுத்து, கட்டுத்தொகைக்காக ஏற்கப்படும்).

ஆர். ராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை.

(த.74)

ஒப்பந்தப் புள்ளி

மன்னார்குடி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைகளுக்காக 5—1—1972-ஆம் தேதி மாலை 4·00 மணிவரை கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரி பெறலாம்.

வேலையின் விவரம்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
நகராட்சிரோடு வேலைகள், கட்டட வேலைகள், சில்லரை பராமரிப்பு வேலைகள் (மொத்தம் 16 வேலைகள்).	ரூ. 91,200	ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டில் 5 சத. விகிதம்.

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி.
15—12—1971.

கோ. முருகன், பி. ஏ.
ஆணையர்.

(த. 73)

தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம் :—அரசாங்கத் தடிமண்டி, பேட்டை.
தேதியும் நேரமும் :—10–1–1972 முற்பகல் 9.00.

அளவு :—ஏறத்தாழ 300 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்குப் பேட்டையிலுள்ள மண்டிச் சிறகு அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர் திருநெல்வேலி தென் பிரிவு.

(த. 48)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை
சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 12–1–1972 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி கிடைக்குமிடம்.
	ரூ.	
1. அழகியநத்தம் கிராமத்திற்கு அருகே பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் (தென்ஆர்க்காடு மாவட்டம்) (மறு அழைப்பு).	20,875	கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை), கடலூர்.

ஒப்பந்தங்கள் 12–1–1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள் வரை படங்கள், முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 51.75 செலுத்தி 27–12–1971 முதல் 11–1–1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைச் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை), கடலூர் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ்" வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

சென்னை-25,
12–12–1971.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம்.

(த.28)

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9–2–1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்	..	சாக்கோட்டையில் விதை பதனிடும் இரு கிடங்குகட்குக் கட்டடம் கட்டுதல்.
2,. ஒப்பந்த வகை	..	மொத்தத் தொகை.
3. பிணைப் பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப் படும்).		ரூ. 6,500.
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (கருவூலத்தில் பொ.ப செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர், அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்).		ரூ. 30.00.
5. விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.		ரூ. 1.05.
6. கால அளவு	.. ..	ஆறு மாதங்கள்.
7. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.		17–1–1972.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 29)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

தஞ்சாவூர் கோட்டம்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும், தஞ்சாவூர் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் சாலைகளில் 1972–73-ம் ஆண்டிற்கான ஒப்பந்தப் புள்ளிகள் அட்டவணைப் பட்டியல்களில் தஞ்சாவூர் கோட்டப் பொறியாளர் (நெ.கி. ப.து.) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2–00 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்த அறிவிப்புகள் அன்றைய தினமே பிற்பகல் 2–15 மணி அளவில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிட்டஅறிவிப்பு பட்டியல்களிலும் பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும் மேற்பட்ட விவரக் குறிப்புகளும் தஞ்சாவூர் நெடுஞ்சாலை கிராம பணித்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 10–1–1972 முதல் 18–1–1972 வரை (இரு நாட்கள் உள்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலில் அடக்க விலை விற்பனை வரி உட்பட ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும் காசு இருபது மட்டும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணம் முன்னிட்டும் திருப்பித்தர இயலாது. 19–1–1972-ம் தேதி ஒப்பந்தப் பட்டியல்கள் விற்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வேலைக்கான வேலை விவரங்கள் முன் வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும், இதன் அனைத்து உட்கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகத்திலும், இதன் அனைத்துப் பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகையில் 10–1–1972 முதல் விளம்பரம் செய்யப்படும். முன் வைப்புத் தொகை தஞ்சாவூர் நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித் துறை கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத் தவிர கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர் பெயருக்கு வாங்கப்பட்ட பன்னிரண்டு ஆண்டு தேசிய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் முன் வைப்புத் தொகைக்காக பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

அ. அண்ணாமலை,
கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப.து.,
தஞ்சாவூர்.

(த. 79)

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

கீழ்க்கண்ட வேலைக்கு 29–12–1971 அன்று வரை பெற்றுக் கொள்ளப்பட இருக்கும் இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 19–1–1972 அன்று மாலை 3 மணி வரை ஆளுநருக்காக அவர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் குறளகக் கட்டட நான்காவது மாடியில் உள்ள அவரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட அன்றே அவர்களால் 3–15-மணிக்குத் திறக்கப்படும்.

வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை
(1) பவானி குமாரபாளையம் புறச் சாலையில் காவிரியின் குறுக்கே பாலம் கட்டுதல்.	ரூ. 1,15,550.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம், அலுவலகத்தில் 21–12–1971 முதல் 18–1–1972 வரை பெற்றுக் கொள்ளலாம். மற்ற நிபந்தனைகளில் மாறுதல் இல்லை.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தேசிய நெடுஞ்சாலை வட்டம்.
சென்னை-1.

(த. 81)

வெற்றிமிகு புத்தாண்டின் விளக்கொளி பரவட்டும்!

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

உங்கள் புத்தாண்டை மேலும் ஒளிமயமாக்குங்கள்.

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ. 50,000
10 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ. 50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ. 50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ. 1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 14,00,000*

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-1-1972

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை
268 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

* 4 வரிசைகள் வெளியிடுவதற்கு உரியது

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

(தெற்கு கோட்டம்)

எண். எஸ். 7/6565/71 நாள்: 14—12—1971.

கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 6—1—1972 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் .. .. இந்திரா நகரில் குறைந்த வருமானப் பிரிவினருக்கான அடுக்கு வீடுகள் (Flats) டைப் டிசைன் 2-பி/70 படி (24 அடுக்கு வீடுகள்).

வேலையின் சுமார் மதிப்பு .. ரூ. 1,86,000.

ஒப்பந்த வடிவம்......மொத்தத் தொகை

கட்டுத் தொகை .. .. ரூ. 2,800.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை .. ரூ. 10·00 (திருப்பித்தரப் படாது). வி.வ.

ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் விவரங்களை நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் (தெற்கு) எல்லா அலுவல நாட்களிலும் காலை 10 மணியிலிருந்து மாலை 2 மணிவரை பெறலாம்.

எஸ். குமரேசன்,
நிருவாகப் பொறியளார் (தெற்கு).

(த. 66)

ஏல விளம்பரம்

இராசிபுரம் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கான அடியிற்கண்ட குத்தகைகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 19—1—1972-ஆம் தேதி புதன் கிழமை மாலை 3-00 மணிக்கு இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

1—4—1972 முதல் 31—3—1973 முடிய குத்தகை விவரமும் காலமும்.	கட்டுத் தொகை. ரூ.
1 செவ்வாய்க் கிழமை வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை.	500
2 தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை.	500
3 பேருந்து வண்டி நிலையமும் (பஸ் ஸ்டாண்டும்) குதிரை (ஜட்கா) மாட்டு வண்டிப் பேட்டையும் சேர்ந்து.	300
4 கால்நடை வெட்டுமிடம் (ஸ்லாட்டர் ஹவுஸ்.)	200
5 நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களைத் தங்கள் செலவில் சேகரம் செய்து எடுத்துக்கொள்ளும் உரிமை.	500
6 தினசரி சந்தையிலுள்ள 16 கசாப்புக் கடைகள்	200

(த.87)

ஆணையர்,
இராசிபுரம்.

ஒப்பந்தப் புள்ளி

சின்கோனாத் துறை

நீலகிரி அரசினர் சின்கோனாத் தோட்டங்களின் நடுவட்டம், மோயாறு, மூக்கர்வுட், சேவ சோலா, சேரன்கோடு கோட்டங்களிலும் மருத்துவச் சத்தெண்ணெய் தொழிற்சாலைக் குடியிருப்பிலும் கக்கூஸ் கட்ட (Aqua Type Latrines) வேலை மொத்த மதிப்பு ரூ. 55,000, தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 15-1-1972 மாலை 3-00 மணிக்குள் வந்து சேர வேண்டும். அவை அதே நாள் மாலை 3-30 மணிக்குக்கீழே கையொப்பமிட்டவராலோ அவரது அரசிதழ் பதிவு அலுவலராலோ பிரிக்கப்படும்.

விவரங்களையும், ஷெடியூல்களையும், மேற்பார்வையாளர், அரசினர் சின்கோனாத் தோட்டங்கள், நடுவட்டம், நடுவட்டம் (அஞ்சல்), நீலகிரி அவர்களிடமிருந்து, விற்பனை வரி உட்பட ரூ. 2.07 ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்,
சின்கோனாத் துறை,
உதக்மண்டலம்.

(த. 110)

ஒப்பந்தப்புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை,
திருநேல்வேலி தெற்குக் கோட்டம் (இருப்பு)
பாளையங்கோட்டை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் திருநெல்வேலி தெற்கு (நெ.கி. ப.து.), கோட்டப் பொறியாளர் அவர்களால் திருநெல்வேலி தெற்குக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டுப் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பாளையங்கோட்டையிலிருக்கும் அவர்களுடைய அலுவலகத்தில் 28–1–1972 வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணி வரை (அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனிக் கவரில் வேலையின் பெயரை எழுதி, கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருநெல்வேலி தெற்கு (இருப்பு), பாளையங்கோட்டை என்ற விலாசம் எழுதி ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும்: கிடைத்த ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 2-15 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நமூனுக்கள் முதலியன அலுவலக நேரங்களில் மேலாளரிடமிருந்து 29–12–1971 முதல் 27–1–1972 வரை ரூ. 5.18 வரி உட்பட (ஒவ்வொன்றுக்கும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

முன் வைப்புத் தொகைக்கான சான்றுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாக வரும் ஒப்பந்தங்களும் கோட்டப் பொறியாளர் பெயருக்கு மாற்றப்படாத அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் வரும் ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

வேலைக்குரிய முன் வைப்புத் தொகை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி தெற்குக் கோட்ட எல்லையிலுள்ள அரசினர் கருவூலத்தில் '' வருவாய் வைப்புத் தொகை '' என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். முன் வைப்புத் தொகைக்காக டிமாண்ட் டிராப்ட் இணைக்கப்படுவதாயிருந்தால் அவை திருநெல்வேலி ஸ்டேட் பாங்கில் மாற்றத் தக்கதாக இருக்க வேண்டும். இது தவிர முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படுகின்ற வங்கி உத்திரவாதத்துடன் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரமும் பெற்று அவ்விரண்டையும் இணைக்கப்பட வேண்டும். இவ்விதம் ரிசர்வ் வங்கியில் அங்கீகாரம் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எஸ். கிருஷ்ணவிஜயன்,
கோட்டப் பொறியாளர் (நெ.கி. ப.து.), திருநெல்வேலி தெற்கு
பாளையங்கோட்டை,
18–12–1971.

(த. 90)

ஏலம்

வேளாண்மைத் துறை

திருவாரூர் வேளாண்மைக் கருவிகள், பணிமனைப் பொதுக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 17—1—1972 மாலை 3 மணிக்கு நிலம் சமன்படுத்தும் TD. 14, TD. 9, TD. 6, T. 6 இயந்திரங்களும், அதன் புதிய மற்றும் உதிரி உறுப்புகளும் (Buldozer spare parts) மற்றும் இயந்திரக் கலப்பையின் உதிரி உறுப்புகளும் (Tractor spare parts) கலப்பையின் உறுப்புகளும் (Plough parts) பொது ஏலத்தில் விடப்படும். மேலும் பழைய தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி இயந்திரங்களின் உதிரி பாகங்களும், அதே தினத்தன்று காலை 10 மணிக்கு ஏலம் விடப்படும்.

மேற்கூறிய புதிய உதிரி உறுப்புகளின் அட்டவணையையும், ஏலம் பற்றிய குறிப்புரைகளும், மேற்படி அலுவலகத்தில் 1 ஜனவரி 1972 முதல் 11 ஜனவரி 1972 வரை ரூபாய் 1.04 (ரூபாய் ஒன்றும் 4 காசு மட்டும்) காசோலை மூலமாகவோ, அல்லது ' டிமாண்ட் டிராப்ட் ' மூலமாகவோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். (இந்த ரூபாய் திருப்பிப் பெற இயலாது.) மேற்கூறிய இனை உறுப்புகளை எல்லா அலுவலக வேலை நேரத்திலும் பார்வையிடலாம்.

அரசின் நலம் கருதி, ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்திவைக்கவோ, பொதுக் கண்காணிப்பாளருக்கு உரிமை உண்டு.

ஆர். குப்புராஜ்,
பொதுக் கண்காணிப்பாளர்,
அரசு வேளாண்மைக் கருவிகள் தொழிற் கூடம்,
திருவாரூர்.

(த. 123)

ஒப்பந்தப் புள்ளி

தஞ்சாவூர் நகராட்சி

நகராட்சி நகர் நலப் பிரிவிற்கு இரண்டு டீசல் டிராக்டர்கள், இரண்டு டிரயிலர்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை நகராட்சி ஆணையர் அவர்களால் 6 ஜனவரி 1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மற்ற விவரங்கள் ஆணையருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கே. சக்ரபாணி,
ஆணையர் (பொறுப்பு).

நகராட்சி அலுவலகம்,
தஞ்சாவூர்-2,

(த. 124)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில், பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர் பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 10–1–1972 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : ஸ்ரீரங்கம் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்—50,000 லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த்தாங்கி கட்டுதல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்)

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி-3 பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு: நான்கு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 5·18 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3, என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 7–1–1972 வெள்ளி மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர், வடிகால் வாரியம்.

மதுரை-2,
15–12–1971.
(த. 78)

இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச்செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
1 பேருந்து நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் விடுதி கட்டுதல்.	99,400	3,950
2 வி. நகர் 5, 6, 7 தெருக்களுக்குத் தார் போடுதல்.	24,000	600
3 கோனேரிப்பட்டி எக்ஸ்டன்ஸன் I & II சபாபதி மில்தெரு செட்டியண்ண நாயக்கன் தெரு கோனேரிப்பட்டி ஆதித்திராவிடர் தெரு தார் போடுதல்.	24,000	600
4 வாரச் சந்தையில் 5 கடைகள் கட்டுதல் முதல் பிளாக்.	14,000	350
5 வாரச் சந்தையில் 5 கடைகள் கட்டுதல் இரண்டாவது பிளாக்.	14,000	350

இன்னும் இதர 14 வேலைகள் சாக்கடை கட்டுதல் தார் ரோடு போடுதல் மராமத்து செய்தல் முதலியன. மொத்த வேலைகளின் மதிப்பீடு ரூ. 2,27,005. மற்ற விவரங்களுக்கு அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

(த 36)

ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை "வனப் பொறியாளர், திருச்சி", தமிழ்நாடு, ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"உள்ளூர்தாண்டா—பர்கூர் சாலை அமைத்தல்—6.4 கி.மீ. பர்கூர் வனச்சரகம், கோவை வடக்கு வனக்கோட்டம்."

அச்சாரம் ரூ. 4,200 (இ.எம்.டி.).

ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 5–1–1972, நேரம் முறையே மாலை 3-00 மணி—3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப் பொறியாளர், 1-எ, ராயல் ரோடு, கன்டோன்மெண்ட், திருச்சி-1" என்ற முகவரியிலிருந்து ரூ. 1.04 செலுத்தி 25-12-1971 முதல் 4–1-1972 வரை அலுவலக வேலை நேரங்களில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப் பொறியாளர்.

திருச்சி,
21–12–1971.
(த.93)

ஒப்பந்தப் புள்ளி

ஸ்டான்லி மருத்துவமனை

28–1–1972 வெள்ளிக்கிழமை அன்று பகல் 2 மணி வரை முதல்வர், அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை-1 அவர்களால் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்கு தேங்காய் நார் மெத்தை, பஞ்சு மெத்தை, தலையணைகள் இவைகளில் பஞ்சு அல்லது நார் அடைத்துத் தைப்பதற்கும், பஞ்சு, தரையைச் சுத்தம் செய்யும் நூல் மட்டைகள் ஆகிய பொருள்களை வழங்குவதற்கும், 1–4–1972 முதல் 1–3–1973 முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்குத் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கான இடத்தைக் குத்தகை எடுப்பதற்கும், அரக்கு முத்திரையிட்ட உறைகள் பெற்றுக் கொள்ளப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது. ஒப்ப விவரத்தினுடைய நிபந்தனைகள், ஒப்ப விவர நமூனுக்கள், வழங்கும் பொருள்களுடைய விவரங்கள் ஆகியவைகளை ஸ்டான்லி மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இவ்விவரங்களைப் பெறுவதற்கு ரூபாய் ஐந்தை "XXIII Medical J. Misc தலைப்பின் கீழும் மூன்றரை சத விகித விற்பனை வரி 18 காசுகளையும் அதற்கு 5 சத விகித வருமான மேல் வரி XII Sales Tax-Receipts under the Sales Tax Act-General Sales Tax" என்ற தலைப்பின் கீழும் ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஏதாவதொரு ஸ்டேட் வங்கி கிளையிலோ அல்லது அரசாங்கத்தில் ஏதாவதொரு கருவூலத்திலோ செல்லுச் சீட்டு மூலம் செலுத்தி அந்தச் செல்லுச் சீட்டை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

டாக்டர் **எம். ஜி. பிரபு,**
முதல்வர்

(த.102)

ஒப்பந்தப் பள்ளி

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. ராஜன் சாலை மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 19–1–1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியா ராலோ அல்லது அவரா நியமிக்கப்பட்டவராலோ அ ருடைய அலுவலகத்தில் வை துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—குழித்தலை குடிநீர்த் திட்டம்—இரண் டாம் நிலை—தலைமை நீரேற்று நிலையம் — நீரேற்றிகளும் அதன் பாகங்களையும் அளித் தல்—நிர்மாணித்தல் சம்பந்த மாக.

ஒப்பந்த வகை:—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை:— ரூ. 1,600 (ரூபாய் ஆயிரத்து அறுநூறு மட்டும்).

இத் தொகை, கருவூலச் செலான் பண உத்திரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்திரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சிராப்பள்ளி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு:—ஆறு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 15.55 (ரூபாய் பதினைந்தும், காசு ஐம்பத்தி ஐந்து மட்டும், விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சிராப்பள்ளி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லை நகர் மெயின் சாலை, திருச்சிராப்பள்ளி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17–1–1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம், குடிநீர், வடிகால் வாரியம்.

மதுரை-2,
10–12–1971.
(த.106)

தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர் : கிண்டி தொழிற்பேட்டையில் வட புறத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளில் காரை வேலை உட்பட மண் வடிகால் அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 18—1—1972 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை ..	ரூபாய் 3,200 (ரூபாய் மூவாயிரத்து இருநூறு மட்டும்.)
3. மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து.	ரூபாய் 10.40.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், வடக்குப் பிரிவு, தொழில் வணிகத்துறை, தொழிற்பேட்டை கிண்டி-32 என்னும் முகவரியில்உள்ள நிருவாகப்பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 20—12—1971 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10.40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ 'XXIX' இண்டஸ்டிரீஸ்—அதர் ரசீப்ட்ஸ்'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம் தொழில் வணிகத்துறை, தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32, அவர்களது கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, '' கால் டிபாசிட் '' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம்,'அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவீதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

சென்னை—2.
(த.85)

இராசிபுரம் நகராட்சிக்கு 1972—73-ஆம் ஆண்டிற்கு (1—4—1972 முதல் 31—3—1973 முடிய) கீழே குறிப்பிட்டவைகள் விநியோகம் செய்வதற்காக 20—1—1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4-00 மணிவரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகரவை ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் 20—1—1972-ஆம் தேதி மாலை 4-30 மணிக்கு அச்சமயம் நேரில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இதர விவரங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1 நகராட்சி குப்பை வண்டிகளுக்கு மாடுகள் விநியோகம் செய்ய.	100
2 நகராட்சிக்கு வேண்டியவைகளை அச்சிடுதல்	25
3 எழுது பொருள்கள் முதலிய சாமான்கள் விநியோகம் செய்ய.	25
4 கூடை, விளக்குமாறு, சுண்ணும்பு விநியோகம் செய்ய.	25

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

இராசிபுரம்.
17—12—1971.
(த.86)

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

அரசாங்கச் சாலைகளின் 1972—73-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு வேலைகள்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும், நாமக்கல் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அவர்களால் நாமக்கல் கோட்டத்திற்குட்பட்ட அரசாங்கச் சாலைகளின் 1972—73-ஆம் ஆண்டிற்கான எல்லா பராமரிப்பு வேலைகளுக்கும் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) நாமக்கல் அவர்களால் அவர்களது அலுவலகத்தில் 28—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணி வரை (அலுவலகக் கடிகார மணிப்படி) பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 28—1—1972 அன்றே பிற்பகல் 4-00 மணிக்கு ஒப்பந்தக்காரர் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நாமக்கல் (நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை) பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3.11 (விற்பனை வரி உட்பட இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது) வீதம் கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் காலை 10-30 முதல் மாலை 5 வரை 10—1—1972 முதல் 27—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் 28—1—1972-ஆம் நாள் கொடுக்கப்பட மாட்டாது.

கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது. கட்டுத்தொகை கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) நாமக்கல் அவர்கள் சார்பில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தி, செல்லுசீட்டை (செலான்) ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்கள் கோட்டப் பொறியாளரின் சார்பில் மாற்றியதும் பேங்க் டிராப்டும் கட்டுத் தொகைக்காகப் பெற்றுக் கொள்ளப்படும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமானல் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்க் காரண்டிற்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அப்படித் தவறினுல் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் வருமான வரி விற்பனை வரி சான்றிதழ் ஆகியவைகளை ஏற்கனவே சமர்ப்பிக்காமலிருந்தால் அவைகளை இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பாவிடில் அவர்களுடைய ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாகும்.

வேலை விவரங்கள் ஒவ்வொரு வேலைகளும் முன்வைப்புத் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலக அறிவிப்புப் பலகையிலும் ஒவ்வொரு உதவிப் பொறியாளர் பிரிவு அலுவலகர் காரியாலய அறிவிப்புப் பலகைகளிலும் 10—1—1972-ஆம் நாளிலிருந்து விளம்பரப் படுத்தப்படும்.

கு. நடராஜன்,
கோட்டப் பொறியாளர்.

நாமக்கல்
24—12—71.
(த.28)

வனத்துறை

கீழ்க்காணும் வேலைகளை மேற்கொள்ளுவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக சேரங்கோடு தேயிலைக் கோட்ட வன அலுவலர் அவர்களால் 17—1—1972-ஆம் தேதி காலை 12-30 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் கீழ்க் குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வேலையின் விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	வைப்புத் தொகை.
1 சேரங்கோடு மெயின் ரோடில் கட்டுக்கள் (சோலிங்) புதைத்தல்	22,700	750
2 சேரங்கோடு கோட்ட ரோடு இரண்டில் கட்டுக்கள் புதைத்தல்.	21,800	700
3 சேரங்கோடு மெயின் ரோடில் 15 கல்வர்டுகள் கட்டல்.	12,500	400
4 சேரங்கோடு வளைவு ரோடில் கட்டுக்கள் புதைத்தல்.	6,250	200
5 சேரங்கோடு 1970-71 நர்சரிக்குப் போகும் ரோடில் கட்டுகள் புதைத்தல்.	9,500	300
6 சேரங்கோடு ரோடு நெம்பர் 1 & 1-ஏல் கட்டுக் கற்கள் புதைத்தல்.	9,500	300

9

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31—3—1972-க்குள் முடிக்கப்படவேண்டும். ஒப்பந்த நமூனவும் மற்றும் ஒப்பந்த விவரங்களும் ரூ. 4.12 சேரங்கோடு தேயிலைக் கோட்ட அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

க. க. சோமசுந்தரம்,
கோட்ட வன அலுவலர்.

(த.83)

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித் துறை, கிருட்டிணகிரிக் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக கிருட்டிணகிரி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டத்தில் உள்ள அரசினர் சாலைகளின் 1972—73 வருடத்திற்கான பராமரிப்பு வேலைகளுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்) அட்டவணை நமூனுக்களில் கிருட்டிணகிரிக் கோட்டப் பொறியாளர் அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 19-ஆம் தேதி புதன் கிழமை அன்று பிற்பகல் 2—00 மணி (இரண்டு மணி) வரையில் (அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினம் பிற்பகல் 2—15 மணி அளவில் (இரண்டு மணி பதினைந்து நிமிடம்) ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்புப் பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட நமூனுக்களும், பொதுவான நிபந்தனைகளும் அட்டவணையும், மேற்படி விவரக் குறிப்புகளும் கிருட்டிணகரி கிராமப் பொறியியல் பணித் துறைக் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடம் 10—1—1972 முதல் 18—1—1972 வரை அலுவலக நேரங்களில் (பணிபுரியும் நாட்களில்) விண்ணப்பம் எழுதிக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான அடக்கவிலை ரூ. 5.18 (ரூபாய் ஐந்து காசு பதினெட்டு) விற்பனை வரி உட்பட செலுத்தியாக வேண்டும். இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. ஒப்பந்த அறிவிப்பு நமூனுக்கள் ஒப்பந்த அறிவிப்பு அன்று அதாவது 19—1—1972 அன்று எக்காரணம் கொண்டும் விற்கப்படமாட்டாது.

வேலை விவரங்கள், ஒவ்வொரு வேலைக்கு உண்டான வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் அதன் உட்கோட்ட உதவிப் பொறியாளர் அலுவலகங்களிலும் பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 10—1—72 தேதியில் இருந்து விளம்பரப்படுத்தப்படும்.

வேலைக்கான வைப்புத் தொகை கிருட்டிணகிரிக் கோட்டப் பொறியாளர் பெயரில் அரசாங்கக் கருவூலத்தில் ''வருவாய் வைப்புத் தொகை'' என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் ீட்டை ஒப்பந்த அறிவிப்புடன் இணைக்க வேண்டும். செல்லுச் ட்டின்றி வரும் ஒப்பந்த அறிவிப்புகள் கண்டிப்பாகத் தள்ளு டி செய்யப்படும். ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அறிவிப்புடன் ருமானவரிச் விற்பனைவரி சான்றிதழ்களையும் அனுப்ப வண்டும். அவ்வாறு அனுப்பாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராக க்கப்படும்.

ச. பாலகிருஷ்ணன்,
கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.),
கிருட்டிணகிரி.

80)

அரக்கோணம் நகராட்சி

கீழ்கண்ட வேலைகளுக்கு அரக்கோணம் நகராட்சி ஆணையரால் 12—1—1972-ஆம் தேதி மாலை 4 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4.15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களையும் முழு விவரங்களையும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நேரங்களில் 11—1—1972-ஆம் தேதி வரை மனுச் செய்து ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 5·00 (விற்பனை வரி நீங்கலாக) நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

வ. எண்.	வேலையின் பெயர்.	மதிப்பீடுத் தொகை.	முதல் கட்டுத் தொகை.
1	காந்திரோடு முதல் வடதர்மராஜாகோயில் தெரு வரை சத்தியமூர்த்தி தெரு ராஜாஜி 1வது தெரு வழியாக ராஜாஜி 2 மற்றும் 3 தெருக்களுக்கும் உட்பட தார்சமதளம் அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல் மற்றும் குறுக்குப் பாலங்களைப் பழுது பார்த்தல்.	51,000	1,275
2	காவனூர் ரோட்டிற்குக் கம்பு குட்டித் தெரு சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லை வரை தார் சமதளம் அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல் மற்றும் குறுக்குப் பாலங்களுக்கு மராமத்து வேலைகள்.	51,000	1,275

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் மேற்கொண்டு 4-வது காலத்தில் குறிப்பிட்டுள்ள முதல் கட்டுத் தொகைக்குச் சமமான தொகையை மறுபடியும் செலுத்தவேண்டும்.

க. ரா. குட்டியப்பன்,
நகராட்சி ஆணையர்.

அரக்கோணம்,
18—2—1971.

(த.78)

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 8—2—1972 மாலை 5·00 வரை வரவேற்கப்படுகின்றன:—

1. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை கீழ்நிலைப் பணியாளர் தொகுதியில் கள ஆய்வு விளக்க நிலைய (நல்வாழ்வுக் கல்விக் கழகம்) ஆசிரியர் பதவி—1 நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

கல்வித் தகுதி : (அ) பி. ஏ. அல்லது பி.எஸ்சி. பட்டத்துடன் பி.டி. பட்டமும் பெற்று 5 ஆண்டுகள் கல்வி கற்பித்துள்ள அல்லது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனுபவம் (அல்லது)

(ஆ) பி. ஏ. அல்லது பி.எஸ்சி. பட்டத்துடன் எம். ஈடி. பட்டமும் பெற்று 2 ஆண்டுகள் கல்வி கற்பித்துள்ள அல்லது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனுபவம்.

2. தமிழ்நாடு கல்வி கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின் கீழ், சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில் 'போர்மேன் இன்ஸ்ட்ரக்டர்' பதவி—1 நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 35 வயதுக்குக்குறைவாக இருக்க வேண்டும். உடல் ஊனமுற்றோருக்கு 10 ஆண்டுகள் வரை வயது வரம்பு தளர்த்தப்படும்.

கல்வித் தகுதி : (1) மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சிக் கழகத்தினால் வழங்கப்பட்ட இயந்திரப் பொறியியல் டிப்ளமாவுடன், அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பொறியியல் பணிமனையில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது (2) தொழில் வணிகத்துறை அல்லது சென்னை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அளித்துள்ள ஒரு தொழிற்கல்வி நிலையச் சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பொறியியல் பணிமனையில் 7 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேற் கூறப்பட்ட அனுபவம் என்பதற்குக் கீழ்க்கண்ட தொழில்களில் ஒன்றிலோ அல்லது அதற்கும் அதிகமாகவோ அனுபவம் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

(அ) கார்பண்டரி மற்றும் அல்லது பேட்டர்ன் மேக்கிங்.
(ஆ) பிட்டிங். (இ) ஸ்மித்தி.
(ஈ) பௌண்டரி. (உ) மெசினிஷ்ட்.
(ஊ) வெல்டிங். (எ) டூல் மேக்கிங்.
(ஏ) டர்னிங்.

3. தமிழ்நாடு நிலைப்பணியாளர் தொகுதியின் கீழ் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள நூலகத்தில் நூலகர் பதவி—1 நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 275—10—375—15—450.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும். உடல் ஊனமுற்றவர்களைப் பொறுத்த வரையில் உச்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

கல்வித்தகுதி : மானியம் வழங்கும் காரணத்தை முன்னிட்டு பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தின் ஒரு பட்டம்(ஆ) நூலக அறிவியல் சான்றிதழ் அல்லது டிப்ளமா (இ) தமிழ்மொழி அல்லாத ஆனால் மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற தென் இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதிகமான மொழிகளில் எழுதுதல் மற்றும் படிக்கும் திறமை.

4. தமிழ்நாடு பொறியியல் கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின் கீழ், மைய பாலிடெக்னிக்கில் மீனள தொழில் நுட்பவியல் மற்றும் கடற்போக்குவரத்துப் பொறியியல் பிரிவில் முதுநிலை பயிற்றுநர் பதவி —1 நியமனம்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும். உடல் ஊன முற்றவர்களைப் பொறுத்த வரையில் உச்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

கல்வித் தகுதி : (அ) விலங்கியல் இளநிலைப் பட்டத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்றிருப்பதுடன் மீனளம் பற்றி 2 ஆண்டுகள் கல்வி கற்பித்த அல்லது செய்முறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது (ஆ) மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தினால் வழங்கப்பட்டுள்ள மீனள தொழில் நுட்பவியல் மற்றும் கடற்போக்குவரத்துப் பற்றிய டிப்ளமாவுடன் ஏதேனும் ஒரு பாலிடெக்னிக்கல் இளநிலை பயிற்றுநர் நிலைமைக்குக் குறையாமல் அல்லது அதற்குச் சமமான பதவிக் வகித்து 2 ஆண்டு கல்வி கற்பித்த அல்லது செய்முறை அனுபவம் பெற்று இருக்க வேண்டும்.

5. தமிழ்நாடு தொழில் துறைக் கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின் கீழ், தூத்துக்குடியில் உள்ள பொட்டாசியம் குளோரைடு நிலையத்தில் உதவி இரசாயனப் பொறியாளர் பதவி—2 நியமனங்கள்.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400—15—475—20—575—25—650.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

கல்வித் தகுதி : (1) ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது வாரியத்தின் ஒரு இரசாயனப் பொறியியல் பட்டம் அல்லது வாரியத்தின் இரசாயனத் தொழில்நுட்பவியலிலாவது அல்லது இரசாயனப் பொறியியலிலாவது ஒரு டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

மற்றும் (2) முன்னோடித் தொழிற்சாலை ஆய்வு அல்லது இரசாயனத் தொழிற்சாலை அமைப்பு முறை அல்லது இரசாயனத் தொழிற்சாலையை இயக்குவித்தலில் ஒரு ஆண்டிற்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

6. தமிழ்நாடு பொதுக் கீழ்நிலைப் பணியாளர் தொகுதியின்கீழ், மாநிலத் துறைமுகத் துறையில் இயந்திர மேற்பார்வையாளர் பதவிகள்—3 நியமனங்கள், மின்சார மேற்பார்வையாளர் —2 நியமனங்கள்.

சம்பளம்.: மாதம் ஒன்றுக்கு ரூ. 325—15—475—20—575—25—650.

பட்டதாரிகளுக்கு வழக்கமான படிகளுடன் ரூபாய் 400 அடிப்படை ஊதியம் கொடுக்கப்படும்.

வயது : 1—7—1972-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்கவேண்டும்.

கல்வித் தகுதி :

I. இயந்திர மேற்பார்வையாளர் :

(1)(அ) இயந்திரப் பொறியியல் பட்டம் அல்லது

(ஆ) சென்னையில் உள்ள மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி வாரியம் அல்லது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது வாரியம் அல்லது வேறு ஏதேனும் மாநில அரசுகள் வழங்கியுள்ள இயந்திரப் பொறியியல் டிப்ளமா மற்றும்,

(2) பட்டம் அல்லது டிப்ளமா பெற்றபின், பெரிய சென்டிரியூகல் அல்லது சென்டிரிமெட்டல் பம்புகள், இரும்பு அமைப்புகள் வின்செஸ், இன்டர்னல் கம்பஷன் இயந்திரங்கள், நீராவி இயந்திரங்கள், கொதிகலன்கள், மற்றும் பணிமனை இயந்திரங்கள் ஆகியவைகளை அமைத்தல், இயக்குதல், பராமரித்தல் ஆகியவற்றில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம்.

II. மின்சார மேற்பார்வையாளர்கள் :

(1) மின்சாரப் பொறியியல் பட்டம் (அல்லது) (ii) சென்னையிலுள்ள மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம் அல்லது இந்திய அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது வாரியம் அல்லது ஏதேனும் ஒரு மாநில அரசு வழங்கியுள்ள மின்சாரப் பொறியியல் டிப்ளமா மற்றும்,

(2) பட்டம் அல்லது டிப்ளமா பெற்றபின் டிரான்ஸ்பார்மர், ஸ்விட்சி கியர்கள் விநியோக லைன்கள் மற்றும் சுமார் 100 குதிரைத்திறன் கொண்ட ஏ.சி. மோட்டார்கள் ஆகியவைகளை அமைத்தல், இயக்குதல், பராமரித்தல் ஆகியவற்றில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேம்பட்ட பொதுக் கல்வித் தகுதியுடைய தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. ஏனைய தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதியினர் ஆகியோருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு ஆணையால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், முன்னாள் தேசிய மாணவர் படையில் 2—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபிஸ் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜராகப் பணியில் அமர்த்தப்பட்டவர்களுக்கும் வயது வரம்பில் சலுகை உண்டு. தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து திரும்பி வந்தவர்கள் 1-7-1972-ல் 40 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பினும் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து அகதிகளாகத் திரும்பியவர்களாக இருப்பினும் வயது வரம்பு உட்பட கல்வித் தகுதி தளர்த்தப்படும். விவரங்களையும் மனுவடிவங்களையும் '' செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 '' என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி அத்துடன் 23 செ.மீ. நீளமுள்ள சுய முகவரி எழுதப்பட்ட, அஞ்சல் தலை (30 காசு) ஒட்டிய ' நூல் அஞ்சல் ' என்று மேலே எழுதப்பட்ட உறையையும் உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 89)

வேலைவாய்ப்பு

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் மேலஉளூர் மருத்துவமனையில் காலியாக உள்ள டாக்டர் வேலைக்கு ஒரு எம். பி. பி.எஸ். தகுதி பெற்ற மருத்துவ அலுவலர் தேவைப்படுகிறார். 1970-ஆம் ஆண்டு தமிழக அரசு இரண்டாவது புதிய சம்பள விகிதப்படி சம்பளமும் இதர படிகளும் வழங்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சா. சீனிவாசன், ஆணையர்.
ராட்சி ஒன்றியம், ஒரத்தநாடு,
109) தஞ்சாவூர் மாவட்டம்.

ஏல விற்பனை

நாளது 5—1—1972-ஆம் ஆண்டு அன்று பகல் 3 மணி அளவில் அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையின் அலுவலகக் கட்டடத்தில் அதிகாரிகள் உணவு விடுதி நடத்துவதற்கான ஏலம் நடைபெறும்.

மேற்கண்ட உணவு விடுதி நடத்துவதற்கான நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலருடைய அலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். கடிதம் மூலமாகப் பெறுவதானால் அதற்குரிய அஞ்சலக வில்லைகள் ஒட்டப்பட்ட விலாசமிட்ட உறை (கவர்) ஒன்றையும் அனுப்ப வேண்டும்.

டாக்டர் எம். ஜி. பிரபு, எம்.டி.
எப்.சி.சி.பி.(யு.எஸ்.ஏ.),
முதல்வர்.

அரசினர் ஸ்டான்லி மருத்துவ
மனை, சென்னை-1,
18—12—1971.

(த.103)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்

எண். எம். இ.4/1487/71, நாள் 16—12—71.

வியாசர்பாடி அருகே வடசென்னை புறநகர்ப் பகுதித் திட்டத்திற்கான கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர் ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவை உறைமீது குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிடப்பட்ட நாட்களில் மாலை 3 மணிக்குமுன் கிடைக்குமாறு அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் அதே நாளில் மாலை 3-05 மணிக்குப் பிரிக்கப்படும்.

எண்ணும், வேலையின் விவரம்.	வேலையின் மதிப்பீடு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் புள்ளி விலை (விற்பனை வரி தனி). ரூ.	ஒப்பந்தப் புள்ளிகள் கிடைக்கும் தேதி.	ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய கடைசி தேதி.
1. கழிவுநீர் வெளியேற்றும் பம்பிங் கூடம் கட்டுதல்.	1,50,000	2,250	10	10— 1—72	22—1 —72
2. நடுத்தர வருமானப் பிரிவு வகைக் குடியிருப்புகள் ஒன்றில் நான்கு அடுக்கு வீடுகள் டிசைன் 3A/68 படி 11 பிளாக்குகள் கட்டுதல்.	6,93,000	10,400	20	3— 1—72	12— 1—72
3. கிடங்கோடு கூடிய உதவிப் பொறியாளர் அலுவலகம் ஒன்று கட்டுதல்.	58,500	880	10	3— 1—72	7— 1—72
4. வடிநீர் வெளியேற்றும் பம்பிங் கூடம் கட்டுதல்.	12,500	190	5	3— 1—72	12— 1—72
5. தடுப்புச் சுவர் (ரீடையினிங்) கட்டுதல் ..	2,00,000	3,000	10	10— 1—72	24— 1—72
6. தாழ்வுப் பகுதிகளை நிரப்பிச் சமப்படுத்துதல் ..	6,16,400	9,250	20	10— 1—72	24— 1—72
7. சாலையின் ஒரு பகுதிக்குத் தார் ரோடு போடுதல்.	1,24,700	1,875	10	10— 1—72	24— 1—72
8. 6'', 9'' விட்டமுள்ள ஸ்டோன்வேர் (Stone ware) குழாய்களைத் தருவித்தல்.	1,65,000	2,475	10	3— 1—72	22— 1—72
9. லெட்வுல், 6'' விட்டமுள்ள வெண்டிலேடிங் ஷாப்டுகளை அதன் உதிரிப் பொருள்களுடன் தருவித்துக் கொடுத்தல்.	75,000	1,125	10	3— 1—72	18— 1—72
10. பட்டினப்பாக்கக் கடற்கரை எஸ்டேட்டிற்கு 10'' விட்டமுள்ள (250 மி.மி.) C.I குழாய்களை அதன் உதிரிப் பாகங்களுடன் தருவித்துக் கொடுத்தல்.	1,35,000	2,025	10	10— 1—72	24— 1—72
11. தாழ்வுப் பகுதிகளை நிரப்பிச் சமப்படுத்துதல்.	2,50,000	3,750	15	10— 1—72	24— 1—72
N.M.N.H. Scheme II					
12. 80 அடி அகலமுள்ள ரோட்டிற்குக் கிராவலோடு கூடிய மெட்டல் ரோடு போடுதல்.	85,000	1,275	10	10— 1—72	24— 1—72

மேற்கொண்ட விவரங்களையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் நிருவாகப் பொறியாளர் (கிழக்குக் கோட்டம்), அவர்கள் அலுவலகத்தில் உரிய விலையைச் செலுத்தி எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். எந்தவித காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

டி. சாமுவேல்தம்பி, பி. இ.,
சென்னை கிழக்குக் கோட்டம்,
வீட்டு வசதி வாரியம்.

சென்னை-35,
16—12—71.

(த.104)

ங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி
எண்கள்: 20461. 20462. 20463.
20464. 20465.

கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம். சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்.	வேலை விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1	சென்னை சித்தூர்—பெங்களூர் சாலையில் (தே.நெ. எண் 4) கி.மீ. 92/4 மை. 57/4)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	3,300
2	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 133/4-ல் (மை. 76/2)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	1,000
3	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 128/10 (மை. 79/5)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	930
4	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 127/10 (மை. 80/3)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	940
5	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 126/2-ல் (மை. 81/4)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	1,400
6	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 121/0-ல் (மை. 84/5)-ல் உள்ள பாலத்தைப்புதுப்பித்துக் கட்டுதல்.	1,220
7	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 106/8-ல் (மை. 93/8)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	2,020
8	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 102/6-ல் (மை. 96/6)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	2,230
9	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 87/2-ல் (மை. 105/4)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	2,620
10	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) (கி.மீ. 79/4 (மை. 110/3)-ல் உள்ள பலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	1,200
11	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 75/8) (மை. 112/3)-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	1,280
12	கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலையில் (தே. நெ. எண் 46) கி.மீ. 63/8 (மை. 119/8) உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	3,150

ஒப்பந்தப் புள்ளிகள் 12—1—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெ.)தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1. இரண்டாவது மாடி, குறளக கட்டடம் சென்னை-1 அலுவலகத்தில் 5—1—1972 முதல் 11—1—1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டி பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட கட்டுத் தொகையைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம். எண் 1, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1 சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

(த. 98)

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர்: வட சென்னை அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் விடுதி கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் பெறும் கடைசி நாள் 15–12–1971-லிருந்து 27–1–72 மாலை 3·00 மணி என ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 17–1–1972 முதல் 25–1–1972 வரை கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாறுதல் ஏதும் இல்லை.

பி.கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த.105)

1—1—15எ

ந. க. எண் 20856/71–2/நாள் 15—12—1971.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப் பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெரு வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றோர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 25—1—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் அரக்கு முத்திரையிடப்பெற்ற உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்	..	அருப்புக்கோட்டை வட்டம் குண்டாற்றின் குறுக்கே அணைக்கட்டும் வேலையும் வெள்ளத்தடுப்புக் கரையும் அமைத்து நாராயணக் காவேரி கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம்.
ஒப்பந்த வகை	..	கே. 2.
கட்டுத் தொகை.		ரூ. 13,100 (ரூபாய் பதின்மூன்றுயிரத்து நூறு மட்டும்).
ஒப்பந்தப் புள்ளி விலை.		ரூபாய் 20.70 (வரி உட்பட).
வேலை முடிக்க வேண்டிய காலம்.	..	12 மாதங்கள்.

வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 25—1—1972 அன்று மாலை 4-30 மணிக்கு அலுவலகம் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மேற்படியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகை ரூ. 20·70-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) இராமநாதபுரம் பெரு வட்டம், மதுரை-1 என்ற விலாசத்திற்கு மனுச்செய்தால் ஷெ வேலைக்கான ஒப்பந்தப்பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் விலையான ரூ. 20-ஐ பி.டபிள்யூ.டி. 111 ஓ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர்,பொதுப்பணித்துறை, சிவகங்கைக் கோட்டம், சிவகங்கை அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்காக ரூ. 0.70 காசை "12 விற்பனை வரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித்தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். · இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும்பொழுது உறையின் மேல் வேலையின் பெயரும் கருவூல ரசீது எண்ணும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை மூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை), இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 17—1—1972 முதல் 22—1—1972 முடிய விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளி கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 22—1—1972 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். அதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள் தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்கள் அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு அத்தாட்சியாகச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

'ஆயக்கட்டுதார்கள் பங்கெடுத்துக் கொண்டால் டெபுடி தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து, சொத்து உரிமை சர்டிபிகேட்டும், வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

ரெ. ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.
(பொ.ப.து.)

(த. 107)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்குமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19-1-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப் படும்.

வரிசை எண்.	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.
		ரூ.
1	தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 113/4-ல் கடில நதியின் மீது பாலம் திரும்பக் கட்டுதல்.	45,300
2	தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 113/4ல் கட்டும் பாலத்திற்கு வடக்குப் பக்கம் அணுகுச் சாலை அமைத்தல்.	2,180
3	தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 113/4-ல் கட்டும் பாலத்திற்குத் தெற்கு பக்கம் அணுகுச் சாலை அமைத்தல்.	2,080
4	தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 41/7-ல் கி.மீ. 68/3-4 பாலம் திரும்பக் கட்டுதல்	4,270
5	தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 137/4-ல் கி.மீ.222/8-ல் பாலம் திரும்பக் கட்டுதல்.	1,470
6	தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலை கி.மீ. 104/4-ல் (மைல் 64/2-ல்) சிறு பாலம் திரும்பக் கட்டுதல்.	6,610

ஒப்பந்தப் புள்ளிகள் 19-1-1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும். ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம்-11 கிண்டி, சென்னை 25 அலுவலகத்தில் 11-1-1972 முதல் 18-1-1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் 11, கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தினுள்ளும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் 11, கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றிவரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி.மு.ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 101)

வனத்துறை

வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை "வனப் பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்:

"சிக்கள்ளி—திக்னரி சாலை அமைத்தல் 3.8 கி.மீட்டர், தலைமலை வனச்சரகம் கோவை வடக்கு வனக் கோட்டம்" அச்சாரம் ரூ. 1,530 [இ.எம்.டி.].

ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 5-1-1972. நேரம் முறையே மாலை 3 மணி, 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர், 1-ஏ, ராயல் ரோடு, கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1.04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமாகவோ, செலுத்தி 20—12—71 முதல் 4—1—72 முடிய அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப் பொறியாளர்.

திருச்சிராப்பள்ளி-1,
19—12—71.
(த. 91)

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால், திருச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

1.	வேலையின் பெயர்.	புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் எட்டு போதனை அறைகள் கொண்ட கட்டடம் கட்டுதல்.
2.	ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதியும் நேரமும்.	24—1—1972 மாலை 3-00 மணி.
3.	பிணைப்பொறுப்புத் தொகை.	ரூ. 3,100 (ரூபாய் மூவாயிரத்து நூறு மட்டும்).
4.	ஒப்பந்த முறை..	மொத்தத் தொகை.
5.	முடிக்க வேண்டிய.. காலம்.	ஐந்து மாதங்கள்.
6.	ஒப்பந்தப் பத்திரத்.. தின் விலை.	ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7.	விற்பனை வரி ..	ரூ. 0.88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்).
8.	ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.	10—1—1972.
9.	விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.	24—1—1972 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விற்பனை வரியையும் அரசின் கருவூலத்தில், "XXXVII Public Works—State Revenue Miscellaneous" மற்றும் "XII Sales tax (b) Receipts under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்புக்களின் கீழ் சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 108)

வீட்டுவசதி வாரியம்

(தெற்குப்பகுதி)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: S.2/7182/71 நாள்: 16—12—1971

கீழ்க்கண்ட வேலைகளுக்குத் தனித்தனியான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வேலையின் பெயருடன், 5-1-1972 வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	பெசண்டு நகரில் S.M.N.H. திட்டத்தில சமூக நலக்கூடம் கட்டுதல்.
வேலையின் சுமார் மதிப்பு ..	ரூ. 2,21,000.
கட்டுத் தொகை	ரூ. 3,325.
ஒப்பந்தப்புள்ளிப் படிவ விலை .. (இது திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது).	ரூ. 15+விற்பனை வரி.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களும் ஏனைய விவரங்களும் நிர்வாகப் பொறியாளர் அலுவலகத் (தெற்கு) திலிருந்து அலுவலக நாட்களில் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். எக்காரணமும் காட்டாமல் எந்த ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்கவோ, தள்ளவோ கீழ்க்கையெழுத்திட்டவர்க்கு உரிமை உண்டு.

எஸ். குமரேசன்,
நிர்வாகப் பொறியாளர்.

(த.132)

சென்னை அரசினர் அச்சகத்திற்கு "ஒரு சா அண்டு நைப் கிரைண்டிங் மிஷின்" (Saw and knife grinding Machine) விற்பனை செய்வதற்காக, வியாபாரிகளிடமிருந்து 20-1-1972 பிற்பகல் 3·00 மணி வரையில் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கொண்டு இதுபற்றி தேவையான விவரங்களைப் பெறுவதற்கு, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அரசினர் அச்சகத்துறை, சென்னை-1 முகவரிக்கு எழுதவும்.

தி. சண்முகம்,
இணை இயக்குநர்.

அரசினர் எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.
17— 2—1971.
(த.97)

வேலை வாய்ப்பு

சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்களை அங்கீகரிப்பதற்காக ஆய்வுக் குழு

தென்னாட்டில் சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்களை ஊக்குவிப்பதற்காக 'டூரிஸ்ட் டாக்சி ஆபரேட்டர்கள்' என்று இந்திய அரசாங்கம் அங்கீகரிப்பதற்கு மனுக்களை ஆய்வு செய்யவும், பரிந்துரைக்கவும், ஆய்வுக் குழு ஒன்றை அரசினர் அமைத்துள்ளனர்.

குழுவின் உறுப்பினர்கள் விவரம் :

1. தமிழ்நாடு அரசாங்கச் சுற்றுலா இயக்குநர் ;
2. சென்னை போக்குவரத்து துணை கமிஷனர் ;
3. இயக்குநர், இந்திய அரசுச் சுற்றுலா அலுவலகம், சென்னை.

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடும். இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சென்னையிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலக இயக்குநர், தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் மனுக்கள் ' சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்' என்ற அங்கீகாரத்துக்காக இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

சுற்றுலா டாக்சி ஆபரேட்டர்கள் அங்கீகாரத்துக்கு முக்கிய நிபந்தனைகள் வருமாறு :—

1. போதிய அளவு அலுவலர்கள் தொலைபேசி வசதியுடன் அலுவலகம் இருக்க வேண்டும் ;

2. வண்டி நிறுத்த சரியான இடவசதி இருக்க வேண்டும் ;

3. வாடகைக்கார் விஷயங்களில் குறைந்தது 2 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும் ;

4. சுற்றுலா சம்பந்தமாகத்தான் புக்கிங் செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் சுற்றுப் பயண நிறுவனங்கள் அல்லது ஹோட்டல்களுடன் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் ;

5. இத்துறை அவ்வப்போது வகுத்துத்தரும் முறையில் நடமாட்டம் பதிவேடு ஒன்றை வைத்திருக்க வேண்டும். சுற்றுலாக் கணக்கில் எந்த அளவுக்கு அலுவல் நடந்திருக்கிறது என்பதைச் சரிபார்த்துக் கண்டறியும் வகைகளில் ' பில் ' புத்தகம் கணக்குப் பதிவேடு ஆகியவை வைத்திருக்கவேண்டும்.

மேற்கொண்டு விவரங்களுக்குச் சுற்றுலா இயக்குநர், பொது (சுற்றுலா) துறை, கோட்டை, சென்னை-9 அவர்களுக்கு எழுதுக.

ஏ. எஸ். அஹலுவாலியா,
அரசு அடிஷனல் செயலாளர்,
சுற்றுலா இயக்குநர்.

(த.134)

ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை ''வனப் பொறியாளர், திருச்சி'' தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

''சித்தேரி—சூரியக்கடை சாலை அமைத்தல் 6.4 கிலோ மீட்டர்—அரூர் சரகம்—தர்மபுரிக் கோட்டம்''.

முன்பணம் ரூ. 1,740.

ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசிநாள் முறையே 12-1-1972 மாலை 3 மணி, 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை ''வனப் பொறியாளர், கண்டோன்மெண்ட், திருச்சி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1-04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி 25-12-1971 முதல் 11-1-1972 வரை எல்லா வேலை நாட்களிலும், அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப் பொறியாளர், திருச்சி.

(த. 92)

ஏல விற்பனை

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்

பழுதடைந்த நிலையிலுள்ள துறையூர் வட்டார ஜீப் எம்.எஸ்.ஓய். 9833 17–1–1972-ஆம் தேதி பகல் 12 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

மாவட்ட ஆட்சியாளர்.
திருச்சிராப்பள்ளி.

(த.99)

பழுதடைந்த நிலையிலுள்ள தாந்தோணி வட்டார ஜீப் எம்.எஸ்.எக்ஸ். 3832, 25–1–1972-ஆம் தேதி 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

மாவட்ட ஆட்சியாளர்
திருச்சிராப்பள்ளி.

(த.100)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வீராணம் திட்ட வட்டம், சென்னை-5

எண் :17396/டி8/71. நாள்:16—12—1971

வடக்கு பக்கிங்ஹாம் கால்வாயின் கிழக்குக் கரையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் வெள்ளக் கரைகள் அமைப்பு வேலைக்காகப் பொதுப் பணித்துறை உரிய பிரிவில் பதிவாகியுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து உரிய வடிவத்தில் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே-2.

வேலைப்பகுதி : (Reacher) விவரம் :—

1. எண்ணூர் '' லாக் ''கிலிருந்து 10/1லிருந்து 9/5 வரை உள்ள வேலை. இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 3,900.

2. எண்ணூர் ' லாக் ' கிலிருந்து 9/5லிருந்து 9/0வரை உள்ள வேலை. இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 3,200.

இந்த இரண்டு வேலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் புள்ளித் தேதி 12—1—1972 மாலை 3 மணிவரை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 27—12—1971லிருந்து 10—1—1972 வரை.

இந்த வேலைகள் ஒவ்வொன்றும் முடிக்கப்பட வேண்டிய காலங்கள் 4 மாதங்கள்.

இந்தவேலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 10 விற்பனை வரி 40 காசுகள். ஒப்பந்தப் பத்திரத்திற்கான கட்டணம் அரசுக் கருவூலத்தில், நிர்வாகப் பொறியாளர், கூவம் அபிவிருத்திக் கோட்டம், சென்னை-5 அவர்கள் கணக்கில் ' P. W. III O.R. ' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி அமலில் உள்ள விகிதத்தில் தனிச் சலானில் '' XII–b—General Sales Tax '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த.133)

பல்லாவரம் நகராட்சி

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு அடியிற்கண்ட பொருட்கள் வழங்க 12—1—1972-ஆம் தேதி புதன் கிழமை காலை 11·00 மணிவரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 11·05 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் கட்டுத் தொகை ரொக்கமாகச் செலுத்தி ரசீதுடன் கொடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட இதர ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

வரிசை எண்.	விவரம்.	தேவைப் படும் எண்ணிக்கை.	கட்டுத் தொகை.
			ரூ.
1	1,000 காலன் கொள்ளளவும் சுமார் 6·1 மெட்ரிக் டன் பாரம் தாங்கக் கூடியதுமான டாங்க் பொருத்தப்பட்ட இரண்டு அச்சு, நான்கு டயர் சக்கரங்களுடன் கூடிய டேங்கர் டிரயிலர் ஒன்று வழங்க.	1	600
2	சுமார் 10·56 மெட்ரிக் டன் பாரம் தாங்கக் கூடிய இரண்டு அச்சும் நான்கு டயர் சக்கரங்களுடன் கூடிய கீழ்க்கண்ட அளவுப்படி. டிராக்டர் டிரயிலர் ஒன்று வழங்க.	1	900

அளவு—

14':3''×7':3''×2'·6''

டி. எஸ். சிவசாமி, பி.ஏ.,
தனி அலுவலர்,
பல்லவபுரம் நகராட்சி.

நாள்: 9—12—1971
(த.130)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

தெற்குக் கோட்டம்

எண் : 1318/எஸ்/7/71.

வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளி அனுப்புகின்றவரின் பெயரும் உறையின்மீது எழுதப் பட்ட, மூடிமுத்திரையிட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்காக ஒவ்வொரு இனத்திற்கும் குறிப்பிட்டுள்ள தேதியன்று மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ள வருக்குக் கிடைக்குமாறு, வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப் படும்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	மாதிரி எண்.	தோராய மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங் களின் விலை.	ஒப்பந்தப் புள்ளிப் பெறுவதற் குரிய கடைசி நாள்.
		ரூ. (இலட்சத்தில்).	ரூ.	ரூ.	
1 பெசன்ட் நகரில் 2 எம்.ஐ.ஜி. பிளாக் கட்டுதல்.	எஸ்.டி. 159/70	2·30	3,450	15·00 + விற்பனை வரி.	4—1—1972
2 ஷை	ஷை	2·30	3,450	15·00 + விற்பனை வரி.	4—1—1972
3 ஷை	ஷை	2·30	3,450	15·00 + விற்பனை வரி.	5—1—1972
4 ஷை	ஷை	2·30	3,450	+15·00 விற்பனை வரி.	5—1—1972
5 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'ஏ' பிளாக் கட்டுதல்.	எஸ்.டி. 140/71.	3·00	4,560	15·00 + விற்பனை வரி.	4—1—1972
6 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'பி' பிளாக் கட்டுதல்.	எஸ்.டி. 142/71.	3·00	4,560	15·00 + விற்பனை வரி.	4—1—1972
7 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'சி' பிளாக் கட்டுதல்.	ஷை	3·00	4,560	15·00 + விற்பனை வரி.	5—1—1972
8 வெங்கட்டாபுரத்தில் ஒரு 'டி' பிளாக் கட்டுதல்.	ஷை	3·00	4,560	15·00 + விற்பனை வரி.	5—1—1972

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்றும் இதர விவரங்களை நிருவாகப் பொறியாளர் (தெற்கு), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்கள் அலுவலகத்திலிருந்து எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

36, அண்ணாசாலை,
நந்தனம் (அஞ்சல்)
சென்னை-35
(த. 131)

எஸ். குமரேசன்,
நிருவாகப் பொறியாளர்,
தெற்குக்கோட்டம்.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.



வர்ண மய உலகம். அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம். பட்டுகள். பிரமாதம். நெசவோ நெஞ்சையள்ளும். குர்தாக்கள், பெல் பாட்டம்கள், லுங்கிகள், சேலைகள் உங்கள் உள்ளம் எங்கும் சிருஷ்டிகள். கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்.

காலப் போக்குக்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், சென்னை - 8



- இன்றையப்
- பிரச்சினைகளை
- மட்டுமல்ல!

- ● எதிர்காலத்தையும்
- ● எண்ணிப்பாருங்கள்

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்

தமிழரசு



- இன்றையப்
- பிரச்சினைகளை

மட்டுமல்ல!

- எதிர்காலத்தையும்
- எண்ணிப்பாருங்கள்

- எத்தனை எத்தனை
- வெற்றிகள் குவிந்தாலும்
- இடர்ப்பாடுகள் தொடர்வது
- ஏன்?

அடுத்தகுழந்தை இப்போது வேண்டாம்

இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்

குடும்ப [illegible]



தமிழரசு

மலர் 2] 16—1—1972 [இதழ் 14

இந்த இதழில்

தருமபுரி மாவட்டச்
சிறப்புக் கட்டுரைகள்

எழுநிலை மாடம்

ஏன் இந்தக் காதல் ?
(தொடர் கதை)

போக்குவரத்துத் துறையில்
புதிய வரலாறு

வெண்பாப் போட்டி

விடுதலை இயக்கத்தின்
விடிவெள்ளி

முதல்வரின்
நாடு காக்கும் வீரர்க்கு
நம்பிக்கை தரும் காணிக்கை

முகப்பில்
ஓசூர் கால்நடைப் பண்ணையில்
ஒரு காட்சி

சத்திய சொல்லையே செய்தி!

போரில் வீர மரணம் அடைந்த ஆறுமுகத்தின் மனைவிக்கு 3 ஏக்கர் நிலமும் ஐயாயிரம் ரூபாயும் அரசு கொடுக்க இருக்கிறது. முதல் தவணையாக ரூ. 500 கொடுக்கப்பட்டிருக்கிறது.



பதவிக் காலத்தில் விபத்து நேராதவாறு ஓட்டும் ஓட்டுநர்களின் ஓய்வு பெறும் வயது ஓராண்டு நீட்டிக்கப் பெறுகிறது.

தமிழ்நாட்டுச் சாலை மேம்பாட்டுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 41 கோடி செலவிடப்பட இருக்கிறது.

1 லட்சத்து 60 ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு மத்திய அரசின் உதவியுடன் வழங்கும் சத்துணவுத் திட்டத்திற்குத் தமிழக அரசு ரூ. 66 லட்சம் செலவு செய்து வருகிறது.

இந்தியாவிலேயே குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாக அமல்படுத்தியிருப்பது தமிழ்நாடுதான்.

தமிழகம் முழுவதுமுள்ள பெரிய மருத்துவமனைகளில் எல்லாம் நோயாளிகளுக்காக 16 எம்.எம். திரையரங்குகள் விரைவில் அமைக்கப்படும்.

நாடு காக்கும் வீரர்க்கு நம்பிக்கை தரும் காணிக்கை

[illegible] மின்சார வாரியத்தில் பணியாற்றும் நீங்கள், நாடும் நாளும் மகிழ்ச்சியடையும் வகையில் நாட்டுப் பாதுகாப்பு நிதியாக ஐந்து இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறீர்கள்.

வாரியத் தலைவர் ரங்கபாஷ்யம் அவர்கள் பேசும்போதும், மின்சாரத் துறை அமைச்சர் இராமன் அவர்கள் பேசுகிறபோதும், நாட்டின் நற்காரியங்கள் அனைத்துக்கும் தங்களாலான நிதியை அளித்து வருவதாகக் குறிப்பிட்டார்கள்.

அமைச்சர் இராமன் அவர்கள் பேசுகையில் நாட்டுப் பாதுகாப்புக்கு மாநில அளவில் ஒரு துறையின் சார்பில் முதன் முதலாக நிதியளிக்கும் துறை—மின்சாரத் துறைதான் எனக் குறிப்பிட்டார்.

இத்தகைய ஒரு வாய்ப்பு உங்களுக்கு அளிக்கப்பட்டது என்பதுதான் உண்மை.

காவல் துறை—அறநிலையத் துறை—கல்வித் துறை போன்ற துறைகளின் சார்பில் மாநில அளவில் நாட்டுப் பாதுகாப்பு நிதியளிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது-மாவட்ட [illegible] தந்து [illegible] மாவட்ட ஆட்சித் தலைவர் [illegible] [illegible] விடுங்கள் என்று நா[illegible] [illegible] விட்ட காரணத்தால், அவ[illegible] [illegible] அவ்விதமே மாவட்ட அளவில் நிதியினைத் தந்ததால் உங்களைப்போல் மாநில அளவில் நிதி தந்தோம் என்று பெருமைப் பட்டுக் கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படவில்லை.

மின்சாரத் துறையைப் பொறுத்த வரை எல்லா விவ[illegible] [illegible] தவிர [illegible]

[illegible] நாட்டின் தொழில் [illegible] உற்பத்திக்கும் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் உதவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை உணர்ந்து நீங்கள் பணியாற்றி வருகிறீர்கள்.

அதிலும் நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் உங்கள் பணி எப்படி இருக்கவேண்டும், உங்கள் பணியை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று யாரும் சொல்லாமலேயே நீங்கள் பணியாற்றுகிறீர்கள்.

நாட்டு நிலையை—நெருக்கடி நிலையை உணர்ந்து கடமையுணர்வோடு பணியாற்றும் உள்ளம் கொண்டவர்கள் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள்—ஒரு சிலரைத் தவிர!

கடமையுணர்வோடு பணியாற்றும் உங்கள் மின்சாரத் துறை, போற்றிப் பாராட்டத்தக்க துறையாகும்.

1972-க்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் தந்துவிட வேண்டும் என்ற திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்றால்-[illegible] பெருமை, அதுபற்றிச் [illegible] திட்டம் [illegible]டிய மின்சார[illegible]றை [illegible] அல்ல! [illegible] [illegible]வதும் [illegible] பாடுபட்டுத் [illegible] நிறைவேற்றும் [illegible] உங்களையே சாரும்!

இ[illegible] துறையில் பணியாற் [illegible]ளர்களும்-கணக் [illegible] தொழிலாளர்களும் [illegible] தோழர்களும் [illegible]ர்ச்சியுடன் காரிய [illegible]ல்தான் நாங்கள் [illegible] செய்ய முடிகிறது.

ஏழு மாவட்டங்களில் மின் இணைப்பு பூர்த்தியாகிறது. இன்னும் சில மாதங்களில்—என்று அமைச்சர் அறிவிக்கிறார் என்றால் அதற்குப், பெருமைக்குரிய காரணமாக விளங்குவது நீங்கள்தான்.

1972-க்குள் தமிழகம் முழுவதும் மின் இணைப்பு ஏற்பட்டு விடும் என்று நாங்கள் அறிவிக்கிறோம் என்றால் அதற்கும் நீங்கள்தான் காரணம்! இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய மாநிலத்தில் முதன் முதலாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தரும் மாநிலம் நமது மாநிலம் தான்!

ஆனால் சிலர், அரியானா மாநிலம் அதைச் செய்து முடித்துவிட்டது என்று கூறக்கூடும்.

இதற்கும் நான் முன்பே பதில் தந்திருக்கிறேன்; அரியானா என்பது சென்னை-செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களின் பரப்பளவே உள்ள ஒரு சிறு நிலப்பரப்பு. மாநிலக் கணக்கு என்ற வகையில் வேண்டுமானால் அது சரியாக இருக்கலாம். ஆனால் பெரிய மாநிலங்களில் [illegible] —14 மாவட்டங்கள் [illegible] தமிழ்நாட்டில் எல்லாக் [illegible] களுக்கும் மின் [illegible] தந்தோம் என்ற [illegible]மக் கொடியை—வெற்றிக் [illegible] உயர்த்தப்போவது [illegible] நாடு! அதற்குக் காரணம் [illegible]ங்கள் தான்!

இத்துறையிலுள்ள உங்களது சங்கடங்களையும் முறையீடுகளையும் ஏற்றுக்கொண்டு பரிசீலிப்பதில் நாங்கள் என்று[illegible] பின் வாங்கியதில்லை.

84 ஆயிரம் பேர் உள்ள இந்தத் துறையில் எத்தனையோ குறைகள் இருக்கலாம். ஆனால் அந்தக் குறைகள் பற்றிய [illegible]கள் வந்த போதெல்லாம் [illegible]றை ஏற்று, எவ்வளவோ [illegible]ல்லைகளுக்கிடையே அந்தக் கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பது நீங்கள் அறியாததல்ல.

அதனால் உங்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு, அதனால் [illegible] பிறந்து, அதனால் உழைப்புப் பெருகி, அதனால் முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதை நான் [illegible]

[illegible] [illegible]ப்பும் [illegible]. [illegible] காக்கப்பட்டால் கடமையை [illegible] மனத்தோடு செய்வீர் என்பதை உணர்ந்த அரசு [illegible]ட்டிக் கழிக்காமல் குறைகள் [illegible]யப்பட எப்போதும் உங்கள் பக்கம் இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

'முதலமைச்சர் கூறிவிட்டார்; ஆகவே, நாளைக்கே கோரிக்கை[illegible] தரலாம்' என்று தொழிற்சங்கத் தலைவர்கள் இன்றிரவே திட்டம் தீட்டிட எண்ணம் கொள்ள மாட்டார்கள் என நம்புகிறேன்.

இங்கே நாட்டுப் பாதுகாப்பு[illegible]க்கு ஐந்து இலட்சம் தந்தார்[illegible]. அதோடு அருணா நமச்சி[illegible]யம் என்ற நண்பர், போரிலே [illegible]டும் வீரருக்குத் தமது [illegible]ளில் ஒன்றைத் தானமாகத் [illegible] உறுதியளித்திருப்ப[illegible]—ஒரு மாத ஊதியத்தையும் பாதுகாப்பு நிதிக்குத் தருவதாக வாக்களித்திருக்கிறார்.

இத்தகைய பரந்த உள்ளங்கள்—தியாக உள்ளங்கள்-தேசப் பற்றுமிளிர்கின்ற உள்ளங்கள் ஏராளம்! ஏராளம்!!

டில்லிக்கு நான் சென்றிருந்தபோது அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறும் இராணுவ வீரர்களைப் பார்த்தேன்.

கரமிழந்தவர்கள், கால் இழந்தவர்கள், தவிர எதிரியின் தாக்குதலால் கண்கள் பாதிக்கப்பட்டுக் கரு விழியும் வெண் விழியும் குண்டு பட்டுக் குலைந்து அழிந்து போயிருக்கும் வீரர்களையும் நான் கண்டேன்.

அத்தகைய வீரர்களுக்கு உதவும் வகையில் கண்களைத் தானம் தருகிற அளவுக்கு இந்த நாட்டின் மீதும், இந்த மண்ணின் மீதும், பற்றும் பாசமும் கொண்ட நல்லுணர்வுகளைப் போற்றிப் பாராட்டுகிறோம்!

எங்கோ பனிமலைப் பாறைகளுக்கப்பால் — கடுங்குளிர்ப் பகுதிகளில்—நமது நாடு காக்க எல்லை ஓரங்களில் அணிவகுத்து நின்று பகைவரை எதிர்க்கிறார்[illegible] நமது வீரர்கள் என்றால், எந்த நம்பிக்கை அவர்களுக்கு [illegible]?

திட்டமிடுக !

என்னென்னவோ திட்டமிடுகின்றோம்; எந்த ஊரில் வேலையிருந்தால் உற்றார் உறவினர்களோடு வாழ முடியும்—எந்த அளவுக்கு வாடகை இருந்தால் நன்றாக இருக்கும்? அந்த வீட்டைப் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் செலுத்தி, எப்படி நிரந்தரமாக்கிக் கொள்ளலாம் என்றெல்லாம் திட்டமிடுகிறோமே—நமக்கு வாரிசுகளாக எத்தனை குழந்தைகள் இருக்க வேண்டும் என்று திட்டமிட வேண்டாமா? அப்படித் திட்டமிட்டால்தான் சமுதாயத்துறையில்—பொருளாதாரத் துறையில் நல்ல மாற்றத்தைக் காணமுடியும்!

—முதல்வர்

போர்க்களத்தில் சமர்புரிந்து அந்த வீரர்கள் சாய்ந்து விட்டாலும், தன்னந் தனியாகப் பிணமாய் வீழ்ந்து விட்டாலும் தம்மை எடுத்துப் புதைக்கும் அளவுக்கு வாய்ப்பில்லாமல் போய் விடும் என்பதை அவர்கள் உணர்ந்து போரிடுகிறார்கள் என்றால், எந்த நம்பிக்கை அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறது?

தாம் களத்திலே வீழ்ந்தாலும்— நாட்டிலே தம்மைப் புகழும் மக்கள்—தமது புகழ் பாடும் மக்கள்—புதிய புறநானூறு தயாரித்து, அதில் தமது பெயரைப் பொறிக்கும் கோடானு கோடி மக்கள் தம் பின்னால் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கைதான் அந்த வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறது.

முதல்வர் கலைஞர்

போர் முடிந்து விட்டது என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியாது; பகைவர்கள் பேச்சு நேற்றைக்கு ஒன்று—இன்றைக்கு ஒன்று என்ற ரீதியில் இருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட பேச்சுக்கும் இடையிலே கூட வாரியத் தலைவர் வரவேற்புரையில் குறிப்பிட்டது போல, இன்று கிடைத்திருக்கிற செய்தி—வங்க தேசத் தலைவர் முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்படுவார் என்ற செய்தியாகும்.

ஏறத்தாழ 14 ஆண்டுகள்—தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் பலமுறை சிறைக்கோட்டத்தில் அடைப்பட்டு—[illegible] வங்கத்தின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகக் குரல் எழுப்பி—மாநில உரிமையிலே பாகிஸ்தான் மத்திய அரசு தலையீடு காரணமாகப் போர்க் கொடி உயர்த்தி, உரிமை கேட்டவர்—அந்த நாட்டிற்குச் சுதந்திரமே பெற்றார் என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறார் என்றால் இது செய்தி மாத்திரமல்ல!

ஒரு மாநிலத்தின் [illegible] தலைப் பட்சமாக [illegible] செலுத்தலாம் என்று [illegible] கிற பேரரசுகள் [illegible] இருந்தாலும், [illegible] போதிக்கப்படு[illegible] என்பதை [illegible] விடக்கூடாது!

அப்படிப்பட்ட ஒரு [illegible] யின் உருவா[illegible] முஜிபுர் ர[illegible] பெறுகிறார் [illegible] இன்று கி[illegible]

போர் நி[illegible] ஏற்படுகி[illegible] பெருநி[illegible] சிங்கம் [illegible] என்ற ம[illegible]ழ்ச்சியும் [illegible] டொன்று [illegible] பேரானந்த[illegible]தோடு நீங்கள் தந்த கா[illegible]க்கு நன்றி தெரிவிக்கிறேன்.

[4—1—1972 அன்று நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு மின்வாரிய ஊழியர்கள் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை அளித்த போது முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை]



ஒளிப் பூக்கள்

பூந்துகி லுடுத்த புதுநில வழகி
நீந்தித் திரியும் நீலப் பட்டில்
வைத்துப் பின்னி வண்ணங் கூட்டித்
தைத்துத் தொடுத்த தங்கச் சிமிழ்கள்
சற்றே நகைத்துச் சாகசம் புரிந்தே
உற்றுப் பார்க்கும் ஒளியின் பூக்கள் !
பொன்னிமை தன்னைப் பூப்போல் அசைத்துக்
கண்களை ஆட்டும் கன்னியர் கூட்டம் !
சித்திரப் பூக்கள் செம்பலா ஈக்கள்
நித்திலச் சுடராம் நிலவுக் கன்னி
அறுத்துப் போட்ட ஆரச் சிதறல்
கருத்துப் பொதிந்த கவிதைக் காடு !
மேக அலைக்குள் மிதந்து கிடந்து
மோகப் பாட்டு முழக்கும் மீன்கள்!
அல்லிப் பூக்கள் அழகாய் இரவில்
நல்லிதழ் அவிழ்க்கும் நாட்டியம் அதனைப்
பார்த்துப் பார்த்துப் பன்முறை நகைப்பைச்
சேர்த்துச் சிந்தும் செந்தீத் துண்டுகள்
இயற்கைக் கன்னி என்னைக் கொஞ்சம்
மயக்க எண்ணி மையிருள் வானில்
அள்ளித் தெளித்த ஆடகப் பூக்கள்
சொல்லிக் கொடுத்த சுவைமிகு பாக்கள்.
வட்ட நிலாவின் வயிற்றுப் பிள்ளைகள்
கொட்டிக் கிடக்கும் கொடியிலா முல்லைகள்.
பூக்களைப் போலப் புதுநா ரெடுத்துக்
கோக்க முடியாக் கோமள இதழ்கள்
நிலவுக் கன்னி நீள்வான் வீதியில்
உலவும் போதில் உவகை கொண்டு
காணரும் கோலம் களிப்பொடு இட்ட
வான வாசலில் வைத்த புள்ளிகள்!
தேங்கிய கடலின் சிப்பியை வானம்
வாங்கிய நிலையால் வந்த பேறெனில்
எண்ணிப் பார்க்க எண்ணிப் பார்த்தேன்
எண்ணுவ தெப்படி? என்னைப் பார்த்தேன் !

வெற்றிக்குப் பெயர் 'விக்ரந்த்'

எதையும் தாங்கும் வலிமை மிக்க விமானந்தாங்கிக் கப்பல் ஐ.என்.எஸ். விக்ரந்த், அண்மையில் சென்னை மாநகரின் முதல் வரவேற்பைப்பெற்று மகிழ்ந்தது.

பாகிஸ்தான் போர்க்கப்பல்களையும், நீர் மூழ்கிக் கப்பல்களையும், துறைமுகங்களையும் கடுமையாகத் தாக்கித் தூள் தூளாக்கி வெற்றிவாகை சூடியது விக்ரந்த்.

இந்தியக் கப்பற்படையின் மிகப் பெரிய விமானந் தாங்கிக் கப்பலான விக்ரந்தின் மொத்த எடை 20 ஆயிரம் டன். இதன் நீளம் 705 அடி. அகலம் 128 அடி. உயரம் 166 அடி. இது 26 அடி நீரிலும், 140 அடி நீருக்கு மேலும் இருக்கிறது. இதில் 1,650 கடற்படை வீரர்களும், 150 கடற்படை அதிகாரிகளும் இருக்கிறார்கள். இந்தக் கப்பலில் ஒரே சமயத்தில் 35 விமானங்களை நிறுத்தி வைக்க முடியும்.

''நமது கப்பல் படை உலகத்திலுள்ள மற்ற நாடுகளின் கப்பல் படைக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. இந்தக் கப்பலைக் கையாளுவது என்பது எளிதான காரியம் அல்ல. இதில் பலவிதப் புதிய கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனை இயக்கும் விதத்தை நமது கப்பல் படை வீரர்கள் நன்றாகப் புரிந்து கொண்டு திறமையாகச் செயலாற்றினார்கள். அதனால் தான், வங்காள தேசத்தை இவ்வளவு எளிதில் விடுவிக்க முடிந்தது'' என்று கூறும் கப்பல் படை கேப்டன் பிரகாஷ் வீரச்சக்கரம் விருது பெற்றிருக்கிறார். லெப். கமாண்டர் குப்தாவுக்கு மகாவீர் சக்கரமும், மற்ற 10 பேர்களுக்கு வீரச்சக்கரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

இக்கப்பலைச் சேர்ந்த வீரர்களில் யாரும் உயிரிழக்கவில்லை; இக்கப்பலுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. போரின் போது விக்ரந்த் தனது போர் விமானங்களில் ஒன்றைக்கூட இழக்கவில்லை. இத்தனைச் சிறப்புக்குரிய இந்தக் கப்பலில் தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அதிகமாகப் பணியாற்றுகிறார்கள். சென்னையைச் சேர்ந்த ராம்சேகர் என்ற வீரரும் இதில் இருக்கிறார்.

கப்பலின் மேல் தளம் பரந்து விரிந்து, விமானங்கள் வந்து இறங்கவும், போகவும் வசதியுள்ளதாக இருக்கின்றது. மேல் தளத்தில் உள்ள விமானங்களைக் கப்பலின் உட்புறத்தில் கொண்டு போய் வைக்க 'ஹைடிராலிக்' முறையில் இயங்கும் 'லிப்ட்' ஒன்றும் உள்ளது. இப்படி எல்லா விமானங்களையும் கப்பலுக்குள்ளேயே நிறுத்தி வைப்பதற்கான வசதி விக்ரந்தில் இருக்கிறது.

எதிரி விமானங்களைத் தாக்கக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மேலே பொருத்தப்பட்டுள்ளன. இரட்டைப் பீரங்கிகள், கப்பலின் நான்கு பக்கங்களிலும் இருக்கின்றன. இந்தப் பீரங்கிகளால், ஐந்து ஆயிரம் அடிக்கு மேலே வரும் விமானத்தைக் கூடக் குறி வைத்துத் தாக்க முடியும்.

'டார்பிடோ' குண்டு சாதனங்கள் உள்ள விக்ரந்தில், கப்பலுக்கு அடியிலும் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. நீர் மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்க இவை பயன்படும். 14 துறைமுகங்களையும், 5 விமான நிலையங்களையும் தாக்கிய விக்ரந்த், போரில் கலந்து கொண்டது இதுவே முதல் தடவை !

''எந்த வித நீர் மூழ்கிக் கப்பல் வந்தாலும் சமாளிக்கக் கூடிய திறமை நமது கடற்படைக்கு உண்டு. நமது கடல் பகுதி நீண்டு கிடப்பதால் நமக்கு இன்னும் கப்பல்கள் தேவைப்படுகின்றன'' என்று கூறும் கேப்டன் பிரகாஷ், பஞ்சாப் மாநிலம் ஜலந்தரைச் சேர்ந்தவர். இவர் அமெரிக்காவில் இராணுவப் பயிற்சி பெற்றவர்.

வெற்றி குவித்துச் சென்னைக்கு வந்த விக்ரந்த்துக்குச் சென்னை மாநகராட்சி சிறப்பான வரவேற்பு தந்தது. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., எம்.எல்.ஏ. அவர்கள் வீரர்களுக்குக் கலை நிகழ்ச்சியும் விருந்தும் கொடுத்து மகிழ்வித்திருக்கிறார். கப்பலைச் சுற்றிப்பார்த்த முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கேப்டன்கள் பிரகாஷ், திவாரி ஆகியோருக்குக் காந்தியடிகள், அறிஞர் அண்ணா சிலைகளைப் பரிசு தந்து தம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

தருமபுரி மாவட்டம்



அதியமான் முதல் ஆங்கிலேயர் வரை

தமிழகத்தே இன்று தனித்ததொரு மாவட்டமாக விளங்கும் தருமபுரி பழந்தமிழ் இலக்கியத்தே காணப்படும் தகடூராகும். இவ்வூர் அதியமான் நெடுமான் அஞ்சியின் இருப்பிடமாய்ப் பொலிந்தது; அஞ்சியும் அவன் மைந்தன் பொகுட்டெழினியும் புலவர்களைப் புரந்தவர்கள்; அறமுரைத்த அவ்வையை ஆதரித்தவர்கள்; பல்லாண்டு இளமையுடன் வாழவைக்கும் கருநெல்லிக் கனியைப் புலவர் பெருமாட்டியாகிய அவ்வையார்க்கு அளித்த வள்ளல் அதியமான் என இலக்கியங்கள் பேசுகின்றன.

வள்ளலும் கொடை மன்னனுமாக விளங்கிய இவனுடன் பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் போர் தொடுத்தான். தகடூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். தகடூரைத் தகர்த்தெறிந்தான்; இம்மாபெரும் போரில் எழினியும் அவன் வீரர்களும் காட்டிய வீரம், என்றும் போற்றத்தக்கது; எனினும், இறுதியிலே தகடூர் வீழ்ந்தது; தகடூரை நோக்கிச் சேரன் சென்ற பயணமே 'தகடூர் யாத்திரை' என்னும் அரிய இலக்கியமாகும்.

சேரர் ஆட்சிக்குப் பின்னர், தகடூரை நுளம்பர், சோழர், ஹொய்சாலர், விசய நகர மன்னர் ஆகியோர் ஆண்டனர்.

தருமபுரியின் பழங்கல்வெட்டுகளாகக் கருதப்படுபவை ஒன்பது—பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவை மகேந்திராதி இராசன் தலைமையில் நுளம்பப் பல்லவர்கள் ஆட்சிக்கு வந்தமையைக் குறிப்பிடுகின்றன. இவர்கள் நான்கு தலைமுறையாகத் தகடூரை ஆண்டனர். இவர்தம் ஆட்சியை முறியடித்து 'நுளம்ப குலாந்தகன்' எனப்பட்ட கங்கபோன நரசிங்கன் ஆட்சிக்கு வந்தான். மல்லிகார்ச்சுன ஆலய மண்டபத்தே சில கல்வெட்டுக்கள் உள்ளன; இவை நீதியன்னன், சாண்டியன்னன் என்பார் கட்டிய கட்டடங்கள் பற்றிக் கூறுகின்றன. கோட்டையிலுள்ள மாரியம்மன் ஆலயத்தே கல்வெட்டொன்றும் காணப்படுகிறது; இதில் சிவநெறி போதித்த ஆசிரியர் ஒருவருக்கு மருதனேரி என்னும் குளத்தை நன்கொடையாக வழங்கிய செயல் கூறப்பட்டுள்ளது.

பின்னர்ச் சோழரது ஆட்சி, தகடூரிலே ஏற்பட்டது; அதுகாலை நீலகிரிச் சோழ மண்டலத்தின் பகுதியாகிய கங்கநாடும் பெருமலை நாடும் தகடூருடன் இணைந்தன. மூன்றும் குலோத்துங்கச் சோழன் காலத்தியதாய் அம்மன்னனின் ஆட்சிக் காலத்தே எழுந்த கல் வெட்டுக்கள் கோட்டையிலுள்ள காமாட்சியம்மன் ஆலயத்தே காணப்படுகின்றன; இவை சோழராட்சியை நிலை நாட்டுகின்றன. இவற்றுள்ளே ஒன்று அதியமானின் பெருமை பற்றிப் பேசுகின்றது. இந்நாளில் தருமபுரியைத் தலைநகரமாகக் கொண்ட சோழராட்சி வடஆர்க்காட்டிலேயுள்ள திருமலை சேங்கம் வரையிலும் பரவியிருந்தது.

அதமன் கோட்டைக் கல்வெட்டுக்கள் ஹொய்சாலருடைய ஆட்சி பற்றி விளக்குகின்றன. தருமபுரியிலிருந்து ஆறுமைல்கட்கப்பாலுள்ள மோடூரிலுள்ள 'சாமுண்டி அம்மன் மண்டு' என்னுமிடத்தில் தமிழ்க் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதிலிருந்து தகடூர் நாட்டிலே திருமண வரி விதிக்கப்பட்டதாய்த் தெரிகிறது; மைசூர் மாநிலத்தேயுள்ள சாமுண்டி மலையிலுள்ள துர்க்கை திருவுருவத்தோடு கூடிய சிங்கப் பெருமாள் ஆலயத்தி கு வீரசோழ தேவன் என்பான் சிற்றூரொன்றை வழங்கிய செய்தி காணப்படுகிறது.

விஜயநகர் ஆட்சியின் போது ஏரிக்கரைகளை உறுதிப்படுத்திக் காக்க நிலக்கிழார்கள் தம் வருவாயில் குறிப்பிட்ட ஒரு பகுதியை வழங்க இசைந்தமையை அந்நாளையக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

போர்ப்பலம் பொருந்தியதாய்த் தருமபுரி என்றுமே இருந்ததில்லை. 17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் கந்தர்வ நரச ராஜாவாலே அது கவரப்பட்டது. 1688-ல் சிக்க தேவராயனாலே மீண்டும் அது வெல்லப்பட்டது. பின்னர் மைசூர் ஆட்சியே 1768 வரையிலும் இருந்தது; 1768-ல் பிரிட்டிஷ் கர்னல் உட் என்பான் தமது படைகளைக் கொண்டு அந்தத் தாக்கினன்.

இவ்வாறு அதியமான் காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை களங்கள் பல கண்டது தகடூர்.

ஆங்கிலத் திரைப்படங்களில் பார்ப்பது போன்று அந்தக் காட்சிகள் உள்ளன.

கண்ணுக்கு எட்டியவரை மூன்று அடிக்குமேல் வளர்ந்த புல்வெளி.

அதன் நடுவே குறுக்கு நெடுக்காகச் செல்லும் சாலைகள்.

அந்தச் சாலை ஒன்றில் ஜீப்பில் செல்கிறோம்.

தொலை தூரத்தில் மந்தை மந்தையாக மாடுகள்...

சாலை வளைவில் திரும்பி வேறு பக்கம் செல்கிறோம்.

அங்கே ஆட்டு மந்தைகள்..

அருகே நீரோடை....

கண்ணெதிரே தெரியும் காட்சிகள்....

நம் நாட்டில் உள்ளோமா? மேலை நாட்டில் உள்ளோமா?

இயற்கையாகவே இந்த ஐயம் எல்லாருடைய உள்ளத்திலும் எழும்.

சில்லென்று அடிக்கும் குளிர் காற்று வேறு, நம்நினைப்பை உறுதிப் படுத்துகிறது.

உண்மை அதுவா?

இல்லை, இல்லை !

தமிழ் நாட்டில் உள்ள ஓர் இடம்தான். அங்குள்ள மேனாட்டின் தட்ப வெப்ப நிலை நம்மை அப்படி எண்ணச் செய்கிறது. ஆங்கிலேயர்காலத்திலிருந்து உருவானதல்லவா அந்த இடம்!

* * *

சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் பாதையிலே பயணம் செய்ய நேர்ந்தால், கிருஷ்ணகிரி அடைந்து, பின்பு அதனின்றும் 17 மைல் தொலைவில் உள்ள சூளகிரியின் பக்கம் அடைந்தவுடனே ஒரு மாற்றத்தைக் காணமுடியும்.

சில்லென்ற காற்று நம்மேனியைத் தழுவிச் செல்லும். வானுயர் மரங்கள், மலைகள் சூழ்ந்த இடங்கள், கண்ணுக்கினிய காட்சிகளைத் தரும். இன்னும் போகப் போக நாம் ஊட்டிக்கோ, கொடைக்கானலுக்கோ செல்லுகின்ற ஓர் உணர்வு அடைய முடியும். நாம் அப்பாதை வழியே சென்று ஓசூரை அடைகிறோம். பஸ் நிலையம் வந்ததும், அங்கு ஓர் வழிகாட்டிப் பலகை நமக்கு வழிகாட்டத் தயாராக நிற்கும். கால்நடை ஆராய்ச்சி நிலையம் 7 கி.மீ. என்றும் தெற்கு முகமாகச் செல்ல வேண்டுமென்றும் வழிகாட்டி சொல்லும் திசைநோக்கிச் செல்கிறோம்..

நேராக 7 கி. மீ. தொலைவில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு வருகிறோம். அங்கு வண்ண மயில்கள் நம்மை ''வா'' வென வரவேற்கின்றன. மனங்குளிர் விருந்தினர் மாளிகை நோக்கிச் செல்கிறோம்.

விருந்தினர் மாளிகையைச் சுற்றியுள்ள இடங்களின் எழிலான தோற்றங்கள்; பல வண்ணங்களில் பூத்திருக்கும் ரோஜாப்பூக்கள். இருநூறு வயதான ஆலமரம், விழுதுகள் சுற்றியுள்ள பகுதிகளில் படரக் கல் தூண்கள் நடப்பட்டிருக்கின்றன. இதுவே முதலில் நம்மைக் கவர்ந்து விடுகிறது.

* * *

விருந்தினர் மாளிகையின் முன்னால், பண்ணையின் மாதிரிப் படம் ஒன்று பெரிய அளவிலே காட்சி தருகிறது. கண்காணிப்பாளர் அவர்கள் கையிலே நீண்ட கோலொன்றை ஏந்தி அந்த மாதிரிப் படத்தில் விருந்தினர் மாளிகையிலிருந்து தொடங்கி ஒவ்வொரு இடமாகச் சுட்டிக் காட்டுகிறார். அவருக்கு அது, மிகப் பழக்கமான ஒன்று. நமக்கு உடனே புரிந்து விடுகிறது. எத்தனை எத்தனையோ பார்வையாளருக்கு எவ்வளவோ தடவைகள் சொல்லிச் சொல்லிப் பழகிப் போனவர். பேச்சிலே தடங்கலின்றி அழகாகச் சொல்கிறார்.

'' பண்ணை 1,646 ஏக்கர் அளவில் உள்ளது. கடல் மட்டத்தினின்றும் 3,015 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அதிக பட்ச வெப்பம் 30°; குறைந்த பட்ச வெப்பம் 15° சென்டிகிரேடு. மொத்தப்பரப்பில் 900 ஏக்கர் புல் வளர்க்கப் பயன்படுத்தப்படுகிறது; ஆண்டின் சராசரி மழை, 84 சென்டிமீட்டர். இப்பண்ணையில் 5 ஏரிகள் உள்ளன; 7 துளைக் கிணறுகள் உள்ளன; 3 பெரிய கிணறுகள் உள்ளன '' எனச் சொல்லத் தொடங்கியவர் ஓசூர் கால்நடைப் பண்ணையைப் பற்றிச் சுருக்கமாக விளக்குகிறார்.

* * *

நாம் முதன் முதல் செல்லும் இடம் மத்தியப்பிரிவு எனப்படும் பகுதி. இந்த மத்தியப் பிரிவில் பொலி காளைகள் அல்லது வித்துக் காளைகள் வளர்க்கப்படுகின்றன. உயர்ந்த இனங்களான சிந்தி, ஜெர்ஸி, ப்ரீஷியன் முதலிய இனக்காளைகள் கண்கவர் வனப்புடன் கம்பீரமாக நிற்பதைக் காணுகிறோம். குதிரைகள், நல்ல வாட்டசாட்டமானவை—சிற்சில வளர்க்கப்படுகின்றன.

மத்தியப்பிரிவின் மேற்புறத்தில் திட்டுத்திட்டாக மண்மேடுகள் உள்ளன. அவை என்னவென்று கேட்டால், அவை ' சைலேஜ் குழிகள் ' எனப் பதில் கிடைக்கும்.

மிஞ்சிய பச்சைத் தீவனங்கள், வெல்லப்பாகு முதலியனவற்றை மண்ணில் புதைத்து வைத்துச் சுமார் ஓராண்டுக்குப் பின்பு எடுத்து மாடுகளுக்குக் கொடுப்பார்களாம். இதை மாடுகள் யாவும் மிகவும் விரும்பிச் சாப்பிடுகின்றன. இந்த வேலை, விவசாயப் பிரிவைச் சார்ந்தது. விவசாயப் பிரிவுக்கு இரு மேலாளர்களுண்டு. இவர்கள் மாடுகளுக்குத் தேவையான புற்கள், தானியங்கள் முதலியன பயிரிட்டு விநியோகிக்கிறார்கள். இதைப் போன்றே புல்வெளிப்பிரிவுமேலாளரும் மாடுகளுக்கான புல் சுமார் 900 ஏக்கர் நிலத்தில் வளர்த்துச் சேகரித்து வைத்துக் கொள்கிறார்.

இந்தப் பண்ணையின் ஒரு சிறப்பு என்னவெனில் மற்றப் பண்ணைகளில் வைக்கோல் புல் வாங்கப்படுவது போன்று இங்கு வைக்கோல் வாங்கப்படவேண்டிய தேவையில்லை.

1828 முதல் ஆங்கிலேயராலும் 1924 முதல் வேளாண்மைத் துறையாலும், 1938 முதல் கால்நடைப் பராமரிப்புத் துறையாலும் பராமரிக்கப்பட்டு வரும் இப்பண்ணை, சமீபத்தில் இதற்கு முன்பு கண்காணிப்பாளராக இருந்தவர்கள் காலத்தில் மட்டும் சுமார் 7 லட்சம் ரூபாய்க்கு வைக்கோல் வாங்கப்பட்டதைத் தவிர வேறு ஒரு காலத்திலும் வைக்கோல் வாங்கியதில்லை எனப் பணியாளர்கள் சொல்கின்றனர்.

பின்பு நேராகக் கோழிப்பிரிவுக்குச் செல்கிறோம். எங்குப் பார்த்தாலும், வெள்ளை லக்கான், சிவப்பு போந்தா கோழிகளின் இரைச்சல் காதைத் துளைக்கின்கின்றது. குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (இங்குபேட்டர்) சுமார் 8 உள்ளன.

அப்போதுதான் முட்டையிலிருந்து வெளி வந்த குஞ்சுகள் பந்து போல், பஞ்சுபோல், பார்ப்பதற்கு மிகமிக அழகாக உள்ளன. இந்தக் கோழிப் பிரிவின் கிளையொன்று பண்ணையின் வேறோர் இடத்திலும் இருக்கிறதென்றும், அங்கும் இரு கால்நடை மருத்துவர் பணியாற்றுகின்றனர் எனவும் சொல்லக் கேட்டோம். கோழிப்பிரிவை அடுத்து இருப்பது, பன்றிப் பிரிவு. இங்கு வெள்ளை நிறப் பன்றிகள் வெள்ளை யானைகள் போன்று காட்சியளிக்கின்றன. ஒரு பன்றி, 28 குட்டிகள் கூடப் போடுவதுண்டாம்.



பன்றிப் பிரிவை அடுத்துப் பண்ணையைச் சுற்றி வருகிறோம். வழிநெடுகிலும் இருமருங்கிலும் சந்தன மரங்கள், சீசமரங்கள் காட்சியளிக்கின்றன. எங்கெங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலென மரகதக் கம்பளம் விரித்தாற் போன்ற காட்சி. ஓர் ஏரி தென்படுகிறது. அந்த ஏரியின் மையப்பாகம் தீவு போல் அழகாகக் காட்சியளிக்கிறது. இந்த ஏரியைப் புல்டோசர் மூலம் ஆழமாக்கியதிலிருந்து எடுக்கப்பட்ட கழிவு மண்ணைக் குவித்துத் தீவாக்கியுள்ளனர். இந்தத் திட்டுக்குப் போய்வரத் தோணிகள் வாங்கும் திட்டம் ஒன்று உள்ளது.

கொஞ்ச தூரம் சென்றதும் ஆடுகள் மந்தை மந்தையாக நிற்கும் காட்சி; சுமார் 1,000 ஆடுகள் வரையுள்ளன; இவை மாண்டியா இன ஆடுகள். இவைகள் கொழு கொழுவென இருக்கின்றன. இங்கு ஆடுகள் ' விரைவுத் திட்டம் ' எனும் திட்டத்தின் மூலம் வளர்க்கப் பெறுகின்றன. இந்த ஆட்டிறைச்சி மிகவும் சுவை உடையதாம்.

பின்பும், பண்ணையின் வழி வருகிறோம். வழியிலே ஏரிகள், துலைக்கிணறுகள், பெரியகிணறுகள் காட்சியளிக்கின்றன. ஒரு சில கிணறுகள் இன்னும் வேலையாகிக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் டிராக்டர்கள் உழுது நிலத்தைச் செப்பனிடுகின்றன.

பண்டகச் சாலை வழியே வருகிறோம். பண்டக சாலையின் உள்ளே நுழைகிறோம். அங்கே மற்றொருபுறம் இரும்பை அடிப்பதும், மரத்தை அறுப்பதுமான வேலை நடக்கிறது. கேட்டோம்; பண்ணைக்கு வேண்டிய முக்கிய சாமான்கள், பழுதடைந்த பொருட்களைப் புதுப்பித்தல் முதலிய வேலை இங்கு நடைபெறுகிறது. இது பட்டறைப் பிரிவு எனப் பதில் கிடைத்தது. ஒருபுறம் மாடுகளின் தீனியான பிண்ணாக்கு, பருத்தி விதை, மக்காச் சோளம், ராகி, கொள்ளு முதலியவற்றை மூட்டை மூட்டையாக அழகுற அடுக்கி வைத்துள்ளனர். தினமும், மற்றப் பிரிவுகளுக்கான தேவையை அன்றாடம் இங்கிருந்து விநியோகிக்கின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாகக் கால்நடைத் தீவனங்கள் வாங்குவதில் மிகமிகச் சிக்கனத்தைக் கையாண்டுள்ளனர். 1965–66-ல் பத்து லட்சத்துக்குமேல் வாங்கப்பட்ட கால்நடைத் தீவனம் தற்போது ஐந்து அல்லது ஆறு லட்சத்திற்குத் தான் வாங்கப்படுகிறது. இன்னும் சில ஆண்டுகளில் சோளம், கொள்ளு முதலியன மிகுதியாகப் பயிரிடப்பட்டு, தன்னிறைவை எட்டும் முயற்சியில் வெற்றி பெற்றுவிடுவார்கள்.

அடுத்து நேராகக் கால்நடை மருத்துவமனையைக் கடந்து பாற்பண்ணைக்குச் செல்கின்றோம்.

ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டு அண்மையில் கட்டப்பட்ட பால் பண்ணை அது; இரு பக்கங்களிலும் பசுக்கள் கறவைக்குத் தயாராக நிற்கின்றன.

சிந்திப் பசுக்கள்தான் மிகுதியாக உள்ளன. ஜெர்ஸி, ப்ரீஷியன் பசுக்களும் சிற்சில உள்ளன. சிந்திப் பசுக்கள் தினமும் சராசரி 6 முதல் 6½ லிட்டர் வரை பால் கறக்கின்றனவாம்; ப்ரீஷியன் தான் பால் கறவையில் முதன்மை பெற்று விளங்குகிறது. அது சராசரி 12 லிட்டர் வரை கறக்கிறது. அதன் உடலில் சில இடங்கள் கறுப்பாகவும் சில இடங்கள் வெண்மையாகவும் பட்டுப்போல் இருக்கின்றன; பசுக்கள் நல்ல முறையில் வளர்க்கப்படுகின்றன.

நாள் தோறும் சுமார் 800 லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. சுற்று வட்டாரத் தேவைக்கான பால் விநியோகித்து மிஞ்சிய பால் சென்னைக்கு நாள்தோறும் எடுத்துச் செல்லப்படுகிறது. சென்னைக்கு அனுப்பப்படும் பால் குளிர்சாதன அறையில் வைத்துக் குளிர்விக்கப்பட்டபின்பு எடுத்துச் செல்லப்படுவதால் பால் கெடுவதில்லை. மிஞ்சிய பாலிலிருந்து மிகக் குறைவான அளவில் வெண்ணெய்யும் எடுக்கின்றனர். வெண்ணெய் இளமஞ்சள் நிறத்தில் உள்ளது. மிகச் சுவையாக உள்ளது.

1971-ஆம் ஆண்டு சனவரி 19-ஆம் நாள் முதல் பெரிய அளவு கோழிக் குஞ்சு பொரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல் முறைக்கு வரத் தொடங்கிற்று. இத்திட்டத்தின் மூலம் மாதந் தோறும் 20,000 குஞ்சுகள் கோழியின் விரிவாக்க நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. கால்நடை மருத்துவர்களுக்கு இயற்கை, செயற்கை முறைகளில் குஞ்சுகள் வர்க்கம் பிரித்தல் தெளிவாகச் சொல்லித் தரப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் 2,62,323 குஞ்சுகளும், 12,78,527 முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 3,04,026 முட்டைகள் இன விருத்திக்காக விற்கப்பட்டன. 67,904 கோழிகள், 1,27,862 குஞ்சுகள் இனவிருத்திக்காக விற்கப்பட்டன. மேலும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இந்தியவிவசாய ஆராய்ச்சிக்கழக மாணவர்கள், பல்வேறு கல்லூரி மாணவர்கள் இங்கு நேரில் வந்து பயிற்சி பெற்றுச் செல்கின்றனர். தற்போது பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை இதுதான் :

1.	மாடுகள்	969
2.	ஆடுகள்	968
3.	பன்றிகள்	229
4.	கோழிகள்	10,648
5.	குதிரைகள்	10

இப்பண்ணை கடந்த 29 ஆண்டுகளாகத் தமிழகப் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும் பங்கை வகித்து வந்துள்ளது. இங்கு உற்பத்தியாகும் பால், முட்டை, இறைச்சி ஆகியவைகள் இப்பண்ணையை அடுத்துள்ள பகுதிவாழ் மக்களுக்கு நல்ல சத்துணவாகி, அம்மக்களின் ஆரோக்கியத்தைப் பெருக்கியுள்ளதுடன், உணவுப் பற்றாக்குறையை நீக்கத் தற்பொழுதுள்ள நெருக்கடியான நிலையில் தன் பங்கைச் செவ்வனே ஆற்றி வருகின்றது.

தமிழகத்தின் தலைசிறந்த கால்நடைப் பண்ணைகளில் இப்பண்ணை முதன்மை பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இதன் வரலாறு இந்நாட்டின் சரித்திரத்துடன் பிணைந்துள்ளது. மைசூர் பேரரசின் மன்னன் திப்பு சுல்தானால் அவன் படைகளுக்குத் தேவையான குதிரைகளை உற்பத்தி செய்யத் தொடங்கப் பெற்றுப் பின்னர் 1828-ல் வெள்ளையர்களால் கைப்பற்றப்பட்டு, இராணுவக் குதிரைகள் வளர்க்கப்பட்டு வந்தன. 1924-ல் தமிழக விவசாயத் துறையினரின் கீழ்க் கால்நடைகள் பராமரிக்கப்பட்டுப் பின்னர் 1938-ல் இப்பண்ணை கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இயங்கி வருகிறது.



தீவனம் தின்ற மாடுகள் சோம்பிக் கிடக்காமல் தேகப் பயிற்சி செய்யும் சீரான காட்சி இது

1. உயர்ரகப் பொலிகாளைகள் மாநிலமெங்கும் விநியோகித்தல்.

2. உயர்ரக மாடுகளான சிந்தி ஜெர்ஸி, ப்ரீஷியன் இவைகளைப் பெருக்கி வளர்ச்சியடையச் செய்தல்.

3. மாண்டியா இன ஆடுகளை நவீன முறையில் பராமரித்து நல்ல ரக ஆடுகளை விநியோகித்தல்.

4. உயர் ரகக் கோழிகளான வெள்ளை லக்கான், சிவப்புப் போர்த்தா, ஆஸ்டிரலாப் முதலியவற்றை நல்ல இயந்திர சாதனங்கள் மூலம் உற்பத்தி செய்து மாநிலத்தின் பல பகுதிகளிலும் விநியோகித்தல். கோழிக்குஞ்சு பொரிப்புத் திட்டத்தின் கீழ் மாதம் 20,000 குஞ்சுகள் (எம்லேன் ஆஸ்டிரலாப்) உற்பத்தி செய்து கோழி இன விரிவாக்க நிலையங்கள் மூலம் கோழி வளர்ப்போருக்கு விநியோகித்து நல்லரகக் கோழிகள் நாடெங்கும் பரவ அதன் மூலம் நல்ல சத்துள்ள உணவு, முட்டைகள் உற்பத்தி செய்ய வழி வகுத்தல்.

5. உயர்ரகக் குதிரைகள் சிறு அளவில் பராமரிக்கப்பட்டுச் சுற்றியுள்ள குதிரைகளின் தரத்தை உயர்த்தல்.

6. விவசாயிகளுக்கு உயர் ரகப் புல்நாற்றுகள் விற்றல்.

7. கால்நடை மருத்துவத் துறைப் பட்டப்பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் செயல்முறை விளக்கங்கள் கொடுத்தல்.

இந்த இலட்சியங்களோடு இயங்கும் ஓசூர் கால்நடைப் பண்ணை இந்தியாவிலேயே சிறந்த கால் நடைப் பண்ணைகளில் ஒன்றாகும்.

இங்கு உள்ள சிறந்த சிந்தி மாடுகள் போன்று வேறு எங்கும் கிடையாது. இங்கிருந்து சிந்தி மாடுகள் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

இந்தக் கால்நடைகள் போன்று அளவின்றிப் பெருகினால் ஆரோக்கியமான வாழ்வு மட்டுமல்ல, நம் நாட்டுச் செல்வமும் பெருகும்.

வெண்பாப் போட்டி-27

முறிப்படி : காரைத் தொழுவீர் களித்து

முடிவுத் தேதி : 1—2—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
" தமிழரசு " அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

முன்னேற்றத்திலும்
செழிபபிலும்
எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

TANSI

தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனாமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசையேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

பட்டொளி வீசும் பட்டுத்தொழில்

எவ்வளவோ பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும் தருமபுரி மாவட்டம் பட்டுத் தொழிலில் பட்டொளி வீசிப் பறக்கிறது. காரணம் ஓசூரின் தட்ப வெப்ப நிலைதான்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயி ஒருவரைச் சந்தித்துச் சில கேள்விகளைக் கேட்கிறோம். அவர் தன்னுடைய பதில்களை முழுமூச்சில் சொல்கிறார்.

“ நான் ஆற்றோரத்தில் புறம்போக்கு நிலத்திலே பட்டுச் செடி நட்டு இருந்தேன். 5, 6, பட்டுக் கூண்டு அறுவடை கூட நல்லபடி எடுத்தேன். அதனாலே அந்த நிலத்தையே இப்போ எனக்கு அடமானம் செய்து கொடுக்கறாங்க.

“ பட்டுச்செடியின்னா உங்களுக்குத் தெரியுமா? அது தான் முசுக்கொட்டைச் செடி. அதைக் கம்பளிச் செடின்னும் சொல்லுவாங்க. பட்டுப்புழு வளக்கறதுக்கு அதுதான் ஆதாரம். குச்சி வள்ளிக்கிழங்கு நடறதுக்கு எப்படி நிலத்தை உழுது பண்படுத்துறோமோ அதுமாதிரி செய்து, பட்டு விதைக்குச்சிகளை 6 அங்குலத்திற்குத் துண்டு துண்டா வெட்டி ஒன்றரை அடிக்கு ஒரு அடி என்ற அளவுக்குக் குச்சிகளை நடவேண்டும். நட்ட நான்கைந்து மாதங்களில் பட்டுச் செடி, இலை பறிக்கிற அளவுக்கு வளர்ந்து விடும்.

“ பட்டு இலாகா அதிகாரிங்க அடிக்கடி நம்மகிட்டே தொடர்பு வெச்சுக்கிட்டுத் தோட்டத்தை அப்பப்போ பாத்துக்கிட்டிருப்பாங்க. இலை நல்லா வந்த சமயம் பார்த்து அதுக்குத் தேவையான அளவு முட்டைகளைச் சகாயவிலைக்குத் தருவிச்சுக் கொடுப்பாங்க. அவங்களே முதல் இரண்டு மூன்று பட்டுக்கூண்டு அறுவடைகளை, கூட இருந்து கவனிச்சு நமக்கும் சொல்லிக் கொடுப்பாங்க. அதற்குள்ளே நாமும் பட்டுப்புழு வளர்ப்பது எப்படின்னு நல்லபடி தெரிஞ்சுக்கலாம்.

“ பட்டுப்பூச்சி, முட்டை குஞ்சு ஆனதுல இருந்து ஒரு நாளைக்கு ஐந்து முறை தீனி கொடுத்து வளர்த்தால் பட்டுக் கூண்டு அறுவடை செய்ய 25 நாளாகும்.

“ நெல்லு பயிரிடறோம்; ராகி பயிரிடறோம் ; அதுக்கு வருஷம் பூரா வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. அப்படி விவசாய வேலை இல்லாத நாட்களில் வீட்டிலுள்ள பிள்ளைகளும், பெண்களும் ஏன், நாம் கூட சும்மாதான் சோம்பலா இருக்க வேண்டி இருக்கும். இதுபோன்ற சமயத்திலெல்லாம் நாம் இந்தப் பட்டுத்தொழிலை உபதொழிலாகச் செய்யலாமே! இதுக்கு வேலை அதிகம் கிடையாது. சிறுவர், சிறுமிகளும் ஓய்வு நேரங்களில் இந்த வேலையைச் செய்யலாம். மற்றப் பயிர்த் தொழிலில் ஒரே தரமாக வருமானம் கிடைப்பது போல் இதில் கிடைக்காமல் வருடம் பூராவும் இரண்டுமாதங்களுக்கொருமுறை விதம் கிடைப்பதால் இந்தப் பணத்தை மற்றப் பயிர்ச் செலவுகளுக்குக் கடன் வாங்காமல் நாம் ஈடுசெய்து கொள்ளலாம்.

''சொல்லப்போனால் பட்டுத் தொழில் நமது வருவாயை உயர்த்தும் குடிசைத் தொழில். பட்டுத் தொழிலை மற்ற விவசாயத் தொழிலோடு செய்வதால் மற்ற தொழில்கள் எந்த வகையிலும் பாதிக்காது. காரணம், பட்டுத் தொழிலில் உழைப்பு மிகவும் குறைவு. மேலும் பட்டுச்செடி ஒரு தடவை நட்டால் 20 வருஷங்களுக்கு இருக்குமாம். வளர்ந்த குச்சியை வருஷமிரண்டு முறை அறுக்க வேண்டியிருக்கும். அறுத்த அந்தக் குச்சிக்கு வண்டி பாரத்திற்கு 20 ரூபாய் வீதம் கொடுத்து அதையும் அரசாங்கம் வாங்கிக் கொள்ளும். புழு வளர்ப்பின் கழிவெல்லாம் மாடுகளுக்குத் தீனியாகும், வயலுக்கு நல்ல உரமுமாகும்.''

நீண்ட நேரம் பேசி வந்தவர் இப்பொழுதுதான் நிறுத்துகிறார். இன்னும் கொஞ்சம் கேட்டால் நம்மைத் தருமபுரி மாவட்டத்திலேயே தங்கிப் பட்டுத்தொழிலில் ஈடுபடும்படிச் சொல்லிவிடுவரர். அவ்வளவு ஆர்வம் அவருடைய பேச்சில் தெரிகிறது. அவருடைய ஆர்வத்திற்குக் காரணம் அந்த அளவுக்கு அரசாங்கம் உதவி செய்து வருவதுதான்.

அவரிடம் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டு ஒசூரில் தொழில் வணிகத் துறையின் பட்டுப் பண்ணைக்குச் செல்லுகிறோம். அங்கே உள்ள பட்டு வளர்ப்புப் பகுதிகளைப் பார்வையிடுகிறோம்.

இந்தப் பட்டுப் பண்ணையிலிருந்து பட்டுப் பூச்சி முட்டைகளை கோவா, ஜம்மு—காஷ்மீர், மேற்கு வங்காளம் போன்ற வெளி மாநிலங்களும் விரும்பி வாங்கியுள்ளன.

அங்கே நாம் கண்டும், கேட்டும், அறிந்த செய்திகளின் தொகுப்புக் கீழே தரப்படுகிறது.

பட்டுத்தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. பட்டுத்தொழில் குறைந்த முதலீட்டில் நிறைந்த வருவாயைத் தருகிறது. ஆண்டுக்கு ஆறுமுறை வருவாய் தரக்கூடிய ஒரே தொழில் பட்டுத் தொழிலே! பட்டுத் தொழில் விவசாயிகளுக்கும், வீட்டிலுள்ள பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் முழு நேர வேலை வாய்ப்பை உண்டாக்கிக் கிராம வளர்ச்சிக்கு உதவுகிறது.

குறுகிய காலத்தில் தொழில் துறையில் முன்னேற்றமடைந்த ஜப்பான் நாட்டில், பட்டுத் தொழில் மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கிறது. உலகப் பட்டு உற்பத்தியில் இந்தியா நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. தொன்றுதொட்டு தமிழ்நாட்டுப் பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்திருக்கிறது. 1956-ஆம் ஆண்டு வரையில் பட்டு உற்பத்தியில் முன்னணியில் இருந்த தமிழ்நாடு மொழிவழி மாநிலப் பிரிவினையின் போது 22,000 ஏக்கர்களில் முசுக் கொட்டைச் செடி சாகுபடி செய்யப்பட்ட கொள்ளேகாலம் பகுதி மைசூர் மாநிலத்தில் சேர்ந்ததால் பின்னிலை அடைய நேர்ந்தது.

அதற்குப் பின்னர் பட்டுத் தொழில் வளர்ச்சி அடையமூன்று திட்ட காலங்களில் பலவித முயற்சிகள் செய்யப்பட்டன. அண்மைக் காலத்தில் தமிழக அரசின் தீவிர முயற்சிகளால் பட்டுத் தொழில் வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது.

தமிழ்நாட்டுப் பட்டு உற்பத்தியில் தருமபுரி மாவட்டம் அதிலும் ஓசூர் வட்டம் தனியிடத்தைப் பெற்று இருப்பது குறிப்பிடத் தக்கது.

பொருளாதாரத்தில் மிகவும் பிற்பட்ட ஒசூர் பகுதியின் பருவ நிலையும், சமூகப் பொருளாதார நிலையும், பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்குச் சாதகமாக உள்ளன. பட்டுச் செடி ஒரு முறை நடவு செய்தால் 20 ஆண்டுகள் தொடர்ந்து பயனளிக்கும்.

சாதாரணமாக முசுக்கொட்டைச் செடி மூன்றுவது ஆண்டில் முழுப்பயனைத்தர ஆரம்பிக்கின்றது.

முசுக்கொட்டைச் செடிகளைப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு நன்செய் நிலத்தில் ஏக்கருக்கு ரூ. 2,000 முதல் 4,000 வரையும், புஞ்சையில் ரூ. 500 முதல் 800 வரையும் நிகர வருமானம் கிடைக்கின்றது. பாப்பாரப்பட்டியைச் சேர்ந்த திரு வெங்கட்ராமன் என்ற விவசாயிக்குப் பயிர் நட்ட முதலாண்டே நன்செய் நிலத்தில் ரூ. 5,000 வருமானம் இவ்வாண்டு கிடைத்திருக்கிறது. இதன் காரணமாக 1967-ஆம் ஆண்டில் 300 ஏக்கரில் சாகுபடி யாகியிருந்த முசுக் கொட்டை விவசாயம், இந்த ஆண்டில் 1,800 ஏக்கர்களாக உயர்ந்துள்ளது. இத்தொழிலால் தற்பொழுது ஒசூரில் 2,500 குடும்பங்கள் நேரடியாகப் பயனடைகின்றன.

புளியோ புளி!

தருமபுரி மாவட்டம் புளிக்குப் பெயர் பெற்றது.

மாவட்டம் முழுவதும் ஏராளமான புளிய மரங்கள் உள்ளன. ஐதரலி, திப்பு சுல்தான் காலத்திலேயே ஏராளமான புளிய மரங்கள் பயிரிடப்பட்டதாகவும், சாலையின் இரு மருங்கிலும் புளிய மரங்களை வளர்க்க வேண்டும் என்று மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்றும் சொல்கிறார்கள்.

சேலத்திலிருந்து தருமபுரி மாவட்டத்திற்கு நுழையும் வழியில் தருமபுரியின் எல்லையில் உள்ள ஊர் தொப்பூர்.

இவ்வூருக்கு அருகே உள்ள தொப்பூர் கணவாய்ப் பகுதியில் கிராமப்புறச் சிறப்புத் திட்டத்தின் கீழ்—வன வளர்ப்புக்காக 35,000 புளியங்கன்றுகள் பெரு நாற்றங்காலில் பயிரிடப்பட்டுள்ளன.

இவை தருமபுரி மாவட்டத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் நடப்படும்.



கருங்கல்லுக்கும் மெருகிடலாம் தெரியுமா? நம்ப மறுக்கிறீர்களா? நம்புங்கள், கருங்கல்லுக்கும் மெருகிட்டுப் பளபளப்பாக்கலாம்.

கருங்கல்லுக்கும் மெருகிடலாம்

சென்னை அண்ணா சதுக்கத்திலுள்ள நினைவுத் தூண், அண்ணா மீளாத்துயில் கொண்டுள்ள இடத்தின் மேடை முதலியனவும் மெருகு ஏற்றிய கருங்கற்களால் ஆனவையே. அவை, தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலுள்ள கருங்கல் மெருகிடும் நிலையத்தில் மெருகிடப்பட்டுச் சென்னைக்குக் கொண்டுவரப் ட்டவை.

மெருகிடுவதற்கு ஏற்ற கருங்கற்களைக் கொண்ட குன்றுகள் தென்னாட்டிலே தருமபுரி மாவட்டத்தில்தான் உள்ளன.

ஏறத்தாழ நாற்பத்தைந்து குன்றுகள் மெருகிடுவதற்கு ஏற்ற கற்களை உடையனவாக உள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் வணிகத் துறையின் பொறுப்பில் இயங்கும் ஒரே ஒரு கருங்கல் மெருகிடும் நிலையம், கிருஷ்ணகிரியில் உள்ளது. இந்தக் கருங்கல் மெருகிடும் நிலையம் தொடங்கி இரண்டு மூன்று ஆண்டுகள்தான் ஆகின்றன.

ஆனால், ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பத்தில் பத்துப் பதினைந்து கருங்கல் மெருகிடும் நிலையங்கள் உள்ளன. இவை அனைத்தும் தனியார் பொறுப்பில் இயங்குபவை. இந்த மெருகிடு நிலையங்களுக்குத் தருமபுரி மாவட்டங்களிலுள்ள குன்றுகளிலிருந்துதான் கருங்கற் பாறைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

கருங்கல்லுக்கு மெருகிடும் தொழில் நாளுக்கு நாள் வளரக் கூடிய-வளர்ந்து வரும் தொழில். இப்பொழுது வெளிமாநிலங்களிலிருந்தும் மெருகிட்ட கருங்கற்கள் தேவை என்று கேட்கின்றனர்.

கருங்கல் மெருகிடுவது எப்படி என்று முதலில் பார்ப்போம்:

மெருகிடுவதற்குத் தகுதியாக உள்ள குன்றுகளிலிருந்து பாறைகள் தேவையான அளவில் வெட்டப்படுகின்றன. அங்கிருந்து அப்பாறைகள் மெருகிடும் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டுப், பயன்படுத்தக் கூடிய அளவுக்கு உளியைக் கொண்டு செதுக்கப்படுகின்றன.

செதுக்கப்பட்ட கற்கள், படத்தில் காட்டப்பட்டுள்ள இயந்திரத்தில் வைக்கப்பட்டுக் கனமான இரும்புத் தூள்கள் மேலே தூவப்பட்டு அரைக்கப்படும். இதுபோன்று மேற்பரப்பு ஆறு வகைத் தூள்கள் போட்டு அரைக்கப்படுகின்றது.

முதலில் சொரசொரப்புக் கொஞ்சம் குறைகிறது. பிறகு படிப்படியாகக் குறைகிறது. முதலில் கனமான இரும்புத் தூள்களால் மேற் பரப்பு அரைக்கப்படுகிறது. பின்னர் மெல்லிய இரும்புத் தூள்களால் மேற்பரப்பு அரைக்கப்படுகிறது. அதன் பின்னர் சில இரசாயனத் தூள்களைக் கொண்டு தேய்க்கின்றனர். கருங்கல் மிகப் பளபளப்பாகி விடுகிறது.

கருங்கல்லின் ஒரு பக்கத்தை மட்டுமின்றி எல்லாப் பக்கங்களையுமே இப்படிப் பளபளப்பாக்கி விடலாம்.



கிருஷ்ணகிரியிலுள்ள கருங்கல் மெருகிடும் நிலையத்திலிருக்கும் இயந்திரங்கள் இறக்குமதியானவை அல்ல. அவை உள்நாட்டிலேயே தயாரானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மெருகிடப்படும் கருங்கற்களால் நினைவுக் கற்கள், தூண்கள், மாளிகையின் அலங்காரக் கற்கள், பெயர்க்கற்கள், திறப்புவிழா, கால்கோள் விழாக் கற்கள் மற்றும் பல்வகையான கற்களைத் தயார் செய்யலாம்.

ஒருமுறை மெருகிடப்பட்ட கருங்கல், பளபளப்புக் குறையாமல் இருநூறு ஆண்டுகள் வரை இருக்கும்.

ஆனால், கடப்பைக் கல்லில் மெருகிடுவது மிக விரைவில் பளபளப்புக் குன்றிவிடும். இந்த உண்மை எல்லாருக்கும் தெரியத் தொடங்கினால் கருங்கல் மெருகிடும் நிலையத்தின் வளர்ச்சி வியக்கத் தக்க வகையில் பெருகும்.

M

தருமபுரி மாவட்டத்தி
கிடைக்கும் மெருகு ஊட்டு
வதற்கு ஏற்ற கற்கள் ராஜஸ்
தான் மாநிலத்திலும் கிடைக்
கின்றன என்றாலும், அவை
சிவப்பு வண்ணங்களில்தான்
கிடைக்கின்றன. தருமபுரி மா
வட்டத்தில் கிடைப்பது போன்ற
கருங்கற்கள் அல்ல.

கருங்கல் மெருகிடும் தொழில்
பற்றியும், கருங்கற்களில்
மெருகிட்டுச் செய்யப்படும்
பொருள் பற்றியும் எல்லாருக்கும்
தெரியுமளவில் இப்பொழுதுதான்
விளம்பரமாகி வருகிறது. இந்
நிலை வளர வளர இப்பொழுது





கிருஷ்ணகிரியிலு
கருங்கல் மெரு
நிலையத்தைப் போ
தொழில் வ
துறையின் சா
மேலும் பல நிலைய
தோன்ற முடியும்

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ருஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath

CHETTINAD BRAND

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.



செலவைக் குறைக்கும் உழவுக் கருவி—3

“இந்தா புள்ளே செங்கமலம் பருத்திக் காட்டுக்குக் களையெடுத்திட்டியா?” என்று அதிகாரத்தோடு கேட்டார் சிறுநிலக்கிழார் சின்னசாமி.

“நாலு நாளா வெளியூரில் திரிஞ்சிப்புட்டு, வந்ததும் வராததுமா அதிகாரம் பண்ணுறியே மச்சான்?” என்றாள் செங்கமலம்.

“அதிகாரம் பண்ணலே புள்ளே! காலத்தில் களையெடுக்கலேன்னா, கண்டு முதல் கொறஞ்சு போகும். அதனால் தான் கேக்கறேன்?”

“களையெடுக்கறதுக்குக் கூலியாள் கிடைக்கலே மச்சான்!”

“ஏனாம்?”

“கூலிக்கு வேலைக்கு வர்ர பொம்பளைங்கெல்லாம் சோளம், கம்பு, வரகு அறுவடைக்குப் போயிடுறாங்க. அந்த வேலைக்கு அதிகக் கூலி கிடைக்குதாம். அதுபோலக் கூலி கொடுத்தாத் தான் களையெடுக்க வருவாங்களாம்.”

“என்னா புள்ளே! அறிவில்லாமெ பேசறே! அதே கூலியை நீ கொடுத்துக் களையெடுக்கறது தானே!”

“களையெடுக்க ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஒண்ணரை ரூபா கூலி கேக்குறாங்க. ஒரு ஏக்கருக்கு 12 கூலியாள் வச்சுக் களையெடுக்கப் பதினெட்டு ரூபா வேணுமே! நீ கொடுத்துட்டுப் போனது பத்து ரூபா தானே!”

“ஒன்பது ரூபாயெக் கொண்டு அரை ஏக்கரில் களையெடுத்து இருக்கலாமே! உனக்கு அறிவே இல்ல புள்ளே!”

“இந்தா மச்சான்! எனக்கு அறிவில்லேன்னு அடிக்கடி சொன்னே, நான் எங்க அம்மா வூட்டுக்குப் போயிடுவேன்!”

“போவடி போவே!”

“பின்னே என்ன மச்சான்! நாலு நாளா நானே பருத்திக் காட்டுக்குக் களையெடுத்து அரை ஏக்கரை முடிச்சுட்டேன். என் கைகளைப்பாரு மச்சான்!” என்று கூறிவிட்டுச் சின்னசாமியின் முன்னால் செங்கமலம் தன் கைகளைக் காட்டினாள்.

செங்கமலத்தின் கைகளில் கொப்புளங்கள் சிவந்து காணப்பட்டன. அதைக் கண்டதும் சின்னசாமி “அடிப்பாவி! உனக்கு ஏண்டி இந்த வேலை? கூலியாள் வைத்துக் களையெடுக்கச் சொன்னா, நீயேன்டி களையெடுத்தே?” என்று வருத்தத்துடன் சொன்னார்.

“நாலா நாளு ரேடியோவிலே நம்ம கலைஞரு பேசினாரு! எல்லா வகையிலும் செலவைக் கொறச்சு சிக்கனப்படுத்துங்கன்னு. சேமிப்பில் ஒரு பகுதியை நாட்டுப் பாதுகாப்புக்கு மனமுவந்து கொடுங்கன்னு சொன்னாரு! அதனாலே நானும் இப்படிச் சிக்கனப்படுத்தினேன். அதைப் பாதுகாப்பு நிதிக்கு அனுப்பி வைக்கணும் மச்சான்!”

“பரவாயில்லே புள்ளே! உனக்குக் கூடப் புத்தி வந்துட்டுதே!”

“போ மச்சான்! இண்டல் பண்றியே!”

“உண்மையாகத்தான் புள்ளே சொன்னேன்!”

“அது கிடக்கட்டும் மச்சான்! நீ போய் மீதி அரை ஏக்கரையும் களையெடுத்துட்டா, துட்டு மிச்சமாகும் மச்சான்! அதையும் பாதுகாப்பு நிதிக்கு அனுப்பிடலாம்”.

“கவலைப்படாதே புள்ளே! களையெடுப்பதற்காகவே ஒரு பொறி வாங்கியாந்துட்டேன். வா திண்ணையிலே இருக்கு, காட்டுறேன்” என்று கூறிவிட்டு, வீட்டின் உள்ளே இருந்து திண்ணைக்கு வந்தார் சின்னசாமி.



புன்செய் நிலக் களையெடுக்கும் பொறி

அவரைத் தொடர்ந்து செங்கமலம் வெளியே வந்தாள். சின்னசாமி தான் வாங்கி வந்து வைத்திருந்த பொறியை எடுத்துப் ''பாத்தியா புள்ளே! இதுதான் புஞ்சை நிலக் களையெடுக்கும் பொறி'' என்றார்.

''இதென்ன மச்சான் இவ்வளவு உயரம் இருக்கு?''

''களைக்கொத்து வச்சுக்கிட்டு நீ முதுகு ஒடியக் குனிஞ்சுக்கிட்டே களையெடுக்க வேண்டியதில்லே! இனிமே இந்தப் பொறியைக் கொண்டு, நின்னுகிட்டே சுலபமா களையெடுக்கலாம்!''

''வேடிக்கைப் பேச்செல்லாம் வேண்டாம் மச்சான்! விளக்கமா சொல்லு!''

''வேடிக்கையுமில்லே! ஒன்னுமில்லே! உண்மையைத்தான் சொல்லுறேன். கேட்டுக்கபுள்ளே!

''சரி! சரி! சொல்லுமச்சான்!''

''இதோ பாரு! இந்தக் கைப்பிடிகளைப் பிடிச்சுக்கிட்டுப் பொறியை முன்னே தள்ளினா, பிறைவடிவத்தில் உள்ள மூன்று சக்கரமும் சுத்திச்சுத்தி முன்னே போகும். சக்கரத்திற்குப் பின்னாடி 2 முக்கோண வடிவக் கத்திகள் இருக்குப்பாரு. அவை நிலத்தையும், களைகளையும் கிளறிவிடும். அந்தக் கத்திகளுக்குப் பின்னாடி பட்டையா கத்தி மாதிரி இருக்குதே, அதுக்குக் ''குண்டகா கத்தி'ன்னு பேரு. அது களைகளை வேரோடு செதுக்கிச் செதுக்கித் தள்ளிவிடும்.''

''அது'சரி மச்சான்! அந்தக் கத்தி பயிரை வெட்டிப் போடாது?''

''புத்திசாலித்தனமானகேள்வி கேட்டெ புள்ளே! இந்தப் பொறியை வரிசை வரிசையாக வெதச்சிருக்கிற வயலில் தான் பயன்படுத்தலாம். நாட்டு முறையிலே கையால் விதைகளை விசிறி வெதச்சிருக்கிற வயலில் இதைப் பயன்படுத்த முடியாது புள்ளே!''

''இதைக் கொண்டு ஒரு நாளைக்கு எவ்வளவு நிலத்திலே களையெடுக்கலாம்?''

''8 மணி நேரத்திலேகொறஞ்சது கால் ஏக்கரில் களையெடுத்திடலாம். கவுடு சூது இல்லாமெ, உண்மையா உழச்சா, இந்தப் பொறியைக்கொண்டு 8 மணி நேரத்தில் அரை ஏக்கரில் கூடக் களையெடுத்திடலாம். இதைச் சும்மாண்ணு நினைக்காதே புள்ளே! செலவைக் குறைக்கும் சிக்கனக் கருவி!''

''இதையெல்லாம் எப்படி மச்சான் தெரிஞ்சுகிட்டே!''

''கோயம்புத்தூர் போனேன் புள்ளே! அங்கே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்'னு ஒண்ணு இருக்கு. என் சிநேகிதன் கூட, அதைப் பார்த்துட்டு வருவோமுன்னு போனேன். அங்கே ஒரு வயலில் இந்த மாதிரி பொறியைக் கொண்டு பருத்திக்குக் களையெடுத்துக்கிட்டு இருந்தாங்க. விசாரிச்சு வெவரம் தெரிஞ்சுக்கிட்டு, இதை வாங்கியாந்துட்டேன்''.

''இது எம்மா ரூபா மச்சான்?''

''அம்பது ரூபாய்!''

''ஏது மச்சான் அவ்வளவு பணம்?''

பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.

தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19



''பருத்தி வித்துப் பணம் இருந்தது. வாங்கியாந்துட்டேன்''.

''பணத்தைத் தெண்டம் பண்ணிபுட்டே மச்சான்! அம்பது ரூபாய்க்கு இதுவேலைசெய்யுமா?''

''என்னா புள்ளே! அப்படிக் கேட்டுப் புட்டே! வேணுமின்னா இப்பவே வா! வயலுக்குப் போய் களையெடுத்துக் காட்டுறேன்!'' என்று சின்னசாமி திண்ணையிலிருந்து எழுந்தார்.

''சரி வா மச்சான்! சந்தேகம் எதுக்கு? நேரிலேயே பாத்துடலாம்!'' என்று கூறிக் கதவைப் பூட்டிக்கொண்டு, செங்கமலம் வயலுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

துப்பாக்கியைத் தோளில் ஏந்திக்கொண்டு, எதிரியைத் தாக்க விரைந்து நடைபோடும் போர் வீரனைப் போல், சின்னசாமி, களையெடுக்கும் பொறியைத் தோளில் வைத்துக்கொண்டு கம்பீரமாக நடந்து கொண்டிருந்தார். அவரைப் பின் தொடர்ந்து செங்கமலம் சென்று கொண்டிருந்தாள்.

சின்னசாமியும், செங்கமலமும் பேசிக்கொண்டதைக் கேட்டுக்கொண்டிருந்த அக்கம் பக்கத்து வீட்டுக் காரர்களும், வேடிக்கை பார்ப்பதற்காக, அவர்களைப் பின் தொடர்ந்து சென்றனர்.

பருத்தி வயலை அடைந்தவுடன் திரும்பிப் பார்த்தார் சின்னசாமி. அப்பொழுதுதான் அவரைப் பின் தொடர்ந்து பலர் வருவதைக் கண்டார்.

புதுமையைச் செய்யப் போகிறோம் என்ற புத்துணர்வுடன், புன்செய் நிலத்தைக் களையெடுக்கும் பொறியின் கைப்பிடிகளைப் பிடித்துக் கொண்டு முன்னுக்குத் தள்ளினார். அப்பொறி முன்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

துப்பாக்கிக் குண்டுகள் பட்டுத் துடித்து விழும் பகைவர்கள் போல், மண்ணில் வேரூன்றி நிலைத்திருந்த களைகள் வேருடன் செதுக்கப்பட்டு நிலைகுலைந்து விழுந்தன. சற்று நேரத்திலேயே பதினைந்து பருத்தி வரிசைகளில் களையெடுத்துவிட்டார்.

செங்கமலமும், மற்றவர்களும் களையெடுக்கப்பட்ட இடங்களில் களைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். களைகள் வேருடன் செதுக்கப்பட்டுக் கிடப்பது கண்டு வியந்தனர். தன் மச்சான் செலவைக் குறைக்கும் சிக்கனக் கருவியை வாங்கி வந்துள்ளார் என்று எண்ணிச் செங்கமலம் சிந்தை மகிழ்ந்து கொண்டிருந்தாள். அப்பொழுது சின்னசாமி செங்கமலத்தின் அருகே வந்து, ''களை எப்படி வெட்டப்பட்டிருக்குன்னு பாத்தியா புள்ளே! நம்ம வேலை முடிந்த பிறகு இதை வாடகைக்கும் கொடுத்துச் சம்பாதிக்கலாம் புள்ளே! பணத்தைத் தெண்டம் பண்ணிப் புட்டேன்னு சொன்னியே! இப்ப என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

''நல்லாத்தான் களையெடுத்திருக்கு, ஆனா வரிசையா விதைச்சிருந்தா தானே இதாலே களையெடுக்கலாம் போலிருக்கு?'' என்றாள் செங்கமலம்.

''ஆமாம் புள்ளே! வரிசையில் விதைக்கணும் அல்லது நடணும். இல்லாட்டி இது பயன்படாது''.

''சரி வா மச்சான்! சாப்பிட்டு வந்து களையெடுக்கலாம்''.

''நீ போ புள்ளே! அரைமணி நேரத்தில் மீதியுள்ள வயலிலும் களையெடுத்துட்டு வந்துடுறேன்''.

''நாலைந்து பேரு சேர்ந்து கூட்டா இதை வாங்கிப் பயன்படுத்தலாம் போலிருக்கே'' என்றார் குறுநிலக்கிழார் குருசாமி.

''ஆமாண்ணே! அப்படியும் செய்யலாம்'' என்றார் சின்னசாமி.

அதுவரை பேசாமல் கவனித்துக் கொண்டிருந்த பண்ணையார் பரமசிவம், 'ஏன் தம்பி! இது மாதிரி பொறி எனக்கு ஒண்ணு வேணுமே! யாருக்கு எழுதணும்?'' என்றார்.

''உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆராய்ச்சி), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3 என்னும் விலாசத்துக்கு எழுதுங்க ஐயா! ஸ்டாக் இருந்தால் பணம் கட்டச் சொல்லுவாங்க. இல்லாட்டிப் பொறுத்திருக்கச் சொல்லுவாங்க. புதிதாச் செய்து கொடுப்பாங்க.''

''இப்பவே போய் எழுதுறேன் தம்பி!'' என்று கூறிவிட்டுப் பண்ணையார் பரமசிவம் விரைவாக வீட்டிற்குத் திரும்பினார். அவர் பின்னாலேயே கூட்டமும் திரும்பியது. சின்னசாமி மீண்டும் களையெடுக்கும் பொறியைக் கொண்டு களையெடுத்துக் கொண்டிருந்தார். காலை வெய்யிலில், களைப்புடன் களையெடுத்துக் கொண்டிருக்கும் தன் மச்சானுக்குக் கஞ்சி கொண்டுவரச் செங்கமலம் வீடுநோக்கி விரைந்தாள்.



கிருஷ்ணகிரி வட்டத்தை வளப்படுத்த 1957-ல் தென்பெண்ணை ஆற்றுக்குக் குறுக்கே கட்டி முடிக்கப்பட்ட கிருஷ்ணகிரி அணை 3251 அடி நீளம் உள்ளது. அதில் 2340 அடி மண் அணை; 911அடி கல் கட்டட அணை; கொள் அளவு 241 கோடி கன அடி

மற்ற அணைக் கட்டுகளுடன் ஒப்பு நோக்க இது மிகப் பெரிய அணை அல்ல; என்றாலும் அழகான அமைப்புடன் உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது.

தருமபுரிக்கும் தாமஸ்மன்றோவுக்கும் உள்ள தொடர்பு!

தீவுத்திடலில் குதிரை மீது சிலையாக அமர்ந்துள்ள சர் தாமஸ் மன்றோவுக்கும் தருமபுரிக்கும் என்ன தொடர்பு? ஐதர் அலியின் காலத்தில் தருமபுரிப் பகுதிகள் மைசூர் ஆட்சியின் கீழ் இருந்தன. அதற்குப் 'பாரமகால்' பகுதிகள் என்று பெயர். கிழக்கே உள்ள கருநாடகப் பகுதிகள் மீது ஐதரின் படைகள் இவ்வழியாக அடிக்கடி படையெடுத்து வந்தன.

மைசூர்ப் போர்களின் முடிவில் 'பாரமகால்' சேலம் பகுதிகள் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் வந்தன. அப்பகுதிகளின் ஆளுநராக ரீட் என்பவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாளராக மன்றோ நியமிக்கப்பட்டார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் எதேச்சாதிகாரமும், அகம்பாவமும் கொண்ட அதிகாரிகளே அதிகம். அவர்களில் மன்றோ மாறுபட்டு விளங்கினார். உள்நாட்டு மக்களிடம் அன்பும், பரிவும், மதிப்பும் காட்டி நேர்மையான நிருவாகம் புரிந்த ஒருசில பிரிட்டிஷ் அதிகாரிகளில் மன்றோவும் ஒருவர். மன்றோ தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு சுமார் ஏழு ஆண்டுக்காலம் உதவி ஆளுநராகப் பணியாற்றினார். ரயத்துவாரி நிலச் சீர்திருத்தம் மன்றோவால் இங்குதான் முதன் முதலில் கையாளப்பட்டது.

தருமபுரியின் இயற்கை எழிலும், தட்ப வெப்ப நிலையும் மன்றோவை வெகுவாகக் கவர்ந்ததாகத் தெரிகிறது. மன்றோ தனது குறிப்புரை ஒன்றில், தருமபுரியில் தான்வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

'' ஒரு பக்கம் அழகிய மலைக் காட்சி; இன்னொரு பக்கம் மாந்தோப்பு; இடையே நான் அமைத்த தோட்டம்; அங்கே நூறு அடி நீள அகலத்தில் என்னால் உண்டாக்கப்பட்ட அழகான குளம்; அதில் பத்துப் பன்னிரண்டு அடி ஆழத்தில் எப்போதும் தெளிந்த நீர்; புனலாடி மகிழ ஏற்ற குளம்; நான் வைத்த மா, ஆரஞ்சு முதலிய மரங்களில் கனிகுலுங்கும் காட்சி; தருமபுரியில் இருக்க நேரும்போதெல்லாம் தினமும் இந்த இடத்தில் ஒரு மணி நேரமாவது தங்கி மகிழ்வேன்; இந்த இடத்தை விட்டுப் பிரியும்போது நெஞ்சாரப் பழகிய ஒரு பழைய நண்பனை விட்டுப் பிரியும் உணர்வு தான் ஏற்படுகிறது ''.

தருமபுரிக்கும் மன்றோவுக்குமுள்ள தொடர்பின் நினைவுச் சின்னமாகத் தருமபுரியில் ஒரு கல்தூண் நாட்டப்பட்டுள்ளது. அதில் உள்ள கல்வெட்டில் மன்றோ பாரமகாலில் வருவாய்த் துறைக் கண்காணிப்பாளரின் உதவி அதிகாரியாக 1792 ஏப்ரல் முதல் 1799 மார்ச்சு வரை பணியாற்றியதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மன்றோ, பின்னர் சென்னையின் புகழ் மிக்க ஆளுநராக ஆன போதும் தருமபுரியை அவர் மறக்கவேயில்லை. அதன் இயற்கை எழில் அவரை வெகுவாகக் கவர்ந்திருந்ததே அதற்குக் காரணம்!

நான்கு மொழிகள் வழங்கும் நகரம்

தருமபுரி மாவட்டத்தின் வட கோடியில் உள்ள ஒசூர் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் இராணுவத் தளமாக இருந்தது. 1864 வரை ஒசூர், சேலம் மாவட்டத்தின் தலைநகராகவும் இருந்து வந்தது. ஒசூர் என்பது கன்னடச் சொல். புதிய ஊர் என்று அது பொருள்படும். இவ்வூர் பெங்களூரைப் போலவே தட்ப வெப்ப நிலை கொண்டது. வெய்யிலின் கொடுமை தெரியாது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய நான்கு மொழிகளும் பயன்படுத்தப்படும் பகுதி ஒசூர்.

ஜவ்வரிசித் தொழில்

வேறெந்த மாவட்டத்தைக் காட்டிலும் அதிகமாகச் சேலம், தருமபுரி மாவட்டங்களில் காணப்படும் தொழில் ஜவ்வரிசித் தொழில் ஆகும்.

கிராம மக்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்களை அளிக்கக்கூடியதாக இத்தொழில் உள்ளது:

69599

அரூரில் உள்ள ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலையைப் போய்ப் பார்க்கிறோம். சின்னஞ் சிறிய தொழிற்சாலையாகக் கண்ணுக்குத் தெரிந்தாலும் ஏராளமான பேர் வேலை செய்வதால் அதைப்பற்றித் தெரிந்து கொள்வதில் இப்பொழுது நமக்கு ஆர்வம் அதிகமாகிறது. ஜவ்வரிசி செய்வதை முதல் கட்டத்தி[illegible] தெரிந்துகொள்ளத் துடிக்கிறோம்.

அந்த மாவு மில் உரிமையாள[illegible] அழைத்துச்சென்று முதல் நிலையில் இருந்து கடைசி நிலைவரை ஒவ்வொன்றாகக் காட்டுகிறார்கள்.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்தொழில் அதிகமாகக் காணப்படுவதற்குக் காரணம் அந்த மாவட்டங்களில் விளையும் குச்சிக் கிழங்குதான்—அதாவது மரவள்ளிக் கிழங்கு.

அங்குக் குச்சிக்கிழங்கு என்று சொல்லப்படும் மரவள்ளிக் கிழங்குதான் ஜவ்வரிசி செய்வதற்கு ஆதாரமானது.

கள் [illegible] செய்திருக்கும் குச்சிக் கிழங்கை ஜவ்வரிசி ஆலைக்குக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அவற்றை எடை போட்டு வாங்கிக் குன்றுகள் போலக் குவித்து வைக்கிறார்கள்.

கிராமப் பெண்களும், சிறுமியரும் கையில் கத்தியை வைத்துக் கொண்டு மரவள்ளிக் கிழங்கின் தோலைச் சீவுகிறார்கள். தோல் நீக்கப்பட்ட கிழங்குகளைப் பெரிய தொட்டியில் போட்டுத் தண்ணீரை ஊற்றி அவற்றின் மீதுள்ள அழுக்குகளை நீக்குகிறார்கள். அழுக்கு நீக்கப்பட்ட கிழங்குகள் இயந்திரங்களில் இட்டு அரைக்கப்பட்டுச் சாறாக எடுக்கப்படுகிறது. இப்படி மூன்று நிலைகளில் சாறுகள் எடுக்கப்படுகின்றன.

தோல் சீவ முடியாத சின்னஞ்

5C 11|11|70 V72:2

சிறிய குச்சிக் கிழங்குகளைக் கழுவி விட்டு நேரடியாகவே இயந்திரத்தில் கொடுத்துவிடுகிறார்கள். இப்படி இயந்திரத்தில் கொடுக்கப்பட்டு அரைக்கப்படும் கிழங்குகளின் பால் தனியாக வடிகட்டப்படுகிறது. வடி கட்டிய பால் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். அந்தப் பால் தனித் தனியாக உள்ள தொட்டிகளில் நிரப்பப் படுகின்றது.

மூன்று நாட்கள் கழித்து, வடி கட்டிய குழம்புகளைச் சுத்தப் படுத்தும் பணியில் ஈடுபடுகிறார்கள். அந்தக் குழம்புகளில்உள்ள அழுக்குகளை நீக்கக் காலாலும் குச்சியாலும் கலக்கிவிடும் முறை இப்போது இல்லை. இதற்கு இயந்திரங்களையே இப்போது பயன்படுத்துகின்றனர். இப்படிக் கலக்குவதால் தண்ணீரின் மேலே அழுக்குகள் வந்து விடுகின்றன. அந்தக் குழம்புகளில் உள்ள மாவுப் பொருள்கள் மட்டும் அடியில் தங்கிவிடுகின்றன.

—இப்படி அழுக்கு நீக்கி, தண்ணீரையெல்லாம் வடிகட்டிய பின்னர், தொட்டியின் அடிப் பாகத்தில் குழம்புகளில் உள்ள மாவு பாறை பாறையாகப் படிந்து காணப்படுகிறது. அதை வெட்டி எடுத்துக் கொண்டு போய் மாவு அரைக்கும் இயந்திரங்களில் கொடுத்துப் பொடிப் பொடியாக அரைக்கிறார்கள். அரைத்து வரும் மாவுகளைச் சல்லடைக் கண்போல் உள்ள தட்டுகளில் விட்டுத் தேவைக்கேற்ற அளவில் பெரிய உருண்டைகளாகவும் அதாவது ஜவ்வரிசி வடிவ வமைப்பு பல்பு போன்றும் அதை விட மிகச் சிறிய அமைப்பிலும் தயார் செய்யப்படுகிறது. இந்த இரண்டு நிலைக்கும் உட்படாத மாவு வெளியே வருகின்றது.

இப்படி எடுக்கப்பட்ட ஜவ்வரிசி உருண்டைகளை, அடுப்பில் பெரிய இருப்புச் சட்டிகளை வைத்து வறுக்கிறார்கள். வறுத்த பின்னர் வெய்யிலில் காயவைக்கப் படுகிறது. காய வைத்தவுடன் எடுக்கப்படுவதுதான் முழுமையான ஜவ்வரிசி.

ஜவ்வரிசியைத் தேவையான மாநிலங்கள் அனைத்திற்கும் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக மேற்கு வங்கத்துக்கு ஏராளமாக அனுப்பப்படுகிறது. அங்குதான் ஜவ்வரிசியை விட மிகச் சிறிய அளவில் இருக்கும் ஜவ்வரிசிக் குருணைகளை உப்புமா செய்யவும். வேறு பலகாரங்கள் செய்யவும் பயன் படுத்துகிறார்கள்.

ஜவ்வரிசி செய்யப்படும்போது மீதப்படும் மாவைத் துணி ஆலையினர், வாங்கிக் கொள்கிறார்கள். அது துணிகளுக்குக் கஞ்சி போடப் பயன்படுகிறது.

ஜவ்வரிசி ஆலை குறிப்பிட்ட காலங்களில் மட்டும் இயங்குவதில்லை. ஆண்டு முழுவதும் இயங்குகின்றது. எல்லாப் பருவத்திலும் குச்சிக் கிழங்கு கிடைப்பதே இதற்குக் காரணம்.

இந்த ஜவ்வரிசி ஆலைகளால் சுற்று வட்டார விவசாயிகளுக்கும் அப்பகுதி மக்களுக்கும் ஆண்டு தோறும் வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது.

இப்படி எல்லாருக்கும் எல்லா வகையிலும் பயன் உள்ளதாக அமைந்துள்ள இத்தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டிருக்கும் இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானவை அல்ல. நம் நாட்டிலேயே தயாரானவைதான்.

பார்ப்பதற்குக் கிராமக் கைத் தொழில் போன்று தோன்றினாலும் இது ஒரு பெரிய தொழில் என்பதில் ஐயமில்லை!

தர்மபுரி மாவட்டத்தின் கனி வளங்கள்

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் தமிழக அரசின் நிறுவனமாகக் கருங்கல் மெருகிடும் தொழிற்சாலை ஒன்று நல்லமுறையில் நடந்து வருகின்றது.

மூக்கனூர் செம்மனப்பள்ளியில் தனியார் துறையில் நடத்தப்படும் கருங்கல் மெருகிடும் தொழிற்சாலையில் தயாரான கற்களை மேலை நாடுகளில் பல்வேறு பணிகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். இதன் மூலம் அந்நியச் செலாவணி நம் நாட்டுக்குக் கிடைக்கிறது.

மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள இடங்களும், அப்பகுதிகளில் கிடைக்கும் கனி வளங்களும் பின்வருமாறு :—

ஓசூர் : இங்கு இயந்திரத்தின் மூலமாகத் தயாரிக்கப்படும் செங்கல் தொழிற்சாலை நிறுவ வாய்ப்புள்ளது. அதற்கு வேண்டிய களிமண் இப்பகுதியில் கிடைக்கிறது.

தீர்த்தமலை: இங்கு இரும்புக்கனிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. சேலம் இரும்புத் தொழிற்சாலையைக் கஞ்சமலைப் பகுதியிலிருந்து விரிவுபடுத்தித் தீர்த்தமலை வரையில் கொண்டு வர வாய்ப்பினை ஏற்படுத்தல்.

கெலமங்கலம் : அஞ்செட்டி அதைச் சார்ந்த பகுதிகளில் உள்ள காடுகளில் உள்ள மூங்கில் மற்றும் மரப்பொருள்களைப் பயன் படுத்திக் காகிதத் தொழிற் சாலை தொடங்க வாய்ப்புள்ளது.

பாரூர் அரசம்பட்டி மற்றும் மாரண்டஹள்ளிப் பகுதி : இப்பகுதியில் தென்னை மரங்கள் அதிகம் உற்பத்தியாகின்றன. இவைகளைப் பயன் படுத்திக் கயிறு உற்பத்தி, மற்றும் தேங்காய் எண்ணெய், அதனைச் சார்ந்த வாசனைப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க வாய்ப்புள்ளது.

போச்சம்பள்ளி : பழவகைகள்—குறிப்பாக மாம்பழம் மற்றும் திராட்சை உற்பத்தியாகின்றன. இவைகளைப் பதப்படுத்தி ஒரு பழ கைத்தொழிற்சாலை நிறுவலாம்.

தளி மற்றும் டெங்கனிக்கோட்டைப் பகுதிகள் : காப்பி, தேயிலைத் தோட்டங்களை உருவாக்க வாய்ப்புள்ளது.

ஓசூர்: பட்டு உற்பத்தியை மற்ற மாநிலங்களுக்கு விநியோகிக்கும் அளவுக்கு விரிவாக்க வாய்ப்புள்ளது.

கிருஷ்ணகிரியில் காந்தம், கன்கர் கல் வகைகள்; அரூரில் மாக்னெடைட் காந்தம்; தருமபுரிப் பகுதியில் கொரண்டம் ஆகியவை குறிப்பிடத்தக்க கனிப்பொருட்களாகும்.

ஓசூரில் புகையிலை மற்றும் ஒயின் தொழிற்சாலைகள் நிறுவ வாய்ப்புகள் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் மிகப் பெரிய ஏரி!

தருமபுரி மாவட்டத்திலேயே பெரிய ஏரி பாரூர் ஏரி ; இது பாரூரில் உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் மட்டுமல்ல ; பிரிக்கப்படாத சேலம் மாவட்டத்திலும்—அதாவது சேலம் தருமபுரி மாவட்டங்களிலேயே பெரிய ஏரி இதுதான்.

சேலம் மாவட்டத்தில் மேட்டூரில் காவிரியில் அணை கட்டப்படுவதற்கு முன்னர் அதிகப் பரப்பளவில் தண்ணீரைக் கொண்டிருந்த ஏரி இதுதான்.

பாரூர் ஏரியைச் சுற்றியுள்ள இடங்களை மட்டும் பார்த்தவர்கள், தருமபுரி மிக வளமான மாவட்டம் என்பார்கள். அவ்வளவு வளமானது இப்பகுதி. காரணம் இந்த ஏரிதான் !

ஆங்கிலத் தலைவர் உருவாக்கிய அழகு மாளிகை

சேலம் மாவட்டத்தின் கலெக்டராக ஓசூரில் இருந்து நிருவாகம் நடத்தி வந்த 'பிரிட்' என்ற பிரிட்டிஷ்காரர், இங்கிலாந்திலிருந்து தன் காதல் மனைவியை வரவழைப்பதற்காகக் கட்டிய கவின் மிகு மாளிகை பற்றிய செய்தி, சுவையானது.

பிரிட், தனது மனைவியை, ஓசூருக்கு வருமாறு அழைத்தபோது ''கெனில்வொர்த் போன்ற மாளிகை அங்கிருந்தால் வருவேன்'' என்று மறுமொழி தந்தாள் அந்த மங்கை. எப்படியும் தனது மனைவியை வரவழைக்க விரும்பிய கலெக்டர் அவ்வாறே ஒரு மாளிகை கட்டினார்.

'கெனில்வொர்த்காசில்' என்பது இங்கிலாந்திலேயே மிகப் பெரிய மாளிகைகளில் ஒன்று. ஏழு ஏக்கர் பரப்பில் அமைந்திருந்த அம்மாளிகை 12-ஆம் நூற்றாண்டில் உள்நாட்டுச் சண்டையின்போது அழிக்கப்பட்டது. அந்த மாளிகையின் எழிலான அமைப்பைக் குறித்து சர் வால்டர் ஸ்காட் தமது நாவலில் விரிவாக எழுதியிருக்கிறார். நாவலில் இருந்த வருணனைகளை வைத்து, பிரிட், அழகிய மாளிகையைக் கட்டி, இத்தாலிய பாணியில் கூரை போட்டு, சுற்றிலும் அகழி அமைத்தார். 1861 முதல் 1864 வரை நான்கு ஆண்டுக் காலம் கட்டட வேலை நடைபெற்றது. கட்டடம் முடிவடைந்த நேரத்தில் மாவட்டத் தலைநகர் சேலத்துக்கு மாற்றப்பட்டது. கலெக்டர் பிரிட், சேலம் செல்ல நேர்ந்தது. அவர் மனைவி வரவேயில்லை.

கவனிப்பாரற்றுக் கிடந்த இந்த மாளிகை 1950 வாக்கில் மாநில அரசினரால் ஏலம்போடப்பட்டது. டாக்டர் ப. வரதராஜுலு நாயுடு அதை ஏலத்தில் வாங்கி இரும்பு, மர வேலைப்பாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை விற்றுவிட்டார். கவின் மிகு மாளிகையின் எஞ்சிய பகுதி இடிந்த சுவராக நிற்கிறது.



MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 எல்லா பயிர்களுக்கும் ஏற்ற சிறந்த உரம்.
MF காம்ப்ளெக்ஸ் 17-17-17ல் உள்ள சத்துக்கள் முழுதும் தண்ணீரில் கரையக் கூடியவை.
MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 சென்னைக்கு அருகில் மணலியில் உள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸின் புதிய நவீன உரத் தொழிற்சாலையில் தயாராகிறது.
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் 14-28-14 MF காம்ப்ளெக்ஸ் யூரியாவையும் கூடத் தயாரிக்கின்றனர்.

MF காம்ப்ளெக்ஸ் உரங்களும் யூரியாவும் கிடைக்கும் இடங்கள்:

- ஷாவாலஸ் & கம்பெனி லிமிடெட்
- E.I.D.-பாரி லிமிடெட் ஆகியோரின் உர வியாபாரிகள்
- கூட்டுறவுச் சங்கங்கள்

**மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்**
மணலி, சென்னை

ஒப்பில்லாத ஒகேனக்கல்

அகன்று விரிந்து, துள்ளிக் குதித்துத் தமிழகத்தில் பாயப் புகுகிறோம் என்னும் பூரிப்பில் வரும் காவிரியை 'வா'வென வரவேற்கும் பெருமை தருமபுரி மாவட்டத்திற்கு உண்டு. தமிழகத்தின் தொடக்கத்திலேயே காவிரி, காணக்காணத் தெவிட்டாத அழகுமிகும் அருவிகளை அமைத்துக் கொண்டது. அதுவே 'ஒகேனக்கல்' அருவியாகும்.

காவிரிக்குப் 'பொன்னி' என்ற பெயரும் உண்டு. அந்தப் பொன்னி அகமகிழ்ந்து 'கலகல' வெனச் சிரிக்கும் ஒலியை ஒகேனக்கல்லில் கேட்கலாம்; களிநடம் புரியும் அழகைக் கண்டு ரசிக்கலாம்.

'குற்றாலம்' என்று கூறும் போது அதன் 'அருவி'யே நம் கண்முன் காட்சி அளிக்கும். குளித்து மகிழ்வதற்குள்ள அதைக் 'குற்றால அருவி' என்பர். அதைப் போலவே நீராடிக் [illegible] 'ஒகேனக்கல்' அருவி நம்மை அழைக்கிறது.

'ஒகேனக்கல்' என்பது கன்னடப் பெயர். அதற்கு 'புகை பட[illegible] கல்' [illegible] பொருள். கா[illegible] கற்பாறைகளில் மோ[illegible] அருவியாய் இறங்கும் இடத்தில், நீர்த்திவலைகள் உண்டாகி, அதனால் அங்குப் புகை மண்டலம் உண்டாகிறது.

ஒகேனக்கல்லில் காவிரியின் ஒருகரை தமிழக எல்லை; மறுகரை மைசூர் மாநில எல்லை; இதை எண்ணிப் பார்க்கும் போது 'நயாகரா நீர்வீழ்ச்சி' நினைவுக்கு வருகிறது. அது கனடா நாட்டிற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் எல்லையாக உள்ளது. அதுபோல் இங்கு ஒகேனக்கல்லில் காவிரி தமிழகத்திற்கும், கருநாடக மாநிலத்திற்கும் எல்லையாக உள்ளது. ஆனால், அருவி அமைந்துள்ள இடம் முழுக்க முழுக்கத் தமிழகப் பகுதியில்தான்.

ஒகேனக்கல் அருவியில் நீராடுவதற்குத் தகுந்த முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் தனித் தனியாகக் குளிப்பதற்கு வேண்டிய அமைப்புகள் செய்யப்பட்டுள்ளன. இரும்புத் [illegible]கள், இரும்பு வளையங்கள், கைப்பிடிச்சுவர்கள் [illegible] பாதுகாப்பிற்காகச் [illegible] முறையில் அமை[illegible]டுள்ளன. [illegible] கரை[illegible] அருவி[illegible] செல்லச் [illegible] மண்ட[illegible]தைப் [illegible] அமைக்கப்பட்டுள்ளது.

[illegible] நீராடி மகிழ வருவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகக் கொண்டே வருகிறது. ஆடிப் பெருக்குப் பெருவிழா (ஆடி 18-ஆம்) நாள் அன்று இங்குத் திரளான மக்கள் நீராடி மகிழ்வர்.

உல்லாசப் பயணிகள் தங்குவதற்கெனப் பயணிகள் விடுதிகள் இங்கு உள்ளன. இருப்பினும், நவீன முறையில் புதிய பயணிகள் விடுதி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ரூ. 5 இலட்சம் செலவில் அழகிய பயணிகள் விடுதி இங்கு விரைவில் கட்டப்பட இருக்கிறது. சமீபத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் அதற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளார்.

இந்த அருவி தருமபுரியிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தருமபுரியிலிருந்து ஒகேனக்கல்லுக்குச் செல்லப் பேருந்து வண்டி வசதிகள் நிறைய உண்டு.

ஒகேனக்கல் அருவியில் குளிப்பது இன்பம் பயக்கும். அதற்கு முன்பு—ஒகேனக்கல் பயணமே நம் மனத்திற்குக் கிளுகிளுப்பையூட்டும். தருமபுரியிலிருந்து உந்து வண்டியில் பயணம் செய்து, பெண்ணாகரம் வழியாக ஒகேனக்கல்லை அடைய வேண்டும். பெண்ணாகரத்திலிருந்து ஒகேனக்கல் 15 கிலோ மீட்டர் தூரமாகும். இந்த 15 கிலோ மீட்டர் தூரமும் மலைப்பாதை இறங்கு வழியாகும். வளைந்து வளைந்து மலைப் பாதையின் வழியே செல்லும்போது காடுகளின் பசுமையான அழகைக் கண்டு செல்லலாம்.

காடுகள் நிறைந்த வானளாவிய மலைகள்—அவற்றின் இடையே 'கலகல'வெனச் சிரித்து ஓடும் காவிரியின் பொலிவு—அடுக்கடுக்காய் அமைந்துள்ள அருவிகளின் அழகு—இவையெல்லாம் நம் மனத்தை மிகவும் கவர்ந்துவிடும். இத்தகைய அழகுமிகு அருவிகளும், அதன் சுற்றுப்புறப் பொலிவும் [illegible] காணத் [illegible] ஒகேனக்கல் [illegible]

—மு. தொ. ஸ்டாலின்

வள்ளலே என்றும் வாழ்க!

பாசொலி

பன்னிரண் டாண்டிற் கொன்றே
பழுத்திடும் கரிய நெல்லிக்
கன்னல்சேர் கனியைச் சாரல்
கல்லிடை வண்டு காக்க
மன்னவன் வீரம் மிக்கோன்
அதியமான் வள்ளல் கண்டான்;
அன்னதன் பெருமை தேர்ந்தே
அரண்மனை கொணர்ந்தான் வேந்தன்.

உண்டவர் இளமை குன்று
தாழியோ டூழி வாழத்
தண்டமிழ் போலச் செய்யும்
தகைமைசால் கனியை வள்ளல்
கண்டவர் மகிழ உண்டு
களித்திடும் நிகழ்ச்சி நேரம்
அண்டவே மகிழ்ந்தார் மக்கள்
'அதியமான் வாழ்க !' என்றார்.

இன்புறு கனியை மன்னன்
எடுத்தனன் ; மெல்லப் போந்தே
அன்புறு தமிழ்த்தா யாகும்
ஔவையின் கரத்தி லீந்தான் ;
மன்பதை வாழச் செய்யும்
வண்மைசேர் கனிதான் ஈதே
என்பதை அறியா ஔவை
எடுத்ததை உண்டு விட்டாள்.

கனியதை உண்டார் சாவின்
கையகத் தாகார் என்னும்
இனியதோர் உண்மை தன்னை
எடுத்தவன் உரைத்த போது
நனிவுறு துன்ப முற்றாள் ;
நடுங்கினாள் ஔவைப் பாட்டி
இனியெது செய்வோ மென்ன
ஏங்கியே நின்ற காலை

" அன்னையே ! தமிழின் வாழ்வே
அருந்தமிழ் நீதித் தாயே !
மன்னியே நீவிர் இந்த
மலர்தலை உலகில் வாழின்
பன்னரும் கவிதை வெள்ளம்
பல்லூழி பெறுவர் மாந்தர்
மன்னவன் ஒருவன் மாளின்
மண்ணுல கிழப்ப தென்னே ? "

என்றவன் உரைத்த போதில்
எழுந்தனள் தமிழ்மூ தாட்டி
"குன்றெனும் புயமார் வள்ளால் !
குணக்கடல் ! தமிழின் பண்பே !
அன்றலர் மலரைப் போன்றே
அருள்முகம் காட்டும் கோவே !
என்றுமே தமிழைப் போல
இனிமையாய் வாழ்க" வென்றாள் !



பார்த்தோம் படித்தோம்

தமிழரசு ஜனவரி முதல் தேதி இதழ் கண்டேன். அத்துடன் தரப்பட்ட இலவச வெளியீடான " வெற்றி நமதே" ஒரு அருமையான இலட்சியச் சொற்கோவை. பாகிஸ்தானின் தோல்வியை இனம் காட்ட " இவையாவும் இழப்பின் ஆரம்பம்தான். இழப்பின் முடிவு எதுவாக இருக்குமோ? ஒருவேளை பாகிஸ்தானுகவே இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை " என முதல்வர் கையாண்டிருக்கும் சொல்லோவியங்கள் அவரை மேலைநாட்டு 'Statesman' அரசியல்வாதிகளுக்குச் சமதையாக்குகிறது. முதல்வரின் சிறப்பு மிக்க சொற்பொழிவுகள் ஒரு தொகுப்பாகி நூல்வடிவம் பெற்றால் நல்லது. கவிஞர் வேழவேந்தனின் கவிதை என் உள்ளத்தைத் தொட்டது.

நா. காமராசன், சென்னை-14.

சுவையான இணைப்பு

ஒரு ரொட்டியின் கதை சுவையாக இருந்தது. அதைவிடச் சுவையாக இருந்தது நீங்கள் கொடுத்துள்ள " வெற்றி நமதே " இணைப்பு.

தரு. அன்பரசன், அவனியாபுரம்.

இரட்டை நன்றி !

அநேக ஏடுகள் ஒரே ஒரு இணைப்பை மட்டும் உரிமையாக்கி வரும்போது, நீங்கள் ஜனவரி முதல் இதழுடன், முதல்வரின் " வெற்றி நமதே" நூலையும், தமிழரசு நாட்காட்டியையும் இணைத்துத் தந்திருக்கிறீர்களே, உங்களுக்கு இரட்டை நன்றி.

ஆர். பரமசிவம், பசுமலை.

புதிய கோணம் !

' இயற்கையே மனிதனைப் பாராட்டுகிறது ' என்னும் வகையில் கவிஞர் கா. வேழவேந்தன் அவர்கள் எழுதியிருக்கும் கவிதை புதிய கோணத்தில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

கவியன்பன், கோவை.

வாரியத் தலைவர் வாழ்க !

குடிநீர் வடிகால் வாரியத் தலைவரின் பேட்டிக் கட்டுரை, பல அரிய செய்திகளை எல்லாம் தொகுத்துக் கூறும் அரும் பெட்டகமாக அமைந்திருக்கிறது. முதல்வரின் செயல்திறனின் மறுபதிப்புத்தான் குடிநீர் வடிகால் வாரியம் என்பதை மிக மிகத் தெளிவாகக் கூறியிருக்கும் வாரியத் தலைவர் பாராட்டுக்குரியவர்.

ஏ. தணிகாசலம், பூவிருந்தவல்லி.

முத்தான முதல்வர்!

சட்டப் பேரவையில் தமிழரசு மூலம் அதன் நடுநிலை பிறழா நன்னெறித் தன்மையும், அது கொண்டுள்ள ஒளிமய எதிர்காலக் கோட்பாடுகளும் முதல்வர் கலைஞர் அவர்கள் உரைத்த விடைகளால் நாமறியுமாறு துலக்கப்பட்டிருக்கின்றன.

முதல்வரின் முத்துக்கள் ஒன்பதும் விலை மதிப்பற்ற நம் சொத்தாகும்.

சா. ஆ. கேசவன், இளம்
மணியாச்சி.

சித்தம் நிறை சிறுகதை !

ஏர்முனையில் போர்முனை— சிறுகதைதான் என்றாலும், அது சித்தத்தில் நிறைந்து விட்டது.

ஏ. கே. செண்பகசுந்தரம்,
திருப்பரங்குன்றம்.

வங்கமும்—சிங்கமும் !

வங்கதேசத்தைப்பற்றிய கட்டுரைகள் சுவையாக இருந்தன. வங்கத்தின் வரலாறும் வங்கச் சிங்கத்தின் வரலாறும் எங்கள் இதயத்தை நனைத்துவிட்டன.

இ. தங்கத்துறை,
மானாமதுரை.

அந்தநாள் அந்தமானின் இந்தநாள் எழில் !

அந்தமான் சென்று வந்த அரிசனநல அமைச்சரின் சிறப்புப் பேட்டிக் கட்டுரையைப் படித்தேன். அந்த நாட்களில் ஆயுட் கைதிகளின் வாழ்விடமாகக் காணப்பட்ட பூமி, இன்று மேன்மையடைந்து வருவதையும், அங்குப்பல நாட்டுமக்களும் விருப்பத்துடன் குடியேறுவதையும் அறிந்து மகிழ்கிறோம். அதிலும், குறிப்பாகத் தமிழ் மக்களின் அருந்தொண்டினால் அந்தமான் நிக்கோபர் தீவுகள் இன்னும் வளம்பெறப் போகின்றன என்பதை எண்ணும்போதே உள்ளம் பூரிக்கிறது.

ஜே. குமார், அம்பத்தூர்.

பயனுள்ள பல் !

' முத்துப்பல் முறுவலிக்க ' பயனுள்ள கட்டுரை. இதைப் படித்துக் கொண்டாலே போதும், பற்களைப் பாதுகாக்க முடியும் என்பது புரிகிறது.

மீனுமணாளன், மதுரை.

எங்களுக்கும் வேண்டும்!

' நடமாடும் மருத்துவமனை எங்கள் ஊருக்கு எப்போது வரும் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறோம். விரைவில் அனுப்பி உதவுக.

—எம்.எஸ். கணேசன், நெல்லை.

தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தருமபுரி மாவட்டத்தில்தான் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

அமிழ்தினும் இனிய கரும்பை அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசனே தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்து பரவச் செய்ததாக ஔவையார் பாடியுள்ளார். எனவே, தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தருமபுரி மாவட்டத்திலேயே கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கும் என்று கருதுவதில் தவறில்லை.

தருமபுரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் சுமார் 2,816 ஹெக்டேர் (6955·52 ஏக்கர்) நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆயினும் அந்த மாவட்டத்தில் இதுவரை சர்க்கரை ஆலையே ஏற்படாதிருந்தது. உழவர் பெருமக்களுக்குப் பெருங்குறையாக இருந்தது. ஏனெனில், கரும்பு பயிரிடும் உழவர் பெருமக்கள் வெல்லத்தின் விலை ஏற்றத்தாழ்வு காரணமாக அல்லலுற்று வந்தனர்.

தருமபுரி மாவட்டத்தில் சர்க்கரை ஆலை

அவர்களின் குறை போக்க முன்வந்தது தமிழ்நாடு அரசு!

வெல்லத்தின் விலைச் சரிவினால் தொல்லையடையும் தருமபுரி மாவட்டத்தில் கரும்பு பயிரிடும் உழவர்களுக்கு நிலையான வருவாய் கிடைக்க இனிப்பான செய்தி ஒன்றை அறிவித்தது தமிழ்நாடு அரசு!

'' ஆம் ! தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைக்கப்படும் '' என்று தமிழ்நாடு அரசு அறிவித்த செய்தி, தருமபுரி மாவட்ட உழவர்களுக்கு இனிப்பான செய்தியாகவே இருந்தது.

செய்தி, செயல்படும் நிலைக்கும் வந்து விட்டது.

ஆமாம் ! தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு என்ற இடத்தின் அருகில் உள்ள திம்மனஹள்ளி கிராமத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவப்பட்டு வருகிறது. ஓரிரு திங்களில் வேலை முடிந்துவிடும் !

இந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்யத் துவங்கிய பின்னர் நாளொன்றுக்குச் சுமார் 1,250 மெட்ரிக் டன் கரும்பை அரைத்துச் சுமார் 140 மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்யும்.

தருமபுரி [illegible]வட்டத்தில் சராசரியாக ஏக்கருக்கு 30 டன் கரும்பு விளைகிறது. எனவே, தருமபுரி மாவட்டச் சர்க்கரை ஆலை முழு அளவில் செயல்பட சுமார் 2¼ முதல் [illegible] இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு தேவைப்படுகிறது. இ[illegible] அளவு கரும்பு கிடைக்கவேண்டுமானால் சுமார் 7,500 முதல் 8,000 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்ய வேண்டும். சர்க்கரை ஆலை துவக்கப்படுவதற்கு முன்பே, தருமபுரி மாவட்டத்தில் 6,955.52 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுவதால், இந்தச் சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பு எளிதில் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் சுமார் 245 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும், அதில் இயந்திர சாதனங்களுக்கு மட்டும் ரூபாய் 121 இலட்சம் ஆகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அமைப்பு வேலை நிறைவுறும் தறுவாயில் உள்ள இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சுமார் 180 ஏக்கர் நிலப் பரப்பில் உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஏற்படுவதால் உழவர் பெருமக்கள் உயர்வுபெற வழி பிறப்பதுடன், பல்லாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கவிருக்கிறது. பின்தங்கிய நிலையில் உள்ள தருமபுரி மாவட்டம் விரைவில் முன்னேற, இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வழிவகுக்கும் என்பது திண்ணம்!

1971–72-ஆம் ஆண்டு கரும்பு அறுவைப் பட்டத்தில் தருமபுரி மாவட்டச் சர்க்கரை ஆலை செயல்படத் துவங்கும்.

தருமபுரி மாவட்டத்திற்குத் தற்பொழுது ஆண்டு தோறும் சுமார் 1,700 மெட்ரிக் டன் சர்க்கரை வழங்கப்படுகிறது. இத்தேவையை, விரைவில் செயல்படவிருக்கும் சர்க்கரை ஆலை 12 நாட்களில் உற்பத்தி செய்து கொடுக்கும் என்பது தருமபுரி மாவட்ட மக்களுக்கு இனிக்கும் செய்தியன்றோ !

மிருகக் கொழுப்பு
கலவாதது
முழுக்க முழுக்கத் தா[illegible]
எண்ணெய்த்
தயாரிப்பு

*

கோபுரம் சோப்

*

பொங்கும் நுரை தரும்
பொலிவான வெண்மை!
தும்பைப் பூப்போன்ற
தூய்மையான சலவை!

*

தமிழ்நாடு
கதர் கிராமத்துறையின்
தயாரிப்பு

---

13. யார் அந்தப் பெண்?

தன்னையும் முந்திக்கொண்டு மாதவனோடு இன்னொரு பெண்ணும் இப்படித் தன்னந்தனியாகப் பேசிக்கொண்டு நிற்பாள் என்று தேன்மொழி எதிர்பார்க்கவே இல்லை.

இனம் விளங்காத ஓர் உரிமை உணர்வு அவளுடைய இதயத்தை அப்படியே இறுக்கிப் பிசைந்தது.

அகலமான தெரு ஒன்றிலிருந்து பிரியும் ஒரு சந்தின் முடிவில்தான் மாதவன் குடியிருக்கும் மொட்டை மாடி வீடு அமைந்திருந்தது. அதன் வாசலில் நின்று பார்த்தால் தெருவிலே செல்லும் வண்டி, வாகனங்கள், மனித நடமாட்டம் எல்லாமே நன்றாகத் தெரியும்.

சந்திற்கு நேராக அல்லாமல் சற்றுப் பின்னாலேயே தெரு ஓரத்தில் தன் காரை நிறுத்தி விட்டு அந்தச் சந்தினுள் நுழைந்த போதே மாதவன் ஒரு மங்கையுடன் உரையாடுவதைப் பார்த்துவிட்டாள், தேன்மொழி.

இருவரும் வாயில் படிக்கட்டுகளில் நின்றவாறுதான் பேசிக்கொண்டிருந்தார்கள். இவள் வந்ததைக் கவனிக்கவில்லை.

ஆனால், இவள் அருகில் நெருங்குவதற்குள் அந்த ஏந்திழை மாதவனிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பி விட்டாள்.

இரண்டு தளிர்க்கொடிகளும் எதிரும் புதிருமாகவே இடித்துக் கொள்ளாத குறையாகச் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் விழுங்கி விடுவதைப்போல, அவர்களுடைய விழிகள் விரிந்தன ; நிலைகுத்தி நின்றன. ஏதோ வியப்பின் உந்தலால் உதட்டுக் கதவுகளும் கூட வெண்முத்துப் பற்கள் வெளியே தலைநீட்டும் அளவுக்குச் சற்றே திறந்து கொண்டன. எனினும் வார்த்தைகள் உள்ளேயே ஒடுங்கி முடங்கிவிட்டன. முன்பின் அறிமுகம் இல்லை அல்லவா ?

ஆனால், '...... இவளை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே !' என்கிற உள்ளுணர்வு தேன்மொழியின் நெஞ்சில் மெள்ளத் தலைநீட்டாமல் இல்லை.

அந்தப் புதியவள் சந்தோடு நடந்து தெருவிலே சங்கமம் ஆகி மறைகிறவரை அவளைத் திரும்பிப் பார்த்த வண்ணமே நின்றிருந்தாள் தேன்மொழி.

தன்னுடைய காதலனைத் தனக்குக் கணவனாக வரப் போகின்றவனைத் — தனியாக வந்து சந்தித்துப் பேச அவளுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும், என்னும் புகைச்சல் எழுந்தாலும் அதனூடேயே அவளுடைய எளிமைக் கோலத்தின் தனிப்பொலிவு இவளது இதயப் பரப்பில் பதியத் தவறவில்லை.

ஈரம் பளபளக்கும் அடர்த்தியான 'மேகக் கூந்தல் ; இடுப்புக்கும் கீழேகூட நீண்டு தொங்கிய அது, முக்கோண முறம் போல நுனியில் மட்டுமே முடிச் சேறியிருந்தது ; அதன் உற்பத்தியிடத்திலோ ஒய்யாரமாய்ச் சிரித்தது ஒற்றை ரோஜாப் பூ ! காது மடல்களில் ' அசோகச் சக்கரத்தின் சுருக்கம் '—என்ச் சொல்லத் தக்க சின்னஞ்சிறு தோடு ; வேறு நகையேதும் மின்னாத வெறுங் கழுத்து ; பச்சைப் பாம்பு நெளிந்து கிடப்பதுபோலச் சற்று அகலமான கரைஅமைந்த வெள்ளைப்புடவை; அதற்கு இணையான சுண்ணாம்பு நிறச் சோளி ; இமயம்போல இடர்ப்பாடுகள் வந்து அழுத்தினாலும் தன் இதயத்தை இடிந்து போக விடாத-பதறிச் சிதறாத—மெதுவான வாத்து நடை —

அவளுடைய அந்த எளிமையான தோற்றத்திலும் எழில் வழிந்தது ; கவர்ச்சி மிளிர்ந்தது.

• • •

தேங்கி நின்றுவிட்ட தேன்மொழியைக் கேலி செய்வதைப் போல மாதவனின் கனைப்புக் குரல் ஒலித்தது.

தன் நினைவு வந்தவளாக அவள் முகத்தைத் திருப்பினாள். குளிர்ந்த பார்வையும் குறும்புச் சிரிப்புமாய் மலர்ந்த முகத்தோடு நிற்கும் தன் காதலனை நோக்கி நடந்தாள்.

'' என்ன தேன்மொழி ! இவ்வளவு அதிகாலையில் எதற்கு நீ இந்தப் பக்கம் வரவேண்டும் ?'' —என்று மேலும் ஏதோ அவன் சொல்லி முடிக்கிறவரை தேன்மொழியால் பொறுமையோடு இருக்க முடியவில்லை ; படபடவென்று எதிர்க் கேள்விகளை எழுப்பத் தலைப்பட்டுவிட்டாள்.

'' ஏன், நான் வந்தது தப்பா ? நான் வரவே கூடாதா ? வேறே யார் யாரோ உங்களைத் தேடி வருகிறபோது எனக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா ? சொல்லுங்கள் : எனக்கு அந்த உரிமை இல்லையா?''

'' அய்யய்யோ ! நான் அதற்காகச் சொல்லவில்லை, தேன்

151

[illegible] வேறு யாருக்கு என்னிடம் இருக்க முடியும்?.... ஓர் ஆளை அனுப்பி இருந்தால் நானே உன்னிடம் ஓடி வந்திருப்பேனே! உன்னுடைய நிலைமைக்கு இந்தச் சந்திலும் பொந்திலும் வந்து தொல்லைப் பட வேண்டாமே என்றுதான் சொல்ல வந்தேன்?''

'' ஓகோ! உங்களை வந்து பார்ப்பதையே 'தொல்லை' என்று நினைக்கிற அளவுக்கு நான் அவ்வளவு மட்டமானவளாக ஆகி விட்டேனு?''

'' அடாடாடா!.... நான் ஒன்று சொன்னுல் நீ ஒன்று எடுத்துக் கொள்கிறுயே?''

'' பின்னே என்ன? சந்தோ, பொந்தோ, சகதியோ, சாக்கடையோ—நீங்கள் எங்கே இருந்தாலும் அங்கே வந்து தீர வேண்டியதுதானே என் கடமை; கணவன் இருக்கும் இடந்தானே மனைவிக்குச் சொர்க்கம், என்கிறேன்?''

''எனக்கு அந்தச் 'சொர்க்கத்'தைப் பற்றியெல்லாம் தெரியவும் தெரியாது; அது எட்டாக்கனியாகப் போய்விடுமோ என்கிற ஏக்கமும் எனக்குக் கிடையாது. இந்த நேரத்தில் எனக்குத் தெரிகின்ற ஒரே சொர்க்கம் என் கண்முன்னுலே நிற்கின்ற நீ ஒருத்திதான்!'' —என்று நகைத்தான் மாதவன்.

''போதும், போதும்; இந்த மாதிரி 'ஐஸ்' (பனிக்கட்டி) வைப்பதற்கெல்லாம் நான் ஒன்றும் குளிர்ந்தும் விடமாட்டேன்-ஏமாந்தும் போகமாட்டேன்!'' —செல்லமாகச் சிணுங்கினுள் தேன்மொழி.

''அப்படி ஏமாற்றங்களையெல்லாம் தாங்கக்கூடிய உள்ளத் திண்மை உள்ளவர்களுக்கு ஏக்கமோ ஆத்திரமோ ஏற்படவே கூடாதே! அது போகட்டும். 'கணவன் இருக்கும் இடந்தானே மனைவிக்குச் சொர்க்கம்' என்ருயே, ஆனுல் நாம் இருவரும் நாலுபேர் அறிய இன்னும் கணவன் — மனைவி ஆகிவிடவில்லையே!''

''அடி அம்மாடி! அதற்குள்ளே எலலாமே மறந்து போச்சா? இன்னும் கொஞ்ச [illegible] 'உன்னை நான் எங்கே பார்த்தேன்?'—என்று என்னையே மறந்து விடுவீர்கள்போல் இருக்கிறதே! எவளோ சகுந்தலை என்பவள் தன் காதலனுல் கைவிடப் பட்டுத் தவியாய்த் தவித்தாளாமே; அவளுடைய கதிதானு எனக்கும்?''

''நீ என்ன சொல்கிறுய் தேன்மொழி?''

—திகைத்துப்போய்க் கேட்டான் மாதவன். இரவிலே தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டு அந்த உறக்க மயக்கம் தெளியாமல் தான் இப்படி உளறிக் கொட்டுகிறுளோ என்கிற ஐயப்பாடும் வந்து விட்டது அவனுக்கு.

'' நாம் முன்பு மைசூருக்குப் போனேமே; பக்கத்தில் இருக்கிற கண்ணம்பாடி அணைக்கட்டையும் பார்த்தோமே; அதாவது நினைவு இருக்கிறதா?''

''ஏன், அதை எப்படி மறக்க முடியும்?''

''அங்கே நாலுபேர் என்ன, நாற்பதுபேர் அறியவே நான் உங்கள் கழுத்திலே மாலை சூட்டவில்லையா? அப்போதே நான் உங்கள் மனைவியாக ஆகிவிடவில்லையா?''

வறட்சிப் பகுதிகள்

தமிழ் நாட்டுக்கான நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை வரைவு, மாவட்டங்களின் பரப்பில் சுமார் 40·85 சத விகிதம் பரப்புள்ள 31 வட்டங்கள் தீராத வறட்சியினுல் பாதிக்கப்பட்டவை என்றும், குறிப்பிட்டுள்ளன. எனவே அவை பொருளாதாரத்தில் பின்னடைந்த பகுதிகள் என்றும் குறிப்பிட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் அத்தகைய வட்டங்களின் விவரம் கீழே தரப்படுகிறது :—

ஒசூர்

கிருஷ்ணகிரி

அரூர்

தருமபுரி

'' ஓகோகோ! நீ அதைச் சொல்கிறுயா?''—என்று வாய் விட்டுச் சிரித்தான் மாதவன்.

''ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? சிந்தனைச் சிற்பிகள்—சீர்திருத்தச் செம்மல்கள் — என்றெல்லாம் நீங்கள் பெருமிதத்தோடு வழிபடுகின்ற தந்தை பெரியார்—அறிஞர் அண்ணு ஆகிய இவர்களுடைய எண்ணப்படிக்கூட மாலை மாற்றிக் கொண்டாலே போதாதா? தாலி கட்டிக் கொண்டால்தான் 'மனைவி' என்கிற தகுதியை ஒருத்தி பெற முடியுமா? அதுவே போகட்டும்; எந்தக் கணத்தில் உங்களிடம் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேனே—என் இதயக் கடவுளாய் உங்களை ஏற்றுக் கொண்டேனே—அந்தக் கணமே நீங்கள் என் கணவராகி விடவில்லையா? நான் உங்கள் மனைவி ஆகிவிடவில்லையா?''

''நீ சொல்வதைப் பார்த்தால் இப்போதே நாம் இருவரும் தேனிலவு கொண்டாடக் கிளம்பி விடலாம் போல் இருக்கிறதே?''—என்று சிரித்தான் மாதவன்.

''வேண்டாம். வேண்டாம். இப்போ தேய்பிறைக் காலம்; இருந்திருந்து விடி நிலவிலா நம்முடைய தேனிலவைத் தொடங்குவது? வளர்பிறை வரட்டும்; அப்போ நல்ல நிலவாப் பார்த்து....?''

''பலே! பலே! நன்ருகக் 'கட்' அடிக்கிறுயே — (வெட்டிப் பேசுகிறுயே)! ஆனுலும் தேன்மொழி, நான் ஒன்று சொன்னுல் நீ தவருக எடுத்துக் கொள்ள மாட்டாயே?''

'' இதுவரைக்கும் நீங்கள் சொன்னது எதைத்தான் நான் தவறு என்று தள்ளியிருக்கிறேன்?''

''நான், அதற்குச் சொல்லவில்லை, தேன்மொழி. நான் கூறப் போவதைக் கொஞ்சம் பொறுமையாகத்தான் கேளேன்; என்னைப் பொறுத்தவரையிலே காலக் கோளாறினுலோ வேறு எந்தக் காரணத்தினுலோ நீயே என்னைப் புறக்கணிக்க நேர்ந்தாலும்—ஒதுக்கித் தள்ளவே துணிந்தாலும் — என்னுடைய ஒரே ஒரு வாழ்க்கைத் துணை—வழித்துணை — எல்லாமே, நீ ஒருத்திதான் என்பது எப்போதோ உறுதிப் படுத்தப் பட்டுவிட்ட உண்மை. ஆம்; என் மன மாடத்தில் ஏற்றி வைக்கப் பட்டுவிட்ட ஒரே விளக்கு—ஒளி விளக்கு—நீ ஒருத்தியே தான்! அதிலே சந்தேகமே இல்லை....''

''இவ்வளவு உறுதியாக என் மீது அன்பு வைத்திருக்கிறேன் என்று சொல்கிற நீங்கள், அப்பா வெளிநாட்டுக்குப் போன பிறகு என்னை ஏன் வந்து பார்க்கவே இல்லையாம்? எத்தனையோ முறை போனிலே கூப்பிட்டும் கூட ஏன் அப்படித் தட்டிக் கழிக்க வேண்டுமாம்? எல்லாப் பொறுப்புகளையும் அப்பா எப்போது உங்களிடம் ஒப்படைத்தாரோ, அப்போதே நீங்கள் எங்களுடைய வீட்டுக்கே வந்துவிட வேண்டியது தானே? இன்னும் எதற்கு இங்கே தனிக்குடித்தனம் இருந்து அவதிப்பட வேண்டும்? ஓட்டல்களில் உண வருந்தி உடம்பையும் ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்? . . . ஒவ்வொரு நாளும் உங்கள் முகத்தைப் பார்க்க மாட்டோமா—ஒரு வார்த்தை பேச மாட்டோமா—என்று நான் எவ்வளவு ஏங்கியிருக்கிறேன் தெரியுமா? எவ்வள்வு துடித்திருக்கிறேன் தெரியுமா? உங்களுக்கென்ன. . . ?''

—சட்டென்று கண்ணீர் பொங்கிவிட்டது தேன்மொழிக்கு. விம்மிப் புடைக்கும் தேம்பலை அடக்க முடியாமல் திணறிப் போனுள் அவள்.

''அடாடாடா! இது என்ன பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது? எதற்கு இப்படிக் கண் கலங்குகிறுய்? நான் இப்போது எங்கே ஓடிவிட்டேன்? ஆனுல், நீ எதிர்பார்க்கிற மாதிரி நான் உணர்ச்சி வசப்பட்டு உன்னுடனேயே வந்து தங்காததற்கு ஒரு காரணமும் இருக்கிறது. அதைக் கேட்டால் நீ இந்தமாதிரியெல்லாம் வருந்தவே மாட்டாய்''

''ஏன், என்ன காரணமாம்?''

''உன் அப்பா இருக்கிறுரே அவர் சாதாரணமான ஆள் இல்லை. அவர் வெளிநாட்டிலே எங்கோ எட்டி இருந்தாலும், நான் இங்கே என்னென்ன

செய்கிறேன்—எப்படி எப்படி நடந்து கொள்கிறேன்—என்பதையெல்லாம் வேறு யார் மூலமாவது தெரிந்து கொள்ளாமல் இருக்கவே மாட்டார். அவர்தான் உரிமை கொடுத்து விட்டாரே என்று நான்தான் எப்படி என் இச்சைப்படியெல்லாம் நடக்க முடியும்? நம்பித்தான் ஒருவரிடம் நம் உடைமைகளை ஒப்படைக்கிறோம்; பாதுகாக்கச் சொல்கிறோம். அதற்காகத் தோட்டத்துக் காவலாளி அங்கே தொங்குகின்ற, பழங்களையெல்லாம் சுவைக்கலாமா? வீட்டுக்குக் காவலாளி வெல்வெட்டு மெத்தையிலே போய்ப் புரளலாமா? தனியாக இருக்கும் பொழுதும் நான் உன்னிடம் முறையாகத்தான் நடந்து கொண்டேன் என்பது தெளிவாகத் தெரிந்தால்தானே உன்னை எனக்குத் தருவதற்கு உன் அப்பாவும் தயங்காமல் ஒப்புக் கொள்வார்? மேலும், அவர் ஊரில் இல்லாத வேளையில் உன்னோடு நெருங்கிப் பழகி அதன் மூலம் உன் அப்பாவுக்குள்ள குடும்பப் பெருமையைக் குலைக்கவும் நான் தயாராக இல்லை. அதனால் தான் இப்போது என்னை நானே சிறை வைத்துக்கொண்டு சித்திரவதைப் படுகிறேனே அல்லாமல், உன் அழகு முகத்தைப் பார்க்கவேண்டும்—அன்புக் குரலைக் கேட்க வேண்டும்—என்கிற ஆசை வெள்ளம் எனக்கு மட்டும் இல்லையா? ''

'' ஆமாம், இப்படியே நாம் எத்தனை நாளைக்குத்தான் இந்தச் ' சாமியார் ' வாழ்க்கை வாழ்வது? என் அப்பாவுக்கு நானே கடிதம் எழுதி உடனே வந்து நம் திருமணத்திற்குஏற்பாடு செய்யச் சொல்லட்டுமா? ''

''பொறு, பொறு ; அதற்குள் அவசரப்படாதே. அங்கே போன இடத்தில் அவருடைய நிலைமை எப்படி இருக்கிறதோ? கடை நிருவாகம் என்ன ஆயிற்றோ? அவற்றையெல்லாம் கவனித்து ஒழுங்குபடுத்த அவருக்கு ஆறு மாத காலமாவது தவணை வேண்டாமா? ''

'' அய்யய்யோ ! அவ்வளவு காலத்திற்கா நாம் இப்படித் தனிமையிலே அவதிப்படணும்?''

—பெருமூச்செறிந்தாள் தேன்மொழி.

'' உன் அப்பா உன்னை 'உணர்ச்சிக் குழந்தை!'—என்று சொன்னது சரிதான் போல் இருக்கிறது. ''

மகசூல் போட்டியில் இரண்டாம் பரிசு!

அனைத்து இந்திய நிலையில் 1968-69, 1969-70-ஆம் ஆண்டிற்காக நடைபெற்ற திராட்சை மகசூல் போட்டியில் தமிழ் நாட்டிற்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது. தருமபுரி மாவட்டம், அதிகனூர் என்ற ஊரைச் சார்ந்த காலஞ்சென்ற திரு. கே. எம். பொன்னுசாமி செட்டியார் அவர்களுக்கு அப்பரிசு கிடைத்துள்ளது. அப்பரிசுக்குரிய சான்றிதழும் ரூபாய் 2,000 மதிப்புள்ள அரசுக் கடன் பத்திரங்களும் திரு. பொன்னுசாமி செட்டியாரின் மகனிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

—கண்ணைச் சிமிட்டிக் கேலியாகச் சிரித்தான் மாதவன்.

''ஆமா கொஞ்சம் முன்னாலே''

'' கொஞ்சம் முன்னாலே ..?''.

'' ம்....ஒன்னும் இல்லே.!''

'' ஏன் சொல்ல வந்ததை மறைக்கறே?''

'' நான் ஒன்றும் மறைக்கலே''

'' அப்போ நான் சொல்லட்டுமா, நீ என்ன கேட்க நினைத்தாய் என்று?''

''என்ன கேட்க நினைத்தேனாம்?

'' கொஞ்சம் முன்னாலே, ஒரு பெண் வந்து பேசிவிட்டுப் போனாளே, அவள் யார் என்று தானே நீ கேட்க நினைத்தாய்? ''

'' அவள் யாராக இருந்தால் எனக்கு என்ன? ''

—விட்டுக் கொடுக்காமல் பேசினாள் தேன்மொழி. அவளுடைய உதடுகள் அமுங்கிக் கோணல் வாய் காட்டி அலட்சியத்தை வெளிப்படுத்தின.

'' அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் இல்லாத மாதிரி நீ வெளி மப்புக்குப் பேசினாலும் உள்ளூர நீ என்ன நினைக்கக்கூடும் என்று என்னால் ஊகிக்க முடியும். அது இயற்கை தானே? தனது காதலியோடோ மனைவியோடோ இன்னொரு ஆடவன் கொஞ்சம் சிரித்துப் பேசினாலே ஆண்கள் கொதிப்படைந்து விடுகிறார்கள் இல்லையா? ; அத்தகைய உரிமை உணர்ச்சி Possessive Instinct தானே பெண்களுக்கும்இருக்கும்? ஆகையாலே, நானே யார் அந்தப் பெண் என்று உனக்குச் சொல்லி விடுகிறேன் ; ஆனால் இப்போது இல்லை ; ஏனென்றால், அலுவலகத்துக்குப் போக நேரமாகிவிட்டது ; இனிமேல் நான் குளித்து விட்டுச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு கிளம்ப வேண்டும்....,வேறு ஏதாவது முக்கியமான சேதி உண்டா?''

'' எனக்குப் பொழுதே போக மாட்டேன் என்கிறது. இன்றைக்கு ஒரு நாளாவது உங்களோடு சேர்ந்து திரைப்படம் எதற்காவது போகலாமா என்று பார்த்தேன் ''

'' அய்யய்யோ! அதற்கெல்லாம் எனக்கு நேரம் ஏது?...... அதோடு இன்னும் ஆறு மாதம் போகட்டும் ; ஆமாம்....ஆறு மாதம். ''

—மாதவன் சிரித்தான்.

தேன்மொழியும் முறுவலை இழைய விட்டு அவனது முக எழிலைப் பருகினாள்.

* * *

ஆனால், மாதவன் குறிப்பிட்ட காலத் தவணை வரை தேன்மொழிக்குப் பொறுமையோடு இருக்க முடியவில்லை. அடுத்த வாரமே தன் தந்தைக்குத் தனது நிலைமையைத் தெளிவுபடுத்திக் கடிதம் எழுதிவிடுவது என்று முடிவு செய்து விட்டாள்.

அதற்கு முன்னர் டாக்டர் பூங்கொடியின் அறிவுரைகளையும் கேட்டுக் கொள்வோமே என்று அவளது இல்லத்திற்குச் சென்றாள் தேன்மொழி.

அவளுடைய கார் தொலைவில் வந்துகொண்டிருக்கும் பொழுதே மாதவன் டாக்டரின் இல்லத்திற்குள் நுழைந்துகொண்டிருந்தான்.

அவன் நடந்து சென்ற மிடுக்கிலிருந்து அவனுக்கு ஏதாவது நோயாக இருக்கும் என்று அவளால் நினைக்க முடியவில்லை.

' ஒருவேளை என்னைப்போலவே அவரும் ஏதாவது கலந்து பேசப் போகிறாரோ?'—இப்படி எண்ணும் பொழுதே, எதிரே, தான் அன்று மாதவன் வீட்டில் பார்த்த மங்கை பரபரப்போடு வருவது தெரிந்தது. (வளரும்)

அதியமான் கோட்டையில்

தருமபுரியிலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் சேலம் செல்லும் சாலையில் உள்ளது அதியமான் கோட்டை. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமானின் கோட்டை இருந்த ஊர் இது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்பொழுது அங்கு கோட்டை இருந்ததற்கான எந்தவித அடையாளச் சின்னங்களையும் காண முடியவில்லை.

அதியமான் கோட்டையில் வாழும் பெரியவர்களிடம் அதியமானின் கோட்டைக்குரிய அடையாளங்கள் ஏதேனும் உண்டா என்று விசாரித்ததில், முன்பு கோட்டையாக இருந்த பகுதிகள் இப்பொழுது காடு கழனிகளாக மாறிவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் கூட எந்த இடத்தில் கோட்டை இருந்ததென்று சுட்டிக்காட்ட முடியவில்லை.

நம் கண்ணுக்கு, அதியமான் கோட்டையில் தெரியும் ஒரே ஒரு புராதனச் சின்னம் சென்றாயசாமி கோவில்தான்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட இக்கோவில் இப்பொழுது மைய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பொறுப்பில் உள்ளது. இக்கோவிலின் முக்கியச் சிறப்பு, கோவில் உட்புறத்தின் விதானத்தில் இராமாயண, மகாபாரத நிகழ்ச்சிகள் வண்ண ஓவியங்களாக எழுதப்பட்டிருப்பதுதான்.

இக்கோவிலில் இடிந்து கிடக்கும் பகுதிகளைச் செப்பனிட மைய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரிடம் அனுமதி வாங்கி வெளிப்புற மதிற்சுவர்களைக் கட்டும் பணி இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கிறது.

அதியமான் கோட்டைக்குப் புதிய சிறப்பு அங்குள்ள பயணிகள் விடுதி, மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பு, மாவட்டக்காவல் துறைத் தலைவர் குடியிருப்பு முதலியன.

தருமபுரியின் செழுமைக்கான மூன்று வளங்கள்

தருமபுரி மாவட்டத்தில் சமூகக் கட்டுக் கோப்பு நிலைமை ஏறக்குறையச் சேலத்தில் இருந்தது போலவே உள்ளது. வன்னிய குல க்ஷத்திரியர், மக்கள் தொகை அதிகம் உள்ள சாதியினராக இருக்கின்றனர். கன்னடம் பேசும் சாதியினரும்; தெலுங்கு பேசும் சாதியினரும் இவர்களுடைய பிரதிநிதிகளைத் தவிர, லம்பாடி, நரிக்குறவர், மலையாளி ஆகிய பழங்குடி மக்களின் பிரதிநிதிகளும் இக் குழுவைச் சந்தித்தார்கள். பெரிய சாதிகளின் சார்பில் பெருமளவில் பிரதிநிதிகள் வந்தார்கள். சேலத்தைக் காட்டிலும் பின்னடைந்து இருப்பதாகக் கருதப்படும் இந்த மாவட்டத்தில் பல்வேறு பிற்பட்ட சாதியினரும், பிற்பட்ட வகுப்பினர் அல்லாத சாதியினரும் கூடச் சேலம் மாவட்டத்தில் உள்ள தங்கள் சாதியினரைவிட அதிகம் பின்னடைந்தவர்களாக இருப்பதாகப் புலப்பட்டது.

இந்தப் புதிய மாவட்டத்தில் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எங்களுடன் பேசிய பல்வேறு மாவட்ட அலுவலர்களும், இம்மாவட்டத்தில் செழுமை ஏற்படுவதற்கு உரிய வழி வகைகள் குறித்துப் பயனுள்ள தகவல்களைத் தெரிவித்தனர். வனப் பொருட்கள் புகையிலை, முசுக்கொட்டை வளர்ப்பு ஆகியவை இந்த மாவட்டத்தின் செழுமைக்கு நல்ல முறையில் உதவக் கூடியவை. இந்த மூன்று ஆதார வளங்களையும் தீவிர முறையில் பெருக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமானால் மாவட்டத்தின் பொருளாதாரம் கணிசமான அளவில் மேம்படும். இந்த மாவட்டத்தில் காடுகள் அதிகம்; வனத்துறையினர் இங்கு விதிக்கும் கட்டு திட்டங்கள் பற்றிப் பலர் குறை கூறினர். அது குறித்து மறு பரிசீலனை அவசியம். பலதரப்பட்ட விவசாயம், இந்த மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க அம்சமாக உள்ளது. பரவலாக இருபோக நெல் பயிராகியுள்ளது. நிலக்கடலை, இதர எண்ணெய் வித்துக்கள், ராகி ஆகியவையும் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. முட்டைக் கோஸ், காரட், உருளைக்கிழங்கு முதலிய காய்கறிகள் பயிரிடவும் பொருத்தமான மண் வளம் இருக்கின்றது.

இந்த மாவட்டத்தின் பொருளாதார நிலை குறித்துத் தனி ஆய்வு மேற்கொண்டால், பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

-பிற்பட்டோர் நலக்குழு அறிக்கை

போக்குவரத்துத் துறையில் புதிய வரலாறு

நிறுவனம் திறம்பட நடக்க வேண்டும்; அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்; அப்போதுதான் சீரமைப்புள்ள நிருவாகம் கிடைக்கும் என்னும் அடிப்படையில் தமிழ்நாட்டுப் போக்குவரத்தில் அமைக்கப் பெறவிருக்கும் நான்கு போக்குவரத்துக் கழகங்களில் முதலாவதும் பெரியதுமான பல்லவா போக்குவரத்துக் கழகத்தை 3—1—1972-ல் முதல்வர் கலைஞர் அவர்கள், போக்குவரத்து அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள். இதன் அடையாளமாக, ரூ. 38 ஆயிரம் செலவில் இருக்கை வசதிகளும், பிற வசதிகளும் கொண்டதாகப் பல்லவா போக்குவரத்துக் கழகத்தினர் கட்டி முடித்து அரசுக்கு அளித்த பேருந்து ஒன்றை முதல்வர் கலைஞர் அவர்கள் வெள்ளோட்டம் விட்டார்கள்.

''போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்கும் திட்டம் இன்று நேற்று முளைத்ததல்ல—பொதுப்போக்குவரத்து சமுதாயத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென்பதால் அதனைத் தனியார் துறையில் விட்டு வைக்க இயலாது என்ற கருத்து 50 ஆண்டுகளுக்கு முன்னமேயே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் கருத்து, இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் அரும்பியது என்று நாம் பெருமையோடு கூறிக் கொள்ள முடியும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின், 1948-ல் சென்னை நகரப் பேருந்துகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டன. தொடர்ந்து மாநிலத்தின் இதரப் பகுதிகளுக்கும் இது விரிவுபடுத்தப்பட்டது.

1957-ல் 512 பேருந்துகளைக் கொண்டிருந்த 'தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை' 1971-ஆம் ஆண்டு 2,212 பேருந்துகளைக் கொண்டதாக வளர்ந்தது. 1971-ஆம் ஆண்டு நிறைவேறிய தமிழ்நாடு பேருந்து நடத்துவோர்—பொதுப் பேருந்துச் சட்டம் 50 அல்லது அதற்கு மேலும் வைத்து நடத்தும் நிறுவனங்களை நாட்டுடைமையாக்க அரசுக்கு அதிகாரம் அளித்தது.

இப்பொழுது, 10 வழித்தடங்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்னும் உச்சவரம்பும், 50 பேருந்துகளுக்கு மேல் யாரும் வைத்திருக்கக் கூடாது-அப்படி வைத்திருந்தால் அவை நாட்டுடைமையாக்கப்படும் என்னும் நிலையும் உருவாகியுள்ளன.

இந்தத் திட்டத்தின்படி, இப்பொழுது தமிழ்நாடு அரசு செலுத்தியுள்ள 10 கோடி ரூபாய் பங்குத்தொகையை மூலதனமாகக் கொண்டு, பல்லவா போக்குவரத்து நிறுவனம் இயங்கும்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதென்பது தனியார் துறையைச் சீரழிக்க வேண்டுமென்பதற்காக அன்று-வெறும் இலாப நட்டத்தை மட்டும் கருதாமல் பொது மக்களின் வசதியையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே மாறுதல்கள் செய்யப்படுகின்றன; பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அங்குப் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு முன்பிருந்த வசதி வாய்ப்புகள் கிடைக்குமா என யாரும் ஐயப்படவேண்டியதில்லை; அவர்கள் இதுவரை பெற்றுவந்த எந்தச் சௌகரியமும் கைவிடப்படாமல் மேலும் வசதிகள் செய்து தரப்படும்'' என்ற தெளிவான-உறுதியான விளக்கத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் தொடக்க உரையில் அளித்துள்ளார்கள்.

''நாட்டுடைமையான பேருந்துகளைச் சிறந்த வணிக நெறி முறைகளின்படித் திறமையோடும் சிக்கனத்தோடும் நடத்தவேண்டும்'' என்னும் கருத்தில்தான் முதன் முதலாகப் 'பல்லவா போக்குவரத்துக் கழகம்' துவக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, பாண்டியன்-சேரன்-சோழன் ஆகியோர் பெயர்களிலும் போக்குவரத்துக் கழகங்கள் அமையவிருக்கின்றன. இப்படிப் பெயர்கள் வைக்கப்படுவதற்கான காரணத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் விளக்குகையில், ''பெயர்கள் வைப்பதுதான் வேலையா? என்று கேட்பவர்களைப் பற்றி நாங்கள் அறியாமலில்லை. ஆனால், அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டால் வரலாற்று உண்மைகள் மடிந்துவிடும்-சரித்திரத்தின் சுவடுகள் நிச்சயம் அழிந்துவிடும். ஆகவேதான், இப்படிப்பட்ட மன்னர்களின் பெயர்களை நினைவுபடுத்துவதன் மூலம் நமக்கென்று ஒரு சரித்திரம்-நமக்கென்று ஒரு தனிப் பாரம்பரியம் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இது போன்ற பெயர்களை வைக்கிறோம்'' என்று குறிப்பிட்டார்கள்.

பல்லவா போக்குவரத்துக் கழகம் சென்னை-செங்கற்பட்டு மாவட்டப் பகுதியில் கிட்டத்தட்ட நாள் ஒன்றுக்கு 11 லட்சம் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் 294 வழித்தடங்களையும் 1,314 பேருந்துகளையும் கொண்டியங்கும். இந்நிறுவனத்தின் ஒருநாள் வருமானம் சுமார் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை-செங்கற்பட்டுப் பகுதிகளில் அரசுப் போக்குவரத்துக்குச் சொந்தமான எல்லாச் சொத்துக்களையும் பல்லவா போக்குவரத்துக் கழகம் மேற்கொள்ளும். இப்பகுதியில் பணிபுரியும் அரசுப்போக்குவரத்து ஊழியர்கள் அனைவரும் இக்கழகத்தில் பணியாற்ற அரசினால் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களாகக் கருதப்படுவார்கள். பல்லவா போக்குவரத்துக் கழகம் தனக்கென விதி முறைகளை வகுத்துக்கொள்ளும் வரை இப்போதுள்ள நிலைமை நீடிக்கும்.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் தலைவராகத் தமிழக அரசு போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு எம். எஸ். ராம், ஐ.ஏ.எஸ். அவர்களும், நிருவாக இயக்குநராக அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநர் திரு கே. ஜே. எம். ஷெட்டி அவர்களும், நிருவாகக் குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் எஸ். வெங்கடரமணன் ஐ.ஏ.எஸ்., சி. ஜி. ரங்கபாஷ்யம் ஐ.ஏ.எஸ்., பி. சிவலிங்கம் (தொழிற்கல்வி நெறியாளர்), பி.சி. சிரியாக், ஐ.ஏ.எஸ்., ஏ.பி. ஜம்புலிங்கம் (தொழிற்பள்ளி ஆசிரியர், கல்லூரி முதல்வர்) ஆகியோரும் பொறுப்பு வகிப்பார்கள்.

தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைப் பல்லவா போக்குவரத்துக் கழகம் உருவாக்கும் என்பது உறுதி.



தகடூர் யாத்திரையில் திரட்டிய செய்திகள்!

'சேலத்து மாம்பழம்—இந்தச் சொல்லை நாம் எல்லாரும் பயன்படுத்துகிறோம்.

ஆனால், சேலம் மாவட்டத்தை விடத் தருமபுரி மாவட்டத்தில் தான் மாங்கனிகள் அதிகம் என்று சொல்கிறார்கள். பிரிக்கப்படாத சேலம் மாவட்டத்தில், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பகுதிகள் அப்பொழுது இருந்ததால் இப்பெயர் வந்தது. இன்றைய நிலையில் தருமபுரி மாவட்டத்துக்குத்தான் இப்பெயர் பொருந்தும் என்கிறார்கள்.

* * *

தருமபுரி மாவட்டத்தின் பின்தங்கிய நிலையை—வாழ்க்கை நிலையைச் சுட்டிக் காட்டுவதற்குச் சுருக்கமாகப் பயன்படுத்தும் சொற்கள் களி, புளி, கம்பளி.

* * *

சேலத்து இரும்பு என்று சொல்கிறோம். அது பிரிக்கப்படாத சேலம் மாவட்டத்தையே குறிக்கும். ஏனெனில், இப்பொழுது தருமபுரி மாவட்டத்தில் அரூருக்கு எட்டு மைல் வடகிழக்கில் தனித்து நிற்கும் தீர்த்த மலையிலும், அதைச் சார்ந்த மலைப் பிரிவுகளிலும் உயர்தரமான இரும்புப் படுகைகள் உள்ளன.

* * *

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காகத் தொழுநோயாளிகளுக்கு ஒரு காப்பகம் பருகூரில் கட்டப்பட்டு வருகிறது.

* * *

தருமபுரி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் செலவில் சிறப்பு கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நான்காண்டுகளில் நிறைவேற்றப்படும்.

* * *

தெலுங்கு, கன்னட மாநில எல்லைகள், தருமபுரி மாவட்டத்தைச் சுற்றி இருப்பதாலும் ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கத்தாலும், பல ஊர்களின் பெயர்கள் மருவி, அவைகளே பழக்கத்தில் உள்ளன. 'தேன்கனிக் கோட்டை' என்பது டெங்கனிக் கோட்டா என்றும், 'பொன்னகரம்' என்பது பென்னாகரம் என்றும் வழங்கப்படுகிறது. இது போன்று ஏராளமான சான்றுகளைக் காட்ட முடியும்.

* * *

தருமபுரி மாவட்டத்தில் ஊர்களின் பெயர்களில் உள்ள 'பட்டி' என்ற சொல் ஹள்ளி என்ற கன்னடப் பெயராக வழங்கப்படுகிறது. மைசூர்ப் படையெடுப்புகளால் பாதிக்கப்பட்ட தருமபுரி மாவட்டப் பகுதிகளில் கிராம அதிகாரிகளாகக் கன்னடக்காரர்களையே அந்தந்த மன்னர்கள் நியமித்ததன் விளைவால் இந்நிலை உருவாகியுள்ளது.

* * *

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் அருவியில் வீழும் காவிரியின் இன்னொரு கரை மைசூர் மாநிலத்தில் உள்ளது. பட்டுத் தொழிலில் புகழ்வாய்ந்த கொள்ளேகால் பகுதிதான் அது. முன்பு தமிழகத்தோடு இணைந்திருந்த அப்பகுதி மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பின்னர் மைசூர் மாநிலத்துடன் இணைந்து விட்டது.

* * *

கிருஷ்ணகிரிக்குப் பக்கத்தில் உள்ள ஓர் இடம் லண்டன் பேட்டை எனும் பெயரில் வழங்கப்படுகிறது. கிருஷ்ணகிரியில் இருந்து நகரப் பேருந்து அங்குப் போகிறது. லண்டன் போலத் தட்பவெப்ப நிலை இருந்ததாலோ அந்தக் காலத்தில் இப்பகுதியில் வெள்ளையர்கள் வாழ்ந்ததாலோ என்னவோ அப்பெயர் ஏற்பட்டு விட்டது.

* * *

ஓசூரிலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர் தளி. சனத குமார நதியிலிருந்து தோன்றும் ஓர் ஏரி இங்கு இருக்கிறது. முட்டைக் கோசு, பச்சைப் பட்டாணி, சீமை அவரை முதலியன அதிக அளவில் பயிராகும் இப்பகுதி அந்தக் காலத்தில் சின்ன இங்கிலாந்து என்று அழைக்கப்பட்டதாம்.

* * *

தகடூர் என்பதே தருமபுரி என்று மாறி வழங்கப்படுகிறது என்பதற்கு ஆதாரம்—சுந்தரர் தேவாரத்தில் காணப்படுகிறது.

* * *

அனுமந்த தீர்த்தம் என்ற இடத்தில் ஆற்றில் ஆர்ட்டிஷியன் ஊற்று ஒன்று உள்ளது. அங்கு எப்பொழுதும் தண்ணீர் ஊறிக் கொண்டே இருக்கும்.

* * *

சேலம் மாவட்டத்தின் பல பகுதிகள் 1792-ஆம் ஆண்டு முதல் வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்தன. ஆனால், ஓசூர் பகுதிகள் மட்டும் திப்புசுல்தான் வசமே இருந்தன. திப்பு இறந்த பிறகுதான் வெள்ளையர் வசமாயிற்று இப்பகுதி.

* * *

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரின் நண்பராகி, இளமையிலேயே துறவு பூண்டு இராஜத்துரோகக் குற்றத்துக்காகப் பத்தாண்டுச் சிறைத் தண்டனை அடைந்து சிறையில் தொழுநோயால் வாடி 1925-ஆம் ஆண்டு உயிர்நீத்த விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவாவின் கல்லறை உள்ள பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டத்தில் தான் உள்ளது.

இங்கேதான் பாரதமாதாவுக்குக் கோவில் கட்டச் சுப்பிரமணிய சிவா முயற்சி எடுத்தார்.

---

24. தைமொழியைப் போற்றல் தலை

தலைநரைக்கா மைக்குத் தலைவி, தனயர்,
அலைக்கழிக்கா நல்ஆள், அரசு,—நிலைகுலையாத்
தூமொழியார் நல்வாய்ப்பே என்ற பிசிராந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

காளை பிரிந்தான் களம்நோக்கி வாகையுடன்
நாளை வருவான் ! நறுமணத்தின்—வேளைவரும்
மெய்ம்மொழியே ! காத்திருப்பாய் ! என்றஉன் மேலாம், அத்
தைமொழியைப் போற்றல் தலை.

—செல்லம்பாண்டியன், மதுரை-1.

நற்றமிழைக் கற்றால்உன் நாவினிக்கும் நல்லகுணம்
உற்றவளைப் பெற்றால்உன் வாழ்வினிக்கும் —குற்றமில்லாச்
சேய்இரண்(டு) என்றும் சிறப்பளிக்கும் செம்மைஇப்பா
தைமொழியைப் போற்றுதல் தலை.

—ப. வேங்கடாசலன், கருக்காடிப்பட்டி.

தத்தி நடந்து தளிர்க்கையால் தாவிவந்து
மெத்தென்ற தாய்மடியின் மேல்வீழ்ந்து—முத்தமழை
பெய்கின்ற அன்னையிடம் பேசும் சிறுகுழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

தத்தி வரும்குழவி தாயிடத்துப் பேசுகின்ற
முத்து மொழியும் தமிழன்றோ—சித்திரமாம்
செவ்வாய்யாழ் பெற்றநற் செல்வத்தின் சொல்லமு
தைமொழியைப் போற்றல் தலை.

—அரங்க. வேலுசாமி,சூரியநல்லூர்.

மாமாவும் பெண்கொடுக்க மாட்டேன்என் றாரவரே,
ஏமாறும் வண்ணத்தில் எப்படியோ—சீமாட்டி
மைவிழியை, யான்மணக்க மன்றாடி வென்றஅத்
தைமொழியைப் போற்றல் தலை.

—கோ. மதியப்பன், கோவில்பட்டி.

கடமைமுன் ! காதல்பின் ! கண்முன் நடக்கும்
கடும்போரைக் கொஞ்சம் கவனி!—கொடியோரை
நாம் வெல்வோம் ; தாய்மானம் காப்போம் ! நடஇப்பே
தைமொழியைப் போற்றல் தலை.

—மா. ஆறுமுகம், செங்கை.

பண்பாட்டை, நல்லொழுக்கப் பாதையினைத், தீயோரின்
பின்பாட்டைத் தீய்த்தெறியும் பீடுதனை—அன்பூட்டும்
மெய்வழியை, மேன்மையினை, மேதினியில் நம்தேசத்
தைமொழியைப் போற்றல் தலை.

—ம. சூரியதாசன், தில்லைநகர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

சி. புனிதவதி,
மே/பா துரைசாமி நாயகர்,
கீழ்நாயகன்பாளையம்,
வடகல்பாக்கம் (அஞ்சல்),
(வழி) மாமண்டூர், (வ.ஆ.).

மன்னும் புகழ்பெரிதாம் ! மாயுமுடல் இன்றென்ன
இன்னுமிருந் தென்னவென ஏற்றுகதீ !—துன்னுபகை
யையொழிக்கத் துள்ளுமிரு தோள்புடைக்க நாட்டகத்
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் பாளை. எழிலேந்தி, புதுவை.

மின்னல் வழிகாட்ட மீன்கள் திசைகாட்ட
கன்னல் மொழியாளின் கைபிடித்தே—இன்னலென
வைமொழியைப் பேசிடினும் வான்மொழியாய் வாழுமடந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சீனி. செம்பியன், திருவண்ணாமலை.

மூட வழக்கம் முறிந்தோட வைத்தறிவை
நாட வழிசொன்ன நல்லறிஞர்—நாடோறும்
தம் மொழியால் சீர்திருத்தம் செய்யும் பெரியார்தந்
தைமொழியைப் போற்றல் தலை.

—தி. முகுந்தன், எம். ஏ., திருவாரூர்.

தெள்ளுநடை துள்ளிவரத், தேன்தமிழன் உள்ளமது
விள்ளுமொரு நல்லகவி வெள்ளமதை—அள்ளி, இரு
கைமொண்(டு) அருந்திக் கனித்திடுவோர் அக்கவி
தைமொழியைப் போற்றல் தலை.

—நெல்லை எஸ். முத்து, திருநெல்வேலி;

சேமிப்போம் சீர்பெறுவோம் செந்தளிர்போல் செல்வங்கள்
நாமிருவர் போலே நமக்கிருவர்—பூமியிலே
உய்வழியைக் காண்போம் உயர்வோமே என்றகோ
தைமொழியைப் போற்றல் தலை.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை;

கல்லறையின் மேலே ' தமிழ்மாணவன் ' என்ற
சொல்லைப் பொறித்திடவே சொன்னதுமேன் ?
—மெல்லியலே !
தேமொழியை மாந்தித் திளைத்ததனால் ; அத்தகுவித்
தைமொழியைப் போற்றல் தலை.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு;

தையும் பகுத்தறி ; இன்சொல் வழங்கு ;
துமை பரவப் புகழ்செய்—மதிவளர்வ
தமகிழ்ந்து போற்றல் தலையாகும் என்னும்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—தமிழாலயன், எழும்பூர்.

செங்கதிரை வெண்மதியைத் தின்றுமிழும் பாம்பென்றே
இங்குரைப்பர் சோதிடர்கள் என்தோழா—இங்கவரின்
பொய்மொழியை நீமறுத்தப் பொய்யா அறிவியல்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—கரு. சிவப்பிரகாசம், நாட்டரசன்கோட்டை.

நெஞ்சம் மகிழ்வடைய நின்றே உறவாடி
மிஞ்சும் சுகம்தந்த மீன்விழியே—அஞ்சுகமே
உய்த்துணரும் ' நம்கலைஞர் ' உள்ளத்து நற்கருத்
தை,மொழியைப் போற்றல் தலை.

—காதல்தாசன், கீழச்சிவல்பட்டி.

கூற்றே பகைத்தாலும் கூடி எதிர்க்கும்நல்
ஆற்றல் படையென்றார் நம்முன்னோர்—மாற்றார்ப
கையொழித்து நாடுதனைக் காக்கவே நாம்நம்முந்
தைமொழியைப் போற்றல் தலை.

—அ. சற்குணராசு, தலைஞாயிறு.

பணிவான அன்பும் பளிங்கனைய கற்பும்
அணியான பண்புச் சிரிப்பும்—துணிவான
தீமொழியைச் சாற்றாத வாய்மையுடன் கொண்டநற்கோ
தைமொழியைப் போற்றல் தலை.

—கா. இரா. ஔவைத்திருமகள், காக்கணாம்பாளையம்

குருதிதானம் செய்வோம், குவிப்போம் நிதியை,
விரைந்திடுவோம் நாடுகாக்க வந்த—நெருக்கடியால்
கைவிடுவோம் வீண்செலவை, என்ற கலைஞராம்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

தொல்லையின்றி நாம்வாழத் தூய்மனத்தால் இவ்வுலகில்
நல்ல கருத்தை நயமாகச்—சொல்லுகின்ற
மெய்நண்பன், நல்லாசான், மேன்மக்கள், தாயொடுதந்
தைமொழியைப் போற்றல் தலை.

—அ. லலிதா, கோயம்புத்தூர்-1.

பூவில் நகையெடுத்து பொன்னில் நிறமெடுத்து
நாவில் மழலை நடமாட—ஓவியமாய்
மைவிழி ஆட மயக்கிடும் நற்குழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—கலாவதி தென்னவன், பெரியகுளம்.

கையரண்டால் அள்ளிக் கவினொழுகச் சோறுதனை
மெய்யெல்லாம் பூசி மினுமினுக்கச்—செய்யுமதன்
மெய்தீண்டின் இன்பம் மிகுவதனால் கொஞ்சுகுழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சிவராம நமசிவாயம், திருச்சி-15.

பெற்று வளர்த்துப் பிரியமாய்க் காத்துநிதம்
உற்றார் உலகோர் உனைவிரும்பும்—குற்றமற்ற
மைவிழியாள் விட்ட மகனே உனதுதாய்தந்
தைமொழியைப் போற்றல் தலை.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

கண்ணைக் கயலாக்கிக் கற்பனையால் மானாக்கி
விண்ணைத் துளைத்துவிடும் வேலாக்கி—வண்ணமகள்
மைவிழியை மென்மை மலராக்கும் பொங்குகவி
தைமொழியைப் போற்றல் தலை.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

கள்ளமிலா அன்பும் கடும்உழைப்பும் பால்போன்ற
தெள்ளறிவும் நல்லுள்ளத் தேவையிதை—உள்ளத்தே
வைமகனே என்று வழிகாட்டும் நற்றாய்தந்
தை,மொழியைப் போற்றல் தலை.

—சு. நாராயணசுவாமி, திருச்சி-3.

நையப் புடைப்பாரை நண்பராக்கி, நண்ணாரைப்
பையத் திருத்திநற் பண்புறுத்தி—வையத்தில்
வைதல் விலக்கிட வேண்டிய அண்ணா ' மே
தைமொழியைப் பேற்றல் தலை'.

—வித்துவான் க. வேங்கடசாமி, செங்கற்பட்டு-2.

நாடும் மொழியும் நமதிருகண் ! தீங்கெனில்நெஞ் (சு)
ஓடும் ; உணர்வெழும் ; உள்துடிக்கும் !—பாடிடும், தத்
தைமொழியே ! பல்வளமும் சாரும் தமிழ்ஞாலத்
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் த. வாசுதேவன், பி. ஏ., நயினார்பாளையம்.

தமிழரசின் வெண்பா தவழ்ந்துவரல் கண்டோர்
அமிழ்தனைய பாவனுப்ப லானார்—தமிழரசார்
தைக்கின்ற பாவின் தளைதந்தால் அக்கவி
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் இ. பிச்சை, ஆத்தூர்.

போர்முனைக்குச் சென்றான் புலியனையான்—மன்விழியே!
நீர்நனைத்தாய் காதல் நினைவால்கண்—தார்புனையா
மைவிழியே என்றன் மகன்வருகைக் காற்றெனும்அத்
தைமொழியைப் போற்றல் தலை.

—பி. பாண்டியன், பி. ஏ., பி.டி. மதுரை-2.

சிந்தனையால் சீர்பெறுவோம் சிக்கனமாய் வாழ்ந்தாலே,
இந்நிலத்து மாண்புறுவோம் இன்புறுவோம்—நந்தமிழாம்
தேமொழியில் இக்கருத்தைச் செப்பியுள்ளார்! நல்லொழுக்கத்
தை, மொழியைப் போற்றல் தலை.

—பண்பழகன், சென்னை-14.

ஆர்லந்தோ நீரூற்றை அக்கறையாய்க் கண்டவுடன்
ஆர்வமுடைக் கவிதை அங்கெழுதிப்—பேர்கொண்டார்!
வைவிழிச் சர்க்கரையாய்ப் பாய்ந்துவரும் அக்கவி
தைமொழியைப் போற்றல் தலை.

—வித்துவான் மா. சுப்பாராஜ், குமாரபுரம்.

எங்களுயிர் வெல்லமல்ல என்றுபெய்து செங்குருதி
பொங்கி வரும்பகைக்கோ பொங்கலிங்கே—வங்கமக்கள்
கைமொழி தாமிழந்தும் கால்கொள் சுதந்திரத்
தைமொழியைப் போற்றல் தலை.

—து. சிவசுபரமணியன, பி.ஏ., பி.டி., அச்சம்பட்டி.

தமிழத்தான் தன்னரிய தாய்மொழியைப் போற்ற
அமிழ்தொத்த பாட்டியற்றி அன்று—தமிழ்ப்பகையை
எய்யவந்த ''பாவேந்தன்'' என்னும் தமிழ்ச்சிறுத்
தை,மொழியைப் போற்றல் தலை.

—ச. சாத்தப்பன், எருக்கலக்கோட்டை.

அடிமை அரசை அகற்றிநம் நாட்டில்
குடியரசை மக்களால் கொண்டே—அடிமையை
வையகமே நீக்கிட வாழ்ந்திட்ட நாட்டின்தந்
தைமொழியைப் போற்றல் தலை.

—நாராயணன், பெருமாள் தேவன்பட்டி.

குற்றாலத் தேனருவி கொட்டும் இசைஇன்பம்
பெற்றோமே அண்ணாவின் பேருரையில்—கற்றோர்கள்
கைகூப்பும் காஞ்சிக் கதிரவனும் நல்லம்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—க. தியாகராசன், பி.ஏ., நெய்வேலி-2.

நல்லவை நாடின் நலம்பெருகும் அல்லவை
நல்லார் ஒருபோதும் நாடாரே—பொல்லாரின்
பொய்மொழியைப் போற்ருது புண்ணியர் தாம்செய்த
தைமொழியைப் போற்றல் தலை.

—வி. ஏ. மாணிக்கராசு, எம்.ஏ., பி.டி., கொட்டாரம்.

தங்கச்சம் பாவிளையும் ; “ தைபிறந்தால் நல்வழியாம் ”
பொங்குதமிழ்ப் பெண்ணுலகம் பூரிக்கும்—எங்கணுமே
தைமொழியாம் நல்லவளைத் தாரணியே போற்றுங்கோ
தைமொழியைப் போற்றல் தலை

—ஆ. பொன்னையன், குளமங்கலம் வடக்கு.

திருமந் திரத்தைத் திருவா சகத்தைக்
கருதரிய தெய்வக் கவிஞர்—திருக்குறளை
மைவண்ணக் கண்ணன் வழங்கு பகவத்கீ
தைமொழியைப் போற்றல் தலை.

—அ. குமரப்பன், சீர்காழி.

அன்னமே ! ஆரணங்கே ! ஆருயிரே ! அன்பேகேள் !
மென்குழல் யாழிசையும் மேன்மையே—என்ருலும்
மைவிழியே போற்ருேம் மழலைக்கேட் பின்குழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—செல்வ. தில்லைசம்பந்தன், சிதம்பரம்.

பெற்றெடுத்த தாய்நாட்டைப் பேணும் தமிழ்மொழியைப்
பற்றுடனே காதலித்துப் பல்லறிஞர்—கற்பித்த
கைமறவாத் தன்மை தமிழ்மறவ ! நீகாத்தெந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சு. தமிழரசி, மதுரை-1.

குழலை விழலாக்கும் ! கூட்டமுதம் தோற்கும்
எழிலைப் பெருக்கி இறைக்கும்—மழலையெனும்
மெய்மொழியால் இன்பம் மிளிர்ந்திடவே நம்குழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—பூ. அ. இரவீந்திரன், கோவை-2.

வாளெடுத்துப் போரிட்டு வஞ்சகரின் கொட்டத்தைத்
தாள்பணிய வைக்கும் தடந்தோளா—ஞாலத்தில்
கைநிறையப் பெற்றிங்குக் கச்சிதமாய் வாழவனி
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர். காந்திதாசன், பல்லவராயன்பட்டி.

முன்னைப் பழமொழியை மூத்தோர்தம் நல்லுரையைத்
தன்னிக ரில்லாத் தமிழ்மறையை—நன்னூலாம்
தேமொழியைத் தெள்ளத் தெளிவாய்த் தெளிந்துமுந்
தைமொழியைப் போற்றல் தலை.

—தி. செ. இராமசாமி, எம்.ஏ., பி.டி., நாமகிரிப்பேட்டை.

எளிதாய் இனிதாய் எழிலாய்ச் சுவையாய்க்
கனியாய்க் கருத்துக் களஞய்த்—தெளியுமுன்
மைமொழியாம் வள்ளுவர்நூல் வாய்ந்தொளிருஞ் செந்தமிழ்
முந்
தைமொழியைப் போற்றல் தலை.

—ஐ. கோ. இராமநாதன், கோயம்புத்தூர்-2.

எம்மொழியைப் போற்றிடினும் போற்ரு விடினுமே
நம்மொழியைப் பேசுகின்ற நன்மக்கள்—உண்மையில்
மெய்குளிர வைக்கும் மழலைகேள் அக்குழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—தா. உ. சுப்பையன், விஜயநகரம்.

மந்திரம் வேதம் மறையிவற்றின் சொற்படியே
எந்திரம் போலொன்றும் எண்ணுமல்—முந்தறங்கள்
செய்வழியைக் கற்பதினும் செல்வன்றன் ஈன்றதந்
தைமொழியைப் போற்றல் தலை !

—கங்கை. இயேசுபாதம், எம்.ஏ., சென்னை-30.

எத்தனைதான் இன்மொழிகள் ! என்ருலும் இத்தரையில்
தத்திவரும் மென்மழலைத் தண்செவ்வாய்—முத்துதிர்கொச்
சைமொழிக் கீடாமோ ? தேனமுதாய்ப் பெற்றகுழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—எழில்வேந்தன், சென்னை-28.

பழச்சொல் மனைபோற்றல் பாங்கமைநல் வாழ்வாம்,
மழலை மொழிபோற்றல் மாண்பாம்;—அழகுதமிழ்
ஐயமறக் கற்ருேர் அருவியெனப் பாடுகவி
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

இந்தியாவிலேயே முதல் அச்சியல் பள்ளி!

கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் படங்கள் உள்ள புத்தகங்கள் சிறுவர்களை மட்டுமல்ல, பெரியவர்களையும் கவரவல்லதாக இருக்கின்றன. இதற்குக் காரணம் அழகான அச்சு அமைப்பு என்று சொல்லலாம்.

அச்சுக்கலை, உச்சிக் கிளையில் உள்ள இன்றைய உலகில் எத்தனை வகையான புத்தகங்கள் ; எத்தனை வகையான பத்திரிகைகள் ! அத்தனையும் நாம் பார்க்கும் போது, விஞ்ஞானத்தின் விந்தையைக் கண்டு நம்மால் வியக்காமலிருக்க முடியவில்லை. இன்று எந்தத் துறையை நாம் எடுத்துக் கொண்டாலும் எல்லாம் இயந்திர மயமாகவே காட்சியளிப்பதைக் காண்கிறோம் ; கணக்குப் போடுவதிலிருந்து களைபிடுங்குவது வரை இன்று கருவிகள் வந்து விட்டன ! இத்தகைய விஞ்ஞான வளர்ச்சிக் காலத்தில் அச்சுக்கலையும் மிக வேகமாக வளர்ந்துவரும் பாங்கினை நாம் பார்க்கிறோம்.

மேலை நாட்டினர் அச்சுத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்து, பல புதிய புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளித்துக் கொண்டே இருக்கிறார்கள். மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு அச்சுக் கலையின் வளர்ச்சியும் ஒரு மூலகாரணம் என்று உறுதியாகச் சொல்லலாம். இந்த வளர்ச்சி இல்லாமல் பண்டைய இலக்கியங்கள் ஏட்டு வடிவிலேயே இருந்திருந்தால் இந்த அளவுக்கு நாம் ஏற்றம் பெற்றிருப்போமா ? ஆகவே, அச்சு முறையைக் கண்டுபிடித்த அந்த முதல் விஞ்ஞானிக்கு நாம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வோமாக !

கல்வி, மருத்துவம், பத்திரிகை இப்படிப் பலதுறைகளில், ஒவ்வொருவருக்கும் ஒருதுறை பிடித்திருக்கும் ; அந்தந்தத் துறையில் அவரவர் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள் இன்று தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் நிறைய இருக்கின்றன. சென்னையில் எத்தனையோ வகையான தொழில் நுட்பக் கல்விக் கூடங்களை நாம் பார்க்கிறோம் ; இவைகளில் சில மற்ற மாநிலங்களில் இல்லாத அளவுக்குச் சிறந்தும் விளங்குகின்றன ; அவற்றிலே ஒன்றுதான், இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழும் மண்டல அச்சியல் பள்ளி (Regional School of Printing).

சென்னை அடையாறில் உள்ள இந்தப் பள்ளி, 1926-ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும் அப்போது. அதற்குப் பெயர், சென்னைத் தொழிற் பள்ளி (Madras Trade School) என்பதாகும். பிறகு இந்தப் பள்ளியின் பெயர் அவ்வப்போது மாற்றமடைந்து இறுதியாக 1955-ல் மண்டல அச்சியல் பள்ளியாக இன்றளவும் விளங்கிவருகிறது. இப்பழம்பெரும் பள்ளியின் பரப்பளவு 54,000 சதுர அடி. நல்ல காற்ருேட்டமான, அமைதியான சூழ்நிலையில் இந்தப்பள்ளி அமைந்திருப்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

இந்தப் பள்ளியில் இரண்டு விதமான கல்விப் பிரிவுகள் உள்ளன. 1. ‘ டிப்ளமா ’ பிரிவுகள், (Diploma Courses), 2. சான்றிதழ்ப் பிரிவுகள் (Certificate Courses). எழுத்துக் கோத்தல், படிதிருத்துதல், அச்சு அமைப்பு, படஅச்சு (Block making) தயாரித்தல், அச்சடிக்கும் இயந்திர வேலை, புத்தக ‘ பைண்டிங் ’, அச்சக நிருவாகம், லித்தோ அச்சு வேலைகள், புகைப்படமெடுத்தல், சித்திர வேலைப்பாடுகள், ‘ ஆப்செட் ’ அச்சு முதலியன இங்குக் கற்றுத் தரப்படுகின்றன. இப்பொழுது 296 மாணவர்கள் இங்குப் படிக்கிருர்கள். வெளி மாநிலங்களிலிருந்தும் சிலமாணவர்கள் இத்துறையில் பயிற்சி பெறுகிருர்கள். சிக்கிம், பூடான், அசாம், இலங்கை, மலேசியா, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்த மாணவர்கள் இங்கு அச்சுக் கலை பயில்கிருர்கள். இவர்களெல்லாம் தங்குவதற்காக அழகான விடுதி ஒன்றும் அருகிலேயே இருக்கிறது.

இங்குப் படிக்கும் தகுதி மிக்க மாணவர்களுக்கு, உபகாரச் சம்பளமும் அளிக்கப்படுகிறது. சென்னையில் உள்ளது போல அலகாபாத்திலும், பம்பாயிலும் ‘ மண்டல அச்சியல் பள்ளிகள் ’ உள்ளன. இவற்றில் சென்னையில் உள்ள பள்ளியே முதலாவதாக நிறுவப்பட்ட பழைய பள்ளியாகும்.

இந்தப் பள்ளியில் பல பிரிவுகள் உள்ளன. அவை 1. எழுத்துக் கோக்கும் பிரிவு, 2. கலைஞ பிரிவு, 3. இயந்திரப் பிரிவு, 4. பட அச்சுப் (பிளாக்) பிரிவு, 5. லித்தோ ‘ பிளேட் மேக்கிங் ’ பிரிவு, 6. லித்தோ இயந்திரப் பிரிவு, 7. பைண்டிங் பிரிவு.

இதில் பயிற்சி பெறும் மாணவர்கள் அச்சுத் துறையில் மெச்சத்தகுந்த முறையில் சிறந்து விளங்குவதை, அவர்கள் செய்துள்ள அச்சு வேலைகளைப் பார்க்கும்

நவ இந்தியா

மதுரையின் புகழ்மிக்க மீனுக்ஷி கோயிலுக்கு ஒரு மைல் தூரத்
தில், இந்தியாவின் சிறப்புமிக்க பஞ்சாலைகளில் ஒன்று உள்ளது.
இப்பஞ்சாலை இந்தியாவின் பழமைக்கும், நவீனத்துக்கும் ஒரு
எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சென்ற சில பத்தாண்டுகளில்
இந்தியா கண்டுள்ள பொறியியல் வளர்ச்சி மற்றெந்தத்துறை
யையும்விட பஞ்சாலை துறையில் தான் அதிகம் பிரதிபலிக்கிறது.
மதுரை மில்ஸ் இத்துறையில் மற்றெந்த ஒரு கம்பெனியையும்
விட சிறப்பானது.

மதுரை மில்ஸ் தயாரிக்கும் பலவிதமான தொழில்துறை மற்றும்
பொதுஜன உபயோகத்துக்கான நூல்களும், துணிவகைகளும்
இந்தியாவிலும் வேறுபல நாடுகளிலும் விரும்பி வாங்கப்படு
கின்றன. நேரடி ஏற்றுமதி வியாபாரத்தின் மூலம் ஆண்டுதோறும்
சுமார் 7 கோடி ரூபாய் அந்நியச்செலாவணி ஈட்டுத்தருகின்றன.

மதுரை மில்ஸ் தயாரிக்கும் நூல்களும், துணிவகைகளும் கணக்
கற்ற சிறிய, பெரிய சார்புத் தொழில்களுக்கு அத்தியாவசியமான
மூலப்பொருள்களாகின்றன. இவைகள், போட்டிமிக்க ஏற்றுமதி
வியாபாரச் சந்தைகளுக்கேற்ற உயர்ரக பொருள்களை உற்பத்தி
செய்ய இந்திய உற்பத்தியாளர்களுக்கு உதவுகின்றன.
நவீன யந்திர சாதனங்களாலும், தரக்கட்டுபாடு முறைகளாலும்,
மேம்பட்ட உற்பத்தி முறைகளில் இடைவிடாத ஆராய்ச்சி
செய்தும், பஞ்சு மற்றும் செயற்கை நூல்களை நல்ல முறையில்
பயன் படுத்தியும் மதுரை மில்ஸ் தங்கள் தர மரபை நீடித்து நிலை
நாட்டி வருகிருர்கள்.

18,000 நபர்களுக்குமேல் வேலை அளித்திருப்பதோடல்லாமல்,
மதுரை மில்ஸ் எப்பொழுதும் தங்கள் தொழிலாளர்களின் நல்
வாழ்வில் பிரத்யேக அக்கறை காட்டி வருகிருர்கள். பலவித நல்
வாழ்வுத்திட்டங்களில், க்ஷேமநல பள்ளிகள், வீடுகட்ட கடன்கள்,
மருத்துவ பராமரிப்பு, வேலை ஒய்வு பெற்றபின் பெறும் நலன்கள்
முதலியன சில. ஆகவே மதுரை மில்லில் வேலை செய்வது என்பது
அநேகம் தொழிலாளர்களுக்கு தந்தைக்குப்பின் தனயன் அடையும்
உரிமை போல் உள்ளது என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை

Bensons 1724-TAM

மதுரை மில்ஸ் மதுரை, தென்னிந்தியா.

போது நன்கு புலப்படுகிறது. உதாரணமாக, ஒரு விளம்பரம். அந்த ஒரு விளம்பரத்தையே 23 விதங்களாகப் பல்வேறு அச்சு எழுத்துக்களைக் கொண்டு, மிக அழகாக அமைத்திருக்கும் முறையைப் பார்த்தால் அவர்களது திறமை நன்கு புலப்படுகிறது. ஒரு தனியார் அச்சகத்தில் அனுபவம் வாய்ந்த ஒரு அச்சுக்கோப்பாளர் செய்வதை விட, மிக அழகாக அவர்கள் அமைக்கும் அந்த அச்சு அமைப்பு (Display) கண்ணையும் கருத்தையும் கவரும் படியாக இருக்கிறது. ஒரு ' விசிட்டிங் கார்டை ' எடுத்துக் கொண்டால் அதில் எத்தனை வகை ! எத்தனை வடிவம் !

புதிய புதிய அமைப்புகளில் நூற்றுக்கணக்கான ' விசிட்டிங் கார்டு ' களை அங்குப் பார்க்கும் போது அவர்களுக்கு உள்ள தொழில் நுணுக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தக் கார்டுகளில் உள்ள அச்சு எழுத்துக்கள், அமைப்பு முறை, வண்ணங்கள், அச்சடிப்பு அனைத்தும் மிகத் துல்லியமாக, மற்ற அச்சகத்தினருக்கும் ஒரு முன் மாதிரியாக விளங்குகின்றன. இதேபோலத்தான் 'லெட்டர் ஹெட்களும்' (Letter-Heads) அழைப்பிதழ்களும். இங்குப் பயலும் மாணவரிடம் ஒரு அழைப்பிதழுக்கான விவரத்தைக் கொடுத்துவிட்டு, இதை இந்த அளவுள்ளதாக அச்சிட வேண்டும் என்று சொல்லிவிடுவார்கள். அந்த மாணவனே அதற்கான அச்சு எழுத்தைப் பொறுக்கி எடுத்துக் கோத்து அமைத்துச் சுத்தமாக அச்சிட்டுக் காட்ட வேண்டும். இப்படி எல்லாப் பிரிவுகளிலும் இந்தச் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்படிப் பயிற்சி அளிப்பதற்காக இந்தப் பள்ளியில், ஒன்பது விரிவுரையாளர்களும், மூன்று துணை விரிவுரையாளர்களும், பதினெட்டு செய்முறைக் காட்சியாளர்களும் பணியாற்றுகிருர்கள். இவர்களில் பெரும்பாலோர் இந்தப் பள்ளியிலேயே படித்து, இந்தப் பள்ளியிலேயே ஆசிரியராக வேலை பார்ப்பவர்கள்.

உழைப்பும், சுறுசுறுப்பும் இருந்தால் எந்தக் காரியத்தையும் சுலபமாகச் செய்து முடித்துவிடலாம் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு : சென்னைக் கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ மனையின் நூற்றுண்டு விழா மலர் ஒன்று அவசரமாக அச்சிட வேண்டியிருந்தது. முன்னூறு பக்கங்களுள்ள அந்த மலரைத் தனியார் அச்சகத்தில் தந்தால் சீக்கிரம் கிடைக்குமா ? ஆகவே, இந்தப் பள்ளியில் கொடுத்துப் பார்த்தார்கள். பன்னிரண்டே நாட்களில் அச்சிட்டுத் தந்துவிட்டார்கள் இந்த மாணவர்கள். மலரைப் பார்த்தால் அவசரக் கோலமாக இல்லை. மிக்க அழகாக இருந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 360 பக்கமுள்ள பொறியியல் புத்தகத்தை ஐந்தே நாட்களில் அச்சிட்டுத் தந்துவிட்டார்கள் இந்த அசகாயச் சூரர்கள்.

16

இம்மாணவர்களால் தயாரிக்கப்பட்ட அழகான புத்தகப் பைண்டிங், பைல்கள், காலண்டர்கள், புகைப்பட ஆல்பம் போன்றவைகளெல்லாம் மிக நேர்த்தியாகவும், புதிய முறையிலும் செய்யப்பட்டிருக்கின்றன.

இங்கு ஒரு நூலகமும் இருக்கிறது. இதில் 1,100 புத்தகங்கள் இருக்கின்றன. அச்சுத் துறை பற்றிய மேலைநாட்டு நூல்களும் பொதுவான நூல்களும் உள்ளன. மாணவர்கள் ஒய்வு நேரங்களில் இந்நூல்களைப் படித்துப் பயன் பெறுகிருர்கள்.

இப்பள்ளியிலுள்ள சில அச்சு இயந்திரங்களை இலண்டனும், ஜெர்மனியும், கிழக்கு ஆசியாக் கம்பெனியும் இலவசமாக வழங்கியுள்ளன. இந்தப் பள்ளி மாணவர்களால் ஆண்டுதோறும் '' கிராபிக் ஸ்டூடண்ட் ' என்னும் ஒரு பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறது. இதிலுள்ள படங்களும், அச்சு அமைப்புகளும் கண்களைக் கவருவனவாக உள்ளன. இந்தப்பத்திரிகையைப் பிரிட்டன் அதிகாரி ஒருவரும், கனடா பேராசிரியர் ஒருவரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இந்த மண்டல அச்சியல் பள்ளியில் படித்து விட்டு ஒருவன் வெளியே வரும்போது, அவன் ஓர் அச்சகத்திலுள்ள வேலைகளை மட்டுமல்ல, அச்சக நிருவாகத்தையே மேற்கொள்ளும் அளவுக்குத் தகுதி பெற்றிருப்பான்.

தமிழ்நாடு அரசினரின் இந்தப் பள்ளி, ஒவ்வோர் ஆண்டும் எத்தனையோ மாணவர்களைத் தயார் படுத்தி அனுப்பிக் கொண்டேயிருக்கிறது. இங்குப்படித்தவர்கள் மற்ற மாநிலங்களில் அச்சகங்களை நிருவகித்து, அச்சுத் துறையில் சிறந்து விளங்குகிருர்கள். தில்லி, மணிப்பூர், நாகாலாந்து, ஆகிய நகரங்களில், இப்பள்ளியில் படித்தவர்கள் மிக உயர்ந்த பதவியில் இருக்கிருர்கள். சென்னை அரசினர் அச்சகத்திலும், பிற இடங்களிலும் உள்ள பெரிய அச்சகங்களில் இப்பள்ளி மாணவர்களே பெரும்பாலும் பணியாற்றுகிருர்கள். ஆகவே, தமிழ்நாட்டின் பெருமை நாடும் ஏடும் புகழும் வண்ணம் அமைந்திருக்கிறதென்முல் அதற்கு இப்பள்ளியும் ஒரு காரணம் என்று நிச்சயம் சொல்லலாம்.

அந்நியச்செலாவணிதரும் அழகு ரோஜா

'பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை' என்பர் தமிழ்ப் புலவர்; ஆதி கிரேக்க ரோமானியப் புலவர்கள் மலர்களுக்கெல்லாம் அரசியாக ரோஜாப் பூவையே கண்டனர்; அன்று முதல் இன்றுவரை, எல்லாருமே ரோஜாவை மலர்களின் அரசியாகவே பாடிப் பாராட்டிப் போற்றுகின்றனர்.

'ரோஜா' என்னும் பெயர், ரோஜாச் செடிக்கு நீண்ட நெடுங்காலமாகவே வழங்கப் பெற்று வரும் இலத்தீன் மொழிச்சொல். ரோஜாச் செடிகள் மிகவும் அழகானவை. ரோஜாக் குடும்பம், ஏறத்தாழ 100 சாதிகளையும், 2,000 இனங்களையும்தன்னகத்தே கொண்டு விளங்கும் ஒரு இரட்டை விதையிலைத் தாவரக் குடும்பம். இந்தத் தாவரக் குடும்பத்தில் மிகவும் பரவியுள்ள ஒரு சாதிதான் ரோஜா.

ரோஜா இனங்கள், வட துருவத்தின் மிதப் பகுதிகளிலும் குளிர்ப்பகுதியிலும் ஏறக்குறையச் சமமாக வளர்ந்துள்ளன. ஆப்பிரிக்காவில் அபிசீனியா வரையிலும், அமெரிக்காவில் வட மெக்சிகோ வரையிலும் இவை காட்டுச் செடிகளாக வளர்கின்றன எனினும், உலகின் பல்வேறு நாடுகளிலும் ரோஜாச் செடிகளை விரும்பி வளர்க்கின்றனர்.

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் லங்காஸ்டிரியர்களுக்கும், யார்க்கிஸ்டுகளுக்கும் இடையே ஓர் உள்நாட்டுப் போர் நடைபெற்றது. அப்போருக்குப் பெயர், 'ரோஜா யுத்தம்' என்பது. போரில் 'யார்க்'குகள் வெள்ளை ரோஜாவையும், லங்காஸ்டிரியர்கள் சிவப்பு ரோஜாவையும் தத்தமது சின்னமாக அணிந்திருந்தமையாலேயே அந்தப் போருக்கு இப்பெயர் ஏற்பட்டது என்பர் வரலாற்றாசிரியர்கள்.

ரோஜாப் பூக்களில் கருஞ்சிவப்பு, இரத்தச் சிவப்பு, வெண் சிவப்பு, மஞ்சள், வெண்மை முதலிய பல நிறங்கள் உள்ளன. இவற்றில் மணமற்றவைகளும் உண்டு; எனினும் பெரும்பாலானவை நல்ல—இதமளிக்கும் மணம் உடையன.

நேருவுக்கு ரோஜாப்பூவின் மீது பெரும் விருப்பம் உண்டு. அவர், நாள்தோறும், தமது சட்டையில் ரோஜா மலரைச் செருகிக் கொள்வார். நேருவின் கல்லறையைச் சுற்றிலும், 15 ஆயிரம் ரோஜாச் செடிகள் நடுவது என்னும் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே 12 ஆயிரம் செடிகள் வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு (1971) நேருவின் நினைவு நாளில் 3 ஆயிரம் செடிகள் நடப்பட்டன.

ரோஜா மலர்களிலிருந்து அத்தரும் பன்னீரும் தயாரிக்கிறார்கள்; ரோஜா மலர்கள் குல்கந்து செய்யவும் சர்பத் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

தற்போது தமிழ்நாட்டிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ரோஜா மலர்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன.

ரோஜா மலர்களுக்கு—குறிப்பாகச் சூப்பர் ஸ்டார் என்னும் ரகத்திற்கு ஐரோப்பிய நாடுகளில் குளிர் காலத்தில் நல்ல கிராக்கியுள்ளது. குளிர் காலத்தில், அங்குத் தரையைக் குளிர் பனி உறைந்து மூடிக் கொள்வதால் பயிர்கள் விளைவதில்லை. இந்தக் காலத்தில் அங்கு, ஒரு ரோஜாவின் விலை ரூ. 1.50 வரை விற்கிறதாம்.

கடந்த ஆண்டில் முன்மாதிரியாக ரோஜா மலர்கள் கொஞ்சம் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், அவற்றின் தரம் பற்றிப் புகார் வந்ததால், இவ்வாண்டு, நீண்ட காம்பு கொண்ட—தரமான ரோஜா மலர்களை உற்பத்தி செய்யுமாறு தமிழ்நாடு அரசின் விவசாயத் துறை, மலர் உற்பத்தியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஏற்றுமதிக்கான மலர்கள் உதகையிலும் கொடைக்கானலிலும் வளர்க்கப்படுகின்றன. அங்குள்ள தட்ப வெட்ப நிலை இதற்கு உகந்ததாக உள்ளது. எனவேதான், இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, உதகையில் இந்தோ-ஜெர்மன் திட்டத்தின் கீழ் ஒரு மிகப் பெரிய மலர்ப் பண்ணை ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. தற்போது உதகையில் உற்பத்தியாகும் மலர்கள் பம்பாய்-டில்லி ஆகிய இடங்களுக்கு விமான மூலம் அனுப்பப்படுகின்றன. தமிழ்நாடு விவசாயத் துறையின் வேண்டுகோளுக்கிணங்க நீண்ட காம்புள்ள ரோஜா மலர்கள் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பெறுமானால், ரோஜா மலர்களால் தமிழ் நாட்டுக்கு நல்லதொரு அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

17

தருமபுரி மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

விவசாய நிலங்களில், குறிப் ாகச் சரிவுள்ள இடங்களில் பெரும் மழையினாலும், காற்றி னாலும் மேல்மண் கரைந்து ாட்டாறுகளிலும், ஓடைகளி லும் குழம்பாக ஓடி வீணாகிறது. லத்தின் மேலே உள்ள முதல் அங்குல மண்தான் பயிர் ளின் வளர்ச்சிக்கு வேண்டிய ல்லா உணவுப் பொருட்களை ம் கொண்டதாகும். பல விளை ப் பயிர்கள் நல்ல மகசூல் காடுக்காததற்குக் காரணம் ந்த மண் அரிப்பே. அமெ க்கா, எகிப்து, ஆப்கானிஸ் ானம், பெல்சியம் முதலிய ல நாடுகளில் விவசாயம் இம் ண்ணரிப்பால் சீரழிந்து விவ ாயக் குடும்பங்கள் இலட்சக்கண ல் நிலத்தை விட்டு வெளி யற வேண்டிய நிலை ஏற்பட் ருந்தது. ஓர் அங்குல மேல் ண் இயற்கையில் உற்பத்தி ாகச் சுமார் 50 முதல் 500 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் ரே ஆண்டில் 2 சதவிகிதம் ரிவுள்ள பயிரிடப்பட்டுள்ள ஓர் க்கர் நிலத்திலிருந்து சுமார் 0 டன் மண் மழையினாலும், ாற்றாலும் வெளியே அரித்துக் காண்டு செல்லப்படுகிறது.

முதலில் மழைத்துளிகள் வேக ாக மண்மேல் விழுந்து அங் ுள்ள மண் துகள்களைச் சிதறடிக் றது. சிதறடிக்கப்பட்ட மண் துகள்கள் மழைநீரில் கரைந்து கீழே அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால், ஆங்காங்கே சிறு பள்ளங்கள் ஏற்படுகின்றன. ஆதலால், விவசாயிகள் முன் எச்சரிக்கையாக மண் அரிப்புத் தடுப்பு முறைகளைக் கையாளுவது மிக அவசியம். இல்லாவிடில் மேட்டு வேளாண்மைகள் அதிக நஷ்டமடைந்து விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

மழையினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கச் சரிவுக் குறுக்கில் வரப்புகள் போடவேண்டும். சமமேட்டு இடங்களை இணைத்து வரப்புப் போடுவதைத்தான் ''காண்டூர்'' வரப்புகள் என்கிறோம். சம உயர இடங்களை வரப்பின் மூலம் பிணைப்பதால் மழைநீர் வேகம் தடுக்கப்பட்டு நீர் ஒரே சீராக ஓடும். நிலத்திலும் தேங்க ஏதுவாகும்.

இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் முதன் முதலில் 1960-ஆம் ஆண்டு ஊத்தங்கரையில் தொடங்கப்பட்டுப் பிறகு மற்ற இடங்களில் பரவியுள்ளது. இத்திட்டம் இப்பொழுது இம்மாவட்டம் முழுவதும் இயங்கி வருகிறது. சம உயர வரப்புகள் துறையினால் முதலில் போடப்பட்டுப் பின்பு இதற்குண்டான மொத்தத் தொகையில் 75 சதவிகிதம் விவசாயிகளிடமிருந்து 10 ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படுகின்றது. சம உயர வரப்புப் போட்டு, 2 ஆண்டு கழித்து இதனைக் கந்தாயத்தோடு வசூலிக்கப்படுகின்றது. ஓர் ஏக்கர் வரப்புப்போட மண் தரத்தைப் பொறுத்து சுமார் ரூ. 50 முதல் 60 வரை செலவாகும். இந்த வரப்பினால் பின்னால் அதிக இலாபத்தைக் கணக்கிடும் போது இச்செலவு மிகக் குறைவே ஆகும். வரப்புப் போடும் செலவு தவிர, ஆண்டுதோறும் அரசு செலவிலேயே நிலங்களில் போடப்பட்ட வரப்புகளையும், கலிங்குகளையும், தடுப்பு அணைகளையும் பாழ்படுத்தாமல் கண்காணிக்கப் 'பராமரிப்புப் பிரிவு' என்ற தனி ஒரு பிரிவு ஏற்பட்டு வேலை செய்து வருகிறது.

இந்தத் திட்டத்தால் கீழ்க்கண்ட நன்மைகளை விவசாயிகள் அடைகிறார்கள்.

1. காட்டு நிலங்களில் மழை நீர் தேங்கி மண் வளமடைகிறது.
2. நீரும், வளமும், மண்ணும், நன்முறையில் இருப்பதால் மகசூல் அதிகம் பெருகுகின்றது.
3. பூமிக்கடியில் நீர்த்தேக்கம் அதிகரிக்கிறது. இதனால் கிணறுகளில் அதிகத் தண்ணீர்த் தேக்கம் கிடைக்கிறது.
4. ஏராளமான பணச்செலவில் கட்டப்படும் அணைகளில் வண்டல் படிந்து அணைகள் மேடாகா வண்ணம் காக்கப்படுகின்றன.
5. புஞ்சை தானிய உற்பத்தி கூடுதலாகிறது.
6. மண்வளத்தைப் பாதுகாத்தால்தான் உற்பத்தி பெருகும்.

1962–63 முதல் 1970–71 வரை வரப்புப் போடப்பட்ட பரப்புப் பின்வருமாறு:—

1967–68, 1968–69-ஆம் ஆண்டுகளில் ஒசூர் தாலூக்காவில் உள்ள மாருஹள்ளி என்ற கிராமத்திலும், கிருட்டிணகிரி தாலூக்காவில் உள்ள ஜிட்டாண்டஹள்ளி என்ற கிராமத்திலும் ஒவ்வொரு கசிவுக் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் அக்கிராமத்தில் அக்குட்டைகளுக்குக் கீழ்ப் பக்கத்திலுள்ள எல்லாக் கிணறுகளிலும், நீர்த் தேக்கம் அதிகமாகக் கிடைக்கப் பெறுகிறது. கால்நடைகளுக்குக் குடிநீராகவும் பயன்படுகிறது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டம் (ஆய்வு):—1959-வது ஆண்டின் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த மசோதாவிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் புதியதாக மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகளை மேற்கொள்ளத் தகுதியுள்ள நிலங்களைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய முன்னோடி வேலைகளைச் செய்து அதற்குரிய மதிப்பேடுகளைத் தயார் செய்து அரசாங்க அங்கீகாரம்பெற அவைகளை உரிய வழிமூலம் அனுப்பிக் கலப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த மாவட்டத்தில் 175 மதிப்பீடுகள் அரசாங்க அங்கீகாரம் பெறப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டம் (பராமரிப்பு):—இது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகள் முடிவடைந்தது முதல் இரண்டு ஆண்டுகள் வரை துறைத்தனத்தினராலேயே பழுதடைந்த பணிகளைப் பழுதுபார்ப்பது. இரண்டு திட்டம் முடிவடைந்த மூன்றாவது ஆண்டிலிருந்து விவசாயிகளினாலேயே இத்துறைத் தனத்தினரின் தொழில் நுட்ப அறிவுரைகளின்படி பழுது பார்ப்பது ஆகும்.

பணிகள்:—(1) பழுதடைந்த சம உயர வரப்புகளையும் அதனைச் சார்ந்த கட்டட வேலைகளைப் பழுதுபார்ப்பது. (2) சம உயர வரப்பின் மட்டத்தை மேடுபள்ளங்களின்றிச் சரிபார்ப்பது. (3) சமஉயர வரப்பில் இருபக்கங்களின் சரிவுப் பகுதிகளைச் சரிசெய்தல்.

செய்த வேலைகள்

வருடம்.	ஏக்கர்.
1967–68	2,404.17
1968–69	2,674·39
1969–70	2,183·38

விவசாயிகளின் சமஉயர வரப்புகள் போடப்பட்ட நிலங்களைப் பார்த்து அறிவுரைகள் வழங்கியது 6,000·20 ஏக்கர்.

நீர்ப்பரப்பு களர் நிலச் சீர் திருத்தத் திட்டம்—இந்த திட்டத்தில் நிலங்களில் உள்ள களர் தன்மையைப் போக்கும் சிறந்த முறைகள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப் படுகின்றது.

வயல்களின் குறுக்கே கால்வாய்கள் வெட்டி, ஜிப்சம் போட்டு, நீர்ப்பாசனத்திற்குத் தகுதியுள்ள நீரைப் பயன்படுத்த உழுது, பயிருக்கு உதவாத உப்புக்கள் வடிகால் மூலம் வெளியேற்றப்படுகிறது. பின்பு தக்கைப் பூண்டு விதைத்து மீதம் உள்ள களர் தன்மை போக்கப்படுகிறது. இதன் மூலம் நிலம் வளமடையவும் உற்பத்தி பெருகவும் ஏதுவாகிறது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டுப் பகுதிகளில் கணிசமான பரப்புள்ள நிலங்கள் களர் தன்மையடைந்து, விவசாயத்திற்குத் தகுதியற்றவைகளாக மாறிவருகின்றன. குறிப்பாகச் சுய்டேகுப்பம் கிராமத்தில் இது அதிக அளவில் பரவியுள்ளது. இதை அகற்ற சென்ற ஆண்டில் அதாவது 1970—71-ல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி வட்டம், சுய்டேகுப்பம் கிராமத்தில் 90·53 ஏக்கர் நிலத்தில் இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

அருளாளர், அறிஞர்கள் நாவில் தவழ்ந்த தமிழ், மூதவர், குமரகுருபரர் முதலியோர் கூறியவை 400 நூல்களினின்றும் எடுக்கப் பெற்றவை.

இசைத் தமிழ்.
இசை மலிந்த தமிழ்.
ஏழிசை இன்றமிழ்.
ஏறு பல்பொருள் முத்தமிழ்.
கலைமலி தமிழ்.
கலை மலிந்த தமிழ்.
கலை முத்தமிழ்.
கொழி தமிழ்.
தெளி தமிழ்.
தென்னன் தமிழ்.
திருநெறித் தமிழ்.
திரு நெறிய தமிழ்.
செஞ் சொற்றமிழ்.
நலங்கொள் தமிழ்.
நன்மைபுரி தமிழ்.
நடை வல்ல தமிழ்.
பண்ணாரின் தமிழ்.
பண்ணாருந் தமிழ்.
பண்ணிடைத் தமிழ்.
பண்ணி நேர் தமிழ்.
பண்ணியல் தமிழ்.
பண்ணுலாம் அருந்தமிழ்.
பண்பொலி தமிழ்.
பந்தமார் தமிழ்.
பல் ஓசைத் தமிழ்.
பல்பொருள் முத்தமிழ்.
பாடலாந் தமிழ்.
பாமரு செந்தமிழ்.
பாவாணர்த் தமிழ்.
பாரினார் தமிழ்.
பாரின் மலிகின்ற புகழ்நிறை தமிழ்.
பாவின் தமிழ்.
பாவுற்ற தமிழ்.
பிள்ளைத் தமிழ்.
பிறங்கு தமிழ்.

புகழ் நின்ற தமிழ்.
புகழ் நிறைத் தமிழ்.
புகழ் வண்டமிழ்.
பூந்தமிழ்.
பெருகிய தமிழ்.
பெருந் தமிழ்.
பேரியல் இன்றமிழ்.
பைந்தமிழ்.
பொங்கு தமிழ்.
பொதிகைத் தமிழ்.
மதுரத் தமிழ்.
மதுரமொழிகிய தமிழ்.
மருவிய தமிழ்.
மல்லல் நெடுந்தமிழ்.
மறை வளந்தமிழ்.
மன்னு தமிழ்.
மன்னு தீந்தமிழ்.
மிகுதலை தமிழ்.
முடிவின் நன்றமிழ்.
முதிய மெய்த் தமிழ்.
முது தமிழ்.
முத்தமிழ்.
முத்துப் பொருதமிழ்.
மும்மைத் தமிழ்.
மூவாத் தமிழ்.
மெய்க் கவிஞர் தமிழ்.
வடி தமிழ்.
வண்டமிழ்.
வயங்கு தமிழ்.
வளர் தமிழ்.
வார்தேன் ஏரார் தமிழ்.

தருமபுரி மாவட்டத்தில் காவிரி ஆறு ஓடியும் அதனால் எவ்விதப் பயனையும் விவசாயிகள் பெற வழி இல்லை. ஆனால், அதைவிடச் சிறிய நதியாகிய பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரிக்குச் சுமார் 6 மைல் மேற்கே 1958-ஆம் ஆண்டுக் கட்டப்பட்டுள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கமும் ஓரளவிற்கு நீர்ப்பாசனக் குறையைத் தீர்த்து வருகின்றது. இத்தேக்கத்தின் மூலம் 9,000 ஏக்கர் பாசன வசதியை அடைந்துள்ளது.

இதைத் தவிரச் சின்னாறு, என்கிற சன்னத்குமார் நதியிலும் பெண்ணை ஆற்றிலும், வாணியாறு, மத்தூர் ஆறு' பூலாப்பட்டி ஆறு இவைகளின் குறுக்கேயும் ஆங்காங்குக் கட்டியுள்ள சிறு அணைக்கட்டுகள் மூலம் பாசன வசதிபெற்று வருகின்றது. இம்மாவட்டமானது குன்றுகளும் மலைகளும் நிறைந்த பகுதியாக அமைந்து உள்ளதாலும், போதுமான அளவிற்கு வற்றாத நதிகள் இல்லையென்றாலும் பெரும்பான்மை விவசாயப் பெருங்குடி மக்கள் பருவ மழையையும், ஏரி குளங்களையும் நம்பி வேளாண்மை செய்து வருகிறார்கள். இயற்கையாக அமைந்துள்ள பல பள்ளத் தாக்குகளில் மழைக் காலங்களில் வரும் நீரை ஆங்காங்குச் சிறிய ஏரிகள் குட்டைகள் கட்டி அதன் மூலம் பாசன வசதியைப் பெருக்குவதே தற்போதுள்ள சிறப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின் நோக்கமாகும்.

தற்சமயம் மாவட்டத்தில் 49 பெரிய ஏரிகள் மூலமும், 1,475 சிறிய ஏரிகள் மூலமும் விவசாயம் நடைபெற்று வருகிறது.

இம்மாவட்டத்தில் ஒரு இலட்ச ரூபாய் மதிப்பீட்டிற்குமேல் 11 புதிய ஏரிகளும் 3 உடைந்து போன ஏரிகளும், புதியதாகச் சீரமைத்துக் கட்டியும், 3 புதிய அணைக்கட்டுகளும் கட்டப்பட்டு மொத்தம் 3,083 ஏக்கர் நிலங்களுக்குச் சென்ற ஆண்டு முதல் தண்ணீர் தேக்கிப் பாசன வசதிகள் அளிக்கப்பட்டு உள்ளது.

இவைகள் அண்மையில் மொத்தம் 36·25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட 16 வேலைகளும் (புதிய அணைக்கட்டு, புதிய ஏரி அமைக்கும் திட்டம், ஏரியைப் புதுப்பிக்கும்திட்டம், குட்டை கட்டும் திட்டம்) ஆகியவைகள் நடைமுறையில் இருந்து வருகிற இந்தத் திட்டங்கள் முடிக்கப்பட்டால் 2,205·01 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இதனால் அதிகப்படியாக 1,321·10 டன் உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் சிறிய (புதிய குட்டை கட்டும் திட்டம், ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டம், ஏரிகளுக்குச் சிறப்பு மராமத்துத் திட்டங்கள்) 101 வேலைகள் நடைமுறையில் உள்ளன. இவற்றிற்கு இதுகாறும் ரூபாய் 3,03,75 செலவழிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுஎனக்கருதிச் சிறப்புக் கிராமப் பணியியல் திட்டத்தின் கீழ் 38 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 30 வேலைகள் துரித நிலை செயற்படுத்தப்பட்டு 1972-73க்குள் முடிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட 30 வேலைகளின்பேரில் இதுகாறும் ரூபாய் 7,98,697 செலவழிக்கப்பட்டுள்ளது.

1—4—1968 முதல் இக்கோட்டத்தினரால் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளில் இதுகாறும் 91 வேலைகள் முடிவு பெற்றுள்ளன. இதற்காக ரூ. 1,388·35 செலவழிக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்ட நீர்ப்பாசன வசதியைப் பெருக்கப் பல திட்டங்கள் ஆய்வு செய்வதற்கென்றே தனியாக ஒரு நிருவாகப் பொறியாளர் சேலத்தைத் தலைமையாகக்கொண்டு, சேலம்-தருமபுரி மாவட்டத்திற்காகச் செயல்பட்டு வருகிறார். இந்த ஆய்வுக் கோட்டத்தின் கீழ் தருமபுரியில் ஒரு கிளைக் கோட்டமும், கிருஷ்ணகிரியில் ஒரு கிளைக்கோட்டமும் முறையே தருமபுரி-அரூர் வட்டத்திற்கும், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் வட்டத்திற்கும் செயல்பட்டுவருகிறது.

அண்மையில் நடுநிலையான திட்டங்களையும் பெரிய பாசன வசதிகள் செய்யும் நீர்த்தேக்கத் திட்டங்களையும் ஆய்வு செய்வதற்காகத் தனிப்பட்ட ஓர் மேற்பார்வை வட்டச் செயலகம் திருச்சியில் இயங்கி வருகிறது. அதன்கீழ் ஆய்வு வேலைகளைப் பார்க்கத் தனியே ஒரு நிருவாகப் பொறியாளர் அலுவலகம் சேலம்-தருமபுரி மாவட்டத்திற்காகச் சேலத்தில் செயல்பட்டு வருகிறது.

ஒரு விடுதலைக்காவியத்தின்

''என்னண்ணா, செய்திப் பத்திரிகையிலே? ரொம்ப நேரமா படிக்கிறீங்களே? என்றுக் கேட்டுக் கொண்டே வந்தாள் கண்ணகி.

''போரிலே வீர மரணம் அடைந்த வீரர்களைப் பற்றித்தான் படித்துக் கொண்டிருக்கிறேன். இதைப்படிக்கும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது'' என்றார் செய்தித்தாளை மடித்தவாறே இளங்கோ.

''கதையா? சொல்லுங் கண்ணா?'' என்று துரிதப்படுத்தினாள் கண்ணகி.

இளங்கோ சொல்ல ஆரம்பித்தான்: ''கண்ணகி! இது உண்மைக்கதை. அதுவும் ஒரு வீராங்கனை பற்றிய—நடந்த கதை......''

''பிரதமர் இந்திரா காந்தியைப்பற்றிய கதையா?''

''அவரைப் போன்ற ஒரு வீரப் பெண்மணியின் கதைதான் இது.

நாளையத் தலைமுறை

''கொஞ்சம் இருங்கள். எதிர் வீட்டிலிருந்து என் தோழிகளை அழைத்து வருகிறேன். அவர்களும் கதை கேட்க வேண்டும் என்று சொன்னார்கள் '' என்று கண்ணகி எதிர்வீட்டிற்கு ஓடினாள். சில நிமிடங்களில் நான்கைந்து சிறுமிகளுடன் விரைந்து வந்தாள் கண்ணகி. இளங்கோ, ஜோன் என்னும் அந்த வீரப் பெண்ணின் படத்தை அனைவருக்கும் காட்டினார். பிறகு கதை சொல்ல ஆரம்பித்தார்.

'' நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே பெரும்போர் நடந்து கொண்டிருந்தது. இந்தப் போர் ஏறத்தாழ நூறாண்டுகள் நடந்ததால், இதை நூற்றாண்டுப் போர் என்று அழைத்தார்கள். இந்தப் போரில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆங்கிலேயர்களின் கையே ஓங்கி வந்தது. பிரான்சு அதாவது பிரெஞ்சு பின்வாங்க நேர்ந்தது. இதனால் எதிரியின் கையில் பிரான்சின் தலைநகரான பாரீஸ் பிடிபட்டது''

''வங்காள நாட்டின் தலைநகர் டாக்காவைப் போல இல்லையா அண்ணா.?''

ஆமாம். பிரான்ஸ் மன்னன் ஒரு கோழை. எதிரிகளை எதிர்த்துப் போரிடாமல் ஓடி ஒளிந்து கொண்டான். இளவரசனான சார்லஸ் என்பவன் மன்னனுக்குப் பிரதிநிதியாக ஆட்சி செலுத்தினான். ஆனாலும், பகைவரை எதிர்க்க முடியவில்லை. முடிவில் பிரெஞ்சு மக்களுக்கு மன்னன் மேல் உள்ள நம்பிக்கை அற்றுப்போய் விட்டது. ஆங்கிலேயப்படை மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருந்தது.

''ஆங்கிலேயப் படையின் தளபதி, பாரிசில் தன் தலைமை அலுவலகத்தை அமைத்துக் கொண்டு, ஓர் ஆற்றின் கரையிலுள்ள ஆர்லியன்ஸ் என்னும் நகரத்தை முற்றுகையிடத் தீர்மானித்தான். ஆர்லியன்ஸ் நகரம் பாரிசிற்குச் சுமார் நூறு மைல் தொலைவில் இருந்தது. இந்த நகரம் பகைவன் கையில் சிக்கிவிட்டால், பிரெஞ்சு நாடு முழுவதும் பகைவனுக்குக் கிடைத்தது போலாகிவிடும். இத்தகைய கீழான நிலை வராமலிருக்கவும், தங்கள் தாய் நாட்டின் சுதந்திரம் பறிபோகாமல் இருக்கவும் பிரெஞ்சுப் படை தம்மாலான முயற்சிகள் செய்தது.

''ஜோன் என்பவர் யார்? அவரைப்பற்றிச் சொல்லவில்லையே!'' என்றாள் ஒருத்தி.

''பிரான்ஸ் நாட்டின் வடகிழக்குப் பகுதியிலே உள்ள ஒரு கிராமத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள்தான் ஜோன். ஜோன் நல்ல உழைப்பாளி, அதற்கேற்ற நல்ல உடல் உரமும் பெற்றிருந்தாள். ஆடு மாடுகளை மேய்த்து வருவாள்; வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வாள். கொஞ்சங்கூடச் சோம்பல் இல்லாமல் கடமையைத் தவறாமல் செய்துவந்தாள். ஒரு சமயம் இவள் ஆடுகளை மேய்த்துவிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இருந்தாள். அப்போது மாலை வேளை. கோயில் மணி பல முறை ஒலித்துக் கொண்டிருந்தது.

''நாடு பகைவனிடம் சிக்கிக் கொண்டிருப்பதை அறிந்திருந்த ஜோனுக்கு அந்த மணியோசை எதையோ கூற வந்தது போல இருந்தது. 'உன் தாய் நாடு பகைவனிடம் அகப்பட்டுத் தவிக்கின்றது. தலைநகரமோ அவன் கைப்பிடியில் உள்ளது. ஆர்லியன்ஸ் நகரத்துக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம். ஆகவே, நாட்டைக் காக்கும் பொறுப்பு உனக்கும் இருக்கிறது. புறப்படு உடனே புறப்படு! ஆர்லியன்ஸ் நகரை முற்றுகையிடும் ஆங்கிலேயப் படையைத் துரத்த இப்போதே புறப்படு!' என்று அந்த மணியோசை சொன்னதாக அவளுக்குப் பட்டது. எழுந்தாள் ; நேரே வீடுசென்றாள்; தன் பெற்றோரிடம் தன் நிலைமையை எடுத்துச் சொன்னாள். ஆனால் அதற்குப் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை.

''நீ ஒரு பெண் என்பதை மறந்துவிட்டாயா? ஒரு பெண்ணால் பெரும் படையை எதிர்த்துப் போராட முடியுமா' போடி, பைத்தியக்காரி!' என்று பெற்றோர்கள் அவளைப் போக விடாமல் தடுத்தனர். ஆனால், மனவுறுதி மிக்க ஜோனின் எண்ணமே இறுதியாக வெற்றி பெற்றது. தாய் நாட்டுப் பாசம் அவளை ஓர் ஆண்மகனைப் போல [illegible] செய்தது. உடனே அவள் ஆண் உடை உடுத்திக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டாள்!.

''அருகிலுள்ள கோட்டையில் பிரெஞ்சுப் படைத்தலைவனின் அலுவலகம் ஒன்று இருந்தது. பிரெஞ்சுப் படையில் சேர விரும்புவோர் இவன் அனுமதி பெற்றாக வேண்டும். அந்த இடத்திற்கு ஜோன் வந்தாள். உடனே படைத் தலைவனிடம், ஒரு பெண் ஆண் உடையில் வந்திருப்பதாகச் சொன்னார்கள். தலைவன் அவளை வரச்சொன்னான். ஜோன் தான் போர்க்களம் போவதாக மிக்கத் துணிவோடு சொன்னாள். முதலில் அதற்கு மறுத்த அந்தத் தலைவன், பிறகு அவளது மன உறுதியைக் கண்டு சம்மதம் தெரிவித்தான்.

''உடனே ஜோனோடு இரண்டு வீரர்களை அனுப்பி இளவரசன் சார்லசைப் பார்க்கும்படி சொன்னான். மூவரும் குதிரை மேல் ஏறிக்கொண்டு இளவரசன் உள்ள நகரத்திற்கு வந்தனர். வீரர்கள் ஜோன் வந்திருப்பதைச் சொன்னார்கள். உடனே அங்கிருப்பவர்கள் 'ஆண் உடையில் வந்திருக்கும் இவளை நம்பக்கூடாது' என்றனர். சிலர், 'நாட்டைக் காக்க வந்திருக்கும் இவள் துணிவைப் பாராட்டவேண்டும்' என்றனர். இளவரசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படியோ எதிரியை முறியடித்தால் சரி. என்று ஜோனைப் பார்க்கச் சம்மதித்தான்; போர்முனைக்குப் போக அனுமதியும் தந்தான்''.

''தாய் நாட்டுப் பற்று என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். இந்த வீரப் பெண்ணின் கதையைக் கேட்க எங்களுக்கு எல்லாம் பெருமையாக இருக்கிறது!'' என்றாள் கண்ணகி.

'' ஜோன் ஒரு வெள்ளைக் குதிரையில் ஏறிக் கொண்டு, படைவீரர்கள் புடைசூழ ஆர்லியன்ஸ் நகரை நோக்கிப் புறப்பட்டாள். அந்தச் சமயம் ஆர்லியன்ஸ் நகரை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டிருந்தனர். பிரெஞ்சுப்படை நகருக்குள் சிக்கிக் கொண்டிருந்தது. எதிரியை முறியடித்தாலன்றித் தன் படைகள் தப்ப வழியில்லை என்றறிந்தாள் ஜோன். ஆனால், வழியில் உள்ள ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைக் கடக்கவும் வழியில்லை. எந்தச் சமயமும் ஆங்கிலேயர் கைக்கு ஆர்லியன்ஸ் நகரம் அகப்பட்டு விடும் என்ற நிலை இருந்தது.

'' அப்போது பிரெஞ்சுப் படைக்குத் தலைவனாயிருந்த துனாய் என்பவன் ஆங்கிலேயப் படையை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் இருந்தான். இந்தச் சமயத்தில் ஜோன் தன் படைவீரர்களுடன் அங்கு வந்து சேர்ந்தாள். ஜோன் போர் முறைகளை முறைப்படி கற்றவளில்லை என்றாலும், படைத் தலைவனுக்கும் எட்டாத சில போர்த் தந்திரங்களை எடுத்துச் சொன்னாள். அவற்றை நம்பிக்கையுடன் கேட்ட படைத் தலைவன் துனாய் மேலும் மனத் துணிவு பெற்றவனாய்ப் பகைவரை எதிர்க்க முற்பட்டான்.

'' ஜோன் வந்த நல்லவேளை, ஆற்றில் கொஞ்சம் கொஞ்சமாக வெள்ளம் வடிந்தது. போர் வீரர்கள் படகுகள் மூலம் ஆற்றைக் கடந்து சென்றார்கள். ஜோன் வெள்ளைக் குதிரையின் மீதேறி வீரர்கள் பின்பற்றிவர வீறுநடைபோட்டுச் சென்றாள். ஓர் இளம் பெண் கையில் வாளேந்தி, மிக்கத் துணிவோடு தம்மை எதிர்க்க வருவதைக் கண்டு ஆங்கிலேயர் சிறிது அச்சமுற்றனர். அவளுக்குப் பின்னால் படைவீரர்கள் புடைசூழவந்து கொண்டிருந்தனர். பிரெஞ்சுப் படை பொங்கி எழுந்தது. நாலு பக்கமும் சூழ்ந்து தாக்குதல் நடத்தியது. ஆங்கிலேயர் எதிர்த்து நிற்க முடியாமல் பின்வாங்கினர்; ஜோன் வீரர்களுக்கு உற்சாக மூட்டினாள். பகைவரை ஓட ஓட விரட்டினாள். வெண்குதிரை கனைத்துக் கொண்டு போர்க்களத்தில் பறவைபோலப் பறந்து பறந்து வந்தது. ஜோன் வீரத்தைக் கண்ட எதிரிகள் தோற்று அஞ்சி ஓடினர். பெரும்போருக்குப்பின் ஆர்லியன்ஸ் நகரம் பகைவரிடமிருந்து விடுவிக்கப்பட்டது.''

'' அப்பாடா! பகைவர்கள் ஒழிந்தார்களா ?'' என்று கண்மணி உட்பட எல்லாச் சிறுமிகளும் கேட்டனர்.

'' பகைவர்கள் ஓரளவு ஒழிந்தார்கள். ஆனால், ஜோனை ஒழித்துக்கட்ட அவர்கள் சமயம் பார்த்து இருந்தார்கள். இதற்கிடையில் பிரெஞ்சு விடுபட்டதை மக்கள் குதூகலத்துடன் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். வீராங்கனை ஜோனை இளவரசன் உட்பட மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். இளவரசன் சார்பில் சுக்குரீம்ஸ் நகரிலுள்ள பெரிய கோயிலில் ஜோன் முடி சூட்டினாள். அது முதல் அவ்விளவரசன் ஏழாம் சார்லஸ் என்னும் பட்டத்தோடு பிரெஞ்சு மன்னனானான்.

இதன் நுண் மயிரோடு கூடிய தோலை கோட்டுகள், ஆடைகள் முதலியன தயாரிக்கவும், பலவித அழகுச் சாமான்கள் செய்யவும் பயன்படுத்துகின்றனர்.

'' தோற்றுப்போன ஆங்கிலேயர் பெருத்த அவமானத்துக்குள்ளானார்கள். ஜோனை உயிரோடு பிடித்து வந்து பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். அவளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசு தருவதாகப் பறைசாற்றினார்கள்.''

'' ஜோன் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாளா ?'' கண்மணி பதட்டத்துடன் கேட்டாள்.

'' தன் நாட்டிலேயே காட்டிக் கொடுக்கும் துரோகிகள் இருப்பது ஜோனுக்கு எப்படித் தெரியும்? ஜோனின் வெற்றியைக் கண்டு பொறாமை கொண்ட அந்தத் தாய் நாட்டுத் துரோகிகள், அவளை வெள்ளையரிடம் பிடித்துக் கொடுக்கச் சதி செய்தனர். ஆங்கிலேயப் படைத் தளபதிகளைச் சந்தித்துப் பேசுவதற்காக நடந்த அவர்கள் சதிக்கு, ஒன்றும் அறியாத ஜோன் இணங்கினாள். ஜோன், படைத் தளபதிகளோடு பேசிக்கொண்டிருக்கும் போது நயவஞ்சகமாகக் கைது செய்யப்பட்டாள்.!''

'' ஐயோ பாவம்! அவளை அவர்கள் என்ன செய்தார்கள்'' ஒருத்தி வருத்தத்துடன் கேட்டாள்.

'' ஜோனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று அவள் மீது இல்லாத குற்றத்தையெல்லாம் சுமத்தினார்கள். அப்போது ஜோனுக்குப் பத்தொன்பது வயதிருக்கும். அவள், தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்றும், நாட்டு விடுதலைக்குப் போராடியதாகவும் சொன்னாள். ஆனால், அந்த வெறியர்கள் அதைக் கேட்பதாக இல்லை. அவர்கள் அவளை ஒரு தீய சக்தியாகக் கருதியதே அதற்குக் காரணம். இறுதியில் அந்தக் கொடியவர்கள் ஊர் நடுவே ஒரு பெரிய கம்பத்தை நட்டு, அதில் அவளைக் கட்டி வைத்துத் தீமூட்டி விட்டனர். விடுதலைக்காகப் போராடிய அந்த வீரவுடலைச் செந்தீ வாட்டி வதைத்துச் சாம்பலாக்கியது. தாய் நாட்டுக்காக, அவள் தன் உயிரையே தந்து வீர மரணம் அடைந்த செய்தி பிரஞ்சு மக்களைக் கொதித்தெழச் செய்தது. அதன் விளைவு? ஒரு வெள்ளையன் கூடப் பிரெஞ்சு மண்ணில் கால் வைக்காதபடி ஓட ஓட விரட்டி அடிக்கப்பட்டார்கள். பெண்ணாக இருந்தாலும், துணிவையே துணையாகக் கொண்டு, நாட்டுக்காகப் போராடிய அவளைத் தாய்க்குலம் இன்றளவும் எண்ணி எண்ணிப் பெருமையடைகிறது- போற்றிப் புகழ்கிறது '' என்று இளங்கோ சொல்லி முடித்ததும், 'வாழ்க ஜோன்' என்று சிறுமிகள் சேர்ந்து முழக்கமிட்டனர்.



நீதி மூலம்

புலவர் சி. துரைசுவாமி

1 அன்பும் அறனும் இன்புறச் செய்யும்.
2 ஆசை மிகுமேல் மோசம் விளைக்கும்.
3 இனிது மொழியின் பணியும் உலகு.
4 ஈட்டல் மிகுமெய்ப் பாட்டில் விளையும்.
5 உண்ணும் அகத்தில் பண்ணும் விருந்து.
6 ஊக்கம் படைப்பின் ஆக்கம் பெருக்கும்.
7 எண்ணும் நினைவில் உண்மை உயர்வாம்.
8 ஏர்வளங் குன்றின் பார்வளங் குன்றும்.
9 ஐயம் புகமேல் செய்யத் துணியேல்.
10 ஒத்தக நட்பே நத்தும் துணையாம்.
11 ஓதும் ஒழுக்கம் சாதலில் மறவேல்.
12 ஔடத மென்கொல் அருந்திரு மறைகள்.
13 கல்வியில் உயர்ந்தமெய்ச் செல்வமும் இல்லை.
14 காண்பதில் எல்லாம் வீண்மனங் கொள்ளேல்.
15 கிழமை எனவே பழைமை இகழேல்.
16 கீர்த்தியை விளைக்கும் காத்திடும் பணிவு.
17 குறிப்பறிந் தாற்றல் நெறிப்பயன் காட்டும்.
18 கூறும் வழியில் தேறும் வழிசொல்.
19 கெட்டார் என்பது நட்டோர்க் கில்லை.
20 கேண்மை அமையின் பூண்அணி பொன்னாம்.
21 கையுழைப் பல்லது மெய்யுண வில்லை.
22 கொலைமேற் கொண்டு புலைமேற் கொள்ளேல்.
23 கோழைத் தனமேல் வாழ்வைச் சிதைக்கும்.
24 சத்தியம் தவறின் பத்தியம் போற்கொல்.
25 சாதியின் பிரிவு நீதியில் இல்லை.
26 சினமகந் தணியின் மனநிலை தெளியும்.
27 சீரும் சிறப்பும் பேருக் கணியாம்.
28 சுத்தம் அல்லது வித்தகம் இல்லை.
29 சூட்சம் அறியின் மோட்சம் அருகில்.
30 செல்லும் இடத்தே வல்லோர் துணைகொள்.
31 சேதி உரைக்க நீதியைப் பயிலு.
32 சொல்லும் பிறர்சொல் வெல்லும் படிசொல்.
33 சோகம் அடையின் பாகம் தவிர்க்கும்.
34 தலைமை பெறுந்தன் நிலையைப் பொறுத்து.
35 தாழ்ச்சி அடைதல் சூழ்ச்சியின் பயனே.
36 திறமகன் கொள்வோர்க் கறமது துணையாம்.
37 தீயோர் சிறப்பில் தோயார் நல்லோர்.
38 துக்கமும் சுகமும் பக்கம்பக் கடுத்தே.
39 தூய்மை யுடையோர் வாய்மை அணியாம்.
40 தெரிவதில் தெளிந்து அரியது கொள்ளும்.
41 தேட்டங் கொண்டோர் வாட்டங் களைமேல்.
42 தைரியம் கொள்ளல் வைரத்தின் விளைவாம்.
43 தொட்டிற் பழக்கம் எட்டும் ஈமம்.
44 தோழமை தன்னில் ஏழ்மையென் றில்லை.
45 நல்லோ ரவராம் பொல்லா தொழிப்பர்.
46 நாட்டுக் குடையது ஈட்டும் அறிவு.
47 நித்தக் கடனில் சுத்தம் பெரிது.
48 நீதி விடுப்பின் பீதி அடுக்கும்.
49 நுண்ணிய அறிவே எண்ணிய வெய்யும்.
50 நூலின் அறிவு பாலின் உணவாம்.
51 நெஞ்ச மதிலே வஞ்சம் நினையேல்.
52 நேர்மை என்பது கூரிய வாளாம்.
53 நைந்தோர் அடுப்பின் செய்வதில் நலம்செய்.
54 நொடிப்பொழு தாயினும் மடிமையில் கழியேல்.
55 நோக்கம் அனைத்தும் ஆக்கம் பொருதும்.
56 பகைபட வாழினும் நகைபட வாழேல்.
57 பாதகச் செயலால் வேதனை விளையும்.
58 பிச்சையுட் படினும் இச்சையுட் படியேல்.
59 பீதி என்பது ஓதினார்க் கில்லை.
60 புகழ்பட வாழினும் இகழ்வதைத் தாங்கு.
61 பூக்குடை கொளின்மேல் நோக்குடன் ஆளும்.
62 பெரியோர் செயலே அரிதாய்ப் புவிகொள்.
63 பேசும் மொழியில் நேசம் படைப்பாய்.
64 பைய ஒழுகல் ஐயந் தவிர்க்கும்.
65 பொய்மை இகழாம் மெய்மை புகழாம்.
66 போக மிகநல் தேகம் சிதைக்கும்.
67 ஞயமுடன் உறைதல் பயநிலை தவிர்க்கும்.
68 ஞானத் தவரே தானத் தவராம்.
69 மழைவான் பொய்ப்பின் தழையா துலகு.
70 மானம் அழியா ஞானம் பெரிது.
71 மிச்சப் படுத்தி பிச்சை இடுமேல்.
72 மீண்டார் என்பது வேண்டா விடுத்தல்.
73 முதியோர் உயர்சொல் நிதியினும் மேலாம்.
74 மூடமை அகல நாடகம் செய்யும்.
75 மெலிந்தோ ரிடமுன் வலிமையைக் காட்டேல்.
76 மேலோர் என்பது கீழோர் வணங்கல்.
77 மையல் உலகு வைப்பதில் வையும்.
78 மொழியும் நாடும் விழிபோல் காப்பாய்.
79 மோசச் செயல்கள் நாசம் விளைக்கும்.
80 மௌனம் அறிவு ஔடத நூலாம்.
81 யமனாய் வரினும் தமராய்ப் பழகு.
82 யாசிப் பதிலும் பேசும் பணிவாய்.
83 யுத்த களத்தும் சித்தம் குலையேல்.
84 யௌவனம் தன்னில் மௌனம் துணைகொள்.
85 இரத்தினம் எல்லாம் புத்தியில் அடக்கம்.
86 வருமெது வரினும் திருமதி பிறழேல்.
87 வாழ்வில் அனைத்திலும் தாழ்வுயர் வுண்டு.
88 வித்தை அழியினும் புத்தி அழியேல்.
89 வீணர் நட்பு நாணத் தரும்பின்.
90 வெறுவாய் மொழியின் வருவாய் ஒழியும்.
91 வேட்கை உள்ளம் ஆட்கொளல் தீது.
92 வையம் போற்றச் செய்வன செய்முன்.
93 ஆவதும் அழிவதும் மேவிடும் விளைப்பயன்.


அண்ணன் காட்டிய வழி
14
கதை: நம்பியின்தம்பி
படம்: குமார்
வாங்க ஐயா! எங்கே இவ்வளவு தூரம்?
மிக முக்கியமான விஷயம்..... நீங்க மறுக்கக் கூடாது!
ஐயா! நல்லது சொல்லி நான் கேட்காமெ இருப்பேனு?
நீங்க முத்துவுக்குப் போட்டிருக்கும் தடையெல்லாம் நீக்கனும்!
என்ன சொல்றிங்க?
முத்துவை மறுபடியும் மாணவர் மன்றச் செயலாளராக இருக்கும்படி அனுமதிக்கனும். ஆனல்..... அன்று நீங்க சொன்னதையெல்லாம் சரின்னு கேட்டேன்.....
இப்ப ஏன் மாத்திக்கிட்டீங்க!
தவறு செய்றவங்களைத் திருத்த ஒரு வாய்ப்புக் கிடைக்குதேன்னு சரின்னு சொன்னேன்..... முத்துவுக்கு எந்தப் பொறுப்பும் கொடுக்காமெ இருந்தா மற்றவங்க திருந்துவாங்கனு நினைச்சேன்..... அது தவறப் போச்சு... இப்ப முத்துவை வச்சு அவுங்களைத் திருத்தனும்!
ஐயா உங்க வார்த்தையை என்றுமே நான் மீறினதில்லை... ஆனா... இந்த விஷயத்தில் என்னை மன்னிச்சிடுங்க!
முத்துவின் அப்பா ஏன் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறார்..... முதலில் அவர் சொன்னபோது மறுக்காமல் இருந்ததினலா?
அன்று வேலனைக் கூப்பிட்டு வரச் சொன்னர், ஆனா வேலனைக் காணும் செல்வத்தின் வீட்டிலயும் இல்லை.....
வேலன் முத்துவைப் பார்க்க இப்பத்தானே போனுன்
அதோ முத்துவும் வேலனும் வர்றாங்க!
தொடரும்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள்
வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

சின்னமனூர் பேரூராட்சி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு மூடி முத்திரையிடப் பட்டுள்ள ஷெட்யூல்டு ஒப்பந்தப் புள்ளி அடியிற் கையொப்ப மிடப்பட்டிருப்பவரால் 19—1—1972ஆம் நாள் புதன்கிழமை மாலை 4-00 மணி வரை சின்னமனூர் பேரூராட்சி அலுவல கத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுப் பவர்கள் கட்டுத் தொகையை இவ்வலுவலகத்தில் செலுத்தி அதற்குரிய ரசீதையும் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தங் களும், கட்டுத் தொகை செலுத்தப் பெருத ஒப்பந்தங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளி சம்பந்த மான ஏனைய விதி முறைகளை அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ரூ. 3·00 செலுத்தி ஷெட்யூல்டு பாரம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஷெட்யூல்டு பாரத்திற்கு விற்பனை வரி தனி.

வேலை விவரம்—பேருந்து நிலையம் கட்டுதல்.
மதிப்பீட்டுத் தொகை—ரூ. 1,70,000.
கட்டுத்தொகை—ரூ. 4,250.
முடிக்க வேண்டிய காலம்—ஒன்பது மாதம்.

டாக்டர் **என். சுப்ரமணியம், L.I.M.**
தலைவர்.

எஸ். நடராசன்,
நிருவாக அதிகாரி.

சின்னமனூர் பேரூராட்சி.
24—12—1971

(த. 4)

மறு ஏலம்

கடையநல்லூர் நகராட்சி

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி தினசரி சந்தை யில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை அனுபவிக்கும் உரிமையை 10—1—1972-ஆம் நாள் திங்கட்கிழமை காலை 11 மணிக்கும் அதிலிருந்து ஒத்திபோடும் தினங்களிலும் நகர்மன்ற அலுவலகத்தில் வைத்து ஆணை யர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் எல்லாரும் அறிய மறு ஏலம் விடப்படும்.

குத்தகைக் காலம்.	கட்டுத் தொகை. ரூ.
1—2—1972 தேதி முதல் 31—3—1973 முடிய.	300

மற்ற ஏல நிபந்தனைகள் முதலியவற்றை நகராட்சி அலு வலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பழ. நடேசன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
23—12—1971.

(த.5)

ஏல விற்பனை

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான எம்.டி.எச். 2344 பார்கோ 1958-ஆம் வருட மாடல் ஓடாத நிலையிலுள்ளதை 27—1—1972 வியாழக் கிழமை மாலை 3-00 மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். அலுவலக வேலை நேரங்களில் ஊர்தியைப் பார்வையிடலாம். ஏலம் கேட் பவர்கள் ரூபாய் 500 கட்டு தொகை செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாதவர்கள் ஏலத்தில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏலம் முடிந்த உடன் உச்ச ஏலதாரர் ஏலத் தொகையில் 25 சதவிதத்தை ஏலக் கட்டுத் தொகை ரூ. 500 போக மீதியும் உடனே கட்டிவிட வேண்டும். அப்படிக் கட்டத் தவறினல் அவர்களது கட்டுத் தொகை ரூ. 500 நகராட்சியால் பறிமுதல் செய்து மறு ஏலம் விடப்படும். ஏலம் முடிந்தவுடன் ஏலம் கேட்காதவர்களுக்கு உடனே கட்டுத் தொகை ரூ. 500 திருப்பித் தரப்படும்.

மேற்படி ஏலம் தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் அவர்களால் உறுதி செய்யப் படும். உறுதி உத்தரவு ஏலதார ருக்கு அனுப்பிய தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மீதித்தொகை பூராவையும் செலுத்த வேண் டும். பிறகு தான் ஊர்தி பட்டு வாடா செய்யப்படும். தவறினல் ஏலதார் கட்டியுள்ள 25 சத வீதத் தொகை நகராட்சிக்குச் சேர்ந்துவிடும். மறு ஏலம் விடப் படும். மறு ஏலத்தில் ஏற்படும் நஷ்டம் முதல் ஏலதாரரிட மிருந்து வசூல் செய்யப்படும்.

மேற்படி ஏலமானது தமிழ் நாடு போக்குவரத்து ஆணையர் அவர்களால் உறுதி செய்யப்படா விட்டால் ஏலதாரர் கட்டியுள்ள 25 சதவீதத் தொகை ஏலதார ருக்குத் திருப்பி அளிக்கப்படும்.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

29—12—1971.

(த.1.)

ஒப்பந்தப் புள்ளி

திருச்சி மின் திட்டம்

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் (Separate Sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவர்களால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பந்தங்கள் கீழே குறிப்பிட்டுள்ள முடிவுத் தேதிகளில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் ஒப்பந்த எண்ணும்.		சாமான்களின் விவரம்.	வழங்க வேண்டிய இடம்.	தேவையான எண்ணிக்கை.	முடிவுத் தேதி.
1	டி.ஆர்.பி. 30/71–72	ஃபோர்ஜ்டு ஜி.ஐ. எல்டி. பின்கள்.	கரூர்	2,000 டசன்	20– 1–1972
2	,, 31/71–72	௸	திருச்சி	2,000 டசன்	20– 1–1972
3	,, 32/71–72	௸	புதுக்கோட்டை.	2,000 டசன்	20– 1–1972
4	,, 33/71–72	௸	அரியலூர்	2,000 டசன்	20– 1–1972
5	,, 34/71–72	௸	துறையூர்	2,000 டசன்	20– 1–1972
6	,, 35/71–72	௸	பெரம்பலூர்	2,000 டசன்	20– 1–1972
7	,, 36/71–72	11 கி.வோ. ஜி.ஐ. பின்கள்.	திருச்சி	10,000 நம்பர்கள்.	21– 1–1972
8	,, 37/71–72	௸	கரூர்	10,000 நம்பர்கள்.	21– 1–1972
9	,, 38/71–72	௸	புதுக்கோட்டை.	5,000 நம்பர்கள்.	21– 1–1972
10	,, 39/71–72	௸	அரியலூர்	5,000 நம்பர்கள்.	21– 1–1972
11	,, 40/71–72	௸	மணப்பாறை	5,000 நம்பர்கள்.	21– 1–1972
12	,, 41/71–72	டொமஸ்டிக் சர்வீஸ் கனெக்ஷன் பைப்புகள்.	கரூர்	3,000 நம்பர்கள்.	22– 1–1972
13	,, 42/71–72	௸	அரியலூர்	3,000 நம்பர்கள்.	22– 1–1972
14	,, 43/71–72	௸	புதுக்கோட்டை.	3,000 நம்பர்கள்.	22– 1–1972
15	,, 44/71–72	அக்ரிகல்சரல் சர்வீஸ் கனெக்ஷன் பைப்புகள்.	கரூர்	3,000 நம்பர்கள்.	22– 1–1972
16	,, 45/71–72	௸	அரியலூர்	3,000 நம்பர்கள்.	22– 1–1972
17	,, 46/71–72	இ.எஸ்.சி. பல்புகள் 40 வாட் 250 வோல்ட்.	கரூர்	20,000 நம்பர்கள்.	24– 1–1972
18	,, 47/71–72	இ.எஸ்.சி. பல்புகள் 40 வாட், 250 வோல்ட்.	புதுக்கோட்டை.	20,000 நம்பர்கள்.	24– 1–1972
19	,, 48/71–72	௸	மணப்பாறை.	10,000 நம்பர்கள்.	24– 1–1972
20	,, 49/71–72	௸	திருச்சி	20,000 நம்பர்கள்.	24– 1–1972
21	,, 50/71–72	எம்.எஸ். பேக் கிளாம்புகள் ஆர்டினரி 24' ஆர்.சி.சி. போலுக்கு.	திருச்சி	10,000 நம்பர்கள்.	25– 1–1972
22	,, 51/71–72	௸	கரூர்	5,000 நம்பர்கள்.	25– 1–1972
23	,, 52/71–72	௸	பெரம்பலூர்.	5,000 நம்பர்கள்.	25– 1–1972
24	,, 53/71–72	௸	அரியலூர்	5,000 நம்பர்கள்.	25– 1–1972
25	,, 54/71–72	௸	துறையூர்	5,000 நம்பர்கள்.	25– 1–1972
26	,, 55/71–72	௸	புதுக்கோட்டை.	5,000 நம்பர்கள்.	25– 1–1972
27	,, 56/71–72	௸	மணப்பாறை	5,000 நம்பர்கள்.	25– 1–1972
28	,, 57/71–72	எம்.எஸ். பேக் கிளாம்புகள். 24' ஆர்.சி.சி. போலுக்கு. (ஸ்பெஷல்)	திருச்சி	10,000 நம்பர்கள்.	27– 1–1972
29	,, 58/71–72	௸	அரியலூர்	10,000 நம்பர்கள்.	27– 1–1972
30	,, 59/71–72	௸	மணப்பாறை	5,000 நம்பர்கள்.	27– 1–1972
31	,, 60/71–72	௸	துறையூர்	5,000 நம்பர்கள்.	27– 1–1972
32	,, 61/71–72	௸	கரூர்	5,000 நம்பர்கள்.	27– 1–1972
33	,, 62/71–72	௸	புதுக்கோட்டை	5,000 நம்பர்கள்.	27– 1–1972
34	,, 63/71–72	௸	பொரம்பலூர்.	5,000 நம்பர்கள்.	27– 1–1972
35	,, 64/71–72	எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஆர்டினரி) 27' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	10,000 நம்பர்கள்.	28– 1–1972
36	,, 65/71–72	௸	அரியலூர்	10,000 நம்பர்கள்.	28– 1–1972
37	,, 66/71–72	௸	புதுக்கோட்டை.	5,000 நம்பர்கள்.	28– 1–1972
38	,, 67/71–72	௸	கரூர்	5,000 நம்பர்கள்.	28– 1–1972
39	,, 68/71–72	௸	துறையூர்	5,000 நம்பர்கள்.	28– 1–1972
40	,, 69/71–72	௸	மணப்பாறை.	5,000 நம்பர்கள்.	28– 1–1972
41	,, 70/71–72	௸	பெரம்பலூர்.	5,000 நம்பர்கள்.	28– 1–1972

வரிசை எண்ணும் ஒப்பந்த டி.ஆர்.பி. எண்ணும்.	சாமான்களின் விவரம்.	வழங்க வேண்டிய இடம்.	தேவையான எண்ணிக்கை.	முடிவுத் தேதி.
42 ,, 71/71-72	எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஸ்பெஷல்) 27' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	10,000 நம்பர்கள்.	29- 1-1972
43 ,, 72/71-72	ஷை	அரியலூர்	10,000 நம்பர்கள்.	29- 1-1972
44 ,, 73/71-72	ஷை	புதுக்கோட்டை.	5,000 நம்பர்கள்.	29- 1-1972
45 ,, 74/71-72	ஷை	கரூர்	5,000 நம்பர்கள்.	29- 1-1972
46 ,, 75/71-72	ஷை	துறையூர்	5,000 நம்பர்கள்.	29- 1-1972
47 ,, 76/71-72	ஷை	மணப்பாறை.	5,000 நம்பர்கள்.	29- 1-1972
48 ,, 77/71-72	ஷை	பெரம்பலூர்.	5,000 நம்பர்கள்.	29- 1-1972
49 ,, 78/71-72	எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஆர்டினரி) 30' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	8,000 நம்பர்கள்.	31- 1-1972
50 ,, 79/71-72	ஷை	கரூர்	5,000 நம்பர்கள்.	31- 1-1972
51 ,, 80/71-72	ஷை	அரியலூர்	5,000 நம்பர்கள்.	31- 1-1972
52 ,, 81/71-72	எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஸ்பெஷல்) 30' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	5,000 நம்பர்கள்.	31- 1-1972
53 ,, 82/71-72	ஷை	அரியலூர்	5,000 நம்பர்கள்.	31- 1-1972
54 ,, 83/71-72	ஷை	கரூர்	5,000 நம்பர்கள்.	31- 1-1972
55 ,, 84/71-72	எம்.எஸ். கை கிளாம்புகள் (ஆர்டினரி) 24' ஆர்.சி.சி. போலுக்காக.	அரியலூர்	10,000 ஜதைகள்.	1- 2-1972
56 ,, 85/71-72	ஷை	அரியலூர்	10,000 ஜதைகள்.	1- 2-1972
57 ,, 86/71-72	ஷை	மணப்பாறை.	10,000 ஜதைகள்.	1- 2-1972
58 ,, 87/71-72	ஷை	கரூர்	10,000 ஜதைகள்.	1- 2-1972
59 ,, 88/71-72	ஷை	புதுக்கோட்டை	5,000 ஜதைகள்.	1- 2-1972
60 ,, 89/71-72	ஷை	துறையூர்	5,000 ஜதைகள்.	1- 2-1972
61 ,, 90/71-72	எம்.எஸ். கை கிளாம்புகள் (ஆர்டினரி) 27' ஆர்.சி.சி. போலுக்காக.	அரியலூர்	10,000 ஜதைகள்.	1- 2-1972
62 ,, 91/71-72	ஷை	மணப்பாறை.	10,000 ஜதைகள்.	1- 2-1972
63 ,, 92/71-72	எம்.எஸ்.கை கிளாம்புகள் (ஆர்டினரி) 27' ஆர்.சி.சி. போலுக்காக.	கரூர்	10,000 ஜதைகள்.	1- 2-1972
64 ,, 93/71-72	ஷை	புதுக்கோட்டை.	5,000 ஜதைகள்.	1- 2-1972
65 ,, 94/71-72	ஷை	பெரம்பலூர்.	5,000 ஜதைகள்.	1- 2-1972
66 ,, 95/71-72	ஷை	துறையூர்	5,000 ஜதைகள்.	1- 2-1972
67 ,, 96/71-72	எம்.எஸ். கை கிளாம்புகள் (ஸ்பெஷல்) 24' ஆர்.சி.சி. போலுக்காக.	அரியலூர்	5,000 ஜதைகள்.	2- 2-1972
68 ,, 97/71-72	ஷை	கரூர்	5,000 ஜதைகள்.	2- 2-1972
69 ,, 98/71-71	ஷை	மணப்பாறை.	5,000 ஜதைகள்.	2- 2-1972
70 ,, 99/71-72	ஷை	புதுக்கோட்டை.	5,000 ஜதைகள்.	2- 2-1972
71 ,, 100/71-72	ஷை	பெரம்பலூர்.	5,000 ஜதைகள்.	2- 2-1972
72 ,, 101/71-72	ஷை	துறையூர்	5,000 ஜதைகள்.	2- 2-1972
73 ,, 102/71-72	ஷை	திருச்சி	10,000 ஜதைகள்.	2- 2-1972
74 ,, 103/71-72	எம்.எஸ். கை கிளாம்புகள் (ஸ்பெஷல்) 27' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	10,000 ஜதைகள்.	3- 2-1972
75 ,, 104/71-72	ஷை	அரியலூர்	5,000 ஜதைகள்.	3- 2-1972
76 ,, 105/71-72	ஷை	கரூர்	5,000 ஜதைகள்.	3- 2-1972
77 ,, 106/71-72	ஷை	மணப்பாறை.	5,000 ஜதைகள்.	3- 2-1972
78 ,, 107/71-72	ஷை	பெரம்பலூர்.	5,000 ஜதைகள்.	3- 2-1972
79 ,, 108/71-72	ஷை	புதுக்கோட்டை.	5,000 ஜதைகள்.	3- 2-1972
80 ,, 109/71-72	ஷை	துறையூர்	5,000 ஜதைகள்.	3- 2-1972
81 ,, 110/71-72	எம்.எஸ். ஃபார்ம் பாக்சுகள் 24' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	50 நம்பர்கள்.	4- 2-1972
82 ,, 111/71-72	எம்.எஸ். ஃபாரம் பாக்சுகள் 27' ஆர்.சி.சி. போலுக்காக.	திருச்சி	40நம்பர்கள்.	4- 2-1972

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப் பிரதிகள் (Tender Specification Forms) பிரதி ஒன்றுக்கு ரூபாய் 5·00 (ரூபாய் ஐந்து வீதம்) (திருப்பித் தரத்தக்கதல்ல) தலைமைக் கணக்காயர், செலவினப் பிரிவு, திருச்சி மின் திட்டம், மன்னார்புரம், திருச்சி-1 அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனில்

குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கூப்பனில் தேவையான சார்றுக் குறிப்பு எண் தெளிவான முகவரியோடு குறிப்பிடாமல் இருப்பின் மணியார்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தபாலில் வரும் பொழுது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்தக்குழு பொறுப்பேற்காது. மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் முடிவுத் தேதிக்குக் குறைந்தது நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும். விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவுத் தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேற்கண்ட பொருட்களை வழங்குவதற்கான உத்திரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கவும், எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பம் இட்டவருக்குப் பூரண உரிமை உண்டு.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருச்சி மின் திட்டம், திருச்சிராப்பள்ளி.

(த-11)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சிக்குக் கீழே கண்ட பொருட்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே குறிப்பிட்டுள்ள அந்தந்தத் தேதிகளில் 4·00 மணிவரை ஆணையர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

			கட்டுத் தொகை.	முடிவுத் தேதி.	ஒப்பந்தப் புள்ளி திறக்கும் நேரம்.
			ரூ.		
1	இ3/15769/71 ..	மரம் மற்றும் ஹார்டுவேர் சாமான்கள் விநியோகம் செய்ய.	20	28- 1-1972	4-30 மாலை.
2	இ3/19907/71 ..	தண்ணீர் விநியோகம் வார்ப்பு இரும்புத் தளவாடங்கள் விநியோகம் செய்ய.	125	29- 1-1972	4-45 மாலை.
3	இ3/4337/70 ..	ஆறு குதிரை வேகமுள்ள ஆயில் இன்ஜின் விநியோகம் செய்வதோடு அதை அலுவலகத்தில் உள்ள காங்கிரீட் மிக்சர் பிளேண்ட்டோடு பொருத்தவும்.	150	28- 1-1972	4-45 மாலை.
4	இ3/19189/71 ..	மின்மோட்டாரும் தண்ணீர் விநியோகத் தளவாடங்களும் விநியோகம் செய்ய.	200	29- 1-1972	4-30 மாலை.

20-12-1971.
(த-2)

ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி.

இராசிபுரம் நகராட்சி

இராசிபுரம் நகராட்சியின் பாதுச் சுகாதார உபயோகத்ற்கான 60 குப்பைத் தொட்டின் விநியோகம் செய்ய இராசிபுரம் நகராட்சி ஆணையராலோ அல்லது அவர் அங்கிகாரம் பெற்றவராலோ 18-1-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிக்கான நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
22-12-1971.
(த-3)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 29-1-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் விதிமுறைகள் வேண்டுவோர் முதல் வேலைக்கு ரூ. 5-00-ம் விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் மற்ற வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 2-00-ம் விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 28-1-1972 ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.—

வரிசை எண்ணும் கட்டின் நடப்பு எண்ணும்.		வேலையின் விவரம்.	மதிப்பீடு தொகை.	முன்வைப்புத் தொகை.	வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.
			ரூ.	ரூ.	
1	இ1/23452/70 ..	காந்தி சந்தையில் மாடுவதைக் கட்டடம் கட்டுதல்.	20,387	510	3 மாதம்.
2	இ1/529/71 ..	வடுகபாளையம் நகராட்சிப் பள்ளியின் கீழ்ப்புற, தென்புற சுற்றுச் சுவரை புதுப்பித்துக் கட்டுதல்.	8,283	207	ஷை
3	இ1/13042/71 ..	மரப்பேட்டை சுண்ணாம்புக் காளவாய் இட்டேரி ரோடுக்கு ஓடையிலிருந்து தெற்கே ரயில்வே லைன் வரை கருங்கல் கப்பி போட்டுத் தார்த் தளம் போடுதல்.	8,510	213	ஷை
4	இ1/19498/70 ..	வடுகபாளையம் இடையர் வீதிக்குத் தார்தளம்போடுதல் மற்றும் ஒரு சிறு பாலம் கட்டுதல்.	13,942	349	ஷை
5	இ1/14386/71 ..	கோட்டூர் வழி நடுநிலைப் பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக் கழிப்பிடம் கட்டுதல்.	8,143	204	ஷை
6	இ1/14387/71 ..	தெப்பக்குளம் வழி நடுநிலைப் பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக்கழிப்பிடம் கட்டுதல்.	8,143	204	ஷை
7	இ1/7695/71 ..	தரைமட்ட தண்ணீர் கிடங்கில் காவலாளி குடியிருப்பு மற்றும் ஆபீஸ் அறை கூரைகளைப் பிரித்துவிட்டு சிமெண்ட் காங்கிரீட் கூரை போடுதல் மற்றும் தளவாட அறைக் கட்டுதல்.	13,893	348	ஷை
8	இ1/7719/70 ..	ஜுபிலி கிணறு இடத்தில் தண்ணீர்த் தொட்டி மோட்டார் ரூம் கட்டுதல் கம்பி அளி போடுதல், மற்றும் கிணறு ஆழப்படுத்துதல்.	8,686	217	ஷை

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
21-12-1971.
(த-8)

சிறைத்துறை

1972—73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1—3—1972 தேதி பிற்பகல் 3·00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்:—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Ack. due) மட்டுமே அனுப்பப்படவேண்டும். உறையின் மேல் ''........''க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப் புள்ளியோ அந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தம்'' என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்பவேண்டும்.

ஒப்பந்தங்கள் சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 2—3—1972 முற்பகல் 10.30 மணிக்குள் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவு, இதர பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்டக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

பி. குப்புசாமி,

சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
'குறளகம்', 5வது மாடி, சென்னை—1.

22—12—1971.
(த. 15)

பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்:—சென்னை மெரினவில் பாரன்சிக் விஞ்ஞான ஆய்வகக் கட்டடத்தின் மேல் மூன்ருவது மாடி கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர் பொ. ப. து. சென்னை, செங்கற்பட்டு வட்டம், சென்னை—5 அவர்களால் சென்னை—5, சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 28—1—1972 பிற்பகல் 3.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், பொ. ப. து. சென்னை—5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3.15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தவடிவம்.—மொத்தத்தொகை.
2. கட்டுத்தொகை.—ரூ. 6,800
3. வேலைமுடிக்கவேண்டிய காலம்.—6 மாதங்கள்
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூபாய் 20. (ரூபாய் இருபது மட்டும்) கருவூலத்திலோ (அ) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ '' Public Works Remittances III Other Remittances '' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம் 1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.
5. விற்பனை வரி ரூ. 0.70 (எழுபது காசுகள் மட்டும்) அதே செலானில் குறித்துக் கருவூலத்திலோ (அ) இந்திய பாங்கியிலோ '' XII '' விற்பனை வரி 'B' மாநில விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரவினம்'' என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி : 20—1—1972 முதல் 27—1—1972 முடிய.
7. ஒப்பந்தப் புள்ளித் தேதி:—28—1—1972 (பிற்பகல் 3.00 மணி)

மேற்கண்ட விவரங்களை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொ. ப. து. சென்னை—செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம் சென்னை—5ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் (அ) எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூருமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை—5 அவர்களுக்கு உரிமை உண்டு.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை செங்கற்பட்டு வட்டம்.

16—12—1971
(த. 12)

வேளாண்மைத் தொழிற் கழகம்

கிண்டி, சென்னை—32

அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கீழ்க்கண்ட டிராக்டர்கள் தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கும்.

	உத்தேச விலை.
1. செட்டாரி 5,511 (55 குதிரைத் திறன்) செக்கோஸ்லாவேக்கியத் தயாரிப்பு. தண்ணீரால் குளிரும் இன்ஜின்; கரும்பு சாகுபடிக்கும், கடுமையான விவசாயத்திற்கும் மற்றும் இழுத்துச் செல்லும் வேலைகளுக்கும் ஏற்றது.	ரூ. 32,000 (வரியுட்பட) விற்பனைக்குத் தயாராக உள்ளது.
2. செட்டார் 2,011 ரைஸ் ஸ்பெஷல் (25 குதிரைத் திறன்) செக்கோஸ்லாவேக்கியத் தயாரிப்பு. எல்லாவிதமான விவசாய வேலைகளுக்கும் இழுத்துச் செல்லும் வேலைகளுக்கும் ஏற்றது. நஞ்சை சாகுபடிக்கு என்றே தயாரிக்கப்பட்டது.	ரூ. 25,000 (வரியுட்பட) (இன்னும் ஒரு மாதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.
3. ஆர்எஸ்ஓ 9 (20 குதிரைத் திறன்) காற்றினல் குளிர்விக்கக் கூடியது. கிழக்கு ஜெர்மனி தயாரிப்பு, நவீனமானது, பலவகையான உபயோகத்திற்கு ஏற்றது. மிகக் குறைந்த விலை.	ரூ. 11,601 (வரியுட்பட) விற்பனைக்குத் தயாராக உள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள டிராக்டர் வகைகளை வாங்க விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட எங்களது கிளை அலுவலகங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

முகவரி.	கவனிக்கப்படும் மாவட்டங்கள்.
1. சிறு காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம்.	செங்கற்பட்டு, வடஆர்க்காடு.
2. போக்ஸ் காம்பவுண்டு, சேலம்—1.	சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி.
3. 219, நேருஜி ரோடு, விழுப்புரம்.	தென் ஆர்க்காடு.
4. தொழிற் குடியிருப்பு, திருச்சி—10.	திருச்சி, தஞ்சாவூர்.
5. தொழிற்பேட்டை, மதுரை-7.	மதுரை, இராமனதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி.

துணைக்கூடங்கள், செங்கை மாவட்டத்தில் பொன்னேரியிலும், மதுராந்தகத்திலும் இயங்கி வருகின்றன. விரைவில் ஒவ்வொரு கூடத்தின் கீழும் மூன்று துணைக்கூடங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

(த. 9)

1972–73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குக் கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 16–2–1972 தேதி பிற்பகல் 3–00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும், வரவேற்கப்படுகின்றன.

நிறுவனங்கள் :— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்தியச் சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Ack. Due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் ''............க்கு இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப் புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின்பெயரைக்குறித்துக் கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி'' என்று தவருமல் எழுதித் தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் அலுவலகத்தில் 17–2–1972 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனக்கள், ஒப்பந்தப் புள்ளி விதிகள், வழங்கவேண்டிய கச்சாப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

பி. குப்புசுவாமி,

சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர், 'குறளகம்'
5-வது மாடி, சென்னை-1.
22–12–1971.

(த.13)

ஒப்பந்தப் புள்ளி

இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் : V 9/71–72

வேலையின் பெயர்—டீஸல் டிராக்டர்—2 Nos. வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிக்கப்பெற்றுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 28—1—1972 அன்று மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் மேற்கண்ட அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. முன் வைப்புத் தொகை ..	ரூபாய் 3,500
2. ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களின் விலை.	ரூபாய்5·00
விற்பனை வரி ..	ரூபாய் 0·20
3. வேலையை முடிக்கவேண்டிய காலம். ..	2 மாதங்கள்.
4. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்.	27—12—1971 முதல் 23—1—1972 முடிய.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்கவியலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works remittances III other remittances" என்று தலைப்பிடப்பட்டு, நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித் தொகையானது, அதே சலானில் "XII Sales Tax (b) receipts under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

நில நீர் இயக்குநர்.

10, தண்டபாணி தெரு,
சென்னை-17.

(த. 18)

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9—2—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்:	சாக்கோட்டையில் விதை பதனிடும் இரு கிடங்குகட்குக் கட்டடம் கட்டுதல்
2. ஒப்பந்த வகை	மொத்தத் தொகை.
3. பிணைப் பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்).	ரூ. 6,500
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (கருவூலத்தில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம் திருவாரூர், அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்).	ரூ. 30·00
5. விற்பனை வரி .. .. (அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.)	ரூ. 1·05
6. கால அளவு ..	ஆறு மாதங்கள்.
7. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.	17—1—1972

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.5)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் கோட்டம்

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் (டிவிஷனல் இன்ஜினியர்) அவர்களால் 1972–73-ஆம் வருடத்திய அரசாங்கச் சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-15 மணிக்குக் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

VENKATESH

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோயம்புத்தூர் நெடுஞ்சாலைக் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. . 3-11 வீதம் (விற்பனை வரி உட்பட) கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 10—1—1972 முதல் 20—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. 21—1—1972 ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தினத்தன்று எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டாது. முன்பண வைப்புத் தொகையைக் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளரின் பெயரில் அரசினர் கருவூலத்தில் "வருவாய் வைப்புத் தொகைக்கு" (ரெவின்யூ டெபாசிட்) செலுத்தி அதற்கான செல்லுச் சிட்டை (செலவான) அல்லது கோடிட்ட (கிராஸ்டு) பேங்க் டிராப்ட் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். மேற்படி முன்பண வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரி, விற்பனை வரி செலுத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். பாங்க் காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானால் ரிசர்வ் பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்பண வைப்புத் தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய நிபந்தனைகள் முதலிய முழு விவரங்கள் அடங்கிய விளம்பர அறிக்கையைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில், மற்றும் இக்கோட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் மற்றும் பிரிவு அலுவலர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கு. வெங்கட்ராம்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.)
கோயம்புத்தூர்.

(த. ஆர். 3)

ஏல விற்பனை

நாகர்கோவில் நகராட்சி

வடசேரி எம்.எஸ். ரோட்டில் நாயனூர் நினைவுக் கட்டடத்திலுள்ள 18 கடைகளை 1—3—1972 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமையை 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11-00 மணியிலிருந்தும் அதன் பின்னர் ஆணையரால் மாற்றி வைக்கப்படும் நாட்களிலும் நகராட்சி அலுவலகத்தில் பலரும் அறிய ஏலத்தில் விடப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பி. தங்கவேலு,
ஆணையர்.

நாகர்கோவில் நகராட்சி
29—12—1971

(த.22)

61

ஏல விற்பனை

பழுதடைந்த நிலையிலுள்ள அரவாக்குறிச்சி வட்டார ஜீப் எம். எஸ். ஒய். 2156, 27—1—1972-ஆம் தேதி 11 மணிக்குத் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) அவர்களால் அரசின் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் (பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவு) அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

(த.21)

ஏல விற்பனை

நாகர்கோவில் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு நகராட்சிக்குச் சொந்தமான சந்தைகள், இறைச்சிக் கடைகள், ஆடு மாடு அடிக்கும் சாலைகள், வாடகைக்கார் நிற்கும் நிலையங்கள், கஃசு, குளிக்கும் அறைகள் ஆகியவற்றின் அனுபவிக்கும் உரிமையையும், கட்டணம் வசூலிக்கும் உரிமையையும் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணியிலிருந்தும், அதன் பின்னர் ஆணையரால் மாற்றி வைக்கப்படும் நாட்களிலும், நகராட்சி அலுவலகத்தில் பலரும் அறிய ஏலத்தில் விடப்படும். கூடுதல் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பி. தங்கவேலு,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
29—12—1971
(த. 20)

தொழிற் கல்வித் துறை

தோல் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20க்கும், தமிழ்நாட்டிலுள்ள மற்ற அரசுத் தொழில் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், தேவையான கருவிகளும், இயந்திரங்களும் வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—1—1972 மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்ற விவரங்களுக்குத் தொழில் கல்வி இயக்குநர், அலுவலகம், சென்னை-25-ல் இரண்டு தனித்தனியான கருவூலச் செலான்களில், ஒன்றில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10 தமிழ்நாடு அரசின் கணக்கிலும் ''XXIII—Education R. Technical Education—a fees and other Charges'' என்ற தலைப்பிலும் மற்றொன்றில் விற்பனை வரி 0·30 காசு தமிழ்நாடு அரசின் கணக்கில் '' XII Other Taxes and Duties '' என்ற தலைப்பிலும் செலுத்திச் செல்லுச் சீட்டை கொடுத்துப் பெறலாம்.

எந்தச் சூழ்நிலையிலும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை திருப்பித் தரப்படமாட்டாது. வேறு வழியில் செலுத்தப்படும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தொழிற்கல்வி இயக்குநர்.

(த.10)

பவானிசாகர் நகரியக் குழு

இந் நகரிய அலுவலக உபயோகத்திற்குத் தமிழ் தட்டெழுத்து இயந்திரம் (பாளரி சைஸ்) ஒன்று வழங்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 26—1—1972 அன்று பிற்பகல் 4 மணிக்கு அப்பாற்படாமல் சேரும் படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

பெறப்படும் ஒப்பந்தங்கள் 26—1—1972 அன்று பிற்பகல் 4-15 மணிக்கு, வந்திருக்கக் கூடிய, ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாக அதிகாரிக்கு உரிமையுண்டு.

ச. ராமசாமி,

நிருவாக அதிகாரி
பவானிசாகர் நகரியம்.

24—12—1971
(த.23)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

திருநெல்வேலி தெற்குக் கோட்டம் (இருப்பு)
பாளையங்கோட்டை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் திருநெல்வேலி தெற்கு (நெ.கி.ப.து.) கோட்டப்பொறியாளர் அவர்களால் திருநெல்வேலி தெற்குக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டுப் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பாளையங்கோட்டையிலிருக்கும் அவர்களுடைய அலுவலகத்தில் 28—1—1972 வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணி வரை (அலுவலகக் கடியாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனிக் கவரில் வேலையின் பெயரை எழுதிக், கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை, திருநெல்வேலி தெற்கு (இருப்பு) பாளையங்கோட்டை என்ற விலாசம் எழுதி ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். கிடைத்த ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 2-15 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நமூனுக்கள் முதலியன அலுவலக நேரங்களில் மேலாளரிடமிருந்து 29—12—1971 முதல் 27—1—1972 வரை ரூ. 5·18 (வரி உட்பட) ஒவ்வொன்றுக்கும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

முன் வைப்புத்தொகைக்கான சான்றுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாக வரும் ஒப்பந்தங்களும் கோட்டப் பொறியாளர் பெயருக்கு மாற்றப்படாத, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் வரும் ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

வேலைக்குரிய முன் வைப்புத் தொகை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி தெற்குக் கோட்ட எல்லையிலுள்ள அரசினர் கருவூலத்தில் '' வருவாய் வைப்புத் தொகை '' என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும். முன் வைப்புத் தொகைக்காக டிமாண்ட் டிராப்ட் இணைக்கப்படுவதாயிருந்தால் அவை திருநெல்வேலி ஸ்டேட் பாங்கில் மாற்றத் தக்கதாக இருக்க வேண்டும். இது தவிர முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படுகின்ற வங்கி உத்தரவாதத்துடன் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரமும் பெற்று, அவ்விரண்டையும் இணைக்கப்பட வேண்டும். இவ்விதம் ரிசர்வ் வங்கியில் அங்கீகாரம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எஸ். கிருஷ்ணவிஜயன்,

கோட்டப் பொறியாளர் (நெ.கி.
ப.து.) திருநெல்வேலி தெற்கு.

பாளையங்கோட்டை,
18—12—1971.

(த.ஆர்.6)

சிறைத் துறை

1972–73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு தேக்கு மரச் சட்டங்கள், பலகைகள் முதலியவை வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18–2–1972-ஆம் தேதி பிற்பகல் 3–00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்.—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்தியச் சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Ack. Due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் ''..........க்கு (இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப் புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) தேக்கு மரச் சட்டங்கள், பலகைகள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி'' என்று தவறு மல் எழுதித் தமிழ்நாடு சிறைத் துறைத்தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் சிறைத் துறைத்தலைமைப் பார்வையாள ன் அலுவலகத்தில் 19–2–1972 ற்பகல் 10–30 மணிக்குள் திறக் ப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள் ஒப்பந்தப் ள்ளி விதிகள் வழங்க வேண்டிய ர வகைகளின் விவரக் குறிப் புகள் முதலியவைகள் சம்பந் ப்பட்ட நிறுவனங்களின் கண் ாணிப்பாளர் அவர்களிடமிருந்து ட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

பி. குப்புசாமி,

சிறைத்துறைத் தலைமைப்
பார்வையாளர் ' குறளகம் '
5-வது மாடி, சென்னை-1.

22–12–1971
(த.14)

பயிற்சி

மீன் துறை
நாகப்பட்டினம்

கடலில் போய் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் உபயோகிப்பது, சிறிய படகுகளைப் பராமரிப்பது, மரைன் எஞ்சின்களுள்ள இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடித்தல்—அவைகளில் பத்து மாத காலத்திற்குப் பயிற்சி பெறுவதற்காக, அதற்காக உள்ள மனுக்களில் விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள், 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம்தேதி 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும், 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும், குறைந்தது ஐந்து வருடம் கடலில் போய் அனுபவம் உள்ளவர்களாகவும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவும், நல்ல தேக ஆரோக்கியமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது) வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த இலாகாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

இந்தப் பயிற்சி, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும்.

விண்ணப்ப மனுக்களும், சேர்வதற்கான தகவல் குறிப்பீடுகளும் வேண்டியவர்கள், உதவி மீன்துறை இயக்குநர் அலுவலகம், தஞ்சாவூர், அல்லது 'நாகப்பட்டினம் மீனவர் பயிற்சி நிலையம்' இவைகளிலிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பயிற்சிக் காலத்தில், மீன்பிடிப்பதற்காகப் படகுகளில் போகும் போது ஏற்படக்கூடிய எதிர்பாராத விபத்துக்களுக்கு அரசாங்கம் பொறுப்பல்ல.

விண்ணப்பங்கள், உதவி மீன் துறை இயக்குநர் (மீனவர் பயிற்சி நிலையம்) நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்' என்ற விலாசத்திற்கு 1972-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

நேரிடைப் பேட்டிக்கு வருவதற்கும், பயிற்சியில் சேர வருவதற்கும் பிரயாணச் செலவு ஒன்றும் கொடுக்கப்பட மாட்டாது.

துணை இயக்குநர்,

மீன் துறை,
(மண்டலம்) சென்னை-6.

(த.17)

ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட மைலார் இரப்பர் கூப்புகளிலிருந்து அவைகளுக்கெதிரே குறிப்பிட்டுள்ள கனமீட்டர் தடிகளை ஏற்றி நாகர்கோவிலிலுள்ள அரசு விற்பனை மண்டிக்குச் சேர்ப்பிக்க அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—1972-ஆம் நாள் மதியம் 12·00 வரை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி தென் பிரிவு மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன் பேரில் விவரங்களுக்குக் குலசேகரத்திலுள்ள மரவெட்டுப் பிரிவு வனச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

கூப்பு எண்.	கன மீட்டர்.
மைலார் 63	400
மைலார் 64 ..	350

எஸ். கொண்டாஸ்,

மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

(த.16)

இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை. ரூ.	கட்டுத் தொகை. ரூ.
1. பேருந்து நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் விடுதி கட்டுதல்.	99,400	3,950
2. வி. நகர் 5, 6, 7 தெருக்களுக்குத் தார் போடுதல்.	24,000	600
3. கோனேரிப்பட்டி எக்ஸ்டன்ஸன் I & II சபாபதி மில் தெரு, செட்டியண்ண நாயக்கன் தெரு, கோனேரிப்பட்டி ஆதிதிராவிடர் தெரு தார் போடுதல்.	24,000	600
4. வசுரச் சந்தையில் 5 கடை கட்டுதல் முதல் பிளாக்.	14,000	350
5. வாரச்சந்தையில் 5 கடைகள் கட்டுதல் இரண்டாவது பிளாக்.	14,000	350

இன்னும் இதர 14 வேலைகள் சாக்கடை கட்டுதல், தார் ரோடு போடுதல், மராமத்து செய்தல் முதலியன. மொத்த வேலைகளின் மதிப்பீடு ரூ. 2,27,005 மற்ற விவரங்களுக்கு அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(த. ஆர். 4)

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

பொதுப்பணித்துறை

வேலையின் பெயர்:—வடஆர்க்காடு மாவட்டம், செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 29—1—1972 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 29—1—1972 மாலை -00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 12—1—1972 முதல் 28—1—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்
வேலூர்-1.

(த. ஆர். 1)

குடிநீர் வடிகால் வாரியம்

வீராணம் திட்டம்

வேலையின் பெயர் :—அழுத்தப்பட்ட கான்கிரீட் குழாய்களைத் தென் ஆர்க்காட்டிலுள்ள வெல்லாறு மேலாகத் தூக்கிப்பிடிக்க அழுத்தப்பட்ட கான்கிரீட்டினால் ஒரு பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காக, பொதுப் பணித்துறை அல்லது மற்ற அரசுத்துறைகள் பெரிய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், வீராணம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 19—1—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 10,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10 ; விற்பனை வரி ரூ. 0·37.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்—10 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை "III Suspense-G. Remittance–(iii) Other Remittances-TWAD Board Funds" என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், வடக்கு, அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5, அவர்தம் அலுவலகத்தில் 3—1—1972 முதல் 17—1—1972 வரை தொகை செலுத்திய செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

தனித்தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. ஆர். 2)


உறுதியான கட்டடங்கள்: கிராமங்களில்-1

கால்நடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை

சங்கர் சிமெண்ட்

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது!
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்டஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

பல்லவபுரம் நகராட்சி
சென்னை-43

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு அடியிற்கண்ட பொருட்கள் வழங்க 12—1—72-ஆம்தேதி புதன்கிழமை காலை 12-00 மணி வரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 12-00 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் கட்டுத் தொகை ரொக்கமாகச் செலுத்தி ரசீதுடன் கொடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட இதர ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

வரிசை எண்ணும் விவரமும்.	தேவைப்படும் எண்ணிக்கை.	கட்டுத் தொகை.
		ரூ.
1. கொசு ஒழிப்பு மருந்து நிரப்பி மருந்து தெளிக்க உபயோகிக்கப்படும் கருவிகள் வழங்க.	5	50

டி. எஸ். சிவசாமி,
தனி அலுவலர்,
பல்லவபுரம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
27—12—71.
(த. 19)

பவானிசாகர் நகரியக் குழு
கோயம்புத்தூர் மாவட்டம்

கீழ்க்கண்ட சாலைகளை, தூசியற்ற சாலைகளாக மாற்ற (1971-72) முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் 25—1—1972 அன்று பிற்பகல் 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

எண், வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
1. வெளி வளைவு சாலைக்கும் முருக்கந்துறைக்கும் இடையே உள்ள சாலைக்குத் தார் போடுதல்.	3,600	180
2. பவானி இல்லத்திற்கும் அரசினர் மனைக்கும் இடையே உள்ள சாலைக்குத் தார் போடுதல்.	3,700	185

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளையும், விண்ணப்பங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 15—1—1972 முதல் 24—1—1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 25—1—1972 அன்று பிற்பகல் 4-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய, ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாக அதிகாரிக்கு உரிமையுண்டு.

ச. இராமசாமி,
நிருவாக அதிகாரி,
பவானிசாகர் நகரியம்.

பவானிசாகர்,
24—12—1971.

(த. 24)

அரசினர்
பொது மருத்துவமனை
சென்னை-3

சென்னை மாநில அரசினர் பொது மருத்துவ மனையைச் சேர்ந்த செவிலியர் உணவு விடுதியை 1—4—1972 முதல் 31—3—1972 வரை ஓர் ஆண்டுக்கு நடத்தும் ஒப்பந்தத்திற்கான மனுக்கள் 31—1—1972 பிற்பகல் 3 மணி வரை அரக்கு முத்திரையிட்ட உறைகளில் கோரப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிக்கான நிபந்தனை அடங்கிய அட்டவணை மனுக்களைச் சென்னை மாநில அரசினர் மருத்துவ மனைத் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் அடியிற்கண்டுள்ள இடங்களுள் ஒன்றில் ரூ.5 'XXIII Medi J. Miscellaneous' என்னும் தலைப்பின் கீழும் விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதமும் உபரித்தொகை ரூ. 5 வீதமும் 'S. T. XII Sales Tax' என்ற தலைப்பின் கீழ்க் கட்டப்பெற்ற செலுத்துச் சீட்டை சமர்ப்பிப்பதின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

1 இந்தியன் ரிசர்வ் பாங்கு சென்னை. (The Reserve Bank of India, Madras).

2 இந்திய மாநில பாங்கு (The State Bank of India, Madras).

3 அரசாங்கக் கருவூலம் (Treasury).

குறிப்பு:—இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி தரப்படமாட்டா.

எம். நடராசன்,
B.A., M.B. Mch. (ortho)
FRCS (England)
தலைவர்,

அரசாங்கப் பொதுமருத்துவமனை
20—12—1971.
(த. 26)

ஈரோடு கோட்டம்

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாக, ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அவர்களால் 1972 73-ஆம் வருடத்திய அரசாங்க சாலைகள்பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், ஈரோடு கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) அலுவலகத்தில் 2—2—1972-ஆம் நாள் பிற்பகல் 2-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2—2—1972-ஆம் நாள் பிற்பகல் 2-15 மணிக்கு ஈரோடு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் ஈரோடு நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர்அலுவலகமேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3.11 வீதம் (விற்பனை வரி உட்பட)கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 24—1—1972 முதல் 1—2—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளும் தினமாகிய 2—2—1972-ஆம் அன்று எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டாது. முன் பண வைப்புத் தொகையை ஈரோடு கோட்டப் பொறியாளரின் பெயரில் அரசினர் கருவூலத்தில் வருவாய் வைப்புத்தொகை (ரெவின்யூ டிபாசிட்) செலுத்தி அதற்கான செல்லுச்சீட்டை (செலான்) அல்லது கோடிட்ட (கிராஸ்டு) பேங்க் டிராப்டை ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். மேற்படி முன் வைப்புத்தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரி, விற்பனைவரி செலுத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பாங்க் கேரண்டி முன் வைப்புத் தொகையை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் ஒப்புதலுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத்தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய நிபந்தனைகள் முதலிய முழு விவரங்கள் அடங்கிய விளம்பர அறிக்கையை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் மற்றும் இக்கோட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சா. கிருஷ்ணசாமி ராஜா,
கோட்டப் பொறியாளர்
(நெ.கி.ப.),
ஈரோடு.

(த.49)

மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்
நிர். ஏ—1437

31, வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1.

மதுரை மாவட்டத்தில், மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தில் அரசினர் கணக்கில் இருக்கும் இரசாயன உரத்தை ரிபேக் செய்ய ஒரு தரம் உபயோகப்படுத்தப்பட்ட (Second Hand Gunnies) காலிச் சாக்குகள் மற்றும் புதிய பாலித்தின் பைகள் சப்ளை செய்ய சீலிட்ட முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், 31, வெங்கலக் கடைத்தெரு, மதுரை தலைமை அலுவலகத்தில் 1972 ஆம் ஆண்டு சனவரி 31-ஆம்நாள் மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஆட்சித் தலைவர் அவர்களால் முடிவு செய்யப்படும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர்கள் டீ சங்க அலுவலகத்தி ரூ. 500 கட்டுத் தொகை செலுத்தி, ஒப்பந்தத்துடன் ர தையும் சேர்த்தனுப்பவேண்டும்

சாக்குகள் அல்லது பாலித்தின் பைகள் அல்லது இரண்டிற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கலாம். ஒப்பந்தப் புள்ளியுடன் சாக்கு, பாலித்தின் பை, மாதிரிகள் சேர்த்து அனுப்ப வேண்டும். கோரும் விலையில், வரி, பாக்கிங் செலவு முதலியவை இச்சங்கத்தின் தேனி, திண்டுக்கல், பழனி கிளைகள் சம்பந்தமாக அந்தந்த இடங்களுக்கு ஒப்படைக்கும்வரை ஏற்படும் செலவும், மதுரையைப் பொறுத்த வரையில் மதுரை கோச்சடைக் கிட்டங்கியில் ஒப்படைக்கும் செலவும் அடங்க வேண்டும்.

சாக்குகளும் பாலித்தின் பைகளும் மாதிரி காட்டியபடியே இருக்க வேண்டும். தரம் குறைவாக இருந்தால் தள்ளுபடி செய்யப்படும்.

ஒப்பந்தப் புள்ளி ஒப்புக் கொண்டதிலிருந்து 10 தினங்களுக்குள் சப்ளை செய்துவிட வேண்டும். தவறினால் ஒப்பந்தப் புள்ளி கட்டுத் தொகை பறிமுதல் செய்வதோடு மறு ஒப்பந்தப் புள்ளி போடுவதால் ஏற்படும் செலவு, விலை வித்தியாசம் முதலியவற்றால் ஏற்படும் நஷ்டத்திற்கும் பொறுப்பாவார்.

ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்புக் கொண்டதிலிருந்து 3 தினங்களுக்குள் ரூ. 2.25 ஸ்டாம்பு பத்திரத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்ரிமெண்டு எழுதிக் கொடுக்கவேண்டும்.

தேவைப்படும் சாக்கு ரகம் தான் வாங்கப்படும். எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும்எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளுபடிசெய்யக் கலெக்டர் அவர்களுக்கு உரிமையுண்டு.

தனி அலுவலர்.

(த. 38)

ஒப்பந்தப் புள்ளி

நில நீர் இயக்குநர் அலுவலகம்

அறிக்கை எண் 4/71—72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான கால வரம்பு நீடிப்பு.

வேலையின் பெயர்:—36 அங்குலம் உள்விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்த மேற்றப்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி, அமைப்புகளும் (Prestressed Concrete Pipes and Specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக் கொண்டு சென்று சரியான வரிசைப்படியும் சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைவுகளாகப் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில், முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான காலவரம்பு 21—2—1971 மாலை 3-00 மணிவரை நீடிக்கப்படுகிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 21—2—1972 அன்று மாலை 3-30 மணிக்கு, அச்சமயம் வந்திருக்கும், ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 18—2—1972 வரை கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

ச. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
10-ஏ, தண்டபாணி தெரு,
சென்னை-17.

(த.27)

அறிவிப்பு எண் 7/71—72.

வேலையின் பெயர்:—சென்னை நிலநீர்க்கோட்டத்திற்குத் தேவையான வார்ப்பு இரும்புக்குழாய்கள்(C.I. Pipes) இணைக்க உபயோகிக்கும் கார் ஈயக் கட்டிகள்-(Pip Lead) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள்மேலே குறித்துள்ள அலுவலகத்தில் 17—2—1972 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அவருடைய அலுவலகத்தில் 17—2—1972 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம் .. .. கே 2
முன்வைப்புத் தொகை .. ரூ. 5,900
ஒப்பந்தப்பத்திரங்களின் விலை. விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்), விற்பனை வரி ரூ. 0·40 (நாற்பது காசுகள் மட்டும்).
வேலை முடிக்கவேண்டிய காலம். 3 மாதங்கள்.
ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம். 18—12—1971 முதல் 14—2—1972 முடிய.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது. அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittanes III Other Remittances" என்ற தலைப்பிட்டு நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII Sales Tax(b) Receipts Under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ச. பஞ்சநதம்,
இயக்குநர்,
நிலநீர் இயக்குநர் அலுவலகம்,

10, தண்டபாணி தெரு,
சென்னை-17.

(த.28)

புளியங்குடி நகராட்சி

அடியிற் கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 25—1—1972-ஆம் நாள் மாலை 4-00 மணி வரை புளியங்குடி நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்றும் இது சம்பந்தமான தகவல்கள் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.	மதிப்பீடு தொகை.	கட்டுத் தொகை.
1 தினசரி சந்தையும், கடைகளும் கட்ட.	ரூ. 98,000	ரூ. 4,900

கே. கே. அப்துல் சுக்கூர்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
29—12—1971.

(த.25)

ஏலம்

காஞ்சிபுரம் நகராட்சி

காஞ்சிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் பயன்படுத்திக்கொள்ளும் உரிமைகளை 31—1—1972-ஆம் தேதி, திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும், ஏலக் கட்டுப்பாடுகட்கும் நகராட்சி ஆணையருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

1—4—1972 முதல் 31—3—1973 வரை முடிய உள்ள நிதி ஆண்டுக்கான குத்தகைகள்.

1. நகராட்சி ராஜாஜி சந்தை (மீன் கடைகள் நீங்கலாக) நகராட்சி ராஜாஜி மீன் சந்தை, நகராட்சி ஜவஹர்லால் சந்தை (மீன் சந்தை உட்பட) நகராட்சி காமராஜ் சந்தை (மீன் சந்தை உட்பட) ஆடு அறுக்குமிடம் பேருந்து நிலையம், மதுராந்தோட்டத்திலுள்ள வண்டிமேடு, காவலான் சுங்கச்சாவடி அருகிலுள்ள வண்டிமேடு, நகராட்சி ராஜாஜி சந்தை, அருகிலுள்ள மிதிவண்டி நிற்குமிடம் ஆகியவைகளில் கட்டணங்கள் தண்டும் உரிமை.

2. ஆவாகுட்டை, ஒக்கப்பிறந்தான் குளம், உப்பேரிகுளம், மொட்டைக்குளம் ஆகியவைகளில் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமை.

3. நரசிங்கராயர் தெருக் கோடியிலுள்ள சாக்கடை நீரைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை.

4. பேருந்து நிலையத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடை, பழக் கடை, அரக்கோணம் வழிச் சுங்கச்சாவடி, காவலான் கேட் அருகிலுள்ள பம்புசெட் கட்டடம் ஆகியவைகளை வாடகைக்கு எடுத்துக்கொள்ளும் உரிமை.

5. மொட்டைக்குளம் வடிகால் தோட்டத்தில் கால்நடைகளுக்கான புல் பயிரிடும் உரிமை.

6. பேருந்து நிலையத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடை, பழக் கடை இவைகள் நீங்கலாக மற்ற தற்காலிக கடைகளுக்குக் கட்டணங்கள் தண்டும் உரிமை.

7. மர விளைவுகள் முதலியன. 1—4—1972 முதல் 31—3—75 வரை உள்ள நிதி ஆண்டுக்கான குத்தகைகள்.

1. ஜவஹர்லால் நகராட்சி சந்தை அருகிலுள்ள வடிகால் தோட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை.

2. பேருந்து நிலையத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை கட்டடத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை

3. சங்கீத வித்துவான் நயினாப் பிள்ளைத் தெரு, கதவு எண் 28 வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள காலி மனையைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை.

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்-2,
3—1—1972.

(த. 32)

செங்கோட்டை நகராட்சி

திருத்தம்

1—1—1972-ஆம் தேதிய தமிழரசு இதழின் (தமிழ்ப் பதிப்பு) 90-ஆம் பக்கத்தில் கண்டுள்ள இவ்வலுவலக விளம்பரத்தில் 27—1—1972 வியாழக்கிழமை என்று எங்கெங்குக் காணப்படுகிறதோ அங்கெல்லாம் "28—1—1972 வெள்ளிக் கிழமை" என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

ஆணையர்.

செங்கோட்டை நகராட்சி.

(த. 30)

புதிய திட்டம்

வீட்டு வசதி வாரியம்

சேமிக்கும் அனைவருக்கும் வீடுகள்

அனைவரும் வாரீர்!
அழகு மனைகள் பெறுவீர்!!

நாளொன்றுக்கு ரூ. 1-க்கு (ரூபாய் ஒன்றுக்கு) குறையாமல், தவறாமல், சேமிப்பீர். ஒவ்வொரு வாரம், அல்லது மாதச் சேமிப்பை வாரியத்தில் சேர்த்திடுவீர்.

5 ஆண்டுகள் முடிவில் சேமித்த அளவில் நான்கு மடங்கு மதிப்புள்ள மனையோ, வீடோ வேண்டியதை மகிழ்வுடன் பெறுவீர். மிகுதியைத் தவணை முறையில் செலுத்திடலாம். வசதி யில்லையெனில் சேமிப்பினை மீட்டுக் கொள்வீர்.

சேமிப்புக்குக், காலாண்டுக்கொரு முறை 3 சதவீதம் வட்டியும் சேர்க்கப்படும். விவரம் அறிந்து, மனுக்கள் பெற்று உடனே விரைந்து திட்டத்தில் சேர்ந்திடுவீர். என்றும் வரலாம். எவரும் வரலாம்.

விவரம் அறியும் முகவரி:—

தலைவர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
நந்தனம்,
சென்னை-35.

(த. 29)

ஏலம்

தமிழ்நாடு தனிக் காவலர் 4-வது பட்டாளியனின், 1960 மாடல் எம்.டி.எச். 2974, எம்.டி.எச். 2990 ஆகிய இரண்டு லாரிகளும், தமிழ்நாடு தனிக்காவலர், திருச்சி முகாமில் 2—2—1972 காலை 11 மணிக்குப் பொது ஏலத்தில் விற்கப்படும்.

மற்ற விவரங்கள், கீழே கையொப்பமிட்டவருக்கு, அஞ்சலக வில்லைகள் ஒட்டப்பட்ட தன் விலாசமிட்ட உறை ஒன்றை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பி. எஸ். விஸ்வநாதன்,
கமாண்டன்ட்,
தமிழ் நாடு தனிக்காவலர்,
4-வது பட்டாளியன்,
ஆவடி, சென்னை-54.

(த. 45)

ஒப்பந்தப் புள்ளி

கொடைக்கானல் நகரியம்

கொடைக்கானல் கடைவீதி சாலையின் தார் தளத்தை ரூ. 9,600 மதிப்பீட்டில் புதுப்பிப்பதற்கு முன் பாதுகாப்பு கட்டுத் தொகை ரூ. 480 செலுத்தி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—72-ஆம்தேதிமாலை 4மணிக்குள் அடியிற் கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

நகரியக் கருவூலத்தில் ரூ. 5.15 செலுத்தி ஒப்பந்தப் புள்ளிஷெட்யூலும், மற்ற விவரங்கள் நகரியப் பொறியாளரிடம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பு. எம். சிவகுருநாதன்,
நிருவாக அதிகாரி.

கொடைக்கானல்,
24-12-71.

(த. 33)

பொள்ளாச்சி நகராட்சி

மின்துறை

பொள்ளாச்சி நகராட்சியில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான தனித்தனியே மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 28—1—1972 மாலை 4-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வேலை விவரங்கள் வேண்டுவோர் நகராட்சி மின் பொறியாளர் அவர்களுக்கு விண்ணப்பித்தோ, நேரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1. நகர எல்லைக்குள் பல்லடம் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 32 வீடுகளுக்கும் மின் வடங்கள் அமைத்து விளக்குகள் போடுதல்.	370
2. நகர மன்ற அலுவலகத்தில் தண்டலர்களுக்கான வரி வசூலிக்கும் கட்டடத்திற்கு மின்விசிறிகள் அமைத்து விளக்குகள் போடுதல்.	75

ஆணையர்.

(த.37)

நிலநீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 8/71—72.

வேலையின் பெயர்.—''நடமாடும்'' மின்-உருக்கி-இணைப்பான்-2Nos வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேலே குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் 25—1—1972 அன்று மாலை 3.00 மணிக்குள், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறித்துள்ள அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3.30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்:

1 முன்வைப்புத்தொகை	ரூ. 2,500
2 ஒப்பந்தப்பத்திரங்களின் விலை	— ரூ. 5
விற்பனை வரி ..	.. ரூ. 0.20 காசு.
3 வேலை முடிக்கவேண்டிய காலம்	இரண்டு மாதங்கள்.
4 ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்.	25—12—71 முதல் 22—1—72 முடிய

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாதது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் Public Works—Remittances — Other Remittances என்று தலைப்பிட்டு நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம் சென்னை—17, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரித் தொகையானது செலுத்தப்பட்ட அதே சலானில் XII Sales Tax—(b) Receipts under State Sales-tax Act—General Sales-tax என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்படவேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான், ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஆர்தர் சாமுவேல்,
இயக்குநர்.

10-A, தண்டபாணி தெரு,
தி. நகர், சென்னை-17.
(த. 40)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்:—(1) சைதாப்பேட்டை வட்டம், வெளாச்சேரியில் 1 உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் 9 காவலர் குடியிருப்புக் கட்டுதல்;

(2) சைதாப்பேட்டை வட்டம், திருவான்மியூரில் 1 உதவி ஆய்வாளர், 1 தலைமைக் காவலர், 13 காவலர் குடியிருப்புக் கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 28—12 1971 என்ற கெடு 25—1—1972 மாலை 3-மணி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 17—1—1972 முதல் 24—1—1972 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்ற நிபந்தனைகளில் எந்த மாறுதலும் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கற்பட்டு மாவட்டம்

(த 44)

பொதுப்பணித் துறை.

செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

வேலையின் பெயர்—வடஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்திலுள்ள வரட்டாறு ஆற்றின் குறுக்கே, போந்தை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், ஆயக்கட்டுதாரர்களிடமிருந்தும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு -வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 28—1—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்பொழுது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—கே.2.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20·00.
முடிக்கவேண்டியகாலம் ஒப்பந்தப் புள்ளி—12மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 12—1—1972 தேதி முதல் 25—1—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D Remittances, III Other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales-Tax (b) Receipts, Under State Sales Tax Act. General Sales-Tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டிபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்டு டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டுகள்' செயற் பொறியாளர், பொ.ப.து. திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசீயச் சேமிப்பு நற்சான்றுப்பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கே. எஸ். ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து., செங்கற்பட்டு-வடஆர்க்காடு
பெருவட்டம், வேலூர்-1.

(த.56)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித்துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம்— வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித்தேதி 28—1—1972 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 28—1—1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணி அளவில், அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், 12—1—1972 முதல் 24—1—1972 வரை அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றமேதுமில்லை.

க. சு. ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த-52)

தென் ஆர்க்காடு விவசாய விளைபொருள் விற்பனைக் கழகம், கடலூர்-1.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 2—2—1972 (1972ஆம் வருடம் பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள்) மாலை 4-00 (நான்கு) மணிக்குள் பெற்றுக்கொள்ளப் பெறும். ஒப்பந்தப் புள்ளிக் குறிப்புகளும் இதர ஒப்பந்த வரையறைகளும் 19—1—1972 முதல் 31—1—1972 வரை உள்ள எல்லா அலுவலக நாட்களிலும் இவ்வலுவலகத் தில் காலை 11-00 மணி முதல் மாலை 4-00 மணி வரையிலும் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ள லாம். மேற்கொண்டு விவரங்கட்குச் செயலாளரை அணுகவும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	வேலையின் உத்தேச மதிப்புத் தொகை.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
1 விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல்.	37,800	945
2 கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல்.	43,900	1,098
3 விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல்.	36,100	903
4 கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பம்பாய் கழிவிடம் ஒன்று கட்டுதல்.	3,200	80
5 கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் காய்வுக் கழிவிடங்கள் இரண்டு அமைத்தல்.	6,500	163
பண்ணுருட்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் காய்வுக் கழிவிடங்கள் இரண்டு அமைத்தல்.	6,600	165
7 கடலூர் முதுநகர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் காய்வுக் கழிவிடங்கள் இரண்டு அமைத்தல்.	6,800	170
8 விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வட புறம் ஏலக் கொட்டகை யைச் சீரமைக்கும் வேலை.	13,900	348
9 விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தென் புற ஏலக் கொட்டகையைச் சீரமைக்கும் வேலை.	11,400	285
10 விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 2-வது ஏலக் கொட்டகையைச் சீரமைக்கும் வேலை.	22,800	570
11. விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அதிகப் படி மின் இணைப்பு வசதி செய்தல்.	5,600	140

அ. சுப்பராயன்,
செயலாளர்—பொறுப்பு,
தென் ஆர்க்காடு மாவட்ட விவசாய
விளைபொருள் விற்பனைக்கழகம்.

(த.34)

போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில் நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை—2 அவர்களால் வரும் மூன்று வருடத்திற்குக் கீழ்க் கண்ட ஸ்டால் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள போக்கு வரத்து இல்லத்தில், நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் 20—1—1972, 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 2-வது நெம்பர் ஸ்டால்—பலவகை பொருள்கள் விற்றல் (General Merchant).

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப்பத்திரங்கள் முதலிய வற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை—2 அவர்களிடம் ரூ. 1.04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித்தரமாட்டாது.

இயக்குநர்.

(த.55)

ए

பொதுப்பணித் துறை

பார்வை : ந.எ. 2668/66/வ 8 நாள் 24—12—1971.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 29—1—1972 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த வகை—கே 2.

வரிசை	வேலையின் விவரம்.	பிணைப் பணம்.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.	விற்பனை வரி.
	கோடி விநாயகநல்லூர் வாய்க்கால் விரிவு படுத்துதல்.	ரூ.	ரூ.	ரூ.
1.	கோடி விநாயக நல்லூர் வாய்க்காலுக்கு இணையாகப் புதிய வாய்க்கால் வெட்டுதல்.	2,150	10·00	0·35

நிபந்தனைகள்—

1. ஒப்பந்தப் பத்திரங்கள் 10—1—1972-க்குப் பிறகு கிடைக்கும்.

2. பிணைப்புப் பணம் (இ.எம்.டி.) நிருவாகப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம் திருத்துறைப்பூண்டி அவர்களின் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்டப்படவேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொ. ப. III மற்றைய செலுத்துத் தொகை எண்ணும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், திருத்துறைப்பூண்டி என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரை அரசாங்கக் கருவூலத்தில் "XII விற்பனை வரி பி. வரவுகள் மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை, வரி" என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 27—1—1972 மாலை 5-00 மணிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளர் நேர் உதவியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும்.

அ. சேஷாத்திரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்,
தஞ்சாவூர்.

24—12—1971

(த.39)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்), பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 25—1—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—சிவகங்கை குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை—தலைமை நீரேற்று நிலையம்—நீரேற்றிகள் அளித்தல், நிர்மாணித்தல்—சம்பந்தமாக.

ஒப்பந்த வகை :	மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை:—ரூ. 5,500 (ரூபாய் ஐயாயிரத்து ஐந்நூறு)

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதம். ஒப்பந்தப் படிவங்களின் விலை— ரூ. 20·74 (விற்பனை வரி உட்பட). (ரூபாய் இருபதும், காசு எழுபத்திநான்கு மட்டும்.)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து, 48, கல்லூரிச் சாலை, சுப்பிரமணியபுரம், என்ற முகவரிக்கு அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 21—1—1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல்
வட்டம், குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை-2,
15—12—1971.

(த.53)

கல்வித் துறை

தமிழ்நாடு கல்வித் துறையின் சார்பில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் முதன்மைக் கல்வி அலுவலர், பனகல் கட்டடம், தஞ்சாவூர்-1 (குறிப்பு எண் 296-பி3.71) எனவும் ஒப்பந்தக்காரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க்கையொப்பமிட்டவரால் 25—1—1972 காலை 11-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 27—1—1972 அன்று காலை 11 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(அ) 8·2 கி.கி. வெள்ளைத் தாள் (டி.எஃப். கி.) அரசினர் தேர்வுகட்காக அளிக்கப்படவேண்டும்.

(ஆ) ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப் புள்ளி அனுப்பும் பொழுது நூறு ரூபாய் செலுத்த வேண்டும்.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் பெயர் அறிவிக்கப்பட்டதும் உடனடியாக மேலும் ரு. 100செலுத்திக் குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்தம் செய்து உறுதி அளிக்க வேண்டும்.

(ஈ) ஆணை கிடைக்கப்பெற்ற ஐந்து நாட்களுக்குள் பிற செலவினங்களின்றி ஒப்பந்தக்காரர் தமது சொந்தச் செலவில் அனுப்ப வேண்டுமெனக் கூறப்படும் இடங்களுக்கு வெள்ளைத் தாள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(உ) டி.எஃப்.சி. வெள்ளைத்தாள் எல்லாவிதக் கட்டணங்களையும் சேர்த்து ஒரு ரீலுக்கு எவ்வளவு எனக் குறிப்பிட வேண்டும்.

(ஊ) ஒப்பந்தங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்க கீழ்க்கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

கோ. சு. சீனிவாசன்,
முதன்மைக் கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.

(த.58)

பயிற்சி

ஆதாரமுறையல்லாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வு. ஏப்ரல் 1972

1971 அக்டோபரில் நடைபெற்ற ஆதார முறையல்லாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வு எழுதி தேர்வு பெறுதவர்கள் அல்லது விண்ணப்பித்துத் தேர்வு எழுதாதவர்கள் மற்றும் 1971 அக்டோபரில் நடைபெற்ற இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வில் கலந்து கொண்டு ஆதார முறையல்லாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வுக்குத் தனியாராகச் செல்ல தமிழகக் கல்வி விதி 138-ல் வரையறுக்கப்பட்ட மதிப்பெண் பெற்றவர்கள் ஆகியோர் 1972 ஏப்ரலில் நடக்கவிருக்கும் ஆதார முறையல்லாத பயிற்சிப் பள்ளித் தேர்வுக்குக் கட்டணம் செலுத்தக் கடைசி நாள் 31—1—1972 ஆகும். அதன் பின்னர் செலுத்தப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்டவர்கள் தவிர மற்றவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சென்னை நகரைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணத்திற்கு உரிய தொகைக்கு இந்திய அஞ்சல் ஆணைகளை "அரசாங்கத் தேர்வு ஆணையரின் செயலாளர், சென்னை-6" அவர்கட்கு மேல் குறிப்பு இட்டு அனுப்பிவைக்க வேண்டும். மற்றைய இடங்களைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் அரசாங்கத் தேர்வு ஆணையரின் அலுவலகத்தில் வழங்கப்படும் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ள செலுத்துச் சீட்டுகளைக் கொண்டுதான் அரசுக் கருவூலங்களில் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டும். தமிழகக் கல்வி விதி 138-ன்படி தனியாராக விண்ணப்பிக்கும் ஆசிரிய விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வியலுவலர் அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளர் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வலுவலகத்திற்கு நேரடியாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உரிய விண்ணப்பங்கள் வேண்டுவோர் 20 காசு அஞ்சல்தலையிட்ட தனது முகவரி எழுதப்பட்ட உறையுடன் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பித்தால் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும். அல்லது சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வியதிகாரிகளிடமோ அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளர்களிடமோ பெற்றுக் கொள்ளலாம்.

பயிற்சிப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகள் மூலம் தேர்வுக்கு அனுப்பி தேர்வு பெறுத மாணவர்கள் சார்பாக உரிய கட்டணத்தை மேற்குறிப்பிடப்பட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள செலுத்துச் சீட்டில் கட்டணம் செலுத்தி பெயர் பட்டியலுடன் 5—2—1972-ஆம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கு. ஆ. சுவாமிநாதன்,
செயலாளர்.

அரசாங்கத் தேர்வு ஆணையர்
அலுவலகம், சென்னை-6.
31-12-1971.

(த. 31)

ஏலம்

சேலம் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் நாள் வியாழக் கிழமை காலை11 மணிக்கு சேலம் நகராட்சி கிருஷ்ணராஜேந்திரா தங்கல் மனையின் கீழ்ப்புறமுள்ள 5 கடைகளையும் (கடை எண் 1, 2, 4, 5, 6) 1-4-1972 முதல் 31-3-1975 முடிய உள்ள காலத்திற்குக் குத்தகைக்கு வைத்துக் கொள்ள நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பலரறிய ஏலத்தில் விடப்படும்.

இதர விவரங்களுக்கு ஆணையரை அணுகவும்.

பெ. ரெங்கசாமி,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
சேலம்,
23-12-1971.
(த. 35)

ஏலம்

கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான 500 மின் கம்பங்களில் 3' × 2' அளவுள்ள போர்டுகள் அமைத்து 1-4-1972 முதல் 31-3-1975 வரை 3 ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்யும் உரிமையை 31-1-1972-ஆம் தேதி காலை 11-00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். கட்டவேண்டிய கட்டுத் தொகை ரூ. 100: மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆணையர்,
கோவை நகராட்சி.

(த. 57)

ஏல விற்பனை

காவல் துறை

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள், 1972-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 29-ஆம் தேதி, சனிக்கிழமை காலை 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் தேதி வியாழக்கிழமையன்றும், 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஆணையர்,
காவல் துறை.

சென்னை-8,
29-12-1971.

திருத்தம்

1—1—1972 தமிழரசு இதழில் 119-ஆம் பக்கத்தில் 'பல்லாவரம் நகராட்சி' என்று அச்சாகியிருக்கும் தலைப்புக்குப்பதிலாக 'பல்லவபுரம் நகராட்சி' என்று திருத்தி வாசித்துக்கொள்க.

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 25–1–72 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

வ. எண்.	வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை.
1	தேசிய நெடுஞ்சாலை எண் 4-ல் ஸ்ரீபெரும்புதூர் துணைவழிச் சாலையில் கி.மீ. 0/2-ல் ஒரு பாலம் கட்டுதல்.	ரூ. 2,840

ஒப்பந்தப் புள்ளிகள் 25–1–1972 அன்றே மாலை 3.15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ), தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, இரண்டாவது மாடி குறளகக் கட்டடம் சென்னை 1 அலுவலகத்தில் 17–1–1972 முதல் 24–1–1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ), தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, சென்னை-1 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யு டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ், கோட்டப் பொறியாளர் (நெ), தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது, அல்லது வங்கிப்பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ)

(த.41.)

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்:—வலுவேற்றப்பட்ட கான்கிரீட் குழாய்க்குள் தாங்கும் வண்ணம் வலுவேற்றப்பட்டு கான்கிரீட்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காக, பொதுப் பணித்துறை அல்லது மற்ற அரசுத்துறைகளை பெரிய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், சென்னை–5 அவர்தம் அலுவலகத்தில் 2—2—1972 மாலை 2-00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்த வடிவம் .. .. மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை .. .. ரூ. 10,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. .. ரூ. 10 மற்றும் விற்பனை வரி ரூ. 0-37.
4. வேலை முடிக்கவேண்டிய காலம்.. 8 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை "III Suspense G. Remittance (iii) Other Remittances— TWAD Board Funds" என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், சென்னை-5. அவர்தம் கணக்கில் செலுத்தவேண்டும், ஒப்பந்தப் புள்ளிப் படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்குதிட்டம் சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 17—1—1972 முதல் 1—2—1972 வரை தொகை செலுத்தித் செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

தனித்தலைமைப் பொறியாளர்.
குடிநீர் வடிகால்வாரியம்.

(த.51)

ஏல விற்பனை

பொது (செய்தி மற்றும் மக்கள் தொடர்பு)த் துறையைச் சேர்ந்த எம். எஸ். என். 5637 (1965 மாடல்) ஜீப், 29–1–1972 தேதி 11-00 மணிக்கு மத்திய தொழிற் கூடம், நந்தனம், சென்னை-32 என்ற இடத்தில் பகிரங்க

ஏலம் கேட்கக் கருதுபவர்கள் மேற்படி துறையின் அரசு உதவிச் செயலாளர் அவர்களிடம் அனுமதி பெற்று அலுவலகவேலை நேரங்களில் மேற்படி வண்டியைப் பார்வையிடுவதுடன் விற்பனை நிபந்தனைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆர். நாகராஜன்,
இயக்குநர்.

(த.54)

10—1—12எ

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 25—1—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

வ. எண்.	வேலை விவரம்.	முன் வைப்புத் தொகை.
1	தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் (மைசூர் எல்லையிலிருந்து சேலம் கிருஷ்ணகிரி பகுதியில்) (1) கி.மீ. 152/8லும் (2) கி. மீ. 159/2லும் பாலங்களைப் புதுப்பித்துத் திரும்பக் கட்டுதல்.	ரூ. 3,650

ஒப்பந்தப் புள்ளிகள் 25—1—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1 இரண்டாவது மாடி குறளகக் கட்டடம் சென்னை-1, அலுவலகத்தில் 17—1—1972 முதல் 24—1—1972 முடிய விற்பனைவரியுட்பட ரூ. 51-75 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1; சென்னை-1, அதிகார எல்லைக்குட்பட்ட அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1, சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி.மு.ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த-46)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—மதுரை மாவட்டம்—உத்தமபாளையம் வட்டம்—கோம்பை—ஒரு காவல் தலைமைசேவகர், ஐந்து காவல் சேவகர் ஆகியோருக்கான இருப்பிடக் கட்டடம் அமைத்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 2—2—1972 மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி தஸ்தாவேஜுகள் 24—1—1972 முதல் 31—1—1972 வரை விற்பனைக்கு கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை—ரூ. 1,600.
வேலை முடிவுக்கெடு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி தாஸ்தாவேஜுக்கு விலையான ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ "P. W. Remittance- III O. R" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர்-பெரியகுளம் கோட்டம், பொதுப்பணித்துறை, பெரியகுளம், அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0-75 விற்பனை வரியை "XII Sales Tax (d) Miscellaneous" என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்தப்பெற்ற, சலானைத் தாக்கல் செய்து, ஒப்பந்தப் புள்ளி தஸ்தாவேஜுகள் பெற்றுக்கொள்ளலாம். சலானை தாக்கல் செய்த பிறகே ஒப்பந்தப் புள்ளி தஸ்தாவேஜுகள் வழங்கப்படும்.

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் "Deposit Call" ரசீது அல்லது மாநில அரசாங்க செக்யூரிடிகள் அல்லது ஷெட்யூல் பாங்குகளின் டிமாண்ட்டு டிராப்டுகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளின் உத்தரவாதம் ஆகிய உருவிலேயே கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்கள், மற்றும் தேசிய சேமிப்பு சர்டிபிகேட்டுகளும் கூட மார்க்கட் மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.ப.து.) மதுரை வட்டம், மதுரை-2.

(த.50)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவுபெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர்.பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 4-2-1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—சங்கரன் கோவில் புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்—அழுத்த ஏற்ற நிலையத்திற்கு நீரேற்றிகளும் அதன் சாதனங்களும் அளித்தல்—நிர்மாணித்தல்—சம்பந்தமாக.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை:—ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு:—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை:—ரூ. 15.56 (விற்பனை வரி உட்பட) (ரூபாய் பதினைந்தும் காசு ஐம்பத்தி ஆறு மட்டும்)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 15/2, பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, பாளையங்கோட்டை, நெல்லை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 31-1-1972 திங்கட்கிழமை மாலை 5 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வை பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை-2,
25-12-1971.
(த.85)

வனத் துறை

மத்திய கோவை மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காக மத்திய கோவை மாவட்ட வன அலுவலரால் 20-1-1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை போலாம்பட்டி சரகத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலை பற்றிய குறிப்புகள்:—

பாதை அமைத்தல், கீழ்க்காணும் தேர்வு செய்யப்பட்ட மரங்களை வெட்டுதல், துண்டுகளாக்குதல், செதுக்குதல், எண்ணிடல், சுமார் மூன்று பர்லாங்கு தூரம் இழுத்து வந்து பின்னர் அவற்றை இருட்டுப்பள்ளம், அலுவலகத்தருகில் உள்ள மரக்கிடங்கிற்குக் கொண்டு வந்து சேர்க்கும் வேலை. போலாம்பட்டி தேர்வு மர வெட்டுக் கப்பு எண் 1—

	மரங்கள்.	சுமார் அளவு. (கனமீட்டர்)
வேங்கை	44	72
தேக்கு	19	38
வெண் தேக்கு	16	25
தடசு	7	7
பில்லமருது	2	3
செவவாகை	2	5
சட்டி	9	10
மொத்தம் ..	99	160

ஒப்பந்தங்கள் மத்திய கோவை மாவட்ட வன அலுவலரால் அப்போது குழுமியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் பெற வேண்டுமெனில் மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை பிரிவு, கோவை என்ற முகவரிக்கு தொடர்புத் கொள்ளவும்.

எம். ஏ. அப்துல்கரீம்,
மாவட்ட வன அலுவலர், மத்தியகோவை.

(த.65)

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தூத்துக்குடிக் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தூத்துக்குடி (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களால் தூத்துக்குடிக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர் சாலைகளின் 1972—73-ஆம் ஆண்டு பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தூத்துக்குடிக்கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 28—1—1972-ஆம் நாள் பிற்பகல் 2-00 மணி வரை (அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். அன்று பிற்பகல் 2-15 மணிக்கு ஒப்பந்தங்கள், ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும், குறிப்பிட்ட நமூனுக்களும், நிபந்தனைகளும், கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடமிருந்து 17—1—1972 முதல் 27—1—1972-ஆம் தேதி முடிய எல்லா அலுவலக நேரங்களிலும் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3·12 (விற்பனைவரி உட்பட) செலுத்தி, விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தத் தேதியான 28—1—1972 அன்று எக்காரணத்தைக்கொண்டும் ஒப்பந்த நமூனுக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது.

முன்வைப்புத் தொகைக்கான சான்றுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாய் வரும் ஒப்பந்தங்களும், கோட்டப் பொறியாளருக்கு மாற்றப்படாத, அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் வரும் ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். அப்படி மாற்றப்பட்ட பத்திரங்களைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத் தலைமை எழுத்தரிடம் கொடுத்து அதற்கான ரசீதைப் பெற்று அந்த ரசீதை மட்டும் ஒப்பந்தங்களுடன் வேலையின் பெயர் விவரத்துடன் இணைக்கவேண்டும். இது தவிர முன் வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படுகின்ற வங்கி உத்தரவாதத்துடன் ரிசர்வ் வங்கியின் அங்கிகாரம் பெற்று அவ்விரண்டையும் இணைக்கப்படவேண்டும். அவ்விதம் ரிசர்வ் வங்கியின் அங்கிகாரம் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

என். சுவாமிநாதன்,
கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை,
கிராமப் பணித்துறை).

தூத்துக்குடி-2.
(த.34)

பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகர மன்ற மின்துறைக்கு 30 அடி நீளமுள்ள 50 சிமெண்ட் கான்கிரீட் கம்பங்கள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 5—2—1972 மாலை 4 மணி வரை நகரமன்ற ஆணையர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளியின் நிபந்தனைகள், விவரங்கள் வேண்டுவோர் நகரமன்ற மின் பொறியர், பொள்ளாச்சி அவர்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,

(த. 64)

அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை

மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்களையும், ஹைபோ செல்யூஷனையும் 1972-73-ஆம் ஆண்டு முழுவதும் எடுத்துக் கொள்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் வேண்டப்படுகின்றன. படிவத்தின் விலையான ரூ. 5·00ஐ 'XXIII Medical J. Miscellaneous' என்ற தலைப்பிலும், விற்பனை வரி சர்சார்ஜ் 0·20 காசுகள் "XII Sales tax—Receipt under the Sales tax Act. General Sales tax" என்ற தலைப்பிலும், அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தி அதற்கான ரசீதுகளை மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல்வருக்கு அனுப்பி, படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகளை மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல்வருக்கு முத்திரையிடப்

மாலை 2 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

முதல்வர்,
அரசினர் எர்ஸ்கின் மருத்துவ
மனை, மதுரை.

30—12—1971.
(த. 66)

மீன் துறை

தமிழ் நாட்டில் உள்ள ஏதாவதொரு பாலிடெக்னிக்கில் பயின்று எல்.எம்.இ. டிப்ளோமா பெற்றவர்களிடமிருந்து சென்னையில் உள்ள மத்திய மீன் துறை பயிற்சி நிலையத்தில் (சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபிஷரீஸ் ஆபரேடிவ்ஸ்) என்ஜின் டிரைவர் பயிற்சிக்கு அனுப்ப 24—1—1972 பிற்பகல் 3-00 மணிவரை மனுக்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சிக் காலம் 48 மாதங்கள் ஆகும். பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 135 வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். விண்ணப்பத்தாரர்களில் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மீனவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் 1—7—1972-ல் 28 வயதுக்குட்பட்டும், இதர இனத்தைச் சேர்ந்தவர்கள் 1—7—1972-ல் 25 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.

இதுகுறித்து இதர விவரங்கள் வேண்டுவோர் முகவரியிட்ட 25 காசு தபால் தலை ஒட்டிய உறையுடன் "மீன் துறை இயக்குநர், சென்னை-6" என்ற முகவரிக்கு எழுதவும்.

இயக்குநர்,
மீன் துறை.

நிருவாக அலுவலகக்
கட்டடங்கள்—
தேனாம்பட்

ஒப்பந்தப் புள்ளி

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 25–1–1972 மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக முடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	வேலையின் தன்மை. ரூ.	வைப்புத் தொகை. ரூ.
1 உடன் தணிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இடவசதி செய்ய ஓர் அறை கட்ட.	10,500	525
குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய்சேய் நல விடுதியைப் பழுது பார்க்க.	6,700	335
ஒலிமுகமதுபேட்டை தாய் சேய் நல விடுதிக் கட்டடத்தை விரிவுபடுத்த.	9,000	450
நகரமன்ற நூற்றாண்டு விழா மண்டபக் கட்டடத்தில் மின்சார ஒயரிங் செய்ய.	8,000	400
நகராட்சி அலுவலகத்தில் மின்சார ஒயரிங் செய்ய.	5,000	250
ஜவஹர்லால் நகராட்சி சந்தையின் பின்புறம் பெண்கள் மல அரைக்குப் பக்கத்தில் 10 கடைகள் கட்ட.	6,300	315
மதங்கீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள நகராட்சி பயணிகள் தங்கும் விடுதி மனையில் மேலும் இரு அறைகள் கொண்ட பயணிகள் தங்கும் விடுதி ஒன்று கட்ட.	19,500	975

த. ஆ. சிவசுப்ரமணியன்,

ஆணையர்.

ஞ்சிபுரம்,
1—1972.
. 61)

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசீய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 9–2–1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	பிரிவு.	முன்வைப்புத் தொகை. ரூ.
தே. நெ. எண் 7, சேலம்-திண்டுக்கல் சாலையில் கி. மீ. 206·75-ல் இருந்து 252·20 முடிய பாதையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	சேலம் ..	1,06,620

ஒப்பந்தப் புள்ளிகள் 9–2–1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சிறப்புக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 10–1–1972 முதல் 8–2–1972 முடிய விற்பனை வரியுட்பட 51·75 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற் குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசீய நெடுஞ்சாலை கோட்டம் சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசீய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,

மேற்பார்வைப் பொறியாளர் (நெ.).

(த. 74)

ஏலம்

பொது (செய்தி மற்றும் மக்கள் தொடர்பு)த் துறையைச் சேர்ந்த எம். எஸ். 5639 ஜீப் 24—1—1972-ஆம் தேதி 12 மணிக்கு தமிழக அரசு தலைமைச் செயலகம், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற இடத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கேட்கக் கருதுபவர்கள் மேற்படித் துறையின் அரசு உதவி செயலாளர் அவர்களிடம் அனுமதி பெற்று அலுவலக வேலை நேரங்களில் மேற்படி வண்டியை பார்வையிடுவதுடன் விற்பனை நிபந்தனைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆர். நாகராஜன்,

இயக்குநர்.

(த. 76)

ஒப்பந்தப் புள்ளி

அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை–20.

மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனைக்கு 1–4–1972-ஆம் தேதி முதல் 30–9–1972-ஆம் தேதி முடிய தேவையான மருந்து வகைகள், அறுவை சிகிச்சைக் கருவிகள், எக்ஸ்ரே மருந்துகள் ஆகியவற்றை ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல் மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனை முதல்வர் (டீன்) அவர்களால் 14–2–1972-ஆம் தேதி மாலை 2-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், விநியோகம் செய்ய வேண்டிய மருந்துகள், கருவிகளின் பட்டியல், ஒப்பந்தப் படிவங்கள் ஆகியவற்றை மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல்வர் அவர்களுக்கு, காசோலை மூலமாகவோ, அல்லது அவர்களது அலுவலகத்தில் நேரிலோ ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும் காசுகள் இருபது, (படிவத்தின் விலை ரூ. 5.00 விற்பனை வரி, சர்சார்ஜ் ரூ. 0.20) மட்டும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன் சுய முகவரியுடன் கூடிய ரூ. 3·00 மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையுடன் அனுப்பப்பட வேண்டும்.

முதல்வர்,

அரசினர் எர்ஸ்கின்
மருத்துவமனை, மதுரை.

மதுரை-20,
30—12—1971.

(த, 77)

ஏல விளம்பரம்

தருவைக்குளம் சூரன்குடி சாலையில் வைப்பார் கிராமத்தில் பக்கம் மைல் 16/5 உள்ள ஓடு பாலத்தில் 1—4—1972 முதல் 31—3—1973 வரையுள்ள காலத்திற்குச் சுங்க வரி வசூல் செய்யும் உரிமை 23—2—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிக்கு விளாத்திகுளம் தாசில்தார் அலுவலகத்தில் வைத்து கோவில்பட்டி கோட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். கட்டண விவரமும், மற்றும் ஏல நிபந்தனைகளையும் விளாத்திகுளம் தாசில்தார் அலுவலகத்திலும், கோவில்பட்டி கோட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

து. ஜெயராமன்,

கோவில்பட்டி, கோட்டாட்சித்
1—1—1972. தலைவர்,

(த. 82)

ஏல விளம்பரம்

குடிநீர் வடிகால் வாரியம்

அடியிற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான கண்டனம் செய்யப்பட்ட லாண்ட் ரோவர் ஊர்தி ஒன்று உள்ளது உள்ளபடியே 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம்நாள் (14–2–1972) அன்று கும்பகோணம் பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்டம், உதவிப் பொறியாளர் அவர்களால், 6-ஆம் இலக்கமிட்ட கல்யாணராமன்தெருவில் அமைந்துள்ள, பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்ட அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

லாண்ட் ரோவர்—ஊர்தி எண். எம். எஸ். ஓய். 1649—1953-ஆம் ஆண்டின் மாதிரி—பெட்ரோல் எஞ்சின்—ரோவர் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது.

மேற்படி ஊர்தியை அது வைக்கப்பட்டுள்ள இடத்தில் (கும்பகோணம்) அலுவலக வேலை நேரத்தில் சென்று ஆய்வு செய்யலாம். பிணைத் தொகை மற்றும் தேவைப்பட்ட விவரங்களைக் கும்பகோணம் உதவிப் பொறியாளரிடமிருந்து அறிந்து கொள்ளவும்.

மேற்பார்வைப் பொறியாளர்,

பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம், குடிநீர், வடிகால் வாரியம், எழும்பூர், சென்னை8.

(த. 84)

ஒப்பந்தப் புள்ளி

கோபிசெட்டிபாளையம் நகராட்சி

(கோவை மாவட்டம்)

கோபிசெட்டிபாளையம் நகராட்சி MDC 5942 லாரிக்குத் தேவையான சாதனங்கள் (Spare Parts) போட்டு நல்ல நிலையில் பழுது பார்த்துக் கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 20—1—1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஏனைய நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்,

கோபிசெட்டிபாளையம்
நகராட்சி.

4-1-1972.
(த. 60)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரியவகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 2–2–1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—மதுரை வடிகால் திட்டம்—வைகை வடகரை—முதல் நிலை—நீரேற்று குழாய்ப் போக்கிற்கென 700 மி. மீ. வார்ப்பிரும்பு குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை :—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை :—ரூ. 4,250 (ரூபாய் நான்காயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குறிய கால அளவு :—ஒன்பது மாதங்கள். ஒப்பந்தப் படிவங்களின் விலை:—ரூ. 10·35 (விற்பனைவரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 31–1–1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

மதுரை-2, பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்.

(த. 75)

குடிநீர் வ்டிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 4—2—1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை (நிறைவு) பகிர்வு முறைக்கென வார்ப்பிரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை: ரூ. 1,770 (ரூபாய் ஆயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்).

இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட.)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லைநகர், மெயின் ரோடு திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 2—2—1972 புதன்மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

மதுரை-2, பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்
26—12—1971. குடிநீர், வடிகால் வாரியம்.
(த. 83)

குந்தா நீர் மின் திட்டம்

புத்தம் புதிய டயர்களும் டியூபுகளும் இதர பொருட்களும்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழ்க்காணும் பொருட்கள் அவை இருக்கும் நிலையிலேயே வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட தனித்தனி விலைஒப்பந்தங்கள் (Tenders) கீழே குறிப்பிட்ட நாட்களில் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தனித்தனி உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும் முடிவுத்தேதியும் குறிப்பிட்டு மேற்பார்வைப் பொறியாளர் மின் உற்பத்தி வட்டம், நீர்மின் நிலையங்கள்—குந்தா பாலம் அஞ்சல், குந்தா, நீலகிரி என்ற அவர்களது அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

வரிசை எண்ணும் சாற்றுக் குறிப்பு எண்ணும்.		பொருட்களின் விவரம்.	கட்டுத் தொகை. ரூ.	இறுதி நாள்.
1 கே.ஜி.சி.	XXXI ..	பெரிய சைஸ் டயர்களும், டியூப்களும்.	1,500	16- 2-1972
2 கே.ஜி.சி.	XXXII ..	உபயோகமற்ற வான்கள், ஜீப்புகள்.	500	17- 2-1972
3 கே.ஜி.சி.	XXXIII ..	ஆயுள்டாங்குகள்	200	18- 2-1972
4 கே.ஜி.சி.	XXXIV ..	போக்கோ	1,000	18- 2-1972

மேற்கூறிய ஒப்பந்தச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 2 (ரூபாய் இரண்டு) வீதம் தலைமைக் கணக்கர், குந்தா நீர்மின் உற்பத்தி வட்டம், குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ, நேரிலோ செலுத்தி 25-1-1972 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெற்றுக்கொள்ளலாம்.

இத் தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர், தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய, சாற்றுக் குறிப்பு எண்ணையும், தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவருக்கு அஞ்சல் மூலம் சேராவிட்டால் மின்சார வாரியம் பொறுப்பு அல்ல.

ஒப்பந்தப் படிவங்கள் மாற்றிக் கொள்ளதக்கவை அல்ல. குறித்த காலத்திலும், தேதியிலும் வராத ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் படிவங்களில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படியேதான், மேற்கூறிய பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சாற்றுக் குறிப்பிற்கும் குறிப்பிட்ட கட்டுத் தொகையை ஒப்பந்தப் படிவங்கள் அனுப்பும் போது கண்டிப்பாக கட்டி இருக்க வேண்டும். கட்டுத் தொகையைக் கட்டாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முத்திரையிட்ட விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் மாலை 4 மணி அளவில் விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
குந்தாபாலம், நீலகிரி.

24-12-1971

(த.71)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிமிருந்து, வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளி அனுப்புகிறவரின் பெயரும் உறைமீது எழுதப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-6, சென்னை-28 அவர்களால் 28-1-1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மாலை 3-05 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம்-6, அவர்களால் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	வேலையின் சுமார் மதிப்பு.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை மற்றும் விற்பனை வரி.
குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், எல்லீஸ்புரம் நேருநகர், பிரிவில் ஐந்து அடுக்குக் குடியிருப்புக்கள் உள்ள ஒன்றில் 40 உள்ள ஒரு பிளாக்கும், ஒன்றில் 20 உள்ள ஒரு பிளாக்கும் கட்டுதல்.	ரூ 3.30 இலட்சம்.	மொத்தத் தொகை.	ரூ. 4,950	ரூ. 15.00 விலை 0.53 விற்பனை வரி 0.01 சர்சார்ஜ் 15.54

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-6 அவர்தம் அலுவலகத்தில் 20-1-1972 முதல் 27-1-1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணிவரை ஒப்பந்தப் புள்ளி விலை விற்பனை வரி செலுத்தப்பட்ட செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட, குறிப்பிடப்பட்ட பாரத்திலேயே ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக அல்லது தவறி விடுகின்ற ஒப்பந்தங்களுக்கு வாரியம் பொறுப்பாளியல்ல.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அதிகாரம் உண்டு.

ஜே. பிரமாநந்தராவ்,
மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம், எண் 6,
குடிசை மாற்று வாரியம்.

(த. 48)

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் திருமங்கலம் (கோயம்பேடு) என்கிற இடத்தில் பல அடுக்குக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 20-1-1972 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

215

வரிசை எண்.	பிரிவு எண்ணும் வேலையின் பெயரும்.	வேலையின் தோராய மதிப்பு. ரூ.	முன்வைப்புத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித் தர மாட்டாது.) ரூ.
1	III. 24. குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி8, பி9, பி10 (தரைமட்டத்திற்கு மேல்).	3,00,000	4,500	15 மற்றும் விற்பனை வரி.
2	V. 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி 14, பி15.	2,30,000	3,450	15 மற்றும் விற்பனை வரி.

ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 10-1-1972 முதல் 19-1-1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3, சென்னை-10.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த. 81)

குடிசை மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக, குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து, வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளி அனுப்புகிறவரின் பெயரும் உறையின்மீது எழுதப்பட்ட, மூடி முத்திரையிட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-6, சென்னை-28 அவர்களால் 28-1-1972 மாலை 3-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-05 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம்-6 அவர்களால் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	வேலையின் சுமார் மதிப்பு. ரூ.	ஒப்பந்த வடிவம்.	கட்டுந் தொகை. ரூ.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை; மற்றும் விற்பனைவரி ரூ.
1. செல்வராஜபுரம், பட்டினப்பாக்கத்தில், குடியிருப்பு பிளாக்குகள் (பல அடுக்கு) ஒன்றில் 30 குடியிருப்புகள் கொண்ட இரண்டு பிளாக்குகள் கட்டுதல்.	3.60 இலட்சம்.	மொத்தத் தொகை.	5,400	15·00 விலை 0.53 விற்பனை வரி 0.01 சர்சார்ஜ் 15.54
2. செல்வராஜபுரம், பட்டினப்பாக்கத்தில், குடியிருப்பு பிளாக்குகள் (பல அடுக்கு) ஒன்றில் 12 குடியிருப்புகள் கொண்ட 3 பிளாக்குகள் கட்டுதல்.	2.16 இலட்சம்.	மொத்தத் தொகை.	3,240	15·00 விலை 0.53 விற்பனைவரி 0. 01 சர்சார்ஜ் 15.54

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம் கோட்டம்-6 அவர்தம் அலுவலகத்தில் 20-1-1972 முதல் 27-1-1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளி விலை, விற்பனை வரி செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம். வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட பாரத்திலேயே, ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக அல்லது தவறி விடுகின்ற ஒப்பந்தங்களுக்கு வாரியம் பொறுப்பாளியல்ல.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அதிகாரம் உண்டு.

ஜே. பிரமாநந்த ராவ்,
மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம் எண் 6,
குடிசை மாற்று வாரியம்.

(த. 47)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 25—2—1972 மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	ஒப்பந்த வகை.	பிணைப்பணம் (செலுத்துச் சீட்டுமூலம் பெற்றுக் கொள்ளப் படும்).	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.	விற்பனை வரி.	கால அளவு.
		ரூ.	ரூ.	ரூ.	
1. நாகப்பட்டினத்தில் மாவட்ட பதிவாளருக்கு அலுவலகங்கள் கட்டுதல் பற்றி.	மொத்தத் தொகை.	4,000	30. (ரூபாய் முப்பது மட்டும்) அரசினர் வங்கியில் ''பொ. ப. து.'' செலுத்துத் தொகை iii மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில், நிருவாகப் பொறியாளர், வெண்ணாறு கோட்டம், தஞ்சை அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்.	1.05 (ரூபாய் ஒன்று, காசு ஐந்து மட்டும்) அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் ''XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்தல் வேண்டும்.	10 மாதங்கள்.
2. தஞ்சாவூரில் கல்லூரி மாணவர்களுக்கு அரசினர் விடுதி கட்டுதல் பற்றி.	மொத்தத் தொகை.	4,000	ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) அரசினர் வங்கியில் ''பொ. ப. து.'' செலுத்துத் தொகை iii மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கல்லணைக் கால்வாய் கோட்டம், தஞ்சை.	1.05 (ரூபாய் ஒன்று, காசு ஐந்து மட்டும்) அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் ''XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்தல் வேண்டும்.	10 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் 9—2—1972.

28—12—1971

(த. 69)

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

''தேசிய நெடுஞ்சாலை வேலைகள்'' (மதுரை வட்டம்.)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 29–1–1972 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் (அலுவலகக் கடியாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-45 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை ரூ.	ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம்.
1 மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை-7, கி.மீ. 157—170சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	28,900	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2.
2 சேலம்-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை கி.மீ. 278·6—345·2 சாலையில் உள்ள வளைவுகளைச் சீராக்குதல்.	44,650	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சி கோட்டம்-2, திருச்சி-1.
3 சேலம்-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை-7, கி.மீ. 355—375 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	48,000	டிஷ

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2, மேலும் கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சிக்கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 21–1–1972 முதல் 28–1–1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயப் பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (தேசிய நெடுஞ்சாலை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இதுதவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசீயத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கியாரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு இரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசிது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.
(தேசீய நெடுஞ்சாலை)

மதுரை-2.
(த. 80)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்—மத்தியக் கோட்டம்

கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின்மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—1972 மாலை 3 மணிக்கு முன்பே கீழே கையொப்பமிட்டவருக்குச் சேருமாறு அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	சுமார் மதிப்பு ரூ.	ஒப்பந்த வடிவம் கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை (திருப்பித்தரப் படமாட்டாது).
1. பிளவு 'டி' யில், டி.டி. 124ஏ/70-ன்படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகள் கட்டுதல்.	2,22,922	மொத்தத் தொகை ரூ. 3,345.	15-ம் விற்பனை வரி.
2. பிளவு 'யி' யில் டி.டி. 124ஏ/70-ன்படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகள் கட்டுதல்.	2,22,922	மொத்தத் தொகை ரூ. 3,345.	15-ம் விற்பனை வரி.
3. பிரிவு 'எப்'-ல், டி.டி. 1244/70-ன்படி 2 எம்.ஐ.ஜி. பிளாக்குகள் கட்டுதல்.	1,48,615	மொத்தத் தொகை ரூ. 2,230.	10-ம் விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்றும் இதர விவரங்கள், நிருவாகப் பொறியாளர் (மத்தியக் கோட்டம்), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்கள் அலுவலகத்தில் 5—1—1972 முதல் எல்லா அலுவல் நாட்களிலும், காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரை, ஒப்பந்தப் பத்திரத்தின் விலை, விற்பனை வரியுடன் செலுத்திய செல்லுச்சிட்டைக் கொடுத்துப் பெறலாம்.

36, அண்ணாசாலை,
சென்னை-35.

மே. ஜார்ஜ்,
நிருவாகப் பொறியாளர் (மத்தியக் கோட்டம்).

(த. 79)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித்துறை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் 9—2—1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்: நீலகிரி மாவட்டம், குளிகல் அரசு உயர்நிலைப்பள்ளிக்குத் துணைக் கட்டடங்கள் கட்டுதல்.

(அ) ஒப்பந்த வடிவம் .. .. மொத்தத் தொகை.
(ஆ) கட்டுத் தொகை .. .. ரூ. 3,000
(இ) ஒப்பந்தப்பத்திரங்கள் விலை .. ரூ. 10·35
(ஈ) வேலை முடிக்க வேண்டிய காலம். 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், கோயம்புத்தூர் கோட்டம், கோயம்புத்தூர்—அவர்களிடத்தில் 20—1—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் மேலே குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் (தொகை திருப்பித்தரப்படமாட்டாது).

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப்பொறியாளர், பொதுப்பணித்துறை,
கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர்.

(த. 73)

ஒப்பந்தப் புள்ளி

விவசாயத் துறை

மதுரை, டிராக்டர் பணிக்கூடத்திற்கு, காற்றழுத்தப் பொறி (Carrage Air Compressor) ஒன்று வழங்குவதற்குக் குறிப்பிட்டுள்ள பாரத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தமிழ்நாடு அரசுக்காகவும், அதன் சார்பாகவும், 5—2—1972 மாலை 5 மணிக்கு முன்னர் கீழே கையொப்பமிட்ட அதிகாரிக்கு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் வழங்குவதற்கு, பத்திரத்தின் விலை ரூ. 0-50 காசு விற்பனை வரி ரூ. 0-03 காசு மணியார்டர் மூலம் பெற்றுக்கொண்டு வழங்கப்படும்.

5—2—1972 மாலை 5 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பெறப்பட்ட, முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 7—2—1972 காலை 11 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், டிராக்டர் பணிக்கூட அலுவலகம், விவசாயக் கல்லூரி அஞ்சல், மதுரையில், பொது மேற்பார்வையாளர், டிராக்டர் பணிக்கூடம், மதுரை அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் திறக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மெசின் மதிப்பில் 10 சதம் தொகையைக் காப்புத் தொகையாகக் கட்ட வேண்டும்.

பொது மேற்பார்வையாளர், டிராக்டர் பணிக்கூடம், மதுரை, அவர்களுக்கு, காரணம் கூறாமல் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமை உண்டு.

ஆர். அழகர்சாமி,
பொது மேற்பார்வையாளர்'

(த.72)

ஒப்பந்தப் புள்ளி

தேனி-அல்லிநகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்)

இந்நகராட்சியின் பொதுச் சுகாதாரப் பிரிவின் உபயோகத்திற்கு 450 லிட்டர் பினையல் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 28—1—1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சித் தனி அலுவலர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். வந்துள்ள ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஏனைய விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

சா. முகம்மது இப்ராஹிம்,
பி. ஏ.
தனி அலுவலர்.

(த. 59)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணிததுறை

சாத்தூர்க் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பிலும் அவரது கட்டளை ஆணையின்படியும் மேற்கு இராமநாதபுரம் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர், சாத்தூர் அவர்களால் 1972–73-ஆம் ஆண்டு வருடாந்திர அரசு சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சாத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 9–2–1972-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடியாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அல்லது ஒப்பந்ததாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும் குறிப்பிட்ட நமூனாக்களும் நிபந்தனைகளும் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் 24–1–1972 முதல் 8–2–1972 வரை (விடுமுறை நாட்கள் தவிர) ஒன்று ரூ. 3·11 வீதம் (விற்பனை வரி உட்பட) செலுத்தி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தை முன்னிட்டும் 8–2–1972-க்குப் பின்னால் விற்பனை செய்யப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகளில் உறையின் மேல் ஒப்பந்ததாரரின் முழு முகவரியுடன் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்கு இராமநாதபுரம் கோட்டம் (இருப்பு) சாத்தூர் என்று முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

வேலைகளின் விவரங்களையும் அவ்வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகையும் இவ்வலுவலகத்திலிருந்து பின்னர் அறிவிக்கப்படும். முன் வைப்புத் தொகை இக்கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட ஏதாவது ஒரு அரசினர் கருவூலத்தில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை ஒப்பந்தப் புள்ளிகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கோட்டப் பொறியாளர்.
(நெ.கி.ப.)சாத்தூர்க் கோட்டம்.

(த 63)

ஒப்பந்தப் புள்ளி

திருப்பூர் நகராட்சி நடுவர் நியமனம்

இந்த நகராட்சியில் நகரமைப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருப்பதால் நடுவர் பணியாளர் (Arbitrator) தேவைப்படுகிறது. ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள், கோட்டாட்சித் தலைவராகப் பணியாற்றியவர்கள் ஆகியோர் நியமனத்திற்குத் தகுதி வாய்ந்தவர்கள். செய்பணிக்கு ஊதியம் மொத்தத் தொகையாக வழங்கப்படும்.

21-1-1972-க்கு முன்னர், கீழே கையொப்பமிட்டவருக்கு மனுக்கள் அனுப்ப வேண்டும்.

நிர்வாகப் பொறுப்பாளர்

(த.62)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

பொதுப்பணி பணிக்கூடங்கள்
மற்றும் ஸ்டோர்கள்.

டீசல் எண்ணெயினால் ஓடக்கூடிய கான்கிரீட் மிக்சர் சாய்க்கும் டைப் 10/7 கொட்டக்கூடிய CAP-10 Nos. வழங்குவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால், 28-1-1972 மாலை 1-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தேவையான ஒப்பந்தப் புள்ளி விவரம் மற்றும் நிபந்தனைகள் ஆகியவைகளை கீழே கையொப்பமிட்டவரின் நேர்முக உதவியாளரிடமிருந்து கட்டணமின்றிப் பெறலாம்.

எஸ். சச்சிதானந்தம்,
பொது மேற்பார்வையாளர்,
பொதுப்பணிக் கூடங்கள்,
மற்றும் ஸ்டோர்கள், சென்னை-1.

(த.42)

வேலைவாய்ப்பு

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்

சிலுவத்தூர் கிராமிய மருந்தகம்

சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிலுவத்தூர் கிராமிய மருத்துவ மனையில் கிராமிய மருத்துவராகப் பணியாற்ற விருப்பமுள்ள "ஏ" கிளாஸ் பிராக்டீஷனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விதிகளின்படி உரிய அரசினர் மான்யம் ரூ. 100-ம், அத்துடன் 50 சதவிகித ஊராட்சி ஒன்றிய மான்யம் ரூ. 50-ம் ஆக ரூ. 150 வழங்கப்படும்.

எல். வி. சுகதேவ்,
ஆணையர்.

சாணார்பட்டி,
20-12-1971.

(த.86)

ஒப்பந்தப் புள்ளி

அரசு மருத்துவ நிறுவனம். சென்னை மாநகர். காச நோய் சேனடோரியம். தாம்பரம் ஆகியவற்றில் 1972—73-க்கு பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள். சேதமான ஹைபோசொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுதல்.

அரசு மருத்துவ நிறுவனம், சென்னை மாநகரம், காசநோய் சேனடோரியம், தாம்பரம் ஆகியவற்றில், 1972 ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் தேதியிலிருந்து 1973 மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோ சொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலர், கல்லூரி கல்வித் துறை இயக்குநர் அவர்தம் அலுவலகத்தில், 1972 பிப்ரவரி 26-ஆம் தேதி மாலை 2-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதி, தேவையான பொருட்களின் அட்டவணை, ஒப்பந்தப் புள்ளிப்பத்திரம் ஆகியவற்றைக் கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர், சென்னை-5 அவர்தம் அலுவலகத்திற்கு மனுச்செய்து பெறலாம். ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 5-ம் விற்பனை வரிக்குத் தனியாக 3½ சத வீதமும், ரிசர்வ்பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலத்திலோ, தமிழ்நாடு அரசின் கணக்கில் முறையே,

"XXIII Medical J. Miscellaneous—Director of Medical Education."

"XII. Sales Tax b. Receipts under the State Sales Tax Act—General Sales Tax."

என்ற தலைப்பின்கீழ் செலுத்த வேண்டும். ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் செலுத்தியிருந்தால், உண்மை சலான் கொடுக்கப்பட வேண்டும். கருவூலத்தில் செலுத்தியிருந்தால், செலான் நம்பரும், தேதியும், செலுத்திய தொகையும், ஒப்பந்ததாரரின் பெயரும், தொகை செலுத்தப்பட்ட வங்கி அல்லது கருவூலத்தின் பெயரும், மனுவில் குறிப்பிட்டுப் பெறலாம். எச்சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும், 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட, ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000க்கு மேற்பட்டால் வருமானவரி பாக்கியில்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும், ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனைவரி கட்டிமுடித்த அத்தாட்சியும், தேசீய இனச் சான்றும், அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் அளித்த அத்தாட்சியின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் வைத்து அனுப்ப வேண்டும்.

ஆர். பசுபதி,
தலைமைக் கணக்கு அலுவலர்,
மருத்துவக் கல்வித்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5.

(த.78)

வேலைவாய்ப்பு பயிற்சித்துறை
சென்னை-5.

1961 வேலை வாய்ப்புச் சட்டத்தின் கீழ் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சி.

வேலை கற்பவர் சட்டம் 1961-ன் ஆதிக்க வரம்பின்கீழ் இன்ஜினியரிங், கெமிக்கல்ஸ், டெக்ஸ்டைல்ஸ், பிரிண்டிங், கேட்டரிங் ஆகிய 195 வகைத் தொழிற்சாலைகளும், 56 தொழில்களும் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக இதுவரை நியமிக்கப்பட்டுள்ளன. வேலை கற்றுக்கொடுக்கும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வசதியுள்ள நிறுவனங்கள் வேலை கற்பவர் சட்டம், பிரிவு 8 (3)இன் படி வேலை கற்றுக் கொடுப்பது பற்றி, மாநில ஆலோசகர் குறிப்பிடும் எண்ணிக்கையளவில் வேலை கற்பவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சிபெற வேண்டிய கால அளவு பெரும்பாலான தொழிலில் மூன்று ஆண்டுகளாக உள்ளது. வேலை கற்றுக் கொள்ளும் பயிற்சிக் காலத்தில், வேலை கற்பவர்களுக்கு ' வேலை கற்றுக் கொடுக்கும் விதிகளில் குறிப்பிட்டுள்ள குறைந்த அளவுத் தொகைக்குக் குறையாமல் உதவித் தொகை வழங்கப்படும். தொழிற்பயிற்சி நிறுவனங்களிலிருந்து, தேசீயத் தொழில் சான்றிதழ் தேர்வு எழுதி, வெற்றி பெற்றவர்களைப் பொறுத்த வரையில், வேலை கற்றுக்கொள்ளும்பயிற்சிக் காலத்தில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கால அளவை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். குறைந்த பட்சம் கல்வித் தகுதி மெட்ரிக்குலேசன் தேர்வுக்கு 2 வகுப்புகள் குறைவாக அல்லது அதற்குச் சமமாகத் தேர்வு பெற்றிருக்க வேண்டும். குறைந்த அளவு வயது 14 ஆக இருக்க வேண்டும் ; ஆனால் வயதிற்கு உயர்ந்தபட்ச வரம்பு இல்லை ; வேலை கற்றுக் கொடுக்கும் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள உடல்தரமும் பெற்றிருக்க வேண்டும்.

அடுத்த பயிற்சி பிப்ரவரி மார்ச்சு 1972-ல் சேர்த்துக் கொள்ளப்படும். தேசீயச் சான்றிதழ் தகுதி பெற்றுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முன்னாள் பயிற்சியாளர்களும் தேவையான தகுதி பெற்றுள்ள மற்றவர்களும், தங்கள் வகைக்கேற்ப மாவட்ட வேலை வாய்ப்பு தேடித்தரும் அலுவலர் அவர்களையோ அல்லது தொழிற்பயிற்சி நிறுவனங்களின் முதல்வரையோ அணுக வேண்டுமென்று இதன் மூலம் அறிவுரை கூறப்படுகிறது. இவ்வாறு செய்தால் அவர்கள் வேலை காலியுள்ள அல்லது வேலை காலியாகும் நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு வேலை கற்றுக் கொள்ள விரும்புகின்றவர்களை வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக அனுப்பி வைக்க ஆவன செய்வார்கள்.

இயக்குநர்,
மற்றும் வேலை கற்றுக்கொடுப்பது
பற்றிய மாநில ஆலோசகர்,
வேலைவாய்ப்புப் பயிற்சி.

(த.70)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், ஆசினர் தோட்டம், சென்னை-2.

வண்ணமிகு படைப்புகள்
கோ-ஆப்டெக்ஸ்

வர்ண மய உலகம். அதுவே
கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள். பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும்.
குர்தாக்கள், பெல் பாட்டம்
கள், லுங்கிகள், சேலைகள்
உங்கள் உள்ளம் எங்கும்
சிருஷ்டிகள். கோ-ஆப்டெக்ஸ்
படைப்புகள்.

காலப் போக்குக்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
[illegible] சென்னை-8.

வெற்றிமிகு புத்தாண்டின் விளக்கொளி பரவட்டும்!

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

உங்கள் புத்தாண்டை மேலும் ஒளிமயமாக்குங்கள்.

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ. 50,000
10 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ. 50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ. 50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ. 1,00,000

மொத்தப் பரிசுகள் 4264,

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 14,00,000

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-1-1972

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை
268 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.
4 [illegible]



இதோ இன்னொரு சாதனை!

தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!

நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதிய பாதை!"

தமிழ் நாட்டில் உருவாகிறது!

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில் எடுத்துக் காட்டாக விளங்கும் சிற்றூர்!

குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!

பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்!

குடும்பநலத்துறை



72

தமிழரசு

மலர் 2] 1-2-1972 [இதழ் 15

நினைவு (கவிதை)

தியாகத்தை மறவாது தமிழக அரசு

இதோ உலகப் பெருஞ் சாதனை

அனுபவம் புதுமை

திராட்சையும் திருமணமும்

எழுநிலை மாடம்

ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)

ஆராய்ச்சிப் பணியில் அரசின் சாதனை

வெண்பாப் போட்டி

ஆளுநர் உரை

தமிழாய்ந்த உள்ளம்
பெறுகின்ற பெருமை

முகப்பில்

சென்னை நகரில் நடைபெற்ற
குடியரசுநாள் அணிவகுப்பும்
சென்னை நகரின் தோற்றமும்

நினைவில்

கனவுலகில் சஞ்சரிக்கக் கருத்துக் கொண்டு
கண்ணயர்ந்தேன் ; ஒருகணந்தான் ! எனினும் துன்ப
நினைவலைகள் தொடர்ந்துவந்து தாக்கக் கண்டேன் !
நீர்சொரியும் விழிகளொரு கோடி ; நீங்கா
மனவுளைச்சல் ; மாளாத சோக வெள்ளம் ;
வங்கத்துக் கடலோடு போட்டி போடும்
சனவரிசை ஊர்வலத்தில் மிதந்து சென்று
சந்தனத்துப் பேழையிலே நெடிய தூக்கம் !

நீயில்லை எனநினைக்க இந்தப் பாரும்
நெஞ்சுக்குத் துணிவில்லை ; அறிவை யூட்டுந்
தாயில்லை ;அறுசுவையும் ததும்பு கின்ற
சத்துணவு தருவார்யார் ? ஆத ரிக்கச்
சேயில்லை எனும்நிலையை வைக்க வில்லை !
சிந்தையெலாம் நிறையப், பக்கு வத்தில்
காயில்லை கனியேதான் எனத்த குந்த
கண்மணியாம் எச்சத்தைத் தந்தே போனாய்!



அவர்பேச்சில் நின்குழைவைக் கேட்டும், என்றும்
அவர்செயலில் நின்நிதானங் கண்டும், ஏழை
அவர்மூச்சில் காற்குதல் உணர்ந்தும், நாளும்
அடித்தளத்தார் ஏற்றமுறும் படிகள் ஆகி
எவர்எச்சும் தடைபடுத்தா உறுதி வாய்ந்த
எஃகுளமும் பகைவாளும் பார்த்துப் பார்த்தும்-
இவர்பாய்ச்சல் வேகத்தின் முன்னே எந்த
இடையூறும் பொடியாகும் எனத்து ணிந்தோம் !

வழிகாட்டுந் தமிழகத்தில் வளர்ச்சித் திட்டம்
வகைவகையாய் ஏராளம் ! அனைத்து நாடும்
ஒழியாத பலதொல்லை தவிர்ப்ப தற்கே
உறுதுணையாய் நம்கொள்கை ஒப்பு கின்றார்.
அழியாத பேரறிவின் சின்ன மாகி
அவ்வழியில் நடைபோடும் அரசைக் கண்டாய் !
பழிநீட்டும் காலத்தில் உனையே எண்ணிப்
பகைவிலக்கி அறவழியில் வாழ்வோம் அண்ணா !

கவிஞர் ஆனந்தம்



சட்டமன்றக் கூட்டவையில் மேதகு ஆளுநர் கே.கே.ஷா பேருரை

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே!

சட்ட மன்றத்தின் இக்கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். உங்கள் அனைவரையும் கூட்டவையில் ஒருசேரக் காணும் வாய்ப்பு இப்போதுதான் எனக்கு முதன் முதலாகக் கிடைத்துள்ளது. நான் உங்களை உளமார வரவேற்பதுடன், தமிழ்நாட்டு மக்களுக்குப் பணி புரிவதில் உங்களுக்கு உறுதுணையாய் இருப்பேன் என உறுதி கூறுகிறேன்.

ஜனநாயகக் கொள்கையைக் கட்டிக் காப்போம் என்று நாம் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளோம். நமது முப்படையினரின் வீர தீரத்தாலும், நமது தலைமை அமைச்சர் அவர்களின் ஒப்புவமையற்ற, பதட்டமடையாத, தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது.

நம்நாட்டின் மீது மாற்ருன் படையெடுத்து வந்தபோது, மக்களனைவரும் என்றும் காணுத வகையில் ஒற்றுமையுடன் ஒரணியாகத் திரண்டிருந்தது வரலாற்றின் போக்கையே மாற்றியுள்ளது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நாட்டு வளத்தைப் பெருக்குவதிலும் இதே ஒற்றுமை பெரும்பங்கு வகிக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அமைதிக் காலப் பிரச்சினைகள் மேலும் முக்கியமானவை. இதே ஒற்றுமை உணர்வுடன் நாம் இப்பிரச்சினைகளை விரைந்து தீர்த்தாக வேண்டும். வறுமையின் மீது நாம் தொடுக்கும் இந்தப் போரில், இந்த அரசும் இந்திய அரசும் அதே ஈடுபாட்டுடனும், செயல் பொறுப்பு உறுதியுடனும் செயல்படும் என நான் உறுதியாகக் கருதுகிறேன். இந்த அரசின் நோக்கமே ஏழை எளியவரான பாமர மக்களின் விருப்பம் எல்லாம் நிறைவேற வேண்டும் என்பதுதான். பொதுமக்களின் விருப்பங்களைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணுடியாக இருக்கவே இந்த அரசு விரும்புகிறது. பொதுவாகப் பாமர மக்களின், குறிப்பாக இன்னலுறும் ஏழை எளியவரின் வாழ்க்கையில் ஏற்றம் ஏற்படுவதற்கு, அவல வாழ்வு ஆனந்த வாழ்வு ஆவதற்குத் தன்னுல் ஆனதையெல்லாம் செய்ய இந்த அரசு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

கடந்து முடிந்த ஆண்டில், இம்மாநிலம் வேளாண்மைத் துறையில் பொதுவாக நல்ல வளர்ச்சியைக் கண்டது. சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ள நீலகிரி ஆகியவற்றின் ஒரு சி பகுதிகள் நீங்கலாக, தெ மேற்குப் பருவமழைக் காலத்தில் மொத்தத்தில் இயல்பான அளவுக்கு மழை பெய்தது. வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில், பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலுமே போதுமான அளவுக்கு மழை பெய்யவில்லை. எனினும், உரிய காலத்திற்கு முன்பே மழை பெய்ததாலும், சில மாவட்டங்களில் பின்னர் பெய்த மழை பரவலாக இருந்ததாலும், குறிப்பாக நமது புன்செய் நிலப் பகுதிகள் பயனுற்றன.

நமது உணவு தானிய உற்பத்தி 73 இலட்சம் டன் என்ற குறிக்கோள் அளவை எய்தும் என்று நாம் மதிப்பிட்டுள்ளோம். அதாவது, சென்ற ஆண்டு உணவு தானிய உற்பத்தி அளவாக 70·3 இலட்சம் டன்னைவிட 3·84 சதவீதம் உயர்ந்திருக்கும் என நாம் மதிப்பிட்டுள்ளோம். 1968—69-ல் 50·6 இலட்சம் விளைந்ததை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உற்பத்தி இப்போது எந்த அளவு உயர்ந்துள்ளது என்பது தெரியவரும்.

1970—71-ல் மிகு பயன் தரும் நெல்வகையின் கீழ் ஏறத்தாழ 44·9[illegible] இலட்சம் ஏக்கர் கொண்டுவரப்பட்டது. இப்பரப்பளவு நெல் பயிரிடப்படும் பரப்பளவில் கிட்டத் தட்ட மூன்றில் இரண்டு பகுதியைக் குறிக்கிறது. நெற்பயிர் விளைவிக்கப்படும் 50 இலட்சம் ஏக்கரில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது 1971—72-ல் நமது குறிக்கோள் அளவாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதை மேம்படுத்திக் குறுகிய காலக் கடன் வசதிகளையும், நீண்ட காலக் கடன் வசதிகளையும் பெருக்கவும் நாம் முயன்றுள்ளோம். குறுகிய காலக் கடன் வசதிகளைப் பொறுத்த வரையில் 1966—67-ல் ரூ. 31·41 கோடி என்றிருந்த அளவை 1971—72-ல் ரூ. 55·00 கோடியாக உயர்த்தியுள்ளோம். நீண்ட காலக் கடன் வசதிகளைப் பொறுத்த வரையில் 1966—67-ல் ரூ. 2·73 கோடி என்றிருந்த அளவை 1971—72-ல் ரூ.21·00 கோடியாக உயர்த்தி உள்ளோம். கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துயிரும், புதுப்பொலிவும் அளிக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருத்தி விளைச்சலில் தன்னிறைவு பெறும் குறிக்கோளையொட்டி 2·50 இலட்சம் ஏக்கரில் நீண்டஇழைப் பருத்திவகைகளைப் பயிரிடுவதற்கான மும்முரத் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். குடுமியாமலை வேளாண்மைப் பண்ணையை மேம்படுத்தியதும், கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை நிறுவியதும், வேளாண்மைக் கல்வி வளர்ச்சித் தொடர்பாக நாம்மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகளாகும்.

நமது நாட்டுப்புறப் பகுதிகளில் தற்கால வசதிகளைச் செய்து கொடுப்பதில் கிராம மின் வசதித் திட்டம் முக்கியமான பங்கு வகிக்கிறது, என்பதை அனைவரும் அறிவர். நிதிப் பற்ருக்குறையும், மூலப் பொருள் தட்டுப் பாடும் நிலவிய போதும், மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களில் மொத்த எண்ணிக்கையை நாம் உயர்த்தியுள்ளோம். அதாவது, 1966—67 முடிவில் மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை

தமிழரசு 227

16—2—1972

இதழ்

இராமநாதபுர

மாவட்டச்

செய்தித் தொகுப்பாக

வெளிவருகிறது

25,000 ஆக இருந்ததை 1971 டிசம்பர் முடிவில் 48,137 ஆக உயர்த்தியுள்ளோம். கிராம மின் வசதித் திட்டம் செயல்படுத்தப்படும் தற்போதைய வேகம் தொடர்ந்து பின்பற்றப்பட்டால் 1972—73 முடிவிற்குள் 58,800 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிக்கப்படும் என்று நாம் நம்புகிருேம். 1971-ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை 63,416 ஆகும். இம்மாநிலத்தில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை, 1966—67-ல் 2·57 லட்சமாக இருந்தது. 1971 முடிவில் 5·74 லட்சமாக உயரும். 1972 முடிவிற்குள் அந்த எண்ணிக்கை 6·34 லட்சமாகிவிடும்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பெருகுவதன் முக்கியத்துவத்தை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தூத்துக்குடியில் உரத் தயாரிப்புத் திட்டத்திற்கென நாப்தாவை மூலப் பொருளாகப் பயன்படுத்தலாம் என்று அனுமதித்திருப்பது நமது தொழில் வளர்ச்சியில் முக்கியமானதொரு மைல் கல் ஆகும். தூத்துக்குடி உரத் திட்டத்திற்கு ரூ. 71 கோடி செலவாகும். 3,52,000மெட்ரிக் டன் அம்மோனியாவையும் 5,12,000 மெட்ரிக் டன் யூரியா உரத்தையும் அது உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. சோடா-ஆஷ்-அம்மோனியம் குளோரைடு திட்டமும் இதனுல் உருவாகும். இத் திட்டத்திற்குத் தோராயமாக ரூ. 10 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், சதர்ன் பெட்ரோ-கெமிகல் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் இவற்றின் மூலம் இத் தொழிற்சாலை நிறுவப்படும்.

தூத்துக்குடியில் நிறைவேற்றப்பட்டு வரும் மற்ெருரு திட்டம் கனநீர் திட்டமாகும்.

சேலம் உருக்காலையைப் பொறுத்த மட்டில், திட்ட ஆலோசகர்கள் தங்கள் அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளனர் என்ருலும் இத் திட்டம் பற்றி நடவடிக்கை தொடர்ந்து மெத்தனமாகவே உள்ளது என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். இத்திட்டத்தைச் செயல் படுத்துவதில் இந்திய அரசு உயர் மட்டத்தில் மிகுந்த அக்கறை உள்ளதென்பது எனக்குத் தெரியும். எல்லாக் கட்டங்களின் விரைவான நடவடிக்கைகள் எடுப்பதன் வாயிலாக இந்த அக்கறை செயல்வடிவம் பெறும் என்று நம்புகிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இடையருத முயற்சியினுல் கடந்த சில மாதங்களாக அனுமதிக் கடிதங்கள் (Letters of Intent) பல நமக்கு வந்த வண்ணமுள்ளன. இவ் வகையில் தொழில் வளர்ச்சிக்கான மத்திய அமைச்சர் செய்த உதவிக்கும் பெரிதும் நன்றியுடையோம். நமக்கு அண்மையில் கிடைத்த அனுமதிக் கடிதம் — 2100 டன் நைலான் நூலிழை உற்பத்தி பற்றியதாகும். இதனை அரசுத் துறையின் கீழ்அமைக்க எண்ணியுள்ளோம். அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பெற்ற பிற இனங்கள் பின்வருமாறு:—

மைய அரசிடமிருந்து நாம்
ஒவ்வொரு ஆண்டும்
பெறுகின்ற தொகையைவிடத்
திருப்பிக்கொடுக்கும் தொகை
அதிகமாயிருப்பதே தமிழ்நாட்டினை
எதிர்நோக்கியுள்ள நிதி
[illegible] காரணம்!

நாட்டின் ஆக்கப்பணிகளில் எழுச்சியுடன் ஈடுபடுவோம்

B.C.T. பொடி, போராக்ஸ், போரிக் ஆஸிட், கால்சியம் கார்பைடு, பொட்டாஷியம் க்ளோரேட், சிகரெட்டுகள், சிகரெட்டுகள் வைக்கப்படும் மென் தாள். மொத்தமாக இந்த அனுமதிக் கடிதங்கள் குறித்த மொத்த முதலீடு ரூ. 21·35 கோடியாகும். கூட்டுத் துறையில் இவற்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கெனவே நாம் அறிவித்துள்ளபடி தொழில் துறையில் நமது கொள்கை நடைமுறைக்கேற்றதும் பயன் நாட்டமுடையதும் ஆகும்.

அரசு நிர்வாகத்தின்கீழ் மீண்டும் தொடங்கப்பட்டுள்ள '' ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் '', இப்போது முன்னைவிடச் செவ்வையாக நடைபெறுகிறது என்பதையும் இந்த நிறுவனத்திடமிருந்து மற்றவர் கோரும் இயந்திரத் தேவைப் பட்டியல்கள் பெருகி வருகின்றன என்பதையும் எடுத்தியம்புவதில் நான் இறும்பூது எய்துகிறேன்.

அரசு மேற்கொண்ட டெக்ஸ்டூல்ஸ் லிமிடெட் நிறுவனமும் மீண்டும் நல்ல வகையில் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் திறம்பட நடைபெறுகிறது. இதற்கு 1971–72-ல் ரூ. 5·2 லட்சம் ஆதாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பஞ்சாலைகளை எடுத்து நடத்துவதற்கு இந்திய அரசிடம் இசைவு கோரியுள்ள ஆறு பஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில், அவர்களிடமிருந்து இசைவு இன்னும் நமக்கு வரவில்லை. கடந்த ஆண்டில் அரசு ஏற்படுத்திய சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தவணைக் கொள்முதல் வசதிகள் அளிப்பதுடன், இயந்திரக் கருவிகள் தயாரிப்பதற்கு மூலப்பொருள்கள் வழங்குவதையும், தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதையும் கொள்கையாகப் பின்பற்றி வருகிறது. தமிழ்நாடு அரசினர் தொழிலாக்க முயற்சிக் கழகமும் (SIPCOT) பணியாற்றத் தொடங்கியுள்ளது.

இம்மாநிலம் தொழில்துறையில் அமைதியும் நல்லுறவும் நிலை நிறுத்தும் பாதையில் விரைந்து முன்னேறுமென நான் நம்புகிறேன். தொழில் துறையில் தொழிற்சங்கங்கள் போட்டி மனப்பான்மையைத் தவிர்ப்பதன் அவசியம் குறித்து முதலமைச்சர் கூறிய கருத்துக்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கமே இருக்க வேண்டும் என்பதே இவ்வரசின் கொள்கையெனக் கூறிக்கொள்ள விழைகிறேன். தொழிற்சங்கங்களுக்குத் தொழிலாளர்களே தலைமை தாங்கவேண்டும். தொழில் பிணக்குகளைத் தொழிலதிபர்களும், தொழிற்சங்கங்களும் ஒருவருக்கொருவர் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமேயன்றி, சண்டை சச்சரவு மூலம் தீர்த்துக்கொள்வது சரியான முறையாகாது.

கடந்து முடிந்த ஆண்டில், வேலையில்லாப் பிரச்சினையை அரசு பல கோணங்களில் அணுகிப் பார்த்தது. இதில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவது இளைஞர் அணி அமைக்கப்பட்டதாகும். இந்தச் செயல் திட்டம், நமது வினைசெயல் வளத்துக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாக, உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் பல்லோராலும் போற்றி வரவேற்கப்பட்டுள்ளது.

இளைஞர் அணியில் ஏறத்தாழ 2,000 தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு நன்கு பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர். எனக்கு முதன் முதலாக வந்துகொண்டிருக்கும் தகவல்களிலிருந்து, மாநிலத்தின் சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் பணி ஆற்ற வல்லவர்கள் என இவர்கள் மெய்ப்பித்து வருகின்றனர் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்படுகிறது. தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றோருக்கு ரூ. 1,000 தொழில் கடனுதவி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

படித்தவர்களிடையே நிலவி வரும் வேலையின்மையைப் போக்கும் பொருட்டு, தொழில் முனைவோர்கள் புதிய தொழில்களைத் தொடங்க, இந்திய அரசின் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் இவ்வரசு கருதுகிறது. இதற்கென ரூ. 48 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசனங்களுக்கும் பின் தங்கிய வகுப்பினருக்கும் பல வசதிகளை அரசு அளித்துள்ளது என்பதை இந்த அவை அறியும். அரிசன நலனுக்கான நிதி ஒதுக்கம் பெருகியுள்ளது. இத் திட்டங்களுக்கென்றே இந்திய அரசு தனிப்பட அளித்து வந்துள்ள உதவி 1969-70-லிருந்து நிறுத்தப்பட்டு விட்டபோதிலும், 1966-67-ல் அரிசன நலனுக்கான மாநில அரசின் நிதி ஒதுக்கம் ரூ. 3·59 கோடியாக இருக்க, 1971—72-ல் இந் நிதி ஒதுக்கம் ரூ. 5·32 கோடியாகப் பெருகியுள்ளது பெருமிதத்திற்குரியதாகும். பின் தங்கிய வகுப்பினர்களுக்காக மட்டும் 1966-67-ல் மொத்தம் ரூ. 0·91 கோடி ஒதுக்கியிருக்க, 1971-72-ல் அது ரூ. 3·03 கோடியாக உயர்ந்துள்ளது உவகைக்குரியது.

தேசிய நிலையிலும் அனைத்து நாடுகள் நிலையிலும், பொருளாதார அமைப்பில் இருந்து வருகிற பல காரணங்களால் விலைவாசி விவரம் கவலை தருவதாகவே இருந்து வருகிறது. மத்திய அரசு எடுக்கும் முடிவுகளையொட்டியே விலைவாசி விவரம் அமையும் என்பது முன்னர் நிகழ்த்தப்பட்ட உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை இந்த அவையும் நன்கு அறியும். இந்த நிலையில் நாம் செய்யக்கூடியதெல்லாம் ஒன்று தான். உற்பத்தியை இயன்ற அளவு பெருக்குவோம்; அவசியம் ஏற்படின், இன்றியமையாப் பொருள்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்தும் நடைமுறையைச் செயலுக்குக் கொண்டுவரக்கூடிய ஏற்பாட்டினை எப்பொழுதும் தயாராக வைத்திருப்போம். வணிகச் சூதாடிகளின் சூழ்ச்சியினால் விலை ஏறி மக்கள் அவதியுறாமல் காப்புடன் இருக்கும் வண்ணம், முடையிருப்புகளை ஏற்படுத்தவும் உணவு தானியங்களும் பிற பொருள்களும் போதிய அளவில் கிடைக்கவும் வகை செய்யும் பொருட்டு, உணவுப் பொருள் வழங்கல் துறையின்கீழ் தனிப்பட்ட அமைப்பொன்றை உருவாக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது. அதே நேரத்தில் விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தி நிலைப்படுத்த, பருத்தி, நெட்டிழைப் பருத்தி, உருக்கு, மருந்துப் பொருள்கள் போன்ற தொழிலியல் மூலப்பொருள்களைப் போதிய அளவில் இறக்குமதி செய்ய, இந்திய அரசு உரிய காலத்தில் முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்தை நான், இந்த அரசின் சார்பாக வலியுறுத்த விழைகிறேன்.

நடைமுறைக்குகந்த ஊதிய-விலை அமைப்பு உருவாக்கப்படுவதற்காக, மாநிலங்களுடன் கலந்து, ஒருங்கிணைந்த விலை-ஊதிய-ஆதாயக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு நம்புகிறது. மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தும் வகையில் எடுக்கப்படும் முடிவுகள் மாநில அரசு ஊழியர்களின் ஊதியத்தை நேரடியாகப் பாதிக்கின்றன என்பதை மத்திய அரசு எப்பொழுதும் நாட்டத்தில் இருத்திக்கொள்ள வேண்டும் என்ற இந்த அரசின் கருத்தை இத் தருணத்தில் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மாநில அரசின் நிதிநிலை பெருஞ் சுமைக்குள்ளாகியுள்ளது. மத்திய அரசின் நிதிநிலையைப் போல மாநில அரசின் நிதி நிலை நெகிழ்ச்சித் தன்மை பெற்றதல்ல.

இந்த மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டம் என்ன அளவினதாக இருக்க வேண்டும் என்பது குறித்து முந்தைய கூட்டங்களில், மத்தியத் திட்ட ஆணைக் குழுவும் இம் மாநில அரசும் உடன்பாடான முடிவுகளை மேற்கொள்ள இயலவில்லை எனினும், மத்தியத் திட்ட ஆணைக் குழுவுடனும் இந்திய நிதி அமைச்சருடனும் டிசம்பர் 1971—ல் முதலமைச்சர் கலந்து பேசியதன் விளைவாக, இம் மாநிலத்தின் 1972—73 ஆண்டுத் திட்டம் குறித்து உடன்பாடான சில முடிவுகளை மேற்கொள்ள முடிந்தது.

நடப்பு ஆண்டுக்கு இம் மாநிலத்தின் உடன்பாடான திட்டத்தின் அளவு ரூ. 115 கோடியாக இருக்குமென்றும் 1972—73 ஆண்டுத் திட்டம் ரூ. 117 கோடி அளவு இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் இம் மாநில அரசுக்கு இருந்துவரும் பெருத்த நிதிச் சுமையினை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஐந்தாண்டுக் கால அளவில் இந்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகை ரூ 154.9 கோடியாகும். ஆனால், இக் கால அளவில் இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கிற தொகை ரூ 141 கோடிதான். இவ்வாறு நாம் பெறுகின்ற தொகையை விடத் திருப்பிக் கொடுக்கும் தொகை அதிகமாயிருப்பதே இம் மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிக்குத் தலையான காரணங்களில் ஒன்றாகும். 1971-72ஆம் ஆண்டினை மட்டும் எடுத்துக் கொண்டால், அசல் கணக்கில் நாம் திருப்பிக் கொடுக்கவேண்டிய தொகை ரூ 43.03 கோடியாகும். வட்டிக் கணக்கில் கொடுக்க வேண்டிய தொகை ரூ 21.83 கோடியாகும். இந்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் மத்திய உதவித்தொகை ரூ 40.40 கோடியுடன் இதனை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நமக்குக் கிடைக்கும் உதவித்தொகையைவிட நாம் திருப்பிச் செலுத்தும் தொகை அதிகமாயிருக்கிற இச் சீர்கேடான போக்கினை, முதலமைச்சர் 1971-72 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினைச் சட்டமன்றத்தின் முன் வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களின் கடன் சுமை ஒருங்கு தொகுக்கப்படுவதற்கும், நிதி வகையில் ஆதாயம் அளிக்காத—ஆனால் சமூக நீதி அடிப்படையில் செய்யவேண்டிய செலவுக்காக வாங்கிய கடன் தொகையை மானியமாகக் கருதிக் கணக்கிலிருந்து கழித்து விடுவதற்காகவும் அல்லது திருப்பிக் கொடுப்பதற்கு எளிதான கடன்களாக்குவதற்காகவும், அக் கடன் சுமை குறித்துத் தனி விசாரணை ஒன்றை மேற்கொள்ள மத்திய நிதி அமைச்சு ஆவன செய்யும் என்று நான் நம்புகிறேன். இந்த முதலீடுகளின் பலன்கள் மாநில அரசுகளுக்குமட்டுமன்றி நாடு முழுவதற்குமே கிடைப்பதால் இவ்வாறு செய்வது தகவும் பொருத்தமும் உடையதாகும்.

நமது மக்கள் அனைவரின் குறைந்த அளவுத் தேவைகளையேனும் நிறைவு செய்வதற்காக, நமது முன்னேற்றப் பாதையில் நாம் நெடுந் தொலைவு சென்றாக வேண்டும்.

உங்கள் அனைவருடைய கூட்டு முயற்சி மூலமாகவே இக்கடுமையான பணியை நிறைவேற்ற முடியும்.

உங்கள் நன்முயற்சிகள் வெற்றிகளைக் குவித்திடுக என்று இதயங்கலந்த நல்வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

[22-1-1972 அன்று தமிழ் நாடு சட்ட மன்றக் கூட்டு அவையில் ஆளுநர் நிகழ்த்திய உரை.]

தமிழாய்ந்த உள்ளம் பெறுகின்ற பெருமை!

மதுரைப் பல்கலைக் கழகம் 1966-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இதற்கான கட்டடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அந்த நல்விழாவினை முன்னாள் குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் அவர்கள், மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இந்த இடத்தில் நடத்தி வைத்தபோது நானும், டாக்டர் நாவலர் அவர்களும் உடனிருந்த அந்தக் காட்சி இன்றைக்கும் என் உள்ளத்தில் பசுமையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

இன்று மதுரை மாநகரில் இந்தக் கட்டடத் திறப்பு விழாவில் தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் தலைமையில் கூடியிருக்கிறோம்.

இந்த நன்னாளில் என்னுடைய அன்பு உடன்பிறப்பு—அருமைச் சகோதரர்—நாவலர் அவர்களுக்கு மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டத்தினை அளித்திருக்கின்றது.

இப்படிப்பட்ட விழாக்கள் நடைபெறுகின்ற நேரத்தில் இதைக் கண்டு களிக்கவும், வாழ்த்துக்களை மொண்டு குவிக்கவும், எங்களை எல்லாம் ஆளாக்கிய தலைவர்—பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இல்லையே என்ற ஒரு 'கவலையைத் தவிர வேறு எந்தக் கவலையும் இது போன்ற நாட்களில் எங்களை வாட்டுவதில்லை.

இதே மதுரையம்பதியிலே கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நாவலர் அவர்களும், நாங்களும் நடத்திய மாநாட்டில் எங்களுக்கேற்பட்ட விழுப் புண்களை ஆற்றிக் கொள்ள டாக்டர்கள் தேவைப்பட்டார்கள்; இன்று அதே நாவலருக்கு மதுரை மாநகரம் டாக்டர் பட்டத்தை அளித்து மகிழ்கிறது என்பது காலத்தின் வித்தியாசம் அல்ல; காலத்தின் மாற்றம்; இப்படித்தான் காலம் உருவாகும் என்பதற்குச் சரியான அறிகுறியாகும்.

நாவலரின் பெயரில் இருக்கிற நெடுஞ்செழியனையும், அந்தக் காலத்து ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனையும் இங்கே ஒன்றுபடுத்திக் கூறினார்கள். அன்று மதுரையை ஆண்ட நெடுஞ்செழியன் கொஞ்சம் அவசரப்பட்டு நீதி வழங்கினான். ஆனால், இன்று எங்கள் நாவலர் (நெடுஞ்செழியன்) அவர்கள் அவசரப்படாதவர் என்பதை இந்த நாடு நன்கறியும்.

அந்த நெடுஞ்செழியன் சிலப்பதிகாரத்திலே முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தான். அதற்குக் காரணம்....தான் தவறிழைத்து விட்டோம் என்று புரிந்து கொண்டதும், அதைத் திருத்திக் கொள்ளும் பேருள்ளம் அவனுக்கு இருந்தது.

இந்த நெடுஞ்செழியன் அப்படித் திருத்திக் கொள்ளமாட்டார்; இவர் தவறே இழைக்காத காரணத்தால்.

நமது நாவலர் அவர்களை நாடு பல ஆண்டுக் காலமாக அறியும்; நான் பல ஆண்டுக் காலமாக அறிவேன்; நீங்களும் பல ஆண்டுக் காலமாக நன்கு அறிவீர்கள்!

பல ஆண்டுக் காலம்—பல ஆண்டுக் காலம் என்று குறிப்பிடுவது அரசியலில் சிறப்புத் தன்மை படைத்ததாகும். கலை உலகில் வேண்டுமானால் என்றென்றும் இளமையோடு இருக்க வேண்டும் என்று சொல்லப்படலாம். ஆனால், அரசியல் உலகில் பல ஆண்டுக்காலம் என்பது அனுபவ முதிர்ச்சியை—பக்குவம் ஏற்பட்டு விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு உரிய அடையாளமாகவே கருதப்படும். முதிர்ச்சியில் தான் பல ஆண்டுக் கால அரசியல் கூறுகளை—அனுபவக் கீறல்களைக் காண முடியும்.

இன்று அவர்கள் பெறுகின்ற இந்தப் பெருமை—நான் பெறுகின்ற பெருமையைப்போல்; நம் நாட்டு மக்கள் அனைவரும் பெறுகின்ற பெருமையைப் போலத் — தமிழாய்ந்த உள்ளமெல்லாம் பெறுகின்ற பெருமையைப்

தியாகத்தை மறவாத தமிழக அரசு

தியாகம் என்பது தமிழகத்தின் நீண்ட நாளையப் பயிர். ஆயிரங் காலத்துப் பயிர் என்று திருமணத்தைச் சொல்லி வருவதைப் போல—தியாக வரலாற்றையும் குறிப்பிடலாம்.

தியாகத்தையும் தியாகிகளையும் மறவாத அரசு-மதித்துப் போற்றி வரும் அரசு தமிழக அரசு!

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகிய போது இந்த உண்மை தெளிவாகிவிட்டது. ஆட்சியை ஏற்றவுடன் அவர் செய்த அருந் தொண்டுகளில் விடுதலைப் முதன்மையானது— போராட்டத்தில் கலந்துகொண்டு தனது இன்னுயிரை ஈந்த வாஞ்சிநாத அய்யரின் மனைவியாரின் கோரிக்கையை ஏற்று, அந்த அம்மையாருக்குத் தியாகிகள் பென்ஷன் கொடுத்த நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

சீன நாட்டார் படையெடுத்து வந்த போது. நிபந்தனையின்றி மத்திய அரசுடன் ஒத்துழைத்து பாதுகாப்பு நிதி தேடித் தந்தவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதற்குத் தமிழகத்துக்குக் கிடைத்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், தியாகிகளை மதிப்பதில் முன்னணியில் இருந்து வருகிறார்.

தியாகிகள் பென்ஷனுக்காக மனுச் செய்வதற்கு ஏற்கெனவே ஒருநாள் குறிப்பிடப்பட்டிருந்தும், அந்த நாளுக்குள் பெரும்பான்மையான தியாகிகள் தங்கள் பெயர்களைப் பட்டியலில் தரவில்லை என்பதால் காலவரையறையை நீட்டித்துத் தந்தார் தமிழக முதல்வர் என்பதிலிருந்து தியாகத்திற்கு அவரது இதயம் பெருமதிப்புக் கொடுத்திருக்கிறது என்பது விளங்கும்.

கடந்த 9—1—1972 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழகச் சுதந்தரப். போராட்ட வீரர்களின் 4-வது மாநில மாநாட்டில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியிருக்கும் செய்தி, தியாகிகளிடம் முதல்வருக்குள்ள பற்றினை—பாசத்தினை — மதிப்பினை எடுத்துக் காட்டுகிறது.

முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரையாற்றினார். அவரதுபேச்சின் ஒருசில பகுதி:—

'' ஆயிரம் ஆயிரம் தியாகிகளுக்கு உதவிப் பணம் வழங்கிய காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களைச் சுதந்திரப்போராட்ட வீரர்களின் சார்பில் பாராட்டுகிறேன்.

'' நம்முடனே இருந்து தியாகங்கள் பல செய்து நம் கஷ்டநஷ்டங்களை எல்லாம் அறிந்த நம்மவர்களாலும் நம் இன்னல்கள் தீரவில்லை.

'' தியாகிகளிடம் மிகவும் பரிவு காட்டும் முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் ஏராளமான தியாகிகளுக்கு உதவிப் பணம் வழங்குகிறார்.

''மாநாட்டில் கலந்துகொள்ள இன்முகத்துடன் இசைவு தந்து, தமிழக முதல்வர் நம்மைக் கௌரவித்திருக்கிறார். தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்களின் பால் அவர் காட்டும் அன்புக்கும் மரியாதைக்கும் நாம் அவரைப் பாராட்டுகிறோம்.''

—இவ்வாறு குறிப்பிட்ட திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பேச்சில் தமிழக அரசு, தியாகிகளிடம் வைத்துள்ள அளவற்ற அன்பு தெளிவாகியது.

துவக்க உரையாற்றிய திரு. சோமயாஜுலு அவர்களின் உரை—டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின், வரவேற்புரையின் வழிமொழிதலாகவே காணப்பட்டது.

''இந்தநாடு விடுதலை அடைந்து விட்டது. விடுதலை அடைந்ததும் எங்கள் குறைகள் நீங்குமென்று நினைத்தோம். அரசிடம் எடுத்துரைத்தோம். எதிர்பார்த்த அந்த அரசு எங்கள் குறைகளைக் கவனிக்கவில்லை. ஆனால், கலைஞரின் அரசு தியாகிகளின் குறைகளைப் போக்கி அவர்களது வாழ்வை வளம் பெறச் செய்து வருகிறது.

'' இந்த அரசைப் பாட்டாளி மக்கள் - ஏழைகள் - உழைப்பாளி மக்கள் - நெசவாளிகள் ஆதரிக்கிறார்கள். இவர்களின் நம்பிக்கையைக் கலைஞர் பெற்றிருக்கிறார். இந்த அரசு பல ஆண்டுகள் நீடிக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். ஏழைமக்களின் நம்பிக்கையைக் கலைஞர் பெற்றிருக்கிறார். அவர் எதையும் தைரியமாகப் பேசுவார். அவரிடம் ஒளிவு மறைவு கிடையாது. அவர் எதிர்ப்பில் வளர்ந்தவர்.

'' கலைஞரைத் தேசபக்தியுடையவர் என்று கூறுகிறோம். காரணம் என்ன ? அவர்

நாட்டுக்காக - மொழிக்காகப் பல தியாகங்களை - இன்னல்களைப்பெற்றிருக்கிறார். அவரைத் தியாகிகள் மதிக்கிறார்கள்—பெருமைப்படுத்துகிறார்கள். அவரை நம்புகிறார்கள். அவரால் தான் தங்கள் குறைகள் நீங்குமென்று நம்புகிறார்கள். அதனால் தான் மாநாட்டிற்கு அவரை அழைத்துக் குறைகளைக் கூறுகிறோம். ''

—இவ்வாறு குறிப்பிட்டார் திரு. ந. சோமயாஜுலு.

தலைமை உரையாற்றிய திரு. கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் குறிப்பிட்டார் :—

'' 1967-ல் இந்த அரசு பதவி ஏற்றபின்னர் இதுவரை விடுதலைப் போர் வீரர்கள் சுமார் 7,200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு உதவிப் பணம் வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளதாக அறிகிறேன். தங்கள் கட்சியில் சேராதவர்களாக இருந்தாலும் நம்முடைய தியாகத்தை மதிக்கும் வகையில் பெருந் தன்மையுடனும் தாராள மனப்பான்மையுடனும் இந்த உதவிப் பணத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் இந்த அரசையும் முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்களையும் பாராட்டி நன்றி செலுத்த வேண்டியது நமது நீங்காக் கடமையாகும்.

''பல்லாண்டுகளுக்கு முன்னரே மாண்புமிகு கருணாநிதி அவர்களை ' தமிழ்க் கலைஞர் அவர்களே ' என்று அன்போடு அழைத்து அப்பட்டத்தை அவருக்குச் சூட்டியவர் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதி அவர்கள்.

''மாற்றார்க்கும் மதிப்புக் காட்டிவரும் முதல்வர் அவர்களின் பெருந்தன்மையும் பெருங்குணமும் பாராட்டுக்குரியன''—என்று குறிப்பிட்டுத் தமிழக முதல்வர் மீது ஒரு பாமாலையே தொடுத்தார்.

விழாவில் சொற்பொழிவாற்றிய சுத்தானந்த பாரதி அவர்கள் "முதல்வரின் பெயரிலேயேகருணை இருக்கிறது. அவர் கருணை மேகமாய் தியாகிகளுக்கு மழை பொழிந்து வருகிறார் '' என்று குறிப்பிட்டார்.

சுதந்தரப் போராட்ட வீரர்களின் மாநாட்டு மலரைத் தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்கள் வெளியிட்டுத் தமிழக அரசின் அருந்தொண்டு பற்றிப் பேசினார்.

''இன்று நாலுகோடி தமிழ்ச் சமுதாயம்—ஐம்பது கோடி இந்தியச் சமுதாயம் எழுந்து நிற்பதைக் காண்கிறோம் என்றால் அதற்குக் காரணம் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர்கள்தான் என்பதை நாடு மறக்காது.

'' மாற்றுக்கட்சியாக இருந்தாலும் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றி அக்கறையோடு கவனப்படுத்திய பெருமை காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு.

'' விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு, செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தயங்காது.

''திருவாடானையில் 1942-ஆம் ஆண்டு மாபெரும் புரட்சியை நடத்தினார்கள். அப்போது நீதி மன்றங்கள் எல்லாம் நொறுக்கப்பட்டன. அப்படி நொறுக்கப்பட்டிருந்த அந்த நீதி மன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர முதலமைச்சர் முடிவெடுத்திருக்கிறார்.

''சுதந்திரப் போராட்ட வீரர்களை இந்த அரசு பெருமைப்படுத்தும், அவர்களது தேவைகளை நிறைவேற்றும்''.

> **பேசும் புத்தகம்.**
>
> பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம் படிப்புப் பெற வழிகள் பல தோன்றுகின்றன. கண் இழந்தவர்க்குக் கல்வியில்லை என்ற நிலை பிரெயிலி எழுத்து முறையால் நீங்கியது ; எனினும் பிரெயிலி முறை சிக்கலானது. இப்போது யுக்கோஸ்லாவிய விஞ்ஞானிகள் பேசும் புத்தகம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்கள். இப்புத்தகம் குருடர்கள் எளிதில் கல்வி பெற உதவும்.

மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய முதல்வரின் உரை மாநாட்டுக்கே சிறப்புச் சேர்த்தது. முதல்வரின் சிறப்புரை:—

''இந்த அரசு தியாகிகளை மதிக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் கடந்த மூன்று ஆண்டுகளில் 7,200 விடுதலை வீரர்களுக்கு ஒரு கோடியே 44 லட்சத்து 62 ஆயிரத்து 728 ரூபாய் மான்யமாகக் கொடுத்திருக்கிறோம்.

'' தஞ்சை மாவட்டத்தில் தில்லையாடி வள்ளியம்மை பெயரால் ஒரு திருநகர் அமைத்து—நாகப்பன், நாராயணசாமி ஆகியோர் பெயரால் நினைவுச் சின்னங்கள் அமைத்துத் தஞ்சை செல்வோர் தரிசித்துத் தீர வேண்டிய தியாகத் திருத்தலமாக அதை மாற்றியது இந்த அரசு.

'' யாரும் செய்யாமல் நினைவு கொள்ளாமல் விட்ட பாரதியார் சிலையைக் கடற்கரையில் அமைத்தது இந்த அரசு.

'' அது போன்றே...... யாரும் கவனிக்காமல் விட்ட கப்பலோட்டிய தமிழன், வ. உ. சி. க்கும் துறைமுக வாயிலில் சிலை அமைத்தது இந்த அரசு.

'' ஆகஸ்டு 15-ஆம் நாளாகிய விடுதலை நாளை எந்த மாநிலமும் அறிவிக்காத வகையில் அனைத்துக் கட்சியினரும் கொண்டாடும் பொது நாளாக்கி-சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் கொடி மரத்தின் கீழே அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் விழாவாக மாற்றினோம்.''

'' காந்தியாரை அனைவரும் போற்றிட வேண்டும் எனும் நோக்கம் காரணமாகக் காந்தியடிகள் விழாவை அரசே நடத்தி அதில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும்படிச் செய்தோம்.

'' தியாகிகளை இந்த அரசு மதிக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் பண்டித நேருவின் பிறந்த நாளை அனைவரும் கொண்டாடும் பொது விழாவாக ஆக்கினோம்.

'' தியாகிகளை மதிக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இன்னொரு எடுத்துக்காட்டையும் கூற முடியும். கட்டபொம்மன் குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்டு வந்த அரசியல் பென்ஷன் 1952 முதல் நிறுத்தப்பட்டு

'' நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் 18—2—1969 முதல் (1) சுப்பிரமணிய துரை மகள் திருமதி பாஞ்சாலி அம்மாள், (2) துரைராஜ் பாண்டியன், (3) வீமராஜ் (4) துரைராஜ், (5) சோமசுந்தர கட்டபொம்மு துரை ஆகியவர்களுக்கும் இவர்களோடு 11-1-1971 முதல் (6) சுப்பிரமணிய கட்டபொம்மு துரை (7)சைவ வீரபாண்டிய துரை, ஊமைத்துரை ஆகியோரின் புதல்வர்கள் (8) சுப்பிரமணிய கட்டபொம்முதுரை, (9) ஜக வீரபாண்டிய கட்டபொம்மு துரை, (10) சின்ன பொம்மு துரை ஆகியவர்களுக்குத் தமிழக அரசு ஓய்வூதியம் வழங்கி வருகிறது.

'' நாமக்கல்லாரை நாங்கள் மறந்திடவில்லை ; பரலி நெல்லையப்பரையும் நாங்கள் மறந்திடவில்லை; அவர்களை மதித்து உதவினோம்.

'' இங்கே சுதந்தரப் போராட்ட வீரர்கள் பெருந்திரளாகக் கூடியிருக்கிறீர்கள்.

'' விடுதலைக்குப் பாடுபட்டவர்கள்—தியாகப் போர்க்களம் கண்டவர்கள்—சிறையில் வதைபட்டவர்கள் — சித்திரவதைக்கு ஆளானோர் அனைவரும் இங்குக் குழுமியிருக்கிறீர்கள்!

'' தியாகிகள் என்ற பெயரில் சிலர் கூடி ஏதோ விழா நடத்துகிறார்கள் என்றில்லாமல் .... விடுதலைக்கு உண்மையாகப் பாடுபட்டோர் — செக்கிழுத்தோர்—சிறையில் கஞ்சிக் கலயம் தூக்கினோர் — உழைப்பால் — தொண்டால் — பேச்சால்— எழுத்தால் — கவிதைகளால்— நாட்டுக்குப் பணியாற்றினோர் இங்கு வீற்றிருக்கிறீர்கள். உங்களது தியாக உணர்வைப் போற்றி வணங்குகிறேன். எனது பாராட்டுக்களை உங்களது திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

'' விடுதலைப் போராட்டத்தின் தானைத் தலைவராகக் காந்தியடிகளும் —நேருவும்—பட்டேலும்—திலகரும் இருந்தார்கள்.

'' விடுதலைப் போருக்கு இந்த முறை சரியல்ல; வேறு முறை இருக்கிறது என்று ஆர்த்தெழுந்து போரிட்டார், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். அவர்களெல்லாம், வணங்கத் தகுந்த—போற்றத் தகுந்த வீரர்கள். நாம் நடக்க வேண்டிய வழியை வகுத்துத் தந்தவர்கள்.

'' அந்நியப் பகைவர் விரட்டப்பட்டதோடு விடுதலைப் போராட்டச் சரித்திரப் புத்தகம் முடிந்துவிடவில்லை. அதற்குப் பிறகு எழுத வேண்டிய பக்கங்கள் தான் நிரம்ப இருக்கின்றன.

'' சமுதாய ஆதிக்கக்காரர்களை—பொருளாதார ஆதிக்க சக்திகளை—வறுமையை —கல்லாமையை — இல்லாமையை எதிர்த்துப் போராடும் விடுதலைப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம்.

'' முன்பு நடந்த சுதந்திரப் போராட்டத்தில் நீ கலந்து கொண்டாயா?—என்று சிலர் கேட்கலாம்.

'' அது எனது தவறல்ல—சோமயாஜுலுவும், சுத்தானந்த பாரதியும்—பிறரும் பிறந்த காலத்தில் என்னைப் பெற்றுத் தராதது என் தாய் தந்தையரின் குற்றமே தவிர—எனது குற்றமல்ல!

'' குற்றம் சாட்டுபவர்களுக்குக் கூறிக் கொள்வேன்; எங்கள் பாரம்பரியம் கூட விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பாரம்பரியம்தான்!

'' சுதந்திரப் போரின் ஓர் அங்கமான வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர் எங்கள் தலைவர் பெரியார்.

''சுதந்திரப் போரில் காந்தியாருடன் கைகோத்துப் பணியாற்றியவர் எங்கள் தலைவர் பெரியார்.

'' அந்தப் பெரியார் கூட—ஆகஸ்ட் 15-ல் வெள்ளையன் வெளியேறியபோது அது துக்கநாள் என்று அறிவித்தார். ஆனால், '' அது துக்கநாள் அல்ல ; இன்பநாள் '' என்று எழுதிப் பெரியாருடன் கருத்து வேறுபாடு கொண்டு வெளியே வந்த பேரறிஞர் அண்ணாவின் தம்பிகள் நாங்கள்.

'' ஆகவே, எங்கள் பரம்பரையில் பழுதில்லை; பாவமில்லை.

'' விடுதலைப் போரில் ஈடுபட்ட கோமதி சங்கர தீட்சிதருக்கு நாங்கள் பாராட்டு விழா எடுத்தோம். நான் பொதுப்பணி அமைச்சராக இருந்த போது அவரது அன்புக் கட்டளையையேற்றுப் பலமுறை அவரது தொகுதிக்குச் சென்றேன். அவர் எண்பது வயதடைந்ததற்காகச் சட்ட சபையிலேயே தீர்மானம் கொண்டுவந்து பாராட்டினோம். தனியாக ஒரு விழா எடுத்துப் பொன்னாடையும் போர்த்தினோம்"

முதல்வரின் உரை—தியாகத்தையும் தியாகிகளையும் மதித்துத் தமிழக அரசு செய்த அருந்தொண்டுகளைப் பட்டியல் அமைத்துக் காட்டியது. அந்தப் பட்டியல்வருங்காலத்தில்இன்னும் அதிகமாகும் என்பதை அவரது உரை உறுதிப்படுத்தியது.



இதோ உலகப் பெருஞ் சாதனை!

ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய எல்லையில் நுழைகிறோம்.

தென்னார்க்காடு மாவட்ட எல்லையில் நுழையும் போதே ஏராளமான வளைவுகள்.

ஊர்தோறும் தோரணங்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் இதே காட்சிகள்.

"மாநாடு நடப்பது போன்றல்லவா ஊரெங்கும் வளைவுகள் போட்டு இருக்கிறார்கள்." என்றார் ஒரு நண்பர்.

"சாதாரண பிரச்சாரமாக இருந்தால் வழக்கம் போல் ரிசல்ட்டு இருக்கும். இப்படிச் செய்திருப்பதால் நல்ல பயன் கிடைச்சிருக்கு".

"சார், நம்ம கவர்ன்மென்ட் இதை மக்கள் இயக்கமாக நடத்தியிருக்கிறது. அதனால் தான் ஊரெங்கும் ஓர் எழுச்சியைப் பார்க்க முடியுது" என்று ஆர்வத்தோடு சொல்கிறார் தமிழ் நாளிதழ் ஒன்றின் செய்தியாளர்.

நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

கார்கள் வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

• • •

ஜனவரி முதல் வாரம். சென்னையிலிருந்து இரண்டு பெரிய கார்களில் இருபதுக்கு மேற்பட்டவர்கள், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார்கள்.

தமிழ்நாடு அரசு குடும்பநலத் துறை ஏற்பாடு செய்திருந்த சுற்றுப் பயணம் அது. முதலில் சென்ற இடம் தென்னார்க்காடு மாவட்டம்.

திண்டிவனம் சென்ற பிறகு, புதுச்சேரிக்குச் செல்லும் சாலையில் கார்கள் திரும்புகின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில நிறைவேறியுள்ள குடும்ப நலத் திட்டப் பணிகளை 'ஓர் உலகச் சாதனை' என்று கடந்த 9-1-1972 அன்று ஒலிபரப்பான 'நம்பிக்கை ஒளி' என்ற சொற்பொழிவில் அகில இந்திய வானொலி குறிப்பிட்டது. அந்த உலகப் பெருஞ் சாதனையை நமக்கு நய படம் பிடித்துக் காட்டுகிறது இந்தக் கட்டுரை.

வானூர் ஒன்றியம் அமைந்துள்ள பகுதிக்கும் பக்கத்தில் தென்பகுதியில் போகும் சாலை வழியாக இரண்டு மைல் தொலைவு சென்றால் வரும் சிற்றூர்தான் பூத்துறை.

பூத்துறை இரண்டு மாதங்களுக்கு முன்னர் வரை யாரும் அறியாத சிற்றூராக இருந்தது. ஆனால் இன்று—

தமிழகத்தின் மற்ற சிற்றூர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஊர்.

குடும்ப நலத் திட்டத்தின் முனைப்பு இயக்கம் தமிழகத்தில் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

• • •

தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் நடைபெற்று முடிவடைந்து விட்டது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இரண்டாவது கட்டமாகக் குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கம் நடைபெற்று வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் முதலாவது குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கம் முடிவடையும் நேரத்தில்தான் பத்திரிகையாளர்கள் அங்குச் சென்றார்கள்.

பூத்துறை கிராம மக்கள் அனைவரும் கூடி நிற்கிறார்கள்.

வாண வேடிக்கைகளுடன் வரவேற்பு அளிக்கிறார்கள்.

பொதுக்கூட்டம் போன்று ஒரு மேடை அமைத்திருக்கிறார்கள். மேடைக்கு முன்பு ஊர் மக்கள் அமர்ந்திருக்கிறார்கள். வழக்கமான பொதுக்கூட்டமாக அல்லாமல் இது புதிய முறையில் துவங்குகிறது.

பத்திரிகையாளர்கள் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். அடுத்து வழக்கம் போல் சொற்பொழிவு தொடங்கவில்லை. கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து அடுக்கடுக்காகக் கேள்வி கேட்கிறார்கள், பத்திரிகையாளர்கள்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த பெரியவர்களைப் பார்த்து ஒரு கேள்வி—

"உங்களில் எத்தனை பேர் குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறீர்கள்? கை தூக்குங்கள் பார்க்கலாம்?"

எல்லாரும் கைதூக்குகிறார்கள்.

ஆமாம்! இந்த ஊரில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் எல்லாரும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள்.

தனித்தனியாகச் சிலரை அழைத்துப் பத்திரிக்கையாளர்கள் கேள்வி கேட்கிறார்கள்.

"உங்களைக் கட்டாயப்படுத்தி இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் சொன்னார்களா?"

"இல்லை. நாங்களாகவே விரும்பிச் செய்துகொண்டோம்"

"உங்க ஊர் மணியக்காரர் சொன்னார், கலெக்டர் சொன்னார் என்பதனால் செய்து கொண்டீர்களா?".

"சொன்னார் என்பதனாலல்ல; ......குடும்ப நலத் திட்டத்தினாலே நன்மைங்கிறது புரிஞ்சதனாலேதான்" ...... என்று சொல்லத் தொடங்கியவர் பத்திரிகையாளர்களுக்கே குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தி விளக்கம் தரலானார்.

ஆங்கில நாளிதழ் ஒன்றின் செய்தியாளர் பெருமையுடன், "நம் நாட்டில் கிராமப் புறங்களில் வாழும் மக்கள் மிகவும் விழிப்படைந்துவிட்டாங்க" என்று உரக்கச் சொன்னார்.

கடைசியாகப் போகும் வழியில் ஒரு பத்திரிகைக்காரரர், ஒருவரை அழைத்துத் திடீரென்று "நீங்க எல்லாரும் இப்படி அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளக் காரணம் என்ன?' என்று வினவினார்.

"இப்ப, எல்லா வசதிகளும் செய்து தந்தாங்க ...... எல்லாரும் முனைப்பா இருந்தாங்க ...... நேரம் வந்திடுச்சு; செஞ்சுகிட்டோம்" என்றார்.

அவ்வூரைச்சேர்ந்தவர்கள் ஒரே குரலில் சொன்ன செய்தி இந்தக் குடும்ப நலச் சிகிச்சைக்கு எங்களுக்கு வழிகாட்டியாகஇருந்தது, மணியக்காரர்தானுங்க....

பூத்துறையின் கிராம அதிகாரியான திரு பி. கே. வைத்தியலிங்கம் குடும்ப நலத் திட்டத்தில் ஆர்வமிக்கவர். அவர் துணைவியார் குடும்பநலத்திட்ட அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர். அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதனால் உள்ள நன்மைகளைத் தன் மனைவியிடம் ஒரு பேட்டியாகக் கேட்டு டேப் ரிகார்டில் பதிவு செய்து கொண்டார் வைத்தியலிங்கம். பதிவு செய்து கொண்ட டேப் ரிக்கார்டரை அவ்வூர் விவசாயிகளை அழைத்துப் போட்டுக் காண்பித்தார். குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கம் தொடங்கவே, வைத்தியலிங்கத்தின் முயற்சி சரியான பயன் விளைவித்தது.

இன்று பூத்துறையில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவரும் குடும்ப நலத்திட்ட அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக விளங்கும் சிற்றூராயிற்று பூத்துறை !

அண்மையில் கிடைத்த தகவலின்படி பூத்துறையைப் போன்று குறிஞ்சிப்பாடி பகுதியிலும் நான்கைந்து ஊர்களில் உள்ள அனைவரும் குடும்ப நலச்



சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்.

• • •

அன்று மாலை விழுப்புரம் மருத்துவ மனையில் குடும்பநலத் திட்டச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் அனைவரையும் பத்திரிகையாளர்கள் பார்வையிட்டனர். மருத்துவமனை முழுவதும் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்து கொண்டவர்கள். தேர்தல் காலத்தில் வாக்குச் சாவடி அமைப்பது போலக் குடும்பநலச் சாவடிகள் அமைத்துச் சிகிச்சை செய்து கொண்டவர்களைத் தங்க வைத்திருந்தனர். அந்த அளவுக்கு ஏராளமானவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள்.

விழுப்புரத்தில் பல தாய்மார்களிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டனர்.

'' பணத்துக்கு விரும்பி செய்து கொண்டீர்களா ?''

'' வீட்டு நன்மையையும், எங்க குழந்தைகளின் எதிர்காலத்தையும் எண்ணிச் செய்துகொண்டோம்.''

ஒரு முஸ்லிம் பெண் உருக்கமாகச் சொன்ன செய்தி, ''நான் விரும்பி என் கையில் உள்ள அஞ்சு ரூபாயை இங்கேகொடுத்து அறுவைச் சிகிச்சை செய்துக்க வந்தேன். ஆனா அரசாங்கமே இவ்வளவு செய்யறப்போ சந்தோஷமா செய்துக்குறது நல்லதுதானுங்களே ! என் குடும்ப நிலையை எண்ணி நானாகவே செஞ்சுக்க முன் வந்தேன்''.

* * * * *

மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திக்கக் கடலூருக்குப் புறப்பட்டோம்.

ஒரு காலத்தில் எள்ளி நகையாடப்பட்ட குடும்ப நலத் திட்டம், இன்று மக்களால் பெரும் வரவேற்புக்குரியதாக அமைந்து விட்டதைப் பத்திரிகையாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டு வந்தனர்.

இந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்பது போல ஒரு நண்பர் சொன்னார். '' ஆட்டுவிப்பார் ஆட்டுவித்தால் ஆடாதார் யாருமுண்டோ.''

மாவட்ட ஆட்சித் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்த பொழுதும் பத்திரிகையாளர்கள் தங்களுக்குரிய ஐயத்தோடேயே கேட்டார்கள்.

'' நீங்கள் அதிக அளவில்பணம் கொடுப்பதால் தான் அதிக அளவில் மக்கள் குடும்ப நலத்திட்டச் சிகிச்சை செய்து கொண்டார்களா ?''

தென்னார்க்காடு மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்களுக்கு ரூ. 75-ம், பெண்களுக்கு ரூ. 100-ம் அளிக்கப்பட்டன.

வழக்கமாக அளிக்கப்படும் ரூ. 30, அழைத்து வருபவருக்கு அளிக்கப்படும் ரூ. 10, ஆறு நாள் ஓய்வுக்காக அளிக்கப்படும் ரூ. 18, தவிர மீதித் தொகை பொது மக்களிடமே இருந்து திரட்டப்பட்டு அளிக்கப்பட்டது.

'' நீங்களே எல்லாரையும் சந்தித்திருப்பீர்களே சொல்லுங்கள்'' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் கடந்த 1–12–71 முதல் 10–1–1972 வரை மொத்தம் 40,437 பேருக்குக் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும், இந்த அளவு எண்ணிக்கையில் குடும்ப நலத் திட்டச் சிகிச்சை செய்யப்படவில்லை.



முதலை :— தோல்களிலேயே இதன் தோல் மிகவும் உறுதியானது ; விலையுயர்ந்தது. பெட்டிகள், பைகள், காலணிகள், பர்ஸ், சிகரெட் உறைகள் போன்ற சாமான்களுக்கு இது உதவுகிறது.

மறுநாள் காலையில் திடீரென்று திட்டமிடாமல், மாவட்ட ஆட்சித் தலைவருடன் குறிஞ்சிப்பாடிப் பகுதியிலுள்ள வடலூருக்குப் பத்திரிகையாளர்கள் அனைவரும் சென்றோம்.

திடீரெனச் சென்று, அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் எப்படி இருக்கும் என்று அறிந்து கொள்ள எங்களில் சிலருக்கு விருப்பம்.

ஆனால், அங்கு வழக்கம்போல் எல்லாருக்கும் செய்யப்படும் எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டிருந்தன. வடலூரில் ஒரு சத்திரத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டவர்கள் தங்கியிருந்தார்கள்.

பத்திரிகையாளர்கள் வழக்கமான கேள்விகளைக் கேட்டனர். வயதுகளையும் கேட்டனர். 45 வயதுக்கு மேலான எவருக்கும் அங்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படவில்லை.

அடுத்து, காட்டுமன்னார் கோவிலுக்குச் சென்றோம். அந்த ஒன்றியத்தில் பெருமளவில் மக்களுக்குக் குடும்ப நலத்திட்டச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

காட்டுமன்னார் கோவிலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆறு நாள் உணவை அப்பகுதிச் சீரணியினர் ஏற்றுக் கொண்டனர். அந்தப் பகுதியின் சீரணியினரின் அரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பாக எடுத்துரைத்தார்.

காட்டுமன்னார் கோவிலில், சிறப்பாகக் குடும்ப நலத் திட்டத்தினைச் செயல் படுத்துவதற்குக் காரணம் என்ன என்று அப்பகுதியைச் சேர்ந்த முக்கியமானவர்கள் அனைவரையும் பத்திரிகையாளர்கள் கேட்டனர்.

ஒருமனதாக அனைவரும் கூறிய பதில் : '' மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்த ஊக்கம் தான் '' என்பதாகும்

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஏ. நம்பியார் அவர்கள் குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கத்தில் காட்டியுள்ள அக்கறையை நாங்கள்சென்றவிடங்களில் சந்தித்தவர்கள் அனைவரும் கூறினார்கள்.

* * * * *

அடுத்து இரண்டாவது கட்டமாகக் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் நடைபெறும் தஞ்சாவூர் மாவட்டத்துக்குச் சென்றோம்.

முதலில் சீர்காழி—

அங்கே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களை, நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து ஆறுநாள் தங்க வைக்கின்றனர்.

ஆறு நாளும் அறுசுவை உண்டி விருந்துதான் , தஞ்சைக்கே உரிய தனிச் சிறப்புகளுடன்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்துகள், எங்களுடன் வந்த டெலிவிஷன் காமிராவுக்கு விருந்தாகியது.

இது மட்டுமல்ல; அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு அணிக்கும் பரிசுச்சீட்டு குலுக்கிப் போட்டு பீரோ, மேசை, வானொலிப் பெட்டி, கடியாரம் என்று பல பரிசுப் பொருள்களை வழங்குகிறார்கள்.

மாலையில் திரைப்படக்காட்சி, நாடகங்கள் என்ற நிகழ்ச்சிகள் வேறு. —

பின்னர், மாயூரம், வலங்கைமான், அம்மாப்பேட்டை முதலிய இடங்களுக்குச்சென்று நல்வாழ்வு இல்லங்களைப்பார்வையிட்டோம். அம்மாப்பேட்டையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆசிரியர்களைப் பேட்டி கண்டோம்.

குடும்ப நலத்திட்டப் பணிகளுக்காக ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று கூறப்படுவதை மறுத்தார்கள்.

தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் அம்மாப்பேட்டையில் சந்தித்தோம். பின்னர் தஞ்சை மருத்துவ மனைக்குச் சென்றோம்.

அங்கு நடைபெறும் குடும்ப நலத் திட்டப் பணிகளை அறிந்தோம். மாவட்டம் முழுவதும் நடைபெற்ற குடும்ப நலத் திட்டப் பணிகளை அறிந்து கொண்டோம்.

மறுநாள் திருச்சி மாவட்ட மருத்துவ மனையைப் பார்வையிட்டுத் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பணிகளை அறிந்து கொண்டோம். அங்கிருந்து மதுரை மாவட்டம் வட மதுரை, காந்தி கிராமம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் குடும்பநலத் திட்டப் பணிகளை அறிந்து கொண்டோம்.

மறுநாள் திரும்பிவரும் பொழுது திருச்சி மாவட்டத்திலுள்ள துவரங்குறிச்சி, விராலிமலை முதலிய இடங்களில் நடைபெற்று வரும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரக் கூட்டங்களைக் கேட்டோம்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்த பொழுது அவர், இரண்டாவது கட்டமாக நடைபெறும் குடும்பநலத் திட்டப் பணிகளை விளக்கினார்.

மொத்தத்தில், குடும்பநலத் திட்டப் பணிகள் எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாகநடைபெறுகின்றன என்பதை இப்பயணத்தில் கலந்து கொண்ட இதழ்த்துறையாளர்கள், அரசு அலுவலர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

* * * * *

சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறோம்.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியதை அகில இந்திய வானொலி நிலையத்தைச் சேர்ந்த நண்பர் நினைவு கூர்கிறார்.

'' தென்னார்க்காடுமாவட்டத்தில் குடும்பநலத் திட்டச் சிகிச்சை செய்து கொள்பவர்கள் என்

ணிக்கை 75,000 எட்டிவிடலாம். ஆனால், நிதி பற்றாக் குறையும், பாதுகாப்பு நிதி திரட்டல் போன்ற ஏனைய பணிகளும் முன் நிற்பதால் உடனடியாகச் செய்ய முடியவில்லை '' என்றார் மாவட்ட ஆட்சித் தலைவர். நெருக்கடி நிலை வராவிடில் தென்னார்க்காடு மாவட்டம் இன்னும் மாபெரும் சாதனையைச் செய்திருக்கும் ''.

'' உண்மைதான் ! ஆனாலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் செய்திருப்பதுதான் உலகப் பெருஞ்சாதனை'' என்கிறார் மைய அரசு விளம்பரத் துறை அதிகாரி.

''உலகச் சாதனையா ?'' விவரமாகச் சொல்லும்படி கேட்கிறேன் நான்.

மைய அரசு அதிகாரி சொன்னார் :—

''உலகத்திலேயே இந்தியாவில் மட்டும்தான் தேசிய அளவில் குடும்பநலத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. அதில், தமிழ்நாடுதான் மிகச் சிறப்பாகக் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது''.

'' கேரள மாநிலத்திலுள்ள எர்ணாகுளத்தில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தியதுதான் உலக ரிகார்டு என்கிறார்களே ?'' என்று கேட்டேன்.

அந்தக் காரில் வந்த நண்பர்களனைவரும் பலமுனைகளிலிருந்து எனக்குப் பதில் தந்தார்கள். அவர்கள் சொல்லிய கருத்துக்கள் இதோ :

'' கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் நடத்திய குடும்பநல இயக்கம் மாநிலம் முழுமைக்கும் சேர்த்து 63,000 தாம். எர்ணாகுளம் மாவட்டத்தில் 13,000 பேர்கள்தானாம்.

'' அது மட்டுமல்ல; கேர் நிறுவனத்தின் உதவியுடன் அங்குக் குடும்ப நலத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டில் எந்தவித அந்நிய உதவியும் பெறவில்லை.''

'' இன்னொரு முக்கியமான விஷயம், வயது வரம்பு. தென்னார்க்காடு மாவட்டத்தில் 45-க்கு உட்பட்டவர்களுக்கே அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மைய அரசு குடும்பநலத் திட்ட அறுவைச் சிகிச்சைக்கு 55 வயது' என்ற வரம்பு விதித்துள்ளது. இந்த நிலைக்கு மாறுபட்ட அளவிலேயே குடும்பநலத் திட்ட வயது வரம்பு அங்குக் கடைப் பிடிக்கப் பட்டிருக்கிறது.

'' கேரள மாநிலத்தவர்களுக்கு படிப்பறிவு அதிகம். அவர்களிடம் குடும்பநலத் திட்டத்தை எளிதில் பிரச்சாரம் செய்துவிடலாம். ஆனால், பின்தங்கியமக்கள் உள்ள பகுதியில் இதைச் செய்திருப்பதுதான் பெரிய செயல். எப்படிப் பார்த்தாலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் குடும்ப நலச்சாதனை ஓர் உலக ரிகார்டுதான் ''

இந்தப் பேச்சுக்கு முடிவுரையாக நான் கூறிய சொற்றொடர் இதுதான் :—

'' குடும்பநலத் திட்டத்திலும் இந்தியாவுக்கு வழி காட்டுகிறது தமிழ்நாடு.

''தமிழ் நாட்டிலுள்ள மாவட்டங்களுக்கு வழி காட்டுகிறது தென்னார்க்காடு மாவட்டம்.''

எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

உண்மை அதுதானே !

—மாமூலன்

Phone : 133 Gram : ' COOPMET ' Post Box No. 47.

THE KUMBAKONAM CO-OPERATIVE METAL WORKS LIMITED,
GANDHINAGAR, KUMBAKONAM.

An Ex-serviceman Industrial Co-operative under the Control of Director of Industries and Commerce, Tamil Nadu.

Manufacturers of Steel Almirah, Steel Cot, Steel Rack, Wall Coffer, Cash Chest etc. Suppliers of Agricultural Implements and Garden Implements. Steel Roof Trusses, Window Grills, Pipe Trevis, Water Tank, etc., will be manufactured.

SERVICING WORK WILL BE UNDERTAKEN.

G. CHAKRAVARTHY,
Secretary.

Kodavasal C. KRISHNAMURTHY,
President.

தொழில் அமைதி காக்கும் முதல் மாநிலம்

''இந்தியாவிலேயே தொழில் அமைதி காக்கும் முதல் மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. அதற்குக் காரணம் நமது அரசின் தொழிற் கொள்கையே'' என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெருமிதத்துடன் கூறினார்.

சென்னை ஆட்டோ-ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்க இரண்டாவது ஆண்டுவிழா சென்னை நுங்கம்பாக்கத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஓட்டுநர்களுக்கு ஆறு சதவிகிதம் பங்கு ஈவுத் தொகையும், ஆயுள் காப்பீட்டுச் சான்றிதழும், போனசும், வேட்டியும், ஓட்டுநரின் துணைவியருக்குப் புடவையும் வழங்கிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் துவக்கப்பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கம், உழைப்பின் மூலமாகவே உயர்வடையமுடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இப்போது 125 ஆட்டோ-ரிக்ஷாக்கள் அதனை ஓட்டுபவருக்கே சொந்தமாகியிருக்கின்றன. இந்த ஆட்டோ-ரிக்ஷாக்களைத் தருவிக்கத் தமிழ்நாடு அரசு பெரு முயற்சி எடுத்ததை இங்கே குறிப்பிட வேண்டும்.

''தொழிலாளர் பிரச்சினையில் எந்த அளவு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவு விட்டுக் கொடுத்துப் பிரச்சினைகளைத் தீர்த்த ஓர் அரசு, நமது அரசுதான். இதைத் தொழிலாளப் பெருங்குடி மக்கள் உணர்ந்து திசைத் திருப்பும் முயற்சிக்கு இடம் தராமல், நாட்டின் முன்னேற்றத்திற்கான பணியில் ஊக்கம் செலுத்திட வேண்டும்.'' இப்படி உண்மை நிலையை விளக்கிக் கூறினார் முதல்வர் கலைஞர்.

'பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியதுபோல் சென்னை மாநகரில் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஓடும் பழைய டாக்சிகளை எல்லாம் நாட்டுடைமை ஆக்க வேண்டும்' என்ற ஒரு திட்டத்தைச் சங்கத் தலைவர் திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி கூறினார். இதற்கு முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசும்போது இப்படிக் குறிப்பிட்டார்.

''இந்தத் திட்டத்தைப் பற்றி நான் முதலமைச்சராக மட்டுமல்லாமல், நிதியமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தினால் உடனே சரி என்று கூறிட முடியவில்லை. நிதி நிலையின் கஷ்டங்களை நேரடியாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருப்பதால் உடனே 'ஏற்றுக் கொள்கிறேன்' என்று முன்பு பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோது கூறியது போல் இப்போது கூறுவதில்லை. அதற்காகக் கோரிக்கைகள் நிறைவேறுவதில்லைஎன்று பொருளல்ல. சிறிது காலமெடுத்துக் கொண்டு நிதி நிலையை ஆராய்ந்து முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன'' என்று கூறிய கலைஞர், பாட்டாளி படும் பாட்டையும் குறிப்பிட்டு அதற்காக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளையும் விளக்கினார்.

''125 ஆட்டோ ரிக்ஷாக்கள் அவற்றை ஓட்டுபவர்களுக்கே சொந்தமாகி இருக்கின்றன. 125 பேரின் பிரச்சினை தீர்ந்து விட்ட காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள பாட்டாளிகளின் பிரச்சினை அனைத்தும் தீர்ந்து விட்டதாகக் கூறி என்னை நானே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. இன்னும் நாட்டில் பல்லாயிரக் கணக்கான பாட்டாளிகள் வாழ்வில்—வேலையில்லாமல் அவதிப்படுவோர் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும். அதற்கான திட்டங்களை இந்த அரசு தீட்டி வருகிறது.''

முதல்வர் குறிப்பிட்டது போல இந்தக் குடும்ப விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களும், நகர மேயர் அவர்களும் வந்திருந்து கூட்டுறவே நாட்டுயர்வு என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

ஒரு தொழில் துவங்க முதலீடு தேவை. ஆனால் இந்தச் சங்கத்தின் தொண்டு காரணமாக ஆட்டோ ஓட்டுநர்கள் தங்கள் உழைப்பை, திறமையை மட்டுமே மூலதனமாக்கி அவர்களே தாங்கள் ஓட்டும் வண்டிகளுக்கு உரிமையாளர்களாக மாறிய பாங்கை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்?

ஓட்டுநர் ஒருவரின் துணைவியார்க்குப் பரிசு வழங்குகிறார் முதல்வர்.

மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் தனது பணியை இனியும் தொடரும் என இன்று உறுதி அளிக்கிறது

இன்றைய தினம் இந்திய மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் ஒரு மகத்தான நாள்!

22 ஆண்டுகளுக்கு முன்பு நாம் ஒரு சபதம் ஏற்றோம். ஒற்றுமை உணர்வோடும், கடினமான உழைப்பு மூலமும், நமது நாட்டின் பலகோடி மக்களின் நன்மையை நாளும் மனதில் கொண்டு, நமது சுதந்திரக் குடியரசைப் பாதுகாப்போம் என்பதுதான் அந்தச் சபதம்.

1969-ம் ஆண்டு, ஜூன் மாதம், மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், தனது உற்பத்தியைத் தொடங்கியது.

தென்னகத்தில், பல துறைகளில் வளம் கொழிக்க வழி வகுத்தது.

நே:ப்தா; குடும்பத் தலைவிகளின் வீட்டு உபயோகத்திற்கு கியாஸ், மண்ணெண்ணை போன்ற எரிபொருள்கள்; பெட்ரோல், டீசல் ஆயில்கள்; ஆகாய விமானங்களுக்கு எரிபொருள்கள்; பர்னஸ் ஆயில்கள்; கந்தகம் போன்ற பொருள்களை மதராஸ் ரிபைனரீஸ் அதிக அளவில் தயாரிக்கிறது. இதனால் வீடுகள், கார்கள், லாரிகள், பம்பு செட்டுகள், டிராக்டர்கள், ஜெட் விமானங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்குத் தேவையான எரிபொருள்கள்; சாலைகள் அமைக்கத் தார்; லூபிரிகேட்டிங் ஆயில் மற்றும் ரசாயனப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன.

நாட்டு மக்கள் அனைவரது வாழ்வும் வளம் பெறத் தனது பணியைத் தொடர்ந்து செய்யும் என மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் இந்தக் குடியரசுத் தினத்தன்று உறுதி அளிக்கிறது.

MRL

மதராஸ்
ரிபைனரீஸ்
லிமிடெட்,
சென்னை

EP-MRL-11

---

44 நூல்கள்

12000 பக்கங்கள்!

முப்பது திங்களில் சென்னைப் பல்கலைக்கழகம் 44 நூல்களை வெளியிட்டிருக்கிறது. இதன் வெளியீட்டு விழா, அண்மையில் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் தலைமையில் அறிஞர்கள், அதிகாரிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள் முதலியோர் சூழ மிகவும் சிறப்பாக நடந்தது.

தமிழ், ஆங்கில, மலையாள மொழிகளில் வரலாறு, புதைபொருள், பொருளியல், கணக் இயல், காந்தீயம் போன்ற 44 ஆராய்ச்சி நூல்களை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். இவற்றின் மொத்தப் பக்கங்கள் 12,000.

''ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் சிறந்ததாகக் கருதப்படுவதற்குக் காரணம், அது மிகச் சிறந்த நூல்களை வெளியிடுவதேயாகும். ஒரு பல்கலைக் கழகம் போற்றிப் புகழப்படுவதற்குக் காரணம் அது என்ன சாதித்தது என்பதைப் பொறுத்ததாகும். இந்த வகையில் இந்தியாவிலே சிறந்த பல்கலைக் கழகமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. ஒரு நாட்டை உருவாக்குவது—மக்களை அறிவாளியாக்குவது. பிற நாடுகளுக்கு வழி காட்டியாக விளங்குவது பல்கலைக் கழகம்தான்'' என்று நாவலர் ஒரு பல்கலைக் கழகத்தின் சிறப்பை எடுத்துக் காட்டினார்.

நூல்களை வெளியிட்டு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார் :

''சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் 44 புதிய நூல்கள் இங்கே வெளியிடப்படுகின்றன. இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

நாடெங்கிலும் பொங்கல் திருவிழாவைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் இதுபோன்ற நூல்கள் வெளியிடப் படுவது சாலச் சிறந்த ஒன்றாகும்.

நூல்கள் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதை நாம் அறிவோம். நூல்களின் பெருமையை உணர்ந்து சென்னை பல்கலைக் கழகம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதுவரை ரகசியமாக நடைபெற்று வந்த இந்த நூல் வெளியீட்டு விழா, பகிரங்கமாக மக்கள் மன்றத்தின் முன் வெளியிடப்படும் அளவிற்கு நந்நிலை உருவாகியிருக்கிறது. நூல்கள் இவ்வாறு வெளியிடுவதன் மூலமாக என்னென்ன நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரிந்து கொள்ள முடியும். அந்த நூல்களை நாமும் படிக்கலாம் என்று சிலருக்கு எண்ணத் தோன்றும்; இதற்கு விளம்பரம் மிகவும் அவசியம். விளம்பரம் சில நல்ல காரியங்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது.

எதிர்காலச் சமுதாயத்தினர் பயன் பெறத்தக்க வகையில் நூல்கள் அமைந்தால்தான் நாம் நல்ல பயனைப் பெறமுடியும்.

ஒவ்வொருவரும் நூல் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, படிக்க வேண்டிய நூல்களைப் படித்திட வேண்டும். அதே சமயம் எல்லாப் புத்தகங்களும் நல்ல புத்தகங்கள்தான் என்று எண்ணிட முடியாது.

மலர் என்று சொன்னால் நாம் எவ்வாறு மல்லிகை, ரோஜா என்று நல்ல மலர்களைக் குறிப்பிடுகிறோமோ அதைப்போல நல்ல புத்தகங்களையும் எண்ணிட வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் இருந்தாக வேண்டும். அந்த நூலகங்களிலும் நல்ல நூல்கள் இருந்திடல் வேண்டும்.

அத்தகைய நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்தத் தக்க கல்விப் புரட்சியை நமது நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

திருக்குறள், திருவாசகம் போன்ற பழம்பெரும் நூல்கள் அனைத்திற்கும் ஆராய்ச்சிக்கு மேல் ஆராய்ச்சி நிரம்ப நடந்திருக்கிறது.

இனிமேல் எதிர்காலச் சமுதாயத்தின் சிறப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சியினை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

வெளி நாடுகளில் அரசியல் பற்றியும், அரசியல் கட்சிகள் பற்றியும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அதுபோல் நம் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் அரசியலைப் பற்றிய ஆராய்ச்சிகளை நாம் நடத்திட வேண்டும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அரசியல் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது. அந்த அரசியல் பற்றிய ஆராய்ச்சி நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்ற வகையில்தான் நான் இதை வற்புறுத்திச் சொல்கிறேன்.

இன்று இந்தியாவில் பல்வேறு மொழிகளில் மொத்தம் 600 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 270 நூல்கள் தமிழ்நாட்டில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் மேலும் 300 நூல்களை வெளியிட ஏற்பாடு செய்து வருகிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தாய் மொழியாம் தமிழ்மொழியில் அதிக அளவில் நூல்கள் வெளியிடப்பட வேண்டும். அதற்கு இந்தப் பல்கலைக் கழகம் முழு முயற்சி எடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நாட்டில், மேன்மேலும் மறுமலர்ச்சி ஏற்பட இந்த விழா பெரிதும் பயன்படும்.''

ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்ற பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், ''அடுத்த ஆண்டு விஞ்ஞான நூல்களையும் வெளியிட முனைந்துள்ளோம்'' என்று சொன்னதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரவா
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Saraah

வெண்பாப் போட்டி-28

ஈற்றடி :

மையை மறவாமை மாண்பு.

முடிவு நாள் : 16—2—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு—

நேரிசை வெண்பாக்களே அனுப்பப்படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

அனுபவம் புதுமை.

கல்வெட்டுக்கள் தான் ஒரு நாட்டின் வரலாற்றைத் தெரிவிக்கும் சான்றுகள். நமது பண்டைக்கால மன்னர்கள் தங்கள் சாதனைகளை முழுக்க முழுக்க எடுத்துச் சொல்லாவிட்டாலும் கூட, ஏதோ ஓரளவாவது கல்வெட்டுக்களின் வாயிலாகச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். காலத்தை வென்று நிற்கும் அந்தக் கல்வெட்டுக்கள், அக்கால வரலாற்றையும், வாழ்க்கை அமைப்பையும் எடுத்துரைக்கத் தவறவில்லை.

தமிழ்நாட்டில் கோயிற் சுவர்கள், கற்பாறைகள், மலைக்குகைகள், மண்டபங்கள், படிமங்கள், நடுகற்கள் முதலியவற்றில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இத்தகைய கல்வெட்டுக்கள் மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் இருந்து வருகின்றன என்பதற்குச் சான்றுகள் மிகுந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் மிகப் பழம்பெரும் நூலான தொல்காப்பியத்தில் ''காட்சி, கால்கோள், நீர்ப்படை நடுகல் சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்றிரு மூன்று வகையிற் கல்லொடு புணர'' என வருகிறது. அக்காலத்தில் போர்க்களத்தில் வென்றுபட்ட வீரர்களுக்குக் கல்லெடுத்தலும், அக்கல்லில் அவர்களது வீரச் செயல்களைப் பொறித்து நடுவதும், அதற்குக் கோயிலெடுத்து வழிபடுவதும் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

அகநானூற்றிலும், இது பற்றிய செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

> நல்லமர் கடந்து நாணுடை மறவர்
> பெயரும் பீடு மெழுதி அதர்தொறும்
> பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்—

என்று வருகிறது.

புறநானூற்றில்,

> மரல வகுந்து தொடுத்த செம்பூங்
> கண்ணியொ
> டணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்
> தினி நட்டனரே கல்லும்—

எனவும் வருகிறது.

243

பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலை, முதலிய இலக்கண நூல்களிலும், திருக்குறள், கலிங்கத்துப்பரணி, மூவருலா, முதலிய இலக்கிய நூல்களிலும், நடுகற்கள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன.

இந்த நடுகற்கள், கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல், 9-ஆம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் வளர்ச்சியுற்றிருந்தது. பல்லவர்களும், சோழர்களும், ஏராளமான கல்வெட்டுக்களை நிறுவியிருக்கிறார்கள் என்ற செய்தி ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிய வருகிறது.

வடஆர்க்காடு மாவட்டத்தில் இதுவரை 45 நடுகற்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மை பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை என்று தெரிய வருகிறது.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் போரில் வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் வீரர்கள் பலர் வீர மரணம் எய்தியதை அறிவோம். அதற்குக் காரணம் வட ஆர்க்காடு மாவட்டம் மிகப் பழங்காலத்திலேயே மாவீரர் பலர் மலிந்த பகுதியாக இருந்திருக்கிறது என்பதைத்தான், செங்கம் பகுதியில் அண்மையில் கிடைத்த கல்வெட்டுக்கள் தெளிவாக்குகின்றன. 2,000 ஆண்டுகளுக்கு முன்பு நன்னன் என்னும் குறுநில மன்னன் ஆட்சி செய்த செங்கண்மா என்ற நகரந்தான் பிற்காலத்தில் செங்கை என்றும், பின்னர் செங்கம் என்றும் மாறியிருக்கிறது. என்றும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அகழ்வாராய்ச்சித் துறையின் ஆய்வுத் துறை மாணவர் சிலர், அண்மையில் செங்கம் பகுதிக்குச் சென்று நடுகற்களைப் பற்றிய ஆய்வில் இறங்கியபோது புதிய அனுபவத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்களது புதுமையான அனுபவத்தை அவர்களது மொழியிலேயே இங்கே குறிப்பிடுவதுதான் பொருந்தும் என்று கருதுகிறோம்.

''செங்கம் பகுதியில் மூன்றாம் முறையாகக் கல்வெட்டுக்களின் ஆராய்ச்சிப் பணியை நாங்கள் தொடர்ந்தபோது சில புதுமையான சான்றுகளும் கிடைத்துள்ளன.

இதுவரை வடஆர்க்காடு மாவட்டத்தில் வீரர்கள் உருவம் பொறிக்கப்பட்ட நடுகற்கள் 45 கிடைத்திருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை.

அவற்றை எல்லாம் தேடிக் கண்டுபிடித்து அச்சுப் பதித்து வந்திருக்கிறோம்; அந்தப் பணியில் ஈடுபட்ட நாங்கள் இம்முறை புதிய அனுபவங்களை எல்லாம் பெற்றிருக்கிறோம்.

செங்கத்தின் அருகில் ஒரு காட்டுப் பகுதி—மலை தொடரும் அங்கே உள்ளது. முட்புதர் மொய்த்திருந்தது. இங்கே தான் நன்னன் கோட்டை இருந்ததாகச் சொல்கிறார்கள். ஆராய்ச்சியில் உள்ள ஆர்வத்தின் காரணமாக, மெய்வருத்தம் பாராது அலைந்தோம்.

ஒரு பாழடைந்த கோயில் பகுதி—அங்கே கல்வெட்டு ஏதாவது இருக்கலாம் என்று சந்தேகப்பட்டோம்; அங்கிருந்த கிராமத்து மக்கள் எங்களைப் பார்த்து அதிசயப்படத் தொடங்கினார்கள். நாங்கள் அவர்களிடம் பேசத் தொடங்கினோம்.

" ஐயா..............இந்த இடத்தைக் கொஞ்சம் தோண்டிப் பார்க்கலாமா ?" நாங்கள் கேட்டோம்.

உடனே ஒரு முதியவர் கொதித்தெழுந்தார்.

" அதெல்லாம் கூடாதுங்க ; இந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தால், மிருகங்களுக்குக் கோபம் வந்துவிடும்—ஊரே அழிந்து விடும் " என்றார்.

உடனே எங்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது ; அடக்கிக் கொண்டோம்.

அந்தப் பகுதியை விட்டு, அடுத்த பகுதியை நாடிச் சென்றோம். வெளிச்சமே தெரியவில்லை. அடர்ந்த காடு—எங்கும் இருள் — அதைப் பொருட்படுத்தாமல் ஆராய்ச்சி ஆர்வத்துடன் முயன்றோம்—மாடுகளின் குளம்படிகள் எங்களின் கண்களில் பட்டன ; அவற்றைப் பின் தொடர்ந்து சென்றோம்; ஒரு சிற்றூர் கண்ணில் பட்டது; எங்களைப் பார்த்த அந்தப் பகுதி மக்கள் காட்டிலாகா அதிகாரிகள் என்று நினைத்துக் கொண்டார்கள்.

கொட்டையூர் என்ற ஊரில் ஒரு நடுகல், மண் மூடிக்கிடந்தது. அதைத் தோண்டலாம் என்று அருகில் சென்ற போது—பச்சைப்பாம்புகள் அந்தக் கல்வெட்டின் மேல் படுத்துக் கொண்டிருந்தன.

முதலில் அதிர்ச்சியடைந்தோம் ; பிறகு முயற்சி செய்து, அவற்றை விரட்டியடித்தோம் ; பின்னர் இறுதியில் வெற்றி எங்களுக்கே .

அத்திப்பட்டு என்று ஓர் ஊர்; அங்கே நுழைந்தோம். தாகம் நாவை வறளச் செய்தது. அங்குள்ள மக்களிடம் தண்ணீர் கேட்டோம். யாரோ புதியவர்கள் வந்திருக்கிறார்கள் என்று நினைத்தார்களோ என்னவோ—எங்களுக்குத் தண்ணீர் தர மறுத்துவிட்டார்கள். சிறிது தொலைவு நடந்தோம். ஒரு சிற்றோடை காட்சி தந்தது. ஆனால், தண்ணீர் கையில் அள்ளிக் குடிக்க முடியாதபடி, குறைவாக இருந்தது. கையில் அள்ளினால், மணலும் சேர்ந்தே வரும் போலத் தோன்றியது. வேறு வழியின்றி 'விலங்கினத்திலிருந்து வந்தவன்தானே மனிதன்' என்ற எண்ணத்துடன் தரையிலே படுத்துக் கொண்டு விலங்குகளைப்போல, நாவினால் தண்ணீரைப் பருகினோம்.

தாழையூத்து என்ற ஊரில்—ஒரு நடுகல் மூடிக் கிடப்பதைப் பார்த்தோம். அதைத் தோண்டிப் பார்க்க முயன்றோம். எங்களது முயற்சிக்கு அந்தக்கல் சற்றும் இடம்கொடுக்கவில்லை. அந்த ஊர்ப் பொதுமக்களின் தயவை நாடினோம்; ஒருவர் முன்வந்தார்; தோண்டுவதற்கு ஒப்புக் கொண்டார். துண்டை எடுத்து உதறித் தலைப்பாகையைக் கட்டினார். வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டார். மறுவினாடி எங்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கிவிட்டார்.

"நான் தோண்ட மாட்டேனுங்க! தோண்டினா நான் செத்துப் போயிடுவேன் " என்று சொல்லியபடி அந்த இடத்தை விட்டு வேகமாக ஓடிவிட்டார். அவர் சென்ற பிறகு நாங்கள் எங்கள் முயற்சியைத் தொடர்ந்தோம்.

பரமானந்தல் என்ற ஊரில் ஒருவரைச் சந்தித்தோம்.

"இங்கே கல்வெட்டு ஏதாவது உண்டா ?" என்று கேட்டோம்.

"இருக்கிறது" என்றார்.

"எங்களுக்கு அந்தக் கல்வெட்டைக் காண்பிப்பீர்களா?"—என்றோம்.

"வாருங்கள் காண்பிக்கிறேன்" என்று சொல்லியபடி எங்களை அழைத்துச் சென்றார். சில அடி தூரம் அவருடன் நடந்து சென்றோம்.

"இதுதாங்க இங்கே இருக்கிற கல்வெட்டு" என்று ஒரு கல்லைக் காண்பித்தார். எங்களுக்குச் சிரிப்பும் வந்தது. கோபமும் வந்தது.

ஏன் தெரியுமா? அவர் காண்பித்த கல்—மாமன்னர்களால் வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகல் அல்ல—நமது சாலைகளில் நட்டு வைக்கப்பட்டிருக்கும் 'மைல் கல்' தான்!

ஆண்டிப்பட்டி என்ற ஊர்; அங்கே ஒரு நடுகல் புதைந்திருந்ததைக் கண்டோம் ; அதைத் தோண்டிப் பார்ப்பதற்கு அந்த ஊர்ப் பொது மக்கள் சிலரின் உதவியை நாடினோம்; ஓரிருவர் எங்களுக்கு ஒத்துழைப்புத்தர முன் வந்தார்கள்; ஆனால், அவர்கள் ஒரு நிபந்தனை விதித்தார்கள்.

"எங்களுக்குப் பாதிப் பங்கு தந்தால்தான் நாங்கள் தோண்டுவதற்கு உதவி செய்வோம்" என்று சொல்லியபடி தோண்டும் முயற்சியில் ஈடுபட்டார்கள்; நடுகல்லைத் தோண்டி எடுத்த பின்புதான் அவர்களுக்குப் புரிந்தது, புதையல் எதுவும் கிடையாது என்ற செய்தி ! பாவம்; ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

கிருமிகள் திருட்டு !

ஆஸ்திரேலியாவில் பிரிஸ்பேன் நகரிலுள்ள ஒரு மருத்துவ மனையிலிருந்து, பயங்கர நோய்க் கிருமிகள் அண்மையில் திருடிச் செல்லப்பட்டன. இக்கிருமிகள் ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இக்கிருமிகளை அஜாக்கிரதையாகக் கையாளப்பட்டால் பயங்கர நோய்கள் பரவிவிடலாம் என்று காவல்துறையினர் வானொலி மூலமும், தொலைபேசி மூலமும் அனைவருக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நிகழ்ச்சிகளைப் பாதியில் நிறுத்தி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

" யார் திருடிச் சென்றிருந்தாலும் அதன் மூலம் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும். திருடிச் சென்றவர் அக்குப்பியை மிக ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். அதை உடனே கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும். எங்காவது அதைத் தூக்கி எறிந்தால் உடனே காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டும் " என்று வானொலி—தொலைக்காட்சி மூலம் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி நூற்றுக் கணக்கானவர்களை விசாரித்துள்ளனர்.

இப்படி எத்தனையோ விதமான உணர்வுகள் உள்ள மக்களின் மத்தியில் சென்று, அரும்பாடுபட்டுக் கல்வெட்டுக்களை ஆராய்ந்தோம்.

எங்களது ஆராய்ச்சி வீண் போகவில்லை. கொட்டையூர் என்ற ஊரில் கிடைத்த நடுகல்லில் "சோமாசிகோ திருமானிற்கு 21-வது யாண்டு" என்று ஒரு செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சோமாசிகோ திருமான் இதுவரை வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை. இவன் யார் என்பது இனிமேல்தான் வரலாற்றாசிரியர்களாலும்—ஆராய்ச்சியாளர்களாலும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்தக் கல்வெட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் என்று தெரிகிறது.

இதுவரை மூன்று என்ற எண்ணுக்குரிய வரி வடிவம் இதுவரை தவறாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. மூன்று என்ற எண் எழுத்தை இதுவரை ஐந்து என்றே எண்ணிக் கொண்டிருந்தோம். அது தவறு என்பது இக்கல்வெட்டின் மூலமாகத் தெளிவாகிவிட்டது.

இதுவரை 'ளி என்ற எழுத்து கல்வெட்டில் காணப்படவில்லை. அண்மையில் கண்டுபிடித்த கல்வெட்டில் 'ளி' காணப்படுகிறது.

இடக்கல் என்னும் ஊரில் ஒரு புதுமைச் செய்தி; பரமேச்சர பர்மரின் கல்வெட்டு முதன் முறையாகக் கிடைத்திருக்கிறது என்பதுதான் அந்த புதுமைச் செய்தி.

தண்டராம்பட்டுக் கோயிலில் உள்ள நடுகல் ஒன்று நரசிம்மவர்மனின் ஆட்சியின் 7-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது—அதிலே முத்தரையர் என்னும் பரம்பரையைப் பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது.

எங்கள் ஆராய்ச்சிப்பணியின்போது எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டபோதும் கூட—இந்தப் புதிய செய்திகள் அந்தத் தொல்லைகளை எல்லாம் மறக்கச் செய்து விட்டது. அது மட்டுமல்ல ; நாங்கள் இனி அடுத்தடுத்துச் சென்று எங்கள் ஆய்வுப் பணியை நடத்துவதற்கு எங்களுக்கு மன வலிமை இந்தப் புதிய ஆராய்ச்சிச் செய்திகள் உருவாக்கியிருக்கின்றன என்பதைப் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறோம்"

இவ்வாறு பெருமையுடன் கூறிக்கொள்ளும் அகழ்வாராய்ச்சித் துறை மாணவர்கள் தங்கள் பணியில் மேன்மேலும் வெற்றி பெற வேண்டும்—வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

"வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிடுவதால் தீமைகள் ஏற்படலாம் என்பது வைத்திய மேதைகளின் கருத்து"

பிரபல பழனி

வைத்தியத் திலகம்

வைத்தியராஜ்

DR. S. காளிமுத்து
R. M. P. (IND.) V. V. C.,
A. M. I. H.

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்த வாலிப வயோதிக அன்பர்களுக்கு பிரபல-பழனி வைத்திய திலகம்-வைத்தியராஜ் S. காளிமுத்து R.M.P. (IND), V.V.C., A.M.I.H. அவர்களின் ஆலோசனையும்-கருத்தும்.

ஆடவர்கள், படித்த பட்டதாரியும், பாமரரும், தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் தங்கள் உடல் பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி-உஷ்ணம்-சோம்பல், கைகால் அசதி, உடல்மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகிக் குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் அதிருப்தியும், சஞ்சலமும், நிம்மதியில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வருடக் கணக்கில் மருந்துகள் சாப்பிட்டுப் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம்.... 'வீட்டு வாடகை தருவதுபோல் மாதாமாதம் பணம் செலுத்தி வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டேன்; ஒன்றும் பலனில்லை' என்றும் ஏராளமான கடிதங்கள் நமக்கு தினசரி வந்துகுவிகின்றன! பழனி மருந்தைப் பற்றித் தெரியாதவர் பாரில் உண்டோ? மருந்தை உபயோகிக்கும் போதே பலனைப்பெறும் அன்பர்கள் மட்டும் எம்மிடம் சிகிச்சை பெறலாம்—வருடக் கணக்கில் சிகிச்சை பெற நினைக்கும் அன்பர்களுக்குக் கண்டிப்பாக நாம் சிகிச்சை தர இயலாது. கேம்புகளில் நேரில் மருந்துகள் பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். போஸ்டேஜ் இலவசம்.

—: 1 மாத சிகிச்சை மருந்துகள் :—

மிக உயர்தரம்	தங்க பஸ்பம்	உயர்தரம்	முதல் தரம்	இரண்டாந் தரம்
ரூ. 90-00	ரூ. 120-00	ரூ. 42-00	ரூ. 33-00	ரூ. 24-00

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1. போன்: 21448.
சென்னை கிளை ஆபீசில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT. REGD. T. M. No. 204841 REGD 15443.

வைத்தியத் திலகம், வைத்திய ராஜ டாக்டர் S. காளிமுத்து R.M.P., (IND.), V.V.C., A.M.I.H.

பழநி சித்தர் வைத்தியசாலை (T) பழநி S.I.
போன் :- 316
தந்தி : சித்தர்

திராட்சையும் திருமணமும்

"திராட்சையோ! திராட்சை'' என்று கூவிய குரல் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. அந்த இனிய குரலைக் கேட்டவுடனேயே திராட்சை வாங்கிச் சாப்பிடவேண்டும் என்ற ஆசை அழகிரியின் உள்ளத்தில் எழுந்தது.

கிருஷ்ணகிரியில் நின்றுகொண்டிருந்த விரைவுப் பேருந்து வண்டியின் உள்ளே அமர்ந்திருந்த அழகிரி சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான் அவன் எட்டிப் பார்ப்பதைக் கண்டதும் ''திராட்சையோ! திராட்சை'' என்று மீண்டும் கூவிக் கொண்டே கூடையுடன் அவனருகில் வந்தாள் அந்தப் பெண்.

அந்தப் பெண்ணைக் கண்டதும் ஒரு கணம் திகைத்து விட்டான் அழகிரி.. ஏனெனில் அந்தப் பெண் அழகே உருவாக அமைந்திருந்தாள். ஆனால், அவள் உடுத்தியிருந்த ஆடைகள் அவளது ஏழ்மைக் கோலத்தை எடுத்துக் காட்டத் தவறவில்லை. அந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்த நினைவு வரவே அழகிரி சற்று யோசித்தான்.

''என்ன அண்ணே யோசிக்கிறே! என்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கா?'' என்று அந்தப் பெண் கேட்டாள்.

''ஆமாம் தங்கச்சி! அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்'' என்றான் அழகிரி.

''என் அத்தான் அன்பரசு அவர்களுடன் எங்கள் வீட்டிற்கு நீங்கள் முன்பொரு முறை வந்தீர்களே! என்பெயர் தேன்மொழி நினைவில்லையா?''

''நினைவு வந்துவிட்டது தங்கச்சி!'' என்று சொல்லிவிட்டுப் பேருந்தை விட்டுக்கீழே இறங்கி வந்து, ''ஆமாம் நீ புகுமுக வகுப்பு வரை படித்திருந்தாயே! ஏன்இப்படித் திராட்சை வியாபாரம் செய்யறே? உன் அப்பா என்ன ஆனார்?'' என்று கேட்டான்.

''அப்பா இறந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. ஏதோ, உங்க யோசனையைக் கேட்டு, காடாகக் கிடந்த 5 ஏக்கர் நிலத்தையும் திருத்திக் கிணறு வெட்டித், திராட்சை பயிரிட்டார். காய்ப்புக்கு வருவதற்குள் கண்ணை மூடி விட்டார். அந்தத் திராட்சைத் தோட்டத்திலே அப்பப்போ கிடைக்கிற பழத்தை இப்படிக் கொண்டுவந்து விற்றுத்தான் நான் பிழைப்பு நடத்துகிறேன்''

''அன்பரசு உன்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னானே.''

''ஆம்! அது நிறைவேறாமல் போய்விட்டது.''

''ஏன்?''.

''அது பெரிய கதை .. ..'' என்று பெருமூச்சு விட்டாள் தேன்மொழி.

பேருந்து புறப்படத் தயாராகியது.

''அப்ப சரி, தங்கச்சி! நான் மிகவும் அவசரமாகப் பெங்களூர் செல்கிறேன். நாளை இதே பேருந்தில் திரும்பி வருகிறேன். வந்து அன்பரசைச் சந்திக்கிறேன். ஒரே வருடத்தில் 5 ஏக்கர் திராட்சையிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் சம்பாதித்துவிடலாம். எல்லாம் நாளை விவரமாகப் பேசிக் கொள்ளலாம்'' என்றான்.

பேருந்து புறப்பட்டு விட்டது. அழகிரியின் பேச்சைக் கேட்டபடி, அவனது அருகில் அமர்ந்திருந்த ஒரு முதியவர்-அழகிரியிடம் பேசத் தொடங்கினார்.

''தம்பி! ஒரே ஆண்டில் 5 ஏக்கர் திராட்சை மூலம் ஒரு இலட்சம் சம்பாதிக்க முடியுமா?''

''எப்படி?''

''முடியும்!''

''நான் வேளாண்மைப் பட்டம் பெற்று வேளாண்மைத் துறையில் பணியாற்றுகிறேன். எனக்கு வேளாண்மைப்பற்றித் தெரியும். முறைப்படி திராட்சை சாகுபடி செய்தால் ஐந்தாவது ஆண்டில் ஏக்கருக்கு 25,000 முதல் 30,000 கிலோ வரை மகசூல் பெற முடியும். அதிலிருந்து ரூபாய் 25,000 வரை நிகர இலாபம் பெறமுடியும். இந்த அடிப்படையிலேயே, ஒரே ஆண்டில் 5 ஏக்கர் திராட்சையிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம் என்றேன்''.

''சரிதம்பி! எனக்குச் சொந்த ஊரு தருமபுரி. திராட்சைப் பயிரிட்டுப் பார்க்கணும் என்று எனக்கும் ரொம்ப நாளா ஆசை. அதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு தம்பி!''.

''பொதுவாகத் தமிழ்நாட்டில் அனாப்-இ-ஷாகி, பச்சைத் திராட்சை, பன்னீர் திராட்சை, விதையில்லா திராட்சை, செலக்ஷன் நெ. 94, காலி சாகிபி ரகங்களைப் பயிரிடலாம்.''

''திராட்சை சாகுபடி செய்யும் நிலத்தில் எக்காலத்திலும் 6 அடிக்குக் கீழேயே நீர் மட்டம் இருக்க வேண்டும். மணல் கலந்த செம்மண் நிலம் திராட்சைக்கு ஏற்றது. களர் மண் தவிர, சரளை போன்ற மண் வகையிலும் திராட்சைப் பயிரிடலாம். மண், வடிகால் வசதியுள்ளதாக இருக்க வேண்டியது அவசியம். தண்ணீர் வசதி திராட்சைக்கு மிகவும் தேவை. உப்புத் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தக் கூடாது.

திராட்சை நடுவதற்கு நிலத்தில் வரிசை வரிசையாகக் குழிகளைத் தோண்ட வேண்டும். அனாப்-இ-ஷாகி, விதையில்லாத் திராட்சை, பச்சைத் திராட்சை காலி சாகிபி, செலக்ஷன் நெ. 94 முதலிய ரகங்களுக்கு வரிசைக்கு வரிசை 20 அடி இடைவெளியும், செடிக்குச் செடி 10 அடி இடைவெளியும் விட வேண்டும். பன்னீர்த் திராட்சைக்கு வரிசைக்கு வரிசை 10 அடி இடைவெளியும், செடிக்குச் செடி 5 அடி இடைவெளியும் விட்டால் போதுமானது.

''குழிகள் 3 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழம் உள்ளதாக இருக்க வேண்டும். குழிகளை 2 வார காலம் உலர விட வேண்டும். குழிகளில் காய்ந்த சருகுகளைப் போட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தி நுண் கிருமிகளைக் கொல்லுதல் சிறந்தது. குழிகளில் பி.எச்.சி. 10 சத மருந்து தூவி விடுதல் வேண்டும். ஒவ்வொரு குழியிலும் 100 கிலோ மக்கிய தொழு உரத்தையும், 100 கிலோ பசுந்தாள் உரத்தையும் மண்ணுடன் கலந்து நிரப்ப வேண்டும். பசுந்தாளுரம் நன்கு மக்கிய பிறகே குழிகளில் வேர்விட்ட திராட்சைப் பதியங்களை நட வேண்டும். வேர்விட்ட பதியங்களை ஜூன் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை நடலாம்.''

''திராட்சைப் பதியங்கள் எங்குக் கிடைக்கும் தம்பி?''

''வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு எழுதி முன் பணம் கட்டினால், தரமான வேர்விட்ட திராட்சைப் பதியங்கள் கிடைக்கும்''.

''திராட்சைப் பதியங்களை நட்ட பிறகு என்ன செய்ய வேண்டும்?''

''பதியங்களை நட்டபின் தண்ணீர் கட்ட வேண்டும். பின்பு 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும். செடிகளுக்கு ஆதரவாக 6½ அடி உயரமுள்ள மூங்கில் குச்சிகளை நட்டு இணைத்துக் கட்டவேண்டும். பதியங்களை நட்ட 2 மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொரு செடிக்கும் 25 கிலோ மக்கிய தொழு எருவும், 50 முதல் 100 கிராம் வரை அமோனியம் சல்பேட் அல்லது 250 கிராம் கடலைப் பிண்ணாக்கும் இட்டால் செடிகள் நன்கு வளரும். செடியில் மேல் நோக்கி நேராக வளரும் துளிரை மட்டும் விட்டுவிட்டு அவ்வப் போது பக்கத்தில் தோன்றும் துளிர்களை அகற்றி வர வேண்டும்.''

''திராட்சைக்குப் பந்தல் போட வேண்டுமா?''

''தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பந்தல் போட்டுத் திராட்சை வளர்ப்பதே இலாபகரமாக இருக்கிறது.''

''பந்தலுக்குக் கருங்கல், கான்கிரீட், கிளுவை மரத்துண்டுகள் ஆகியவைகளைக் கொண்டு கால் அமைக்கலாம். அவைகளை நட்டு அதன்மேல் கழிகளைக் கொண்டு அல்லது இரும்புக் கம்பிகளைக் கொண்டு பந்தல் அமைப்பது சிறந்தது. தரை மட்டத்திலிருந்து 6 அடி உயரத்தில் பந்தல் அமைக்க வேண்டும். திராட்சைச் செடி நான்கு மாத காலத்தில் பந்தல் உயரத்திற்கு வளர்ந்து விடும். அதன்பின் ½ அடி உயரத்திற்குப் பந்தல் மேல் வளரவிட்டு, வளரும் நுனியைக் கிள்ளி விடவும். இதனால் 2 அல்லது 4 பக்கக் கிளைகள் தோன்றும். அவைகளை நாலாப்பக்கங்களிலும் படர விட வேண்டும். இக்கிளைகள் பந்தலின் ஓரத்தை அடைந்தவுடன், நுனிகளைக் கிள்ளிவிட வேண்டும். இதனால், மேலும் பல பக்கக் கிளைகள் தோன்றும். அவைகளை 1½ அடி இடைவெளியில் மாற்றி மாற்றி இரு பக்கங்களிலும் படர விட வேண்டும்.''

''திராட்சைக் கொடிகளை வெட்டி விடுகிறார்களே அது பற்றியும், உரமிடுவதைப்பற்றியும் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தேன். பெங்களூர் வந்தாச்சு! நான் அவசரமாகப் போகிறேன். இல்லேன்னா அதையும் தெரிந்து கொண்டுபோய் விடுவேன்''.



''மேலும் விவரங்களுக்குக் கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலர் அவர்களை நாடிக் கேட்டுக் கொள்ளுங்களேன்''.

''சரி வருகிறேன் தம்பி. வணக்கம்!'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவருடைய போக்கு அழகிரிக்கு வியப்பை ஊட்டியது.

பெங்களூரில் நடைபெற்ற அலுவலகச் சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொண்டு மறுநாள் குறிப்பிட்டப்படி கிருஷ்ணகிரிக்குத் திரும்பினான் அழகிரி. பேருந்தை விட்டு இறங்கித் தேன்மொழியையும், அன்பரசையும் அழகிரி தேடினான். அவர்களைக் காணவில்லை. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் முதல் நாள் அழகிரியுடன் பேருந்தில் பயணம் செய்த முதியவர் அழகிரியின் அருகில் வந்தார்.

'' தம்பீ வந்துவிட்டாயா ? உன்னைத்தான் எதிர்பார்த்தேன் என்றார்.''

'' ஐயா ! நான் உங்களைத் தேடி வரவில்லையே !''—அழகிரி சொன்னான்.

''அன்பரசையும் தேன்மொழியையும் தான் நீ தேடி வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும் தம்பீ!''

'' ஐயா அப்படி என்றால் .. நீங்கள்?''

'' அன்பரசின் தந்தை, சாதித் திமிரினாலும், செல்வச் செருக்கினாலும் அன்பரசையும் தேன்மொழியையும் திருமணம் செய்ய முடியாதபடி தடுத்து வைத்திருப்பது நான் தானப்பா!''

அழகிரி அதிர்ச்சி அடைந்தான் ! அவனது அதிர்ச்சியைக் கண்ணுற்ற அன்பரசின் தந்தை மேலும் பேசத் தொடங்கினார்.

'' தம்பீ ! அன்பரசின் மேல் உனக்குள்ள அக்கறையைப் பார்த்த பிறகு நான் வெட்கமடைகிறேன். அன்பரசையும், தேன்மொழியையும் இல்வாழ்க்கையில் ஈடுபட நான் மனப் பூர்வமாகச் சம்மதிக்கிறேன். வா ! அவர்கள் இருக்குமிடத்திற்கு உன்னை அழைத்துச் செல்கிறேன்!

* *

தேன்மொழியின் குடிசை ; அங்கே ஒரு சிறு கயிற்றுக் கட்டில் ; அதிலே ஒரு மெலிந்த உருவம்-அடையாளமே தெரிந்து கொள்ள முடியவில்லை அழகிரியினால் ! ஆனால், அந்த உருவம் அடையாளம் கண்டு கொண்டது! வெறுத்து ஒதுக்கிய தந்தையும்

விளைச்சலைப் பெருக்கி
வளமுடன் வாழ்வீர்!
பாங்க் ஆஃப் பரோடா
தரும்
விவசாயக்
கடன் உதவியால்!

உங்கள் நிலம் செழித்து வளம் கொழிக்க, நல்ல விதைகள், சிறந்த உரம், நவீன பண்ணைக் கருவிகள் ஆகியவை அவசியம். ஆனால் அவற்றை வாங்கப் பணம் வேண்டும். அந்தப் பணத்தை கடனாகத் தருகிறது பாங்க் ஆஃப் பரோடா. அதனைப் பெற்று, வேண்டியவற்றை வாங்கி, வளம் காண்பீர்!

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

பாங்க் ஆஃப் பரோடா

தலைமை காரியாலயம்: மாண்ட்வி, பரோடா.

அனேகமாக இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்துக்கும் சேவை செய்ய, 550-க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. மற்ற கிளைகள்: யு.கே., கிழக்கு ஆப்பிரிக்கா, மொரீஷ், பிஜி தீவுகள், மற்றும் கயானா.

Shilpi BOB 10/7'

விருப்பத்திற்குரிய நண்பனும் வந்திருப்பதை உணர்ந்தது அந்த மெலிந்த உருவம். அந்த உருவம்தான் அன்பரசு.

" வா அழகிரி! வாங்க அப்பா !" என்று இருவரையும் அன்பரசு வரவேற்றான் ; எழுந்திருக்க முயன்றான் ; முடியவில்லை ; அதற்குள் அன்பரசின் தந்தை குறுக்கிட்டார்.

" அன்பரசு ! டைபாயிடு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நீ உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டாமப்பா ! பேசாமல் படுத்திரு " என்று சொல்லி விட்டு, " உன்னை நோய்க்கு ஆளாக்கிய என்னை மன்னித்து விடு " என்று மனம் கலங்கிச் சொன்னார்.

அப்போது அங்கு வந்த தேன்மொழி அந்தக் காட்சியைக் கண்டு அதிசயப்பட்டாள் ; நடவாதது நடந்து விட்டது என்ற மகிழ்ச்சி அவளது இதயத்தில் அலைமோதியது.

"அன்பரசு ! தேன்மொழி ! கவலைப்படாதீர்கள் ! தை பிறந்ததும் உங்களுக்குத் திருமணம் "—என்றார் அன்பரசின் தந்தை.

உடனே, அன்பரசு, " அப்பா உங்கள் வார்த்தையை ஏற்றுக் கொள்ள முடியாது " என்றான்.

" அன்பரசு ! முன்பு உன் திருமணத்திற்கு நான் தடை விதித்தேன் ; நீ திருமணத்திற்குத் துடித்தாய் ; இப்போது நான் சம்மதம் தெரிவிக்கிறேன்; நீ மறுப்புக் கூறுகிறாயே !" கலக்கத்துடன் கேட்டார்.

" இல்லையப்பா ! நான் நோயிலிருந்து எழுந்து வந்ததும் திராட்சைத் தோட்டத்தில் வேளாண்மை செய்து ஒரு இலட்சம் ரூபாயைத் தேன்மொழிக்குத் தேடிக் கொடுத்துவிட்டுத்தான் திருமணம் செய்வேன் ! இது என் இலட்சியமப்பா !" —பெருமிதத்துடன் சொன்னான் அன்பரசு.

" உன் விருப்பப் படியே வைத்துக்கொள் ! நான் முதலில் ஊருக்குப் போய் உன் அம்மாவிடம் இந்த இனிக்கும் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். அதற்குள் தேன்மொழியின் திராட்சைத் தோட்டத்தையும் பார்த்துவிட்டுப் போகவேண்டும். அழகிரி நேற்றுச் சொன்னபடி நானும் திராட்சை போடப் போகிறேன் "என்றார்.

தேன்மொழி, அழகிரி, அன்பரசின் தந்தை மூவரும் திராட்சைத் தோட்டத்திற்குப் போனார்கள். தேன்மொழி திராட்சைத் தோட்டத்தில் சிட்டாகப் பறந்து கொண்டிருந்தாள்.

" உடனடியாகத் திராட்சைக்குக் காவாத்து செய்து உரமிடவேண்டும் " என்றான் அழகிரி.

" பணமில்லையே அண்ணை !" என்றாள் தேன்மொழி.

" இனிமேலும் பஞ்சப்பாட்டு பாடாதே ! நிலவள வங்கியின் மூலமாகத் தமிழ்நாடு அரசு கடன் தருகிறது. இன்றைக்கே அங்குச் சென்று உன் பெயரில் கடன் மனு கொடுப்போம். கடன் கிடைக்க ஒரு மாதம் ஆகலாம். அதற்குள் உன் மாமனாரிடம் இருந்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கித் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு, காவாத்து செய்து உரமிட்டு, மருந்து தெளித்து விடு " என்றான் அழகிரி.

தேன்மொழி மறுக்காமல் " சரி " என்றாள்.

" எப்படிக் காவாத்து செய்யறது என்பதையெல்லாம் தெரிவித்துவிடு அழகிரி " என்றார் அன்பரசின் தந்தை.

" அனுபி-இ-ஷாகிக்கு 4 கணுக்களும், விதையில்லா திராட்சை, பன்னீர்த் திராட்சை ஆகியவைகளுக்கு 7 கணுக்களும், பச்சை திராட்சை, செலக்ஷன் நெ. 94 ஆகியவைகளுக்கு 5 கணுக்களும் விட்டுக் காவாத்து செய்யணும்."

"உரம் எவ்வளவு வைக்கணும் அண்ணே?"

" காவாத்து செய்த பின்பு செடிகளைச் சுற்றிலும் ஒரு அடி தள்ளி மேற்பரப்பு மண்ணை 6 முதல் 9 அங்குல ஆழத்திற்கு வெட்டி எடுத்துவிட்டு ஒவ்வொரு செடிக்கும் 5 கிலோ அமோனியம் சல்பேட், 200 கிலோ மக்கிய தொழுஎரு, 200கிலோ பசுந்தாள் எரு, 5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 4 கிலோ மூரியேட் பொட்டாஷ் ஆகியவைகளை இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். பொட்டாஷ் உரத்தில் ஒரு பாதியைக் காவாத்து செய்த உடனேயும், மீதியை 60 நாட்கள் கழித்தும் வைக்கவேண்டும். உரமிட்டவுடன் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். பின்பு வாரம் ஒரு முறை தண்ணீர்ப் பாய்ச்சவும். செடிகள் பூக்கும் சமயத்தில் தண்ணீர்ப் பாய்ச்சக் கூடாது. அறுவடைக்குப் பதினைந்து நாட்கள் முன்னதாகத் தண்ணீர்ப் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும்.

''காவாத்து செய்த 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகு ½ சதம் போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். இது தெளிப்பதற்கும் அவ்வப்போது மருந்து தெளிப்பதற்கும் வேளாண்மைத் துறையினரின் உதவியை நாடுதல் நல்லது. காவாத்து செய்த 30 நாட்களில் பூக்குலைகள் மலரும். அடுத்த 90 நாட்களில் பழங்கள் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்குத் தயாராகும். ஆக மொத்தம் காவாத்து செய்த 120 நாட்களில் பழங்களை அறுவடை செய்யலாம்.''

'' அடுத்த ஆண்டு மே மாதத்தில் மீண்டும் காவாத்து செய்து, உரமிட்டால், மீண்டும் பூக்கள் தோன்றிப் பழங்கள் கிடைக்கும். தமிழ்நாட்டு இயற்கைச் சூழ்நிலை, ஆண்டில் குறைந்தது 2 முறை திராட்சை மகசூல் எடுக்க ஏற்றதாக இருக்கிறது. வட மாநிலங்களில் ஒரே ஒரு அறுவடை மட்டுமே செய்ய முடியும். எனவே, ஒரே ஆண்டில் 5 ஏக்கர் திராட்சை மூலம் ஒரு இலட்சம் ரூபாய் சம்பாதித்து விடலாம் தேன்மொழி '' என்றான் அழகிரி.

'' சரி அண்ணே ! அப்படியே செய்கிறேன் '' என்றாள் தேன்மொழி.

அன்பரசின் அப்பா, அன்று மாலை தருமபுரிக்குத் திரும்பினார். அன்பரசையும், தேன்மொழியையும் நிலவள வங்கிக்கும், மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலரிடமும் அழைத்துச் சென்று கடன் பெறவும், திராட்சைக்கு மருந்து தெளிக்கவும் வேண்டிய ஏற்பாடுகளை அழகிரி செய்தான். மறுநாள் அழகிரி ஊருக்குத் திரும்பினான். தேன்மொழியும், அன்பரசும் கண்ணீர் மல்க வழி அனுப்பினார்கள்.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு ஒரே அறுவடையில் ரூபாய் 1,12,000 கிடைத்ததாகத் தேன்மொழியும், அன்பரசும் கடிதம் எழுதியிருந்தார்கள். அழகிரி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். அடுத்த அறுவடையையும் முடித்துக் கொண்டு தை மாதத்தில்தான் திருமணம் என்று அன்பரசு கோடிட்டு எழுதியிருந்தான்.

அடுத்த தை மாதத்தில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் அன்பரசு தேன்மொழி திருமணம் நடைபெற்றது. எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்த பின்பு ஊருக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான் அழகிரி.

'' அழகிரி ஓர் அனாதை ! அவன் ஓர் அனாதையை மணந்து கொண்டு 2 குழந்தைகளுடன் கஷ்டப்படுகிறான். ஆனால், இது போன்ற நல்ல காரியம் செய்வதில் முன்னால் நின்று செயலாற்றுவான் '' என்று தன் அப்பாவிடம் அன்பரசு சொன்னான்.

'' அழகிரியும் இனிமேல் என் பிள்ளை மாதிரிதான் ! என் சொத்தில் பாதி அவனுக்கு எழுதப் போகிறேன் ! '' என்றார் அவர்.

'' அதை முதலில் செய்யுங்களப்பா'' என்றான் அன்பரசு.

'' என் பணிக்குப் பணத்தைக் கொடுத்து களங்கப் படுத்தி விடாதீர்கள். நான் ஓர் அனாதை! அதனால்தான் எனக்கு அனாதைகளுக்கு உதவும் மனம் உள்ளது! நான் பணக்காரனாகி விட்டால் இந்த இரக்க உள்ளம் இருக்குமோ இருக்காதோ ? என் மேல் உங்களுக்கு அன்பு இருக்குமானால் உடனே ஒரு திராட்சைத் தோட்டம் ' அமையுங்கள் ! என் நினைவு உங்களிடம் என்றும் நிலைத்து நிற்கும் ! '' என்று கூறி விட்டுப் புறப்பட்டு விட்டான் அழகிரி.



மாணவர்களுக்கு வழிகாட்டும் மாபெரும் மன்றம்

" கடமை கண்ணாகும் ; காலம் பொன்னாகும் '' இந்தத் திருவாசகத்தைப் படித்துக் கொண்டே மாணவர் மன்றத்தினுள் நுழைகிறோம். புலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் ஆங்காங்கே தத்தம் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். போட்டிகள் தேர்வுகள், விழாக்கள் முதலியன நடத்தி மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வருவது இந்த மாணவர் மன்றம்.

சென்னை ஜார்ஜ் டவுனி'லுள்ள இந்த மன்றம், 1932-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று, இன்றளவும் சீரும் சிறப்புமாக நடந்து வருகிறது. அதற்குக் காரணம் இம் மன்றத்தைப் போற்றி வளர்த்த பேராசிரியர் மயிலை **சிவமுத்து**, வீரத் தமிழன்னை டாக்டர் **தரு**மாம்பாள் **ஆகியோரேயாவர்**.

மறைந்த பேராசிரியர் மயிலை சிவமுத்து **அவர்கள்** தம் வாழ்நாள் **முழுவதும்** மன்றத்துக்காகவே **உழைத்தார்**. பள்ளிப் பிள்ளைகளைக் கண்டால் அவருக்குக் கொள்ளை ஆசை. குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கென்றே அவல், கடலைகளை நிறைய வாங்கித் தயாராக வைத்திருப்பார். எல்லாருக்கும் ஒவ்வொரு பிடி கொடுத்து அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்வார். குழந்தை உள்ளம் உள்ள பேராசிரியரின் மாணவர் தான் அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள் ; இவரும் சில காலம் மன்றத்துக்காகப் பணியாற்றியிருக்கிறார்.

நாற்பதாண்டுகளாக நற்பணியாற்றி வரும் இந்த மாணவர் மன்றத்தின் நோக்கங்கள் பலவாகும். முத்தமிழை வளர்த்தல் ; குழந்தைகளிடம் கலையுணர்வைத் தூண்டல் ; மாணவர்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்க ஊக்குதல் ; சிறந்த தமிழ் நூல்களை வெளியிடுதல்; முதியோர் கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றுதல் முதலியனவாகும்.

முதலில் ஒரு சிறிய வீட்டில் துவக்கப்பட்ட இந்த மன்றம், பிறகு ஓரளவு வசதியான ஒரு வாடகை இடத்தில் அமைந்தது ; இப்போது இந்த மன்றம் சொந்தக் கட்டடத்தில் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம், மாணவர்களும், ஆசிரியர்களும், பொது மக்களும் தந்த நன்கொடையேயாகும்.

இம்மன்றத்தின் சார்பில் ஆண்டு தோறும் மாணவர்க்குப் பயனுள்ள பல போட்டிகள் நடைபெறுகின்றன. கதை, கட்டுரை, கவிதை, ஓவியம், பேச்சு, கையெழுத்து முதலிய போட்டிகள் நடக்கின்றன. இவை தவிரக் குறள் ஒப்புவித்தல் போட்டி, பாப்பாப் போட்டியும் நடக்கின்றன. இந்தப் போட்டிகளில் தமிழகம் முழுவதும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து சுமார் இரண்டு இலட்சம் மாணவ, மாணவிகள் கலந்து கொள்கின்றனர்.

மலேயாவில் வாழும் தமிழ் மக்களுக்காகத் ' தமிழ்மணி ' பட்டத் தேர்வும் இம்மன்றம் நடத்தி வருகின்றது. இப்படி எல்லா வகையிலும் சிறந்து விளங்கி, மாணவர்களுக்காகவே நடத்தப்பட்டு வரும் இதுபோன்ற ஓர் அமைப்பு தமிழகத்தில் இதுவே பெரியதாகும்.



மயிலை சிவமுத்து

இவை மட்டுமா ? இங்குப் பேரறிஞர் அண்ணா தமிழ்க் கல்லூரியும், மாணவர் மன்றத் தொடக்கப் பள்ளியும், டாக்டர் தருமாம்பாள் படிப்பகமும், மணியரசர் நூல் நிலையமும் உள்ளன. மன்றத்தின் சார்பில் ' நித்திலக் குவியல் ' என்னும் திங்களிதழும், மாணவர் மன்ற வானொலிச் சிறுவர் மன்றமும் சிறப்பாக நடந்து வருகின்றன.

தமிழகத்துக்குச் சுற்றுலா வரும் மாணவர்கள், ஆசிரியர்கள் இம் மன்றத்திற்கு வந்து தங்கி மகிழ்வுடன் செல்வத்தைப் பார்க்க முடிகிறது. 1957-ல் வெள்ளி விழாக் கொண்டாடிய இந்த மன்றத்தின் கட்டடத்துக்குச் ' சிவமுத்து நிலையம் ' என்ற பெயரை பேரறிஞர் அண்ணா அவர்கள் சூட்டி மகிழ்ந்தார்.

இம்மன்றத்துக்காக உழைத்த தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்களின் திருஉருவச் சிலையை அண்மையில் மன்றத்தில் நிறுவவும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதனைத் திறந்து வைக்கவும் தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மன்றத்தில் பல்லாண்டுகளாகத் தொடர்பு கொண்டு பம்பரம் போலச் சுழன்று நற்பணி புரிந்து வருகின்ற தலைவர் புலவர் கோ. வில்வபதி, செயலாளர்கள் புலவர் நணிகை உலகநாதன், மி. ச. நடேசன், மற்றும் ப. கி. பொன்னுசாமி, மா. ரா. வஞ்சிக் கோவன் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மாணவர் மன்றம் மாணவர் உலகுக்கு ஓர் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து வருகிறதென்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

"சொந்த முயற்சியால் எதையும்
சாதிப்பதே ஒரு நாட்டின் வலிமை.
பிறநாடுகளிலிருந்து உதவி
பெறுவதால் அல்ல"

— திருமதி இந்திரா காந்தி

இந்தப் பொன்னாளில் இவ்வார்த்தைகள் தொழில் துறைப் பெருக்கத்தையும் முன்னேற்றத்தையும் நோக்கி நம்மை மேலும் ஊக்குவிக்கட்டும்.

கொதிகலன் தொழில் நுட்பத்தை நாங்கள் புதிதாகக் கற்ற துவக்க நாட்களிலிருந்தே சுய சார்பு என்பது எங்களுக்கு அர்ப்பணிப்புக்கான விடா முயற்சியாக இருந்து வருகிறது. இங்கேயே கிடைக்கும் மூலப் பொருள்களுக்கான வழி வகைகளையும் தயாரிப்பில் புதிய உத்திகளையும் புதிய முறைகளைக் காணும் ஆய்வுகளையும் பெருக்குவதில் எங்கள் திறமையையும் அறிவையும் ஒவ்வொரு ஆண்டு செலுத்தி வந்திருக்கிறோம். உலகின் எந்தப் பகுதியிலும் தயாரிக்கப்படக் கூடிய மிகப் பெரிய அளவு கொதிகலன்களுக்கு ஈடாகத் தயாரிக்கும் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம்.

இன்று நம் நாடு கொதிகலன்களை இறக்குமதி செய்யத் தேவையில்லை. BHEL தயாரிக்கும் கொதிகலன்கள் நாட்டின் பல பகுதிகளிலும், வெளி நாடுகளிலும் விரைவில் இயங்கிவரும். அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 230 கோடி. இதன் மூலம் ரூ. 160 கோடிக்கு மேல் அந்நியச் செலாவணி மீதப்படும். ஹைதராபாத்—ஹரித்துவாரிலுள்ள எங்கள் சகோதர நிறுவனங்களின் துணையோடு வளமான வருங்காலத்துக்கு தேவையான மின்சக்தியை உற்பத்தி செய்கிறோம்.

பல நாடுகளின் கடுமையான போட்டிகளுக்கு இடையே மலேசியாவில் ஒப்பந்தக் கட்டளை பெற்று கொதிகலன்களை நிறுவுவதில் ஈடுபட்டுள்ளோம். இந்த முயற்சி சுயசார்புக்கு ஓர் உருவாக்கம்.

வளம் பெருக்கும் மின்சக்தி உற்பத்திப்பணியில்...

BHEL

பாரத் ஹெவி எலெக்டிரிகல்ஸ் லிமிடெட்
(இந்திய அரசின் ஓர் நிறுவனம்)
யூனிட்: ஹை பிரஷர் பாய்லர் ப்ளான்ட்
திருச்சிராப்பள்ளி-14

பதிவு அலுவலகம்:
5 பார்லிமெண்ட் தெரு
புது டெல்லி-1.

மாடங்கள் பலவகைப்படும்.
'வீரர் கண்படுக்கும் மாடம்' ;
'திரைப்பொருள் கிடக்கும் மாடம்' ;

'மகளிர் மணிக்கலம் வைக்கும் மாடம்'— இவையல்லாத இடம் நகரில் இல்லை எனச் சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் எழுதியுள்ளார். ஒவ்வொன்றும் முகில் தோய்ந்த கன்று போன்று பலவாக நிறைந்திருந்ததை "மாட ஈட்டகம்" என்றும் குறித்துள்ளார்.

இம்மாட அமைப்பில் படகுகளும் கட்டப்பட்டன. அவை "மாடப்புனை" என்றும், "நீரணி மாடம்" என்றும் பெயர் பெற்றன.

மாண்புடைய மாடம்

மாடம் மாண்புள்ள வளமனையாகத் திகழ்ந்தது. மாடம் எனும் சொல்லே மாண்புடையது என்னும் பொருளைக் கொண்டது. மாண் என்பது அதன் மூலச்சொல். அது மாடு—மாடம்—மாடி என வளர்ந்தது.

'சேண்' என்றால் நெடுந்தொலைவு என்னும் தன்மையைக் குறிக்கும். அது 'சேடு' என்று ஆகி நெடுந்தொலைவை உடையது என்னும் எல்லைப் பொருளினைத் தரும். 'சேடு' 'சேடி' ஆகி, தொலைவில் உள்ள இடம்—நாடு (விஞ்சையர் நாடு) எனப் பொருள் தரும்.

கோண்-வளைவு ; கோடு-வளைவை உடையது ; கோடி-வளைந்த பொருள்.

இவை போன்றே,
மாண்-மேம்பட்ட பெருமை ;
மாடு-மேனிலைப் பெருமையை உடையது ;
மாடி-மேனிலை இடம்-என்று பொருள் வளர்ந்தது.

மாடு என்னும் சொல் பல பொருளைத் தருவது. இங்கு இடம், பக்கம், செல்வம், பொன் எனும் பொருள்கள் நான்கும் இயைந்து நிற்கும் சொல்லாய் மேம்பட்ட நிலையைக் குறிக்கிறது.

கூடு-கூடம் ; பாடு-பாடம் என்றாவது போல் மாடு-மாடம் என்றாயிற்று. மாடம் என்பது மாடு என்னும் சொல்லில் இயைந்த நான்கு பொருள்களுக்கேற்ப மாளிகைக்குப் பக்கமாய்,-வாழ்வியலின் பக்க வளமனையாய்ச் செல்வச் செழிப்பின் சின்னமாய்ப் பொன் பேழையாய்த் திகழ்ந்தது.

இம்மாடம் முன்னர்க் கண்டது போன்று ஒரு நிலையாகவும், மேன்மேல் அடுக்கடுக்காகப் பல நிலையாகவும் கட்டப்பட்டது. அக்கால மாடம் மலைபோன்று காட்சியளித்ததாம். முகிற்கூட்டம் படியும் அளவில் உயரமாய் விளங்கிற்றாம்.

"மழையென மலையென மாடம் ஓங்கி"
— மலைபடுகடாம்.

"மழையென மருளும் மகிழ்செய்
மாடம்"—பொருநராற்றுப்படை.

"மழையாடும் மலையின் நிவந்த மாட
மொடு"—மதுரைக் காஞ்சி.

"உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇ"
—பெரும்பாணாற்றுப்படை

மாடத்தில் ஏறுவதற்கு ஏணிப்படி உயர்த்தி நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு நகைச்சுவைபட உவமை கூறினார் உருத்திரங் கண்ணனார் ;

"வானம் வீழ்ந்துவிடாமல் ஊன்றி முட்டுக் கொடுத்தது போன்று ஏணி சாத்தப்பட்டிருந்ததாம். ஏற, அருமையாய் விண்ணைக் குத்துவது போன்று உயர்ந்து வளர்ந்த மாடத்தில், இரவில் ஏற்றப்பட்டுக் கொழுந்து விட்டெரியும் விளக்கு, கடலில் வரும் கலங்களைக் கரைந்து அழைக்கும் "கலங்கரை விளக்கமாக" இருந்ததாம்.

ஏழு நிலை மாடம்

கோவை இளஞ்சேரன்

இம்மாடங்கள் வீதியின் இருமருங்கிலும் அமைந்திருந்தன. வீதி வையையாறு போன்றும், பக்கங்களில் அமைந்த மாடங்கள் ஆற்றின் மேடான இரு கரைகள் போன்றும் தோன்றியதாம்.

இம்மாடங்களை மாளிகையுடன் கூட்டி அமைப்பர். அது மாட மாளிகை எனப்பட்டது. மாடம், மாளிகையின் முன்னரும், மருங்கிலும், உட்புறத்தும் அமைக்கப்பட்டது. மாளிகையின் வாயில் முகப்பு, கோபுரம் போன்றும் அமைக்கப்படும். அம்முகப்பை மாடமாகவும் அமைத்தனர். இதனை,

> “ கோபுரமின்றி வாசலை மாடமாகவும்
> அமைத்தலின் மாடம் என்றார் ”

என மதுரைக்காஞ்சி உரையில் நச்சினார்க்கினியர் குறித்துக் காட்டினார்.

எழுநிலை மாடம்

நெடுமையாய் உயர்ந்த நிலையில் கட்டப்படும் மாடம் “ நெடுநிலை மாடம் ” (சிலப்பதிகாரம்) என்று வழங்கப்பட்டது. முன்னர் ‘ நெடுநிலைக்கந்து ’ ; ‘ நெடுநிலைக் கோட்டம் ’ எனப்பட்ட கட்டுகளின் வளர்ச்சியே இந்த ‘ நெடுநிலை மாடம் ’ எனலாம். அடுக்கடுக்காக மேல் நிலையில் கட்டப்பட்டதால் இது ‘ நிரைநிலை மாடம் (மதுரைக் காஞ்சி) எனவும் குறிக்கப்பட்டது.

இவ்வாறு நெடுநிலைமாடம் என்றும், நிரைநிலை மாடம் என்றும் குறிக்கப்படும் மாடம் ஏழு நிலைகளைக் கொண்ட மாடமாக அமைந்தது. ஏன் ஏழு நிலைகளில் கட்டப்பட்டது ? இப்படியொரு வினா என் உள்ளத்தில் எழுந்தது. இவ்வினாவிற்கு விடை காணுதல் ஒரு நல்ல ஆய்வாயிற்று. இந்த ஆராய்ச்சியால் புலப்பட்ட விளக்கங்கள் பழந்தமிழ்ப் பெருமகனின் வாழ்வியற் செம்மையை உலக அளவிலும் உயர்த்திக் காட்டுவன ஆகின்றன.

இக்காலத்துப் பொறியியல் அறிவியலை மணந்து பெற்றெடுத்து வளர்த்துவரும் கட்டிடக் கலை ‘ அம்மாடியோ ’ என வியக்கத்தக்கது. மூக்கின் உச்சியில் சுட்டு விரலைச் சேர்த்து அகல விழித்து வியக்கத்தக்கது. 300 மாடிகள் கொண்டனவாய்ப் பல்வகைக் காலநிலைக்கேற்ற அமைப்புக்களுடன், நினைத்தால் நினைத்தபடி நிகழ்த்தும் பொறியமைப்புகளும் கொண்டவை இக்கால மேல்நாட்டு மாடங்கள். ஆயினும், இவை நம் பழந்தமிழ்நாட்டு எழுநிலை மாடத்திற்கு ஈடாகா என்றால் கேட்போர்க்கு நகைப்புத் தோன்றலாம். சொல்வோனை ஏளனமாக என்னலாம். ஆனால், இது உண்மை என்பதை நாட்டுவதே இக்கட்டுரை.

மேல்நாட்டுப் பலநிலை மாடங்கள் வாய்ப்புகளையும், வனப்புகளையும் வாழ்வுத்துணைகளையும் செயற்கைப் பாங்கில் ஏற்படுத்தித் தருவன. அவை உடலுக்கு நிலைப்பான நலத்தைத் தரும் என்று உறுதியாகக் கூற இயலாது. பழந்தமிழ்நாட்டு எழுநிலைமாடம் இயற்கை நலங்களை இயற்கைப் பாங்கு சிதையாமலே துய்க்கச் செய்யும் அமைப்புகளைக் கொண்டது. காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றபடி இயற்கையின் பயனைக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டது.

இவ்வமைப்புதான் புதுமையும் பெருமையும் மிக்கது. எழுநிலைமாடம் என்பது ஏழு அடுக்கு மாடி வீடு. ஒவ்வொரு அடுக்கும் முன் குறிக்கப்பட்டது போன்று மேல் வளைவாய் ஓட்டப்பட்டு மேல்தளம் மட்டமாய்ப் பூசப்பட்ட ஓட்டுக் கட்டிடம். முதல் அடுக்காம் கீழ்த்தளம் சரக்கு அறை. இது வாழ்வுக்கு வேண்டப்படும் பல்பொருள்கள் நிறைந்த பண்டாரம். மேல் எழுந்த ஆறு மாடிகளும் தனித்தனியே ஆறு பருவங்களுக்கு உரியவை.

தமிழர் ஓராண்டுக் காலத்தை இரண்டிரண்டு திங்கள்களாகப் பகுத்து, ஆறு பருவங்களாகக் கொண்டனர் :

சித்திரை, வைகாசி—இளவேனிற் பருவம்.
ஆனி, ஆடி—முதுவேனிற் பருவம் (கோடைக்காலம்).
ஆவணி, புரட்டாசி—கார்ப் பருவம் (மழைக்காலம்).
ஐப்பசி, கார்த்திகை—கூதிர்ப்பருவம் (நடுக்குங் குளிர்காலம்).
மார்கழி, தை—முன்பனிப் பருவம் (விடியற்காலப் பனி).
மாசி, பங்குனி—பின்பனிப் பருவம் (அந்திப்பனி).



இவ்வாறு பருவங்களின் இளவேனிற் பருவம் ஒன்றே தமிழகத்து வாழ்வியலுக்கு இனிமையான இன்பப் பருவம். இக்காலத்தில் இப்பருவம் இரு திங்கள்கள் தள்ளி மாற்றமடைந்துள்ளது. ஆனால், நம் கீழை நாடாம் மலைநாட்டில், இன்றும் இளவேனிலாகச் சித்திரை, வைகாசி அமைந்துள்ளது. இளவேனில் அல்லாத பிற பருவங்கள் வாழ்விற்கு ஒவ்வொரு வகையில் இடையூறு தருவன. அவ்வவ்விடையூறுகளைக் குறைத்து நலமாக்கும் பாங்கில் இவ்வெழுநிலை மாடத்தில் மேல் ஆறு மாடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பருவத்திற்கும் அதற்குரியதாய்க் கட்டப்பட்ட மாடத்தில் உறைந்து வளமான வாழ்வில் நலமான பயன் துய்த்தனர். எல்லாப் பருவகால வாழ்வையும் சுவையுடையதாகவே வைத்துக்கொண்டனர்.

அழிவற்ற மிகப்பெரும் செல்வம் படைத்தோரே இம்மாடங்களை அமைத்துக்கொண்டனர். பழந்தமிழகத்துப் பெருநகரங்களில் இவ்வெழுநிலை மாடங்கள் பல்கி நிறைந்திருந்தன. எழுநிலை மாடத்தின் பொதுவான வளங்களைத் தமிழ் இலக்கியங்கள் கொண்டு அறியலாம்.

“ ஏழுயர் மாட மூதூர் ”—என்று பாடினார் வில்லிபுத்தூரார்.

‘ அழகின் அணிகலமாய் அமைந்த எழுநிலை மாடம் நல்ல கலைத் தொழிலுடன் விளங்கியது. நீரூற்றுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனைப் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் என்னும் குறுநிலமன்னர்,

> “ ஏரணி அமைந்த எழுநிலை நல்வினை
> நீரணி மாடம் ” —என்றார்.

‘ அகிற்புகை வெண்மையாக ஆவிபோல் பெருகி, உள்ளிடமெல்லாம் நிறைந்து விம்மி வெளிவரும் மாடம் ’—என்பதைச் சீவக சிந்தாமணி,

“ இன்னகில் ஆவி விம்மும் எழுநிலை மாடம் ”—என்கிறது.

“ இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடம் ”—என்னும் முல்லைப்பாட்டிற்கு,

‘ தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும், மணியாலும் சிறப்புப் பெற்று உயர்ந்த ஏழுநிலையினுடைய மாடம் ”—என்று நச்சினார்க்கினியர் உரைவிளக்கந் தந்துள்ளார்.

இம்மாடங்களில் “ அரமியம் ” என்னும் நிலாமுற்றங்கள் இருந்ததை,

“ நிரைநிலை மாடத்து அரமியம் ” என்று மதுரைக்காஞ்சியும், சிலப்பதிகாரமும் இயம்புகின்றன.

மாடத்துச் சுவர்களில் பூவேலைப்பாடுகள் ஓவியமாகவும், கதையாகவும் வடிக்கப்பட்டிருந்தன. மலர்க்கொடிகள் படர விடப்பட்டிருந்தன. பெரிய சுடுமண் தொட்டிகளாம் தாழிகளில், நீர் நிரப்பப்பட்டு நீர்ப்பூக்களாகிய குவளையும், செங்கழுநீரும் வளர்க்கப்பட்டன. இது இக்காலத்துத் தொட்டிச்செடி போன்றது. மாட வளைவுகளில் முத்து மாலைகள் முறையாக நாற்றித் தொங்கவிடப்பட்டிருந்தன. பருவ நிலைக்கேற்பக் காற்று வரவும், அடைக்கவுமாகப் பல்வகையான மான்கண் காலதர், சாளரம், கால்போகு பெருவழி, நேர்வாய்க்கட்டளை (சாலேகம்), எனும் சாளர வகைகள் அமைக்கப்பட்டிருந்தன. அச் சாளரங்களிலும் மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. வாயில்களில் யானைத் தந்தங்கள் அணி செய்யப்பட்டு மகர வாசிகைகள் இடம் பெற்றிருந்தன. பல்வகை இசைக்கருவிகள் இருந்தன. யவனர் நாட்டினின்றும் வந்த அழகிய பாவை விளக்குகளும், இரும்பு விளக்குகளும் ஆங்காங்கே இடம்பெற்றிந்தன; மகளிர் பந்தாடும் சிற்றிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. “ பெறற்கரும் சிறப்பின் துறக்கம் ஏய்க்கும் நெடுங்கால் மாடம் ”—என்று பட்டினப்பாலை பாடும் அளவில் வீட்டுலகமே போன்று (சுவர்க்கம்) இன்பக் கொள்கலமாய் எழுநிலைமாடம் அமைக்கப்பட்டிருந்தது.



பிற்காலத்து வள்ளலார் இராமலிங்க அடிகளும் இவ்வெழுநிலை மாடத்தைக் குறித்து வியந்து பாடியுள்ளார். பொன்னம்பலக் காட்சியினைக் காணும் அவர், அப்பொன்னம்பலத்தை எழுநிலை மாடத்தின் மேல் கண்டாராம். எவ்வாறு ?

> ‘ ஒளி மலை ஒன்றின்மேல் வீதி உண்டாச்
> சுது—வீதி நடுவொரு மேடை இருந்தது—
> மேடைமேல் அங்கொரு கூடம் இருந்தது’,
> “ கூடத்தை நாடக் கூடம் மேல் ஏழ்நிலை
> மாடம் இருந்ததடி—அம்மா—மாடம்
> இருந்ததடி ;
>
> ஏழ்நிலைக் குள்ளும் இருந்த அதிசயம்
> என்னென்று சொல்வேனடி—அம்மா—
> என்னென்று சொல்வேனடி ”—

என ஏழ்நிலை மாடத்தைக் கண்டு வியக்கின்றார். அவ்வேழ்நிலை அடுக்கில் ஒவ்வொன்றி

லும் ஒன்பது மணி ஒளிகள் முறை முறையே, உயர்ந்து உயர்ந்து ஒளிர்வதாக வியக்கின்றார். இவ்வாறு பாடப்பட்ட பாடல் உடம்பையே பொன்னம்பலமாகக் கண்ட நுண்பொருள் கொண்டது என்பர்.

உரன்வவராம் சித்தர்களும் உடம்பினுள் ஓடும் உயிர் மூச்சின் ஓட்டம் எழு படிகளில் உயர்வதாகக் கண்டனர். அவ்வேழையும் வயிற்றுமூலம், நீரகம், கொப்பூழ், நெஞ்சிரல், தொண்டைக்குழி, சுழிமுனை, மண்டையுச்சி என மேன்மேல் அடுக்காக வகுத்தனர். உயிர்மூச்சு, இவ்வேழு அடுக்குகளிலும் ஏறி உயர்வதாகக் குறித்தனர். அதனையும் ஒரு கட்டிட அமைப்பேபோல் எழுநிலை அடுக்கு மாடமாக உருவகம் செய்தனர்.

சித்தர்கள் உள்ளத்தில் எழுந்த இக்கருத்தும், வள்ளலார் வாய்மொழியும் நம் பழந்தமிழரது எழுநிலை மாடத்தின் நிழல்களே எனலாம்.

ஆறு பருவத்திற்கு ஆறு மாடி

எழுநிலை மாடங்கள் இன்பமாகப் பொழுது போக்குவதற்காகவே கட்டப்பட்டன. செல்வக் கணவன் மனைவி பருவகால மாற்றங்களின் இடையூறு தோன்றாமல் கூடியிருந்து இன்பம் துய்ப்பதற்காகவே, அமைக்கப்பட்டன. இந்த இன்பம் நிலா ஒளியில் நிகழ்வதாக இருந்தது. இதற்கு வாய்ப்பாக எழுநிலைமாடங்களில் ‘ நிலாமுற்றங்கள் ’ அமைக்கப்பட்டிருந்தன.



நிலாமுற்றம் என்பது மேற்கூரை மூடப்படாத மொட்டைமாடி. நிலவின் ஒளியில் படிவதற்கும் இம்முற்றம் பயன்படும். காதல் மேவியவர் நிலாவொளியில் கட்டிலில் இன்புறுவர். இதனை நாகரிகமாக “ நிலவுப்பயன் கொளல் ” என்று குறித்தனர். இவ்வாறு கூறுதலை இலக்கணம் “ இடக்கர் அடக்கல் ” என்று குறிக்கும்.

இந்த நிலவுப்பயன் கொள்ளுதலை இலக்கியங்கள் ஒருங்குநின்று பேசுகின்றன :

“ நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து ”—நெடுநல்வாடை.
“ வெண்ணிலவின் பயன் துய்த்தும் ”—பட்டினப்பாலை.
“ நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றம் ”—சிலப்பதிகாரம்.
“ சுடர்வெண் ணிலவின் தொழிற் பயன் கொண்ட மிசைநீள் முற்றம் ”—பெருங்கதை.

எனவே, நிலவுப்பயன்கொள்ளும் நிலா முற்றங்கள் எழுநிலை மாடத்தில் முன்புறத்திலும் பின்புறத்திலும் நீட்டி அமைக்கப்பட்டிருந்தன. எழுநிலை மாடத்தை இன்ப மனை எனலாம்.

இனி, இந்த இன்பமனை எவ்வாறு பருவங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருந்தது என்பதைக் காணலாம்.

கண்ணகியும் கோவலனும் திருமணம் முடிந்த பின்னர், எழுநிலை மாடத்தில் அமைந்து கூடி இன்பமாகக் காலங் கழித்தனர்.

மாதவியினுடைய மாளிகையிலும் எழுநிலைமாடம் இருந்தது. கோவலனும் மாதவியும் அதிற் கூடி இன்ப வாழ்வில் மூழ்கினர். இதேபோன்று சீவகன் காந்தருவதத்தையுடனும், உதயணன் வாசவதத்தையுடனும் எழுநிலை மாடத்தில் கூடியிருந்ததை அவ்வக்காப்பியங்கள் பேசுகின்றன.



கோவலன் பிரிந்ததும் மாதவி தனித்துத் துயரமடைந்து,

“ நெடுநிலை மாடத்து இடைநிலத்து ஆங்கோர்
படையமை சேக்கைப் பற்றியுள் வீழ்ந்த”

தைக் கோசிகன் கூற்றுகச் சிலம்பு பேசுகிறது. இவ்வடிகளைச் சிலம்பின் உரையாசிரியர்,

“ எழுநிலத்தையுடைய மாடத்து நாலா நிலத்து ஒரு படுக்கை
யமைந்த சேக்கையிடத்தே மயங்கி வீழ்ந்த செய்தியும் ”—என்று

விளக்கியுள்ளார். இதைக்கொண்டு நெடுநிலை மாடம் என்பது எழுநிலைமாடம் என்பதையும், இடைநிலம் என்பது நான்காவது மாடி என்பதையும் அறியலாம். (நெடுநிலை — எழுநிலை ; இடைநிலம்—நாலா நிலம் என மனையறம் படுத்த காதையிலும் குறிப்புரை எழுதியுள்ளார்).

ஒரு குடையின் கீழே..

தமிழர் வாழ்வில் சிறப்பிடம் பெற்று விளங்குவது குடை !

“ திங்கள் மாலை வெண்குடையான் ”
“ குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் ......”
“ ஒரு குடைக் கீழ் உலகாண்ட”

என்றெல்லாம் வரும்போது ஆட்சிப் பாதுகாப்பின் ஒரு சின்னமாகக் குடை சித்திரிக்கப்படுகின்றது. ஆளும் உரிமையின் சின்னமாகவும் அச்சொல் பயன்படுத்தப்பட்டது.

“செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ் தங்கும் உலகு” எனும் குறளால் மன்னர்களின் வெண்கொற்றக் குடைகள் பற்றித் தெரிந்தும் இருக்கிறோம்.

வரலாற்றுப் பெருமை போகச் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் ஒரு மூலையிலே குடை நிச்சயமாக ஓர் இடத்தைப் பெற்றிருக்கின்றது. மழைக் காலம், வெய்யிற் காலம் இரண்டிலும் பாதுகாப்புக்குப் பலரிடம் கையோடு இருக்கும் கருவி—குடை ! பலத்த மழைக் காலத்தில் குடை மட்டும் இல்லை என்றால் பல வேலைகள் தடைப்பட்டே போகும். அந்த நேரத்தில் குடையில், ஒதுங்குவதற்கு இடம் தந்து “கொடை வள்ளல் ” என்ற பட்டத்தைச் சிலர் சுலபமாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். மறந்து வைத்து விட்டுக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கும் படிச் செய்யும் பொருட்கள் வரிசையில் குடையே முதலிடம் பெறுகின்றது.

ஓர் அரசியல் தலைவர், அண்மையில் மற்றொருவருடைய வாதத்துக்குப் பதிலளிக்கையில் “உங்கள் வாதம் ‘லேடீஸ்’ குடைபோல இருக்கின்றது. இது மழையையும் தாங்கவில்லை! வெய்யிலுக்கும் பயன்படவில்லை” என்பதாகக் கூறினார். ஆனால், ஆண்களின் கருப்புக் குடை அப்படி அல்ல.

ஒரு குடைக் கீழ்

சில பல சமயங்களில் ஆயுதமாகவும் குடை பயன்படுகின்றது. அண்மையில் செங்கற்பட்டு அருகில் குடையைக் கொண்டு, சிறுத்தைப் புலியைக் கொன்றவர் பற்றிய செய்தி அனைவரும் அறிந்ததே.

ஒரு குடை ரூபாய் 150

தொழில் என்ற முறையில் குடை செய்யும் தொழில், உள் நாட்டுத் தேவைப் பொருட்களை வழங்கும் அங்காடியில் ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது. இந்திய நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால் சுமார் 400 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 2 கோடி குடைகள் அவற்றில் தயாரிக்கப்படுகின்றன. இக்குடைகளின் மொத்த விலைமதிப்பு சுமார் ரூ. 25 கோடி ஆகும். பம்பாயில் சுமார் 100 தொழிலகங்கள்; கேரளத்தில் 150 ; டில்லியில் 35 ; கல்கத்தாவில் 90 ; தமிழ் நாட்டில் சுமார் 25 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இத்தொழிற்சாலைகளில் சுமார் 15,000 பேர் வேலை செய்கிறார்கள். இத்தொழிலகங்கள், சிறு தொழில் அல்லது குடிசைத் தொழில் போல இயங்குகின்றன. குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே இந்த வேலை தீவிரமாக நடைபெறுகின்றது. கேரளத்தில் ஆண்டுக்குச் சுமார் 9 மாதக் காலமும், மற்ற இடங்களில் டிசம்பரிலிருந்து ஜூன் வரை 7 மாதக் காலமும் இந்த வேலை நடைபெறுகின்றது. மழைத் துளி விழத் தொடங்கியதும் கூடவே தோன்றும் ஒரு தொழில் ‘ குடை ரிப்பேர்’!

உடும்பு, பல்லி இனத்தைச் சேர்ந்த பெரிய பிராணி. இதன் தோலிலிருந்து, அழகிய பைகள், காலணிகள், பர்ஸ்கள் மற்றும் கஞ்சிரா எனும் தாள வாத்தியக் கருவி முதலியன செய்யப்படுகின்றன.

குடைகள் வகையைப் பொறுத்த வரை, ஒன்று ரூ. 8-லிருந்து ரூ. 15 வரை பல்வேறு வகை விலையில் குடைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், சாதாரண மானவர்கள் வாங்கும் பெரும்பான்மையான குடை ஒன்றின் விலை சுமார் ரூ. 10 என்ற அளவில் உள்ளது.

தயாராகும் 2 கோடி குடைகளில் சுமார் 35 சதவிகிதக் குடைகள் மோட்டாத் துணியால் ஆனவை ; 40 சதவிகிதம் நடுத்தரத் துணியினாலும், 25 சதவிகிதக் மென்மையான தரமான துணியினாலும் ஆனவை. 5 சதவிகிதம் குடைகள், நைலான், ரேயான் குடைகளாகும்.

பம்பாய் செஞ்சுரி மில்ஸ் தான் குடைகளுக்கான துணிகள் தயாரிப்பில் முதலிடம் வகிக்கின்றது. அண்மைக் காலத்தில் குடைத் துணிகள் விலை 20 லிருந்து 25 சதவிகிதம் வரையிலும், கம்பிகள் விலை 10 லிருந்து 15 சதவிகிதம் வரையிலும் ஏறிவிட்டன. செய்யும் கூலியும் சுமார் 15 சதவிகிதம் அதிகரித்து விட்டது. இந்த நிலவரம் காரணமாகக் குடைகள் ஏற்றுமதி சுருங்கிவிட்டது. 1965—66-ஆம் ஆண்டில் ரூ. 46 இலட்சம் பெறுமான குடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது ரூபாய் 18 இலட்சமாகக் குறைந்து, கடந்த ஆண்டில் ரூ. 35 இலட்சமாக ஓரளவுக்கு அதிகரித்துள்ளது. இலங்கை, கென்யா, நேபாளம், சவுதி அரேபியா, பர்மா ஆகிய நாடுகளுக்குத்தான் இந்தியக் குடைகள் பெரும்பாலும் ஏற்றுமதியாகின்றன.

கதர் கிராமத் தொழில்கள்
கதர், கதர்ப்பட்டு, சோப்பு, தேன்
செக்கெண்ணெய்,
தோல்பொருள்கள்,
பனைவெல்லம், சர்க்கரை,
மண்பாண்டம், வார்ப்படங்கள்,
பனைப்பொருள்கள்,
பித்தளை, வெண்கலப்
பாத்திரங்கள்
மற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

ஒரு கண்ணோட்டம்



இந்தியாவில் பல பகுதிகளிலும் பலமுறை புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டதில் மொத்த மக்கள் தொகையில், 5.5 சதவீதம் கண் திரைப் படலம் (Cataract) என்னும் நோயால் பாதிக்கப்படுகிறார்களாம். ஆண்டு தோறும் 0.5-லிருந்து 0.75 சதவீத மக்கள் இந்நோய் காரணமாகக் குருடாகின்றனர். எனவே, மூன்று மில்லியன் மக்களுள்ள ஒரு மாவட்டத்தில் இந்தக் கண் திரைப் படலம் காரணமாக ஆண்டுதோறும் 15,000 பேர் குருடர்களாகின்றனர்.

தற்போது இருக்கும் அரசினர் மருத்துவ மனைகள், தனியார் மருத்துவ நிலையங்கள் போன்றவைகளில், இந்தக் கண்திரைப் படலம் வந்த நோயாளிகளுக்கு 10-லிருந்து 20 சதவீதத்திற்கு மேல் அறுவைச் சிகிச்சை செய்ய முடிவதில்லை. இந்தக் கண்நோய் காரணமாக ஆண்டு தோறும் இரண்டு இலட்சம் பேர் பார்வை இழக்கின்றனர்.

இந்தக் குறைகளையெல்லாம் போக்க நடமாடும் மருத்துவ மனைகள் மிகவும் அவசியமாகும். இந்த வகையில், மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை ஆதரவில் நடந்துவரும் நடமாடும் கண் மருத்துவமனை 1961-லிருந்து சிறப்பான முறையில்செயல்பட்டு வருகிறது. இதுவரை 51 முகாம்களில், 1,61,518 பேர்களுக்குச் சிகிச்சை அளித்திருக்கிறது. 21,813 பேர்களுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறது. உணவு, மருந்துகள் முதலானவற்றுக்காக இதுவரை ஒன்பது இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

ஓர் இடத்தில் ஒரு முகாமுக்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 10,500. ஒரு நோயாளிக்கு உணவு, மருந்து, சிகிச்சை முதலானவற்றுக்காகும்செலவு ரூ.25.

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு முகாமுக்கும் ரூ. 5,000 நிதியுதவி அளிக்கிறது. இலண்டனிலுள்ள ராயல் காமன்வெல்த் கழகம், ஆண்டுதோறும் கூடுதலாக இந்த முகாம்கள் ஏற்படத் தக்க உதவிகள் செய்து வருகின்றது. 'கனடியன் கௌன்சில்' இந்த முகாமுக்கு ஒரு வண்டியையும், மருத்துவச் சாதனங்களையும் வழங்கியிருக்கின்றது.

இந்த முகாம்கள் சிறப்பாக நடைபெற, பள்ளிக்கூட மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர் தேசியப்படை, ஊர்க்காவல் படை, செயின்ட் ஜான்ஸ் ஆம்புலன்ஸ், ரோட்டரி, அரிமா சங்கத்தினர் ஆகியோர் பெருந்துணை புரிந்து வருகின்றனர். நோயாளிகளை அழைத்து வருவது, அறுவைச் சிகிச்சைக்குப் பின் அவர்களைத் தூக்கிச் செல்வது, உணவு வழங்குவது போன்ற பல வேலைகளை அவர்கள் சலிப்பின்றிச் செய்கின்றனர்.

இந்தக் கண் முகாம், கண்ணுள்ள முகமாக ஒளிபெற்று விளங்கி வருகிறது. எண்ணற்ற ஏழை எளியவர்களுக்குக் கண்ணொளி தரும் இந்த முகாமின் தொண்டினை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்தியாவிலேயே பெரிய முட்டை!

இந்தியாவிலேயே பெரிய கோழி முட்டையைப் பார்த்திருக்கிறீர்களா ?

அது ஒசூர் கால் நடைப் பண்ணையிலுள்ளது.

மாதிரிக்குச் செய்யப்பட்ட முட்டையல்ல.

' ஒயிட் லெக்கார்ன் ' கோழியிட்ட முட்டை.

இந்த மாதிரி பெரிய கோழி முட்டை இந்தியாவில் வேறு எங்கும்—எந்தக் கோழிப் பண்ணையிலும் இருப்பதாக இது வரை தகவல் கிடையாது.

இந்தக் கோழி முட்டையின் எடை 110 கிராம். சாதாரணமாக ஒரு கோழி முட்டை 45 கிராம், 50 கிராம் எடை இருக்கும். 60 கிராம் எடையைப் பெரும்பாலான கோழிமுட்டைகள் தாண்டுவதில்லை.



இந்தப் பெரிய கோழி முட்டைக்கு அடுத்தபடியாக இன்னொரு முட்டையை ஒசூர் கால்நடைப் பண்ணையிலுள்ள ஒரு ஒயிட் லெக்கார்ன் கோழி யிட்டுள்ளது. அதன் எடை 95 கிராம்.

பொறுமைக்குப் பரிசு

"பயணிகளிடம் நல்ல முறையில் நடந்துகொண்டால் எந்த விதத் தகராறும் வராது. பேருந்தில் நாலுபேர் வருவார்கள்; போவார்கள்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணமுள்ளவர்களாக இருப்பார்கள். நாம்தான் அவர்களிடம் பொறுமையாகப் போக வேண்டும். இப்படி இருந்தால் சண்டையோ, சச்சரவோ ஏற்படாது'' என்கிறார் 52 வயதான ஓட்டுநர் திரு கே. நாராயணசாமி.

இவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துப் பேருந்தில் ஓட்டுநராக, 1948-லிருந்து பணியாற்றி வருகிறார். இவர் பத்து ஆண்டுகள் சென்னை நகரில் ஓட்டுநராக இருந்தார்; இப்போது ஒன்பது ஆண்டுகளாகச் சென்னை—கொளத்தூர் வழிப் பேருந்தில் பணியாற்றி வருகிறார்.

இவருக்கு அண்மையில் ''சிறந்த ஓட்டுநர்'' என்ற பாராட்டும், பதக்கமும் கிடைத்தன. தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் இந்தப் பரிசை வழங்கினார். மயிலை அகாடமி ஏற்பாடு செய்த இந்த விழாவில், ''சிறந்த நடத்துநர்'' (Best Conductor) ஒருவருக்கும் பரிசு கிடைத்திருக்கிறது.

பொறுமையும், அடக்கமும் உள்ள இந்த ஓட்டுநர், 1940-லிருந்து 1946 வரை சிங்கப்பூரில் ராணுவத்தில் மேஜருக்கு ஓட்டுநராகப் பணியாற்றினார். அதாவது 'நாயக்' பதவியில் இருந்தார். ராணுவத்திலும் சரி, இப்போதும் சரி, இவர் பேருந்தை ஓட்டி இதுவரை ஒரு விபத்தும் ஏற்பட்டதில்லை. ராணுவத்தில் நல்ல பெயரை எடுத்தது போலவே, இப்போதும் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறார் இவர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் இவரே, சிறந்த ஓட்டுநராக ஐந்துமுறை பரிசு பெற்றிருக்கிறார்! போக்குவரத்து வார விழாவில் இருமுறையும், 'ரோட்டரி கிளப்' சார்பில் ஒருமுறையும் இவர் இதற்கான பரிசுகள் பெற்றுள்ளார்.

செங்கற்பட்டு மாவட்டம் பாலூரைச் சேர்ந்த திரு. நாராயணசாமி திருமணமானவர். செல்லமாக ஒரேஒரு பெண்ணைப் பெற்றுக் கொண்டு குடும்ப நலத்தில் அக்கறை செலுத்தும் இவர், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் (Driver Training School) ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்திலேயே தொடர்ந்து ஐந்தாண்டுகள் ''சிறந்த ஓட்டுநர்'' பரிசுகளைப் பெற்றவர் இவர் ஒருவரே.

''இந்தப் பரிசுகளெல்லாம் என்னை மேலும் மேலும் ஊக்கப்படுத்துகின்றன. இந்தத் துறையில் நாங்கள் நல்ல முறையில் நடந்துகொள்வதற்கு இந்தப் பரிசுகள் உதவியாக இருக்கும். பொது மக்களுக்கும், அரசு ஊழியர்களான என்னைப் போன்றவர்களுக்கும், நல்லதொடர்பு இருக்க வேண்டும். அதற்கேற்ப ஒவ்வொருவரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு நடந்து கொள்ள வேண்டும்'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் ஓட்டுநர் நாராயணசாமி.

நடத்துநர் திரு இ. பாலகுருப் என்ன சொல்கிறார்?

கேரளாவைச் சேர்ந்த இவர் 23 ஆண்டுகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்தில் நடத்துநராகப் பணியாற்றி வருகிறார். இதுவரை இவர்மீது எந்தவிதப் புகாரும் வந்ததில்லை. எல்லாரிடமும் சுமுகமாகப் பழகும் பண்பை இவர் இயற்கையிலேயே பெற்றிருப்பதால்தான், இருமுறை இவரே 'சிறந்த நடத்துந'ருக்கான பரிசைப் பெற்றிருக்கிறார்.

''நல்ல முறையில் நடந்து கொண்டால் எந்தப் புகாரும் வராது. பயணிகளோடு சச்சரவு வருவது போலத் தெரிந்தால் பொறுமையாக இருந்துவிட வேண்டியதுதான். இதில் கௌரவம் ஒன்றும் குறைந்துவிடாது'' என்று கூறும் திரு பாலகுருப்புக்கு வயது 43. திருமணமானவர். நான்கு குழந்தைகள் இருக்கின்றார்கள்.

பேருந்தில் பயணிகள் விட்டுச் சென்ற நான்கு எவர்சில்வர் தம்ளர், மணிபர்ஸ் முதலியவற்றைப் பத்திரமாகத் தம் அலுவலகத்தில் ஒப்படைத்திருக்கிறார். இவரது நேர்மையை அதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

ஒருமுறை ஒரு பயணி இவரிடம் மிகக் கோபமாகப் பேசினாராம். இவரும் பதிலுக்குப் பேசி இருந்தால் சண்டையே வந்திருக்குமாம். ஆனால், பதில் எதுவும் பேசாமல், அவர் இறங்கும் இடம் வரும்வரை, பொறுமையாக இருந்துவிட்டாராம். அவரும் தானாகவே பேசிக் கொண்டு இறங்கிப் போய்விட்டாராம்.

''பொதுப்பணியில் ஈடுபாடு உள்ளவர்களுக்குச் சகிப்புத் தன்மை மிகவும் அவசியம். இல்லாவிட்டால் இந்தப் பணியில் யாருமே நீடிக்க முடியாது'' என்று உறுதியாகக் கூறுகிறார் நடத்துநர் பாலகுருப்.

ஆனால் அந்தப் பெண், தேன்மொழியையோ, அவளது காரையோ கவனிக்கவில்லை. ''விடுவிடு'' வென்று டாக்டரின் இல்லத்தினுள் நுழைந்து விட்டாள்.

மாதவனும், அவனைத் தொடர்ந்து அந்த மங்கையும் இப்படிப் பூங்கொடியைத் தேடி ஓடி வந்தது, தேன்மொழியின் நெஞ்சிலே புதிய குழப்பத்தையே உண்டுபண்ணிற்று.

''........இவரை நிழலைப் போலவே அவள் தொடரத் தொடங்கி விட்டாளே! ஒருவேளை அவள் உடம்பிலே ஏதாவது கோளாறு ஏற்பட்டு, அதைக்காட்டிக் கொள்ளத்தான் இப்போது கூட்டி வந்திருப்பாரோ? அப்படியானால் அவளுக்கும் இவருக்கும் என்ன உறவு? எப்படித் தொடர்பு? அவள் யார் என்பதைப் பிறகு கூறுவதாகத் தம் வீட்டிலே அன்று சொன்னாரே ஒழிய, அப்புறம் நேரிலோ தொலைபேசியிலோ அவளைப் பற்றி மூச்சே விடவில்லையே! நாமாகத் தூண்டித் துருவிக் கேட்டால், நான் அவர்மீது ஐயப்பாடு கொள்வதாக இவர் தவறாகக் கருதிவிட்டால் என்ன செய்வது என்றுதானே நானும் பேசாமல் இருந்தேன்! ..ஆனால், இப்போது இவருக்கும் அவளுக்கும் ஏதோ ஒருவகையில் இணக்கமான நெருக்கம் இருக்கும் போலத் தான் தெரிகிறது!....இந்தப் புதிரை எப்படித்தான் அவிழ்ப்பது? .. ..''

—மின்னித் தெறிக்கும் நினைவோட்டங்கள், தான் முன்பு எண்ணியவாறு டாக்டரின் வீட்டெதிரே காரை நிறுத்திக் கீழே இறங்கவிடவில்லை தேன்மொழியை.

தானும் அந்த வேளையில், பூங்கொடியிடம் போனால் அவர்கள் இருவருடைய உண்மையான நிலையையும் உணர்ந்து கொள்ள முடியாதோ என்று ஐயப்பாடு கொண்ட அவள்,

''பிறகு வந்து டாக்டரைத் தனியாகச் சந்தித்து அவளைப் பற்றித் தெரிந்து கொண்டால் போகிறது!''

—என்று திட்டமிட்டவளாகத் தன் வண்டியைத் திருப்பினாள் கடற்கரையை நோக்கி.

• • •

14. புதிர் அவிழ்ந்தது!

வெம்மை தணிந்துவிட்ட இதமான மாலை வேளை.

மூடநம்பிக்கை இருளில் மூழ்கிக்கிடக்கும் மக்களிடம், பகுத்தறிவு வெளிச்சத்தைப் பரப்பிவிட்டுச் சில மணி நேரமே ஓய்வு கொள்ளச் செல்லும் சீர்திருத்தச் செம்மலைப்போலவே வான மேடையேறி ஒளிக்கதிர்களை வழங்கிய பகலவன் தன் அலுக்கையை நீக்கிக் கொள்ள அடிவானத்திலே மறைந்து கொண்டிருந்தான் மேற்குத் திக்கில்.

வள்ளலார் வருணிக்கும் மெல்லியப் பூங்காற்று, நிலத்தின் மேனியை—இந்த நிலத்திலே நெளிகின்றவர்களின் மேனியை வருடிக் கொஞ்சியது, குளுமையைச் சுமந்து வந்து.

'காதலர் பாதையை' ஒட்டியே தன் காரை நிறுத்திவிட்டுக் கடலை நோக்கி நடந்தாள் தேன்மொழி.

அன்று ஞாயிற்றுக் கிழமை இல்லையாதலால் அவ்வளவு நெரிசலான கூட்டம் என்று கூறமுடியாது.

எனினும் சிறுசிறு அங்காடிகள், வரிசை வரிசையாக அமைந்து கவர்ச்சியான பொருள்களைக்காட்டி, வருவோர் போவோரின் கவனத்தையெல்லாம் திருப்பிய வண்ணம் இருந்தன.

அவைகளுக்குப் பின்னால் வண்ண வண்ண உடைகள் அணிந்த சின்னஞ் சிறுவர்கள், வண்ணத்துப் பூச்சிகளாக ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

இளமையின் தலைவாசலில் நிற்கும் ஆண்களும் பெண்களுமே இணை இணையாகக் கைகளைக் கோத்துக் கொண்டு—கண்களால் பேசிக் கொண்டு—அமர்ந்தும், நடந்தும், பட்டாணி, வேர்க்கடலையை வாங்கிக் கொறித்தும், சிரித்தும் தங்கள் பொழுதினை மிக இன்பமாகக் கழித்தனர்.

அவர்களைப் போலவே தானும் மாதவனோடு வந்து இந்த மாதிரி தனிமையிலே இனிமை காண மாட்டோமா என்று எவ்வளவு தவிதவித்திருக்கிறாள்-தாகங் கொண்டிருக்கிறாள்—தேன்மொழி!

ஆனால் ... .அவனோ .. ?

கடலை ஒட்டிக் கட்டுமரங்கள் சில, கழுவிக் காயப்போட்ட வாளைமீன் கருவாடு மாதிரி வெளுத்துக் கிடந்தன.

ஏதோ மணியோசை 'கிணுங்கிணுங்' என்று ஒலித்தது.

அந்த மரங்களுள் ஒன்றின்மீது வந்து அமர்ந்து கொண்ட தேன்மொழி, நீலக்கடலில் நெளியும் அலைகளை—அவை குதித்துச் சுருளும் கோல எழிலைக் கண்கொட்டாமல் பார்த்தாள். அந்த ஆர்ப்பரிக்கும் அலைகள்தான் இந்தப் பரந்த கடல் போதாதென்று மனித நெஞ்சுக்குள்ளும் நினைவுகளாக இடம் பிடித்துக் கொண்டனவோ என்றும் அவள் கற்பனை செய்தாள்!

தேன்மொழி, கடல் அலைகளிடமிருந்து தன் கண்களைப் பெயர்த்துப் பின்புறம் திரும்பி மணல் அலைகள் மீது அவற்றை மிதக்க விட்டபோது—

ஒட்டகம் ஒன்று சிறுமி ஒருத்தியைச் சுமந்த வண்ணம் நடந்து அசைந்து செல்வது தெரிந்தது.

உடனே, தன்னுடைய பிஞ்சுப் பருவத்தில், இதே மாதிரி தானும் ஒட்டகத்தில் பயணம் செய்யவேண்டும் என்று தன் அப்பாவிடம் தான் அடம்பிடித்தது அவள் நினைவிலே பளிச்சிட்டது. ஆனால், அன்றைக்கு அவள் தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள்; அப்போது அருகில் ஓடிவந்து அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டவர் பேரின்பமுத்துவா ? அல்லர்; ஒரு பெரு நோய்க்காரி! அதற்காக அவளை அவர் எவ்வளவு திட்டித் தீர்த்தார் நன்றியே இல்லாமல்!

சிறு சிறு வெடிப்புகளும் முடிச்சுகளுமாகச் சிதிலமடைந்த அந்தக் கிழவியின் முகத்தைக் நினைத்ததுமே . . . .

தேன்மொழிக்கு இப்போது வயிற்றையே குமட்டிக்கொண்டு வந்தது; உடம்பெல்லாம் கூட அரிப்பதுபோல் தோன்றியது ; சட்டென்று ஆடிக்காற்று வீசிக் காயப் போட்டிருந்த துணியை எங்கோ அடித்துக் கொண்டு போய்விட்டதைப் போலத் தன் மனத்தில் நிலவிய அமைதி கணப்பொழுதில் பறிபோய் விட்டதாக உணர்ந்தாள் தேன்மொழி. அதற்குமேல் கட்டு மரங்களில் அமர்ந்திருக்க அவளுக்கு இருப்புக் கொள்ளுமா என்ன ? கடல் அலைகளின் காவிய விளையாட்டைத்தான் அவளால் சுவைக்க முடியுமா என்ன ?

எனவே, எழுந்து நடந்தாள் காரைநோக்கி!

* * *

தேன்மொழி தன் வீட்டினுள் நுழைந்த போது—

அங்கே மாதவன் மட்டும் அல்ல, அந்த மங்கையும் உடனிருந்தாள்.

பேனா நண்பர்கள்
தேவை

மொரீசியஸ் தீவினைச் சார்ந்த திரு ரெங்கசாமி ரெங்கன், தமிழகத்தினைச் சார்ந்த இளைஞர்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள விரும்புகிறார்.

அவருடன் கடித நண்பர்களாக விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

Mr. Rengasamy Runghen,
St. Pierre, Petit-Verger,
MAURITIUS.

சற்று முன்னர் சமையற்காரி சண்பகம் கொண்டு வந்து கொடுத்த காஃபியைப் பருகிக் கொண்டிருந்த. அவள், அதை முழுவதுமாகக்கூடக் குடிக்காமல் குவளையை அப்படியே எதிரே கிடந்த சிறு மேசையில் வைத்து விட்டுப் பரபரப்போடு எழுந்து நின்றாள் ; தேன்மொழிக்கு வணக்கம் செய்தாள்.

அவளுக்கு மறுவணக்கம் புரியக் கூட இவளுக்குத் தன்னினைவு இல்லை; தலையை மட்டும் ஆட்டினாள்; காரணம், திகைப்புத்தான் !

மாதவனுக்கும் அந்தமடந்தைக்கும் அப்படி யென்ன நெருக்கமான பிணைப்பு இருக்கமுடியும் என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டு அந்தப் புதிரை எப்படித்தான் அவிழ்த்துத் தெளிவு படுத்திக் கொள்ள போகிறோம் என்று தான் அங்கலாய்த்துக் கொண்டிருந்த நிலையில், அதற்கெல்லாம் தேவையே இல்லையென்று தெரிவிக்கின்ற வகையில், அவர்கள் இருவருமே இப்படி ஒன்றாகச் சேர்ந்து தன் வீட்டுக்கே வந்து நிற்பார்கள் என்று தேன்மொழி எதிர்பார்க்கவே இல்லை.

'' உட்காருங்கள் '' — என்று இவள் சொல்லும் போழுதே மாதவன் அவளைப் பற்றிய அறிமுகத்தைத் தொடங்கினான்.

அவளுடைய பெயர்தாமரைக் கண்ணி என்பதாம்; ஆனால், எல்லாரும் அழைப்பது 'தாமரை' என்றுதானாம். தாய்-தந்தையரின் முகம் எவ்வாறு இருக்கும் என்றே தெரியாமல் ஓர் அனாதை விடுதியிலே வளர்ந்தவளாம் அவள். உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புவரைப் பயின்ற அவள், பின்னர் செவிலியர் (Nurse) பயிற்சியும் பெற்றிருக்கிறாள் ஒரு கிறித்துவ நிறுவனத்தின் மூலம். வேலை கிடைக்காமல் திண்டாடிய அவளை, மாதவனைப் படிக்க வைத்து ஆளாக்கினாரே அந்த 'உபதேசியார் கிழவர்' தாம் சென்னைக்கு அனுப்பி வைத்திருக்கிறார், ஒரு கடிதத்துடன். அந்தக் கடிதத்தில் அவளுக்கு எந்த வகையிலாவது உதவி புரியுமாறு வற்புறுத்தி எழுதியுள்ளார் அவர். உபதேசியாரிடமிருந்துதானடைந்த நன்மைகளுக்கெல்லாம் கைம்மாறாக எந்த நன்றிக்கடனுமே தன்னால் செய்ய முடியவில்லையே என்று மாதவன் நெடுநாட்களாகவே எண்ணி வருந்தியதுண்டு. அந்த மனம் புண்ணுக்கு மருந்திட்டுக் கொள்வதற்கு ஏதுவாகத் தாமரைக் கண்ணி வந்து சேர்ந்தது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியையே அளித்தது. அவளுக்கு எங்கேயாவது, எப்படியாவது வேலை வாய்ப்பினை வாங்கித் தந்துவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்த அவன் உள்ளத்தில், டாக்டர் பூங்கொடியே முதலில் தோன்றினாள். அவளிடம் பேசிப்பார்த்ததில், தன்னுடைய சொந்த மருத்துவ மனைக்கே ஒரு செவிலிப்பெண் தேவை என்றும், எனவே தாமரைக் கண்ணியைத் தானே அமர்த்திக் கொள்வதாகவும் பூங்கொடி கூறி விட்டாள். அவ்வாறு வேலைவாங்கிக் கொடுத்துவிட்ட பூரிப்போடுதான் தாமரைக் கண்ணியை அழைத்துக்கொண்டு தேன்மொழியின் இல்லத்திற்கு வந்திருக்கிறான் மாதவன்.

அவனிடமிருந்து, தாமரைக் கண்ணி பற்றிய விளக்கங்களைக் கேட்ட பிறகு, தன் நெஞ்சை நெருடிக்கொண்டிருந்த ஒருமுள் —அழுத்திக்கொண்டிருந்த ஒரு சுமை—மெள்ள விலகி வெளியேறுவதை உணர்ந்தாள் தேன்மொழி.

''இப்போது எங்கே தங்கி இருக்கிறீர்கள்?''

—என்று கேட்டாள் தாமரைக் கண்ணியை நோக்கி.

''நுங்கம்பாக்கத்தில் என் தோழி ஒருத்தியின் வீட்டில் ''

—அடக்கமாக அவள் விடையளிக்கும் பொழுதே மாதவன் குறுக்கிட்டான்.

''இன்னும் சில நாட்களில் டாக்டர் பூங்கொடியின் மருத்துவ மனையிலேயே எப்போதுமே தங்கும்படி நேருமோ என்று நினைக்கிறேன். இன்றைக்கு அவர் பேசிய பேச்சு அந்தப் போக்கில் தான் இருந்தது''

'' அப்படியானால், இனிமேல் நாம் அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம் என்று சொல்லுங்கள்''.

கண்களைச் சிமிட்டியவாறே கூறினாள் தேன்மொழி.

'' ஓ, தாராளமாக!''

—என்று தன் முத்துப்பற்களைக் காட்டி முறுவலித்தாள் தாமரையும்.

பிறகு, உபதேசியார் கிழவரின் உயர்ந்த பண்பாடு, பரந்த மனப்பான்மை—கிறித்துவ அறப் பணிக் குழுக்களின் (மிசின்களின்) கல்வி மற்றும் மருத்துவத் தொண்டுகள் அவற்றைப் போலக் கருணையோடு இயங்காமல் இந்தியத் துணைக் கண்டத்திலே முளைத்த சமயங்களும் சில சமயவாதிகளும் கடைப்பிடிக்கும் தன்னலப் போக்கு, செயலற்ற தன்மை ஆகியவை பற்றியெல்லாம் தொட்டுச் சென்றது அவர்களுடைய பேச்சு.

சிறிது நேரத்தில், சமையற்காரி சண்பகம் வந்து,

''இலை போடட்டுமா?'' —என்றாள்.

உடனே தாமரைக்கண்ணி,

'' என் தோழி எனக்காகச் சாப்பிடாமலே காத்திருப்பாள்; நான் வரட்டுமா?''

—என்று விடை கேட்டாள் ; தப்பித்துக்கொள்ளப்பார்த்தாள்.

ஆனால் தேன்மொழி விடுவாளா?

மூவரும் உணவு அருந்தி முடிந்ததும், கையைக் கழுவி விட்டுத் தேங்காய்ப்பூத் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்த மாதவன் அருகே வந்தாள் அவள்.

''கொஞ்சம் மாடிப்பக்கம் வருகிறீர்களா?''

—என்று அவனுடைய மறுமொழியை எதிர்பார்க்காமலே மேலே ஏறிச் சென்றாள்.

மாதவனும் பின்தொடர்ந்தான்.

அறையினுள் நுழைந்ததும்—

பேச நினைத்திருந்ததையெல்லாம் மறந்துவிட்டவளைப் போல, அவனையே விழுங்கி விடுகிற மாதிரி இமைக்காமல் நோக்கினாள் தேன்மொழி.

அவளது இளமை ததும்பும் இதயத்தில் நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகிற்று வேட்கை வெள்ளம் ! அவனுடைய கட்டான உடலை அப்படியே கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் போல் ஒரு மோகச் சிலிர்ப்பு!

அடுத்த கணமோ....?

அவளது மனத்திரையில்—

அந்தக் கன்னடக் காரியின் அருவருப்பான உருவத்தின் கரிய நிழல்....

மாதவனின் அக்காளுடைய சேதாரமடைந்த சிற்பத் தோற்றம்......

வேட்கை வெள்ளம் மெள்ள வடிகிறது; மோகச் சிலிர்ப்பு மெள்ள மறைகிறது.

'' என்ன தேன்மொழி, என்ன அப்படிப் பார்க்கிறாய் ?''

—அமைதியைக் கலைந்தான் அவன்.

கலைத் துறையின் மூலம், சீரியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். முற்போக்கு நாடுகளெல்லாம் இதில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். இது ஒரு தொழில்-வருமானம் பெறும் சாதனம் என்றில்லாமல் நாட்டுக்கு நற்கருத்துக்களைத் தரும் சிறந்த துறையாகும்.

—பேரறிஞர் அண்ணா.

''ம்....ஒன்றும் இல்லை....''

'' ஒன்றும் இல்லாததற்குத் தான் இப்படி அவசரமாக அழைத்தாயா இந்த மாடி அறைக்கு ?''

—மாதவன் கேலியாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பிலேதான் எவ்வளவு கவர்ச்சி—'சலதரங்கம்' கலகலத்த மாதிரி!

அந்தக் குரலிலேதான் எவ்வளவு கம்பீரம்—' கோட்டு வாத்தியம் ' போல!

அந்தச் சிரிப்புக்கும் குரலுக்குமே தன் நெஞ்சத்தை அடமானம் வைத்துவிட்ட தேன்மொழி, நொடிப் பொழுதிற்குள் தலையைக் கவிழ்த்து மீண்டும் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'' தாமரைக் கண்ணியைப் பஸ்சிலே போகச் சொல்லிவிட்டு இரவு நீங்கள் இங்கேயே தங்கி விடலாமே என்று சொல்லத் தான் அழைத்தேன்.''

'' அது எப்படித் தேன்மொழி ? அதோடு அலுவலகக் கணக்குக் கட்டுகள் வேறு நிறையத் தேங்கிவிட்டன என் வீட்டில். அவற்றையெல்லாம் இன்றிரவே சோதித்து முடித்து விடவேண்டும் என்றும் திட்டமிட்டிருக்கிறேன். அப்புறம் இன்னொரு முக்கியமான செய்தியை உனக்குச் சொல்ல மறந்து விட்டேனே ! ''

'' என்னங்க ? ..''

'' தாமரைக்கண்ணிக்கு வேலை வாங்கிக் கொடுப்பதற்காக டாக்டர். பூங்கொடியிடம் போனேனா ? அந்த அம்மா என்னை ஏற இறங்கப்பார்த்து விட்டு, ' உங்கள் கண்ணெல்லாம் உள்ளே போய்விட்டதே ! முகமே வெளுத்து இருக்கிறதே! ஏதோ இரத்தசோகை கொண்ட மாதிரி தோன்றுகிறதே ! '— என்று சொல்லிக்கொண்டே ' ஸ்டாத்தாஸ்கோப்பை ' வைத்துச் சோதிக்கவே தொடங்கி விட்டார்கள்.''

'' அப்புறம் ? ''

'' அப்புறம் என்ன ? நாளைக் காலையிலேயே நான் ஒரு பெரிய டாக்டரைச் சந்

திக்க வேண்டுமாம். தானே அழைத்துக் கொண்டு போவதாகவும், தவருமல் வந்துவிட வேண்டும் என்றும் கண்டித்துவிட்டார் பூங்கொடி. இந்த நிலையிலே இங்கேயே நான் தங்கிளுல் உன் அழகு முகத்தையே பார்த்துக்கொண்டு, உன் அமுதக் குரலையே கேட்டுக் கொண்டு இருக்கத்தான் தோணுமே ஒழிய எனக்குப் பிறகு உறக்கமா வரும்? ''

—என்றவாறே அவளுடைய மாதுளங் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளிஞன் மாதவன்.

அவனது வலிய கரத்தைத் தானும் தன் கையினல் பற்றித் தன் கதுப்புக் கன்னத்தோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள் தேன்மொழி. பழுத்த மாவிலையில் பட்டுப்பூச்சி இழைகிற மாதிரி, அவளது ரோஜாப்பூ இதழ்கள், அவனுடைய உள்ளங் கையில் மிதந்தன; ஈரப்படுத்தின. அதே சமயம், விழிக் குவளைகளும் நிரம்பி வழிந்தன நீரினல்.

'' எதற்குத் தேன்மொழி இப்படிக் கலங்குகிருய்? எனக்கு அதெல்லாம் ஒன்றும் இருக்காது; நீ கவலைப்படாதே! ''

—அவளது கண்ணீர்த் துளிகளைத் தன் விரல்களால் சுண்டி எறிந்தான் மாதவன்.

தேன்மொழியோ விழிகளைக் குளமாக்கிக் கொண்டிருந்த அதே வேளையில், தானும் டாக்டரும் மறைமுகமாக எண்ணிக் கைவிட்ட ஒரு திட்டம் இப்போது ஈடேறவே போகிறது என்கிற களிப்பிலேயும் திளைக்கிருள் என்பதை அவனல் எப்படி ஆரூடமாய்க் கணிக்க முடியும்?

* * *

அன்று இரவு முழுதும்—

இமைகளையே மூட முடியாமல், படுக்கையிலேயும் கிடக்க முடியாமல் தவியாய்த் தவித்தாள் தேன்மொழி.

வறுமையை மட்டுமே மணந்து கொண்டவர்களின் வளமான கற்பனைக் கோட்டைகளைப் போலவே, உறக்கம் என்பதும் அவளைவிட்டு வெகுதொலைவுக்கு ஓடிவிட்டது.

தன் உயிரினும் மேலான காதலனுக்கு—தன் உள்ளக் கோவிலின் ஒரே தெய்வத்திற்கு—ஒருவித உடற்கோளாறும் இருக்கக்கூடாதே என்று தனக்குத் தெரிந்த தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள் அந்தப் பேதைப்பெண்!

மறுநாள் எப்போது பொழுது விடியும் என்று காத்திருந்தவளைப் போலப் பூங்கொடியின் இல்லத்திற்குப் படையெடுத்துப் போனுள் அவள்.

மாதவன் சற்று நேரங் கழித்தே வந்தான். முந்தின நாள் இரவு தானும் டாக்டர் வீட்டுக்கு வரப் போவதாக அவள் சொல்லவில்லையாதலால், அவளுடைய வருகை அவனுக்கு வியப்பையே அளித்தது.

பிறகு, தாமரைக்கண்ணி உட்பட நால்வருமாக ஒரு பெரிய டாக்டரிடம் சென்றனர்.

அவரைத் தனியே சந்தித்து ஏதோ பேசிஞள் பூங்கொடி. பின்னர், மேலோட்டமாகச் சோதனை செய்து பார்த்துவிட்டு மாதவன் படுக்கையில் இருந்துதான் தீர வேண்டும் என்று கண்டித்துவிட்டார் அவர்.

பத்து நாட்கள் கழிந்தன.

பல்வேறு சிகிச்சைகள் நடந்த பிறகு அந்தப் பெரிய டாக்டர் வெளியிட்ட வார்த்தைகளோ ..?

(வளரும்)

காலக் கண்ணுடி

காலத்தைக் கடந்து [illegible] நிற்கின்றன, [illegible] கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை [illegible] அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட [illegible] சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணுடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை. [illegible] நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய '[illegible]' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



" இந்த அழகிய புடவை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது....'' என்று மணிமேகலை, கைத்தறிக் கண்காட்சியிலிருந்து வாங்கி வந்த புடவையை எடுத்துக் காட்டினுள்.

உடனே அவள் கணவன் தமிழ்மாறன், '' ஆமாம். இந்தப் புடவையின் வண்ணம் கண்ணைக் கவர்கின்றதல்லவா? இது உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கும்....'' என்று தன் விருப்பம் தெரிவித்தான்.

கண்காட்சியில் வண்ண வண்ணத் துணிகள் வகைவகையாய்க் காட்சியளித்தன. புடவைகள், சட்டைத் துணிகள், போர்வைகள் இப்படி எத்தனையோ வகையான துணிகள் பூவேலைப் பாடுகளுடன் காண்போரைக் கவர்ந்தன. ஆனல், அத்தனையும் வாங்க முடியுமா? மணிமேகலைக்கு எல்லாமே பிடித்திருந்தன. ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்று வாங்கி அணிந்து அழகு பார்க்க அவள் மனம் ஒருகணம் ஆசை வெள்ளத்தில் மிதந்தது. இப்படி அவள் எண்ண அலை மோதுவதற்குக் காரணம் கண்ணைக் கவரும் வண்ணத் துணிதான். இப்படி இந்தத் துணிகளுக்கு வண்ணந் தருவது யாருடைய கைவண்ணம்?



புடவையில் அழகிய பூக்களைப் பார்த்த மேகலைக்கு, இந்தத் துணியின் கதையைத் தெரிந்து கொள்ளவேண்டும் போலிருந்தது. உலகில் எத்தனையோ விஷயங்கள் மக்களுக்குத் தெரியாமலிருக்கின்றன; பலர் அதைத் தெரிந்து கொள்ளவும் விருப்பம் காட்டுவதில்லை. அன்ருடம் ஆயிரக்கணக்கான பேர் ரயிலில் பயணம் செய்கிருர்கள். எத்தனைப் பேருக்கு ரயிலின் கதை தெரியும்? இப்படி ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டால், எல்லாம் கேள்விக்குறியாகத்தான் முடியும். ரயிலைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம். மயிலைப்பற்றியும் தெரிந்து கொள்ளலாம். எல்லாவற்றுக்கும் ஆர்வம் வேண்டும்.

இந்த ஆர்வம் மணிமேகலைக்கு வந்ததில் வியப்பில்லை. காரணம் அவள் கணவன் ஒரு புத்தகப்புழு. அவன் எல்லாத் தகவல்களையும் அறிந்தவன். தான் அறிந்தவற்றை மனைவிக்குச் சொல்லி மகிழ்வதிலே ஆர்வம் உள்ளவன்.

சாப்பாடு முடிந்து இருவரும் தம்வீட்டு மொட்டை மாடியில் ஓய்வாகப் பேசிக் கொண்டிருந்தனர். பால் நிலவு ஒளியைப் பொழிந்து கொண்டிருந்தது. மணிமேகலை பேச்சை ஆரம்பித்தாள்.

'' ஆமாம், இந்தப் புடவைக்கெல்லாம் நிறம், பூ முதலிய அலங்காரங்களெல்லாம் எப்படிச் செய்கிருர்கள்? அதுமட்டுமல்ல, பொதுவாகத் துணி எப்படித் தயாரிக்கப் படுகிறது? உங்களுக்குத்தான் தெரியுமே! அதைச் சொல்லுங்களேன். ''

'' மேகலை! புடவை மட்டுமல்ல. சட்டை, வேட்டி, போர்வையென எல்லாவகைத் துணிகளைத் தயாரிக்கவும் தமிழ்நாட்டில் நிறைய ஆலைகள் உள்ளன. இந்தத் தொழில் நுணுக்கங்களைக் கற்றுத்தர ஒரு தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் சென்னை அடையாறில் இருக்கிறது. அதற்குப் பெயர் ' நெசவுத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ' (Institute of Textile Technology) இதைக் கடந்த வாரம் போய்ப் பார்த்தேன்.

'' அங்கு என்னென்ன நடக்கிறது? கண் காட்சியிலே வாங்கினேமே சேலை, அதைப்போல அங்குக் கிடைக்குமா? '' மணிமேகலை ஆர்வத்துடன் கேட்டாள்.

தமிழ்மாறன் சிரித்துக் கொண்டே, '' இந்த நிறுவனத்தில் கற்றுக் கொடுக்கத்தான் துணி நெய்யப்படுகிறதே தவிர, விற்று இலாபம்சம்பாதிக்க அல்ல. இந்த நிறுவனம் 1965-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் தொடங்கப் பட்டது. இதற்கு வேண்டிய இயந்திரங்கள் போன்ற தளவாடங்கள் வாங்கத் தமிழ்நாடு அரசு ஏழு இலட்ச ரூபாய் அனுமதித்துள்ளது. இப்போது உள்ளவை தவிர, மேற்கொண்டு நவீன இயந்திரச் சாதனங்களை வாங்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ''

'' இதில் நான் கூடச்சேர்ந்து இந்தத் தொழிலைப்பற்றி தெரிந்து கொள்ளலாமா? ''

'' முடியாது. பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு பெற்றவர்களே இத்தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் சேர்ந்து படிக்கலாம். இந்தக் கல்விப் பயிற்சி மூன்று ஆண்டாகும். பிறகு ' டிப்ளமா ' வழங்கப்படுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை வண்ணுரப்பேட்டையில் இதே போன்ற தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்று இருந்தது. கோவையிலும் இதே போன்ற நிறுவனமொன்று

செயல்பட்டு வந்தது. ஆனால், அது மூடப்படவே சென்னையில் இது ஆரம்பிக்கப்பட்டது.''

'' இது போன்ற நிறுவனங்கள் மற்ற மாநிலங்களில் உள்ளனவா? ''

'' நமக்குப் பிறகு ஆந்திரா, மைசூர், கேரளா மாநிலங்களில் இதுபோன்ற நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் சேலத்திலுள்ள இராஜபாளையத்தில் ஒரு தனியார் நிறுவனமும் உள்ளது. சென்னையில் உள்ள நிறுவனத்தில் ஆண்டுக்கு முப்பது பேர்வரை சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இதுவரை அறுபது பேர்கள் தேர்வு பெற்றுப்பல்வேறு ஆலைகளில் மேற்பார்வையாளராகவும், பிற வேலைகளிலும் பணியாற்றுகிறார்கள். இங்குப் பயிற்சி பெற்றுத் தேறிய ஒரு மாணவனுக்கு உடனே ஏதாவதொரு ஆலையில் வேலை கிடைத்துவிடும். ''

துணி உறுதியானதா என்பதைச் சோதிக்கும் கருவி

''அப்படியானால் இங்குப் பயிற்சி பெறும் ஒரு மாணவனுக்கு எல்லா வேலையும் தெரியும் என்று சொல்லுங்கள் . . . . . .''

'' ஆமாம், மேகலை! பஞ்சிலிருந்து துணி நெய்வதுவரை இங்குப் பயிற்சி தரப்படுகிறது. ஒரு மாணவனிடம் பஞ்சைக்கொடுத்தால் அதைத் துணியாக்கிக் கொண்டு வந்து கொடுப்பான். பஞ்சை நூலாக்கி துணிநெய்து, சாயம் போட்டுப் பூ வேலைப்பாடுகள் அமைத்து, அழகான துணியை உருவாக்கிக் காட்டவேண்டும். இந்த அளவுக்கு அவனுக்குப் பயிற்சி அளிக்கத் திறமை மிக்க விரிவுரையாளர்கள் இங்கே பணியாற்றுகிறார்கள்.''

'' இங்குப் பயிற்சிபெற்ற ஒரு மாணவனுக்குப் பஞ்சிலிருந்து நூல் நூற்பது வரை, துணிநெய்து பூ வேலைப்பாடுகள் அமைப்பது வரையிலுள்ள இயந்திரவேலைகள் தெரியும் என்று சொல்லுங்கள்.''

'' ஆமாம் இந்த நிறுவனத்தில் நான்கு பிரிவுகள் உள்ளன. 1. நூற்பு (Spinning) 2. நெசவு (Weaving) 3. துணி பரிசோதனை (Textile Testing) 4. சாயம் போடுதல் (Chemistry and dying) இந்தப் பிரிவுகளில் இப்போது அறுபது மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இலங்கையைச் சேர்ந்த சில மாணவர்களும் இங்குப் பயிற்சி பெற்று வருகிறார்கள்.''

'' வெறும் கைத்தறித் துணிகள் மட்டும்தான் இங்குத் தயாரிக்கக் கற்றுத் தரப்படுகிறதா?''

'' தற்போது இந்த அளவில்தான் உள்ளது. நவீன இயந்திரச் சாதனங்களை வாங்கியதும் டெரிலின், நைலான், டிரேயான் முதலிய துணிவகைகள் பற்றிய நுணுக்கங்களும் கற்றுத் தரப்படுமாம். இப்போது இங்கு 29 விசைத்தறிகள் உள்ளன. பருத்தி நூல், துணியின் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ளத் துணி பரிசோதனைப் பிரிவு உதவுகிறது''

'' துணிகளுக்குப் பூ வேலைப்பாடுகள் எப்படி அமைக்கிறீர்கள்? ''

துணியில் படங்களை நெய்யும் ஜெக்கார்டு இயந்திரம்

''இங்குத் தேர்ச்சி பெற்ற ஓவியர் ஒருவர் இருக்கிறார். இவரது கற்பனையில் வண்ண வண்ண மலர்கள் உருவெடுக்கும்; அழகிய இயற்கைக் காட்சிகள், படங்கள் வடிவெடுக்கும். புடவையோ, போர்வையோ, அதிலுள்ள பூ வேலைப்பாடுகளுக்குத் இவர்தான் காரணம். முதலில் இவர் எந்த வண்ணப்புடவைக்கு எந்த மலர் அழகாக இருக்கும் என்று பார்த்து அதன்படி வரைந்து கொடுப்பார். அவர் கொடுப்பதை நெசவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் பரிசீலிப்பார்கள். ஓவியர் கொடுத்த பூவை நெசவிலும் அமைக்கலாம்; ' பிளாக் ' மூலம் துணியில் அச்சுமிடலாம். ''

'' இங்குக் கற்றுக் கொடுக்கும் போதேதயாரிக்கப்படும் புடவை, போர்வைகள் முதலியன ஓர் ஆண்டுக்குள் சேர்ந்துவிடுமே. அதை என்ன செய்வார்கள்?''

'' ஆண்டுக்கோர் முறை அவைகளை ஏலத்தில் விற்று விடுகிறார்கள். ஏன், அந்த ஏலம் எப்போது வருகிறது என்று கேட்கிறாயா? ''

'' இல்லை, இல்லை! '' என்றாள் சிரித்துக்கொண்டே மணிமேகலை. தமிழ்மாறன் மேலும் தொடர்ந்தார்.

'' இந்நிறுவன மாணவர்கள் ஒரு தமிழ் மன்றத்தையும் நடத்துகிறார்கள். ஆண்டு தோறும் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பரிசுகளும் பெறுகிறார்கள். இவர்களுக்கு ஒரு நூலகமும் உள்ளது: இத்தொழில் சம்பந்தமான நூல்களும், பிற இதழ்களும் இதில் உள்ளன. சில மாணவர்கள் இங்குள்ள விடுதியில் தங்கிப் படித்து வருகின்றனர். இங்குப் படித்தவர்களே இந்நிறுவனத்தில் ' ஆபரேட்டர் ' களாகப் பணியாற்றுகிறார்கள். ''

'' இவர்கள் புத்தம் புதிய பூ வேலைப்பாடுகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறார்களே. அதை வெளியிலுள்ள துணித் தயாரிப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தினாலென்ன? ''

'' இத்தகைய முயற்சி இவர்களுக்கு இருக்கிறது. இன்னொன்றையும் நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். ஒரு சட்டைத் துணி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்தத் துணி உறுதியானதா, இல்லையா என்று எப்படிக் கண்டுபிடிப்பாய்? ''

'' துணியை நன்றாக இழுத்துப் பார்த்தால் தெரிகிறது. உறுதியா இல்லையா என்று . . . . . ''

''ஆமாம். இப்படிப் பார்த்துச் சோதித்து அறிவதற்காக ஒரு கருவி இங்கு உள்ளது. இதற்குக் ''கிளாத் ஸ்ட்ரெங்த் டெஸ்டர்'' (Cloth Strength Tester) என்று பெயர். இதில் இணைக்கப்பட்டுள்ள ஒரு துண்டுத்துணியை, இரு பக்கமும் பிடித்துள்ள கருவி இழுக்கிறது. இதேபோல நூல் உறுதியாக இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்கவும் ஒரு கருவி இருக்கிறது. இவையிரண்டும், துணியும் நூலும் எந்த அளவுக்கு உறுதியானவை என்பதைக் கடியாரம் போன்ற எண்களுள்ள கருவியில் காட்டிவிடுகின்றன. இப்போது இது சம்பந்தமாக நவீனக் கருவி ஒன்று வந்துள்ளதாம். அது காற்று அழுத்தத்தினால் துணியைக் கிழியச் செய்து அதன்

உறுதியைக் காட்டுகிறதாம். அந்தக் கருவி விரைவில் இங்கு வரவிருக்கிறது ''.

'' அங்குள்ள இயந்திரங்களையெல்லாம் போய்ப் பார்த்தீர்களா? ''

'' பஞ்சிலிருந்து திரி உண்டாக்கும் இயந்திரம், திரியை ஒரே கனமாக, ஒழுங்காக ஆக்கும் இயந்திரம், திரியிலிருந்து நூல் இழைகளை எடுக்கும் ஸ்பீட்ப்ரேம் (Speed Frame) என்ற இயந்திரம் முதலியனவற்றைப் போய்ப் பார்த்தேன். இன்னொரு இயந்திரம் ஒன்று உள்ளது. அதற்குப் பெயர் ஜெக்கார்டு மிஷின்.''

'' அப்படியென்றால்? ''

'' ஜெக்கார்டு என்னும் பிரஞ்சுக்காரர் இதைக் கண்டுபிடித்தார். அதனால் அதற்கு அப்பெயர் வந்தது. இதன் தனிச் சிறப்பு என்னவென்றால், நமக்கு எந்தப் படம் வேண்டும் என்று எண்ணுகிறோமோ அதை இயந்திரம் நெய்துவிடும். ''

'' அது எப்படி? மந்திர தந்திர வேலையா? ''

'' அதைப் போன்றதுதான இதன் வேலையும். காந்தியடிகள் அல்லது அறிஞர் அண்ணா படம் வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அதை ஓவியர் வரைந்து கொடுப்பார். ஒரு கருவி ஓவியர் வரைந்த மாதிரியே ஓட்டைகளைப்போடும். அவ்வாறு துளை போட்ட அந்தப் படத்தை இந்த இயந்திரத்தின் மேலுள்ள ஒரு பெட்டி போன்ற அமைப்பில் பொருத்தி விடுவார்கள். இந்தப் படத்திலுள்ள துளைக்கும், அதையொட்டிவரும் இழை போன்ற கயிறுகளுக்கும் தொடர்பு இருக்கிறது. துணி நெய்து கொண்டு வரும்போதே, குறிப்பிட்ட அந்தப்படமும் நெய்யப்பட்டுவிடும்.

'' அப்படியா? விந்தையாக இருக்கிறதே! ''

'' ஆமாம். இந்த விந்தையான கருவி கம்ப்யூட்டருக்கும் முன்னோடியாகத் திகழ்கிறதாம். துணியில் பெரிய பெரிய அளவில் பூக்களோ இயற்கைக் காட்சிகளோ, உருவப் படங்களோ அமைக்க வேண்டுமானால், அதாவது நெய்ய வேண்டுமானால் கொஞ்சம் அவகாசம் தரவேண்டும். எந்த அளவுக்குப் பெரிதாக வேண்டுமோ அந்த அளவுக்குப் படத்தை அமைந்து, அதற்கான தனிக் கருவிகளில் நெய்ய வேண்டும்.

'' ஒரு விழாவுக்காக இராணி எலிசபெத்துக்குத் தேவையான பூ வேலைப்பாடுகள் மிகுந்த உடை ஒன்றும், தரை விரிப்பு ஒன்றும் செய்ய, விழா நடப்பதற்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே தயார் பண்ணக் கொடுத்து விட்டார்களாம். அவர்களுக்குப் பதின்மூன்றும் எண்ணில் நம்பிக்கை கிடையாது இல்லையா? அதற்காகப் பதின்மூன்று அடிக்குக் குறைவாகவே, அதாவது எப்படிப் பார்த்தாலும் பதின்மூன்று என்று அகலமோ உயரமோ வராத அளவு பார்த்துக் கொண்டார்களாம். ''

'' நன்றாகத்தான் இருக்கிறது. இன்று நல்ல தகவல்களைத் தெரிந்து கொண்டேன். உங்களுக்கு ரொம்ப நன்றி, '' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் மணிமேகலை.

மரங்கள் வளர அதிர்ச்சி வைத்தியம்.

அதிர்ச்சி வைத்தியம் சில மனிதர்களுக்கு நல்ல பலனைக் கொடுப்பதுண்டு. ஆனால், எல்லா மரங்களுக்கும் இந்த அதிர்ச்சி (ஷாக்) வைத்தியம் துரித வளர்ச்சியைத் தருவதாகப் பிரிட்டிஷ் விஞ்ஞானி டாக்டர் மில்லார்டு என்பவர் தெரிவித்திருக்கிறார்.

கன்றாக இருக்கும் செடிகளில் கம்பிகள் மூலம் மின்சாரத்தைச் செலுத்தினால், அதன் இயற்கையான வளர்ச்சியைவிட அதிக வேகமாக அது பெரிய செடியாக வளருகிறது.

செடிகளில் மின்சாரத்தைப் பாயவிட்டால் இவை விரைவில் மரமாகின்றன.

ஒரு மூன்று மாத காலத்தில் தானாக வளரும் வளர்ச்சியுடன், ஷாக் பெற்று அடையும் வளர்ச்சியை ஒப்பிட்டால் பின்னது கிட்டத்தட்ட இருமடங்கு இருப்பது தெரிகிறது என்கிறார் இவர்.

இந்த விவசாய விஞ்ஞானிக்கு இந்த ஆராய்ச்சி தோன்றியதே அதிசயமானது.



மரங்கள் வளர்ச்சிக்கான சத்துக்களை மண்ணிலிருந்து பெறுகிறது. வேரிலிருந்து உச்சி வரை செல்லும் இந்தச் சத்துப் பொருளில் சிறிதளவு-மிகக் குறைந்த அளவு-மின்சக்தியும் இருக்கிறது. மரங்கள் வளர்ச்சிக்கு இந்த மின்சக்தியும் உதவுகிறது என்பது இவர் கண்டுபிடிப்பு. இந்த அடிப்படையில் அதிகமாக மின்சக்தியைச் செடிகளின் மீது பாய்ச்சினால் இவை துரிதமாக வளருகின்றன என்பது அவர் கருத்து.

அடுத்தக் கட்டமாக மின்சக்தியுள்ள பாட்டரிகளைச் செடிகளுடன் இணைத்தே வைப்பது பற்றியும் இவர் யோசித்து வருகிறார். செடிகளின் வளர்ச்சிக்கு இந்தமுறை பலனளிக்கும். ஆனால், மரங்களுக்கு உதவுமா என்பதை ஆராய்ந்துதான் கூறவேண்டும் என்றார் இவர். அதுவும் முடியும் என்றால், பிறகு மரம் உற்பத்தி பற்றி எந்த நாடும் கவலையே கொள்ளத் தேவையில்லை!

ஏரிருபது



பெற்றதிரு நாட்டில் பெரும்பசியை நீக்கிடவே
உற்றதொழில் ஆகும் உழவு.

தென்புலத்தில் இன்பத் திருமண்ணில் நன்செய்யில்
பொன்விளைக்கும் வேளாண்மை போற்று.

நல்லரகம் தக்கவுரம் நாள்தோறும் காப்புமுறை
நெல்விளைவை ஓங்கவைக்கும் நேர்.

மெய்யாக ஓர்மா விளையுமரை நூறுகலம்
ஐ-ஆர்-எட் டென்றே அறி.

உழுதோன் கணக்கிட்டால் ஒன்றும்மிஞ்சா தென்னும்
பழமொழிதான் பொய்த்ததின்று பார்.

ஓர்மா நடுவதற்கே ஓர்பத் திரண்டுகுழி
தேர்ந்தெடுத்து நாற்றங்கால் செய்.

விரைவாய் நடவுநட வேண்டுமென்றால் அந்தச்
சுருள்பாய் நாற்றங்கால் தோது.

உரமிடுமின் நன்செயிலே உற்பத்தி ஓங்கத்
திறம்பெறுமின் ஏர்த்தொழில் தேர்ந்து.

பண்ணைஎரு வென்னும் பழஞ்சாணம் சாம்பருமே
மண்ணைவள மாக்கும் மருந்து.

அடியுரம் மேலுரம் ஆய்ந்த அளவில்
நடவுக்கு முன்பின்னும் நல்கு.

பொட்டாசு போன்றவற்றைப் போட்டுப் புதுமுறையாய்
நட்டால் பெ நமகசூல் நம்பு.

உவர்நிலமும் சீர்பெறவே உண்டாம் வழிகள்
அவையறிந்து நன்னிலமாய் ஆக்கு.

பொன்னும் பயிரழிக்கும் பொல்லா எலிகளையே
முன்னால் ஒழிப்பாய் முனைந்து.

தண்டழுகல் தூரழுகல் சார்ந்துவரும் நோய்பலவும்
கண்டொழித்தல் நெற்பயிர்க்குக் காப்பு.

நெல்மாவுப் பூச்சிதனை நேரத்தில் பார்த்ததனைக்
கொல்வாய்நீ பாரத்யான் கொண்டு.

பூக்கும் குறுவையின் போதழிக்கும் தீப்புகையான்
போக்கத்தூள் பி.எச்.சி. பேடு

தப்பாமல் கூட்டுறவுச் சங்கத்தால் நன்மைபல
எப்போதும் பெற்றிடலாம் இன்று.

தீவிரச் சாகுபடித் திட்டத்தால் நெல்வகையின்
மாவிளைவைக் காண்பாய் மகிழ்ந்து.

வாடும் பயிர்கண்டு வாடும் மனங்கொண்டு
பாடுபடச் செல்லுதலே பண்பு.

ஏர்காத்து நாட்டின் எழில்காத்துச் செந்தமிழ்த்தாய்ச்
சீர்காத்து வாழ்தல் சிறப்பு.

—மு. வெங்கடேசன்



ஆராய்ச்சிப் பணியில் அரசின் சாதனை

ஒரு நோயாளி வருகிறார். மருத்துவர் அவரைப் பரிசோதிக்கிறார் ஆனால், நோயாளிக்கு என்ன நோய் என்று அவரால் அறிய முடியவில்லை. உடனே நோயாளியின் இரத்தத்தைச் சிறு கண்ணாடிக்கருவிகளில் வைத்து அனுப்புகிறார். எங்கு? கிண்டியில் உள்ள கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு!

ஓர் ஊரில் காலரா பரவி இருப்பதாகச் சந்தேகப் படுகிறார்கள். ஆனால், அதனைத் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஒரு நோயாளியின் மலத்தை ஆராய அனுப்புகிறார்கள். எங்கு ? கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு !

ஆம்! கிங் ஆராய்ச்சி நிலையம் (King Institute) சென்னை, கிண்டியில் இருக்கிறது. 19-வது நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இந்த நிலையம் இப்போது 40 ஏக்கர் பரப்பளவில் அமைதியான இயற்கைச் சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நல்ல காற்றோட்டமான பரந்த இடத்தில், மிக முக்கியமான பணிகளில் ஈடுபட்டிருக்கும் இந்த ஆராய்ச்சி நிலையத்துக்குக் ‘ கிங் ’ என்ற பெயர் எப்படி வந்தது?

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் லெப்டினென்ட் கர்னல் டபிள்யூ. ஜி. கிங் என்பவர், அம்மை குத்தும் இலாகாவில் இன்ஸ்பெக்டராகவும், சுகாதார உதவி ஆணையராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

கிருமிகள் ஆராய்ச்சிக்காகவும் அம்மை, காலரா, பிளேக் முதலான நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைத் தயார் செய்வதற்காகவும், சென்னை நகரிலேயே ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று இவர் பெருமுயற்சி செய்தார். தமது விருப்பத்தை அக்காலச் சென்னை அரசுக்கு விண்ணப்பம் செய்தார். பல காரணங்களால் இவருடைய விண்ணப்பத்தை அரசினர் புறக்கணித்து வந்தார்கள். பிறகுதான் இதற்கொரு விடிவு காலம் வந்தது.

அப்போது சென்னை ஆளுநராக இருந்த ஆம்தில் பிரபு (Lord Ampthill) ஓர் ஆராய்ச்சிக் கூடத்தைத் திறந்து வைத்தார். அப்போது அவர் கிங் துரை பதினைந்து ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சி நிலையத்துக்காகப் பாடுபட்டதைக் குறிப்பிட்டு, இந்த நிலையத்துக்கு அவர் பெயரையே வைப்பதுதான் பொருத்தமானது என்பதை எடுத்துச் சொன்னார். அன்றுமுதல் இது ‘கிங் ஆராய்ச்சி நிலையம்’ (King Institute) , என்ற பெயருடன் விளங்கி வருகிறது.

இந்தப் பழம்பெரும் ஆராய்ச்சி நிலையத்தில் 800 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களில் 30 பேர் மருத்துவர்கள், பெண் மருத்துவர்களும் இங்கு அதிகமாக இருக்கிறார்கள். 20 பேர் விஞ்ஞானப் பட்டதாரிகள். மற்றும் கால்நடை மருத்துவர்கள் நான்கு பேர்களும், தொழில்நுட்ப உதவியாளர்களும் பணியாற்றுகிறார்கள்.

இந்தியாவிலேயே முதன் முதல் துவக்கப்பட்ட பெருமை இந்த ஆராய்ச்சிநிலையத்தையே சாரும். இம்மாதிரியான ஆராய்ச்சி நிலையங்கள் பம்பாயிலும், ஐதராபாத்திலும் இருந்தாலும், பெருமளவு அனைவராலும் போற்றிப் புகழும் வண்ணம் பணியாற்றிவருவது சென்னை கிங் ஆராய்ச்சி நிலையமே.

நோய்கள் எப்படிப் பரவுகின்றன என்பது நமக்குத் தெரியும். காற்று, தண்ணீர், உணவு முதலானவைகள் மூலம் அவை பரவி மக்களுக்குப் பெருந்தீங்கை உண்டுபண்ணுகின்றன. கிருமிகளில் எத்தனையோ வகைகள் உண்டு. அத்தனை வகைக் கிருமிகளிலிருந்தும் அத்தனை வகை நோய்கள் உற்பத்தி செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. இந்தக் கிருமிகளையெல்லாம் நாம் பார்க்க முடியுமா? எந்தெந்தக் கிருமிகள் எந்தெந்த நோயை உண்டுபண்ணுகின்றன என்று நாம் தெரிந்து கொள்ள முடியுமா? முடியும். கிங் ஆராய்ச்சி நிலையத்தில் இவைகளையெல்லாம் பார்க்கமுடியும். ஆம்! இந்தக் கிருமிகளெல்லாம் இங்குவளர்க்கப்படுகின்றன, ஆராய்ச்சிக்காக!

நீரைப் பரிசோதிக்கவும், உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடிக்கவும், இந்த நிலையத்தார் முன்பு ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இப்போது அவை தனித்தனி நிலையங்களால் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கிங் நிலையத்தில் ‘என்னென்ன’ இருக்கின்றன?

பாம்பு, தேள், விஷப்பூச்சிகள், எலி, முயல், குதிரைகள், கன்றுக்குட்டிகள், கிருமிகள். . . . . . !

‘‘ஐயோ போதும்! இன்னும் சொல்லாதீர்கள்’’ என்று நீங்கள் சொல்வதற்கு முன், இந்த நிலையத்தில் என்னென்ன ‘பணிகள்’ நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்வோம்.

இரண்டாவது உலகப் போரின்போது நமது வீரர்கள் ஆங்காங்கு முகாம்கள் அமைக்க வேண்டியிருந்தது. அப்போது வேலையாட்களும் அங்குத் தங்க நேர்ந்தது. அவர்கள் குடிக்கச் சுத்தமான நீர் தேவை. நீரை உபயோகிப்பதற்கு முன் அதிகாரிகள் ஆங்காங்கே உள்ள நீரை, கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பிப் பரிசோதனை செய்து வந்தார்கள்.

ஒரு சமயம் நெல்லூரில் மக்கள் ஒருவகை நோய்க்கு ஆளானார்கள். இந்த நோய் முதுகு எலும்பையும், கீல்களையும் தாக்கும். இந்நோயாளிகள் குனிந்து நிமிர முடியாது. பற்களிலும் மாறுதல்கள் தோன்றினவாம். நோய் உள்ள இடத்திலும், நோய் இல்லாத இடத்திலும் உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து, கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பினார்கள். நோய் பரவியிருந்த ஊரிலிருந்து எடுத்த நீரில் ஒருவகை உப்பு கலந்திருந்தது; நோய் இல்லாத ஊரில் எடுத்த நீரில் இந்த உப்பு இல்லை என்பது பரிசோதனையிலிருந்து தெரியவந்தது.

இப்படி ஆராய்ச்சிகள் செய்து வரும் இந்நிலையத்திற்கு ‘தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையம்’ என்ற பெயருமுண்டு. இந்த நிலையத்தில் இப்போது ஆறு பிரிவுகள் இருக்கின்றன. அவை

1. அம்மைப்பால் தயாரித்தல்.
2. நஞ்சுமுறிப்புப் பிரிவு.
3. குருதி சேமிக்கும் நிலையம்.
4. நோய்கள் பரிசோதனைக் கூடம்.
5. பொருள்களின் தரத்தைக் கண்டு பிடித்தல்.
6. காலரா, டைபாய்டு தடுப்பு மருந்துப் பிரிவு.

இவ்வாராய்ச்சிகளில் தேர்ந்த விஞ்ஞானிகள் பலர் இந்நிலையத்தில் செயல்பட்டு வருகின்றனர். ஆராய்ச்சிகளுக்குத் தேவையான எல்லாச் சாதனங்களும் இங்கு இருக்கின்றன. இங்குத் தயாரிக்கப்படும் அம்மைப்பால் தமிழ்நாட்டிற்கும், அந்தமான், ஒரிசா, வங்கம், ஆகிய இடங்களுக்கும் அனுப்பப் படுகின்றன. அம்மைப்பால் கன்றுகள் மூலமாகத் தயாரிக்கப்படுகின்றது. அதற்காக ஒன்றரை வயதுள்ள, நோயற்ற கன்றுகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இந்தக் கன்றின் வயிற்றினடியில் நன்கு மழிக்கப்பட்டு, கீறி அந்த இடத்தில் அம்மை குத்தப்படுகின்றன. அந்த இடம் பொங்குகிறது. அதைச் சிறு கரண்டியில் சுரண்டி எடுத்தால் ஒரு திரவம் கிடைக்கிறது. இதைக் கொண்டு இவ்வாராய்ச்சி நிலையத்தில் அம்மைப்பால் தயாரிக்கப்படுகிறது.

அம்மைப் பாலை. [illegible] புட்டிகளில் ஊற்றிக் குளிர்ந்த அறையில் வைத்துக் காப்பாற்றுகிறார்கள். அம்மைப் பாலைப் பொடியாகவும் தயாரிக்க முடியும். இதோடு நீர்கலந்து அம்மைப் பால் உண்டாக்கிக் கொள்ளலாம்.

ஒரு ஊரில் காலரா என்று வைத்துக் கொள்வோம். அதனைத் திடமாக அறிவதற்கு, அந்த நோயாளியின் மலத்தை இந்த நிலையத்துக்கு அனுப்பிப் பரிசோதிக்கிறார்கள். பிளேக் நோய் ஊரில் பரவும்பொழுது எலிகள் இறந்து விழுகின்றன. அப்படி விழும் எலியினுடைய ஈரல்களை எடுத்துக் கண்ணாடித் துண்டில் தேய்த்து உருப்பெருக்காடியின் மூலம் சோதனை செய்து, அந்நோய் பரவுகின்றதா என்பதை அறிந்து சொல்கிறார்கள். சில சமயங்களில் நோயுள்ள ஊர்களுக்கும் இந்த நிலையத்தினர் சென்று சோதனை நடத்துகின்றனர். நோய் பரவுவதற்கு முன்பே, அதனை மேலும் பரவவிடாமல் தடுக்க இந்த நிலையம் வழிவகை செய்து வருகிறது. வெள்ளத்துக்கு அணை போடுவது போல இந்த நிலையம் நோய்க்குத் தடை போடுகிறது.

இவ்வளவு நுணுக்கமான ஆராய்ச்சிகள் பல செய்து வரும் இந்நிலையம், பல்கலைக்கழகப்பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும் பயிற்சி தருகிறது. எம்.டி., பி.எச்டி., எம்.எஸ்சி., போன்ற பட்டப் படிப்புகள் இங்குக் கற்றுத் தரப்படுகின்றன.

இங்குள்ள நஞ்சு (விஷம்) முறிவுப் பிரிவின் வேலை என்ன?

டிப்தீரியா என்ற ஒருவகை நோய் சிறுப்பிள்ளைகளைத் தாக்குகின்றது. இந்த நோய் தொண்டையில் பரவி ஒருவகையான நஞ்சு நீரை இரத்தத்தில் புகுத்தி விடுகின்றது. இரத்தத்தில் இந்த நஞ்சுநீர் பரவும் போது, இதயமும் வேறு சில தசைகளும் வலி குன்றித் தளர்ந்து போகும்.

டிட்டனஸ் என்னும் வாய்க்கட்டம்மை நோய் ஒன்று இருக்கிறது. காயம் பட்டவர்களைத் தாக்குகின்ற இந்த நோயால் நோயாளி பிழைப்பது அரிது. டிட்டனஸ் கிருமிகள் காயம் பட்ட இடத்தில் தங்கி வளர்ந்து நஞ்சுத் தன்மையை உடலில் பரவச் செய்யும். உடலின் தசைகள் அனைத்தும் இறுகி நின்று, பொறுக்க முடியாத வேதனையை விளைக்கும். பின்பு மூச்சு அடைப்பட்டு உயிருக்கே கேடு வரும்.

இவ்விரண்டு நோய்களையும் வராமல் தடுக்க என்ன வழி?

டிட்டனஸ் கிருமிகளைக் கருவிகளில் வைத்து வளர்த்து, அதன் நஞ்சைப் பொழியச் செய்வார்கள். இந்த நஞ்சுநீர் கொடிய இயல்புடையது. ஒரு சிறு துளியும் மிகக் கேடு விளைக்கும் இந்த நஞ்சுநீரைச் சிறு பிராணிகளுக்குள் புகுத்தி ஆராய்ந்தனர். அப்பிராணிகள் தசை இறுக்கம் அடைந்து இறந்தன. ஆனால், இந்த நஞ்சு நீரைக் குதிரைகளுக்குச் செலுத்தினால் அவை பாதிக்கப் படுவதில்லை; அதற்கு இரத்தம் அதிகமாக இருப்பதே காரணம். நஞ்சு நீரை முறிக்க ஒருவகைத் தடைப்பொருள் குதிரையின் இரத்தத்தில் உண்டாகிறது. குதிரையின் இரத்தத்தை எடுத்து, நஞ்சு முறிவு மருந்துகள் தயார் செய்கிறார்கள். இப்படி ஒவ்வொரு நஞ்சுள்ள நோய்க்கும் அந்தந்த நோய்க் கிருமிகளை வளர்த்து அதன் நஞ்சைக் குதிரைக்குச் செலுத்தி, குதிரை இரத்தத்திலிருந்து நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கிறார்கள்.

தமிழகத்திலுள்ள எல்லா அரசினர் மருத்துவமனைகளுக்கும், மத்திய இரத்தசேமிப்பு நிலையமாக இந்தஆராய்ச்சி



நிலையம் விளங்கி வருகிறது. இரத்தச் சேமிப்புச் சம்பந்தமான எல்லா உபகரணங்களையும் இந்த நிலையமே தயாரித்து மருத்துவ மனைகளுக்கு வழங்குகிறது.

மனித இரத்தத்தை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை; 1. ஏ.பிரிவு, 2. பி.பிரிவு, 3. ஓ. பிரிவு. 4. ஏ. பி. பிரிவு. ஏ பிரிவு இரத்தமும், பி. பிரிவு இரத்தமும் ஒன்றுடன் ஒன்று சேராது. ஓ.பிரிவு இரத்தம் வேறு பிரிவைச் சேர்ந்தவர்களுடைய இரத்தத்துடன் சீராகக் கலந்து கொள்ளும். ஆனால், ஏ.பி. பிரிவைச் சார்ந்தவருடைய இரத்தம் வேறு பிரிவினருடைய இரத்தத்துடன் சீராகச் சேருவதில்லை. இதனால், இரத்தச் சேமிப்பில் இப்பிரிவினருடைய இரத்தத்தை ஏற்றுக் கொள்வதில்லை.

பாகிஸ்தான் நம்மீது போர் தொடுத்த போது, ஏராளமான பேர் எழும்பூரிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தில் இரத்த தானம் செய்தார்களல்லவா? கிங் ஆராய்ச்சி நிலையத்தினர்தான் அங்குச் சென்று இரத்தத்தைச் சேமித்தார்கள். இப்போதும்சேமித்து வருகின்றார்கள். இப்படிச் சேமித்து வைக்கும் போது இரத்த வடிகங்கள் (Corpuscles) அடியில் தங்கியிருக்கும். அதன்மீது தெளிந்த நீரும் (Plasma) தேங்கலாகத் தங்கி நிற்கும். இவ்விரண்டு பொருள்களையும் வேறு வேறாகப் பிரிக்கலாம்.

இரத்த வடிகங்களையும், வடிகங்களுக்கு மேல் தங்கியிருக்கும் நீரையும் தனியே பயன்படுத்தலாம். இரத்த நீரைச் சுமார் ஓர் ஆண்டு வரைக்கும் காப்பாற்றிப் பயன்படுத்தலாம். இரத்த வடிகங்களைப் பத்து நாள் வரையில் காப்பாற்றிப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கொடிய காயங்கள் படும் பொழுதும், மிகப் பெரிய இரணச் சிகிச்சைகள் நிகழும் போதும், தீக்காயங்கள் ஏற்படும் பொழுதும் நாடித் தளர்வு பொதுவாக ஏற்படும். அப்பொழுது இரத்த நீரை மட்டும் நோயாளியின் நரம்பு வழியாக உடலில் செலுத்தினால் நோயாளி நாடி வலிவுறும். உயிர் பிழைப்பான். இரத்த நீரை முன்னரே சேமித்து வைப்பதால் காலந் தாழ்த்தாமல் நோயாளிக்கு உதவ முடியும். இரத்த வடிகங்களை இரத்தச் சோகை பிடித்த நோயாளிக்குச் செலுத்துவதனால் அவனுடைய இரத்தம் தெளிந்து செழுமை பெறும். இப்படி ஆபத்துக்கு உதவும் சமய சஞ்சீவியாக கிங் நிலையம் இருந்து வருகிறது.

இரத்தத்தைப் பொடியாகவும் ஆக்கிப் பயன்படுத்தி வருகிறார்கள். பாகிஸ்தான் போரில் காயமடைந்த எண்ணற்ற வீரர்களுக்குக் கிங் நிலையம் இரத்தப் பொடியை அனுப்பியிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் அமைச்சர்களின் துணைவியர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் முதலானோர் சுமார் 250 பேர் இரத்தம் வழங்கியுள்ளனர். இதைத் தவிர வெளியிடங்களுக்கும் சென்று சுமார் 250 பேர்களிடம் இரத்த தானம் பெற்றிருக்கிறார்கள். இதற்காக இரண்டு இரத்தச் சேமிப்பு வண்டிகள் இங்கே உள்ளன. சில சமயங்களில் சிறைக் கைதிகளிடமிருந்தும் இரத்த தானம் பெறுவதுண்டு. அதற்காக அவர்களுக்கு 15 நாள் உணவு வழங்கப்படுகிறது.

சேகரிக்கப்பட்ட இரத்தத்திலிருந்து திரவத்தைத் தனியாக எடுக்கிறார்கள். ஒரு கருவியின் மூலம் இத்திரவத்தைத் திடப் பொருளாகப் பொடியாக மாற்றுகிறார்கள். இத்திடப்பொருள் ஐந்தாண்டுகள் வரை கெடாமல் இருக்கும். தேவையான போது இதை இரத்தமாக ஆக்கிக் கொள்ளலாம். போர் முனையில் குண்டுக் காயம் பட்ட வீரர்களுக்கு இது பெரிதும் உதவும்.

மருத்துவ மனைகளில் சேமிக்கப்படும் இரத்தத்தை ஏழு நாட்கள் வரை வைத்திருப்பார்கள். அதற்குப் பிறகு கிங் நிலையத்துக்கு அவற்றை அனுப்பிவிடுவார்கள். இங்கு அவைகளைத் திடப் பொருளாக மாற்றிப் புட்டிகளில் அடைத்துப் பாதுகாப்பாக வைத்து அவசரக் காலத்துக்கு உதவுவார்கள்.

லெப்டினென்ட் கர்னல் கிங்

இதோடு இவர்கள் பணி நின்றுவிடவில்லை. குளுகோசும் தயாரிக்கிறார்கள். 'டிஸ்டில் வாட்டரும்' சிறு சிறு குப்பிகளில் தயாரித்து மருத்துவமனைகளுக்கு அனுப்புகிறார்கள். மேலும், இப்போது தேள் கடிக்கு மருந்து ஒன்றையும் கண்டுபிடிப்பதில் முனைந்துள்ளார்கள். பாம்பு, தேள் முதலானவைகளிடமிருந்து அதன் நஞ்சை எடுக்க முன்பெல்லாம் அதனைக் கொல்ல வேண்டியிருந்தது. இப்போது மின்சார அதிர்ச்சியின் மூலம் நஞ்சை மட்டும் எடுக்கலாம். அந்த நஞ்சிலிருந்து மருந்துகள் தயாரிக்கின்றனர்.

தயாரிக்கப்பட்ட மருந்துகள் நல்ல பலனை அளிக்கின்றனவா என்று பரிசோதிக்க வெள்ளெலிகள், முயல்களை இங்கு ஆயிரக் கணக்கில் வைத்துள்ளனர். மருந்துகளுக்குக் குதிரையின் இரத்தத்தைப் பயன்படுத்துவதற்காக இங்குச் சுமார் 100 குதிரைகள் இருக்கின்றன. சில குதிரைகள் ராணுவத்தினராலும், 'ரேஸ் கிளப்' பினராலும் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை. சில குதிரைகள் அமிர்தசரஸ், டெல்லி முதலிய இடங்களிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டவை.

இங்குத் 'தொழில் நுட்ப ஆய்வுக் கூடப்பள்ளி' (School of Laboratory Technology) ஒன்று இருக்கிறது. இங்கு ஆய்வுக்கூடச் சம்பந்தமான தொழில் நுட்பங்களைக் கற்றுத்தந்து, சான்றிதழ்

21

தரப்படுகின்றது. தனியார் ஆய்வுக் கூடங்களில் பணியாற்றுபவர்கள் கூட இங்கு வந்து பயிற்சி பெறுகிறார்கள். தொற்று நோய்த் தடுப்பு ஊசிகள் போட்டுச் சான்றிதழ் தருவதும் இவர்கள் பணிகளில் ஒன்று.

மனித குலத்துக்கு மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் கிங் ஆராய்ச்சி நிலையத்துக்கு ஆண்டுக்கு அறுபது இலட்சம் ரூபாய் செலவாகிறது. "வசதியும், வாய்ப்பும் இருந்தால் உலக நாடுகளே பாராட்டும் அளவுக்கு இன்னும் அரிய ஆராய்ச்சிகள் நம்மால் செய்ய முடியும். அத்தகைய திறமைமிக்க விஞ்ஞானிகள் நம்மிடம் இருக்கிறார்கள்" என்று பெருமிதத்துடன் கூறுகிறார் இந்நிலைய இயக்குநர் டாக்டர் எஸ். ஞானதேசிகன். இவர் இதே நிலையத்தில் இருபது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்.

கிருமிகளை ஒழித்துக் கட்டி, நோய் என்னும் மரணக்குழியிலிருந்து மக்களை விடுவிக்க அரும்பாடுபட்டு வரும் கிங் நிலையம், மற்ற ஆராய்ச்சி நிலையங்களுக்கு ஒரு 'கிங்'காக—மன்னனாக விளங்குகிறதென்றால் அது மிகையல்ல!

வீரத்திற்குப் பரிசு

குடந்தையைச் சேர்ந்த திரு சீனிவாசன் அவர்களது மைந்தன் சூரிய நாராயணன். 15 வயதுள்ள இவ்விளைஞன் பதினோராம் வகுப்பு மாணவன்.

5—8—1971 அன்று காவிரியில் நீராடிவிட்டுச் சூரிய நாராயணன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். "அய்யோ அய்யோ" எனும் அலறலைக் கேட்டான் அப்போது; காவிரியாற்றில் இரு பெண்களும், இரு சிறுமிகளும் ஓர் ஆடவரும் சுழலிலே சிக்கி உயிருக்கு மன்றாடுவதைக் கண்ட அவன் ஆற்றிலே தாவினான்; நீரோடு போராடிய அவர்களை நீந்திக் கரையில் சேர்த்தான்;

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 24-ஆம் நாளில் நேரு விளையாட்டுத் திடலில் மாநகராட்சிச் சார்பில் நடந்த நேரு விழாவில் முதல்வரின் மனைவியார் திருமதி தயாளு கருணாநிதி அவர்கள் வெள்ளிக் கோப்பையை எஸ். சூரிய நாராயணனுக்கு வழங்கினார்.

கடந்த 25—1—72 அன்று டெல்லியில் குழந்தைகள் நலச் சங்கம் இந்த மாணவனுக்கு வீரப் பதக்கம் அளித்துச் சிறப்பித்திருக்கிறது.

உண்மையை உணர்த்தும் கருவி!

கொலை செய்துவிட்டுக் கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்களையெல்லாம் வெகு சாமர்த்தியமாக மறைத்து விட்டுத் தப்பி விடுகின்றனர் சில குற்றவாளிகள். துப்பறியும் நாய்களாலும் அவர்களை மோப்பம் பிடிக்க முடிவதில்லை. சந்தேகப்பட்டு அவர்களைப் பிடித்து விசாரித்தாலும் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்வதில்லை. உருட்டல், மிரட்டல், அடித்தல், துன்புறுத்தல் ஆகியவற்றின் மூலம், அத்தகைய குற்றவாளிகளிடமிருந்து உண்மையை வரவழைக்க முடிவதில்லை. இதற்கெல்லாம் காரணம் அவர்களுக்குள்ள மன வலிமையே!

மனவலிமை உள்ள குற்றவாளி மனித உருவில் உள்ள காவல்துறை அலுவலர்களையும், துப்பறியும் நிபுணர்களையும், வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளையும் ஏமாற்றிவிடக் கூடும். ஆனால், குற்றவாளியைக் கண்டு பிடிக்க உதவும் கருவியை ஏமாற்றிவிட முடியாது! அதை 'உண்மை விளம்பி' என்றுகூடக் கூறலாம்.

குற்றவாளியைக் கண்டு பிடிக்க உதவும் கருவியின் பெயர் 'டிசெப்டோகிராப்' (Deceptograph) எனப்படுகிறது. அந்தக் கருவி மின்சாரத்தினால் இயங்கக் கூடியது. அதில் எழுதுகோல் போன்ற குறியிடும் அலகுகள் மூன்று உள்ளன. அவ்வலகுகள், அந்தக் கருவியில் பொருத்தப்பட்டிருக்கும் கட்டத்தாளில் (Graph paper) கோடுகள் போட்டுச் சந்தேகத்திற்குரிய ஆள் குற்றவாளியா இல்லையா என்பதைப் புலப்படுத்தும்.

கொலை செய்திருப்பான் என்று சந்தேகப்படும் ஆளை அக்கருவியின் அருகில் அமரச் செய்து, கருவியுடன் இணைக்க வேண்டும். இணைப்புகளைக் கொடுத்த பின்பு, அந்த ஆளிடம் 'உன் பெயரென்ன? உன் ஊர் எது?' என்பன போன்ற சாதாரணக் கேள்விகளை (Normal question) முதலில் கேட்க வேண்டும். அந்த ஆள் கூறும் பதிலுக்கு ஏற்ப அவனுடைய இரத்த அழுத்தம் (Blood pressure) மூச்சு விடுதல் (Respiration) தோலின் தாங்கும் சக்தி (Skin Resistance) ஆகியவைகள் அமைந்திருக்குமாதலின், அதற்கேற்ப அந்தக் கருவியில் உள்ள கட்டத்தாளில் மூன்று வெவ்வேறு கோடுகள் ஏற்படும். அக்கோடுகள் சாதாரண நிலையில் அந்த ஆளின் மனநிலையைக் காட்டுகின்றன. அதன்பின் படிப்படியாகக் கேள்வியின் தன்மையைக் கடுமையாக்க வேண்டும். கேள்விகளுக்கு ஏற்பக் கோடுகள் அமையும்.

பின்பு திடீரென்று 'நீதான் அந்தக் கொலையைச் செய்தாய் என்பதற்கு ஆதாரம் உள்ளது. உண்மையை ஒப்புக் கொள்கிறாயா?' என்று கேட்க வேண்டும். அப்பொழுது அவன் மன வலிமையின் காரணமாக 'இல்லை' என்று பதிலளிக்கலாம். ஆனால், அந்த அதிர்ச்சி தரும் கேள்வியின் மூலம் அவனுடைய உள்ளத்திலும், உடலிலும் ஏற்படும் மாற்றங்களை அந்தக் கருவி கோடுகள் மூலம் காட்டிவிடும். அக்கோடுகள் சாதாரணக் கேள்விகள் கேட்கப்பட்ட போது ஏற்பட்ட கோடுகளுக்கு முற்றிலும் மாறுபட்டவைகளாக இருக்கும். அதிலிருந்து அந்த ஆள் உண்மைக் குற்றவாளி என்பதை அறிந்து கொள்ளலாம்.

அந்த ஆள் உண்மையிலேயே குற்றவாளி இல்லை என்றால், சாதாரணக் கேள்விகள் கேட்ட போது தோன்றிய கோடுகள் போலவே, அதிர்ச்சி தரும் கேள்விகள் கேட்டபோது தோன்றிய கோடுகளும் ஒரேமாதிரியாக இருக்கும்.

குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவும் அந்தக் கருவி சென்னை தெற்குக் கடற்கரைச் சாலையில் உள்ள மாநிலக் கல்லூரியில் உள்ளது. மாநிலக் கல்லூரியில் 14-1-1972 முதல் 17-1-1972 வரை நடைபெற்ற உளவியல் கண்காட்சியில் (Psychology Exhibition) அக்கருவியும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்தியாவிலேயே இத்தகைய கருவி வேறு எங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உளவியல் கண்காட்சியில் நமது நுண்ணறிவுத் திறன், பிறரைக் கவரும் தன்மை (Personality) ஆகியவைகளையும் அறிந்துகொள்ள வழி செய்திருந்ததுடன், நமது உள்ளத்தை உணரப் பல விளக்கங்கள் செய்து காட்டப் பட்டன. அக்காட்சியைக் கல்வி அமைச்சர் திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்கள், 13-1-1972 அன்று மாலை திறந்து வைத்தார். அவ்வமயம் உளவியல் சங்கத்தின் சார்பாக அவர்களிடம் ரூபாய் 1,500 பாதுகாப்பு நிதியாக அளிக்கப்பட்டது.

உளவியலை எல்லாரும் உணர்ந்து கொள்வதற்காகவும் பாதுகாப்பு நிதி திரட்டுவதற்காகவும் உளவியல் கண்காட்சி அமைக்கப் பட்டது மிகவும் பாராட்டுக்குரியதே!

செய்திகள்! செய்திகள்! செய்திகள்!

களையெடுக்கும் புல்!

பயிரை அழிப்பதில் வெட்டுக்கிளி, எலி, இவற்றோடு களையும் சேர்ந்து கொள்கிறது. களைகளை அகற்றுவதே உழவர்களுக்கு ஒரு பெரும் வேலையாக இருக்கிறது. களையெடுக்கும் வேலையைச் செய்ய மருந்து சக்தியுடன் கூடிய ஒருவகைப் புல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புல்லை ஷெல் நிறுவனத்தார் கண்டுபிடித்துள்ளனர்.

மருந்து சக்தியுடைய இப்புல் சிலவாரங்களுக்குத் தான் உயிரோடு இருக்கும். அப்போது, பயிர்களினூடே தோன்றிப் பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும் களைகளை வளர விடாமல் பட்டுவிடச் செய்கிறது இந்தப் புல். பயிர்களுக்கு ஆரம்ப காலத்தில் களைகளால் பெருந்தீங்கு ஏற்படும். எனவே அந்த ஆரம்ப காலத்தில் களையை அழிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அந்த வேலையை இந்தப் புல் செய்கிறது.

பயிர்வளர்ச்சியைப் பாதிக்கும் களைகளை அழித்துப், பயிரைப் பாதுகாத்துவிட்டுப் பின்னர் சில வாரங்களில் இப்புல்லும் தானே அழிந்து விடுகிறது.

கடல் பாசித்தூள் ஓர் சிறந்த சத்துணவு!

கடல்பாசியைச் சேகரித்துப் பதப்படுத்தித் தூளாக்கி, உணவுப் பொருள்களின்மேல் உப்புத்தூளைப் போல் போட்டுச் சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்ல சத்து தரக்கூடியது என்று அயர்லாந்து நிறுவனம் ஒன்று அறிவித்திருக்கிறது.

சிறந்த சத்துணவாகப் பயன்படுவதுடன், நல்ல எருவாகவும் இதனைப் பயன்படுத்தலாம். சத்துணவுத் தூள் தயாரிப்பதில் சேதமடையும் கடல்பாசியை எருவாகப் பயன்படுத்தினால் பயிர்கள் குறைந்தது இருமடங்கு வளர்ச்சியும், பலனும் தருகின்றன என்றும் அந்நிறுவனம் கூறுகிறது.

கடல்பாசி அப்படியே ஒரு சிறந்தவைட்டமின். சத்துணவுத் தட்டுப்பாடு இருக்கும் இக்காலத்தில், இயற்கையாகக் கிடைக்கும் சத்துணவைப் பயன்படுத்த வேண்டாமா? இதற்காக அயர்லாந்து நிறுவனம் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறது. கடல் பாசியைப் பெருமளவில் சேகரித்து, இயந்திரங்கள் மூலம் உலரவைத்துத் தூள் செய்கிறார்கள்.

இப்படித் தயாரிக்கப்படும் சத்துணவு ஐரோப்பாவில் ஏற்கெனவே பிரபலமாகியிருக்கிறது. இதையறிந்ததும் இந்தியாவும், ஆப்பிரிக்காவும் இதில் அக்கறை காட்டிக் கடல்பாசி வளர்க்க முடிவு செய்துள்ளன. இந்த அயர்லாந்து நிறுவனம் சென்ற ஆண்டில் மட்டும் 10 இலட்சம் பவுன்களுக்கும் மேல் மதிப்புள்ள கடல்பாசித் தூள்களை விற்பனை செய்திருக்கிறது.

அங்கை அளவில் அதிசய வானொலி!

நமது உள்ளங்கையைவிட மிகச் சிறிய அளவில் அமைக்கப்பட்ட ஓர் அதிசய வானொலியைச் சோவியத்து ருஷ்யா உருவாக்கியுள்ளது. உலகிலேயே மிகச் சிறிய வானொலியான இதன் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 58 தானும்.

விந்தையிலும் விந்தை!

உலகப் புகழ்பெற்ற ஆக்ஃபா நிறுவனம் ஒரு புதுமையான காமிராவைத் தயாரித்துள்ளது. வழக்கமாகப் படம் எடுக்கும் காமிராவில் உள்ள பொத்தானை அழுத்துவதற்குப் பதிலாக இதில் பொருத்தப்பட்டுள்ள சிவப்பு வண்ண வட்டக் கருவி மீது சற்று முணுமுணுத்தால் போதுமாம்; தெளிவான படத்தை இது எடுத்து விடுகிறது. விஞ்ஞான விந்தைகளில் இதுவும் ஒரு விந்தை.

கண்ணான உதவி!

பிரிட்டனைச் சேர்ந்த ராயல் காமன்வெல்த் நிறுவனம் அமைத்துள்ள நடமாடும் கண் சிகிச்சை முகாம்கள் இந்தியாவெங்கும் உள்ள சிற்றூர்கள் தோறும் சென்று, முகாமிட்டு அவ்வப் பகுதியில் உள்ள பார்வையற்றோர்க்குச் சிகிச்சை அளிக்கும் சிறந்த பணியை மேற்கொண்டுள்ளது.

அதன்படி மதுரை மாவட்டம் முழுவதும் முகாமிட்டு ஏறத்தாழ 1,500 பார்வை இழந்த பாமர மக்கட்கு இந்த ஆண்டில் அறுவைச் சிகிச்சை இதுவரை செய்து முடித்துவிட்டது. சிகிச்சைகள் அனைத்தும் இலவசம்! இலவசம்!


அண்ணன் காட்டிய வழி!
கதை: நம்பி
படம்: இமார்
15
முத்துவும் வேலனும் ஒன்றாக வருகிறார்களே!
ஆருயிர் நண்பர்கள் ஒன்று வராமல் தனித்தனியாகவா வருவார்கள்?
வேலா! உன் பட்டணத்துச் சிநேகிதர்ங்க செல்வனும் செந்தாமரையும் வரலியா?
முத்து! நாங்க கூப்பிட்டா எங்கேயும் வரமாட்டேன்னு சொன்னே... இப்ப எப்படி வந்தே?
நான்தான் முத்துவைக் கெஞ்சி இங்கே உங்களிடம் அழைத்து வந்தேன்!
எங்களிடமா?
உங்க எல்லாரிடமும் மன்னிப்புக் கேட்கணும்னுதான் நான் இங்கே முத்துவை அழைச்சிக்கிட்டு வந்தேன்
ஏன் வேலா! இந்தத் திடீர்ச் சரணாகதி?
இப்ப என்ன நடந்துச்சு? எதுக்கு நீ மன்னிப்புக் கேட்கணும்?
ஆமாம் வேலா நீ மன்னிப்புக் கேட்டா அருமை நண்பன் முத்துவின் மனம் படாதபாடுபடும். முதல்லே காரணத்தைச் சொல்லு!
எப்பவும் கிண்டல்தான்! வேலா! விஷயத்தைச் சொல்லு!
வேலா! நீ ஒண்ணும் பயப்பட வேண்டாம்! அது கிடைச்சிடுச்சு!

வெண்பாப் போட்டி

25. யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு

● காடுமே டெல்லாம் கழனியாம்; பூங்காவாம்;
நாடும் தொழிற்புதுமை நன்றுடாம்;—வீடெல்லாம்
ஆராத சொர்க்கமாம்; பேருழைப்பின் ஆற்றலுடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர். கோம்பைச்சிரான், கோம்பை.

வறுமை நிலைமாறி வாட்டும் துயர்நீங்கிச்
சிறுமை சிதைந்தொழியும்; சீர்மை—பெறுதலாலிப்
பாருயரும்; நன்னெஞ்சப் பேரன்புப் பண்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ஆர். மகேந்திரமணி, தருமபுரி.

விண்வெளியில் வீரம் விளைத்த விறற்படையோ?
மண்வெளியைத் தேய்த்தபெரும் மாப்படையோ?—தண்
கடலில்
போரை அழித்த புகழ்ப்படையோ? அப்படை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர் சமா. அருணாசலம், சித்தளந்தூர்.

உண்ண உணவின்றி, உற்றறிய எண்ணறிவுக்
கண்ணின்றிக் கட்டவோர் கந்தலின்றி—மண்ணுலகில்
தேரையென வாழுநிலை மாற்றிடும் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—உலகத்தமிழ்க் கழகம், தாராபுரம் வட்டம்.

பண்பால் பதவியிலே பாங்குமிகும் பான்மையால்
கண்போல் பிறரின்பம் காத்ததனால்—அண்ணாபோல்
ஊரை உலகை உயர்த்திவிடும் ஊக்கமுடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சிவ. இருட்டிணன், கணியூர்.

வீட்டிற் கொருபிள்ளை வீரத்திற் கோர்பிள்ளை
நாட்டிற்குப் போதுமே! நாடிடும்—நாட்டினில்
போர்வீரர் ஏருழவர் போற்றுமன்னை—யார்தந்தை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—இரா. தேன்மொழியாள், சின்னத்தாராபுரம்.

அன்போ டறிவும் அளவிலாச் செல்வமும்
நன்றுடனே கொண்டாரிந் நல்லவர்—என்கின்ற
சீரைப் பெறுவதினும் செம்மையாம் நம்மன்னை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

வல்லரசைப் பேட்டியிட்டு வல்லிரவுந் துஞ்சாமல்
நல்லறப் போர்நடத்தி நாடுவென்றார்—நல்லாய்கேள்!
கூரைவாழ் விக்கவந்த கூர்மதியாம் காந்தியம்மை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—எ. கண்ணம்மாள், செஞ்சி.

காடழித்து நாடாக்கிக் காட்டாறு தேக்கிவைத்து
வீடளித்து மக்கள் விழிப்புணர்ச்சிக் (கு)—ஏடளித்துக்
கூரையெலாம் கோபுரமாய் ஆக்கும் நினைப்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், திருமங்கலம்.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—

வித்துவான் ச. சித்தாராம்,
திருவள்ளுவர் இல்லம், கோம்பை அஞ்சல்,
மதுரை மாவட்டம்.

229

கோலோச்சி நாட்டின் குடிகாக்கும் மன்னரினும்
வேல்தூக்கிச் செய்யும்போர் வீரரினும்—மேலாவார்.
ஏருழவர் ; என்றும் பணியாற்றும் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—எஸ். சாம்பசிவம், நாமக்கல்.

கயவர் கொடுமையில் காய்ந்திங்கே வந்தோர்
துயர்துடைத்த தூயவர்கள் ; என்றும்—அயராமல்
யாவரையும் காக்கும் இனிய அருள்விழி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—நெ. சி. சாம்பமூர்த்தி, குரோம்பேட்டை.

கல்லாரும் கற்றவரும் இல்லாரும் உள்ளவரும்
எல்லாரும் ஏற்கும் இசையினில்—நல்லாராய்ப்
பேரெடுத்து மண்ணில் பெயர்விளங்க வாழ்ந்தபெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புஷ்பன், தடாகம்.

அன்பால் அரவணைக்கும் அன்னையுடன் பிள்ளைக்காய்த்
தன்னின்பம் வேண்டாத் தகப்பனையும்—என்னன்பே !
பேரறிவை யூட்டும் தலைவராம் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—வே. குருநாதன், மதுரை-2.

சாதி மதமென்று சண்டையிட்டு மக்களினம்
பாதிக்கப் பட்டதையே பாரறியும்—சாதிமத
வேரறுத்தே வீழ்த்துவதால் வீரர்ஈ ரோடுபெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

பொன்னோ சிறுபொருளோ போர்வீரர்க் கன்பொளிர
நன்றியுடன் ஈவதுவே நம்கடனும்—தன்னுயிரை
ஊரை, உறக்கத்தை, உற்றாரைப் பற்றிநினை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-15.

வெங்களத்தில் வீரம் விளைத்துமே வெம்பகைவர்
பங்கமுற்றுத் தாள்பணியப் போர்புரிந்த—சிங்கமொத்
தாரைநாம் பாராட்டல் தக்கதாம்; அத்தகை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

மாது மனமகிழ்வாள் மாச்சுகந் தான்கிடைக்கும்
தீதகலச் சீர்வரிசை தேடிவரும்—போதிலுறை
வாரை நினைவூட்டும் வண்திருக்கை நம்மாமி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பொன் சுகுமாரன், பி.ஏ., திண்டு

நன்றென் றவற்றுள்ளும் நன்றே நலிந்தவர்க்
கென்றும் உழைத்திடும் ஏந்தல்கள்—வென்றிகொள
வீரக் களத்தில் விளையாடும் மேதகை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பொன். வேலம்மாள், கொட்ட

எல்லாரும் நன்னிலை எய்தினரால், கீழ்மேலாம்
பொல்லாத பேதங்கள் போயினவால்—நல்லோரே
ஓர்நிறை யாயரசிங் கோச்சுவரேல், அத்தகை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ச. வானவன், கோவில்ப

மன்னும் உலகினிலே வாழும் உயிரனைத்தும்
தன்னுயி ராமெனத் தான்நினைந்து—நன்மையுறச்
சீரைபுக்க செம்பியன்போல் சிவன்மாட் டன்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—நாகை ந. இராமசாமி, செக்காப்ப

ஞாலம் அமைதியுற நாட்டில் உயர்பஞ்ச
சீல நெறிநின்று சேவித்தார்—சாலுமே
போரைத் தவிர்த்த புகழ் இந்திராகாந்தி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—இந்திரா ஹெலன் மனோன்மணி, பி.ஏ., முன்னுவாரன் கோட்

விடநாக மென்னநம் வீரரெலாம் சீற
உடனுக வேபகைவர் ஒத்தார்—கடனுகும்
வீரனைப் பெற்று விரும்பிக் கொடுத்ததா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர் சோ. கருப்பசாமி, அருப்புக்கோட்

குற்றுயிராய் வீழ்ந்துமே குண்டுகள் வீசியுமே
வெற்றிகண்ட போர்ப்படை வீரனைப்—பெற்றெடுத்தே
தாரைக் கலங்காது தந்திட்ட தாய்தந்தை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—மூ. சா. இராசரத்தினம், தே

ஒப்பிலா தோங்கிநிற்கும் ஒண்டமிழிற் கல்விகற்க
ஒப்ப மறுப்பாரும் உள்ளாரே—எப்படித்தான் ?
பாரைக் கவர்கின்ற பைந்தமிழின் பீடுமதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பாக்கியசாமி, சென்னை-3.

வங்கமெனத் தங்கமென வாய்மையெனும் வாளெடுத்துச்
சிங்கமெனச் சீறிநின்று சின்னவரைச்—சங்கரிக்கும்
போரைத் தொடுப்பதற்குப் போய்வாராய் யென்றிடுந்தா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—குப்பிச்சிப் பாளையக் குமரன்.

நாட்டின் நலங்காத்து நாற்படையும் வாகையணிந்(து)
ஈட்டும் புகழ்காக்க வீறுகொண்டு—நாட்டில்நெற்
போரைக் குவித்துமனம் பூரிக்கும் ஏர்ப்படை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—இரா. இ. வேலன், சென்னை-49.

ஞாலமுள நாள்வரையில் நல்லோர் பலர்புகழும்
சீலமிக வாய்ந்த செயலன்றோ—சாலவே
பாரைத்தம் பாவாலே ஈர்த்தகவி பாரதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

ஏவுகணை ஓர்பக்கம், ஏழ்மைகளின் தாழ்மைகள்
பாவுதல் ஓர்பக்கம், பண்புடனே—தூவழகே !
பாரினில் போரழித்து நின்று பணிசெய்து
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புதுவை வெண்ணிலா, தென்னூர்க்காடு.

நன்றி மறவாத நற்செயலாம், தம்முயிரைத்
தந்தேதம் தாய்நாட்டைக் காத்தோரை—என்றுமிப்
பாரோர் நினைக்கும் படியாக அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சு. தங்கப்பன், பி.எஸ்சி.,பி.ஏ., நாகர்கோயில்-1.

தமிழ னெனுமுணர்வைத் தாய்நாட்டின் பற்றை
அமிழ்தாம் மொழியறிவை ஆக்கித்—தமினும்தாழ்ந்
தாரை வுயர்த்திட்டா ராதலினால் தந்தைபெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—புலவர் ஆனை. மு. இளஞ்செழியன், பெங்களூர்-1.

அடிமைத் தளையறுத்து அல்லலுற்ற மக்கள்
மிடிமைத் துயர்நீக்கி மேன்மைக்—குடியாக்கிக்
கூரையடி வாழ்ந்தோரும் கோட்டைபுகச் செய்தகாந்தி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—தி. செ. இராமசாமி, எம். ஏ.பி.டி., நாமகிரிப்பேட்டை

கண்ணன் கவிதை, கருங்குயிலின் காதற்பா
பண்ணிப் புதுயுகமாம் பண்ணொலிக்கக்—கண்மணியே !
பாரதிதான் வந்திட்டான்; நம்கடன்என் ? பாரதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—ஜெயபாலன், சென்னை-2

தாய்மொழியைத் தாய்நாட்டைத் தன்னுடைய தாயாரை
வாய்மொழி மாறுமல் காப்போரைத்—தூய்மைமிக்
காரைத் துணிவுடன் வாழ்வாரை அன்புடை
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கா. மு. கண்ணாயிரம். புல்லரம்பாக்க

வீரம் விளையாட வீணர் ஒழிந்தோட
பாரும் செழித்தாடப் பாத்தொடுத்தார்—ஏறுநடை
வீரர் எனவாழ வேண்டாவோ ? பாரதி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—கலைமன்னன், கம்ப

புறங்கண்டார் ; பூத்தார் ; புகழ்கொண்டார் ; தன்மார்(பு
உறக்கொண்டார் வீரம் புகலாய் !—மறமகனே !
பாரைப் பெரிதன்றே ஏற்றும் அவர்மனைவி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—பாடி. மா. சு. தமிழேந்தி, ஓலைப்பா

இன்னல் தவிர்க்கும் ; இதயத்தைப் பண்படுத்தும் ;
கன்னலென வாழ்வில் களிப்பூட்டும்—தன்னுடலுள்
ஈரைந்து மாதங்கள் ஏற்றீன்ற அன்புத்தா
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—சு. நாராயணசாமி, தில்லைந

இந்தியாவை மீட்டிட்டார் எம்காந்தி ; தேனுரையால்
சிந்தையில் வாழ்கின்றார் சிலரண்ணா—தந்திரத்தை
வேரறுத்தார் எம்வீரர் ; மாமேருள் அப்பெரி
யாரைநாம் போற்றிடுவோம் ஈங்கு.

—அரு. மதிவாணன், சித்தளந்து



அண்ணாசாலையில் அதிசயப் பாலம்

சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுதியும் உள்ள இடம் ஜெமினி சந்திப்பு தான். இங்கே பயண நெரிசல் நேரத்தில், மணிக்கு 7,500 ஊர்திகள் கடந்து செல்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இங்குப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தத் தானியங்கி மின்விளக்கு அமைக்கப்பட்டிருந்தது. எனினும், கால தாமதத்தைத் தவிர்க்க முடியவில்லை. மேலும், ஒரு சில மணித்துளிகளில் ஊர்திகளின் நீண்ட (க்யூ) வரிசையே ஆரம்பமாகிவிடும். இந்தத் தடையையும், கால தாமதத்தையும் போக்கி, அண்ணா சாலையில் சென்று வரும் ஊர்திகள் தங்கு தடையின்றிச் சென்று வரவும், அந்தச் சந்திப்பில் வேறு பல திசைகளில் செல்லும் ஊர்திகளும் அவ்வாறே தங்கு தடையின்றிச் செல்லவும் வழி காண வேண்டும்; இதனால் ஏற்படும் விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்கிற வேட்கையின் அடிப்படையே ஜெமினி மேம்பாலத் திட்டம்.

இந்த மேம்பாலம் கட்டும் திட்டம் சில காலமாகவே தமிழ் நாடு அரசின் ஆலோசனையில் இருந்து வந்தது. எனினும், திட்ட அமைப்பில் ஏற்பட்ட சிற்சில மாறுதல்களின் காரணமாக வேலை தொடங்குவது சற்றுத் தாமதமாகிக் கடந்த ஆகஸ்டு-செப்டம்பர்த் திங்களில் இறுதி அங்கீகாரம் அளிக்கப்பெற்று வேலை முழுவேகத்தில் தொடங்கப்பட்டது.

மேம்பால வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில், அந்தச் சந்திப்பில் போக்குவரத்து, தடைப்படக்கூடாது என்பதற்காகப் பால அமைப்பை இரண்டு சமப் பகுதிகளாகப் பிரித்து, ஒரு பகுதி வேலையை மேற்கொண்டு, அது முடியுந் தறுவாயில் உள்ளது. இந்த ஒரு பகுதி வேலை விரைவில் முடிக்கப்பட்டு, வருகிற மார்ச்சு ஏப்ரல் மாதத்தில் அது போக்குவரத்துக்குத் திறந்து விடப்படும் என்று பால அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பொறியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த ஒரு பகுதி வேலை முடிந்ததும் தொடர்ந்து அடுத்த இரண்டாம் பகுதி வேலை தொடங்கப்பெறும். எப்படியும் 1972 இறுதிக்குள் பாலம் முழு அமைப்புப் பெற்றுப் போக்குவரத்துக்கு முழுதுமாகத் திறந்துவிடப்பட இருக்கிறது.

இந்தியாவிலேயே இவ்வகை அமைப்புடைய மிகப்பெரிய மேம்பாலம் இதுதான் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த மேம்பாலத்தின் நீளம் 1,506 அடி. இதனை மேலும் நீட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால், தொடர்ந்து விரிவுபடுத்தத் தக்க வடிவமைப்பு இப்பாலத்தின் இன்னொரு சிறப்பாகும்.

பம்பாயில் இத்தகைய இரண்டு மேம்பாலங்கள் உள்ளன. எனினும், அவை மிகச் சிறியனவேயாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் கட்டப்படுகிற முதலாவது பெரிய மேம்பாலம் இதுதான் என்பது தமிழகத்திற்குப் பெருமை தரக்கூடிய செய்தியாகும்!

வெளிநாடுகளில் ஜப்பானிலும், ஜெர்மனியிலும், இம்மாதிரியான மேம்பாலங்கள் ஏராளமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. இலண்டன் மாநகரில், இத்தகைய அமைப்புடைய மிகப் பெரிய மேம்பாலம் ஒன்று 60 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. 2½ மைல் நீளமுள்ள அந்த மேம்பாலத்தின் பெயர் 'இலண்டன் மேற்கு வழி' (West Way of London) என்பது.

தொடக்கத்தில் இத்திட்டத்திற்குச் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. இப்போது, மதிப்பீட்டுக்கு மேல் 15 இலட்சம் ரூபாய் அதிகமாகலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த மேம்பாலத்திற்கான திட்டம் தயாரிப்பதிலும், வரைவு தயாரிப்பதிலும், மதிப்பீடு செய்வதிலும், தொழில் நுணுக்கப் பணி புரிவதிலும் தமிழ் நாடு நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்களே முழுக்க முழுக்க ஈடுபட்டுள்ளனர். மேல்நாட்டுப் பொறியியல் வல்லுநர்களின் எத்தகைய உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல், நமது பொறியாளர்களே இந்தப் பாலத்தைக் கட்டுகின்றனர். இதில் ஈடுபட்டுள்ள பொறியாளர் சிலர் பொறியியற் கலை கற்க மேல்நாடு சென்று வந்தவர்கள். அவர்கள் அங்குப் பயின்றபோது, இத்தகு மேம்பால அமைப்புப் பற்றியும் கற்றுள்ளனர்.

மேம்பாலம் கட்டும் இடம், போக்குவரத்து நெரிசல் மிகுதியுமுள்ள முக்கியமான இடமாதலின், போக்குவரத்துக்கு ஒரு சிறிதும் இடையூறு இல்லாமல், பாலத்தைக் கட்டுகிறார்கள். முன்னமே குறித்தபடி, பால வேலை இரு சமப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வேலை மிகவும் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றிக், காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக, நடுத் தூண்களின் மேல் போடப்படுகிற கான்கிரீட் கர்டர்களையும், தளவரிசைகளையும் இப்போது வேலை நடைபெறும் இடத்திலேயே—தரையிலேயே வைத்துத் தயாரித்து மேலே தூக்கிப் பொருத்தி விட ஏற்பாடு செய்துள்ளனர். எனவே, அவர்கள் திட்டமிட்டுள்ளபடி மேம்பாலத்தின் ஒரு பகுதி நிச்சயமாக வருகிற மார்ச்சு-ஏப்ரல் மாதத்தில் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து, இந்தப் பாலத்தின் அமைப்புப் பற்றிக் குறிப்பிட வேண்டும்; இந்தச் சந்திப்பில் 5 பாட்டைகள் (வழிகள்) சந்திக்கின்றன. அண்ணா சாலை வழியே நேரே சென்றுவர ஒரு முக்கிய-பிரதான மேம்பாலம். ஜி. என். செட்டி சாலையிலிருந்து அண்ணா சாலைக்கு வரும் ஒரு வளைவுப்பாதை; அண்ணா சாலையிலிருந்து ஜி. என். செட்டி சாலைக்குத் திரும்பிச் செல்லும் இன்னொரு வளைவுப் பாதை; ஜெமினி சந்திப்பில் ஒரு சுற்று வட்டப்பாதை. இந்தச் சந்திப்பில் 5 சாலைகள் சந்திக்கின்றன. மொத்தமாக 20 திசைகள் இருக்கும்.

பொதுவாக, விரைவாகச் செல்லும் ஊர்திகள், மெதுவாகச் செல்லும் ஊர்திகள், நடந்து செல்வோர் என்னும் மூன்று வகைக்கும் தனித்தனிப் பாதைகள் இருக்கும். இவையனைத்தும் ஒருவழிப் பாதைகளேயாதலின், போக்குவரத்தில் தங்கு தடை இருக்காது—கால தாமதமிருக்காது. இவற்றிற்கெல்லாம் மேலாக விபத்துக்கள் முழுக்க முழுக்கத் தவிர்க்கப்படலாம்.

அடுத்து, இந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்குத் தேவையான சில நிலப்பகுதிகள் தனியார்க்கும் அரசியலார்க்கும் சொந்தமாக இருந்தன. அந்த இடங்களுக்குரியவர்கள், நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையினர் சென்று கேட்டதுமே தேவையான இடங்களை எவ்விதத் தயக்கமோ தடங்கலோ இல்லாமல் தந்துதவ முன்வந்தது பெரிதும் பாராட்டுக்குரியது. இவ்வகையில், ஜெமினி ஸ்டுடியோவினர் 3 கிரவுண்டு நிலத்தையும், இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அறநிலையம் 2 கிரவுண்டு நிலத்தையும், கண்ணம்மை பில்டிங்ஸ் உரிமையாளர்கள் 1 கிரவுண்டு நிலத்தையும், செவிட்டு ஊமைப் பள்ளியினர் 1 கிரவுண்டு நிலத்தையும் மனமுவந்து கொடுத்துதவினார்கள். வேளாண்மைத் தோட்டக்கலைக் கழகத்தினர் 35 கிரவுண்டு நிலத்தைக் கொடுத்துதவினார்கள்.

இந்த மேம்பாலம் முழுக்க முழுக்கத் தமிழ்நாடு அரசின் செலவிலேயே கட்டப்படுவதாகும் என்பது குறிப்பிடத் தக்கது.





வேளாண்மை வினாக்களே கேட்கப்பட வேண்டும்

வினா : நான் கே.1 மிளகாய் பயிரிட ஆவலுடன் உள்ளேன். ஜூன், ஜூலை தான் ஏற்ற பட்டமா ? ஜனவரி, பிப்ரவரியிலும் பயிரிடலாமா ? இவை போக வேறு பட்டம் உள்ளதா ? அடியுரம், மேலுரம் இடைவெளி, விதையளவு பற்றியும் தெரிவிக்கவும்.

கே. ஏ. சண்முகக்கவுண்டர்
வடதொரசலூர்
தென்ஆர்க்காடு மாவட்டம்.

விடை : கே. 1 மிளகாய் பயிரிடக் கீழ்க்கண்ட பட்டங்கள் ஏற்றவையாகும்.

1. முக்கியப் பட்டம்: செப்டம்பர்—அக்டோபர் விதைப்பு.
2. கோடைப்பட்டம் : மார்ச்சு—ஏப்ரல் விதைப்பு.
3. ஆடிப்பட்டம் : ஜூன்—ஜூலை விதைப்பு.

அடியுரம் : மிளகாய் பயிரிட, கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

மேலுரம் : மிளகாய் நாற்று நட்ட 50-வது நாளிலும், 75-வது நாளிலும் ஆக இருமுறை மேல் உரம் இட வேண்டும். ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியா இட வேண்டும். இரசாயன உரத்தைச் செடிகளைச் சுற்றிலும் சற்றுத் தள்ளி வட்டமாக இட்டு, மண்ணால் மூடித் தண்ணீர் விடவேண்டும்.

இடைவெளி : நாற்று விட்ட 40 முதல் 45 நாட்களுக்குள்—நாற்றைப் பறித்து வரிசை வரிசையாகப் பார்களில் நட வேண்டும். பாருக்குப் பார் $1\frac{1}{2}$ அடி இடைவெளி இருக்க வேண்டும். வரிசையில் செடிக்குச் செடி $1\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டு நடவேண்டும்.

விதையளவு : ஓர் ஏக்கர் நட 500 கிராம் விதையை ஒரு சென்ட் பரப்பில் நாற்றுவிட வேண்டும். கே.1 மிளகாய் விதைகளைப் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள்.

* * *

வினா : எனது தோட்டக் கிணற்றில் சைடு குழி போட விரும்புகிறேன். அதாவது கிணற்றின் உள்ளே சுமார் 50 அடி ஆழம், 2 அங்குல விட்டமுள்ள குழிகள் போட வேண்டும். அதற்குப் 'பவர் டிரில்' வைத்திருப்பவர்களின் முகவரி தங்களுக்குத் தெரியுமா ? தெரிந்து கூறினால் நான் அவர்களுடன் தொடர்பு கொள்கிறேன்.

சி. முத்தையா,
75, பார்வதிபுரம், முசிறி.

விடை : திருச்சியில் உள்ள உதவி வேளாண்மைப் பொறியாளர் (பார்வை) அவர்களுடன் தொடர்பு கொண்டால், பவர் டிரில் வாடகைக்குப் பெற முடியும். அவரை அணுகினால் முழு விவரமும் தெரியக்கூடும். எனவே பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள் :

உதவி வேளாண்மைப் பொறியாளர், (பார்வை),
ராக்கெட் ரோடு லேன்,
திருச்சி-1.

* * *

வினா : தமிழக அரசு மலைத் தோட்டங்களின் பேரில் கடன் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தக் கடனைப் பெறுவதற்குரிய வழிமுறைகளைத் தெரிவித்தால் நான் என் ஆயுட்காலம் முழுவதும் தங்களுக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன்.

ஜே. முருகேசன்,
பழனிச்செட்டிப்பட்டி,
மதுரை மாவட்டம்.

விடை : தங்கள் நிலத்தின் பேரில், நிலவள வங்கியிலிருந்து கடன் பெறலாம். தங்களுக்கு உள்ள சொத்து மதிப்பின் பேரிலேயே நிலவள வங்கியிலிருந்து கடன்பெற இயலும். எனவே, இதுபற்றிய முழு விவரங்களையும் அறிய உங்கள் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கூட்டுறவு வளர்ச்சி அலுவலரை அணுகுங்கள். வேளாண்மைத் துறை மூலம் பழத்தோட்டம் புதிதாக அமைப்பதற்குக் கடன் பெறலாம். அதுபற்றி அறிய உங்கள் ஊராட்சி ஒன்றியத்துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகுதல் நல்லது.

* * *

வினா : எங்களுக்கு எந்தவிதமான நிலமும் சொந்தத்தில் இல்லை. நன்செய்களும், புன்செய்களும் சேர்ந்து கிட்டத்தட்ட 1 ஏக்கர் பயிரிட்டு வருகிறோம். விளைவதில் நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுத்தது போக மீதமுள்ளதை வைத்தே சாப்பிட வேண்டியிருக்கிறது. மேலும், நன்செய் நிலங்கள் வாங்கி விவசாயம் செய்ய முயற்சிக்கின்றேன். அதற்கு ரூ. 10,000 தேவைப்படுகிறது. அந்த ரூபாயைக் கடனாக அரசாங்கத்திலிருந்து வாங்க முடியுமா? கடனை 4 ஆண்டில் திருப்பிக் கட்டி விடுகின்றேன். தங்கள் பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

விடை : தங்களுக்குச் சொந்தத்தில் கொஞ்சங் கூட நிலமே இல்லாதிருக்கும் பொழுது, எதை வைத்துக் கடன் கொடுக்க முடியும் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். சொத்து மதிப்பின் பேரிலேயே எந்தக் கடனும் பெறமுடியும். அப்படியிருக்கும் பொழுது 10,000 ரூபாய் கடனாக அரசாங்கத்திடமிருந்து தாங்கள் எப்படிப் பெறமுடியும்? உங்கள் ஆர்வத்தைப் பாராட்ட வேண்டி, நிலம் பெறுவதற்கு ஒரு வழியைத் தெரிவிக்கிறோம்.

நிலமற்றவர்களுக்கு நிலப் பட்டா அரசு வழங்கி வருகிறது. உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, தங்களுக்குப் பட்டா நிலமே இல்லை என்பதைக் குறிப்பிட்டு மனு அனுப்புங்கள். உங்களுக்குப் பட்டா நிலமே இல்லை என்பது உண்மையானால், உங்கள் பகுதியில் பட்டா வழங்குவதற்கு நிலங்கள் இருக்குமானால், தங்களுக்குப் பட்டா கிடைக்க ஆவன செய்வார்கள். மேலும் தங்கள் பகுதி வட்ட ஆட்சியாளர் (தாசில்தார்) அவர்களிடமும் தங்கள் வேண்டுகோளை நேரில் தெரிவித்தல் நல்லது. அவர் கூறும் முறைப்படி மனுச் செய்யுங்கள்.

* * *

வினா : போடிநாயக்கனூர் யூனியனைச் சேர்ந்த கிராமங்களில் 3,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்துள்ளோம். இங்குப் பருத்திக்கு வேண்டிய மருந்து கிடைக்காமல் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம். அதிகாரிகள் குறிப்பிடும் முக்கிய மருந்துகள் கிடைக்கவில்லை. நாங்கள் 5 வட்டிக்குக் கடன் வாங்கிச் சாகுபடி செய்துள்ளோம். எங்களுக்கு வேண்டிய செவின், கந்தகத்தூள், டி.டி.டீ. ஆகியவைகள் கிடைக்க ஆவன செய்வீர்களா ? (முழுக் கடிதமும் வெளியிடப்படவில்லை)

மு. ப. ராஜேந்திரன்,
சிலமலை.
மதுரை மாவட்டம்.

விடை : பருத்திக்கு வேண்டிய மருந்துகள் போடி நாயக்கனூர் ஊராட்சி ஒன்றியக் கிடங்கில் இல்லையென்றால், உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலரிடமும், ஆணையாளரிடமும் கூறி உடன் வரவழைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளுங்கள். பெரியகுளத்தில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்குத் தெரிவித்தால், அவர் எங்கிருந்தாவது தேவையான மருந்துகளை உடனே வரவழைத்துக் கொடுப்பார். எனவே, மேற்குறிப்பிட்டவர்களை உடனே அணுகி மருந்து வரவழைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

* * *

வினா : இரசாயன உரங்களை அதிகமாக நிலத்தில் இட்டால் நிலம் உவர் நிலமாக மாறிவிடும் என்று சில விவசாயிகள் கூறுகிறார்கள் உண்மையா?

—ச. அங்குசாமி,
கோவில்பத்து விவசாயிகள்
முன்னேற்றச் சங்கம்,
களக்காடு.

தாயும் சேயும்

"கருவுற்ற காலங்களில் பெண்டிர், சில குறிப்பிட்ட உணவுகளை உட்கொள்ளுவதாலேதான் அங்கவீனமான குழந்தைகள் பிறக்கின்றன. தாய்மார்கள் செய்யும் சிறு பிழை—குழந்தைகட்கு வாழ்நாளெல்லாம் பிறரை அண்டிவாழும் நிலை" என்று ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

விடை : நிலத்தில் உள்ள சத்துக்கும், அந்த நிலத்தில் சாகுபடி செய்யவிருக்கும் பயிருக்குத் தேவையான அளவிற்கும் ஏற்ப இரசாயன உரங்களை இட்டால் நிலம் கெட்டுவிடாது. தொழு எரு அல்லது தழை எருவையும், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளைகொடுக்கும் இரசாயன உரங்களையும் தேவையான அளவுக்கு இட்டால் நிலம் கெட்டுவிடாது என்பது ஆராய்ச்சிகளின் மூலம் அறிந்த உண்மையாகும். இங்கிலாந்தில்உள்ள 'ரோதம்ஸ்டெட்' என்ற இடத்தில் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக இரசாயன உரங்களை இட்டுக் கோதுமை பயிரடப்பட்டு வருகிறது. அது போலவே தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பண்ணையில் சென்ற 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து இரசாயன உரமிட்டுச் சோதனை செய்யப்பட்டு வருகிறது. இதனால். விளைச்சல் குறைந்து விடவில்லை; நிலவளமும் குன்றிவிட வில்லை. ஆகவே, இரசாயனஉரமிடுவதால் நிலவளம் நாளடைவில் குன்றிவிடும், என்ற கருத்து, பொருத்தமற்றது என்பது தெளிவாகும். ஆனால், தேவைக்கு மேல் உரமிட்டாலோ அல்லது மணிச்சத்து, சாம்பல் சத்துக்களை அளிக்காமல் தழைச்சத்து உரங்களை மட்டும் அளித்து வந்தாலோ மகசூல் குறைந்து விடக்கூடும். சுண்ணாம்புச்சத்து குறைவாயுள்ள நிலங்களில் அமோனியம் சல்பேட் உரத்தைத் தொடர்ந்து அதிகமாக இட்டால் நிலம் அமிலத்தன்மை அடைந்து உவர் நிலமாகவே மாறிவிடக்கூடும். பொதுவாகத் தமிழ்நாட்டு மண்களில் சுண்ணாம்பு (Calcium) அதிகமாக உள்ளதால், இரசாயன உரமிடுவதால், நிலம் உவர் நிலமாக மாறிவிடும் என்று அஞ்சவேண்டாம்.

* * *

வினா : பம்பாயிலுள்ள இன்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட் கம்பெனியாரின் விளம்பரம் நமது 'தமிழரசு' இதழில் அடிக்கடி வருகின்றது. நெற்பயிரைப் பாதுகாத்துக் களையை மட்டும் ஒழிக்க ஸ்டாம் எப். 34 உபயோகிக்கும்படி அதில் தெரிவித்துள்ளார்கள். களையை மட்டும் ஒழிக்க இந்த மருந்து பயன்படுமானால், விவசாயிகளுக்கு இது மிக்கப் பயனுள்ளதாகவே இருக்கும். இது நமது ஆராய்ச்சிப் பண்ணைகளில்பரிசோதனை செய்யப்பட்டுள்ளதா ? இது எங்குக் கிடைக்கும் என்ற விவரங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். ஜி. விநாயகமூர்த்தி,
எம். ஏ., தலைவர்,
வட சென்னை மாவட்ட
காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர், சென்னை மாநகராட்சி
உறுப்பினர், சென்னை-21.

[illegible]:—பம்பாயிலுள்ள இன்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் விளம்பரப்படுத்தியுள்ள "ஸ்டாம் எப்-34" என்ற களைக்கொல்லி மருந்து நெல் வயல்களில் தோன்றும் களைகளை அறவே அழிக்க மிகவும் ஏற்றது என்பது, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பெற்ற பரிசோதனைகளிலிருந்து தெரிய வருகிறது. தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை இக்களைக் கொல்லி மருந்தைப் பயன்படுத்திப் பல்வேறு இடங்களில் பரிசோதனை செய்து பார்த்துப் பயனுள்ளது என்பதை அறிந்த பின்பே, "ஸ்டாம் எப். 34" என்ற களைக்கொல்லி மருந்தை உழவர்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது.

ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு ஒரு லிட்டர் "ஸ்டாம் எப். 34" களைக்கொல்லி மருந்தையும், 5 கிலோ யூரியாவையும், 350 லிட்டர் தண்ணீரில் கரைத்துக் கையால் இயக்கும் தெளிப்பானால் தெளிப்பதே நெல் வயலில் தோன்றும் களைகளை அழிப்பதற்கு உள்ள மிகவும் சிக்கன முறையாகும். விசைத் தெளிப்பான் (Power Sprayer) மூலம் தெளிப்பதென்றால் ஒரு லிட்டர் "ஸ்டாம் எப். 34" களைக்கொல்லி மருந்தையும், 5 கிலோ யூரியாவையும் 80 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். இம்முறையில் களைகளை அழிக்க ஏக்கருக்குச் சுமார் ரூ. 28·00 ஆகிறது. அதன் விவரம் வருமாறு:—

1 லிட்டர் "ஸ்டாம் எப். 34" மருந்தின் விலை.	18·00
5 கிலோ யூரியாவின் விலை.	5·00
தெளிக்கும் ஆள் கூலி, தெளிப்பான் வாடகை முதலியன.	5·00
ஆக மொத்தம்	28·00

ஏக்கருக்கு ரூ. 28·00 செலவிட்டு, ஒரு முறை "ஸ்டாம் எப். 34" களைக் கொல்லி மருந்தையும் யூரியாவையும் தண்ணீரில் கலந்து தெளித்தாலே களைகள் அழிந்து விடுகின்றன.

ஆனால், பொதுவாக நெல் வயல்களுக்கு 2 முறை கூலியாட்களைக் கொண்டு களை யெடுக்கப்பட்டு வருகிறது. ஏக்கருக்குச் சராசரியாக முதல் முறை 15 பெண்களும், இரண்டாம் முறை 10 பெண்களும் களையெடுக்கத் தேவைப்படுகின்றனர். இவ்வாறு களையெடுக்க ஒரு பெண் கூலியாளுக்கு ஒரு நாளைக்கு ரூ. 1.75 (மதிய உணவு இல்லாமல்) கூலி வீதம் 20 பெண்களுக்கும் ரூபாய் 43.75 கூலி கொடுக்க வேண்டியுள்ளது.

ஆகவே கைகளால் களைகளை எடுப்பதைக் காட்டிலும் "ஸ்டாம் எப். 34" களைக் கொல்லி மருந்தையும் யூரியாவையும் கலந்து தெளிப்பதே சிக்கனமானது என்பது தெளிவாகிறது. இம்முறையினால் சராசரியாக ஏக்கருக்கு ரூ. 15.75 மீதமாவதுடன், மகசூல் அதிகமாகி இலாபமும் பெருகுகிறது.

இதன் பின்னங் கால்களை விரும்பி உண்கின்றனர். இதன் தோலைப் பதனிட்டுப் பலவித வண்ணங்களில் சிறிய தோல் பொருட்கள் செய்கிறார்கள்.

இம்முறையில் "ஸ்டாம் எப். 34" தெளிக்கும்போது பின் கண்டவைகளைக் கவனத்தில் கொண்டு செயல்படவேண்டியது மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டுச் சேதம் ஏற்படக்கூடும்.

1. நடவு செய்த 15 முதல் 20 நாட்களுக்குள் "ஸ்டாம் எப். 34" களைக்கொல்லியை யூரியாவுடன் கலந்துத் தெளிக்க வேண்டும்.

2. இக்கரைசலைத் தெளிப்பதற்கு முன்பு நெல் வயலில் உள்ள தண்ணீரை வடித்துவிட வேண்டும்.

3. இவ்வாறு தெளிக்கப்பட்டதற்குப் பிறகு 48 மணி நேரம் வரை நெல் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடாது.

4. "ஸ்டாம் எப். 34" யூரியா தெளிப்பதற்கு ஒருவாரம் முன்பாகவும், தெளித்த பிறகு ஒரு வாரம் வரையும் பூச்சிப் பூஞ்சாள மருந்துகளைத் தெளித்தலோ அல்லது இரசாயன உரமிடுதலோ தவிர்க்கப்பட வேண்டும்.

5. களைக்கொல்லி மருந்து தெளிக்கப் பயன்படுத்திய தெளிப்பானைப் பூச்சிப் பூஞ்சாள மருந்து தெளிக்கப் பயன்படுத்தக் கூடாது. இதற்கென தனித் தெளிப்பான் வைத்துக் கொள்வதே சிறந்தது.

6. தெளிக்கும்போது முகத்திலோ, கண்களிலோ அல்லது உடலின் வேறு பகுதியிலோ படாமல் கவனமாகத் தெளிக்க வேண்டும். களைக்கொல்லி மருந்து கண்களில் அல்லது தோலில் பட்டால் உடனே தண்ணீரினால் நன்கு கழுவ வேண்டும். தெளிப்பை முகர்ந்து பார்க்கக் கூடாது.

"ஸ்டாம் எப். 34" களைக் கொல்லியின் விலை அதிகமாக இருப்பதால், ஏழை உழவர்கள் அதைத் தெளிக்க முன்வர மாட்டார்கள். ஏழை எளிய உழவர்களும் "ஸ்டாம் எப். 34" களைக்கொல்லியைப் பயன்படுத்தி களைகளை அழித்து விளைவினைப் பெருக்க வேண்டுமென்பதற்கே தமிழ்நாடு அரசு 15 சத மானிய விலையில் இம்மருந்தை வழங்குமாறு ஆணையிட்டுள்ளது. இச்சலுகை விலையில் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளிலிருந்து இக்களைக்கொல்லியைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முழுவிலைக்கே கீழ்க்கண்ட முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தி சைன்டிபிக் பெர்ட்டிலைசர்
கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,
பொன்னுரங்கம் ரோடு,
ஆர். எஸ். புரம்,
கோயம்புத்தூர்-2.

"ஸ்டாம் எப். 34" களைக் கொல்லி மருந்து தெளிக்க, வேளாண்மைத் துறை அலுவலர்களின் உதவியை நாடுதல் நல்லது.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

நெடுஞ்சாலை இராமப் பொறியியல் பணித்துறை

நாகர்கோவில் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும் நாகர்கோவில் (நெடுஞ்சாலை இராமப் பொறியியல் பணித்துறை) கோட்டப் பிராந்தியத்திலுள்ள அரசினர் சாலைகளில் 1972–73-ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாகர்கோவில் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை இராமப் பொறியியல் பணித்துறை) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 9—2—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரையிலும் (அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும் குறிப்பிட்ட நமூனுக்களும் நிபந்தனைகளும் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் 24—1—1972 முதல் 8—2—1972 வரை (விடு முறை நாட்கள் தவிர) சதவீத ஒப்பந்தப் புள்ளி ஒன்றுக்கு ரூபாய் 3·11 வீதமும் அட்டவணை ஒப்பந்தப் புள்ளி ஒன்றுக்கு ரூபாய் 6·21 வீதமும் (விற்பனை வரி உட்பட) செலுத்தி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகளின் உறையின் மேல் ஒப்பந்ததாரரின் முழு முகவரியுடன், வேலையின் பெயரையும் எழுதி, கோட்டப் பொறியாளர் (நெ.இ.ப.) நாகர்கோவில் என்ற முகவரிக்கு, அரக்கு முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

வேலை விவரங்கள், முன் வைப்புத் தொகை, விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் அனைத்து உட்கோட்ட உதவிப்பொறியாளர் (நெ.இ.ப.) அலுவலகத்திலும் பிரிவு அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் விளம்பரம் செய்யப்படும்.

முன் வைப்புத் தொகை, இக்கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட ஏதாவது அரசினர் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை ஒப்பந்தப் புள்ளிகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். முன் வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஏ. அப்துல்காதர்,
கோட்டப்பொறியாளர் (நெ.இ.ப.).

த. 22

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை இராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பெறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 4—2—1972 பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை (நிறைவு)—பகிர்வு முறைக்கென வார்ப்பிரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை:—மொத்தத்தொகை.

முன்வைப்புத் தொகை:—ரூ. 1,770 (ரூபாய் ஆயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்).

இத்தொகைக் கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு:—ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை:—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட). ஒப்பந்த படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி, 2—2—1972 புதன் மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரை-2,
26—12—1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த.6)

நெடுஞ்சாலை இராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவரி ஒப்பந்தப் புள்ளிகள் 9—2—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் விவரம்.	பிரிவு.	முன்வைப்புத்தொகை.
1 தே. நெ. எண் 7, சேலம், திண்டுக்கல் சாலையில் கி. மீ. 255/0 இருந்து 278/0 முடிய பாதையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	சேலம்.	ரூ. 61,475

ஒப்பந்தப் புள்ளிகள் 9—2—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 10—1—1972 முதல் 8—2—1972 முடிய விற்பனை வரியுட்பட 51·75 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 10)

ஏல விளம்பரம்

தேனி—அல்லி நகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்)

தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி, மேற்குச் சந்தை சரகத்திலுள்ள 78 ஸ்டால்களை 1-4-1972-ஆம் தேதி முதல் 31-3-1973-ஆம் தேதி முடிய ஒரு வருட காலத்திற்கு உபயோகித்துக் கொள்ள தேனி-அல்லி நகரம் நகராட்சி மன்ற தனி அதிகாரி அவர்களால் நகராட்சி மன்ற அலுவலகத்தில் 11-2-1972-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் மற்றுமுள்ள இதர விபரங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகமதுஇப்ராஹிம், பி.ஏ.,
தனி அலுவலர்.

தேனி,
6-1-1972.
(த.2)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

வேலூர் வருவாய்த் துறை,உதவித் தலைமைக் கணக்காயர் அலுவலகம், (இதுவரை, 'காமராஜ் அலுவலகம்' காட்பாடி விரிவில் அமைந்திருந்தது) இடம் மாற்றப்பட்டு 1972 சனவரி முதல் வாரத்திலிருந்து வேலூர் 1 (வ.ஆ.) நீலி கோடௌன் தெரு, 5-ஆம் நெம்பர் கட்டடத்தில் செயல்படும். வேலூர் சப்-ஸ்டேஷன், மேல்பாடி, திருவலம், கணியம்பாடி, கண்ணமங்கலம் (கிழக்கு மேற்கு) ஒடுகத்தூர் (கிழக்கு, மேற்கு) வளத்தூர், அணைக்கட்டு, பள்ளிகொண்டா, கீழ் வைத்தியணுங்குப்பம், வடுகந்தாங்கல், லத்தேரி ஆகிய செக்ஷன்களின்கீழ் வரும் மின் உபயோகிப்போர்கள், தங்கள் மின் கட்டண பட்டியல்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் தொடர்புகொள்ள, வேலூர் வருவாய்த்துறைப்பிரிவின் புது விலாசத்தை கவனித்துக் கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வேலூர் மின் திட்டம், காட்பாடி நகர்விரிவு.

(த.3)

திருத்தம்

பொதுப்பணித்துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புத் திருத்தம் எண். டி.என்.வி. 26/71-72 தேதி 7-12-1971.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண். டி.என்.வி. 26/71-72 தேதி 7-12-1971 "வைப்பாருக்குக் குறுக்கே ஆத்தங்கரை கிராமம் அருகில் அணைக்கட்டுக் கட்டுதல்" இந்த வேலை விலக்கப்படுகிறது.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை,
திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம், பாளையம்
கோட்டை.

(த.15)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :— 150-ஏ,
அண்ணாசாலை, தபால் பெட்டி எண். 5205, சென்னை-2.

அரக்கோணம், உருக்கு வார்ப்பட நிறுவனத்திற்கு, 6,000 டன் சுண்ணாம்புக் கற்கள் வழங்குவதற்கு, 15-2-1972 மாலை 3-00 மணி வரை, குரூப் மெட்டீரியல்ஸ் மேலாளர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் அலுவலகம், அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், குரூப் மெட்டீரியல்ஸ் மேலாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், இந்நிறுவன அலுவலகத்தில் 17—1—1972 முதல் செட் ஒன்றுக்கு ரூ. 10·37 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலாளர்,
குரூப் மெட்டீரியல்ஸ்.

(த.5)

ஒப்பந்தப் புள்ளி

மின்துறைப் பொருட்களை உந்து வண்டிகளில் ஏற்றிச் செல்லல்

தருமபுரி மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 5-2-1972 பிற்பகல் 3-00 மணிவரை "அரக்கு முத்திரையிடப்பட்ட குத்தகை நிபந்தனைத் தாள்கள்" (Sealed Tenders) கீழ்க்கண்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

"1-4-1972 முதல் 31-3-1973 வரை (1) தருமபுரி புகை வண்டி நிலையத்திலிருந்து தருமபுரி மத்திய பண்டகசாலைக்கும் அல்லது புகை வண்டி நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டருக்குள் அடங்கும் இதர இடங்களுக்கும் (2) தருமபுரி மின்திட்டத்திலுள்ள ஏதாவதொரு பண்டகசாலையிலிருந்து அதே திட்டத்திலுள்ள இதர பண்டகசாலைகளுக்கும், அல்லது தமிழகத்தில் வேறெந்த இடத்திற்காகிலும் பொருட்களைப் பெற்றுச் சென்று ஒப்படைத்தலும் தமிழகத்தின் இதர இடங்களிலிருந்து பண்டகங்களை ஏற்றிவந்து தருமபுரி மின்னியக்கத் திட்டத்தில் ஒப்படைத்தலும் (3) தருமபுரி மின்திட்ட எல்லைக்குள் ஆர்.சி.சி. கம்பங்களை அவைகளின் உற்பத்தித் தானத்திலிருந்து வேலை தானத்திற்கு ஏற்றிச் செல்லுதலும்".

குத்தகை விவரங்கள் நிபந்தனைத் தாள்கள் (Tender Conditions) ஆகியவற்றைப் பிரதி ஒன்றுக்கு ரூ.5 (ரூபாய் ஐந்து மட்டும்) திருப்பித்தரத் தக்கதல்ல)பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ தருமபுரி மின்னியக்கத் திட்டத் தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 2-2-1972. குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகளடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் அனுப்பப்படும். இடையில் அஞ்சல் தவறினாலோ அல்லது தாள்கள் கிடைப்பதற்குத் தாமதமானாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகை விவரம் மற்றும் நிபந்தனைகளடங்கிய தாள்கள் மாற்றத் தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைதாரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) பிணைத் தொகையாகத் தருமபுரி மின் திட்ட அலுவலகத்தில் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெடியூல்டு வங்கியில் (Scheduled banks) செலுத்தப்பட்ட பண மாற்றோலையை (Demand drafts) இணைக்கப்பட்டோ அனுப்பப்படும் குத்தகை நிபந்தனைத் தாள்கள்மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். குத்தகைத் தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 5-2-1972 பிற்பகல் 4 மணியளவில் திறக்கப்படும். குத்தகை விவரத் தாள்கள் 17-1-1972 தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தருமபுரி மின்திட்டம்,
தருமபுரி.

(த. 7)

ஏல விற்பனை

வேளாண்மைத் துறை

இந்த இலாகாவினால் பறிமுதல் செய்யப்பட்ட ஸ்டேயர் டிராக்டர் (எம். எஸ். ஓய். 4631) விக்ரமா டிரெய்லர் மற்றும் அதனுடைய உப கருவிகள் 9-2-1972 அன்று காலை 11-00 மணி அளவில் இவ்வலுவலகத்தில் அவை "தற்போது இருக்கும் நிலையில்" பொது ஏலம் விடப்படும்.

ஏலம் பற்றிய முழு விவரங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இவ்வலுவலகத்தை அணுகவும்.

உதவி விவசாயப் பொறியாளர்,
(ஆய்வு) நந்தனம்.
சென்னை-35.
தொலைபேசி எண் 441595.

(த. 8)

மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், எ. 1437, மதுரை

லாரி டிரான்ஸ்போர்ட் ஒப்பந்த நிபந்தனைகள்

டெலிவரி எடுக்க வேண்டிய இடம்.	கொண்டு சேர்க்கவேண்டிய இடம்.
1. சென்னை துறைமுகம் (சென்னையிலுள்ள அரசினர் உரக் கிடங்குகள்).	மதுரை, திண்டுக்கல், பழனி, தேனி, திருமங்கலம்.
2. ஆவடி	ஷை
3. கடலூர்	ஷை
4. நாகப்பட்டினம்	ஷை
5. பாண்டிச்சேரி	ஷை
6. நெய்வேலி	ஷை
7. தூத்துக்குடி	ஷை
8. கொச்சி	ஷை
9. மன்னார்குடி	ஷை

மேலே கண்டபடி மதுரைக்கும், ஏனைய இடங்களுக்கும் லாரி மூலம் டிரான்ஸ்போர்ட் செய்ய அயிட்டம் வாரியாக லாரி வாடகை 1-4-1972-ஆம் தேதி முதல் 31-3-1973 முடிய ஒரு வருட காண்ட்ராக்ட் செய்ய டன் ஒன்றுக்கு என்ன லாரி வாடகை (இறக்குக் கூலி நீக்கி) தேவை என்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டியது. ஒப்பந்தப்புள்ளி விலைகள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பாரத்தில் இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடில் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

2. சட்ட சம்பந்தமான சுய காரியங்களை நடத்த யோக்கியதாம்சம் பெற்றவர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி போடுவதில் கலந்து கொள்ள வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் சமயம் ரொக்க டெபாசிட் ரூ. 1,000 எங்கள் சங்கத்தில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கட்டுத் தொகை கட்டாதவர்கள் ஒப்பந்தப்புள்ளி கவனிக்கப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி முத்திரை வைக்கப்பட்ட கவரில் அனுப்பப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி எங்கள் சங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கடைசி தேதி 25-2-1972 மாலை 4 மணி.

5. ஒவ்வொரு அயிட்டத்துக்கும் தனித்தனி ரேட் கொடுக்கப்பட வேண்டும்.

6. ரொக்க ஜாமீன் தொகை ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம்) முதலில் டெண்டர் டெபாசிட் ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) கட்டி டெண்டர் சமர்ப்பிக்க வேண்டும்.

7. ஜாமீன் தொகை ரூ. 5,000-க்கு வட்டி கிடையாது.

8. ஒப்பந்தப்புள்ளி விலை ஒப்புக்கொள்ளப்பட்டால் அந்த நபர் ஜாமீன் தொகை ரூ. 5,000 ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கட்டுத் தொகை ரூ. 1,000 கட்டியது போகப் பாக்கி ரூ. 4,000 கட்டி ஒப்புக் கொண்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் எக்ரிமெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட பிரகாரம், ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள், பாக்கி கட்டுத் தொகையைக் கட்டத் தவறினாலோ அல்லது ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கத் தவறினாலோ, அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் உத்திரவு ரத்துச் செய்யப்பட்டு அவருடைய கட்டுத் தொகையையும் பறிமுதல் செய்யப்படுவதுடன் புதிதாக வேறு ஒப்பந்தப்புள்ளி தரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்படும். இதனால் அரசுக்கோ அல்லது மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்திற்கோ ஏற்படும் நஷ்டத்திற்கு முதலில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரே பொறுப்பாவார்.

10. ஒப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் 1-4-1972-ஆம் தேதிமுதல் 31-3-1973 முடிய ஒரு வருட காலத்திற்கு காண்ட்ராக்டராக நியமனம் செய்யப்படுவார்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததார் மேற்படி ஒப்பந்தப் புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி ரேட்டுப்படி வேலையை ஒப்புக்கொள்ளவில்லையானால் ஒப்பந்தப் புள்ளி கட்டுத்தொகையை அவர் இழப்பதோடு இதனால் சங்கத்திற்கு ஏற்படும் சகல நஷ்டத்தையும் அவரே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

12. 1—4—1972-ஆம் தேதிக்குப்பின் ஏற்படும் புது அலாட்மெண்டுதான் ஒப்பந்தப் புள்ளி விலையில் அமல்படுத்தப்படும்.

13. சரக்குகள் குறைவாக டெலிவரி செய்யப்பட்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பு.

14. கண்ட்ரோல் சரக்குகள் பெரும்பாலும் ஏற்றப்பட்டுச் செயல்படுத்துவதால் குறைபாடோ அல்லது கெட்டுவிடுவதாலோ ஏற்படும் நஷ்டத்திற்கும் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தாரரே பொறுப்புதாரியாவார்.

15. லாரி டிரான்ஸ்போர்ட் சம்பந்தப்பட்டமட்டில் எங்கள் சங்க லாரிகளும் வானும் செயல்படுத்தப்படும். இதற்குக் காண்ட்ராக்டருக்கு எவ்வித அலவன்சோ அல்லது சலுகையோ கிடையாது. அதாவது டிரான்ஸ்போர்ட் விஷயத்தில் சங்க லாரிகளுக்குத்தான் முதல் சலுகைக் கொடுக்கப்படும். சங்க லாரிகள் டிரிப் அடித்தது போக மீதம் இருந்தால்தான் ஒப்பந்ததாரருக்கு லோடு கொடுக்கப்படும்.

16. சாக்குகளை அலாட் செய்து டெலிவரி எடுக்க ரயில் ரசீதோ அல்லது டெலிவரி ஆர்டரோ அல்லது ஆதரசேசன் கடிதமோ கொடுத்து உரிய காலத்தில் டெலிவரி எடுக்கப்படாததால் ஏற்படும் டெமரேஸ், வார்பேஜ் ஆகியவைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிதாரர்தான் பொறுப்பு.

17. சரக்குகள் பூராவும் நல்ல நிலையில் ஒப்புக்கொடுத்து டெலிவரி செய்தபின்தான் லாரி வாடகைச் சங்கத்தால் அலுவலக நேரத்தில் கொடுக்கப்படும் (லாரி வாடகையை அட்வான்சாக கொடுக்கப்படமாட்டாது).

18. சரக்குகளை எங்கள் சங்கத்துக்கு காலை 10 மணி முதல் மாலை 6 மணிக்குள் டெலிவரி செய்து விடவேண்டும். சென்ட்ரல் வேர்ஹவுஸ் கிடங்கியில் வைக்கப்படவேண்டிய அயிட்டமகா இருந்தால் மாலை 5 மணிக்குள் டெலிவரி செய்துவிடவேண்டும்.

19. அரசு குறிப்பிட்ட கெடுவுக்குள் சரக்கைச் சங்கத்தின் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு டெலிவரி எடுத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஒப்பந்தப் புள்ளிதாரரைச் சேர்ந்தது.

·20. அரசு விடுமுறை நாட்களிலும், சங்கத்தின் விடுமுறை நாட்களிலும் லாரி மூலம் சரக்குகளை ஏற்றி வரக்கூடாது.

21. மேற்படி நிபந்தனைகளுக்கு மீறி சங்கத்துக்குப் புறம்பாகவும் மற்றும் சங்கத்தின் கௌரவத்தைப் பாதிக்கும்படியும் காண்ட்ராக்டர் நடக்கும் பட்சம் மேற்படியார் கட்டின ஜாமீன் தொகை ரூ. 5,000 இழப்பதோடு அவரிடம் மேற்கொண்டு சட்ட சம்பந்தமான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

22. ஒப்பந்த கால ஒப்பந்தம் முடிவடைந்து ஜாமீன் தொகை, ஒப்பந்ததாரரின் கணக்குகள் உள்ள காலத்திற்குச் சங்க ஆடிட் முடிவடைந்த பிறகு வாபஸ் செய்யப்படும்.

23. சட்ட சம்பந்தமாக நடவடிக்கைகளை மதுரை விவகார எல்லையில் வைத்து நடத்த ஒப்பந்ததாரர் ஒப்புக் கொள்ளவேண்டும்.

24. டெலிவரி எடுக்கவேண்டிய இடத்தையும் கொண்டு சேர்க்க வேண்டிய இடத்தையும் ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டு டன் 1-க்கு என்ன லாரி வாடகை என்று குறிப்பிட வேண்டும்.

25. டெலிவரி எடுக்கவேண்டிய இடத்திற்கும் கொண்டுசேர்க்க வேண்டிய இடத்திற்கும் உண்டான தூரம் போர்டிலிருந்து அனுமதிக்கப்பட்ட தூரங்கள் தான் கணக்கில் எடுக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய நமூனா.

டெலிவரி எடுக்க வேண்டிய இடம்.	டன் 1-க்கு லாரி வாடகை விவரம்.				
	மதுரை	திண்டுக்கல்.	பழனி	தேனி	திருமங்கலம்.
1. சென்னை துறைமுகம் ..					
2. ஆவடி					
3. கடலூர்					
4. நாகப்பட்டினம் ..					
5. பாண்டிச்சேரி					
6. நெய்வேலி ..					
7. தூத்துக்குடி ..					
8. கொச்சி					
9. மன்னார்குடி .. —					

(த.8)

தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸ்
தக்கலை கல்வி மாவட்டத்தில் (கன்னியாகுமரி மாவட்டம்)
ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நியமனம்

மாவட்டக் கல்வி அலுவலர் அதிகார வரம்பிற்குள் தக்கலை (கன்னியாகுமரி மாவட்டம்) நேரடி ஆட்சேர்ப்பின் மூலம், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்திற்கான மனுக்கள், கீழே குறிப்பிட்டவாறு வரவேற்கப்படுகின்றன.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	உத்தேசமாக ஏற்படக்கூடிய வேலை வாய்ப்பு.
1. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் (தமிழ்)	36 (முப்பத்து ஆறு)

குறிப்பு :—வேலை வாய்ப்பு, அதிகரிக்கலாம் அல்லது குறையலாம்.

2. (ஏ) வேலைக்கான தகுதிகளும் சம்பள விகிதமும்:—

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் :—

சம்பள விகிதம் :—ரூ. 150—4—170—5—225.

ஆரம்பப்பள்ளி ஆசிரியருக்கான முழுமையான சர்டிபிகேட், அல்லது தமிழ்நாடு அரசு ஜூனியர் பேசிக் ட்ரேடு பயிற்சிப் பள்ளி சார்ட்டிபிகேட் அல்லது பேசிக் ட்ரேடு பயிற்சி மேலே குறிப்பிட்டதற்குச் சமமான பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் தீர்மானிக்கப்பட்ட சமமான தகுதிகள்.

(பி) ஜூலை மாதம் 1-ஆம் தேதி 1972-ல் மனுதார் முப்பது வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள், 1-7-1972 அன்று 40 வயது பூர்த்தியானவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். இந்த மனுதாரர்கள், அவர்களைப் பிரித்துவிட்டதற்கான உண்மை சார்ட்டிபிகேட்டை விண்ணப்பத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர் 1-7-1972 அன்று 35 வயது பூர்த்தி ஆகாதவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

3. அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்ட வடிவத்தில் மனுக்கள் அனுப்ப வேண்டும். இந்த அறிவிப்பு கெஜட்டில் வெளியான தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை (கன்னியாகுமரி மாவட்டம்) அவர்களுக்கு மனுக்கள் வந்து சேரவேண்டும்.

4. பொதுக் கல்வி, பணிக்குரிய தகுதி ஆகியவற்றைக் காட்டும் உண்மை சர்ட்டிபிகேட் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு :—மூன்று நன்னடத்தைச் 'சான்றிதழ்கள், மனுதாரர் இறுதியாக எங்கு படித்தாரோ அந்தத் தலைமை நிறுவனத்தில் ஒன்று, இந்த அறிவிப்பு கெஜட்டில் வெளியானதற்குப் பின்னர், இரண்டு பொறுப்பான நபர்களிடமிருந்து இரண்டு நற்சான்றிதழ்கள்.

5. அரசு, உள்ளாட்சித் துறை, தனியார் நிறுவனம் ஆகியவற்றில் ஏற்கனவே பணிபுரிவோர், தற்பொழுது தங்களுக்கு வேலை கொடுத்திருப்போர் மூலமாக மட்டுமே மனுக்களை அனுப்ப வேண்டும்.

6. அரசுப் பள்ளிகள் தக்கலை கல்வி மாவட்டத்தில், தற்காலிகமாக, அவசரகாலப் பொறுப்பில் இருப்பவர்கள், நிரந்தர நியமனத்தில் தொடர்ந்திருக்கவேண்டுமென்று விரும்பினால், இந்த அறிவிப்பில் கண்டவாறு, பள்ளிகளின் தலைமைகளின் மூலமாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. ஒவ்வொரு மனுதாரரும் ரூ. 10 (பத்து ரூபாய் மட்டும்) அரசுக் கருவூலத்தில் "**XXII Education F General and Miscellaneous IV other items**" என்ற தலைப்பில் செலுத்தி, உண்மைச் சலானை விண்ணப்பத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பு :—இந்த அறிவிப்பு கெஜட்டில் வெளியாவதற்கு முன் தேதியில் தொகை செலுத்தப்பட்டிருந்தால், ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8 கீழே குறிப்பிடப்பட்ட பிரிவினர் தொகை செலுத்த வேண்டியதில்லை :—

(1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர் அல்லது எந்தப் பல்கலைக்கழகத்திலாவது இண்டர்மீடியட் தேர்வில் தேர்வுபெற்றுள்ள பின் தங்கிய வகுப்பினர், சொல்லப்பட்டத் தகுதியில் எந்தப் பல்கலைக் கழகத்திலாவது எந்தத் தகுதியாவது பெற்றிருப்பவர்கள். இந்த மனுதாரர்கள் ரெவின்யூ அதிகாரிகளிடம், துணைத் தாசில்தார் பதவிக்குக் குறையாத அதிகாரியிடமிருந்து குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான அத்தாட்சி பெற்று அனுப்ப வேண்டும்.

(2) யுத்தப்பணி விண்ணப்பதாரர்கள் விலக்கி அனுப்பப்பட்ட சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட வேண்டும்.

9. நியமனத்திற்கான தேர்வு, மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை அவர்களால், மனுதாரரின் இண்டர்வியூ ரிசல்ட் அடிப்படையில் முழுக்க முழுக்கத் தகுதியைக் கொண்டு எடுக்கப்படும். மனுதாரர் தமது சொந்தச் செலவில், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம், தக்கலையில், இண்டர்வியூவுக்கு அழைக்கும் பொழுது வந்து கலந்து கொள்ளவேண்டும்.

10. வேலைக்கு எடுக்கப்படுதலோ அல்லது பின்னர் தொடர்ந்து வேலை அளிக்கப்படுதலோ இறுதியாக அரசுப் பணியில் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்ற உரிமை கிடையாது.

11. விண்ணப்பதாரர் எவர் ஒருவர், மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை அவர்களுக்கு, செல்வாக்கைப் பயன்படுத்தி, தனிப்பட்ட முறையிலோ, கடிதத்தின் மூலமாகவோ, நண்பர் மூலமாகவோ, உறவினர், அலுவலர் மற்றவர்கள் மூலமாகவோ முயற்சி செய்வாரானால் எந்தக் காரணமும் கூறாமல் தேர்விலிருந்து விலக்கப்படுவார்.

12. குறிப்பிடப்பட்ட தகுதிபெறாத மனுதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

13. மனுக்கள் கொண்ட உறையின்மீது, "ஆரம்பப்பள்ளி ஆசிரியர் நியமனத்திற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

14. விவரங்கள் சரிவரக் குறிப்பிடப்படாத, அதனுடன் சேர்த்து அனுப்ப வேண்டியவைகள் இல்லாதிருந்தாலும், பொது, உரிய பணி, மற் சர்ட்டிபிகேட்டுகள், ஒரிஜனல், ஆகியவை இல்லாத மனுக்களும், குறிப்பிட்டத் தேதிக்குப் பின்னர் வரும் மனுக்களும் ஒதுக்கப்படும்.

291

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பதவி நியமன விண்ணப்பம்—தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீசஸ்—தக்கலை கல்வி மாவட்டம்—கன்னியாகுமரி மாவட்டம்.

1. வேலையின் பெயர் எதற்கு விண்ணப்பிக்கப்படுகிறது என .. ..
2. விண்ணப்பதாரரின் பெயர் (கொட்டை எழுத்துக்களில்)
   (ஏ) ஆண் அல்லது பெண் .. ..
   (பி) திருமணம் ஆனவர் அல்லது திருமணம் ஆகாதவர் .. ..
3. தகப்பனார் பெயரும் தொழிலும் (திருமணமான பெண் விண்ணப்பதாரராக இருப்பின் கணவர் பெயரும் தொழிலும்).
4. படித்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் .. ..
5. தாய் மொழி .. ..
6. (1) தேசம், மதம், ஜாதி, சமுதாயம் (புள்ளி விவர நோக்கத்திற்கு மட்டுமே).
   (2) தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், அல்லது கிறிஸ்தவராக மாறியவரா ? (அப்படியானால் தேவையான சர்ட்டிபிகேட்டுக்களை ரெவின்யூ அதிகாரிகளிடமிருந்து பெற்று ஒரிஜனலுடன் இணைத்து அனுப்ப வேண்டும்).
7. பிறந்த தேதி .. ..
8. (ஏ) பொதுக் கல்வித்தகுதி .. ..
   (பி) தொழில் அல்லது தொழில் நுட்பத் தகுதிகள் (வருடம், எண், வகுப்பு அல்லது கிரேடு குறிப்பிடப்பட வேண்டும்).
9. எஸ்.எஸ்.எல்.சி. படித்த முதல் மொழி அல்லது மற்ற பள்ளிப் பிரிவு.
10. ஏற்கனவே அனுபவம் இருந்தால் (தேவையான தஸ்தாவேஜுகள் கொடுக்கப்பட வேண்டும்.)
11. விளையாட்டு, தேசீய மாணவர் பயிற்சிப்படை, ஆகியவற்றில் விண்ணப்பதாரரின் பங்கு அல்லது உடல் வலிமை.
12. சரியான முழு அஞ்சல் முகவரி (கொட்டை எழுத்துக்களில்) .. ..
13. தற்போது, முன்பு வேலையில் வாங்கிய சம்பளம், வேலையில் சேர்ந்த தேதி, ஏற்கனவே இருந்த வேலையிலிருந்து விலகிய தேதி, வேலையிலிருந்து விலகியதற்கான காரணம் ஆகியவை பற்றிய முழு விவரம்.
14. தொகை ரூ. 10 செலுத்திய சலான் எண், தேதி, கருவூலத்தின் பெயர் (ஒரிஜனல் சலான் இணைத்து அனுப்பப்படவேண்டும்.).

.... என்ற நான் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் எனக்குத் தெரிந்த அளவிற்கு உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இடம் :

தேதி :

குறிப்பு :—ஒரிஜனல் சர்ட்டிபிகேட், சலான், காலம் 6(2), (8(ஏ), (பி), 14 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளவைகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலர்
தக்கலை.

(அ. 1)

பொதுப்பணித் துறை

தேதி நீட்டிப்பு

வேலையின் பெயர்:—திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக காவலர், 18 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை—:தமிழரசு தேதி 1—11—1971, 16—11—1971-ல் வெளியிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.
தமிழரசு தேதி 31—12—1971 வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 9—2—1972 அன்று மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 8—2—1972 அன்று மாலை 5-00வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் எதும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 39)

ஆர்.எஸ்.ஆர்.எம். லையிங் அரசு மருத்துவ மனை, சென்னை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், அவர் ஆணையின் படியும், அவர் வழியின் படியும், ஆர். எஸ். ஆர். எம். மருந்துகள், டிரஸ்ஸிங்ஸ், கருவிகள், அப்ளியன்ஸீஸ் ஆகியவைகள், 1—4—1972 முதல் 30—9—1972 வரை 6 மாத காலத்திற்கு வழங்குவதற்கு, குறிப்பிடப்பட்ட பாரத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 11—2—1972 அன்று மாலை 2-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, ஒரு சலானில் ரூ. 5-ஐ " XXIII Medical-K, Miscellaneous Receipts " என்ற தலைப்பிலும், மற்றொரு சலானில் விற்பனை வரி (சர்ச் சார்ஜு உட்பட) ரூ. 0·20 காசு-ஐ " XII Sales Tax Receipts General Sales Tax " என்ற தலைப்பிலும் செலுத்தி, மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்.எஸ். ஆர். எம். லையிங் அரசு மருத்துவ மனை, சென்னையில், இரண்டு சலான்களையும் இணைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்குவது, 10—2—1972 வியாழக்கிழமை மாலை 2-00 மணிக்கு நிறுத்தப்படும்.

ஏ. கே. ஜோசப்,
மேற்பார்வையாளர், ஆர்.எஸ்.ஆர்.எம்.
லையிங் அரசு மருத்துவமனை,
சென்னை.

(த. 19)

குடிநீர் வடிகால் வாரியம்

கீழ்க்கண்டவைகளை வழங்குவதற்காக, 20—2—1972 மாலை 3-00 மணி வரை நிருவாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அவர்தம் அலுவலகம் எண்-1, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2-ல் குறிப்பிட்டப் பாரத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-05 மணிக்கு, அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(ஏ) ஐ.எஸ்.எஸ். 651/1961-க்கு ஒத்த தரமும் பல்வேறு அளவுள்ள பைப்புகளும் காளர்களும், வழங்குதலும் ஒப்படைத்தலும்.	கட்டுத் தொகை ரூ. 50,0000
(பி) ஐ.எஸ்.எஸ். 651/1962-க்கு ஒத்த தரமும் பல்வேறு அளவுள்ள சால்ட் கிளேஸ்டு ஸ்டோன் வேர் பைப்புகள் வழங்குதலும், ஒப்படைத்தலும்.	கட்டுத் தொகை ரூ. 25,0000

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை, அரசுக் கருவூலத்தில் செலுத்திய ரெசிப்ட்டு சலானோ அல்லது டிமாண்டு டிராப்டோ அல்லது தேசிய மயமாக்கப் பட்ட வங்கியின் காரண்டியோ ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் செயலகம், எண்-1, கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2-ல் எல்லா வேலை நாட்களிலும் கட்டணமின்றிப் பெறலாம் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-2, அவர்களுக்கு, ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு, ஒப்பந்தங்களை வழங்கவும் அவருக்கு உரிமை உண்டு.

7—1—1972.

நிருவாக இயக்குநர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-2.

(த. 4)

தென்னார்க்காடு மார்க்கட் கமிட்டி, கடலூர்-1.

கீழ்க்கண்ட பொருளை வழங்க முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கையொப்பமிட்டவரால் 17—2—1972 மாலை 4-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும்.

" 4750 செலுலாய்டு எடையாளர் வில்லைகள் சப்ளை செய்தல் "
(Celluloid weighman badges)

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளும் பாரங்களும் தென்னார்க்காடு மார்க்கட் கமிட்டி, கடலூர்-1 செயலாளர்-பொறுப்பு அவர்களிடமிருந்து வேலை நாட்களில் காலை 11-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. சுப்பராயன்,
செயலாளர்-பொறுப்பு.

(த. 38)

மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 11—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரிப் பெறலாம்.

வேலையின் விபரம்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத்தொகை.
	ரூ.	ரூ.
1 நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டட வேலைகள்.	1,64,950	ஒவ்வொரு மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவிகிதம்.
2 அரசினர் கடன், மானிய உதவியின்கீழ் 1970-71-ஆம் ஆண்டு செய்ய இருக்கும் தார் ரோடு வேலைகள்.	59,500	ஷை
3 புதிய பேருந்து நிலையத்திற்கும் அதன் சுற்றுப் புறத்திற்கும் மனைவிளக்கு வசதி செய்ய.	16,000	ஷை
4 தெரு விளக்கு 4 அடி, 40 வாட்ஸ் டியூப் லைட் பிட்டிங்ஸ் சப்ளை செய்ய.	20,000	1,000

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி.
7—1—1972

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த. 37)

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்குறிப்பிட்ட லைக்காக, 15—2—1972 அன்று மாலை 3-00 மணி வரை, மேற்ர்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி ட்டம், அவர்களால் கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்திற்கு டி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர் : ஈரோடு தாலுகா தலைமையக மருத்துவ மனை ல் செஸ்ட் கிளினிக்கிற்கு ஒரு கட்டடம் கட்டுதல்.
ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
கட்டுத் தொகை : ரூ. 2,600.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரைபடத்துடன் விற்பனை வரி உட்பட . 5·18.

வேலை முடிக்க வேண்டிய காலம் : 4 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள், மேலாளர், நிருவாகப் பொறியாளர் அலுவம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களிடத்தில், மேற்றிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி 28—2—1972 முதல் எல்லா லை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொகை திருப்பித்தரப்பட மாட்டாது).

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர்,
நீலகிரி வட்டம், கோயம்புத்தூர்-1.

.29)

ஏலம்

காஞ்சிபுரம் நகராட்சி

5—12—1971 தேதிய ஏல அறிக்கையில் கண்ட நிபந்தனைகட்கு உட்டு நடக்க இருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் உற்சவத்தை முன்னிட்டு —3—1972 முதல் 6—4—1972 வரை சுங்கச் சாவடிகளில் சுங்கம் ண்டும் உரிமை, சாலை ஓரங்களில் வைக்கப்படும் தற்காலிக கடைளுக்கு கட்டணங்கள் தண்டும் உரிமை ஆகிய உரிமைகளை 25—2—1972-ம் தி வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி லுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும் ஏலக்கட்டுப்பாடுகட்கும் நகராட்சி ஆணையருக்கு ழுதியோ அல்லது நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

கராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்,
—1—1972.
. 25)

ஏல விளம்பரம்

குற்றால நகரியக் குழு

குற்றாலம் நகரியத்துக்குச் சொந்தமான " கலைவாணர் கலையரங்கத்ல் " சினிமா, நாடகம், நடனம் மற்ற கலை நிகழ்ச்சிகள் ஆகியவை டத்தும் உரிமை 1—4—1972 முதல் 31—3—1975 வரையுள்ள மூன்று ருட காலத்துக்கு நகரிய நிருவாக அதிகாரியால் குற்றால நகரிய லுவலகத்தில் வைத்து 17—2—1972-ஆம் தேதி காலை 11.00 மணிக்குப் ரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கோர விரும்புபவர்கள் தங்களுடன் " சால்வன்ஸி சர்டிபிகேட்" காண்டு வருவதுடன், ரூ. 1,500-ம் ஏல டெபாசிட்டாக, செலுத்த வண்டும். ஏலம் சம்பந்தமாக மற்ற விவரங்கள் நகரிய அலுவலகத்தில் தரிந்து கொள்ளலாம்.

சா. நா. பழனிச்சாமி, பி.ஏ., பி.எல்.
நிருவாக அதிகாரி.

ற்றால நகரியம்,
—1—1972.
.49)

குற்றால நகரியக் குழு

1972–73-ஆம் வருடத்திற்கு குற்றால நகரியக்குழுவிற்குச் சொந்தமான இதனடியிற்கண்ட குத்தகை உரிமைகள் 1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள ஒரு வருடத்திற்கு 1972-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி காலை 11.00 மணிக்கு குற்றால நகரியக்குழு அலுவலகத்தில் நிருவாக அதிகாரியால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

குத்தகை விவரம்.	பொறுப்புத் தொகை.
1 குற்றால நகரியக்குழு பேருந்து நிலைய உணவு விடுதியில் சைவ உணவு விடுதி நடத்தும் உரிமைக்கு.	500
2 குற்றால நகரியக்குழு பேருந்து நிலைய ஸ்டால் நம்பர் இரண்டில் பழக்கடை வைத்து நடத்தும் உரிமைக்கு.	50
3 குற்றால நகரியக்குழு பேருந்து நிலைய கடை நம்பர் மூன்றில் வெற்றிலை, பாக்குக்கடை வைத்துநடத்தும் உரிமைக்கு.	100
4 குற்றாலம் நகரியக்குழு பேருந்து நிலையத்தில் புத்தகக் கடை வைத்து நடத்தும் உரிமைக்கு.	50
5 குற்றாலம் பெரிய அருவிப் பக்கமுள்ள காப்பிக் கடையில் சிற்றுண்டிச்சாலை நடத்தும் உரிமைக்கு.	50
6 குற்றாலம் பெரிய அருவிப்பக்கமுள்ள ஸ்டால் நம்பர் ஒன்றில் வெற்றிலை பாக்குக்கடை வைத்து நடத்தும் உரிமைக்கு.	100
6 குற்றாலம் பெரிய அருவிப்பக்கமுள்ள ஸ்டால் நம்பர் இரண்டில் வெற்றிலை, பாக்குக்கடை வைத்துநடத்தும் உரிமைக்கு.	100
8 குற்றாலம் ஐந்தருவி காண்டீனில் சைவ உணவு விடுதி நடத்தும் உரிமைக்கு.	200
9 குற்றாலம் ஐந்தருவி ஸ்டால் நம்பர் ஒன்றில் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்து நடத்தும் உரிமைக்கு.	100
10 குற்றாலம் ஐந்தருவி ஸ்டால் நம்பர் இரண்டில் வெற்றிலை, பாக்குக் கடை வைத்து நடத்தும் உரிமைக்கு.	100
11 குற்றாலம் நகரியக்குழுவிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் மட்டன் ஸ்டால் வைத்து நடத்தும் உரிமைக்கு.	500
12 குற்றாலம் மாட்டுப் பவுண்டு கீழ்ப்பக்கமுள்ள நகரியக் குழுவிற்குப் பாத்தியப்பட்ட ஆடு அறுக்குமிடத்தில் ஆடுகளை அறுப்பதற்குள்ள உரிமைக்கு.	50

ஒப்பந்த அறிவிப்பு

குற்றாலம் நகரியக்குழுவிற்கு 1972–73-ஆம் வருடத்திற்குத்தேவையான அடியிற்கண்டவைகளை சப்ளை செய்ய 1972–ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 16–ஆம் தேதி மாலை 4.00 மணிவரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் குற்றாலம் நகரியக்குழு நிருவாக அதிகாரியால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த விவரம்.	பொறுப்புத் தொகை.
	ரூ.
1 நீர்த்த சுண்ணம்பு சப்ளை செய்ய	5
2 யாத்திரிகர்களுக்கு மதிய உணவு சப்ளை செய்ய ..	25
3 குப்பை வண்டிகளுக்கு மாடுகள் மாத வாடகைக்கு ..	100
4 சைக்கிள்களுக்கும் இதர வண்டிகளுக்கும் லைசென்ஸ் தகடுகள் வழங்க.	5

ஏலம், ஒப்பந்தம், சம்பந்தமாக இதர விவரங்கள் அலுவலக நாட்களில் நகரியக்குழு அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

நகரியக்குழு, குற்றாலம்,
13—1—1972.

சா.நா. பழனிச்சாமி, பி.ஏ.,பி.எல்.
நிருவாக அதிகாரி.

(த. 36)

காஞ்சிபுரம் நகராட்சி

16-2-1972-ஆம் தேதி மாலை 3 மணிவரையில் 1972-73-ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்தப்புள்ளிகள் (சீலிட்ட டெண்டர்கள்) நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஷை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். பிற தகவல்களுக்கு நகராட்சி ஆணையர் அவர்களுக்கு எழுதவும்.

1. குப்பை முதலிய வண்டிகளுக்கும், நாய் பிடிக்கும் வண்டிகளுக்கும் மாடுகள் வண்டி ஓட்டுபவர் வழங்குதல்.

2. எழுதுபொருள்கள் முதலியன.

3. சுண்ணாம்பு நீர்.

4. தொற்றுநோய், நோயாளிகளுக்கு உணவு வழங்குதல்.

5. வண்டி, சைக்கிள், நாய், நான்கு சக்கர வண்டி, ரிக்ஷா வண்டிகள் முதலியவைகளுக்குத் தகரத்தினால் செய்த லைசென்ஸ் தகடுகள் வழங்குதல்.

6. அச்சிடுதல்.

7. குப்பை வண்டிகளையும், நகராட்சி மோட்டார் வண்டிகளையும் பழுது பார்த்தல்.

8. தாய் சேய் நலவிடுதிகளுக்கு ரொட்டி, பால், மண்ணெண்ணெய், விறகு, முதலியவை வழங்குதல்.

காஞ்சிபுரம்,
11—1—1972.
(த. 34)

தி. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

பொறியியல் பணித் துறை

வேலையின் பெயர் : வடசென்னை வியாசர்பாடியில் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடங்கள்—கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கூறிய வேலைக்கு மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5ல் உள்ள அலுவலகத்தில் 9—2—1971 மாலை 3 மணிக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்பத்திரங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் 9—2—1971 மாலை 3.15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்பத்திரங்கள் திறக்கப்படும்.

(அ) ஒப்பந்தப்படிவம்	மொத்தத்தொகை.
(ஆ) முன்வைப்புத்தொகை	ரூ. 3,400.
(இ) வேலை முடிக்க வேண்டிய காலம் ..	4 மாதம்.
(ஈ) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ..	ரூ. 20 மட்டும் + விற்பனைவரி ரூ. 0.70 மட்டும்.
(உ) ஒப்பந்தப்பத்திரங்கள் கிடைக்கும் நாட்கள் (அலுவலக நேரங்களில்).	2—2—1972 முதல் 8—2—1972 வரை.
(ஊ) ஒப்பந்தப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் கடைசிநாள்.	9—2—1972

2. ஒப்பந்தப்பத்திரங்களின் விலை (**Public works remittances III other remittances**) என்ற தலைப்பிலும், விற்பனைவரி "**XII Sales tax (b) receipts under State Sales tax act**" என்ற தலைப்பிலும் தனித்தனியாக அரசாங்கக் கருவூலங்கள் (அ) ரிசர்வ் பாங்கியில் கோட்டப் பொறியாளர் கட்டடக் கோட்டம் 11, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் கட்டப்பட வேண்டும். மேற்கண்ட சலான்களோடு விண்ணப்பமும் கொடுத்தபின் ஒப்பந்தப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. மேற்பார்வைப் பொறியாளர் சென்னை—செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு எவ்வித காரணமும் காட்டாமல் ஒப்பந்தப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை உண்டு.

4. மற்றைய விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

7—1—1972.
(த. 41)

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை—செங்கற்பட்டு வட்டம்,
சென்னை-5.

தமிழ்நாடு மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகவும் அவர்களின் உத்தரவுப்படியும், கோவை பைக்காரா மத்திய பண்டக சாலையிலிருந்து சாமான்களை (1) பைக்காரா மின் திட்டத்தின் கிளை பண்டகசாலைகளுக்கும் எதிரிடையாகவும் (2) மத்திய பண்டகசாலையிலிருந்து மற்ற மின் திட்டங்களின் மத்திய அல்லது கிளை பண்டக சாலைகளுக்கும், எதிரிடையாகவும், ஏற்றிச் செல்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் அவருடைய அலுவலகத்தில் 10—2—1972 தேதியன்று மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அதே தேதியில் மாலை 3-30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்படும். மேற்படி ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது "சாமான்களை லாரியில் ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள், விதிகள் அடங்கிய பாரங்களைப் பெற அதற்குரிய விலையான ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) "தலைமைக் கணக்காயர் (செலவினம்), பைக்காரா மின் திட்டம், டாடாபாத் கோவை-12" என்ற விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ செலுத்தி, அதற்கான ரசீதை பண்டகசாலை மேற்பார்வையாளர், பைக்காரா மத்திய பண்டகசாலை கோவை-12 என்ற விலாசத்தில் காண்பித்து மேற்படி பாரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். யாதொரு காரணத்தைக் கொண்டும் செலுத்திய தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

தபாலில் பாரங்களைப் பெற விருப்பம் உள்ளவர்கள் மேற்படி பாரங்கள் தாமதமாகக் கிடைத்தாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு இந்த மின்சார வாரியம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்பதை அறியவும்.

இலாகா பாரத்தில் அல்லாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட தேதியில் வந்து சேராததுமான ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் 9—2—1972 பகல் 12 மணிவரைதான் விற்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின்திட்டம்,
டாடாபாத்,
கோவை-12.

(த. 40)

ஏல விற்பனை

நீலகிரி வடக்குப் பிரிவு மூங்கில் காடுகள்

நீலகிரி வடக்குப் பிரிவு குன்னூர் வனச் சரகத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட மூங்கில் காடுகள் நீலகிரி வடக்குப் பிரிவு, மாவட்ட வன அலுவலகத்தில் நீலகிரி வடக்குப் பிரிவு வன அலுவலர், அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் 21-2-1972-ஆம் தேதியன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. ஹூலிக்கல் நீ.II 150·14 ஹெக்டர்.
2. வாகப்பனை நீ.II 334·68 ஹெக்டர்.

ஏனைய விவரங்களை நீலகிரி வடக்கு வனப்பிரிவு அலுவலரிடமிருந்தோ அல்லது குன்னூர் வனச்சரக அலுவலரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

உதகமண்டலம்,
4-1-1972.
(த. 20)

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்.

நிருவாகப் பொறியாளர், பொது சிறப்புக் கிராமநல பணித் திட்ட கோட்டம், தருமபுரி-3.

ந. க. எண். 11479/72, த. வ. நாள், 10—1—1972.

1. வேலையின் பெயர் பட்டியலில் உள்ளபடி.

2. வேலையை முடிக்க வேண்டிய காலம் பட்டியலில் உள்ளபடி.

3. ஒப்பந்த முறை கே 2 கோட்டம் தருமபுரி (பொ.ப.து.) சிறப்புக் கிராமநல பணித்திட்டம், தருமபுரி.

4. ஷை வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சென்னை ஆளுநர் அவர்கள் சார்பில் நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.) சிறப்புக் கிராம நல பணித்திட்டம் கோட்டம் அவர்களால் தருமபுரியிலுள்ள அவர்களுடைய அலுவலகத்தில் 17—2—72 அன்று மாலை 4 மணி வரை வரவேற்கப்படும்.

5. ஒப்பந்தப் புள்ளி அறிக்கை வேலையின் விவரங்கள் முதலியவற்றைப் பெற மேலாளர் (பொ.ப.து.) சிறப்புக் கிராம பணித்திட்டம், தருமபுரி அவர்களுக்கு விண்ணப்பித்து ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் பாரத்தின் விலையான ரூ. 5.18 (ரூபாய் ஐந்தும் பதினெட்டு காசு மட்டும்) செலுத்தி பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பாரத்திற்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்தைக் கொண்டும் எந்த சந்தர்ப்பத்திலும் திருப்பித்தரப் படமாட்டாது.

6. ஒப்பந்தப் புள்ளி அறிக்கை பெற விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு 14—2—72-க்குள் வரவேண்டும். இந்த தேதிக்குப் பிறகு விண்ணப்பங்கள் பொதுவாக பெறப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் 1—2—72-ஆம் தேதி முதல் கிடைக்கும். இந்த இலாகாவினால் கொடுக்கப்பட்ட பாரங்களில் மட்டும்தான் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

7. ஒப்பந்தப் புள்ளி உறையில் இட்டு ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி முத்திரையிட வேண்டும். உறையின் மேல் வேலையின் பெயரை எழுத வேண்டும்.

8. இந்த வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி அறிக்கையிலும், பட்டியலிலும், கண்டுள்ள தொகையைக் கட்டுத் தொகையாக ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்டிப் பணம் செலுத்தி ரசீது ஒப்பந்தப் புள்ளி அறிக்கையுடன் எழுதப்பெற்று சமர்ப்பிக்க வேண்டும். பிரைஸ் பாண்டுகள் செக்குகள் கட்டுத் தொகையாக ஏற்கப்பட மாட்டாது.

9. இப்பிரிவில் 7, 8ல் கூறிய நிபந்தனைகளின்படி இல்லாத ஒப்பந்தப் புள்ளி தள்ளுபடி செய்யப்படும்.

10. எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணமேதும் காட்டாமலும் நிராகரிக்க நிருவாகப் பொறியாளருக்கு உரிமை அளிக்கப்படும்.

11. ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்ததாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் முடிவுபெற்ற பிறகுதான் திருப்பி அளிக்கப்படும்.

12. ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக் கொண்டபின் வேலையைச் செய்யவேண்டிய மொத்த மதிப்பில் 2½ சதவீதம் கையெழுத்திடுமுன் செலுத்த வேண்டும்.

13. கட்டுத்தொகை அரசினர் கடன் பத்திரம் சென்னை மின்சார போர்டின் கடன் பத்திரம் 12 வருட தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள், 20 வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள் இவைகள் அதன் மதிப்புக்கு 25 சதவிகிதம் குறைவாகத்தான் ஒப்புக்கொள்ளப்படும்.

14. கட்டுத்தொகை கடன் பத்திரங்கள் மூலம் கொடுத்தால் அதை நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.) சிறப்புக் கிராம பணித்திட்டம், கோட்டம் தருமபுரி அவர்கள் பெயருக்கு மாற்றி சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலக ஒப்புதலுடன் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். அப்படிச்செய்யா விட்டால் பொதுவாகத் தள்ளுபடி செய்யப்படும்.

எண்ணும், வட்டமும்.	வேலையின் பெயர்.	கட்டுத் தொகைச் சலான் மூலம்.	பத்திரங்கள் மூலம்.	வேலையைச் செய்து முடிக்க வேண்டிய காலம்.
		ரூ.	ரூ.	
1. ஊத்தங்கரை	கொண்டம்பள்ளி கிராமத்தில் காரிக்காசன் குட்டை பள்ளத்தின் குறுக்கே ஏரி அமைத்தல்.	1,500	1,880	8 மாதங்கள்.
2. ஷை	காட்டுசிங்காரபட்டி கிராமத்தில் காட்டாற்றின் குறுக்கே ஏரி அமைத்தல்.	5,440	1,800	14 மாதங்கள்.
3. ஷை	ஆலாபுரம் ஏரியின் வாய்க்கால் விரிவு படுத்துதல் சம்மந்தமாக.	1,430	1,790	8 மாதங்கள்.
4. அரூர்	கதிரி நாயக்கன் அள்ளி கிராமத்தில் இருக்கும் பணமரத்துக்குட்டையைப் பழுது பார்த்தல்.	380	480	4 மாதங்கள்.
5. ஷை	அஸ்தங்கிரி கிராமத்தில் பொடியம் பள்ளத்தின் குறுக்கே ஏரி கட்டுதல்.	1,740	2,180	10 மாதங்கள்.
6. ஷை	பைரநாயக்கன்பட்டி கிராமத்தில் ஒட்டுப் பள்ளத்தின் குறுக்கே ஏரி அமைத்தல்.	6,440	8,050	14 மாதங்கள்.
7. ஷை	ஆண்டியூர் கிராமத்தில் தீர்த்தம் பள்ளத்தின் குறுக்கே ஏரி கட்டுதல்.	3,000	3,750	12 மாதங்கள்.
8. ஷை	கதிரிபுரம்மிட்ட அள்ளி கிராமத்தில் காட்டாற்றைத் திருப்பி ஏரி அமைத்தல்.	5,420	6,780	16 மாதங்கள்.
9. கிருஷ்ணகிரி	கிட்டம்பட்டி அருகே படதாலாவு ஏரியின் கோடிக் கால்வாய் குறுக்கே புதிய அணைக்கட்டு கட்டுதல்.	2,720	3,400	10 மாதங்கள்.
10. ஷை	கூளியம் கிராமத்தில் இருக்கும் கூளியம் அணைக்கட்டுக்குப் பழுது பார்த்தல்.	3,680	4,600	10 மாதங்கள்.
11. தருமபுரி	சங்கம் பசன்தலாவ் ஏரி தூர் வாரி புனரமைத்தல் வேலை செய்தல்.	1,790	2,280	8 மாதங்கள்.
12. தேன்கனிக்கோட்டை	கொய்மனபள்ளி கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல் ..	6,320	7,300	16 மாதங்கள்.

டி. பி. ரங்கநாதராவ்,
நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.) சி.கி.ப.தி.

(த.35)

இயக்குநரின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 4/71-72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான காலவரம்பு நீட்டிப்பு.

வேலையின் பெயர் :—36 அங்குலம் உள்விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்தமேற்றப்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி, அமைப்புகளும் (Prestressed Concrete pipes and specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக் கொண்டு சென்று சரியான வரிசைப்படியும், சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைவுகளாகப் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில், முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான காலவரம்பு 21—2—1971 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 21—2—1972 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 18—2—1972 வரை கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதுமில்லை.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குனர் அலுவலகம்,
10எ, தண்டபாணி தெரு,
சென்னை-17.
(த.ஆர். 6)

அரசு மருத்துவ நிறுவனம், சென்னை மாநகர், காசநோய் சானடோரியம், தாம்பரம் ஆகியவற்றில் 1972-73-க்குப் பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோசொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுதல்:—

அரசு மருத்துவ நிறுவனம், சென்னை மாநகரம், காசநோய் சானடோரியம், தாம்பரம் ஆகியவற்றில், 1972 எப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் தேதியிலிருந்து 1973 மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோசொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலர், கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் அவர்தம் அலுவலகத்தில், 1972 பிப்ரவரி 23-ஆம் தேதி மாலை 2-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதி, தேவையான பொருட்களின் அட்டவணை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம், ஆகியவற்றைக் கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர், சென்னை-5 அவர்தம் அலுவலகத்திற்கு மனுச் செய்து பெறலாம். ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 5-ம், விற்பனை வரிக்குத் தனியாக 3½ சதவீதமும், ரிசர்வ் பாங் ஆப் இந்தியாவிலோ, அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலத்திலோ, தமிழ்நாடு அரசின் கணக்கில் முறையே, "XXIII Medical—J. Miscellaneous—Director of Medical Education" "XII Sales Tax—b. Receipts Under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்த வேண்டும். ரிசர்வ் பாங் ஆப் இந்தியாவில் செலுத்தியிருந்தால், உண்மைச் சலான் கொடுக்கப்பட வேண்டும். கருவூலத்தில் செலுத்தியிருந்தால், செலான் நம்பரும், தேதியும், செலுத்திய தொகையும், ஒப்பந்ததாரரின் பெயரும், தொகை செலுத்தப்பட்ட வங்கி அல்லது கருவூலத்தின் பெயரும், மனுவில் குறிப்பிட்டுப் பெறலாம். எச்சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும், 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட, ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000க்கு மேற்பட்டால் வருமான வரி பாக்கியில்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும், ரூ. 1,000க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும், தேசிய இனச் சான்றும், அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் அளித்த அத்தாட்சியின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் வைத்து அனுப்ப வேண்டும்.

ஆர். பசுபதி,
தலைமைக் கணக்கு அலுவலர், மருத்துவக்
கல்வித்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5.

(த.ஆர். 7)

சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குத் தேக்குமரச் சட்டங்கள், பலகைகள் முதலியவை வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 18-2-1972 தேதி பிற்பகல் 3 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள், மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Act. due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "........க்கு (இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) தேக்கு மரச் சட்டங்கள், பலகைகள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று தவறாமல் எழுதித் தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் அலுவலகத்தில் 19-2-1972 முற்பகல் 10-30 மணிக்குள் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள் ஒப்பந்தப்புள்ளி விதிகள் வழங்க வேண்டிய மர வகைகளின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

பி. குப்புசுவாமி,
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
"குறளகம்" 5-வது மாடி, சென்னை-1.

சென்னை-1
22-12-71.
(த. ஆர். 4)

நிலநீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 7/71-72.

வேலையின் பெயர் :—சென்னை நிலநீர்க்கோட்டத்திற்குத் தேவையான வார்ப்பு இரும்புக் குழாய்கள் (C.I. Pipes) இணை உபயோகிக்கும் கார் ஈயக்கட்டிகள் (Pig lead) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேலே குறித்துள்ள அலுவலகத்தில் 17—2—1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அவருடைய அலுவலகத்தில் 17—2—1971 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்	K-2
முன்வைப்புத் தொகை	ரூ. 5,900.
ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ..	விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்), விற்பனை வரி ரூ. 0·40 (நாற்பது காசுகள் மட்டும்).
வேலை முடிக்கவேண்டிய காலம் ..	3 மாதங்கள்.
ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் இடைக்கும் காலம்.	18—12—1971முதல்14—2—1972 முடிய.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை, எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது. அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III other Remittances" என்ற தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர் நிலநீர்க்கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII Sales Tax (b) Receipts Under State Sales Tax Act, General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநதம்,
இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
நெ. 10எ, தண்டபாணி தெரு, சென்னை-17.
(த.ஆர். 5)



SIEMENS

லத்தின தாகம் தணித்திடுவான்—
வன் பெயர் ஸீமென்ஸ் பம்ப்மாஸ்டர்

என் பெயர் ஸீமென்ஸ்
'பம்ப் மாஸ்டர்'.
என்றும்
வழங்கிடுவேன் தண்ணீர்;
பூமி பரவிய புகழ்ப் பெயர்
ஸீமென்ஸ் கம்பெனி
என்ற பெயர்.

அனைத்திந்தியாவில் ஸீமென்ஸிடம் மட்டும்தான் பம்பிங் செட்டுக்குத் தேவையான எல்லா சாதனங்களும்—அதாவது பம்பு, மோட்டார், ஸ்டார்ட்டர், ஸ்விட்ச்:ப்யூஸ் யூனிட் மற்றும் அவற்றை இணைப்பதற்கான ட்ரோபோடுர் கேபின் உள்பட—ஒரே தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த பம்பிங் செட் மிகவும் நம்பகத்துடன் இயங்குவதற்கு இதுவே உத்தரவாதம்.

ஸீமென்ஸ் இந்தியா லிட்.
● பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● புது டெல்லி
● அமதாபாத் ● பெங்களூர் ● ஹைதராபாத் ● லக்னோ

ஏல விளம்பரம்

தேனி—அல்லிநகரம் நகராட்சி

1972-ஆம் வருடம் எப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1973-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியோடு முடிவடையும் ஒரு வருடக் காலத்திற்கு தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி வாரச்சந்தை (மேற்கு சந்தையில் தற்போது வடமேற்கு மூலைப் பக்கமுள்ள மூங்கில் கடைகள்நீங்கலாக உள்ள பகுதிகள் அனைத்திலும் சுங்கம் வசூல் செய்யும் பாத்தியதை)யையும், வண்டிப் பேட்டையையும் (சாராயக் கடை நீங்கலாக), சந்தையில் விழும் இளநீர் மட்டைகள், நகராட்சி எல்லையில் விழும் பன்றி எருவை எடுத்துச் செல்லும் பாத்தியதையையும் 1972-ம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு தேனி-அல்லி நகரம் நகராட்சி தனி அதிகாரி அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகமது இப்ராஹிம்,
தனி அதிகாரி.

தேனி,
4-1-1972.

(த. 50)

ஏலம்

தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொடர் ஊர்தி பம்ப் வேலூர் தீ அணைப்பு நிலையத்தில் 4-2-1972 அன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி இடத்தில் பம்பைப் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்

வண்டியின் விவரம்.	பதிவு எண்.	வருடம், மாடல்.
தொடர் ஊர்தி பம்ப்	எம்.எஸ்.ஒய். 3197	கவெண்டிரி கிளைமாக்ஸ் பெரியது 1955 மாடல்.

யூ. நாராயண,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
வேலூர் கோட்டம்.

(த. 55)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
சென்னை வட்டம்—சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், சென்னை-25 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 16-2-1972 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் விவரம்.	முன்வைப்புத் தொகை.
1. பொன்னேரிக்கரை சாலை கி. மீ. 2/8 முதல் 8/4 வரை மேம்பாடடையச் செய்தல் (தென் ஆர்க்காடு மாவட்டம்)..	ரூ. 10,300

ஒப்பந்தங்கள் 16-2-1972 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அவர்கள் அலுவலகத்தில் விற்பனைவரியுட்பட ரூ. 51.75 கட்டி 7-2-1972 முதல் 15-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாஸிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை கிராமப் பணித்துறை) கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.).

சென்னை-25,
11-1-1972.

(த. 56)

ஏலம்

ஆத்தூர் நகராட்சி

1972-73-ஆம் ஆண்டில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்த விளம்பரம்

ஆத்தூர் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பேருந்து வண்டி நிலையம், சந்தை, வண்டிப்பேட்டை, மற்றும் பன்றி எரு பொறுக்குதல் ஆகிய பலவகைப்பட்ட இனங்களில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய ஓராண்டிற்குக் கட்டணம் வசூல் செய்தலும், மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள உணவு விடுதிகள், அதைச்சார்ந்த கடைகள், இனிரயின் பஜார் கடைகள், பெட்டிக் கடைகள், மற்றுமுள்ள இதரக் கடைகளும் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கும் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14, 15, 16-ஆம் தேதிகளில் தினசரி காலை 10 மணி முதல் நகராட்சி ஆணையரால் ஆத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலம் நடத்தப்படும். மேலும் 1972-73-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தேவைப்படும் சாமான்கள் வழங்க 16-2-72-ந் தேதி மாலை 4 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30-க்குத் திறக்கப்படும். ஏலங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் சம்பந்தமான சகல விவரங்களும் 1972 ஜனவரி மாதத்திய சேலம் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதர விவரங்கள் வேண்டுவோர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. வி. லெட்சுமி நாராயணன்,
ஆணையர்.

ஆத்தூர்,
14-1-1972.

(த. 51)

ஏல விற்பனை

வனத்துறை

தமிழ்நாடு அரசினர் மரக் கிடங்கு, பொள்ளாச்சி

சுமார் 500 க. மீட்டர் முதல் 1,500 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பல ஜாதி) மரங்கள் ஆகியவைகளை 2-2-1972-ஆம் தேதி மற்றும் 22-2-1972-ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக, தென்கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்திரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடத்தப்படும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழக அரசினர் மரக் கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பபித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர்.

பொள்ளாச்சி,
7-1-1972.

(த. 52)

ஒப்பந்தப் புள்ளி

வேலையின் பெயர்—

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்திலுள்ள சித்தாமூர் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்தும், ஆயக்கட்டுதாரர்களிடமிருந்தும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 10-2-1972 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளி தாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை	கே-2
முன்வைப்புத் தொகை	ரூ. 4,000
ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்.	ரூ. 20.70 (விற்பனை வரி உட்பட).
முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி.	15 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 25-1-1972 தேதி முதல் 8-2-1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் **"P.W.D.—Remittances III—other Remittances"** என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, காஞ்சீபுரம் கோட்டம், காஞ்சீபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **" XII Sales Tax (b) Receipts under state Sales Tax Act—General Sales Tax.**

என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணபத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து. காஞ்சிபுரம் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப் படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சு. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 33)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்—

வலுவேற்றப்பட்ட காங்ரீட்டு குழாய்க்குள் தாங்கும் வண்ணம் வலுவேற்றப்பட்ட காங்ரீட் பாலம், சென்னை அடையாறு ஆற்றுக்குக் குறுக்கே கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காகப் பொதுப்பணித்துறை அல்லது மற்ற அரசுத் துறைகளைப் பெரிய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 2-2-1972 மாலை 2 மணிவரை முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
கட்டுத்தொகை	ரூ. 10,000
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 10 மற்றும் விற்பனை வரி ரூ 0.37.
வேலை முடிக்கவேண்டிய காலம் ..	8 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை **" III Suspense G. Remittances—(iii) other Remittances T.W.A.D. Funds.**

என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக்கோட்டம், சென்னை-5 அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 17-1-1972 முதல் 1-2-1972 வரை தொகை செலுத்திய செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

தனித் தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. ஆர். 1)

ஏல விளம்பரம்

அடியிற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான கண்டனம் செய்யப்பட்ட லாண்ட் ரோவர் ஊர்தி ஒன்று உள்ளது உள்ளபடியே 1972-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம் நாள் (14-2-72) அன்று கும்பகோணம் பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்டம் உதவிப் பொறியாளர் அவர்களால், 6-ம் இலக்கமிட்ட கல்யாணராமன் தெருவில் அமைந்துள்ள, பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்ட அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

(1) லாண்ட் ரோவர்—ஊர்தி எண் எம்.எஸ். ஒய். 1649—1953-ஆம் ஆண்டின் மாதிரி—பெட்ரோல் எஞ்சின்—ரோவர் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது.

மேற்படி ஊர்தியை அது வைக்கப்பட்டுள்ள இடத்தில் (கும்பகோணம்) அலுவலக வேலை நேரத்தில் சென்று ஆய்வு செய்யலாம். பிணைத் தொகை, மற்றும் தேவைப்பட்ட விவரங்களைக் கும்பகோணம் உதவிப் பொறியாளரிடம் இருந்து அறிந்து கொள்ளவும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுசுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
எழும்பூர், சென்னை-8.

(த. ஆர். 2)

ஒப்பந்தப் புள்ளி

சிறைத் துறை

1972-73-ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 16-2-72 தேதி பிற்பகல் 3 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும், வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Actd. due.) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "........க்கு (இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி என்று தவறாமல் எழுதித் தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகளைச் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளரின் அலுவலகத்தில் 17-2-72 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள், ஒப்பந்தப்புள்ளி விதிகள், வழங்க வேண்டிய கச்சாப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

பி. குப்புசுவாமி,
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
"குறளகம்", 5-வது மாடி, சென்னை-1.

தேதி 22-12-71

(த. ஆர். 3)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், கோயம்புத்தூர்-12 அவர்களால், 25/1, 3-வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்–12 என்ற முகவரியிலுள்ள அவர் தம் அலுவலகத்தில், 11–2–1972 அன்று மாலை 3–00 மணி வரை, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—(1) பொள்ளச்சி குடிநீர் வழங்கும் திட்ட மேம்பாடு—ஐ.எஸ். எஸ். எண் 226/1962 மற்றும் இது நாள் வரை ஏற்பட்டுள்ள திருத்தத்திற்கும் ஒத்த தரமும் பல்வேறு அளவும் உள்ள எம். எஸ். ராடுகளை வழங்குதலும், ஒப்படைத்தலும்.

(2) புஞ்சைப்புளியம்பட்டி. குடிநீர் வழங்கும் திட்டம் . ஐ.எஸ்.எஸ். எண் 226/1962 மற்றும் இதுநாள் வரை ஏற்பட்டுள்ள திருத்தத்திற்கும் ஒத்த தரமும் பல்வேறு அளவும் உள்ள எம்.எஸ். ராடுகளை வழங்குதலும், ஒப்படைத்தலும்.

கட்டுத் தொகை :—ரூ. 2,250. (ஒவ்வொரு வேலைக்கும்.)

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை : ரூ 10.35 விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்குமிடம் :—நிருவாகப் பொறியாளர் அலுவலகம், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 11/8, பாஸ்யகாருலு சாலை, ஆர்.எஸ். புரம், கிழக்கு, கோயம்புத்தூர்-2-ல் விலையை நேரில் பணமாக, அல்லது மணியாடர் மூலமாகவோ செலுத்திப் பெறலாம்.

வேலை முடிக்க வேண்டிய காலம் :—ஒரு மாதம்.

கட்டுத் தொகை, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், அவர்கள் வரம்பிற்குட்பட்ட கருவூலத்தில் செலுத்திக் கருவூலச் சலான் வடிவிலோ, அல்லது நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், கோயம்புத்தூர்-2 அவர்கள் பெறும் வகையில் டிமாண்டு டிராப்டாகவோ செலுத்த வேண்டும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூடக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல், அவர்களுக்கு உரிமை உண்டு.

எம். துரைராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
கோயம்புத்தூர்-12.

(த.13)

தருமபுரி நகராட்சி

தருமபுரி நகராட்சிக்கு 1972–73-ஆம் ஆண்டுக்குத் தேவையான கருங்குண்ணி வகை சப்ளை, தாய்சேய் நலவிடுதிக்குத் கோதுமை ரொட்டி பசும்பால் சப்ளை, பொது சுகாதார வாகனம் பழுது பார்த்தல் பொதுச் சுகாதார வண்டிகளுக்கு 13 மாடுகள், 4 எருமைகடா சப்ளை முதலிய வற்றிற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 28–1–1972-ம் நாள் மாலை 4–00 மணி வரை ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். காளியப்பன், எம்.ஏ.
ஆணையர்.

நகராட்சி அலுவலகம், தருமபுரி,
7–1–1972.

(த.27)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வாரியம், கோயம்புத்தூர்-12 அவர்களால், 25/1, 3-வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்-12 என்ற முகவரியிலுள்ள அவர் தம் அலுவலகத்தில் 16–2–1972 அன்று மாலை 3–00 மணி வரை, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4–00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவராலோ திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—(1) பள்ளிபாளையம் குடிநீர் வழங்கும் திட்டம் முதல் நிலை சோன் எண். 1-க்கு எம்.டபிள்யூ.எல். 174 மீட்டர், எல்.டபிள்யூ. 171 மீட்டரில் 3.75 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. மேல் நிலை நீர்த்தேக்கம் அமைத்தல்.

(2) பள்ளிப்பாளையம் குடிநீர் வழங்கும் திட்டம் முதல் நிலை சோன் எண். 2-க்கு எம். டபிள்யூ.எல். 169 மீட்டர், எல்.டபிள்யூ.எல் 165.50 மீட்டரில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. மேல்நிலை நீர்த்தேக்கம் அமைத்தல்.

வேலை முடிக்க வேண்டிய காலம் :—6 மாதங்கள் (ஒவ்வொரு வேலைக்கும்).

ஒப்பந்த வடிவம் :—மொத்தத்தொகை (ஒவ்வொரு வேலைக்கும்.)
கட்டுத் தொகை :—(1) ரூ. 2,825. (2) ரூ. 2,250 (முறையே).

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை :—ரூ. 10.35 (விற்பனைவரி உட்பட) (ஒவ்வொரு வேலைக்கும்).

ஒப்பந்தப் படிவம் விற்கப்படும் காலம் :—(1) 12–1–1972 முதல் 14–2–1972 வரை (ஒவ்வொரு வேலைக்கும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 18, சாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி, ஈரோடு-3 அவர் தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலையை நேரில் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத்தொகை தேசியமயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய டிமாண்டு டிராப்டாகவோ அல்லது கருவூலச் சலான்வடிவிலோ மேற்பார்வைப் பொறியாளர், ஈரோடு அவர்கள் பெறும் வகையில் செலுத்த வேண்டும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகையின்றிப் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள், நிராகரிக்கப்படும்.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர், கோயம்புத்தூர் அவர்களுக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த.12)

பயிற்சி

மீன்துறை பயிற்சி நிலையம், சென்னை-28

சென்னையிலுள்ள மீன்துறை பயிற்சி நிலையத்தில் நவீன மீன்பிடி பயிற்சி 10 மாதக்காலம் அளிக்கப்படும். மேற்படி பயிற்சிக்குச் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள மீனவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும், நல்ல தேக ஆரோக்கியமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் தலா ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உபகாரச் சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் 10–2–1972 மாலை 5 மணி வரையில், மீன்துறை பயிற்சி நிலையம், சென்னை–28 அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கும் விண்ணப்பப் பாரங்களுக்கும் மேற்கூறிய உதவி இயக்குநருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தி. மா. ஆறுமுகம்,
மீன்துறை துணை இயக்குநர்,
(மண்டலம்) சென்னை-6.

(த.26)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

விளக்க விபரம் எண்கள்:

(அ) SEG—BB-47.
(ஆ) SEG—BB-48.
(இ) SEG—BB-49.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பங்கள் (Tenders) மேற்கண்ட மூன்று விளக்க விவர எண்களுக்கும் அதனதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம், பேசின் பிர்ட்ஜ் அனல் மின் திட்டம்" என்றும் (அ) விற்கு "டிப்பர் லாரி கட்டுமான வேலை-விளக்க விவரம் எண் SEG—BB.47" என்றும், (ஆ)-விற்கு "லாரி கட்டுமான வேலை விளக்க விவரம் எண் SEG—BB.48" என்றும், (இ)-க்கு வாகனங்கள் ஏல விற்பனை-விளக்க விவரம் எண் SEG—BB–49" என்றும், மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பம் இட்டவரால் 5–2–1972 அன்று பிற்பகல் 1 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கூறிய விளக்க விவர எண்களின் விவரம் பின்வருமாறு :—

எண்.	விளக்க விவர எண்	வேலையின் விளக்கம்.	வண்டிகளின் எண்ணிக்கை.	பிணைத்தொகை.
				ரூ.
அ.	SEG.BB. 47.	டிப்பர் லாரி கட்டுமான வேலை (163" WB Leyland Comet7.5 Ton.)	4 (நான்கு)	1,250
ஆ.	SEG.BB. 48.	லாரி கட்டுமான வேலை (165" WB Fargo–5 Ton.)	1 (ஒன்று)	250
இ.	SEG.BB. 49.	வாகனங்கள் ஏல விற்பனை— (1) பென்ஸ் டிப்பர் 1957 மாடல், MDN 4167. (2) டாட்ஜ் லாரி 1946. மாடல் MSP 2406 (3) பென்ஸ் டிப்பர், 1959 மாடல், MSX 5174. (4) பென்ஸ் டிப்பர், 1959 மாடல், MSX 5192. ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே விலை மதிப்பு கொடுத்தல் வேண்டும்.)	4 (நான்கு)	500

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் ஃறிப்பிப் பிரதிக்கும் தலா ரூ. 10 ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகளின் விளக்க விவரப் பிரதிகள் (Tender Specification Copies) வேண்டுவோர் ஒவ்வொரு விளக்க விவரப் பிரதிக்கும், ரூ. 10 வீதம் துணைத்தலைமைக் கணக்கர், மின் உற்பத்தி நிலையம் பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், சென்னை-12 (Deputy Chief Accountant Generation, Basin Bridge Power Station, Madras-12-) முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ (Money Order) அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (Specification Number) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்கட்குச் சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. கீழே கையொப்பம் இட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவர் ஆவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திற்கும் பிணைத் தொகையாக மேற்கூறியவாறு பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் செலுத்தி, அதற்கான ரசீதை விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

மேற்படி ரசீது இல்லாத ஒப்பங்களும், உரிய தாள்களில் சேர்க்கப்படாத விலை ஒப்பங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. 5–2–1972 அன்று மாலை 4 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்கள், அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில் அடியில் கையொப்பம் இட்டவரால் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம், சென்னை-12.

(த.32)

ஏல விளம்பரம்

தாராபுரம் நகராட்சி

1972-73–ஆம் ஆண்டிற்கான ஏல விளம்பரம்

நகராட்சி வாரச்சந்தை, தினசரி சந்தைகள், ஆடடிக்கும்சாலை, பேருந்து நிலையம், வண்டிகள் நிற்குமிடம், மாட்டிறைச்சிக்கடை, ஆகியவைகளில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பேருந்து நிலையம், திருப்பூர் ரோடு, அலங்கியம் ரோடு, சோளக்கடைவீதி ரோடு முதலியவைகளிலுள்ள கடைகளை நடத்திக் கொள்ளும் உரிமை, நகராட்சி அமராவதி ஆற்றங்கரையிலுள்ள தலைமை குடிநீர் நிலையத்தில் கட்டடம் மற்றும் உபயோகத்தில் உள்ள இடங்கள் போக எஞ்சியுள்ள 0.60 சென்ட் இடத்தை விவசாயக் காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை மற்றும் இதர குத்தகைகள் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ஆம் நாள் மாலை 3–00 மணிக்குப் பகிரங்கமாய் நகராட்சி அலுவலகத்தில் ஏலம் விடப்படும்.

தவிர கீழ்க்கண்ட பொருள்கள் வழங்குவதற்கும் வேலைகள் செய்து தருவதற்கும் (31–3–1973–ஆம் தேதி முடிய தேவைப்படுபவைகள்) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் 21–2–1972–ஆம் தேதி மாலை 4–00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே தினத்தில் 4–15 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

1. வைக்கோல், சோளத்தட்டு, பருத்தி விதை, புண்ணுக்கு முதலியவைகள் கொண்டு வந்து வழங்கல்.
2. கூடை, விளக்குமாறுகள் வழங்கல்.
3. எழுதுபொருள்கள் வழங்கல்.
4. அச்சுவேலைப் பதிவேடுகள், படிவங்கள் வழங்கல்.
5. துப்புரவு மாடுகளுக்கு லாடம் அடித்தல்.

பெ. கிருஷ்ணமூர்த்தி,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தாராபுரம்.
10—1—1972.

(த.24)

ஒப்பந்தப் புள்ளி

நாகர்கோவில் நகராட்சி

நாகர்கோவில் நகராட்சி மகாத்மா காந்தி நூற்றுண்டு நினைவு மருத்துவ மனைக்கு மருந்துகள் வழங்குவதற்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அல்லது அவரது ஆணை பெற்றவரால் 15—2—1972 மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு ரூ. 1.03 நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்த அட்டவணை பெற்றுக் கொள்ளலாம்.

மதிப்புத் தொகை : ரூ. 3,500.

பொறுப்புத் தொகை : ரூ. 100.

பி. தங்கவேலு,
ஆணையர்.

நாகர்கோவில்,
11—1—1972.

(த.23)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

வேலையின் பெயர்:—கட்டடங்கள்—செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் ஆராய்ச்சிக் கட்டடத்தில் கூடுதல் மாடிக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால 16–2–1972 மாலை 3–00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை——ரூபாய் 6,400.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடத்துடன்—ரூ. 20·70 விற்பனை வரி 3½சதவீதம் சேர்த்து.

முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—8 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு, வடார்க்காடு பெருவட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில 1–2–1972 தேதி முதல் 14–2–1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D. Remittances III Other Remittances" என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம்" என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts, under State Sales Tax Act" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப் படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெட்யூல்டு பாங்குகளில் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளில் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் "ஷெட்யூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர் (பொ. ப. து.)
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 31)

மின்சார வாரியம்

மேட்டூர் மின் இயக்கத் திட்டம்

மேட்டூர் அணை-1

மின்வாரியத்தின் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான குத்தகை விளம்பரம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு மேட்டூர் மின் திட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 18–2–1972-ஆம் தேதி பிற்பகல் 2–00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட குத்தகை நிபந்தனைச் சீட்டுகள், 1–4–1972 முதல் 31–3–1973 வரை மேட்டூர் அணை மத்திய பண்டகச் சாலையில் பனிமனை முதலியவற்றிலிருந்து மேட்டூர் மின் திட்டத்திலுள்ள இதர பண்டகசாலைகளுக்கு அல்லது தமிழ்நாடு பூராவிலும் வேறெந்த இடத்திற்காகிலும் பண்டங்களை ஏற்றிச்சென்று ஒப்படைத்தலும் இதர இடங்களிலிருந்து பண்டங்களை ஏற்றிவந்து மேட்டூரில் ஒப்படைப்பதற்குமான வேலைகளுக்கு வரவேற்கப்படுகின்றன.

குத்தகை விவரங்கள், குத்தகை நிபந்தனைகள், நிபந்தனைத் தாள்கள் (Tender Form) பிரதி ஒன்றுக்கு ரூ. 5–00 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பிதரதக்கதல்ல) பண அஞ்சல் மூலமாகவோ நேரிலோ மேட்டூர் மின்இயக்கத்திட்ட தலைமைக் கணக்காயரிடம் (செலவினம் செலுத்தி) பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 14–2–1972 குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகளடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் (அஞ்சல் செய்யப்பட்டஅடையாளம் பெற்று) அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினாலோ அல்லது உரிய காலத்தில் தாள்கள் கிடைக்காது போனாலோ மின்சாரவாரியம் பொறுப்பேற்காது. குத்தகை விவரம் மற்றும் நிபந்தனைகள் அடங்கியதாள்கள் மாற்றத் தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதகாரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததார களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,00 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத்தொகையாக மேட்டூர் மின்திட் தலைமைக் கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்ல ஷெடியூல்டு வங்கியில் செலுத்தப்பட்ட (Demand Draft) பணமாற்றோலையோ இக்குத்தகை நிபந்தனைத் தாளுடன் இணைத்து அனுப் வேண்டும். பணமாற்றோலையோ அல்லது இவ்வலுவலகத்தில் கட்டு தொகைச் செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகை நிபந்தனைத்தாள்கள் தள்ளுபடி செய்யப்படும். குத்தகைத்தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 18–2–1972-ஆ தேதி பிற்பகல் 3–00 மணி அளவில் திறக்கப்படும்.

குத்தகை நிபந்தனைகளும், குத்தகை தாள்களும், 17–1–1972-ஆ தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

(த. 30)

மேற்பார்வைப் பொறியாளர்

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கூறப்பட் வேலைக்காக 10–2–1972 மாலை 3–00 மணி வரை மேற்பார்வை பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்ட கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒ பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின், மத்தியப் பண்ணை அலுவல கட்டடம் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

கட்டுத்தொகை.—ரூ. 2,500.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை வரைபடத்துடன் விற்பனை உட்பட—ரூ. 5·18.

வேலை முடிக்க வேண்டிய காலம்:—4 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், நிருவாகப் பொறியா அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர்—அவர்களிடம், மே குறிப்பட்ட தொகையைச் செலுத்தி 24–1–1972 முதல் எல் வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலா தொகைத் திருப்பித் தரப்பட மாட்டாது.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த. 17)

ஏல விற்பனை

தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட நீர் தாங்கி வண்டி எம்.எஸ்.ஒய். (ஜி.எம்.ஸி. 1951 மாடல் வண்டி) சென்னை எழும்பூர் மார்ஷல்ஸ் 17-வ, எண்ணில் உள்ள கோட்டத் தீயணைப்பு அலுவலக 19–2–1972 அன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப இவ்வண்டியை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம். வி நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். அமிர்தலிங்கம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,

(த. 18)

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எ:கு, பித்தளை ஆகியவற்றில் வடிக் கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இருமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை வேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எ:கு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்காக மனுக்கள் 2-3-1972 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன :—

தமிழ்நாடு கல்வி சபார்டினேட் சர்வீஸ், அரசு பெண்கள் பாலி டெக்னிக்கில், கணக்கில் இரண்டு சீனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிகள், வணிகப் பயிற்சியில் ஐந்து ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிகள் (பெண்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ளலாம்).

சம்பளம் : 1. கணக்கு சீனியர் இன்ஸ்ட்ரக்டர். ரூ. 400—15—475—20 575—25—650 மாதம் ஒன்றுக்கு.

2. வணிகப் பயிற்சி ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் : ரூ. 325—15—550 மாதம் ஒன்றுக்கு.

வயது : 1. கணக்கு சீனியர் இன்ஸ்ட்ரக்டர் : 1-7-1972-ல் 36 வயதிற்குக் குறைவாக

2. வணிகப் பயிற்சி ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர்கள் : 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக. அங்கஹீனம் உற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

தகுதிகள் : 1. கணக்கு சீனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிக்கு : கணக்கில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்படிப்புப் பட்டம். 2. வணிகப் பயிற்சி ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர் பதவிக்கு : 1. வணிகம் அல்லது பொருளாதாரத்தில், முதல் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் அல்லது 2. ஆர்ட்ஸ் பட்டத்துடன், அரசுத் தொழில் நுட்பத் தேர்வில், அயர் கிரேடு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகியவற்றில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

2. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு சபார்டினேட் சர்வீஸில், 4 கம்பிலர்ஸ் (**Compilors**) பதவிகள்.

சம்பளம் : 200—5—250—10—300 மாதம் ஒன்றுக்கு (சிறப்புச் சம்பளம் ரூ. 15).

வயது : தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதிவகுப்பினர் விசயத்தில் 1-7-1972-ல் 35 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். மற்றவர்கள் 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். அங்கஹீனமுற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும்.

தகுதிகள் : 1. குறைந்தபட்சப் பொதுக்கல்வித் தகுதி. 2. சர்வதேச கம்பியூடர்ஸ் மற்றும் டேபுலேடர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மற்றும் இதுபோன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில், "பன்ச்சிங் மற்றும் வெரிபிகேசன்" பயிற்சி முடித்திருக்க வேண்டும்.

3. தமிழ்நாடு வேளாண்மை சபார்டினேட் சர்வீஸில், வேளாண்மைத் துணை அலுவலர்கள் (**D.A.O.**) 250 பதவிகள்.

சம்பளம் : 375—15—495—20—575—25—650 மாதம் ஒன்றுக்கு. *வயது* : எம்.எஸ்சி. அல்லது பி.எச்டி. வேளாண்மைப்பட்டம் பெற்றிருப்பவர்கள் விசயத்தில் 1-7-1972-ல் 30 மற்றவர்கள் 1-7-1972-ல் 27 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும். *தகுதிகள்* : பி.எஸ்சி. வேளாண்மைப் பட்டம். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள் மணமாகாத மகள்கள், 1-1-1963-ல் அல்லது அதற்கு பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை, ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-4-1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள், 1-1-1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ. மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0.35 காசு நூல் அஞ்சல் வில்லை—0.05 காசு அகதிகள் நிவாரண நூல் அஞ்சல் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 45)

தமிழ்நாடு மருத்துவ சர்வீஸில், 463 உதவி மருத்துவர்கள் பணிக்கு நேரடி நியமனம் செய்ய, 18-3-1972 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(மொத்தம் 463 பதவிகளில் 74 பதவிகள், குறிப்பிட்ட சிறப்புப் பட்ட மேற் படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்கள், சிறப்புத் துறையில் எந்தக் கிராமப்புற மருத்துவ மனைகளிலும், குறைந்தது 5 வருட காலம் பணிபுரிய விரும்புபவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது).

மாநில அரசின் கீழ் தற்காலிகமாகப் பணிபுரிபவர்கள், மக்கள் நல்வாழ்வுப் பணி மற்றும் குடும்ப நலத்திட்ட இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை அவர்களுக்கு தங்கள் மனுக்களை 2-3-1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பவேண்டும்.

சம்பளம் : 525—25—600—30—690—35—900 மாதம் ஒன்றுக்குப் பட்டதாரிகளுக்கு. எந்த மருத்துவப் பாடத்திலாவது அங்கீகரிக்கப்பட்ட பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்களுக்கு, சம்பள விகிதத்தில் இரண்டு சிறப்பு இன்கிரிமெண்ட் பெற அனுமதிக்கப்படுவார்கள்.

வயது : 1-7-1972 அன்று 35 வயதுக்குக் குறைவாக.

குறிப்பு : 1. தமிழ்நாடு மருத்துவத் துறையில், தற்காலிகத் துணை மருத்துவர்களாகப் பணிபுரிபவர்கள் வயதைப் பற்றிக் கருதாமல் மனுச் செய்துகொள்ளலாம். 2. மருத்துவப் பட்டதாரிப் பெண்கள், மருத்துவக் கல்லூரிகளில் கிளினிகல் போதனைத் துறைகள் அல்லாதவற்றில் பணியாற்ற விரும்புகிறவர்களின் வயது விசயத்தில் சலுகை உண்டு.

தகுதி 1.—சென்னை மருத்துவப் பதிவுச் சட்டம், 1914-க்கு உட்பட்டு, பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சி பெற்றதாக இருத்தல் வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது எம். பி. பி. எஸ். பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது தமிழ் நாடு அரசு டி.எம் & எஸ். அல்லது அதற்குச் சமமான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், குறைந்தபட்சப் பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. அங்கஹீனமுற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டு வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்டப் பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1-1-1961-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-4-1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1-1-1964-ல் அல்லது அதற்குப்பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், இதர விவரங்களையும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0·35 காசு நூல் அஞ்சல் வில்லை 0·05 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 47)

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கூறப்பட்ட வேலைக்காக 10—2—1972 மாலை 3.00 மணிவரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம் கோயம்புத்தூர் அவர் தம் அலுவலகத்தில், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், சிறு பாசனப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு மேலும் ஒரு தளம் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை
கட்டுத் தொகை:—ரூ. 4,100

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் விலை வரைபடத்துடன் விற்பனைவரி உட்பட: ரூ. 10.35.

வேலை முடிக்க வேண்டிய காலம்:—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக்கோட்டம், கோயம்புத்தூரில் மேற்குறிப்பிடப் பட்ட தொகையைச் செலுத்தி 24—1—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

5—1—1972.
(த.14)

அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை

1-4-1972 முதல் 31-3-1973 வரையிலான காலத்திற்குச் சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை செவிலியர் (நர்ஸ்) களுக்கான பொது உணவு விடுதியை (மெஸ்) நடத்துவதற்குரிய அரக்கு ஒப்ப உறைகள் அடியில் கையொப்ப மிட்டுள்ளவரால் 1972 பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்ப விவரத்தினுடைய நிபந்தனைகள், ஒப்ப விவர நமூனாக்கள், வழங்கும் பொருட்களுடைய விவரங்கள் ஆகியவைகளை ஸ்டான்லி மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இவ்விவரங்களைப் பெறுவதற்கு ரூபாய் ஐந்தை(**XXIII Medical-J Miscellaneuos**) தலைப்பின் கீழும் மூன்றரை சதவிகித விற்பனை வரி 18 புதிய காசுகளை அதற்குரிய 5 சத விகிதம் விற்பனை மேல்வரி (**"XII—Sales Tax, Receipts under the Sales Tax Act—General Sales Tax"** என்ற தலைப்பின் கீழும் ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஏதாவதொரு ஸ்டேட்கிளை வங்கியிலோ அல்லது அரசாங்கத்தின் ஏதாவதொரு கருவூலத்திலோ செல்லுச்சீட்டு மூலம் செலுத்தி அந்த செல்லுச்சீட்டை அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

டாக்டர் எம். ஜி. பிரபு,
எம்.டி.,எப்.சி.சி.பி. (யு.எஸ்.ஏ.),
முதல்வர்.

சென்னை-1,
10-1-1972.

(த. 11)

பொள்ளாச்சி நகர மன்ற மின் துறை

பொள்ளாச்சி நகர மன்ற மின் துறைக்கு ஏ.சி.எஸ். ஆர் மின் கடத்திகள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகர மன்ற ஆணையர் அவர்களால் 14—2—1972 மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், பொருள்களின் விவரங்கள் வேண்டுவோர் நகர மன்ற மின் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 53)

பொள்ளாச்சி நகராட்சி மின் துறை

கீழ்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 1,500 காப்புத் தொகையுடன் நகராட்சி ஆணையர் அவர்களால் 25—2—1972-ம் தேதி மாலை 4 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், வரைப்படங்களுடன் கூடிய வேலை விவரங்கள் வேண்டுவோர் நகரமன்ற மின் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விவரம்

நகர எல்லைக்குள் மார்க்கட் ரோட்டில் திருவள்ளுவர் திடலிலிருந்து ரயில்வே பாலம் வரை சாலையின் இரு பக்கங்களிலும் பாதசார விளக்குகள் அமைத்தல்.

ஆணையர்.

(த. 54)

தொழில் நுட்பக் கல்வி இயக்கம்

(கட்டுமானப் பிரிவு),

கிண்டி, சென்னை-25.

வேலையின் பெயர்.—மதுரை, ஜூனியர் தொழில் நுட்பக் கல்விப் பள்ளிக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக, உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தொழில் நுட்பக் கல்விக் கோட்டத்தில் வேலையை மேற்கொள்வதற்குப் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால், மேற் கூறப் பட்ட அலுவலகத்திற்கு, 7—2—1972 அன்று மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் அதே நாள் மாலை 3.30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை.—ரூ. 5,375.
3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரை படங்களுடன்.—ரூ. 20.00 விற்பனை வரி உட்பட.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்.—8 மாதங்கள்.
5. ஒப்பந்தப் பத்திரங்கள், மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் நாள்.—27—1—1972 முதல் 5—2—1972 வரை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது). கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவிலோ, **"P.W. Remittances III Other Remittances"**

நிருவாகப் பொறியாளர், வட்டாரப் பொறியியல் கல்லூரிக் கோட்டம், திருச்சி அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரி தனிச் சலானில் கருவூலம் அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ, **"XI Sales tax-(b) Receipts under State Sales Tax Act General Sales Tax"** என்றதலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் சலான்கள் கொக்கப்பட்ட பின்னரே வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் சென்னை, தொழிற் நுட்பக்கல்வி இயக்கம், கட்டுமான பிரிவின் உரிய பிரிவில் பதிவு செய்யப்படாத ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப் படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, செட்யூல்டு வங்கியின் "தாம டிபாசிட்" ரசீது வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும், தேசிய சேமிப்புப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப் படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்கள், ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி,
சென்னை.

(த. 42)

SPIC

பெருமிதமிக்க வெற்றியை ஈட்டிய தீரமிகு வீரர்களுக்கு, வீர வணக்கம் செலுத்துவதில் இந்நாட்டு மக்களுடன் சேர்ந்து கொள்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்க உழவர் பெருமக்களுக்கு துணை நிற்க உறுதி பூணுவதன்மூலம், நாட்டுப் பாது காப்பின் இரண்டாவது அணியை வலுப்படுத்த வீர சபதம் ஏற்கிறது.

தென்னிந்தியாவின் இரசாயன உரத் தேவையில் சுமார் 25 சதவிகிதத்தை ஈடுகட்டக்கூடிய வகையில் போதுமான அளவு இரசாயன உரத்தை குறித்தக் காலத்திற்குள் உற்பத்தி செய்யும்.

கட்டுப்பாடற்ற அடிப்படையில் (Non Turnkey Basis) அந்நிய நிர்வாக மேற்பார்வை அல்லது தொழில் நுணுக்க அல்லது இதரக் கூட்டுறவு இன்றி ஆசியா மற்றும் ஐரோப்பாவிலேயே இத்துறையில் மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாக வடிவமைப்பு, கொள்முதல், உருவாக்கப் பணிகளையும், மேற்கொண்டு நிறைவேற்றி வருகிறது.

"SPIC GROWS TO SPAN THE NATION"

❋

Southern Petrochemical Industries Corporation Limited

MADRAS-14

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 9-2-1972 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலை விவரமும்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1 திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி.மீ. 6·5 முதல் 8·0 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல்.	3,595
2 திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி. மீ. 8·0 முதல் 9·6 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல்.	3,170
3 திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்செட்டி சாலையில் கி.மீ. 9·6 முதல் 11·4 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல்.	4,470

ஒப்பந்தங்கள் 9-2-1972 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரை படங்கள் முதலியனவற்றைக் கோட்டப்பொறியாளர், சைதை அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25·88 கட்டி 31-1-1972 முதல் 8-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சைதை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) சைதை பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை)
சென்னை வட்டம்,
சென்னை-25.

12-1-1972.

(த. 68)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம் சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசியநெடுஞ்சாலை வட்டமேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 9-2-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் :—

வரிசை எண்.	வேலையின் விவரம்	கோட்டம்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1	தேசிய நெடுஞ்சாலை எண் 7, சேலம், திண்டுக்கல் பிரிவில் கி.மீ. 255/0 முதல் 278/6 வரையில் சாலையில் ஜியோமிதி மேம்பாடு செய்தல்.	சேலம் ..	6,925

ஒப்பந்தப் புள்ளிகள் 9-2-1972 அன்றே 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனாக்கள், வரை படங்கள் முதலியவற்றை சேலம் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் (சிறப்புக்கோட்டம்), சேலம் அலுவலகத்தில் 3-2-1972 முதல் 8-2-1972 முடிய விற்பனைவரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக்கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும், ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த. 69)

செங்கை மாவட்டம்

பல துறைமுகங்களிலிருந்தும், பாக்ட் (**FACT**) உத்தியோக மண்டல், கேரளாவிலிருந்தும் செங்கற்பட்டு ஜில்லாவிற்கு சாலையின் மூலம் 31-3-1972 வரை இரசாயன உரங்கள் ஏற்றிச் செல்ல முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. நல்ல பொருளாதார நிலையில் மற்றும் பல ஆண்டுகளாக இத்துறையில் பணியாற்றுகின்ற போக்குவரத்துத் துறை ஒப்பந்ததாரர்கள் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு கட்டணம் என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

இதனைப் பற்றிய முழு விவரங்களை செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி அலுவலர் (வடக்கு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம்-1 அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் காஞ்சிபுரத்தில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளருக்கு 21-2-1972 அன்று மாலை 3 மணிக்கு அல்லது அதற்கு முன்பு வந்து சேரவேண்டும். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி உறையின் மேல் **"Tenders-Road Movement of Chemical fertilisers"** என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

ஆர். ஏ. சீதாராமதாஸ்,
மாவட்ட ஆட்சித் தலைவர்

(த. 71)

ஈரோடு நகராட்சி

ஈரோடு நகராட்சி பொது நலத்துறை உந்து எம்.டி.இ. 9041-க்கு தகுதிச் சான்றிதழ் பெற வேண்டிய புதிய கருவிகள் பொருத்தி பழுதுபார்த்துக் கொடுக்க 11-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும்.

பழுதுபார்க்க வேண்டிய உந்துவை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் காணலாம். இதர விவரங்களுக்கு நகராட்சி நல அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

11-1-1972.
(த. 64)

உதகை நகராட்சி

1972-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் காந்திநகரிலுள்ள பொதுக் குழாய்களைப் பழுதுபார்ப்பதற்கும் மாற்றுவதற்கும் ஜி.ஐ. பைப்புகளும் உபகரணங்களும் விநியோகம் செய்வதற்குறிய ஒப்பந்தப் புள்ளிகளை உதகை நகராட்சி ஆணையர் அவர்களால் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும், நிபந்தனைகளும், 11-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 4-12 நகராட்சி கஜானாவில் செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நகராட்சி பொறியர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்,
உதக மண்டலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
உதகமண்டலம்,
10-1-1972.
(த. 65)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசிய நெடுஞ்சாலை வேலைகள்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 9—2—1972 புதன் கிழமை அன்று பிற்பகல் 3-30 மணிவரை (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

எண்ணும், வேலையின் பெயரும்.	பிணைவைப்புத் தொகை.	ஒப்பந்த நமூனா கிடைக்கும் இடம்.
	ரூபாய்.	
1 தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கி.மீ 278/6 முதல் கி.மீ. 345 வரை சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்தும் வேலை.	82,300	கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, திருச்சி-II கோட்டம்.
2 தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் கி.மீ. 284/6 (மைல் 175/8-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	6,000	டை
3 தொண்டி—சுந்தரபாண்டியபட்டினம் சாலையில் கி.மீ. 14/8-ல் பாலம் ஒன்று கட்டுதல் ..	9,400	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி-1, கோட்டம்.
4 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 37/6—55/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	32,100	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2.
5 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 55/0—65/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	24,800	டை
6 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 65/0 77/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	31,500	டை
7 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 77/0—88/4 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	29,100	டை
8 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ.95/0—105/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	25,900	டை
9 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 105/0—115/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	30,600	டை
10 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 115/0—125/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	27,800	டை
11 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 125/0—134/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	19,000	டை
12 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 134/0—146/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,300	டை
13 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 170/0—183/0 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	26,500	டை
14 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 183/0—195/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	36,200	டை
15 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 195/0—203/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	21,400	டை
16 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 203/0—213/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	20,200	டை
17 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 213/0—224/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,700	டை
18 மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 224/0—231/6 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	21,700	டை
19 சேலம்-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை 7 கி.மீ. 345/0—355/0 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	31,000	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சி-2.
20 தேசிய நெடுஞ்சாலை எண் 45 கி.மீ. 403/0—417/250 சாலையை அகலப்படுத்தி விரிவு படுத்துதல்.	33,700	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி-2

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2, கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி-1, மேலும் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), திருச்சி கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 2—2—1972 முதல் 8—2—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயபாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட தனி கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின் வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு ஈயாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசிய நெடுஞ்சாலை),

மதுரை-2.

(த. 57)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, 15—2—1972 அன்று மாலை 3.00 மணிவரை, மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், அவர்களால் 25—1, 3-வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்-12 என்ற முகவரியிலுள்ள அவர்தம் அலுவலகத்திற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4.00 மணிக்கு, அச்சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும்.

எண்.	வடிவம்.	வேலையின் விவரம்.	கட்டுத் தொகை.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.	ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் காலம்.
1	மொத்தத் தொகை.	பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்கு சி. டபள்யூ. எஸ். எஸ்.-5-ஆம் கட்டம் கே. சி. பாளையம் எல். எல். பகுதிக்காக எல். டபள்யூ. எல்,எம்,டபல்யூ. எல், சராசரி ஜி. எல்.(பிளஸ்) ஆகியவைகள் முறையே 290·36 (பிளஸ்) 292·80 (பிளஸ்) 281·21 மீட்டர்களில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. உயர் மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல்.	ரூ. 1,250	6 மாதங்கள்	ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட)	12—1—1972 முதல் 14—2—1972 வரை.
2	மொத்தத் தொகை	பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்கு சி. டபள்யூ. எஸ். எஸ்.-5ஆம் கட்டம் பெருந்துறை எல். எல். பகுதிக்காக, எல். டபள்யூ. எல். எம். டபள்யூ. எல். சராசரி ஜி. எல். (பிளஸ்) 290·36, (பிளஸ்) 292·80, (பிளஸ்) 281·21 மீட்டர்களில் 1·50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. உயர்மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல்.	940	6 மாதங்கள்	10·35 (விற்பனை வரி உட்பட)	12—1—1972 முதல் 14—2—1972 வரை.
3	மொத்தத் தொகை.	பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்காக சி. டபள்யூ. எஸ். எஸ். 5-ஆம் கட்டம் பெருந்துறை எச். எல். பகுதிக்காக, எல். டபள்யூ. எல். எம். டபள்யூ.எல். (பிளஸ்) 300.43 (பிளஸ்) 302.87 (பிளஸ்)286.00 மீட்டர்களில் 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி.சி. உயர்மட்ட நீர்த்தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல்.	1,000	6 மாதங்கள்	10.35 (விற்பனை வரி உட்பட)	12—1—1972 முதல் 14—2—1972 வரை
4	மொத்தத் தொகை.	பெருந்துறை, கே. சி. பாளையம் ஊராட்சிகளுக்காக சி. டபள்யூ. எஸ். எஸ். 5-ஆம் கட்டம், கே. சி. பாளையத்திற்காக, எல். டபள்யூ. எல். எம். டபள்யூ. எல். (பிளஸ்) 300.43 (பிளஸ்) 302.87 (பிளஸ்) 286.00 மீட்டர்களில் 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர். சி. சி. உயர் மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புக் கொடுத்தல்.	1,000	6 மாதங்கள்	10,35 (விற்பனை வரி உட்பட)	12—1—1972 முதல் 14-2-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 18, சாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி, அவர்தம் அலுவலகத்தில், ஒப்பந்தப் பத்திரங்களின் விலையை நேரில் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை டி. டி. வடிவத்தில் இருக்கவேண்டும் நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியின் காரண்டியும், நிருவாகப்பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், ஈரோடு - 3, அவர்கள் பெறும் வகையில் அனுப்பினால் ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகைக் கருவூலத்தில் " P. W. III O. R. Charges adjusted to the credit of Executive Engineer, P. H. Engg. division, Erode" என்ற தலைப்பில் செலுத்தலாம். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், கோயம்புத்தூர் அவர்கள், ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும், எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்

எம். துரைராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர், (பி. எச்.).,
கோயம்புத்தூர்—12.

(த.16)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கூறப்பட்ட வேலைக்காக 9-2-1972 மாலை 3-00 மணி வரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 31-1-1972 முதல் 7-2-1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	வேலை முடிக்கவேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரி சர்சார்ஜ் உள்பட.
1. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை கிளாகோமா மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டுதல்.	மொத்தத் தொகை.	ரூ. 2,300	6 மாதங்கள்.	ரூ. 20·75
2. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை ரன்னிங் ஆர்த்தோப்டிக் பிரிவிற்குக் கட்டடம் கட்டுதல்.	மொத்தத் தொகை.	2,000	6 மாதங்கள்.	ரூ. 20·75

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவிலோ, 'P.W. Remittances III—O.R, என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரைக் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கிலும், ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களுக்கும் விற்பனை வரி சர்சார்ஜ் உட்பட ரூ. 0.75-ஐ "XII Sales Tax (d) Miscellaneous" என்ற தலைப்பிலும் ஒரே சலானில் செலுத்தி, செல்லுச் சீட்டைக் கொடுத்த பின்னர் மட்டுமே ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, "கால் டெபாசிட்" ரசீது வடிவிலோ, அல்லது ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டாகவே அரசு செக்குரிட்டீஸ், நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வங்கிகளின் காரண்டியும் கூட ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும், தேசிய சேமிப்புப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சி. தேசிக சங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
மதுரை மாவட்டம்.

(த.9)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

நேரடி நியமனத்தின் மூலம், 14 மாவட்ட முன்சீப்கள் நியமனம் செய்ய, இந்திய உயர்நீதி மன்றம் ஒன்றில் பயிற்சி செய்யும் வழக்கறிஞர்களிடமிருந்து அல்லது இந்திய யூனியன் ஸ்டேட் பார் கவுன்சில் மற்றும் இந்திய அரசின் பணியில் இருப்பவர்கள் அல்லது இந்தியாவின் ஒரு மாநிலத்தில் பயிற்சியிலிருப்பவர்கள் அந்தப் பணிக்குத் தங்கள் முதல் நியமனத்திலிருந்து 4-12-1971 அன்று 5 வருட காலத்திற்கு மேற்படாத பணியில் (சர்வீஸ்) உள்ளவர், 24-2-1972 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்:—ரூ. 575-25-600-40-1000 மாதம் ஒன்றுக்கு.

தகுதி 1:—பாரில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழக அல்லது நிறுவனம் ஒன்றில் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். அல்லது ஆனர்ஸ் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

வயது:—1-7-1972 அன்று 32 வயதிற்குக் குறைவாக (தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது.) இருக்கவேண்டும்.

தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்டப் பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1-1-1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர்இன்ஸ்ட்ரக்டராகப்பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1-4-1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள், 1-1-1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0·35 காசு நூல் அஞ்சல் வில்லை 0·05 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த.48)

ஒப்பந்தப் புள்ளி

குடிசைப் பகுதி மாற்றும் வாரியம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் இராதாகிருஷ்ணபுரம் என்கிற இடத்தில் ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 3—2—1972 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

வரிசை எண்,	பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் தோராய மதிப்பு.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித் தரமாட்டாது)
		32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் ஏ 2, ஏ 3, ஏ 4	5,00,000	7,500	ரூ. 15 மற்றும் விற்பனை வரி.
		24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி 1, பி 2	2,70,000	4,050	ரூ. 15 மற்றும் விற்பனை வரி.

ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 17—2—1972 முதல் 2—2—1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 3—3—1972 அன்று பிற்பகல் 3–15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(90)

தூத்துக்குடி நகராட்சி

இந்நகர் ஜெயராஜ் ரோட்டில் புதிதாக ஆர்ஜிதம் செய்த பகுதியை விரிவுபடுத்தும் வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—2—1972அன்று மாலை 4 மணிவரை ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 4.30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்கு பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். இவ்வேலைக்கு முன்வைப்புத் தொகை ரூ. 300.

கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.பி.இ.,
பொறியர்.

தூத்துக்குடி,
12—1—1972.
(த.91)

வேலை வாய்ப்பு

வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர்-3

விளம்பர எண்—2/72

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் கீழ்க்கண்ட பதவிகளுக்கு, மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. அக்ரோனோமிஸ்ட்(ஐ.சி.ஏ.ஆ.ர் திட்டம் தற்காலிகம்)—இரண்டு தலைமையகங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை.
2. வேளாண்மைப்பொறியாளர் (ஐ.சி.ஏ.ஆர். திட்டம் தற்காலிகம்) ஒன்று—தலைமையகம் மதுரை.
3. உதவிப் பொறியாளர் (நிரந்தரம்) (சிவில் ஒர்க்ஸ்)—ஒன்று —தலைமையகம் மதுரை.

பதவிகளுக்குக் குறிப்பிடப்பட்ட தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன -

1. அக்ரோனோமிஸ்ட்.

முக்கிய தகுதிகள்:—

1. அக்ரோனோமி மேற்படிப்புப் பட்டம் அல்லது தொடர்புள்ள டிசிப்லேன் அல்லது பீல்டு, அல்லது அதற்குச் சமமான பட்ட மேற்படிப்புத் தகுதிகள்.

2. 5 ஆண்டுகள் அக்ரோனோமி ஆராய்ச்சி செய்ததை விளக்கும் வெளியீட்டுகளுடன். (பட்டமேற்படிப்பு அளவில் போதனை அனுபவம் உட்பட)

விரும்பத்தக்கத் தகுதிகள் :—

1. டாக்டரேட் பட்டம்.
2. வெளிநாட்டுப் புதிய மொழிகளில் அறிவு.
3. அக்ரோனோமியல் புதிய முறையில் ஆய்வு அறிவு

சம்பள விகிதம் 800—40—1,000—50—1,250 + அலவன்ஸ்

2. வேளாண்மைப்பொறியாளர் : 1. சிவில் அல்லது வேளாண்மைப் பொறியியலில் மேற்படிப்புப் பட்டம் அல்லது பாசனம் மற்றும் நீர் உபயோகத்தில் சிறப்புத் தொழில் நுணுக்க மேற்படிப்பு அல்லது அதற்குச் சமமான பட்ட மேற்படிப்புத் தகுதிகள்.

2. 5 ஆண்டுகள் பாசனம், நீர் உபயோகத்தில் ஆராய்ச்சி செய்ததை விளக்கும் வெளியீட்டுக்களுடன்.

விரும்பத்தக்க தகுதிகள்.

1.சிவில் அல்லது வேளாண்மைப் பொறியியலில் டாக்டரேட் பட்டம் அல்லது பாசனம் நீர் உபயோகத்தில் சிறப்புத் தொழில் நுணுக்கம்

2. வெளி நாட்டுப் புது மொழி அறிவு.

சம்பள விகிதம்.—ரூ. 800—40—1000—50—1250 + அலவன்ஸ்

3. உதவிப் பொறியாளர்.—(சிவில் ஒர்க்ஸ்).

1. சிவில் பொறியியலில், முதல் அல்லது உயர் இரண்டாம் வகுப்புப் பட்டம்.

2. சிவில் அல்லது ஸ்ட்ரக்சுரல் பொறியியலில் முதல் அல்லது உயர் இரண்டாம் வகுப்பு மேற்படிப்புப் பட்டம்.

3. பெரிய கட்டடம் கட்டுவதில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

4. குடியிருப்புக் காலனிகளில், அமைப்பு மற்றும் நிருவாகம், தொழில் அல்லது மற்றச் சம்பந்தப்பட்ட வழிகளில் அனுபவம்.

சம்பள விகிதம்.—ரூ. 550—25—600—35—950 + அலவன்ஸ்

குறிப்பு.—1. தேவையான இடங்களில், வேறு காரணங்களினால் தெரிந்தெடுக்கத் தகுதியானவர்கள் என்று கருதப்படுபவர்களுக்கு, தெரிந்தெடுக்கும் குழு குறைந்த பட்ச தேவைகள், தகுதிகளைத் தளர்த்தும்.

2. குறிப்பிடப்பட்ட மனு வடிவங்கள், இதர விவரங்கள், கிராஸ் செய்யப்பட்ட அஞ்சல் ஆணை (Postal Order) ரூ. 2, கம்ட்ரோலர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவர்கள் பெறும் வகையில் விளம்பர எண், தேதி குறிப்பிட்டு லாலி ரோடு அஞ்சலகத்தில் செலுத்தி, பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்–3 அவர்களுக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

3. முழுமையான மனுக்கள், பல்கலைக் கழக அலுவலகத்தில் 21—2—1972 வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வி. டி. துரைராஜ்,
பதிவாளர்.

(த.58)

ஒப்பந்தப் புள்ளி

அரசு பொது மருத்துவமனை

சென்னை-3

இந்த மாநிலத்தின் மருத்துவ மனைகளுக்கு, ரேடியோகிராபிக் மற்றும் எலக்ட்ரோ–கார்டியோ கிராபிக் நோர்வுக்கு, நாமினல் பதிவேடுகள் அச்சிட்டு வழங்குவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18—2—1972 வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், " மேற்பார்வையாளர், அரசு பொது மருத்துவ மனை, சென்னை–3" அவர்களுக்கு முத்திரையிடப்பட்ட உறையில் " மருத்துவ மனைகளுக்கு நாமினல் பதிவேடுகள் அச்சிட்டு வழங்க 18—2—1972–ஆம் தேதி ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

விவரம், காலம், நிபந்தனைகள், இந்த மருத்துவ மனையின் எழுது பொருள் துறையில், எல்லா வேலை நாட்களிலும் காலை 10–30 மணி முதல் மாலை 5–00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர். ஹரிராஜன்,
மேற்பார்வையாளர்.

(த.74)

அரக்கோணம் நகராட்சி

இந்நகராட்சி உபயோகத்திற்குத்தேவையான 12·5 லிட்டர் கொள்ளளவு மருந்து கொண்ட தெளிப்பான்கள் (Hand Compression Sprayers) வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 11–2–1972 மாலை 4·00 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே 4·15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மேலும் விவரங்களும் ஒப்பந்தப் புள்ளி நமூனாக்களும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில், அலுவலக நேரத்தில் ரூ. 1.00 (விற்பனைவரிதனி) செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

க. ரா. குட்டியப்பன்,
ஆணையாளர்.

நகராட்சி அலுவலகம்,
அரக்கோணம்.
நாள் ; 13–1–1972.
(த.66)

பொதுப்பணித்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கூறப்பட்ட வேலைக்காக, 15–2–1972 மாலை 3·00 மணி வரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் அவர்தம் அலுவலகத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர் : திருப்பூரில் பெண்களுக்கு விடுதி ஒன்று கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 5,600.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரி உட்பட வரைபடங்களுடன் ரூ. 10·35.

வேலை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேலாளர், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூரில் 28–1–1972 முதல் எல்லா வேலை நாட்களிலும், அலுவலக நேரத்தில் மேற் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திப் பெறலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
கோயம்புத்தூர், நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்–1.

(த. 60)

தமிழ்நாடு மாநில போக்குவரத்துத் துறை

ஒரே மாதிரி அல்லாத பாரங்களும், பதிவேடுகளும், அச்சிட்டு வழங்குவதற்கு, 6–12–1972 மாலை 3·00 மணிவரை கீழே கையொப்பமிட்டவருக்கு விலை விவரங்கள் (Quotations) வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த விளக்க நிபந்தனைகள், மற்ற விவரங்கள், உதவி இயக்குநர் (நிர்வாகம்), தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறை அவர்களிடம் கட்டணமின்றிப் பெறலாம்.

(த. 59)

இயக்குநர்.

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை–1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16–2–72 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.
1	தேசிய நெடுஞ்சாலை எண். 45 சென்னை, திருச்சி, திண்டுக்கல் சாலை கி.மீ. 181—8ல் சிறு பாலம் திரும்பக் கட்டுதல்.	ரூ. 1,030

ஒப்பந்தப் புள்ளிகள் 16–2–1972 அன்றே மாலை 3·15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனாக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II சென்னை (கிண்டி) அலுவலகத்தில் 9–2–1972 முதல் 15–2–1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் சைதாப்பேட்டை, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலுள்ளும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் II சைதாப்பேட்டை பெயரில் செலுத்திச்செல்லு சீட்டையாவது அல்லது வங்கிப் பொறுப்புறுதியையாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.
(நெ)

(த.எக்ஸ்)

ஏல விற்பனை

வனத்துறை

7–2–1972–ம் தேதி காலை 10 மணியிலிருந்து, போலாம்பட்டி சரகம், இருட்டுப்பள்ளம் சரக அலுவலகத்தில், மத்திய கோவை மாவட்ட வன அலுவலகராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலராலோ கீழ்க்காணும் தேக்கங்கால்கள், ஒவ்வொரு அயிட்டமும், தனித்தனியாக ஏலம் விடப்படும்.

அளவு.	எண்ணிக்கை.
1943 கல் கொத்தி	
1. 18"—24"	238
2. 24"—36"	336
1943 வெள்ளப்பதி—	
1. 18"—24"	398
2. 24"—36"	672
3. 36"–க்கு மேல்	125
1960 வெள்ளப்பதி	
1. 18" குறைவாக	1,850
2. 18"– 24"	200
1961 வெள்ளப்பதி	
1. 18" குறைவாக	3,500
2. 18"—24"	1,500
1966 வெள்ளப்பதி	
1. 18" குறைவாக	8,000
2. 18" குறைவாக (30 எக்கர் பிட்)	5,000

மற்ற விவரங்களுக்கு, மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை பிரிவு, கோவை–18 அல்லது வனச்சரக அலுவலர், போலாம்பட்டி சரகம், இருட்டுப்பள்ளத்திற்கோ எழுதிப் பெறவும்.

எம். ஏ. அப்துல்கரீம்,
மாவட்ட வன அலுவலர்,
மத்திய கோவை.

(த·67)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, விழுப்புரம்
கோட்டம், விழுப்புரம்.

1972–73ம் ஆண்டிற்கான வருடாந்திர சாலை பராமரிப்பு வேலைக்கு.

தமிழக மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியாளர் பணித்துறை), விழுப்புரம் கோட்டம், விழுப்புரம் அவர்களால் 1972–73-ஆம் ஆண்டு அரசாங்கச் சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள், கோட்டப்பொறியாளர் அவர்களின் அலுவலகத்தில் 9—2—1972-ஆம் தேதி அலுவலக நேரம் பிற்பகல் 2-00 மணி (இரண்டு மணி) வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 2-05 மணிக்கு (இரண்டு மணி ஐந்து நிமிடம்) ஒப்பந்தாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள் நமூனாக்கள் முதலியன மேற்படியார் அலுவலக மேலாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களுக்கு ரூ. 3-11 (ரூபாய் மூன்றும் காசு பதினொன்றும்) விற்பனைவரி உட்பட செலுத்தி (இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது) 1—2—1972 தேதி முதல் 8—2—1972–ஆம் தேதி வரை அலுவலக நேரங்களில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

முன்வைப்புத் தொகையை விழுப்புரம் கோட்டப் பொறியாளர் (நெ.) அவர்களின் பெயருக்கு " வருவாய் வைப்புத் தொகை " எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் செலுத்தி, செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். செல்லுச் சீட்டு இன்றிவரும் ஒப்பந்தப் பத்திரங்கள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் உண்டான வேலை விவரங்கள் வைப்புத் தொகை விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அலுவலகங்களிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் 1—2—1972லிருந்து விளம்பரம் செய்யப்படும்.

ஆ. ஆண்டியப்பன்,
கோட்டப் பொறியாளர் (நெ.).

விழுப்புரம்,
13—1— 972.
(த. 84)

மறு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் ஆயக்கட்டுதாரர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் 16—2—72ம் தேதி மாலை 4 மணி வரை அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்	முதுகுளத்தூர் வட்டம் பரளை ஆற்றின் குறுக்கே அணை கட்டி கீழத்தூவல் கிராமத்திற்கு ...
ஒப்பந்த வகை	கே. 2.
கட்டுத் தொகை	ரூ. 7,290.
ஒப்பந்தப்புள்ளி விலை பிளான்கள் உள்பட.	ரூ. 20-70.
வேலை முடிக்கவேண்டிய காலம்	12 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி விலையான ரூ. 20 " பி.டபிள்யூ.டி. 111 ஒ. ஆர். " என்ற கணக்குத் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொ. ப. து. சிவகங்கை அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கான ரூ. 0-70 பைசாவை " 12 விற்பனை வரி " என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தி ரசீதுகளைத் தனித்தனியாக அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (பொ.ப.து.) இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை அலுவலகத்தில் 7—2—1972 முதல் 14—2—72 வரை விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 14—2—1972 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்கள், அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எவ்விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இவ்வேலையை எடுத்துக் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமான வரி, விற்பனை வரி முதலியவைகளைச் செலுத்தியதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும் கட்டுத்தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக் கொடுக்காமலோ இருந்தால் அவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விதிகள் இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி எண் ந. க. 31136/71வ/2 நாள் 17—11—1971ல் உள்ளபடி.

ரெ. ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.85)

வேலை வாய்ப்பு

மருத்துவ சர்வீஸ்

1—7—1971 அன்று 35 வயது நிரம்பப் பெறாத பி.ஐ.எம். (சித்தா) BIM, (siddha) பட்டதாரிகளிடமிருந்து தமிழ்நாடு அரசு, சித்த மருத்துவ மனைகளில், தமிழ்நாடு மருத்துவ சர்வீஸ், பிரிவு III, இந்திய மருத்துவப் பிரிவின் கீழ், தற்காலிக உதவி மருத்துவ அதிகாரி உதவி விரிவுரையாளர் வேலைக்காக, சம்பள விகிதம் 400—15—475—20—575—25—650 மேலும் நடைமுறைப்படிகள் அடிப்படையில் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

இறுவரை தேர்வுபெற்று, பயிற்சிக் காலம் முடித்து வேலை இல்லாமல் இருக்கும் (இவ்வலுவலகத்தில் உள்ள பட்டியலின்படி) பி.ஐ.எம். பட்டதாரிகளுக்கு மனுக்களும், விதிமுறைகளும் அனுப்பப்படும். மனுக்களைப் பூர்த்தி செய்து, இந்திய மருத்துவ இயக்குநர், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை, அரும்பாக்கம், சென்னை-29 என்ற முகவரிக்கு 15—2—1972 மாலை 5 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்படல் வேண்டும்.

மனுக்களை இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளுதல் நபர்களுடைய பொறுப்பாகும்.

டாக்டர் எஸ். ஏ. சுபான்,
இந்திய மருத்துவ இயக்குநர்.

(த .86)

ஏல விற்பனை

கோயம்புத்தூர் நகராட்சி

1972–73–ம் ஆண்டில் கோவை நகராட்சிக்குச்சொந்தமான மார்க்கெட்டுகள் வண்டிப்பேட்டைகள், லாரிப்பேட்டை, அறுவை மனைகளிலிருந்து கட்டணம் வசூல் செய்யும் உரிமை சாக்கடைத் திட்ட பூமியில் புல் அறுவடை செய்து கொள்ளும் உரிமை மற்றும் இதர உரிமைகளும் நகராட்சி அலுவலகத்தில் 17—2—1972–ம் தேதி காலை 10-30 மணி முதல் ஏலம் விடப்படும்.

ஏல நிபந்தனைகள் அடங்கிய அட்டவணை ரூ.2-00 நகராட்சி கஜானாவில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஏலம் கேட்பவர்கள் ஏலம் கூறு முன் சொத்து மதிப்பு வில்லங்கச் சான்றிதழ்களைக் கொண்டு வர வேண்டும். தவறினால் ஏலம் கோறுபவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் கட்டுத் தொகைகளை இரட்டிப்பாகக் கட்டி ஏலம் கேட்க வேண்டும்.

ஆணையர்.

(த. 75)

திருத்தம்

தமிழரசு 16—1—1972 இதழின் 81–ஆம் பக்கத்தில் அச்சாகியுள்ள மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோகச் சங்கத்தின் விளம்பரத்தில், "ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குரிய கடைசி நாள் 31—1—1972" என்றிருப்பதற்குப் பதிலாக 15—2—1972 என்று வாசித்துக்கொள்ளவும்.

ஒப்பந்தப் புள்ளிப் படிவம் மேற்சொன்ன சங்கத்திலேயே கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளி

கால்நடைத் தீவனம்

தமிழ்நாடு ஆளுநருக்காக ஓசூர் மாவட்டக் கால்நடைப்பண்ணை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் 10—2—1972 அன்று 4.00 மணி வரையில் மேற்படி பண்ணைக்கு இரண்டு மாதங்களுக்கான கால்நடைத் தீவனங்களுக்கு உரிய முத்திரையிடப்பட்ட விலை விவரங்கள் (கொட்டேசன்கள்) 10—2—1972 அன்று மாலை 4–00 மணிக்குமேல் குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளரால் திறக்கப்படும்.

நிபந்தனை முதலானவை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

சோ. சேதுராமன்,
குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன்
கண்காணிப்பாளர் மாவட்டக் கால்நடை பண்ணை,
ஓசூர்.

(த. 78)

பவானிசாகர் நகரியம்

பவானிசாகர்

கோவை (மாவட்டம்)

மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், பவானிசாகர் நிர்வாக அதிகாரி அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால், 11—2—1972 மாலை 4—00 மணி முடிய சில மின்சார இணைப்பு சம்பந்தப்பட்ட சாமான்களை, விநியோகம் செய்வதற்குப் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளி அன்று 4–30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விண்ணப்பம் மூலம் அல்லது நேரில் தெரிந்து கொள்ளலாம்.

பவானிசாகர்,
17–1–1972.
(த. 79)

எஸ். ராமசாமி,
நிர்வாக அதிகாரி.

தூத்துக்குடி நகராட்சி

கீழ்கண்ட வேலைகளுக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 15—2—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4–30 மணிக்குத் திறக்கப்படும். நகர மன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்குப் பொறியாளர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

வேலை விவரம்.	கட்டுத் தொகை.
	ரூ.
1. தச்சர் தெருவில் சந்தை அமைக்க	
2. சிதம்பர நகரில் சந்தை அமைக்க ..	1,000
3. எஸ். எஸ். பிள்ளை தெரு சந்தை அபிவிருத்தி.	1,000
	125

கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.,பி.இ.,
பொறியர்.

தூத்துக்குடி,
8—1—1972.
(த. 80)

ஈரோடு நகராட்சி

இந்நகராட்சி குடிநீர் லாரி எம். டி. பி. 8576ஐப் பழுதுபார்க்க 15—2—1972 மாலை 4 மணிக்குள் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

13–1–1972.
(த. 81)

க. ஜனார்த்தனம்,
ஆணையர்.

ஈரோடு நகராட்சி

ஈரோடு நகராட்சிப் பொறியர் பிரிவு மில்லர் கலக்கியைப் பழுதுபட்ட உதிரிப் பாகங்களைப் புதுப்பித்துப் பழுது பார்த்துக் கொடுக்க 29—2—1972–ஆம் தேதி மாலை 4–00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பழுது பார்க்க வேண்டிய மில்லர் கலக்கியை அலுவலக நேரங்களில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் பார்வையிடலாம். மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

17–1–1972.
(த. 63)

எஸ். அமலோற்பவம்,
பொறியர் மற்றும் ஆணையர் ஒப்படை.

அம்பத்தூர் நகராட்சி

அம்பத்தூர் நகரிய நிர்வாக அதிகாரி அவர்களால் சாலை வேலைகளுக்கும் மற்ற இதர வேலைகளுக்கும் 11—2—1972 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாலை 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மற்ற விவரங்களுக்கு அம்பத்தூர் நகரிய அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் வந்து தெரிந்துகொள்ளலாம்.

(த. 62)

டி. எம். வெங்கட்டராமன்,
நிர்வாக அதிகாரி.

ஏல விற்பனை

உடுமலைப்பேட்டை நகராட்சி

1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்கண்ட நகராட்சி குத்தகைகளை 1—4—1972 முதல் 31—3—1973 வரை ஓராண்டுக்கு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியதையை நகராட்சி ஆணையரால் பகிரங்கமாய் ஏலத்தில் விடப்படும். குத்தகை சம்பந்தமாக மற்ற நிபந்தனைகள் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஏல விளம்பரப் பிரதி வேண்டுபவர்கள் அலுவலகத்தில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1. வாரச் சந்தைபேட்டையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை.

2. தினசரிச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை.

3. ஆடு வதை செய்யுமிடத்தில் (Slaughter House) வசூல் செய்யும் உரிமை.

4. வாரச் சந்தைப் பேட்டையில் சேரும் தென்னந்தடுக்கு, மட்டை வாழைக் கட்டைகளை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் உரிமை.

5 வாரச் சந்தைப்பேட்டையில் சேரும் சாணத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் உரிமை.

6. வாரச்சந்தைப் பேட்டையில் சேரும் குப்பைகள் மட்டும்.

7. நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களிலுள்ள புளிய மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமை.

8. தினசரிச் சந்தையிலுள்ள இரண்டு மீன் கடைகளை அனுபவிக்கும் உரிமை.

9. விளம்பர போர்டு அனுபவிக்கும் உரிமை.

10. பழனி பாதையிலுள்ள பொதுப் பேருந்து நிலையத்தில், சைவ அசைவ உணவு விடுதிகள், ஸ்டால்கள் மற்றும் பூக்கடை முதலியவற்றைக் குத்தகைக்கு அனுபவிக்கும் உரிமை.

(த. 76)

எஸ். ரத்னகிரி,
ஆணையர்.

கோவை நகராட்சி

எண் 8690/71/எ. 27

நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட கடைகளில் 1—4—1972 முதல் 31—3—1975 வரை 3 ஆண்டிற்கு வியாபாரம் செய்யும் உரிமையை 16—2—1972-ஆம் தேதி காலை 10–30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

திருச்சி ரோடு ..	
ஆர். எஸ். புரம்	1 முதல் 5 வரை
பட்டு நூல்கார சந்து	1 முதல் 11 வரை
.. ..	7 மட்டும்.

கட்ட வேண்டிய கட்டுத் தொகை ஒவ்வொரு கடைக்கும் ரூ. 250. மற்ற நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத்தெரிந்து கொள்ளவும்.

(த. 77)

ஆணையர்.

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு மருத்துவ சர்வீஸில் ஒதுக்கப்பட்டுள்ள 24 துணை மருத்துவர்கள் நியமனத்திற்கு, தேச நெருக்கடியின்போது பாதுகாப்புப் படையில் பணிபுரிந்தவர்களைக்கொண்டு நிரப்புவதற்கு, 18–3–1972 அன்று மாலை 5.00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(மாநில அரசின் கீழ் தற்காலிகமாகப் பணிபுரிபவர்கள், தங்கள் மனுக்களை, மக்கள் நல்வாழ்வுப் பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை, அவர்களுக்கு 2–3–1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.)

சம்பளம் : ரூ. 525–25–600–30–690–35–900 மாதம் ஒன்றுக்குப் பட்டதாரிகளுக்கு எந்த மருத்துவப் பாடத்திலாவது அங்கீகரிக்கப்பட்ட பட்டமேற் படிப்புத் தகுதி பெற்றிருப்பவர்களுக்கு, சம்பள விகிதத்தின் போது இரண்டு சிறப்பு இன்கிரிமெண்ட் பெற அனுமதிக்கப்படுவார்கள்.

வயது : 1–7–1972 அன்று 35 வயதுக்குக் குறைவாக.

குறிப்பு : மருத்துவப் பட்டதாரிப் பெண்கள், மருத்துவக் கல்லூரிகளில் க்ளினிக்கல் போதனைத் துறைகள் அல்லாதவற்றிலும் மற்றும் தற்காலிகத் துணை மருத்துவர்களாகவும் பணியாற்ற விரும்புபவர்களின் வயது விசயத்தில் சலுகை உண்டு.

தகுதி : 1. சென்னை மருத்துவப் பதிவுச் சட்டம், 1914–க்கு உட்பட்டு, பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

2. எந்தப் பல்கலைக் கழகத்திலாவது எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றிருக்கவேண்டும். அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது தமிழ்நாடு அரசு டி.எம்.எஸ். அல்லது அதற்குச் சமமான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச் சாதி வகுப்பினர், குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள பிறபட்ட வகுப்பினர் ஆகியோர் விசயத்தில் வயது வரம்பு இடையாது. தேச நெருக்கடியின்போது இராணுவத்தில் பணியாற்றியவரின், பணிக்கான உரிய காலம் வயது கணக்கிடும்போது கழித்துக் கொள்ளப்படும். அங்கஹீனமுற்றவர்கள் விசயத்தில் வயது வரம்பு 10 ஆண்டு வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லரின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1–1–1963–ல் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ரக்டர் அல்லது சார்ஜெண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. 1–1–1964–ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விசயத்திலும், இலங்கை பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை–2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ. மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0 35 காசு நூல் அஞ்சல் வில்லையும் 0.05 காசு அகதிகள் நிவாரண வில்லையும் (0.35 + 0·05 காசு) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பில் பொதுப் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர், கடலூர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 9—3—72 மாலை 3 மணி வரையில் மூடியஉறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுந்த வகுப்பில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில், உறையின் மேல் வேலையின் பெயர் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் தாலுக்கா, வி. மருதூரில் ஒரு துணை ஆய்வாளர், நான்கு தலைமைக் காவலர், இருபத்துமூன்று காவலர் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

1. ஒப்பந்த வகை	மொத்தத் தொகை (L.S.).
2. கட்டுத் தொகை (E.M.D.)	ரூ. 8,750.
3. ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை ..	ரூ. 20.
4. விற்பனை வரி	ரூ. 0-60 (அறுபது காசு மட்டும்).

5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 21—2—72 முதல் 7—3—72 வரை அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.
6. ஒப்பந்தப் புள்ளிகள் 9—3—1972 அன்று மாலை 4 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 20ஐ P.W.III O. R. என்ற கணக்குத் தலைப்பில் " நிர்வாகப் பொறியாளர் (பொ. ப.து.), விழுப்புரம் கோட்டம், விழுப்புரம் அவர்கள் கணக்கிலும்,விற்பனை வரிக்கான 0-60 காசை " XII Sales Tax (d) Miscellaneous-I General Sales Tax " என்ற கணக்குத் தலைப்பிலும் தமிழ்நாடு அரசினர் கஜானாவில், மேற்படி ரூபாய் 20-60ஐ ஒரே சலானில் தனித் தனிக் கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோரிவரும் மனுக்கள் பணம் கட்டியதற்கான அசல் சலானுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து. தென்னார்க்காடு வட்டம்,
கடலூர்-2.

(த. 83)

இறுதி விற்பனைப் பத்திரம் வழங்கல்

வீட்டுவசதி வாரியம்

முக்கிய அறிவிப்பு

பிளாட்டுகள் மற்றும் கட்டடங்களுக்கு

ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்ட, கீழ்க்கண்ட முன்னாள் சி.ஐ.டி. திட்டத்தில், வாடகை வீடு ஒதுக்கப்பட்டிருப்பவர்கள், தாமதமின்றி இறுதி விற்பனைப் பத்திரம் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1 செல்வன் லாட்ஜ்
2 மந்த வெளிப்பாக்கம்
3 சி.ஐ.டி. காலனி (மௌபரிஸ் ரோடு)
4 சி.ஐ.டி. நகர் (மாம்பலம் தெற்கு)
5 டிரஸ்ட்புரம்
6 வடக்கு சைதாப்பேட்டை
7 கீழ்பாக் கார்டன்
8 டிரஸ்ட் ஸ்கொயர்
9 டிரஸ்ட் பாக்கம்
10 சி.ஐ.டி. நகர் விஸ்தரிப்பு
11 மேற்கு சி.ஐ.டி. நகர்
12 கிழக்கு அபிராமபுரம்
13 ஆஸ்பிரன் கார்டன்

கீழ்க்கண்ட திட்டத்திற்கான இறுதி விற்பனைப் பத்திரங்கள் 31–3–1972–க்குப் பிறகு கொடுப்பதற்குத் தயாராக இருக்கும். சம்பந்தப்பட்ட யாவரும், அவைகளைத் தங்கள் வசதிக்கேற்ப எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1 புலியூர் பாகம்-3
2 நந்தனம் (விரிவு)
3 சித்தம்மா காலனி
4 சித்தம்மா விஸ்தரிப்பு
5 இராமகிருஷ்ண நகர் திட்டம்
6 டர்ன் பல்ஸ் ரோடு (நந்தனம்)

டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர்,
வீட்டு வசதி வாரியம்,
சென்னை–35.

(த. 28)

ஈரோடு நகராட்சி

1972-73-ஆம் ஆண்டிற்கு கீழே குறித்துள்ள பொருட்களை வழங்கவும், வேலைகள் செய்யவும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—2—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரை ஈரோடு நகராட்சி ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு, அன்று மாலை 3-30 மணிக்கு ஷை ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

அ. பொருள்கள் வழங்குதல் :—

வைக்கோல், பச்சை சோளத்தட்டு, பருத்தி விதை, பிண்ணாக்கு அரிசித் தவிடு, எழுது பொருள்கள், மண்ணெண்ணெய், பெட்ரோல், குரூடாயில், ஹைஸ்பீடு டீசல் ஆயில், ஸ்பிரிட், இன்ஜின் ஆயில், பிரேக் ஆயில், மோபில் ஆயில், கிரீஸ், அடுப்புக் கரி, சுட்ட சுண்ணாம்பு, மகப்பேறில்லங்களுக்குத் தேவையான ரொட்டி, பால், இட்லி, காபி உணவு மற்றும் நகராட்சித் துவக்கப்பள்ளி அரிசனப் பிள்ளைகளுக்குப் பகல் உணவு வழங்குதல், பன்றி, நாய் இவைகளுக்கு உணவு வழங்குதல்.

ஆ. வேலைகள் :—

அச்சு வேலைகள், மாடுகளுக்கு லாடம் அடித்தல், வண்டி பழுது பார்த்தல், வண்டி வாகனாதிகளுக்கு உரிம வில்லைகள் தயார் செய்து வழங்கல், வீடுகளுக்குக் கதவிலக்கம் போடுவதற்கும், குடிசைகளுக்குக் கதவு எண்கள் பொறித்த தகடுகள் வழங்கவும்.

கூடுதல் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
ஈரோடு,
19—1—72.
(த.97)

க. ஜனார்த்தனம்,
ஆணையர்.

தொழில் வணிகத் துறை

எண் : 2107/வி4/72.
சேப்பாக்கம், சென்னை-5.

(1) 60 மெசின்கள், (2) அலுவலக பர்னிச்சர் மற்றும் ரிகார்டுகள், தற்போதைய பணிக்கூடம், தொழில் நுட்ப பயிற்சி நிலைய அலுவலகம், கிண்டி, சென்னை-32லிருந்து புது கட்டடத்திற்கு எடுத்துச் செல்ல மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அப்ருவ் செய்யப்பட்ட போக்குவரத்து ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

முழு விவரங்கள், ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், மேற்பார்வையாளர், தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 என்ற முகவரிக்குக் கடிதம் எழுதி, போதுமான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்டு தன் முகவரி எழுதிய உறையை உடன் வைத்து அனுப்பியோ அல்லது நேரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் வணிகத் துணை இயக்குநர், (பொறியியல்) சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரிக்கு, ஒப்பந்தப் புள்ளி எண்ணைக் குறிப்பிட்டு 15—2—1972 மாலை 5-00 மணிக்கு முன்னர் வந்து சேருமாறு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

துணை இயக்குநர்,
(பொறியியல்),
தொழில் வணிக இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த. 82)

தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது)

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :—
150எ, அண்ணாசாலை,
தபால் பை எண். 5205,
சென்னை-2.

அரக்கோணம், கண்டினியஸ் உருக்கு வார்ப்படத் தொழில் நிலையத்திற்கு, ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் மைல்டு ஸ்டீல் ஸ்கிராப் வழங்குவதற்கு, 2—3—1972 மாலை 3-00 மணி வரை, குரூப் மெட்டீரியல்ஸ் மேலாளர், மேற்கண்ட அலுவலகம், அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, குரூப் மெட்டீரியல்ஸ் மேலாளர், அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால், அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், 1—2—1972 முதல், மேற்கண்ட அலுவலகத்தில், (**Corporation's Office**) செட் ஒன்றுக்கு ரூ. 105 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். (தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது).

மேலாளர்,
குரூப் மெட்டீரியல்ஸ்.

(த.87)

குடிநீர், வடிகால் வாரியம்

வீராணம் திட்டம்

வேலையின் பெயர் :—**வீராணம்** திட்டத்திற்குப் பம்பு செட்டுகள் வழங்குதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்ட பம்பு செட்டுகள் வழங்குவதற்குத் தனித்தலைமைப் பொறியாளர், (டபள்யூஎஸ்எஸ் & ஜிஐபி), சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் அவர்தம் அலுவலகத்தில் 7—2—1972 அன்று மாலை 3-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வரையறை விவரங்கள் :—

இனம் 1:—5 குதிரை சக்தி—போர்ட்டபிள் டீசல் இயக்க பம்பு செட்டுகள் ட்ராலி மீது அமைக்கப்பட்ட வகைகள்.

எண்ணிக்கை : 6.

இனம் 2:—5 குதிரை சக்தி மின்சார இயக்க சிங்கில் ஸ்டேஜ் பம்பு செட்டுகள் (**Flexibly coupled and mounted on a common base plate with suitable starter**) இந்த பம்பு செட் A. C. 3 **phase** 50 சைக்கில் 400/400 வோல்ட்ஸ் சப்ளை முறையில் இயங்கத் தக்கதாக இருக்க வேண்டும்.

எண்ணிக்கை : 3.

நிபந்தனைகள்.—1. பம்பு செட்டு எங்கு செய்யப்பட்டது, அளவு, திறன் மற்ற விளக்கங்கள் விளக்கமாக அறிவிப்பில் கொடுக்க வேண்டும்.

2. Ex. Stock விரும்பத்தக்கது.

3. கொடுக்கும் காலம் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். கண்டிப்பாக அதை மேற்கொள்ள வேண்டும்.

4. பம்புசெட் ரசீது பெற்று மற்றும் அவற்றை இயக்கிப் பரிசோதித்த பின்பே பணம் செலுத்தப்படும்.

5. ரசீது பெற்றதிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு பம்பு செட்டுகளுக்குக் காரண்டி கொடுக்கப்பட வேண்டும். காரண்டி கொடுக்கப்பட்ட காலத்தில், எந்தப் பொருளாவது குறைபாடாகத் தெரிந்தால், கட்டணமின்றி, வேலைக்குக் கட்டணமின்றி அப்புறப்படுத்திச் சரி செய்ய வேண்டும்.

6. ஒப்பந்தப் புள்ளிகள் " 7—2—1972 மாலை 3-00 மணிக்கு பம்பு செட்டுகள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் " என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

7. அரசுத் துறைகளுக்கு ஏற்ற வகையிலான விலையில், சேப்பாக்கம் ஸ்டோர்ஸ், சென்னை-5ல் வழங்குவது பற்றிக் குறிப்பிடப்பட வேண்டும்.

தனித் தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த.72)

மின் வாரியம்.

ஒப்பந்தப் புள்ளித் திருத்தம் எண். பி. 22—30 டன் டிராக்டர்கள் மற்றும் ட்ரெய்லர்கள்.

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தங்கள் பெறுவதற்கான நாள், 17–1–1972 காலை 12.00 மணியிலிருந்து 17–2–1972 காலை 12.00 மணிவரை நீட்டிக்கப் பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிகள் 17–2–1972 மாலை 3.00 மணிக்குத் திறக்கப்படும்.

157, அண்ணா சாலை,
சென்னை-2.

மேற்பார்வைப் பொறியாளர்,
வாங்குதல் மற்றும் ஸ்டோர்ஸ்.

(த. 43).

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 23–2–1972 மாலை 4 மணி வரை கீழ்கண்ட வேலைகளுக்காக மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
(1) ஏகாம்பர சன்னதித் தெரு—சாலைத் தெரு சந்திப்பில் பெட்ரோல் பங்க் எதிரில் மூன்று கடைகள் கட்ட.	14,500	725
(2) நகரமன்ற நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு உட்காரும் வசதிகள் செய்ய (ஒப்பந்தப் புள்ளிப்பத்திரத்தின் விலை ரூ. 3).	40,000	940
(3) ரயில்வே ரோடில் தற்போதுள்ள 10 கடைகளுக்குச் சேர்ந்தாற்போல் மேலும் 4 கடைகள் கட்ட.	14,700	735
(4) நகரமன்ற நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு மின்சார சாமான்கள் சப்ளை செய்ய.	22,000	600

காஞ்சிபுரம்,
19–1–1972.
(த. 93)

த. அ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்

எண் 11/M2/Tender VII/72.

வேலையின் பெயர்.—பணிமனைக்கான கருவிகள்—லேத்துகள், மின் அரைப்பான்கள், தூண்-துளைப்பான்கள் முதலியன—வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேலே குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் 18–2–1972 அன்று மாலை 3–00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில் மாலை 3–30 மணிக்கு, அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தபுள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. முன் வைப்புத் தொகை—ரூ. 1,000.
2. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—ரூ. 10.
   (விற்பனை வரி). ரூ. 40 பைசா).
3. வேலையை முடிக்கும் காலம்—2 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கப் பெறும் காலம் 18–1–1972-லிருந்து 15–2–1972 வரை.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச் சூழ்நிலையிலும் திருப்பி அளிக்க இயலாது). அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "**Public Works Remittances III other remittances**" என்று தலைப்பிடப்பட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை–17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித் தொகையானது செலுத்தப்பட்ட அதே செலானில் "**XII Sales Tax (b) receipts under State Sales Tax Act,General Sales Tax**" என்ற தலைப்பில், அரசாங்கக் கருவூலத்தில் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்தபின்பு தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர் அலுவலகம்.

(த. 95)

நிலநீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 12/M2/TenderVII/72.

வேலையின் பெயர்.—பணிமனைக் கருவிகள்—3 எண்ணிக்கை மின் உருக்கி இணைப்பான்—2 எண்ணிக்கை—எரிவாயு உருக்கி இணைப்பான்—2 எண்ணிக்கை வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநரால் மேலே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 21–2–1972 அன்று மாலை 3–00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள், நிலநீர்இயக்குநர் அவர்களால், மேற்கண்ட அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3–30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. முன்வைப்புத் தொகை—ரூ. 500·00.
2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 5·00.
   விற்பனை வரி—ரூ. 0·20 பை.
3. வேலை முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதங்கள்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கப் பெறும் காலம் 20–1–1972-லிருந்து 19–2–1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "**Public Works remittances III other remittances**" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை–17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித் தொகையானது செலுத்தப் பெறும் அதே சலானில் "**XII Sales Tax (b) receipts under State Sales Tax Act, General Sales Tax**" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர் அலுவலகம்.

10-எ, தண்டபாணி தெரு,
சென்னை–17.
(த. 96)

தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெண்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம்:—அரசாங்க தடிமண்டி, பேட்டை.
தேதியும் நேரமும் :—14–2–1972 முற்பகல் 9–00.
அளவு :—ஏறத்தாழ 200 கனமீட்டர்.

மேற்கொண்டு விவரங்கட்கு பேட்டையிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி தென்பிரிவு.

(த. 94)

கிருஷ்ணகிரி நகராட்சி

1972–73-ஆம் வருட இவ்வலுவலக வருடாந்திர தேவைக்கான ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளை செய்தல், அச்சடித்தல், முனிசிபல் குப்பை வண்டிகள், கக்கூஸ் வண்டிகள் முதலியன ரிப்பேர் செய்தல், மாடுகளுக்கு லாடம் அடித்தல், இந்நகராட்சியின் வண்டி மாடுகளுக்குத் தீனி வகைகள் அரிசி, தவிடு (பச்சை) அவரைப் பொட்டு, கடலைப் புண்ணாக்குச் சப்ளை செய்தல், வண்டி வாகனாதிகள், மிருகங்கள் ஆகியவற்றிற்கு வேண்டிய லைசென்ஸ் வில்லைகள் வழங்குதல், பொதுச் சுகாதாரத்திற்குத் தேவையான சுண்ணாம்புத்தூள் கூடை, முறம், துடைப்பங்கள் சப்ளை செய்தல் முதலியவற்றிற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை 21–2–1972 மாலை 4.00 மணி வரையில் நகராட்சி அலுவலகத்தில் ஆணையரால் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகை, ஒப்பந்த நிபந்தனைகள் யாவும் அலுவலக வேலை நாட்களில் தெரிந்துக் கொள்ளலாம்.

கிருஷ்ணகிரி,
16–1–1972.
(த. 61)

துரை. குருநாதன், பி.எ.பி.டி
ஆணையர்.

Your deposits with
THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS
Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy.

Schedule of Rates.

	Per cent per annum.
Current Account	0·50
Savings Bank account (on monthly minimum balances)	4·00
SEASON DEPOSITS—Rs. 1,000 and over	
15 days	2·00
46 days	3·00
FIXED DEPOSITS—Rs. 100 and over	
91 days	4·75
6 months	5·25
12 months	6·25
24 ,,	6·75
36 ,,	7·25
60 months and over	7·50

Additional—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions.*
Interest Paid Monthly on Rs. 1,000 and over and for periods of one year and over.
RECURRING DEPOSITS—

Rs. 5 per month in

Months		12	24	36	48	60	72	84
Yields	Rs.	62	128·50	201	278	362·50	452	548·50

Local Branches—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Keliys. Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai)

Opening shortly; Nungambakkam and Jawaharnagar.

R. KANAKASABAI,
Chairman.

P. N. T. CHARY,
Secretary.

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வீராணம் திட்டம்

தனித் தலைமைப் பொறியாளர் அலுவலகம், வீராணம் குடிநீர் வழங்கு திட்ட, கூவம் மேம்பாடுத் திட்டம், சேப்பாக்கம், சென்னை-5.

வேலையின் பெயர் : 20 டன் கொள்ளளவுள்ள லாரி எடைபோடும் கருவி, தொழிற்சாலைக்கு ஒன்றாகத் திருக்கழுக்குன்றம், பண்ணுருட்டிக்கு வழங்குதலும் நிறுவுதலும்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன்சார்பாகவும், கீழ்கண்டவாறு லாரி எடைபோடும் கருவிகள் வழங்குவதற்கு, தனித் தலைமை பொறியாளர், வீராணம் குடி நீர் வழங்கு மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால், அவர்தம் அலுவலகத்தில், 7—2—1972 மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3.30 மணிக்குத் திறக்கப்படும்.

வரையறை விவரங்கள் : 20 டன் கொள்ளளவுள்ள மற்றும் பிளாட் பாரம் 20'×8' அளவுள்ள லாரி எடைபோடும் கருவி வழங்குதலும் நிறுவுதலும்.

அளவு (எண்ணிக்கை) :—2.

(Dial gauge Self recording type/Dial gauge steel yard)
நிபந்தனைகள் : எடைபோடும் கருவிகள் (Weigh Bridges) பண்ணுருட்டியிலும், திருக்கழுக்குன்றத்திலும் நிறுவப்பட வேண்டும். 2. பண்ணுருட்டி, திருக்கழுக்குன்றத்திற்கு, அரசுத்துறைகளுக்கு ஏற்ப முறையில், சொல்லப்பட்ட வகையில், குறிப்பிடப்பட்ட விலையில் வழங்குதலும் நிறுவுதலும்.

3. Ex. stock விருப்பத்தக்கது.

4. வழங்குவதற்கான காலம் சரியாகக் குறிப்பிடப் படவேண்டும், அதன்படி கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும்.

5 கருவிகள் வழங்கி நிறுவப்பட்ட தேதியிலிருந்து, 12 மாத காலத்திற்குக் காரண்டி கொடுக்கப்பட வேண்டும். எந்தப் பொருளாவது, காரண்டி கொடுக்கப்பட்ட காலத்தில் குறைபாடாகத் தெரிந்தால், கட்டணமின்றி வேலைக்குக் கட்டணமின்றி, அப்புறப்படுத்திச் சரி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

6. அறிவிப்புகள் (Pamplhets) விலை விவரங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

7. தாமதமாக வழங்கினாலும், மாற்றம் இருந்தாலும்ஒவ்வொரு எடை போடும் கருவிக்கும் (Weigh Bridge) நாளொன்றுக்கு ரூ. 10. வீதம் அபராதம் வசூலிக்கப்படும்.

8. விற்பனைவரி மற்றவைகள் விளக்கமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

9. விலை விவரங்கள் "வீராணம் குடிநீர் வழங்கு திட்ட (Weigh Bridge) விலை விபரம் (Quotations) 7—2—1972" என்று குறிப்பிடப்பட்டு மூடி முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும்.

10. கட்டுத் தொகை ரூ. 3,000—" III--Suspense—G. Remittance iii other remittance—TWAD—Board Funds" என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், செங்கற்பட்டு அவர்தம் கணக்கில் செலுத்தி, ஒப்பந்தப்புள்ளியுடன் சலானை இணைத்து அனுப்ப வேண்டும்.

11. உழைப்பும், ரிப்பேர் வசதிகளும் விளக்கமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(த. 89)

தனித் தலைமைப் பொறியாளர்,
வி. டபள்யூ. எஸ். எஸ். மற்றும் சி. ஐ. பி.

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு;
அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2

வர்ண மய உலகம். அதுவே
கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்.
பட்டுகள். பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும்.
குர்தாக்கள், பெல் பாட்டம்
கள், லுங்கிகள், சேலைகள்
உங்கள் உள்ளம் எங்கும்
சிருஷ்டிகள். கோ-ஆப்டெக்ஸ்
படைப்புகள்.

காலப் போக்குக்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், சென்னை-8

பதிவு எண். [illegible]



நாட்டின் நல்வாழ்வுக்கு உதவுவதுடன்
நம் நல்வாய்ப்பைச் சோதிக்க
பெரும் வாய்ப்பு அளிக்கிறது!
தமிழ் நாடு அரசு பரிசுச்சீட்டு

பள்ளிகள் கட்ட......

மருத்துவ மனைகள் திறக்க......

குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்க...

...நாடு அரசு பரிசுச்சீட்டுக்காக
...செலவிடும் ஒவ்வொரு ரூபாயும்
...மட்டும் உதவுவதில்லை!

இன்றே வாங்குவோம்
தமிழ் நாடு அரசு
பரிசுச்சீட்டு

செய்தி விளம்பரத் துறை

தமிழரசு



அரசு-மிகவுயர்ந்த தரமான
போர்ட்லேண்ட்
சிமெண்ட்
உங்களுக்குக்
கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT
TIDCO

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு-வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

TAMIL NADU ARCHIVES
16 FEB
MADRAS-

தமிழரசு

மலர் 2] 16—2—1972 [இதழ் 16

இந்த இதழில்

பேனு (கவிதை)
கடவுளைக் கண்டேன்
அதிசயக் கிச்சிலி
வெண்பாப் போட்டி
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
இராமநாதபுர மாவட்டச் செய்தித் தொகுப்புகள்

முதல்வரின்

தமிழால் வளர்ந்தோம்
தமிழை வளர்ப்போம்!

முகப்பில்

இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த மண்டபத்திலுள்ள அரசு படகு கட்டும் நிலையத்தில் உருவாகும் படகுகளின் அணிவகுப்புக் காட்சி.





தமிழால் வளர்ந்தோம் தமிழை வளர்ப்போம்!

முதல்வர் டாக்டர் கலைஞர்

தமிழை வளர்க்க வேண்டும். அதனுடைய வலிவை, பொலிவை நாடு அறியச் செய்ய வேண்டும். தமிழால் வளர்ந்தவர்கள் நாம்—தமிழால் செழித்தவர்கள் நாம்—அந்தத் தமிழை வளர்ப்பதிலும் செழிக்க வைப்பதிலும் நமக்கு நீங்காத கடமை உணர்ச்சி உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாக, ஆளுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களுக்குப் பின் அவர் வழி நின்று அவரது பொன்னான கொள்கைகளை நிறைவேற்றச் சூளுரைத்துச் செயல்படுகின்ற நாங்களும் எங்களால் இயன்ற அளவு தமிழைத் தமிழகத்திலும், வேறு பிற இடங்களிலும் பரப்புவதற்கு முனைந்து முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதற்கு ஒரு சிறு எடுத்துக் காட்டாகத்தான் பல நாட்களாக ''ஃபோர்ஷோர் எஸ்டேட்'' என்று அழைக்கப்பட்டபகுதி "பட்டினப் பாக்கம்" என்ற புதிய—அல்ல—பழைய தமிழ்ப் பெயரைப் பெற்றதாகும்.

பாக்கங்கள் என்பது தமிழ் நாட்டில் பண்டை நாட்களில் மக்கள் வாழ்கின்ற குறிப்பிட்ட பகுதிக்கு வைக்கப்படுகின்ற பெயர்களாகும்.

குப்பங்கள் என்றும்—பாக்கங்கள் என்றும் அந்த நாளில் தமிழர்கள் தாங்கள் வாழுகிற இடங்களுக்குப் பெயர்களை அமைத்துக் கொண்டார்கள். பெரும்பாலும் கடற்கரை ஓரங்களில் வாழுகிற தமிழ்ப் பெருங்குடிமக்கள் அப்பகுதியைப் பாக்கம் என்றே அழைத்தார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் — மருவூர்ப்பாக்கம் என்ற அழகிய [illegible] சொல் அப்பகுதியில் கடற்கரையோரத்தில் மக்கள் வாழுகிற பகுதிக்கு இடப்பட்டிருந்ததைச் சிலப்பதிகாரம் மூலம் அறியலாம்.

ஆகவே கடற்கரைப் பகுதியில் இருக்கிற பகுதிக்குப் பட்டினப் பாக்கம் என்னும் பெயரை வைப்பது, சொல் பொருத்தம் என்று இந்த அரசு கருதுகிறது. பலபேர், இது. புரியுமா, என்று கேட்டனர் இது. வாயில் நுழையுமா? என்று சிலர் வினா எழுப்பினார்கள். வழக்கத்திற்கு இது வருமா? என்றார்கள்.

அதைப் போலவே கெல்லிஸ், கிள்ளியூர் ஆகியது. பாரிஸ் பாரி முனை ஆகியது. இதெல்லாம் இன்று வழக்கத்திற்கு வந்து விட்டன. இதுபோலவே மற்ற இடங்களின் பெயர்களையும் மாற்றிட வேண்டும் என்கிற எண்ணம் இன்றையத் தினம் மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தமிழுக்குப் பொற்காலம் ஒன்றிருந்தது. அதன் பிறகு கற்காலம்—அது நாம் தமிழைக் கவனிக்காமலிருந்த காலம். இப்போது மீண்டும் தமிழுக்குப் பொற்காலம் வந்து விட்டது.

குழந்தையைக் கோகிலமே என்று கொஞ்சு— மழலையை மாணிக்கமே என்று கொஞ்சு என்று தாயிடத்திலே சொல்லுவது எவ்வளவு நகைப்பிற்குரியதோ, அதே போன்றது தான் தமிழனிடம் தமிழை ஓம்பு, தமிழைக் காப்பாற்று என்று கூறுவதுமாகும்.

முத்தமிழ், முக்கடல், மும்முரசு என்றெல்லாம் பழம் பெருமையை நாம் அவனிக்குச் சொல்லிச் சொல்லி வீங்குபுகழ் பெற்ற நாடு நம்முடைய நாடு என்ற அந்தப் பழம் பெருமையை நாம் கொண்டிருக்கிறோம். ஆனால் பேசுவதோடு விட்டால் நம்முடைய தமிழ் வெறும் காப்பியத் தமிழாக- இலக்கியத் தமிழாக- செய்யுள் தமிழாக-இந்த அளவோடு முடங்கி விட்டால் போதாது என்பதற்காகத்தான் தமிழ் பயிற்று மொழியாக வர வேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

தமிழில் விஞ்ஞானச் சொற்கள் வந்தாக வேண்டும். அறிவு உலகில் விரைந்து நடைபோடக் கூடிய அளவில் தமிழில் புதிய புதிய சொற்கள் வளர்ந்தாக வேண்டும்; அவைகள் கண்டு பிடிக்கப்பட்டாக வேண்டும்.

ஆங்கிலம் என்றால் —உலகத் தொடர்புக்கு—அனைத்து நாடுகளின் தொடர்புக்குத் தேவை. அதே நேரத்தில் நம்முடைய நாட்டில் நம்முடைய தாய் மொழி வளர்ந்திடல் என்பது இன்றியமையாத ஒன்று. ஆகவே தான் இன்றிருக்கின்ற ஆட்சியின் கட்சி, ஆளுகிற அரசின் கட்சி இருமொழிக் கொள்கையை வலியுறுத்துகிறது.

நமது மாநிலத்தில் தேவையானது தமிழ். மற்ற மாநிலத்தோடு தொடர்பு கொள்ளவும், பிற நாடுகளோடு தொடர்பு கொள்ளவும், அனைத்து உலகிற்கும் தேவையானது ஆங்கிலம்.

ஆகவே, இந்த இரண்டு மொழி போதும் என்கிற வலிமை மிகுந்த வாதத்தை நமது தமிழக அரசு எப்போதும் எடுத்துச்சொல்லிவருகிறது.

சிலர் வாதிடுகிறார்கள்.

தமிழ்நாட்டுக்குத் தமிழ்—

இந்தியாவிற்கு இந்தி—

அனைத்து உலகிற்கு ஆங்கிலம் என்று வாதிடுகிறார்கள்.

வாதிடுவது சுலபம்; ஏனென்றால் வாதிடுபவர்கள் அவைகளைப் புதிதாகக் கற்றுக் கொள்ளப் போவதில்லை. அவைகளெல்லாம் இளம் தலைமுறையினரின் தலைகளில் சுமத்தப்படுவதை நாம் மறந்து விடக்கூடாது.

தமிழ், இந்தி, ஆங்கிலம்—இந்த மூன்றையும் இளம் குழந்தைகள் படித்திட வேண்டும்—அவர்களுடைய மூளையில் திணிக்கப்பட்டாக வேண்டும் என்ற முயற்சியை நாம் மேற்கொள்ளுவோமேயானால் யாருக்கு அதில் அதிகப் பயன் ஏற்படுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இரண்டு மொழி தான் படிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இருந்து கொண்டு மொழிப் பிரச்சினையால் பதவிகளைப் பறிகொடுத்த ஒரு வயதான பெரியவர், தான் இனி மேல் படிக்கத் தேவையில்லை என்றுகருதி, இந்தி இந்தியாவுக்கு—தமிழ் தமிழ் நாட்டுக்கு—ஆங்கிலம் அகில உலகத் தொடர்புக்கு என்று பேசுகிற நேரத்தில் தமிழ்நாட்டிலிருக்கிற நம் வீட்டுப் பிள்ளைகள் நம் மாநிலப் பயனுக்காகத் தமிழையும், இந்தியத் தொடர்புக்காக இந்தியையும், அகில உலகத் தொடர்புக்காக ஆங்கிலத்தையும் ஆக மூன்று மொழியைப் படிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகிறார்கள்.

அதே நேரத்தில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிற உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ, பீகாரைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ படிக்க வேண்டியது தனது தாய்மொழியான இந்தி; அடுத்தது ஆங்கிலம். இரண்டே மொழிதான். அதோடு அவர்களுடைய சுமை முடிகிறது.

நம்முடைய பிள்ளைகள் மூன்று மொழிகளைப் படித்து, இரண்டு மொழி படித்தவர்களோடு போட்டி போட வேண்டி யிருக்கிறது.

தாய்மொழியான இந்தி மொழியைப் படிக்கிறவர்களோடு நாம் பிற மாநில மொழியான இந்தியைப் படித்துப் போட்டி போடவேண்டியிருக்கிறது.

இதைச் சொன்னால், அனைத்துலகத்திற்கு ஆங்கிலம் இருப்பதைப் போல—தமிழ் நாட்டிற்குத் தமிழ் இருப்பதைப் போல—பிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ள இந்தி வேண்டாமா என்று கேட்கிறார்கள்.

ஒரு வேடிக்கையான கதை, ஒரு பெரிய விஞ்ஞானியின் வீட்டில் நடைபெற்றதாகச் சொல்லுவார்கள்.

அந்த மகத்தான விஞ்ஞானி ஓர் அழகான பூனை வளர்த்தான். அது உள்ளே வந்து போவதற்காகக் கதவில் ஒரு பெரிய ஓட்டையைச் செய்தான். அந்தப் பூனையும் அதன் வழியே வந்து போய்க் கொண்டிருந்தது. சில நாளில் அந்தப் பூனை ஒரு குட்டி போட்டது.

அந்தப் பெரிய விஞ்ஞானி, பெரிய துவாரத்தினருகே இன்னொரு சிறிய ஓட்டையைப் போட்டான். இது எதற்காக? என்றனர் அவனுடைய நண்பர்கள்.

'குட்டி வந்து போவதற்காக' என்றான் அந்த விஞ்ஞானி.

பூனைக்காக உள்ள பெரிய ஓட்டையிலே குட்டியும் வந்து போக முடியாதா என்று அவர்கள் கேட்ட பிறகு தான், 'ஆகா, இந்த யோசனை நமக்கில்லாமல் போயிற்றே, என நினைத்தானாம் அந்த விஞ்ஞானி.

அதைப் போல அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் பொது மொழி என்றால், பக்கத்திலிருக்கிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ளவும் அந்த ஆங்கிலம் போதுமா, போதாதா ?

பூனை போகிற அந்தத் துவாரத்தில் அதன் குட்டியும் போகுமா, போகாதா? இதுதான் இன்று நாம் எழுப்புகிற வாதம். இந்த வாதத்தை அவர்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஏற்கனவே சொல்லிவிட்டோமே, இந்தி இந்தியாவில் இருக்க வேண்டும் என்று, அதிலிருந்து எப்படிப் பின் வாங்குவது என்ற சங்கடம்.

இரண்டாவதாக, இரு மொழி போதுமென்று சாதாரணமானவர்கள் சொல்கிறார்களே, அதைக் கேட்பது நம்முடைய கௌரவத்திற்கு இழுக்காகும் என்று நினைப்பதால்தான் இன்று மீண்டும் இந்தி நுழைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்கள். அவர்களுடைய முயற்சிகள் வலிவு பெறுவதற்கான வேலைகள் இன்று நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய சமுதாயத்திற்கு, நம்முடைய, மொழிக்கு மொழி உரிமைக்குத் தங்களுடைய எதிர் காலத்திற்கு ஏற்படவிருக்கின்ற அந்த விபத்துக்களையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டுவது இன்றியமையாததாகும்.



‘‘நான் ஏழெட்டு வருசமா குடியரசுநாள் ஊர்வலம் பார்த்துக்கிட்டு வர்றேன். இந்த வருசம் போல இவ்வளவு பெரிய கூட்டத்தைப் பார்த்ததில்லை.’’

‘‘உண்மைதான். விமான அணிவகுப்பு என்று செய்தி வந்ததாலே இருக்கலாம்.’’

‘‘நாம பாகிஸ்தானை முறியடிச்ச வெற்றியிலே உண்டான பெருமையும் காரணமா இருக்கலாம். எல்லாவற்றையும் விட நமது அரசாங்கம் செஞ்சிருக்கிற ஏற்பாடுகள் பிரமாதம்’’

‘‘எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற உரிமையை நமக்குத் தந்த நாளாச்சே இது.... அப்பாடா நாமதான் ஆறு மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்பிட்டோம்னு நினைச்சேன்.. நமக்கு முன்னாலே எவ்வளவு கூட்டம்!’’

இந்த உரையாடல் குடியரசு நாள் விழா அணிவகுப்பைப் பார்க்க வந்த இரண்டு பெரியவர்களுடையது.

அவர்கள் பேச்சு எவ்வளவு உண்மை! இதுவரை சென்னை நகரில் நடைபெற்ற குடியரசு நாள் விழாக்களில் இவ்வளவு பெரிய மக்கள் திரளை யாரும் கண்டதில்லை.

சென்னை தெற்குக் கடற்கரைச் சாலையிலிருந்து கோட்டை வரை இருமருங்கிலும் மக்கள் வெள்ளம்.

சென்னைக் கடற்கரையில் உள்ள காந்தியடிகள் சிலை அருகே குடியரசுநாள் விழா அணிவகுப்பை ஏற்றுக்கொள்ள, வருகைதந்த ஆளுநரை முதல்வர் கலைஞர் அவர்களும் தலைமைச் செயலாளரும் வரவேற்றார்கள்.

முதல்வர் அவர்கள் சென்னையிலுள்ள முப்படைத் தலைவர்களையும் மாநிலக் காவல் துறை அதிகாரிகளையும் ஆளுநருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆளுநர் நாட்டுக் கொடியை ஏற்றி வைத்த பின்னர் மரபியல் அணிவகுப்புத் தொடங்கியது.

முதலில் அணிவகுப்புத் தளவாய் செல்ல, பின்னால் படைப் பிரிவுத் தளவாய்கள் சென்றனர்.

சென்னைப் படையணித் தளம், உள்நாட்டுப் படை, இந்தியக் கடற்படை, இந்தியவான் படை, கடற்படை, கடலோரப் பிரிவு, முன்னாள் படைஞர், குதிரைப் படைக் காவலர், சென்னை மாநகரக் காவலர் படை பாண்டு, சென்னை மாநகரக் காவலர் படை, தமிழ்நாடு சிறப்புக் காவலர் படைகள், ரயில்வே பாதுகாப்புப்படை, தேசிய மாணவர் படையின் கவச வண்டித் தொகுதி, தேசிய மாணவர் படையின் பீரங்கி வண்டித் தொகுதி, சென்னைப் படையணித்தளம், தேசிய மாணவ மாணவியர் படைகளின் பல பிரிவுகள், ஊர்க்காவற் படையின் பல பிரிவுகள், சீரணியினரின் பல பிரிவுகள், செயிண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படை, பாரத சாரணர், சாரணியர் படைகள், கடல் சாரணர்-சாரணியர் படைகள், திருத்தப் பள்ளி மாணவர் படைகள், தீயணைப்புப் படை போன்ற பல படைப் பிரிவுகள் அணிவகுத்துச் சென்றன.

அந்தப் படைகளைத் தொடர்ந்து இந்திய விமானப்படையின் ஹார்வார்டு விமானங்கள் ஆறும், எச். டி. [illegible] விமானங்கள் ஆறும் அணிவகுத்துச் சென்றன.

நாட்டினைக் காத்திட இன்னுயிர் ஈந்த ஆற்றல் மறவர்களுக்கு அரசு அளிக்கும் சலுகைகளை விளக்கும் பொதுத்துறை அலங்கார ஊர்தி முன் செல்ல, ஊர்திகளின் அணிவகுப்புத் தொடங்கியது.

பொதுத்துறை ஊர்தியைத் தொடர்ந்து, செய்தி-மக்கள் தொடர்புத் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, சென்னை மாநகராட்சி, கல்வித்துறை, தமிழ்நாடு மின் வாரியம், வேலைவாய்ப்பு-பயிற்சித்துறை, மீனளத்துறை, வனத் துறை, கைத்தறி நெசவுத் துறை, அரிசன நலத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறையின் இரண்டு ஊர்திகள், இந்திய விமானப்படையின் ‘நாட்விமானம்’, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, வீட்டுவசதி வாரியம், தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில்துறை, கதர் கைத்தொழில் வாரியம், காவல் துறையின் இரண்டு ஊர்திகள், பொதுப்பணித்துறை, ஊர் வளர்ச்சி - உள்ளாட்சித்துறை, சிறுசேமிப்புத் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், போக்குவரத்துத் துறை, கால்நடை மருத்துவம், ஆராய்ச்சித் துறை, குடிநீர் வடிகால் துறை, மகளிர் நலத்துறைகளைச் சேர்ந்த அலங்கார ஊர்திகள் அணிவகுத்துச் சென்றன.

பனிமலை அருகே பகைவனின் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய ‘கன்னர்’ ஆறுமுகத்தின் வீரச் செயலை விளக்கும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் ஊர்தி முதல் பரிசும், கைத்தறி நெசவுத்துறையின் ஊர்தி இரண்டாவது பரிசும், காவல் துறையின் ஊர்தி மூன்றாவது பரிசும் பெற்றன.

நமது
கோரிக்கை
முதல்வர் கலைஞரின் சட்டப்பேரவை-
மேலவைப் பேருரை இந்த இதழுடன்
இலவச இணைப்பு



தமிழக அரசு பல துறைகளிலும் புரட்சிகரமான மாறுதலைச் செய்து வருகிறது என்பது உலகறிந்த உண்மை.

பல தொழில்களை—மக்களுக்குப் பயன்படும் தொழில்களை—நாட்டுடைமையாக்குவதில் தமிழக அரசு முன்னணியில் நிற்கிறது.

பள்ளிப் பாடப் புத்தகங்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தில் தமிழக அரசு பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. அதைப்போலவே பேருந்துகளை நாட்டுடைமை ஆக்குவதிலும் வெற்றிநடை போட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போது 75 மைல் தொலைவுக்கு மேல் உள்ள பேருந்துத் தடங்களை அரசுடைமை யாக்கி, ஒரு புரட்சிகரமான நடவடிக்கையை நிறைவேற்றினார்.

அவரது மறைவுக்குப் பின் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்களும், நாட்டுடைமையாக்கும் திட்டங்களில் மிகுந்த நாட்டம் உடையவராகத் திகழ்கிறார்; 10 பேருந்துத் தடங்களுக்கு மேல் வைத்திருக்கும் தனியாரின் பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, புதிய வரலாற்றை உருவாக்கும்போது பழைய வரலாற்றையும் அவர் மறப்பதில்லை. அதன் விளைவுதான், நாட்டுடைமையாக்கப்படும் பேருந்து நிறுவனங்களுக்குப் பல்லவா, பாண்டியன் சோழன், சேரன் ஆகிய பழந்தமிழ் மன்னர்களின் பெயர்கள் சூட்டப்படும் உணர்ச்சி மிக்க நிகழ்ச்சிகள்.

சென்னை—செங்கற்பட்டு மாவட்டங்களின் பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, 'பல்லவா போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் 3–1–'72-ல் முதல்வரால் தொடங்கி வைக்கப்பெற்றது.

அதையடுத்து 23–1–72-ல் மதுரையில், டி. வி. எஸ். நிறுவனம் 172 தடங்களில் ஓட்டிக்கொண்டிருந்த 346 பேருந்துகள் நாட்டுடைமை யாக்கப்பட்டுவிட்டன. 'பாண்டியன் போக்குவரத்துக் கழகம்' என்ற அமைப்பில் அவை மாற்றப்பட்டிருக்கின்றன. தனியார் உடைமைகளை நாட்டுடைமையாக்கும் அரிய திட்டம், செயல் வடிவில் நிறைவேறத் தொடங்கியிருப்பது மதுரை மாநகரத்தில்தான் என்றால் அது மிகையாகாது.



பல்லவா போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்த முதல்வர், பாண்டியன் போக்குவரத்துக்கழகத்தையும் தொடங்கி வைத்திருக்கிறார். அண்ணா அவர்களைப் பெற்றெடுத்த பல்லவ நாட்டின் வேந்தர்களது பெயரால் அமையப் பெற்ற போக்குவரத்துக் கழகத்தை எவ்வளவு மகிழ்வுடன் தொடங்கி வைத்தாரோ, அவ்வளவு மகிழ்வுடன் சங்கத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களின் பெயரால் அமையப் பெற்ற போக்கு வரத்துக் கழகத்தையும் தொடங்கி வைத்திருக்கிறார் முதல்வர்.

இந்தத் துவக்க விழாவிற்குக் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமை ஏற்றார்.

''சேர, சோழ, பாண்டியர்களும் பல்லவர்களும் நாட்டைச் சிறப்புற ஆண்டது போல், அவர்களின் பெயரால் அமைந்து வரும் போக்கு வரத்துக் கழகங்களும் சிறப்புற மக்களுக்குப் பயன் அளிக்கப் போகின்றன.

என்று தலைமையுரையில் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்.

மதுரை நகரத் தந்தை, எஸ். முத்து எம். எல். சி. அவர்கள் ''மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் டி. வி. எஸ் நிறுவனத்தின் நல்ல சேவையை மறக்க முடியாது. ஊழியர்கள் அதே ஒழுக்க உணர்ச்சி, நாணய உணர்ச்சி இவற்றோடு, இதிலும் பணியாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கெண்டார்.

டி. வி. எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த திரு கிருஷ்ணா கூறினார்:

''எங்கள் நிறுவனத்தின் பெருமைக் கெல்லாம் காரணம் இதன் ஊழியர்களின் கடமையுணர்ச்சிதான். அவர்களை விட்டுச் செல்வது ஒன்றுதான் மனத்தாங்கலாக இருக்கிறது'' என்று!

போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் கூறினார்:

''உடைமைகள் ஒரு சிலரிடையே குவிந்திருக்கக் கூடாது. அவை பரவலாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கலைஞர் அவர்களால் இந்தத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இந்த நிறுவனத்தின் உரிமைதான் மாற்றப்படுகிறதே தவிர—உருவம் மாற்றப்படவில்லை''

மின்துறை அமைச்சர்— திரு ஓ. பி. இராமன் அவர்கள்,

''போக்கு வரத்து, தேசிய மயமாக்கப்படுவது மனித சமுதாயத்தில் நசித்துவிட்ட மக்களுக்குக் கிடைக்கும் வெற்றி'' என்றார்.

இறுதியாகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தைத் துவக்கி வைத்தார். மதுரையிலிருந்து திண்டுக்கல் செல்வதற்கான பயணச்சீட்டு ஒன்றை மதுரை மாநகராட்சித் தலைவர் அவர்களிடம் தந்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக் கொண்டார்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 25 ஆயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதிக்குத் தரப்பட்டது. அதை மன மகிழ்ச்சியுடன், வாங்கிக் கொண்டு, முதல்வர் சிறப்புரையாற்றத் தொடங்கினார்.

முதல்வரின் உரை :

''திரு கிருஷ்ணா அவர்கள் பேசும்போது 40 ஆண்டுகள் சிரமப்பட்டு வளர்த்த நிறுவனத்தை உங்களிடம் ஒப்படைக்கிறோம் என்றார். ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணை அவள் தந்தையும், தாயும் மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பும்போது ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எப்படிச் சொல்லுவார்களோ, அந்தப் பற்றும் பாசமும் அவரது பேச்சில் வெளிப்பட்டது.

நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன். இது உங்களிடமிருந்து எடுத்துக் கொண்டோ, கவர்ந்து கொண்டோ சென்றதல்ல.

நாங்கள் காதல் திருமணத்தை வரவேற்கின்றவர்கள்தான் என்றாலும், பெற்றோர்கள் பார்த்துச் செய்யும் திருமணத்துக்கும் உடன்பாடானவர்களே! அப்படி உடன்பாட்டுடன் நடந்த திருமணம்தான் இது.

அரசாங்கமே மாப்பிள்ளை என்றாலும், ஒரு பெண்ணைத் தானே கட்ட வேண்டும் என்று கேட்கலாம்.

நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளைப் பொறுத்த மட்டில் இராமனைப் போல ஏகபத்தினி விரதனாக இராமல், தசரதனைப் போல 60 ஆயிரம் பேரைக் கட்டிக் கொள்ள வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. இது புராணம் அறிந்த மக்களுக்குப் புரியும்.

''நாட்டுடைமையாக்கப்பட்ட இந்தப் பேருந்துத் துறைக்குத் தொழிலாளர், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு நிச்சயம் இருக்க வேண்டும்—இருக்கும்.

தொழிலாளர்களாகிய உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்களை டி.வி.எஸ். நிறுவனத்தார் எவ்வளவு அன்போடும் அக்கறையோடும் நடத்தினார்களோ — உங்களது உரிமைக்குக் காது கொடுத்துக் கேட்டுத் தேவைகளை நிறைவேற்றச் செயல்பட்டார்களோ, அதில் கிஞ்சிற்றும் குறையாமல் நடந்து கொள்வோ என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''

பேருந்துகள் நாட்டுடைமை யாக்கப்படுவதன் இன்றியமையாமையை முதல்வர் இவ்வாறு எடுத்துரைத்தார்.

சமதர்மச் சமுதாயத்தை நோக்கி நடைபோடும் தமிழகத்தின் அரும்பயணத்தின் இன்னொரு கல் கடந்ததாகவே இந்நிகழ்ச்சியை அனைவரும் கருதினர்.

இராமேஸ்வரம் தீவிலுள்ள பல்வேறு கிராம மக்கள் தங்கள் கிராமத்திற்கு மின் இணைப்புக் கொடுக்கும்படி நீண்ட நெடுநாட்களாகக் கேட்டுவந்தனர். இந்த நீண்ட நெடுநாள் கோரிக்கையைத் தமிழக அரசு இப்போது நிறைவேற்றி வைத்திருக்கிறது.



ஓலைக்குடா, ஊடுகாட்டம் பட்டி, கந்தமாதனபர்வதம், ஓர்காடு, செம்மடம், கரையூர், மாங்காடு, சம்பை, இராமேஸ்வரம்—பர்வதம்ரோடு முதலிய பல்வேறு பகுதிகளுக்கும் இப்போது மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு, இருள் கப்பிக் கிடந்த மேற்குறித்த பகுதிகள் ஒளி பெற்று விளங்குகின்றன. அப்பகுதி மக்கள், இருளகற்றி ஒளி விளங்கச் செய்த தமிழக அரசினை இதயமாரப் பாராட்டி மகிழ்கின்றனர்.





இராமநாதபுர மாவட்டத்திற்கு 62 வயது

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"—என்னும் உலக ஒருமைப் பாட்டுக் கருத்தினை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே உலகுக் களித்த கணியன் பூங்குன்றனார் தோன்றியதும், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலிலே மூன்றும் தமிழ்ச் சங்கம் அழிந்துபட்ட பின்னர் இன்றைக்குள்ள நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத்தேவர் பிறந்து வளர்ந்து நல்லாட்சி புரிந்ததும், கிழக்குக்கும் மேற்குக்கும் ஓர் ஒப்புயர்வற்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டுப் பாலத்தை உருவாக்க முனைந்த விவேகாநந்தப் பெருந்தகையை முதன் முதலாகத் தன் செலவிலேயே அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்து, அவர் திரும்பி வந்தபோது தன் பெருந்தேரில் ஏற்றித் தக்க முறையில் வரவேற்பளித்துச் சிறப்பித்த சேதுபதி மன்னர் ஆட்சி புரிந்ததும், சின்னமருது, பெரிய மருது, வேலுநாச்சியார் போன்ற வீரத்திரு விளக்குகள் வெற்றி ஒளி பரப்பியதும், இத்தகைய வேறுபல பெருமைகளுக்கும் இலக்காகத் திகழ்வதும் சேதுநாடு என்றும், பாண்டிய நாடு என்றும், முகவை என்றும் பலவாறுகச் சிறப்பித்துக் கூறப் பெறுவதும் இராமநாதபுர மாவட்டமே ஆகும்.

இராமநாதபுர மாவட்டம், (இப்போது உள்ளது) இற்றைக்கு 62 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, 1910-ல் உருவாக்கப்பட்டதேயாகும். முன்பு பழைய மதுரை மாவட்டத்தில் இணைந்திருந்த இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டங்களையும், பழைய நெல்லை மாவட்டத்தில் இணைந்திருந்த திருவில்லிப்புத்தூர், சாத்தூர் ஆகிய வட்டங்களையும் ஒருங்கிணைத்தே இன்றைய இராமநாதபுர மாவட்டம் உருவாக்கப்பட்டது.

இராமநாதபுர மாவட்டத்தின் வடக்கில் மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களும் தெற்கில் மன்னார் வளைகுடா, நெல்லை மாவட்டம் ஆகியவையும், கிழக்கில் பாக் வளைகுடாவும் உள்ளன. மேற்கில் கேரள மாநிலப் பகுதி, மாவட்ட எல்லையின் ஒரு விளிம்பைத் தொட்டு நிற்கிறது. இவ்வாறு மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வங்காள விரிகுடா வரை பரந்து காணப்படும் இராமநாதபுர மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 4,828·358 சதுர மைல்கள். இந்த மாவட்டத்தில், திருவில்லிபுத்தூர் சாத்தூர், அருப்புக்கோட்டைத் வட்டங்களும் இராமநாதபுரம் வருவாய்க் கோட்டத்தில் முதுகளத்தூர், இராமநாதபுரம் சிவகங்கை வட்டங்களும் வருவாய்க் கோட்டத்தில் சிவகங்கை, பரமக்குடி வட்டங்களும் அடங்கியுள்ளன.

மேற்குத் தொடர்ச்சிமலை திருவில்லிப்புத்தூர் வட்டத்தின் வடக்கு மேற்குப் பகுதிகள் வழியாகச் செல்கிறது; மற்றும், திருப்புத்தூர் வட்டத்தில் உள்ள பிரான்மலை முல்லைக்குத் தேரீந்து ஒல்காப் பெரும் புகழ் ஈட்டிய வள்ளல் பாரியின்எல்லையில்லாச் சிறப்பினை எடுத்துக்காட்டி வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும்.

இராமநாதபுர மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள், சமணர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் முதலிய பல்வேறு மதத்தினரும் வாழ்கின்றனர். இதுபோல, தமிழ், தெலுங்கு, கன்னடம், சௌராஷ்டிரம், உருது, மலையாளம், மராத்தி, இந்தி, குஜராத்தி முதலிய பல்வேறு மொழிகளும் வழங்கப்படுகின்றன.

இராமநாதபுர மாவட்டம் வானம் பார்த்த பூமியே தவிர, வற்றுத ஆறுகள் பாயும் வளமிக்க மாவட்டமல்ல! மாவட்டத்தில் பாயும் முக்கியமான ஆறு வைகையாறு ஒன்றுதான். அது மேற்குத் தொடர்ச்சி மலையில் பிறந்து, மதுரையில் தவழ்ந்து, இராமநாதபுர மாவட்டத்திற்குள் நுழைகின்றது. வெள்ளம் வந்தாலொழிய வைகை கடல் முகம் காண்பதில்லை. இராமநாதபுர மாவட்டத்திலுள்ள இதர சிற்றாறுகள் ஓடைகளில் அர்ஜுன நதி, வைப்பாறு, முடங்கியுள்ளது. விரைய நதி, மன்னார் கோட்டை நதி, குண்டாறு, கானல் ஓடை, மணிமுத்தாறு, வேஞாறு, விரிச்சலையாறு ஆகியன குறிப்பிடத்தக்கவை. இத்தனை ஆறுகளும் ஓடைகளும் இருந்தாலும் இம்மாவட்டம், வறண்ட மாவட்டமே. இங்கு ஏரி, குளம், கிணறு முதலியன ஓரளவு பாசனத்திற்கு உதவுகின்றன.

இராமநாதபுர மாவட்டத்தின் தென்பகுதியில் அனைத்திந்திய யாத்திரைத் தலமாக உள்ளது இராமேஸ்வரம் தீவு. வடக்கே கங்கைக் கரையிலுள்ள காசியோடு சேர்த்து இதனைக் காசி—இராமேஸ்வரம் என்று பக்தர்கள் பாராட்டுவர். இந்தியாவின் கிழக்கு, மேற்கு வடக்கு ஆகிய எப்பகுதியினரும் இங்கு வந்து போவதால் இதனை இந்நாட்டின் ஒருமைப்பாட்டுத் தலமாகவே பாராட்டுவதில் தவறில்லை. இராமேஸ்வரம் கோயிலின் சுற்றுப் பாதை 4 ஆயிரம் அடி நீளமுடையது. உலகத்திலேயே மிக நீளமான சுற்றுப்பாதையுள்ள கோயில் இதுதான்.

இராமநாதபுர மாவட்டம் பவளத்தீவு முதலிய பல்வேறு தீவுகளைக் கொண்டு திகழ்வது;

பாலம் அமைத்தோம்!

இராமநாதபுர மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் 75 பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான மொத்தச் செலவு ரூ. 14,37,681.

பள்ளி அமைத்தோம்!

இராமநாதபுர மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள தொடக்கப் பள்ளிகள் 49.

புதிதாகத் திறக்கப்பட்ட நடுநிலைப் பள்ளிகள் 9.

புதிதாகத் திறக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் 6.

புதிதாகக் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் 16 ; ஈட்டு மானியத்தில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் 27.

பள்ளிகளுக்குக் கட்டப்பட்ட அறிவியல் கூடங்கள் 18.

ஒளி பெருகியது!

இராமநாதபுர மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 2,360 இராமங்களுக்கு மின் ஒளி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதுபோல்,' கடந்த நான்காண்டுகளில் விவசாயத்திற்கு உதவும் 10,113 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆதம் பாலமும் பாம்பன் கால்வாய் முதலியனவும் சிறப்பானவை.

திருவில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, திருப்புத்தூர், சிவகங்கைப் பகுதிகள் சுண்ணாம்புப் பாறையும், கிராபைட் போன்ற தாதுப் பொருள்களும் மிகுதியுள்ள பகுதிகள். ஜிப்ஸம், இல்மைட் முதலிய தாதுப் பொருள்களும், பலரகச் சுண்ணாம்புக் கற்களும் இங்கு மலிந்து காணப்படுகின்றன.

சாத்தூர், திருவில்லிப்புத்தூர், அருப்புக்கோட்டைவட்டங்களில் பெரும்பாலும் கரிசல் மண், தான் அதிகம். இம் மண் மிளகாய், புஞ்சைப் பயிர்களுக்கு ஏற்றது. பொதுவாக, இம் மாவட்டம் பருத்தி விளைச்சலுக்கு மிகவும் வாய்ப்பானதாகும். கோடைக் காலத்தில் இம்மாவட்டத்தில் கம்போடியா பருத்தி மிகுதியும் பயிராகின்றது. பருத்தி ஆராய்ச்சிக்காகத் திருவில்லிப்புத்தூரில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் உள்ளது. சாத்தூர் மிளகாய் தனிச்சிறப்புப் பெற்றது.

சிவகங்கை, திருப்புத்தூர், திருவாடானை வட்டங்கள் செம்புறை மண் நிறைந்த பூமி. படிவப்பாறைகளும் நிறைந்துள்ளன. திருவாடானை, முதுகுளத்தூர், இராமநாதபுர வட்டங்களில் வண்டல் மண் பகுதியும் உள்ளது. கடற்கரையும் இராமேஸ்வரமும் வெண் மணற் பரப்புக்கள்—வெறும் பரப்புக்கள்—விளைச்சலுக்குப் பயன் அற்றவை.

தமிழ்நாட்டு மாவட்டங்களிலேயே 160 அடி நீளமுள்ள மிக நீண்ட கடற்கரையையுடைய மாவட்டம் இராமநாதபுர மாவட்டமே! இங்குக் கடற்கரை வெப்பத்தைத் தணித்திடும்; கடற்கரைப் பகுதியைத் தவிர, பிற பகுதிகளெல்லாம் வெப்பம் மிகுதியுடையன. இங்கு வெப்பநிலை 94° (எப்)-க்கும் வெப்பம் அதிகமாக இருக்கும். குறைந்த வெப்பநிலை 68° (எப்) ஆகும்.

இராமநாதபுர மாவட்டத்தில் காடுகள் மிகுதி: சாத்தூர், அருப்புக்கோட்டை, திருவில்லிப்புத்தூர் ஆகிய வட்டங்களில் பனைமரங்கள் மிகுதி; இராமநாதபுர வட்டத்தில் கடற்கரையோரத்தில் தென்னை மரங்கள் மிகுதி. வைகைக் கரையோரங்களில் மாவும், பலாவும் பழமரங்களும் மிகுதி. சவுக்கு மரங்கள் நன்கு வளர்கின்றன. இராமேஸ்வரத்தில் புளிய மரங்கள் நன்கு வளர்கின்றன. இங்குத் தென்னை மரங்களும் ஏராளமாக உள்ளன. மலைப்பகுதிகளில் உத்தரத்திற்கு உதவும் மரங்கள் வளர்கின்றன.

தீக்குச்சி, மத்தாப்பு, பட்டாசு போன்றவற்றிற்கும், அழகான காலண்டர்கள், லேபிள்கள், சுவரொட்டிகள் முதலியவற்றிற்கும், மருத்துவமனைகளில் புண்ணுக்குக் கட்டத் தேவைப்படும் பாண்டேஜ் துணிக்கும் இந்த மாவட்டம் பேர்பெற்றது. இவை யாவும், இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியிலுள்ள நாடுகளிலும் புகழ் பெற்றுள்ளன.

இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் ஷார்க் போன்ற மீன் வகைகள் உள்ளன; கடல் ஆமைகள், சிப்பிகள், சங்குகள் முதலியன மன்னார் வளைகுடாவில் மிகுதி. இங்கு வாழ்வோர் வாழ்வில் வளம் கூட்டுவது மீன் பிடித்தல், சங்குக் குளித்தல் போன்ற தொழில்களே!

இத்தகு இராமநாதபுர மாவட்டம் பல்வகையாலும் பின்தங்கிய மாவட்டமே யாகும். எனவே, தமிழ்நாடு அரசு உழவும் தொழிலும் வளரப் பல்வேறு சலுகைகளையும் ஏராளமான உதவிகளையும் அளித்து, இம் மாவட்டத்தைப் பலவகையாலும் முன்னேற்றி, மக்கள் வாழ்வில் செம்மையும், செழுமையும் சிறக்கத் தக்க முறையில் பாடுபட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இம் மாவட்டம் துறைதோறும் கண்டுள்ள முன்னேற்றமும் வளர்ச்சியும் பெரிதும் வியந்து போற்றத்தக்கன.

சிங்கம்புணரியில் தென்னைப் பண்ணை

வெப்ப மண்டலத்தில் மட்டுமே வளரும், கிளையில்லாத பனை இன மரங்களில் தென்னை மிகவும் முக்கியமானது. இதன் வேர் முதல் நுனி வரையுள்ள எல்லா உறுப்புக்களும் ஏதாவது ஒரு வகையில் மனிதர்களுக்குப் பயன்படுகின்றன. ஆண்டுதோறும் இந்தியாவில் 530 கோடி தேங்காய்களும், அதில் தமிழ் நாட்டில் மட்டும் 79 கோடி தேங்காய்களும் உற்பத்தி ஆகின்றன. நாட்டில் விளையும் தேங்காய் நமது சுயதேவையை நிறைவு செய்யப் போதுமானதாக இல்லை. அருகிலுள்ள தென்னை வளரும் நாடுகளிலிருந்து பலகோடி ரூபாய் பெறுமானமுள்ள தேங்காய்களும், கொப்பரையும் இறக்குமதி செய்யப்படுகின்றன. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்காகச் செலவிடப்படும் அந்நியச் செலாவணியை மிச்சப் படுத்துவதற்கும், நமது சுய தேவையை நிறைவு செய்வதற்கும் இரண்டு வழிகள் உள்ளன. அவை, புதிய தோப்புகள் அமைத்தல், ஏற்கெனவே உள்ளதோப்புகளின் மகசூலை அதிகரித்தல் ஆகியன.

தென்னை வளர்வதற்கான தட்ப, வெப்ப நிலையும், ஏராளமான தரிசு நிலங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. புதிய தோப்புகளில் தரமான தென்னங் கன்றுகளை நட்டால்தான் பிற்காலத்தில் நல்ல மகசூல் கிடைக்கும். இராமநாதபுரத்தில் ஏற்படும் புதிய தோப்புகளுக்குத் தேவையான தென்னங் கன்றுகள் சிங்கம்புணரி, அரசினர் தென்னை நாற்றுப் பண்ணையில் கிடைக்கின்றன. இது, நமது மாநிலத்திலுள்ள நாற்றுப் பண்ணைகளில் முதலிடம் வகிக்கிறது. இப்பண்ணை சிங்கம்புணரியிலிருந்து வடக்கே ஒரு மைல் தொலைவில் காரைக்குடி-திண்டுக்கல் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இதற்கு அருகில் ஏராளமான தென்னந் தோப்புகள் இருப்பதால் இந்த இடத்திற்கு வந்தவுடன் ‘நாம் கேரளத்தில் இருக்கிறோமோ’ என்றே எண்ணத் தோன்றுகிறது. நாற்றுப் பண்ணையும், பார்ப்பதற்கு மிக அழகாகவும், அமைதியாகவும் உள்ளது. இந்த நாற்றுப் பண்ணைக்குள் நாம் நுழைந்தவுடன் இது இராமநாதபுர மாவட்டத்தில்தான் உள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

இப்பண்ணை மொத்தம் 2 ஏக்கர் 79 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்குச் செங்கோட்டை, நாகர்கோவில், சிங்கம்புணரி, கொட்டாம்பட்டி, நத்தம் ஆகிய இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நெற்றுகளிலிருந்து, 40,000 உயர் ரகக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்கன்றுகள் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள உழவர்களுக்கு நேரடியாகவும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. ஒரு கன்றின் விலை ரூ. 1-50. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக வாங்கும்பொழுது, 25 சதவீதம் குறைந்த விலையில் கன்றுகள் வழங்கப்படுகின்றன. இராமநாதபுர மாவட்டத்திற்கு மட்டுமே கன்றுகள் விநியோகம் செய்யும் நோக்கத்துடன் இப்பண்ணை ஆரம்பிக்கப் பட்டபோதிலும், திருச்சி மாவட்டம், பொன்னமராவதி, திருமயம் ஊராட்சி ஒன்றியங்களில் வாழும் மக்களும் நேரடியாக வந்து கன்றுகளை வாங்கிச் செல்கின்றனர். கன்றுகள் நன்றாக வளர்ந்து பயன் கொடுப்பதால் ஒருமுறை இப்பண்ணையிலிருந்து கன்றுகளை வாங்கியவர்கள் மறுபடியும், மறுபடியும் வந்து வாங்கிச் செல்கின்றனர். தற்போது உற்பத்தி செய்யும் 40,000 தென்னங் கன்றுகள் ஆர்வத்துடன் இங்கு வரும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. பெருகி வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இந்த ஆண்டு முதல் 10,000 தென்னங் கன்றுகள் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பண்ணை தொடர்ந்து இலாபகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

நாற்றுப் பண்ணையிலிருந்து விநியோகம் செய்யப்பட்ட கன்றுகளை, விஞ்ஞான முறைப்படி நடவும், பராமரிக்கவும், ஏற்கெனவே வளர்ந்துள்ள

மரங்களின் மகசூலை அதிகரிக்கவும், ஆவன செய்வதற்காக மற்றொரு துணை வேளாண்மை அலுவலர், சாத்தூரை மையமாகக் கொண்டு இம்மாவட்டத்தில் பணியாற்றி வருகிறார். நீர் பாய்ச்சுதல், உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், மகசூலை அதிகரித்தல் ஆகிய காரியங்களில் இந்தத் துணை வேளாண்மை அலுவலரும், அவருடைய உதவியாளர்களும் உதவி வருகின்றனர்.

இத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்குப் பாதி விலையில், மருந்து தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. உரமிடுதல், உழுதல், பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல் போன்ற காரியங்களினால் அதிக மகசூல் கிடைக்கிறது என்பதைப் பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டுத் தனியார் தோப்புகளில் செயல்விளக்கத் திடல்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

புதிய தென்னந் தோப்புகள் அமைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும், தனி நபருக்கு அதிகப் பட்சம் ரூ. 3,000 வரையும் நீண்ட காலக் கடன் வழங்கப் படுகிறது. இத் தொகை 11-வது ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளில் வட்டியுடன் வசூல் செய்யப் படுகின்றது. உழவர்கள் எப்பொழுது அழைத்தாலும், அவர்களுடைய தோப்பிற்குச் சென்று மரங்களைப் பார்வையிட்டுத் தக்க அறிவுரைகள் வழங்குவதற்கு இப்பணியாளர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர்.

தென்னை ஓலையிலுள்ள பசுமையை (பச்சையத்தை) 'கருந்தலைப் புழு' என்ற சிறிய பூச்சி சுரண்டிச் சேதப்படுத்துகிறது. இதனால், மட்டை பசுமையை இழந்து காய்ந்து விடும். மரத்தின் மகசூலும் குறைந்துவிடும். இந்தப் பூச்சியைப் புழு நிலையிலும், கூட்டுப் புழு நிலையிலும் தாக்கக் கூடிய "குளவி" இனத்தைச் சேர்ந்த பகைப் பூச்சிகள் உள்ளன. இவைகள் ஒட்டுண்ணிகள் (பாரசைட்) என்று அழைக்கப்படுகின்றன.

இராமநாதபுரத்தில் இப்பூச்சிகளை வளர்க்கும் ஒட்டுண்ணி நிலையம் ஒன்று ஒரு துணை வேளாண்மை அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இங்கு ஏராளமான ஒட்டுண்ணிகள் வளர்க்கப்பட்டு உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. தேவைப்பட்டால் அஞ்சல் மூலமாகவும் இப்பூச்சிகள் அனுப்பப்படுகின்றன.

மேலே கூறிய 3 திட்டங்களும், மதுரையில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் (தென்னை) அவர்களின் மேற்பார்வையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கிழக்கு இராமநாதபுரம் விவசாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் மிகவும் பின் தங்கிய பிரதேசமாகும். மழை பரவலாக இல்லாததாலும், வற்றாத ஆறுகளும், பெரிய குளங்களும், இல்லாததாலும், வேளாண்மையிலிருந்து குறைந்த வருவாயே கிடைக்கின்றது.

விண்ணோ நிலவால்
விளக்கம் அடைந்தது;
தண்கடல் முத்தால்
தனிச்சிறப் புற்றது;
தரையோ தானறிந்தது
பிறர்க்குச் சாற்றும்
அருமை மக்களால்
பெருமை பெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன்

இங்குள்ள மண்வகை நீண்ட காலம் பலன்தரும் தென்னை மரங்கள் வளர்வதற்கு ஏற்றதாக உள்ளது. இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இலங்கை, பர்மாவிலிருந்து வந்துள்ள தமிழர்களுக்கும், நிலமில்லாதாருக்கும் நிலம் வழங்கத் தென்னை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஒரு தனித் துணை வேளாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அவரின் கீழ் தென்னை நாற்றுப் பண்ணைகளை நிருவகிப்பதற்கும், வளர்ச்சி வேலைகளைச் செய்வதற்கும் துணை வேளாண்மை அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஒரு தனி வட்ட ஆட்சியாளரும், தனித்துணை வட்ட ஆட்சியாளரும், 5 வருவாய் ஆய்வாளர்களும் கடன் மனுக்களைப் பரிசீலிக்கின்றனர்.

இத்திட்டத்திற்குத் தேவையான தென்னங் கன்றுகள் தேவிப்பட்டினம், தொண்டி, உச்சிப்புளி ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தரிசுநிலத்தில் தங்கப்புதையல்

கிழக்கு இராமநாதபுரக் கடற்கரைப் பகுதியில் அரசினருக்குச் சொந்தமான தரிசு நிலங்கள், நிலமில்லாத ஏழைகளுக்கும், இலங்கை, பர்மாத் தமிழர்களுக்கும், ஒரு குடும்பத்திற்கு 5 ஏக்கர் வீதம் வழங்கப்படுகின்றன. இதில் 3 ஏக்கர்களில் தென்னை சாகுபடி செய்ய வேண்டும். மீதமுள்ள 2 ஏக்கர் பரப்பளவில் அக்குடும்பம் தங்களுக்குத் தேவையான உணவு தானியமோ, காய்கறிகளோ, உற்பத்தி செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 6 ஆண்டுகளில் ரூ. 5,030 வட்டியில்லாத கடனாக வழங்கப்படுகிறது. தென்னங் கன்றுகள் நடப்பட்ட 11-வது ஆண்டிலிருந்து பல தவணைகளில் இத்தொகை திரும்பவும் வசூலிக்கப்படும். 26 வருடங்கள் கழித்துக் கடன் தொகை முழுவதும் வசூல் செய்யப்பட்ட பின்பு, அக்குடும்பத்தாருக்கு 5 ஏக்கருக்கும் உரிய நிரந்தரப் பட்டா வழங்கப்படுகிறது.

சிறு பட்டாதாரர்கள் முதல் பெரிய நிலக்கிழார்கள் வரை இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். தென்னை சாகுபடி செய்வதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் கடன் வழங்கப்படுகிறது. இது தவிர, 4·50 ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி செய்தால் ஒரு கிணறு வெட்டுவதற்கு ரூ. 1,000 வீதம் கடன் வழங்கப்படுகிறது. இதில் ரூ. 250 மானியமாகக் கொடுக்கப்படுகிறது. மீதி ரூ. 750 கடனாக வசூலிக்கப்படும்.

தேங்காய் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாள் விரைவில் வரும் என்பது உறுதி !

சிறு தொழில் வளர்ந்துவரப் பெருகியுள்ள வாய்ப்புக்கள்!

மக்கள்தொகைப் பெருக்கமும் பெரும் பாசனத் திட்டங்கள் போன்ற பிற திட்டங்களை மேன்மேலும் நிறைவேற்றினும் வேளாண்மைக்காக நமக்குக் கிட்டும் குறைந்த அளவு நிலப் பரப்பும், இம்மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான தொழில் வளர்ச்சியை எதிர் நோக்கி நிற்க வேண்டிய நிலையில் தமிழகம் உள்ளது. தொழில் வளர்ச்சி விரைவாகவும், சமநிலையிலும் அமையும் வண்ணம் பொருளாதார நடவடிக்கைகளைப் பல கால்களாகப் பிரிப்பதன் வாயிலாகவே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உறுதியாக உயர்த்த முடியுமென்றும், அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இயலுமென்றும் நாளும் வளர்ந்துவரும் மக்கள்தொகைப் பெருக்கம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இக்குறிக்கோளைக் கருத்திற் கொண்டு, மாநில அரசு தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. மூலப் பொருட்கள் முதலியன கிட்டும் இடத்திற்கு அண்மையில் போக்குவரத்து வசதி, நீர் வசதி, மின்சார வசதி, தொழிலாளர் வசதி இவை நிரம்பியிருத்தல், சந்தைக்கு அருகில் அமைந்திருத்தல் போன்ற தொழில் நுட்பப் பொருளாதாரக் கூறுகளே தொழில்களை ஓரிடத்தில் அமைப்பதற்குப் பின்பற்றப்படும் வாயில்களாகும்.

எனவே, இராமநாதபுர மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து விரைவு படுத்த வேண்டி, விருதுநகர் காரைக்குடி, சிவகங்கை முதலிய நகர்களில் தொழிற்பேட்டைகளை அமைத்திருப்பதன் மூலம் சிறு தொழிலைத் துவக்குபவர்களுக்கு, உடனடியாகத் தொழில் தொடங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிகிறது. இந்தத் தொழிற்பேட்டைகளில் சிறுதொழில் அதிபர்களுக்குக் குறைந்த வாடகையில் தொழிற் கூடங்கள் தண்ணீர், மின்வசதி, சாலை வசதிகளுடன் அளிக்கப்படுகின்றன. காரைக்குடியில் மத்திய அரசு உதவியினால் "மத்திய மின்-இரசாயன ஆய்வுக் கூடம்" ஒன்று அமைக்கப் பெற்று நல்ல முறையில் இயங்கி வருகிறது. அந்த ஆய்வுக் கூடத்தின் பல புதிய கண்டுபிடிப்பின் மூலம் சிறப்பாக மின்-இரசாயனத் தொழில்கள் புதிதாகத் தொடங்குவதற்குச் சிறுதொழில் அதிபர்கள் நல்ல முறையில் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

இராமநாதபுர மாவட்டத்தின் உட்பகுதிகளில் வைகை நதியோரங்களிலும், கடற்கரையோரங்களிலும், இராமேஸ்வரம் தீவுப் பகுதிகளிலும் ஏராளமான பரப்பளவில் தென்னை வளர்க்கப்படுகின்றது. ஈரம் பதப்படுத்தப் படாத தென்னை மட்டையிலிருந்து இயந்திர முறையில் கயிற்றுநார் உரிப்பதற்கான தொழில் பிரிவுகளைத் தனியார் துறையில் நிறுவ இம்மாநிலத்தில் 20 தொழில் முனைவர்களுக்கு நிதி வசதி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும் கயிற்றுநாருக்கு, மாநில விற்பனை வரியிலிருந்து மாநில அரசு விலக்களித்துள்ளது. இந்த மாவட்டத்தில் ஈரப்பதப்படுத்தும் வசதிகள் போதுமான அளவில் இல்லை. ஆகையால் இயந்திர முறை கயிற்று நார் தொழிற்சாலையின் (ஈரப்பதப்படுத்தாத தென்னை மட்டைக்காக) மேம்பாட்டினுக்கு அரசு அளித்துவரும் மேற்படி உதவியினைப் பயன்படுத்தித் தொழில் தொடங்க முனைவோர் முன்வரலாம்.

இம்மாவட்டத்தில் முந்திரிப் பழத் தோட்டங்கள் அமைப்புக்கு நல்ல சீதோஷ்ண நிலைமையும், விளைச்சலுக்கேற்ப நிலப் பரப்பும் இருப்பதால் அவைகளின் வளர்ச்சிக்கு அமோக வாய்ப்புகள் உள்ளன. முந்திரிப் பழத்தோட்ட அமைப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு இம்மாவட்டத்தில் ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படும் போது இம்மாவட்டத்தின் முந்திரி உற்பத்தி அதிகமாகுமென எதிர்பார்க்கப் படுகிறது. ஆகவே, எதிர்காலத்தில் இப்பழ உற்பத்தித் திறனைக் கருத்திற் கொண்டு, இம்மாவட்டத்தில் முந்திரி எண்ணெய் எடுப்பதற்கான தொழிற்கூடங்களின் அமைப்பிற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் வட்டத்தின் கடற்கரை ஓரங்களில் "கடற்பாசி"ச் செடிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவைகளிலிருந்து "சோடியம் ஆல்ஜினேட் உப்பு" என்ற பொருளினை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்கூடம் ஒன்று அமைப்பதற்கும் வாய்ப்புகள் நிரம்ப உள்ளன. கீழக்கரை, இராமேஸ்வரம் தீவினை ஒட்டிய இடங்களில் கிடைக்கும் சங்குகள், தற்போது மேற்கு வங்காள மாநிலத்திற்குப் பெருவாரியாக அனுப்பப்படுவதாகத் தெரியவருகிறது. அங்கு

தியாகத் தழும்பைத் தழுவிய மலை

இராமநாதபுர மாவட்டம் முழுவதுக்குமாக, முதன் முதலில் சுதந்தரப் போராட்டத்திற்குக் கால்கோள் செய்த இடம் பூலாங்குரிச்சிதான். அதைத்தொடர்ந்தே திருவாடானை, தேவகோட்டை முதலிய ஊர்களில் போராட்டம் துவங்கியது. முதன்முதலில் இயந்திரச் சுழல் துப்பாக்கிகொண்டுசுட்டதும் அங்குதான். போராட்ட வீரர்கள் துரத்தியடிக்கப்பட்டபோது, அவர்கள் அனைவரும் பூலாங்குரிச்சி மலையின் மீதேறி நின்றுகொண்டு வந்தேமாதரம் என்று முழங்கினர். கீழேயிருந்து துப்பாக்கியால் சுட்ட போது, சூடுபட்ட வீரர்கள் பக்கத்துக் காடு ஒன்றில் போய் விழுந்து கிடந்து பின்னர் கண்டு பிடிக்கப்பட்டனர். மலையில் சூடுபட்டு வெடித்து விழுந்த இடம், அம்மலை பெற்ற நிலையான தியாகத் தழும்பாக இன்றும் காட்சியளிக்கிறது.

போலிகிராப்: இயந்திரம் உள்ள ஒரே கூட்டுறவு அச்சகம்.

அரசாங்கத் தொழில் வணிகத் துறையின் கீழ் சிவகாசி தொழில் கூட்டுறவு அச்சகம் கடந்த 6—8—1970-ல் திறக்கப்பட்டுள்ளது. பெரிய அளவில் வார்னிஷ் பூசும் ரூ. 2,05,000 மதிப்புள்ள பாலிகிராப் ஆப்செட் அச்சுப் பொறியுள்ள ஒரே கூட்டுறவு அச்சுக்கூடம் இதுதான்.

இங்கு, தீப்பெட்டி லேபிள்கள், அழகான நாட்காட்டிகள், வண்ணச் சுவரொட்டிகள் எல்லாமே அச்சிடுகின்றனர். விரைவில், இதனை ஏனைய எல்லா வசதிகளுமுடைய ஒரு முழுநிறை அச்சுக் கூடமாக ஆக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அச்சகத்திற்கெனச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு 5 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. கட்டட வேலைகள் விரைவில் தொடங்கும்.

இவைகள் ''சங்கு வளையல்கள்'' தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன. மேற்படி மூலப் பொருளினைக் கொண்டு ''சங்கு வளையல்கள்'' இம்மாவட்டத்திலேயே தயாரித்து மேற்கு வங்காளத்திற்கு அனுப்பிடும் வாய்ப்புகளும் உள்ளன. இம்மாவட்டத்திற்குத் தொலைதூரக் கடற்கரைப் பகுதியிருப்பதால் உப்பு உற்பத்தித் தொழில்களும் மற்றும் அது சம்பந்தப்பட்ட துணைத் தொழில்களும் தொடங்க வாய்ப்புகள் உள்ளன.

இம்மாநிலத்தில் நடைபெறும் சாயத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களில் ஒன்றான ''ஹைட்ரோ சல்பேட்'' என்ற இரசாயனப் பொருளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், டயர் உற்பத்திக்கான பெரிய தொழிற்சாலை ஒன்றும், மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான 'பிஸ்டன்'களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் வெகு விரைவில் இம்மாவட்டத்தில் நிறுவப்படவிருக்கின்றன. மேற்கூறிய மூன்று பெரிய தொழில்களுக்குத் தேவையான துணை சிறு தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் நிரம்ப உள்ளன.

இம்மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு உதவி செய்யவும், அதுபோன்ற பிற தொழில்களைத் திறம்பட வளர்ச்சியுறச் செய்து அவற்றிற்கு வழிகாட்டவும் வேண்டித் ''தமிழ் நாடு சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம்'' அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிறுவனம் இவ்வட்டாரத்தில் உள்ள சிறுதொழிலுக்குத் தேவையான மூலப் பொருள் பங்கீடு, பொறியியல் இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழில் முனைவோருக்கு விற்பது, தொழிற்கூடங்களைக் கட்டி அவற்றை தவணைக்கொள் முதல் அடிப்படையில் தொழில் முனைவோருக்கு ஒதுக்குதல் போன்ற பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. மேலும் இந்நிறுவனம் சிறு தொழில் அதிபர்களுக்கும், தொழில் தொடங்க முனைவோருக்கும் சீரிய முறையில் பணியாற்ற இந்த உதவிகளை அளிக்கவும் ஏற்பாடு செய்து வருகிறது.

(1) தொழில் நுட்பச் சாத்தியக் கூறு குறித்த அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.

(2) சிறு தொழிற்சாலைகள் தயாரித்த பொருள்களின் ஏற்றுமதிக்கும், விற்பனைக்கும் உதவுதல்.

(3) சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளித்தல்.

மத்திய அரசு திட்ட ஆணைக் குழு இம்மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ள எட்டு மாவட்டங்களில் இராமநாதபுர மாவட்டமும் ஒன்று. எனவே, இம்மாவட்டத்தில் புதிய தொழில் முனைவர்கள் அமைக்கவிருக்கிற நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளின் உற்பத்தி விற்பனையின் மூலம் செலுத்த வேண்டிய வரிக்குச் சலுகைகள் கிடைக்கும். தொழில் துறையில் மேம்பாடு அடையாத பகுதிகளாகக் கிழக்கு இராமநாதபுரம் பகுதி முழுவதையும், தொழில் தொடங்குவோர் மத்திய அரசிடமிருந்து ஒரு மொத்த மானியம் அல்லது உதவித்தொகை பெறத் தகுதி உடைய பகுதிகளாகத் திட்ட ஆணைக் குழு அறிவித்துள்ளது. மாநில அரசும் மத்திய அரசும் அளித்து வரும் வசதிகளைப் பயன்படுத்தித் தொழில் துறை மேலும் பல மடங்கு வளர— தொழில்வளம் பெருகப் பாடுபடுவோமாக!

(தொழில் வணிகத் துறை மண்டலத் துணை இயக்குநர் அளித்த விவரங்களின் தொகுப்பு)

சங்குத் தொழிற் சங்கம்!

இராமேஸ்வரத்தில் சங்குகள் மற்றும் கிளிஞ்சல்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. எனவே, சங்குத் தொழில், வீடுகள் தோறும் நடைபெறுகிற நல்லதோர் — சிறப்பு மிக்க குடிசைத் தொழிலாக விளங்குகிறது.

இத் தொழிலை மேலும் நல்ல முறையில் வளர்த்து இத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் வளமூட்டி ஒளி பெருக்க, இராமேஸ்வரம் சங்கு மற்றும் கிளிஞ்சல் பொருள் உற்பத்தித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. தொழிலாளர்களுக்கு மூலப்பொருள் கிடைப்பதற்கும், உற்பத்தி, செய்த பொருள்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும் இச்சங்கம் நல்ல முறையில் பணியாற்றிவருகிறது. ஆண்டொன்றுக்குசுமார் 25,000 ரூபாய்க்கு விற்பனை வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது. இங்குச் செய்யப்படுகிற மாலைகளுக்கும், விளக்குகளுக்கும், பெயர்கள்— வண்ண ஓவியங்கள் தீட்டப்பெறும் சங்குகளுக்கும் நல்ல வரவேற்பு உள்ளது. தமிழக அரசுதற்போது, சங்கு குளிப்பவர்களே கிடைக்கும் சங்குகளை அனுபவித்துக் கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதால் இத்தொழிலும், இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் நல்ல முன்னேற்றம் அடையலாம் என்பதில் ஐயமில்லை.

25-1-1972-ல் இச்சங்கத்தின் சார்பில் புதியதொரு விற்பனைக் கூடம் திறக்கப்பட்டுள்ளது. சங்கத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கட்டிக் கொள்ள 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ரூ. 15,000 மானியமாக வழங்கியிருக்கிறது. கட்டடம் கட்டும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சீரணித் தொண்டர்கள் செய்த திருப்பணி

இராமேஸ்வரத்தின் உட்பகுதியில் கரையூர் என்று ஒரு சிற்றூர் உள்ளது. அந்த ஊர் குன்றுபோல் குவிந்த மணல் திட்டுகளின் நடுவே உள்ளது. அங்குப் போவோரும் வருவோரும் பல மணல் மேடுகளை நடந்துதான் கடக்க வேண்டும். வேறு போக்குவரத்து வசதியோ, சாலைகளோ கிடையாது.

கரையூரின் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பின்வருமாறு : ஆண்கள் 599 ; பெண்கள் 569 ; பள்ளியில் பயிலும் வயது வந்த சிறுவர்கள் 76 பேர்; சிறுமியர் 69 பேர் ; எனினும், அவ்வூரில் பள்ளிக்கூடமில்லை.

தமிழக அரசு அங்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அனுமதித்து, அதற்குரிய தொகையையும் வழங்கியது. எனினும், அந்த மணல் திட்டுகளுக்கிடையே பள்ளி கட்டுவதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்வதற்கு வழியில்லாக் காரணத்தால் கட்டடம் கட்ட ஒப்பந்தக்காரர்கள் யாரும் முன்வரவில்லை. எனினும், சென்ற ஆண்டு, மண்டபம் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் பெரு முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் அவ்வூரிலுள்ள சீரணித் தொண்டர்களும், பொதுமக்களில் சிலரும் செங்கல், சிமெண்டு, மரச் சாமான்கள் இதர கூரைச் சாதனங்கள் ஆகியவற்றைத் தலைச்சுமையாகவே சுமந்து சுமார் 2½ மைல் தூரம் அம் மணல் மேடுகளில் ஏறி இறங்கி வந்து பள்ளிக் கட்டடத்தைப் பாங்குறக் கட்டி முடித்துள்ளனர். இன்று, அந்தத் தொடக்கப் பள்ளியில் இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். கடல் கடந்த தீவில் குன்றுபோல் உயர்ந்த மணல் மேடுகளுக்கு நடுவில் எழுந்துள்ள பள்ளி, அங்கு அறியாமை இருள் போக்கும் ஒளி விளக்காக விளங்குகிறது.

மக்கள் குறை தீர்த்த மனுநீதித் திட்டம்

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மனுநீதிச் சோழனின் ஆட்சிக் காலத்தில் மக்கள் மன்னனைத் தேடிச் சென்று குறைகளை முறையிட்டுக் குறைநீங்கப் பெற்றனர். ஆனால், தமிழக முதல்வரும், பேரறிஞர் அண்ணாவின் வழித் தோன்றலுமாகிய கலைஞர் அவர்கள், மக்கள் இருக்கும் இடந்தேடி அவர்களின் இதயத் தவிப்பையும், குறைகளையும் கேட்டறிந்து, முறையீடுகளை நிறைவேற்றிக் குறை களையும் நோக்கத்தோடு, தமிழகத்தில் மனுநீதித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மனுநீதித் திட்டத்தினால், இராமநாதபுர மாவட்ட மக்களின் குறைகள் பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளன. பல தலைமுறைகளாகவும், பல ஆண்டுகளாகவும் தீர்க்கப்படாதிருந்த குறைகள், மனுநீதித் திட்டம் துவங்கிய முதலாண்டிற்குள்ளேயே தீர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத் தகுந்தவைகளாகும்.

காரைக்குடித் துணைவட்டத்தில் கோட்டையூர் கிராமத்தில் 1864-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட நிலத்தில் 1933-ஆம்ஆண்டு முதல் தகராறுகள் ஏற்பட்டு, வழக்குகள் நடைபெற்று நாட்டார்களுக்குச் சொந்தமான சுமார் 600 ஏக்கர் நிலம் 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்கள் தனிப் பட்டா இல்லாமல் இருந்தனர். அரசினர் வரி வசூலிக்கச் சிரமப்பட்டனர். மனுநீதித் திட்டத்தின் கீழ் கோட்டையூரில், 5—12—1969 அன்று அலுவலர்கள் மக்களின் குறைகேட்க வந்தனர். அப்பொழுது நாட்டார்கள் தனிப்பட்டா கொடுக்கும்படி, கோரிக்கை விடுத்தனர். அந்த நிலத்தை 578 பகுதிகளாகப் பிரித்துத் தனிப்பட்டாவாக்கி 10—3—1970 அன்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

அரண்மனைச் சிறுவயல் கிராமத்தில் 30 ஆண்டுகளாக உழவர்கள் அனுபவித்து வந்த நிலத்திற்குப் பட்டா கொடுக்கப்படாததால் பல்வேறு தொல்லைகளை அனுபவித்து வந்தனர். அந்த நிலத்தைப் பிரித்து 160 பேர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டது. இதன் மூலம் 30 ஆண்டுகளாக இருந்த குறை தீர்ந்தது.

சாத்தூர் வட்டம் நாரணபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கே. வி. ராமசாமி ஓர் அரசியல் தியாகி, தனது மகளுக்கு வேலை தேடிக்கடந்த பல ஆண்டுகளாக அவர் முயற்சி செய்து வந்தும் பயனில்லை. அவர் 25—7—1970-ல் இதுபற்றி மனு ஒன்றைக் கொடுத்தார். மனுநீதி நாளில் கொடுத்த மனுவை ஏற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அன்றையத் தினமே திரு கே. வி. ராமசாமியின் மகளுக்குச் சிவகாசி உதவி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தட்டச்சராக வேலை கொடுத்தார்.

மனுநீதித் திட்டத்தின் கீழ் 1971 ஜனவரி முதல் நவம்பர் முடிய இந்த மாவட்டத்தில் ஓர் சாதனையே ஏற்பட்டுள்ளது என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

வரப்பெற்றமனுக்கள் 29,239; அனுமதிக்கப்பட்டு, சாதகமாக ஆணை பிறப்பிக்கப்பட்ட மனுக்கள் 20,318 ; நிராகரிக்கப்பட்ட மனுக்கள் 6,941 ; வேறு துறைகளுக்கு, முடிவான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்ட மனுக்கள் 1,913 ; நவம்பர் 1971 முடிவில் நிலுவையில் இருந்த மனுக்கள் 67.

இப்படிப் பல்வேறு குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு மனுநீதித் திட்டமே வழி செய்தது.

இராமநாதபுர மாவட்டத்தில் ஒப்படை விவரங்கள்

1960-61 முதல் 1966–67-ஆம் ஆண்டு முடிய ஏழு ஆண்டுகளில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற தரிசு நிலங்களில் 5,116 ஏக்கர் நிலங்களை 2,137 நபர்களுக்கும், 35 ஏக்கர் பரப்பளவு கொண்ட வீட்டு மனைகளை 709 நபர்களுக்கும் உரிமை செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1967–68-ஆம் வருடம் முதல் 1970ஆம் வருடம் முடிய நான்கு ஆண்டுகளில் சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலங்களில் 63,861 ஏக்கர் நிலங்களை 27,382 நபர்களுக்கும் வீட்டு மனையைப் பொறுத்த வரையில் 120 ஏக்கர் பரப்பளவு கொண்ட வீட்டு மனைகளை 2,874 நபர்களுக்கும் உரிமை செய்து பட்டாக்கள் வழங்கப்பட்டன என்பது அரசின் மாபெரும் சாதனையாகும்.

1960–61 முதல் 1970–71 முடிய தரிசு நிலங்கள், வீட்டு மனைகள் ஒப்படை செய்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1960–61 முதல் 1966–67 வரையுள்ள ஏழு ஆண்டுகளில் வழங்கப்பட்ட சாகுபடி நிலங்களுக்குரிய பட்டாக்கள் 2,137. வழங்கப்பெற்ற நிலத்தின் பரப்பு 5,116 ஏக்கர் ; வீட்டு மனைப் பட்டாக்கள் 711 ; பரப்பளவு 35 ஏக்கர்.

1967–68 முதல் 1970–71 வரை நான்காண்டுகளில் வழங்கப்பட்ட சாகுபடி நிலங்களுக்குப் பட்டாக்கள் 27,382 ; வழங்கப்பெற்ற நிலத்தின் பரப்பு 63,811 ஏக்கர்கள். வீட்டு மனைப் பட்டாக்கள் 2,872 ; பரப்பளவு 120 ஏக்கர்கள்.

இது தவிர, இவ்வாண்டு மேலும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், படை வீரர்களுக்கும் வழங்கத் திட்டமிட்டுத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயக் பெருங்குடி மக்கள் இத்திட்டத்தின் மூலம் மேலும் பயனடைவார்கள் என்பது உறுதி.

வண்ண மயில் கூட்டம் வாழும் வீரசோழம்

வண்ணக் கலாப மயிலை வனிதையரோடு ஒப்பிட்டுக் காட்டுவார்கள் கவிஞர்கள். நாம் சுதந்தரம் பெற்ற பிறகு நமக்கென ஒரு தேசியப் பாடலையும், தேசியக் கொடியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டது போல, 'தேசியப் பறவை'யாக மயிலையும் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

மயில், காடுகளிலும் மலைகளிலும் வாழ்பவை. பல கோயில்களிலும் மசூதிகளிலும், காட்சிச் சாலைகளிலும் மயில்கள் வளர்கின்றன. எனினும் பெரும் அளவில் இல்லை.

தமிழகத்தில் வனவிலங்குகளுக்காக ஒரு முதுமலைக் காடும், மான்களுக்காக ஒரு கிண்டி மான் பூங்காவும், பறவைகளுக்காக ஒரு வேடந்தாங்கலும் உள்ளன; இவைபோல் மயில்களுக்காக 'ஒரு வீரசோழமும்' இருக்கிறது என்பது பலருக்குப் புதிய செய்தியாகவே இருக்கும். வீரசோழம் இராமநாதபுர மாவட்டம் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூரில் பெரும்பாலானவர்கள் முஸ்லீம்கள். 5,000 மக்கள் தொகையுடைய ஒரு கிராமம் இது. இவ்வூரின் முக்கியத் தொழில் விவசாயம். ஊரைச் சுற்றிலும் பல்வேறு காடுகள் உள்ளன. இக்காடுகளில் ஏராளமான மயில்கள் வாழ்கின்றன. அவை பெரும்பாலும் வீரசோழத்திற்கு வந்து அவ்வூரில் பரவலாக உலவுகின்றன.

வீரசோழத்தில் இஸ்லாமிய உறவின் முறைச்சங்கம் ஒன்றின் பராமரிப்பில் ஒரு பள்ளி வாசல் உள்ளது. அங்கு, மயில்கள் பல நூற்றுக் கணக்கில் வருகின்றன. அங்குள்ள புதர்கள் சிலவற்றில் அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. அந்த மயில்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை ராகி, நெல், கம்பு, வரகு முதலிய தானியங்கள் போடப்படுகின்றன. இப்போது இதற்கென ஒரு சிப்பந்தி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சங்கத்தின் அறங்காவலர்களை இதுபற்றிக் கேட்டபோது அவர்கள், 1914-ஆம் ஆண்டில் 4 பெண் மயில்களோடும் ஒரேயொருஆண் மயிலோடும் இந்த மயில் வளர்ப்புப்பணி ஆரம்பமானதாகவும், தொடர்ந்து அவை பல்கிப் பெருகி வளர்ந்து வருகின்றன என்றும் கூறுகிறார்கள். மேலும் அவர்கள் கூறியதாவது:

'' மயில்களுக்கான உணவுக்கும், சிப்பந்திச் சம்பளத்திற்கும் ஆகும் செலவுக்காகப் பர்மாவில் உள்ள எங்கள் ஊர்வாசிகள் முன்னர் பணம் அனுப்பினார்கள். இப்போது அவர்கள் பணம் அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. தமிழ் நாடு அரசினர் ஆண்டுதோறும் 500 ரூபாய் மானியம் தருகிறார்கள். இது தவிர நாங்கள் மகமை வசூல் மூலமும், தானியம் சேகரிப்பது மூலமும், அப்பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம் '' என்றார்கள்.

'' முதலில் இந்த மயில்களை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது ? '' என்று கேட்டபோது ''மயில்களின் நடமாட்டத்தினால் பாம்புகளும், இதர நச்சுப் பூச்சிகளும் ஒழியும் என்றும், ஊருக்கு அழகு ஏற்படும் என்றும் மயில்கள் நடமாடுவது நல்லது என்றும் கருதியே மயில்களை வளர்க்கத் தொடங்கினோம்'' என்றார்கள்.

தற்போது கோரிக்கைகளின் பேரில் இரண்டு மயில்களுக்குப் 'பிடி கூலி' யாக 10 ரூபாயும் அனுப்பும் செலவுகளுக்காக ஒரு சிறு தொகையும் பெற்றுக் கொண்டு, மயில்களைப் பிடித்து அனுப்புகிறார்கள்.

கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகை, விழுப்புரம், கரூர் நகராட்சிகள், எட்டுக்குடி சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், பாபநாசம் பவர் அவுஸ், சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கும், பள்ளி வாசல்களுக்கும், சில தனிநபர்களுக்கும் அவர்கள் மயில்கள் அனுப்பியுள்ளனர். மயில்கள் தேவையெனத் தினமும் பல கடிதங்கள் வந்த வண்ணமிருக்கின்றன.

மயில்கள் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் முட்டையிடுகின்றன. ஒவ்வொரு தடவையும் 9 முதல் 11 முட்டைகள் வரை இடுகின்றன. மூன்று மாதம், மயில் அடை காப்பதாகவும், குஞ்சு பொரித்ததும் மயில் அதனைத் தன் சிறகுக்குள் வைத்துத் தாங்கிக் கொண்டு பறந்து செல்லும் என்றும், பொரித்த சிறு குஞ்சை நாம் கையால் தொட்டால் அல்லது பிடித்தால் அக்குஞ்சு இறந்து விடும்—சிறு அதிர்ச்சியைக் கூட அதனால் தாங்கிக் கொள்ள முடியாது என்றும் கூறுகிறார்கள்.

மயிலைப் பிடிக்கும்போது எச்சரிக்கையாகப் பிடிக்க வேண்டும்

என்றும், அதிகமாக விரட்டிப் பிடித்தால் அதனுடைய மெல்லிய இதயத்தின் துடிப்பு நின்று பல சமயங்களில் இறந்து விடுவதும் உண்டு என்றும் கூறுகிறார்கள்.

மயிலின் முட்டை, ஒரு சிறு தேங்காயின் அளவுடையதாகவும் கரும்புள்ளிகளையுடைய வெளிறிய பச்சை நிறமானதாக இருக்கிறது. முட்டையைப் பலர் சாப்பிடுவதாகவும், அது கோழி முட்டையை விடச் சுவையாக இருக்கும் என்றும் கூறுகிறார்கள்.

மயில் தோகைகள் இரண்டு வகையானவை. ஒன்றைக் கண்ணடித்தோகை என்றும், இன்னொன்றை வாள் தோகை என்றும் கூறுகிறார்கள். மயிலின் கண் போல உள்ள வண்ணத்தோகை கண்ணடித்தோகை; மற்றது வாள்போலிருக்கும்வாள்தோகை. மயில் ஆடும்போது சில தோகைகள் உதிர்கின்றன. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தோகைகளின் பெரும் பகுதியும் உதிர்ந்து மீண்டும் முளைக்கத் தொடங்கும்.

மயில் இறந்துவிட்டால் அதன் தோகைகளையும் காலையும் மட்டும் எடுத்துக் கொண்டு, அதன் உடலைப் புதைத்துவிடுவதாகக் கூறுகிறார்கள். ‘மயில் கறி’ உண்பவர்களும் இருக்கிறார்கள்.

மயில் காலிலிருந்து மயில் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதன் பெயர் ‘மயில் கால் தைலம்’. சுளுக்குகள், தசைவலி, இரத்தக்கட்டு, தலைவலி, பச்சை வாதம் முதலியவற்றிற்கு இந்தத் தைலம் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது.

மயில் தோகைகளைக் காவடிகளிலும், தூரிகைகளிலும் பயன்படுத்துவதோடு விசிறி முதலியன செய்யவும் உபயோகிக்கிறார்கள். தோகையில் உள்ள நீளமான—வெள்ளை நிறத்தண்டினை நெட்டித் தட்டைபோலமீன்பிடிக்கப் (மிதப்பாக) பயன்படுத்துகின்றனர். அத்தண்டினைச் சுட்டுத் தேனில் குழப்பிக் குழந்தைகளின் நாக்கில் தடவினால் வாந்தி வயிற்றுப் போக்கு முதலியன நீங்கும்.

நாடு காக்கும் பணியில் நல்லுயிர் ஈந்தோர்!

அண்மையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடைபெற்ற போரில் ஈடுபட்டு இறந்தவர்களில் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 7 பேர். அவர்களின் விவரம் வருமாறு :—

(1) திரு அலங்காரம் செபஸ்தியான், நெடுங்குளம்.

(2) திரு டி. ஏ. தேவதாசன், கோட்டைப்பட்டி ;

(3) திரு லஸ்கர் ஜோசப், சாத்தரசன்பட்டி ;

(4) திரு முத்தையா, நடைநேரி ;

(5) திரு எஸ். பி. சாமி, கஞ்சம்பட்டி ;

(5) திரு எஸ். சீனிவாசன், கல்லமநாயக்கன்பட்டி ;

(7) திரு வெங்கடசாமி ராதாகிருஷ்ணன், அளகாபுரி.

இவர்களில் திரு டி. ஏ. தேவதாசன், திரு வெங்கடசாமி ராதாகிருஷ்ணன் ஆகியோரைத் தவிர மற்றவர்கள் குடும்பங்கட்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசு 5,000 ரூபாய் உதவித்தொகையாக வழங்கியுள்ளது. இது தவிர தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தவணை வைப்புத் தொகையாக ஒவ்வொரு குடும்பத்திற்கு ரூ. 2,500 வழங்கினார். அலங்காரம் செபஸ்தியனின் அடுத்த உறவினரான அவரது மனைவி திருமதி செல்லம்மாளுக்கு சிவகங்கை வட்டம் நெடுங்குளம் கிராமத்தில் 3 ஏக்கர் புஞ்சை நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு தேவதாசின் அடுத்த உறவினர் ஜபல்பூரில் இருப்பதால் உதவித்தொகை இன்னும் சேர்ப்பிக்கப் பெறவில்லை.

திரு வெங்கடசாமி ராதாகிருஷ்ணனுக்கு அடுத்த வாரிசுதாரரின் சான்றிதழ் அளிக்கப்படும்வரை உதவித்தொகையை நிறுத்திவைக்குமாறு சென்னை ஜெனரல் கமாண்டிங் அலுவலர் எழுதியுள்ளதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பர்மா, இலங்கைத் தமிழர்களுக்கு பயனுள்ள திட்டங்கள்!

1-6-1963-க்குப் பின்னர் தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்களுக்கும், 1-11-1964-க்குப் பின்னர் தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்களுக்கும் இராமநாதபுர மாவட்டத்தில் உதவிகள் அளிக்கப் பட்டுள்ள விவரம் :

1. ஒவ்வொரு குடும்பத் தலைவருக்கும் ரூ. 5,000 வரை தொழில் கடன் கொடுக்கப்படுகிறது.

2. தொழில் கடன் பெற்ற இலங்கை பர்மாத் தமிழர்களுக்கு வீடு கட்டக் கடன் அளிக்கப்படுகிறது.

3. தொழில் கடன் வாங்காத குடும்பத் தலைவருக்கு 3 ஏக்கர் புஞ்சை நிலமோ, அல்லது 1½ஏக்கர் நன்செய் நிலமோ கொடுத்து நிலக் குடியமைப்புத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்படுகிறார்கள்.

4. குடும்பத்தலைவருக்குத் திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலத்தில் ரூ. 65 பயிற்சி உதவிப்பணம் கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்னர் ஆலையில் நிரந்தரமாக வேலைக்குஅமர்த்தப்படுகிறார்கள். மொத்த வேலை வாய்ப்பு 200 பேர்—இதுவரை வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் 163 பேர்.

5. பர்மா, இலங்கைத் தமிழர்களுக்குச் சிறுதொழில் நடத்த நகராட்சி எல்லைக்குள் பெட்டிக்கடைகள் கட்டிவிடப்பட்டுக் குறைந்த வாடகையில் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

(2) 1966-ல் இருந்து தாயகம் திரும்பிய பர்மா, இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை உதவித் தொகை முதலியன.

1—6—1963 முதல் 1966 வரை தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்கள் 4,809 பேர்.

1966-ஆம் வருடம் வரை பர்மாத் தமிழர்கட்கு வியாபாரக்கடன்வழங்கப்பட்ட தொகை ரூ. 9,14,753.

(3) 1971 வரை தாயகம் திரும்பிய பர்மா, இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு அளித்த உதவித் தொகை முதலியன:

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்களின் எண்ணிக்கை 20,383 பேர்.

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை தாயகம் திரும்பிய பர்மாத் தமிழர்கட்கு வழங்கப்பட்ட கடன் தொகை—(1) வியாபாரக் கடன் ரூ. 69,69,978 ; (2) வீட்டுக்கடன் ரூ. 13,15,000.

1967 முதல் 1971-ஆம் ஆண்டு வரை தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்கள் எண்ணிக்கை 2,368 பேர்.

1967 முதல் 1971-ஆம் ஆண்டு வரை தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்கட்கு வழங்கப்பட்ட கடன் தொகை —(1) வியாபாரக்கடன் ரூ. 5,32,650 ; (2) வீட்டுக்கடன் ரூ. 1,50,500.

இலங்கை, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ள தமிழர்களுக்காகத் தமராக்கி, இடையமேலூர், கீழப் பருத்தியூர் ஆகிய ஊர்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றுக் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் பயன்படுத்துவதற்காக 33 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. வீடுகளுக்கு உரியவர்கள் வந்ததும் குடியமர்த்தப்படுவதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஓ. புதூர், இடையமேலூர் திட்டத்திற்கு மேலும் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்தியா வந்து சேர்ந்தவுடன் ஒதுக்கப்பட்டுள்ள திட்டத்தில் குடியமர்த்தப்படுவார்கள்.

குடும்பம் ஒன்றுக்கு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமும், சாகுபடி செய்வதற்கு 4,350 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. மேலும் வீடு கட்டிக் கொள்வதற்காகக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1,850 கொடுக்கப்படுகிறது. வீடு கட்டிக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் தொகையில் கடனாக ரூ. 1,250-ம் மானியமாக ரூ. 600-ம் கொடுக்கப்படுகிறது.

1967-ஆம் ஆண்டிற்கு முன்னர் தொழில் கடன் தாயகம் திரும்பிய தமிழர்கட்கு மூன்று தவணையாகக் கொடுக்கப்பட்டு வந்தது. 1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொழில் கடனை ஒரே தவணையில் கொடுப்பதற்கு அரசு ஆணையிட்டது. மேலும் 1970-ஆம் ஆண்டில் அரசு தொழில் கடனை ரூ. 2,000 த்திலிருந்து ரூ. 5,000 மாக உயர்த்தியுள்ளது.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இலங்கை, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் முன்பெல்லாம் ‘அகதிகள்’ என்றே குறிப்பிடப்பட்டார்கள். இப்போது, அகதிகள் என்ற சொல்லே ஒழிக்கப்பட்டு, தாயகம் திரும்பிய தமிழர்கள் என்றே குறிக்கப்படுவது சிறப்பான செய்தியாகும்.

இராமநாதபுர மாவட்டத்தில் பசுமைப் புரட்சி

அந்நியர் ஆட்சியை எதிர்த்து அடிமைத்தளையை அறுத்தெறிய ஆர்த்தெழுந்த கட்டபொம்மனுக்கு அடைக்கலம் அளித்த வரலாற்றுச் சிறப்புமிகு இராமநாதபுர மாவட்டம்—பருவமழை அடிக்கடி தவறியதால் பஞ்சம் பிழைக்க தஞ்சைக்கும் பிற மாவட்டங்களுக்கும் தனது மக்களை அகதிகளாய் அனுப்பிவிட்டு, துயருற்றுத் தாழ்ந்து நின்றது. காரணம், எழில்மிகு இம் மாவட்டத்தில் ஏற்றவண்ணம் மழை பொழிவதில்லை; இங்கு வற்ருத ஆறுகளோ வளைந்தோடும் ஜீவநதிகளோ இல்லை. மாருக, வானமிழ்தம் தான் வேண்டி மோனத்தவங்கிடக்கும் வறண்ட நிலங்களும், வளமற்ற காடுகளும் இங்கு நிறைய உண்டு. நீர்வளமற்ற இம்மாவட்டத்தில் பொதுவாக நிலவளமும் மிகக் குறைவு. ஆகவே பயிர்த்தொழில் இங்கு சுவையாகஅல்லசுமையாக, போராட்டமாக நடப்பதுஇயல்பு. பற்ருக்குறை என்பதும் —பசி பட்டினி, பஞ்சம் என்பதும் —பிழைக்க வழி தேடிக் குடிபெயர்தல் என்பதும் இம்மாவட்டத்திற்கே இயல்பானது என்ற இழிநிலை. இத்துயர்தரு நிலை போக்கத் தமிழக அரசு எண்ணுதநேரமில்லை; எடுக்காத திட்டமில்லை. பயிர்த் தொழிலே வாழ்க்கை நெறியாக அமைந்துவிட்ட இம்மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களே வெற்றிக்கு அடித்தளம் என்பதை நன்குணர்ந்த நமது தமிழக அரசு பல புதிய தீவிரத் திட்டங்களைச் செயல்படுத்த வேளாண்மைத் துறைக்கு ஆணையிட்டது. எத்திட்டத்தையும் ஏற்புடன் செயல்படுத்தத் தங்களை முழுதுமாக ஈடுபடுத்திக் கொள்ளும் ஆற்றலும், அறிவும் தொழில் நுட்பத் திறனும் படைத்தவேளாண்மை விரிவினைப் பணியாளர்களின் அயராத பணி தொடங்கியது. இதன் பலன் தான் இன்று இந்த மாவட்டத்தில் முகிழ்த்தெழுந்த பசுமைப் புரட்சி. இந்தப் பசுமைப்புரட்சி இயற்கையையும் ஓரளவு வென்றெழுந்த அமைதிப் புரட்சி.

இந்தப் பசுமைப் புரட்சி—கத்தியின்றி, ரத்தமின்றி, நடந்த புரட்சி; பரபரப்போ சலசலப்போ இன்றி அமைதியாக நடந்த புரட்சி; அங்கிங்கெனுதபடி விவசாயப் பெருமக்களின் வயல்களெங்கும் நடந்த புரட்சி; போர்க்களத்தில்அல்ல—கதிரடிக்கும் களங்களில் நிகழ்ந்த புரட்சி; இந்தப் புரட்சிக்கு ஆதரவாளர்கள் நமது விவசாயப் பெருமக்கள்; புரட்சிக்கு ‘ யுக்தி ’ அளித்தவர்கள்—தொழில் நுட்ப உதவி தந்தவர்கள் விவசாய விரிவினைப் பணியாளர்கள்; புரட்சியை நிகழ்த்திய ‘‘ தளபதிகள் ’’ நமது வணக்கத்துக்கும் வாழ்த்துக்குமுரிய வேளாண்மை அறிவியல் தந்த நன்முத்துக்கள்—அமுதசுரபி, அள்ளக்குறையா மகசூல் தரும், வறட்சியிலும் புரட்சி செய்யும் அதிசய நெல் ஐ. ஆர். 8, களம் நிறைக்கும் கருணை, வெற்றி தரும் ஜெயா, பத்மா, சன்னரகப் புதிய வித்து ஐ. ஆர் 20, 22, ‘அண்ணு நெல்’ என அழைக்கின்ற பெருமை பெற்ற மாணுவாரிக்கு ஏற்ற குறைந்த வயதும், குறையாத மகசூலும் தருகின்ற ‘ அன்னபூரணு ’ ஆகியவைகள். ‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும் ? ’’ அதனுலன்ருே 1967–68 ஆம் ஆண்டில் 76 ஏக்கரில் தொடங்கிய ஐ. ஆர். 8 நெல் சாகுபடி 1968–69-ல் 612 ஏக்கரிலும், 1969–70-ல் 14,863 ஏக்கரிலும் வளர்ந்து விரிவடைந்து, 1970-71 1,65,499 ஏக்கரில் சாதனையாக மிளிர்ந்து அமோக விளைச்சலை அள்ளித்தந்திருக்கின்றன. இலக்குகள் வழிகாட்டிகளே—இறுதியானவை அல்ல என்பதையுணர்ந்து இலக்குகளை மிஞ்சும் அரிய சாதனை 1971–72-ல் ஏறத்தாழ 5,01,294 ஏக்கரில் இதோ அங்கு நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது. இந்தப் புதுமைப் புரட்சியை வாழ்த்த வந்த இயற்கை அன்னை அண்மையில் மாமழை தூவினுள். மகிழ்ச்சிப் பெருக்கால்; ஊருணிகள், கண்மாய்கள் நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றை நிரப்பிதனது கடமையைச் செய்தாள். இதனுல் ஒரு போக நெல் சாகுபடி இருபோகமாக ஆக ஏற்றதொரு வாய்ப்புக் கிடைத்தது. இனிய வாய்ப்பைப் பயன்படுத்தி மிகு விளைச்சல் தருகின்ற மேன்மை மிகு வித்துக்களை, குறுகிய காலத்தில் விளைச்சலைக் குவிக்கின்ற அரிய ரகங்களாம், கருணு, பத்மா, அன்னபூரணுவை இரண்டாம் போகமாய்ப் பயிரிட ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கேரள மாநிலத்திலிருந்து கூட ஏறத்தாழ 2,000 மூட்டை அன்னபூரணு விதை நெல் கொணர்ந்து விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்றது.

மிகு விளைச்சல் ரகச் சாகுபடித் திட்டத்தின் கீழ் நெல் வித்துக்களில் மட்டுமின்றி சிறுதானிய வித்துக்களிலும் சீரிய ரகங்கள் விளைச்சலை இரு மடங்கு மும்மடங்காய் உயர்த்தும் உயர்வள வித்துக்கள் சி.எஸ். எச். 1, சி.எஸ்.எச். 3, சொர்ணு சோளம் புஞ்சையிலும் புரட்சி செய்யும் புதுக்கம்பு எச்.பி. 3 இவையெல்லாம் இறவையிலும் மாணுவாரியிலும் ஏற்றவிடங்களிலெல்லாம் பயிரிடப்பட்டு 1970, 71-ல் 48,601 ஏக்கர்களிலும், 1971–72-ல் இதுவரை 1,17,993 ஏக்கரிலும் சாதனையாக மிளிர்கின்றன. அமோக விளைச்சல் ரகங்கள் தங்கள் அரிய சாதனைகளை நிகழ்த்த, விளைச்சலை வியத்தகு வண்ணம் குவிக்க, அவைகளை முறைப்படி பயிரிட வேண்டும்; உகந்த உரமிட்டுத், தகுந்த நீர் பாய்ச்சி, பயிர்ப்பாதுகாப்பைப்பக்குவமாய்ச் செய்து, கட்டுக்கோப்புக்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி பூஞ்சாள மருந்துகள் மற்றும் கடன் வசதி ஆகிய தேவைகளை உரிய காலத்தில் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளன. பாசன நீர்ப்பற்ருக்குறையை நீக்க, குறிப்பாக கிழக்கு இராமநாதபுர மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், புதுக்கிணறுகள் தோண்டியும் தரைமட்ட நீரூற்றுக்களைப் பயன்படுத்தவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பரந்து கிடக்கும் கடற்கரையோர மணற்பகுதியைப் பயன்படுத்தி இராமநாதபுரம், திருவாடானை வட்டங்களில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வந்தவர்களுக்கு வாழ்வளிக்கத் தென்னந்தோப்பு வளர்க்கும் திட்டம் 1961-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகின்றது.

இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் நிலம் வழங்கி, தோப்பு வளர்க்கக் கடன் தந்து, தென்னை பலன்தரும்வரை, வாழ்க்கை உதவி நிதியீந்து, உதவி செய்யப்படுகின்றது. கடன் தென்னை நட்ட 11-ஆம் ஆண்டிலிருந்து தவணைகளில் வசூலிக்கப்படுகின்றது. மேலும் தனிப்பட்ட விவசாயிகள்தென்னை வளர்க்க ஏக்கருக்கு ரூ. 300 வீதம் ரூ. 3,000 வரை நீண்டகாலக்கடன் வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த இராமநாதபுரத்திலே தனித்துணை வேளாண்மை இயக்குநர் பணிபுரிகின்ருர். இதுவரை ஏறத்தாழ 600 ஏக்கரில் தென்னை பயிரிட ரூ. 1,80,000 கடன் வழங்கப்பட்டுள்ளது.

கள்ளியும் முள்ளும் சூழ்ந்து கன்னிநிலமாய் பயனற்றுக் கிடந்த கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில், வளமற்ற நிலத்திலும் வளர்ந்தோங்குகின்ற, வறண்ட நிலத்தையும் தனக்கு வாய்ப்பாக்கிக் கொள்ளுகின்ற அந்நியச் செலவாணிதரும், விந்தை மிகு முந்திரி பயிரிடும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் முந்திரிச் சாகுபடி செய்வோருக்கு ஏக்கருக்கு ரூ. 150 வீதம் ரூ. 3,000 வரை கடன் வழங்கப்படுகின்றது. 1970–71-ல் 2,827 ஏக்கருக்கு ரூ. 3·75 லட்சமும், 1971–72-ல் நவம்பர் முடிய 900 ஏக்கருக்கு 0·90 லட்சமும் கடன் வழங்கப்பட்டுள்ளது. காடாய், களராய்க் கிடந்த நிலங்களில் முந்திரி பூத்துக்குலுங்கி முறுவல் பூத்து நிற்பது கிழக்கு இராமநாதபுரத்தில் இன்று கண்கொள்ளாக்காட்சியாகும்.

இம்மாவட்டத்தில் நிலவும் பருத்திக்கு உகந்த வெட்பதட்ப நிலையைப் பயன்படுத்தி ஏக்கருக்கு ரூ. 250 வீதம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வழங்கி, பருத்திச் சாகுபடியை விருத்தி செய்ய இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1970–71—ல் 27,000 ஏக்கர்களில் இறவைப் பருத்தி சாகுபடி செய்ய ரூ. 0·72 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சாத்தூர் திருவில்லிபுத்தூர் வட்டாரங்களில் மாணுவாரிப் பருத்தி சாகுபடி செய்வோருக்கு உதவும் திட்டம் 1971-ஆம் ஆண்டு முதல் செயல்படுகின்றது.

1971–72-ல் 50,100 ஏக்கரில் மாணுவாரிப் பருத்தி பயிரிட ரூ. 5·82 லட்சம் கடன் அளிக்கப்பட்டுள்ளது.

1971-ஆம் ஆண்டு தொடங்கிச் செயல்படுத்தப்படும் இத்திட்டம் நிலக்கடலை பயிரிடுவோருக்கு விதை, உரம், பூச்சி மருந்துகள், சாகுபடிச் செலவுத்தொகை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்க வழி செய்கின்றது.

இதைப்போன்ற கரும்பு வளர்ச்சித் திட்டம், பழத்தோட்டங்கள் அமைக்கக் கடன் வழங்கும் திட்டம், காய்கறி அபிவிருத்தித் திட்டம், ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. தரமுள்ள உயர்வள வித்துக்கள் தரவும், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள் அளிக்கவும், விண்ணின்று மருந்து தெளித்துப் பயிர்களை கண்ணின் மணிகளாய்க் காக்கவும், சிறப்பான திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. களர்நிலங்களும், அமிலநிலங்களும் மிகுந்துள்ள இம்மாவட்டப் பகுதிகளில் நிலச் சீர்திருத்தமே பயனுள்ள பயிர்த்தொழிலுக்கு வழிகோலும் என்பதை உணர்ந்து, களர் நிலங்களைச் சீர்திருத்தத் தேவையான ஜிப்சமும், மீதமுள்ள 50 சதவிகிதம் கிரையம் கடனுகவும், இம்மாவட்ட விவசாயிகளுக்கு அமில நிலங்களைச் சீர்திருத்த வேண்டிய சுண்ணும்பும் 50 சதவீதம், மானிய விலையிலும்

கண்கவர் நாட்காட்டிகள்

இராமநாதபுர மாவட்டம் மத்தாப்பையும், நெருப்புபெட்டியையும் நினைவுறுத்துவது மட்டுமல்ல வண்ண வண்ணப் படங்கள் தாங்கிய நாட்காட்டிகளையும் நினைவூட்டுகின்றன. உள்ளத்தை அள்ளும் ஓவியங்களையுடைய நாட்காட்டிகள் இங்கு இலட்சக்கணக்காக அச்சடிக்கப்படுகின்றன. இவை வடஇந்திய மக்களையும் கவர்கின்றன. அன்றியும் கடல்கடந்து மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, அரேபியா நாட்டு மக்களிடையேயும் இம்மாவட்ட நாட்காட்டிகள் இடம் பெறுவது நமக்குப் பெருமை அளிப்பதல்லவா?

ளிக்கப்படுகின்றது. சீர் ருத்த வேண்டிய நிலங்களில் ருங்கிணைந்த 100 ஏக்கர் குதியைத் தேர்ந்து அதற்கு ப்சம், சுண்ணும்பு, நிலச் சீர் ருத்தப் பொருட்களை இலவச ாக வழங்கி, விளக்கப் பண் ணயொன்று அமைக்கும் திட் ம், சாத்தூரில் செயல்படுத் ப்படுகின்றது. பரமக்குடியில் செயல்படும் மண் பரிசோதனை லையம் வேளாண் குடியின க்குத் தக்க ஆலோசனைகளை ழங்கி வருகின்றது.

மேலும் பின்தங்கியுள்ள இம் ாவட்டத்தின் நலன் கருதி, சென்னை வேளாண்மை இயக்க த்தில் வேளாண்மை வளர்ச்சி ருதி தனித்துச் செயல்படும் ிட்டக்குழு, இம்மாவட்டத்தில் ரு டிராக்டர் பழுதுபார்க்கும் லையம் அமைக்கவும், ஒரு நட ாடும் மண் பரிசோதனை ஊர்தி ற்படுத்தவும், தஞ்சையில் டத்தியதுபோல், இங்கும் தரை மட்ட நீரூற்றுக்களைக் கண்டுபிடித்துப் பாசனப் பற்றுக்குறையைப் போக்கப் பயன்படுத்தவும், நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகின்றது. இவைகளைச் செயல்படுத்தும் காலம் விரைந்து வந்து கொண்டிருக்கின்றது. சிறு விவசாயிகளே சிறப்பாக மிகுந்துள்ள இம் மாவட்டத்தில் இத்திட்டங்களெல்லாம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்களாக விரைவில் அமையும். வறட்சியிலும் வெற்றி பெற்ற பசுமைப் புரட்சி, இராமநாதபுர மாவட்டத்தை தன்னிறைவு பெறச் செய்து, தனது மக்களை அகதிகளாக அனுப்பிய துயர்தரு நிலை துடைத்து, இலங்கை போன்ற இடங்களிலிருந்து அகதிகளாகத் திரும்பும் நமது மக்களுக்குத் தஞ்சமளித்து தலை நிமிர்ந்து நிற்கின்ற காட்சியை இன்று நாம் காணுகின்றோம்.

''தள்ளா விளையுளும் தக்காரும்
தாழ்விலாச்
செல்வரும் சேர்வதுநாடு''

என்ற இலக்கணத்திற்கு இந்த மாவட்டம் இன்று ஏற்றம் பெற்றிருக்கின்றது. இதைப் பார்க்கின்ற நம் உள்ளமெல்லாம் பரவசமடைகின்றது; இந்த வெற்றியை நினைக்கின்ற நெஞ்சமெல்லாம் இனிக்கின்றது.

''பாலைவனம் சோலைவனம் ஆக
வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட
வேண்டும்''

என்ற கவிமணி கண்ட கனவு தமிழக அரசின் சாதனையால் நனவாகின்றது.

வளர்க ஐ.ஆர். 8. வாழ்க பசுமைப்புரட்சி !

(மண்டல வேளாண்மைத் துறை துணை இயக்குநர் அளித்த விவரங்களின் தொகுப்பு.)

நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை
உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச
(46%) அளவுக்கு நைட்ரோஜன்
ஊட்டப்பட்ட உரம் தமிழ்
நாடு, மைசூர், கேரளம்,
ஆந்திரப்பிரதேசம் ஆகிய
மாநிலங்களில் இப்போது
விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைடு
போன்றவற்றைத்
தயாரிக்கத்
தேவையான தரமுடைய
யூரியாவும் உற்பத்தி
யாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும்
அனல்மின்சாரநிலையங்
களிலொன்றில் இது
உற்பத்தியாகிறது.
பழுப்பு நிலக்கரி
யைப் பயன்படு
த்தும் வகையில்
கீழ்த்திசையி
லேயே இந்
நிலையம்தான்
முதலாவது.

கட்டிக்கெட்டித்த
பழுப்பு நிலக்கரி-லிக்னேட்
கட்டிகள், தட்டைகள், பல்வேறு
தொழில்களில் பயன்படு
வதற்கு ஏற்ற எரிபொருள்.
புகையாத இந்தக் கரி
சிக்கனமானது, திறம்
மிக்கது—தமிழ்நாடு,
மைசூர், கேரளம், ஆந்திரப்
பிரதேசம் ஆகிய
மாநிலங்களில்
கிடைக்கிறது.

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன,
பிளாஸ்டிக் தொழில்களில்
உபயோகிக்கப்படும் கார்
பாலிக் அமிலம், ஆர்த்தோ
கிரிசால், மற்றும்
எம். பி. கிரிசால் [illegible]
[illegible]

கெகோலின்:
சானிடரி
சாதனங்கள், பீங்கான்
பாண்டங்கள்,
எந்தச் சக்தி மின்விசை
யையும் ஏந்தி நிற்க
வல்ல இன்சுலேட்டர்கள்
முதலியவற்றை உருவாக்க
உதவும் உயர்தரமான வெள்ளைக்
களிமண். துவலி, ரப்பர்,
[illegible]
[illegible]

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி—1

அரிசன பிற்பட்ட இனங்களுக்கு

இராமநாதபுர மாவட்டத்தில் 1971–72 நிதியாண்டில் அரிசன நலத்துறையிலும், பிற்பட்டோர் நலத்துறையிலும் 1971-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் முடிய, துறை தோறும் ஆற்றியுள்ள சாதனைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இம்மாவட்டத்தில் அரிசன நலத்துறையினரால் 13 அரிசன நல ஆரம்பப் பள்ளிகளும், 3 அரிசன நல உயர்தர ஆரம்பப் பள்ளிகளும் மலைவாழ் சாதியினரின் குழந்தைகளுக்கான 1 ஆரம்பப் பள்ளியும், மேலும் கள்ளர், விமுக்த வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக 6 ஆரம்பப் பள்ளிகளும், ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியும் ஆக 24 பள்ளிகள் நடத்தப் படுகின்றன. இவைகளில் 2,909 மாணவர்களும், 1,628 மாணவியரும் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பள்ளிகளின் பராமரிப்பிற்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3,43,250-ல் இதுவரை ரூ. 2,23,470.25 செலவிடப்பட்டுள்ளது.

மேலும் இம்மாவட்டத்தில், அரிசனம், விமுக்த வகுப்பினர் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கான 73 விடுதிகள் நடைபெற்று வருகின்றன. இவைகளில் 4,201 மாணவ மாணவியர் தங்கிப் பயனடைகின்றனர். இவைகளின் பராமரிப்பிற்காக இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11,01,675ல் இதுவரை ரூ. 7,04,303 செலவிடப் பட்டுள்ளது.

அரிசன விமுக்த பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் கல்வி உயர்விற்காக, அரசு உபகாரச்சம்பளம் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் இதுகாறும் 24,430 அரிசன மாணவ மாணவியரும், 15,804 விமுக்த வகுப்பினரும், 17,269 பின் தங்கிய வகுப்பு மாணவ, மாணவிகளும் உபகாரச்சம்பளம் பெற்றுக் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 54,09,418.

அரிசன நல பிற்பட்டோர் நலத்துறையினராலும் மற்றும் பஞ்சாயத்து, இதரப் பள்ளிகளிலும் கல்வி கற்கும் 14817 அரிசன சிறுவர், சிறுமியருக்கு மதிய உணவு அளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,08,900. செலவிடப்பட்ட தொகை ரூ. 3,50,308.

இவ்வாண்டில், சிவகெங்கை, முதுகுளத்தூர், வட்டங்களில் வாழும், 22 அரிசன ஏழை விவசாயிகளுக்கு உழவுமாடுகள் வழங்கப்பட்டன. இதற்காக இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 11,000. இது செலவிடப்பட்டுள்ளது

அரிசனங்களுக்கு விவசாயக் கிணறுகள் வெட்டுவதற்காக ரூ. 71,000 ஒதுக்கப்பட்டதில் இதுவரையில் 43,500 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 63 கிணறுகள் வெட்டப்படுகின்றன.

இவ்வாண்டில் அரிசனங்களின் குடி தண்ணீர் வசதிக்காக 66 கிணறுகள் வெட்டப்படுகின்றன. இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,60,000; இதுவரை செலவான தொகை ரூ. 1,00,016.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ரூ. 60,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5 கிராமங்களில் 64 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வீடு ஒன்று ரூ. 940 மதிப்பீட்டில் மலிவான வீடு கட்டும் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டப்படுகின்றன.

அரிசன விடுதிகளில், தங்கிக் கல்வி பயிலும், மாணமாணவியருக்கு உடைகள் வழங்குவதற்காக ரூ. 1,03,010 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 2,104 மாணவிகளுக்கும், தீபாவளிக்கும், பொங்கலுக்கும் 1,402 மாணவருக்கு உடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 1,01,856

இம்மாவட்டத்தில் 3 சமுதாய நல மன்றங்கள் செயல்படுகின்றன, அவைகளுக்காக ஆண்டுதோறும் ரூ. 20,000 செலவிடப்படுகிறது.

அரசு செய்துள்ள அரும்பணிகள்

பி.ஆர்.எஸ்-72

சம்பா அல்லது தாளடி நெல் அறுவடை முடிந்த பிறகு, கோடையில் நிலத்தைத் தரிசாகப் போடாமல் ''பி.ஆர்.எஸ். 72'' என்ற ரகப் பருத்தியைப் பயிரிட்டால், உழவர் பெருமக்களின் வருவாய் பெருகும். அத்துடன் நம் நாட்டில் தற்பொழுது நிலவி வரும் பருத்திப் பற்றாக்குறையும் ஓரளவிற்கு நீங்கி, அந்நியச் செலாவணியும் மீதமாகும்.

''பி. ஆர். எஸ். 72'' என்ற நன்செய் தரிசுக்கு ஏற்ற பருத்தியை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கோயம்புத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தினர் கண்டுபிடித்து, 1966ஆம் ஆண்டில் சாகுபடி செய்வதற்காக வெளியிட்டனர். இந்த ரகத்தின் வயது 120 முதல் 130 நாட்களாகும். இந்த ரகப் பருத்தியைக் கொண்டு 40-ஆம் எண் நூல் வரை நூற்க முடியும். இதன் அரைவைத் திறன் 36 சதமாகும். பி.ஆர்.எஸ். 72 பருத்திச் சாகுபடி செய்ய, நெல் அறுவடைக்குப்பின் உழவு செய்ய வேண்டிய அவசியமில்லை. நெல் அறுவடைக்குப் பின், உடனடியாக வயலில் ஈரம் இருக்கும் போதே விதைகளை நேரடியாக ஊன்றி விடலாம். இவ்வாறு செய்வதால் பி. ஆர். எஸ். 72 பருத்தி சாகுபடி செய்ய ஆரம்பச் செலவும் மீதமாகிறது.

விதைத்தல்.

ஒரு ஏக்கருக்கு 9 கிலோ விதைகளை ஊன்ற வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் அக்ரசான் மருந்து வீதம் கலந்தபின்பே விதைகளை ஊன்ற வேண்டும். விதைகளை வரிசை வரிசையாக ஊன்ற வேண்டும். வரிசைக்கு வரிசை 1½ அடி இடைவெளியும், வரிசையில் குழிக்குக் குழி 9 அங்குலம் இடைவெளியும் விட்டு, குழிக்கு 3 விதைகள் வீதம் இட்டு ¼ அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். நெல்வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே விதைகள் முளைத்துவிடும். நிலம் காய்ந்திருக்குமானால் தண்ணீர் விட்டு, அதன்பின் விதைகளை ஊன்ற வேண்டும்.

15-ஆம் நாள் : 220 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 150 மில்லி லிட்டர் மெட்டாசிஸ்டாகஸ் அல்லது எக்காடின் அல்லது ரோகார் மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவேண்டும். விசைத் தெளிப்பானுக்கு 50 லிட்டர் தண்ணீரில் மேற்கூறப்பட்ட அளவு மருந்தைக் கலக்க வேண்டும்.

21-ஆம் நாள் : வயலைக் களைக் கொட்டால் கொத்திவிட்டு, களை எடுத்த பின்பு, ஏக்கருக்கு 30 கிலோ டை அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களைக் கலந்து செடிகளைச் சுற்றிலும் இட்டு, மண் அணைத்து நீர்பாய்ச்ச வேண்டும்.

25-ஆம் நாள் : 50 மில்லி லிட்டர் என்டிரின் மருந்தையும், 30 மில்லி லிட்டர் டைமெக்ரான் மருந்தையும், 280 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பானுக்கு 70 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்கவும்.

31-ஆம் நாள் : தண்ணீர் பாய்ச்சவும்.

40-ஆம் நாள் : 1·200 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 600 கிராம் கந்தகத் தூளையும் 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளித்தல் வேண்டும்.

45-ஆம் நாள் : இரண்டாம் முறையாகக் களை எடுத்து, ஏக்கருக்கு 31 கிலோ யூரியா வீதம் இரசாயன உரமிட்டு, மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

55-ஆம் நாள் : 600 மில்லி என்ட்ரின் மருந்தையும், 2.160 கிலோ தாமிரக் கலவை மருந்தையும், 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

60-ஆம் நாள் : தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

70-ஆம் நாள்: 1·200 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 240 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தையும், 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

75-ஆம் நாள் : தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

85-ஆம் நாள் : 1·200 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 600 கிராம் நீரில் கரையும் கந்தகத் தூளையும், 480 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 120 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

90-ஆம் நாள் : தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 95-ஆம் நாட்களுக்குப் பிறகு தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விட வேண்டும்.

100-வது நாள் : 1·400 கிலோ கார்பரில் 50 சதத் தூளையும், 280 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தையும், 560 லிட்டர் தண்ணீரில் (விசைத் தெளிப்பான் 140 லிட்டர் தண்ணீர்) கலந்து தெளிக்க வேண்டும்.

அறுவடை : வாரம் ஒரு முறை காலை நேரத்தில், பருத்தியை எடுக்க வேண்டும். சேகரித்த பருத்திகளை தூசு நீக்கி, காய வைத்துச் சேமிக்கவேண்டும். 120 முதல் 130 நாட்களில் பருத்தி எடுப்பது முழு அளவில் முடிந்து விடும். அறுவடை முடிந்த பின் பருத்திச் செடிகளை மடக்கி உழுது, அடுத்துப் பயிரிடவிருக்கும் குறுவை நெல்லுக்குத் தழை உரமாக்கி விடலாம். ஒரு ஏக்கரிலிருந்து குறைந்தது 400 கிலோ பருத்தி கிடைக்கும். ஒரு ஏக்கர் பி. ஆர். எஸ். 72 பருத்தி மூலம் சராசரியாக ரூபாய் 400 வரை நிகர இலாபம் கிடைக்கக் கூடும். எனவே, சம்பா அல்லது தாளடி நெல் அறுவடைக்குப் பிறகு மேற்கூறிய முறையில் பி. ஆர். எஸ். 72 பருத்தி பயிரிட்டு பலனடையுமாறு வேண்டுகிறோம்.



மீன்வளப் பெருக்கமும் மீனவர் வாழ்வும்

தமிழகத்து மாவட்டங்களிலேயே மிக நீண்ட கடற்கரையுள்ள மாவட்டம் இராமநாதபுர மாவட்டமேயாகும். இதன் கடற்கரையின் நீளம் 160 மைல். உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பு சுமார் ஏறத்தாழ 78,000 ஏக்கர்.

இராமநாதபுர மாவட்டத்தின் முக்கிய தொழில்களில் மீன் பிடிக்கும் தொழிலும் ஒன்று. இத்தொழிலில் ஏறத்தாழ 25,000 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. தமிழக அரசு அந்த மீனவர்கள் தொழில் நடத்துவதற்கும் தொழிலுக்குத் தேவையான கருவிகள் வாங்குவதற்கும் கூட்டுறவு முறையில் கடன்களும், மானியங்களும் வேறுபல உதவிகளும் அளிக்கின்றது. தொழிலுக்குத் தேவையான துணைக்கருவிகள் வாங்குவதற்கும் பத்தாண்டுத் தவணைகளில் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடன்களையும் ஐந்தாண்டுகளில் செலுத்தக்கூடிய குறைந்த காலக் கடன்களையும் அரசு தாராளமாக வழங்குகின்றது. இப்படிக் குறைந்த காலக் கடனாக, 1966—67ல், ரூ. 67,000; நீண்ட காலக் கடனாக ரூ. 20,300; 1967—68ல் நீண்டகாலக் கடனாக ரூ. 27,000; 1968—69ல் குறைந்த காலக் கடனாக ரூ. 5,000; நீண்டகாலக் கடனாக ரூ. 63,000; 1969—70ல் நீண்டகாலக் கடனாக ரூ. 10,000; 1970—71ல் நீண்டகாலக் கடனாக ரூ. 5,000; மீனவர்கள் வாழ்வில் ஏற்றம்பெறத் தக்கவகையில் வழங்கியுள்ளது. அரசு, இவ்வாறு அனுமதிக்கும் கடனை, மீனவர்கள் தாங்கள் உறுப்பினராக உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகப் பெறுகின்றனர். கடன் பெற்ற மீனவர்களிடமிருந்து மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கூட்டுறவுச் சங்கங்கள் வசூலித்து, ஆண்டுக்கு ஒரு முறை அவை அரசாங்கத்திற்குச் செலுத்துகின்றன.

கடலையே நம்பி வாழும் மீனவர்களுக்கு அரசு இவ்வாறு கடன்கள் உதவுவதோடு, தீ விபத்து, புயல், கடற்கொந்தளிப்புப் போன்ற எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டால், வீடிழந்தோர் வீடு கட்டிக் கொள்ளவும், வலைகளை இழந்தோர் புது வலைகள் வாங்கிக் கொள்ளவும் அரசு, மானியம் வழங்குகிறது.

மீன்வளம்

தமிழகத்தில் ஆண்டு தோறும் 3,00,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இந்தியாவெங்கும் ஆண்டு தோறும் பிடிக்கப்படும் மீன்களின் அளவு 14,00,000 டன்கள். இந்தியாவில் பிடிக்கப்படும் மொத்த மீன்களில் தமிழகத்தில் பிடிக்கப்படும் மீன்களின் அளவு சுமார் 21 சதவீதம்

கடலில் மீன் பிடிக்கும்போது அவர்கள் இறந்துவிட்டால், அவர்தம் குடும்பத்திற்கு 300 ரூபாய் உதவி வழங்கப்பட்டு வந்ததைத் தமிழக அரசு 1970—71 லிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது.

1970—71ல் தீ விபத்தின் காரணமாக வீடிழந்த 50 மீனவர்கள் குடும்பங்கட்கு ஒரு குடும்பத்திற்கு 100 ரூபாய் வீதம் 5,000 ரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளது.

1967ல் ஏற்பட்ட புயலில் நூல் வலை இழந்தவர்கள் புதிய வலைகள் வாங்கிக் கொள்வதற்காக ரூ. 1,60,387 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதுபோல் நைலான் வலையிழந்தவர்களுக்கு ரூ. 1,96,584 மானியமாக வழங்கப்பட்டது. இதே விபத்தில் படகுகளை இழந்தவர்கள் புதிய படகுகளை வாங்கிக் கொள்ள ரூ. 42,700 வழங்கப்பட்டுள்ளது.

1970—71ல் விபத்துக்குள் [illegible] உயிரிழந்த 6 பேர்களின் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 1,000 ரூபாய் வீதம் 6 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது.

இவ்வாறு [illegible]பத்தில் பொருள்களை இழந்தவர்களுக்கு உடனடி நிவாரணமாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 5[illegible] வீதம், 2,03,600 ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களுக்குத் தேவையான விசைப் படகுகளைத் தயாரிப்பதற்காக இந்திய நார்வே திட்டம் என்னும் பெயரில் மண்டபத்தில் ஒரு படகு கட்டும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தொழிற்சாலை 1966—67ல் உற்பத்தி தொடங்கி 1970—71 வரை 32' நீளமுள்ள 136 விசைப் படகுகளையும், 43' நீளமுள்ள 3 விசைப் படகுகளையும் தயாரித்துள்ளது. இந்த விசைப் படகுகளை இயக்குவதற்காக மீனவர்களுக்கு 10 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தலா 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.



மற்றும், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களைப் பதப்படுத்தி இரண்டு மூன்று நாட்கள் வரைகூடப் பாதுகாத்து வைப்பதற்காகக் குளிர் பதன அறைகள் மண்டபம், இராமேஸ்வரம், கீழக்கரை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் மீனை வைத்துக் கொள்வதற்காக அரசு மிகக் குறைந்த வாடகையை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது.

கடந்த நான்காண்டுகளில் மீனவர்களுக்கு 73 விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. 4 அல்லது 5 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவிற்கும் இவ்வாறு படகுகள் கடனாக வழங்கப்படுகின்றன. கடனாக வழங்கும் படகுகளை, அரசு தருகிற மானியத்தின் பயனாக, 48,000 ரூபாய் மதிப்புள்ள படகை 32,000, ரூபாய்க்கும், 68,000 ரூபாய் மதிப்புள்ள படகை 43,000க்கும் 75,000 ரூபாய் மதிப்புள்ள படகை 47,000-க்கும் மீனவர்கள் பெறுகின்றனர்.

முன்னர் சங்குக் குளிப்பதை அரசே ஏற்று நடத்தித் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுத்து வந்தது. இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 5 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்து வந்தது. தற்போது, 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து உரிமத் தொகையாகத் தலா 10 ரூபாய் மட்டும் கட்டுகிற எல்லா மீனவர்களும் சங்குக் குளித்து, கிடைக்கும் முழுப்பயனையும் அவர்களே அனுபவித்துக் கொள்ள ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வளவு வசதிகளையும் செய்து தந்துள்ள அரசு, மீனவர் குடியிருப்புக்கென 1970–71ல் 30 குடியிருப்புகளுக்கு ரூ. 30,000 அனுமதித்து வீடுகட்டும் வேலை நடைபெற்று வருகிறது. ஒரு வீடு கட்டுவதற்கு அனுமதித்துள்ள 1,000 ரூபாயில், 300 ரூபாய் மானியம் மீதி 700 ரூபாய் நீண்டகால வட்டியில்லாக் கடன்.

மீனவர்கள் பயனுள்ள முறையில் பொழுது போக்கவும், புயல் முன்னறிவிப்புப் போன்ற செய்திகளை அறிந்து கொள்ளவும் பயன்படும் வகையில், ரூ. 60,000 செலவில் மூன்று வெவ்வேறு ஊர்களில் மன்றங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்களில், புயல் முன்னறிவிப்புச் செய்திகளை முன்கூட்டியே அறிவிக்கும் அபாயச் சங்குகளும், வானொலிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, கடலில் பயணம் செய்கின்றபோது விபத்து ஏற்பட்டால் தற்காத்துக் கொள்ள உயிர் காப்புச் சாதனங்களாகிய ரப்பர் வளையங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மீன், கருவாடுகளை நீண்ட தூரங்களுக்கு அனுப்ப, மீன் வளத்துறையின் சார்பில் இரண்டு உந்துகள் விலைக்கு வாங்கப்பட்டுத் தேவைப்படும்போது மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கெனக் குறைந்த வாடகை வசூலித்துக் கொள்ளப்படுகிறது.

இது தவிர, மீன் வளத்திற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள இராமநாதபுர மாவட்ட மீன் வளப்பிரிவு, கடற்கரையல்லாத உள்நாட்டுப் பகுதிகளில் மீன் வளர்க்க—மீன் வளத்தை அதிகரிக்கப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக ஊராட்சிகளின் மீன் வளர்ச்சிக்கும், ஊராட்சி மீன் பண்ணைகளுக்கும் ஆண்டுதோறும் மானியம் வழங்குவதோடு, புது இன மீன் குஞ்சுகளையும் வழங்குகிறது.

தனியார்களுக்கு மீன் குஞ்சுகள் தேவைப்பட்டால், குறைந்த விலையில் மீன் குஞ்சுகள் வழங்குவதோடு, வளர்ப்பு முறைகளும் கற்பிக்கப்படுகின்றன.

இவை தவிர, இராமநாதபுர மீன்வளப் பிரிவுக்குச் சொந்தமான காளையார்கோயில், காரைக்குடி, விருதுநகர், கல்லல் ஆகிய ஊர்களில் உள்ள சுமார் 10 குளங்களில் மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு, அங்கு, புது இன மீன்கள் வளர்க்கப்படுகின்றன. அவை, பொது மக்களுக்குக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

இராமேசுவரத்தில் 12 லட்சம் ரூபாய் செலவில் மீன்பிடி துறையொன்று கட்டப்பட்டுள்ளது. மேலும், மண்டபத்தை மீன் அபிவிருத்திக் கேந்திரமாகவே மாற்ற மாபெரும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பல கோடி ரூபாய் செலவாகும் எனினும், விரைவில் வேலைகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மண்டபத்தில் ரூ. 3.5 லட்சம் செலவில் 50 அடி நீளமுள்ள விசைப்படகு ஒன்று கட்டப்பட இருக்கிறது. மேலும் 43½ அடி நீளமுள்ள மீன் பிடி விசைப்படகு மூன்றும் கட்டப்பட இருக்கின்றன.

அடுத்து, மண்டபத்திலிருந்து, பாம்பனுக்குத் தற்போதுள்ள பாலத்திற்கு இணையாக ஒரு நடை பாதைப் பாலம் அமைக்க அரசு ரூ. 6 கோடி அனுமதித்துள்ளது. இந்த வேலை இவ்வாண்டு தொடங்கப்படும். சாலைப் போக்குவரத்து இல்லாத இராமேசுவரத்திற்கும் மண்டபத்திற்கும் இடையே அமையப் பெற விருக்கும் இந்தப்பாதையின் மூலம் இரண்டுக்குமிடையே சாலைப் போக்குவரத்துத் தொடங்கும்—போக்குவரத்து இன்னும் பன்மடங்கு பெருகும் என்பதிலும், இந்த மாவட்டத்தில் மீன் வளம் மிகச் சிறந்து, மீனவர் வாழ்வு மேலும் நல்ல முறையில் உயர்ந்து செழிக்கும் என்பதிலும் ஐயமில்லை!

விலங்குச் சாலையில் வேலை

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் விலங்குச் சாலையில் வேலைபார்க்க விரும்புகிறவர்களுக்கு மூன்று ஆண்டுப் பயிற்சி தரப்படுகிறது. அதன் பிறகு, யானையின் நகங்களை அரத்தினால் தேய்த்து மெருகிடும் தேர்வு வைக்கிறார்கள். அந்தத் தேர்வில் வெற்றி பெற்றால்தான் வேலை கிடைக்கும்.

வெண்பாப் போட்டி-29

முறிப்படி

காரம் இனித்திடுமே காண்!

முடிவு நாள்: 1—3—1972

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி).
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு—

நேரிசை வெண்பாக்களே அனுப்பப்படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

உள்ளொளி பெருக்கும் வெள்ளிவிழாக் கல்லூரிகள்



காரைக்குடி அழகப்பா கல்லூரி

இராமநாதபுர மாவட்டத்தில் இவ்வாண்டில் மூன்று முதல்தரக் கலைக்கல்லூரிகள் வெள்ளிவிழாக் காண இருக்கின்றன.

1947-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை இராமநாதபுர மாவட்டத்தில் கல்லூரி ஏதும் இல்லை. பிற துறைகளைப் போலவே உயர்கல்வித் துறையிலும் இம்மாவட்டம் மிகப் பின்தங்கியே நின்றது. திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற நகரங்களில் அமைந்த கல்லூரிகளை நாடியே இம்மாவட்ட மாணவர்கள் செல்ல வேண்டியதாயிற்று. நாடு உரிமை பெற்றதைத் தொடர்ந்து, உயர்கல்வி பெற வேண்டுமென்ற நாட்டமும் ஊட்டம் பெறத் தொடங்கியது. ஆனால், அரசாங்கமே கல்லூரிகளை ஆங்காங்கு நிறுவும் அளவுக்கு நிதி வசதி இடம் தரவில்லை. எனவே, கல்விப் பணியில் ஆர்வமிக்க நல்லன்பர்களும், நிறுவனங்களும், கல்லூரிகளை நிறுவ முன்வந்தால் பல்கலைக்கழகம் ஆன உதவிகளை அளிக்கும் ' என்றார் முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார். இந்த அறைகூவலை ஏற்று மாவட்டத்தின் மூன்று பகுதிகளில் மூன்று கல்லூரிகளை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இராமநாதபுர மாவட்டத்தின் வடபகுதியில் பெருநகரமான காரைக்குடி, சிவகங்கை, கிழக்குப் பகுதியில் வணிகநகரமாகிய விருதுநகர் எனுமிடங்களில் இக் கல்லூரிகள் தோன்றின.

கல்வித் துறைக்கே தன் செல்வமனைத்தையும் அள்ளி வழங்கிய வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார்—காரைக்குடியில் நிறுவிய கல்லூரி அழகப்பா கலைக்கல்லூரி. ஏறத்தாழ மூவாயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் 1947-ல் கால்கோளிடப்பெற்ற இக்கலைக் கல்லூரி, பல்துறைச் சிறப்புக்களைக் கொண்டு விளங்கியது. நிறுவப்பெற்ற ஒருசில ஆண்டுகளுக்குள்— தன் வழியாகவே பல கல்வி நிலையங்கள் சூழ்ந்தமைய இக்கலைக்கல்லூரி இடம் தந்தது. அழகப்பா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, அழகப்பா பொறியியற் கல்லூரி, அழகப்பா தொழில் நுணுக்கப்பள்ளி, அழகப்பா உடற்பயிற்சிக் கல்லூரி என்பனவும், மத்திய மின்சார ரசாயன ஆராய்ச்சிக் கூடமும் அடுத்தடுத்துத் தோன்றின. காரைக்குடியையே ஒரு கலைவளர் பண்ணையாக்கிய அழகப்பா கலைக்கல்லூரியில் மட்டும் இப்போது இரண்டாயிரம் மாணவர்க்கு மேல் பயில்கின்றனர். பட்ட வகுப்பில், கலையியல்—அறிவியல் துறைப்பிரிவுகள் அனைத்தும் உள்ளன. முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் தமிழ் வணிகம் என்பன கற்பிக்கப்படுகின்றன. அழகப்பா பொறியியல் கல்லூரி கடந்த சில ஆண்டுகளாக அரசினர் கல்லூரியாக இயங்கி வருகின்றது.

வீரம் விளைத்த நிலம்—சிவகங்கைச் சீமை. பாரம்பரியமாக மறக்குல மக்கள் வீறுபெற விளங்கிய இப்பகுதி— கல்வித் துறையில் கடைநிலையில் உழன்றது. இக்குறையினைக் களைய முன் வந்தார் சிவகங்கை மன்னர் சண்முகராஜா அவர்கள். அவரது தந்தையார் ராஜா துரைசிங்கம் அவர்கள் நினைவாகத் துவக்கப்பெற்ற இக் கல்லூரி 1951 வரை ' கௌரி விலாசம் ' எனப்படும் அரண்மனையிலேயே இயங்கி வந்தது. 1951-ல் புதிய கட்டடங்கள் அமைந்தன. ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் பயிலும் இக்கல்லூரியில் வரலாறு, வணிகம், பொருளாதாரம் முதலிய கலையியற் பாடங்களும் எல்லாவகை அறிவியற் பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. மிகப் பின்தங்கிய பிராந்தியம் ஒன்றில் உயர்கல்வி அளிப்பதை ஒரு தொண்டாகக் கருதிப் பணியாற்றுவதில் இக்கல்லூரி முன்னிடம் பெறுகிறது.

வாணிகப் பெருநகரமாக வளர்ந்து வந்த விருதுநகர்ப் பகுதியில் கல்லூரி ஒன்றில்லாக் குறையைக் களைய அன்பர் பலர் முன்வந்தனர். 1947-ல் கோவில்பட்டியில் கூடிய நாடார் மகாஜன சங்கத்தில் கல்லூரி நிறுவ இரண்டு இலட்ச ரூபாய்களை நன்கொடை தருவதாக உயர்திரு செந்திக்குமார நாடார் அறிவிக்க திரு வி. வி. ராமசாமி, திரு டபிள்யு.பி.ஏ. சந்திரசேகரன் முதலியோர் செயற்குழு அமைக்க, விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி எழுந்தது. அருப்புக்கோட்டை நெடுஞ்சாலைக்கருகில் உள்ள பெரியதொரு இடத்தில் கட்டடங்கள் கட்டப் பெற்றன. 1951-ல் கல்லூரி பொலிவு பெற்றது. புகுமுக வகுப்பு முதல் முதுநிலை வகுப்பு வரை, ஆராய்ச்சித் துறைகளுடன் அமைந்த இப்பெருங் கல்லூரியில் 2,500 மாணவர் வரை பயில்கின்றனர்.

சிவகங்கை அரசர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி

வெள்ளிவிழாக் காணும் இம்மூன்று முதனிலைக் கல்லூரிகளும், இராமநாதபுர மாவட்டத்தின் மூன்று முக்கிய பகுதிகளில் இருபத்தைந்து ஆண்டுகளாக ஆற்றிய அரும்பணியின் விளைவாக அப்பகுதியில் உயர்கல்வி பெறுவாரின் எண்ணிக்கை மிகவும் பெருகியுள்ளது. இதன் பயனாகத் திறமான கல்விபெற்ற புதிய தலைமுறை ஒன்று உருவாகியுள்ளது. இவ்வகையில் நற்பணியாற்றிவரும் இந்தக் கல்லூரிகள் மூன்றும், வரும் ஆண்டுகளில் புதிய புதிய கலைத் துறைகளை மேற்கொண்டு, பல்லாற்றானும் பயன்தந்து பொன் விழாக்கோலம் பூணுமாறு வாழ்த்துவோமாக !

இராமேஸ்வரத்தில் பனை ஓலைத் தொழில்

இராமேஸ்வரத்தில் பனை மரங்கள் மிகுதி ; எனவே பனை ஓலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் மிக அதிகம். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பனை ஓலைத் தொழிலாளர்கள் ஏற்கெனவே ' கண்ணிப்பெட்டி ' எனப்படும் ஒருவகைப் பெட்டிகளை மட்டுமே செய்து வந்தனர். இவர்களுக்குத் தொழில் நுணுக்கப் பயிற்சியளித்து, நல்வாழ்வு நல்கும் நோக்கத்தோடு தமிழக அரசு, கடந்த 1968 ஏப்ரல் திங்களில் 'அரசினர் பனை ஓலைப் பயிற்சி நிலையம்' என்னும் பெயரில் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தது. இங்கு, ஒவ்வோராண்டும் 20 பேருக்கு ஓராண்டுக் காலப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்குத் தலா 50 ரூபாய் உபகாரச் சம்பளம் பெறுகின்றனர்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த பெண்கள், இங்கேயே ஓய்வு நேரங்களில் பல்வேறு பனை ஓலைக் கூடைகளும், அழகுப் பொருள்களும் செய்கின்றனர். இவர்கள் மாதம் ஒன்றுக்குத் தலா 75 ரூபாய் வரை சம்பாதிக்கின்றனர்.

இந்நிலையத்தில் செய்யப்படுகிற பனைஓலைப் பொருள்கள், உள்ளூரில் விற்பனையாகின்றன. இவை தவிர, டில்லி முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இராமேஸ்வரம், அரசினர் பனைஓலைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் பலரும் சேர்ந்து, பனை ஓலை உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். இச்சங்கம் இன்னும் சில வாரங்களில் செயல்படத் தொடங்கும். இதனால் இராமேஸ்வரத்தில் பனை ஓலைத் தொழில் மேலும் சிறப்பான முறையில் வளரும் என்பதோடு, பனை ஓலைத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெறும் என்றும் உறுதியாக நம்பலாம். இது போன்று, மறவமங்கலம், கமுதி, இராமநாதபுரம், தேவகோட்டை முதலிய ஊர்களிலும் பனை ஓலைத்தொழிலாளர்களுக்குச் சங்கங்கள் உள்ளன.

செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெறலாமே ! ஆமாம் செல்வி கன்னு தனது ஓய்வு நேரத்தைச் சிறுசேமிப்பு முகவராகப் பணியாற்றுவதில் செலவிட்டனர்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி சுசிலா ரோஹட்கி யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறிவீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படி பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
தேசிய சேமிப்பு நிறுவனம்
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
தமிழ்நாடு அரசு



தமிழ் நாடு அரசின் தரமான 'சிமெண்ட்' ஆ

தமிழகத்தில் உள்ள 7 சிமெண்ட் தொழிற்சாலைகளில் இரண்டு தொழிற்சாலைகள் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளன. அவற்றுள் அரசுத் துறையில் அமைந்த முதல் சிமெண்ட் தொழிற்சாலை இராமநாதபுர மாவட்டம் ஆலங்குளத்தில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ்தான்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது.

இந்தத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 1,200 டன் சிமெண்ட் தயாரிக்ககிறது. இப்போது அங்கே 762 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். உற்பத்தித் திறனை 4 லட்சம் டன்களாக உயர்த்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

அரசுத்துறையில் அமைக்கப் பெற்ற,முதல் சிமெண்ட் தொழிற்சாலை தரமே உருவான-தரத்தில் உயர்ந்த சிமெண்டை உற்பத்தி செய்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இப்பொழுது இங்கு தயாராகும் சிமெண்ட் கேரளா, மைசூர், டெல்லி, கல்கத்தா முதலிய பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை தயாரிக்கும் அரசு சிமெண்டுக்குநல்ல வரவேற்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல—முதல் ஆண்டிலேயே இலாபம் சம்பாதித்துள்ளது தமிழ்நாடு சிமெண்ட்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு சிமெண்ட், தொழிற்சாலையில் சிமெண்ட் குழாய்கள் தயாரிக்கத் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இதனால் மேலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

இராமநாதபுர மாவட்டத்தில் கோயில்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் சுமார் 2370 கோயில்கள் உள்ளன. இவற்றுள் இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறையின் கீழ் உள்ளவை 510.

ரூ.20,000 க்கு மேற்பட்ட வருமானமுடைய கோயில்கள் 30

கடந்த ஆண்டுகளில் சுமார் 30 கோயில்களின் திருப்பணிக்காகத் தமிழ் நாடு அரசு வழங்கியுள்ள தொகை ரூ.2,12,500.

வேளாண் குடியினருக்கு வீடும் நிலமும்...

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அதன் விவசாய உற்பத்தியும் தொழில்வளமுமேமுக்கியம். தமிழ்நாடு பெரும்பாலும் விவசாய நாடே என்பதை நாமறிவோம். எனவே, தமிழ்நாடு உயர வேண்டுமெனில் விவசாயம் செழித்தோங்க வேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற நிலம் உழவனுக்குச் சொந்தமாய் இருக்க வேண்டும் என்பது அடிப்படை உண்மை.

நிலமில்லாத ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சாகுபடிக்குரிய நிலங்களை உரிமையாக்குவதும் குடியிருக்க மனையற்றோருக்கு வீட்டு மனைகள் வழங்குவதும் தமிழக அரசின் தலையாய கொள்கைகளாகும். இக்கொள்கைகளின் அடிப்படையில் அரசும், அதன் அலுவலர்களும் தீவிரமாகச் செயலாற்றியதன் பயனாக நிலம் ஒப்படை செய்யப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் விவரங்களை இம்மாவட்டத்தில் மாதந்தோறும் அச்சிடப்பெற்று வெளியிடப்படும் புத்தகங்கள் எடுத்துக் காட்டும்.

தமிழக அரசு, நிலமற்ற ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தரிசாய்க் கிடக்கின்ற புறம்போக்கு நிலங்களை விரைவாக ஒப்படை செய்ய வேண்டுமென்று பணித்தது. அத்துடன் ஏழைக் குடிமக்கள் குடியிருக்க வீட்டு மனைகளும் வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இப்பணிகளை விரைவாகவும், நல்ல முறையிலும் செயல்படுத்தத் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பெற்று அவர்கள் 1969-ஆம் வருடம் மே மாதம் முதல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.



இராமநாதபுர மாவட்டத்தில் முனைப்புக் குடும்ப நலத் திட்ட இயக்கம் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி துவங்கி நவம்பர் மாதம் 22-ஆம் தேதி முடிவடைந்தது. அக்டோபர் 1-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை கிராமங்களில் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட்டது. அக்டோபர் 16-ஆம் தேதி முதல் நவம்பர் 22-ஆம் தேதி முடிய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. இம்மாவட்டத்தில் உள்ள 32 அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் எல்லா அரசினர் மருத்துவ மனைகளிலும் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. 38 நாட்களில் 9,294 ஆண்களுக்கும், 991 பெண்களுக்கும் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. இது தவிர, 657 பெண்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டது.

இந்தத் தீவிர இயக்கத்தின் போது சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 1,038 ஆண்களுக்கும், 56 பெண்களுக்கும் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, 48 பெண்களுக்குக் கருத்தடை வளையமும் பொருத்தப்பட்டுத் தமிழ் நாட்டிலேயே மாபெரும் சாதனையை முதன்முதலில் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

உருவிலே சிறியது உலகிலே சிறந்தது!

தமிழரின் சாதனைக்கோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது மினி - மின்சாரக் கணக்கிடும்கருவி (Mini –Electronic Calculator). அதிசய மனிதர் திரு ஜி. டி. நாயுடு அவர்களின் அற்புதப் படைப்புகளில் ஒன்றுதான் இது!

எட்டு இலக்கம் வரை கூட்டலா, கழித்தலா, பெருக்கலா, வகுத்தலா, எந்தக் கணக்காலும் சரி, $\frac{2}{10,00,000}$ விநாடி நேரத்தில் கணக்கிட்டுக் கொடுத்து விடுகிறது இந்த அதிசயக் கருவி. உலகிலேயே மிகச்சிறிய கணக்கிடும் கருவி இதுவரை, இதுதான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஒரு சிகரெட் பெட்டியை விடச் சற்றே பெரிய அளவில் இருக்கிறது இக்கருவி. மிகவும் சிறியதாகவும், குறைந்த எடையுள்ளதாகவும் இருப்பதால் இக்கருவியைச் சட்டைப்பையிலேயே எளிதில் வைத்துக் கொள்ளலாம். இக்கருவி 120 × 76 × 24 மில்லி மீட்டர் அளவில் அமைந்துள்ளது. இதன் எடை 200 கிராம்.

இந்தக் கருவியைக் கோயம்புத்தூரில் உள்ள யு.எம்.எஸ். ரேடியோ பேக்டரி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் தயாரித்து வருகிறது. உலகில் வேறெங்கும் இதுபோன்ற கருவி தயாரிக்கப்படாததால், இக்கருவிக்குப் பெரும் ஏற்றுமதி வாய்ப்பு உள்ளது. இரண்டாண்டு உற்பத்தி முழுவதையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வாங்கிக் கொள்ள முன் வந்துள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

இக்கருவியின் முக்கிய சிறப்புகள்

1. வங்கிகளின் செயல்முறைக்குப் பயன்படும் ' ரவுண்டிங் ஆப் டிவைஸ் ' (Rounding off device) இதில் அடங்கியுள்ளது.

2. பெரிய அளவு கணக்கிடும் கருவிகளில் இல்லாத, எதிர் இலக்கம் (Negative digit) கணக்கிடும் வசதியும் இதில் இருக்கிறது.

3. தேவையில்லாத பூஜ்யங்களை மறைத்துவிடும் வசதி இதில் உள்ளதால், சரியாக ஒரே பார்வையில் அறிந்துகொள்ள முடியும்.

4. அதிகமாகி, எஞ்சி நிற்கும் அளவைக் காட்டும் (Over flow indication) வசதியும் கொண்டுள்ளது.

5. 2 அல்லது 4 இலக்க தசாம்ச முறைவரை கணக்கிட இயலும்.

6. வேலை செய்யாத போது பூட்டி விடும் வசதியும் (Locking facility) இக்கருவியில் உள்ளது.

7. எந்த இலக்கத்தையும் அதன் மடங்காக்கலாம் (Square of any digit)

8. எவ்விதச் சத்தமும் ஏற்படுத்தாமல் இக்கருவி வேலை செய்கிறது.

9. மீண்டும் சக்தி ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய மின்கலன்களால் (Rechargeable batteries) இயங்கக் கூடியது.

தமிழகத்தில் தயாராகும் சின்னஞ் சிறிய கணக்கிடும் கருவி

இயக்கும் முறை

உதாரணமாக 123-ஐ 123 உடன் கூட்ட வேண்டுமானால், முதலில் இக்கருவியில் உள்ள ' C ' என்ற பட்டனை அழுத்த வேண்டும். பின்பு 1, 2, 3 என்ற பட்டன்களையும், அதன்பின் '+ =' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்தவும். திரும்பவும் 1, 2, 3 என்ற பட்டன்களை அழுத்திக் கடைசியில் ' + = ' என்ற குறியுள்ள பட்டனை அழுத்தவும். அப்பொழுது விடையைக் காட்டும் அலகு (indicator) கூட்டுத் தொகையான 246-ஐக் காட்டும்.

உதாரணமாக 123-லிருந்து 23-ஐ கழிக்க வேண்டுமானால், முதலில் ' C ' என்ற பட்டனையும், பின்பு 1, 2, 3 என்ற பட்டனைகளையும், அதன் பிறகு ' — = ' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்த வேண்டும். அடுத்து 2, 3 என்ற பட்டன்களை அழுத்தி விட்டுக் கடைசியாக '— =' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்தினால், விடையைக் காட்டும் அலகு 100-ஐக் காட்டும்.

உதாரணமாக 123-ஐ, 2-ஆல் பெருக்க வேண்டுமானால் முதலில் ' C ' பட்டனையும் பிறகு 1, 2, 3 என்ற பட்டன்களையும், அடுத்து ' × ' என்ற குறியுள்ள பட்டனையும், பிறகு 2 என்ற பட்டனையும், கடைசியாக ' + = ' என்ற குறியுள்ள பட்டனையும் அழுத்தினால் 246 கிடைக்கும்.

உதாரணமாக 123-ஐ, 2-ஆல் வகுக்க, முதலில் பெருக்கலுக்குச் செய்தது போலவே செய்து ' × ' என்ற பட்டனுக்குப் பதிலாக '÷' என்ற குறியுள்ள பட்டனை அழுத்த வேண்டும்.

தசாம்ச முறையில் கணக்கிடுவது எப்படி என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றீர்களா ? பின்கண்ட முறையைப் பின்பற்றலாம்.

ஒரு பொருளின் விலை ரூபாய் 123·50 என்று வைத்துக்கொள்ளுங்கள். 2 பொருளின்விலையைக்

கணக்கிட முதலில் தசாம்ச இலக்கத்தைத் தேர்ந்தெடுக்கும் அலகை ‘4-ல்’ வைக்க வேண்டும். பின்பு ‘C’ பட்டனை அழுத்தி விட்டு, ‘K பட்டனை’ ‘K’ நிலையில் வைக்கவேண்டும். பின்பு 1,2,3,·, 5, 0 என்ற பட்டன்களையும் அழுத்தி விட்டு. அதன் பிறகு ‘×’ என்ற பட்டனையும் 2 என்ற பட்டனையும் அழுத்தி விட்டுக் கடைசியாக ‘+ =’ என்ற பட்டனை அழுத்தினால் 247·0000 என்ற பெருக்குத் தொகை கிடைக்கும்.

அடுத்து மேற்கூறிய பொருளுக்கு 2 சதவீதம் தள்ளுபடி உண்டென்று வைத்துக் கொள்ளுங்கள். அதைக் கணக்கிடுவதற்குக்குறிப்பிட்ட



எந்தப் பட்டனையும் மாற்றாமல் மேற்கூறிய நிலையில் இருக்கு போதே ·,0,2 என் பட்டன்களை அழு திய பின்பு ‘+ = என்ற குறியுள்ள பட்டனை அழுத்தினால் தள்ளுபடி தொகை ரூபா 2·4700 என கிடைக்கும். இ போல் 4 தசாம்ச சுத்தமாகக் கணக் டலாம்.

இந்தியாவில் செ யப்பட்ட 90 ச பாகங்களையும் மூன்றே மூன்று இற குமதி செய்யப்பட்ட பாகங்களையு கொண்டு முழுக் முழுக்க இந்தியா லேயே தயாரிக்க படும் இக்கருவி வளரும் இந்திய வின் திறமைக்கு சான்றாக விளங் கிறது.

பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.

தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19

FDSEI-II

அதிசயக் கிச்சிலி ஐ.ஆர். 20!

“ஐ.ஆர். 8 நெல்லின் அரிசி பெரியது; சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல; விற்பனைக் கூடங்களில் நல்ல விலைக்கு விற்க முடியவில்லை'' என்று கூறிக்கொண்டிருந்தவர்களின் குறையை அகற்றப் பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிறுவனம் -‘ஐ.ஆர்.20’ என்ற புதிய ரகத்தை 1969—ஆம் ஆண்டில் வெளியிட்டது.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ரகங்களில் ஒன்றான -‘ஒட்டுக் கிச்சிலி’ அல்லது ‘சன்ன சொர்ணவாரி’ எனப்படும் ‘டி.எம்.கே. 6’ (திரூர் குப்பம்—6) ரகத்தையும், ஐ.ஆர். 262—24—3 என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதே ஐ.ஆர். 20. இந்தப் புதிய ரகம், அனைத்து நாட்டு நெல்ஆராய்ச்சி நிறுவனத்தின் மூன்றாவது ரகமாகும். இந்த ரகம் 1965—ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டிருந்தும், பல்வேறு பரிசோதனைகளுக்குப்பின் 1969—ஆம் ஆண்டில் தான் வெளியிடப்பட்டது.

ஐ.ஆர். 8 நெல்லைவிடத் தரமான புதிய நெல் ரகங்களை உருவாக்குவதிலும், வெளிநாட்டுப் புது ரகங்களை வரவழைத்துப்பயிரிட்டுப் பார்த்துத் தமிழ் நாட்டிற்குப் பயனுள்ளதாக இருக்குமா என்று அறிவதிலும் ஆர்வம் காட்டிவரும் தமிழ்நாடு அரசு, ஐ.ஆர். 20 ரகத்தை வரவழைத்துக் கோயம்புத்தூரில் உள்ள நெல் வளர்ப்பியல் பண்ணையில் 1967-ஆம் ஆண்டில் கோடைப் பயிராகச் சாகுபடி செய்து பார்க்க ஆவன செய்தது. அப்பரிசோதனையில் ஐ.ஆர். 20 நெல் 110 செண்டி மீட்டர் உயரம் வளர்ந்து 125 நாட்களில் அறுவடைக்கு வரக்கூடியது என்பதும், ஹெக்டேருக்கு 6·5 மெட்ரிக் டன் (ஏக்கருக்குச் சுமார் 2·6 மெட்ரிக் டன்) மகசூல் அளிக்க வல்லது என்பதும் புலனாகியது.

மேலும் இந்நெல் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளது என்பதும் தெளிவாகியது. அப்பரிசோதனையில் கிடைத்த விதைகளைக் கொண்டு, 1969-ஆம் ஆண்டின் முந்திய சம்பா, பிந்திய சம்பா, ஆகிய பட்டங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் ஐ.ஆர். 8 ரகத்துடன் ஒப்பிட்டு நடத்தப் பெற்ற பரிசோதனைகளில் ஐ.ஆர். 20 ரகம் ஹெக்டேருக்குச் சராசரியாக 5,331 கிலோ மகசூல் அளித்தது. ஆனால், அப்பரிசோதனைகளில் ஐ.ஆர். 8 ரகம் சராசரியாக ஹெக்டேருக்கு 5,263 கிலோ மகசூலையே கொடுத்துள்ளது.

காஞ்சிபுரத்திலுள்ள அரசினர் விதைப் பண்ணையில் ஐ. ஆர். 20 நெல் ஹெக்டேருக்கு 7,166 கிலோ (ஏக்கருக்குச் சுமார் 2,900 கிலோ) மகசூல் கொடுத்துள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பிரம்மபுரம் என்ற ஊரில் திரு ஆறுமுகம் என்ற உழவர் பெருமகன் ஐ.ஆர். 20 பயிரிட்டுத் தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருந்தும் கூட-ஏக்கருக்கு 3,347 கிலோ மகசூல் எடுத்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம் காரமடையை அடுத்த மாத்தம்பாளையத்தில் திரு ஏ.ஜி.ரெங்கநாதன் என்ற உழவர் பெருமகன் ஐ.ஆர்.20 பயிரிட்டு ஏக்கருக்கு 3,553 கிலோ வீதம் மகசூல் எடுத்துள்ளார்.

இதிலிருந்து பார்க்கும் போது ஐ.ஆர். 20 நெல் ரகத்தை வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் முறையில் பயிரிட்டால், சராசரியாக ஏக்கருக்கு 2,500 கிலோ முதல் 3,500 கிலோ வரை மகசூல் எடுக்கலாம் என்பது தெளிவாகிறது. ஐ. ஆர் 8 ரகத்தைப் போலவே, ஐ.ஆர் 20 ரகமும் அதிக மகசூல் கொடுப்பதுடன், கீழ்க்கண்ட சிறப்புக் குணங்களையும் ஐ.ஆர். 20 ரகம் பெற்றுள்ளது.

ஐ. ஆர். 20 ரகத்தின் சிறப்புக் குணங்கள்.

* ஒட்டுக்கிச்சிலியின் (டி. கே. எம். 6) அரிசியைப் போலவே, ஐ. ஆர். 20 நெல்லின் அரிசியும் சன்னமாகவும், தரம் மிகுந்ததாகவும் உள்ளது.
* ஒட்டுக்கிச்சிலி நெல்லுக்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைப்பது போலவே, ஐ. ஆர். 20 நெல்லுக்கும் நல்ல விலை கிடைக்கிறது.
* குருத்துப் பூச்சியின் தாக்குதலை ஓரளவுக்குத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது.
* கொலைநோய், இலைக்கருகல் நோய் ஆகியவைகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் ஐ.ஆர். 20 ரகத்திற்கு உண்டு.
* ஐ.ஆர். 8 அரிசியில் காணப்படும் வெள்ளையான பகுதி ஐ. ஆர். 20 அரிசியில் இல்லை. ஐ. ஆர். 20 அரிசி படிகம் போன்றே இருக்கும். எனவே, ஐ. ஆர். 20 அரிசியை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.
* ஒட்டுக்கிச்சிலியை விட, இருமடங்கிற்கும் மேலாக மகசூல் கொடுக்க வல்லது.
* ஐ. ஆர்.' 8 ரகத்தைவிட ஐ. ஆர். 20 ரகத்தின் வயது குறைவு.
* ஐ. ஆர். 8 ரகத்தைப் போலவே, அதிக உரமேற்று அதிக மகசூல் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தது ஐ. ஆர். 20.

இத்தகைய சிறப்புக் குணங்களைக் கொண்ட ஐ.ஆர். 20 ரகத்தைப் பயிரிடக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசையேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

மாவட்டத்தில் நடைபெறும் சிறந்த தொழில்கள்

நூற்பு, துணி ஆலைகள், பஞ்சரைக்கும் ஆலைகள், தீக்குச்சித் தொழிற்சாலைகள், மத்தாப்பு, பட்டாசுத் தொழிற்சாலைகள், நிப் தொழிற்சாலைகள், தகரப் பொருள் உற்பத்திச் சாலைகள், சைக்கிள் உறுப்புகள் உற்பத்திச் சாலைகள் தொழிற்பேட்டைகள், சிமெண்டு தொழிற்சாலைகள், காப்பித்தூள் உற்பத்திச் சாலைகள் முதலியன இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளன.

சாகுபடிமுறைகள்

பட்டம்:—

(1) நவரைப் பட்டம் (மார்கழி, தை முதல் சித்திரை, வைகாசி வரை) இது ஐ.ஆர்.20 ரகத்திற்கு மிகவும் சிறந்த பட்டமாகும்.

(2) சம்பாப் பட்டம் (ஆடி, ஆவணி முதல் கார்த்திகை மார்கழி வரை)

வயது.—நவரைப்பட்டத்தில் 120 முதல் 130 நாட்களிலும், சம்பாப் பட்டத்தில் 130 முதல் 140 நாட்களிலும் அறுவடைக்கு வரும்.

விதையளவு.—ஒரு ஏக்கர் நடுவதற்கு 15 கிலோ நெல்லை நாற்றுவிட வேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல்.—15 கிலோ விதையுடன் 30 கிராம் அக்ரசான் அல்லது காப்டான் மருந்தைச் சேர்த்து விதைகலக்கும் கருவியில் இட்டுச் சுற்றி, விதையுடன் மருந்து நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும். மருந்து கலந்த பின் குறைந்தது 6 மணி நேரம் வைத்திருந்து, பிறகு விதைகளைத் தண்ணீரில் ஊறவைத்து முளைக்கச் செய்ய வேண்டும்.

நாற்றங்கால்.—ஒரு ஏக்கர் நடுவதற்கு 10 சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். நாற்றங்காலை 2 அல்லது 3 முறை நன்கு உழுது, 2 வண்டி தொழு எரு அல்லது 1 வண்டி பசுந்தழை போட வேண்டும். பசுந்தழை மக்கிய பின்பு மறுபடியும் ஒன்று அல்லது இரண்டு முறை உழுது, பரம்படித்து, 8 அடிக்கு ஒரு வாய்க்கால் அமைத்து மேட்டுப் பாத்திகள் அமைக்கவும். பாத்திகள் ஒவ்வொன்றும் ஒரு சென்ட் பரப்பு (8 அடி அகலமும், 54 அடி நீளமும்) உள்ளதாக அமைத்தால் தண்ணீர் பாய்ச்சவும், வடிக்கவும், களையெடுக்கவும், மருந்து தெளிக்கவும் எளிதாக இருக்கும். பாத்திகளை நன்றாகச், சமப்படுத்தி, மூன்றாங் கொம்பு விதைகளை ஒவ்வொரு பாத்திக்கும் பங்கிட்டு ஒரே சீராக விதைக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்.—10 சென்ட் நாற்றங்காலுக்கு 10 மில்லிலிட்டர் பாரத்தியான் அல்லது 20 மில்லிலிட்டர் என்ட்ரின் மருந்தையும், 50 கிராம் டைத்தேன் மருந்தையும் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து நாற்றுவிட்ட 15-ஆம் நாள் தெளிக்க வேண்டும்.

நாற்றங்காலுக்கு மேலுரமிடல்.—நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக, ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு கிலோ யூரியா அல்லது 2·2 கிலோ அமோனியம் சல்பேட் வீதம் மேலுரம் இடவேண்டும்.

நடவு வயல் தயாரித்தல்.—நடவு வயலை இரும்புக் கலப்பையால் 2முறை உழவு செய்யவும். ஏக்கருக்கு 10 வண்டி தொழுஎரு அல்லது 5 வண்டி பசுந்தழை எரு போடவும். 'பர்மிய சட்டம்' என்னும் கருவியைப் பயன்படுத்தி, தழைமிதிப்பதற்கும், சேறு கலக்குவதற்கும் ஆகும் செலவைக் குறைக்கலாம். தழை மக்கிய பின்பு கடைசி உழவு செய்து சேற்றைக் கலக்கி அடியுரம் இட வேண்டும். அடியுரமிட்டவுடன் பரம்படித்து நடவு செய்ய வேண்டும். நடவு செய்வதற்குப் பத்து நாட்களுக்கு மேற்பட்ட பழைய சேறு கூடாது.

அடியுரம்.—நடவு வயலுக்கு ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து வீதம் கடைசி உழவின்போது அடியுரம் இட வேண்டும் இந்த அளவுச் சத்துக்களை அளிக்க, கீழ்க்கண்ட முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

	கிலோ
1 டை அமோனியம் பாஸ்பேட் (18:46:0).	75
அமோனியம் சல்பேட் 155 கிலோ அல்லது யூரியா	70
மூரியேட் ஆப் பொட்டாஷ் ..	60
அல்லது	
2 அமோனியம் பாஸ்பேட் (16:20:0).	175
அமோனியம் சல்பேட் 85 கிலோ அல்லது யூரியா	37
மூரியேட் ஆப் பொட்டாஷ் ..	60
அல்லது	
3 அமோனியம் பாஸ்பேட் (20:20:0).	175
அமோனியம் சல்பேட் 53 கிலோ அல்லது யூரியா	22
மூரியேட் ஆப் பொட்டாஷ் ..	60
அல்லது	
4 அமோனியம் சல்பேட் 225 கிலோ அல்லது யூரியா	100
சூப்பர் பாஸ்பேட்	220
மூரியேட் ஆப் பொட்டாஷ் ..	60
அல்லது	
5 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் (14:14:14)	250
அமோனியம் சல்பேட் 50 கிலோ அல்லது யூரியா	22
அல்லது	
6 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் (15:15:15)	235



உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

குறளகம்
சென்னை-1
கதர்-கைத்தொழில்
அங்காடி

தொலைபேசி எண்கள்: 20461. 20462. 20463. 20464. 20465.

கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

7	அமோனியம் சல்பேட் 50 கிலோ அல்லது யூரியா	.. ..	22

மேற்கண்டமுறைகளில் முதல் முறையே மிகவும் சிக்கனமானது. எனவே, டை-அமோனியம்-பாஸ்பேட் பயன்படுத்தி அடியுரமிடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

நடவு:—நாற்றுவிட்ட 22-ஆம் நாள் நாற்றுகளைப் பறித்து நடவு செய்வதே சிறந்தது. நாற்றுகளை வரிசை வரிசையாக நடவு செய்யவேண்டும். வரிசை கிழக்கு மேற்காக அமைதல் நல்லது. வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடை வெளியும், வரிசையில் தூருக்குத் தூர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டுத், தூருக்கு 2 நாற்றுகள் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும். இந்த அளவு இடைவெளி விட்டால், ஒரு சதுர மீட்டர் பரப்பில் 66 இடங்களில் நடவு செய்ய வேண்டும். நாற்றுகளை ஆழமாக நடாமல், மேலாகவே நடவு செய்தால் விரைவில் பச்சைகட்டி, நன்கு தூர் கிளைக்கும்.

நடவு செய்த பின் என்ன செய்யவேண்டும் ?

நடவு செய்த 1 முதல் 15 நாட்கள் வரை:—இக்காலத்தில் பயிர்களில் புதிய வேர் தோன்றிப் பச்சைக் கட்டும். இக்காலத்தில் உருட்டுத் தண்ணீர் கட்டுவதே போதுமானது. அதிக அளவு தண்ணீர் கட்டக்கூடாது.

நடவு செய்த 15-ஆம் நாள்:—1. இடை உழவுக் கருவியால் களை எடுக்க வேண்டும். இடை உழவுக் கருவி இல்லாவிட்டால், கைகளாலேயே சேற்றைக் கிளறிக் களை எடுக்கவும். களைகள் வயலில் இல்லாவிட்டால் கூடச் சேற்றைக் கிளறி விடவேண்டும். இவ்வாறு செய்தால் அதிக அளவில் தூர் கிடைக்கும்.

2. களையெடுத்தபின், 100 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 200 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 250 கிராம் டைத்தேன் மருந்தையும் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மேலை நாட்டுக்கு ஓலைப்பொருள்கள்

இராமநாதபுரத்தே 'பனை மரங்கள் மிகுதி; ஏன் வளர்ந்தாய் பனைமரமே' என ஏளனம் செய்யாத வகையில் பனைமரங்கள் இம்மாவட்டத்திற்குப் பெரும் புகழைத் தேடித் தருகின்றன. இங்கு வண்ண வண்ண ஓலைகளில் கண்ணைக் கவரும் பல பொருட்கள் செய்யப்படுகின்றன. இங்குத் தயாரிக்கப்படும் தாஜ்மகால் கூடைகள், மற்றும் பனை ஓலையால் செய்யப்படும் பல்வகைப் பொருட்கள், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

நடவு செய்த 16-ஆம் நாள் முதல்:— வயலில் தண்ணீரின் அளவை அதிகரிக்க வேண்டும். தொடர்ந்து தண்ணீரின் அளவைப் படிப்படியாக அதிகப்படுத்தி 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) உயரத்திற்குத் தண்ணீர் நிற்கும்படி செய்ய வேண்டும். இந்த ரகத்திற்கு அதிக அளவு தண்ணீர் தேவையில்லை.

நடவு செய்த 25-ஆம் நாள்;— முதல்தடவை மேலுரமிட வேண்டும். ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். இவ்வாறு மேலுரமிடுவதால் அதிக அளவு தூர்கள் கிளைப்பதுடன், ஒரே சீராகவும் தோன்றும். மேலுரமிடும்பொழுது வயலில் அதிக அளவு தண்ணீர் நிற்கக் கூடாது. மேலுரமிட்ட பின்பு வளைகளின் மூலம் வயலில் இருந்து தண்ணீர் வடிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள்:—1. இரண்டாம் முறை இடை உழவுக் கருவியால் அல்லது கைகளால் களை எடுக்க வேண்டும்.

200 மில்லி லிட்டர் பாரத்தியான், அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின், 500 கிராம் டைத்தேன் ஆகியவைகளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 45-ஆம் நாள்:—1. கைகளால் களை எடுக்கவும்.

2. இது கர்ப்பத்தில் கதிர் தோன்றும் சமயமாதலின், இரண்டாம் முறையாக 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். இவ்வாறு மேலுரமிடுவதால் கதிர்கள் நீளமாகவும், மணிகள் அதிகமாகவும், அடர்ந்தும், கனமானதாகவும் இருக்கும்.

3. 250 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 500 மில்லி லிட்டர் என்ட்ரின், 750 கிராம் டைத்தேன் ஆகியவைகளை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் மூன்றாம் முறையாகத் தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 65 முதல் 70 நாட்கள் வரை:—கதிர்களில் உள்ள மணிகளில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 5 கிலோ டி.டி.டீ. 5 சதத் தூளையும், 5 கிலோ பி.எச்.சி 10 சதத் தூளையும் கலந்து தூவான் மூலம் தூவ வேண்டும்.

நடவு செய்த 98 முதல் 118 நாட்கள் வரை அறுவடை:—நவரைப் பட்டத்தில், நடவு செய்த 98 முதல் 108 நாட்களிலும், சம்பாப் பட்டத்தில் நடவு செய்த 108 முதல் 118 நாட்களிலும் அறுவடைக்கு வரும்.

மகசூல்:—ஏக்கருக்குச் சராசரியாக 2,500 கிலோ முதல் 3,500 கிலோ வரை (சுமார் 33 முதல் 46 மூட்டை வரை) மகசூல் கிடைக்கும்.

(குறிப்பு:—இதே பரிந்துரையை ஐ.ஆர். 22 ரகத்திற்கும் மேற்கொள்ளலாம்)

ஸீமென்ஸ் 'பம்ப்மாஸ்டர்' கூறுகிறார்... SIEMENS





இந்திய கிராமியச் சூழ்நிலைகளிலே நம்பிகையான இயக்கம் தருவது ஸீமென்ஸ் மோட்டார் ஒன்றுதான். காரணம், கிராமியச் சூழ்நிலைகளுக்கு இணங்க, ஜெர்மன் தொழில்நுட்ப அறிவின் துணையோடு விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது அது. எனவே, மின்சார வோல்டேஜ் ஏற்ற இறக்கங்கள் பெருமளவிலே நிகழ்ந்தாலும், பல்லாண்டுகள் தொல்லையற்ற உழைப்பைத் தருவது ஸீமென்ஸ் மோட்டார். பம்பு ஸெட்டுகளின் எல்லா உறுப்புகளுக்கும் ஒரே பெயர்—ஸீமென்ஸ்.

ஸீமென்ஸ் இந்தியா லிட்.

● பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● நியூ டெல்லி
● அகமதாபாத் ● பெங்களூர் ● ஹைதராபாத் ● லக்னோ

என் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

15. உறுதியான திருமணம்

வெறும் வார்த்தைகளாக அல்ல, இனிப்பையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்த அமுதத் துளிகளாகவே அவை தேன்மொழியின் செவியிலே விழுந்தன; இதயத்தையே விம்ம வைத்தன பூரிப்பினால்.

கடல் அலைகள் மீது படகுப் பயணம் போகின்ற மாதிரி ஓர் உணர்ச்சியின் எம்பல்!

அறிஞர் அண்ணாவின் 'ஓர் இரவு'-படத்திலே ஒலிக்குமே, 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ—இன்பம் சேர்க்கமாட்டாயா?'—என்னும் பாரதிதாசனின் பாடல், அதைக் கேட்டுக் கிறங்குவது போன்ற ஒரு மது மயக்கம்!

வெண்புறுக்களுக்குப் போட்டியாகச் சிறகினை விரித்து, மேக மெத்தைகளிலே மிதந்து பறப்பதைப் போன்ற ஓர் இன்ப மதர்ப்பு!

தேன்மொழிக்குத் தலை காலே புரியவில்லை.

தோல் நோய்களைக் கண்டு பிடிப்பதில் வல்லுநரான அந்தப் பெரிய டாக்டர், தம் முடிவினை வெளியிட்டதும், தன் அருகில் நின்றிருந்த டாக்டர் பூங்கொடியை அப்படியே கட்டித்தழுவிக் கொண்டாள் அவள். உணர்ச்சிப் பெருக்கு, பனித்துளிகளாகி அவளது கண்மலரிலே கருக்கொண்டு மின்னியது.

தன் தோளிலே முகத்தைப் புதைத்து நிற்கும் தன் தோழியின் முதுகை ஆதரவோடு வருடிக்கொடுத்த பூங்கொடி,

''நீங்கள் கொடுத்துவைத்தவர் தான், தேன்மொழி! நேற்று இரவு கூட உங்களைப் பற்றித் தான் நான் கவலையோடு சிந்தித்துக்கொண்டிருந்தேன். 'இப்படியொரு கள்ளங் கவடு இல்லாத ஒரு நல்ல பெண்ணுக்கு ஏன் இந்தக் காதல்—கத்தரிக்காய்—எல்லாம் வந்து சோதனை செய்ய வேண்டும்?' என்று கூட வேதனைப்பட்டேன். நல்ல வேளையாக மாதவனுக்கு எந்த விதமான தோல் நோயும் இல்லை என்று இந்த 'ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்'—(தோல்நோய் வல்லுநர்)—சொல்லி விட்டார். இனிமேல் என்ன? உங்கள் எண்ணம் போலவே திருமணத்துக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டியதுதான்!''

—என்று உற்சாகத்தோடு கூறினாள்.

''எல்லாவற்றுக்கும் நீங்கள் அளித்த ஆறுதலும், தன்னம்பிக்கையும், தளராத முயற்சிகளுந்தான் காரணம், டாக்டர். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை.''

—குரல் தழுதழுத்தது தேன்மொழிக்கு.

மாதவனைப் பற்றிய முடிவினை அறிவித்த பின், தம்முடைய பணியாளிடம் ஏதோ செய்தி சொல்லி அனுப்பி விட்டுத் திரும்பிய அந்தத் தோல்நோய் வல்லுநர், தம் எதிரே நிற்கும் பெண்கள் இருவரையும் நோக்கி,

''அப்போ, விரைவிலேயே ஒரு திருமண அழைப்பிதழை நான் எதிர்பார்க்கலாம்''

—என்று சொன்னார் முறுவலித்தவாறே.

''ஓ தாராளமாக! இன்னும் ஒரு மாதத்திற்குள்ளேயே நீங்கள் அதை எதிர்பார்க்கலாம்!''

—என்று காலக் கெடுவும் வைத்துச் சிரிப்பை வழிய விட்டாள் பூங்கொடி.

அதைக் கேட்டதும், தேன்மொழியின் சிவந்திப் பூ முகம் 'குப்'பென்று சிவந்து விட்டது நாணத்தினால்; தளிருடலும் 'சில்'லென்று சிலிர்த்து விட்டது புல்லரிப்பினால்.

கனவுகள் நனவாகும்பொழுது—நம்பிக்கைகள் சிலையாகும் பொழுது—நிறைவேறி நிலைக்கும் பொழுது—இந்த மனித மனந்தான் எவ்வளவு சின்னக் குழந்தையாகித் துள்ளிக் குதிக்கின்றது!

அவளுடைய இதயத் துள்ளலுக்கு மேலும் பன்னீர்த் துளிகளைத் தெளிப்பதைப் போல,

"திருமணம் சென்னையில்தான் நடக்கும் இல்லையா?"

—என்று கேட்டார் அந்தப் பெரிய டாக்டர்.

"கூடியவரை சென்னையில்தான் நடக்கும் என்று நினைக்கிறேன். இல்லையா தேன்மொழி?"

—என்றவாறே தேன்மொழியைத் திரும்பிப் பார்த்தாள் பூங்கொடி.

அவளால் நிமிர்ந்து விடை கூற முடியவில்லை; தலையை மட்டுமே அசைத்தாள்.

"சரி, டாக்டர்! உங்களுக்கு மிகுந்த நன்றி. இனிமேல் மாதவனை வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம் இல்லையா?"

—பூங்கொடி இவ்வாறு கேட்டதும்,

"ஓ, தாராளமாக! இப்போதே அழைத்துச் செல்லலாம்'

—என்று விடை கொடுத்துவிட்டார் அவர்.

* * *

தோழிகள் இருவரும், மாதவன் படுத்திருக்கும் மருத்துவப் பிரிவுக்குச் சென்றனர் அவனை அழைத்துச் செல்வதற்காக.

வழியிலேயே தேன்மொழி கேட்டாள்,

"என்ன டாக்டர், இன்னும் ஒரு மாதத்திற்குள்ளேயே அழைப்பிதழ் வரும் என்று அவரிடம் உறுதியாகச் சொல்லிவிட்டீர்கள்?"

"ஏன், ஒரு மாதத்திற்குள் முடிக்க முடியாதா என்ன? இனிமேலும் காலம் கடத்திக்கொண்டு போவது அவ்வளவு நல்லதும் இல்லை."

"ஆனால், என் அப்பா என்ன சொல்லுவாரோ?"

"அவர் ஒன்றும் சொல்லமாட்டார்; அவர் அப்படி மறுப்பு எதுவும் சொல்லாதபடி நானே சிங்கப்பூருக்குக் கடிதம் எழுதுகிறேன் போதுமா?'

"அதுதான் டாக்டர், நல்ல யோசனை: நீங்கள் கடிதம்" எழுதினால் என் அப்பா மறுக்கமாட்டார் என்று நானும் நினைத்தேன்; உங்களிடம் அவருக்கு என்னவோ ஒரு தனியான நல்லெண்ணம்— நம்பிக்கை. உங்களைத் தவிர வேறு யார் எடுத்துச் சொன்னாலும் அவர் கேட்கவேமாட்டார். எனக்குள்ள அச்சம் எல்லாம், தம்முடைய செல்வாக்குக்குச் சரியான பொருத்தமாக இருக்கவேண்டுமே என்று யாராவது பணக்காரப் பையனைப் பார்த்து ஏற்பாடு செய்து விடுவாரோ என்பதுதான்."

தேன்மொழியின் சொற்களைக் கேட்டதும் 'களுக்' என்று சிரித்தாள் பூங்கொடி.

"என்ன டாக்டர் சிரிக்கிறீர்கள்?"

"உங்கள் அப்பாவை இன்னும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லையே என்பதை நினைத்துத்தான் நான் சிரிக்கிறேன். அவருடைய மனநிலை இப்பொழுதெல்லாம் எவ்வளவோ மாறிவிட்டது."

"நீங்கள் என்ன டாக்டர், சொல்கிறீர்கள்?"

"உண்மைதான் தேன்மொழி! ஒரு காலத்தில் தாம் இலட்சாதிபதி ஆகிவிடவேண்டும் என்கிற பேராசையிலே அவர் செய்யக் கூடாத செயலையெல்லாம் கூடச் செய்திருக்கலாம். அடிக்கக் கூடாத கொள்ளையெல்லாம் கூட அடித்திருக்கலாம். சேரக் கூடாத இடங்களில் எல்லாம் கூடச் சேர்ந்திருக்கலாம். ஆனால், மாதவனைக் கண்டபிறகு —அவரோடு பழகிய பிறகு— அவருடைய பண்புகளையெல்லாம் பார்த்த பிறகு—உன் அப்பாவின் மனமே மாறிவிட்டது. மாதவன் என்னதான் அப்படிச் சொக்குப்பொடி போட்டாரோ? இல்லை அவருடைய உள்ளம் தானாகத்தான் திடீரென்று திருந்திக்கொண்டதோ? சிங்கப்பூர் செல்வதற்கு முன்பு அவர் என்னிடம் பேசிய வார்த்தைகளை இப்போது நினைத்தாலும் எனக்கு வியப்பாக இருக்கிறது. யாருமே அணுக முடியாத எரிமலையாகச் சீறிக் கொண்டிருந்தவரா இப்படிப் பொதிகை மலைப் பூங்காற்றாகக் குளிர்ந்து வீசுகிறார் என்று நானே அசந்து போனேன். அப்புறம் இன்னொரு அந்தரங்கம் உங்களுக்குத் தெரியுமா? தேன்மொழி''

"என்ன டாக்டர்?"

"ஓ! மறந்துபோய் நானும் உளறத் தொடங்கி விட்டேனா? சரி, சரி அந்த அந்தரங்கத்தைப் பிறகு சொல்கிறேன்.... ஆனால் ஒன்று மட்டும் உறுதி. உங்கள் திருமணத்திற்குக் குறுக்கே உங்கள் அப்பா குத்துக்கல்லாக வழி மறிக்கமாட்டார். உங்களுக்கு வேண்டியது அவ்வளவுதானே?"

"எனக்கு அது போதும் டாக்டர். நாளைக்கே அப்பாவுக்குக் கடிதம் எழுதி விடுகிறீர்களா?"

—ஏக்கத்துடன் கேட்டாள் தேன்மொழி.

"ஏன் ரொம்ப அவசரமா? அப்போ, இன்றைக்கே எழுதி விட்டால் போகிறது."

—கேலியாகச் சிரித்தாள் பூங்கொடி.

* * *

பெண்கள் இருவரும் மாதவனின் படுக்கை அருகே சென்றபோது அவன் அங்கே மற்ற நோயாளிகளைப் போலப் படுத்திருக்கவில்லை.

தன்னுடைய கட்டிலுக்கு மூன்றாவது கட்டிலில் அமர்ந்து, அங்கிருந்த நோயாளியின் வாயினுள் ஆரஞ்சுச் சுளைகளை உரித்து ஊட்டிய வண்ணம் இருந்தான்.

அந்த நோயாளிக்கோ உடம்பெங்கும் ஆட்டுக் குடலின் உட்புறம் போல அடை அடையாகப் படை படையாகச் சொறி! சொறிந்தானோ இல்லை வேறு எதுவுமோ?

அதைப் பார்க்கவே பொறுமையில்லை, தேன்மொழிக்கு! முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

'இவர் ஏன் அந்த மாதிரி ஆளோடெல்லாம் சேர்ந்து பழகுகிறார்! அந்தப் படுக்கையிலும் உட்கார்ந்து கொண்டு— ஆரஞ்சு சுளைகளையும் உதட்டைத் தொட்டு வேறு ஊட்டிக்கொண்டு —சே....!'

—அவள் உள்ளத்தினுள் இத்தகைய எண்ணக் கோடுகளும் ஓடத் தவறவில்லை.

தோழிகள் இருவரையும் கண்டதும் மாதவன் தன் கட்டிலுக்குத் திரும்பி வந்தான்.

"உட்காருங்கள் டாக்டர்"

—என்று பூங்கொடியை வரவேற்று அருகில் கிடந்த நாற்காலியை இழுத்துப்போட்டான்.

"பரவாயில்லை; நீங்கள் உட்காருங்கள். ஒரு முக்கியமான சேதியைச் சொல்லத்தான் வந்தோம்"

—என்றாள் பூங்கொடி.

"என்ன முக்கியமான சேதி! செங்கற்பட்டுக்குப் பக்கத்திலுள்ள தொழுநோய் மருத்துவ நிலையத்துக்கு நான் போய்த்தான் ஆக வேண்டும் என்று அந்தப் பெரிய டாக்டர் சொல்லிவிட்டாரா?"

—சிரித்தவாறே கேட்டான் மாதவன்.

பெண்கள் இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்; 'திருதிரு'வென்று விழித்தார்கள்.

"உங்களுக்கு அந்த நோய் வந்திருப்பதாக யார் சொன்னார்கள்?" சமாளிக்கப் பார்த்தாள் பூங்கொடி.

"ஏன் டாக்டர் என்னிடமே காது குத்தப் பார்க்கிறீர்கள்? இரத்தச் சோகையோ இருதய நோயோ வந்திருந்தால் இப்படித் தோல்நோய் டாக்டரிடந்தான் கொண்டு வந்து காட்டுவீர்களா? உப்பிருந்த பாண்டத்தில் யாராவது சர்க்கரையைக் கொட்டி வைப்பார்களா என்ன? அதனால்

மூன்றிலொரு பங்கு பட்டாசு

தீக்குச்சிக்கும், தீபாவளி பட்டாசு, மத்தாப்புக்கும் பெயர் போனது சிவகாசி. சின்னஞ் சிறுவர் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ள இந்நகரம் இன்று இந்தியா முழுவதிலும் புகழ் பெற்றுள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் தீக்குச்சியில் மூன்றில் ஒரு பங்கு சிவகாசி, சாத்தூர்ப் பகுதியிலேயே உற்பத்தியாகிறது.

எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. தேன்மொழிக்கு என் உடலிலே எந்தவிதக் கொடிய நோயும் இல்லை என்கிற உண்மை தெளிவானால் சரி என்றுதான் நானும் மறுப்பேதும் சொல்லாமல் இங்கே சிகிச்சை பெற ஒப்புக்கொண்டேன். என்னிடம் வெளிப்படையாகத் தோல் நோய் மருத்துவரிடம் சோதித்துப் பார்ப்போம் என்று சொன்னால், நான் எங்கே உள்ளம் ஒடிந்து விடுவேனோ என்று அஞ்சித்தான் இப்படித் தந்திரமாக இங்கே கொண்டுவந்து சேர்த்தீர்கள் என்பதையும் நான் புரிந்துகொண்டுவிட்டேன். இப்போதாவது சந்தேகம் தீர்ந்துவிட்டதா?''

—மாதவன் இவ்வாறு கூறியதும் வெட்கத்தால் தலை குனிந்தாள் பூங்கொடி.

''என்னை மன்னித்து விடுங்கள். தேன்மொழிக்கு உங்கள் மீது ஒரே உயிர்; அதே சமயம், உங்களுடைய தமக்கைக்குஇருந்த பெருநோய் உங்களுக்கும் இருந்தால் என்ன செய்வதுஎன்கிற பீதி. அந்தச் சந்தேக முள்ளைத் தொடக்கத்திலேயே கிளறி எடுத்துவிடவேண்டுமென்றுதான் இந்த ஏற்பாட்டை நான் செய்தேன். உங்களிடம் வெளிப்படையாக இதைப்பற்றி விவாதிக்கவும் எங்களுக்கு விளக்க முடியாத ஒரு தயக்கம்.''

—டாக்டர் திணறிக் கூறினாள்.

'' நானேதான் அதை நன்றாக உணர்ந்து கொண்டு விட்டேனே. ஆகையாலே நீங்கள் இதிலே வருத்தப்படுவதற்கு எதுவுமே இல்லை. பார்க்கப் போனால் நீங்கள் செய்தது எல்லாருக்குமே நல்லது; எங்கள் எதிர் காலத்துக்கும் மிகமிக நல்லது. அப்படி இருக்குமோ? இப்படி இருக்குமோ? என்று புழுங்கிக் குழைந்து, புகைந்து நைந்து உள்ளுக்குள்ளேயே பொருமிப் பொருமிச் சாவதை விட இருட்டா, வெளிச்சமா—இனிப்பா, கசப்பா—என்று கறாராகத் தெரிந்து கொண்டு விடுவது சிறந்தது தானே! ஆமாம், இனிமேல் என்றைக்கு இங்கிருந்து எனக்கு விடுதலை''?

'' இப்போதே கிளம்பலாம்; அதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தோம். ஆமாம் தேன்மொழி! நீங்கள் இங்கே சிறிது நேரம் தங்கி இருந்து இவரை அழைத்துக் கொண்டு வாருங்களேன்! நான் கொஞ்சம் முந்திப் புறப்படுகிறேன். இந்நேரம் என்னுடைய நோயாளிகள் எப்படி இருப்பார்களோ?''

—கடமை உணர்வோடு பூங்கொடி மட்டும் தனியே புறப்பட்டுச் சென்றாள்.

* * *

தான், தேன்மொழியிடம் கூறிய வாறே அன்றே பேரின்ப முத்துக்குக் கடிதம் எழுதிவிட்டாள் பூங்கொடி!

உமறுப்புலவர்

தென்னாட்டிலே சிறந்தஅத்தர் வியாபாரிகளின் குடும்பத்தில் பிறந்தவர். கடிகை முத்துப் புலவரிடத்தே கல்வி கற்றவர்; இராமநாதபுரம் மாவட்டக் கீழக்கரையிலே வாழ்ந்தவர்; இவர் அறம், பொருள்; இன்பம் என்னும் முப்பொருளும் கலந்த சீறாப்புராணம் என்னும் நூலைச் செய்தார்; அன்றியும் நொண்டி நாடகம், முதுமொழி மாலை என்னும் நூல்களையும் இயற்றினார்; இவர் வாழ்ந்த காலம் 17–ஆம் நூற்றாண்டு; இவரது கல்லறை எட்டையபுரத்தின் தென்கோடியில் உள்ளது.

அவரும் உடனே மறு மொழி வரைந்திருந்தார் ஒப்புதல் தெரிவித்து.

ஆனால், தங்கள் குடும்ப வழக்கப்படி கோவில் சந்நிதியில் தான் திருமணத்தை வைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

மாதவனோ—

செய்து கொண்டால் சீர்திருத்தத் திருமணம், இல்லையென்றால் பதிவுத் திருமணம் என்று அடித்துப் பேசினான்.

பூங்கொடி எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். பேரின்பமுத்து இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டதே பெரிய செயல்; அவர்மனம் புண்படும்படி நடக்க வேண்டாம். —என்று வற்புறுத்திக் கூறிப் பார்த்தாள்.

தேன்மொழியும் மன்றாடினாள்.

மற்ற எல்லாவற்றிலுமே விட்டுக் கொடுக்கத் தயங்காத மாதவன் இந்தத் திருமண முறையில் மட்டும் ஒரே பிடிவாதமாக இருந்துவிட்டான்.

அவனது அழுத்தமான போக்கு, தேன்மொழிக்கு அதிர்ச்சியையே அளித்தது. எங்கே தங்களுடைய திருமணமே நிகழாமல் நின்றுவிடுமோ என்று கூட அவள் அஞ்சினாள்.

வேறுவழியில்லாமல், டாக்டர் பூங்கொடி நிலைமையை விளக்கி மாதவனின் பிடிவாதத்தைத் தெரிவித்துப் பேரின்பமுத்துக்குக் கடிதம் எழுதினாள்.

அவரோ, அவர்கள் எதிர் பாராத வகையில்,

''மாதவன் எப்படி விரும்புகிறானோ அப்படியே திருமணம் நடக்கட்டும்''—என்று தந்தியே கொடுத்துவிட்டார்.

ஆனால், அவரால்முன்கூட்டியே வந்திருந்து திருமண ஏற்பாடுகளைக் கவனிக்க இயலவில்லை. எல்லாப் பொறுப்புகளையும் டாக்டர் பூங்கொடியின் தலைமையிலேயே சுமத்திவிட்டார்.

* * *

அந்தத் திருமணத் திருநாளும் வந்தது.

சென்னையில் ஒரு பெரிய திருமணக்கூடத்தில்தான் மணம் நிகழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அன்று காலை மணம்நிகழும் இடத்திற்குத் தேன்மொழியும் மாதவனும் தனித்தனியே காரில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது . . . . ?

(வளரும்)

வெண்பாப் போட்டி

26. ஓயா துழைத்துயர் வோம்

● போதுமென் றெண்ணாமல் போதெல்லாம் நாமுழைக்கும்
போது, வறுமைக்குப் பொருளுந்தான்—ஏது ?(எ)னவே
மாயாது முன்னேற மந்திரம் யாது? அடா,
ஓயா(து) ? உழைத்துயர் வோம்.

—ந. சுப்பையா, மதுரை–2.

தூங்கா தினிதே துணிவாற்று வோம்; தோழா
மாங்கனிதான் வீழுமோ மந்திரத்தால் ?—ஈங்கினிமேல்
வாயா லுரைப்பந்தல் வேயாமல் தோள்வலியால்
ஓயா துழைத்துயர் வோம்.

—சோமுசா, அதிரை.

சந்திரனைத் தொட்டுச் சரித்திரத்தை மாற்றியநல்
விந்தைச் செயலுக்கு வித்தென்ன ?—சிந்தியுங்கள்
‘ ஓயா உழைப்பே ’ ; உணர்ந்துநாம் ஒன்றுபட்டே
ஓயா துழைத்துயர் வோம்.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

ஏரைப் பிடித்துழுதால் எங்கள்தாய் மண்ணிவளோ
பூரித்து நெல்லாகப் புன்னகைப்பாள்—வாரியிங்கே
காயைக் கனியைக் கிழங்கை வழங்குவதால்
ஓயா துழைத்துயர் வோம்.

—சு. கிருட்டிணன், திருப்பூர்–1.

வேலை நிறுத்தத்தை வேண்டாத வன்முறையை
வேலையாய் எங்கும் விதைத்தொருபால்—மூலையில்
வாயாரப் பேசில் வருமோ சமதருமம் ?
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் துரை. முருகு, திண்டுக்கல்–1.

காட்டைக் கழனியாக்கிக் காவிரியிற் கங்கைநதி
யோட்டத்தைச் சேர்த்திணைத்தே யொன்றாக்கி—நாட்டில் [நீர்
பாயாத பாழ்வெளியில் பாங்காய்ப் பயிர்வளர்த்(து)
ஓயா துழைத்துயர் வோம்.

—பாக்கியசாமி, சென்னை–3.

வங்கத் திருநாட்டின் வாழ்வுயரத் தோள்கொடுத்(து)
எங்கள் புகழ்மறவர் ஏற்றமுற்றார்—பொங்குபுகழ்
சாயா துயர்ந்திட்ட சத்தியத்துத் தாய்மண்ணில்
ஓயா துழைத்துயர் வோம்.

—திசு. பாலசுப்பிரமணியன், உதகமண்டலம்.

கண்ணால் எறும்புகளைக் கண்டிருந்தும் தேனீக்கள்
பண்ணார்ந்தே யெங்கும் பறந்திருந்தும்—எண்ணாமல்
நீயாதுஞ் செய்யாது நிற்பதுவோ ? பம்பரம்போல்
ஓயா துழைத்துயர் வோம்.

—த. உலகநாதன், விருத்தாசலம்.

நாட்டிற்குச் சூழ்ந்துள்ள நாற்றிசைக் கேட்டினையும்
ஓட்டிடவும் வேண்டுமன்றோ ஒண்டமிழா ! நாட்டமுடன்
தேயாது மேலும் திருநாடு முன்னேற
ஓயா துழைத்துயர் வோம்.

—சு. ம. சுப்பிரமணியன், மதுரை–18.

ஊழை மதியாதே ; உத்தமரை ஏய்க்காதே ;
ஏழை உழைப்பை எருவாக்கி—வாழாதே
நாயாய்ப் பிறர்பொருளை நத்தாதே ; சிற்றெறும்பாய்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் அரிமதி தென்னகன், புதுச்சேரி–1.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
திரு ந. சுப்பையா,
24, டட்லி இல்லம், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை–2.

போரின் விளைவுகளைப் போரிட்டு நாம்எதிர்க்க
வீரங்குன் றாமல் வினையாற்றித்—தீரமிகு
சாயாத கொள்கையுடன் தாரணியோர் போற்றிடவே
ஓயா துழைத்துயர் வோம்.

—குழ. அண்ணாமலை, கோவை.

ஆய கலையும் அருந்தமிழும் வண்மையும்
நேய முடன்வளரும் நேரத்தில்—மேயவரும்
தீயனைய நல்குரவைத் தீய்த்திட நாமெல்லாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—கே. எஸ். பைரோசா, கம்பம்.

பதுங்கும் பகைமீண்டும் பாயவுங் கூடும்
ஒதுங்கிநாம் நின்றாலோ உய்யோம் !—முதுகிட்ட
தீயாரை நாம்கண்டோம் தேயத்தீர் ! ஒன்றாக
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் வேணு. அரங்கநாதன், கோவை-14.

நாடுயர நாட்டின் நலமுயர நாளெல்லாம்
பாடுபட்ட நந்தலைவர் பாங்கினைப்போல்—கேடகலத்
தீயார் நெறிதவிர்த்துத் திண்ணியராய் வன்மையுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் கு. மங்கையர்க்கரசி, திருச்செங்கோடு.

எப்போதும் தப்பாமல் ஈற்றடிக்கோர் பாட்டெழுதி
அப்போதைக் கப்போ தனுப்புகின்றோம்—எப்படியோ
ஓயா தனைத்தும் ஒதுக்கிவிடப் பட்டாலும்
ஓயா துழைத்துயர் வோம்.

—வை. இரத்தினசாமி, திருத்துறைப்பூண்டி.

பொன்னும் பொருளும் பொருந்திய நல்வாழ்வும்
வன்மை யுழைப்பின்றி வந்திடுமோ ?—மின்னிடையாய் !
தீயார்தம் வாழ்வினைப்போல் தேய்ந்தழிந்து போகாமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—தெ. செ. இராமசாமி, எம்.ஏ. ,பி.டி.,
நாமகிரிப்பேட்டை.

பஞ்சம் பசியகலப் பாரின் நலமுயரக்
கெஞ்சிப் பிறருதவி கேளாமல்—வஞ்சியே
தூய கலைவளரத் தொல்வேளாண் மைவளர
ஓயா துழைத்துயர் வோம்.

—குகதாஸ் விசுவநாதன், பங்களாப்புதூர்.

நாடு நலமுறவும் நல்லவர்கள் வாழ்ந்திடவும்
கேடு விலக்கவரும் கீழ்க்கதிர்போல்—நாடோறும்
காயாமல் தென்னவர்நாம் கஞ்சிக்குக் காணிசென்றே
ஓயா துழைத்துயர் வோம்.

—இரா. கணேசன், அரங்கப்பனூர்.

சோற்றுக் கிலையென்று சோம்பிக் கிடந்தோமேல்
மாற்றுநிலை தானாய் மலர்ந்திடுமா ?—ஆற்றலுடன்
சாயா மனந்தாங்கிச் சத்தியத்தின் நல்வழியில்
ஓயா துழைத்துயர் வோம்.

—சு. நாராயணசாமி, தில்லைநகர்.

சோம்பிக் கிடப்பதற்கோ சோற்றுத் திரளையுண்(டு)
ஓம்பி வளர்த்தோம் உடம்பையெலாம்—ஆம்பயனென் ?
தேயாத சந்தனத்தால் தேர்வீர் ; வறுமையிலும்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

நாடா வளத்தனவாய் நம்நாட்டை ஆக்குதற்கே
ஓடா யுழைப்போரின் நல்லெண்ணம்—கோடாமல்
காயாகி முற்றிக் கனிவதற்கு நாமின்று
ஓயா துழைத்துயர் வோம்.

—மா. கி. தமிழ்ச்செல்வன், அன்செட்டி

ஏடாஎன் தம்பி !நீ எங்கேடா செல்கின்றாய்?
ஓடாதே நில் ! நாளும் ஊர்சுற்றி—ஓடாகித்
தேயாதே !வாடாநீ ! தோள்வலி கொண்டுநாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

எத்தொழிலைச் செய்தாலும், எவ்வூரில் வாழ்ந்தாலும்
அத்தொழிலை ஆர்வமுடன் செய்திடுவோம்—அத்தொழிலை
வாயார வாழ்த்தி மனமாரப் பாராட்டி
ஓயா துழைத்துயர் வோம்.

—தமிழகரத்னம், மேலூர்.

நள்ளிரவில் கல்விகற்று, நற்பகலில் பாடுபட்டு
முள்ளிடைப் பூவேபோல் முன்னேறித்—தொல்லைதரும்
தீய அடிமைகொன்ற ஆபிரகாம் லிங்கனைப்போல்
ஓயா துழைத்துயர் வோம்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

வல்லரசும் நம்மிடத்தில் வந்து வணங்கிநிற்க
நல்லபடி ஒற்றுமையாய் நாமிருந்து—செல்லனைய
தீயாரை வென்று, செழுமையுற ஊக்கமுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

வரும்பொருள் கண்டுரைக்கும் மாமுதல்வர் சொல்லின்
அரும்பொருள் கண்டுய்வோம் ; ஐந்தாம்—இருட்படை [யின்
மாயா வதந்திகளை மாய்த்திடுவோம் ; துஞ்சாமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் மு. சிக்கந்தர், மதுரை.

வறுமை ஒழித்திட வாய்ச்சொல்லா போதும் ?
அருமை முயற்சி யதற்காம்—கரும்பினிய
தூயோரைப் போற்றித் துயர்களைய நாளும்நாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

கள்ளக் கடத்தல், கலப்படம் செய்துலகில்
கொள்ளை யடித்தல் கொடிதன்றோ !—உள்ளத்தில்
பேயாய்க் குடிகொள்ளும் பேராசை நீக்கிநின்றே
ஓயா துழைத்துயர் வோம்.

—க. தமிழ்ச்செல்வன், மாரியம்மன் கோவில்.

கூவம் மணப்பதுண்டு; கொள்கை சிறப்பதுண்டு;
யாவும் நடப்பதுண்டு நாம்உழைத்தால்—பூவுலகில்
தேயா மலையில்லை சிற்றுளியால்; என்பதனால்
ஓயா துழைத்துயர் வோம்.

—க. பழனிவேலு, மதுரை-5.

இளைஞர் அணிதிரண்டோம் எங்குமொளி சேர்ப்போம்
விளைவைப் பெருக்கிவெறும் வீணாட்—களைந்தெறிவோம்
தீயோர் திரள்பகையைத் தீர்த்தெழில் நாட்டிற்கே
ஓயா துழைத்துயர் வோம்.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., பரமக்குடி.

ஆய கலையறிவோம் ஆற்றல் பலபுரிவோம்
தூய மனத்தால் துணிந்திருப்போம்—நேயமொடு
பாயும் பகையினையும் நட்பாக்கிப் பாரினிலே
ஓயா துழைத்துயர் வோம்.

—கோ. உலகநாதன், பி.ஏ.பி.இடி., உடையார்குடி.

கொள்கை வழிநடப்போம் : கொத்தடிமை ஆகிவிடோம்
உள்ளொன்று வைப்பார் உறவுகொளோம்—கள்ளமிலாத்
தாயனைய காந்தி தலைமையின்கீழ்த் தோழியரே
ஓயா துழைத்துயர் வோம்.

—செல்வி பெ. தமிழரசி சோழவந்தான்.

சிறிய குடும்பமே சீர்வாழ்வு நல்கும்
வறுமை யொழித்துவள மாக்கும்—அறியீரோ ?
ஓயாமற் சூலுறநான் ஒப்பேன் ; கருத்தடைசெய்(து)
ஓயா துழைத்துயர் வோம்.

—முத்துச்சோழன், கோயம்புத்தூர்-1.

காடுவெட்டிக் கப்பலுங் கட்டி உயர்ந்தடுக்கு
வீடுகட்டி, வீணர் விரட்டியோட்டிப்—பாடுபட்டே
தேயாத கல்லையும் தேய்க்கும் எறும்பாகி
ஓயா துழைத்துயர் வோம்.

—சாப்டூர் அன்பரசு, தாண்டிக்குடி.

காம விளையாட்டும் கைக்குழந்தைத் தாலாட்டும்
பூமி தனில்நமக்குப் போதுமடி—நாமினிமேல்
தேயாது தேயம் செழிப்புற் றிருக்கநிதம்
ஓயா துழைத்துயர் வோம்.

—மு. சே. தமிழேந்தி, மேலச்சிறுபோது.

வாய்மை நெறிகாத்து வன்பகையைத் தூளாக்கித்
தூய்மை உளம்பூக்கத் தொண்டாற்றித்—தாயகத்தின்
தேயா வளம்பெருக்கித் தேனூறும் வாழ்வமைத்தே
ஓயா துழைத்துயர் வோம்.

—மா. செல்லமுத்து, பி.ஏ., பழனி.

நாட்டின் நலங்கருதி நம்மரசு நாடோறும்
காட்டும் முயற்சிக்குக் கைகொடுத்து—வாட்டமுடன்
மாயாமல் உள்ளம் மலர்ச்சிபெற நாளும்நாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—மாதையூரான், விழுப்புரம்.

நாட்டை வளமாக்கி நாமும் நிலவின்மேல்
வீட்டை அமைத்திட வேண்டாமா ?—ராட்டையினை
ஓயாது சுற்றிடினும் ஒப்பற்ற ஆலைகளில்
ஓயா துழைத்துயர் வோம்.

—தமிழ்க்கனல், கோவை-11.

தண்ணீர். நிலநலமும் தக்கோர் குணங்கொடையும்
கண்ணீர்மை மாறாக் கருணையும்—பெண்ணீர்மைத்
தாயாக வந்துற்ற தண்டமிழ் நாட்டுக்கே
ஓயா துழைத்துயர் வோம்.

—ச. நாராயணன், கோவை-1.

வெந்ததைத் தின்று விதிவழியே செல்வதென
நொந்திடும் வாழ்வுமொரு வாழ்வாமோ ?—வந்திடுவீர்
மாயா வளம்பலவும் வந்தடைய மாநிலத்தில்
ஓயா துழைத்துயர் வோம்.

—ஆர். கே. மாணிக்கம், திருச்சி-1

ஏங்கிபல நாட்டோர்கை யேந்திநம் நாடதனில்
தேங்கியே நின்றகதை தேர்ந்திலையோ ?—பூங்கொடியே !
சாயாத நம்புகழ்தான் சாய்வதுவோ ? சோர்வகற்றி
ஓயா துழைத்துயர் வோம்.

—சினி. சௌந்தரராசன், திருக்கோயில்பத்து.

ஞாலம் விழித்திறக்கும் நம்கொள்கை போற்றுமொரு
காலம் வருமட்டும் காத்திருப்போம்—சீலமுடன்
மாயாப் புகழ்நிறுத்தும் மாந்தருள் நன்மணியாய்
ஓயா துழைத்துயர் வோம்.

—ச. வெற்றிமணி, மயிலம்.

ஈன்றுள் உயிர்க்கும் இரவாமல் தானுழைக்கும்
ஆன்றோர் பலர்வாழும் அன்புலகில்—தோன்றியநாம்
வாயால் கதைபேசி வாளா இருப்பதுவா ?
ஓயா துழைத்துயர் வோம்.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

சீராரும் பாட்டாளிச் செம்மல்காள் ! வீணைப்
போராடிக் காலத்தைப் போக்கிடுதல்—சீராமோ ?
மாயா வறுமையினை மாய்த்திடவே ஒன்றுபட்(டு)
ஓயா துழைத்துயர் வோம்.

—சிவ. மு. சிவலிங்கம், III•பி.எஸ்சி., சிவகாசி.

இல்லாமை இந்நாட்டில் இல்லாமை யாவதற்(கு)
எல்லாரும் ஒன்று யிணைந்திடுவோம்—பல்லாண்டும்
தேயா வுடலோடு திண்ணையிலே தூங்காமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—செல்வி. எஸ். சுமதி, மதுரை-1.

சாதி மதத்தைச் சாராது மாந்தரெலாம்
நீதிவழி பேதமற்று நேர்படுவோம்—ஓதிடுவோம்
காயா மனம்பெற்றுக் கண்ணியமாய் இன்றுமுதல்
ஓயா துழைத்துயர் வோம்.

—அ. வை. முத்துசாமி, அந்தியூர்.

நாட்டின் நலனென்றே நம்கொள்கை என்றெண்ணி
வாட்டமில் திட்டம் வகுத்திடுவோம்—பாட்டிகதை
வாயாரப் பேசும் வழக்கொழிப்போம் ; ஊக்கமுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—செ. தங்கவேல்சாமி, இராமேச்சுரம்.

இன்று நடக்கும் இனிய தமிழரசால்
நன்று நலவாழ்வை நாமடைவோம்—என்றென்றும்
வாயார வாழ்த்தி வளமோங்க ஒன்றுபட்டே
ஓயா துழைத்துயர் வோம்.

—கோபு, புதுவை-4.

எல்லாரும் கல்விபெற்றார் ஏற்றதொழில் வாய்ப்புற்றார்
எல்லாரும் செல்வத்தோ டின்புற்றார்—வல்லோராம்
தூயோர் எனநம்மைத் தொல்லுலகம் போற்றிடவே
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் த. வாசுதேவன், பி.ஏ., கீழச்செருவாய்.

பிச்சை எடுத்துண்பீர் ! பேரிழிவு போதுமினி ;
இச்சையுடன் ஏற்பீர்நல் லெத்தொழிலும்—நிச்சயமாய்க்
காயாதே நம்வயிற்றைக் காத்தற்கு மானமுடன்
ஓயா துழைத்துயர் வோம்.

—கி. கண்ணன், எம்.ஏ., திருவாரூர்.

காட்சிக்கு நல்ல கலைக்கூடம், கற்றறிந்த
மாட்சிக்கு வேண்டும் மனைக்கூடம்—ஆட்சிக்குத்
தோயா உழவுந் தொழிலும் நிலைக்கூடம்
ஓயா துழைத்துயர் வோம்.

—வெண்ணெய் வேலன், திருவெண்ணெய் நல்லூர்.

மின்பெருக்கி வேண்டுந் தொழில்பெருக்கி மேனாட்டார்
பொன்பெருக்கி வாழ்ந்து புகழடைந்தார்—முன்பெருமை
வாயா லுரைக்காதே வம்மின் தமிழரெலாம்
ஓயா துழைத்துயர் வோம்.

—தா. சுப்பிரமணியன், சேலம்-6.

முன்னேற்றம் காண முழுமூச் சுடனுழைக்கும்
தன்னேரி லாதஎம் தாயகத்தீர் —மின்மினியைப்
போயா ஒளிகேட்போம் ? பொல்லார் உணர்ந்திடவே
ஓயா துழைத்துயர் வோம்.

—ஆ. தவசிலிங்கம், ஈரோடு-1.

எந்நாளும் கையேந்தும் ஏற்றமிலா வாழ்வகற்றி
நந்நாட்டு மானத்தை நாம்காக்க—இந்நாளே
பாயும் புலிபோலப் பாய்ந்தே வருவாய்நீ
ஓயா துழைத்துயர் வோம்.

—வங்கனூரான், வங்கனூர்.

பொல்லாத சோம்பலினைப் போக்கி நிலையறிந்து
வல்லாண்மை நாட்டினராய் வாழ்வதற்குப்—பல்லாண்டுச்
சாயா துழைத்திட்டுச் சாற்றுகின்ற சிற்றெறும்பாய்
ஓயா துழைத்துயர் வோம்.

—செல்வி பா. தயாள், எம்.ஏ., முக்கூடல்.

வங்கக் கடலோரம் வார்சிலையாய் நம்மண்ணன்
சிங்கக் குரலெழுப்பும் சேதியிது—தங்கங்காள் !
காயா மரமாகக் காலத்தை யோட்டாமல்
ஓயா துழைத்துயர் வோம்.

—கருவை—இயதா, கரூர்.

நாயாய்த் தெருத்தெருவாய் நாளெல்லாம் சுற்றிவிட்டுப்
போயமர்ந்தால் சோற்றைப் புசிப்பதற்குத்—தாயாரும்
வாயார வாழ்த்துவளோ ? ஆதலால் வாலிபனே !
ஓயா துழைத்துயர் வோம்.

—புலவர் மா. லூர்துசாமி, வேம்பார்பட்டி.

வீடுநிறை பிள்ளைகுட்டி வேண்டா ஒருபோதும்
தேடுபொருள் கொஞ்சமேனுஞ் சேமிப்போம்—நாடுயரத்
தீயார்தம் தீங்கறுப்போம் தீந்தமிழ்க்கும் பாடாற்றி
ஓயா துழைத்துயர் வோம்.

—ப. அறவாழி, கோவை.

கடவுளைக் கண்டேன்!

மாலை நேரம்! மனத்தை மயக்கும் மஞ்சள் வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது! மக்கள் பெரு வெள்ளமெனத் திரண்டிருந்தனர்! காட்டிலே நடைபெறும் திருவிழாவிற்குக் கால்நடையாகவும், கட்டை வண்டி மூலமாகவும் வந்திருந்த மக்களின் பக்தியைக் கண்டு திகைப்புற்றேன். கூட்டத்தில் நுழைந்து கோயிலுக்குச் சென்றேன். கோயிலின் உள்ளே ஒரு பகுதியில், குடும்பத்தினருடன் வீற்றிருந்த இறைவன் இன்முகம் காட்டிப் புன்முறுவல் செய்து "வாங்க, வணக்கம்!" என்று கூறி என்னை வரவேற்றார்.

"என்றைக்கு இங்கு வந்தீர்கள்? நலமாக இருக்கின்றீர்களா?" என்று இறைவனைக் கேட்டேன்.

"நாங்கள் வந்து நான்கு நாட்களாகின்றன. நான்கு நாட்களாக நாங்கள் மிகவும் நிம்மதியாக இங்கு இருக்கிறோம்" என்று இறைவன் புன்னகை தவழப் பதிலளித்தார்.

அந்த ஆண்டவனின் முகத்திலே அன்பு, அறிவு, அமைதி, அடக்கம் ஆகிய அரும்பண்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து காணப்பட்டன. இதுநாள் வரை காணாத கடவுளை இன்று கண்டு விட்ட களிப்பில், நான் இந்த உலகை மறந்து நின்று விட்டேன்.

நான் ஏதும் பேசாமல் நின்று விட்டதைக் கண்ட கடவுள் "தாங்கள் யாரோ?" என்று கேட்டார். இறைவன் கேட்ட கேள்வியினால் உணர்வு பெற்ற நான் மீண்டும் இந்த உலகுக்கு வந்தேன். என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது; கடவுளைக் கண்டு விட்ட களிப்பினால் ஏற்பட்ட கண்ணீர் அது!

இப்படியொரு நிகழ்ச்சி 22—1—1972 அன்று நடைபெற்றது· வியப்பாக இருக்கிறதா? விளங்கவில்லையா? விளக்கம் இதோ!

தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நான் கண்ட கடவுள் ஒரு தொழுநோய்ப் பிச்சைக்காரர்! அவர் வாழும் இல்லத்தையே நான் கோயில் என்று குறிப்பிட்டுள்ளேன். தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத் துவக்க விழாவையே திருவிழா என்று கூறியுள்ளேன்!

ஏசுநாதரும், அண்ணல் காந்தியடிகளும் தொழுநோய்ப் பிச்சைக்காரனின் உருவிலே ஆண்டவனைக் கண்டனர் : அவர்கள், தீண்டத்தகாதவர்கள் என்று வெறுத்து ஒதுக்கப் பட்டுத் திக்கற்றுத்திரியும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்குச் சேவை செய்துவருவதையே, ஆண்டவனுக்குச் செய்யும் அரிய சேவையாகக் கருதினார்கள்.

"கல்லுடைக்கும் தொழிலாளி, வயலில் உழைக்கும் பாட்டாளி, வண்டி இழுக்கும் தொழிலாளி உருவில் கடவுள் இருக்கிறார்" என்று 'கீதாஞ்சலி' என்னும் கவிதையிலே குறிப்பிட்டுள்ளார்—உலகு புகழ் நோபெல் பரிசு பெற்ற கவி ரவீந்திரநாத தாகூர்.

இறவாப்புகழ் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று கூறி அதற்கான திட்டங்களை உருவாக்க முயன்றார். அண்ணா வழியில் ஆட்சி செய்து வரும் கலைஞர் அவர்கள் ஏழைகளைக் கடவுளாகக் கருதி அவர்களுக்குச் சேவை செய்வதையே தன் இலட்சிய கீதமாகக் கொண்டு, திட்டங்களைத் தீட்டித் திறம்படச் செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களிலேயே தலையாய திட்டம் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டமாகும். அதிலே முதற் கட்டம், தொழுநோய்ப்பிச்சைக்காரர் மறுவாழ்வு ' இல்லம் அமைத்தலாகும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம் பிறந்த தெப்படி?

பிச்சைக்காரர்கள் மேல் யாருக்கும் ஏற்படாத பரிவும், பாசமும், கலைஞருக்கு மட்டும் எப்படி ஏற்பட்டது என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது. இதே கேள்வி பலருடைய உள்ளத்தில் ஏற்படக் கூடும் என்று எண்ணியோ என்னவோ உளுந்தூர்ப்பேட்டை தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்திறப்பு விழாவின்போது முதல்வர் அவர்கள் பின்கண்ட விளக்கத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

"எனக்கு 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முந்திய நினைவு வரத்தான் செய்கிறது. இந்தப் பகுதியிலே — உளுந்தூர்ப் பேட்டை வழியிலே—சேலம் செல்வதானாலும்— திருச்சி செல்வதானாலும் — அல்லது திருச்சி, சேலம் போன்ற இடங்களிலிருந்து சென்னைக்குச் செல்வதானாலும், உளுந்தூர்ப் பேட்டைக் கடைத்தெருவில் நாங்கள் செல்கின்ற கார் கொஞ்ச நேரம் நிற்பதும் —அந்த முக்கூட்டுச் சாலையிலே உள்ள சிற்றுண்டி விடுதிக்கு நாங்கள் சென்று உணவருந்தி விட்டு வருவதும், காரிலே ஏறு கையில் கையேந்திப் பிச்சை கேட்கும் தொழுநோய்ப்



பிச்சைக்காரர்களைச் சந்திப்பதும் இன்றைக்கும் என் நினைவிலே இல்லாமல் இல்லை.

''இன்னும் நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அந்தச் சிற்றுண்டி விடுதிக்கு முன்னால், ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள், நான் காலையிலே ஆறரை அல்லது ஏழு மணிக்குச் சிற்றுண்டி அருந்திவிட்டுக் காரிலே ஏறவந்த போது ஒருதாய்—50 வயது மதிக்கத் தக்க ஒரு தாய்—முகமெல்லாம் கந்தல் துணியால் மூடிக் கொண்டு, துணியில் உள்ள ஓட்டையின் மூலம் பார்த்தவாறு கையை நீட்டி 'ஐயா, சாமி பிச்சை' என்று கேட்டபோது, நான் காசை எடுத்து அவர் வைத்திருந்த பாத்திரத்திலே போட முனைந்தேன். அப்போது காற்றடித்த வேகத்தில் முகத்தை மூடியிருந்த துணி கீழே சரிய நான் அவரைப் பார்த்தேன். அந்த அம்மையாருக்கு முகமே இல்லை. சில சதைத் துணுக்குகளும், நீட்டிக் கொண்டிருந்த எலும்புத் துண்டுகளும், பிதுங்கிய கண்களும் தான் இருந்தன. அந்த அளவுக்குத் தொழுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள்.

''அந்தக் காட்சியினைக் கண்ட அன்றே, இவர்களது வாழ்வைச் சீரமைத்திட வேண்டும் என்ற எண்ணம் அந்தக் காலந் தொடங்கியே எனக்கு இருந்து வந்தது. அப்போதே நீ இந்த மறுவாழ்வுப் பணியைத் தொடங்கி இருக்கக் கூடாதா என்று நீங்கள் கேட்கலாம். அப்போதல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி அமைந்திடவில்லை.

'' இப்படிப் பட்டவர்களை—பொட்டுப் பூச்சிகளாய்—புன்மைத் தேரைகளாய்—புழுக்களினும்கேவலமாய்—சமுதாயத்தின் அடித்தளத்திலே வீழ்ந்து கிடக்கும் இவர்களை யார் காப்பாற்றுவது ? அதற்கு யார் வழி வகுப்பது என்பது அன்று கேள்விக் குறியாக என்முன் எழுந்தது. ' நீயே இதைச் செய்ய வேண்டும். ' என்று அக்கேள்விக்கான பதில் ஐந்தாறு ஆண்டுகள் கழித்து என்னையே நோக்கிப் பாயும் என்று நான் கருதவில்லை. ஆனால், இன்று அக்கடமையினைச் செய்யும் பெரும் பொறுப்பும்—என் சக அமைச்சர்களுக்கும்—நாங்கள் வீற்றிருக்கும் தமிழக அரசுக்கும் வாய்த்திருப்பதை எண்ணியெண்ணி நாங்கள் பெருமைப் படுகிறோம்'' என்றார்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

சென்ற ஆண்டு முதல்வர் அவர்கள் அவருடைய பிறந்த நாள் விழாவின்போது ' பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்க ரூ. 40 இலட்சம்தேவை; அத்திட்டத்திற்கு நிதி உதவுங்கள் ' என்று விடுத்த வேண்டுகோளுக்குஇணங்கி, பொதுமக்கள் பிச்சைக்காரர்மறுவாழ்வு நிதிக்கு வாரி வழங்கியுள்ளனர். பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு 17—1—1972 வரை ஒரு கோடியே 3 இலட்சத்து 72 ஆயிரத்து 129 ரூபாயும் 58 காசுகளும் சேர்ந்துள்ளது. இதில், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக ஜூன்1971-ல் நடத்தப் பெற்ற பரிசுச் சீட்டுக் குலுக்கல் மூலமாகக் கிடைத்த 43,27,200 ரூபாயும் அடங்கியுள்ளது. இந்நிதியைக் கொண்டு, இத்திட்டத்தின் முதற் கட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லம் அமைக்கப்பட்டு வருகிறது.

தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் முதன் முதலில் செங்கற்பட்டு மாவட்டம் பரனூரில் துவங்கப்பட்டது. இரண்டாவது இல்லம் தென்னார்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் ரூபாய் 7 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இல்லம் 20 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இவ்வில்லத்தில் 500 முதல் 750 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் வாழ முடியும். இந்த இல்லத்தில் 22—1—1972 அன்று வரை, 103 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தாங்களாகவே விரும்பி வந்து சேர்ந்துள்ளனர். இவ்வில்லத்தைத் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் 22—1—1972 அன்று திறந்துவைத்தார்கள்

உளுந்தூர்ப் பேட்டைக்கருகில் வெள்ளையூரில் எழுந்துள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தின் தோற்றம்



முதல்வர் வணங்கும் தெய்வம்

விழாவிற்குத் தலைமை தாங்கிய தமிழ்நாடு அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் பேசியதாவது :—

'' குழந்தை பாலுக்கு அழுகிறது. பத்துக்காசு கொடுங்கள் என்று ஒரு பெண் பிச்சை கேட்டால், 'எட்டப்போ' என்று சொல்லிவிட்டுக் காரிலே போகும் சீமான்கள் நிறைந்தநாடு தான் இது. ஏழைகளுக்கு உதவ மனமில்லாமல் ஆண்டவனுக்குக் கும்பாபிஷேகம் செய்கிறவர்கள் இங்கு இருக்கிறார்கள்.

'' ஆனால், ஏழைகளைக் கலைஞர் தெய்வமாகக் கருதுகிறார். பண்டித நேரு அவர்கள் சாதாரண மனிதர்களைத்தான் நான் வணங்குகின்றேன் என்றார். அதையும் மிஞ்சி, டாக்டர். கலைஞர் அவர்கள் தொழுநோயாளிகளை வணங்குகின்றார்.''

இவ்வாறு அமைச்சர் சத்தியவாணி முத்து அம்மையார் கூறினார்.

தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு உடை வழங்கி, உரையாற்றினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

'' உலகத்திலே வேறு எந்த உயிரினங்களிலும் பிச்சைக்காரர்கள் கிடையாது. விலங்குகள், பறவை இனங்களிலும் பிச்சைக்காரர்கள் கிடையாது. சமுதாயத்தில் எல்லா மனிதரையும் சந்திக்கலாம். ஆனால், பிச்சைக்காரர்களைச் சந்திப்பது அலட்சியமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு அரசு அவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற மக்களைப் பற்றி இதற்கு முன் யாரும் சிந்திக்கவில்லை; பிச்சைக்காரர்களை வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம் வேறு எவருக்கும் வரவில்லை. அவர்கள் கண்களில் இந்தப் பிச்சைக்காரர்கள் படவில்லை. அண்ணா வழி வந்த கலைஞர் அவர்கள் தான் பிச்சைக்காரர்களுக்கு நல்வாழ்வு அளித்து வருகிறார்.''

அடுத்த ஆண்டிற்குள் 6 இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார். அவரது உரை உள்ளத்தை நெகிழ்விப்பதாக இருந்தது. அதன் ஒரு பகுதியின் சுருக்கம் வருமாறு :—

'' தமிழகத்தில் 60,000 பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். இதில், கிட்டத்தட்ட 6,000 பேர் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். பிறக்கும் போது ஐந்து விரல்களோடு பிறந்தவர்கள், பின் ஒரு விரலை இழந்து விட்டு, இரண்டு விரல்களை நீக்கிக் கொண்டு அல்லது தனது விரல்களையெல்லாம் கட்டையாக்கிக் கொண்டு, தனது அழகு மேனியைத் தொழுநோயினால் கெடுத்துக் கொண்டு, உடல் கூனிக் குறுகி, வாழ்க்கையிலே எந்த விதச் சுவையுமில்லாமல் சீரழிந்து, ' ஏனெடுத்தோம் இந்த ஈன ஜென்மம்'' என்று ஆண்டவனைக் கேட்டுக்கொண்டு, 'போகும் காலம் எப்போது?' என்று புலம்பிக் கொண்டிருக்கிற ஜீவன்கள் 6,000 பேர் பிச்சைக்காரர்களாகத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அந்த 6,000 பேர் கேட்ட உதவியை முதற்கட்டமாக நாம் செய்தாக வேண்டும் என்ற அடிப்படையிலே நாம் திட்டத்தை வகுத்துக் கொண்டுதான் 6 இடங்களில் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் குடியமர்த்தும் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம்.

அடுத்த கட்டமாக மிச்சமுள்ள தொழுநோயில்லாத பிச்சைக்காரர்களை எல்லாம்



உறுதியான கட்டடங்கள்: கிராமங்களில்-1

SANKAR CEMENT I C

மாட்டுத் தொழுவம்

கால்நடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை

சங்கர் சிமெண்ட்

IS 269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது
இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDS/C-1446TM R

சேர்ப்பது என்று திட்டமிட்டிருக்கிறோம். கட்டட வேலைகளெல்லாம் முடிந்த பிறகு தமிழ்நாட்டுத் தெருக்களிலே யார் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் எல்லாம் சட்டப்படி விடுதிகளிலே கொண்டுவந்து சேர்க்கப்படுவார்கள். கட்டாய முறை, யாரையும் துன்புறுத்துவதற்காக அல்ல; அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காகத்தான். சமுதாயத்தில் நடைபாதையில் நடைப்பிணம் போல், சாலையோரத்தில் வேலையற்றதுகளாய் ஒரு சமுதாயம், இன்றைக்கும் இருக்கின்ற ஒரு கொடுமையிலிருந்து அந்தச் சமுதாயத்தை மீட்டாக வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தக் காரியம் நடைபெறுகிறதே அல்லாமல், துன்புறுத்துவதற்காக அல்ல'' என்று முதல்வர் கலைஞர் அவர்கள் தெளிவுபடுத்தினார்.

அதிகாரிகளாகப் பணியாற்றத் தயங்கமாட்டோம்

மேலும் தொடர்ந்து அவர் பேசுகையில், தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களைக் கண்காணித்துக் கொள்ள நியமிக்கப்பட்ட அதிகாரிகள், பொறுப்பினை ஏற்கத் தயங்குவது பற்றி மிகவும் வருத்தத்தோடு கூறியதுடன், 'அமைச்சர்களே அதிகாரிகளாகப் பணியாற்றத் தயங்க மாட்டோம்' என்றும் குறிப்பிட்டார். அவர் கூறிய கடமை உணர்ச்சி ததும்பும் வார்த்தைகள் :-

'' பிச்சைக்காரர் விடுதியிலே போய் அதிகாரியாக இருப்பதா? அதிலும் தொழுநோய் பிடித்தவர்கள் உள்ள இடத்தில் இருப்பதா ? என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்கள் படித்த படிப்பும் வீண் ! பெற்ற பட்டமும் பெறுகின்ற பதவியும் வீண் ! என்று எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படிப்பட்ட சோகச் செய்தி என் காதிலே விழுந்த காரணத்தினால் உறுதியோடுசொல்கிறேன்.

அப்படி அதிகாரிகள் மறுப்பார்களேயானால், அமைச்சர் பெருமக்களே முறை போட்டுக்கொண்டு, நாங்களே வந்து ஒருமாத காலம் அதிகாரிகளாகப் பணியாற்றுவோம் என்ற முடிவினை நாங்கள் எடுப்பதற்கு முன்பு, அதிகாரிகள், நண்பர்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு இந்தப் பணியினை ஆற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ''.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது, பொது மக்களின் உள்ளத்தை நெகிழ்வித்ததுடன், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வில் அவருக்கு உள்ள ஆர்வத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் அமைந்திருந்தது.

இதைப் பொது மக்கள் எழுப்பிய கையொலி உறுதிப்படுத்துவதாக இருந்தது.

முதல்வர் விடுத்த அன்பு வேண்டுகோள்

'' சிறுதுளி பெருவெள்ளம் என்பதைப் போல் காசாக, ரூபாயாக, ஆயிரமாகத் தந்தாலும் சரி ; அனைவரும் இந்த நல்ல காரியம் வெற்றி பெற்றாக வேண்டும் என்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். 'விடுதியிலே சேர்ந்து தங்கள் உடல் நலத்தையும் பேணி, உழைக்க வேண்டும்' என்று இங்கு வலுவிலே வந்து சோந்திருக்கிற பிச்சைக்கார நண்பர்களை, தாய்மார்களை, சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறேன் ! தமிழக அரசு எடுக்கின்ற இது போன்ற நல்ல பெரும் பணிக்குத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் அமோக ஆதரவு இன்று போல் என்றும் இருக்க வேண்டும் '' என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார் முதல்வர்.

இந்தப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் என்னையும் ஈடுபடுத்திக் கொண்டால் என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

'' என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள் ? புறப்படுங்கள். உடனே உளுந்தூர்ப்பேட்டை சென்று செய்தி கொடுக்க வேண்டும் என்று நண்பர் கேசவன் குறிப்பிட்டார். கடவுளைக்கண்ட களிப்பில் கடமையைச் செய்யக் காற்றெனப் பறந்தோம்.

'' ஆலயங்களுக்குச் செல்வது வழக்கமில்லை; ஆண்டவனைத் தொழுவதும் பழக்கமில்லை; ஆனால், இதுபோன்ற பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் தான், நான் செல்கின்ற ஆலயம். அங்கே இருக்கின்ற நீங்கள்தான் நான் வணங்குகின்ற தெய்வங்கள்'' என்று பிச்சைக்காரர்களிடம் முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட உணர்ச்சி மிக்க வார்த்தைகள் என் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

நாளையத் தலைமுறை

வீரம் விளைத்த மருதிருவர்

சிப்பாய்க்கலகம் என்னும் சிந்தனை அரும்பு முன்னரே இந்திய விடுதலைப்போரை, ஆம், நாட்டின் மானங்காக்கும் போரைத் தொடங்கிவைத்த முதல் இனம் தமிழினம்; அந்தப் போரில் கனன்றெழுந்த தியாகத் தீயில் குதித்துத் துப்பாக்கிக் குண்டுகளை முத்தமிட்டும், தூக்கு மேடைகளில் தொங்கியும், சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்த முதல்இனமும் தமிழினமே ஆகும்!

இற்றைக்கு 180 ஆண்டுகட்கு முன்பே, கப்பம் கட்டுமாறு கும்பினி அதிகாரிகள் பயமுறுத்திக் கப்பம் வசூலிக்க முயன்ற நேரத்தில் ''கப்பமா? எதற்காக? வானம் பொழியுது! பூமி விளையுது! மன்னவன் காணிக்கு வரி எதற்கு?'' என்று சீறியெழுந்தான் தென்பாண்டி நாட்டில் பாஞ்சாலங் குறிச்சியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த வீரபாண்டியக் கட்டப்பொம்மன்! அவன் வழி வந்தவர்கள்தான் ஊமைத்துரையும், மருது சகோதரர்களும்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த சிவகங்கைச் சீமையைச் சேதுபதி என்னும் தமிழ்மறக் குலவீரர் ஆண்டுவந்தார். இவர் 36 ஆண்டுக்காலம் வாழ்ந்தார். இவருக்குப் பிறகு சசிவர்ணத் தேவர் 25 ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்தார். இவருக்குப் பின் இவர் மகனாக முத்துப் பெரிய வடுகநாத உடையணத் தேவர் பட்டம் சூட்டப்பெற்றார். அந்த நேரம் ஆர்க்காட்டு நவாப்பின் 'காட்டுத் தர்பார் நடந்து கொண்டிருந்தது. தமிழ்நாடு கொள்ளை, கொலைகளுக்கு இரையானது. ஆங்கிலக் கும்பினியின் படைபலத்தைத் துணையாகக் கொண்டு சுதந்தரப் பறவைகளான தமிழகச் சிற்றரசர்களது நாடுகளைச் சூறையாடினான். அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேய வெறியர்களோடு ஆர்க்காட்டான் நடத்திய அட்டகாசம் கொஞ்ச நஞ்சமன்று.

இக்கொடுமைகளைக் கண்ட தமிழினம் கொதித்தெழுந்தது. இதன் விளைவு? 1972-ஆம் ஆண்டு ஜெனரல் ஸ்மித் என்பவன் மறவர் நாட்டின் மீது படையெடுத்தான்; அதாவது இராமநாதபுரத்தைத் தாக்கினான். பலரைக் கைது செய்து காவலில் வைத்தான். இராமநாதபுரத்தில் வெள்ளைப்படை வெற்றி பெற்றாலும், சிவகங்கையை அவனால் நெருங்கக் கூட முடியவில்லை. காரணம், முத்துவடுகநாதன் என்றாலேயே வெள்ளையருக்குக் கதிகலங்கியது. மேலும், சிவகங்கைச் சீமையின் அரணாக விளங்கிய பெரிய மருது, சின்ன மருது என்னும் சகோதரர்களின் பெயர்களைக் கேட்டதும் அந்த வெள்ளைப் படை வெருண்டோடியது.

கருவிலே திருவுடையரான சகோதரர்கள் இருவரும் வீரத்தின் திருவுருவாய்க் காட்சியளித்தார்கள். எஃகு போன்ற உடல் வன்மையும், உள்ள உரமும் மிக்க அவர்களின் கம்பீரத் தோற்றம் பகைவரின் தொடை நடுங்கச் செய்யும்! வீர நெஞ்சிலே ஈரமும் இருந்தது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:—சின்ன மருது ஒருநாள் காட்டு வழியே சென்றுகொண்டிருந்த பொழுது பசி மிகுதியால் களைப்புற்று மயங்கிக் கிடந்தார். அப்போது அங்குக் காவல் காத்துக்கொண்டிருந்த ஒரு கிழவி ஓடி வந்து, ''ஐயா, நான் ஏழை! என்னிடம் உங்கள் களைப்பைப் போக்க ஒரு பொருளும் இல்லை. காலையில் நான் குடித்த கஞ்சி மீதி இருக்கிறது. குடிக்கிறீர்களா?'' என்று கேட்டாள். கிழவியின் இனிய மொழியைக் கேட்ட சின்ன மருது, ''அம்மா, உங்கள் பெயரென்ன?'' என்று கேட்டார். அதற்கு அக்கிழவி, ''தாயம்மாள்'' என்றாள். ''ஆமாம். நீ தாய் அம்மாளே தான்! நீ தரும் கூழும் அமிழ்தம் தான்........கொண்டு வருக!'' என்று கூறிக் கிழவி தந்த கூழைக் குடித்துக் களைப்பு நீங்கினார். உடனே ஓலை ஒன்றெடுத்து அதில் முள்ளால் ஏதோ எழுதிக் கையெழுத்திட்டார். அது வெறும் ஓலையில்லை. ''இந்தக் கிராமம் தாயம்மாள் என்னும் இக்கிழவிக்கே உரியது என்ற சாசனம்!''

வீரமும், நெஞ்சில் ஈரமும் ஒருங்கே பெற்ற இச்சகோதரர்களைச் சோதிப்பது போலிருந்தது ஆர்க்காட்டானின் ஆணவச் செயல். அவன் தூண்டுதலின் பேரில் ஜோசப் ஸ்மித் மிகுந்த செருக்கோடு கூலிப் பட்டாளங்களுடன் சிவகங்கைச் சீமையை முற்றுகையிட' விரைந்து வந்தான். சும்மா இருக்குமா வீரப் படை! வெகுண்டெழுந்தது. ''மன்னா! வரட்டும் வெள்ளைப் படை! இதோ இந்த வாளுக்கு நல்ல விருந்து வைக்கிறோம்!'' என்று வீரமுழக்கம் செய்தனர் சகோதரர்கள்.

எவரும் எளிதில் நெருங்க முடியாத காளையார் கோவில் காட்டில், முத்து வடுகநாதனும் அவன் மனைவியும் புகுந்தனர். இதையறிந்த ஆர்க்காட்டான், புதுக்கோட்டை மன்னனுக்குப் பணத்தாசை காட்டி மயக்கித் தமக்கு உதவும்படி வேண்டினான். வெள்ளைப்படை கர்னல் பான்ஷோர் என்பவன் தலைமையில் விரைந்து வந்தது. தமிழ்த் தாயின் மானங் காக்கத் துணியாத ஒரு கயவன், காளையார் கோவில் அரணைக் காட்டிக் கொடுத்துவிட்டான். நவாப்பின் படையும், கும்பினிப் படையும் அரணுக்குள் புயலெனச் சீறிப் பாய்ந்தன. நாகமென வெகுண்டெழுந்தான் முத்துவடுகநாதன். ''வெள்ளைப் படையை இல்லையென ஆக்குங்கள்! துரோகிக் கூட்டத்தைத் தூளாக்குங்கள்! வெட்டுங்கள்! குத்துங்கள்'' என்ற அவனது வீர முழக்கம் காடெல்லாம் எதிரொலித்தது. அந்த ஒலி வெள்ளைப் படையையும் கிலி பிடிக்க வைத்தது.

வீராங்கனை வேலுநாச்சி கொடியேந்திக் குதிரை மீதேறி வந்து தமிழ்ப்படைக்கு ஊக்கமூட்டிக் கொண்டே, எதிரிகளின் தலைகளைப் பந்தாடினாள். வெள்ளையன் வெருண்டான். என்றாலும் உச்சக் கட்டத்தை அடைந்தது அப்போர். ஆயுதபலம் நிறைந்த வெள்ளைப் படையினர் பீரங்கிகளால் கோட்டையைத் தகர்த்தனர்.

கோட்டை வாயில், பகைவர் வசமாயிற்று! உடனே சின்ன மருது, ''அரசே! தப்பிவிடுங்கள்; பிறகு படை திரட்டித் தாக்குவோம்!'' என்றான். ஆனால் முத்துவடுகநாதனோ ''முடியாது; என் உடலில் இறுதிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை பகைவனை எதிர்த்தே தீருவேன்!'' என்று கூறியபோது வெள்ளையர் அவனை நாற்புறமும் சூழ்ந்து தாக்கினர். அனைவரையும் ஒருவனாகவே நின்றுபோராடிய அவனது வீரத்தைக் கண்டு வெள்ளையரே திகைத்தனர். என்றாலும் தமிழ் மானம் காத்தவன் மார்பில் துரோகிகளின் குண்டு பாய்ந்தது. முத்துவடுகநாதன் வீரமரணம் எய்தினான்.

வேலுநாச்சியும், மருது இருவரும் திண்டுக்கல்லுக்கு விரைந்து சென்றார்கள். வெள்ளையரை ஒழிக்கத் திட்டமிட்டிருந்த ஐதர் அலி அங்கு அவர்களை வரவேற்றான்.

நவாபின் நய வஞ்சகத்திற்கு இராமநாதபுரமும், சிவகங்கையும் பலியாயின. மருது இருவர், வேலுநாச்சி ஆகியோரின் நிலையை எண்ணி மக்கள் கொதித்தெழுந்தனர். மருது இருவர் மறைமுகமாக மக்களிடம் தொடர்பு வைத்துக் கொண்டார்கள். மக்களும் மறைவாகக் கப்பம் செலுத்தினார்கள். இதனால் ஆர்க்காட்டானின் வாயில் மண் விழுந்தது. அவனால் சல்லிக்காசு கூட மக்களிடமிருந்து வசூலிக்க இயலவில்லை. கடைசியில் ஒன்றும் புரியாமல் மறவர் நாடுகளை அவர்களிடமே ஒப்படைத்தான் நவாபு.

சிவகங்கைக்கு வேலுநாச்சி அரசியானாள். மருது இருவர் அமைச்சரானார்கள். நாளடைவில் மருது சகோதரர்களே அரசரானார்கள். வீரத்திலகம் வேலுநாச்சி காலமானார். இந்தச் சமயத்தில் வீர பாண்டியக் கட்டப்பொம்மனின் தம்பி ஊமைத்துரை அங்குவந்து சேர்ந்தான்.

மருது சகோதரர்களிடமிருந்து அரசைக் கைப்பற்ற வெள்ளையரும், நவாபும் சதி செய்தனர். மருது சகோதரர்களைப் பல விதத்திலும் மிரட்டினர். இதற்கெல்லாமா மருது சிங்கங்கள் பணிந்து விடும்? அவர்களிடம் இருபதாயிரம் வீரர்கள் கொண்ட படை இருந்தது. ஈட்டி, வாள் வேல் போன்ற போர்க்கருவிகள் ஏராளமாக இருந்தன. இதற்கு மேலாகத் தாய்நாட்டுப் பற்று மேலோங்கி இருந்தது. காட்டிக்கொடுக்கும் துரோகிகள் மட்டும் இல்லாமல் இருந்தால், எப்போதோ வெள்ளைப்படை தமிழ் மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டு இருக்கும்.

1801-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள் மருது இருவருக்கும், கும்பினிப் படைக்கும் போர் தொடங்கியது. பழம்னேரி, சிறுவயல், காளையார் கோவில், கமுதி, நாகலச்சேரி, திருப்பாச்சேத்தி முதலிய இடங்களில் கடும்போர் நடந்தது. வெள்ளைப்படையின் பெரிய அதிகாரிகள், சிப்பாய்கள் முதலானோரை வெட்டி மலைபோல் குவித்தது தமிழர் படை' கும்பினிப்படையினர் தாம் எண்ணியபடி மருது இருவரையும், ஊமைத் துரையையும் கைது செய்ய முடியவில்லையே என்று ஏங்கினர்.

படை வலிமையால் இவர்களை வெல்ல முடியாத வெள்ளையர் வதந்தி, குழப்பம் பலவற்றை மக்களிடையே பரப்பிக் கலகத்தை உண்டு பண்ணினர். இதற்குப் பலியாகி, மக்கள் மானம் காத்த மறவர்களைக் காக்காமல், வெள்ளையருக்கு அவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். கும்பினிப் படை காடுமலையெல்லாம் தேடி மருது இருவரையும், ஊமைத்துரையையும் கைது செய்தது.

காரைக்குடியிலிருந்து மதுரை செல்லும் வழியிலுள்ள திருப்பத்தூர்க் கோட்டையில் மருது சகோதரர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றனர் வெள்ளையர்கள். ஊமைத்துரையைப் பாஞ்சாலங் குறிச்சியிலேயே தூக்கிலிட்டுக் கொன்றார்கள். தாய்நாட்டின் மானங்காத்த வீரர்கள் தூக்கிலிடப் படுவதைக் கண்ட தமிழ்த் துரோகிகள் மகிழ்ந்தனர். கூலிப்பட்டாளம் குதூகலித்தது. வெள்ளையரும், ஆர்க்காட்டு நவாபும் அகமகிழ்ந்தனர். ஆனால், ஆழ்கடல் உள்ளவரை அந்த மறவர் குலத்திலகங்களின் மாண்பு மறையாது! குறையாது!

இதோ இன்னொரு சாதனை!
தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!
நாலாயத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை!"
தமிழ் நாட்டில் உருவாகிறது!
நெல்லைக்காரு மாவட்டத்திலுள்ள பூத்துறை
குடும்ப நலத்திட்டப் பணியில்
சிற்றூர்!
குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!
பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்
நெல்லுக்காரு மாவட்டம்
பூத்துறை
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!
குடும்பநலத்துறை
தம்பராசு

தமிழகத்தின் பதினாறு மாவட்டங்களில் ஏழு மாவட்டங்கள் கடற்கரையோரம் அமைந்துள்ளன. அவற்றில் மிக நீண்ட கடற்கரைப் பகுதிகளைக் கொண்டது இராமநாதபுர மாவட்டம். சுமார் [illegible] மைல் நீளமுள்ள கடற்கரை அதற்குண்டு. இங்குக் கடல் அதிக ஆழமில்லை; கடலோரம் பவளப் பாறைகளும் சுண்ணாம்புப் பாறைப் படிவங்களும் அதிகம் உண்டு. ஆழமில்லா மடுக்கள் மிக உண்டு. பெரிதும் சிறியதுமான பல தீவுகள் கடற்கரையோரம் அமைந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை பதினேழு. அவற்றில் ஐந்து முதுகுளத்தூர் வட்டத்திலும், பன்னிரெண்டு இராமநாதபுரம் வட்டத்திலும் அமைந்துள்ளன.

1. இராமேஸ்வரம்: மிகப் பெரிய தீவு இராமேஸ்வரம். இத்தீவினை மண்டபத்துடன் பாம்பன் பாலம் இணைக்கிறது. இங்குப் புகழ்பெற்ற இராமேஸ்வரம் கோவில் உள்ளது. தீவின் தெற்கு முனையில் தனுஷ்கோடி அமைந்துள்ளது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆண்டின் எல்லாப் பருவங்களிலும் இங்குப் பயணிகள் வந்த வண்ணமிருப்பர். இத்தீவிலிருந்து இலங்கைக்குக் கப்பல் போக்குவரத்து உள்ளது.

2. குருசடைத் தீவு: இராமேஸ்வரத்திலிருந்து மிக அருகாமையில் 250 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு முத்துச்சிப்பி வளர்ப்பு நிலையம் ஒன்றும், மீன் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் உள்ளன.

3. சிங்களத் தீவு: குருசடைத் தீவிலிருந்து ஒன்றரை மைல் தொலைவிலுள்ளது. சிங்களத்திலிருந்து மீன் பிடிக்க வருபவர்கள் இங்குத் தங்கும் வழக்கம் உண்டு. அதனால், சிங்களத் தீவு என்று பெயர் பெற்றது. மீன் பிடித்தல் முக்கிய தொழில்.

4. பூமரிச்சான் தீவு: பாம்பனிலிருந்து நாலுமைல் தொலைவிலுள்ளது. நல்ல மேட்டுப்பகுதி. இது மூன்று பகுதிகளைக் கொண்டது. பெரியகண்டத் தீவு, நடுத்தீவு, பூமரிச்சான் தீவு என்ற பெயர்களைக் கொண்டது. இத்தீவுக்குப் பள்ளிவாசல் தீவு என்னும் ஒரு பெயருமுண்டு.

5. மனோலித் தீவு: மண்டபம் கேம்பிலிருந்து நாலு மைல் தொலைவிலுள்ளது. இத்தீவின் சுற்றுப்புறம் ஆழமில்லாக் கடலைக் கொண்டது. இங்கு மீனவர்கள் மூங்கில் கழிகளைச் சதுரமாகக் கடலில் வரிசையாக நட்டு, வலைகளை அமைத்து மீன் பிடிப்பார்கள். இந்த முறைக்குக் களங்கட்டி மீன் பிடித்தல் என்று பெயர். இத்தீவில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் உள்ளன.

6. முயல் தீவு: மண்டபம் கேம்பிலிருந்து ஆறரை மைல் தொலைவில் உள்ளது. இத்தீவில் ஏராளமான முயல்கள் உள்ளன. இதனால் இத்தீவு முயல் தீவு என்று பெயர் பெற்றது.

7. முளித்தீவு: புதுமடத்திலிருந்து ஆறரைமைல் தொலைவில் உள்ளது. முயல் தீவிலிருந்து ஆறு மைல் தூரம். இது வெறும் பாறை; இங்கு மக்கள் யாரும் வசிப்பதில்லை. இங்குச் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கிறார்கள்.

8. வாலைத் தீவு: முளித்தீவிலிருந்து ஒன்றரைமைல் தொலைவிலுள்ளது. இங்கு மீன்கள் அதிகம் கிடைக்கின்றன. இதற்கு வாலித்தீவு என்றும் வலைத்தீவு என்றும் பெயர்கள் உண்டு. இங்கு ஒரு ரோமன் கத்தோலிக்க மாதா கோவில் ஒன்றுண்டு. அதற்குக் கிட்டோரியம்மன் மாதா கோவில் என்று பெயர். இந்தத் தீவில் சுண்ணாம்புக்கல் பாறைகள் உண்டு.

9. தலையாரித் தீவு: கீழக்கரைக்குத் [illegible] மைல் தொலைவிலுள்ளது. இங்கும் சுண்ணாம்புக்கல் பாறைகள் உள்ளன.

10. அப்பாத் தீவு: கீழக்கரைக்கு ஐந்து மைல் தொலைவு. பவளப் பாறைகள் இங்கு உண்டு. மனிதர்கள் இங்கு வசிப்பதில்லை.

11. பூவரசன் ஹள்ளித் தீவு: கீழக்கரைக்கு ஐந்தரை மைல் தொலைவிலுள்ளது. இத்தீவில் பூவரசன் மரங்கள் அதிகம். அதனால் இத்தீவு இப்பெயர் பெற்றது.

12. பிள்ளையார் முனைத் தீவு: பூவரசன் ஹள்ளித் தீவுக்கு முக்கால் மைல் தொலைவிலுள்ளது. இதற்குப் பாலயாமுனைத் தீவு என்றும் ஒரு பெயர் உண்டு. இங்கு மனிதர்குடியிருப்பு இல்லை.

13. ஆனைப்பார் தீவு: பிள்ளையார் முனைத்தீவுக்கு இரண்டு மைல் தொலைவிலுள்ளது. இது பாறைகள் மிகுந்த தீவு.

14. நல்ல தண்ணீர்த் தீவு: வாலி நோக்கத்திலிருந்து ஐந்து மைல் தொலைவு. இத்தீவில் மூன்றடி தோண்டினாலே நல்ல குடிதண்ணீர் கிடைக்கிறது. சவுக்குத் தோப்புகள் இங்கு அதிகம்.

15. சுளித் தீவு: நல்ல தண்ணீர்த்தீவிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ளது. மணற் பாங்கானது. வெறும் பொட்டல் வெளிதான்.

16. உப்புத் தண்ணீர்த் தீவு: சுளித்தீவிலிருந்து இரண்டேகால் மைல் தொலைவிலுள்ளது. மணற்பாங்கானது. ஆனால், இங்குக் கிடைக்கும் ஊற்று நீர் உப்புக் கரிக்கும். அதனால் இத்தீவு உப்புத் தண்ணீர்த் தீவு என்று பெயர் பெற்றது.

17. கச்சத் தீவு: இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே பத்து மைல் தொலைவிலுள்ளது. இதன் பரப்பு 285.20 ஏக்கர். அதன் சர்வே நம்பர் 1250. இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் ஆட்சி வரம்புக்குட்பட்டது. முன் காலத்தில் இராமநாதபுரம் ஜமீன்தார்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இங்கு ஒரு மாதா கோவில் உள்ளது. வாரத்திற்கொருமுறை அங்கு நடக்கும் [illegible]கக்குத் தங்கச்சி மடத்திலிருந்து ஒரு பாதிரியார் போய் வருவார். மீன்பிடித்தல் முக்கிய தொழில்.



ஏர்ப்படை சுழன்றால் சோற்றின்
எழில்மணம் நிறையும்! வீரப்
போர்ப்படை சுழன்றால் மாற்றார்
பொடிப்பொடி யாவார்! வானில்
கார்முகில் சுழன்றால் நாட்டின்
கழனியோ சிரிக்கும்! நல்லோர்
கூர்ப்பேனா சுழன்றால் மண்ணில்
குவியாதா கருத்துச் செல்வம்?

வாள்செய்த செயலை மிஞ்சும்
'வால்ட்டேரின்' பேனா வாற்றல்!
தாள்செய்த 'பிரஞ்சுப் போ'ரில்
துள்ளிய உடற்றுண் டங்கள்
வாள்செய்த செயல்தான்! அந்த
வாளினைச் சுழலச் செய்த
நீள்சக்தி முகிழ்த்த தெங்கே?
'நெருப்புப்பே' னாவில் அன்றோ?

தாற்றுக்கோல் தவறும் மாட்டைச்
சரியான வழிந டத்தும்!
ஊற்றுக்கோல் பிழைசெய் வோரை
உண்மைக்கே நடத்திச் செல்லும்!
நாற்றினை நிலத்தில் நட்டோர்
நன்மணி அறுத்தார்: தூய
ஊற்றுக்கோல் ஏட்டில் நட்டோர்
ஒப்பற்ற நூலைச் செய்தார்!



அறிஞர்க்கும் உலகத் திற்கும்
அமைந்ததோர் 'தூதன்'! உள்ள
நெறித்தமிழ்க் கவிஞ ருக்கோ
நிலைத்ததோர் 'செங்கோல்'! வாழும்
வெறிச்சாதிச் சனிய னுக்கோ
வெடித்திடும் நெடுந்'துப் பாக்கி'!
பறிபோன வரலாற் றுக்கோ
பழங்காட்சித் 'தூரி கைக்கோல்'!

எண்ணத்திற் குயிர்கொ டுத்தே
எழிலுடன் உலவ வைக்கும்!
கண்முன்னால் மறைந்தோர் தம்மைக்
காலமும் எதிர்நி றுத்தும்!
பெண்வாயின் தேனுங் கூடப்
பேசிடின் நிலைப்ப துண்டா?
அண்ணாவோ மறைந்தார்; ஆனால்
அழிந்ததா பேனாச் செல்வம்?

ஆணைப் பட்டோர் செய்த
ஆதிக்கம் சாய்ந்த தேன்,ஏன்?
கூனை தாழ்ந்த தோழன்
கோளரி ஆன தேன்,ஏன்?
ஏனென்ற கேள்வி நூறு
எழுந்ததேன்? இவற்றிற் கெல்லாம்
பேனாதான் மந்தி ரக்கோல்!
பிழைஎன்போர் எங்கே? எங்கே?

கல் பாதை கடல் பாதையாகியது!

இலங்கையின் வடக்கு எல்லையான மன்னார்பகுதியின் வடக்கு முனையையும், நமது நாட்டின் இராமேஸ்வரம் தீவிலுள்ள தனுஷ்கோடியின் தென்முனையையும் இணைக்கும் ஒரு பூபாகம் உள்ளது. இன்று அது கடலுக்கு அடியில் மூன்றடி அல்லது நான்கு அடி ஆழத்திற்கு நீரால் சூழப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் அதே பகுதி கடல் மட்டத்திற்கு மேல் ஒரு நீண்ட நிலப் பகுதியாக அமைந்திருந்தது. அதன் அகலம் சுமார் ஒன்றேகால் மைல் வரை இருந்தது. மணலும், கற்பாறைகளும் கொண்ட அப்பாதை வழி சுமார் முப்பது மைல் தூரத்திற்குக் கடலில் சென்று இந்தியா இலங்கை இரண்டு நிலப்பகுதிகளையும் இணைத்து நின்றது. கி.பி. 1480 ஆண்டு வரை இந்த நிலப்பகுதி வழியாக இலங்கைக்குப் போக்குவரத்து இருந்ததாகத் தெரிகிறது. பெரும்புயல் ஒன்று இந்த நிலப்பகுதியைப் பல இடங்களில் உடைத்துவிட்டது. கடல் நீர் மட்டமும் உயர ஆரம்பித்தது. இப்பகுதி நீரில் மூழ்கிப்போயிற்று. தமிழிலக்கியங்களில் இது திருஅணை என்று குறிப்பிடப்படுகிறது வடமொழி இலக்கியங்களில் நல சேது என்றும், இராம சேது என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஆதாமை ஆண்டவன் கோபித்து வானுலகத் தோட்டத்திலிருந்து வெளியேற்றிய போது இந்தக்கரை வழியாக அவன் இலங்கையில் வந்து தஞ்சமடைந்ததாகப் பழைய கிறித்துவ, இஸ்லாமிய தொன்னூல் வழக்குகள் உள்ளன. இந்த நில வழியை ஆங்கிலேயர் 'ஆடம்ஸ் பிரிட்ஜ்' என்று அழைத்தனர்.

இந்த ஆதாம் பாலம் இப்போது புகழுக்குரியதாக ஆகப்போகிறது. ஏனெனில், அங்குதான் சேதுசமுத்திரக்கால்வாய்த் திட்டம் அமைய இருக்கிறது. மன்னார் வளைகுடாவையும், பாக் விரி குடாவையும் பிரிக்கும் இந்த மணற் கற்பாறைகளின் வழியாக ஒரு கால்வாய் அமைக்கப் போகிறார்கள். இப்படி அமைக்கும் கால்வாய் வழியாக இந்தியா வரும் கப்பல்கள் இனி இலங்கையைச் சுற்றிச் செல்லாமலே இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்குக் குறைந்த தூரத்தில் அடைய முடியும். இது ஆசியாவின் சூயஸ் கால்வாயாக அமையவிருக்கிறது.

மன்னார் வளைகுடாவையும் பாக் விரிகுடாவையும் பிரிக்கின்ற மணற்கற் பாறைகளின் வழியாக ஒரு கால்வாய் அமைக்கத் திட்டமிட்டு, மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால், கால்வாய் அமைக்கப்பட்டால், மேற்குக் கரை—கிழக்குக் கரைத் துறைமுகங்களுக்குச் சென்னையைப் பொறுத்தவரை சுமார் 370 மைல்களும்; விசாகப்பட்டினத்திற்கு சுமார் 304 மைல்களும், கல்கத்தாவுக்கு சுமார் 265 மைல்களும் குறையும்.

சேதுசமுத்திரக் கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு சிட்டகாங் போக 220 மைல்களும், இரங்கூன் போக 119 மைல்களும், சிங்கப்பூர் போக 42 மைல்களும் குறையும். கப்பல் போக்குவரத்து 20 விழுக்காட்டுக்குமேல் அதிகரிக்கக் கூடும். கால்வாய் வழியாக வந்துசெல்லும் அந்நியக் கப்பல்களுக்குக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணியும் கிடைக்கும். அது மட்டுமல்ல—இராமநாதபுர மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பேருதவியாக அமையும். கப்பல் போக்குவரத்தில் அது ஒரு கேந்திர மையமாகத் திகழும். உலகத்தின் கவனத்தை ஈர்க்கும். இத்தகு சிறப்புக்கள் வாய்ந்த சேது சமுத்திரக் கால்வாயை 'ஆசியாவின் சூயஸ்' என்றால் அது மிகைபடக் கூறியதாகாது.

மீன் விருந்து

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆண்டுதோறும் பிடிக்கப்படுகின்ற மீன், மற்றைய கடல்படு பொருள்கள் ஏறக்குறைய 2,200,000 டன்னிலிருந்து 2,400,000 டன் வரையிலும் கிடைக்கின்றன. இங்கு ஆண்டுதோறும் ஏறக்குறைய 1,500,000,000 இராத்தல் அல்லது பிடிக்கப்படுகின்ற மொத்த மீனின் நான்கில் ஒரு பங்கு தகர டப்பிகளில் அடைக்கப்படுகின்றன. உலர்த்துதல், உப்பிடுதல், ஊறுகாயாக்குதல் போன்ற முறைளில் ஆண்டுதோறும் இங்கு 150,000,000 இராத்தல் மீன்கள் பக்குவப்படுத்தப்படுகின்றன. எலும்பு நீக்கப்பட்ட மீன்கள் ஆண்டுதோறும் 340,000,000 இராத்தல் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வகை மீன் உணவு சிறந்த விருந்தாகக் கருதப்படுகிறது.

ஊரே திரண்டது உளுந்து விதைக்க....

“நாம் அதிகமாக உற்பத்தி செய்துகொடுக்கும் ஒவ்வொரு மணித் தானியமும் ஒரு துப்பாக்கிக் குண்டுக்குச் சமம்! ஒவ்வொரு குவிண்டால் விளைபொருளும் ஒரு பீரங்கிக்குண்டுக்குச் சமம்! ஒவ்வொரு டன் உணவுத் தானியமும் ஒரு டாங்குக்குச் சமம். எனவே, நெருக்கடி நிலை நிலவி வருகின்ற இந்த நேரத்திலே, எல்லா வகையிலும் அதிக அளவில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க நம் நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரும் முன்வரவேண்டும். ஏர்முனை விழா நடைபெறும் இந்த நேரத்திலே, 'ஒரு அங்குல நிலத்தைக் கூடத் தரிசாகப் போடமாட்டேன். வசதிக் கேற்ப ஏதாவது பயிரிடுவேன்' என்ற உறுதி மொழியை உழவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று ஏர்முனை விழாவில் உரையாற்றிய இளைஞர் அணியைச் சேர்ந்த இளங்கோ வேண்டுகோள் விடுத்தார்.

“நீங்க சொல்வதெல்லாம் சரிதான். ஆனால், சம்பா அல்லது தாளடி நெல் அறுவடை செய்ய இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது. அதன் பிறகு, அந்த நிலங்களில் ஏதேனும் பயிரிடலாம் என்றால் தண்ணீர் வசதி கிடையாது. நெல் அறுவடைக்குப் பிறகு நிலத்தைத் தரிசாகப் போடுவதைத் தவிர வேறு வழியே இல்லை. இப்படி இருக்கையில் 'ஒரு அங்குல நிலத்தைக் கூடத் தரிசாகப் போடமாட்டேன்! ஏதேனும் பயிரிடுவேன்' என்று எப்படிங்க உறுதி மொழி எடுத்துக் கொள்வது? உறுதிமொழி எடுத்துக் கொண்டால் அதை நிறைவேற்ற வேண்டாமா? அதற்கு வழி சொல்லுங்கள்” என்றார் ஏர்முனை விழாவிற்குத் தலைமை தாங்கிய ஊராட்சி மன்றத் தலைவர் உலகநாதன்!

“தண்ணீர் வசதி இல்லையே என்று கவலைப்படாதீர்கள்! தண்ணீர் பாய்ச்சாமலேயே சாகுபடி செய்து விடலாம். அது மட்டுமல்ல. நான் சொல்லப்போகும் சாகுபடி முறைக்கு உழவும் செய்ய வேண்டியதில்லை. உரமும் இட வேண்டியதில்லை. என் பேச்சை நம்பி, நான் கூறும் முறையில் சாகுபடி செய்தால் 90 நாட்களில் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலிருந்தும் குறைந்தது ரூபாய் 150 நிகர இலாபம் பெற முடியும்” என்றார் இளங்கோ.

“அதெப்படிங்க முடியும்?” என்று வியப்புடன் கேட்டனர் பலர்.

“நெல் அறுவடைக்கு 10 நாட்கள் முன்பாக 'ஆடுதுறை-1 உளுந்து' அல்லது 'ஆடுதுறை-1 பச்சைப் பயறு' விதைகளை ஏக்கருக்கு 9 கிலோ வீதம் நெல் வயலில் தூவி விடவேண்டும். அவ்விதைகள் நெல் வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே முளைத்துவிடும். நெல் அறுவடையின்போது 2 அல்லது 4 இலைகளுடன் செடிகள் காணப்படும். பிறகு அச்செடிகள் வயலில் உள்ள ஈரத்தைக்கொண்டும், பனியின் ஈரத்தைக் கொண்டும் வளர்ந்து காய்த்துவிடும். விதைத்த 30-ஆம் நாள் களை எடுக்க வேண்டும். பூச்சிகளைத் தடுக்க, ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும் கலந்து, 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 2 தடவை தூவினால் போதுமானது. ஆடுதுறை-1 பச்சைப் பயறு 80 நாட்களிலும், ஆடுதுறை-1 உளுந்து 90 நாட்களிலும் அறுவடைக்கு வந்துவிடும். அறுவடை முடிந்தபின் செடிகளை, அடுத்துப் பயிரிடும் குறுவை நெல்லுக்குத் தழை உரமாகப் பயன்படுத்தலாம்” என்றார் இளங்கோ.

“இது மிகவும் நல்ல யோசனை தான். எனக்குக் கூட இப்பத்தான் நினைவுக்கு வருகிறது. இளங்கோ அவர்கள் கூறியது போல் பலர் தஞ்சாவூருக்குப் பக்கத்தில் உளுந்து விதைத்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். தண்ணீர் பாய்ச்சாமலேயே ஏக்கருக்கு 2 அல்லது 3 மூட்டை உளுந்து கிடைக்கும் என்று கூறினார்கள். நாமும் உளுந்து அல்லது பச்சைப் பயறு விதைத்தால் பலன் பெறலாம். அதற்கு உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை” என்றார் உலகநாதன்.

“நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறோம்” என்று ஒப்புதல் தெரிவித்தனர்.

“ஆடுதுறை-1 பச்சைப் பயறு விதைத்தால் ஏக்கருக்கு 200 கிலோவும், ஆடுதுறை-1 உளுந்து விதைத்தால் ஏக்கருக்கு 180 கிலோவும் மகசூல் கிடைக்கும். விதைகளுடன் நுண்ணுயிர் கலந்து விதைத்தால் இன்னும் அதிக மகசூல் கிடைக்கும். எனவே, உங்கள் ஊரில் உள்ள 300 ஏக்கர் நன்செய் நிலத்திலும் நெல் அறுவடை முடிந்தபின் ஆடுதுறை-1 பச்சைப் பயறு அல்லது ஆடுதுறை-1 உளுந்து விதைக்க நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும்” என்றார் இளங்கோ.

“விதைகள், மருந்துகள் வாங்குவதற்குப் பணம் இல்லை என்று சிலர் சொல்வார்களே! எப்படிங்க 300 ஏக்கரிலும் விதைக்க முடியும்?” என்று கேட்டார் உலகநாதன்.

“பணமுடை உள்ளவர்களுக்குப் பணம் உள்ளவர்கள் கடன் கொடுத்து உதவலாம். அல்லது ஊராட்சி மன்றம் கூடக் கடன் கொடுத்து உதவலாம். கடன் தேவைப்பட்டவர்களிடமிருந்து மனு எழுதி வாங்கிக் கொண்டு, அவர்களுக்குத் தேவையான விதைகளையும், மருந்தையும் ஊராட்சி மன்ற நிதியிலிருந்து வாங்கிக் கொடுக்கலாம். இவ்வாறு செய்ய ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதி பெறவேண்டும். அறுவடை முடிந்தவுடன், கடன் பெற்றவர்களிடமிருந்து கடன் தொகையையும், அதற்குரிய

ஆடுதுறை—1. உளுந்து.

வட்டியையும் வசூலித்துக்கொள்ளலாம். இதுபோல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும் கடன் கொடுத்து உதவலாம்'' என்றார் இளங்கோ.

''ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டுவிடலாம். ஆனால், ஊராட்சி ஒன்றியத்தில் அனுமதி பெறக் காலதாமதமாகுமே'' என்று கூறி விட்டுத் தன்னருகில் அமர்ந்திருந்த கூட்டுறவுச் சங்கத் தலைவர் சண்முகசுந்தரம் அவர்களைப் பார்த்தார். ஊராட்சி மன்றத் தலைவரின் குறிப்பை உணர்ந்து கொண்ட சண்முக சுந்தரம், ''கடன் தேவைப் படுகிறவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கடன் கொடுத்து உதவுகிறோம். ஆனால், கடன் பெறுபவர்கள் மகசூலை எங்களிடமே விற்றுவிட வேண்டும். இவ்வாறு செய்வதால், கூட்டுறவுச் சங்கத்திற்கும் இலாபம் கிடைக்கும்; அந்த இலாபம் உறுப்பினர் அனைவருக்கும் பயன்படக்கூடும்'' என்றார்.

''உங்கள் ஊராட்சி மன்றத் தலைவரும், கூட்டுறவுச் சங்கத் தலைவரும் உங்கள் அனைவருக்கும் உதவி செய்யக் காத்திருப்பதால், இந்த ஊரில் உள்ள நன்செய் நிலம் 300 ஏக்கரிலும் ஆடுதுறை-1 பச்சைப் பயறு அல்லது ஆடுதுறை-1 உளுந்து விதைக்க நீங்கள் அனைவரும் தயாராக வேண்டும். உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலரிடம் சொல்லி, உங்களுக்கு வேண்டிய விதைகளையும், மருந்தையும் இங்கேயே கொண்டு வந்து கொடுக்க ஆவன செய்கின்றேன்'' என்று கூறி இளங்கோ தன் உரையை முடித்தார். அடுத்து ஊர்நல ஊழியர் உலகநம்பி நன்றி கூறினார். ஏர்முனை விழா இனிது முடிந்தது.

அடுத்த பத்தாவது நாள், அந்த ஊரே ஒருங்கு கூடி, கோட்டாட்சித் தலைவர் தலைமையில் நெல்வயல்களில் ஆடுதுறை-1 உளுந்து, ஆடுதுறை-1 பச்சைப் பயறுகளை விதைத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்கப் பக்கத்து ஊர்களிலிருந்தும் பலர் திரண்டு வந்திருந்தனர்.

''ஊர் ஒன்று பட்டு உளுந்து, பச்சைப் பயறுகளை இதுபோல் விதைத்தால், நாட்டில் நிலவும் பருப்புப் பற்றாக் குறையும் மறைந்து, உளுத்தம் பருப்பு, பச்சைப் பருப்புகளின் விலையும் குறைந்து விடும். அதன் பயனாய் நாட்டு மக்களுக்கும் புரதச்சத்து மிகுந்த உணவு கிடைத்து, வலிவோடும் பொலிவோடும் வாழ்வார்கள். இத்தகைய அரிய பணிக்கு வழிகோலிய இளைஞர் அணியைச் சேர்ந்த இளங்கோவைப் பாராட்டுகிறேன்'' என்று கோட்டாட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஆனால், இளங்கோ துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே எதிரியைத் தாக்க முன்னேறும் போர் வீரனைப் போல், நெல் வயலில் 'ஆடுதுறை-1 உளுந்து' விதைகளை விதைத்துக்கொண்டு வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார்.

கிராமப்புற வேலை வாய்ப்புத் [illegible]

இரண்டு கோடித் திட்டம் என்றழைக்கப்படும் இக்கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில் இராமநாதபுர மாவட்டம் மிகவும் சிறப்புறும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இத்திட்டம் சிறப்புடன் நிறைவேற்றப்படுவதற்கென உதவி ஆட்சித் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் டிசம்பர் 1970ல் வத்திராயிருப்பில் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தின் பயனால் இதுவரையில் போக்குவரத்து வசதியே சிறிதும் இல்லாத இடங்களில் எல்லாம் புதுச் சாலைகள் போடப்படுகின்றன. சீர்படாமல் இருந்த சாலைகள் கப்பிரோடு போடப்படுவதன் மூலம் சீரபடுத்தப்படுகின்றன; குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன. பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களும், சிறு பாசன வசதிகளும் நிறைவேற்றப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இவை தவிர, புதிய காடுகள் அமைக்கப் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1970–71லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டம் நான்காண்டுகளில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்தச் சிறந்த திட்டத்தின் பயனாக 4 ஆண்டுக் காலங்களிலும் கிராமப் புறங்களில் உள்ள ஏழை, எளியவர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்தத் திட்டத்தினால், பின் தங்கிய மாவட்டமான இராமநாதபுர மாவட்டம், சாலை வசதி இல்லாத இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுப் பாசன வசதி இல்லாத இடங்கள் பாசன வசதி பெறுவதுடன், மண்வளப் பாதுகாப்புக்கும் இடம் பெற்று, புதிய காடுகள் அமைக்கப்பட விருப்பதாலும் இத்திட்டத்தினால் பல துறை முன்னேற்றங்களை அடைந்து சிறந்து விளங்கும் என்பது உறுதி.


அண்ணன் காட்டிய வழி
16
அப்படியா... கிடைச்சுடுச்சா?
அப்ப..முத்து! நான் முக்கிய வேலையாப் போகணும்... எல்லாரும் இருக்காங்க தனியா வர்றேன்...
நல்ல நேரத்தில் வந்தே செந்தாமரை நம்ப திட்டப்படி நான் மன்னிப்புக் கேட்க இருந்தேன்
நான் அப்பா மேலே சந்தேகப்பட்டேன்; நல்லவேளை என் புத்தகத்திலேயே இருந்தது!
கதை: நம்பியின் தம்பி. படம்: குமார்
புரிந்ததா முத்து! வேலதே சூழ்ச்சிகளிலே, இளமாக்ஸ் இப்பத்தான் ஆரம்பம். கொஞ் நேரத்துக்கு முன்னாலே மன்னி கேட்க வந்தான்; இப்ப திடீர்னு மாறிட்டான்!
எனக்கும் ஒண்ணும் புரியலே! காரணமில்லாமே மன்னிப்புக் கேட்க வந்தான் இப்ப...
என்ன என்ன செய்யச் சொல்றீங்க?
முத்து! இப்பொழுதாவது கொஞ்சம் விழிப்போட இரு!
நாங்க சொல்றதைக் கேட்கச் சொல்றோம்! தேவையில்லாமே நம்மை எதிரியா நினைச்சு நடக்கிற வேலைக்குப் புத்தி புகட்டணும்னு சொல்றோம்
இப்படியே பேசிக்கிட்டு இருக்க வேண்டாம் வாங்க போவோம்!
எங்கே?
எங்கே? என்ன? இப்படிக் கேட்கிறதுன்னா எங்க கூட வரவேண்டாம்
தம்பிகளா! உங்க எல்லாரையும் எங்கே எங்கே தேடுறது... ஒரு பெரிய தவறு நடக்க இருக்குது! நீங்க எல்லாரும் சேர்ந்து தடுக்கணும்
தவறா? யாராலே எதுக்கு?



ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்:—செங்கற்பட்டு மாவட்டம், பரனூரில் தொழு நோய் பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுக்காக எட்டு டார் மிட்ரி பிளாக் (2 யூனிட்) கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித்துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் 3–3–1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

"ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை—ரூபாய் 4,800.
"ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலை வரைப்படங்களுடன்—ரூ.20·70.
ஒப்பந்தப்புள்ளி முடிக்கவேண்டிய காலம்—4 மாதங்கள்.

"ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 16–2–1972 தேதி முதல் 1–3–1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். "ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் **"P. W. D. Remittances, III—Other Remittances"** என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **"XII Sales Tax (b) Receipts, under State Sales Tax Act—General Sales-Tax"** என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப் படும் ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள் செயற் பொறியாளர் பொ.ப.து., கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சத வீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய- சேமிப்பு நற்சான்றுப்பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தின் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்புந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1

(த.64)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

பாம்பன் வட்டம்

ந. க. எண். 33057/71/வ 3, தேதி 31—1—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகட்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் திருமானூர் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தஞ்சாவூர் அலுவலகத்தில் 23—2—1972 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 43/0 மைல் 26/7-ல் பாலம் அமைத்தல்—கட்டுத்தொகை ரூ. 9,000

ஒப்பந்தங்கள் அன்று மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் நமூனுக்கள் வரை படங்கள் முதலியவற்றைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருமானூர் பாலவேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 25.90 செலுத்தி 15-2-1972 முதல் 22-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத் தொகையைத் தனிக்கோட்டப் பொறி யாளர், திருமானூர் பால வேலை தஞ்சாவூர் தனிக்கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக்கோட்டப் பொறியாளர் திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் பெயரில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப்பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த 68)

பயிற்சி

தொழில் வணிகத் துறை

களிமண் பொம்மைகள், புதுமைகள் தயாரிக்க, சென்னை பெரம்பூரிலுள்ள அரசாங்கக்களிமண் பொம்மைகள் உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற 21-2-1972-ஆம் தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக, கீழ்க்கண்ட முகவரியில் மனுக்கள் வரவேற்கப் படுகின்றன.

பயிற்சிக் காலம் 1 வருடம். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு மாதம் ரூ. 40. மட்டும் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். மனுதாரர் கள் 18–35 ஆண்டிற்கு இடையே உள்ள வயதுடையவர்களாகவும், 3-வது பாரம் அல்லது 8-வது ஸ்டாண்டர்டு தேர்ச்சி பெற்றவர்களா கவும் இருத்தல் வேண்டும். மொத்தம் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை 10 (பத்து) ஆகும்.

மனுக்கள் வெற்றுத் தாளில் தங்களின் வயது, படிப்பு, முகவரி முந்தைய அனுபவம், "ஜாதி, மதம், தொழில் முதலியவற்றை குறித்து, " தொழில் கண்காணிப்பாளர், களிமண் பொம்மைகள் உற் பத்தி மற்றும் பயிற்சி நிலையம், 27, கிருஷ்ணதாஸ் ரோடு, பெரம்பூர், சென்னை-12 அவர்களுக்கு நேரடியாக அனுப்ப வேண்டும்.

தொழில் வணிக இயக்குநர்,
சென்னை-5.

(த. 69)

மறு ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 23-2-1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.
		ரூ.
1	தேசிய நெடுஞ்சாலை எண் 45, சென்னை திருச்சி-திண்டுக்கல் சாலை மைல் 113 கடில நதியின் மீது பாலம் திரும்பக் கட்டுதல்.	45,300
2	தேசிய நெடுஞ்சாலை எண் 45, சென்னை திருச்சி திண்டுக்கல் சாலையில் மைல் 44/3 (கி.மீ. 72/8) பாலம் திரும்பக் கட்டுதல்.	2,490
3	தேசிய நெடுஞ்சாலை எண் 45, சென்னை திருச்சி திண்டுக்கல் சாலையில் கி.மீ. 194/6 சிறு பாலம் திரும்பக் கட்டுதல்.	1,210

ஒப்பந்தப் புள்ளிகள் 23-2-1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் சென்னை—25 அலுவலகத்தில் 16-2-1972 முதல் 22-2-1972 முடிய விற்பனை வரி உட்பட ரூ. 25·88 கட்டி பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர், (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலுள்ளும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், கிண்டி பெயரில் செலுத்திக் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

(த. 65)

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.).

வேலை வாய்ப்பு

கிராம நல உள்ளாட்சித் துறை

தமிழ்நாடு கிராம சேவக் சர்வீஸில் 150 இரண்டாவது நிலை கிராமசேவக்குகளை நியமனம் செய்வதற்குத் தகுதியுடைய ஆண்களிடமிருந்து 1972 மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி மாலை 4-30 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கல்வி யோக்கியதாம்சங்கள்:—

அபேட்சகர்கள் செகண்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட் பரீட்சையில் அல்லது சமமான பரீட்சையில் தமிழில் குறைந்தது தேர்வு எண் 40 பெற்றுத் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

உயர்நிலைப்பள்ளி கல்வி இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட Post Basic Lower) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

அரசியல் தியாகிகளாக இருந்தால், எட்டாம் வகுப்பு அல்லது மன்றும் படிவம் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

மாஜீ ராணுவ வீரராக இருந்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் தேறி இருக்க வேண்டும். அல்லது இந்திய படை இரண்டாவது வகுப்பு (Indian Army class II Standard) தேறியிருக்க வேண்டும்.

வயது—

அபேட்சகர்களின் வயது 1-7-1972-ஆம் தேதியில் 16 வயது மேற்பட்டும் 25 வயதுக்குட்பட்டும், இருக்கவேண்டும். ஷெடியூல்டு வகுப்பினருக்கும், ஷெடியூல்டு மலைஜாதியினருக்கும் மட்டும் 16 வயதுக்கு மேற்பட்டும் 30 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம்—

விண்ணப்பத்திற்குரிய கட்டணம் ரூபாய் 5 ஆகும். பின் தங்கிய வகுப்பாருக்கும், ஷெட்யூல்டு வகுப்பினருக்கும், ஷெடியூல்டு மலைஜாதியினருக்கும் இடைக்கால பரீட்சையில் தேறியிருந்தால் (Intermediate Examination) அல்லது சென்னை அல்லது அண்ணாமலை சர்வகலாசாலையில் பட்டம் பெற்றிருந்தால் விண்ணப்பக் கட்டணம் கட்டத் தேவையில்லை.

சம்பளம்—

இரண்டாம் நிலை கிராம சேவகர்களுக்குரிய சம்பளம் ரூ. 200—5—250—10—300 ஆகும்.

விண்ணப்பப் பத்திரங்கள் மற்ற விவரங்கள் வேண்டுவோர் தமது முகவரி எழுதப்பட்ட, போதிய தபால்தலை ஒட்டிய உறையுடன் கிராம வளர்ச்சி இயக்குநர், குறளகம், எஸ்பிளனேட், சென்னை-1 என்ற விலாசத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

சென்னை-1,
18-1-1972
(த.66)

இயக்குநர்,
கிராம வளர்ச்சி

ஒப்பந்தப் புள்ளி

நிலநீர் இயக்குநர் அலுவலகம்

எண் 15, XXII m/72, தேதி 24—1—72,

வேலையின் பெயர்:—மரையிடப்படாத, இரும்புக் குழாய்கள் வழங்குதல்.

(1) 8–200 மி.மீ., விட்டம்..........500 மீட்டர்.
(2) 10–250 மி.மீ., விட்டம்..........400 மீட்டர்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர்சார்பில், நிலநீர் இயக்குநர், அவர்களால் மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 22-3-1972 அன்றுமாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில், மாலை 3-30 மணிக்கு அவ்வமயம் அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

(1) முன்வைப்புத் தொகை—ரூ. 5,000.
(2) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10, விற்பனை வரி—ரூ. 0·40 காசு.

(3) வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.
(4) ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்—1-2-1972 முதல் 20-3-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்கவியலாதது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works remittances III other remittances" to the Credit of Hydrogeologist. Ground water Division, Thanjavur, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரித் தொகையானது, அதே சலானில் "XII Sales Tax (b) receipts under state sales Tax Act, General Sales Tax. என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்படவேண்டும். மேற்குறித்த செலானைக் கொடுத்த பின்பு தான், "ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். வேறு எந்த விதமான தொகையளிப்பும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

சா. பஞ்சநதம்,
நில நீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்
10-எ, தண்டபாணி தெரு,
தி. நகர், சென்னை-17,
(த. 67)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர் :—

ஆலந்தூர் குடிநீர் வழங்கு திட்டம்—பிரிவு II—முதல் நிலை—பகுதி II—சோன் III-பி-க்கு, 14·0 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் மேற்கண்ட வேலைக்கென, உரிய துறைக்கான வடிவத்தில் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உரிய பிரிவைச் சார்ந்த அல்லது ஒத்த அரசு அமைப்புகளில் பதிவு செய்யப்பட்ட "ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) வட்டம், சென்னை, அவர்களால், எண் 52, கங்குரெட்டி சாலை, எழும்பூர், சென்னையிலுள்ள அவர்தம் அலுவலகத்தில், 6-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிறகு, அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) வட்டம், சென்னை, அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை :—ரூ. 7,070.

(கருவூலச் சலான் வடிவிலோ அல்லது ஒப்பந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒத்துக் கொள்ளக்கூடிய டெபாசிட் வடிவத்திலோ இருக்க வேண்டும்.)

3. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை :—ரூ. 10·35.

ஒப்பந்தத்திற்கான விலை, நிருவாகப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) கோட்டம் சென்னை, அவர்தம் கணக்கில் "P. W. III O.R. and Sales Tax XII D. Sales Misc. I General Sales Tax" என்ற தலைப்பில் தனித்தனிச் சலானில் செலுத்த வேண்டும்.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்குமிடம்:—நிருவாகப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்), கோட்டம், எண் 1,14, எட்வர்டு எலியட்ஸ் சாலை, சென்னை-4 அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

5 வேலை முடிக்கவேண்டிய காலம்:—9 மாதங்கள்

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
சென்னை-8.

52, கெங்கு ரெட்டி
சாலை, சென்னை-5.

(த. x)

திருப்பூர் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 4—3—1972–ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையருக்காக நகராட்சிப் பொறியர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பங்கள் மற்றும் இதர நிபந்தனைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ரூ. 2.07 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

எண்.	வேலை விவரம்.	மதிப்பீடு.	முன்வைப்புத் தொகை.
		ரூ.	ரூ.
1	பெருமாநல்லூர் ரோடு நெசவாளர் காலனி வீதிகளுக்குத் தார் போடுதல்.	39,900	1,000
2	கவுண்டநாயக்கன்பாளையம் ரோடுக்குத் தார் போடுதல்.	27,600	690
3	இராயப்பபுரம் ஆரம்பப்பள்ளி மேற்கு வீதி மற்றும் ராயப்பபுரம் மத்திய வீதிகளுக்குத் தார் போடுதல்.	20,600	515

ஆணையர்.

(த. 56)

நில நீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 14 XXI/M3/72.

வேலையின் பெயர் : துளையிடும், இணறு வெட்டும், எந்திரங்களுக்கான துளையிடும் உபகரணங்கள், பொறிகள் மற்றும் குழாய்களுக்கான உபகரணங்கள்—வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 20-3-1972 அன்று மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு அவ்வமயம், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. முன் வைப்புத்தொகை:—ரூ. 15,000.

2. ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களின் விலை:—ரூ. 15 ; விற்பனை வரி 0·60 காசு.

3. வேலையை முடிக்க வேண்டிய காலம்:—3 மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்குங்காலம் :—1-2-1972-லிருந்து 1-3-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில், "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித் தொகையானது அதே சலானில், " XII Sales Tax (b) Receipts Under State Sales Tax Act, General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்பு தான், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

10-எ, தண்டபாணித் தெரு, தியாகராயநகர்,

சென்னை-17.

(த. 61)

இடமாற்றம்

மின்சார வாரியம்

மேட்டூர் மின் அமைப்பு

மேட்டூர் அணை

சேலம் வருவாய்ப் பிரிவு துணைத் தலைமைக் கணக்காயர் அலுவலகம், உதவிப் பொறியாளர் (கட்டுமானம்), இளம் பொறியாளர் (கட்டுமானம்), மேற்பார்வையாளர், சிவில் (தனி) ஆகிய அலுவலகங்கள் பொன்னம்மாபேட்டை புதுவீதியில் உள்ள 2-ஆம் நெம்பர் கட்டடத்தில் இது வரை இயங்கி வந்தன. இந்த அலுவலகங்கள் 6-12-1971-ஆம் தேதியிலிருந்து சேலம்-7, வெங்கடேசபுரம் எக்ஸ்டென்சன், சேட் காலனி, 3/711 என்னுள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றன என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஷை பொன்னம்மாபேட்டை கட்டடத்தில் இயங்கி வந்த கோட்டப்பொறியாளர் (கட்டுமானம்) அலுவலகம் 8-12-1971-ஆம் தேதி முதல் சேலம் நெத்திமேடு மின்சார துணை நிலையத்தில் (சப்-ஸ்டேஷனில்) இயங்கி வருகிறது என்பதையும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(த. 62)

ஒப்பந்தப் புள்ளி

விழுப்புரம் நகராட்சி

1972-73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க் குறிப்பிட்டுள்ளவைகள் வழங்க ிழுப்புரம் நகராட்சி நிருவாக அதிகாரியவர்களால் 19-2-1972 சனிக் ்ழமை மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அன்று மாலையே 4½ மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நிருவாக அதிகாரி அவர்கள் ஒப்பந்தக் ாரர்கள் முன்னிலையில் திறப்பார்கள். ஒவ்வொன்றிற்கும் தனித் தனியே ஒப்பந்தப் புள்ளிகள் தரப்படவேண்டும்.

	செலுத்த வேண்டிய வைப்புத் தொகை.
	ரூ.
(1) மாடுகளுக்குப் பருத்திக்கொட்டை	100
(2) மாடுகளுக்குப் பச்சரிசி தவிடு	100
(3) மாடுகளுக்குச் செக்கு மணிலாப்பிண்ணாக்கு	100
(4) அச்சுவேலை செய்து தருதல்	100
(5) மாடுகளுக்கு லாடம் அடித்தல்	20
(6) ஸ்டேஷனரி சாமான்கள் வழங்குதல்	100
(7) சுத்தமான பசுவின்பால்	25
(8) ரொட்டி வழங்குதல்	15
(9) அடுப்புக்கரி வழங்குதல்	10
(10) சுண்ணாம்பு நீர் வழங்குதல்	20
(11) படல்கள், தட்டுக்கூடை முதலியன வழங்குதல்	50

மேற்கண்ட விதிகள் முதலானவைகளை நேரிலோ, அஞ்சல் மூலமோ கேட்டு பெற்றுக்கொள்ளலாம்.

விழுப்புரம்,
24-1-1972.

பெ. இ. பத்மநாபமேனன்,
நகராட்சி ஆணையர்.

(த. 17)

ஏலம் விளம்பரம்

விருத்தாசலம் நகராட்சி

1972-73-ஆம் வருடத்திற்கு விருத்தாசலம் நகராட்சியில் கீழ்க்கண்ட குத்தகைகளை அனுபவிக்கும் பாத்தியதையை 25-2-1972-ஆம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 3-00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அதிகாரி அவர்களால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும், ஏல நிபந்தனைகளையும் மற்ற விவரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

	செலுத்த வேண்டிய கட்டுத் தொகை.
1 வாரச்சந்தை	ரூ.
2 வாய்க் கால்நடை சந்தை	150
3 தினசரி காய்கறி, மச்ச சந்தை	200
4 செல்வராசு பேருந்து வண்டி நிலையம்	100
5 ஆடு அறுக்கும் தொட்டி	100
6 சாணி எரு குத்தகை—	50
1 வாரச்சந்தை, வாரக் கால்நடைச் சந்தை சாணி எரு.	50
2 ஆடு அறுக்கும் தொட்டி எரு	25
3 மாட்டுத் தொழுவத்தில் சேரக்கூடிய சாணி எரு	50
7-பத்திரிகைகள் (17-3-1971 முதல் 31-3-1972 முடிய).	10

(குத்தகைக் காலம் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய)

நகராட்சி அலுவலகம்,
விருத்தாசலம்,
19-1-1972.

வி. கணேசன்,
தனி அதிகாரி.

(த. 10)

ஒப்பந்தப் புள்ளி

திருநெல்வேலி நகராட்சி

1972-73/1, 2-ஆம் ஆண்டிற்கு வண்டி வரி, வாகனவரி லைசென்ஸ் தகடுகள் சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 7-3-1972 செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மாலை 4-00 மணிக்குப் பிறகு வரப்பெறும் ஒப்பந்தங்கள் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்தத்துடன் பொறுப்புத் தொகை ரூ. 25 காசோலையாகவோ, ரொக்கமாகவோ செலுத்த வேண்டியது. மேற்படி ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு ஆணையாளரவர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். தகடுகளின் அளவுகள், மாதிரித் தகடுகள் ஆகியவற்றின் விவரங்களை வரைபடத்துடன் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெ. ரா. கனகசபாபதி,
ஆணையாளர்.

திருநெல்வேலி நகராட்சி,
25-1-1972.

(த. 19)

ஒப்பந்தப் புள்ளி

நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கூறைநாடு (தஞ்சை மாவட்டம்)

தலைமையாசிரியர், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கூறைநாடு (தஞ்சை மாவட்டம்) அவர்களால் அடியிற் கண்ட மரச் சாமான்கள் வழங்க 29-2-1972 பிற்பகல் 3 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளப்படும். விவரங்களை நேரிலோ அஞ்சல் வழியாகவோ இப்பள்ளியிலிருந்து வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1. இரண்டு மாணவர்கள் உட்காருவதற்கான சாய்வு மேஜை	45
2. நாற்காலிகள்	12
3. மேஜைகள்	12

என். சேதுராமன்,
தலைமை ஆசிரியர்.

(த. 47)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு அமைச்சக சர்வீஸ், ஊராட்சி வளர்ச்சி யூனிட்டில் அசிஸ்டண்ட்ஸ் மற்றும் அக்கவுண்டண்ட் ஆகிய 139 பதவிகள் நியமனத்திற் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சியில் 5 ஆண்டு பணிக்கான மொத் சர்வீஸ் உள்ள, தலைமை எழுத்தர்கள், எழுத்தர்கள், டைபிஸ்ட்டுக மற்றும் கேசியர்களிடமிருந்து, 9-3-1972 மாலை 5-00 மணி வ மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம் :—ரூ. 250—10—400 மாதம் ஒன்றுக்கு.

தகுதி :—(1) குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதி பெற்றிருக் வேண்டும்.

(2) தலைமை எழுத்தர் அல்லது எழுத்தர் அல்லது டைப்பிஸ் அல்லது கேசியராக 5 ஆண்டுகளுக்குக் குறையாத சர்வீஸ் இருக் வேண்டும்.

(3) ஊராட்சி வளர்ச்சித் துறை அலுவலகர் மற்றும் ஊராட் வளர்ச்சி அக்கவுண்டண்ட் தேர்வு ஆகிய துறைக்கான தேர்வ (Departmental Test) தேறி இருக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய சர்வீசில் டைப்பிஸ்ட் மற்றும் கேசியராக இருந்தா 5 ஆண்டு மொத்த சர்வீசில் முறையே ஒரு வருடம், இரண்டு வருட திற்குக் குறையாமல் எழுத்தராகப் பணியாற்றிருக்க வேண்டும்.

முழு விவரங்கள் மற்றும் மனுவடிவங்களையும், செயலாளர், தமி நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், அண்ணாசாலை, சென்னை- என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழு 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய (0·35 காசு நூல் அஞ்ச வில்லையும் மற்றும் 0·05 காசு அகதிகள் நிவாரண வில்லையு ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உட வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 51)

ஒப்பந்தப் புள்ளி

பழனி நகராட்சி

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர், பழனி நகராட்சி அவர்களால் பழனி நகராட்சி தண்ணீர் விநியோக இலாக்காவுக்கான கருவிகளும் தளவாடங்களும் (Tools and Plant) ரூ. 5,000 மதிப்புக்குத் தேவைப்படுகின்றது. ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளிக்கும் ரூ. 100 பொறுப்புத் தொகையுடன் 28-2-1972-ஆம் தேதி அன்று மாலை 4-00 மணிக்குள் அனுப்பி வைக்கவேண்டியது. ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரங்கள் கருவிகளின் வகை, பிரிவு வாரியாக நகராட்சிப் பொறியியர், பழனி அவர்களுக்கு எழுதிக் கேட்டால் அனுப்பி வைக்கப்படும்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 49)

இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், லிமிடெட்.

க்யூ. 816

165, வக்கீல் புதுத் தெரு, மதுரை-1.

இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், காரைக்குடி, பரமக்குடி, சிவகெங்கை ஆகிய இடங்களில் அரசினர் கணக்கில் இருக்கும் இரசாயன உரத்தைச் சாக்கு மாற்றி சம எடை கட்ட புதிய காலிச்சாக்குகள், பால்தீன் பைகள் வழங்க முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகின்றன.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-2-1972-ஆம் தேதி மாலை 3 மணிக்குள் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர், பஞ்சாயத்து அபிவிருத்திப் பிரிவு 110, அழகர் கோவில் ரோடு, மதுரை என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர்கள் எங்கள் சங்க அலுவலகத்தில் ரூ. 500 கட்டுத் தொகை செலுத்தி ஒப்பந்தப் புள்ளியுடன் ரசீதையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சாக்குகள் அல்லது பாலதீன் பைகள் அல்லது இரண்டிற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கலாம். மூட்டைகளைச் சாக்கு மாற்றி நிறுத்து சம எடை கட்டி தைத்துக்கொடுக்க தனியாகக் கொடுக்கலாம்.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் ஒப்புக்கொண்ட தினத்திலிருந்து 10 தினங்களுக்குள் வழங்க வேண்டிய மொத்த காலிச் சாக்குகளையும், பாலதீன் பைகளையும் மேலே குறிப்பிட்ட இடங்களில் வழங்கி விடவேண்டும். தவறினால் ஒப்பந்தக் கட்டுத் தொகையைப் பறிமுதல் செய்வதோடு மறு ஒப்பந்தம் போடுவதால் ஏற்படும் செலவு, விலை வித்தியாசம் முதலியவற்றால் ஏற்படும் நட்டத்திற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் ஒப்புக்கொண்ட மூன்று தினங்களுக்குள் ரூ 2·25 ஸ்டாம்பு பத்திரத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்ரிமெண்டு எழுதிக் கொடுக்க வேண்டும். தேவைப்படும் சாக்கு ரகம்தான் வாங்கப்படும். எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளுபடி செய்யக் கலெக்டர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

ஒப்பந்தப் புள்ளி மாதிரி

சாக்கு, பாலதீன் பைகள் வழங்கவும் சாக்கு மாற்றி எடைகளை நிறுத்து முடித்து அட்டியல் போட்டுக்கொடுக்கவும்.

விவரம்.	சுமாராகத் தேவைப்படும் அளவு.	எண்ணம் 1-க்கு விலை விகிதம்.
1 ஹெஸ்யன் சாக்கு 36" 22"	15,000	..
2 பாலதின் பை 38"—24"—150 கேஜ்	15,000	..
3 கோணிப்பையில் பாலதின் பை போட்டு சாக்கு மாற்றி நிறுத்து மூட்டை 1-க்கு 50 கிலோ வீதம் எடை கட்டித் தைத்து அட்டியல் போட்டுக் கொடுக்க (சணல் செலவு உட்பட) மூட்டை 1-க்கு கூலி:	..	..

ஒப்பந்தம் ஒப்புக்கொண்ட பின்பு மேற்கண்ட விலைக்கு சாக்கு, பாலதீன் பை வழங்கவும் மேற்கண்ட கூலிக்கு நிறுத்துத் தைத்து அட்டியல் போட்டுக்கொடுக்கவும் சம்மதிக்கின்றேன்.

இடம்: ஒப்பந்ததாரரின் கையொப்பம்,

தேதி:

இதர விவரங்கள் சங்க அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

துணைப்பதிவாளர்-செயலாளர்,

(த. 49)

பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 23,150-ல் 8 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரவர்கள் 28—2—1972 மாலை 4·00 மணி வரை வரவேற்கப்படுகிறது. தகுந்த கட்டுத் தொகையில்லாத ஒப்பந்தப் புள்ளிகள் எவ்வித முகாந்திரமின்றி நிராகரிக்கப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4·30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 49)

எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறை

"புதுக்கோட்டை, அரசுக் கிளை அச்சகத்திலிருந்து 1972-73-க்கு, தேவையற்ற காகிதங்களை வாங்கி எடுத்துச் செல்லும் ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால் 4—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில், பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத் தபாலில் எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மிண்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். வேறுவகையில் அனுப்பக் கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுது பொருள் அச்சக இயக்குநர், சென்னை-1, அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர்
அலுவலகம், சென்னை-1.

(த.42)

"சேலம், அரசு மண்டல அச்சகத்திலிருந்து 1972-73-க்கு, தேவையற்ற காகிதங்களை வாங்கி எடுத்துச் செல்லும் ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால் 3—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத் தபாலில் எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மிண்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக்குறிப்பிட்டு அனுப்பவேண்டும். வேறு வகையில் அனுப்பக்கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர்
அலுவலகம், சென்னை-1.

(த. 43)

அறிவிப்பு

தொழில் நுட்பக் கல்வித்துறை

தமிழ்நாடு மாநில பொறியியல்—தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு சிவில், மெகானிக்கல், மின்சாரவியல்—பொறி இயலிலும் துணி உற்பத்தியிலும் (Textile manufacture) புகுமுக தொழில் நுட்பப் படிப்பு, புகுமுக தொழில் நுட்பப் (டெக்ஸ்டைல்) படிப்பு இவைகளில் டிப்ளமாத் தேர்வுக்கு, ஆஜர் ஆவதற்கு சில பாடங்களுக்கு விதிவிலக்கு, 1972–ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்படுகிறது. 1972 அக்டோபரிலிருந்து தேர்வுகள் போர்டு நடத்தும் மேற்கண்ட தேர்வுகளுக்குச் சேரும் பிரைவேட் கேண்டிடேட்கள் யாவரும் இனிமேல் தங்கள் கல்வித் தகுதி எதுவாக இருந்த போதிலும் புகுமுகத் தொழில் நுட்பப் படிப்புத் தேர்வுகளுக்கு (Theory — Practical) எல்லாப் பாடங்களுக்கும் ஆஜராக வேண்டும்.

சென்னை–25;

தலைவர்,
தேர்வு போர்டு.

(த. ஆர். 44)

ஒப்பந்தப் புள்ளி

ஆலந்தூர் நகராட்சி.

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் 23–2–1972–ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மேற்கொண்டு தேவையான முழு விவரங்களையும் விரிவான ஒப்பந்தப் புள்ளி அறிக்கையையும் ரூ. 5-15 மட்டும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விவரம்.	தோராய மதிப்பீட்டுத் தொகை.	பொறுப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 பக்தவத்சலம் நகர் பகுதியிலுள்ள ரோடுகளுக்கு தார் சாலை அமைக்க	1,00,000	3,232
2 வாலுவம்பேட்டை பகுதியிலுள்ள ரோடுகளுக்கு தார் சாலை அமைக்க	1,00,000	4,098

ஆலந்தூர்,
சென்னை-16,
30–1–1972.

வி. ஆர். வரதராசன்,
ஆணையர்.

(த.54)

ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் அச்சகத் துறை

"மின்ட், அரசு அச்சகம் மற்றும் அதனுடைய சென்னை நகர இலாகளிலும் தேக்கி வைக்கப்பட்ட பிரஸ் கட்டிங்ஸ்களை வாங்கி எடுத்துச் செல்லுவதற்கு 1971–72-ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால், 1–3–1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில், பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத் தபாலில், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1, அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். வேறு வகையில் அனுப்பக்கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1, அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

எழுது பொருள் மற்றும்
அச்சக இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

(த. 45)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி.

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பிவைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—1972-ஆம் தேதி மாலை 3–30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான நிபந்தனைகள், ஷெட்யூல் பாரங்கள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி பொதுப் பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	பட்டியல் தொகை.	கட்டுத் தொகை.	ஷெட்யூல் பத்திரத்தின் விலை.	முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ.	ரூ. காசு.	
(1) கோவை ஆர். எஸ். புரத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 4 அறைகள் கொண்ட தற்காலிகக் கட்டடம் கட்டுதல்.	35,000	875	10–35	3 மாதங்கள்.
(2) ஆர். எஸ். புரத்தில் உள்ள இடுகாடு மைதானத்தைச் சுற்றிலும் மதிற்சுவர் கட்டுதல்.	39,890	998	5–18	3 மாதங்கள்.

(த. 14)

ஆணையர்.

ஏல விளம்பரம்

பழனி நகராட்சி

பழனி நகராட்சி மன்றத்திற்குப் பாத்தியப்பட்ட தினசரி வார சந்தையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் பாத்தியதை, பேருந்து நிலையத்தில் உள்ள சைவ, அசைவ உணவு விடுதிகள் மற்றும் சின்ன கடைத் தெருவில் உள்ள 16 கடைகள் திண்டுக்கல் ரோடிலுள்ள 27 கடைகள், மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள், அடிவாரம் ரோடிலுள்ள 12 கடைகள் மற்றும் 15 பெட்டிக் கடைகள், ஆட்டிச்சாலை, பேருந்து நிலையத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் பாத்தியதை ஆகியவைகளை 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28–ஆம் தேதி காலை 10 மணி முதல் தேவைப்பட்டால் அடுத்து வரும் வேலை நாட்களிலும் நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரிகளால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். மற்றும் 1972–73 வருடத்திற்கு பொருள்களை சப்ளை செய்வதற்கான விலைப்புள்ளிகளும் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதி மாலை 4–00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். ஏலங்கள் அனைத்தும் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ஆம் தேதிய ஏல நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாகும். மேலும் விவரங்கள் வேண்டுவோர் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பழனி நகராட்சி,
20—1—1972.

க. அ. சுப்பிரமணியம், பி. ஏ.,
ஆணையர்.

(த. 6)

ஏல விற்பனை

கீழே குறிப்பிட்டுள்ள இராமநாதபுரம் மாவட்ட காவல் துறையைச் சேர்ந்த போலீஸ் லாரி, மதுரையிலிருக்கும் இராமநாதபுரம் ஆயுதப் படை காவல் துறை மைதானத்தில் 22–2–1972-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இது சம்பந்தமாக மற்ற விவரங்களை மதுரையிலிருக்கும் இராமநாதபுர மாவட்ட ஆயுதப்படை உதவி காவல்துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து தெரிந்து கொள்ளவும்.

போலீஸ் லாரி எம். டி. ஆர். 3725—பெட்போர்ட்—1961 பெட்ரோல் வண்டி—ஹச். வி. எம்.

கோ. செல்வராஜ்,
மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்,
இராமநாதபுரம் (இ) மதுரை.

(த. 98)

விளம்பரம்

திருவண்ணாமலை நகராட்சி

இந் நகராட்சியின் எல்லைக்குள் சொத்துக்களின் பேரில் விதிக்கப்படும் சொத்துவரி விகிதங்களை 1—4—1972 முதல் அடியில் கண்டவாறு மாற்றியமைத்து விதிக்க 15—12—1971-ஆம் தேதிய571 (3) எண்ணுள்ள இந்நகரமன்ற தீர்மானத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விகிதங்களைச் செய்தித்தாளிலும், நகரமன்ற அலுவலக விளம்பரப்பலகையிலும், நகரமன்ற எல்லைக்குள் முக்கிய இடங்களிலும், தண்டோரா மூலமும், விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

	தற்போது உள்ள வரி விகிதம்.	1—4—1972 முதல் விதிக்கப்படவிருக்கும் வரி விகிதம்.
	சதவிகிதம்.	சதவிகிதம்.
பொதுச் சுகாதாரங்களுக்கு	10½	7
தண்ணீர், சாக்கடை வரி	5¾	7½
சக்கூல் வரி	2¼	2½
கல்வி வரி	5	5
விளக்கு வரி	1½	3
	25	25

மேற்படி திருத்தம் செய்யவிருக்கும் வரி விகிதத்தின் பேரில் ஆட்சேபணையோ அல்லது ஆலோசனையோ கூற விருப்பம் உள்ளவர்கள் எழுத்து மூலம் 10—3—1972-ஆம் தேதிக்குள் நகராட்சி ஆணையருக்கு எழுதித் தெரிவிக்க அறிவிக்கப்படுகிறது.

நகராட்சி அலுவலகம்,
திருவண்ணாமலை,
31—1—1972

டி. ஏ. பி. இராமகிருஷ்ணன்,
ஆணையர்.

(த. 55)

ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் அச்சகத் துறை

" திருச்சிராப்பள்ளி, அரசு மண்டல அச்சகத்திலிருந்து 1972–73-க்கு தேவையற்ற காகிதங்களை வாங்கி அகற்றுவதற்கான ஒப்பந்தப் புள்ளி " என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால், 4—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத்தபாலில், எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும், வேறு வழியில் அனுப்பக் கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர்
அலுவலகம், சென்னை-1.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

(த. 44)

ஒப்பந்தப் புள்ளி

குழந்தைகள் நல சென்னை நகரக் குழு (கவுன்சில்)
சென்னை-13

குழந்தைகள் நல இல்லம், சென்னை-13க்கு, 1972–73-ஆம் ஆண்டிற்கு "உணவுப் பொருட்கள், சில்லரைப் பொருள்கள், மற்றவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட்ட உறையில், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 21—2—1972 மாலை 4.00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில், அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் விவரங்கள், குழந்தைகள் நல இல்ல அலுவலகம், 81, சூரிய நாராயண செட்டி தெரு, சென்னை-13-ல் எல்லா வேலைநாட்களிலும், ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 5+விற்பனை வரி 3 சதவிகிதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது.

வி. என். சுப்பராயன்,
செயலாளர், குழந்தைகள் நல சென்னை நகரக்குழு.

24—1—1972.

(த. 40)

வேலை வாய்ப்பு

மின் வாரியம்

தமிழ்நாடு மின்வாரியத்தில், நேரடி முறை நியமனத்துக்காக, கீழ்க் குறிப்பிடப்பட்ட 3-வது வகுப்புப்பணி பதவிகளுக்காக, குறிப்பிடப்பட்ட படிவத்திலான மனுக்கள், தலைவர், தமிழ்நாடு மின்வாரியம் அவர்களால் 10—3—1972 மாலை 5.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

1. 24 இளநிலைப் பொறியாளர்கள் (சிவில்) ரூ. 300—25—650.
2. 50 இளநிலைப் பொறியாளர்கள் (மெகானிகல்) ரூ. 300—25—650.
3. 25 இளநிலைப் பொறியாளர்கள் (டெலி-கம்யூனிகேசன்) ரூ. 300—25—650.
4. 75 ட்ரேசர்ஸ் ரூ. 110—8—150—10—250.

தகுதி :—

இளநிலைப் பொறியாளர் (சிவில்):—பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற இந்திய யூனியனிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்திலாவது சிவில் பொறியியல் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதி.

இளநிலைப் பொறியாளர் (மெகானிகல்):—பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற இந்திய யூனியனிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்திலாவது மெகானிகல் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதி.

இளநிலைப் பொறியாளர் (டெலி-கம்யூனிகேசன்):—பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற எந்தப் பல்கலைக்கழகத்திலாவது எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் டெலி-கம்யூனிகேசன் பொறியியல் அல்லது டெலி-கம்யூனிகேசன் பொறியியல் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகுதி.

வயது:—மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவில் ஏதாவதொன்றில் இளநிலைப் பொறியாளர் பதவிக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைச்சாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் அல்லாத மற்ற வகுப்பினர் 1—7—1972 அன்று 28 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கக்கூடாது.

ட்ரேசர்கள்:—ஜியோமிட்ரிகல் ட்ராயிங், பில்டிங் ட்ராயிங் மற்றும் எஸ்டிமேடிங் மற்றும் ஃப்ரி கேண்டு அவுட்லைன் மற்றும் மாடல் ட்ராயிங் ஆகியவற்றில் லோயர் கிரேடு அரசுத் தொழில் நுட்பத் தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு உரிமை பெற்றவரால் வழங்கப்பட்ட முழுமையான உயர்நிலைப்பள்ளி விடுப்பு சர்ட்டிபிகேட்டில், கீழ்க் குறிப்பிடப்பட்ட பாடங்களில், குறிப்பிட்ட சராசரி மதிப்பெண்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். சிறப்புப் பாடமாக சேர்ந்திருக்க வேண்டும்.

ஏ. விஞ்ஞானம் மற்றும் ட்ராயிங் 30 சத விகிதம்.

பி. அப்ளைடு சயின்ஸ் அண்டு செய்முறைப் பயிற்சி 30 சத விகிதம்.

அல்லது

மற்ற சமமான தகுதிகள்.

வயது:—1—1—1973 அன்று 28 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கக் கூடாது. 1—7—1972 அன்று 18 வயது பூர்த்தியாகாதவர்கள், நேரடி முறை நியமனத்திற்கான பதவிகளுக்குத் தகுதியுடையவர்கள் அல்ல.

முழுவிவரங்கள், தகுதி, வயது, மற்றவைகள், அடங்கிய அறிவிப்பு மற்றும் குறிப்பிடப்பட்ட மனுவடிவம் ஆகியவைகளை, மின்சாரத் தலைமைப் பொறியாளர், 157, அண்ணா சாலை, சென்னை-2 அவர்களுக்கு 23 செ.மீ. × 10 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 20 காசு நூல் அஞ்சல் வில்லையும் 5 காசு அகதிகள் நிவாரணவில்லையும் (20+5 காசு) ஒட்டப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெறலாம்.

சி. ஜி. ரங்கபாஷ்யம்,
தலைவர், மின் வாரியம்.

(த. 21)

திருத்தம்

தென்காசி நகராட்சி

ஒப்பந்தப் புள்ளித் திருத்தம் எண் 1/71-72, ஸ்டேஷனரி, மற்றும் இதரச் சாமான்கள் வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட சாமான்கள் வழங்க ஒப்பந்தப் புள்ளி கொடுப்பதற்கான கடைசி நாள் 15—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி என்பதை 28—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளிகள் 28—2—1972-ம் தேதி மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும்.

ம. சண்முகம், பி.ஏ.

1—2—1972. ஆணையர்.

(த. 52)

ஏல விளம்பரம்

ஸ்ரீரங்கம் நகராட்சி

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் இதனடியில் கண்ட 1 முதல் 3 வரையில் உள்ள அயிட்டங்களை அவற்றிற்கு எதிரில் குறிப்பிட்டுள்ள காலவரைக்கு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியத்தை 8—3—1972-ஆம் தேதி புதன்கிழமையன்று காலை 10 மணி முதல் ஸ்ரீரங்கம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள், கட்டுத் தொகை முதலியன சம்பந்தப்பட்ட விவரம் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(1) நகராட்சிக்குச் சொந்தமான 6·43 ஏக்கர் விஸ்தீரணத்தில் உள்ள சீமைப்புல்லை 1—4—1972 முதல் 31—3—1975 முடிய வெட்டிக் கொள்ளும் உரிமை.

(2) நகராட்சிக்குச் சொந்தமான கறிக்கடைகள், மீன்கடை, பெட்டிக்கடை, முதலியவற்றை 1—4—1972 முதல் 31—3—1973 முடிய ஒரு வருட காலத்திற்கு அனுபவிக்கும் பாத்தியத்தை, மாம்பழ மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் பாத்தியத்தை மற்றும் பல பட்டரை மார்க்கெட் கட்டணம், பஸ் ஸ்டாண்டு கட்டணம் வசூலித்தல் முதலியவைகளை 1—4—1972 முதல் 31—3—1973 முடிய ஒரு வருட காலத்திற்கு அனுபவிக்கும் பாத்தியதை.

(3) நகராட்சிக்குச் சொந்தமான பலன் தரும் மரங்களை 1—4—1972 முதல் 31—3—1975 முடிய மூன்று வருடங்களுக்கு அனுபவித்துக் கொள்ளும் பாத்தியத்தையும், ஸ்ரீரங்கம் முனிசிபல் சர்வே வார்டு 2 எண் 2424/1 மற்றும் 2470/1-ல் முறையே 0·24 + 0·41 உள்ள நஞ்சை நிலங்களில் நெல் பயிரிட்டு பலனை 1—4—1972 முதல் 31—3—1975 முடிய அனுபவித்துக் கொள்ளும் பாத்தியத்தையும்.

(த. 53) **ஆணையர்.**

ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் அச்சகத் துறை

"விருத்தாசலம், அரசு மண்டல அச்சகத்திலிருந்து 1972-73-க்குத் தேவையற்ற காகிதங்களை வாங்கி எடுத்துச் செல்லும் ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களால், 3—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சியுடன் கூடிய பதிவுத்தபாலில் எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களுக்குப் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும். வேறு வகையில் அனுப்பக்கூடாது. மற்ற விவரங்களுக்கு, எழுதுபொருள் அச்சக இயக்குநர், சென்னை-1, அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

டி. சண்முகம்,
இயக்குநர் பொறுப்பு.

எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர்
அலுவலகம், சென்னை-1,
22—1—1972.
(த. 41)

ஒப்பந்தப் புள்ளி

நீதிமன்றக் கட்டடம், மதுரை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மதுரை டவுன் செங்குளம் உள்வாயில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய துவிச் சக்கர வண்டி நிலையத்தை (Cycle Stand) நடத்துவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed Tenders) மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் 11-3-1972 மாலை 2 மணி முடிய ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் 11-3-1972 மாலை 3 மணி அளவில் மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்த ஷரத்துகள், இதர நிபந்தனைகள் முதலிய விவரங்களை மதுரை மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. கோபிநாத்,
மதுரை மாவட்ட நீதிபதி.

மதுரை மாவட்ட நீதிமன்றம்,
மதுரை-20, 11-1-72.
(த. 18)

ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம் : அரசாங்க தடி மண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும் : 21 & 22—2—1972 முற்பகல் 9·00.

அளவு : ஏறத்தாழ 1,500 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச் சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி,
தென் பிரிவு.

(த. 34)

ஒப்பந்தப் புள்ளி

தருமபுரி நகராட்சி

கீழ்க்கண்ட நகராட்சி வேலைகளுக்காக 25—2—1972-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4·00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ அல்லது தபாலிலோ கோரி பெறலாம்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
1 நகராட்சியில் சாக்கடை வேலைகள், கான் கிரீட் தளம் போடுதல், தடுப்புச்சுவர் கட்டுதல், சில்லரை பராமரிப்பு வேலைகள் (மொத்தம் 22 வேலைகள்).	ரூ. 80,200.	ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டில் 5 சதவிகிதம்.

எஸ். காளியப்பன், எம்.ஏ.,
ஆணையர்.

(த. 36)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை,
சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை) சென்னை வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை—25—ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23—2—1972 அன்று மாலை 3—00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வ. எண்.	வேலை விவரம்.	முன் வைப்புத் தொகை. ரூ.	ஒப்பந்த நமூனு கிடைக்குமிடம்.
1.	புதுப்பாளையத்திலிருந்து பாலூர், பெரிய எலச்சேரி மீனலூர், கனை இலுப்பை வழியாக காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் சேரும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 0.0 முதல் 6.0 வரை.	2,490	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை.
2.	புதுப்பாளையத்திலிருந்து பாலூர், பெரிய எலச்சேரி மீனலூர், கனை இலுப்பை வழியாக காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் சேரும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 6.0 முதல் 12.0 வரை.	2,370	ஷை
3.	புதுப்பாளையத்திலிருந்து பாலூர், பெரிய எலச்சேரி மீனலூர், கனை இலுப்பை வழியாக காஞ்சிபுரம் திருவத்திபுரம் சாலையில் சேரும் சாலையை மேம்பாடு செய்தல் கி.மி. 12.0 முதல் 17.2 வரை.	2,110	ஷை

ஒப்பந்தங்கள் 23-2-1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள் நமூனுக்கள், வரைபடங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை,) திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 25.88 செலுத்தி 10-2-1972 முதல் 22-2-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ் வங்கி"யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும். உறுதிப் பத்திரங்கள் அரசினரால் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் தான் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ்ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ. கி.)

சென்னை-25,
1—2—1972.
(த. 88)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 8-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

	கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் பௌதிகத் துறை பட்ட மேல் படிப்புக்கு கட்டடம் கட்டுதல்.	கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் இரசாயன பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.	கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் கணிதத் துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
(1) ஒப்பந்தத் வகை	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை
	ரூ.	ரூ.	ரூ.
(2) பிணைப்பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப் படும்.)	5,300	6,500	6,500
(3) ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ.ப.து. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம் திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.	30	30	30
(4) விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனைவரி பி.பற்று சீட்டு மாநில விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனைவரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.	1·05	1·05	1·05
(5) கால அளவு	12 மாதங்கள்.	12 மாதங்கள்.	12 மாதங்கள்.
(6) ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்	21-2-72.	21-2-72.	21—2-72.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து.
தஞ்சாவூர். வட்டம், தஞ்சாவூர்.

(த. 89)

ஏல விற்பனை

காவல் துறை

ந. க. எண்: 84375/டி. 2/71

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள், 1972-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 24-ஆம் தேதி, வியாழக்கிழமை, காலை 10.30 மணி அளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 22-2-1972 செவ்வாய்க்கிழமையன்றும், 23-2-1972 புதன் கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

நகர காவல் ஆணையர்.

காவல் ஆணையாளர் அலுவலகம்,
சென்னை-8.
(த. 90)

ஒப்பந்தப் புள்ளி

பவானிசாகர் நகரியம், கோவை மாவட்டம்

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கையொப்பம் செய்தவரால் அல்லது அவரால் அதிகாரம் பெறப்பட்டவரால், 25-2-1972-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை பவானிசாகர் நகரிய அலுவலகத்தில் அலுமினம் பெரிக் கிரேடு "ஏ" (Alumina Ferric Grade A) விநியோகம் செய்வதற்கு பெறப்படும். அவை மாலை 4-30 மணிக்கு அன்று அங்கு வந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

மற்ற ஒப்பந்த விவரங்கள் அலுவலகத்தில் எழுத்து மூலம் அல்லது நேரில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ச. ராமசாமி,
நிருவாக அதிகாரி.

பவானிசாகர்,
24—1—1972.
(த.58)

ஏல விற்பனை

விழுப்புரம் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதியுடன் முடிவடையும் ஓராண்டுக் காலத்திற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான மகாத்மா காந்திரோடு, பண்டிட் ஜவகர்லால் நேருரோடு கீழ்ப்பெரும்பாக்கம் காய்கறி, மீன் நாளங்காடி, பேருந்து நிலையம், அங்குள்ள குளியல் அறைகளை மற்றும் திரு.வி.க. ரோடில் உள்ள வண்டிப்பேட்டை ஆடுமாடு அடிக்கும் தொட்டிகள் ஆகியவிடங்களில் கட்டணம் தண்டிக் கொள்ளும் உரிமையும், பேருந்துநிலைய வெற்றிலை பாக்குக்கடை, பழக்கடை, மரப்பெட்டிகள், பூக்கடைகள், தார்சு கட்டடக் கடைகள், மற்றும் இதர இடங்களில் உள்ள மரப்பெட்டிக் கடைகள், கீழ்ப்பெரும்பாக்கம் சண்முகப் பெருமாள் தெருவில் கதவு எண். 24 உள்ள தார்சு கட்டடம், ஆகியவைகளை அனுபவித்துக் கொள்ளும் உரிமையும், கீழ்ப்பெரும்பாக்கம் புல்பண்ணையில் புல் அறுவடை செய்து கொள்ளுதல், அங்குள்ள தென்னை மரங்களில் கள் இறக்கிக் கொள்ளுதல் ஆகிய உரிமைகளையும், நகராட்சி மாட்டுத் தொழுவத்தில் விழும் சாணி உரங்களை எடுத்துக் கொள்ளும் உரிமையும் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25—2—1972 தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் அல்லது பின்னால் ஒத்திவைக்கப்படும் தேதியிலும் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்க விழைவோர் வட்ட ஆட்சியரால் அளிக்கப்படும் சொத்துச் சான்றிதழுடன் கட்டுத்தொகை செலுத்தி ஏலம் கேட்கலாம். மற்ற விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
விழுப்புரம்,
1—2—1972

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

(த.59)

ஒப்பந்தப் புள்ளி

திண்டுக்கல் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குத் தேவையான கீழ்க்காணும் தண்ணீர் சுத்திகரிப்புப் பொருள்கள் வழங்குவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையரால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 3–3–1972-ஆம் நாள் மாலை 4–00 மணி வரை இந்நகராட்சி அலுவலகத்தில் பெறப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க விரும்புகிறவர்கள், ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய பொறுப்புத் தொகையைச் செலுத்தி தனித்தனியே ஒப்பந்தப்புள்ளிகள் தர வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நேரிலோ, தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

டெபாசிட் :

1. குளோரின் (Liquid Chlorine)—ரூ. 100.
2. படிகாரம் (Sulphate of alumina ferric) —ரூ. 100.
3. பிளீச்சிங் பவுடர் (Stable Bleaching Powder) —ரூ.100.

திண்டுக்கல்,
3-2-1972.

ஆணையர்.

(த. 79)

ஒப்பந்தப் புள்ளி

மாநிலப் போக்குவரத்துத் துறை
சென்னை-2

ஏலம் விடுபவர்கள் நியமனம்

இத்துறையில், சென்னை போக்குவரத்துப் பணிமனை, திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய உள்ள காலத்திற்குப் பழைய மற்றும் உபயோமற்ற வண்டிகள் (Condemned), போக்குவரத்திற்கு உதவாத தேங்கிக் கிடப்பவை, மற்றவைகளுக்கு ஏலம் நடத்துவதற்கு, அங்கீகாரம் பெற்ற ஏலம் விடுபவர்களை நியமனத்திற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத்துறை இயக்குநர், சென்னை–2 அவர்களால், 15–3–1972 மாலை 3–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை நமூனாக்கள், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மாநிலப்போக்குவரத்துத்துறை, போக்குவரத்து இல்லம், சென்னை–2 அவர்களிடம் அலுவலக நேரத்தில் கட்டணமின்றிப் பெறலாம்.

இயக்குநர்,
மாநிலப் போக்குவரத்துத்துறை,
சென்னை-2.

(த. 104)

ஏல விற்பனை

உணவுப் பொருள் வழங்குதுறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், 18 டன் அரிசி, 25–2–1972 அன்று ஈ.டி. மில்ஸ் காம்பவுண்டு அரசு குடவுன் (godown), சூளை, சென்னை-7-ல் உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒரு அலுவலரால், பொது ஏலத்திற்கு விற்கப்படும்.

விற்பதற்கான அரிசியின் அளவு, வகை பற்றிய விளக்கம், நிபந்தனைகள், உணவுப் பொருள் வழங்கு உதவி ஆணையர் அலுவலகம், ஈ.டி. மில்ஸ், சென்னை–7-ல் ரூ. 5.20 செலுத்திப் பெறலாம். தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

உதவி ஆணையர்,
(உணவுப் பொருள் வழங்கு)
சென்னை-7.

(த. 86)

ஏல விற்பனை

கும்பகோணம் நகராட்சி

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேரு காய்கறி சந்தை, காமரா காய்கறி சந்தை, பிர்மன் கோயில் காய்கறி சந்தை, மீன் சந்தை ஆடடிக்கும் இடங்கள் ஆகியவற்றில் கட்டணம் தண்டும் உரிமை, சாம் சிவபுரம் பேருந்து நிலையங்களில் பேருந்துகளுக்குக் கட்டணம் தண்டு உரிமை, பேருந்து நிலைய டாக்சி ஸ்டாண்டில் டாக்சிகாரர்களுக்குக்கட்டண தண்டும் உரிமை, நகராட்சிகள் சட்டம் 270-வது பிரிவின் கீழ் ந ராட்சி எல்லைக்குள் உள்ள சாலை ஓரங்களில் வியாபாரம் செய்பவ களிடம் கட்டணம் தண்டும் உரிமை, நகராட்சி மாட்டுக் கொட்டிலி விழும் சாணியை எடுத்துக் கொள்ளும் உரிமை, காவிரி ஆற்றி தோணிவிடும் உரிமை, நேரு காய்கறிச் சந்தையின் பக்கத்திலும், காமராஜ் காய்கறிச் சந்தையின் பக்கத்திலும் சைக்கிள்கள் நிறுத் வைப்பதற்குக் கட்டணம் தண்டும் உரிமை முதலியவைகளை 1—4—197 முதல் 31—3—1973 முடிய உள்ள ஓராண்டுக் காலத்திற்கு ஆணைய அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் எல்லோரும் அறிய 24–2–1972-ம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

இதர விவரங்களை அலுவலகத்தில் நேரிலோ அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

ஜே. தனராஜ் டேனியல்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
கும்பகோணம்,
3—2—1972.

(த. 75)

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் 28—2—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4–30 மணிக்கு உடைக்கப்படும். நகரமன்றத்திற்கு ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிட உரிமை உண்டு. மற்றும் விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

வேலை விவரம்.		கட்டுத் தொகை.
		ரூ.
1 சேர்மன் சிவசாமி பூங்காவில் வாசகசாலை கட்ட	..	165
2 குரூஸ்பர்னாந்துபுரம் பூங்காவில் வாசகசாலை கட்ட	..	165

கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.பி.இ.,
பொறியாளர்.

தூத்துக்குடி,
2—2—1972.

(த. 76)

ஒப்பந்தப் புள்ளி

உதகை கோட்டம்

அரசாங்க சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு வேலைகள்.

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும் உதகை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை, பணித்துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் உதகை கோட்டத்திற்குட்பட்ட அரசாங்க சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டிற்கான எல்லா பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட சதவிகித ஒப்பந்தப் புள்ளிகள் கோட்டப் பொறியாளர் (நெ.இ.ப.) உதகை அவர்களால் அவர்களது அலுவலகத்தில் 15–3–1972-ஆம் நாள் பிற்பகல் 2-00 மணி வரை) அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972 அன்றே பிற்பகல் 2-15 மணிக்கு ஒப்பந்ததாரர் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் உதகை (நெ. இ. ப.) கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கு ரூ. 3·11 (எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது) வீதம் கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 1—3—1972 முதல் 14–3–1972 வரை விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் 15—3—1972 ஒப்பந்த நாளன்று கொடுக்கப்படமாட்டாது.

கட்டுத்தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது. கட்டுத்தொகை கோட்டப் பொறியாளர், (நெ. இ. ப.) உதகை அவர்கள் சார்பில் “ ரெவின்யூ டெபாசிட் ” என்ற தலைப்பின் கீழ் அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திச் செல்லுச் சீட்டை (செலான்) ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்கள் கோட்டப் பொறியாளரின் சார்பில் மாற்றியதும், பாங்க் டிராப்ட்டும் கட்டுத் தொகையாக பெற்றுக் கொள்ளப்படும். பாங்க் காரண்டி முன்வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் மேற்படி பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். அப்படி வைக்கத் தவறினால் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் வருமானவரி ,விற்பனைவரி சான்றிதழ் ஆகியவைகளை ஏற்கனவே சமர்ப்பிக்காமலிருந்தால் அவைகளை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பாவிடில் அவர்களுடைய ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்படாமல் இருக்க ஏதுவாகும்.

வேலை விவரங்கள், ஒவ்வொரு வேலைகளுக்கும் முன்வைப்புத் தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய அட்டவணை, இவ்வலுவலக அறிவிப்புப் பலகையிலும், ஒவ்வொரு உதவிப் பொறியாளர் பிரிவு அலுவலர் அலுவலக அறிவிப்புப் பலகைகளில் 1—3—1972–ஆம் நாளிலிருந்து விளம்பரப்படுத்தப்படும்.

பி. ராஜகோபால்,
கோட்டப் பொறியாளர் (நெ.) உதகை.

(த. 92)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால்,2—3—1972 வியாழன் பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—நிலக்கோட்டை குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை—வார்ப்பிரும்பு, பி.வி.சி., மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களைப் பகிர்வு முறைக்கெனப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை—கே. 2.

முன் வைப்புத் தொகை—ரூ. 1,110 (ரூபாய் ஒரு ஆயிரத்து நூற்றுப் பத்து மட்டும்.)

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை:—ரூ. 5·18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை–2 பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்டப் நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி, 29–2–1972 செவ்வாய் மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர், வடிகால் வாரியம்.

மதுரை-2,
28–1–1972.

(த. 93)

மின் வாரியம்

பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம்

சாற்றுக் குறிப்பு எண் : SEG-BB. 51

தமிழ்நாடு மின் வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் “ தமிழ்நாடு மின் வாரியம்—பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம் 1972–73 முதல் 1973–1974 வரை நிலக்கரி கையாளுதல், தற்காலிகமான தொழிலாளிகளைக் கொடுத்தல் (Coal Handling and supply of Casual labour from 1972–1973 to 1973–1974) சாற்றுக் குறிப்பு எண் SEG-BB 51 எனவும் மற்றும் தேதி, ஒப்பந்ததாரரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டு கீழ் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் 15–3–1972 அன்று பிற்பகல் 1–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒவ்வொன்றிற்கும் ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) (திருப்பித்தரப்படமாட்டாது.) தலைமைக் கணக்காயர் பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம், சென்னை-12 என்ற முகவரிக்கு பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பிரதி வாங்குவதற்கான பணத்தை பண அஞ்சல் மூலமாக தமது முகவரியையும், சாற்றுக் குறிப்பு எண்ணையும் (Specification) தெளிவாக குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்கு சேர்ப்பிக்கப்படாவிட்டால் அல்லது தாமதமாகக் கிடைத்தால் அல்லது வழியில் காணமல்போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கும் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட ஒப்பந்தப் பிரதிகள் மற்றொருவர் பயன்படுத்தக் கூடாது. ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு அதிகாரம் உண்டு.

இந்த வேலைக்கான கட்டுத் தெதாகை (Earnest money deposit) ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்). இத்தொகையை ஒப்பந்தப் புள்ளிகள் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்த வேண்டும். கட்டுத் தொகையைச் செலுத்தாமல் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட உரிய தாள்களில் அனுப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறித்த தேதியும், நேரமும் கடந்த பின் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
பேசின்பிரிட்ஜ், அனல் மின் திட்டம்,
சென்னை-12,

(த. 94)

ஏல விற்பனை

திண்டுக்கல் நகராட்சி

1972–73.

இந்நகராட்சிக்குச் சொந்தமான, வாரச் சந்தை, தினசரி காய்கறிச் சந்தைகள், ஆடு அடிக்கும் இடம் (sheep slaughter house) மீன் மார்க்கெட், கறிக்கடைகள், வாரச் சந்தைகளில் விழும் சாணம் எடுக்கும் உரிமை, நகராட்சி மாட்டுத் தொழுவத்தில் விழும் சாணம் எடுக்கும் உரிமை, ஆட்டு கொலைச்சாலைகளில் விழும் சாணங்கள் உதப்பிகள் எடுக்கும் உரிமை, திண்டுக்கல் நகராட்சி ரோடு ஓரங்களில் உள்ள 13 சிமிண்ட் விளம்பரப் பலகைகளில் விளம்பரம் செய்யும் உரிமை, பள்ளிவாசல் சந்தில் உள்ள நகராட்சி கடைகளில் கட்டணம் தண்டும் உரிமை, டாக்சி ஸ்டாண்டில் கட்டணம் தண்டும் உரிமை பழநி ரோட்டில் உள்ள நகராட்சி லாரி நிலையத்தில் கட்டணம் தண்டும் உரிமை, ஒடுக்கம் நீரேற்று நிலையத்தில் உள்ள புல் பூண்டுகள் விளைவையும் அங்குள்ள மரங்களின் பலனையும் அனுபவிக்கும் பாத்தியத்தைக்கும் மேற்கு ரதவீதி காய்கறி மார்கட்டில் உள்ள 12 கடைகள் அனுபவிக்கும் பாத்தியதைக்கும் நகராட்சி பள்ளிகளின் சுவர்களில் உள்ள 250 விளம்பர போர்டுகள் விளம்பரம் செய்யும் உரிமைக்கும், ஆத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன் தரும் மரங்களில் விளைவை அனுபவிக்கும் உரிமைக்கும், நகராட்சி எல்லைக்குட்பட்ட பலன் தரும் மரங்களின் விளைவை பயன்படுத்திக் கொள்ளும் உரிமைக்கும், மத்திய பஸ் நிலையத்தில் உள்ள 2-ம் நெம்பர் செய்தித்தாள் புத்தகக்கடை, 3-ம் நெம்பர் வெற்றிலை பாக்கு ஸ்டேஷனரி கடை, மத்திய பஸ் நிலையமதில் உள்ள 4-ம் நெம்பர் பழக்கடையும், பூக்கடையும் அனுபவிக்கும் பாத்தியதைக்கும், நகராட்சி பயணிகள் தங்கும் இல்லத்தில் உள்ள காலி நிலத்தில் பயிரிடும் உரிமைக்கும், ஐசலேசன் வார்டு காம்பவுண்டில் உள்ள காலி நிலத்தைப் பயிரிடும் உரிமைக்கும், ரயில்வே ஸ்டேசன் ரோடில் உள்ள மூன்று மரப்பெட்டிக்கடைகள் அனுபவிக்கும் பாத்தியதைக்கும், மத்திய பஸ் நிலையத்தில் உள்ள 11 பஸ் டிக்கெட் கொடுக்கும் அறைகள் அனுபவிக்கும் பாத்தியதைக்கும், மணிக்கூண்டு கடை தென்புறம் உள்ள கால்கள் ஊன்றி விளம்பரம் செய்யும் உரிமைக்கும் நாளது 23–2–1972-ம் தேதி புதன் கிழமை காலை 10 மணிக்கு மேல் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

மற்றும் நகராட்சிக்குத் தேவையான பால், ரொட்டி, ஸீக்கோ கரி, மாட்டுத் தீவனங்கள், நீர்த்த சுண்ணாம்பு, ஸ்டேஷனரி சாமான்கள், பெட்ரோல், டீசல் முதலியவைகளும் சப்ளை செய்யவும், வண்டிகளின் டயர், டியூப்களை வல்கனைசிங் செய்யவும், மாடுகளுக்கு லாடம் அடிக்கவும், பிரிண்டிங், பைண்டிங் செய்யவும் மூடிய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 24–2–1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஏலம் 1972–73-ஆம் ஆண்டு ஏல விதிகளுக்குக், கட்டுப்பட்டது. மற்ற விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

பி. வீரகேசவன், பி.ஏ., பி.காம்.,
ஆணையர், திண்டுக்கல் நகராட்சி.

திண்டுக்கல்,
2–2–1972.
(த·105)

ஏல விற்பனை

இணை மாநில கனிப்பொருள் ஆய்வாளர் அலுவலகம்,
தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

கிண்டி, தொழிற்பேட்டை, சென்னை–32–ல் உள்ள இணை மாநில கனிப்பொருள் ஆய்வாளர் அலுவலகத்தில் இரண்டு “ காலிக்ச துளைப்பொறிகள், பம்புகள் அதைச்சார்ந்த தளவாடங்கள் முதலியவை 6—3—1972 அன்று பிற்பகல் 2 மணி அளவில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் 10–30 மணியிலிருந்து 5–00 மணி வரை 4—3—1972-க்குள்ளாக விற்பனைவரையறைகளையும், நிபந்தனைகளையும் நேரடியாகவோ அல்லது விண்ணப்ப நகலுடன் சுயமுகவரியிட்ட 25 காசு. அஞ்சல் தலையுடன் கூடிய உறையுடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்

இணை மாநில கனிப்பொருள் ஆய்வாளர்.

(த.106)

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி நகராட்சி

1972–73–ஆம் வருடத்திற்கு இந்நகராட்சியின் கால்மாடுகளுக்குத்தேவையான வைக்கோல், பருத்திவிதை, கடலைப்புண்ணாக்கு, அரிசி தவிடு, பச்சைப்புல் முதலியன வழங்கவும் மாடுகளுக்கு லாடம் அடிக்கவும் துப்புரவு வேலைகளுக்கு நீத்தின சுண்ணாம்பும் மருத்துவ விடுதிகளுக்குத் தேவையான உடைவிறகு சொட்டு, சர்க்குமார் தகரப்போணி, ஆகிய ஜாமான்கள் வழங்கவும், பிரசவ விடுதிகள் தங்கும் விடுதிகளிலுள்ள துணிகளைச் சலவை செய்வதற்கும் நகராட்சியால் பிரசுரம் செய்யப்பட்டுள்ள 18—1—1972-ஆம் தேதிய வருடாந்திர ஒப்பந்த நோட்டீஸில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, மூடி, சீல்வைத்த ஒப்பந்தப் புள்ளிகளை அதற்குக் குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை சால்வன்ஸி அத்தாட்சியுடன் 1972-ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 23-ம் தேதி புதன் கிழமை மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையரின் நேர்முக உதவியாளரால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்றையத் தினம் மாலை 4–30 மணிக்கு ஆணையரின் நேர்முக உதவியாளரால் திறக்கப்படும். மற்ற விவரங்கள் அலுவலக வேலை நேரங்களில் வேலை நாட்களில் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

பி. ஹமீதலி, பி.ஏ., பி.எல்.,
ஆணையர்.

(த·72)

அறிவிப்பு

திருவாரூர் நகராட்சி

திருத்தப்பெற்ற தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 1920-ஆம் வருடத்திய 5-வது சட்டம் 80-வது பிரிவின் கீழ் பிரசுரிக்கப்படுகிறது.

நகராட்சி எல்லைக்குள் இருக்கும் எல்லாக் கட்டடங்கள் அதை சார்ந்த நிலங்களுக்கும் (விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் நிலங்கள் தவிர) கீழ்க்கண்டவாறு விளக்கு வரியை 1920-ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 5-வது சட்டம் 78 (3) பிரிவின் கீழ் 1—4—1972 முதல் உயர்த்தி விதிப்பதென்று இந்நகர் மன்றம் 30—9—1971 தேதிய 832 எண் தீர்மானத்தில் முடிவு செய்திருப்பதால் இது விஷயமாக 30—3—1972 தேதி முடிய உள்ள கால அளவிற்குள் எழுத்து மூலமாக வரப்பெறும் ஆட்சேபனைகளை நகராட்சி மன்றத்தால் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

வரி விபரம்.	அரை வருட வரி.
விளக்கு வரி	நகராட்சி எல்லைக்குட்பட்ட எல்லாவித கட்டடங்களுக்கும் அதை சார்ந்த நிலங்களுக்கும் வருட வாடகை மதிப்பில் 2½ சத விகிதத்திலிருந்து 3½ சதவிகிதம்.

க. பெ. அன்பானந்தன்,
ஆணையாளர்.

நகராட்சி அலுவலகம்,
திருவாரூர்,
29—1—1972.
(த·73)

ஒப்பந்தப் புள்ளி

ஈரோடு நகராட்சி

இந்நகராட்சியின் உபயோகத்திற்குத் தேவைப்படும் ஒலிபெருக்கி சாதனங்கள் ரூ. 2,800 மதிப்பில் வழங்க 2—3—1972-ந் தேதி மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

ஈரோடு,
3—2—1972.
(த.74)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

திருச்சிக் கோட்டம்.

தமிழக ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும் திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பிராந்தியத்தில் உள்ள விளாங்குடி முத்துவாஞ்சேரி சாலையை மேம்பாடு செய்யும் வேலைக்கான மூடிய அரக்கு முத்திரை இடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்த அறிவிப்புகள் (டெண்டர்கள்) திருச்சிராப்பள்ளி கோட்டப்பொறியளார் அவர்களால், அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிவரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக கடிகாரத்தின்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக் கொண்ட ஒப்பந்த அறிவிப்புகள் அன்றையத் தினமே பிற்பகல் 4-15 மணி அளவில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப் பட்டியல்களும், பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும், மேற்படி விவரக் குறிப்புகளும், திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் (1—3—1972 முதல் 14—3—1972வரை) (இருநாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலின் அடக்கவிலை, விற்பனைவரி உள்பட ரூ. 10.35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தைந்தும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும், திருப்பித்தர இயலாது. 15—3—1972-ஆம் தேதி ஒப்பந்தப் பட்டியல்கள் விற்கப்பட மாட்டாது.

முன்வைப்புத்தொகை திருச்சிராப்பள்ளி (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் “ ரெவின்யூ டிபாசிட் ” என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத் தவிர கோட்டக் பொறியாளர் பெயருக்கு வாங்கப்பட்ட பன்னிரண்டாண்டுத் தேசிய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், ஷெட்யூல் வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்திரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும் டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் முன்வைப்புத் தொகைக்காக பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வங்கி உத்தரவாதமாக இருப்பின் அவைகள் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். முன்வைப்புத் தொகைகான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	ஒப்பந்த மதிப்பு.	கட்டுத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ.	
1. விளாங்குடி முத்துவாஞ்சேரி சாலையை மேம்பாடு செய்தல்—			
கி.மீ. 11·6—14·0	39,100	980	ஆறு மாதங்கள்
2 டை கி.மீ. 14·0—18·0	46,100	1,160	டை
3 டை கி.மீ. 18·0—20·0	33,500	840	டை
4 டை கி.மீ. 20·0—22·0 ..	34,400	806	ஆறு மாதங்கள்
5 டை கி.மீ. 22·0—24·0 ..	35,900	900	டை
6 டை கி.மீ. 24·0—26·0 ..	36,500	920	டை
7 டை கி.மீ. 26·0—28·8 ..	35,600	890	டை

எம். டி. பால்மாணிக்கம்,
கோட்டப் பொறியாளர், (நெ·கி·ப.)

(த.60)

தூத்துக்குடி நகராட்சி

1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள ஒரு வருடத்திற்கு நகராட்சியின் எல்லைக்குள் மின்விளக்குகள் இல்லாத தெருக்களில் ஒளி தருவதற்கு 200 மெழுகுவர்த்தி ஒளியுள்ள பெட்ரோமாக்ஸ் விளக்குகள் சுமார் 100 எண்ணிக்கை தினசரி மாலை 7 மணி முதல் இரவு 1 மணி வரை எரிய வைப்பதற்கு நாள் வாடகை விகிதத்தில் வழங்க 28—2—1972–ஆம் தேதி மாலை 4 மணி வரை ஆணையரவர்களின் நேர்முக உதவியாளரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–30 மணிக்கு ஆணையரின் நேர்முக உதவியாளர் அவர்களால் திறக்கப்படும்.

கட்டுத் தொகையான ரூ. 1,000-க்கு செக் அல்லது டிமாண்ட் டிராப்டுடன் அல்லது முனிசிபல் கஜானாவில் கட்டியதற்குரிய ரசீதுடன் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். மற்றவை நிராகரிக்கப்படும் என்பதையும் அறியவும்.

இதர விவரங்களுக்கு அலுவலகப் பொறியர் அவர்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 57)

மன்னார்குடி நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம்நாள் முதல் 1973-ஆம்ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் முடிய உள்ள காலவரைக்கு மன்னார்குடி நகராட்சிக்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள், எலக்ட்ரிக் சாமான்கள், மாடுகளுக்குத் தேவையான பருத்திவிதை, புண்ணாக்கு, வைக்கோல் மற்றும் நகராட்சி மகப்பேறு நிலையத்திற்குத் தேவையான விறகு, கரி, கன்ஸர்வன்ஸி உபயோகத்திற்குத் தேவையான கூடை, கயிறுகள், வாளிகள், மண்வெட்டிகள், வழங்க ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகிறது.

அச்சடித்தல், மாடுகளுக்கு லாடம் அடித்தல் ஆகியவைகளுக்கும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர், பொறியர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் 25–2–1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவோர் அதற்குரிய கட்டுத் தொகையை செலுத்தி நேரிலோ அல்லது தபால் மூலமோ மேற்படி காலத்திற்குள் கொடுக்கலாம்.

இதர விவரங்கள் நேரிலோ அல்லது எழுதியோ பெற்றுக்கொள்ளலாம்.

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

மன்னார்குடி,
1–2–1972.
(த. ·78)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

திருச்சி வட்டம்

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொது பணித்துறை திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்	கேந்திரிய வித்யாலயா, மத்திய அரசு பள்ளிக்கான கட்டடங்கள்–சிறு படைக்கல திட்ட எல்லைக்குள்–கட்டுதல்–திருச்சி.
2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி, மற்றும் நேரம்.	15–3–1972—மாலை 3–00மணி
3. பிணைப் பொறுப்புத் தொகை ..	ரூ. 15,000 (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்).
4. ஒப்பந்த முறை	மொத்தத்தொகை.
5. முடிக்க வேண்டிய காலம் ..	பன்னிரண்டு மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.	ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7. விற்பனை வரி	ரூ. 0–88 (எண்பத்தெட்டு காசுகள் மட்டும்).
8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.	6—3—1972.
9. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.	15—3—1972 மாலை 3–30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில்: "**XXXVII Public works-State Revenue-Miscellaneous**" "**XII Sales-Tax (b) Receipts Under State Sales Tax Act- General Sales Tax**" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச் சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப்பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 70)

விளம்பரம்

வாணியம்பாடி நகராட்சி

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 78 (3) பிரிவுகளின்படி விளம்பரம் செய்யப்பட்டது.

வாணியம்பாடி நகராட்சி மன்றத்தின் 30—11—1971-ஆம் தேதிய 462 எண் தீர்மானத்தின்படி தற்பொழுது அமலிலுள்ள சொத்துவரியில் விளக்கு வரி 3 சதவிகிதத்திலிருந்து 3¼ சதவிகிதம் உயர்த்த 1—4—1972 முதல் கீழ்க்கண்ட வரிவிகிதத்தில் விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

	சொத்துவரி அரையாண்டிற்கு.	
	ஒரு அரையாண்டிற்கு தற்போதைய வரி விகிதம். சதவிகிதம்.	1—4—1972 முதல் ஒரு அரையாண்டிற்கு விதிக்கப் பட்டிருக்கும் வரி விகிதம். சதவிகிதம்.
1 சொத்துவரி	3½	3½
2 மலம் அகற்றும் வரி	3½	3½
3 விளக்குவரி	3	3¼
4 கல்வி வரி	2½	2½
5 நீர்அளிப்பு வரி	4	4
6 சாக்கடை வரி	1	1
	17½	17¾

இவ்வரி விகித உயர்வு உத்தேசத்திற்கு வரிசெலுத்துவோர் யாருக்கேனும் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் அதனை இந்த விளம்பரம் வெளியிட்ட 30 நாட்களுக்குள் நகரமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளலாம்.

பா. புருஷோத்தமன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்
வாணியம்பாடி.
29—1—1972.

(த. 81)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்: மதுரையில் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் தங்கும் விடுதிக்கான அரசினர் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1–3–1972 மாலை 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு,மாலை 4.00 மணிக்குத் திறக்கப்படும். 21–2–1972 முதல் 28–2–1972 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
முன்வைப்புத் தொகை—ரூ. 3,900.
முடிக்கவேண்டிய காலம்—6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பிதரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "**P.W. Remittances—IH other Remittances**" என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி ரூ. 0.75 (காசுகள் எழுபத்தைந்து மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "**XII Sales Tax (d) Miscellaneous**" என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்வைப்புத் தொகையும் கருவூலச்சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு வகையிலோ அல்லது ஷெட்யூல்டு வங்கிகளின் டிமாண்ட் டிராப்டுகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத்தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மதுரை வட்டம்,
மதுரை-2.

(த. 91)

ஏல விற்பனை

தென்காசி நகராட்சி

இந்நகராட்சியின் பராமரிப்பிலிருந்துவரும் கீழே கண்ட சொத்துக்களையும் குத்தகைகளின் லைசென்ஸையும் அனுபவிக்கும் உரிமையை இதன் அடியிற் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 29—2—1972-ஆம் தேதியன்று காலை 10-30 மணி முதல் மறுபடி ஒத்திப்போடும் தினங்களிலும் இந் நகராட்சி அலுவலகத்தில் வைத்து ஆணையாளரால் அவர்களால் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றவர்களாலோ அனைவரும் அறிய பகிரங்க ஏலம் விடப்படும்.

வரிசை எண்ணும் குத்தகை விவரமும்.	கட்டுத் தொகை.	குத்தகை கால அளவு.
	ரூ.	
1 நகராட்சி மேலப்புலியூர் வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை.	300	1—4—1972 முதல் 31—3—1973 முடிய.
2 ஆடறுப்பு மனையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை.	200	1—4—1972 முதல் 31—3—1973 முடிய.
3 நகராட்சி மட்டன் ஸ்டால்களை அனுபவிக்கும் உரிமை (ஸ்டால் ஒன்றுக்கு).	50	1—4—1972 முதல் 31—3—1974 முடிய.
4 பேருந்து நிலையத்திலுள்ள காபி ஹோட்டல் நடத்தும் உரிமை.	500	ஷை
5 பஸ் நிலையத்திலுள்ள இனிப்பு குளிர்பான ஸ்டாலை அலுவலக நிபந்தனைகளுக்குட்பட்டு அனுபவிக்கும் உரிமை.	200	ஷை
6 பஸ் நிலையத்திலுள்ள ஸ்டால்களை அனுபவிக்கும் உரிமை (ஒவ்வொன்றுக்கும்).	50	ஷை
7 நகராட்சி எல்லைக்குள் சேரக்கூடிய பன்றி சாணி உரங்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு அப்புறப் படுத்தும் பாத்தியதை.	500	ஷை
8 நகராட்சிப் பேருந்து நிலையத்தில் நிறுவப் பட்டிருக்கும் விளம்பர போர்டுகளை அனுபவிக்கும் பாத்தியதை.	50	ஷை
9 மேலப்புலியூர் வாரச்சந்தையின் முன்பக்கமுள்ள 11 கட்டடங்களை அனுபவிக்கும் பாத்தியதை (கட்டடங்கள் ஒவ்வொன்றுக்கும்).	50	ஷை

மற்ற ஏல நிபந்தனைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ம. சண்முகம், பி.ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தென்காசி,
29—1—1972.

(த. 71)

ஒப்பந்தப் புள்ளி

கிருஷ்ணகிரி நகராட்சி

கிருஷ்ணகிரி நகராட்சி கீழ்க்கண்ட வேலைகளை அலுவலக நிபந்தனைகளின்படி செய்து முடிக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—2—1972 வெள்ளிக்கிழமை மாலை 4·00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் 23—2—1972 அன்று அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 25—2—1972-ஆம் நாள் மாலை 4-30 மணிக்கு நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் அப்போது ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்கள் நகராட்சி பொறியிடம் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	மதிப்பீடு.	முன் வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1. சென்னை ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட.	8,000	400
2. பெங்களூர் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட.	8,000	400
3. நேதாஜி ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட.	8,000	400
4. மகராஜகடைத் தெருவில் தடுப்புச் சுவர் கட்ட.	8,000	400
5. காந்திஜி ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட.	8,000	400
6. சப்ஜெயில் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட.	8,000	400
7. சேலம் ரோட்டில் தடுப்புச்சுவர் கட்ட.	8,000	400
8. அலுவலகத்தின் பின்புறம் மற்றொரு அலுவலகக் கட்டடம் கட்ட.	8,000	400

துரை குருநாதன், பி.ஏ.,பி.டி.,
ஆணையர்.

(த. 83)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் நகராட்சி

1972–73 இரு அரையாண்டுகளுக்கு வாகன மிருகவரி பிரிவுக்கான எண்ணுடன் கூடிய பூச்சுள்ள வில்லைகள் விநியோகம் செய்வதற்காக முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 3—3—1972 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

தேவையான வில்லைகள் எண்ணிக்கை அளவு, நிறம் மற்றும் இதர நிபந்தனைகளை இலவசமாக விண்ணப்பத்தின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 82)

ஒப்பந்தப் புள்ளி

மன்னார்குடி நகராட்சி

கீழேகண்ட நகராட்சி வேலைகளுக்காக 28—2—1972-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, அஞ்சலிலோ கோரிப் பெறலாம்.

வேலையின் விவரம்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத்தொகை
	ரூ.	ரூ.
நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டட வேலைகள் (8 வேலைகள்).	41,300	ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டு தொகையில் 5சத விகிதம்.

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்,

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி,
3—2—1972.

(த. 80)

ஏல விற்பனை

தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட நீர் தாங்கி வண்டி எம்.எஸ்·ஒய். 0973 (ஜி.எம்.ஸி. 1951 மாடல் வண்டி) சென்னை எழும்பூர் மார்ஷல்ஸ் சாலை 17–ஏ எண்ணில் உள்ள கோட்டத் தீயணைப்பு அலுவலகத்தில் 19—2—1972 அன்று காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இவ்வண்டியை மேற்படி விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம்

எஸ். அமிர்தலிங்கம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்.

(த.ஆர். 1)

ஒப்பந்தப் புள்ளி

ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை

1—4—1972 முதல் 30—9—1972 வரையிலான 6 மாத காலத்திற்கு மருந்துகள், டிரஸ்ஸிங்குகள் கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவைகளை வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்ட படிவங்களில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் அவர் ஆணைப்படியும் அவர் உத்தரவுப்படியும் பின், அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை அவர்களால் 25—2—1972 பிற்பகல் 2மணி வரை வரவேற்கப்படுகின்றன. குறிப்பிட்ட படிவங்கள் வேண்டுவோர் அதற்குரிய கட்டணம் ரூ. 2 ஐ (ரூபாய் இரண்டு மட்டும்) XXIII Medical. K. Micellaneous Receipts என்ற கணக்கு தலைப்பிலும், மற்றும் விற்பனை வரி ரூ. 0-07ஐ (ஏழு காசு மட்டும்) XII Sales Tax Receipts General Sales Tax என்ற கணக்கு தலைப்பிலும் செலுத்திக் கோரிக்கை மனுவுடன் மேற்சொன்னபடி செலுத்தி பெற்ற இரண்டு செலான்களையும் இணைத்து அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையின் மெடிகல் ஸ்டோர்ஸ், சென்னை அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஜி. பிரபு,
டீன்,
(கண்காணிப்பாளர்), அரசினர் ஸ்டான்லி
மருத்துவமனை, சென்னை-1.

(த. 95)

அறிவிப்பு

தமிழரசு பத்திரிகை 1—2—1972 இதழில் தக்கலை கல்வி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வேலை நியமனத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டிருந்த செய்தி இந்த அறிக்கையினால் நீக்கப்பட்டிருக்கிறது என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்த அறிக்கையினால் தெரிவிக்கப்படுகிறது. இந்த அலுவலகத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திற்குரிய விண்ணப்பம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முன்னரே 1—2—1972—தமிழரசு இதழில் வெளியிட்டிருந்த அறிக்கை இதனால் நீக்கப்படுகிறது.

ஆர். சீனிவாச கோபாலன்,
மாவட்டக் கல்வி அலுவலர்,
தக்கலை.

(த. 99)

ஏல விளம்பரம்

மாதவரம் அரசாங்கப் பால் பண்ணையில் உபரியாக உள்ள கால் நடைகளை (கறவை மற்றும் கறவை மறந்த பசுக்கள்) பகிரங்கமாக ஏலத்தில் 23—2—1972 தேதியன்று (புதன்கிழமை) காலை 10-00 மணியளவில் விடப்படும். காப்புத் தொகையாக ஏலம் கேட்பவர்கள் ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) ஏலம் கேட்கும் முன்பாகக் கட்டவேண்டும். மேலும் அதிகபட்ச ஏலம் கோரி முடிந்தவுடன் கேட்கப்பட்ட தொகையில் ¼-ல் பங்கு உடன் செலுத்திவிட வேண்டும். தவறினால் குறிப்பிட்ட கால் நடைகள் மறுபடியும் ஏலத்தில் விடப்படும்.

மற்ற விதிமுறைகளுக்குக் கண்காணிப்பாளர், அரசினர் பால்பண்ணை, சென்னை-51 அவர்களை அணுகவும்.

குமார. கோமேதவேலு,
ஆணையர்.

(த. 96)

ஏல விளம்பரம்

காவல் துறை

கீழ்க்கண்ட காவல்துறை ஜீப் 25—3—1972 அன்று காலை 11 மணிக்கு வேலூர் ஆயுதப்படை அலுவலகத்தின் எதிரில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வண்டி எண்:—எம். டி. ஜே. 3405.

வகையும் தயாரிப்பும்:—வில்லீஸ் ஜீப்.

2. மேற்கண்ட வண்டியை வேலூர் ஆயுதப்படை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

3. விற்பனை நிபந்தனைகளை வேலூர் ஆயுதப்படை வாகனப் பிரிவு ஆய்வாளரிடமிருந்து தெரிந்துக் கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்,
வேலூர் (வ. ஆ.)

(த. 85)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தமிழ்நாடு பொதுப்பணித்துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர், அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9—3—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்காணும் வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

பிரிவு எண்ணும், வேலையின் பெயர் விவரமும்.	பிணைத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.	விற்பனை வரி.
	ரூ.	ரூ.	ரூ.
1. தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி தாலுக்காவிலுள்ள ஈர வாய்க்கால் வடிகாலைச் சீர்திருத்துதல்.	2,450	10	0·35

விதிமுறைகள்—

1. ஒப்பந்தப் பத்திரங்கள் 25—2—1972-ஆம் தேதியிலிருந்து தஞ்சாவூர் காவிரி வளர்ச்சிப் பணி வட்ட தனி மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் கிடைக்கும்.

2. பிணைத் தொகை திருத்துறைப்பூண்டி, திட்ட ஆய்வுக் கோட்டச் செயற் பொறியாளர் அவர்கள் கணக்கில் சேரும்படி அரசாங்கக் கருவூலத்தில் "ரெவினியூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில்" பொதுப் பணித் துறை III மற்றைய வரவினங்கள்" என்ற தலைப்பில் திருத்துறைப்பூண்டி திட்ட ஆய்வுக் கோட்ட செயற்பொறியாளர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் "XII விற்பனை வரி—பி. வரவினங்கள் மாநில விற்பனை வரிச் சட்டம்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் 7—3—72 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரது நேர் உதவியாளர் காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

அ. சேஷாத்ரி
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

(த. 87)

தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்துவிட்டது. மங்கல ஒலி எங்கும் ஒலிக்கிறது. வருகிற ஆண்
களின் ஒரு 'தை'யில் உங்களது செல்வமகளின் திருமணம் நடைபெறுப்
அதற்கென சென்ற ஆண்டுகளில் நீங்கள் சேமித்தது எவ்வளவு?

திருமணச் சேமிப்பும், பாதுகாப்பும் ஒருங்கே பெற ஆயுள் இன்சூரன்ஸி
ஒரு திட்டம் உள்ளது.

லைப் இன்ஸ்யூரன்ஸ்
கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா.

EP.LIC.17.

ஒப்பந்தப் புள்ளி

தென்காசி நகராட்சி

1972-73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட விவரப்படி அயிட்டம் வாரியாக சாமான்கள் சப்ளை செய்யத் தென்காசி நகராட்சி ஆணையர் அவர்களால் 15—2—1972-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4·00 மணி வரை மூடிமுத்திரையிட்ட கவர்களில் ஒப்பந்தங்கள் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4·30 மணிக்கு ஒப்பந்த தாரர்களின் முன்னிலையில் பகிரங்கமாய் உடைக்கப்படும். அவ்வமயம் ஒப்பந்த தாரர்களோ அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளோ நேரில் ஆஜராகலாம். டி ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளையும் மற்ற விவரங்களையும் தெரிந்துகொள்ள விரும்புவோர் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

விவரம்

அயிட்டம் எண்ணும் சப்ளை இனமும்.	கட்டுத் தொகை.
	ரூ.
1 ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளை செய்தல்	100·00
2 லைப்பாய் சோப்பு சப்ளை செய்தல்	10·00
3 வாகனுதி, பிராணிகள் வரித்தகடுகள் சப்ளை செய்தல்.	5·00
4 மாடுகளுக்கு லாடம் அடித்தல்	5·00
5 வைக்கோல் கட்டுகள் சப்ளை செய்தல்	100·00
6 மாட்டுத் தீவனம், பருத்தி விதை, கடலைப்புண்ணாக்கு, தவிடு (நெல் தவிடு), உப்பு முதலியன சப்ளை செய்தல்.	100·00
7 சுண்ணாம்புத்தூள் சப்ளை செய்தல்	5·00
8 பாரங்கள், பதிவேடுகள், நோட்டீஸ்கள் அச்சடித்தல் ..	150·00
9 பாட்டில்கள் சப்ளை செய்தல்	10·00
10 டிராக்டருக்கு ஆயில் வகையறுக்கள் சப்ளை செய்தல் ..	25·00
11 கன்ஸர்வன்சி பெரிய தண்ணீர் வண்டிகள் பழுது பார்க்க.	25·00
12 பொதுப்பணி,' தண்ணீர் விநியோகப் பிரிவிற்குத் தேவையான சாமான்கள் சப்ளை செய்தல்.	50·00
13 நகரமைப்புப் பிரிவிற்குத் தேவையான சாமான்கள் சப்ளை செய்தல்.	50·00

நகராட்சி அலுவலகம்,
தென்காசி, 20—1—1972.

சண்முகம், பி. ஏ,
ஆணையர்.

(த. 18)

ஏல விளம்பரம்

ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சி மாவட்டம் கரூர் வட்டம் தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழே குறிப்பிட்ட சந்தைகள், பரிசல் துறைகள், 1972-73-ஆம் ஆண்டிற்கு வரி வசூல் செய்யும் பாத்தியதையை 23—2—1972-ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்குத் தாந்தோணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களாலாவது அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலாவது பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் நேரிலாவது அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

சந்தைகளின் பெயர்

	கட்ட வேண்டிய கட்டுத் தொகை.
1 உப்பிடமங்கலம் கால்நடை, சில்லரை வாரச் சந்தை ..	1,000
2 வெள்ளியணை வாரச் சந்தை	300

பரிசல் துறைகள்

1 கோயம்பள்ளி பரிசல் துறை	25
2 புலியூர் பரிசல் துறை	25

வி. சி. கதிர்வேலு,
பெருந்தலைவர்,
ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி.

எஸ். நரசிம்மன்,
ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி.

(த. 7)

தேனி-அல்லிநகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்.)

1972 ஏப்ரல் முதல் 1973 மார்ச்சு முடிய ஓராண்டுக் காலத்திற்கு தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குக் கீழ்க்கண்ட இனங்கள் விநியோகம் செய்ய உரிய ஒப்பந்தம் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) சுண்ணாம்புத்தூள் விநியோகம் செய்தல்.
(2) நகராட்சி பொதுச் சுகாதார, சாக்கடை மற்றும் கக்கூஸ் வண்டிகளுக்கு மாடுகள் வாடகைக்கு விநியோகம் செய்தல்.
(3) எழுது பொருள்கள் விநியோகம் செய்தல்.
(4) வண்டி மற்றும் வாகனுதி வில்லைகள் விநியோகம் செய்தல்.

நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கா. முகமது இப்ராஹிம், பி. ஏ.,
தனி அலுவலர்.

தேனி,
17—1—1972.

(த. 33)

கோவை நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர் கோவை நகராட்சி, என்று விலாசமிட்டு அனுப்பிவைக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 28—2—72-ஆம் தேதி மாலை 3-30 மணிக்கு நகராட்சி பொதுப்பணிப் பொறியர் அவர்களால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான நிபந்தனைகள், ஷெட்யூல் பாரங்கள் மற்றும் இதர விவரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்திப் பொதுப்பணிப் பொறியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	பட்டியல் தொகை.	கட்டுத் தொகை.	ஷெட்யூல் பாரத்தின் விலை.	முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ.	ரூ.	
1 கோவை ஆர். எஸ். புரத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 4 அறைகள் கொண்ட தற்காலிகக் கட்டடம் கட்டுதல்.	35,000	875	10·35	3 மாதங்கள்
2 ஆர். எஸ். புரத்தில் உள்ள இகோடு மைதானத்தைச் சுற்றிலும் மதிற் சுவர் கட்டுதல்.	39,890	998	5·18	3 மாதங்கள்.

ஆணையர்

(த. 5)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கோடிக்கரையில் ஒரு ஆய்வாளர் மாளிகை கட்டுதல்

பார்வை—இவ்வலுவலக எண். 15083/71/வ3/8—12—1971

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 24—2—72 அன்று மாலை 3-00 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 23—2—1972 அன்று மாலை 5-00 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் எவ்வித மாறுதலும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 20)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம்,

அண்ணாசாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில் நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2, அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு, மந்தவெளி பேருந்து நிலையத்திலுள்ள இரண்டாவது நெம்பர் ஸ்டால் குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், போக்குவரத்து இல்லத்தில், நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் 21—2—1972, 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும் இந்த 2 நெம்பர் ஸ்டாலில், வியாபாரம் நடத்தப் படுவது "பலவகைப் பொருள் விற்றல்" காபி, டீ, தவிர (General Merchants) ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம் ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 21—2—1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

மானேஜிங் டைரக்டர்.

(த. 22)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—வடார்க்காடு மாவட்டம், செங்கத்தில் அரசினர் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 29—2—1972வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 29—2—1972 மாலை 3·00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 11—2—1972 முதல் 25—2—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதுமில்லை.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கற்பட்டு—வடார்க்காடு
பெருவட்டம், வேலூர்.

(த. 23)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடார்க்காடு ' மாவட்டம் வாலாஜா பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 24—2—1972வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 24—2—1972 மாலை 3 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணியளவில் அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 9—2—1972 முதல் 22—2—1972வரை. அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் எதும் இல்லை.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கற்பட்டு—வடார்க்காடு
பெருவட்டம், வேலூர்.

(த. 24)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால்) வாரியம் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை இராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசின் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர். பி.டி.ராஜன், ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 29—2—1972 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3·30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்	கோவில்பட்டி குடிநீர்த்திட்டம்—முதல்நிலை—நீர்கொணரும் குழாய்ப்போக்கு—450 மி.மீ. விட்டமுள்ள எல்.எ. பிரிவு வார்ப்பிரும்புக் குழாய்களை 29840 மீட்டரிலிருந்து 35875 மீட்டர்வரை பதித்தலும் இணைத்தலும்.
ஒப்பந்த வகை	மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை	ரூ. 2,030 (ரூபாய் இரண்டாயிரத்து முப்பது மட்டும்).

(இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கபட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு. ...	எட்டு மாதங்கள்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை ..	ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட.)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 25, வக்கில் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 25—2—1972 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை—2,
22—1—1972.

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

சென்னை மாவட்டத்தில் சர்வே எல்லைப் பிரிப்புக் கற்கள் வழங்குவதற்காக புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது பற்றிய அறிவிப்பு.

சென்னை மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலும் உள்ள டிவிசன்களிலும் கிராமங்களிலும், நில உரிமை ஆணைகளைப் பராமரிக்கவும், முறையான சர்வேக்காகவும், ஒப்பந்தத்தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள வரை அளவுகளின்படி எல்லைக் கற்களை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர், சர்வே, நில ஆவணங்கள், சென்னை–14 மற்றும் சென்னைக் கலெக்டரின் தனி உதவியாளர் (சர்வே) அவர்களாலும் ஆணைப்படி கோரப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறைகளின் மேலே "சென்னை மாவட்டத்தில் சர்வே எல்லைப் பிரிப்பு கற்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள்" என்று குறிப்பிடப்பட்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு முகவரி இடப்பட்டு, திரு. எஸ். முகம்மது மூசா, எம்.ஏ., துணை இயக்குநர், சர்வே நில ஆவணங்கள் மற்றும் சென்னைக் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (சர்வே) சென்னை–14 அவர்களிடம் தரப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 1972 மார்ச்சு 9 மாலை 4.00 மணிக்குள் வந்து சேரவேண்டும். அவை அதே நாளில் மாலை 4.00 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில், சர்வே நில ஆவணங்கள் அலுவலகம், எண். 4, பாலாஜி நகர் முதல் தெரு, ராயப்பேட்டை, சென்னை–14–ல் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) கட்டுத் தொகை அரசுக் கருவூலத்தில் கட்டி செலானை ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து அனுப்ப வேண்டும். ஏற்கப் பெறாத மற்ற ஒப்பந்தப்புள்ளிதாரரின் கட்டுத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதும் திருப்பித் தரப்படும். ஒப்பந்தப்புள்ளி ஏற்கப் பெற்றவர் தமது செலவில் ஒப்பந்தத்தை எழுதி முடிக்க வேண்டும். கட்டுத் தொகை ரூ. 500 ஒப்பந்த நிறைவேற்றத்துக்கு ஜாமீன் தொகையாக வைக்கப்படும். யாது காரணம் பற்றியோ, நிறைவேற்றித்தரத் தயங்கினாலோ அல்லது ஒப்பந்த நிபந்தனைப்படி கற்களைத் தரத் தவறினாலோ அவர்களுடைய கட்டுத் தொகை அரசாங்கம் மேற்கொண்டுவிடும். அத்துடன் அரசுக்கு ஏற்பட்ட மொத்த நட்டத்தில் எஞ்சிய பகுதி அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒவ்வொருவரும் ஒப்பந்தப்புள்ளியுடன் சொத்துப் பற்றி கிராம அதிகாரியாவது அல்லது நகராட்சி உறுப்பினர், சட்ட மன்ற உறுப்பினர் போன்ற பொறுப்பானவர்களால் தரப்பட்ட சொத்துச் சான்றிதழை இணைக்க வேண்டும். அத்துடன் வருமானவரி விற்பனை வரி கிளியரன்ஸ் சான்றிதழ்கள் வைக்கப்பட வேண்டும். அறிவிப்பில் கண்டுள்ள நிபந்தனைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யாத ஒப்பந்தப் புள்ளிகள் இல தகாதவையாகக் கருதப்பட்டுத் தள்ளப்படும்.

முந்திய கட்டுத் தொகைகளோ அல்லது வேறு பிராந்தியங்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளோ இதற்காக கணக்கில் கொள்ளப்படாது. ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக ஒரு மாதம் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு எப்போது வேண்டுமானாலும் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட சென்னைக் கலெக்டரின் தனி உதவியாளர் (சர்வே) மற்றும் உதவி இயக்குநர், சர்வே நில ஆவணங்கள், சென்னை–14 அவர்களுக்கு உரிமை உண்டு. ஒப்பந்தத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்திலிருந்து விடுபட அனுமதியிராது. ஒப்பந்தக்காரர் அதற்குப்பின் ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ள விரும்பினால் எழுத்து மூலமாக ஒரு மாத முன்னறிவிப்பிற்குப் பின்பு ஒப்பந்தத்திலிருந்து விடுபடலாம். ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியிருந்தால கட்டுத் தொகையை முழுதுமாகவோ அல்லது பகுதியாகவோ மேற்கொண்டு விடுவதற்கு அரசுக்கு உரிமை உண்டு. நில சர்வே ஆவணங்கள் உதவி இயக்குநர், சென்னை–14 மற்றும் சென்னை கலெக்டரின் தனி உதவியாளர் அவர்களுடைய முழு திருப்திக்கு ஏற்ற வண்ணம் ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றிய பின்பே கட்டுத் தொகைப் பணம் திருப்பித் தரப்படும்.

கற்கள் நல்ல கருங்கற்களாய் இருக்கவேண்டும். வட்ட தாசில்தார்களிடமிருந்து அல்லது சர்வே நில ஆவணங்கள் இன்ஸ்பெக்டர்களிடமிருந்து தேவைக் குறிப்பு வருவதை ஒட்டி ஒரு மாத காலத்திற்குள் அதில் குறிப்பிட்டுள்ள அளவு கற்களை ஒப்பந்தக்காரர்கள் வழங்க வேண்டும். ஒப்பந்தக்காரர், முதலில் வட்ட தலைமைச் சர்வேயர் ஒவ்வொரு மாதமும் 20–ம் தேதி தெரிவிக்கும் வண்ணம் போதுமான கற்களைக் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். நகரத்துணை சர்வேயர்கள் கோருகின்றபடி எல்லா கற்களிலும் அம்புக் குறியிட்டு குறிப்பிட்ட கல்வகைகளுக்கு எளிய வகையில் துளையும் இட்டு வேலை இடத்தில் கற்களை வழங்க வேண்டியது ஒப்பந்தக்காரர்கள் பொறுப்பு. சம்பந்தப்பட்ட வட்டத் தலைமைச் சர்வேயரால் கற்கள் தேர்வு செய்யப்படும். ஆய்வின்போது குறிப்பிட்ட வரையறைப்படி இல்லாத தரம் குறைந்ததுமான கற்கள் நிராகரிக்கப்படும். வேலை இடத்தில் வழங்கப்பெறும் கற்களுக்கு, ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதத்தில் பணத்தை ஒப்பந்தக்காரர் அந்த இடத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். அல்லது சம்பந்தப்பட்ட தாசில்தார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எல்லா வகை கற்களுக்குமான விலைப்புள்ளிகள் கூட்டாகப் பரிசீலிக்கப்படும், மாவட்டம் முழுவதற்குமாகத் தேவைப்படும் கற்கள்வகைகளின் மொத்த மதிப்பு, ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பதற்கான அடிப்படையாக அமையும்.

ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு முன்பணம் எதுவும் தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளியில் எந்த விலை விகிதத்தில் கற்களை வழங்கத் தயார் என்பதைக் குறிப்பிட வேண்டும். வண்டிச் செலவும் அதிலேயே அடங்கி விடவேண்டும். மாவட்டம் முழுவதற்கும் ஒரே சீரான விலை விகிதம் இருக்க வேண்டும்.

எந்தக்காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ நிராகரிக்கவோ, உதவி இயக்குனர், சர்வே, நில ஆவணங்கள் மற்றும் சென்னைக் கலெக்டரின் தனி உதவியாளர் அவர்களுக்கு உரிமை உண்டு. மாவட்டத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களை எடுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு. ஒப்பந்தம் சம்பந்தமாக கருத்து வேறுபாடு ஏற்படுமானால், ஒப்பந்தக்காரர் சென்னைக் கலெக்டரின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியவராவார்.

கற்கள் பற்றிய விவரம் :—

	கற்கள் வகை.	மெட்ரிக் முறை அளவுகள்.		
1	தியோடலைட் கற்கள்	90 செ.மீ..	22.5 செ.மீ..	22.5 செ.மீ.
2	தியோடலைட் கற்கள்	45 செ.மீ.	20.0 செ.மீ.	20.0 செ.மீ.
3	பீல்டு கற்கள் ..	60 செ.மீ.	15.0 செ.மீ.	15.0 செ.மீ.
4	செயின் சர்வே கற்கள்	30 செ.மீ.	15.0 செ.மீ.	15.0 செ.மீ.

(த.30)

எஸ். முகமது மூசா,
துணை இயக்குநர்,
சர்வே நில ஆவணங்கள்.

ஏல விற்பனை

தஞ்சாவூர் மாவட்டம், கிவளூர் ஊராட்சி ஒன்றியத்தின் பழுதடைந்த ஜீப் எம்.எஸ்.ஓய். 7786, 29–2–72 அன்று பிற்பகல் 3 மணிக்கு தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி அலுவலரால் (2) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்கண்ட ஜீப்பைப் பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(த. 15)

ஜி. சேதுராமன்,
மாவட்ட வளர்ச்சி அலுவலர் (2)
பனகல் கட்டடம், தஞ்சாவூர்.

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மதுரை டவுன் செங்குளம் உள்வாயில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1–4–1972 முதல் 31–3–1973 முடிய சைவ உணவு விடுதியை (Canteen) நடத்துவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed tenders) மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் 11–3–1972 மாலை 2 மணி முடிய ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி அடங்கியிருக்கும் உரையின் மீது "மதுரை நீதிமன்றக் கட்டடத்தில் சைவ உணவு விடுதியை 1–4–1972 முதல் 31–3–1973 முடிய நடத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று தவறாமல் குறிப்பிடவேண்டும். ஒப்பந்தங்கள் 11–3–1972 மாலை 3 மணி அளவில் மதுரை மாவட்ட நீதிபதி அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் இதர நிபந்தனைகள் முதலிய விவரங்களை மதுரை மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. கோபிநாத்,
மதுரை மாவட்ட நீதிபதி.

மதுரை மாவட்ட நீதிமன்றம்,
மதுரை–20, 11–1–1972.

(த. 16)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 23—2—1972 அன்று பிற்பகல் 3·30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்

எண்ணும் வேலையின் பெயரும்	கட்டுத் தொகை	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம்
மதுரை மாவட்டம்		
1 தனிச்சியம்—அலங்கா நல்லூர்சாலை (சிமெண்ட் தளம் போடுதல்) அபிவிருத்திவேலை கி.மீ. 3/0—6/0.	ரூ 7,000	கோட்டப் பொறியாளர், (நெ. கி. ப.) மதுரை-2.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) மதுரை-2 விலாசத்திலிருந்து 14—2—1972 முதல் 22—2—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல்நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இதல்லாமல் 10 வருட "தற்காப்பு" கட்டுத் தொகை அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு எட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ. கி. ப. திருச்சிராப்பள்ளி-1)

(த. 27)

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், நிர்வாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2, அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு, பெரம்பூர் பேருந்து நிலையத்திலுள்ள கடை நெம்பர் 3, குத்தகைக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 23—2—1972 மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அந்தக் கடையில் "துணிவகை ரகங்கள் விற்பது" வியாபாரம் நடத்தப்பட வேண்டும். ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியன, நிர்வாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 23—2—1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

மானேஜிங் டைரக்டர்

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தனி மேற்பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் அவர்களால் 24—2—1972 மாலை 4-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர் .. .. .. தஞ்சாவூரில் திட்ட விடுதி கட்டுதல்.

ஒப்பந்த வகை .. .. .. எஸ்.எஸ்

வேலைக்கான பிணைப்புத்-தொகை .. 2,200.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை .. ரூ.20.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில் பி டபிள்யூ III ஒ.ஆர். என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்

விற்பனை வரி .. .. .. ரூ 0·70

விற்பனை வரியை அரசினர் கருவூலத்தில் XII Sales Tax b. receipts Under State Sales Tax Act—General Sales Tax என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி 10—2—1972 முதல்

மற்ற விதி முறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அ. சேஷாத்திரி, பி.இ.
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்.
தஞ்சாவூர்.

(த. 29)

சிறைத் துறை

1972–73-ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1—3—1973 தேதி பிற்பகல் 3·00 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள பாரிஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிறகாப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Ack. due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல்........................க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப்புள்ளியோ அந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளி" என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 2—3—1972 முற்பகல் 10-30 மணிக்குள் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவு, இதர பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

பி. குப்புசுவாமி,
சிறைத்துறைத் தலைமைப்
பார்வையாளர்,
"குறளகம்,", 5வது மாடி,
சென்னை-1.

22—12—1971.

(த 31)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் தமிழக பொதுப் பணித்துறை, தஞ்சாவூர் மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் தஞ்சாவூரி லிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 24—2—1972 மாலை 3·00மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான "மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள்" பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்	தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், சித்தாதிக்காடு கிராமத் தருகில் அம்புலியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.
ஒப்பந்த வகை	K-2.
வைப்புத் தொகை .. .. (கருவூலச் செலான் உருவில்).	ரூ. 4,800.
ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. ..	ரூ. 20.

(அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை III மற்றைய தொகை என்னும் தலைப்பில் செயற்பொறியாளர், பட்டுக் கோட்டை அவர்களின் கணக்கின் பேரில் கட்ட வேண்டும்).

விற்பனை வரி	0·70.

(அரசினர் கருவூலங்களின் XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு—மாநில விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனைவரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.	10—2—1972.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 26)

தூத்துக்குடி நகராட்சி

இந்நகர் வி.இ. ரோட்டிலிருந்து பங்களா தெரு வரையில் உள்ள [illegible] சங்கரநாராயணர் தெரு ரோட்டிற்கு தார்ரோடு போட வேண்டிய [illegible] சாமான்கள் வழங்கும் வேலைக்கு மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 26—2—1972 அன்று மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வேலைக்கு முன் வைப்புத் தொகை ரூ. 86.

கே. என். கிருஷ்ணமூர்த்தி, பி.ஏ.,பி.இ.,
பொறியர்.

தூத்துக்குடி,
20—1—1972.

(த. 12)

மின்சார வாரியம்

அறிக்கை 9/71-72.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பைக்காரா திட்டத்திற்கு தேவையான 20 ஏடுகளையும் தாள்களையும் அச்சடித்துக் கொடுப்பதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 21—2—1972-ஆம் நாள் பிற்பகல் 4·00மணியளவில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன.

விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் பிரதிகளைப் பெற ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) வரிகள் உட்பட கட்டணத்தை நேரிலோ அல்லது பண விடைத்தாள்கள் மூலமாகவோ தலைமைக் கணக்காயர், செலவினம் பகுதி மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பைக்காரா மின்திட்டம், டாடாபாத், கோயம்புத்தூர்-12 அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் தவறிவிட நேரிட்டால் அதற்கு எக்காரணம் முன்னிட்டும் இவ்விலாகா பொறுப்பு ஆகாது.

காலம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. எவ்வித காரணமும் இல்லாமல் ஒப்பந்தப்புள்ளிகளைப் பிரித்து கொடுக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமை உண்டு

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின்திட்டம்,
டாடாபாத், கோயம்புத்தூர்-12

(த. 13)

நில நீர் இயக்குநர் அலுவலகம்

எண் 13/XVII /MI /72/

வேலையின் பெயர்—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்கு "ஹைடிரோலாஜிகல்" தளவாடங்கள் அளித்தல் (Hydrological equipments)

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேலே குறிப்பிட்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்கண்ட அலுவலகத்தில், 8—3—1972 அன்று மாலை 3 மணிக்குள், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால் மேற்கண்ட அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு அச்சமயம், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1	முன்வைப்புத் தொகை ..	ரூ. 6,500.
2	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ..	ரூ. 10.
	விற்பனை வரி	ரூ. 0·40.
3	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	4 மாதங்கள்.
4	ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்.	20—1—1972 முதல் 3—3—1972 வரை.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பி அளிக்க இயலாதது) அரசாங்க கருவூலக (Treasury) அல்லது ரிசர்வ் வங்கியில் (Reserve Bank) "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பிட்டு, நிருவாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித்தொகையானது, அதே சலானில் "XII Sales Tax b. receipts under State Sales Tax Act. General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய சலானை அளித்த பின்புதான், ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

19 எ. தண்டபாணிதெரு,
சென்னை-17

சா. பஞ்சநாதம்,
இயக்குநர், நிலநீர்.

(த. 32)

மீனவர் பயிற்சி நிலையம், குளச்சல்

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீனவர் பயிற்சி நிலையத்தில், நவீன மீன்பிடி பயிற்சிக்கான (10 மாத காலம்) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பயிற்சிக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, பயிற்சிகாலத்தில் மாதம் ரூ. 50 வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பங்கள் 1—3—1972 மாலை 5 மணிவரை மீன்துறை உதவி இயக்குநர் மீனவர் பயிற்சி நிலையம், குளச்சல் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்கள் மேற்கூறிய உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

ச. சே. ஆரோக்கியசாமி
மீன்துறை துணை இயக்குநர்,
தூத்துக்குடி.

(த. 11)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

21 வகையான புத்தகங்களையும் பாரங்களையும் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால், மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செய்தித்தாளில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ சீப் அக்கவுண்டெண்ட் எக்ஸ்பெண்டிசர்/திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிகேஷன் எண்ணைக் குறிப்பிட்டும், ஒப்பந்தப் பாரப்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. பண அஞ்சல்கள் முடிவுத்தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்பு வரைதான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சலில் தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின்வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிகேஷன் எண் ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்பவேண்டும். மேற்படி ஒப்பந்தப் பாரங்கள் பிறருக்கு மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்து கொள்ள விருப்ப முள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் பாரங்கள் 1—2—1972 லிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ள வரை குறைந்த விலை ஒப்பந்தத்தையோ அல்லது வேறு ஒப்பந்தத்தையோ அனுமதிக்கத் தான்வேண்டும் என்று கட்டுப்படுத்தாது என்பதையும் அளிக்கப்படுகிறது.

மேற்பார்வை மின்பொறியாளர்,
திருநெல்வேலி மின் திட்டம், திருநெல்வேலி.

(த. 37)

ஏல விற்பனை

நெடுஞ்சாலை கிராமப் பொறியல் பணித்துறை

எண்: 13816/71, பி-3, நாள் 24—1—1972

இவ்விலாகாவிற்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள உபயோகத்திற்கு லாயக்கற்ற உருளையை (ரோலர்) 1972-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி புதன் கிழமை பகல் 11 மணிக்குப் புதுக்கோட்டை (நெடுஞ்சாலை) போக்குவரத்து மற்றும் இயந்திர உதவிப் பொறியாளர் அவர்களால் புதுக்கோட்டை அரசினர் நெடுஞ்சாலைத் தொழிற் பட்டறையில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

2. அந்த உருளையை (ரோலர்) தொழிற் பட்டறையில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையிடலாம்.

1. பி. எஸ். எப் உருளை (ரோலர்) (எச்.டி. 21·709)

3. ஏலம் கேட்பவர்கள் வைப்புத் தொகை (டெபாசிட்) ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) உதவிப் பொறியாளரிடம் ஏலம் ஆரம்பிக்கும் முன் கட்ட வேண்டும், இத் தொகை ஏல முடிவில் திரும்பக் கொடுக்கப்படும்.

4. ஏலம் எடுத்தவர் முடிவான ஏலத்தொகையில் 25 சதவிகிதம் (இருபத்தைந்து சதவிகிதம்) ஏலம் விடப்பட்டவுடன் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையும் விற்பனை வரியும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டவுடன் உருளையைத் தன்வசம் எடுத்துக்கொள்ளும்போது செலுத்த வேண்டும்.

கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.) புதுக்கோட்டை.

மறுஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, சென்னை மாவட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23—2—1972 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலை விவரமும்.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தமும் கிடைக்குமிடம்.
	ரூ.	
1 அம்மாபாளையம் புதுப்பாளையம் சாலைக்கு கி.மீ. 0·0 முதல் 5·0 வரை கருங்கல் பரப்பித் தார் போடுதல்.	2,510	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை.
2 அம்மாபாளையம் புதுப்பாளையம் சாலைக்கு கி.மீ. 5·0 முதல் 11 வரை கருங்கல் பரப்பித் தார் போடுதல்.	2,345	டி

ஒப்பந்தங்கள் 23—2—1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25·88 செலுத்தி 10—2—1972 முதல் 22—2—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்க அலுவலகத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ் வங்கி"யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும். உறுதிப் பத்திரங்கள் அரசினரால் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் தான் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.).

சென்னை—25,
25—1—1972.

(த. 39)

ஏல விற்பனை

கோவை நகராட்சி

நகர சபையிலுள்ள துவக் கிணறுகளில் பொருத்த சுமார் 25 பம்பு செட்டுகள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 2—3—1972 மாலை 3 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 3·30 மணிக்கு அவைகள் பொறியாளர்களால் திறக்கப்படும்.

நிபந்தனைகளும் மற்ற விவரங்களும் ரூ. 2·08 நகர சபைக் கஜானாவில் செலுத்திப் பொறியர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்,

(த. 9)

ஒப்பந்தப் புள்ளி

குற்றால நகரியம்

மூடி முத்திரையிட்டு ஒட்டப்பட்ட மேலுறையுடன் கூடிய அதற்கான செட்யூல்டு ஒப்பந்தங்கள் 28-2-1972-ஆம் தேதிமாலை 4 மணிவரையிலும் நிருவாக அதிகாரியால் கீழ்க்கண்ட ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே பெற்றுக்கொள்ளப்படும். அச் செட்யூல்டு ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் அதற்கான குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகையை நகரிய கருவூலத்தில் செலுத்திய அத்தாட்சி இணைக்கப்பட்டிருக்க வேண்டும். நகரியக் குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தம் கொடுத்தவர்கள் வேலை உத்தரவு கிடைத்ததும் குறிப்பிட்ட கெடுவுக்குள் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுப்பதுடன் அந்தந்த வேலைக்கான காப்புத்தொகையையும் செலுத்தி விடவேண்டும்.

ஒப்பந்த செட்யூல்டுகள் நகரிய அலுவலகத்தில் 28—2—1972—ஆம் தேதி மாலை 2 மணி வரையிலும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ரூ. 5 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்கள் நகரிய அலுவலகத்தில் நகரியப் பொறியரிடம் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை பெயர் விவரம்.	மதிப்பீடு.	முன் வைப்புத் தொகை..
	ரூ.	ரூ.
1 தென்காசி சாலை தங்கு விடுதியின் பக்கம் ஒரு உணவு விடுதி கட்டுதல்.	24,500	540
2. லெட்சுமி புரம் கீழக்குத் தெருவுக்கு தார் ரோடு போடுதல்.	5,500	540
3 லெட்சுமிபுரம் கீழக்குத் தெருவுக்கு தடுப்புச் சுவர் கட்டும் வேலை.	6,000	150

சா. நா. பழனிச்சாமி,
திருவாக அதிகாரி.

(த.4)

ஏல விற்பனை

நாகர்கோவில் நகராட்சி

இந்த நகராட்சி பண்டகமனையில் சேமித்துள்ள உபயோகமற்ற கீழ்க்கண்ட பொருள்கள் 28—2—1972-ஆம் தேதி காலை 10 மணிக்கு, கிருஷ்ணன் கோவில், நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில், ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஏலத்தில் விடப்படும். ஏலக் கட்டுப்பாடுகளை நகராட்சி அலுவலகத்தில் நேரிலோ, மனுச் செய்தோ பெற்றுக்கொள்ளலாம்.

1. காலி சிமெண்ட் சாக்குகள்	
2. காலி தார் டிரம்கள்	17,327
3. காலி பினிச்சிங் பவுடர் டிரம்கள்	189
4. ஸ்டீல் டேங்(500 காலன் கொள்ளளவு)	56
	2

மற்றும் பித்தளை, செம்பு, இரும்பு—தண்ணீர் விநியோகமற்ற உபரி பொருள்கள்.

இதற்கு விரிவான விவரங்கள் வேண்டுபவர் நகராட்சி பொறியர் அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
நாகர்கோவில்.

பி. தங்கவேலு,
ஆணையர்.

(த.3)

ஒப்பந்தப் புள்ளி

புளியங்குடி நகராட்சி

அடியிற்கண்ட வேலைக்கான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தம் 21—2—72 -ஆம் நாள் மாலை 4—30 மணி வரை புளியங்குடி நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்றும் இது சம்பந்தமான தகவல்கள் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
1. நகராட்சி தினசரி சந்தையும் கடைகளும் கட்ட.	98,000	2,450

நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி, 28—1—1972.

கே. கே. அப்துல்கக்கூர்,
ஆணையர்.

(த.2)

ஒப்பந்தப் புள்ளி

விருத்தாசலம் நகராட்சி

1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள கால அளவிற்கு விருத்தாசலம் நகராட்சிக்குத் தேவையான கீழ்க்காணும் பொருள்களை சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி தனி அதிகாரிகள் அவர்களால் 6—3—1972—ஆம் நாள் திங்கட் கிழமை மாலை 4 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்படும். இது சம்பந்தமான முழு விவரங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வழங்க வேண்டிய பொருள்கள்	செலுத்த வேண்டிய கட்டுத் தொகை.
(1)	(2)
	ரூ.
1. ஸ்டேஷனரி பொருள்கள்	200 00
2. மாட்டுத்தீவனங்கள்	275 00
3. சுண்ணாம்பு நீர்	25 00
4. மின்சார சாமான்கள்	25 00
5. குடி நீர் சப்ளை சாமான்கள்	100 00
6. அச்சு பையிண்டிங் வேலைகள்	25 00
7. வாகனவரி வில்லைகள்	20 00
8. பெட்ரோமாக்ஸ் விளக்குகள் (200 பவர் காண்டில்கள் எரியவிட.	50 00
9. பொதுச் சுகாதாரத்திற்கு தேவையான சாமான்கள்.	70 00

நகராட்சி அலுவலகம்,
29—1—1972.

வி. கணேசன்,
தனி அதிகாரி

(த:1)

ஏல விற்பனை

வனத்துறை

21—2—1972-ஆம் தேதி காலை 10·00 மணியிலிருந்து மேட்டுப்பாளையம் அரசினர் மரக்கிடங்கில், மத்திய கோவை மாவட்ட வன அலுவலரோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரானோ கீழ்க்காணும் தடி மரத்துண்டுகள் பொது ஏலத்தில் விடப்படும்.

1. தேக்கு : 532—266·716 கன மீட்டர்.
2. ஈட்டி : 206—105·351 கன மீட்டர்.
3. கருமருது : 12—12·105 கன மீட்டர்.
4. வேங்கை : 26—12·561 கன மீட்டர்.
5. அயினி : 7—9·303. கன மீட்டர்.
6. அல்பிசு : 32—12·066 கன மீட்டர்.
7. நீர்க் கடம்பை : 4—1·715 கன மீட்டர்.

மற்ற விவரங்களுக்கு, மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை; கோவை-18 அல்லது வனச்சரக அலுவலர், அரசினர் மரக்கிடங்கு மேட்டுப்பாளையத்திற்கோ, தொடர்பு கொள்ளவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர்,
மத்திய கோவை.

(த. 35)

ஏல விற்பனை

மதுரை கலெக்டர் அலுவலகம், கள்ளர் சீரமைப்புப் பிரிவைச் சேர்ந்த எம்.டி.யு. 6868, 15-63-எச்.பி. 1958 மாடல் ஜீப் 23-7-1972 தேதி மாலை 3 மணிக்கு மதுரை கலெக்டர் அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் கேட்பவர்கள் மேற்கொண்டு தகவல்களைப் பெறுவதற்கு மதுரை கள்ளர் சீரமைப்புத் தனித்துணைக் கலெக்டரிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. மகாலிங்கம்,
தனித்துணைக் கலெக்டர்,
கள்ளர் சீரமைப்பு,

மதுரை-20.
28-1-1972
(த. 83)

ஒப்பந்தப் புள்ளி

பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர் :—அரசினர் பொது மருத்துவ மனையில் உள்ள இருதயநோய் சிகிச்சைப் பகுதியில் ஏழாவது தளத்தின் முன் பகுதியில் அறுவைச் சிகிச்சை அரங்கு அமைத்தல்.

தமிழக அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வை பொறியாளர், சென்னை, செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் 23—2—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். 23—2—1972 மாலை 3-15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை, செங்கை வட்டம், அவர்களால் ஒப்பந்தப் பத்திரங்கள் திறக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
2. முன் வைப்புத் தொகை—ரூ. 4,000.
3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 20 + விற்பனை வரி 3½ சதவீதம்.
4. முடிக்க வேண்டிய காலம்—3 மாதங்கள்.
5. ஒப்பந்தப் பத்திரங்கள் (மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், சென்னை, செங்கை வட்டம்) கிடைக்கும் காலம் 15—2—1972 முதல் [illegible]—2—1972 வரை.
6. ஒப்பந்தப் பத்திரங்களை பெறப்படும் கடைசி நாள்—23—2—1972 மாலை 3-00 மணி வரை

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை "P.W.D. Remittances III—Other Remittances" என்ற தலைப்பில் கோட்டப் பொறியாளர் கட்டடக் கோட்டம்-2, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலங்களிலோ(அ) ரிசர்வ் வங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப் பத்திரங்களுக்குரிய விற்பனை வரி மேற்கண்ட சலானில் XII Sales Tax under the State Sales Tax Act-Genl. Sales Tax என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலங்களிலோ, ரிசர்வ் வங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்கண்ட சலானைக் கொடுத்த பின்னர் வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ஒரு போதும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர் சென்னை, செங்கை வட்டம் அவர்கள் ஒப்பந்தப் பத்திரங்களை எவ்விதக் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கற்பட்டு வட்டம்.

(த. [illegible])

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புளியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னைவட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23-2-1972 அன்று மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் விவரமும்.	முன் வைப்புத் தொகை.
	ரூ.
1. திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலையில் கி.மீ. 0·5 முதல் 1·5 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல்.	5,900
2. திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலையில் கி.மீ 1·6 முதல் 2·6 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல்.	4,470
3. திருவொற்றியூர்—பொன்னேரி—பஞ்சட்டி சாலையில் கி.மீ. 4·0 முதல் 6·4 வரையில் தார் சாலையை அகலப் படுத்துதல்.	2,100

ஒப்பந்தங்கள் 23-2-1972 அன்றே மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர், சைதைஅவர்கள்அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 25.88 கட்டி 16-2-1972 முதல் 22-2-1972வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளமுன்வைப்புத்தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), சைதை அதிகார எல்லைக் குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ""ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சைதை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

மேற்பார்வைப்பொறியாளர்,
(நெடுஞ்சாலை) சென்னை வட்டம்,

சென்னை-25, 31-1-1972.
(த.100)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசிய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை வட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை, அவர்கள் நெ. 11, ஒளவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 23—2—1972ம் தேதி (புதன் கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணிவரையில் (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

எண்ணும் வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் கிடைக்கும் விலாசம்.
	ரூ.	
1. மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ் சாலை 7 கி.மி. 157–170 சாலையை அகலப் படுத்திப் பலப்படுத்துதல்.	28,900	கோட்டப் பொறியாளர் (தேசியநெடு நெடுஞ்சாலை), மதுரை—2.
2. சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ் சாலை 7 கி.மீ. 278-6–345·2 சாலையில் உள்ள வளைவுகளைச்சீராக்குதல்.	44,650	கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை திருச்சி கோட்டம் திருச்சி-2.
3. சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ் சாலை 7 கி.மி. 355–375 சாலையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல்.	48,000	ஷை

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20-70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம், (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2, கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சிக் கோட்டம், திருச்சி-2 என்ற விலாசத்திலிருந்து 11—2—1972 முதல் 23—2—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருடத்தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு சட்டப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை)
மதுரை—2.

(த.101)

வருவாய்த் துறை

கோவை சந்திப்பு ரயில் நிலையம், வடகோவை ரயில் நிலையம் இவைகளில் அரசுக் கணக்கில் வரும் நெல், அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் சர்க்கரை மைலோ மற்றும் இதர தானியங்களை வடகோவையில் உள்ள அரசாங்கக் கிடங்கிற்கு கொண்டு செல்லுதல். மற்றும் அவைகளைக் கையாளுதல் முதலான வேலைகளை மேற்கொள்ள 1—4—1972 முதல் 31—3—1973-ஆம் தேதியுடன் முடிவாகும். 1972-73-ஆம் ஆண்டிற்கான முத்திரையிட்ட ஒப்பத்தப் புள்ளிகளை அடியிற் கையொப்பமிட்டவரால் கோரப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்களை 6—3—1972-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குள் மாவட்ட ரெவின்யூ அதிகாரி அலுவலகத்தில் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். மற்ற தகவல்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 6—3—1972-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களால் திறக்கப்படும்.

மாவட்ட ரெவின்யூ அதிகாரி,
கோவை.

(த. 84)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை, காவிரி வளர்ச்சிப்பணி வட்டம் தஞ்சாவூர்

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தமிழ்நாடு பொதுப்பணித் துறை, காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 2-3-1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க் கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

பிரிவு எண்ணும், வேலையின் பெயர் விவரம்.	பிணைப்புத் தொகை.	பத்திரங்களின் விலை.	விற்பனை வரி.
	ரூ	ரூ	ரூ
எ. 60 கந்தப்பரிச்சனூர் வாய்க்காலையும் இதன் கிளை வாய்க்காலையும் அபிவிருத்தி செய்தல் :—			
1. பி. 1. எல்லைக் கரை வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களையும் சீர்திருத்தம் செய்தல்.	1,150	10	0·35
2. பி. 2. சித்த மல்லி வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களான சி2, [illegible] வாய்க்கால்களைச் சீர்திருத்தம் செய்தல்.	1,350	10	0·35
3. பி. 3. பலவாறு வாய்க்காலையும் இதன் கிளை வாய்க்கால்களான சி1, [illegible], சி4, சி4ன் டி3, டி8, சி6, சி9 மற்றும் சி10 ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்.	2,650	10	0·35
4. பி 12. நமன்குறிச்சி வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களான சி1, [illegible], சி6, சி2ன் டி5 ஆகியவற்றைச் சீர்திருத்தம் செய்தல்.	1,350	10	0·35
5. [illegible] கையனூர் வாய்க்கால் இதன் கிளை வாய்க்கால்களான சி1,சி2,சி4 ஆகியவற்றைச் சீர்திருத்தம் செய்தல்.	1,020	10	0·35
6. எ. 60. கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 0·100 கிலோ மீட்டர் முதல் 3·060 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலை மதகுகள், வடிகால் மதகுகள், குழாய் மதகுகள் அமைத்தல்.	1,650	10	0·35
7. எ. 60. கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 3·060 கிலோ மீட்டர் முதல் 8·130 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலை மதகுகள், வடிகால் மதகுகள், குழாய் மதகுகள் அமைத்தல்.	1,100	10	0·35
8. எ. 60 கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 8·130 கிலோ மீட்டர் முதல் 10·400 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலை மதகுகள், வடிகால் குழாய் மதகுகள் அமைத்தல் .	800	10	0·35
9. எ. 60. கந்தப்பரிச்சனூர் மெயின் வாய்க்காலில் 10·400 கிலோ மீட்டர் முதல் 13·220 கிலோ மீட்டர் வரை சீர்திருத்தம் செய்தல், ரெகுலேட்டர் கட்டுதல், தலைமதகுகள், வடிகால் மதகுகள், குழாய் மதகுகள் அமைத்தல்.	1,000	10	0·35

விதிகள் :

1. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்—5-2-1972.

2. பிணைப்புப் பணம் (E.M..D) செயற்பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்ட வேண்டும்

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் பொதுப்பணித் துறை செலுத்துத் தொகைIII. மற்ற வரவினங்கள் என்னும் தலைப்பில் செயற் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம். தஞ்சாவூர் என்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் XII விற்பனை வரி, பி. வரவினங்கள் மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்த வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைப்பதற்கான விண்ணப்பம் 29-2-1972-ஆம் தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின்நேர்முக உதவியாளர், காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அ. சேஷாத்ரி,
தனி மேற்பார்வைப்பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

(த·98)

ஏல விளம்பரம்

சேலம் நகராட்சி

1972-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 25-ஆம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11 மணிக்கு சேலம் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட கடைகளையும் பேருந்து நிலைய போஸ் மைதான சில்லரைக் கடைகளின் தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமையையும் அதனதனுக்கு எதிரே குறிப்பிட்டுள்ளகாலத்திற்கு குத்தகைக்கு வைத்துக் கொள்ள நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பலரறிய ஏலம் விடப்படும்.

	குத்தகைக் காலம்.
1. (1) பேருந்து நிலைய வடபுறம், மேற்குப் புறம் எல்லைச் சுவற்றின் பின்புறம் கட்டப்பட்டுள்ள சிமெண்டு அட்டைக் கூரைக்கடைகள் 51. (2) பேருந்து நிலைய எஸ்ஸோ பங்கிற்கும், வடபுறம் வேலியைச் சேர்ந்தாற் போல் 10 திறந்த வெளிக்கடைகள். (3) நகரப் பேருந்து நிலையத்தின் பயணிகள் நிற்கும் மனையின் கீழ்ப்புறமுள்ள திறந்த வெளிக்கடைகள் 4 ஆகியவற்றில் கடைகள் வைத்து வியாபாரம் செய்பவர்களிடமிருந்து தினசரிக் கட்டணம் வசூலிக்கும் உரிமை.	ஒப்படைக்கப்படும் நாள் முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு.
2. சேலம் போஸ் மைதானத்தில் உள்புறம் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 21 கடைகளையும் (முன்புறம் 8 அடி வராந்தாவுடன் சேர்த்து) போஸ் மைதானத்தில் ஆங்காங்கே உள்ள தற்காலிக சிறு கடைகளையும், தள்ளு வண்டிகள், பேருந்துகள், வேன், வாடகை கார் ஆகியவற்றை நிறுத்துபவர்களிடமும் தினசரிக் கட்டணம் வசூலிக்கும் உரிமை.	ஒப்படைக்கப்படும் நாள் முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு.
3. கிருஷ்ண ராஜேந்திரா தங்கல் மனையின் கீழ்ப்புறமுள்ள 5 (1, 2, 4, 5, 6) கடைகள்.	1-4-1972 முதல் 31-3-1975 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு.

இதர விவரங்களுக்கு ஆணையரை அணுகவும்.

பெ. அரங்கசாமி,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம், சேலம்,
4-2-1972.

(த. 77)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2

வர்ண மய உலகம். அதுவே
கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்.
பட்டுகள். பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும்.
குர்தாக்கள், பெல் பாட்டம்
கள், லுங்கிகள், சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும்
சிருஷ்டிகள். கோ-ஆப்டெக்ஸ்
படைப்புகள்.

காலப் போக்குக்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், சென்னை-8.

Criterion CO 2575TM

பதிவு எண். M. 8676

தமிழரசு

தமிழ்நாடு அரசு வெளியிடும் பாதுகாப்பு நிதிச் சிறப்புப் பரிசுச் சீட்டுகள் வாங்குவீர்!

டிக்கட்டுகளின் விலை ரூ. 100, ரூ. 10, ரூ. 5 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பரிசுகளின் விபரம் (ஒவ்வொரு வரிசைக்கும்)

ஒரு முதல் பரிசு	ரூ. 3 லட்சம்
ஒரு இரண்டாவது பரிசு	ரூ. 2 லட்சம்
ஆறு மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000 வீதம்	ரூ. 3 லட்சம்
	ரூ. 8 லட்சம்

குலுக்கல் நாள்: 15-3-1972

வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2



தமிழ்நாடு அரசு
வெளியிடும்
பாதுகாப்பு நிதிச்
சிறப்புப் பரிசுச் சீட்டுகள்
வாங்குவீர்!

டிக்கட்டுகளின் விலை ரூ. 100, ரூ. 10, ரூ. 5 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பரிசுகளின் விபரம் (ஒவ்வொரு வரிசைக்கும்)

ஒரு முதல் பரிசு	ரூ. 3 லட்சம்
ஒரு இரண்டாவது பரிசு	ரூ. 2 லட்சம்
ஆறு மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000 வீதம்	ரூ. 3 லட்சம்
	ரூ. 8 லட்சம்

குலுக்கல் நாள்:

வெளியீடு: இயக்குநர், செய்தி,மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2





தமிழக அரசு, நாட்டில் உள்ள சாதாரண மக்களிடம் மிக நெருங்கிய, நிரந்தரமான தொடர்பை நிலையாக ஏற்படுத்தியுள்ளது. மக்களின் தேவைகளையும், அவர்களின் விருப்பங்களையும் தக்கவகையில் கவனித்து நிறைவேற்றியுள்ளது.

மனுநீதித் திட்டம்

மனுநீதித் திட்டத்தின் மூலம், தமிழ் நாட்டில் உள்ள தனிப்பட்ட ஒவ்வொருவரும் அரசாங்கத்துடன் நேரடியாகப் பேசும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் பிரச்சினைகளையும், குறைகளையும் அரசாங்கத்திடம் நேரடியாகச் சொல்லவும், அவற்றிற்குத் தக்க நிவாரணம் காணவும் வாய்ப்பு உள்ளது. இது மிகவும் புரட்சிகரமான திட்டம் என்றும், இந்தியாவின் மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டியதொரு திட்டம் என்றும் பாராட்டப் பெற்றுள்ளது.

கல்லூரிப் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி விரிவு படுத்தப்பட்டுள்ளது. இது ஏழைகளும் தங்கள் குழந்தைகளைக் கல்லூரியில் பயில வைக்கும் வாய்ப்பை உண்டாக்கிட உதவியுள்ளது.

பட்டா விநியோகம்

ஏழை விவசாயிகளுக்கு நிலமும், வீட்டு மனையும், நியாயமான முறையிலும் நேர்மையான முறையிலும் விநியோகமாகும் முறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டம், மிக முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளில் ஒன்றாகும். முந்திய அரசு, தனது இருபதாண்டு ஆட்சிக் காலத்தில் ஒரு இலட்சம் ஹெக்டேர் நிலத்தைத்தான் அளித்துள்ளது. இந்த அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டு இலட்சம் ஹெக்டேர் நிலத்தை ஏழை மக்களுக்கு வழங்கியுள்ளது.

சேரிவாழ் மக்கட்குச் சிறப்பான வீடுகள்

குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக, சேரிவாழ் மக்களுக்கு நல்ல வீடுகள்—தரமான வீடுகள் கிடைக்கும் வகையில், தமிழக அரசு திட்டம் வகுத்து நிறைவேற்றி வருகிறது. இத்திட்டம் ரூ. 40 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏழாண்டுக் காலத்தில் நிறைவெய்தவிருக்கும் இத்திட்டம் தமிழக அரசின் அரிய சாதனையாகும்.

மின் வசதி

1972-ஆம் ஆண்டுக்குள் இருபதாயிரம் அரிசனக் குடியிருப்புகள் உட்படத் தமிழகத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்கக் கிராமப்புற மின்சாரத் திட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் வசதி

இது போல, எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி அளிக்கும் திட்டமும் விரைந்து செயல்பட்டு வருகிறது.

நிலத்திற்கு உச்சவரம்பு

நில உச்சவரம்பு 12 ஹெக்டேரிலிருந்து 6 ஹெக்டேர் ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

நில உச்ச வரம்புச் சட்டத்தின் சந்து பொந்துகளின் மூலம் பணக்கார நிலக்கிழார்கள் தப்பித்துக் கொள்ளாத வகையில் சட்டத்தின் சந்து பொந்துகள் அடைக்கப்பட்டுள்ளன.

மேய்ச்சல் நிலம், கரும்புச் சாகுபடி நிலம் ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குத் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

எல்லார்க்கும் வீடு

ஏழை அரிசன விவசாயத் தொழிலாளர்கள் வாழ்ந்துவந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேருந்துகள்-நாட்டுடைமை

ஐம்பது பேருந்துகளும் அதற்கு மேற்பட்டும் வைத்திருந்த பேருந்து உரிமையாளர்களின் நிறுவனங்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. பத்தும், அதற்கு மேலும்பேருந்து உரிமங்கள் வைத்திருந்த பேருந்து உரிமையாளர்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு அளிப்புத் திட்டம் வகுத்து, அடுத்த ஐந்தாண்டுகளில் பிச்சைக்காரர்கள் அனைவருக்கும் மறுவாழ்வளிக்கும் பணியினை நிறைவேற்ற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு உடனடி நடவடிக்கையாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அனைவரையும், ஆறு அல்லது எட்டு மறுவாழ்வளிப்பு இல்லங்களில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிலவரி விலக்கு

ஐந்து ஏக்கர் வரையுள்ள நஞ்சை நிலங்களுக்கு நிலவரியினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

பிற்பட்டோர் நல்வாழ்வு

பிற்பட்ட வகுப்பினர்களின் நலன்களைக் காக்கத் தனி அமைச்சரகம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி நடவடிக்கை வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. பிற்பட்ட வகுப்பினர் நிலைபற்றி ஆய்வு செய்யக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு, பிற்பட்டோர் நிலை பற்றி விரிந்து பரந்த அளவில் ஆய்வு நடத்தி அறிக்கை தந்துள்ளது. இதன் பரிந்துரைகள் பல்வேறு கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன

வேலைவாய்ப்பு

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டு, ஆசிரியர்களுக்கான அலுவல்கள் ஏறத்தாழ ஆறாயிரம் உருவாக்கப்பட்டன ; இரண்டாயிரம் பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பெறும் வகையில் இளைஞர் அணி நிறுவப்பட்டது; 2,400 பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் முதல்தரக் காவல்துறை ஊழியர்களுக்கான பணிகள் அளிக்கப்பட்டன.

இலட்சியப் பயணம்

இத்தகு பல்வேறு துறைகளிலும் தமிழக அரசு, தக்க முறையில் திட்டமிட்டுப் பணியாற்றி மக்களின் தொடர்பினையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு, ஏழை எளிய மக்களின் நல்வாழ்வில் தீவிர அக்கறை கொண்டு, செயல்பட்டு வருகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்ற இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறது.

[தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அரசின் ஐந்தாண்டுச் சாதனைகள் பற்றி, யு.என்.ஐ-க்கு அளித்த சிறப்பு பேட்டியில் கூறியுள்ள கருத்துக்கள் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.]

“அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சாமான்யர்களுடைய அரசு—சாமான்ய மக்களுடைய வாழ்வில் ஒளி பாய்ச்சிட வேண்டுமென்கிற சீரிய நோக்கோடு, சென்னை மாநகரில் வெள்ளம் வந்தால் விபத்துக்கு ஆளாகி—தீவிபத்தால் தாங்க முடியாத வேதனைக்கு ஆளாகி—இக்கட்டில் தவித்துக் கொண்டிருந்த எளிய குடிசைவாழ் மக்களுக்கு விமோசனமே கிடையாதா என்றெழுந்த கேள்விக்குறிக்குக் கிடைத்த பதில்தான், நம் கண்ணெதிரே நிற்கின்ற அருமையான மாடிக் கட்டடங்கள்.” என்று நொச்சி நகர்க் குடியிருப்புகளைத் திறந்து வைத்து, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

மயிலைத் தொகுதியில் அனைத்திந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள நொச்சி நகர், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் வாழும் பெரும் பகுதியாகும். கடலோரத்தில், முன்பு குடிசை மயமாகக் காட்சியளித்த அந்தப் பகுதி இன்று அழகான மாடி வீடுகளாகக் காட்சி அளிக்கின்றது.

பிப்ரவரி பதினேழாம் நாள்!

நொச்சிநகர், விழாக்கோலம் பூண்டிருந்தது. அலையெனத் திரண்ட மக்கள் கூட்டத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது. ஆடவர், பெண்டிர் சிறுவர், சிறுமியர் அனைவரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். ஓலைக் குடிசையில், மண் தரையில் அசுத்தங்களை அணைத்துக்கொண்டு காலந் தள்ளிய ஏழைமக்கள், இன்று கல் வீட்டிலே, கவின்மிகு வீட்டிலே வீற்றிருக்கும் கண்கொள்ளாக் காட்சியைப் பார்க்கிறோம். அவர்கள் முன்புபோல் குழந்தை குட்டிகளோடு மண்ணிலே புரள வேண்டியதில்லை. தண்ணீருக்குக் குடமேந்திக் கால்கடுக்க நிற்க வேண்டியதில்லை; விளக்கில்லாமல் இருளிலே மூழ்கிக் கிடக்க வேண்டியதில்லை; தீப்பிடிக்குமோ, மழை வெள்ளம் பாதிக்குமோ என்று அஞ்சத் தேவையில்லை! எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அலைகடல் ஓரத்திலே அடுக்குமாடி வீடுகள் அழகாய்க் காட்சியளிக்கின்றன.

நகரத்திலே நரக வாழ்வு வாழ்ந்த அவர்கள் முகத்திலே இப்போது புதுத் தெம்பு அரும்பியிருக்கிறது. வேலைக்குச் சென்றவன், புயலிலோ மழையிலோ குடிசை என்ன ஆயிற்றோ என்று ஏங்கத் தேவையில்லை. இனி நிம்மதியாக அவன் வீடு திரும்புவான். ஆம், அவன் வாழ்க்கையில் புது அத்தியாயம் தொடங்கிவிட்டதை எண்ணியெண்ணிப் பூரிக்கிறான்.

இந்தப் பூரிப்புக்கும், புளகாங்கிதத்துக்கும் முழுமுதற் காரணமாக உள்ளவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினரும், அதற்கு ஆதரவாக இருந்துவரும் தமிழக அரசினருமே யல்லவா ?

நொச்சிநகர் : *16—12—1970* அன்று இரவு தீ அரக்கனால் நாசமானது. குடிசை வாரியம் உருவாக்கப்பட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் இத்தீங்கு நேர்ந்தது. சொல்லொணா வேதனையில் மக்கள் மூழ்கித் தவித்தனர். அவர்களது மனக் கவலைக்கு மருந்தூட்டும் வகையில், இதனைச் சீரமைக்கும் முயற்சியில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டது.

அன்றிருந்த குடிசைகள் . . . .



......இன்று பல அடுக்கு மாடிகள்

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாவட்ட ஆட்சியாளர் மூலம் ரூ. 50 உதவியும், தற்காலிகக் குடிசை போட்டுக் கொள்ள அனுமதியும் தந்தது தமிழக அரசு. ஆனால், மீண்டும் அந்த இடத்தில் தீ விபத்து நடக்கவே, அவர்களுக்குத் தகரத்தாலும், கல்நாராலும் வேயப்பட்டு வீடுகளைக் கட்டிக் கொடுத்தது அரசு. பிறகு இந்த விபத்துக்களுக்கு எல்லாம் ஒரு முடிவு கட்டும் வகையில் புதியதோர் திட்டம் உருவானது. நாடும் ஏடும் போற்றிப் புகழும் புரட்சித் திட்டம் அது. அதன் விளைவு 22—12—1970-ல் மாடிக் குடியிருப்புகளுக்கான அடிக்கல்லை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டினார்கள்.

குடிசை மாற்றுவாரியத்தின் பெருமுயற்சியின் காரணமாகப் பன்னிரண்டு திங்களில் 200 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றன. இன்று இந்தக் குடியிருப்புகள் நல்ல காற்றோட்டமான சூழ்நிலையில் கடலோரத்தில் அழகாகக் காட்சியளிக்கின்றன. ஒரு குடும்பம் வசதியாக வாழப் போதுமான வகையில் குடியிருப்பு அமைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள வசதிகள்தான் என்ன? தனித்தனி ‘மீட்டர்’; நான்கு மின் விளக்குகள்; ஒரு பொது அறை; சமையல் அறை; சாமான்கள் வைக்க வசதிகள்; குளிக்கத் தனி அறை; கழிவறை இப்படி எல்லா வசதிகளும் உள்ள ஒரு குடியிருப்பின் மதிப்பு என்ன தெரியுமா? ரூ. 8,000. இந்தச் செலவுப்படி, வாடகை ரூ. 55 வசூலித்தாக வேண்டும். சென்னை மாநகரில் வீட்டுக்கு அலைவோர் இந்த வசதிக்கு ரூ. 80 கூட நிச்சயம் தருவார்கள். ஆனால், ஏழை எளியவர்களால் இவ்வளவு வாடகை தரச் சக்தி ஏது? எனவே, இவ்வளவு வசதிகளும் உடைய இந்த வீட்டிற்கு மாதம் ரூ. 15 வாடகை கொடுத்தால் போதும் என்று அரசு அறிவித்துள்ளது. இதனைக் கேட்டு இதயம் பூரிக்கிறது இந்த நொச்சிநகர்ப்பகுதி!

அலங்கோலமான தெருக்களையும், ஆங்கே சிதறிக் கிடக்கும் குப்பை. கூளங்களையும் முன்புபோல இப்போது காணமுடியாது. தெருக்களெல்லாம் சுத்தமாக—அழகாக—ஒளி விளக்குடன் காட்சியளிக்கின்றன. நிழல் தரும் மரங்களை நடுவதற்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன. மூன்றாவது மாடியிலிருப்பவர்கூடத் தண்ணீருக்காகக் கீழே இறங்கி வரவேண்டியதில்லை. ஒவ்வொரு குடியிருப்பிலேயும் தனித்தனிக் குழாய் இருக்கிறது. குடி நீருக்காக இப்பகுதியில மூன்று கிணறுகளும், நீரேற்றுப் பெரும் தொட்டிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் வெளியாகும் கழிவு நீரைப் போக்கக் குழாய்களும் பொருத்தப்பட்டுள்ளன.

முன்பு இப்பகுதியில் ஒரு மாதா கோவிலும், அம்மன் ஆலயம் ஒன்றும் இருந்தது. அவர்கள் விருப்பம் போல, அவற்றையும் அரசு புதுப்பித்து அழகாகக் கட்டிக் கொடுத்துள்ளது. மக்கள் கூடிப் பேசச் சிமெண்டால் தளமும் போடப்பட்டிருக்கிறது.

இத்துணை வசதிகளும் வாய்ப்புகளும் பெற்ற இந்த ஏழை எளியவர்களை நல்வாழ்வுப் படுத்த வேண்டாமா ? அதற்கொரு பேரவை இங்கே தொடங்கப் பெற்றிருக்கிறது. நாள்தோறும் தமிழ்நாடு அரசின் செய்தித் துறை காட்டும் படக்காட்சியைக் கண்டு, மக்கள் பெரிதும் மகிழ்கின்றனர். வீடுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வது—குழந்தைகளை வளர்ப்பது—தாய்மார்கள் ஓய்வு நேரத்தில் ஏதாவதொரு தொழிலைக் கற்றுக்

கொள்ளுதல் போன்ற பலவற்றைக் கற்பிக்க நியூபிகின் என்னும் பாதிரியார் அவர்கள் முன்வந்துள்ளார். இவர் இங்குப் 'புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை' ஒன்றைத் தொடங்கி இதில் படித்தவர்களை நியமித்து இம்மக்களுக்கு நல்வழி காட்ட ஏற்பாடு செய்துள்ளார். இதற்காகும் செலவுகளை இந்தப் பேரவையே ஏற்றுக் கொள்கிறது.

மக்களின் அன்றாடக் குறைகளைக் கேட்டு ஆவன செய்ய ஒரு அலுவலகமும் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றாடம் நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்ளவும், புதிய கருத்துக்களை அறிந்து கொள்ளவும், அறிவு வளர்ச்சி பெறவும் ஒரு நூலகமும் திறக்கப்பட்டுள்ளது ; நாளிதழ்கள், கிழமை இதழ்கள் உட்பட 2,000 நூல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர ஒரு சமூகக் கூடம், இலவச மருந்தகம், பூங்கா ஆகியவையும் விரைவில் உருவாக இருக்கின்றன.

இப்படி ஏழை எளியவர் ஏற்றங்காணும் வகையில் இக் குடியிருப்புகள் அமைந்திருப்பதை இப்பகுதி மக்கள் பாராட்டுவதில் என்ன வியப்பு?

கடைநிலை ஊழியர் 29 வயதுள்ள திரு எஸ். கிருபாநிதி கூறுகிறார் :

'' நாங்கள் மொத்தம் ஐந்து பேர். இப்போது குடியிருக்கும் இதே இடத்தில்தான் எங்கள் குடிசை இருந்தது. நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த மண் குடிசையில்தான்: குடிசையில் இருந்தபோது, அடிக்கடி தீப்பயம் இருந்தது. மழை, காற்று வந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லை. ஓட்டைக் குடிசையில் எல்லோரும் நனைந்து குளிரால் வேதனைப் பட்டுவந்தோம். இந்தக் குறைகளெல்லாம் இல்லாமல், இனி நிம்மதியாக நாங்கள் வாழத் தமிழ்நாடு அரசு செய்த இந்த உதவியை நாங்கள் என்றைக்கும் மறக்க மாட்டோம்.

* * *

திரு எம். முனுசாமி என்னும் பெரியவர் சொல்கிறார்.

''எங்கள் பூர்வீகமே இந்த நொச்சி நகரம்தான். முன்பு நகரசபையிலே வேலை செய்து வந்தேன். இப்போது கூலி வேலை செய்து பிழைக்கிறேன். குடிசையிலே இருந்தப்ப நாங்க பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. சுருங்கச் சொன்னா குழந்தை குட்டிகளோட குப்பையிலே வாழ்ந்தோம். ஆனா, இப்போ நல்ல கல் வீடு கிடைச்சிருக்கு. இந்த மாதிரி வீடு கிடைக்கும்னு நாங்க கனவிலே கூட நெனைக்கலே. . . . ''

* * *

30 வயதுள்ள திருமதி லில்லி

''நாங்கள் பல [illegible] டுகளாக இந்தப் பகுதியில் [illegible] து வருகிறோம். எனக்கு [illegible] டுக் குழந்தைகள். குடிசையிலே இருந்தப்போ நான் ஒருத்தி இந்தக் குழந்தைகளை வைத்துக்கொண்டு ரொம்பக் கஷ்டப்பட்டேன். காரணம் என் கணவர் கேரளாவில் இராணுவத்தில் இருக்கிறார்.

இப்போ இந்த வீடு கிடைச்சது பற்றி எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷமா இருக்குது. என் கணவருக்குக்கூட இதுபற்றிக் கடிதம் எழுதியிருக்கேன். இப்போ எங்களுக்கு இது நல்ல வசதியா இருக்கிறது. தண்ணிக்கு முன்போலக் குழாயடியில் சண்டைபோட வேண்டியதில்லை. நல்ல விளக்கு வெளிச்சமும் இருக்கிறது. . . . '' என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறார்.

* * *



''அசுத்தங்கள் நிறைந்த குடிசைப்பகுதியில் முன்பு வாழ்ந்தோம். சாக்கடை நாற்றம், ஈ, கொசு, எலி ஆகியவற்றின் தொல்லைகளுக்கிடையே, நாங்கள் குழந்தை குட்டிகளோடு குளிரால் வாடிய காட்சியை இப்போது நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. தண்ணீருக்குச் சண்டைபோடும் பெண்களை நினைத்துக்கொண்டால் இப்போது சிரிப்பாய் வருகிறது. ஆனால் இப்போது காலமே மாறிப்போய்ப் புது மனிசனாக வாழ்கிறோம்'' என்று நாற்பத்தாறு வயதுள்ள டேனியல் சம்பந்தம் கூறுகிறார்:

* * *

ஐம்பத்தைந்து வயதுடைய திருமதி இராமாயி கூறுகிறார்:

'' இந்த ஜென்மத்தில் நமக்கொரு நல்ல வீடு கிடைக்குமா என்று எத்தனையோ நாள் ஏங்கியதுண்டு. எங்க ஏக்கத்தைச் சரியாப் புரிஞ்சிகிட்டு நம்ம அரசாங்கத்தார் எங்களுக்குக் குறைஞ்ச வாடகையிலே வசதியான வீட்டைக் கட்டித்தந்திருக்காங்க. . .''

* * *

இப்பகுதியில் வாழும் தையற் கடைக்காரர் திரு எல். ஆர். ரகுமான்கான் சொல்கிறார்:

'குடிசைக்கே பத்து ரூபா வாடகை கொடுத்து வந்தோம். இப்போ இவ்வளவு வசதியுள்ள இவ் வீட்டுக்குப் பதினைந்து ரூபா தாராளமாகத் தரலாம். எங்களுக்கு நல்வாழ்வு தந்த அரசாங்கத்தை நாங்கள் பாராட்டுகிறோம்''

கடற்படைப் பெருமை !

அண்மையில் பாகிஸ்தானுடன் நடந்த போரில் இந்தியக் கடற்படை சாதித்த சாதனையைப் பற்றிப் படித்திருக்கிறோம். ஆனால், அதனை நேரில் காணும் வாய்ப்பு 'கடற்படைக் கண்காட்சி'யில் கிடைத்தது.

விசாகப்பட்டினம் அருகே மூழ்கடிக்கப்பட்டது பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பல் காஜி. இதிலிருந்து . கைப்பற்றப்பட்ட பொருள்கள்தான் எத்தனை எத்தனை! 14 நாட்கள் நடந்த போரின் விவரங்களைத் தேதிவாரியாக இங்கே குறித்து வைத்திருக்கிறார்கள்.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் விசாகப்பட்டினத்திற்கு எப்படி வந்தது என்பதைக் காட்டும் நிலப்படமும், சிட்டகாங் நகரத்தின் தோற்றமும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் கப்பல் 'காஜி'யிலிருந்து கைப்பற்றப்பட்ட கரன்சி நோட்டுகள், வயர்லஸ் கருவிகள், உயிர்க்காப்பு உடைகள், முக்கியப் பத்திரங்கள், உணவுப் பொருள்கள், புகைப்படக்கருவி, வாயு அழுத்தக் கருவி, தட்டெழுத்துக்கருவி, பாகிஸ்தான் கடற்படைக்கொடி முதலியன பார்க்கத் தக்கனவாகும்.

பயனுள்ள இந்தக் கண்காட்சியில் இருக்கும் பயங்கர டார்பிட்டோ குண்டுகள், பீரங்கிகள், முதலியவைகளை சீனா, அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தான் வாங்கியுள்ளது, என்பது அவற்றின் மீதுள்ள முத்திரைகளிலிருந்து தெரிகிறது:

வங்கத்தில் இந்தியக் கடற்படை அதிகாரி கிருஷ்ணனிடம் பாக். அதிகாரி சரணடைந்தபோது கொடுத்த துப்பாக்கியும், பாகிஸ்தானிடமிருந்து கைப்பற்றப் பட்ட துப்பாக்கிகள், பீரங்கிகள், டார்பிட்டோக்கள் ஆகியவையும் ஏராளமாக உள்ளன. அவைகளில்தான் எத்தனை விதங்கள் உள்ளன !

'காஜி' கப்பலில் இருந்த பாக் சிப்பாய்களின் உடைகள் கூடக் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இந்த உடைகளில் அமெரிக்க முத்திரை காணப்படுகிறது.

வங்கத்தில் தளபதி கிருஷ்ணனுக்கு மக்கள் அளித்த வெள்ளிப் பேழையையும் இங்குக் காணலாம்.

இந்திய விமானந்தாங்கிக் கப்பல் 'விக்ரந்த்', நீர்மூழ்கிக் கப்பல் 'கல்வரி' ஆகியவற்றின் மாதிரிகள் பார்க்க வியப்பாக இருக்கின்றன.

''இந்தக் கண்காட்சி நமது கடற்படையின் அரிய பணியை நிரூபிக்கும் விதத்தில் அமைந்துள்ளது'' என்று இதனைத் துவக்கி வைத்த இந்தியக் குடியரசுத் தலைவர் வி.வி. கிரி அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை.

கடற்படையின் மாபெரும் சாதனையை உலகுக்கு உணர்த்தும் வகையில் கண்காட்சி காண்போரைக் கவர்கின்றது. வீரம் செறிந்த நமது போர் வீரர்களின் ஆற்றலைக் கண்டு வியக்க வைக்கின்றது !


செய்திச் சித்திரம்
தமிழ்நாடு முழுவதும் நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களை அமைக்கத் திட்டமிட்டிருக்கும் தமிழ்நாடு அரசு, அந்தப் பணிக்காக செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, சேலம், தருமபுரி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் 40 ஊர்களை முன் மாதிரியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.
கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள்—சொந்த வீடு இல்லாதவர்களாக இருந்தால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 3 சென்ட் இலவச மனையும், சிறு தொழில் நடத்துவதற்கு வட்டியில்லாக் கடன் 2,500 ரூபாயும் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது.
2,500 ரூ
தமிழக அரசு

சிந்தை கவர்ந்த மருத்துவ விந்தைகள்!

"அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் மருத்துவத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு வாய்ப்புகள் அதிகமிருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு ஆகும் மருத்துவச் செலவுத் தொகைக்கு ஈடாக, அங்கு ஒரு மருத்துவ மனையிலேயே செலவு செய்கிறார்கள். அங்குள்ள மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பு வசதிகள் இங்குள்ளவர்களுக்கு இருக்குமானால், அங்குள்ள பெரிய மருத்துவர்களுடைய திறமைக்கு அறைகூவல் விடக்கூடிய அளவுக்கு நமது மருத்துவர்களிடம் திறமை இருக்கிறது" என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னை மருத்துவக் கண்காட்சியைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளின் ஆர்வத்தையும், இத்துறையில் அவர்கள் காட்டும் அக்கறையையும் எடுத்துக்காட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது இக்கண்காட்சி. உடற்கூறுகளைத் தெள்ளத் தெளிவாகக் கூறும் ஓர் அகராதியாகவும் இது விளங்குகிறது என்றால் அது முற்றிலும் உண்மை.

மனிதனுக்கு வரும் நோய்கள்தான் எத்தனை! எத்தனை! அத்தனை நோய்களுக்கும் அளிக்கப்படும் சிகிச்சை வகைகளோ ஏராளம். தாராளமாக அவை ஒவ்வொன்றையும் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தூட்டுவதாகச் சிறந்து விளங்குகிறது.

மருத்துவ முன்னேற்றங்களைச் சித்திரிக்கும் வகையில் சித்திரங்கள் பேசுகின்றன! பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் நடைபெறும் இந்தக் கவின்மிகு கண்காட்சி ஐந்து கட்டடங்களில் 12 தளங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. 54 பிரிவுகளுள்ள இக்கண்காட்சியைச் சுற்றிப் பார்க்க மூன்று மணி நேரம் ஆகிறது. சுமார் மூன்று இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பார்த்து அறிவு வளர்ச்சி பெறவேண்டிய இந்தக் கண்காட்சியில் என்னென்ன இருக்கின்றன?

மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஒரு மாணவன் பட்டம் பெற்று வெளிவர ஆறரை ஆண்டுகள் ஆகின்றன. அவனுக்குத் தமிழ்நாடு அரசு செய்யும் செலவு என்ன தெரியுமா? எண்பதாயிரம் ரூபாய்! இதைச் சித்திரித்துக் காட்டும் 'ஒலி-ஒளிச் சித்திரம்' அனைவரின் பாராட்டுதல்களையும் பெறுகிறது.

மனித உடற்கூறுகளைப் பற்றிப் படங்களில் படித்திருக்கிறோம்; ஆனால், அதை நேரில் பார்த்திருக்கிறோமா? இங்கு ஒரு முழு மனிதன் உடலில் உள்ள உறுப்புக்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிகிறது. தலை, மார்பு, வயிற்றுப் பாகங்களின் உள் உறுப்புகளை எல்லாம் நாம் நேரில் காண முடிகிறது. மனிதக் கரு வளர்ச்சி, பரிணாம வளர்ச்சி, தசை, நரம்பு மண்டலங்கள் போன்ற உடற்கூறுகளை நேரில் காணும் அரிய வாய்ப்பு நமக்கு ஏற்படுகிறது.

புரியாத புதிராக இருந்த புற்றுநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்துவிட்டது. ஈரல், குடல் முதலிய இடங்களில் தோன்றும் புற்று நோய்களைப்பற்றி விளக்கப்படங்கள் நன்கு விளக்குகின்றன. புற்றுநோயின் அறிகுறிகள், அது முற்றும் விதம் அதனைக் குணப்படுத்தும் முறை முதலானவைகளை நாம் தெரிந்து கொள்ளவும், நோய் வருமுன் அதனைத் தடுத்துக் கொள்ளவும் கண்காட்சி பயன்படுகிறது.

மூட்டுநோய்! இது மூட்டுகளைத் தவிர மற்ற உறுப்புகளையும் பாதிக்கும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? சாலையில் தடிகளை ஊன்றிக் கொண்டு செல்லும் நோயாளிகள் பெரும்பாலும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். இவற்றிலிருந்து விடுதலை கிடைக்குமா? கிடைக்கும் என்கிறது இந்தப் பிரிவு.

இப்போது இருப்பவன் அடுத்த நிமிடம் இருப்பதில்லை. எல்லாம் இரத்த அழுத்தத்தினால் வரும் மாரடைப்புத்தான் காரணம். இரத்த அழுத்தம், மாரடைப்பு இவை இரண்டும் இணைந்து செயல்படுபவை. இவை வயதான காலத்தில் மட்டுமல்ல, இளமையிலும் கூட வரலாம். சிறுநீரகம் பாதிக்கப்படுவதாலும், நாளமில்லாச் சுரப்பிகள் அதிக வேலை செய்வதாலும் இளமையில் இரத்த அழுத்தம் வருகிறது. இரத்த அழுத்தமே மாரடைப்புக்கும் காரணம், என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிந்து கொள்கிறோம். இவற்றின் கோரப்

பிடியிலிருந்து விடுபடும் வகையில் செயலாற்றுகிறது, துரித இருதயப் பாதுகாப்புப் பிரிவு! சென்னைப் பொது மருத்துவ மனையில் இந்தப் பிரிவுக்காகத் தமிழ்நாடு அரசு அதிகத் தொகை ஒதுக்கியுள்ளது. வசதிகள் பல கொண்ட இது தமிழகத்தில் முதன்மையாகத் திகழ்கிறது.

இரத்தச் சோகை:— இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு சிறிய கொக்கிப்புழு, நமது குடலில் புகுந்துகொண்டு நம்மை எவ்வாறு ஆட்டிப் படைக்கிறது என்பதைக் காணலாம். தேவையான சத்துப் பொருள்கள் உணவில் இல்லாததே இந்நோய்க்கு மூல காரணம் என்பதை முன் கூட்டியே எச்சரிக்கிறது இந்தப் பிரிவு.

தொற்றுநோய்ப் பிரிவில் நமக்குத் தோற்றமளிப்பதென்ன?

வைசூரி:— இது மக்களின் வைரி. இது எவ்வளவு கொடியது என்பதை, குருடர்கள், செவிடர்கள், அங்கஹீனமுற்றவர்கள், முகச் சேதமடைந்தவர்கள் ஆகியோரைப் பார்க்கும் போது தெரிந்து கொள்ளலாம். குறிப்பாகக் குழந்தைகள் இந்நோயினால் பெரிதும் பாதிக்கப்படுவதைப் பார்க்கிறோம். அசுத்த நீரும், உணவுப் பண்டங்களுமே மஞ்சள் காமாலைக்குக் காரணம். இதனால் ஈரல் பாதிக்கப்படுவதை ஒரு பிரிவு உணர்த்துகிறது.

கண்பார்வை இருந்தால் தானே கண்காட்சியைக் காண முடியும்? ஒளிமிக்க கண் ஒளியிழக்கக் காரணம்? மேக நோய்கள், நுண்கிருமி நோய்கள் முதலியவைகளால் கண்களின் நிறம், தோற்றம், ஒளி எல்லாம் மாறுகின்றது. தைராய்டு சுரப்பி அதிகமாக வேலை செய்வதால், கண் வீக்கமும், விழிப் பிதுக்கமும், இரத்த அழுத்த நோய், நீரிழிவு முதலியவைகளால் விழித்திரை பாதிப்பும் ஏற்படுகின்றன. இவைகளைக் கண்கூடாகக் கூறுகிறது சென்னை கண்மருத்துவ மனை அமைத்திருக்கும் கண் பிரிவு.

'முடியாது என்பது என் அகராதியில் இல்லை' என்றான் ஒரு வீரன். அதைப்போல யானைக்கால், தொழுநோய், புற்றுநோய், காசநோய் போன்றவைகளைக் குணப்படுத்த முடியாது என்பது மருத்துவ அகராதியில் இல்லை எனலாம். முன்னேறி வரும் இன்றைய மருத்துவ உலகில் இக்கொடுமைகளை வெல்லும் வழி வகைகள் நிறைய இருக்கின்றன. உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகள் செய்து கொள்வதன் மூலம் இந்நோய்களிலிருந்து நாம் தப்பலாம். அதற்கான நூதன சாதனங்கள் இன்று ஏராளம் உண்டு. வெள்ளத்துக்கு அணை போடுவதுபோல நோய்களுக்கும் அணைபோட அறிவுறுத்துகின்றன கண்காட்சிப் பிரிவுகள்.

குழந்தைகள் நல மருத்துவ மனை அமைத்துள்ள பகுதிக்குள் செல்கிறோம். குழந்தையின் வளர்ச்சி, உணவுச் சத்துக் குறைவால் வரும் கேடுகள், அவற்றைப் போக்கும் முறைகள் முதலியவற்றைக் காண்கிறோம். பிறவிக் குறைகள், தீக்காயங்கள், விபத்துக்கள், வயிற்றுப்பூச்சி நோய்கள், அம்மை நோய், தொண்டைக் கரப்பான் போன்ற தொத்து நோய்களைத் தடுக்கும் முறைகளென்ன? இவற்றிற்கு விடையளிக்கிறது இப்பிரிவு. குழந்தைகள் பராமரிப்புச் சம்பந்தப்பட்ட புகைப் படங்கள் அனைவரையும் கவர்கின்றன.

இதயத்துடிப்பை உணர முடிகிறது; நன்றாகக் கேட்க முடிகிறதா? இதயப் பிரிவில் இந்த ஒலியைப் பெரிதுபடுத்திக் கேட்கவும், இதயம், நுரையீரல், போன்றவைகள் வேலைசெய்வதையும் நேரில் பார்க்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதனை ஓர் உயிருள்ள நாயின் மூலம் நன்கு விளக்கிக் காட்டுகிறார்கள். இரத்தம் இருதயத்துக்குச் சென்று எப்படிச் சுத்தமாக்கப்படுகிறது என்பதையும் நேரில் அறியலாம். இதயம் வேலை செய்யாமல் நின்றுவிட்டால் அப்போது அதை இயக்கவும் ஒரு விந்தைக்கருவி இப்போது வந்துள்ளது. இதன் உதவியினால் மனிதனுக்கு உயிரூட்ட முடியும். மனிதனின் இரத்தக் குழாய்களை இந்தக் கருவியுடன் இணைத்துவிட்டால், அசுத்த இரத்தத்தைச் சுத்தமாக்கி விடுகிறது, இதயத்தின் உதவி இல்லாமலேயே!

தமிழ் மருந்துகளைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் முறையும் காட்டப்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் சில மூலிகைகள் ஆஸ்துமா, புற்று நோய், கீல்வாதம் போன்றவைக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிரபல கொலை வழக்குகள் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள், கொலைக் கருவிகள், நஞ்சு வகைகள் போன்றவைகளும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. கலப்படம், மோசடி போன்ற குற்றங்களிலிருந்து காவல் துறையினரிடமிருந்து தப்பமுடியாது என்பதைச் சித்திரிக்கிறது இந்தக் காட்சி.

கிண்டி கிங் ஆராய்ச்சி நிலையம் அமைத்துள்ள பிரிவில் நுண்கிருமிகள் உண்டாக்கும் நோய் வகைகள் பற்றி அழகாகச் சித்திரித்திருக்கிறார்கள். இந்தக் கிருமிகள் வேளாண்மை வளர்ச்சிக்கும், பிளாஸ்டிக், ஒயின் தயாரிப்புக்கும் பயன்படும் விதம் விந்தையாக இருக்கிறது.

இவை மட்டுமா! மனிதன் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் எப்படி இருப்பான் என்பதைக் கற்பனைக் கண் கொண்டு பார்க்கும் காட்சி மாட்சிமையுடையதாகும். பல் மருத்துவம், குறைந்த தொகையில் உடற் பரிசோதனை, ஊனமுற்றோரின் குறையை நிறை செய்யும் வகையில் செயற்கை உறுப்புகள் பொருத்துதல், அறுவைச் சிகிச்சை முறைகள் முதலியன பார்க்கத் தக்கனவாகும்.

மக்களின் சிந்தை கவர்ந்த மருத்துவ விந்தைகள்தாம் எத்தனை? எத்தனை? சுழலும் நாற்காலி, நடனமிடும் பந்து, மாயக் குழாய், சுழலும் தண்ணீர்த் தொட்டி, நீருக்குள் எரியும் மெழுகுவர்த்தி, உருகும் மனிதன், வருகைப் பதிவுமானி, பென்சில் வாஜொலி, எலுமிச்சம் பழம் டிரான்சிஸ்டர், கூத்தாடும் முட்டைகள், இப்படி ஏராளமான அரிய காட்சிகள்.

குடும்ப நல அறுவைச் சிகிச்சை கடந்த ஆண்டு 72 ஆயிரம். இவ்வாண்டுச் சாதனை 2 இலட்சத்து 2 ஆயிரம் என்ற புள்ளி விவரத்தைக் காணும் போது குடும்ப நலத்தில் மக்கள் காட்டும் ஆர்வத்தை நன்கு உணரமுடிகிறது. இந்தப் பிரிவு மக்களைப் பெரிதும் கவர்கிறது.

மனித குலம் நோய் நொடியின்றி வாழ்வதற்கான வழி வகைகளைக் கூறி, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்த அரிய மருத்துவக் கண்காட்சி!

H24

தமிழரசு
மார்ச் 16 இதழ்

குமரி மாவட்டச் செய்தித் தொகுப்பு

தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்
விவரங்களுக்கு
நிர்வாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2

பீங்கானில் கலைப்பொருள் உருவாக்கப்



பெரம்பூரின் பயிற்சி நிலையம்!

A31

ஜனவரித் திங்களின் முதல் வாரம்!

சென்னை இராஜாஜி மண்டபத்தை நோக்கி மக்கள் நாள் தோறும் ஆவலுடன் செல்கிறார்கள்.

இளைஞர்கள் மிடுக்குடன் செல்கிறார்கள்.

முதியவர்கள் மெல்ல-மெல்ல ஆனால் ஆர்வம் நிறைந்த முகத்துடன், அந்த மண்டபத்தின் எண்ணற்ற படிகளில் ஏறிச் செல்கிறார்கள்.

குழந்தைகள் குதித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

மக்களிடம் ஏற்பட்ட இந்த ஆர்வத்துக்குக் காரணம் என்ன தெரியுமா ?

இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற பீங்கான் கலைப் பொருட்களின் கண்காட்சியைக் காண்பதற்குத்தான்.

உள்ளே நுழைந்ததும் ஒரே வியப்பு!

அப்பப்பா ! எத்தனை விதமான கலைப் பொருட்கள் ! கண்ணைக் கவரும் வண்ணங்கள்! கருத்தைக் கவரும் படையல்கள் !

மக்கள் வெள்ளம் அதிசயத்தில் மூழ்குகிறது.

அவர்களுக்கு ஒரு சந்தேகம் !

அனைத்தையும் காண்பதற்குக் கண்கள் இரண்டு மட்டும் போதுமா என்பதே அது !

என்ன செய்வது ! வேறு வழியின்றித் தங்களின் இரு கண்களாலேயே காட்சியைக் காண்கிறார்கள்.

நுழை வாயிலில்-போர் வீரர்கள் சிலர் மக்களை வரவேற்கிறார்கள்.

மெய்யான வீரர்களல்ல அவர்கள் ! பீங்கானால் உருவாக்கப்பட்ட பாங்கான வீரர்கள் !

கண்காட்சியைக் காண்பவர்கள் தங்களின் வியப்புச் சுவையைச் சொற்களாக வடிக்கத் தொடங்குகிறார்கள்.

'' இந்தப் பீங்கான் பொம்மையைப் பார்த்தீர்களா, பிரமாதமாக இல்லே ?''—என்கிறார் ஒருவர்.

'' ஆமாமா ! அசல் செம்பிலே செய்தது மாதிரியே இருக்குதே!'' பதிலளிக்கிறார் மற்றொருவர்.

'' விலையைப் பார்த்தீர்களா, பத்து ரூபா தானாம் !''—முதலாமவர் மகிழ்ச்சி அலைமோதக் கூறுகிறார்.

''எங்கே செய்தது பாருங்க''—என்கிறார் இரண்டாமவர்.

இருவரின் உரையாடலையும் கவனித்துக் கொண்டிருந்த கண்காட்சி ஊழியர் குறுக்கிடுகிறார்.

''பெரம்பூரிலுள்ள பீங்கான் கலைத் தொழில் பயிற்சி நிலையத்தில் செய்யப்பட்டது இந்தப் பொம்மை''—பதிலளிக்கிறார்.

''நம்ம ஊருலேயே இவ்வளவு அழகாகச் செய்யிறுங்களா?'' என்று மீண்டும் வியப்பினைத் தெரிவிக்கிறார்கள் அந்த இரண்டு நண்பர்களும்.

அவர்கள் மட்டுமல்ல—அவர்களைப் போன்ற எண்ணற்ற நண்பர்களையும், தாய்மார்களையும் வியப்புறச் செய்து வருகிறது, தமிழ்நாடு அரசின் தொழில் துறையைச் சேர்ந்த—பீங்கான் கலைப் பொருள் பயிற்சி நிலையம்.

பெரம்பூரில் உள்ள இந்தப் பயிற்சி நிலையம்—பயிற்சி தரும் நிலையமாகவும், அதே நேரத்தில், பீங்கான் கலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற் கூடமாகவும் திகழ்கிறது.

1960-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கிய இந்த நிறுவனம் 1963-ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து மாணவர்களுக்குப் பயிற்சி தரத் துவங்கியது.

பயிற்சிக் காலம் 12 மாதங்கள்.

பயிற்சிக்கு மாணவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் தெரியுமா?

பயிற்சியில் சேருவதற்கு மாணவர்கள் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு எண்ணற்றவர்கள் மனுச் செய்கிறார்கள். அவர்களின் தேர்வு மதிப்பெண்களைக் கொண்டு அவர்களில் ஒரு சிலருக்கே நேர்முகப் பேட்டி அழைப்பு அனுப்பப்படுகின்றது. அப்படி வருகின்றவர்களுக்கு ஒரு சோதனை வைக்கப்படுகிறது. சோதனை என்ன தெரியுமா? பென்சிலையும், தாளையும் அவர்கள் கையில் கொடுத்துச் சில சித்திரங்களை வரையச் சொல்லுகிறார்கள். சித்திரங்கள் வரைவதில் வல்லமை பெற்றிருப்பவர்களைக் கண்டுபிடித்து, மொத்தம் 10 மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இது வெறும் பீங்கான் தொழில் மட்டுமல்லாமல் கலைப் பொருட்களைப் படைக்கும் தொழிலாகவும் இருப்பதால், இதில் பயிற்சி பெறும் மாணவர்கள், ஓரளவு சித்திரம் வரையும் ஆற்றலுடையவர்களாகவும் கலை உள்ளம் படைத்தவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அதனால்தான் இதில் சேர விரும்பும் மாணவர்களுக்குச் சித்திரம் வரையும் சோதனை வைக்கப்படுகிறது.

இந்தச் சோதனைக்குப் பின்னர் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் யார் தெரியுமா? தனிப்பட்ட ஒருவர் அல்ல. 3 அல்லது 5 பேர் கொண்ட ஒரு குழு இவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அந்தக் குழுவில் இடம் பெறுபவரில் ஒருவர், பீங்கான் தொழிலில் நிபுணராக இருப்பார்; மற்றொருவர் ஓவியக் கலையில் வல்லவராக இருப்பார். பொதுவாக, ஓவியக் கல்லூரியின் முதல்வர் இந்தக் குழுவில் இடம்பெறுவார். அனைவரும் சேர்ந்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்த மாணவர்களுக்குத் தேவையான கல்வித் தகுதி ஒன்றும் அதிகமில்லை. பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள் இதற்குத் தேவை இல்லை. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பவர்களே போதும், 18 வயதுக்குக் கீழே இருக்கக் கூடாது; 35 வயதைத் தாண்டவும் கூடாது.

மாதம் 40 ரூபாய் உதவிப் பணம் தரப்படுகிறது. ஆண், பெண் இருபாலரும் இந்தப் பயிற்சிக்குக் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இதில் பயிற்சி பெற்ற சில பெண்கள் இந்தப் பீங்கான் தொழிலுக்குக் கிடைத்த பெரும் பேறாகத் திகழ்கிறார்கள். அந்த அளவுக்குத் திறமை அவர்களிடம் காணப்படுகிறது.

ஓராண்டு முடிந்ததும், பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் தரப்படுகிறது. இதுவரை 7 பிரிவினர் (Batches) பயிற்சி முடிந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தற்போது அலுவல் செய்கிறார்கள். ஒரு சிலர் அரசினரின் தொழிற் கூடங்களிலும், வேறு சிலர் தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிகிறார்கள்.

இந்த நிறுவனத்தில் 3 ஓவியர்களும், மாதிரி செய்வோர் (desigver) ஒருவரும் இருக்கிறார்கள். புதிய வகையில் செய்ய வேண்டிய பொருள்களின் வரைபடங்களை ஓவியர்கள் தீட்டித் தருகிறார்கள். அதனைக் கொண்டு, மாதிரி வடிவத்தைக் கொண்டு ஒரு வகைக் களிமண்ணால் (Plaster of Paris) அச்சு (Mould) உருவாக்குகிறார்கள். அந்த அச்சின் உள்ளே (பீங்கான் பொருள்கள் செய்வதற்குரிய) மூலப் பொருள்களின் குழம்பை ஊற்றித் தேவையான அளவு கால வரையறை கொடுத்து, பொருள்களை உருவாக்குகிறார்கள். உருவாக்கிய பொருளுக்குப் பளபளப்பு ஏற்படுத்துவதற்கு, ஒருவகைக் குழம்பில் மூழ்கவைத்து எடுக்கிறார்கள். சில வகைப் பொருள்களுக்கு வண்ணக் கலவையைத் தெளிக்கவும் (Spray) செய்கிறார்கள். இவ்வாறு, கண்ணைக் கவரும் பீங்கான் கலைப் பொருட்களை உற்பத்தி செய்துவிடுகிறார்கள்.

இது போன்ற பயிற்சி நிலையம் நமது தென்னகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது—தமிழ்நாட்டைத் தவிர ! அதுமட்டுமல்ல, பீங்கான் கலைப் பொருட்களின் தயாரிப்பில் அனைத்திந்தியாவிலும் நமது தமிழகம்தான் புகழ் பெற்று விளங்குகிறது.

இந்தத் தயாரிப்புகளுக்குச் சில மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன. சைனா களிமண் (China clay) ∴பெல்ஸ்பார் பாறை (Felspar) க்வார்ட்ஸ் (Quartz) ஜிப்சம் (Gypsum) ஆகியவை, இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

சைனா களிமண் கேரளத்தில் உள்ள குண்டராவில் கிடைக்கிறது. நமது மாநிலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் நெய்வேலியில் கிடைக்கிறது.

∴பெல்ஸ்பார் பாறை, க்வார்ட்ஸ் கல் ஆகிய இரண்டும் கரூர், சேலம், மணப்பாறை ஆகிய இடங்களில் கிடைக்கின்றன.

காசியிலே சென்று வழிபட்டவர்கள் அதன் பயனை முற்றிலும் பெறவேண்டுமானால் கன்னியாகுமரியையும், இராமேசுவரத்தையும் வழிபட வேண்டும் என்பது தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒரு கருத்தாகும். காசி, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் என்பது ஒரு தொடர்மொழியாக இருந்து ஒருமைப்பாட்டை உணர்த்தி வருகிறது.

ஜிப்சம்—இது அரியலூரிலும் தூத்துக்குடியிலும் கிடைக்கிறது.

இவை தவிர இன்னும் சில பொருள்களும் இந்தத் தொழிலுக்குத் தேவைப்படுகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் புதிய புதிய தினுசுப் பொருள்களை உற்பத்தி செய்வது இந்த நிறுவனத்தின் தனிச் சிறப்பு. சென்ற ஆண்டு செய்யப்பட்ட பொருள்கள் 150 தினுசுகள் என்றால் இந்த ஆண்டில் அவற்றில் 50 தினுசுகள் மட்டுமே செய்யப்படுகின்றன. மீதி 100 பொருள்கள்—புதிய மாதிரிகளில் உருவாக்கப்படுகின்றன. தொழில் திறமையையும் கலைத் திறமையையும் தெளிவாக்குவதற்காகவே இந்தப் புதிய வடிவங்களை உருவாக்குகிறார்கள். இதன் காரணமாகப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

சென்ற ஆண்டு டெல்லியில் நடைபெற்ற பீங்கான் கலைப் பொருட் கண்காட்சியின் போது 30 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகியது.

டெல்லியில் நடைபெற்ற கண்காட்சியைப் பார்த்த டெல்லி மக்கள் வியப்படைந்திருக்கிறார்கள். அங்குள்ள பத்திரிகைகள் வியந்து பாராட்டியுள்ளன.

இந்த ஆண்டு சென்னையில், நடைபெற்ற ஒரு வாரக் கண்காட்சியின் போது 58 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகியது.

அண்ணா சாலையில் தமிழரசு அச்சகத்தின் அருகே உள்ள காட்சி அறையில் ஒவ்வொரு ஆண்டும் 75 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகி வருகிறது.

பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களுக்கெல்லாம் இந்தக் கலைப் பொருள்கள் விற்பனைக்கு அனுப்பப்படுவதில்லை. ஆனாலும், அங்குள்ளவர்களின் இல்லங்களிலெல்லாம் இந்தக் கலைப் பொருள்கள் கொலு வீற்றிருக்கின்றன. இந்த அதிசயம் எப்படி நிகழ்கிறது தெரியுமா? எல்லாம் சுற்றுலாவின் தொண்டினால்தான் ! நாள்தோறும் வட இந்திய மாநிலங்களிலிருந்து நமது தமிழகத்தைக் காண வரும் சுற்றுலாப் பயணிகள், இந்தக் கலைப் பொருட்களை ஏராளமான அளவில் வாங்கிச் செல்கிறார்கள். அதனால்தான் வட இந்தியாவில் இந்தப் பொருட்களின் புகழ் ஓங்கி நிற்கிறது.

இந்தப் பொருட்களை உருவாக்கும் நிறுவனம்—இந்தப் பொருட்களை உருவாக்கும் வல்லவர்களைத் தனது பயிற்சியின் மூலம் உருவாக்கும் இந்தப் பயிற்சி நிலையம் என்றும் புகழ் ஓங்கி நிலைத்து நிற்கும் என்பது உறுதி. இந்த அருங்கலைத் தொழிலைத் தமிழக அரசு அன்புடன் ஆதரித்து வரும்போது, இந்த நிலையமும் இந்தத் தொழிலும் புகழ் ஓங்கி நிற்பதில் சந்தேகம் என்ன?

காந்தியடிகள் கனவை நனவாக்க

தமிழ்நாடு வழிகாட்டுகிறது!

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!

கதர் -
கிராமத்
தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது உணவு
உற்பத்திக்கு உழைக்கும்
கிராம மக்களுக்கு
உதவுவதாகும்

வளர்ச்சியும்
முன்னேற்றமும்

விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடி
வேலைவாய்ப்பளிக்கின்றன

வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, உ.சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

புற்றுநோய்ச் சிகிச்சையில் ஒரு புதுமை!

“ஏழைகளைப் பாதிக்கும் நோய்கள் இன்று ஏராளம்; அவைகளைப் போக்க மருத்துவர்கள் சிந்தித்துச் செயல்பட முன்வரவேண்டும். புதிய கண்டுபிடிப்புகள் மூலம் இந்தக் குறையை நாம் போக்கலாம் என்றாலும், இத்துறையில் அக்கறையும் ஆர்வமும் கொள்ள வேண்டும்'' என்று இரக்க சிந்தையோடு கூறுகிறார் சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் டாக்டர் எம். நாராயணன் அவர்கள்.

ஏழைகளை அதிகம் பாதிக்கும் நோய்களில் புற்றுநோய், தொழுநோய், ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம். வாயில் வரும் புற்றுநோய் மேலை நாட்டில் இரண்டு சதவிகிதம் என்றால், நம் நாட்டில் நாற்பது சதவிகிதம் வளர்ந்து இருக்கிறது. உலகிலேயே நம் நாட்டில்தான் தொழுநோய் அதிக அளவில் இருக்கிறது. இந்த இரண்டு வகைப் பயங்கர நோய்களும் குறிப்பாகப் பாமர மக்களை—ஏழை எளியவர்களைப் பற்றிக் கொண்டு அவர்கள் வாழ்க்கையைப் பாழடித்து வருகின்றன. இதிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்க வழியே இல்லையா?

இதுபற்றி டாக்டர் நாராயணன் தீவிரமாகச் சிந்தித்தார். ‘பணம் படைத்தவர்களுக்கு எந்த நோய் வந்தாலும் அதனைப் போக்கிக் கொள்ள வசதி நிறைய இருக்கிறது; ஆனால், ஏதுமில்லா ஏழை என்ன செய்வான்?’ இப்படி எண்ணி இவர் மனம் நொந்தார். அதன் விளைவுதான், ‘புற்றுநோய்ச் சிகிச்சையில் ஒரு புதுமை’யினை இவர் கண்டறிந்தது.

வாயில் புற்றுநோய் எப்படி வருகிறது? வெற்றிலையோடு புகையிலையைக் குதப்பி வாயில் மணிக்கணக்காக அடைத்து வைத்துக் கொள்வதால், வாயின் தாடையினுள் புற்றுநோய் வருகிறது. இது நாளடைவில் வளர்ந்து வெளிப்புறம் கன்னத்தில் துவாரம் ஏற்பட்டு விகாரமான தோற்றத்தை உண்டு பண்ணுவதுடன் உயிருக்கே ஆபத்தையும் உண்டாக்கும்.

இதனை முதலில் கோபால்ட் அல்லது ரேடியம் ஆகிய மின் கதிர்களால் பொசுக்கும் வகையில் சிகிச்சை செய்வார்கள்; அப்படியும் பெரும்பாலோருக்குச் சில நாட்கள் கழித்து மீண்டும் அதே இடத்தில் புற்றுநோய் வளரும். அந்த நேரத்தில் அறுவைச் சிகிச்சை மூலமே அதனைக் குணப்படுத்த வேண்டி வரும். பொதுவாக அறுவை செய்து விட்டால், விகாரமான தோற்றத்தை மூடச் சுமார் ஆறு மாதத்திலிருந்து ஒரு ஆண்டு பிடிக்கும். இந்த ஆறு மாத காலத்தில் நாக்கு வெளியே தொங்கிக் கொண்டு, கன்னத்தில் துவாரத்தோடு இருந்தால், இதே நோய் வந்த மற்ற நோயாளி அறுவைச் சிகிச்சைக்குப் பயந்து மறுத்து விடுவான். புற்றுக்கு வேண்டிய அறுவை செய்து, கன்னத்திலுள்ள துவாரத்தை ஒரே நாளில் மூடி விட்டால் மற்றவர்கள் சிகிச்சை செய்து கொள்ள முன்வருவார்கள் அல்லவா? இந்த முயற்சியில் **டாக்டர் நாராயணன் வெற்றி கண்டுள்ளார்.**

வாயில் புற்றுநோய் வந்த ஒரு பெண்ணின் படத்தைப் பார்க்கிறோம். வாயிலிருந்து சதை குலையாக வெளியே தொங்குகிறது. பார்க்க அருவருப்பாகவும், விகாரமாகவும் அதே சமயத்தில் பரிதாபமாகவும் இருக்கிறது. அந்தத் தொங்கும் சதையை மட்டும் வெட்டி விடுவதல்ல இவர் வேலை. கன்னத்தின் தோலையே வெட்டி எறிந்துவிடுகிறார்! தோலற்ற ஒரு பக்க முகம், பல், நாக்கு முதலிய உள்ளுறுப்புகளுடன் பார்க்கப் பயங்கரமாகக் காட்சியளிக்கிறது. இப்போது அந்தப் பாகத்தை இன்னொரு தோலால் மூட வேண்டும். தோலுக்கு என்ன செய்வது?

அதற்கும் ஒரு வழி நம் உடலிலேயே இருக்கிறது. தலையின் மேலுள்ள தோலை வெட்டி எடுத்துக் கன்னத்தில் அறுவை செய்யப்பட்ட அளவுக்கு வைத்துத் தைத்துவிடுவதுதான் இவர் செய்த புதுமை! ஒரே நாளில் இந்த வேலையைச் செய்து முடித்து விடுகிறார் இவர். இந்த அறுவைச் சிகிச்சை செய்வதற்கு ஐந்து மணி நேரமாகிறது. சில நாட்கள் கழித்து இது நன்கு ஆறிவிடுகிறது. இம்மாதிரியான சிகிச்சை செய்வது உலகத்திலேயே இதுவே முதல் தடவை!



டாக்டர் எம். நாராயணன்.

சில சமயங்களில் அறுவைச் சிகிச்சையின் போது, நாக்கு, உதடு, பாதிக்கப்படுவதுண்டு. அப்போது சேதமடைந்த நாக்கும், உதடும் வேறு சதைகளை வைத்து ஒட்ட வைக்கப்படுகின்றன!

டாக்டர் நாராயணன் இந்தச் சிகிச்சை முறையை விளக்கி ஒரு கட்டுரையை எழுதினார். அமெரிக்காவில் அதிக அளவு விற்பனை உள்ள ஒரு ஆங்கில மருத்துவ இதழுக்கு (Plastic and Reconstructive Surgery) இது சம்பந்தமாகக் கடிதம் எழுதினார். இந்த இதழ் மருத்துவச் சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் மிகச் சிறந்த இதழாகும்.

இந்த இதழின் ஆசிரியர் ஃபிராங்க் மக்டௌல் இவருக்குப் பதில் எழுதினார். அதில்,

"....Publication in our Journal would give this new procedure circulation to every major medical library and medical school in the world, and would reach nearly every surgeon doing this kind of work...."

பிறகு டாக்டர் நாராயணன் தாம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை இந்தப் பத்திரிகைக்கு அனுப்பினார். அவர்கள் கட்டுரையை வரவேற்றுத் தம் இதழில் வெளியிட்டார்கள்.

அடுத்த இதழிலும் இது சம்பந்தமாக இன்னொரு கட்டுரையும் வெளிவந்தது. புகைப்படங்களுடன் வெளிவந்த இந்தக் கட்டுரை பல நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்களைக் கவர்ந்தது. அமெரிக்கா, ஜெர்மனி, பெர்லின், பிரான்ஸ், ஹங்கேரி, கிரீஸ், நார்வே, வாஷிங்டன், இஸ்ரேல் முதலிய நாடுகளிலிருந்து மருத்துவர்கள் பலர் இவரைப் பாராட்டும் வகையில் இந்தக் கட்டுரையின் பிரதியொன்றை அனுப்பிவைக்கும்படிக் கோரியுள்ளனர்.

இதுவரை இவர் இராயப்பேட்டை மருத்துவமனையில் அறுபத்தெட்டுப் பேருக்கு இந்த நவீன அறுவைச் சிகிச்சையைச் செய்துள்ளார். புற்று நோய் அறுவைச் சிகிச்சைக்காக ஒரு தனிப் பகுதி கோரி, தமிழ்நாடு அரசிடம் இவர் விளக்கியதின் விளைவு நமது அரசு அதற்கு அனுமதி தந்தது. பரிசுச் சீட்டு மூலம் ரூ. 2.5 இலட்சமும், ஆண்டுக்கு 40,000 ரூபாயும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

''புதிய முயற்சிகளுக்கும், ஏழைகள் துயர் துடைக்கவும் அரசு செய்துவரும் உதவிகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நோயற்ற வாழ்வுக்கு வழிவகை காணும் முறையில் அரசும், குறிப்பாக மருத்துவர்களும் முன்வர வேண்டும்''

என்று கூறும் டாக்டர் நாராயணன் அவர்கள் எளிமையானவர். இன்சொல் பேசும் இயல்பினர்.

இவர், மருத்துவத்தில் இன்னொரு போற்றத்தக்கச் செயலைச் செய்து வருகிறார். அதுதான் தொழுநோயாளியின் மடங்கிய விரல்களை நிமிர்த்துவது! ஆம்! அறுவைச் சிகிச்சையின் மூலம் விரல்கள் மடங்கி விகாரமாக இருப்பதைப் பழைய நிலைக்குக் கொணரும் திறமையை நாம் பாராட்ட வேண்டும்.

தொழுநோய் வந்தவன் புருவம் சிதைந்தும், மூக்கு உருவிழந்தும் காணப்படும். இந்த மூக்கையும், புருவத்தையும் கூட அறுவைச் சிகிச்சையின் மூலம் இவர் குணப்படுத்துகிறார்.

'எண்ணற்ற ஏழை மக்கள் தொழுநோயால் படும் அல்லல் கொஞ்ச நஞ்சமன்று. சிறுகச் சிறுகச் சாகடிக்கும் அந்தக் கொடிய நோய் வந்தவன், சமூகத்திலிருந்து தள்ளி வைக்கப்படுகிறான்; நண்பரிடமோ மற்றவரிடமோ பேச அவன் கூச்சப்படுகிறான். அத்தகையவனைக் காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பல்லவா?' இவர் இப்படிக் கேட்பதோடு மட்டுமல்ல, அத்தகையவர்களிடம் இன்சொல்பேசி, அவர்கள் மனத்துயரைத் துடைக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்.

''தொழுநோய் வராமல் தடுக்கவும், வந்தால் அதனைக் குணப்படுத்தவும் நான் முயன்று வருகிறேன். இதுவரை ஐம்பது பேருக்குத் தொழுநோய்ச் சிகிச்சை செய்துள்ளேன். எனக்குள்ள மன நிறைவு எல்லாம் ஒரு நோயாளியைக் குணப்படுத்தினேன் என்பதுதான்'' என்று பெருமிதத்துடன் கூறும் டாக்டர் நாராயணன் அவர்கள், இதுபோன்று நோய் வந்தவர்கள் தயக்கமில்லாமல், தாராளமாகத் தம்மை வந்து பார்க்கலாம் என்று அன்புடன் அழைக்கிறார். இத்தகைய நல்ல எண்ணமும் ஆராய்ச்சித் திறனும், மருத்துவத் துறையில் புதுமை காணத் துடிக்கும் இவரையும், இவரை மருத்துவராகப் பெற்றுள்ள அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனையையும், தமிழக அரசையும் ஏழை எளியவர்கள் போற்றிப் பாராட்டுவதில் விந்தையேதுமில்லை,

43

எலிகளை ஒழிப்போம்!

வளரும் பயிர், சேமித்துவைக்கப்பட்ட தானியங்கள், மற்றப் பொருட்கள் [illegible] யாவற்றையும் சேதப்படுத்துவதுடன் பல தொற்று நோய்களையும் பரப்புவதன் மூலம் நீண்ட காலமாக மக்களுக்குத் தொல்லை கொடுத்து வருபவை எலிகள். பயிரிடும் வயல்களில் காணப்படும் எலி இனங்களைப் பற்றிய ஆராய்ச்சி, ஆடுதுறை வேளாண்மைப் பண்ணையில் மத்திய—மாநில அரசுகளின் உதவியுடன் நடந்து வருகிறது. இவ்வாராய்ச்சியின் பலனாக அறிந்த சில உண்மைகளை இக்கட்டுரையில் காணலாம்.

எலிகளுள் பல இனங்களுண்டு. தமிழ்நாட்டின் நன்செய் நிலங்களில் வயல் எலி (இதற்கு வரப்பெலி, அரவாணெலி, கரம்பெலி என்ற பெயர்கள் உண்டு) புல் எலி, சுண்டெலி, என்ற இனங்களும், புன்செய் நிலங்களில் இவற்றுடன் வெள்ளெலி, கல்லெலி, குன்னெலி என்ற இனங்களும் காணப்படுகின்றன. இவற்றில் குன்னெலி வேலியோரம் உள்ள புதர்களில் கூடு கட்டி வாழும். மற்றவை வயல்களிலும் வரப்புகளிலும் வளை தோண்டி அவற்றில் வாழ்கின்றன. எல்லா இன எலிகளும் பெரும்பாலும் பகலில் ஓய்வெடுத்து இரவில் நடமாடும் இயல்புடையன.

நன்செய், புன்செய் நிலங்களில் பயிராகும் நெல், கேழ்வரகு, சோளம், கரும்பு, கடலை, எள், பயறு வகைகள், பருத்தி போன்ற எல்லாவிதப் பயிர்களையும் எலிகள் சேதப்படுத்துகின்றன. எனினும், அதிகமாகப் பாதிக்கப்படுவது நெற்பயிரே. நெற்பயிரின் முளைக்கும் விதைகள், நாற்று நட்ட பயிர், முற்றிய கதிர் யாவுமே எலிகளுக்கு உகந்தவை. இதில் கதிர் வரும் தருணத்தில் உள்ள பயிரின் குருத்து, எலிகளால் பெரிதும் விரும்பி உண்ணப்படுகிறது என்பது பயிரிடும் காலங்களில் பிடித்த எலிகளின் வயிற்றை அறுத்துச் சோதனை இட்டதால் தெரிய வந்தது. இதனால்தான் கதிர் வரும் பருவத்தில் நெல் வயலில் அதிக எலி வெட்டு காணப்படுகிறது.

இத் தருணங்களில் எலிகளின் எண்ணிக்கை அதிகமானால் வரப்பு ஓரங்கள் தவிர மற்றப் பகுதியில் உள்ள பயிர் பூராவுமே எலிகளால் வெட்டப்படுவதுண்டு. இவ்வாறு கதிர் வரும்போது வெட்டப்பட்ட பயிரில் மறுதாம்பு வளர்ந்து சுமார் ஒரு வார காலம் தாமதமாக முற்றிய போதிலும், மகசூல் 75 சதவீதத்துக்கும் மேலாகக் குறைந்து விடுகிறது. எனவே ஏக்கருக்குச்சுமார் 2,000 கிலோ மகசூல் கொடுக்கக்கூடிய பயிரில் இவ்வாறு எலி வெட்டும் போது 1,500 கிலோ (அல்லது ரூ. 750) வரை நட்டம் ஏற்பட ஏதுவாகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் சுமார் 10 சதவிகிதம் எலிகளால் சேதமாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வயலில் பயிர் இல்லாத போது வயல் எலிகள் புல்விதை, பசுந்தழை, உரச்செடியின் விதை, நண்டு, நத்தை, மண்புழு, வெட்டுக்கிளி போன்ற பூச்சிகள் இவற்றையும் உண்பது ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிய வந்தது.

இந்த எலிகளின் மற்ற வாழ்க்கை முறைகளும், இவை பல்கிப் பெருகுவதற்கு மிக ஏற்றதாயுள்ளன. நன்கு வளர்ந்த வயல் எலி (வரப்பெலி)கள் வளைக்கு ஒன்றுக்குமேல் இருப்பதில்லை. புல்லெலி, சுண்டெலி, கல்லெலி, வெள்ளெலி இனங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட எலிகள் ஒரே வளையில் வசிப்பதுண்டு. தஞ்சை நெல்வயல்களில் வயல் எலி, புல்லெலி, சுண்டெலி இனங்கள் செப்டம்பர், அக்டோபர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பயிர் முற்றும் தறுவாயில் குட்டிகளை ஈன்றெடுக்கின்றன. வயல் எலி ஒரு தடவைக்கு 10 முதல் 15 குட்டிகள் வீதம் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை குட்டிகளை ஈன்றெடுக்கும். பிறந்த குட்டிகள் மயிர் இன்றி, கண் திறக்காமலும், நகர இயலாமலும் இருக்கும். பின் தாய்ப்பாலுண்டு வளர்ந்து சுமார் 3 மாதத்தில் முழுவளர்ச்சி அடையும். ஒரு இணை (ஜோடி) எலிகள் ஒரு ஆண்டில் சுமார் 200 ஆகப் பெருக இயலும். ஒவ்வொரு எலியும் சுமார் இரண்டு ஆண்டுகள் உயிருடனிருக்கும்.

புன்செயில் வாழும் இனமான வெள்ளெலிக்கு நீந்தத்தெரியாது. ஆனால், மான்போல் துள்ளி விரைவாக ஓடும். நன்செய்யில் வாழும் வயல் எலி, புல்லெலி, சுண்டெலி இனங்கள் நன்றாக நீந்த வல்லவை. இவற்றில் வயல் எலி நீண்ட நேரம் வரை தண்ணீருக்குள் மூழ்கியும், தண்ணீர் மட்டத்திலும் நெடுந்தூரம் நீந்த வல்லவை. இதனால்தான் வயலில் தண்ணீர் இருந்தபோதும் பயிருக்கு எலியின் சேதம் குறைவதில்லை.

வயலில் எலிகளின் உத்தேச எண்ணிக்கையை சிறுமண் குவியல்களுக்கருகமைந்த அவற்றின் வளைகள், சேற்றில் பதிந்த காலடிகள், புழுக்கைகள், வழக்கமான பாட்டைகள் இவற்றைக்கொண்டு மதிப்பிடலாம். சாதாரணமாக ஏக்கருக்கு 10 முதல் 15 எலிகள் வரை காணப்படலாம். வயல், வரப்புகள் பெரிதாயும், புதர் செடி கொடிகளால் மூடப்பட்டும் இருந்தால் அதிக எலிகள் இருக்க ஏதுவாகும். 200 அல்லது 300 அடிகளுக்கு அப்பாலிருந்தும் வயல் விட்டு வயல் எலிகள் மேய்ச்சலுக்கு வருவதுண்டு. சமீபத்தில் ஆடுதுறைப் பண்ணையில் நடந்த சோதனைகளில் இவ்வாறு சுமார் 2½

ஏக்கர் நிலத்துக்கு ஒரு நாளிரவில் 200-க்கும் மேற்பட்ட எலிகள் வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தனித்து ஓரிரு வயல்களில் முன்னதாகக் கதிர் வரும் போதும், தஞ்சையில் கோடை காலத்தில் சிறுபரப்பில் நெல் பயிரிடும் போதும், பயிருக்கு அதிக சேதம் இவ்வாறு வயல்விட்டு வயல் மேய்ச்சலுக்கு வரும் எலிகளால் ஏற்படுவதே ஆகும்.

இவ்வுண்மைகளைக் காணும் போது எலிகளைக் கட்டுப்படுத்த ஓரிரு வயல்களில் மட்டும் தனி முயற்சி செய்வதைவிடத் தீவிர திட்டமிட்டு, ஒரே சமயத்தில் எல்லா வயல்களிலும் கட்டுப்பாடு முறைகளைக் கையாள்வது தேவை என்பது புலனாகும்.

இவ்வாறு எலிகளைக் கட்டுப்படுத்த பரிசோதிக்கப்பட்ட பல முறைகளில் பயனுள்ளவை பின்வருவன:—

*1. நஞ்சு வைத்தல்:—*சிங்க் பாஸ்பைடு என்ற நச்சு மருந்தை நெல், பொரி போன்ற உணவுடன் 1:49 என்ற விகிதத்தில் கலந்து வயல், வயலைச் சுற்றியுள்ள தரிசுகள், வரப்புகள் எங்கும், எலி நடமாடும் எல்லா இடங்களிலும் வைக்கவேண்டும். தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் நஞ்சு வைக்கத் தேவை இல்லை. இவ்வாறு நஞ்சு வைக்குமுன் நஞ்சு கலக்காத உணவை இரண்டு அல்லது மூன்று நாட்கள் மேற்கண்ட இடங்களில் வைப்பதும், பொரியுடன் சிறிது தேங்காய் எண்ணெய், வறுத்த வெங்காயம், மீன் இவற்றைக் கலப்பதும், எலிகள் நஞ்சு கலந்த உணவை விரும்பி உண்ண வகை செய்யும். ஒரு ஏக்கருக்கு ஒருமுறை வீதம் வைக்க ஆகும் செலவு:—

	ரூ.	காசு.
பொரி	0	30
வெங்காயம், மீன், எண்ணெய் ...	0	25
நஞ்சு மருந்து வைக்க ஆகும் செலவு ...	0	30
நஞ்சு	0	15
மொத்தம் ..	1	00

சுமார் ஒரு மாத இடைவெளிகளில் ஒரு பயிருக்குச் சுமார் மும்முறை இவ்வாறு நச்சு மருந்து இடுவது ஏற்றது. எலிகளுக்கு இயற்கை உணவு குறைவான கோடை காலங்களிலும், நஞ்சிடுவது நன்மை பயக்கும். நஞ்சு வைத்த சிலநாட்களுக்குக் கோழி, கால்நடைகள், நஞ்சுவைத்த இடங்களை அணுகா வண்ணம் பாதுகாப்பது அவசியம்.

*(2) கிட்டி வைத்தல்:—*தஞ்சாவூர் கிட்டிகளை முக்கியமாகக் கதிர் வரும் முன் பயன்படுத்துவது நல்ல பலனைத் தருகிறது. ஏக்கருக்குச் சுமார் 25 கிட்டிகள் வரை வைக்கவேண்டும். ஒருவர் நாளொன்றுக்குச் சுமார் 60 கிட்டிகள் வைக்க இயலும். எலிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 4 அல்லது 5 நாட்கள் தொடர்ந்து கிட்டி வைக்க வேண்டி வரும். ஒரு கிட்டியின் விலை 30 காசு. இதை சுமார் இரண்டு ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம்.



*(3) வெட்டிப் பிடித்தல்:—*பயிர் முற்றும் போது எலிகள் குட்டிகளை ஈனுவதால் அக்காலங்களில் வளைகளை வெட்டி தாய் எலிகளைக் குட்டிகளுடன் பிடித்து அழிக்கலாம். வளையொன்றுக்குச் சுமார் இரண்டு அல்லது மூன்று கிலோ வரை எலிகள் சேர்த்து வைக்கும் நெற் கதிர்களையும் இவ்வாறு வெட்டும் போது எடுக்க இயலும்.

*(4) இயற்கை விரோதிகள்:—*கூரி, பாம்பு, காட்டுப் பூனை போன்றவைகள் எலிகளின் இயற்கை விரோதிகள். இவற்றின் நடமாட்டம் வரப்போரங்களில் அதிகம் இருப்பதால்தான் எலிகள் வரப்பை ஒட்டிச் சுமார் 5 முதல் 10 அடி வரை உள்ள பயிரை அவ்வளவாக வெட்டுவதில்லை. எனவே, இவற்றைக் கொல்லாமல் காப்பதும் எலிகளைக் கட்டுப்படுத்த உதவும்.

இத்துடன் வயலுக்குப் புதுத் தண்ணீர் விடும்போது ஒளிமிக்க டார்ச் லைட், பெட்ரோமாக்ஸ் இவற்றின் உதவியுடன் இரவில் மேய்ச்சலுக்கு வரும் எலிகளை அடித்துக் கொல்வது, வரப்புகளைக் குறைத்துச் சிறியனவாக்குவது, வரப்புகளில் புதர் இன்றிச் சுத்தமாக வைப்பது, இவையும் மேற்கண்ட முறைகளும் நல்ல பலனைத் தர உதவும்.

மின்சார வேலி அமைத்தும், எலிகளின் சேதத்தை முற்றிலும் தடுக்க முடியும் என்பது ஆடுதுறை வேளாண்மைப் பண்ணையில் செய்த சோதனைகள் வாயிலாகத் தெரிகிறது. ஆயினும், பரவலாக எல்லா உழவர்களும் இதைப் பயன்படுத்துவது கடினம்.

'பாஸ்டாக்சின்' என்ற நச்சுப் புகை மாத்திரைகளை வளைகளில் போடுவதன் மூலமாக எலிகளைக் கட்டுப்படுத்த இயலுமா என்பதும் தற்போது ஆடுதுறைப் பண்ணையில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

வயல் எலிகளை ஒழிக்கத் தமிழக அரசு, 15 சதவீதம் மான்ய விலையில் 'சிங்க் பாஸ்பைடு' மருந்தை விற்க வகை செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அவ்வப்போது 'எலி ஒழிப்பு வாரங்கள்' ஏற்பாடு செய்யப்படுகின்றன. உழவர்கள் ஒருமித்த முயற்சியுடன் தக்க காலங்களில் தடுப்பு முறைகளைக் கையாண்டால் பயிருக்கு எலிகளினால் ஏற்படும் சேதத்தைப் பெரிதும் குறைக்க இயலும் என்பது திண்ணம்.

—தி. சந்தானராமன், பி.எஸ்சி(வே).,
பூச்சியியலறிஞர்.

—பி. வேலாயுதம், பி.எஸ்சி(வே).,
பூச்சியியல் [illegible]

K31

தியாகம்

சோம. மகாதேவன்

மின்சார இரயில் துரித கதியில் ஓடிக் கொண்டிருந்தது.

பின்புறமிருந்து ரகுபதியின் குரலைக் கேட்டுச் சுந்தரேசன் திடுக்கிட்டார்.

சுந்தரேசன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்று இன்னும் ஓராண்டு முடியவில்லை. தகுந்த பேச்சுத் துணையொன்று இல்லாமல், வீட்டிலேயே அடைந்து கிடக்க முடியாமல், தாம்பரத்திலிருக்கும் நண்பரொருவரைப் பார்க்கச் சென்றவர், திரும்புவதற்குள் இப்படிப் பொழுதடைந்து விட்டது.

கண்டுவிட்டால், முன்பனிக் காலத்தில் இப்படியேன் வெளியில் சுற்றவேண்டும் என ரகுபதி கோபித்துக் கொள்வான்.

ரகுபதி—சுந்தரேசனுக்கு மூத்த மகன். கம்பெனியொன்றில் வேலை செய்கிறான்.

மறுபக்கத்தில் மகனும், அவனது நண்பரும் பேசுவதைக் கேட்கும் சந்தர்ப்பம் இன்றைக்குத்தான் நேரிட்டிருக்கிறது.

"எங்கே திரும்பினாலும்—குடும்ப நலத் திட்டப் பிரச்சார மாகத்தான் இருக்கு. இடைவெளியே இல்லை." என்று

"வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிடுவதால் தீமைகள் ஏற்படலாம் என்பது வைத்திய மேதைகளின் கருத்து"

பிரபல பழனி

வைத்திய திலகம்

வைத்தியராஜ்

LR. S. காளிமுத்து
R. M. P. (IND.) V. V. O.,
A. M. I. H.

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்த வாலிப வயோதிக அன்பர்களுக்குப் பிரபல-பழனி வைத்திய திலகம்-வைத்தியராஜ் S. காளிமுத்து R.M.P. (IND), V.V.C., A.M.I.H. அவர்களின் ஆலோசனையும்-கருத்தும்.

ஆடவர்களில், படித்த பட்டதாரியும், பாமரரும், தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் தங்கள் உடல் பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, உடல்மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகிக் குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் அதிருப்தியும், சஞ்சலமும், நிம்மதியில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வருடக் கணக்கில் மருந்துகள் சாப்பிட்டுப் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம்.... 'வீட்டு வாடகை தருவதுபோல் மாதாமாதம் பணம் செலுத்தி வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டேன்; ஒன்றும் பலனில்லை' என்றும் ஏராளமான கடிதங்கள் நமக்கு தினசரி வந்துகுவிகின்றன! பழனி மருந்தைப் பற்றித் தெரியாதவர் பாரில் உண்டோ? மருந்தை உபயோகிக்கும் போதே பலனைப்பெறும் அன்பர்கள் மட்டும் எம்மிடம் சிகிச்சை பெறலாம்—வருடக் கணக்கில் சிகிச்சை பெற நினைக்கும் அன்பர்களுக்குக் கண்டிப்பாக நாம் சிகிச்சை தர இயலாது. கேம்புகளில் நேரில் மருந்துகள் பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். போஸ்டேஜ் இலவசம்.

—: 1 மாத சிகிச்சை மருந்துகள் :—

மிக உயர்தரம்	தங்க பஸ்பம்	உயர்தரம்	முதல் தரம்	இரண்டாந் தரம்
ரூ. 90-00	ரூ. 120-00	ரூ. 42-00	ரூ. 33-00	ரூ. 24-00

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1. போன்: 21448.
சென்னை கிளை ஆபிசில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT. REGD. T. M. No. 204841
REGD 15443.

வைத்தியத் திலகம், வைத்திய ராஜ டாக்டர் S. காளிமுத்து R.M.P., (IND.), V.V.O., A.M.I.H.

பழநி சித்தர் வைத்தியசாலை (T) பழநி S.I.

போன் : 316
தந்தி : சித்தர்

அங்கலாய்த்துக் கொள்கிறார் நண்பர்.

" இவ்வளவு இருந்தும் மென்மேலும் குழந்தைகளைப் பெத்துக்கிட்டு, முறையோட வளர்க்கவும் முடியாம, வாழ்க்கையில் எந்தவிதமான களிப்பும் இல்லாம இருளில் மூழ்கிப் போறாங்களே அதைச் சொல்லுங்க " என்கிறான் ரகு.

" குழந்தைகளும் வளர்ந்து-சம்பாத்யம்ன்னு செய்யுறப்ப தகப்பனுக்கு உதவியாகத்தானே இருக்கும். " என்கிறார் நண்பர்.

இப்படியெல்லாரும் நினைக்கிறதுனாலேதான், இப்ப வேலை வாய்ப்புங்கிறது அரிதாகிக்கிட்டே வருது. அதிலும், குடும்பத்திலே மூத்த மகனாப் பிறந்து, கல்யாணம்ன்னு ஆகி நிக்கிறப்பவே, சின்னஞ் சிறுசுகளாகத் தம்பி, தங்கைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு ஏற்படுது பாருங்க—அது இந்தப் பிறவிக்கெல்லாம் போதும். " என்கிறான் ரகுபதி சற்று வேகமாக.

" உங்க அனுபவத்தைச் சொல்றிங்களா?" என்று கேட்கிறார் நண்பர்.

அதற்குள் வண்டி சைதாப்பேட்டையில் நின்றது. இருவருக்குமே இங்கு என்ன வேலையோ இறங்கி நடக்கின்றனர்.

அந்தக் குளிர்ந்த நேரத்திலும் சுந்தரேசனுக்கு வியர்த்துக் கொட்டியது. அப்படியே சாய்ந்து விட்டார். அவரது நெஞ்சில் ஏதோ ஒன்று வேகமாக அழுத்துவது போலிருந்தது.

சொல்ல வேண்டியதை எவ்வளவு ஆவேசத்தோடு சொல்லுகிறான் ரகு.

சுந்தரேசனுக்கு ரகுபதி மூத்த மகன். அவனுக்குப் பிறகு பத்து ஆண்டுகள் குழந்தையே தரிக்காதிருந்து, கடைசிக் காலத்தில், இரண்டு பெண்களும், கடைக்குட்டிகளாக இரு ஆண்களுமாகப் பிறந்தார்கள். மேலும் கீழுமாக—எல்லாருமே, இப்போது பள்ளியில் படிப்பவர்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பே ரகுவுக்குத் திருமணம் நடந்தது. பின் நடப்பை இருந்து பார்க்காமல், எதையோ சாதித்துவிட்ட நிம்மதியோடு போய்ச் சேர்ந்து விட்டாள் அவள். சுந்தரேசனுக்கு வரும் ஓய்வு ஊதியத்திலிருந்து எதைச் சாதித்து விட முடியும்?

ரகுபதிக்கும் குழந்தைகள் பிறந்துவிடும் போது—அவன் எந்தக் கடமைகளைத்தான் நிறைவோடு செய்துவிட முடியும்?

அந்தப் பொறுப்பு இந்தப் பிறவிக்கெல்லாம் போதும் என்கிறானே.

அவன் சொல்வது மெய்யல்லவா?

இல்லறத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்தக் கட்டத்தில் எத்தனை யெத்தனை பொறுப்புக்கள்தான் ரகுவின் தலை மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

பிழைபட எழுதேல்!

ஏறத்தாழ—சுமார்

'ஜெமினி மேம்பாலத்திற்கு ஏறத்தாழ சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று சொல்லப்படுகிறது' என்கிறோம். இதில், ஏறத்தாழ சுமார் என்று குறிப்பிடுவது தவறு. ஏறத்தாழ என்றோ சுமார் என்றோ மட்டும் குறிப்பிட்டால் போதும். அதாவது,

ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் செலவாகலாம்

அல்லது

சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவாகலாம்

என்றோ குறிப்பிடலாம். ஏறத்தாழ—சுமார் இரண்டும் ஒரே பொருளை உணர்த்தும் சொற்களே.

மணம் முடித்து ஈராண்டுகள் முடிந்து விட்டது. இதுவரை ஒன்றும் இல்லை. நாளை, அவனுக்கும் குழந்தை குட்டிகளென்று ஆகும் போது எங்குத் திரும்புவான்? எதைச் சமாளிக்கப் போகிறான்?

கலங்கிக் குளமாகி விட்ட கண்களை, பக்கத்திலிருப்பவர்கள் அறியா வண்ணம், குனிந்து மேல் துண்டால் துடைத்துக் கொண்டார் சுந்தரேசன்.

எதிர் காலத்தைப் பற்றியே நினைக்காதிருந்து, ஒரு தந்தை மகனுக்கு அளிக்கும் நல்வாழ்வா இது?

எவ்வளவு நொந்து கொண்டு சொல்லுகிறான் மகன்.

சுந்தரேசனுக்கு உடம்பே நடுங்கியது. நாக்கு வரண்டு விட்டது.

சேத்துப்பட்டில் வண்டி நின்றது.

தடுமாற்றத்துடன் எழுந்து, கும்பலைத் தள்ளிக் கொண்டு கீழே இறங்கினார்.

பல ஒட்டுக் குடித்தனங்களுக்குள்ளே — 'டோபிகானா'வின் எதிரே வீடு. அந்தப் பக்கமாகத் திரும்பக் கால்கள் தயங்கின. உடம்பு கொதிப்பது போலிருந்தது. வெகு நேரம் வரை, எதையெதையோ நினைத்தவாறு ரயிலடியிலேயே நின்று கொண்டிருந்தார்.

அப்போதே நிற்பதற்கும் சக்தியற்றவையாகக் கால்கள் துவண்டன.

வீட்டிற்குப் போய்ச்சேர்ந்து விட முடியுமா?

இரவு மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது.

ரகுபதியின் இல்லாள் மைதிலி ஒன்றும் ஓடாமல் வீட்டுக்கும் வாசலுக்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

நாலு மணி சுமாருக்குத் தாம்பரம் போய்த் திரும்புவதாகச் சொல்லிச் சென்ற மாமனார், இன்னும் வீடு திரும்பவில்லை. என்றைக்கும் இந்த நேரத்தில் இப்படிப் பெரியவர் வெளியில் தங்கியதே இல்லையே. எட்டு மணிக்கு அவர் வீட்டிற்கு வந்தவர், சாப்பிடக்கூட இல்லை. வந்த காலோடு அப்பாவைத் தேடி ஓடி இருக்கிறார்.

மைதிலிக்குக் கவலையாக இருந்தது.

மெதுவாக ஏறி வாங்க தாத்தா என்று பக்கத்து வீட்டுப் பையனின் குரல் கேட்டது.

மைதிலி முன் வாசலுக்கு ஓடினாள்.

மாமனாரைத் தான் தாங்கிப் பிடித்தவாறு அழைத்து வந்து கொண்டிருந்தான் பையன்.

"என்ன மாமா உங்களுக்கு'' என்று பதறிக் கொண்டே முன்னால் வந்தாள் மைதிலி.

'' தாத்தா பாலத்துக்கடியி யிலே விழுந்து கிடந்தார். நடக்கவே முடியலே '' என்றான் பையன்.

பதறிப்போன மைதிலி, மாமனாரைக் கைத்தாங்கலாக வீட்டிற்குள்ளே அழைத்துச் சென்று, முன் அறையில் கட்டிலிலே படுக்கச் செய்தாள். நெற்றியிலே கைவைத்துப் பார்த்த போது..

' என்ன மாமா இது. டாக்டரைக்கூப்பிடச்சொல்லட்டுமா?' என்று பயத்துடன் கேட்டாள் மைதிலி.

சுந்தரேசன் கையசைத்து விட்டு, கண்களை மூடிக்கொண்டார். இமைகளில் நீர் கோத்திருந்தது.

'' அவர் உங்களைத் தேடிட்டுப் போயிருக்கார். உடம்பு நெருப்பா இருக்கே '' என்றான் கலவரத்துடன்.

சுந்தரேசன் கண்களைத்திறந்து, அவளைப் பார்த்தார். முன் பிறவியில் செய்த புண்ணியமோ, மருமகள் குணவதியாக வாய்த்திருக்கிறாள்.

'' மைதிலி '' என்றழைத்தார்.

அவரது முகத்திற்கு நேராக முகம் கவிழ்ந்து,''என்ன மாமா?'' என்று பதட்டத்துடன் கேட்டாள் அவள்.

'' வாழ வேண்டிய உங்க தலையிலே பெரிய பொறுப்பைச் சுமத்திட்டேம்மா? அந்த நாளையிலேயே வருங்காலத்தைப் பத்தி நான் நினைச்சிருக்கணும் '' என்ற போது சுந்தரேசனின் கண்களில் நீர் வழிந்தது.

"இப்ப எதுக்குத் திடீருன்னு இந்தக் கவலை வந்திருக்கு உங்களுக்கு'' என்று விளங்காமல் கேட்டாள் மைதிலி.

''இல்லேம்மா, உங்க வாழ்வையே சீரழிக்க நானே காரணமா இருந்திட்டேன். நாளைக்கு உங்களுக்கும் குழந்தைகள் பிறக்கும் போது, இந்தப் பெரிய குடும்பத்தை எப்படியம்மா தாங்கப் போறான் ரகு?'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னார்.

'' நல்லா இருக்கு. இதைப் பற்றிக் கவலைப் பட்டுக் கிட்டிருந்தா தீருமா?'' என்றவள், சற்றுக் கழித்து, ''வீட்டிலிருக்கும் குழந்தைகள்தான் எங்களுக்கும். கல்யாணத்துக்கு முன்னாலேயே நாங்க முடிவு செய்திட்டோம்.'' என்றாள் மைதிலி.

'என்னம்மா சொல்றே மைதிலி' என்று நடுக்கத்துடன் கேட்டார் சுந்தரேசன்.

'' எங்களுக்குக் கல்யாணமாகி முதல் மாதத்திலேயே—உங்க மகன் குடும்பக் கட்டுப்பாடு செய்திருக்கார் மாமா '' என்ற மைதிலி, முகம் சிவந்து, தலை கவிழ்ந்து கொண்டாள்.

சுந்தரேசனின் குழிந்த விழிகளில் தேங்கி நின்றிருந்த கண்ணீர் மைதிலியின் உருவத்தை மறைத்தது.

கூட்டுறவுத் துறையின் 'நிப்' தொழிற்சாலை

பேனா நிப்புத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நாடெங்கிலும் 30-க்கு அதிகமாக இருந்தாலும் அவை யாவும் தனியார் துறையில் உள்ளவையே. இந்தியாவிலேயே கூட்டுறவுத் துறையில் நிப்புத் தயாரிக்கும் ஒரே ' நிப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசியில்தான் உள்ளது.

இத் தொழிற்சங்கத்தில் 141 உறுப்பினர்கள் உள்ளனர். வேலை செய்யும் பங்குதாரர்கள் 11 பேர் உள்ளனர். இத்தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தமிழ்நாடு அரசு பங்குத் தொகைக் கடனாக ரூ. 10,000 வழங்கியுள்ளது. தமிழ்நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி ரூ. 50,000 கடனாகவும், ரூ. 5,000 மானியமாகவும் வழங்கியுள்ளது.

இத்தொழிற்சாலை ஒரு மாதத்திற்கு ரூ. 9,000 மதிப்புள்ள 3,000 குரோஸ் நிப்புகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. நிப்புகள் தரமானவைகளாக உள்ளன. விரைவில், இத்தொழிற்சாலை பேனாக்களையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

சிற்பச் சிலம்பு

''ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஒரே மாதிரியான சிற்பக் கலையே தமிழ் நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது. பல தலைமுறைகளாகச் சிற்பிகளும் தாங்கள் செய்துவந்ததையே திரும்பத் திரும்பச் செய்து வந்தார்கள்.



ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது !

முதல்வர் கலைஞரின் முயற்சியால் கல்லிலே காப்பியம் உருவாகி வருகிறது.



தமிழக
இதற்கு முன்னர் வரலாற்றில்
தில் உள்ள இலக்கியத்
அனைத்தையும் பாத்திரங்கள்
வடித்ததில்லை. சிற்பத்தில்
யிலேயே புதிய சிற்பக்கலை
வாகி வருகிறது. திருப்பம் உரு
சிற்பக் இதனால்
வகையில் கலைஞர்களே புதிய
கள். உருவாகி வருகிறார்
அனைத்துக்கும் இந்தப் பெருமை
சும் முதல்வர் தமிழக அர
அவர்களுமே கலைஞர்
காரணம்''

ஒரே கல்லில் ஆன
சிலம்பு, இளங்கோ அடிகள்
சிலை போன்றவற்றுடன் சிலப்
பதிகார நிகழ்ச்சிகள் சிற்பங்
களாக வடிக்கப்பட்டுள்ளன.

என்கிறார் மாமல்லபுரத்தி
லுள்ள சிற்பக் கலைத்
தொழிற் பயிற்சிக் கூடத்
தின் கண்காணிப்பாளரான
சிற்பி கணபதி அவர்கள்.

அங்கேதான் சிற்பத்தில்
சிலம்பு உருவாகி வருகிறது.

பூம்புகாரில் விரைவில்
அமைக்கப்படவிருக்கும் சிலப்
பதிகாரக் கலைக் கூடத்திற்கான
சிலப்பதிகாரக் காட்சிகள் சிற்
பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.



மாமல்லபுரத்திற்கு இப்
பொழுது போகும் வெளி
நாட்டார்கள் எல்லாரும்
சிற்பக் கலைத் தொழிற்
பயிற்சிக் கூடத்தில் செய்யப்
பட்டுள்ள சிற்பச் சிலம்புக்
காட்சிகளைக் கண்டு வியக்கி
றார்கள். தங்களுக்கும்
இது போன்று செய்து தர
வேண்டும் என்று கேட்கிறார்
கள்.

எட்டரை அடி உயரத்தில்
செய்யப்பட்டுள்ள மாதவி
யின் சிலை மற்றும் பெரிய
அளவில் செய்யப்பட்டுள்ள
கோவலன், கண்ணகி சிலை
கள் காண்போர் கண்ணை
யும் கருத்தையும் ஒருங்கே
கவரும் வகையில் உள்ளன.

கல்லிலே கதை

ஒரு கதை முழுமையும் சிற்பங்களால் வடிக்கப்பட்டு இருப்பதைக் காணும் அயல் நாட்டவர்கள் மட்டுமல்ல, நாமும் வியப்புக்கு ஆளாகிறோம். முதன்முதலாகக் கதை முழுவதையும் சிற்பத்தில் வடிக்கும் முயற்சி இது தான்.

யுனெஸ்கோ நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரைட் அவர்கள் இந்தச் சிற்பங்களைப் பார்த்துப் பாராட்டியதுடன், வேறொரு முக்கியச் செய்தியையும் தெரிவித்தார்.



அவர் சொன்னார்:

"நான் உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஆனால், சிற்பக் கலையை இப்படிச் சொல்லிக் கொடுக்கும் சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் உலகில் வேறு எங்குமே கிடையாது. சோவியத் நாட்டில் சிற்பக் கலை மிகச் சிறு அளவில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்றாலும், அது முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. இதற்கு இணையாக வேறெங்கும் சிற்பக்கலை கற்பிக்கும் இடத்தைக் காண முடியாது."

ஆமாம், பேராசிரியர் ரைட் சொல்லியது போல் உலகிலேயே சிற்பக்கலை கற்பிப்பதில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ள மாமல்லபுரத்துச் சிற்பக்கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தில் உள்ள சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவாகியன அல்லவா சிலப்பதிகாரச் சிற்பங்கள்! அவைகள் சிறப்பாய் இருப்பதில் வியப்பேது !

காஞ்சிக்கல்

சிலப்பதிகாரச் சிற்பங்கள் அனைத்தும் காஞ்சிக்கு அருகிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள கற்களால் செய்யப்பட்டுள்ளன.

காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள பழைய சிவரம்பட்டு மலைக் குப்பத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கற்களால் இந்தச் சிற்பங்கள் செய்யப் பட்டுள்ளன.

ஏனெனில், தமிழ்நாட்டில் சிலைகள் செய்வதற்குரிய சிறந்த கற்கள் பழைய சிவரம் மலையில் உள்ளவைதாம்.

தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான கோவில்களில் உள்ள மூல விக்ரகங்கள் அனைத்தும் பழைய சிவரம் கற்களால் செய்யப்பட்டவைகளே !

ஆறு மாதங்களில்

சிலப்பதிகாரக் கலைக்கூடம் இன்னும் ஆறு மாதங்களில் பூம்புகாரில் அமைக்கப்பட்டு விடும். கலைக்கூடம் அமைக்கப்பட்ட பின்னர், மாமல்லபுரத்துச் சிற்பக்கூடம் இன்னும் பலமடங்கு புகழடையும் என்று சிலப்பதிகாரச் சிற்பங்களைப் பார்ப்பவர்கள் அனைவரும் கூறுகிறார்கள்.

1957 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ள சிற்பத் தொழிற் பயிற்சிக் கூடத்திலிருந்து இதுவரை 88 பேருக்கு மேல் பயிற்சி பெற்றுச் சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் இந்தியாவின் பல பாகங்களில் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் சிற்பக்கலை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துள்ளது. ஆனால், இடைக்காலத்தில் இந்தக் கலை மறைந்து விட்டது. எனவே, மறைந்து போன தமிழகச் சிற்பக்கலை மரபுகளை உயிர்ப்பித்து வளர்க்கும் உயரிய நோக்கோடு மாமல்லபுரத்துச் சிற்பக்கலைத் தொழிற் பயிற்சிக்கூடம் இயங்கி வருகிறது.

தமிழில்
சிற்பச் செந்நூல்

சிற்பக்கலை பயிலும் மாணவர்கள் சிற்பக் கலையைப் பயில்வது வடமொழியில்தான். தமிழ் நாட்டிலுள்ள சிற்ப நூல்கள் அனைத்தும் வடமொழியில்தான் உள்ளன. இடைக் காலத்தில் வடமொழி பெற்றிருந்த செல்வாக்கால் வந்த விளைவு இது ! தமிழில் இருந்த சிற்ப நூல்கள் அருகிவிட்டன. எனவே, இப்பொழுது தமிழக அரசின் முயற்சியால் சிற்பச் செந்நூல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

சிற்பக்கலைப் பயிற்சி

மாமல்லபுரத்துச் சிற்ப
கலைத் தொழிற் பயிற்சி
கூடத்தில் பயிலும் மாணவ
கள் நான்கு ஆண்டுக
அங்கே பயிற்சி பெறுகிறார்க

இரண்டாவது ஆண்
பச்சைக்கல்லில் சிற்பங்க
செய்யக் கற்றுக் கொள்கிற
கள். இந்தப் பச்சைக்க
வட ஆர்க்காடு மாவட்ட
போளூர்ப் பகுதியில் இருந்
கொண்டுவரப்படுகிறது.

இந்தச் சிற்பக் கூடத்தில் தயாரிக்கப்பட்டுள்ள சிலைகள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஹாலந்து முதலிய நாடுகளிலிருந்து வந்திருந்த வெளிநாட்டவர்கள் இங்கிருந்து ஏராளமான சிலைகளை வாங்கிச் சென்றுள்ளனர்.

கடந்த ஓராண்டு மட்டும் இங்கிருந்து ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிற்பங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைந்த பிறகு தமிழகச் சிற்பக் கலைக்கு ஒரு பொற்காலம் பிறந்தே தீரும்.

நான்காம் ஆண்டு இறுதி
குள் கருங்கல்லில் சி
வடிக்கப் பயிற்சி பெற்
விடுகிறார்கள். அறி
கூர்மையுடன் உடலுழைப்
சிற்பக் கலைக்குத் தேவை
படுகிறது.

கல்லிலே கலையை உருவாக்க அரும்பாடுபட்டு உழைக்கும் இக்கலைஞர்களின் திறன் நாளுக்கு நாள் மெருகேறி வருவது தமிழகச் சிற்பக் கலைக்கே உரிய சிறப்பாகும்.

மலையைச் சிலையாக வடிக்க நாள்தோறும் இங்கே தயாரிக்கப்படும் உளிகளும் ஏராளம். நாள்தோறும் உளிகளின் முனைகள் தோயப்படுகின்றன.

இந்தப் பயிற்சிக் கூடமே மேனுட்டாருக்கு அற்புதமாக இருக்கும்பொழுது, இங்கே உருவாகும் சிற்பச் சிலம்பின் சிறப்பினை எப்படி வார்த்தைகளால் வடிக்க முடியும்?



ஆழ்கடலில் மீன்பிடிக்க

அரசு தரும் பயிற்சி!

உதய சூரியன் தன் ஒளிக்கதிர்களை நீலவண்ணக் கடலிலே பாய்ச்சிப் பளபளப்பாக்கும் காலைநேரம்.

கடலோரப் பகுதிகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன; கட்டு மரங்கள் கட்டான இளைஞர்களைத் தாங்கி அலையோடு அழகாய் மிதந்து செல்கின்றன. பொன்னுய் மின்னும் அந்தக் காலை நேரக் காட்சியைக் கண்ணுரக் காணும் போதெல்லாம் நம் சிந்தனை சிறகடித்துச் செல்கின்றது.

உழைப்பின் சின்னமாய் உற்ருரையும், மற்ருரையும் பிரிந்து, பரந்த கடல்நீரிலே தம் பிழைப்புக்கு வழிதேடுகிருனே மீனவத் தோழன்— படகோட்டி, அவனை ஒருகணம் நினைத்தால். . . . . .

அவனுக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது?

பரந்து விரிந்த கடலில் பாறையும் பெருத்த மீன்களும் அவனைத் தாக்கக்கூடும்; புயலோ இடிமழையோ அவனைக் கடலிலே தள்ளக் கூடும். இவற்றையெல்லாம் சமாளிக்கும் மனத் துணிவு அவனுக்கு இருக்க வேண்டுமே, அது எப்படிவந்தது!

எல்லாம் பயிற்சிதான்: பயிற்சியால் வந்த அனுபவம் தான்!

இந்தப் பயிற்சிக்கு ஒரு பள்ளி இருக்கிறது, சென்னையில்! ஆம்! கடலிலே சென்று மீன் பிடிப்பது எப்படி? அதற்கான வழிமுறைகள் என்னென்ன? என்பனபோன்ற செயல்முறை விளக்கங்கள் அலைகடலிலேயே சொல்லித் தரப்படுகின்றன. இந்தப் பயிற்சி நிலையம் தோன்றுவதற்குக் காரணம் லுசின் என்னும் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர்தான். அவர் சொன்ன யோசனைகளின் பேரில் இது துவக்கப்பட்டது.

மக்களுக்குச் சத்துள்ள உணவை அளிக்க இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அத் திட்டங்களின்படி மக்களுக்கு மிக அதிக அளவில் புரதச்சத்து அடங்கிய மீன் உணவை வழங்குவதற்காகச் சில திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றுள் கடலில் விசைப்படகுகளைக் கொண்டு நவீன முறையில் மீன்களைப் பிடித்தல் முக்கியமான ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் முன்னேடியாக, விசைப்படகுகளைச் சரிவர இயக்கவும், பராமரிக்கவும், நவீன முறையில் மீன்களைப் பிடிக்கவும், மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன.

சென்னை அடையாற்றிலுள்ள இந்நிலையம் தவிர, தூத்துக்குடி நாகைப்பட்டினம், கடலூர், கொளச்சல், மண்டபம் முதலிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் செயலாற்றி வருகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்கள் ஆண்டு தோறும் 300 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன.

1961-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு அரசினர் மீனவர் பயிற்சி நிலையம் ஐம்பது மீனவ மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை இத்துறையில் தேர்ந்தவர்களாகத் தயார்ப்படுத்துகிறது. இவர்களுக்கான பயிற்சிக்காலம் பத்து மாதங்கள். பயிற்சியின்போது இவர்களுக்கு மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் இவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. முதலில் பத்துப் பேருடன் துவங்கிய இந்நிலையம்

உலகில் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 77,88,900,000 இராத்தல் அளவுள்ள மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக இத்தொழில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கின்றது. அதனினும் நார்வே, ஜப்பான் நாட்டிலும் கூடுதலான மக்கள் இத்தொழிலால் பயனடைகின்றனர்.

உலகில் 30,000 வகையான மீன் இனங்கள் உள்ளன. ஏரிகள், கடல், ஓடைகள் முதலியவற்றில் மீன்கள் கிடைத்த போதிலும் மீனே இல்லாத நீர் நிலைகள் சிலவும் உலகில் உள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆண்டுதோறும் 1,70,00,000 மக்கள் மீன் பிடிப்பதற்குரிய அனுமதிச் சீட்டுப் பெறுகின்றனர். மீனவர்களாக இருப்பவர்களில் குறிப்பிட்ட வயது வரை உள்ளவர்களுக்கும் உப்பு நீரிலே மீன் பிடிப்பவர்களுக்கும் இத்தகைய அனுமதிச் சீட்டுத் தேவையில்லை. எனவே, மீனைப்பிடிப்பவர்களின், மொத்தத் தொகை 30,000,000 ஆகும். அதாவது மக்கள் தொகையில் அறுவருக்கு ஒருவர் ஆவர்.

H23

தான். தென் மண்டலத்திலேயே முதலாவதாகத் தொடங்கப்பட்ட நிலையமாகும்.

மீன்பிடிப்புத் துறையில் தேர்ந்தவர்கள், இம் மாணவர்களுக்கு வகுப்பிலும், கடலிலும் பயிற்சி தருகிறார்கள். படிப்பதற்குப் பாட நூல் ஒன்றும் உள்ளது. அதன் பெயர் : 'கப்பல் வழிநிலை தெரிமுறை கடலாண்மை நூல்' (Elementary Navigation and Seamanship). இதுவரை பதினொரு அணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, இப்போது பன்னிரண்டாவது அணியைத் தயார்ப்படுத்துகின்றனர். கடந்த ஆண்டு பர்மா அகதிகள் பத்துப்பேருக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

முதலில் இம்மீனவ மாணவர்களுக்குப் பாடம்தான் முக்கியம். சூரிய மண்டலம், கிரகங்கள், பூமி, சந்திரன், தீர்க்கரேகைகள், அட்சரேகைகள், காந்தச் சக்தி, கடலின் தூரங்களையும் ஆழங்களையும் அளத்தல், புயல், காற்றுகள் முதலியவைகளைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். மேலும், கீழ்க்காணும் அடிப்படைக் கருத்துக்களும் போதிக்கப்படுகின்றன :

1. கப்பலோட்டும் கலையின் அமைப்பும், அடிப்படைப் படிப்பும், திசை காட்டுங் கருவியும் அதன் பயனும், அதனைப் பயன்படுத்தும் முறைகளும்.

2. கடலுக்குகந்த இயந்திரங்களை இயக்கும் முறைகளும் அவற்றைப் பராமரித்தலும்.

3. நவீன மீன்பிடி முறைகளும், இதற்கான புதிய சாதனங்களைப் பயன்படுத்தும் முறைகளும்.

இவை மட்டுமா?

மாணவர்களுக்குக் கடலில் செல்லும்போது எதிர்பாராமல் ஏதேனும் விபத்து நேர்ந்தால், முதல் சிகிச்சை அளிக்க வேண்டி இதற்கான முதல் சிகிச்சை வகுப்பும் நடத்தப்படுகின்றது.

பயிற்சி பெறும் மாணவர்களுக்குப் பொதுவாக எல்லா வகைகளிலும் செயல்முறைப் பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது மீனவர்களுக்கு இரண்டு நிலையில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. (1) நவீன மீன்பிடிப்புப் பாடமுறை. (2) இளையோர் இயந்திரவியல் பாட முறை.

இந்த நிலையத்தில் யார் வேண்டுமானாலும் சேரலாமா?

படிப்பறிவில்லா மீனவர்களும் ஐந்து ஆண்டுக் கடல் அனுபவம் இருந்தால் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி நிலையங்களில் (1) மீன் பிடிப்பு முறை, (2) மீன் பிடிப்புக் கருவி நுண்ணியல், (3) கப்பலோட்டும் கலையின் அடிப்படை அறிவு முதலியன போதிக்கப்படும் விரிவான பாடத் திட்டமாகும்.

இயந்திரங்களை இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் மாணவர்களின் செய்முறைப் பயிற்சிக்காக 30 குதிரை ஓட்டமுள்ள இரண்டு 30 அடிப் படகுகளும், ஒரு 67 குதிரை ஓட்டமுள்ள 32 அடிப் படகும் உள்ளது. இப்படகுகளின் மூலம் மாணவர்களைக் கடலுக்கு அழைத்துச் சென்று அங்கு, நவீன மீன்பிடி முறைகளையும் கப்பல் சாத்திரமும், இயந்திரங்களை இயக்கும் விதங்களையும், பராமரிக்கும் முறைகள் குறித்தும் செய்முறைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மீனவர்களுக்கு நவீன மீன் பிடிப்பு முறையில் பயிற்சி அளிப்பதல்லாமல், கல்வி அறிவுள்ள மீனவர்களுக்கு இயந்திர நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காக இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் அவர்களால் 'டீஸல்' இயந்திரங்களை 'சர்வீஸ்' செய்து கொள்வதற்கும் அவ்வப்போது இயந்திரங்களில் ஏற்படும் சிக்கல்களைப் பழுது பார்த்துக் கொள்வதற்கும், சிறு குறைகளைச் செப்பனிட்டுக் கொள்ளவும் ஏதுவாகிறது. கடல் மீன் பிடிப்பில் அனுபவமுள்ள எட்டாவது வகுப்பு வரை படித்த மீனவர்கள் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தவிர மீனவர்பயிற்சி, நிலையங்களில் படித்து வெற்றி பெற்ற மாணவர்களும் இரண்டு ஆண்டு விசைப் படகில் அனுபவம் பெற்றிருந்தாலும் இந்தப் பாட முறையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்தங்கிய சமூகத்தினருக்கும், பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெற வாய்ப்பு உண்டு. இப்பயிற்சி நிலையத்தில் சேரும் மாணவர்கள் 18 வயதுக்குட்படாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். குறைந்தது ஐந்தாம் வகுப்பு வரையிலாவது படித்திருக்க வேண்டும். ஆனால், படிப்பில்லாமல் குறைந்தது 5 ஆண்டுக் கடலில் மீன் பிடிப்பில் அனுபவம் பெற்றிருந்தால் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மீன் பிடிப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது வலை. இந்த வலையில் தான் எத்தனை வகை : (1) வழி வலை, இது கடல் நீரோடு மேல் மட்டத்தில் மிதந்து படகோடு வரும். (2) இழு வலை—இது நீரில் ஆழ்ந்து மீன்களை இழுத்துவரும். (3) தடுப்பு வலை—நீருக்கு அடியில் நிற்கும். (4) செவுள் வலை-மீனின் செவுளில் மாட்டி இழுத்துவரும். இவை பெரும்பாலும் நைலானால் பின்னப்படுகின்றன. ஒரு நைலான் வலையின் விலை சுமார் 400 ரூபாய். இந்த வலைகளை உபயோகிக்கும் முறைபற்றி விசைப் படகின் மூலம் கடலில் கற்றுத் தருகிறார்கள். கடலில் பயிற்சி வகுப்பு காலை ஆறு மணிக்கே தொடங்கிவிடும். சுமார் பத்து மைல் தூரம் வரைதான் இந்தப் பயிற்சி நடைபெறும். காரணம், பயிற்சிக்கு மட்டுமே படகு செலுத்தப்படுகிறது. வியாபார நோக்கில் மீன்களைப் பிடிக்க அல்ல. ஆகவே, பயிற்சிபெறும் மாணவர்களுக்கு அதிகத் தொந்தரவு இல்லாதிருக்கவும், அதிக தூரம் போவதற்கு உணவு முதலிய வசதிகள் இல்லாததாலும் இந்த அளவில் பயிற்சி தரப்படுகிறது.

கடலில் மீன்கள் பிடிக்கும்போது பருவ நிலை ஒரே மாதிரியாகவா இருக்கும்? புயல், காற்று. இடி, மழை, மின்னல் இப்படி இயற்கைச் சக்திகளோடு மீனவன் போராட வேண்டி வருமே? நிலப் பகுதியாக இருந்தால் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம். அலை மோதும் கடலில் என்ன செய்ய முடியும்? முதலில் ஒரு மீனவன் பருவ நிலைகளை நன்கு அறிந்தவனாக இருக்க வேண்டும். புயல் வருவதை எப்படி அறிந்து கொள்வது?

வெப்பத்தின் காரணமாக உண்டாகும் காற்றின் அழுத்த மாறுபாடுகளால் புயலும், சுழற்காற்றும் ஏற்படுகின்றன. காற்றின் அழுத்த மாறுபாடுகளைத் தெளிவாகக் காட்டுவது பாரமானி என்னும் கருவியாகும். குழப்பமான வானிலை ஏற்படும் போது மணிக்கொருதரம் பாரமானியைக் கவனித்துப் புயல் அனுகுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். இவை தவிர, வானில் பலவகைக் கருமேகங்களும் கடல் கொந்தளிப்பும் ஒரே திசையில்லாத கோரக் காற்றும் குறிப்பாகப் புயலின் ஆபத்தை உணர்த்தலாம். இவை பற்றியெல்லாம் இங்குக் கற்றுத் தரப்படுகின்றன.

மிகவும் கொந்தளிப்பான கடலில் பெரிய அலைகள் எழுந்து, வெண்ணுரையுடன் உடைந்து பாயும் இடங்களில் கப்பல்கள் நாலா பக்கமும் உழன்று நிலைதடுமாறும். அந்தச் சமயத்தில் என்ன செய்ய வேண்டும்?

எண்ணெய் இந்தச் சமயத்தில் நமக்குக் கைகொடுத்து உதவுகிறது. பொங்கும் அலைகளைத் தணிக்க 'மோபில் ஆயிலை'க் கொஞ்சம் கொஞ்சமாக, பலமான காற்றுத் தாக்கும் பகுதியில் கொட்டினால் காற்றின் சீற்றம் கொஞ்சம் தணியும்! கப்பலும் கவிழாமல் பாதுகாக்கப்படும்.

கடலில் ஆழங்களைத் தெரிந்து கொள்வது எப்படி?

கப்பல்கள் கடலில் செல்லும் போது அவ்வப்போது தண்ணீரின் ஆழம் எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். துறைமுகங்களிலும் ஆழம் குறைந்த பாகங்களிலும் செல்லும் போது கப்பலை அபாயமில்லாமல் செலுத்த ஆழங்களை அறிந்து கொள்வது முக்கியமாகும். இதற்கு 'எக்கோ சவுண்டிங் மெஷின்' என்னும் கருவி பயன்படுகிறது. கடல் நீரில், ஒலி, வினாடிக்கு 5,000 அடி வீதம் செல்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த ஒலி அலைகளைக் கடலின் அடியைத்தட்டித் திருப்பிக் கப்பலின் அடித்தளத்திற்கு எதிரொலியாக வந்து சேரும் நேரத்தை இந்த இயந்திரம் கணக்கிட்டு, அதை அடிகளாக மாற்றி அதில் பாதியைக் கடலின் ஆழம் என்று காட்டுகிறது.

பயிற்சின்போது நிறைய மீன்கள் பிடிபடும். அவைகளைக் கெடாமல் பத்திரமாகக் கொண்டுவர வேண்டும். கரையிலிருந்து போகும்போதே பனிக்கட்டி கொண்டு செல்வார்கள். பிடித்த மீன்கள் கெடாமலிருக்கப் பனிக்கட்டியைப் பயன்படுத்திக் கொள்வார்கள். பெரிய மீன்கள் பிடிபட்டால் அதன் குடல்களை எடுத்து விடுவார்கள். இதனால் மீன் கெடாது. இவ்வாறு பிடிபட்ட மீன்கள் பிறகு விற்கப்பட்டு விடும்.

மீனவர் வசதிக்கேற்பவும், அதே சமயத்தில் மீன்பிடி தொழிலில் பயன்படும் விதத்திலும் விசைப்படகுகள் 25 அடி, 30 அடி, 32 அடி, நீளங்களில் செய்யப்படுகின்றன. விசைப்

படகுகள் கட்டும் தொழிற்சாலைகள் சென்னை இராயபுரத்திலும், நாகைப்பட்டினம், மண்டபம் ஆகிய இடங்களிலும் இருக்கின்றன. 30 அடி நீளமுள்ள ஒரு விசைப்படகின் விலை ரூ. 40,000. அப்படியானால் இவ்வளவு விலை கொடுத்து ஒரு மீனவனால் இந்தப் படகை விலைக்கு வாங்க முடியுமா? முடியும்! கடந்த இருபது ஆண்டுகளில் இதர தொழில்கள் பெருகிச் சிறப்புற்ற வகையில் மீன் பிடி தொழில் முன்னேற்றம் அடையவில்லை. அதிக மீன்களைப் பிடித்துத் தொழிலைத் திறம்பட நடத்தி மீனவர் சமுதாயம் உயர்நிலையடையப் பல வசதிகள் தேவைப்படுகின்றன. மீனவர் தேவைகளைப் பரிசீலனை செய்து உணர்ந்து நிவாரணமளிக்க அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றில் ஒன்றுதான் மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்குவது.

கட்டுமரங்கள், பாய்க்கப்பல்கள் இவற்றைக் கொண்டு காற்றையும், கடலையும் நம்பித் தொழில் செய்யும் நம் மீனவரின் உடலுழைப்பும் நேரமும் அதிக விரயமாகின்றன. இவ்விதமாகச் சுமார் 2½ இலட்சம் மீன்பிடி தொழிலாளர்கள் இன்னலுற்றுத் தகுந்த பலன் காணாமல் வறுமையில் வாடுகின்றனர். எனவே, நவீன சாதனங்களை உதவி அவர்களுக்கு ஊக்கமளித்து மீன்பிடி தொழிலை நல்லமுறையில் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தொழிலில் இலாபமடைந்தால் மீனவர் வாழ்க்கையும் வளம் பெறும்.

மீனவர் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசினர் மேற்கொண்டுள்ள பல திட்டங்களில் மிகவும் முக்கியமானவை மீனவர்களுக்கு விசைப்படகுகள், நைலான் நூல் சகாய விலையில் வழங்குவது. காற்றை எதிர்நோக்கி அல்லது தண்டு வலித்துக் கட்டுமரங்களையும், படகுகளையும் கொண்டு கடலில் மீன் பிடி இடங்களை அடைய அதிக நேரமும், உடலுழைப்பும் வீணாகின்றன. மேலும் கடலில் தங்கி அதிக நேரம் மீன்பிடிக்க இயலாமலிருக்கிறது. கிடைத்த மீன்கள் பதங்கெடுவதற்கு முன்பு கரைசேர வேண்டியிருக்கிறது. இந்தக் குறைகளையும், மீனவர் காலத்தையும், திறனையும் வீணாக்காமல் விரைவில் சென்று அதிக நேரம் மீன்பிடிக்க உதவுவது விசைப்படகு. கடலில் அதிக நேரம் தங்கி மீன்பிடிப்பதைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விசைப்படகுகள் தவணை முறையில் வழங்கப்படுகின்றன.

ஒரு படகை நான்கைந்து பேர் கூட்டாகச் சேர்ந்து வாங்கிக் கொண்டு, பத்தாண்டுக் காலத்துக்குள் தவணையில் அந்தப் பணத்தைக் கொடுத்து விடலாம். இந்நிலையில் பயிற்சி முடிந்தவர்களுக்கோ, அல்லது தனிப்பட்ட இந்தப் படகுகள் வழங்கும் திட்டம் வகை செய்கிறது. இதுவரை 1,200 படகுகள் தவணை முறையில் கொடுக்கப்படுகின்றன.



தமிழ்நாட்டில் மீன் உணவாம் சத்துணவை அதிக அளவில் வழங்கும் கடற்பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ள கரையோரப் பகுதி 1,000 கிலோ மீட்டர் நீளமுடையதாகும். இந்தியாவின் கடலோரப் பகுதியில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்காகும். இந்தியாவில் ஒன்பது கடற்கரை வளமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இது இந்தியாவின் மொத்த நிலப்பகுதியில் 20 சதவிகிதமாகும்.

ஆழ்கடலில் கிடைக்கும் செல்வங்கள் கணக்கிலடங்காதவை. அவற்றுள் ஒன்றான மீன்கள் ஆண்டொன்றுக்கு 5,942 டன் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மதிப்பு ரூ. 248.69 இலட்சங்களாகும். கடல் மீன் உற்பத்தி 1,58,487 டன். இதன் மதிப்பு ரூ. 1,791 இலட்சங்கள். படகு கட்டுதல், பயிற்சி நிலையம், மீன்பிடித்தல் முதலானவற்றுக்காக அரசு செலவிடும் தொகை ரூ. 47,74,500.

மீன் வளம் கொழிக்க அரசு பல்வேறு வகைகளில் சிறந்த திட்டங்களைத் தீட்டிவருகிறது. குறிப்பாக மீனவச் சமுதாயம் அரசு தரும் நல்வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிற நாடுகள் போற்றும் அளவுக்கு மீன் உற்பத்தித் துறையில் மேலோங்கி நிற்குமாக!

மழலை

இளங்கோ

செந்தமிழ் முதலும் நீயே
சிவப்பணுத் திரளும் நீயே
சிந்தனைத் தேனும் நீயே
திங்களின் நலமும் நீயே
சொந்தமுந் துணையும் நீயே
சுவைதரும் விருந்தும் நீயே
வந்தனைக் குரியை நீயே
மயக்கிசைப் பாடல் நீயே !

பனிமழைக் குளிரும் நீயே
பரிதியின் ஒளியும் நீயே
தனிமனைப் பேறும் நீயே
தமிழ்க்கடல் முத்தும் நீயே
கனிந்தநல் வரவும் நீயே
கவிதையின் நயமும் நீயே
இனிமையின் வடிவம் நீயே
இன்புறும் பாலும் நீயே !

மாந்தளிர்க் கொழுந்தும் நீயே
மரகதச் சிலையும் நீயே
நீந்திடுங் கனவும் நீயே
நிழல்தரும் தருவும் நீயே

சாந்தியின் வானம் நீயே
சந்தனப் பொதிகை நீயே
காந்தமும் விசையும் நீயே
கருணையும் நிதியும் நீயே !

காரிருள் விளக்கம் நீயே
கன்னலின் சாறும் நீயே
ஆரமும் அணியும் நீயே
அருண்மொழிச் செல்வம் நீயே
வீரமுந் துணிவும் நீயே
வெற்றியின் விருதும் நீயே
சீரிய கூத்தும் நீயே
தென்றலின் மணமும் நீயே !

உயிர்உடற் கூட்டும் நீயே
உணர்ச்சியின் உருவம் நீயே
பயிர்களின் பசுமை நீயே
பரம்பரைச் சொத்தும் நீயே
முயற்சியின் விளைவு நீயே
முன்னுரைப் படிவம் நீயே
மயக்கமுந் தெளிவும் நீயே
வாழ்க்கையின் பிணைப்பும் நீயே !



ஏழையின் தோழன்

எச்.பி.3.கம்பு

"அத்தான்! பொங்கலுக்கு எனக்குப் புடவை வாங்கி வரவில்லையா? குழந்தைகளுக்குச் சட்டை தைத்து வரவில்லையா? வெறுங்கையோடு திரும்பி வந்திருக்கின்றீர்களே!'' என்று கேட்டாள் கைக்குழந்தையுடன் உட்கார்ந்திருந்த அன்னம்.

"நாளை வாங்கி வருகிறேன்''

"கம்பு விற்கப் போனீர்களே! விற்கவில்லையா?''

"விற்று விட்டேன்!'' என்று கூறி விட்டுக் கீழே உட்கார்ந்து, தன் சட்டைப் பையில் இருந்த பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதிலிருந்த பத்து ரூபாய் நோட்டுகளை எண்ணிக் கொண்டிருந்தான் எழிலரசன்.

அன்னம் ஆவலுடன் பத்து ரூபாய் நோட்டுகளை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். எழிலரசன் மீண்டும் மீண்டும் நோட்டுகளைத் திருப்பித் திருப்பி எண்ணிக் கொண்டிருந்தான்.

"என்ன அத்தான்! உங்களுக்குப் பணப் பைத்தியம் பிடித்து விட்டதா?''

எழிலரசன் எந்தவிதப் பதிலும் கூறாமல், நோட்டுகளை எண்ணுவதிலேயே முனைந்திருந்தான். அதுகண்ட அன்னம் பொறுமை இழந்து எழுந்தாள்.

"அவசரப்படாதே! சற்று நேரம் பேசாமல் உட்கார்!'' என்று எழிலரசன் கூறினான்.

அன்னம் மீண்டும் உட்கார்ந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு, பத்து ரூபாய் நோட்டுகளை மீண்டும் காகிதத்தில் மடித்து அன்னத்திடம் நீட்டினான்.

"பணம்தான் கிடைத்திருக்குதே. புடவையும், சட்டைகளும் வாங்கி வந்திருக்கலாமே!'' என்றாள் அன்னம்.

"வாங்கி வந்திருக்கலாம்; ஆனால், பணத்தைச் செலவு செய்ய மனம் வரவில்லை!''

"ஏன்?''

"எனக்கும் வயது முப்பது ஆகிறது. நானும் பத்து ஆண்டுகளாக நிலத்தில் பாடுபட்டு வருகின்றேன். இதுவரை இவ்வளவு பணத்தை நான் பார்த்ததில்லை! பணத்தின் மேல் ஏற்பட்ட ஆசையினால், செலவிட மனமில்லாமல், ஒரு நாளைக்காவது இந்தப் பணம் முழுவதையும் நம் வீட்டில் வைத்திருக்கணும் என்று ஆசைப்பட்டே பேசாமல் வந்து விட்டேன்.''

"கம்பு விற்று அப்படி என்ன ஆயிரம் இரண்டாயிரமா கொண்டு வந்து விட்டீர்கள்?''

"ஆயிரமும் இல்லை; இரண்டாயிரமும் இல்லை. மூவாயிரம் ரூபாய்!''

"மூவாயிரமா?''

"உஸ்..சத்தம் போடாதே! மெதுவாகப் பேசு! யாரோ வருகிறார்கள்'' என்று கூறிவிட்டு எட்டிப் பார்த்தான் எழிலரசு. எழிலரசனின் எட்டு வயது மகன் செங்குட்டுவன் பள்ளியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான்.

அப்பாவைக் கண்ட செங்குட்டுவன் "தீபாவளிக்கே எனக்குப் பட்டாசும், சட்டையும் வாங்கித் தரவில்லை. பொங்கலுக்கு வாங்கித் தருகிறேன் என்று கூறினீர்கள். பொங்கல் இன்னும் 2 நாள்தானே இருக்கிறது. எப்பொழுது சட்டை வாங்கி வரப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

தீபாவளி என்றதுமே எழிலரசனுக்குப் பழைய நினைவுகள் வந்தன

விடிந்தால் தீபாவளி! ஊரெங்கும் 'திடீர்!' 'திடீர்!' என்று வெடிச்சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. 'பட்டாசு வாங்கிக் கொடு', 'சட்டை வாங்கிக் கொடு' என்று செங்குட்டுவன் அடம் பிடித்தான். கையில் காசில்லாததால், தன் பிள்ளை விரும்பிக் கேட்பதை வாங்கிக் கொடுக்க முடியாத எழிலரசன் செங்குட்டுவனை அடித்து விட்டான். செங்குட்டுவன் அழுது கொண்டே அயர்ந்து தூங்கி விட்டான். காலையில் எல்லா வீட்டிலும் இட்லி, தோசை, வடை என்று இருந்தன. ஆனால், எழிலரசன் வீட்டில் பழைய சோறுதான் இருந்தது. அதைச் சாப்பிட விரும்பாத செங்குட்டுவன் எழுந்து விளையாடச் சென்று விட்டான். அதைப் பார்த்த அன்னத்திற்கு மனம் பொறுக்காமல், "பட்டாசும், சட்டையும் வாங்கி வருகிறேன் என்று பணத்துடன் போனீர்கள். அவைகளை வாங்கி வராமல், கடனுக்கு வட்டி கொடுத்து விட்டதாகச் சொல்லித் திரும்பி விட்டீர்கள். செங்குட்டுவனுக்கு நம்ம கஷ்டம் தெரியுமா? சோறு கூடச் சாப்பிடாமல் கோபமாகப் போகிறானே!'' என்றாள்.

"கடனைக் கொடு அல்லது வட்டியைக் கொடு என்று பெரிய பண்ணையார் மறித்து விட்டார். மானம்தான் பெரியது என்று எண்ணி அந்தப் பணத்தை வட்டியாகக் கொடுத்து விட்டேன். இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே?'' என்று எழிலரசன் கோபமாகப் பேசினான்.

அன்னம் பேசாமல் இருந்து விட்டாள். எழிலரசன் வீட்டை விட்டு வெளியே வந்தான். தெருவில் குழந்தைகள், வண்ண வண்ணச் சட்டையுடன் பட்டாசு கொளுத்திக் கொண்டிருந்தன. அதைக் கவலையுடன் செங்குட்டுவன் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தான். யாரிடமாவது கடன்கேட்டுப் பார்க்கலாம் என்று எண்ணிப் பக்கத்து ஊரை நோக்கி 'விடு விடு' என்று நடந்தான். அங்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் துணை வேளாண்மை அலுவலர் முத்துவை எதேச்சையாகச் சந்தித்தான். தன் நிலையை விளக்கினான்.

எழிலரசனின் நிலையைக்கேட்டு வருத்தப்பட்ட முத்து 85 நாட்களில் மானாவாரியாக விளையக்கூடிய எச். பி. 3 கம்பு பயிரிடும் முறையை விளக்கி அதற்கு வேண்டிய விதை, உரம், மருந்து ஆகியவைகளைக் கடனாய்த் தருவதாகச் சொல்லிக் கடன் மனுவில் கையெழுத்து வாங்கிக் கொண்டு அவைகளைக் கொடுத்ததுடன், தன் கையிலிருந்த 2 ரூபாயைக் கொடுத்துப் பட்டாசும் வாங்கிக் கொடுத்தார். அந்தப் பட்டாசுகளை வெடித்துச் செங்குட்டுவன் மகிழ்ந்தான். அன்றிரவு நல்ல மழை பெய்தது. மறுநாளே 6 ஏக்கரிலும் முத்து கூறியபடி எழிலரசு எச். பி. 3. கம்பு விதைத்தான். அதிலிருந்து ஏக்கருக்கு 900 கிலோ மகசூல் வீதம் கிடைத்தது. அவ்வாறு கிடைத்த 5,400 கிலோவில் 5,000 கிலோவைக் குவிண்டால் ரூபாய் 60 வீதம் விற்று விட்டு வந்ததில் கிடைத்த ரூபாயே 3,000.

* * *

பழைய நினைவுகள் ஏற்பட்டதால், அந்த ரூபாய் 3,000 கிடைப்பதற்குக் காரணமாயிருந்த முத்துவை மனமார வாழ்த்தினான். முத்துவைக் கண்டு நன்றி தெரிவிக்க விரும்பினான். தன் மனைவியிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான்.

"நாளையே போய் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு வாருங்கள்!'' என்றாள் அன்னம்.

மறுநாள் முத்துவைப் பார்க்க மாலையும் கையுமாகச் சென்றான். முத்து அலுவலகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். திடுதிப்பென்று அவர் கழுத்தில் மாலையைப் போட்டு விட்டு, கையில் ஒரு எலுமிச்சம் பழத்தையும் கொடுத்து விட்டு, பொங்கல் வாழ்த்து ஒன்றை நீட்டினான் எழிலரசு.

"அன்பு இருந்தால் போதும்! ஏனுங்க இதெல்லாம்?'' என்றார் முத்து.

"ஐயா, உங்க உதவியால் 6 ஏக்கர் எச். பி. 3 கம்பு மூலம் எனக்கு ரூபாய் 3,000 வருவாய் கிடைத்துள்ளதுங்க! உங்கள் உதவியை என்றும் மறவேன்!''

"அப்படியா? மிகவும் மகிழ்ச்சி! பணத்தை வீணாகச் செலவு செய்து விடாமல், கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டு, முன்னேற முயலுங்கள்'' என்று கூறிவிட்டு ஏதோ ஒரு சிறு புத்தகத்தை எடுத்து "இந்தாங்க வேளாண்மைத் துறையின் பொங்கல் பரிசு'' என்று கூறிக் கொடுத்தார். பிரித்துப் பார்த்தால் அதில் பொங்கல் வாழ்த்தும், ஐ. ஆர். 20 நெல் பயிரிடும் குறிப்பும் அடங்கியிருந்தது.

"ஒரு ஏக்கர் நன்செய் நிலம் பயிரிடாமல் கிடப்பதாகச் சொன்னீர்களே! அதில் ஐ. ஆர். 20 நெல் பயிரிடலாமே! ஐ. ஆர். 20 நெல் பயிரிட இது நல்ல பருவம். பணம்தான் கையிலிருக்கே! பயிரிட்டுப் பாருங்களேன்!'' என்றார் முத்து.

"ஒரு ஏக்கருக்கு ஐ. ஆர். 20 நெல் விதை கொடுங்கள்'' என்று கேட்டு வாங்கிக் கொண்டு, "ஐயா எனக்குத் தீபாவளி அன்று 2 ரூபாய்க்குப் பட்டாசு வாங்கிக் கொடுத்தீர்களே! அந்தப் பணத்தைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறி 2 ரூபாயை முத்துவிடம் நீட்டினான் எழிலரசன்.

"மன்னித்து விடுங்கள்! அந்த 2 ரூபாயை உங்களுக்குச் செலவிடவில்லை. உங்கள் குழந்தைக்குத்தான்! அதுவும் தீபாவளிப் பரிசாகத்தான் கொடுத்தேன். கடனாக அல்ல! எனவே தயவு செய்து வேண்டாம்''

"ஐயா, உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே புரியவில்லை.''

"நன்றி சொல்ல வேண்டிய அவசியமே இல்லைங்க! நான் என் கடமையைத் தானே செய்தேன். அதற்கு எதுக்குங்க நன்றி?''

"கடமையைச் செய்தாலும், அதை அன்புடனும் ஆர்வத்துடனும் செய்தீர்கள்! உடனடியாகக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்தீர்களே! அதற்காகவாவது நன்றி செலுத்தணுமே!''

"பேரறிஞர் அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று கூறித் திட்டமிட்டார். அதைத் திறமையோடு செயல் படுத்தி வருகிறார் நமது முதல்வர் டாக்டர் கலைஞர். விதைப்பதற்குக் கடன் கேட்டால், அறுவடை முடியும் வரை கடன் கிடைக்காத காலம் ஒன்றிருந்தது. அதை மாற்றி உடனுக்குடன் கடன் கிடைக்க வழி செய்தார் நம்

முதல்வர். எனவே, உங்கள் நன்றியும், பாராட்டும் அண்ணாவுக்கும் கலைஞருக்குமே உரியது!''

'' சின்னஞ்சிறு விவசாயியாகிய நான் அவர்களுக்கு எப்படிங்க நன்றி தெரிவிக்க முடியும் ?''

'' நீங்கள் சாகுபடி செய்த முறைகளை எல்லாம் சொல்லி, மற்ற உழவர்களையும் அதுபோல் செய்யச் சொல்லி, அவர்களையும் முன்னேற்றப் பாடுபட வேண்டும். அதுவே, நீங்கள் அண்ணாவுக்கும் கலைஞருக்கும் செலுத்தும் நன்றிக் கடனாகும் !''

'' அப்படியே செய்யுறேனுங்க ! வணக்கம் ! போய்வருகிறேனுங்க '' என்று கூறி முத்துவிடம் விடைபெற்றுக் கொண்டு எழிலரசு புத்துணர்வுடன், அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான். தன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும், புடவையும் சட்டைகளும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

மறுநாள் பொங்கல் ! பொங்கலைச் சீரோடும் சிறப்போடும் கொண்டாடி மகிழ்ந்தான். மூன்றாம்நாள் மாட்டுப் பொங்கல் !

'' பொங்கலோ ! பொங்கல்!' என்று செங்குட்டுவன் கூவுகிறான். அதைக் கண்டு எழிலரசனும் அன்னமும் மகிழ்கிறார்கள். அந்த மகிழ்ச்சிக்குக் காரணமான முத்துவை அவர்கள் நினைக்கத் தவறவில்லை.

அன்றிரவு '' பால் பொங்கியதா ?'' என்று கேட்டுக்கொண்டு ஏழை எளியவர்கள் எழிலரசன் வீட்டிற்கு வந்தார்கள். அலங்கரிக்கப்பட்ட அண்ணா—கலைஞர் படத்திற்கு அருகில் அமர்ந்து கொண்டு எழிலரசன் அவர்களுக்கெல்லாம் வெற்றிலை பாக்குக் கொடுத்துக் கொண்டிருந்தான். அன்னம் அவர்களுக்குச் சோறும், சாம்பாரும், வடையும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

'' என்னைப் போல் நீங்களும் எச். பி. 3 கம்பு பயிரிட்டால் உங்கள் வருவாய் பெருகும் ! வாழ்வும் வளம் பெறும் !'' என்று எழிலரசன் இடையிடையே சொல்லிக் கொண்டிருந்தான்.

பிழைபட எழுதேல் !

துணைவியார்க்கு—துணைவியர்க்கு

துணைவி என்பதனோடு ஆர் விகுதி சேர்த்தால் துணைவியார் என்றாகும். 'தங்கள் துணைவியார்க்கு எங்கள் அன்பையும் வணக்கத்தையும் தெரிவியுங்கள்' என்றே எழுத வேண்டும். அதை விடுத்துத் தங்கள் துணைவியர்க்கு என்று எழுதுவது பிழை. துணைவியர்—பன்மை. துணைவியார் என்பதே ஒருமை.

Your deposits with

THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS

Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy.

Schedule of Rates.

	Per cent per annum.
Current Account	0·50
Savings Bank account (on monthly minimum balances)	4·00
SEASON DEPOSITS—Rs. 1,000 and over	
15 days	2·00
46 days	3·00
FIXED DEPOSITS—Rs. 100 and over	
91 days	4·75
6 months	5·25
12 months	6·25
24 ,,	6·75
36 ,,	7·25
60 months and over	7·50

Additional—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions.*
Interest Paid Monthly on Rs. 1,000 and over and for periods of one year and over.

RECURRING DEPOSITS—

Rs. 5 per month in

Months		12	24	36	48	60	72	84
Yields	Rs.	62	128·50	201	278	362·50	452	548·50

Local Branches—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Keliys. Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai).

Opening shortly: Nungambakkam and Jawaharnagar.

R. KANAKASABAI,
Chairman.

P. N. T. CHARY,
Secretary.

மெத்த வளருது சேலம்!

சேலம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருப்பது சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை. இந்த ஆலை எண்ணற்ற ஏழை நெசவாளர்களுக்கு வாழ்வளித்து வருகிறது. மனிதனின் இன்றியமையாத் தேவையான உணவு , உடை, இருப்பிடம் ஆகியவற்றுள் மானத்தைக் காக்கும் ஆடைகளை உருவாக்கித் தருகின்ற நெசவாளர்களின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் பல திட்டங்கள் இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய அரசினரால் நியமிக்கப்பட்ட விசைத்தறி வளர்ச்சிக் குழு, தமிழ்நாட்டிற்கு 12,500 விசைத்தறிகள் ஒதுக்கப் பரிந்துரை அளித்துள்ளது. இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட நெசவாளர்களுக்கும், 12,500 விசைத்தறிகளைத் திட்டமிட்ட அடிப்படையில் சிறிது சிறிதாக முடிவு செய்தது.

புதியதோர் ஆலை அமைப்போம்

இந்த விசைத்தறிகளுக்கு, வேண்டிய பாவுகள், நூலிலிருந்து பாவுகளாகத் தயாரிக்கப்பட்டு பாவுகளாகவே முதன் முதலில் 1,000 விசைத்தறிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் சேலம் கூட்டுறவு நூற்பு ஆலையில் ஒரு பாவு ஆலையும், மதுரை (ஓமலூர்) கூட்டுறவு நூற்பாலையில் ஒரு பாவு ஆலையும் தொடங்கத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது.

இந்தத் திட்டத்தின்படி இந்நூற்பு ஆலையில் 1,000 விசைத்தறிகளுக்குப் பாவுகள் வழங்கும் நோக்கத்துடன் இந்த விசைத்தறிப் பாவு ஆலை திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்நூற்பாலையில் உற்பத்தியாகும் நூலையும் தேவையானால் இதர கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தியாகும் நூலினையும் பாவுகளாக மாற்றி, கஞ்சிப் பதப்படுத்திப் பாவுகளாக விற்பதே இந்த விசைத்தறிப்பாவு ஆலையின் செயல் முறையாகும். இதன்படி இவ்வாலை தற்போதிருக்கும் 14,080 கதிர்களிலிருந்து அடுத்த ஆண்டு 25,000 கதிர்களாக வளர இருக்கிறது. இதனால் புதியதாக நுழைக்கப்படும் கதிர்களில் தற்பொழுது இந்த ஆலையில் உற்பத்தியாகாத ரகங்களான 34;40 ரகங்களையும் உற்பத்தி செய்வோமானால் நமது விசைத்தறிப்பாவு ஆலைக்கு வேண்டிய நூல் ரகங்கள் ஏறக் குறைய அனைத்தும் (அதாவது 34; 40; 60; 80; 100) நாமே உற்பத்தி செய்கிற தன்னிறைவு அடைய இயலும்.



மூன்று நிலைகள்

நெசவுப் பாவு உற்பத்தியில் வைண்டிங் (Winding) வார்ப்பிங் (Warping) சைசிங் (Sizing) (அதாவது நூல் கம்புகளையாகச் சுற்றுதல், பாவு ஆக அமைத்தல், கஞ்சியினால் பதப்படுத்தல்) என்ற மூன்று கட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் வைண்டிங் இந்நூற்பாலையிலேயே அமைந்திருக்கிறது. ஆகவே புதிதாக ஏற்படுத்தப் படுகிற விசைத்தறிப் பாவு ஆலையில் ஏற்படுத்த வேண்டிய இருகட்டங்கள், பாவு அமைத்தலும், பதப்படுத்தலுமேயாகும். முதன் முதலில் பாவு அமைக்கும் இயந்திரத்தின் மூலம் சிறிய பாவுகள் (அதாவது சுமார் 300-லிருந்து 400 இழைகள் கொண்ட பாவுகள்) தயாரிக்கப்படுகின்றன.

பாவு அமைத்தலும் பதப்படுத்தலும்

நெசவுக்கு வேண்டிய பாவுகள் சுமார் 54 அங்குல அகலத் துணிக்குச் சுமார் 2,000-லிருந்து 4,000 இழைகள் கொண்டவையாகும். ஆதலின் பாவு இயந்திரத்தின் மூலம் (Warping Machine) தயாரிக்கப்படும் சிறிய பாவுகள் பலவற்றைச் சேர்த்து அருகருகே அமைப்பதன் மூலம் நமக்குத் தேவையான 2,000 இழைகளிலிருந்து 4,000 இழைகள் வரையான பாவு கிடைக்கப் பெறுகிறது. இந்த வார்ப்பிங் இயந்திரத்தில் பெறுகிற சிறிய அகலப் பாவுகளை ஒன்றுசேர்த்துப் பெரிய அகலப் பாவு பெறும்

231



2-வது கட்ட இயந்திரம் சைசிங் இயந்திரம் (Sizing Machine) ஆகும். இந்தச் சிறிய அகலப் பாவுகள் பலவற்றை ஒருங்கிணைத்துப் பெரிய அகலப் பாவு எடுக்கும் கட்டத்தில் இடையிலேயே கஞ்சியால் நனைக்கப்பட்டுப் பதப்படுத்தப்பட்டு, உலர்த்தப்படும் செயலும் நிகழ்ந்து விடும்படி இந்த இயந்திரம் (Sizing Machine) அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சைசிங் இயந்திரத்திலிருந்து பெறுகிற பாவுகளைத் தேவையான நீளத்திற்கு (அதாவது 1,000, 2,000 மீட்டர்கள் என்ற கணக்கில்) வெட்டி நெசவாளர்களுக்கு வழங்கலாம்.

எனவே இந்த விசைத்தறி ஆலைக்கு வார்ப்பிங் இயந்திரம் (Warping Machine) சைசிங் இயந்திரம் இவற்றுடன் கஞ்சிப் பதப்படுத்தித் தரும் பானைகள் (Kettles) உலர்வதற்கு நீராவியும், கஞ்சி சமைப்பதற்கு வெப்பம் தருகிற கொதிகலன் (Boiler) போன்ற இயந்திரங்களும் முக்கியத் தேவைகளாகும்.

கட்டட மதிப்பு

இந்த விசைத்தறிப் பாவு

2.90 இலட்சம். ஒரு பாவு இயந்திரம், ஒரு சைசிங் இயந்திரம், இரு கஞ்சி பதப்படுத்தும் பானைகள் கொண்ட ஒரு யூனிட்டுக்கு மதிப்பு ரூ. 4.60 இலட்சம். கொதிகலன் மற்றும் துணை இயந்திரங்கள் அமைக்க மதிப்பு ரூ 1.00 இலட்சம்.

கூட்டுறவு நூற்பு ஆலையின் மூலதனம்

சேலம் நூற்பாலையின் மூலதனத்தில் தமிழ்நாடு அரசும் கூட்டுறவுச் சங்கங்களும், தனி நபர்களும் பங்கெடுத்துள்ளனர். ஆலையின் மொத்த மூலதனம் ரூ. 28,99,350 ஆகும். இதில் ரூ. 14,74,000 தமிழ்நாடு அரசின் பங்கு ஆகும். ரூபாய் 14,25,350 கூட்டுறவுச் சங்கங்கள், தனி நபர்களின் பங்கு ஆகும்.

உற்பத்தி

இவ் வாலை வாரத்தின் ஏழு நாட்களிலும், நாளின் 24 மணி நேரமும் வேலை செய்கிறது. மாதமொன்றிற்குச் சுமார் 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. சிலோனுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அண்மையில் ஓர் ஒப்பந்தமும் ஏற்பாடாகியுள்ளது. நெசவாளர் சங்கத்திற்குத் தேவையானது போக மீதியுள்ளதைத் தமிழ்நாட்டில் பாவு நூலாகவும் பம்பாய் வணிகச் சந்தையில் தோய் நூலாகவும் விற்கப்படுகிறது.

இலாபம்

இவ்வாலை 1969-70-ஆம் ஆண்டில் ரூ.4.24 இலட்சம் இலாபம் தந்தது. 1970-71-ஆம் ஆண்டில் சுமார் ரூ. 8 இலட்சம் அளித்தது. இந்த இலாபமானது தேய்மானங்கள், வட்டி போன்ற செலவினங்களுக்கு நிதி ஒதுக்கிய பின்னர் ஏற்பட்டது. ஆகக் கடந்த ஆண்டுகளில் சேர்ந்து நட்டம் அனைத்தையும் சென்ற இரண்டு ஆண்டுகளில் சரிசெய்து மேலும் சற்று இருப்பும் சம்பாதிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குப் போனசாக 4 சதவீதமும் முன்பணமாக 4⅓ சதவீதமும் கொடுத்ததுமன்றிப் பங்குதாரர்களுக்கு ஈடும் கொடுக்க இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாடாத ரோஜா

வசந்த விழாவிற்கு ரோஜா மலர்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. அந்த ரோஜா மலர்களைப் பல நாட்கள் வரை கெடாமல் பாதுகாக்க, ஓர் அறைக்குள் காமாக் கதிர்களைச் (Gamma Rays) செலுத்தி, அவ்வறைக்குள் ரோஜா மலர்களைக் கொட்டிவைத்தால் அவை கெடாமல் பாதுகாப்பாக இருக்கும் என்று தாவர இயலார் கண்டுபிடித்துள்ளனர். இவ்வாறு காமாக் கதிர்களைச் செலுத்துவதன் மூலம், உருளைக்கிழங்கு, வெங்காயம், கேரட்டு, ஆப்பிள் முதலிய காய்கறிகள் கனிவகைகளையும் கெடாமல் பாதுகாக்கலாம். காய்கறிகளையும், கனிவகைகளையும் அழுகவைக்கும் பாக்டீரியாக்களைக் காமாக் கதிர்கள் அழித்துவிடுகின்றன.



பழம்பெரும் தொழில்

உலகிலே மிகப்பழமையும் முக்கியமும் வாய்ந்த தொழில்களில் ஒன்று மீன் பிடித்தலாகும். ஆறு, ஏரி, கடல் ஆகியவற்றிலே மீன் பிடிக்கும் தொழில் தொடங்கி, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்து விட்டன. எகிப்திய தூபி ஒன்றில் மீனவன் ஒருவனுடைய படமொன்று காணப்படுகிறது. இது கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்னமே எழுதப்பட்டது என அறிகிறோம். உலக மக்களின் உணவுப் பொருளில் மூன்று சதவிகித உணவு இந்தத் தொழிலால் கிடைக்கிறது. ஜப்பான் நார்வே போன்ற சில நாடுகளில் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதியினருக்கு இது உணவளிக்கிறது.

உலகமுற்றிலும் 2,500,000 மீனவர் கடலிலே சென்று மீன் பிடிக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 160,000 மக்கள் மீனவர்களாகத் தம் வாழ்க்கையை நடத்துகின்றனர். வட அட்லாண்டிக் கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுதோறும் 500,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகிறது. மத்திய அட்லாண்டிக் நாடுகளில் பல்வகைப்பட்ட கடல் வாழ் உயிரினங்கள் பிடிக்கப்படுகின்றன. 435,000 டன் அளவுள்ள கடலிலிருந்து உற்பத்தியாகும் பொருள்கள் ஆண்டுதோறும் இந்த இடத்திலிருந்து கரையேற்றப்படுகின்றன.

வட அமெரிக்காவில் மிசிசிப்பி ஆற்றில் பெரும் ஏரிகள் மற்றும் பல்வகை நிலப்பகுதியில் உள்ள நீர் நிலைகளில் இருந்து ஆண்டுதோறும் 100,000 டன் மீன்களைப் பிடிக்கின்றனர்.

ஏலம் எடுத்தவர் ஒருவர்

ஏலம் விடும்பொழுது கேட்டவர் மட்டுமே பணம் கொடுத்துப் பொருளைப் பெற்றுக்கொள்வர். ஏலத்தில் தோற்றவரும் பணம் கொடுத்ததற்கு வரலாற்றில் இதுவரை சான்று இல்லை! அந்தக் குறையை அகற்றி, ஏலத்தில் தோற்றவரும் கொடுத்தார் என்ற புதிய வரலாற்றை ஏற்படுத்திவிட்டார் நமது முதலமைச்சர்!

உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் திறக்கப்பட்டபோது இப்புதிய வரலாறு பிறந்துள்ளது. பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக, திரு அனிபா என்ற தோழர் தன் 'கெமி' கைக்கெடிகாரத்தைக் கழட்டி முதலமைச்சரிடம் கொடுத்தார். முதலமைச்சர் கூறியபடி, அக்கைக்கடிகாரத்தைச் சட்ட மன்ற உறுப்பினர் திரு பொன். சொக்கலிங்கம் அவர்கள் 100 ரூபாயில் தொடங்கி ஏலம் விட்டார். ரூபாய் 200, 300, 500 என்று படிப்படியாக ஏலக்கேள்வி ஏறி ரூபாய் நாலாயிரத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. நேரம் ஆகிக்கொண்டிருப்பதைக் கண்ட முதலமைச்சர் அவர்கள் "ஏலத்தைச் சீக்கிரம் முடியுங்கள்" என்றார்.

அரகண்டநல்லூர் திரு அப்துல் சலாம் அவர்கள் 4,000 ரூபாய்க்கு அந்தக் கெமி கைக்கெடிகாரத்தை ஏலம் எடுத்து அதற்கான காசோலையை முதல்வரிடம் கொடுத்தார். முதலமைச்சர் அவர்கள் அப்துல் சலாமுக்கு மாலை அணிவித்துக் கைக்கெடிகாரத்தைக் கொடுத்தார்.

பணம் கொடுத்தவர் இருவர்

"ஏலம் எடுப்பதிலே நண்பர் சலாம் அவர்களுடன் நண்பர் கேசவலு எம்.எல்.ஏ. அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற முடியாமல் போனார். ஐயோ! பிச்சைக்காரர் நிதிக்கு நம்மால் கொடுக்க முடியவில்லையே என்று அவருக்கு வருத்தம் இருக்குமேயானால், கடைசியாக அவர் கேட்ட ஏலத் தொகையை நிதியாகக் கொடுத்து உதவலாம்" என்று முதலமைச்சர் கூறியவுடன் திரு கேசவலு அவர்கள் எழுந்து தானும் 4,000 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்தார்.

"கைக்கெடிகாரம் 8,000 ரூபாய்க்கு ஏலம் போனதாக எண்ணி அத்தொகையை நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்கிறோம்" என்றுமுதல்வர் கூறியவுடன் மக்கள் விண்ணதிரக் கையொலி செய்தனர்.

ஏலத்தில் வென்றவரும் கொடுத்தார்! தோற்றவரும் கொடுத்தார்! யாருக்காக? பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக!

H21



வீரியச் சோளம் பயிரிட விரைவீர்!

மாசி மாதம் முதல் வைகாசி மாதம் வரை தண்ணீர் வசதியுள்ள இடங்களில் வீரியச்சோளம் பயிரிடுவது வெகு இலாபகரமான செயலாகும். ஏனெனில், வீரியச் சோளம் பயிரிடுவதால் 90 முதல் 95 நாட்களில் ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 700 முதல் ரூபாய் 900 வரை நிகர இலாபம் கிடைக்கிறது. இது பலருக்கு வியப்புக்குரிய செய்தியாக இருக்கலாம். ஆனால், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல உழவர் பெருமக்கள் ஒரு ஏக்கர் வீரியச் சோளத்திலிருந்து 3,000 கிலோ தானியம் விளைவித்து ரூபாய் 1,500க்கு மேலும் இலாபம் பெற்றுள்ளனர் என்பது உண்மை.

வீரியச்சோளம் பயிரிட்டால் சராசரியாக ஏக்கருக்கு 2,500 கிலோ தானியமும், 4,500 முதல் 5,000 கிலோ சோளத் தட்டையும் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் வீரியச் சோளம் பயிரிட ரூபாய் 400 முதல் ரூபாய் 600 வரைசெலவு ஆகலாம். ஒரு ஏக்கர் வீரியச்சோளம் பயிரிட்டுக் கிடைக்கும் 2,500 கிலோ தானியத்தைக் குறைந்த விலையில் விற்பதாகக் கணக்கிட்டால் கூட, ரூபாய் 1,300 வருமானம் கிடைக்கும். அதில் சாகுபடிச் செலவு போக ரூபாய் 700 முதல் ரூபாய் 900 வரை நிகர இலாபம் கிடைக்கும். நல்ல விலை விற்கும் போது நிகர இலாபம் அதிகமாகும். சென்ற வாரத்தில் ஒரு குவிண்டால் (100 கிலோ) சோளம் ரூபாய் 82·14 வரை கோயம்புத்தூரில் விற்பனையாகியுள்ளது. என்னதான் விலை குறைந்தாலும், குவிண்டால் ரூபாய் 55-க்குக் குறையாது என்பது கடந்தகால விற்பனை விலை நிலவரங்களிலிருந்து உறுதியாகிறது.

எனவே, குறைந்த விலையில் சோளத்தை விற்பதாகக் கொண்டாலும், ஒரு ஏக்கர் வீரியச் சோளத்திலிருந்து 90 முதல் 95 நாட்களில் ரூபாய் 700 முதல் ரூபாய் 900 வரை நிகர இலாபம் கிடைக்கும் என்பது திண்ணம்.

வீரியச்சோளம் அரிசியைவிடப் புரதச்சத்து மிகுந்த தானியமாகும். வீரியச் சோளத்தையும் நமது உணவில் சேர்த்துக் கொண்டு கலப்புணவுப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் நமது உடலுக்கு வலிவும்வன்பும் ஏற்படுவதுடன், அரிசியின் தேவையையும் ஓரளவுக்குக் குறைக்கலாம். சோளத்தை நேரடியாகச் சமைத்துச் சாப்பிட விரும்பாவிட்டாலும், உப்புமா, முறுக்கு, கிச்சடி, கேசரி முதலியவைகளாகச் செய்து சாப்பிடலாம். கோவை மாவட்டத்தில் பெரும் பணக்காரர்கள் கூட வீரியச் சோளத்தை உணவாகச் சாப்பிடுகிறார்கள். எனவே, வீரியச் சோளம் பயிரிட்டுக் கலப்பு உணவாகப் பயன் படுத்துவது, நாம் அனைவரும் நாட்டிற்குச் செய்யும் நல்ல பணியாகும்.

வீரியச் சோளத் தட்டைகள் சாறுமிகுந்தும், சுவையாகவும், பசுமையாகவும் இருப்பதால், மாடுகள் அவற்றை விரும்பி உண்கின்றன. வீரியச்சோளம் மக்களுக்கும், மாடுகளுக்கும் குறுகிய காலத்தில் பயனளிக்கும் ஓர் பயனுள்ள பயிராக இருப்பதுடன், மறுதாம்புப் பயிர் (கட்டைப் பயிர்) செய்வதற்கும் ஏற்றதாக இருக்கிறது. மறுதாம்புப் பயிரும் 85 முதல் 90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடுவதுடன், முதல் பயிரைவிட, அதிக மகசூலும் அளித்துள்ளது. மறுதாம்புப் பயிரிலிருந்து ஏக்கருக்கு 2,600 கிலோ வரை தானியம் கிடைத்துள்ளது. மறுதாம்புப் பயிருக்குச் சாகுபடி செலவு குறைவு. எனவே, நிகர இலாபம் கூடுகிறது. எனவே கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு வீரியச் சோளம் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

சாகுபடி முறைகள்

ரகம்:— மாசி, பங்குனி மாதங்களில் விதைப்பதற்கு சி. எஸ். எச். 1, சொர்ணா ஆகிய ரகங்கள் ஏற்றவை.

வயது:—சி. எஸ். எச். 1—90 நாட்கள்; சொர்ணா-90 முதல் 95 நாட்கள்.

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

TANSI

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனமல், டிபிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை ஏற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேசை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- சிங்காரப் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

நிலம் தயாரித்தல் :—ஏக்கருக்கு 15 முதல் 20 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு விட்டு, மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட்டு, புழுதியாகச் செய்யவேண்டும். அதன் பின் நிலத்தில் சொர்ணு ரகம் பயிரிட 1 அடி இடை வெளியிலும், சி. எஸ். எச் 1 ரகம் பயிரிட 1½ அடி இடைவெளியிலும் பார்கள் அமைக்க வேண்டும்.

அடி உரமிடுதல்:—ஒரு ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக் கிடைக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 112 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இடவேண்டும். அல்லது 125 கிலோ 14 : 14: 14 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் உரத்தையோ அல்லது 120 கிலோ 15 : 15: 15 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் உரத்தையோ அல்லது 200 கிலோ தரப்படுத்தப்பட்ட கலவை உர எண். 5 (9 : 9: 9)-யோ அடியுரமாக இடலாம். இவ்வுரங்களைப் பார்களின் ஒருபக்கச் சரிவின் கீழ்ப் பாகத்தில் 3 அங்குல ஆழத்தில் இட்டு மண்ணால் மூட வேண்டும்.

விதையளவு :—சி. எஸ். எச்.1 ரகம் பயிரிட ஏக்கருக்கு 4 கிலோ விதையும், சொர்ணு ரகத்திற்கு ஏக்கருக்கு 6 கிலோ விதையும் தேவை. சி.எஸ்.எச். 1 கத்தைப் பொறுத்த வரையில் வ்வொரு முறையும் புதுவிதைளையே வாங்கி தைக்க வேண்ம். சொர்ணு கத்திற்கு, முன் யிரிலிருந்து டுக்கப்பட்ட ரமான விதைளையும் விதைப்பற்காகப் பயன்டுத்தலாம்.

விதையுடன் ருந்து கலக்குதல்:—சான்றிதழ் பெற்ற விதைகளில் மருந்து கலக்கப்பட்டிருக்கும். மருந்துகலக்கப்படாத விதைகளென்றால், அக்ரசான், டீ. எம் டீ. டி., கேப்டான் போன்ற மருந்தில் ஏதேனும் ஒன்றை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் இட்டு, விதை கலக்கும் கருவியில் இட்டு, விதையும் மருந்தும் நன்கு கலக்குமாறு நன்கு சுற்ற வேண்டும்.

விதைத்தல் :— பார்களின் சரிவில் உரமிட்ட வரிசைக்குமேல் 6 அங்குல இடைவெளியில், ஒரு அங்குலஆழத்தில், இரண்டிரண்டு விதைகளாக ஊன்ற வேண்டும்.

நீர்ப்பாசனம் :—விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த மூன்றும் நாள் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

களையெடுத்தல் :—விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் களையெடுக்க வேண்டும். அத்துடன் வரிசையில் 6 அங்குலத்திற்கு ஒரு பயிர் வீதம் விட்டு, மற்றப் பயிர்களை அகற்றிவிட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு:—வீரியச் சோளத்தில் குருத்து ஈ, தண்டுப் புழு, உண்ணி, கால்மிட்ஜ் ஆகிய பூச்சிகளும், தண்டு, வேர் அழுகல் நோய்களும் தோன்றிச் சேதம் விளைவிக்கக் கூடும். அவைகளைக் கட்டுப்படுத்த பின்கண்ட முறையில் தடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

குருத்து ஈ:—விதைத்த 7-வது நாளிலேயே இது இளம்பயிரை அழிக்கிறது. இதைத்தடுக்க விதைப்பதற்கு முன்பே சால்களில், ஒரு மீட்டர் நீளத்திற்கு 1.5 கிராம் போரேட் 10சதக் குருணைகள், அல்லது 3 கிராம் டைசல்போடான் 5 சதக்குருணைகள், அல்லது 3 கிராம் சால்விரெக்ஸ் 5 சதக் குருணைகள், அல்லது, 1.5 கிராம் ' டெமிக் ' 10 சதக் குருணைகள் வீதம் தூவ வேண்டும். விதைத்த 7-வது நாளிலும், 15-வது நாளிலும் ஏக்கருக்கு 150 மில்லி லிட்டர் என்ட்ரின்மருந்தையும் 100 மில்லி லிட்டர் மெட்டாசிஸ்டாக்ஸ் மருந்தையும் 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

தண்டுப்புழு:—விதைத்த 21-ஆம் நாளிலிருந்து பயிர்களைத் தாக்கும். இதைத் தடுக்க விதைத்த 21-ஆம் நாளும் பின்பு 15நாட்களுக்கொருமுறைவீதமும் பூப்பூக்கும் வரை ஏக்கருக்கு 4 முதல் 6 கிலோ என்ட்ரின் 2 சதக் குருணைகளை இலைக் குருத்துகளில் இட வேண்டும்.

உண்ணி:—உண்ணிகள் காணப்பட்டவுடன் ஏக்கருக்கு 10 கிலோ கந்தகத் தூளைத் தூவ வேண்டும்.

கால்மிட்ஜ்:—பூப்பூத்துக் குலுங்கும் சமயத்தில் இது காணப்படும். இதைத் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 கிலோ கார்பரில் 10 சதத்தூளை முதல் முறை பூப்பூக்கும் சமயத்திலும், இரண்டாவது முறையாகப் பால் பிடிக்கும்

சமயத்திலும் தூவ வேண்டும். அல்லது ஏக்கருக்கு 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும், 5 கிலோ பி. எச். சி. 10 சதத் தூளையும் மேற்கூறிய இரு தடவையில் தூவிவிட வேண்டும். இவ்வாறு மருந்து தூவினால் கதிர் நாவாய்ப் பூச்சி, கதிர்ப்புழு ஆகியவைகளும் கட்டுப்படுத்தப் படும்.

தண்டு, வேர் அழுகல் நோய்— இந்நோய் காணப்படும் இடங்களில், 1 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் நனையும் செரசான் மருந்து வீதம் கலந்து தெளித்து மண்ணை நனைக்க வேண்டும்.

அறுவடை:—கதிர் நன்கு முற்றிய பின்பு அறுவடைசெய்ய வேண்டும்.

மறுதாம்புப்பயிர்:— அறுவடை முடிந்த பின்பு, சோளத்தட்டைகளைத் தரை மட்டத்திற்கு வெட்டி விட வேண்டும். அதன் பின் உடனடியாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்பு கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

5-ஆம் நாள்:—நிலத்தை நன்ருகக் கொத்திவிட வேண்டும்.

8-ஆம் நாள்:—மேலுரமாக ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியா உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

15-ஆம் நாள்:—ஒவ்வொரு தூருக்கும் வீரியமான 3 பயிர்களை விட்டு அதிகமாக உள்ளதைக் கிள்ளி எறிந்துவிட வேண்டும். பின்பு ஏக்கருக்கு 6 கிலோ என்ட்ரின் குறுனைகளைப் பயிர்களின் குருத்தில் இடவேண்டும்.

18-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

25 ஆம் நாள்.—என்ட்ரின் குறுனைகள் இடவேண்டும். களை எடுக்க வேண்டும்.

28-ஆம் நாள்:—இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

38-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

40-ஆம் நாள்:—ஒரு கிலோ நனையும் கந்தகத்தை 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

48-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

55-ஆம் நாள்—5 கிலோ டி.டி.டி. 5 சத மருந்தைத் தூவவும்.

58-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

60-ஆம் நாள்:—பி. எச். சி. 10 சதத்தூள் 5 கிலோவையும், டி.டி.டி. 5 சத தூள் 5 கிலோவையும் கலந்து தூவவேண்டும்.

68-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

85 முதல் 88 ஆம் நாள்:— மறு தாம்புப் பயிர் அறுவடைக்குத் தயாராகிவிடும்.

மறுதாம்புப் பயிர் அறுவடைக்குப்பின், உயர் விளைச்சல் நெல் ரகங்களைப் பயிரிடலாம். இவ்வாறு செய்தால் ஒரே ஆண்டில் மூன்று பயிர்செய்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதுடன். வருவாயையும் பெருக்கிக் கொள்ள முடியுமாதலின் வீரியச் சோளம் பயிரிட விரைந்திடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிரேம்.

வெண்பாப் போட்டி -30

ஈற்றடி :

வளைகண்டின் புற்ரும் மகிழ்ந்து.

முடிவு நாள் : 15—3—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி).
'தமிழரசு' அலுவலகம்
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை-2.

குறிப்பு :—

நேரிசை வெண்பாக்களே அனுப்பப்படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண், 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

ஏன் இந்தக் காதல்?

கு. மறைமலையான்

16. இரத்தக் கறை!

சற்றுத் தொலைவில் சாலையின் குறுக்கே பரபரப்பு எதுவுமின்றி மெள்ள நடந்துகொண்டிருந்தாள் ஒரு பாவை.

அமைதி தவழும் அதிகாலை நேரந்தானே — கார்களுக்கும், பேருந்துகளுக்கும் அஞ்சி நடுங்கிக் கொண்டு எதற்கு நாம் ஓட வேண்டும் என்கிற துணிச்சல் போலும் அவளுக்கு!

எந்த நேரமாக இருந்தாலும், அவசரம் மிகுந்த—ஆத்திரம் மலிந்த—சென்னை மாநகரில் அன்ன நடைகளுக்கோ, அடக்கமான மனிதர்களுக்கோ இடம் ஏது?

ஆயிரங் கரடிகள் ஒன்ருய்க் கூடி உறுமினாற் போல அலறிக் கொண்டு பாய்ந்து வந்தது ஒரு மோட்டார் சைக்கிள்; அந்த ஆரணங்கை ஒரு மோது மோதிக் குப்புறத் தள்ளியது; அடுத்த கணமே இமைமூடி இமை திறப்பதற்குள் அது பறந்து மறைந்து விட்டது மின்னலாக!

இளங்காலைப் பொழுதாகையால் மனித நடமாட்டம் அவ்வளவாக இல்லை; நடைபாதையில் சென்றுகொண்டிருந்த ஒன்றிரண்டு மனிதர்களும், எட்டி நின்று வேடிக்கை பார்த்தார்களேயன்றிக் கிட்டே நெருங்கவில்லை.

மாதவனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. அவனுடைய தொண்டு நெஞ்சம் துறுதுறுத்தது; கையும் காலுமோ பரபரத்தன.

காரோட்டியை நோக்கி "வண்டியை நிறுத்து"—என்று உரத்த குரலில் கட்டளை இட்டான் அவன்.

பேரின்பழுத்தும் மற்ற பெரியவர்களும் தனக்காகக் காத்திருப்பார்களே, திருமண நேரம் கடந்து விடுமே என்றெல்லாம் கவலைப்படவில்லை அவன்.

காரை விட்டுக் கீழே இறங்கினான்.

அவனுடைய கார் திடீரென்று நின்று விடவே, அவனுக்குப் பின்னால் தேன்மொழியைச் சுமந்து வந்த காரும், பிற கார்களும் தேங்கி நின்று விட்டன.

அவனுக்குத்தான் என்னவோ ஏதோ என்று திருமணத்திற்காக வந்தவர்களுள் சிலர் அவனை நோக்கி ஓடி வந்தனர். அவனுடைய அன்னையும் அவர்களோடு விரைந்து வந்தாள்.

தேன்மொழியைக் 'காரைவிட்டு இறங்க வேண்டாம்' என்று கூறி விட்டு டாக்டர் பூங்கொடியும் தாமரைக்கண்ணியும் கூட விரைந்து நடந்தனர் மாதவனை நோக்கி.

"ஆமாம், என்ன நடந்தது? ஏன் காரை நிறுத்தி விட்டு இறங்கிவிட்டீர்கள்?"

—என்று பதற்றத்துடன் கேட்டாள் பூங்கொடி.

"நீங்கள் கவனிக்க வில்லையா? அதோ ஒரு பெண் மோட்டார் சைக்கிளில் அடிபட்டு விழுந்து விட்டாளே!"

—என்று கூறியவாறே அந்த இரங்கத்தக்கவளை நோக்கிக் கால்களை நீட்டிப் போட்டான் மாதவன்.

ஒரு முதியவர் அவன் முன்னால் வந்து வழி மறித்து.

"என்ன தம்பி இது? நமக்காக எத்தனைபேர் அங்கே காத்துக் கொண்டிருப்பார்கள்? எவளோ ஒருத்தி அடிபட்டு விழுந்ததற்கெல்லாம் நாம் கவலைப்பட்டுக் கவனிக்கப் போனால் நம்முடைய காரியம் என்ன ஆவது?" —என்ருர்.

"........இத்தனை வயதாகியும்—இவ்வளவு பக்திக் கோலம் பூண்டும்—இன்னும் உங்களுக்கு அந்த இரக்க குணம் வரவில்லையா? தன்னைப் பெற்றவர்களுக்கும், தன்னோடு பிறந்தவர்களுக்கும் உழைப்பது தான் நல்லபணி—நன்றிக் கடன்—என்று நினைக்கிறீர்களா? அப்படியானால், பெரியவரே, உங்கள் இதயம் இன்னும் இலையாக விரியவில்லை; குருத்தாகத்தான் சுருண்டு கிடக்கிறது! அதுவும் கிழிந்து கெட்டுப் போன குருத்து! எவளோ ஒருத்தியை, எவனே ஒருத்தனைத் துன்பக் கேணியிலிருந்து கரையேற்றிக் காப்பதுதான் உண்மையான தொண்டு. மோட்டார் சைக்கிளில் போனவனே, அவனைப் போல இரக்கம் இல்லாத அரக்கனாக என்னையும் இருக்கச் சொல்கிறீர்களா?"

—என்றெல்லாம் அந்தப் பெரியவரை மடக்கிப் பேசவில்லை மாதவன்.

ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தான்; ஓசைபடாத ஒரு சிரிப்பையும் அதில் இழைய விட்டான்.

அந்தப் பார்வைக்கும், அந்தச் சிரிப்புக்கும் பொருள் புரிந்து விட்டது பெரியவருக்கு; ஒதுங்கிக் கொண்டுவிட்டார்.

இப்போது டாக்டர் பூங்கொடியே அவன் பின்னால் வந்தவாறே இப்படிச் சொன்னாள்:

"பெரியவர் சொல்வதும் சரிதானே! திருமணத்திற்கு நேரந் தவறி விட்டால், தேன்மொழியின் அப்பாவுக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விடும்...... அவளை வேறே யாராவது பார்த்துக்கொள்கிருர்கள் ... ..."

—மாதவன் முகத்தைத் திருப்பினான். பூங்கொடியையே வெறிக்கப் பார்த்தான். அவனுடைய உதடுகளில் ஏளனச் சிரிப்பு நெளிந்தது.

"நீங்களுமா டாக்டர், அப்படிச் சொல்கிறீர்கள்?"

—அந்த ஒரு கேள்வியே, தன் மருத்துவக் கல்விக்கு—அதைப் பயின்ற பிறகு தான் வளர்த்துக்கொள்ள வேண்டிய பரிவுக்குப்—பண்பாட்டுக்குச் சரியான சவுக்கடி கொடுத்துவிட்டதாக உணர்ந்தாள். பூங்கொடி மறுபேச்சுப் பேச அவளுடைய நா மறுத்துவிட்டது; மரத்துவிட்டது.

மாதவன், அடிபட்டுக் கிடப்பவளின் அருகே சென்றான். அவள் குப்புறக் கிடந்திருந்தாலும், தலையில் போட்டிருந்த முக்காடு நழுவாததாலும், அவளுடைய முகம் தெரியவில்லை சரியாக. முழங்கால் பகுதியில் மட்டும் புடவையையும் மீறி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பாதங்களிலோ, சாலைக்குத் தார் போடும் பொழுது தொழிலாளிகள் தங்கள் கால்களுக்குத் தடிப்பான துணியையோ, கோணியையோ கட்டிக் கொள்வார்களே, அப்படிக் கட்டிக்கொண்டிருந்தாள் அவள்.

வலிபொறுக்க முடியாமல், '**அம்மா! அம்மா!**'—என்று முனகிக் கொண்டிருந்த அவளைத் தோளைத் தொட்டு மெள்ள மல்லாத்த முயன்றான் மாதவன்.

தாமரைக்கண்ணி ஓடி வந்து அவளுடைய கால் பகுதியைத் தொட்டுத் திருப்பிவிட முற்பட்டாள்.

''அய்யோ! காலைத் தொடாதே! காலைத் தொடாதே!''—என்று உயிரைக் கொடுத்துக் கத்தினாள் அவள்.

கால்தான் முறிந்திருக்க வேண்டும் என்று மாதவனுக்குப் பட்டது.

அவளுடைய முகத்தை மூடியிருந்த துணி விலகியது. அடுத்த கணமே—

''அய்யோ! வள்ளியக்கா!'' ....என்னும் அலறல் வெடித்தது மாதவனின் வாயிலிருந்து.

அதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள் தேன்மொழி. காரிலிருந்து இறங்கி அவளும் ஓடோடி வந்தாள்.

''உனக்காக்கா இந்தக் கதி? இந்தக் கோலத்திலா உன்னை நான் சந்திக்கணும்?''

—தலையிலே கையை வைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான் மாதவன். அவனுக்குப் பின்னால் வந்து நின்றுகொண்டிருந்த அவன் தாயும் தன் மகனைக் கட்டிக்கொண்டு 'கோ' வென்று கதறி அழுதாள்.

இதற்குள் ஒரு பெருங்கூட்டம் அங்கே கூடிவிட்டது. சாலையின் குறுக்கே பரவலான ஒரு தடுப்புச் சுவரையே அது எழுப்பி விட்டது.

அதனால், இரண்டு பக்கங்களிலும், பேருந்து வண்டிகளும், கார்களும், சைக்கிள்களும் வந்து மேலே பறக்க முடியாமல் தேங்கி நின்றுவிட்டன. 'எங்களுக்கு வழி விடமாட்டீர்களா?'—என்று கூக்குரலும் எழுப்பின, 'பாம்' 'பாம்'—என்று!

தங்களால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு விட்டதே என்று உணர்ந்துகொண்ட மாதவன், தானே வள்ளியைக் குண்டுக் கட்டாகத் தூக்கினான்; தாமரைக்கண்ணி அவளுடைய கால்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். இருவருமாக அவளை மாதவன் ஏறிவந்த 'பிளைமவுத்' காரின் பின் இருக்கையில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தனர்.

தேன்மொழியோ என்ன செய்வது—என்ன சொல்வது—என்று தெரியாதவளாக அதிர்ந்து போய் நின்றாள். அவளுடைய விழிகளிலிருந்து கண்ணீர் அருவி பெருக்கெடுத்து வழிந்தது தாரைதாரையாக.

தானும் என்ன செய்ய வேண்டும் என்று புரியாமல் குழம்பிப்போன டாக்டர் பூங்கொடி, காரினுள்ளே தன் தமக்கையைப் படுக்க வைத்துவிட்டு வெளியே வந்த மாதவனின் அருகே சென்றாள்.

''என்னை மன்னித்து விடுங்கள் மாதவன். இனி உங்கள் தமக்கையைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு. தயவு செய்து நீங்கள் உடனே திருமண மண்டபத்துக்குச் செல்லுங்கள்.''

''நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே! என் அக்கா சாவோடு போராடும் பொழுது நான் மட்டும் மகிழ்ச்சியோடு தாலிகட்ட முடியுமா?''

—ஆத்திரத்துடன் கேட்டான் மாதவன்.

1.'21

Π/1

''உங்களுடைய பாச உணர்ச்சியை நான் குறைத்து மதிப்பிடவில்லை மாதவன்! ஆனால், அதோ நிற்கிறாளே ஓர் அப்பாவிப் பெண், அவளையும் கொஞ்சம் ஏறெடுத்துப் பாருங்கள் என்றுதான் கெஞ்சுகிறேன். உங்கள் அக்காவுக்குக் கால் மட்டுந்தான் ஒடிந்திருக்கலாம்; ஆனால், தேன்மொழிக்கோ அவளுடைய வாழ்க்கையே ஒடிந்து நொறுங்கிவிடும்போல் இருக்கிறதே! அவள் எப்படிப் பட்ட உணர்ச்சிக் குழந்தை என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். இன்றைக்கு மட்டும் திருமணம் நடக்காவிட்டால் அவள் மனம் இடிந்தே போய் விடும் கண்டிப்பாக! இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் மாரடைப்பு வந்து, அவள் இறந்தே போனாலும் நான் வியப்படைய மாட்டேன்.''

—சொல்லி வரும்பொழுதே பூங்கொடியின் குரல் தழுதழுத்துவிட்டது; விழிகள் குளமாயின.

'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தில் மாதவனோடு அடிக்கடி பங்குகொண்டு நெருங்கிப் பழகிய தங்கப்பனும், அவன் கையை ஆதரவாகப் பற்றியவாறே,

''எனக்கும் டாக்டர் சொல்வதுதான் சரியென்று படுகிறது; நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதீர்கள். நானே போய் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறேன்.''

—என்றான் பரிவோடு.

மாதவனின் பார்வை அந்தச் சாலையிலே பசும்பந்தல் விரித்திருக்கும் மரங்களுக்கும் மேலே வானத்தை நோக்கிச் சென்றது; மனம் பெரும் போர்க்களமாகவே மாறிவிட்டது. பூங்கொடி சொல்வதையும் புறக்கணிக்க முடியாமல் அவன் தத்தளித்தான்; பல ஆண்டுகள் கழித்துச் சந்தித்த—அடிபட்டுக் கிடக்கும்—தன் அக்காளின் வாஞ்சைப் பேரலையும் அவனுடைய மனத்தை அமுக்கிச் சுருட்டியது.

வாழ்க்கைத் தேரின் இரண்டு சக்கரங்கள் தானே இந்தக் காதலும், பாசமும்! இதிலே எந்தச் சக்கரத்தை ஒதுக்க முடியும்—உதற முடியும்? ஏதோ ஒன்றை அப்படி உதற நேர்ந்தவர்கள் எல்லாரும் அடைந்த துயரத்தை அறியாதவனா மாதவனும்?

தன் தொண்டையைக் கனைத்துக் கொண்ட அவன், பூங்கொடியை நோக்கிக் கூறினான்:

''சரி டாக்டர். நீங்கள் சொல்கிறபடியே இன்றைக்கு எப்படியாவது தேன்மொழிக்கு நான் தாலிகட்டிவிடுகிறேன்; என் தமக்கையே இறந்து போனாலும் கூடத் தாலி கட்டி விடுகிறேன். ஆனால்—இப்போது என் அக்காளை, மருத்துவமனைக்கு நானே. கொண்டு போய் சேர்த்து விட்டுத்தான் திரும்புவேன். நான் ஒரு வாக்குக் கொடுத்தால் அதை உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றியே தீருவேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் ... ...''

—அழுத்தமாகப் பேசிய அவன், அவளுடைய மறுமொழி எதையும் எதிர்பார்க்காமல் காரிலே போய் உட்கார்ந்து விட்டான்.

அதுவரை வாயைத் திறக்காமல் நின்று கொண்டிருந்த தேன்மொழி,

''அப்படியொன்றும் தன் அக்காளே சாகப் போகிற வேளையில் அவர் என்னை வாழவைக்கத் தேவையில்லை; அந்த அளவுக்கு நான் ஒன்றும் தன்னலக் காரியும் இல்லை. வாருங்கள், நாமும் மருத்துவமனைக்குப் போவோம்.''

—என்று பூங்கொடியின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

கார்கள் சில வந்தவழியே திரும்பிப் பறந்தன.

* * *

திருமண மண்டபத்திற்கு முன்பே சென்றுவிட்ட பேரின்ப முத்து குறித்த நேரத்தில் மணமக்கள் வராமல் போனதும் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

சென்னையிலுள்ள பெரும் பெரும் தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகள், அவருடைய நிறுவனத்தில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் எல்லாரும் அவர் எதிர்பார்த்ததற்கு மேல் படையெடுத்து வந்த வண்ணம் இருந்தனர்.

வாசலில் நின்று தாமே சந்தனப் பேலாவை எடுத்து நீட்டி வரவேற்பை வழங்கிக் கொண்டிருந்த அவருக்கு, பாதி வழியிலேயே மணமக்கள் திரும்பிவிட்டார்கள் மருத்துவமனைக்கு என்று அறிந்ததும் அவருடைய உற்சாகம் எல்லாம் பறந்தே போய்விட்டது.

தம்முடைய ஒரே மகளின் கோலாகலமான திருமண நாளில் இப்படியொரு இருள் வந்து நிழலாட வேண்டுமா என்று அவரால் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

நேரம் செல்லச் செல்ல, வந்திருந்த பெரிய மனிதர்கள் எல்லாரும் 'என்ன காரணம்? ஏன் வரவில்லை?'—என்று கேள்விக்கணைகளால் அவரைத் துளைத்து எடுத்து விட்டார்கள்.

பேரின்பமுத்துக்குப் பதில் சொல்லிப்பதில்சொல்லி அலுத்துவிட்டது; பைத்தியமே பிடித்துவிடும்போலவும் இருந்தது.

தமக்குள்ள செல்வத்திற்கு—செல்வாக்கிற்கு— இவ்வளவு பெரிய மனிதர்களின் முன்னிலையில், தம்முடைய மகளின் திருமணம் நடக்காமல் நின்று

விட்டால் என்ன ஆவது? அது எவ்வளவு பெரிய அவமானம்! என்றுதான் அவர் உள்ளம் நடுங்கிற்று.

ஆனால், மாதவன் எந்தக் காலத்திலும் —எத்தகைய நெருக்கடியிலும்—நாணயத்தைக் காப்பாற்றுவதில் குறியாக இருப்பவன் அல்லவா? பூங்கொடியிடம் வாக்களித்தவாறே தன் தமக்கையை மருத்துவமனையில் சேர்த்து அவளுடைய உயிருக்கு ஆபத்தில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டுவிட்ட உடனேயே வந்து சேர்ந்துவிட்டான் திருமண மண்டபத்திற்கு.

பத்து மணிக்கே முடிந்திருக்க வேண்டிய மணவிழா, பதினொரு மணிக்கே தொடங்கியது.

இந்த மட்டுமாவது திருமணம் நின்றுபோய் விடாமல் நடக்கிறதே என்று பேரின்பமுத்துக்கு ஒரே பூரிப்பு; இழந்த பொருள் மீண்டும் கிடைத்துவிட்ட உற்சாகத்திலே அவர் மிதந்து திளைத்தார்.

மணமேடையில் மாதவனும் தேன்மொழியும் அமர்ந்திருந்த அழகு—அவர்களைப் பற்றி, 'இவர்களைப் போல ஒரு பொருத்தமான இணையை நாம் பார்க்கவே முடியாது!'—என்று தம் செவியில் விழுமாறு மற்றவர்கள் சிந்திய புகழ் மலர்கள்— பேரின்பமுத்துவின் நெஞ்சுக்கு அளவில்லாத நிறைவை—நிம்மதியை —அளித்தன.

அதே நேரத்தில்—

அவருடைய முகத்தில் மட்டுமல்ல, அங்கே குழுமியிருந்த அத்தனை பேருடைய முகத்திலும் கூட ஒரு விதச் சுழிப்பு—சுணக்கம்! மனத்திற்குள்ளும் இனிப்புக்கு நடுவே ஒருவிதக் கரிப்பு!

சுண்டக் காய்ச்சப்பட்ட பசும்பாலில் சீனிக் கட்டியோடு சேர்ந்து உப்புக்கல்லும் விழுந்துவிட்டால் எப்படி இருக்கும்? அத்தகைய கரிப்பு !

என்ன காரணம்? மாதவன் உடுத்தியிருந்த புத்தம் புதிய பட்டு வேட்டியிலும், பட்டுச் சட்டையிலும், பொட்டுப் பொட்டாக இரத்தக் கறை படிந்திருந்ததே!

அதைப் பார்த்த பிறகும் மணமக்களுக்குப் பின்னால் நின்றிருந்த மங்கையர் திலகங்களால் வாளாயிருக்க முடியுமா? வாயாடுவது — வம்பளப்பது—என்றால்தான் பெண்களுக்கு மோர்க்குழம்பிலே வடையைத் தோய்த்துத் தின்கிற மாதிரி தானே!

மாவட்டத்தில் மகளிர் நலம்

மகளிர்வாழ்விலும் இராமநாதபுர மாவட்டத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இல்லத்திலே முடங்கிக் கிடந்து விடாமல் சமுதாயத்துடன் இணைந்து அவர்கள் முன்னேறுகின்றனர். இங்குள்ள மகளிர் நலக் கிளைகளில், தையல், அப்பளம் செய்தல், நூல் நூற்றல், ஒயர்பை பின்னுதல் போன்ற சிறு சிறு தொழில்கள் நடைபெறுகின்றன. முதியோர் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. கிராமக் கைத்தொழிற் பிரிவுகள் பெண்களுக்கென 40-க்கு மேற்பட்டவை நடைபெறுகின்றன. பால் சங்கங்கள் பல உள்ளன. 1,326 ஊராட்சிகளில் மகளிர் மன்றங்கள் நடைபெறுகின்றன. சத்துணவு, வீட்டுத்தோட்டம், உரக்குழித் தயாரிப்புப் போன்ற ஆக்க வேலைகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இங்குள்ள மகளிர் மன்றங்களுக்குக் கைத்தொழிற் கருவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கிராமத் தொண்டர் படைப் பயிற்சியும் மகளிருக்கு இங்கே வழங்கப்படுகிறது.

போர்வீரர் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கப் பிரம்பு வேலைப் பயிற்சி போன்ற தொழில்கள் வழங்கி அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். பரமக்குடியில் பாய் நெசவுப் பயிற்சி உற்பத்தி நிலையமும் உள்ளது.

''மாப்பிள்ளைக்கு வேறே கறையில்லாத வேட்டி சட்டை கிடைக்கவில்லையா?'' —என்றாள் ஒருத்தி.

''ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டு வந்த அவசரத்தில் அவருக்கு எங்கேடி வேறே உடை மாற்றிக்கொள்ள நேரம் இருந்திருக்கப் போகிறது?''—என்றாள் இன்னொருத்தி.

''ஆமாம்; அடிபட்டவள் மாப்பிள்ளையோட அக்காதானாமே! அதுவும் 'பெருநோய்' பிடித்தவளாமே!

—என்றாள் வேறொருத்தி.

''இந்த இரத்தக்கறை கூட அந்தப் பெருநோயால் வடிந்த கறையாகத்தான் இருக்குமோ?'' —ஐயப்பாட்டைக் கிளப்பினாள் மற்றொருத்தி.

''என்ன கருமமோ? இருந்திருந்தும் தேன்மொழியோட தலையெழுத்து இப்படியா தாறுமாறாகப் போகணும்?''

—அந்த அடக்கமான முணுமுணுப்பும் தேன்மொழியின் செவியில் தெளிவாகவே விழுந்தது.

'குப்'பென்று அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. 'கோ'-வென்று கதற வேண்டும் போலவும் இருந்தது. எனினும் பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டாள்.

• • •

அன்று இரவு—

ஒளி வெள்ளத்தைப் பொழிந்த வண்ணம் பால்நிலவு வெள்ளிப் படகாய் மிதந்து கொண்டிருந்தது வானக் கடலில்.

குளுமை வழியும் அதன் இன்பத் தழுவலில்—

எத்தனையோ கவிஞர்கள் தங்கள் கவிதைக் குழந்தைகளைப் படைத்துக் கொண்டிருக்கலாம் களிப்போடு.

எத்தனையோ காதலர்கள் தங்கள் இதய உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டிருக்கலாம் வெறியோடு.

எத்தனையோ போதைப்பிரியர்கள் தங்கள் சொர்க்கத்தின் கதவைத் தட்டிக்கொண்டிருக்கலாம் மதுவோடு.

எத்தனையோ நடன நங்கைகள் தங்கள் நளினமான உடலை நெளித்து ஆடவரின் உள்ளங்களையெல்லாம் ஆட வைத்துக் கொண்டிருக்கலாம் சிரிப்போடு.

ஆனால், தேன்மொழியோ ..?

(வளரும்)



வெண்பாப் போட்டி

27. காரைத் தொழுவீர் களித்து

● அகமுடையான் அண்ணன் அழிவறிந்தும் போர்க்கு
மகனை எழுகென்ற மாதும்—மகன்மார்பில்
கோரப்புண் கண்டுகளி கொண்டாளும் போல்கலங்
காரைத் தொழுவீர் களித்து.

—த. மு. அகமது, கடையநல்லூர்.

போர்வென்ற வீரர் புனிதவுயிர் தந்திட்ட
தீரர் குடும்பம் செழித்தோங்க— ஊர்தோறும்
பேருதவி செய்துசெய்து பின்னுந்தம் ஆர்வமடங்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் கோம்பைச் சீரான், கோம்பை.

வாழ்வின் நலமெல்லாம் வையமதில் மாய்ந்தாலும்
தாழ்வினை என்றும் தரித்தாலும்—ஆழ்கடல்சூழ்
பாரைத் திருத்திடும் பண்பாம் பணியில்மிக்
காரைத் தொழுவீர் களித்து.

—வெ. சீனிவாசம்மாள், சேலம்-9.

செந்தமிழைக் காப்போரைத் தேம்பா துழைப்போரைச்
சிந்தையிலே அன்புத் திறத்தோரை—உந்துபுனல்
ஏரைத் தொழுவோரை எந்நாளும் தீவழிபோ
காரைத் தொழுவீர் களித்து.

—சு. பொன்னுராசு, பெரியவானவாடி.

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படுமன்றோ!—அச்சமின்றி
யாரையும் எந்நாளும் ஏற்றித் தொழாமல்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—வெ. சுப்பிரமணியன், சென்னை-5.

தானிடர்ப் பட்டாலும் தாளாது செல்வத்தை
மானிடர் கொள்ளவே மாய்கின்றார்—மானிடர்காள்!
பாரைத் திருத்துகின்ற பாட்டாளி அன்றியிங்
காரைத் தொழுவீர் களித்து.

—தமிழ்க்கனல், கோவை-11.

441

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

● திரு த. மு. அகமது,
151, புதுத் தெரு, கடையநல்லூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

மூந்நூறு நாள்தன்னில் முற்றிக் கதிராகி
எந்நாளும் காக்கின்ற இங்கிதத்தால்—இந்நாடே!
ஏரோடு நந்நெல்லாம் இன்மலர் தூவிய ''பூங்
காரை''த் தொழுவீர் களித்து.

—வே. குருநாதன், மதுரை-2.

விண்ணில் பகைவர்தம் வீர விமானத்தை
மண்ணிலே வீழ்த்தி மறைந்திட்ட—எண்ணிலார்தம்
சீரைப் புகழ்ந்திடுவீர் சிந்தையிலே வீரமிக்
காரைத் தொழுவீர் களித்து !

—புலவர் ந. கருணாநிதி, அரக்கோணம்.

நல்லது செய்தல் நனியில்லை யாயினும்
அல்லதுசெய் யாரை யறிஞரை—மெல்லவே
பாரை உணர்த்தும் பணியில் தவறிநடக்
காரைத் தொழுவீர் களித்து.

—சொ. சட்டநாதன், மாயூரம்.

கட்டிக் கரும்பே கனிச்சாறே முத்தமிழே !
எட்டாப் பிறைநிலவே என்றெல்லாம்—தொட்டிலினில்
சீராட்டுந் தாயின் திருக்குலத்தை யன்றியிங்
காரைத் தொழுவீர் களித்து.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

இன்னுயிரே போனாலும் எஞ்சும் புகழென்றும்
மன்னுயிரைக் காக்கும் மழைநெஞ்சால்—தன்னுழைப்பைப்
பாரைப் புரக்கப் பயன்படுத்தி வாழுந்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—சி. சொ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழையென்னும்—மெய்யுரை
பாரைக் குறித்ததுவே அன்னாள் பிறந்தபூம்பு
காரைத் தொழுவீர் களித்து.

—இரு. இரமணன். மாயாம்.

நாடு வளம்பெற நாளெல்லாம் பாடுபட்(டு)
ஏடு புலம்பிடும் ஏழையின்—வீடுவளர்ப்
பாரைத் தமிழைப் பரப்புதற் கென்றும்தூங்
காரைத் தொழுவீர் களித்து.

—ஆ. சின்னச்சாமி, கவுஞ்சி.

பொன்னும் பொருளும் புகழ்மிக்க கல்வியும்
இன்னும் பிறநலன்கள் எய்திடினும்—இன்னலுற்றே
ஊரைத் திருத்த உழைத்திடும் பண்புமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

கல்லுடைத்து நற்கழனி யாக்கக் களந்திருத்தும்
நல்லுழவர் நாளும் உழைத்திட்டு—நெல்லளிக்கும்
காரையே நோக்கும் கறையிலாஅத் தன்னலம்நோக்
காரைத் தொழுவீர் களித்து.

—ஆ. வெங்கிடசுப்பிரமணியன், கருங்குளம்.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்தற்(கு)
அதிகார முள்ளவர் யார்கொல்—மதியொளிபோல்
சீரைத் தருமழலை ஓரிரண்டின் மேல்பெருக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் இர. கி. பூபதி, வெள்ளைநகர்.

வெற்றிமகள் ஆரத்தால் வீரத்தாய் வாழ்த்துசொலச்
சுற்றிவரும் பேய்ப்பகையைத் தூளாக்கி—நற்றிறத்தால்
போரை நடத்திப் புகழுருவைத் தாங்குந்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் அ. ஆறுமுகம், இலப்பைக்குடிகாடு.

அன்பும் அருளும் அடைக்கலமாய்ப் பெற்றேழை
இன்ன லகற்றி இடுக்கணிலே—தன்னையீ
வோரை மிகமதித்தே என்றும் பிறன்மனைநோக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் வ. கந்தவேல்,

தாய்கண்டு மூப்படைந்து நொந்துபல இன்னலுற்றுப்
போய்மடியு முன்உடலைப் போரிட்டு—மாய்த்துத்தம்
ஆருயிரைத் தாய்நாட்டுக்(கு) அர்ப்பணித்த வீரமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—பாக்கியசாமி, சென்னை-3.

துயரின்றி வாழ்ந்தாலும் தூயதமிழ் மேன்மைக்(கு)
உயிர்தல் போலஉயர் வுண்டோ—உயர்தமிழின்
சீரையெலாம் காக்கச் சிறுபொழுதும் கண்ணுறங்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

நெஞ்சில் உரம்தேக்கி நேர்மை வழிநின்று
பஞ்சில் நெருப்பாய்ப் பகைவென்றே—எஞ்சாது
போரை முடித்த புறங்கண்டு தாள்வணங்
காரைத் தொழுவீர் களித்து.

—பாரதி சங்குப்பிள்ளை, உடுமலை.

எங்கும் பிணக்குவியல் எத்தர்கள் போர்மிரட்டல்
தங்கமய வங்கமோ சாக்காட்டில்!—இங்குள்ளார்
போரைத் தமதாக்கிப் போய்மாண்ட வீரமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் வீ. கந்தசாமி, வெங்கவல்லி.

தண்பா நலம்நீண்ட நாட்களாய் நானெழுதும்
வெண்பா தமிழரசில் வெல்லாது—கண்டுமிங்
காரையும் நோகவில்லை கண்டுவிட்டால் அச்சீர்மிக்
காரைத் தொழுவீர் களித்து.

—என். வி. பொன்னுசாமி, கம்பம்.

திண்ணிய கொம்பின்றித் தென்றலிலும் தத்தளித்துக்
கொண்டிருந்த முல்லைக் கொடியினுக்கு—வண்ணமிகு
தேரீந்த பாரியின் செந்தண்மைப் பண்பினில்மிக்
காரைத் தொழுவீர் களித்து.

—சு. தருமர், மேலான்மறைநாடு.

''அன்னைத் தமிழுக் கணிசெய்த பாவலருள்
என்னைக் கவர்ந்தவ ரேஇளங்கோ—அன்னவரின்
தீரச் சிலம்பில் திகழ்கின்ற ஊராம்பு
காரைத் தொழுவீர் களித்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

காடழித்து நெற்கழனி காணும் உழவரை
நாடுமொழி மக்கள் நலம்பேணிக்—கேடொழித்
தாரைப் பரிவுநிறை தாயாரைப் பண்புமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

செல்வம் வருங்கால் செருக்காது சொல்லரிய
தொல்லை வருங்கால் துவளாது—பல்லாண்டு
பாரையே ஆளும் நிலைவரினும் பண்பின்நீங்
காரைத் தொழுவீர் களித்து.

—வி. செல்விபூரணபாய், புத்தனை.

கன்னல் சுவைவென்ற கன்னித் தமிழணங்கின்
இன்னல் பலவகற்றி ஏற்றமுடன்—இந்நாளில்
பாரை உயர்த்திடவே பாட்டெழுதி உய்யுந்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—பெரு. முல்லையரசு, மெ[illegible].

கொஞ்சும் இளமையினைக் கோலமெனக் கொண்டஇளம்
வஞ்சியரும் மாற்றானின் வாயிலென்றால்—நெஞ்சினில்
யாரையும் சற்றேனும் ஆடவிடாப் பண்புமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—ப. உ. வைரவன், பூவாண்டிபட்டி.

தன்மனைவி நூல்வாங்கத் தன்னருமை இந்தியத்தாய்
பொன்மகளாய் என்றும் பொலிவுறவே—இன்னுயிரைப்
போரை வெலவேண்டிப் போக்கித் தலைவணங்
காரைத் தொழுவீர் களித்து.

—செம்பியன், அமராவதி நகர்

ஸீமென்ஸ் 'பம்ப்மாஸ்டர்' கூறுகிறார்... SIEMENS





ஜெர்மன் தொழில்நுட்பத்தின் அற்புதப் படைப்பு ட்ரோபுடார் கேபிள். அதை நிறுவினால் காண்ட்யூவிட் குழாய்களின் தொல்லைகளுக்கு விடைகொடுக்கலாம்.

ட்ரோபுடார் கேபிள் சிறப்பியல்புகளாவன:

- ட்ரோபுடார் கேபிள நீடித்துழைக்கும், தொல்லையற்ற [illegible] காரணம், தனிப்பட்ட பி.வி.ஸி. முடுறையினையும் எஃகுக் கவசத்தையும் அணிந்துள்ளது அது.
- ட்ரோபுடார் கேபிள் திறந்த நிலத்திலோ, பள்ளத்திலோ, அல்லது நீருக்கடியிலோ நிறுவத் தக்கது. துருப்பிடிக்காதது. நீரினால பாதிக்கப்படாதது.
- ட்ரோபுடார நீளநெகிழ்வுத் திறனுள்ளது; அவசியமாகும்போது, பிணைப்பு அகற்றாமலே பம்பு செட்டை இடமாற்ற முடியும்.

பம்பு செட்டுக்கு இடையறாத, நம்பிக்கையான மின் சப்ளை வழங்குவதற்காக ஸீமென்ஸ் ட்ரோபுடார் கேபிள்களையே உபயோகியுங்கள்.

ஸீமென்ஸ் இந்தியா லிட். ● பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● நியூ டெல்லி ● அகமதாபாத் ● பெங்களூர் ● ஹைதராபாத் ● லக்னோ

அரிசி உற்பத்தியில் [illegible] முதலிடம்

[illegible] நதிகள் வளைந்தோடுகின்ற மாநிலங்களில் செய்ய முடியாத சாதனையை, பாசன நீர் பற்றுக் குறையைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாடு செய்துகாட்டியுள்ளது! தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களுக்கு அளித்துவரும் ஊக்கத்தின் காரணமாகவும், தளரா உள்ளம் படைத்த தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் காட்டிய ஆர்வத்தின் காரணமாகவும், 1970—71-ஆம் ஆண்டில் அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாடே அரிசி உற்பத்தியில் முதலிடம் வகித்து வருகிறது.

அரிசி உற்பத்தியில் 1970—71-ஆம் ஆண்டில் அனைத்து இந்தியாவிலும் சராசரியாக ஹெக்டேருக்கு (2.47 ஏக்கர்) 1,134 கிலோ அரிசி உற்பத்தியாகியுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 1970—71-ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 1,974 கிலோ அரிசி உற்பத்தியாகியுள்ளது. இந்த அளவு அரிசி உற்பத்தி மற்றெந்த மாநிலங்களிலும் செய்யப்படவில்லை.

அரிசி உற்பத்தியில் 1969—70-ஆம் ஆண்டில் மைசூர் மாநிலமே இந்தியாவில் முதலிடம் வகித்திருந்தது. தமிழ்நாடு உழவர் பெருமக்களும், தமிழ்நாடு அரசும் மேற்கொண்ட தளராமுயற்சியின் காரணமாக அரிசி உற்பத்தியில் 1970—71-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

வரலாறு காணாத இம்மாபெரும் சாதனை ஏற்பட்டதற்குக் கீழ்க் கண்டவைகளே மூல காரணங்களாகும்:—

1. மிகுவிளைச்சல் தரும் ரகங்கள் (High yielding varieties) பெரும்பரப்பில் பயிரிடப்பட்டன.

2. இரசாயன உரங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

3. பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பெரும் பரப்பில் மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மிகுவிளைச்சல் தரும் நெல் வகைத் திட்டத்தின்கீழ் 1968-69-ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட 15.69 இலட்சம் ஏக்கர் பரப்பளவு, 1970—71-ஆம் ஆண்டில் 44.93 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. இப்பரப்பு தமிழ்நாட்டில் நெல் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவான 66 இலட்சம் ஏக்கரில், மூன்றில் இரண்டு பங்காகும்.

தமிழ்நாட்டில் 1968—69-ஆம் ஆண்டில் இரசாயன உரங்களைப் பொறுத்தவரையில் 1.13 இலட்சம் டன் தழைச்சத்து, 0.35 இலட்சம் டன் மணிச்சத்து, 0.31 இலட்சம் டன் சாம்பல்சத்து, ஆகியவைகளே பயன் படுத்தப்பட்டன. 1970—71-ஆம் ஆண்டில் 1.73 இலட்சம் டன் தழைச்சத்து, 0.72 இலட்சம் டன் மணிச்சத்து, 0.51 இலட்சம் டன் சாம்பல் சத்து, தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு இரசாயன உரங்களின் உபயோகம் ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகிறது.

மண்ணின்மேல் நடந்து மருந்து தெளிப்பதுடன், விண்ணில் பறந்தும் மருந்து தெளித்துப் பயிர்களைக் கண்ணின் மணிபோல் காப்பாற்றியுள்ளோம்! 1968—69-ஆம் ஆண்டில் பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தெளிப்பான்கள் மூலம் 63·91 இலட்சம் ஏக்கரிலும், விமான மூலம் 2·90 இலட்சம் ஏக்கரிலும் மருந்து தெளிக்கப்பட்டது. பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, 1970—71-ஆம் ஆண்டில் தெளிப்பான்கள் மூலம் 107·51 இலட்சம் ஏக்கரிலும், விமானம் மூலம் 6.974 இலட்சம் ஏக்கரிலும் மருந்து தெளிக்கப்பட்டது.

மப்
யின்
மாக
மிகு விளைச்சல் தரும் நெல் வகைகள் பரவின; இரசாயன உரங்களின் உபயோகம் பெருகின; பயிர்ப் பாதுகாப்பாக மருந்து தெளிக்கும் பணியும் தீவிரமாகியது. அதன் பயனாய் 1970-71-ஆம் ஆண்டில் நம் தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி 53.03 இலட்சம் டன்களாக உயர்ந்தது. இந்த அளவு, இதுவரை எய்திய சாதனைகளிலேயே மிக உயர்ந்த அளவாகும். மேலும், 1969—70-ஆம் ஆண்டுடன் முடிவடைந்த முந்திய ஐந்தாண்டுகளின் சாரசரி ஆண்டு உற்பத்தியளவான 39.24 இலட்சம் டன் அரிசியுடன் ஒப்பிட்டால், 1970—71-ஆம் ஆண்டின் அரிசி உற்பத்தி 35.1 சத வீதம் உயர்ந்துள்ளது.

எனவே, அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இரு மாபெரும் வரலாறு காணாத சாதனைகள் 1970—71-ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ளன.

1. இதுவரை இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டின் அரிசி உற்பத்தி 53.03 இலட்சம் டன்களாக உயர்ந்தது.

2. சராசரி ஹெக்டேர் அரிசி உற்பத்தியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கிறது.

இவ்விரு சாதனைகளும், பாசன நீர்ப் பற்றுக்குறை மட்டும் தமிழ்நாட்டில் இல்லாதிருக்குமானால், தரணியே வியக்குமளவுக்குத் தமிழக உழவர் பெருமக்கள் அரிசி உற்பத்தியைப் பெருக்கிக் காட்டுவார்கள் என்பதை உறுதிப் படுத்துவதுடன், பசுமைப்புரட்சி தமிழ்நாட்டில் 'ஆல்போல் தழைத்து அருகு போல் வேர்விட்டு' வருகிறது என்பதற்குத் தகுந்த சான்றாகவும் அமைந்துள்ளன.

வரலாறு காணாத இவ்விரு சாதனைகளுக்கும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினருடைய ஓயாத உழைப்பே காரணமென்றால் மிகையல்ல.

போர் முனையில் புனிதப் பணி

"செல்வக் குடும்பத்திலே பிறந்தவர்; இலத்தீன், ஜெர்மனி, பிரஞ்சு முதலிய மொழிகளில் புலமை பெற்றவர்; மருத்துவமனையை நிருவகிப்பதில் திறமை மிக்கவர்; செவிலியருள் தலைசிறந்தவர்; மருத்துவச் சிகிச்சையில் மிகுந்த அனுபவமுள்ளவர் ...." என்று இளங்கோ படித்துக் கொண்டிருந்த போது, "யாரண்ணா அவர்?" என்று கேட்டுக் கொண்டே கண்ணகி அறையினுள் நுழைந்தாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் இளங்கோ சில புத்தகங்களைப் படித்து, குறிப்பு எழுத முன் கூட்டியே திட்டமிட்டிருந்தான். அவனது அறையில் ஒரு சின்ன நூலகம் இருந்தது. தமிழறிஞர்களின் படங்களும் அழகாக மாட்டப்பட்டிருந்தன. கண்ணகி அவன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "நீங்கள் படித்துக் கொண்டிருந்தீர்களே, அவர் யாரண்ணா?" என்று மீண்டும் கேட்டாள். அதற்கு இளங்கோ "அவரா, அவர்தான் பிளாரென்ஸ் நைட்டிங்கேல்" என்று சொல்லி ஒரு கனமான புத்தகத்தை அவளிடம் கொடுத்து, அதிலுள்ள அவர் உருவப் படத்தைப் பார்க்கச் சொன்னான். கண்ணகி அந்தப் படத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "வீரப் பெண்மணி ஜோன் போல, இவரும் போர்முனை சென்றாரா?" என்று கேட்டாள்.

"ஆம், ஜோன் போர் முனை சென்று போர் செய்தாள்; பிளாரென்ஸ் நைட்டிங்கேலோ போர் முனை சென்று, காயமுற்ற வீரர்களை மரணப் பிடியிலிருந்து காப்பாற்றினாள்".

"அப்படியா? அவர் கதை கேட்க நன்றாக இருக்கும் போலிருக்கிறதே! உடனே சொல்லுங்களண்ணா! அதோ, என் தோழிகளும் வந்து விட்டார்கள்" என்று கண்ணகி தம் தோழிகளை வரவேற்றாள். இளங்கோ சொல்ல ஆரம்பித்தான்.

"வில்லியம் எட்வர்டு ஷோர் என்பவர் இங்கிலாந்தில் புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்; செல்வந்தர்; அந்தக் குடும்பத்துக்கு 'நைட்டிங்கேல்' என்று பெயர். இவர் அடிக்கடி வணிகம் காரணமாக இத்தாலிக்குச் செல்வது வழக்கம். அங்கு இவருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதற்குப் பார்த்தினோப்பு என்று பெயரிட்டார். அடுத்து, பிளாரென்ஸ் என்னும் பகுதியில் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஊரின் பெயரோடு குடும்பப் பெயராகிய நைட்டிங்கேல் என்பதையும் சேர்த்து 'பிளாரென்ஸ் நைட்டிங்கேல்' என்று பெயரிட்டார்.

"பிளாரென்ஸ் நைட்டிங்கேலின் தாயார் பெயர் பிரான்சஸ். இவர் சிகிச்சைகள் செய்யும் முறைகளை அறிந்தவர். தம்மை நாடி வரும் நோயாளிகள் பலருக்கு இலவசமாகச் சிகிச்சை அளித்து மகிழ்ந்து வந்தார். நைட்டிங்கேலின் பெற்றோர்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். பிறர்க்கு உதவி செய்வதிலும் அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வந்தார்கள். பெற்றோர்களின் குணநலன்களே நைட்டிங்கேலின் பிற்கால வாழ்க்கைக்கு வழி காட்டியாய் விளங்கின.

நாளையத் தலைமுறை

"தன் அன்னை நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதைச் சிறுமி நைட்டிங்கேல் மிக உன்னிப்பாய்ப் பார்ப்பாள். அவளுக்கும் இது போல் மருத்துவம் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. விளையாட்டின் போதுகூட மண்ணால் வீடுகட்டி, அதை மருத்துவமனையாகவும், பொம்மைகளை நோயாளிகளாகவும் பாவித்துத் தம் சகோதரியிடம் விளையாடுவது வழக்கம். நைட்டிங்கேல் மிகுந்த இரக்க குணமுள்ளவர். பிறர் வருந்துவதைச் சகிக்கமாட்டார். சிறு வயதிலிருந்தே இந்த நல்ல குணம் அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தது.

"நைட்டிங்கேல் குதிரைச் சவாரி செய்வதில் தேர்ச்சியுற்றார். இப்பயிற்சி பின்னால் அவருக்குப் பெரிதும் உதவியது. இவர் குதிரையிலேறி மலைச்சரிவுகளின் பக்கம் இயற்கைக் காட்சிகளையெல்லாம் கண்டு களித்த வண்ணம் செல்வார். அப்போது, ஓர் ஆட்டு இடையன் ஆடுகளை ஒன்று கூட்டுவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். இத்தனை நாளும் அவனது நாய் ஒன்று, இந்த வேலையைச் செய்து கொண்டிருந்தது. அன்று அது காயம்பட்டு நடக்கச் சக்தியற்று வீட்டிலேயே இருந்தது. இதனை மேய்ப்பாளரிடமிருந்து அறிந்து கொண்ட நைட்டிங்கேல், நாய் இருக்கும் இடம் அறிந்துகொண்டு குதிரையை நேரே அங்குச் செலுத்தினார்.

"ஒரு குடிசையின் வாசலில் ால்களில் பலத்த காயம்பட்ட ாய் சோர்ந்து படுத்துக்கொண் ருந்தது. குதிரையிலிருந்து நைட்டிங்கேல் கீழே இறங்கி ந்து, நாயின் அடிபட்ட கால் ளை மெதுவாக எடுத்துப் பார்த் ாள். நாய் மெல்லக் கண்களைத் றந்து நைட்டிங்கேலைப் ார்த்தது. கால்கள் வீக்க ற்றிருந்தன. அதற்குள்ளே டையன் அங்கு வந்து விட் ான். நைட்டிங்கேல் அங்கு ருப்பது கண்டு பெரிதும் வியந் ான். இடையன் மூலம் வெந் ரையும், ஒரு துண்டுத் துணியை ம் கொண்டுவரச் சொல்லி, ாயின் கால்களுக்கு ஒத்தடம் காடுத்தாள். நாயின் வீக்கம் டிப்படியாகக் குறைந்தது. நட்டிங்கேலின் முகம் மலர்ந் து. நாயும் நன்றி யுணர்ச்சி யாடு நைட்டிங்கேலைப் பார்த் து!

"இந்த நிகழ்ச்சியை அறிந்த பற்றோர்கள் மகிழ்ச்சிக் கடலில் ழ்ந்தார்கள். பெண்ணின் ரக்கச் சிந்தையைப் போற்றி ர்கள். ஊரிலுள்ளவர்கள் தம் ல்நடைகளுக்கு வேண்டிய கிச்சைகளைப் பெற நைட்டிங் கலேயே நாடி வந்தனர். நட்டிங்கேல் இளம் வயதிலேயே த்திக் கூர்மையும், நல்ல திறமை ம், பொதுநல ஆர்வமும் உள்ள ராகத் திகழ்ந்தார். அவர் த்தாலியில் பிறந்திருந்தும், தம் ாய்நாடான இங்கிலாந்தை நபோதும் மறந்ததில்லை.

"நைட்டிங்கேல் தமக்கென்று ர் அறையை அமைத்துக் ாண்டு அதை அழகிய கூட க ஆக்கினார். நோயாளிகள் ருக்கு அந்த அறையில் தான் ச்சை நடத்தினார். இதைக் ண்ட மேனாட்டுப் பேரறிஞர் ஒரு ர் தம் நூலில், 'பிளாரென்ஸ் ட்டிங்கேல் அம்மையாரின் றைக்குள் நுழையும் ஒவ் ாரு நோயாளியும் அழகிய த்தையும், அன்பு ஒளிவீசும் ம்மையாரின் சொற்களையும் ட்டு நோய் நீங்கியவர்களாய் மலர்ச்சியுடன் செல்கிறார் ர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

"நைட்டிங்கேல், சுற்றுப்புறங் ிலுள்ள வீடுகளுக்குச் சென்று ாதார முறைகளைக் கடைப் க்கும்படி வற்புறுத்தி வந்தார். ஒரு சமயம் இரவு வெகு நேரமாகியும் நைட்டிங்கேலைக் காணாத பெற்றோர்கள் பல இடங்களில் தேடினார்கள். கடைசியில் ஒரு வீட்டில் ஒரு நோயாளியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு ஆறுதல் சொல்வதைக் கண்டு மகிழ்ந்தார்கள்! தம்மை நாடி வரும் மக்களுக்கு நைட்டிங்கேல் இப்படிச் சொல்வார்: 'அருமைச் சகோதரிகளே! நீங்கள் எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் ஆண்களைப் போலத் துணிவுடன் இருங்கள். எந்த நாளும் பயனை எதிர்பாராமல் உங்கள் கடமைகளைச் செய்வதில் கண்ணாயிருங்கள்!'.

"செல்வச் செழிப்பிலே வாழ்ந்து வந்தாலும் நைட்டிங்கேல் ஏழைகளுக்கு உதவி செய்வதிலேயே தம் சிந்தனையைச் செலவிட்டார். இதற்குத் தாமே ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அதுதான் 'நர்ஸ்' எனப்படும் செவிலியர் தொழில். இத்தொழிலைக் கற்றுக்கொண்டு மக்கள் தொண்டிலேயே காலத்தைக் கழிப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டார். இலண்டன் போன்ற நகரங்களுக்குச் சென்று இத்தொழிலில் பயிற்சி பெற்றார். அக்காலத்தில் மருத்துவமனைகளிலுள்ள ஆங்கிலேயச் செவிலியர் அசுத்தமாகவும், இரக்கமற்றவராகவும், போதிய பயிற்சி இல்லாதவராகவும் இருந்து வந்தனர். இதனால், நோயாளிகள் பலர் இறந்தனர். இக்குறைகளைப் போக்க நைட்டிங்கேல் பெரிதும் பாடுபட்டார். பிரான்ஸ், அலெக்சாண்டிரியா நகரங்களில் பயிற்சிச் சாலைகளை அமைக்கும் முறைகளையும், இரணச் சிகிச்சை முறைகளையும் தெளிவுறக்கற்றார்.

[illegible] விளக்கி ஒரு நூல் எழுதினார். அதன் மூலம் கிடைத்த வருமானம் முழுவதையும் ஏழைகளின் பள்ளிக்கு நன்கொடையாகக் கொடுத்துதவினார்.

"நைட்டிங்கேல் அம்மையாருக்கு முப்பத்து மூன்று வயதிருக்கும். இலண்டனில் செல்வப் பெண்டிருக்காக ஒரு மருத்துவமனை இருந்தது. அது சீர்குலைந்திருந்தது. அதன் தலைவராக இருந்த அலெக்சாண்டிரியா ராணியார், நைட்டிங்கேலை அம்மருத்துவமனையின் மேற்பார்வையாளராக நியமித்தார். இம்மருத்துவமனை பிற்காலத்தில் 'பிளாரென்ஸ் நைட்டிங்கேல் மருத்துவ மனை' என்று வழங்கப்பட்டது. நைட்டிங்கேலின் புகழ் ஊர் உலகெங்கும் பரவியது. பலர் தம் மருத்துவமனைக்கு அவரை வரவழைக்கப் போட்டி போட்டனர். எவ்வித வசதியும் இல்லாமல் தவிக்கும் கிராம மக்களுக்குத் தொண்டாற்றுவதிலேயே மனநிறைவு கண்டார் நைட்டிங்கேல். இதற்காக இவர் கிராமம் கிராமமாகச் சென்றார். இவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சிட்னி-எர்பர்ட் என்னும் தம்பதிகளாவர்.

"பத்தொன்பதாவது நூற்றாண்டில் ரஷ்யாவுக்கும், இங்கிலாந்துக்கு மிடையே போர் நிகழ்ந்தது. இந்தப் போரில் இங்கிலாந்துடன் பிரான்ஸ், ஆஸ்திரியாவும் கலந்து கொண்டன. ரஷியாவில் கருங்கடலிலுள்ள கிரிமியா என்னும் தீவில் இந்தப் போர் நடந்தது. ரஷ்யர் இந்தத் தீவில் பலமிக்க கோட்டையை இராணுவ அரணாகக் கொண்டு எதிரிகளை முறியடிக்க முயன்றனர். இங்கிலாந்தும், மற்ற இருநாட்டுப் படைகளும் அந்தக் கோட்டையை முற்றுகையிட்டுக் கடும்போர் புரிந்தன. எளிதில் கைப்பற்ற முடியாத மலைகள் சூழ்ந்த அந்தக் கோட்டை பெரும் போருக்குப் பின் இங்கிலாந்து வசமாயிற்று! இங்கிலாந்து வெற்றி பெற்றாலும் ஏராளமான வீரர்கள் போரில் காயமுற்றனர். பலர் கொடிய தொற்று நோய்களுக்கு ஆளாகி இறந்தனர்.

"ஆங்கிலேய அரசு ஸ்குடாரி என்னும் இடத்தில் இராணுவ மருத்துவமனையொன்றைத் துவக்கியது. ஆங்கிலேயப் போர்

வீரர்கள் நாற்பதினாயிரம் பேர்களில், இருபதாயிரம் வீரர்கள் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு இம்மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அங்குத் தகுதி பெற்ற செவிலியரும், மருத்துவரும் இல்லாததால் வீரர்கள் பலர் இறந்தனர். இப்பரிதாப நிலைமை இங்கிலாந்து முழுவதும் பரவிற்று. மருத்துவ மனையில் வீரர்கள் படும் பாட்டைக் கண்டித்துப் பத்திரிகைகள் பல தலையங்கங்கள் எழுதின. இதனை நைட்டிங்கேல் படித்து மிகவும் வேதனையடைந்தார். வீரர்களின் துன்ப நிலையைத் துடைக்கத் தாமும் ஒரு செவிலியாகப் போர்முனை சென்று தம்மாலான உதவிகளைப் புரிவது என்று உறுதி கொண்டார்.

'' இதற்கிடையில் சிட்னி எர்பர்ட் என்பவர் இங்கிலாந்தின் பிரதிநிதியாகவும், போர்ச் செயலாளராகவும் போர்முனை சென்றார். அங்கு மருத்துவமனையில் கேட்பாரற்றுக் கிடந்த வீரர்களின் இழிநிலையைக் கண்டு கொதிப்படைந்தார். இவர்களைக் காப்பாற்றும் ஒரே பெண்மணி பிளாரென்ஸ் நைட்டிங்கேல்தான் என்பதையும் உணர்ந்தார். உடனே அவருக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதினார். 'போர்முனையில் மேற்பார்வையாளராக இருந்து தொண்டாற்றும் பெண்மணிக்கு மனஉறுதியும், தளரா ஊக்கமும், நல்லொழுக்கமும் மிகவும் முக்கியம். இத்தகைய பண்புகள் உம்மிடம் அமைந்திருப்பதால், நீரே அப்பதவியை வகிக்கத் தகுதியுடையவர்' என்று அதில் குறிப்பிட்டிருந்தார். மேலும், இதுபற்றி விக்டோரியா மகாராணியாருக்கு ஒரு கடிதமும் வரைந்து அனுப்பினார்.

'' கடிதத்தைப் படித்துப் பார்த்த நைட்டிங்கேல் பெரிதும் மகிழ்ந்தார். தமது விருப்பத்தைக் கடிதம் மூலம் அனுப்பினார். சேதி அறிந்த மகாராணியார், கொஞ்சமும் தாமதியாமல் நைட்டிங்கேலை ஸ்குடாரி மருத்துவமனையின் மேற்பார்வையாளராகவும், செவிலியர் தலைவராகவும் நியமனம் செய்தார். அதனால், பிளாரென்ஸ் நைட்டிங்கேல் தம்மோடு செவிலியர் பலரை அழைத்துக் கொண்டு கப்பலில் போர்முனை மருத்துவ மனையை நோக்கிச் சென்றார்.

'' மருத்துவமனையில் அவருக்குக் கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது. தங்களைக் காப்பாற்ற வந்திருக்கும் கடவுள் என்று அவரைக் கொண்டாடினர். 'சீமாட்டிகளின் தலைவி', 'பிளாரென்ஸ் சீமாட்டி', 'கன்னி நைட்டிங்கேல்' என்றெல்லாம் அவரைப் புகழ்ந்தனர். அம்மையார் மருத்துவமனை போவதற்கு முன் வீரர்கள் குளிராலும், பட்டினியாலும் தவித்துக் கொண்டிருந்தனர். துர்நாற்றம் வீசும் அழுக்கு உடைகளை அவர்கள் அணிந்திருந்தனர். சுற்றுப்புறங்கள் அசுத்தங்களால் நாறிக் கிடந்தன. இந்தக் கோரக் காட்சியைக் கண்ட அம்மையார் மிகவும் வேதனையடைந்தார்.

இராமேஸ்வரத்தில் காண முடியாதன

இராமேஸ்வரம் தீவில் பல தொழில்கள் உள்ளன. எனினும், முக்கியத் தொழில் மீன் பிடிக்கும் தொழிலேயாகும். அங்கு, உழு தொழில் இல்லை. எனவே, ஏர் முனையைக் காண முடியாது. ஏராளமான தென்னை மரங்கள் உள்ளன. எனினும், எண்ணெய் ஆட்டும் செக்கைக் காண முடியாது. பாத்திரங்கள் செய்வதற்கு உதவக்கூடிய மண் இல்லை. எனவே, மட்பாண்டத் தொழிலாளர்களும் இல்லை.

உடனே, செயல்முறையில் இறங்கினார். மருத்துவமனையின் உள்ளும், புறமும் உள்ள அசுத்தங்களை நீக்கித் தூய்மையாக்கினார். தம் சொந்தச் செலவில் ஓர் இடத்தை வாடகைக்குப் பெற்று, அவ்விடத்தில் ஒரு சலவைச் சாலையை ஏற்படுத்தினார். சுகாதார முறைப்படி வாரம் ஒருமுறை பத்தாயிரம் சட்டைகள் வீதம் சலவை செய்ய ஏற்பாடு செய்தார்;

'' இன்சொல்லாலும், ஓயாத உழைப்பாலும் அனைவரையும் கவர்ந்த அம்மையார், முதலில் தகுதியற்ற மருத்துவர்களையும், செவிலியர்களையும் நீக்கி, திறமையானவர்களை நியமித்தார். ஒவ்வொரு வீரருக்கும் நல்ல உணவும், கம்பளிப் போர்வையும், தக்க சிகிச்சையும் கிடைக்க ஏற்பாடு செய்து மரணப் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அரும்பாடுபட்டார். நல்லிரவில் கூட அம்மையார் கையில் விளக்கொன்றை ஏந்தி ஒவ்வொரு வீரரையும் பார்த்து வருவார். சில வீரர்கள் அவர் எப்போது வருவார் என்று எதிர்பார்ப்பார்கள். தவிர அவரது நிழலைக் கண்டதும் வணங்கி வாழ்த்திவிட்டுப் பிறகுதான் தூங்குவார்கள். இதனால், அம்மையாருக்கு 'விளக்கேந்திய வனிதையார்' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

'' அம்மையாரின் அருந்தொண்டு பற்றி உலகமே பாராட்டியது. காயமுற்ற வீரர்கள் தெம்புடன் காணப்பட்டனர். அம்மையாரின் தொண்டுள்ளத்துக்கு எடுத்துக் காட்டுகள் ஒன்றா, இரண்டா? அவர் தம் தாய் நாட்டிலிருந்து போர்முனைக்கு வரும்போதே வீரர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் மருந்து வகைகள், சோப்பு, கஞ்சிமாவு, கோழிக் குஞ்சு ரசம், தேயிலை முதலியவைகளைச் சேகரித்துக்கொண்டு வந்தார். போர்முனை மருத்துவமனைக்கு வந்த பத்து நாட்களுக்குள் சுமார் 800 வீரர்களுக்குத் தாம் கொணர்ந்த பொருட்களைக் கொடுத்து அவர்களைப் பிழைக்க வைத்தார். வீரர்களுக்கு வேளை தவறாமல் முறையாக உணவு கொடுக்க நாள்தோறும் நாற்பது காலன் மாக்கஞ்சியும், பதினான்கு காலன் கோழிக்குஞ்சு ரசமும் தயாராயின!

'' ஒரு சமயம் ஐந்து போர் வீரர்களுக்குச் சிகிச்சைகள் பல செய்தும் எந்தப் பலனுமில்லாமல் போகவே, மருத்துவர்கள் நம்பிக்கையிழந்து அவர்களைக் கைவிட்டனர். மரணத்தைத் தழுவ இருந்த அவர்களை அம்மையாரே தகுந்த சிகிச்சை செய்து, இரவும் பகலும் அருகேயிருந்து கவனித்துக் காப்பாற்றினார். இன்னொரு வீரனின் வலக்கை முறிந்திருந்தது. அதனைத் துண்டித்துவிட மருத்துவர்கள் தீர்மானித்தனர். வீரன் மிகவும் வேதனையடைந்து 'கையைத் துண்டிப்பதற்குப்பதில் என்னைக் கொன்றுவிடுங்கள்' என்று கதறினான். கேள்விப்பட்ட நைட்டிங்கேல் தகுந்த சிகிச்சைகள் மூலம் இடைவிடாமல் கவனித்து அவன் கையைக் குணப்படுத்தினார்.

'' ஸ்குடாரி மருத்துவமனையின் புகழுக்கு மூல காரணம் பிளாரென்ஸ் நைட்டிங்கேல் என்பதை ஊரும் உலகமும் அறிந்தன. விக்டோரியா மகாராணியாரும், அவரது கணவரும் அம்மையாரின் அயராத தொண்டைக் கண்டு பெருமிதம் கொண்டனர். தன்னலம் கருதாமல் பொதுநலப் பணியிலேயே முழுக்கவனமும் செலுத்தித் தம் பெற்றோரையும் செல்வச் செழிப்பையும் விட்டு, ஒரு பெண் பணிபுரிகிறாள் என்றால் அவள் துணிவை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்?

'' ஆறு மாதங்கள் ஸ்குடாரி மருத்துவமனையில் பணியாற்றிய அம்மையார், பாலக்லாவா என்னும் இன்னொரு போர்முனை மருத்துவ மனையின் மேற்பார்வையாளராக இருந்தும் பெருந்தொண்டு புரிந்தார். ஒரு சமயம் கரடுமுரடான பாதையில் குதிரையில்சென்றுகொண்டிருந்தபோது காயமுற்றார். அதுமுதல் அவர் பாசறை ஒன்றில் தங்கி ஓய்வு எடுக்க வேண்டியிருந்தது. இராணுவ அதிகாரி ஒருவர் அவருக்கு உதவியாக குதிரை வண்டி ஒன்றைக் கொடுத்துதவினார். அந்த நிலையிலும், அவர் வண்டியிலேயே நாள்தோறும் போய் வீரர்களுக்கு வேண்டியன செய்தார். அனாதை வீரர் பலருக்குத் தம் செலவிலேயே சிறு வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்.

'' இருபத்து நான்கு மணி நேரமும் சிறிதும் ஓய்வே இன்றி உழைத்த அம்மையார் பணியின் மூலம் தொற்றுநோய்க்கு ஆளானார். அம்மையார் நோய்வாய்ப்பட்ட சேதி இங்கிலாந்து முழுவதும் பரவி, அம்மக்களைப் பெரிதும் வருந்தச் செய்தது. அவர் பிழைக்க வேண்டும் என்று அனைவரும் வாழ்த்திய வண்ணமிருந்தனர். உடல் நலம் குன்றிய அவரைத் தாய் நாட்டுக்குப் போக அதிகாரிகள் வேண்டினர். ஆனால், அவர்களது வேண்டுகோளை அவர் நிராகரித்து விட்டார். மீண்டும் ஸ்குடாரிக்குச் சென்று பணியாற்றவே விரும்பினார்!

'' இறுதியில் போர் நிற்கச் சமாதானம் நிலவியது. போர் வீரர்கள், காயமுற்றுச் சிகிச்சை பெற்றவர்கள், அதிகாரிகள், செவிலியர்கள்அனைவரும்தம்தாய் நாடான இங்கிலாந்துக்குச் சென்றனர். அப்போதுதான் அம்மையாரும் தாய்நாடு போகச் சம்மதித்தார்! போரில் வீரமரணம் அடைந்த எண்ணற்ற வீரர்களுக்காக நினைவுச் சின்னம் ஒன்றை அம்மையார் நிறுவினார். தாய் நாடு திரும்பிய வீரர்களுக்கும், குறிப்பாகப் பிளாரென்ஸ் நைட்டிங்கேலுக்கும் மகத்தான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

வாழைப்பழப் பொடி

வாழைப்பழங்கள், இருதயத் துடிப்பைச் சீர்படுத்தும் பாஸ்வர உப்புக்களைக் கொண்டுள்ளன. வாழைப்பழம் மலிவான விலையில் கிடைக்கும் சுவை மிகுந்த—சத்தூட்டமுள்ள பழமாகும். இப்போது, வாழைப் பழத்தைப் பொடியாக மாற்றிப் பல்வேறு இடங்களுக்கும் அனுப்புகின்றனர்.

நேந்திர வாழைப்பழத்தின் பொடியைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவுப் பொருளாகவும் பயன்படுத்துகிறார்கள்.

'' தாய்நாடு திரும்பிய பிறகும் அம்மையாரின் ஆர்வம் குறையவில்லை. செவிலியர் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தினார். பொது நன்மைக்காக நிதித்திட்டம் ஒன்றையும் மேற்கொண்டார். ஏழைகளுக்காக மருத்துவமனையொன்றையும் கட்டினார். செவிலியர் சங்கம் ஒன்றையும் தொடங்கினார். ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்காக அரசு ஓய்வு நிதியையும் துவக்கி வைத்தார். கி.பி. 1857-ல் இந்தியாவில் சிப்பாய்க் கலகம் உண்டாயிற்று. அதனை அடக்க வேண்டி ஆங்கிலேய வீரர்கள் இந்தியச் சிப்பாய்களுடன் போரிட நேர்ந்தது. எனவே, எண்ணற்ற ஆங்கிலேய வீரர்கள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தனர். அச்செய்தியறிந்த அம்மையார் தம் தோழியருடன் இந்தியா வந்து தொண்டாற்ற விரும்பினார். ஆனால், உடல் நலக் குறைவால் வர இயலாமல் போய்விட்டது. என்றாலும், இந்திய அதிகாரிகளுடன் கடிதம் மூலம் பல யோசனைகளைச் சொன்னார். இந்திய அரசின் பிரதிநிதியான மேயோ பிரபு அம்மையார் சொன்ன சுகாதார முறைகளை இந்தியாவில் பரப்பினார். அப்போது சென்னை ஆளுநராக இருந்த நேப்பியர்பிரபு அம்மையாரின் யோசனைப்படி இராணுவத்திலும், நாட்டிலும் சீர்திருத்தங்கள் பல செய்தார்.

'' பிளாரென்ஸ் நைட்டிங்கேல் பல புத்தகங்களை எழுதினார். இந்தியச் சுகாதாரக் குறிப்புகள், செவிலியர் தொழிலின் முக்கியக் குறிப்புகள், மருத்துவமனை பற்றிய குறிப்புகள், இந்தியக் கிராமங்களின் சுகாதார முறைகளும் சீர்திருத்தங்களும், இந்தியமக்கள் முதலிய நூல்கள் பெருமளவில் விற்பனையாயின. இந்தியப் பிரமுகர்கள் பலருடன் கடிதத் தொடர்பு வைத்துக்கொண்டு தம் கொள்கைகளை விளக்கினார். அவர்களுள் தாதாபாய் நௌரோஜி, லால் மோகன் கோஸ் முக்கியமானவர்கள்.

''உலகச் செவிலியர் நிறுவனங்களின் நிறுவனரும், செவிலியர்க்கு அன்னையாரும், இந்திய மக்களின் பேரன்புக்குகந்தவரும், ஏழை மக்களின் காப்பாளரும், உலகம் போற்றும் உத்தமியருமான பிளாரென்ஸ் நைட்டிங்கேல் கி.பி. 1910-ஆம் ஆண்டு, தம் தொண்ணூறாவது வயதில் இலண்டன் மாநகரில்காலமானார். அவர், தம்பி தங்கைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினார். உலகம் உள்ளளவும் அவர் புகழ் அழியாமல் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை'' என்று இளங்கோ சொல்லி முடித்தான். சிலையாக உட்கார்ந்து கொண்டிருந்த கண்ணகியையும், அவள் தோழிகளையும், '' இன்னும் என்ன? கதை முடிந்தது '' என்றதும் உற்சாகத்துடன் அவர்கள் எழுந்து சென்றனர்.

ஆடலரசியின் அணிகலன்கள்!





இந்தப் பக்கத்திலுள்ள மாதவி சிலையின் தோற்றங்களை நன்கு கவனியுங்கள்.

மாதவி அணிந்த அணிகலன்கள் என்னென்ன தெரியுமா ?

தலையில் தலைக்கோலம், சீதேவி, வலம்புரிச்சங்கு, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி, காதுகளில் நீலக்குதம்பை, பின்புறம் தூக்கம், கழுத்தில் சவடி, சரப்பள்ளி, முத்தாரம், மார்பில் வீரச்சங்கிலி, நேர்ச்சங்கிலி, ஞாண், தோளில் தோள்வளை, சூடகம், கைவிரல்களில் வாளைப் பகுவாய் மோதிரம், மணி மோதிரம், மரகதத்தாள் செறி, கைகளில் செம்பொன்வளை, நவரத்தினவளை, சங்கவளை, பவழவளை, இடுப்பில் முப்பத்திரண்டு முத்து வடங்களிலான விரிசிகை என்ற மேகலை, துடையில் குறங்குச் செறி, காலில் பாதசலாம், சிலம்புப் பாடகம், சதங்கை, கால்சரி, கால்விரல்களில் மகரவாய் மோதிரம் முதலியன.

ஆடலரசி ஒருத்தி அணியும் அணிகலன்கள் முழுவதையும் இந்தச் சிற்பத்தில் காணலாம்.

பூம்புகாரில் அமையவிருக்கும் சிலப்பதிகாரக் கலைக் கூடத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த மாதவிச் சிற்பத்தின் உயரம் எட்டரை அடி.

இலக்கியத்திலுள்ள ஒரு கதா பாத்திரத்திற்கு, இந்த அளவில் தமிழ்நாட்டில் வேறு எங்கும் சிலை கிடையாது.

ஆடற்கலை அணங்கின் இந்தச் சிலையைக் கண்டு மயங்காதவர் யாருமில்லை.

பதினைந்தாயிரம் ரூபாய் விலை மதிப்புள்ள இந்தச் சிலையைப் போல் தமக்கு ஒன்று செய்து தரும்படிக் கேட்டுள்ளார் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதுவரக அதிகாரி.

மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைத் தொழில் பயிற்சிக்கூடத்தில் செய்யப்பட்டுள்ள இந்தச் சிலையைப் பற்றிப் பல்கேரியா நாட்டின் நாட்டியக் கலை நிபுணர் திரு கிரில் ஜெனிவ் சொன்னார், 'ஒரு நாட்டிய மங்கைக்கு உரிய அத்தனை இலக்கணத்தையும் இந்தச் சிற்பத்தில் காண்கிறேன்' என்று.

'இப்படிப் பார்த்தவர் அனைவரையும் பாராட்டச் செய்யும் இந்தச் சிலையைச் செய்த பெருமை—ஒருவருக்கு மட்டுமல்ல, இங்குள்ள சிற்பக் கலைஞர்களான எங்கள் அனைவரையும் சேரும்' என்கிறார் மாமல்லபுரம் சிற்பக்கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தின் மேற்பார்வையாளர் கணபதி அவர்கள்.

ஆனால், நாம் ஒத்துக்கொள்ள முடியுமா ?

இந்தப் பெருமை, சிலையைச் செய்தவர்களுக்கு மட்டும்தானா?

தமிழ் மக்கள் அனைவருக்குமே உண்டு !

ஆமாம், அந்த அளவுக்கு மாமல்லபுரத்துக்கு வரும் வெளிநாட்டார் அனைவரும் இந்த மாதவி சிலையைக் கண்டு, சிற்பத் திறனைக் கண்டு நம்நாட்டையே பாராட்டுகிறார்கள்; புகழ்கிறார்கள்.

மிகப் பெரிய விஞ்ஞான ஆய்வுக்கூடம்

பம்பாய்க்கு அருகில் உள்ள டிராம்பே என்னுமிடத்தில் 1957-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இது, அணுசக்தியை அமைதி நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக, மத்திய அரசினால் நிறுவப்பட்டதாகும். இந்தியாவிலேயே மிகப் பெரிய விஞ்ஞான ஆய்வுக் கூடமான இந்த நிலையத்தில் சுமார் 9,800 பேர் பணி புரிகிறார்கள். இதில் 2,100 பேர் விஞ்ஞானிகளும், பொறியாளரும் ஆவர். சுமார் 4,200 பேர்கள் இங்குத் தொழில் நுட்பப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் வேனிற்கால விடுமுறையின் போது பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு அணுபௌதிகம், அணுமின் இரசாயன இயல் போன்ற துறைகளில் மறுபயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையத்தைச் சேர்ந்த பயிற்சிப் பள்ளி, ஒவ்வோர் ஆண்டும் 150 இளம் விஞ்ஞான, பொறியியல் பட்டதாரிகளுக்குப் பௌதிகம், இரசாயனம், பொறியியல், மின்அணு இயல், உலோகவியல், உயிரியல் ஆகிய துறைகளில் பயிற்சி அளித்து வருகிறது.

பயிற்சிப் பள்ளி அளித்துவரும் பயிற்சிகளுடன் பாபா அணுசக்தி ஆய்வுக் கூடமும் சில சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. 1960-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் 10 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

கதிரியக்க ஐஸடோப் மூலம் நோயாளிகளின் நோய்களைக் கண்டறிய விரும்பும் மருத்துவர்களின் நலனுக்காக, மருத்துவத் துறையில் கதிரியக்க ஐஸடோப்களின் உபயோகம் பற்றியும் ஆறு வார காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்பு ஒவ்வோர் ஆண்டும் 15 முதல் 20 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.


17
ஒரு திட்டமா?
இரண்டு திட்டமா?
எப்படியாவது உங்களை யெல்லாம் பழிக்குப் பழி வாங்கணும்னு பல திட்டங்களைப் போட்டிருந்தாங்க
விளக்கமாச் சொல்லுங்களேன்
தம்பிகளா! உங்களை யெல்லாம் மேடையிலேற்றிக் கீழே விழச் செய்றது... ஓட்டப் பந்தயம், விளையாட்டுப் போட்டிகளின் போது அடிபடச் செய்வது....
வேலன், செல்வன், செந்தாமரை மூவரும் சேர்ந்து இதை யெல்லாம் செய்ய முடியுமா?
இங்கேதான் அவங்க பயங்கரத் திட்டமே இருக்கு. அந்த மூணு பேரும் எப்படியாவது உங்களிடம் பிளவை ஏற்படுத்தத் திட்டம் போட்டிருக்காங்க! ஒருத்தரை ஒருத்தர் தவறாப் புரிஞ்சிக்க வைச்சு, உங்களைத் தனியாகப் பிரிச்சுப் பழிதீர்க்கிறது!
இந்த வயசிலேயே இப்படி நினைக்க நாங்க என்ன தப்பு செஞ்சோம்?
அதுதான் தம்பி எனக்கும் புரியலே! இப்ப செந்திலும் அவங்க கூட சேர்ந்துட்டார்!
நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க, நாங்க கவனிச்சுக்கிறோம். இளங்கோ! நாம எல்லாரும் நேரா அண்ணு வீட்டுக்குப் போவோம்!
மாணிக்கம்! என்ன இங்கே நிக்கிறே?
அண்ணாவைப் பார்க்க வந்தேன். அண்ணு வீட்டிலே இல்லே! செல்வன், செந்தாமரை, வேலன் எல்லாம் அண்ணவைத் தேடிக்கிட்டு வண்டியிலே வந்தாங்க... அண்ணு இல்லேன்னதும் போறாங்க...
அந்த மூணு பேரும்தான் அந்த வண்டியிலே போறாங்களா?
வேலன்தான் வண்டி ஓட்டிக்கிட்டு போறான். செல்வனோட அப்பா வாங்கியிருக்கிற புது வண்டியாம்
அதோ! செல்வனோட அப்பா முத்துவோட அப்பா அண்ணு மூணு பேரும் சேர்ந்து வர்றாங்க!!
அண்ணன் காட்டிய வழி!
தொடரும்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

காஞ்சிபுரம் நகராட்சி

10–2–1972-ஆம் தேதி ஏல அறிக்கையில் கண்ட நிபந்தனைகட்கு உட்பட்டு ரயில்வே ரோட்டில் ராஜாஜி நகராட்சி சந்தைக்கு அருகில் 8′ × 8′ அளவில் வைக்கப்பட்டுள்ள நகராட்சிக்குச் சொந்தமான பங்கை தினசரி கட்டண விகித அடிப்படையில் 20–3–1972 முதல் அல்லது பங்கை உபயோகிக்கத் தகுதியாகும் தேதியிலிருந்து மறு உத்திரவு வரும் வரையில் பயன்படுத்திக் கொள்ளும் உரிமையை 17–3–1972 தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும் ஏலக்கட்டுப்பாட்டுகளுக்கும் நகராட்சி ஆணையருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

த. ஆ. சிவசுப்ரமணியன், பி.ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்,
16—2—1972.
(த·34)

ஏல அறிக்கை

சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம்

சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேலம் ஊராட்சியில் உள்ளசிறுபாசன ஏரியின் கரையிலும் உள்வாயிலும் வளர்ந்து முதிர்ந்திருக்கும் 512 வேலம் மரங்களையும் முள் வேலி மரங்களையும் வேலம் ஊராட்சி அலுவலகத்தில் 9–3–1972 வியாழக்கிழமை காலை 10 மணிக்குச் சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் கேட்க கட்டுத்தொகை ரூ. 100. ஏலம் சம்பந்தமாக மற்ற நிபந்தனைகளை சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. ராமதாஸ்,
ஆணையர்,
சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம்,
வடார்க்காடு மாவட்டம்.

(த.2)

ஒப்பந்தப் புள்ளி

அருப்புக்கோட்டை நகராட்சி

1972–73-ஆம் வருடத்திற்கு இந்த நகராட்சிக்கு பாதித்தியப்பட்ட ஆடு அடிக்கும் இடம், பேருந்து நிலையத்தில் உணவு விடுதி, வெற்றிலை பாக்குக் கடை, பழக்கடை, பூக்கடை, சேவுக்கடை, பிளாஸ்டிக் கடை, செருப்புக்கடை, ரொட்டிக்கடை, கைத்தறி ஜவுளி ஸ்டால், வளையல் கடை வைத்து நடத்துதல், பன்றி உரம் சேகரித்தல், நகராட்சி சிமெண்ட் போர்டுகளில் விளம்பரம் செய்தல், மரங்களின் பலனை அனுபவித்தல், நகராட்சி பெட்டிக்கடைகளை அனுபவித்தல் முதலிய உரிமைகளை 1972-ம் வருடம் மார்ச்சு மாதம் 4-ஆம் தேதி சனிக்கிழமை காலை 11மணிக்கும் மற்றும் ஒத்திப்போடப்படும் நாட்களிலும் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

மேலும் 1972–73-ஆம் வருடம் இந்த நகராட்சி மாடுகளுக்குத் தேவையான சோளநாத்து, பருத்தி விதை, புண்ணாக்கு, தவிடு, கலப்பு உணவு, லாடம், எழுதுபொருள் சாமான்கள், சுண்ணாம்புத்தூள், அலுவலகத்திற்குத்தேவையான பாரங்கள் அச்சடித்தல் முதலியவைகளுக்குமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1972-ஆம் வருடம் மார்ச் மாதம் 8-ஆம் தேதி புதன் கிழமை மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

மு. புகழும்பெருமாள் பி.காம்.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
அருப்புக்கோட்டை,
14—2—1972.
(த.36)

ஏல விற்பனை

பழுதடைந்த நிலையிலுள்ளகீழ்க்கண்டஇயந்திரசாதனங்களும்உபயோகப்படுத்தக்கூடிய, ஆனால் பழைய ஸ்பேர் பார்ட்டுகளும், இரும்பு ஸ்க்ராப்புகளும் மேட்டூர் பொதுப்பணித் துறை மெயின் ஸ்டோரில் (மேட்டூர் பாருக் சினிமாக் கொட்டகைக்கு எதிரில்) 17–3–1972-ஆம் வெள்ளிக்கிழமை தேதி பகல் 11 மணிக்கு, அரசினர் விதி முறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனைச் செய்யப்படும்.

(1) பார்க்கர் ஸ்டோன்கிரசர் 1951 மாடல் 4/6 டன் அவுட்புட்.	1
(2) லிங்கேட் மிக்சர், 1950 மாடல் இங்கிலீஸ்மேக் ..	1
(3) மூயர் ஹில் டம்பர் எம்.டி.எஸ். 2417. எம்.டி.எஸ். 2412/1949 மாடல்.	2
(4) பஸ்டைப் வேன் ஸ்டுடிபேக்கர் 1948 மாடல் எம்.டி.எஸ். 2041.	1
(5) எம்.எஸ்.ஸ்டீல் கர்டர், ஆங்கிள் துண்டுகள் மற்றும் எம்.எஸ். ஸ்கிராப்புகள்.	1 குவியல் (லாட்).
(6) பழைய இரும்பு ஸ்பேர் பார்ட்டுகள்	1 குவியல் (லாட்)
(7) பழைய இரும்பு ஸ்டீல் ஸ்கிராப்புகள்	1 குவியல் (லாட்)

ஏல சம்பந்தமாக விவரங்களை ஸ்டான்லி உபகோட்டம் மற்றும் அணைப் பிரிவு அலுவலகங்களில் அலுலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கோள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் எல்லா வேலைநாட்களிலும் பார்வையிடலாம்.

யு.பி. ஸ்ரீ பாதராவ்,
நிருவாகப் பொறியாளர்,
மேட்டூர் கோட்டம்,
மேட்டூர் அணை.

ஒப்பந்தப் புள்ளி

செங்கோட்டை நகராட்சி

திருநெல்வேலி மாவட்டம்

நகராட்சி ஆணையர் அவர்களால் தமது அலுவலகத்தில் 22-3-1972-ஆம் தேதி மாலை 4.00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்புத் தொகை.	வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 வம்பளந்தான் சந்திப்பிலிருந்து நகர தெற்கு எல்லைவரை தார்தளம் போடுதல்.	30,000	750
2 2-ஆம் வார்டு பிள்ளையார் கோவில் தெருவில் கிழக்கிலிருந்து தார்தளம் வேலை.	1,750	45
3 நான்கு ரத வீதியில் தார்தளம் போடுதல் ..	1,500	38
4 5-ஆம் வார்டு பொதுக் கக்கூஸில் சீர்திருத்த வேலைகள்.	800	20

மேற்படி வேலைகளுக்கு அவற்றின் எதிரே குறிப்பிட்டிருக்கும் வைப்புத் தொகையைச் செலுத்திய ரசீதுடன் ஒப்பந்தம் கொடுக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்றுமாலை 4-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த·33)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு அய்யனாவரம் பேருந்து நிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகள் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. கடை நம்பர் 2—பலவகைப் பொருள்கள் விற்றல.
2. கடை நம்பர் 4—புத்தகங்கள் விற்பது (Book stall)

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1.04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 15–3–1972 மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்த பணம் திருப்பித் தரமாட்டாது

(த. 12) **நிருவாக இயக்குநர்.**

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளர், வரும் இரண்டு வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், "அசோக்நகர் பேருந்து நிலையம்" இடத்தில் சிற்றுண்டி சாலை 30′ × 20′ அளவுள்ள கடை ஒன்று குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறையில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 15–3–1972 மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1.04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

த. 13) **நிருவாக இயக்குநர்.**

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 15–3–1972 அன்று பிற்பகல் 3.30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காக அவருடைய சார்பில் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3.35 மணிக்குத் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி. கிடைக்கும் விலாசம்.
1 குட்செட்சாலையில் உள்ள சாலை இருப்புப்பாதை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் வேலை (திருச்சி நகர எல்லைக்குள்).	24,200	கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப), திருச்சிராப்பள்ளி.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.75 வீதம் தொகை செலுத்தி எழுத்துமூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளிவிலாசத்திலிருந்து 1—3–1972—14–3–1972 வரையிலான வேலைநாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்தப் புள்ளி நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத்தொகைத் திருப்பித்தரப் படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

மேலேகுறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெடியூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்குகாரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
திருச்சிராப்பள்ளி–1

(த.14)

ஏல விற்பனை

வேளாண்மைத் துறை

விளம்பரம் செய்யவேண்டிய பொருள்

கோயம்புத்தூர் மண் வள நிபுணர், மண் பரிசோதனை நிலையம், கோவை-3 அலுவலகத்தில் 9–3–1972 அன்று மாலை 3 மணி அளவில் கீழ்க்கண்ட கருவி பொது ஏலத்தில் விடப்படும்.

பெயர்.	எண்ணிக்கை.
Flame Photo-meter, Perkin Elmer, Model 146, Serial No. 35, USAMADE	ஒன்று.

மேற்கூறிய பிளேம் போட்டோ மீட்டர் இவ்வலுவலக வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக்கவோ, உதவி மண் வள நிபுணருக்கு உரிமை உண்டு.

அ. கோபால்சாமி,
உதவி மண்வள நிபுணர்,
மண்பரிசோதனை நிலையம்,
கோவை-3.

(த. 10)

மறு ஏல விளம்பரம்

தேனி—அல்லி நகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்)

1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1973ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31ஆம் தேதியோடு முடிவடையும் 1 வருட காலத்திற்கு தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி வாரச் சந்தை (மேற்குச் சந்தையில் தற்போது வடமேற்கு மூலைப்பக்கமுள்ள மூங்கில் கடைகள் நீங்களாக உள்ள பகுதி அனைத்திலும் சுங்கம் வசூல் செய்யும் பாத்தியதை)யையும், வண்டிப் பேட்டையையும் (சாராயக் கடை நீங்கலாக) நகராட்சி மன்ற அலுவலகத்தில் நகராட்சி தனி அதிகாரி அவர்களால் 1972ஆம் வருடம் மார்ச்சு மாதம் 14ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கும், ஷை நகராட்சிக்குச் சொந்தமான தேனி மேற்குச் சந்தை சரகத்திலுள்ள 78 ஸ்டால்களை 1–4–1972ஆம் தேதி முதல் 31–3–1973ஆம் தேதி முடிய 1 வருட காலத்திற்கு உபயோகித்துக் கொள்ள தேனி-அல்லி நகரம் நகராட்சி மன்ற தனி அதிகாரி அவர்களால் 1972ஆம் வருடம் மார்ச்சு மாதம் 15ஆம் தேதி புதன் கிழமை காலை 11 மணிக்குப் பகிரங்கமாக மறு ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் மற்றுமுள்ள இதர விவரங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகமது இப்ராஹிம் பி.ஏ.,
தனி அலுவலர்.

தேனி,
14–2–1972.
(த. 9)

விளம்பரம்

அருப்புக்கோட்டை நகராட்சி

(1920-ஆம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு ஜில்லா முனிசி பாலிட்டிகள் ஆக்ட் 78-வது பிரிவுப்படி விளம்பரம்).

திருத்தப்பட்ட 1920-ஆம் வருடத்திய தமிழ்நாடு ஜில்லா முனிசிபாலிடிகள் ஆக்ட் 78-வது பிரிவுப்படியும், அருப்புக்கோட்டை நகர் மன்றத்தின் 29—1—1972-ஆம் தேதிய 978 எண் தீர்மானப்படியும் கீழே குறிப்பிட்டிருக்கும் விவரப்படி கட்டட வரியில் தீப வரியை 1—4—1972-ஆம் தேதி முதலும் அதைத் தொடர்ந்தும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதை பொதுமக்கள் தகவலுக்கு இதனால் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

15—3—1972-ஆம் தேதி வரை ஆட்சேபனைகளை நகர்மன்றத்திற்கு எழுத்து மூலமாகத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். பிறகு இதே நகர் மன்றத்தால் வரியை நிர்ணயிக்கப்படும்.

தற்சமயமுள்ள வரி—

1. சொத்து வரி :—

(1) கட்டடங்களின்மேல் வரி பிரிவு 81 (1)—

	சதவிகிதம்.	
பொதுக் காரியத்துக்கு வரி..	9	
தண்ணீர் வரி	14	
ஜலதாரை வரி	2	வருட வரி, கட்டடங்களின் வருட வாடகை மதிப்பின்பேரில் 36 சதவிகிதம்.
கக்கூசு வரி	3	
கல்வி வரி	4	
தீப வரி	4	
ஆக மொத்தம் ..	36	

1—4—1972 முதல் உயர்த்த உத்தேசிக்கப்பட்ட வரி:—

1. சொத்து வரி—

(I) கட்டடங்களின் பேரில் பிரிவு 81 (1)—

	சதவிகிதம்.	
பொதுக் காரியத்திற்கு வரி	9	
தண்ணீர் வரி	14	
ஜலதாரை வரி	2	
கக்கூசு வரி	3	வருட வரி, கட்டடங்களின் வருட வாடகை மதிப்பின்பேரில் 38 சதவிகிதம்.
கல்வி வரி	4	
தீப வரி	6	
ஆக மொத்தம் ..	38	

மு. புகழும் பெருமாள் பி.காம்.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
அருப்புக்கோட்டை,
5—2—1972.
(த.35)

ஒப்பந்தப் புள்ளி

நாகர்கோயில் நகராட்சி

1972–73ஆம் ஆண்டிற்குக் கீழே குறிப்பிட்டிருப்பனவற்றிற்கு 1972ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4-30 மணி அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

1 பொருட்கள் வழங்குதல்: இந் நகராட்சிக்குத் தேவைப்படும் பெட்ரோல், டீசல் ஆயில், லைட் டீசல் ஆயில், இஞ்சின் ஆயில், பிரேக் ஆயில், மண்ணெண்ணெய், கிரீஸ், சிப்பி சுண்ணாம்பு, விறகு, கூடை, மாறு, அகப்பை, மண்வெட்டிகள், உரபிக்காசுகள், மரப் பீப்பாய்கள், (மூடியுடன்), வாளிகள், உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மாதிரிகள் அனுப்புவதற்கான கள்ளிப் பெட்டிகள், குப்பிகள், எழுது பொருள் சாமான்கள் முதலியன வழங்குதல்.

2 வேலைகள்—அச்சு, பைண்டிங் செய்தல், வண்டி வாகனுதிகளுக்கான நம்பர் பிளேட்டுகள் தயார் செய்து வழங்குதல்..

கூடுதல் விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டும், அல்லது ஆணையர் அவர்கட்கு விண்ணபித்தும் தெரிந்து கொள்ளலாம்.

பி. தங்கவேலு,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்.
நாகர்கோவில்.
11–2–1972
(த. 5)

ஏல விளம்பரம்

மேலப்பாளையம் நகராட்சி

1–3–1972-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கும் மறுபடியும் ஒத்திபோடும் தேதிகளிலும் 1972–73-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான அடியிற்கண்ட இனங்களை அனுபவிக்கும் பாத்தியதையை இந்நகராட்சி அலுவலகத்தில் வைத்து ஆணையர் அவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றவர்களாலோ பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

	கட்டுத் தொகை. ரூ.
1 மீன்மார்க்கெட்	300
2 ஆடு அறுக்குமிடம்	750
3 காய்கறி மார்க்கெட்	100
4 முனிசிபல் ஏரியாவில் விளம்பரம் செய்ய	25
5 மாடு அறுக்குமிடம்	300
6 பலன்தரும் மரங்களின் மகசூல்	25
7 ஆட்டு மாமிசம் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு ..	25
8 மாட்டு மாமிசம் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு ..	25
9 காய்கறி விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு	15
10 மீன், கருவாடு விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு ..	15
11 கடைகளுக்கு முன்பு தினசரி மார்க்கெட்டுகளில் காலி இடங்களில் வைத்து விற்கப்படும் பொருள்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் பாத்தியதை.	50

மற்ற விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

டி. கே. மாரப்பன் எம்.ஏ.
ஆணையர்.

(த. 4)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு அச்சு மற்றும் பைண்டிங் வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 24–3–1972-ஆம் தேதி மாலை 3.00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

நிபந்தனைகள் நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 1 (ஒன்று மட்டும்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 6)

ஒப்பந்தப் புள்ளி

குன்னூர் நகராட்சி

குன்னூர் நகராட்சி நகரசுத்தித்தொழிலாளிகளுக்கு உல்லன் கம்பளிகள் (சுமார் 145) விநியோகம் செய்யும்பொருட்டு ரூ. 100 முன்வைப்புத் தொகையுடன் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 9–3–1972 அன்று மாலை 4.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விண்ணப்பித்துத் தெரிந்துகொள்ளலாம்.

என். வெங்கட்ராமன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
குன்னூர்–2, 9–2–1972
(த. 7)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

1972–73-ஆம் வருடத்திற்கு பொள்ளாச்சி நகராட்சி நாச்சிமுத்துக் கவுண்டர் பிரசவ விடுதிக்குத் தேவையான ரொட்டி விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972-ஆம் தேதி மாலை 4–00 மணிவரை நகராட்சி ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் விதிகள் பேரிலோ அல்லது சுகாதார அதிகாரியை விண்ணப்பித்தோ பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ. ராஜாமன்னார்,
ஆணையர் பொறுப்பு.

பொள்ளாச்சி,
8–2–1972.
(த. 8)

பொதுப் பணித்துறை

செங்கற்பட்டு வட ஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்:—வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் அரசினர் மகளிர் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு–வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15–3–1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந் புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப் படும்.

ஒப்பந்த முறை—மொத்தத்தொகை.
முன் வைப்புத் தொகை—ரூ. 8,100.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 50.00 விற்பனை வரி 3½ சதவீதம்.
முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—பத்து மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 28–2–1972 தேதி முதல் 13–3–1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் **PWD—Remittances, III-Other Remittances** என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம், என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **XII–Sales Tax (b) Receipts, under State Sales Tax Act—General Sales Tax** என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை., கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புத் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப் படும் "ஷெடியூல்டு பாங்குகளின், டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடை முறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப் படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப் படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
செங்கற்பட்டு–வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 27)

பட்டுக்கோட்டை நகராட்சி

1972–73-ஆம் ஆண்டுக்கு அலுவலகத்திற்குத் தேவையான எழுது பொருள் சாமான்கள், துப்புரவு மாடுகளுக்குத் தேவையான வைக்கோல், தவிடு, பருத்தி விதை, கடலைப்புண்ணாக்கு, மற்றும் நீத்த சுண்ணாம்பு, தெரு விளக்குப் பராமரிப்புக்குத் தேவையான 4 அடி ஒற்றை டியூப், இரட்டை டியூப் லைட்டு பிட்டிங்ஸ் 2 அடி டியூப் லைட்டுகள், பிட்டிங்குகள் போக்கஸ் லைட்டுகள், மெர்க்குரி லைட்டுக்குத் தேவையான பல்பு, கண்டன்சர், சோக், முதலியனவும், மற்றும் தேவையான சகல உபரி பொருட்களும், தெரு விளக்குகளுக்குத் தேவையான சகல உபரி பொருட்களும் வழங்க, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18—3—1972-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணி வரையில் நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற இதர அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4–30 மணிக்கு அப்போது ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவர்கள் கட்டுத் தொகை செலுத்தல், மற்றும் இதர நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப் புள்ளி விளம்பரத்தை எழுதிக்கேட்டு அல்லது நேரில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. வெங்கடேஸ்வரன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
பட்டுக்கோட்டை,
14—2—1972.

(த. 37)

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவ மனை
சென்னை-5

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவமனை, சென்னை-5-க்கு 1—4—1972 முதல் 30—9—1972 வரை தேவையான மருந்து வகைகள், ஒப்பந்தமுறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அவர்களால் 21—3—1972 காலை 11–00 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப் படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், கொடுக்கப்படவேண்டிய மருந்துப் பட்டியல் ஆகியவற்றை மேற்படி மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதற்கான விலை ரூ. 5 "**XXIII Medical (g) Miscellaneous-Other receipts**" என்ற தலைப்பிலும், மற்றும் விற்பனை வரி 0·19 காசு "**XII Sales tax—Receipts under State Sales tax Act—General Sules tax**" என்ற தலைப்பிலுமாக ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ சலான்களை தாக்கல் செய்து, கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, ஒப்பந்த நமூனாவைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் படிவங்களைப் கோரும் விண்ணப்பத்துடன் தன் முகவரியுடன் கூடிய ரூ. 1·50 மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையும் அனுப்பப்படவேண்டும்.

ஏ. சீதா ரத்னு,
கண்காணிப்பாளர்.

31—1—1972.

(த. 40)

இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை. ரூ.	கட்டுத் தொகை. ரூ.
1 வாரச் சந்தையின் மேற்கு நுழைவு வாயிலில கிழக்குப் பகுதியில் 5 கடைகள் கொண்ட கட்டடம் கட்டுதல்.	16,000	400
2 வாரச்சந்தையின் மேற்கு நுழைவு வாயிலின் மேற்குப் பகுதியில் 5 கடைகள் கொண்ட கட்டடம் கட்டுதல்.	16,000	400

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

(த·41)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும கீழ்க கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தனி மேற் பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் அவர்களால் 9–3–1972 மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும்.

வேலையின பெயர் :—காவிரியாற்றிலிருந்து பிரியும் வ. 16 பொன வாசல் கால்வாயை 0/0 கி.மீ. முதல் 16.145 கி.மீ. வரை புதுப்பித்தல்.

ஒப்பந்த வகை—கே. 2.
வேலைக்கான பிணைப்புத் தொகை—ரூ. 4,000.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 5.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில **Pw III OR** என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கால்வாய் புதுப்பிக்கும் கோட்டம், தஞ்சாவூர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி : 0.20.
விற்பனை வரியை அரசினர் கருவூலத்தில் **XII Sales Tax (b) Receipts under state Sales Tax—General Sales Tax** என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி 21–2–1972 முதல் 7–3–1972 வரை.

மற்ற விதி முறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ளன.

அ. சேஷாத்திரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர், காவிரி
வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர்.

(த. 26)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

மேட்டூர் மின்இயக்கத் திட்டம்

மேட்டூர் அணை

மின்சார வாரித்திற்கு உரிய பொருட்களை அனுப்புவதறகும அப்புறப் படுத்துவதற்கான குத்தகை விளம்பரம்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு, மேட்டூர் மினஇயககத் திட்டம் மேற்பார்வைப் பொறியாளரால் 1972–73-ஆம் வருடத்திற்கு தமிழ்நாடு மின்வாரியத்தைச் சேர்ந்த மேட்டூர் மின்இயக்கத் திட்டத் திற்குச் சம்பந்தமான பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும் அனுப்புவதற்குமான (**Clearing and booking Boards Metorials**) மூடி முத்திரையிடப்பட்ட குத்தகைச்சீட்டுகள் (**Sealed Tenders**) 25–3–1972 பிற்பகல் 2 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

குத்தகை நிபந்தனைகள் (**Tender conditions**) அட்டவணைகள் (**schedules**) ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித் தரத்தக்கதல்ல) பண அஞ்சல் மூலமாகவோ, பணமாகவோ, தலைமைக் கணக்காயர் மேட்டூர் மின் இயக்கத் திட்டம், மேட்டூர் அணை–1 அவர்களிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 21—3—1972. குத்தகை நிபந் தனை சீட்டுகளும், அட்டவணைகளும் சாதாரண அஞ்சல் சான்று மூலமாக அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினால் மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகைச் சீட்டு மாற்றத்தக்கதல்ல கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகை பிரதியையோ அல்லது எல்லா குத்தகை பிரதிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக் கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைக்காரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத் தொகையாகக் குத்தகைப் பிரதியுடன் லுத்த வேண்டும். குத்தகை அட்டவணைகள் நேரில் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 25—3—1972-ஆம் தேதி பிற்பகல் 3·00 மணியளவில் திறக்கப்படும். குத்தகை நிபந்தனை சீட்டுகளும் அட்டவணைகளும் 28—2—1972-ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மேட்டூர் மின் இயக்கத்திட்டம்,
மேட்டூர் அணை.

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

திருவண்ணாமலை நகராட்சி

1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி மாலை 4–00 மணி வரை நகரமன்ற அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது ஆணை பெற்றவரால் கீழ்க்கண்ட இனங்களுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

வரிசை எண்ணும் ஒப்பந்த விவரமும்.	ஒப்பந்தம் கோரும் காலம்.	கட்டுத் தொகை. ரூ.
1 நகரமன்ற சுகாதார இலாகா சாக்கடை வண்டி, கக்கூஸ் வண்டிகளுக்கும், மாடுகள் சப்ளை செய்தல்.	1—4—1972 முதல் 31—3—1973 வரை.	200
2 சுகாதார இலாகாவிற்குத் தேவையான சுண்ணாம்பு நீர் சப்ளை செய்தல்.	ஷை	50
3 நகரமன்ற மகப்பேறில்லத்திற்குத் தேவையான பால், ரொட்டி முதலியவை சப்ளை செய்தல்.	ஷை	50
4 நகரமன்றத்திற்குத் தேவையான அச்சு வேலைகள் செய்து கொடுத்தல்.	ஷை	100

மேற்கொண்டு விவரம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

டி. எ. பி. இராமகிருஷ்ணன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
7—2—1972.

(த. 38)

ஏல விற்பனை

வனத்துறை

6—3—1972-ஆம் தேதி காலை 10–00 மணியிலிருந்து இருட்டுபள்ளம் விற்பனைக் கிடங்கில் மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலராலோ கீழே காணும் தடி மரத்துண்டுகள் ஏலமிடப்படும்.

1. ஈட்டி	20—10·123 கன மீட்டர்.
2. வேங்கை ..	36—23·084 கன மீட்டர்.
3. வெண்தேக்கு	20—12·001 கன மீட்டர்.
4. தடசு ..	8—4·451 கன மீட்டர்.
5. பில்ல மருது ..	7—4·774 கன மீட்டர்.
6. செலவாகை ..	9—6·006 கன மீட்டர்.

8—3—1972-ஆம் தேதி காலை 10–00 மணியிலிருந்து நவக்கரை விற்பனைக் கிடங்கில் மத்திய கோவை மாவட்ட அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலராலோ கீழ்க் காணும் தடி மரத்துண்டுகள் ஏலமிடப்படும்.

1. ஈட்டி	17—8·317 கன மீட்டர்.
2. தேக்கு ..	47—36·134 கன மீட்டர்.
3. வேங்கை ..	52—33·613 கன மீட்டர்.
4. வெண்தேக்கு	64—48·320 கன மீட்டர்.
5. தடசு	16—10·645 கன மீட்டர்.
6. பில்லமருது ..	79—63·432 கன மீட்டர்.
7. முல்வேங்கை	2— 2·484 கன மீட்டர்.

விவரங்களுக்கு, மத்திய கோவை மாவட்ட வன அலுவலர், கோவை அல்லது வனச்சரக அலுவலர், போலாம்பட்டி சரகம், வழி ஆலாந்துறைக்கோ எழுதி அனுப்பவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை.

(த. 11)

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், தமிழக பொதுப்பணித்துறை, தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 8—3—1972 மாலை 3·00 மணிவரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	ஒப்பந்த வகை.	வைப்புத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத்தொகை என்ற தலைப்பில் செயற்பொறியாளர், காவேரி கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்.	விற்பனை வரி (அரசினர் கருவூலங்களில் -விற்பனைவரி XII பற்றுச்சீட்டு மாநில விற்பனைவரி சட்டத்தின்கீழ் பொது விற்பனைவரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.	ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள்
		ரூபாய்	ரூபாய்	ரூபாய்.	
மன்னியாற்றில் உள்தளம் அமைத்தல்—					
1 0·80 கி.மீ.—1·40 கி.மீ.	கே-2	5,000	25	0·88	21—2—1972
2 1·40 கி.மீ.—2·00 கி.மீ.	கே-2	5,000	25	0.88	ஷை
3 2.00 கி.மீ.—2·60 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
4 2.60 கி.மீ.—3·20 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
5 3·20 கி.மீ.—3·80 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
6 3·80 கி.மீ.—4·40 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
7 4·40 கி.மீ.—5·00 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
8 5·00 கி.மீ.—5·60 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
9 5·60 கி.மீ.—6·20 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
10 6·20 கி.மீ.—6·80 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
11 6·80 கி.மீ.—7·40 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
12 7·40 கி.மீ.—8·00 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
13 8·00 கி.மீ.—8·60 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
14 8·60 கி.மீ.—9·20 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
15 9·20 கி.மீ.—9·80 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
16 9·80 கி.மீ.—10·40 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
17 10·40 கி.மீ.—11·00 கி.மீ.	கே-2	5,000	25	0·88	ஷை
18 11·00 கி.மீ.—11·20 கி.மீ.	கே-2	1,675	25	0·88	ஷை

மேற்பார்வைப் பொறியாளர்,

தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 19)

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், அம்பத்தூர் பணிமனையில், "சிற்றுண்டிச்சாலை கடை ஒன்று" குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் 15—3—1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 15—3—1972 மாலை 3–15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1–04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக்கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 17

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—தஞ்சாவூர் மகளிர் கலைக் கல்லூரியின பின்புற கட்டடத்தில் முதல் தளம் கட்டுதல்.

மேற்படி வேலைகளான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பின் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 15—3—1972 மாலை 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1 ஒப்பந்த வகை	மொத்தத் தொகை.
2 பிணைப்பணம்	6,000
3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "பொ.ப.—செலுத்தத் தொகை—மற்றைய செலுத்தத் தொகை" எனும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்.	30
4 விற்பனைவரி (அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில்—"விற்பனைவரி, (பி) பற்றுச்சீட்டு—மாநில விற்பனை வரிச் சட்டத்தில் கீழ் பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்த செலுத்தப் பட வேண்டும்.	1·05
5 கால அளவு	எட்டு மாதங்கள
6 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்.	24—2—1972.

ஆர். வேணுகோபால்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.21)

பொதுப்பணித் துறை

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித்துறை,
திருச்சி வட்டம், தபால்பெட்டி எண். 55, திருச்சிராப்பள்ளி.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்	கட்டடம் — திருச்சியிலுள்ள பெரியார் ஈ.வே.ரா. அரசினர் கலைக்கல்லூரியின் தற்போதுள்ள நிரந்தரக் கட்டடத்தில் மேல் இரண்டாவது தளம் அமைத்தல்.
2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி, மற்றும் நேரம்.	10—3—1972, மாலை 3·00 வரை.
3 பிணைப்பொறுப்புத்தொகை ..	ரூ. 9,500 (ரூபாய் ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்).
4 ஒப்பந்தமுறை	மொத்தத் தொகை.
5 முடிக்க வேண்டிய காலம் ..	பத்து மாதங்கள்.
6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ..	ரூ. 25 (ரூபாய் இருப்பத்தைந்து மட்டும்).
7 விற்பனை வரி	ரூ. 0·88 (எண்பத்தெட்டு காசு மட்டும்).
8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக கிடைக்கத் தொடங்கும் தேதி.	27—2—1972
9 விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம்.	10—3—1972 மாலை 3-30 மணி

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனைவரியையும் முறையே அரசின் கருவூலத்தில் : "XXXVII Public Works-State Revenue Miscellaneous "மற்றும்" XII Sales tax (b) receipts under the State Sales tax Act. General Sales tax" என்ற தலைப்புகளின்கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்.

திருச்சி வட்ட மேற்பார்வைப்
பொறியாளர்.

(த.22)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை,
தேசீய நெடுஞ்சாலை வட்டம், சென்னை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 8—3—1972 மாலை 3 மணிவரைக் கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலை விவரமும்.	முன் வைப்புத் தொகை.
	ரூ.
1. தேசீய நெடுஞ்சாலை எண் 7-ல் கி. மீ. 132/8-லும் 134/2-லும் உள்ள பாலங்களை புதுப்பித்துக் கட்டுதல் (மைசூர் எல்லையிலிருந்து சேலம் கிருஷ்ணகிரி பகுதியில் கி.மீ. 119 முதல் 139 சேர்ந்த பகுதி 5).	9,270
2. தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கி.மீ. 84/8-லும் தேசீய நெடுஞ்சாலை எண். 7யையும் 46-யும் இணைக்கும் கிருஷ்ணகிரி துணை வழிச்சாலையில் கி·மீ. 1.6லும் உள்ள பாலங்களைப் புதுப்பித்துக் கட்டுதல் (மைசூர் எல்லையிலிருந்து சேலம், கிருஷ்ணகிரி பகுதியில் துணைப்பகுதி 3-ல் கி.மீ. 80–94)	5,330

" ஒப்பந்தப் புள்ளிகள் 8–3–72, மாலை 3–15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1 இரண்டாவது மாடி குறளக கட்டடம், சென்னை–1 அலுவலகத்தில் 1-3-1972 முதல் 7-3-1972 முடிய விற்பனை வரிவுட்பட ரூ. 51-75 கட்டி பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலை வட்டம் எண் 1, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப்பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம் எண்–1, பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,

மேற்பார்வைப் பொறியாளர் (நெ)

(த. 23)

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, இராமநாதபுரம் வட்டம், மதுரை

ந.க. எண். 2908/71 வ.4/24—1—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள கண்மாய் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றவர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 10—3—1972 தேதி மாலை 4 மணிவரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்	அருப்புக்கோட்டை தாலுகா, இருஞ்சிறை மராமத்து சிறப்பு வேலை.
ஒப்பந்த வகை	கே-2.
கட்டுத்தொகை	ரூ. 2,610 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்றி பத்து.)
ஒப்பந்தப் புள்ளி விலை	10—35.
வேலை முடிக்க வேண்டிய காலம் ..	6 மாதங்கள்.

பெறப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 10—3—1972 மாலை 4-30 மணிக்கு அலுவலகம் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் ஷியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேலாண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகைக்கு ரூ. 10-35-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), இராமநாதபுரம் வட்டம், மதுரை-1 என்ற விலாசத்துக்கு மனு செய்தால் ஷ வேலைக்கான ஒப்பந்தப்பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் விலையான ரூ. 10 பி.டபிள்யூ.-111 ஓ.ஆர். என்ற கணக்குத்தலைப்பில், நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, விருதுநகர் கோட்டம், விருதுநகர் அவர்கள் கணக்கில் விற்பனை வரிக்காக ரூ. 0·35 காசை "12 விற்பனைவரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித்தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தர மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும்பொழுது உறையின் மேல் வேலையின் பெயரும் கருவூலத்தின் ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறைமூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 1—3—1972 முதல் 8—3—1972 முடிய விற்பனைக்காக இருக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 8—3—1972 மாலை 5 மணிக்கு வந்து சேர வேண்டும். அதற்கு பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளமாட்டா, அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்,

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத்தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டுகள் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன்பத்திரங்கள் அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறுவிதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திக்கான வருமானவரி விற்பனைவரி முதலியவைகளின் அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயகட்டுதாரர்கள் பங்கெடுத்துக் கொண்டால் டெபுடிதாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சொத்து உரிமை சர்டிபிகேட்டும் வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். கட்டுத்தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப்பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக்கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைப் பெற்றுள்ளார்.

24—1—1972

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.18)

பொதுப்பணித்துறை

செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர் :—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம்—செய்யார் அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 10—3—1972 மாலை 3-00 மணிவரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தமுறை	மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை	ரூ. 2,900
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்.	ரூ. 20.00 விற்பனைவரி 3½ சதவீதம்.
முடிக்க வேண்டிய காலம்	நான்கு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் 23—2—1972 தேதி முதல் 8—3—1972 தேதிவரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலை தொகை ரூ. 20·00 (இது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் " P·W·D· Remittances III Other Remittances" என்ற தலைப்பின்கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனைவரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales tax (b) receipts, under State Sales tax Act General Sales tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்தச் சீட்டுக்களை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும், "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்திலும் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டடவேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

(த.20)

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்
"அக்ரோ இல்லம்" தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

ஜெடார் 2011-ரைஸ் ஸ்பெஷல்-டிராக்டர்கள்
உடனே விலைக்குக் கிடைக்கும்

25 குதிரை வேகம் - தண்ணீரால் குளிரக் கூடிய என்ஜின் - செக்கஸ்லோவேகியா நாட்டில் செய்தது. புகழ் பெற்றது. நம்பிக்கையானது.

தண்ணீர் புகாத பாகங்களுடன் சேற்றுழவுக்கும், நீண்ட கால உழைப்பிற்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டது.

விலை சுமார் ரூ. 26,000 வரி (உட்பட)

உடனே விண்ணப்பிக்கவும்

உங்கள் விவசாயத் தேவைக்குக் கீழ்க்கண்ட இடங்களிலுள்ள, இவ் வேளாண்மைக் கழகத்தின் பிராந்தியப் பொறியாளரை உடனே அணுகவும்.

1. சிறு காவேரிப்பாக்கம்,
   காஞ்சிபுரம்.
2. தொழிற்குடியிருப்பு,
   அரியமங்கலம், திருச்சி-10.
3. தொழிற்பேட்டை, மதுரை-7.
4. பாக்ஸ் காம்பவுண்டு, சேலம்-1
5. 219, நேரு சாலை, விழுப்புரம்.



குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில், ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, பி.டி. இராசன்சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 8—3—1972 புதன் கிழமை மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அதே நாளில் 3·30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. வேலையின் பெயர் :—கோவில்பட்டி குடிநீர் திட்டம்—இரண்டாம் நிலை —7·25 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர் மட்ட உறுதிபெறு கற்காரை நீர்த்தாங்கியினை, மாவட்டம் ஒன்றின்கீழ் மட்டப் பகுதியில் கட்டுதல்.

முன்வைப்புத் தொகை—ரூ. 3,840

ஒப்பந்தவடிவம்—மொத்தத் தொகை.

கால அளவு—ஒன்பது மாதங்கள்.

படிவ விலை—ரூ. 10·35.

2. வேலையின் பெயர் :—கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை 7·25 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதிபெறு கற்காரை நீர்த் தாங்கியினை மாவட்டம் இரண்டின்கீழ் மட்டப் பகுதியில் கட்டுதல்.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,820.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கால அளவு—ஒன்பது மாதங்கள்.

படிவ விலை—ரூ. 10·35.

முன் வைப்புத் தொகை, கருவூலச் செலுத்துச் சீட்டு பண உத்தரவுச் சீட்டு அல்லது ஏதாவது ஒரு தேசிய வங்கியின் உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒருவடிவில் கோவில்பட்டி, பொதுப்பணி சுகாதாரபொதுத் துறை நிருவாகப் பொறியாளர், பெறும்வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வரைபடங்கள், படிவங்கள், நிபந்தனைகள் வேண்டுவோர் கோவில்பட்டி, பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 25 வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில், அதற்கான விலையினைச் செலுத்தி 6—3—1972 மாலை 5·00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கடைசி தேதிக்குப் பின்வரும் ஒப்பந்தங்கள் கவனிக்கப்பட மாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொதுச் சுகாதாரம்),
மதுரை-2.

(த. 44)

உதகமண்டலம் நகராட்சி

1972-ஆம் வருடம் எப்ரல் மாதம் முதல் தேதி தொடக்கம் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய உதகமண்டலம் நகராட்சி ஸ்தாபனங்களுக்குத் தேவைப்படும் கீழ்க்கண்ட பொருள்களை விநியோகம் செய்யக் குறிக்கப்பட்ட அச்சாரத்தொகையுடன் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 10—3—1972-ஆம் தேதி மாலை 3·30 மணிவரை உதகமண்டலம் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளபடும்.

வரிசை எண்ணும் குத்தகை விவரமும்.	கட்டுத் தொகை.	ஷெட்யூல் விலை.	
	ரூ.	ரூ.	காசு
1 விறகு மற்றும் அடுப்புக்கரியும் விநியோகம் செய்ய.	50·00	2	06
2 மோட்டார் ஆயில்களும் மற்றும் லூப்ரி கண்டுகளும் விநியோகம் செய்ய.	100·00	8	24
3 நகரசுத்தி தொழிலாளிகளுக்கான பொருள்கள் விநியோகம் செய்ய.	100·00	4	12
4 நகரசபை கண்காணிப்பு விடுதிக்கு உணவு விநியோகம் செய்ய (நகரசபை கண்காணிப்பில் இருக்கும்வரை).	100·00	6	18
5 தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு உணவுப் பொருள்கள் விநியோகம் செய்ய.	100·00	4	12
6 தாய்-சேய் நலவிடுதிக்கு உணவுப் பொருட்கள் விநியோகம் செய்ய.	50·00	2	06
7 அச்சு வேலைகள் செய்ய	100·00	4	12

ஆணையர்.

(த.43)

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

கீழ்க்கண்ட மெகானிகல் மற்றும் எலெக்ட்ரிகல் வேலைகளை மேற்கொள்வதற்காக, அனுமதி பெற்ற மெகானிகல் மற்றும் எலெக்ட்ரிகல் மொத்த வியாபாரிகள், பழுதுபார்ப்போர் ஆகியோரிடமிருந்து, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களிடம் பதிவு செய்து கொள்வதற்காக மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. மெகானிகல்.—பலவகைப்பட்ட தாதுப்பொருட்கள் (Allois) ஆர்க் (Arc) மற்றும் கீர் (Gear) பினியன் சக்கரம் ஆகியவைகளை ஆர்க மற்றும் கேஸ் வெல்டிங் செய்தல், அச்சகப் பகுதிகளில் (Units) ரேக் உற்பத்தி செய்தல் மற்றும் சாதாரண பழுது பார்க்கும் வேலை.

2. எலெக்ரிகல்:—ஏ. சி., டி.சி. மோட்டார்கள் இம்ப்ரஸ்ஸன், மற்றும் பிரேக் மெக்னட்டிங் காயில்கள், மற்றும் ஸ்டாட்டர் காயில்கள் மற்றும் இவை போன்றவைகளை வைண்டிங் ரீவைண்டிங் செய்தல், அச்சு இயந்திரம், வைண்டிங் இயந்திரம், அச்சுக் கோக்கும் இயந்திரம் மற்றும் இவை தொடர்பான சாதனங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பொது வேலைகளும்.

3. மனுதாரர்களின் விண்ணப்பங்கள் 25—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

(த. 45)

மாநிலப் போக்குவரத்துத் துறை, சென்னை-2

''ஏலம் விடுபவர்கள் நியமனம்''

இத்துறையில், சென்னை போக்குவரத்துப் பணிமனை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்குப் பழைய மற்றும் உபயோக மற்ற வண்டிகள் (Condemned), போக்குவரத்திற்குதவாது தேங்கிக் கிடப்பவை, மற்றவைகளுக்கு ஏலம் நடத்துவதற்கு, அங்கீகாரம் பெற்ற ஏலம் விடுபவர்களை நியமனத்திற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறை இயக்குநர், சென்னை-2 அவர்களால், 15-3-1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனை நமூனுக்கள், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் அலுவலக நேரத்தில் கட்டணமின்றிப் பெறலாம்.

இயக்குநர்,
மாநிலப் போக்குவரத்துத் துறை,
சென்னை-2.

(த.ஆர்.3)

பொதுப்பணித் துறை

காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தமிழ்நாடு பொதுப்பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9-3-1972-ஆம் ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்காணும் வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

பிரிவு எண்ணும், வேலையின் பெயர் விவரமும்.	பிணைத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.	விற்பனை வரி.
	ரூ.	ரூ.	ரூ.
1. தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி தாலுக்காவிலுள்ள ஈர வாய்க்கால் வடிகாலைச் சீர்திருத்துதல்.	2,450	10	0.35

விதிமுறைகள்—

1. ஒப்பந்தப் பத்திரங்கள் 25-2-1972-ஆம் தேதியிலிருந்து தஞ்சாவூர் காவிரி வளர்ச்சிப் பணி வட்ட தனி மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் கிடைக்கும்.

2. பிணைத் தொகை திருத்துறைப்பூண்டி, திட்ட ஆய்வுக் கோட்டச் செயற் பொறியாளர் அவர்கள் கணக்கில் சேரும்படி அரசாங்கக் கருவூலத்தில் "ரெவினியூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொதுப் பணித் துறை மற்றைய வரவினங்கள்" என்ற தலைப்பில் திருத்துறைப்பூண்டி திட்ட ஆய்வுக் கோட்ட செயற் பொறியாளர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் "XII விற்பனை வரி—பி வரவினங்கள் மாநில விற்பனை வரிச் சட்டம்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் 7-3-1972-ஆம் தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரது நேர் உதவியாளர் காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

அ. சேஷாத்ரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.4)

நில நீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் குறுகியகால ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 15,
XXII/M2/72, dt. 24—1—72.

வேலையின் பெயர் :—மரையிடப்படாத, இரும்புக் குழாய்கள்—வழங்குதல்—

(1) 8 அங்/200 மி.மீ., விட்டம்—500 மீட்டர்.
(2) 10 அங்./250 மி.மீ., விட்டம்—400 மீட்டர்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 22-3-1972 அன்று மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில், மாலை 3-30 மணிக்கு அவ்வமயம் அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்:

(1) முன் வைப்புத் தொகை :—ரூ. 5,000.
(2) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 10. விற்பனை வரி:—ரூ. 0.40 காசு.
(3) வேலையை முடிக்க வேண்டிய காலம் :—மூன்று மாதங்கள்.
(4) ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம் :—1-2-1972 முதல் 20-3-1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாதது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில், "Public works remittances III other remittances to the Credit of Hydrogeologist. Ground water Division, Thanjavur," அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித்தொகையானது அதே சலானில், "XII Sales Tax (b) receipts under State Sales Tax Act., General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த செலானைக் கொடுத்த பின்புதான், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். வேறு எந்த விதமான தொகையளிப்பும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

சா. பஞ்சநதம்,
நீலநீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
10—எ, தண்டபாணி தெரு,
சென்னை—17.

(த.ஆர்.1)

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 8-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்று கொள்ளப்படும்.

	கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில்.		
	பௌதிகத் துறை பட்ட மேல்படிப்புக்கு கட்டடம் கட்டுதல்.	இரசாயன துறை பட்ட மேல்படிப்புக்கு கட்டடம் கட்டுதல்.	கலைத்துறை பட்ட மேல் படிப்புக்கு கட்டடம் கட்டுதல்.
1 ஒப்பந்தத் தொகை ..	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை
2 பிணைப் பணம் (செலுத்துச்சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப்படும்).	ரூ. 5.300	ரூ. 6,500	ரூ. 6,50
3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ. ப. து. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.	ரூ. 30·00	ரூ. 30·00	ரூ. 30·00
4 விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.	ரூ. 1·05	ரூ. 1·05	ரூ. 1·05
5 கால அளவு	12 மாதங்கள்.	12 மாதங்கள்.	12 மாதங்கள்.
6 ஒப்பந்தப்பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.	21-2-1972	21-2-1972	1-2-1 72

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர். பொ.ப.து.,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.2)

மர ஏல விற்பனை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கீழ்க்கண்ட மரக்கிடங்குகளில் நீலகிரி வடக்குக்கோட்ட மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 9–00 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம்:—மத்திய மரக்கிடங்கு, கார்குடி.

பாதை ஓரமுள்ள மரக்கிடங்கு, தொரப்பள்ளி,
நாள்—13–3–1972 காலை 9–00 மணிக்கு.

	மரங்களின் அளவு. (தோராயமாக) கனமீட்டர்.
1 தேக்கு	300
2 மத்தி	200
3 தடசு	6
4 ஹொன்னை	41
5 நந்தி	10

இடம் : மத்திய மரக்கிடங்கு, சேரம்பாடி. நாள்—22–3–1972 காலை 9–00 மணிக்கு.

	மரங்களின் அளவு (தோராயமாக) கனமீட்டர்.
1 அயினி	190
2 வெண்தேக்கு	225
3 ஈட்டி	20
4 ரெட்சீடர்	40
5 நாவல்	50
6 வேங்கை	12
7 வாகை	15

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்குக்கோட்ட வன அலுவலருக்கோ அல்லது வனச்சரக அலுவலர், முதுமலை அவர்களுக்கோ அல்லது வனச்சரக அலுவலர் சேரம்பாடி அவர்களுக்கோ எழுதிப்பெறவும்.

என். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்.

(த.39)

ஏல விற்பனை

எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை

ஷீப் இரும்பு, காலி டிரம்கள்போன்ற ஒதுக்கப்பட்ட (Condemned) பயன்படுத்த முடியாத ஸ்டோர் சாமான்கள் 9—3—1972 காலை 11–30 மணி அளவில் அரசு அச்சகம் மின்ட் கட்டடம், சென்னை–1 அலுவலகத்தில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மற்ற விவரங்கள், ஏல அறிவிப்பு நமூனாக்கள் பெற, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், அரசு அச்சகம், சென்னை–1ல் தொடர்பு கொள்ளவும்.

(த.16)

இயக்குநர்.

ஒப்பந்தப் புள்ளி

காவல் துறை

1972–73 ஆம் ஆண்டிற்கு, சென்னை நகரக் காவலர் (Police) களுக்குத் தேவையான துணிகள், கருவிகள், குதிரைகளுக்குத் தேவையான உணவு ஆகிய பொருட்கள் மற்றவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்.

(1) 1—4—1972 முதல், மார்ச்சு 1973 வரை சென்னை நகரக் காவலர்களுக்குத் தேவையான துணிகள், கருவிகள், குதிரைகளுக்குத் தேவையான உணவு ஆகிய பொருட்கள் மற்றவைகள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

(2) ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவருக்கு 16—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு பெயரைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

(3) ஒப்பந்தப் பாரங்கள் மற்றும் தேவையான பொருட்கள் பற்றிய விவரக்குறிப்பீடுகள், காவல்துறை ஆணையர், (Stores Section) எழும்பூர், சென்னை–8, அவர் தம் அலுவலகத்தில் ரூ. 2–00 (இரண்டு மட்டும்) வழக்கமான விற்பனை வரியுடன் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

சி. தங்கையன்,
காவலர் உதவி ஆணையர்,
தலைமையகம்.

நகரக் காவலர் அலுவலகம்,
சென்னை–8.
(த.31)

ஒப்பந்தப் புள்ளி

குடிசை மாற்று வாரியம்

நிருவாகப் பொறியாளர் அலுவலகம், குடிசை மாற்று வாரியம், கோட்டம் VI, பட்டினப்பாக்கம் (Fore-hore Estate) சென்னை–28.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும். கீழே குறிப்பிடப்பட்ட வேலைக்காக, குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமுமிருந்து வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளி அனுப்புகிறவரின் பெயரும் உறைமீது எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிருவாகப்பொறியாளர், குடிசை மாற்றுவாரியம், கோட்டம், VI சென்னை–28, அவர்களால் 8–3–1972 மாலை 3–00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதேநாள் மாலை 3–05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில், நிருவாகப் பொறியாளர், கோட்டம் அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர் எல்லீஸ்புரத்தில் குடிசை மேம்பாட்டின் கீழ் 4 அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல், மாதிரி எண் 16/71; முறையில் பிளாக் ஒன்றில் குடியிருப்புகள் கட்டுதல்.
வேலையின் சுமார் மதிப்பு:—1,32,000.
ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை:—1,980.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை மற்றும் விற்பனை வரி:—ரூ. 15.00 விலை. ரூ. 0.53 விற்பனை வரி ரூ. 0·01 சர்சார்ஜ். மொத்தம் ரூ. 15,54

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் IV அவர் தம் அலுவலகத்தில் 1—3—1972 முதல் 7—3—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி முதல் மாலை 3–00 மணி வரை, ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை, விற்பனைவரி செலுத்தப்பட்ட செல்லுச் சீட்டைக்கொடுத்துப் பெறலாம்.

வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட, குறிப்பிடப்பட்ட பாரத்திலேயே ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக அல்லது தவறி விடுகின்ற ஒப்பந்தங்களுக்கு வாரியம் பொறுப்பாளியல்ல. ,

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறுமல் நிராகரிக்க அதிகாரம் உண்டு.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் : VI
குடிசை மாற்று வாரியம்.

(த.32)

அறிவிப்பு

இந்திய மருத்துவ மத்தியக் கழகம்
பாளையங்கோட்டை

ஆர்.ஐ.எம்.பி. பதவிக்காக விண்ணப்பப் பாரங்கள் வழங்குவது 31—12—1971 உடன் முடித்துவிட்டபடியால் அதற்குள் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் பாரங்களைப் பூர்த்தி செய்து 31—3—1972-க்குள் தலைவர், இந்திய மருத்துவ மத்தியக் கழகம் பாளையங்கோட்டை அவர்களுக்கு அனுப்பிவைக்கவும். அதற்குப் பின் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

டாக்டர் பொன். குருசிரோன்மணி,
பி.ஏ., ஜி.வி.ஐ.எம்.,
தலைவர், இந்திய மருத்துவ
மத்தியக்கழகம்,
பாளையங்கோட்டை.

(த. 1)

தேர்வு

தொழில் நுட்பக் கல்வித் துறை,
கிண்டி, சென்னை-25

மின்சார மேற்பார்வையாளர்கள் தகுதிச் சான்றிதழ் படிப்புத் தேர்வு மே 1972.

1972 மே மாதத்தில் நடைபெறும் மின்சார மேற்பார்வையாளர்கள் தகுதிச் சான்றிதழ் படிப்புத் தேர்வில் சேருவதற்கான மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்தத் தேர்வுகளில் சேருவதற்கான குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் பாரம், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றவைகள் அடங்கிய நமூனாக்கள், இந்த அலுவலகத்தில், 23—2—1972 முதல், கடிதம் எழுதி தன் விலாசமிட்ட உறையில் (22 செ. மீ. × 9½ செ. மீ.) 0·50 காசு அஞ்சல் வில்லைகள் 0.05 காசு அகதிகள் நிவாரண வில்லை ஒட்டப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சேர்வதற்கான தகுதி.

1. எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்க வேண்டும் அல்லது மின்சாரப் பொறியியல் துறையில் 5 ஆண்டு செய்முறைப் பயிற்சி அனுபவம் இருக்க வேண்டும்.

2. பி. ஈ. (சிவில் மற்றும் மெகானிகல்) எல். சி. ஈ. மற்றும் எல்.எம்.ஈ. டிப்ளமா பெற்றிருப்பவர்கள், மின்சாரப் பொறியியல் துறையில் 2 ஆண்டு செய்முறைப்பயிற்சி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. இந்த அலுவலகத்தில் மனுக்கள் பெறுவதற்கான கடைசி நாள் 23—3—1972 (அபராதமின்றி) அபராதத் தொகை ரூ. 5 செலுத்திப் பெறக் கடைசி நாள் : 6—4—1972.

முழுவிவரங்கள், விரும்புகின்ற மனுதாரர்கள் விளக்கமாக அறிவிப்பு 9—2—1972 தேதிய தமிழ்நாடு அரசு கெஜட் வெளியீட்டில் இந்தத் துறையின் பாகம் 3-ல் தெரிந்து கொள்ளலாம். அரசு கிளை அச்சகம், அண்ணாசாலை, சென்னை–2ல் தொகையைச் செலுத்தி நமூனாக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
தேர்வாளர் குழு.

(த.30)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

(தமிழக அரசு மேற்கொண்டுள்ளது)

யூனிட் :—தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் (வழி)
(வழி) இராஜபாளையம்.

அறிவிப்பு எண். 3973 சி.டபிள்யூ 71.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலைக்கு "காம்பவுண்ட் சுவர் கட்டுதல்" வேலைக்காக மாநில மத்திய அரசுத்துறைகளில் பதிவு செய்துள்ள முதல் அல்லது இரண்டாம் வகுப்பு ஒப்பந்ததாரரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 24—3—1972 மாலை 4·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

சுமார் மதிப்பீட்டுத் தொகை ..	ரூ. 2·15 இலட்சம்.
ஒப்பந்தவகை	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை	ஒப்பந்தத் தொகையில் 2½ சதவிகிதம்.
வேலை முடிக்க வேண்டிய காலம் ..	4 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலங்குளம், (வழி) ராஜபாளையம், அவர்களிடம், 6—3—1972 முதல் 22—3—1972வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-30 மணி முதல் மாலை 4·00 மணிவரை, செட் ஒன்றுக்கு ரூ. 10·35 காசு செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். தொகை திருப்பித்தரப் படமாட்டாது.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், (வழி) ராஜபாளையம்.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

மாவட்டக் கால்நடைப் பண்ணை

தமிழ்நாடு ஆளுநருக்காக ஓசூர் கால் நடைப்பண்ணை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் 16—3—1972 அன்று காலை 11–00 மணி வரையில் மேற்படி பண்ணைக்கு 1972–73 ஆகிய ஆண்டிற்குத் தேவையான சுண்ணாம்பு (நிலங்களுக்குப் போட) வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 16—3—1972 அன்று காலை 11–00 மணிக்கு மேல் குஞ்சுபொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் திறக்கப்படும்.

நிபந்தனை முதலானவைகளைக் குஞ்சுபொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

சோ. சேதுராமன்,
குஞ்சுபொரிப்பு அலுவலருடன்
கண்காணிப்பாளர், மாவட்ட கால்நடைப் பண்ணை,
ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

(த. 24)

ஏல விற்பனை

கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 15—3—1972 அன்று பிற்பகல் 2 மணிக்கு இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி அவர்களால் M.S.P. 6932 என்ற "ஆம்புலன்ஸ் வேன்" பொது ஏலத்தில் விற்கப்படும். அந்த வாகனத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 10–30 மணி முதல் மாலை 5–00 மணிக்குள் சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரியில் பார்வையிடலாம். ஏலத்துக்குரிய நிபந்தனைகளை அடியில் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வை. இரத்தினசபாபதி,
இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வி
மற்றும் ஆராய்ச்சி மற்றும் முதல்வர், கால்நடை
மருத்துவக்கல்லூரி,

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி
வேப்பேரி, சென்னை–7,
11—2—1972

(த. 42)

ஒப்பந்தப் புள்ளி

ஒப்பந்தப் புள்ளி
வனப் பொறியாளர் கோட்டம்.

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, "வனப்பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"சித்தேரி-நொச்சிக்குட்டை சாலை அமைத்தல் 9-04 கி. மீ. அரூர் வனச்சரகம்-தருமபுரி வனக்கோட்டம்".

அச்சாரம் (இ.எம்.டி.) ரூ. 2,700 ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 6–3–1972 நேரம் முறையே மாலை 3–00 மணி 3·05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர், 1-ஏ ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1" என்ற முகவரியிலிருந்து ரூ. 1·04 செலுத்தி 21–2–1972 முதல் 4–3–1972 வரை அலுவலக வேலை நேரங்களில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப்பொறியாளர்.

10–2–1972.
(த. 29)

எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண் AEP 83 to 095.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம் எண்ணூர் அனல் மின்திட்டம் குறிப்பு எண்
AEP 83 to 095 Supply of paints etc எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட
தேதியில் மாலை 3–30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்த
தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு குறிப்பு எண் விவரம் முன்பணம் முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

number.	*Description.*	*Specn. number.*	*E.M.D.*	*Cost of tender set.*	*Due date.*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			Rs.	Rs.	
1	Acid, alkali, Water and heat resistant black paint to IS 158.	AEP 83	1,200	5	3rd March 1972
2	(a) Red Oxide Zinc Chromate paint to IS 2074. (b) Aluminium paint to IS 2339.	AEP 84	1,200	5	3rd March 1972.
3	Self tapping screws panhead 3/¾ in long.	AEP 85	1,200	5	10th March 1972.
4	G.I. Hex. Wire netting 3/¾ in × 24 SWG.	AEP 86	1,200	5	24th March 1972.
5	(a) G.I. Hex, Wire netting 3/4 in × 24 SWG. (b) G.I. Wire mesh to ISI 1568. (c) 22 g. Binding Wire .. (d) 12 g. Binding Wire ..	AEP 87	1,000	5	17th March 1972.
6	M.S. Bolts and nuts 5000 kg.	AEP 88	600	5	1·th March 1972.
7	Spares for Standard 20 Vehicles.	AEP 89	1,200	5	3rd Maorh 1972.
8	Spares for Bedford Vehicles.	AEP 90	1,200	5	10th March 1972.
9	Spares for Willys Jeep Model CJBB.	AEP 91	1,200	5	17th March 1972.
10	Spares for Leyland Comet Vehicles.	AEP 92	1,200	5	24th March 1972.
11	Spares for Fargo Lorries ..	AEP 93	1,200	5	17th March 1972.
12	Spares for Benz Lorries. ..	AEP 94	1,200	5	24th March 1972.
13	M.S. Black tubes 40 m.m. dia. light Series.	AEP 95	750	5	3rd March 1972.

3. ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ் கையொப்பமிட்டவரிடமிருந்து 14—2—1972 தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதித் தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட
யந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் எதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும்
ித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட வழியில் காணாமல்போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சாரவாரியம் பொறுப்பல்ல; ஒப்பந்தப் பத்திரங்களும்
ற்றத்தக்கவையல்ல.

தொலைபேசி எண் : 595 ;
ந்தி ENTERMAL

28)

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல்மின் திட்டம் எண்ணூர்,
சென்னை-57.

பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணுசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியளார், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர் களால், வரும் மூன்று வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், அய்யனுவரம் பணிமனையில், கடை நம்பர் 3-ல் வெற்றிலைப் பாக்கு வியாபாரம் செய்வதற்காக, குத்தகைக்கு விடப்படும். முத்திரை யிடப்பட்ட உறைகளில் கட்டடப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2, ஒப்பந்தப் புள்ளிகள் 20–3–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 20–3–1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் விதிமுறைகள் கட்டடப்பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித்தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த.59)

பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணுசாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் மேலாளர் (தொழில்நுட்பம்) அலுவ லகத்தில் மாலை 3-00 மணிவரை, கீழே குறிக்கப்பட்ட தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்:—சென்னை வியாசர்பாடி பணிமனையில் பராமரிப்புக் கூடம், பேருந்து சுத்தம் செய்யும் அமைப்பு மற்றும் 10' விட்ட முள்ள கிணறு அமைத்தல்.

ஒப்பந்தம்:—மொத்தத் தொகை.
முடிக்கும் காலம்:—8 மாதங்கள்.
முன்வைப்புத் தொகை:—ரூ. 3,600.
ஒப்பந்தத் தேதி:—23–3–1972
ஒப்பந்த விதிகள் விலை (விற்பனை வரி உட்பட):—ரூ. 15·55.

ஒப்பந்தங்கள், மேலே குறிப்பிட்ட தேதியில் மாலை 3·15-க்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அலுவ லகத்தில் மேலே குறிப்பிட்ட வேலைக்கு, மேலே குறிப்பிட்ட தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (2–3–1972 முதல் 22–3–1972 முடிய எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை "நிருவாகப் பொறி யாளர்" பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ்ச் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேணடும். குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றிவரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

பி. ஆர். சுப்பிரமணியம்,
மேலாளர் (தொழில்நுட்பம்),
பல்லவா போக்குவரத்துக் கழகம்,
சென்னை-2.

(த.58)

கோவை நகராட்கி

தண்ணீர் விநியோகப் பிரிவில் தண்ணீர் அளக்கும் கருவிகளுக்கு (Water Meters) சுமார் ரூ. 6,000-க்கு சில்லறை உறுப்புகள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972-ஆம் தேதி மாலை 3 மணிவரை ஆணையரால் பெற்றுக்கொள்ளப்படும். அதே தினம் 3-30 மணிக்கு நகராட்சிப் பொறியாளரால் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விவரங்கள், நிபந்தனைகள் முதலியவற்றை ரூ. 3-12 நகராட்சிக்கருவூலத்தில் செலுத்திபொறியாளரிடம்பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த.54)

உதகமண்டலம் நகராட்சி

1972-ஆம் வருடம் மார்ச் மாதம் 28-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்குள் நகராட்சி சந்தையில் காய்கறிகள் விற்கும் கடைகளின் கூறைகளுக்கு மழைத் தண்ணீர் வடிய வசதி செய்வதற்குத் தேவையான துத்துநாக குழாய்களும் மற்ற சாமான்களும் விநி யோகம் செய்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் உதகை கமிஷனர் அவர் களால் வாங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களும், நிபந்தனைகளும் 27–3–1972 மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 6·18 செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை நகராட்சி பொறியர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 6·18, 27–3–1972-ஆம் தேதிக்குள் நகராட்சிக் கஜானுவில் செலுத்தப்படவேண்டும்.

ஆணையர்.

உதகமண்டலம் நகராட்சி.

(த.56)

கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சி ஆணையரவர்களால் கீழ்க்கண்டுள்ள இரண்டு சாலை வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13–3–1972 மாலை 4·00 மணிவரை பெற்றுக்கொள்ளப் படும்.

வேலையின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை.	பொறுப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 கீழ கடலங்குடித்தெரு, மகாமகக்குளம் மேலத்தெரு, தஞ்சைநாயகிபுரம் அக்ரஹாரம் ஆகிய சாலைகளை ஆஸ் பால்ட் காங்கிரீட் சாலைகளாக்க.	1,11,000	2,275
2 அனுமார் கோயில் ரோடு, மகாமகக் குளம் வடக்குத் தெரு ஆகிய சாலைகளை ஆஸ்பால்ட் காங்கிரீட் சாலைகளாக்க.	88,000	2,200

ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4·15 மணிக்குத் திறக்கப்படும். ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்த அட்டவணைக்கும் ரூ. 5-ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை நகராட்சிப் பொறியாள ருக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,

கும்பகோணம் நகராட்சி.

(த.55)

ஸ்ரீ வில்லிபுத்தூர் நகராட்சி

இந் நகராட்சிக்கு சாமான்களைத் தூக்குவதற்கும், இறக்குவதற்கும் தேவையான 3 டன் திறனுள்ள 8 மீட்டர் தூக்கக்கூடிய (With two falls) "செயின் புல்லி பிளாக்" ஒன்று வழங்க நாளது 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4·00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இந்நகராட்சி ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும். ஷை ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்க விரும்புபவர்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் பிணைத் தொகை ரூ. 125 இந்நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திய ரசீதும் அனுப்ப வேண்டும். இதர விவரங்கள் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ப. சண்முகம், பி.ஏ., பி.காம்.
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்,

(த.57)

ஏல விற்பனை

பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம்

பள்ளிப்பட்டு சப்தாலுகா, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஜீப் எம்.டி.எச். 2646 வில்லீஸ் திருவள்ளூர் உதவி ஆட்சியர் அவர்களால் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 24–3–1972-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குப் பகிரங்கமாய் ஏலம் விடப்படும்.

ஏல ஷரத்துக்களை திருவள்ளூர் உதவி ஆட்சியர் அலுவலகத்திலாவது பள்ளிப்பட்டில் இருக்கும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலாவது தெரிந்து கொள்ளலாம்.

ஏலம் விட இருக்கும் வண்டியை அரசு விடுமுறை அல்லாத நாட்களில் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

உதவி ஆட்சியர்,
திருவள்ளூர்.

(த. 60)

ஒப்பந்தப் புள்ளி

மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிக்குச் சொந்தமான திரு. வி. க. காய்கறி மார்க்கெட்டில் தற்போது கீற்றுக் கொட்டகையாக இருக்கும் 5 கடைகளை புதிதாக ஓட்டுக் கட்டடங்களாக கட்டுவதற்கு ரூ. 15,000 மதிப்பீட்டிற்கான வேலைக்கும் பட்டமங்கலம் மேற்கு நகரமைப்புத் திட்டத்தின் கீழ் சி5 சி5, சி6 சி6, ஆகிய இரண்டு புதிய மண்சாலைகள் அமைப்பதற்கு ரூ. 20,000 மதிப்பீட்டிற்கான வேலைக்கும் கூறைநாடு நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் ஒரு மல அறை கக்கூஸ் கட்டுவதற்கு ரூ. 6,700 மதிப்பீட்டிற்கானவேலைக்கும் 14—3—1972-ஆம் தேதி மாலை 4·00 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் கடைகள் கட்டும் வேலைக்கு ரூ. 3·00-ம் விற்பனை வரி பதினொன்று காசும் மண் சாலைகள் அமைப்பதற்கும் கக்கூஸ் கட்டுவதற்கும் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரியும் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மாயூரம்,
(த·69)

சி. வீரைய்யன்,
ஆணையர்.

ஏல விளம்பரம்

ஊராட்சி ஒன்றியம் தே. கல்லுப்பட்டி

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட அனுபந்தத்தில் கண்டுள்ள வாரச்சந்தைகளில் 1—4—1972 முதல் 31—3—1973 தேதி வரை ஒரு ஆண்டு காலத்திற்கு ஆயம் வசூல் செய்யும் பாத்தியதையும், சாணி குப்பை எடுத்துக் கொள்ளும் பாத்தியதையையும் தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் அவர்களாலோ அல்லது அவர் அதிகாரம் பெற்றவராலோ 10—3—1972ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் எடுக்க விரும்புபவர்கள் அனுபந்தத்தில் கண்டுள்ள கட்டுத் தொகையை செலுத்தி ஏலம் கேட்கவேண்டும். ஏல சம்பந்தமான மற்ற விவரங்களுக்கு தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

அனுபந்தம்

விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1 சந்தையூர், கீழ்ப்பட்டி வாரச்சந்தை	100·00
2 தே. கல்லுப்பட்டி வாரச்சந்தை	250·00
3 தே. கல்லுப்பட்டியிலிருக்கும் இளாங்குளம் சத்திரத்தைச் சேர்ந்த வண்டிப்பேட்டை.	100·00
4 ஷை சந்தைகளிலும் வண்டிப்பேட்டைகளிலும் சாணி குப்பை எடுக்கும் பாத்தியதை ஒவ்வொன்றுக்கும்.	5·00

தே. கல்லுப்பட்டி,
(த.74)

த. பாலசுப்ரமணியன், பி.ஏ.,
ஆணையர்.

ஏல விளம்பரம்

வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம்

கோவை மாவட்டம் தாராபுரம் தாலுகா வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்தகண்ணபுரத்தில 24—4—1972 முதல் 1—5—1972 முடிய நடக்கவிருக்கும் தேர்த்திருவிழா மற்றும் கால்நடைச் சந்தையின் போது கூடும் கால் நடைகளுக்கும் தற்காலிகமாக போடப்படும் கடைகளுக்கும் ஆயம் வசூல் செய்யும் உரிமத்தை 11—4—1972-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் பற்றிய விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

16—2—1972.
(த.70)

ஒப்பந்தப் புள்ளி

போடி நாயக்கனூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம்நாள் முடிய உள்ள காலவரைக்கு இந்நகராட்சிக்குத் தேவையான எழுதுபொருள் சாமான்கள் அச்சு வேலை (Printing Works) சுண்ணாம்புத் தூள் ஆகியவைகள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13—3—1972-ம் தேதி மாலை4 மணிவரை பெற்றுக்கொள்ளும் படியாக கோரப்படுகின்றன. அவைகள் அன்று 4·30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவோர் அதற்குரிய கட்டுத் தொகை ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 25 செலுத்தி நேரிலோ அல்லது தபால் மூலமோ மேற்படி காலத்திற்குள் கொடுக்கலாம்.

இதர விவரங்கள் இந்நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
போடிநாயக்கனூர்,

ஆணையர்.

(த·71)

போடிநாயக்கனூர் நகராட்சி

1972-ம் வருடம் ஏப்ரல் 1 முதல் 1973-ம் வருடம் மார்ச்சு 31-ஆம் தேதியுடன் முடிவடையும் ஓராண்டு காலத்திற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரிச் சந்தை, வாரச் சந்தை, தினசரிச் சந்தையிலுள்ள வெளிப்புறக்கடை எண் 1, 2, 3 ஆடு மாடுகள் அடிக்கும் ஸ்லாட்டர் ஹவுஸ், பஸ் ஸ்டாண்டில் தட்டுகளில் முறுக்கு விற்பனை செய்தல், பூ விற்பனை செய்தல், லாட்டரி சீட்டு விற்பனை செய்தல், குளிப்பறைக் கட்டணம் வசூல் செய்தல், டிக்கட் புக்கிங் அறை எண் 2, பஸ் ஸ்டாண்டில் உள்ள விளம்பரச் சுவர் எட்டு பிரிவுகள் மொத்தமாக, நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களை சேகரித்தல், நகராட்சிப் பெட்டிக் கடைகள், வலசத்துறை பாலத்திற்கு அருகேயுள்ள கட்டடம், திருமலாபுரம் சாக்கடைத் தண்ணீர், திருமலாபுரம் தெற்கு கடைசியில் செல்லும் சாக்கடைத் தண்ணீர் ஆகிய உரிமைகளை 1972-ஆம் ஆண்டு மார்சு திங்கள் 10-ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10·30 மணிக்கு அல்லது ஒத்தி வைக்கப்படும் தேதியிலும் நகராட்சி அலுவலகத்தில், ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்கவிழைவோர் வட்ட ஆட்சியாளரால் அளிக்கப்படும் சொத்துச் சான்றிதழுடன் கட்டுத் தொகை செலுத்தி ஏலம் கேட்கலாம். மற்ற விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
போடிநாயக்கனூர்,

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

(த·72)

ஏல விற்பனை

திருவாரூர் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் குத்தகைகள், திருவாரூர் நகராட்சி ஆணையர் அல்லது ஆணையரது அதிகாரம் பெற்ற அலுவலரால் நகராட்சி அலுவலகத்தில் 3–3–1972-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு அல்லது ஒத்திவைக்கப்பெறும் தேதிகளில் எல்லாரும் அறிய பகிரங்க ஏலம் விடப்படும்.

(1) திருவாரூர் நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

(2) நகராட்சி ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

(3) நகராட்சிப் பேருந்து நிலையத்தில் பேருந்து வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

(4) நகராட்சி ஆடு அறுக்கும் தொட்டியில் விழும் எரு கழிவிடையை அகற்றி அனுபவிக்கும் உரிமை.

(5) நகராட்சிப் பேருந்து நிலையத்தில் சைவ உணவு விடுதி நடத்தும் உரிமை.

(6) திருவாரூர், விஜயபுரம் இராமலிங்க முதலியார் சாலையில் உள்ள நகராட்சி ஜூப்ளி மார்க்கட்டில், உள், வெளி, எதிர்ப்புறம் உள்ள 30 கடைகளைத் தினசரி வாடகையில் தனித்தனியே நடத்தும் உரிமை.

(7) நகராட்சிப் பேருந்து நிலையத்தில் உள்ள 3 கடைகள் தினசரி வாடகையில், ஒரு பெட்டிக்கடை பேருந்து நிலையம் வெளிப்புறத்தில் (நகர் அளவு எண் 608/1 உள்ள நகராட்சி இடத்தில் 6'×4' அளவிற்கு) பெட்டிக்கடை வைத்துக்கொள்ளும் உரிமை.

(8) ஆசாத் ரோட்டில் உள்ள சுங்க வரிக் கட்டடம்.

(9) கமலாலயம் தென்கரையிலுள்ள 28-வ எண் கட்டடம்.

குத்தகை நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

க. பெ. அன்பானந்தன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
திருவாரூர்,
(த. 80)

ஏல விளம்பரம்

போடி நாயக்கனூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதியுடன் முடிவடையும் ஓராண்டுக் காலத்திற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரிச் சந்தை, வாரச் சந்தை தினசரி சந்தையிலுள்ள வெளிப்புறக்கடை எண் 1, 2, 3, ஆடு, மாடுகள் அடிக்கும் தொட்டிகள், பேருந்து நிலையத்தில் தட்டுகளில் முறுக்கு விற்பனை செய்தல், பூ விற்பனை செய்தல், பரிசுச் சீட்டு விற்பனை செய்தல், குளிருப்பறைக் கட்டணம் வசூல் செய்தல், டிக்கட் புக்கிங் அறை எண் 2, பேருந்து நிலையத்திலுள்ள விளம்பரச் சுவர் எட்டு பிரிவுகள் மொத்தமாக, நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களைச் சேகரித்தல், நகராட்சிப் பெட்டிக் கடைகள், வலசத்துறை பாலத்திற்கு அருகேயுள்ள கட்டடம், திருமலாபுரம் சாக்கடைத் தண்ணீர், திருமலாபுரம் தெற்குக் கடைகளில் செல்லும் சாக்கடைத் தண்ணீர் ஆகிய உரிமைகளை 1972-ஆம் ஆண்டு மார்சு திங்கள் 10–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு அல்லது ஒத்தி வைக்கப்படும் தேதியிலும் நகராட்சி அலுவலகத்தில், ஆணையர் அவர்களால் அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்க விழைவோர் வட்ட ஆட்சியாளரால் அளிக்கப்படும் சொத்துச் சான்றிதழுடன் கட்டுத்தொகை செலுத்தி ஏலம் கேட்கலாம். மற்ற விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
போடி நாயக்கனூர்,
(த·75)

ஏல விளம்பரம்

குற்றால நகரியக்குழு

குற்றால நகரியத்துக்குச் சொந்தமான "கலைவாணர் கலைய கத்தில்" சினிமா, நாடகம், நடனம், மற்றக் கலை நிகழ்ச்சிக ஆகியவை நடத்தும் உரிமை 1-4-1972 முதல் 31-3-1975 வரையுள் மூன்று வருட காலத்துக்கு நகரிய நிருவாக அதிகாரியால் குற்று நகரிய அலுவலகத்தில் வைத்து 8-3-1972 அன்று காலை 11-(மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கோர விரும்புபவர்கள் தங்களுடன் "சால்வன்ஸி சர்டிபிகேட் கொண்டுவருவதுடன் ரூ. 1,500-ம் ஏல டிப்பாசிட்டாக செலுத் வேண்டும். ஏலம் சம்பந்தமான இதர விவரங்களை நகரிய அலு லகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சா. நா. பழனிசாமி, பி.ஏ., பி.எல்.
நிருவாக அதிகாரி.

குற்றால நகரியம்,
(த·78)

வேலை வாய்ப்பு

கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் (திருநெல்வேலி மாவட்டம்)

கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் செய்துங்கநல்லூர் மருத்துவ மனைக்கு மருத்துவ அதிகாரி பதவிக்கு மனுக்கள் வரவேற்க படுகின்றன.

பதவிக்கான தகுதி:—எல்.ஐ.எம். அல்லது அதற்கு ஈடான தகு சான்றிதழ்.

வயது வரம்பு:—20-க்கு மேல் 50-க்குள்.

சம்பள விகிதம்:—400—15—475—20—575—25—650.

பதவிக்காலம்:—நிரந்தரம்.

மனு அனுப்ப வேண்டிய இறுதி நாள்:—30-3-1972, 5 மணிக்குள்.

ச. த. ஜெயபாலன்,
ஆணையர்.

(த·77)

ஒப்பந்தப் புள்ளி

கிராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையம் தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்

தே. கல்லுப்பட்டி இராமிய விரிவாக்கப்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த தொழிற்கூடப் பகுதிக்கு 1972-73-ஆம் ஆண்டிற்குத் தேவையான மரம் இரும்பு போன்ற சாமான்கள் விநியோகம் செய்வதற்கு மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 100 கட்டுத் தொகை செலுத்தி 29—3—1972 அன்று பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட சாமான்களின் விவரம் அறிய முதல்வர், இராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையம், தே. கல்லுப்பட்டிக்கு எழுதியோ அல்லது நேரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகளை முதல்வர், இராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையம் தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் என்ற முகவரிக்கு நேரிலே அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பவேண்டும். கட்டு தொகையை இந்த அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெறலாம் அல்லது மணியாடர் மூலம் அனுப்பலாம். காசோலைகள் பெற்று கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள் 29—3—1972 மாலை 3-15 மணிக்கு இந்த அலுவலகத்தில் முதல்வர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரா திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர்கள் நேரிலோ அல்ல அதிகாரம் அளிக்கப்பட்ட ஏஜண்டுகள் மூலமாகவும் ஒப்பந்தப் புள்ளிக திறக்கப்படும்போது ஆஜராகலாம்.

சே. வெ. ராமசுப்பிரமணியம்,
முதல்வர், இராமிய பயிற்சி நிலையம்,
தே. கல்லுப்பட்டி.

(த· 49)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்
கோதையாறு மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகளை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின் திட்டம், 34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர், அல்லது அவரால், அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் அந்தந்த வேலைகளுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாட்களில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

வேலைகளின் பெயர்கள்—

எண் 1.

குறிப்பிடுகை எண்.—K. C. 306.—கோதையாறு மேல் தங்கலில் உள்ள அணை 1-ல், ரீச் A—D.S. 160-லிருந்து D.S. 320 வரை அணையின் பின்புற பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கு (Rear Protection arrangements) அஸ்திவாரம் தோண்டுதலும், கான்கிரீட் போடுதலும், கட்டுமான வேலை (Building masonry) செய்தலும்.

ஒப்பந்த செட்டின் விலை விற்பனை வரி உட்பட—ரூ. 10.35.

கட்டுத் தொகை —ரூ. 17,750.

ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி :—28-3-1972.

எண் 2.

குறிப்பிடுகை எண் : K. C. 307—கோதையாறு மேல் தங்கலில் உள்ள அணை 1-ல் ரீச் B—D. S. 320-லிருந்து D. S. 450 வரை அணையின் பின் பக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்வதற்கு (Rear Protection arrangements) அஸ்திவாரம் தோண்டுதலும் கான்கிரீட் போடுதலும், கட்டுமான வேலை (Building Masonry) செய்தலும்.

ஒப்பந்த செட்டின் விலை விற்பனை வரி உள்பட:—ரூ.10.35.

கட்டுத் தொகை:—ரூ. 12,160.

ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி:—10-4-1972

ஒப்பந்தப் புள்ளி செட்டுகளின் நகல்களை (மாற்றத் தகாதவை) ஒவ்வொரு வேலைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ சில அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ நிராகரிக்க, கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் கால தாமதம் அல்லது காணமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின்திட்டம்,

34-ஏ பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7
(த.66)


நெய்வேலியும்...நமது நாடும்
நெய்வேலி யூரியா: விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.
யூரியா பார்மால்டிஹைடு போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.
மின்விசை: இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.
கட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லிக்னைட் வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது-தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.
தார்ப்பொருள்கள் பல ரசாயன, பிளாஸ்டிக தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால் [illegible]
கெகோலின்: சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்த சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்சுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். [illegible]
நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி-1
NLC

ஒப்பந்தப் புள்ளி

செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் 1972-73-ஆம் ஆண்டிற்கான கழிவுக் காகிதங்களை வாங்குவதற்குக் கீழே ஒப்பம் இடப் பெற்றவரால் காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ஆம் தேதியன்று மாலை 3-00 மணி வரையிலும் வாங்கப்பட்டு அன்று மாலை 4-00 மணிக்கு அன்னாரால் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் பொறுப்பு வைப்புத் தொகையாகக் கருவூலத்தில் ரூ.250 (ரூபாய்இருநூற்றுஐம்பது மட்டும்)செலுத்தப்பட்டு அதற்குண்டான கருவூல ரசீதையும் வைத்து அனுப்ப வேண்டும். முதல், இரண்டாவது மற்றும் மூன்றுவது தரக் கழிவுக் காகிதங்களுக்கு முறையே ஒரு மெட்ரிக் டன்னுக்கு உண்டான தொகையைக் குறிப்பிட வேண்டும். மேலும் மற்ற விவரங்களைச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

டி. வரதன்,
மாவட்ட வருவாய் அதிகாரி.

காஞ்சிபுரம்,
15—2—1972
(த. 53)

ஒப்பந்தப் புள்ளி

ஈரோடு நகராட்சி

இந்நகராட்சி குடிநீர் இறைப்பு நிலையத்திலுள்ள 70 குதிரை வேகம், 30 குதிரை வேகம் மின் உந்துகளுக்குத் தேவைப்படும் ஸ்பேர் சாமான்கள் ரூ. 2,100 மதிப்பில் வழங்க 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ஆம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

ஈரோடு,
10-2-1972.
(த. 52)

ஒப்பந்தப் புள்ளி தேதி நீட்டிப்பு

மதுரையில் உள்ள தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்து நிலையத்தில் " சிற்றுண்டி விடுதி—பயணியர் தங்கும் விடுதிக் கட்டடத்தில் கீழே உள்ள சிற்றுண்டி சமையல் பகுதியை அதன் பின்புறம் உள்ள காலியிடத்துடன் குத்தகைக்கு விடுவதற்கு அரசு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசித் தேதி 8—3—1972 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2. ஒப்பந்தம் திறக்கப்படும் நாளும், நேரமும் 8—3—1972 மாலை 3-30 மணி.

3. சிற்றுண்டி விடுதியின் குத்தகைக் காலம்—மூன்று வருடங்கள்.

4. ஒப்பந்தப் படிவம் வேண்டுவோர் ரூபாய் 1 (ரூபாய் ஒன்று மட்டும்) கூட்டு இயக்குநர், தமிழகஅரசு போக்கு வரத்துத் துறை திருச்சி மண்டலம் திருச்சி-17 அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இவை தவிர மற்ற எல்லாம் ஒப்பந்த விதி முறைகளும் இவ்வலுவலக ஒப்பந்த அறிவிப்பு எண் C2/8996/71 நாள் 3—12—1971-ல் குறிப்பிட்டுள்ளபடியே இருக்கும்.

ம. பிராணப்பன்,
கூட்டு இயக்குநர்.

திருச்சிராப்பள்ளி,
16—2—1972.
(த. 51)

ஏலம்

வனத்துறை
தமிழக அரசினர் மரக்கிடங்கு, பொள்ளாச்சி

சுமார் 500 கன மீட்டர் முதல் 1,000 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பல ஜாதி) மரங்கள் ஆகியவைகள் 14—3—1972-ஆம் தேதி மற்றும் 5—4—1972-ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாகத் தென் கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடைபெறும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக்கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர்,
தென் கோவை கோட்டம்.

பொள்ளாச்சி,
15—2—1972.
(த. 48)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித்துறை, செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம் வேலூர்-1.

வேலையின் பெயர்.—திருவண்ணாமலை தாலுகா—மல்லவாடியில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்கும் விடுதிகள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்த தாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற் குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியர் அவர்களால் 22—3—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வையாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 9,700.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரை படங்களுடன்—ரூ. 20 விற்பனை வரி 3½ சதவிகிதம்.

ஒப்பந்தப் புள்ளி முடிக்கவேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 20—3—1972 தேதி முதல் 26—3—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W.D. Remittances, III Other Remittances" என்ற தலைப்பின்கீழ் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை" என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax b Receipts, under State Sales Tax Act—Gereral Sales-Tax என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்திச் சீட்டுகளை இவ்வலுவலகத் திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து., திருவண்ணா மலைக் கொட்டம், திருவண்ணாமலை, அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத் தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரிய பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 65)

உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

குறளகம்

சென்னை-1

கதர்-கைத்தொழில் அங்காடி

தொலைபேசி 20461, 20462.

எண்கள்: 20463, 20464, 20465.

கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

ஒப்பந்தப் புள்ளி

அம்பத்தூர் நகரியம்

அம்பத்தூர் நகரியத்திற்கு 1972–73-ஆம் ஆண்டிற்கு (1–4–1972 முதல் 31–3–1973 முடிய) தேவையான பொருள்களை வழங்கவும் வேலைகளைச் செய்யவும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான தனித்தனியே மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி மாலை 3–00 மணி வரை நகரிய அலுவகத்தில் கீழே கையொப்பம் இட்டுள்ள அதிகாரி அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு மேற்படித் தேதியன்று மாலை 3–15 மணிக்கு அப்பொழுது வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் நகரிய அலுவலகத்தில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளை நகரிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வரிசை எண்.	ஒப்பந்தப் புள்ளியின் விவரம்.	பொறுப்புத் தொகை.
		ரூ.
1.	பொதுச் சுகாதாரப் பிரிவிற்கு மாடுகள் வழங்குதல் ..	1,200
2.	வண்டி, வாகனம் இவைகளுக்கான லைசென்ஸ் பில்லைகள் வழங்குதல்.	25
3.	பொதுச் சுகாதாரப் பிரிவில் குப்பை வண்டிகள் கழிவுநீர் வண்டிகள், பழுது பார்த்தல், பஞ்சர் போடுதல்.	25
4.	அலுவலகத்திற்குத்தேவையான ஸ்டேஷனரி சாமான்கள் வழங்குதல்.	250
5.	பொதுச் சுகாதாரப்பிரிவிற்கு வேண்டிய லைப்பாய் சோப், கூடை, மலாரம், சுண்ணும்புநீர் மற்றும் சாமான்கள் வழங்குதல்.	150
6.	நகரியத்திற்குச் சொந்தமான தினசரி காய்கறி, மீன், இறைச்சி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலம் விடுதல்.	100
7.	ஐம்பது குப்பைத் தொட்டிகள் (சிமெண்டினால் செய்யப்பட்டது) வழங்குதல்.	75

டி. எம். வெங்கட்டராமன்,
திருவாக அதிகாரி.

அம்பத்தூர் நகரியம்,
(த·73)

ஏல விற்பனை

மாவட்ட நல அலுவலகம்

எண். 84665–70, எப்-1 நாள் 11–2–1972 மாவட்ட நல அலுவலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரி அலுவலகத்தில் உள்ள கீழ்க் கண்ட ஜீப் வண்டி கண்டனம் செய்யப்பட்டு அந்த வண்டி 20–3–1972 அன்று காலை 11–00 மணிக்கு தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரி அவர்களால் அதே அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

வண்டியின் விவரம்.

பதிவு எண் :— எம்.டி.ஓ. 2624

மேக், டைப் :—எஸ்.எம்.வி. வில்லீஸ் ஜீப், ஓவர்ஹெட் டைப்.

மாடல் :—1959.

அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள் :—ஐவர்.

ஏலத்திற்கான நிபந்தனை.

1. மேலே கண்ட வண்டியை ஏலத்தில் விற்பனை செய்வது சென்னை அரிசனநல இயக்குநரின் உறுதிப்படுத்தல் உத்தரவைப் பொறுத்தது.

2. மேலே கண்டுள்ள வண்டியை தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரியின் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

3. ஏலம் கேட்க விரும்புபவர்கள் ரூ. 100 (ரூபாய் நூறு) மட்டும் ஏலம் கேட்பதற்கு முன் கட்டுத் தொகையாகக் கட்ட வேண்டும். அவ்வாறு முன் பணம் கட்டாதவர்கள் ஏலத்தில் கலந்துகொள்ள எந்தச் சந்தர்ப்பத்திலும், அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏலம் எடுத்த நபர் கொடுத்த முன் பணம் ஏலம் எடுத்த தொகைக்கு ஈடு செய்யப்படும். அதிகத் தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்கு ஏலம் உறுதி செய்யப்படும். ஏலத்தில் முடிவான பணத்தில் 25 சதவிகிதம் (கால் பாகம்) உடனடியாகக் கட்டிவிட வேண்டும். கால் பாகத்தில் முதலில் கட்டிய கட்டுத் தொகையைக் கழித்துக் கொள்ளலாம். ஏலத்தில் எடுக்காதவர்களுக்கு உத்திரவாத முன் பணமான கட்டுத் தொகை ஏலம் முடிந்தவுடன் உடனடியாகத் திருப்பி அளிக்கப்படும்.

4. சென்னை அரிசன நல இயக்குநரின் ஏலத்தை உறுதிபடுத்திய உத்திரவு வந்ததும், ஏலம் எடுத்தவருக்கு அறிவிக்கப்படும். அறிவிக்கப்பட்ட உத்திரவு கிடைத்த 7 நாட்களுக்குள் ஏலம் எடுத்தவர் பாக்கி கட்ட வேண்டிய தொகையை வணிக வரி 3 சதவிகிதம் உடன் சேர்த்து கட்டிவிட வேண்டும். அவ்வாறு கட்டத் தவறினால் அவர் ஏலத்தில் கட்டாயத்தொகை முழுவதும் அரசாங்கத்திற்கு சட்டப்பூர்வமாக சேர்க்கப்படும். மறு ஏலம் விடப்பட்டு, அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுமானால் அதையும் அவரே செலுத்தும்படி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5. சென்னை அரிசன நல இயக்குநர் ஏலம் விட்டதை உறுதிப்படுத்தி அனுமதி அளிக்காவிட்டால் ஏலம் எடுத்தவர் ஏலத் தேதியன்று கட்டாயம் கால் பாகம் (25 சதவிகிதம்) முன் பணத்தை அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

மாவட்ட நல அதிகாரி,
தஞ்சை.

(த.67)

ஒப்பந்தப் புள்ளி

உணவுப் பொருள் வழங்குதுறை உபயோகப்படக்கூடிய-கிழிந்த சாக்குப்பைகள் விற்பனை அறிவிப்பு

நீலகிரி மாவட்டம் உணவுப் பொருள் வழங்குத்துறைக்குச் சேர்ந்ததும், மேட்டுப் பாளையம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கிலுள்ள 40,333 உபயோகப்படக் கூடியதுமான சாக்குப் பைகளையும், 451 மற்றும் 209 கிழிந்த சாக்குப் பைகளையும் விற்கத் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகின்றன. ஏல நிபந்தனைகளுடனும், லாட்டுகள் விவரங்களுடனும் உள்ள ஒப்பந்தப் நமூனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ரூ. 2·07 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 2·50 (ரூபாய் இரு ஐம்பது மட்டும்) கூட்டுத் தொகையான பேங்க் டிராப்டு அனுப்பட வேண்டும்.

முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே பிற்பகல் 3-00 மணிக்குப் பிறகு ஒப்பந்ததாரர்கள் முன்பு உதகை மாவட்ட ஆட்சிதலைவரின் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை நாளாகப் பின்னர் அறிவிக்கப்பட்டால், ஒப்பந்தப் புள்ளிகள் அடுத்த நாள் மாலை 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புதலுக்காக ஒரு மாதம் வரை வைக்கப்படும்

மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.50)

ஒப்பந்தப் புள்ளி

பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2,

பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால், கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள "போக்குவரத்து இல்லத்தின்" அலுவலகத்தில் மாலை 3-00 மணி வரை கீழே பத்தாவது பத்தியில் குறிக்கப்பெற்ற தேதிகளில் பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	ஒப்பந்தத்தின் வகை.	முன்வைப்புத் தொகை.	பாது காப்புத் தொகை.	ஒப்பந்த விதிகள் விலை விற்பனை வரி உட்பட.	முடிக்கும் காலம்.	நிபந்தனைப் பத்திரங்கள் இடைக்கும் தேதி. முதல்.	தேதி முடிய.	ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப் படும், மற்றும் திறக்கப்படும் தேதி.
		ரூ.	ரூ.	ரூ.	மாதங்கள்.			
செங்கற்பட்டில் பணிமனை கட்டுதல்—								
1 பயணிகள் நிற்கும் கூடம் அமைத்தல் மற்றும் டிக்கட் விற்பனைக் கூடம்.	மொத்தத் தொகை	2,000	2,000	15·55	6	28– 2–1972	14– 3–1972	15– 3–1972
2 தார்சாலை அமைத்தல்	ஷை	3,375	3,375	15·55	6	28– 2–1972	14– 3–1972	15–3–1972
பராமரிப்புக்கூடம், பேருந்து சுத்தம் செய்யும் அமைப்புக் கட்டுதல், கிணறு அமைத்தல், மேலும் சுத்தம் செய்யும் தொட்டி அமைத்தல்.	ஷை	2,975	2,975	15·55	6	28– 2–1972	14– 3–1972	15– 3–1972
3 நேரப்பதி வறை, கழிவறை மதில் சுவர் கட்டுதல், பாலம் அமைத்தல்.	ஷை	3,450	3,450	15·55	6	28– 2–1972	14– 3–1972	15–3–1972

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களால் மேற்கூறிய (பத்தாவது பத்தி) அதே நாட்களில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப்பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அலுவலகத்தில் மேற்கூறிய வேலைகளுக்கு மேற்கூறிய தொகையைக்கட்டி மேற்கூறிய தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை "நிருவாகப் பொறியாளர்" பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

டி. ஆர். சுப்ரமணியம்,
மேலாளர் (தொழில் நுட்பம்).

(த.68)

ஒப்பந்தப் புள்ளி

கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை திருவல்லிக்கேணி, சென்னை-5

இம் மருத்துவமனையைச் சேர்ந்த "செவிலியர் இல்லத்திலும், சிற்றுண்டி விடுதியிலும் (Nurses Quarters and Canteen) 1—4—1972 முதல் 31—3—1973 வரை ஓராண்டிற்கான உணவு, சிற்றுண்டி முதலியன வழங்குவதற்காகவும் மற்றும் சைக்கிள் கட்டணம் வசூலிப்பதற்காகவும் குத்தகை விண்ணப்பங்கள் (Tender Forms) தனித் தனியாக 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் (15—3—1972) புதன்கிழமை பகல் 2 மணி வரை இம் மருத்துவமனையில் கண்காணிப்பாளரால் பெற்றுக் கொள்ளப்படும்.

குத்தகையின் விதிகள், உணவு,சிற்றுண்டி வகைகள் முதலியவற்றைக் காட்டும் 'அட்டவணை' மற்றும் குத்தகை விண்ணப்பங்கள் ஆகியவற்றை இந்திய ரூலைப் பொருளகம் (Reserve Bank of India) அல்லது கருவூலத்தில் (Treasury) தமிழக அரசு கணக்கில் XXIII—மருத்துவம்-பலவகை (XXIII—Medical—K. Miscellaneous) என்ற தலைப்பில் ரூபாய் 5-ம் விற்பனை வரி 0.18 காசும் (XII—Sales Tax—Receipt under Gen. Sales Tax) கட்டி அதற்கான சீட்டுகளைப் பெற்று இந்த மருத்துவமனை அலுவலகத்தில் பெறலாம்.

தமிழ் நாட்டை விட்டு வெளியிலிருக்கும் தனிப்பட்ட கூட்டுத் தொழிலகம் (Company) தனி ஆட்கள் இந்த குத்தகை ஏற்பாட்டில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ரூபாய் 5.18 பண அஞ்சல் குறுக்குக் கோடிட்ட அஞ்சல் ஆணை (Crossed Postal Order) அல்லது பொருளக உண்டியல் (Bank Draft) மூலமாக அனுப்பலாம்.

ஒவ்வொரு குத்தகை விண்ணப்பத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தேதிக்குப் பின் தொடர்புடைய வட்ட அலுவலகரால் (Thasildar) கையெழுத்திட்டோ அல்லது சரி நகலான அரசிதழ் பதிவு அலுவலரால் (Gazetted Officer) ஒப்பம் செய்யப்பட்ட கீழ்க்காணும் சான்றிதழ்களைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

1. செல்வப் பெருமானச் சான்றிதழ் (Solvency Certificate).
2. வருமான வரி முழுவதும் அரசுக்குச் செலுத்தியதற்கான சான்றிதழ் (Tax Clearance Certificate).
3. விற்பனை வரி தணிக்கையானதற்கான சான்றிதழ் (Sales Tax Verification Certificate)
4. நாட்டு இச்சை சான்றிதழ் (Nationality Certificate).

கண்காணிப்பாளர்.

(த. 64)

ஏல விளம்பரம்.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணை

கண்காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, நஞ்சநாட்டைச் சேர்ந்த எம்.எஸ். இஜட். 5048 என்ற இலக்கமிட்ட, இனி மேற்கொண்டு உபயோகத்திற்கு தகுதியற்றது என்று அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வில்லீஸ் ஜீப், 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில், அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு நஞ்சநாடு, விவசாய ஆராய்ச்சிப் பண்ணையின் எல்லைக்குள் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏல விற்பனை நிபந்தனைகளை நஞ்சநாடு, விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து அந்த அலுவலக நேரங்களிலோ அல்லது தன் விலாசமிடப்பட்ட தபால்தலை ஒட்டப்பட்ட கடிதம் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்,
விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, நஞ்சநாடு.

(த. 63)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

திருநெல்வேலி மின் திட்டம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—3—1972 மாலை 2 மணி வரை அடியிற் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. வேலைகளின் காலஅளவு 1—4—1972 முதல் ஒரு வருடம் அல்லது ஒப்பந்தம் கையெழுத்தாகும் தேதி முதல் ஒரு வருடம் வரைக்கும்.

வேலை எண். 1—

தாழையூத்து மற்றும் திருநெல்வேலி புகை வண்டி நிலையம், திருநெல்வேலி சந்திப்பு டவுன் இடங்களிலுள்ள லாரி நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து தாழையூத்து மத்திய இடங்கிற்கு சாமான்களை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலமாக கொண்டு சேர்த்தல், மத்திய இடங்கிலிருந்து மேற்படி இடங்களுக்கு கொண்டு சேர்த்தல், டிரான்ஸ்பார்மர் மற்றும் 500 கிலோ கிராமிற்கு மேல் எடையுள்ள கனரக மின் சாதன சாமான்கள் இதில் அடங்காது.

வேலை எண். 2—

மின்சார வாரியத்திற்கு சொந்தமான சாமான்கள் (ஒவ்வொன்றும் 2 டன்களுக்கு மேல் எடையுள்ள பொருட்கள் மற்றும் 6.5 மீட்டர்களுக்கு மேல் நீளமான பொருட்கள் தவிர) தமிழ்நாட்டில் 20 கிலோ மீட்டர்களுக்கு மேல் தூரமான எல்லா ஊர்களுக்கும் சாலை மூலம் லாரிகளில் கொண்டு சேர்த்தல்.

வேலை எண். 3—

நெல்லை மின் திட்ட எல்லைக்குள் 7.32 மீட்டர் 8.23 மீட்டர் மற்றும் 9.14 மீட்டர் கான்கிரீட் கம்பங்களை அதன் உற்பத்தி கேந்திரங்களிலிருந்து பல்வேறு வேலை நடக்கும் இடங்களுக்கு கொண்டு சேர்த்தல்.

ஒப்பந்தப் பாரங்களை ரூபாய் 6 (ஆறு மட்டும்) நேரிலோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ தலைமைக்கணக்காயர், செலவினம், திருநெல்வேலி மின் திட்டம், வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3 அவர்களிடம் செலுத்தி 25—2—1972 முதல் 18—3—1972 வரை பெற்றுக் கொள்ளலாம். பண அஞ்சல்கள் 18—3—1972 வரைதான் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சல் மூலமாகத்தான் அனுப்பப்படும். அவை தவிர நேரின் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. ஒப்பந்தப் புள்ளிகள் 20—3—1972 மாலை 4 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் ஒப்பந்தங்களும் கட்டுத் தொகை கட்டாது அனுப்பப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் காரணம் ஏதும் குறிப்பிடாமல் நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவோ அடியிற் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருநெல்வேலி மின் திட்டம்.

வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி-3.
(த. 62)

ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை

தென் கோவை மாவட்ட வன தூணக்கடவு சரகம் சி.எல்.சி. (ஏ) மற்று (பி) (ஊர்ந்தி பிளாக்கு) பகுதிகளிலிருந்து பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக்கிடங்கிற்கும் (2) தேவைப்படின் ஆனைமலை பண்ணையிலுள்ள பொள்ளாச்சி வனச்சரக அலுவலகத்தைச் சார்ந்த எல்லைக்குள்ளும் எக்ரிமெண்டு ஒப்புதலாகும் தேதியிலிருந்து 31—12—1972-ஆம் தேதிவரை சுமார் 3,500 கன மீட்டர் மரங்களை மோட்டார் லாரிகளில் ஏற்றுக் கொண்டு வருவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக, தென் கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் 9—3—1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மரங்களை பொள்ளாச்சி அரசினர் மரக்கிடங்கிற்கு கடத்துவதற்கும், ஆனைமலை பண்ணையிலுள்ள பொள்ளாச்சி வனச்சரக அலுவலகத்தைச் சார்ந்த எல்லைக்குள்ளும் கடத்துவதற்கும் தனித்தனி விகிதம் (Rate) குறிப்பிடவேண்டும்.
ஒப்பந்தப் புள்ளிக்குரிய பாரத்தை, ஒப்பந்தப் பாரம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு வீதம் (தபால் செலவு நீங்கலாக) விற்பனை வரி ரூ. 0·07-யும் செலுத்தி தென் கோவை மாவட்ட வன அலுவலரிடமிருந்தோ அல்லது பொள்ளாச்சியிலுள்ள அரசின் மரக்கிடங்கு வனச்சரக அலுவலரிடமிருந்தோ இதர விவரங்களுடன் பெற்றுக் கொள்ளவும்.

பு. கா. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர், தென் கோவை கோட்டம்

(த.61)

இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம்

அரசாங்கத்தால் இராமநாதபுர மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தின் கிளைகள் உள்ள (1) விருதுநகர், (2) திருவில்லிப் புத்தூர், (3) காரைக்குடி, (4) பரமக்குடி, (5) சிவகங்கை (6) இராமநாதபுரம் ஆகிய ஊர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் இரசாயன உர உப்பு மூட்டைகளை 1–4–72 முதல் 31–3–73 வரை கீழ்க்கண்ட இடங்களிலிருந்து லாரி மூலம் ஏற்றிக்கொண்டு வந்து டெலிவரி கொடுக்க இறக்குக் கூலி நீங்கலாக மெட்ரிக் டன் 1-க்கு மொத்த லாரி வாடகை ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

(1) ஆவடி
(2) சென்னைத் துறைமுகம்
(3) பாண்டிச்சேரி
(4) தூத்துக்குடி
(5) நாகப்பட்டினம
(6) கடலூர்
(7) நெய்வேலி
(8) தஞ்சாவூர்
(9) மன்னார்குடி
(10) இராமநாதபுரம்

மாவட்டத்திற்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல 1 கிலோ மீட்டருக்கு ரேட்.

ஒப்பந்தம் கொடுக்க விரும்புபவர்கள் ரொக்க டிபாசிட் ரூ. 1,000 (ஒரு ஆயிரம் மட்டும்) மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்க அலுவலகத்தில் செலுத்தி அதன் ரசீதையும், மேலும், ஒரு இலட்சம் மதிப்புள்ள சால்வென்சி சர்டிபிகேட் சம்பந்தப்பட்ட தாசில்தாரிடம வாங்கி, அதையும் ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் மேற்கொண்டு ரூ. 4,000 ரொக்க டெபாசிட் கட்ட வேண்டும்.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 27–3–72ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவு) 110, அழகர் கோவில் ரோடு, தல்லாகுளம், மதுரை-2 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட இதர விவரங்களை இவ்வலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராமநாதபுரம்.

(த. 79)

அறிவிப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை. சுயவேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் கைத்தொழிலாளிகளுக்குக் கடன் உதவி.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் தொடங்குவதற்கு வட்டியில்லாக் கடன் ரூ. 1,000 மதிப்புள்ள கருவிகளும், சாதனங்களும் கொடுப்பதற்குத் தேசிய வர்த்தகச் சான்றிதழ் அல்லது எந்த வர்த்தகத்திலாவது தேசிய அப்பரெண்டிசிப் சான்றிதழ் பெற்றுள்ள, தமிழ்நாடு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் முன்னாள் பயிற்சியாளர்களிடமிருந்து, மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

கடன் தொகை, கைவேலைக் கருவிகள மற்றும் சாதனங்கள் வடிவத்தில் தனிப்பட்டவர்களின் தேவைகளுக்கும் தகுந்தாற்போல் அனுமதிக்கப்படும். (Sanctioned) விண்ணப்பப் பாரங்கள், மற்ற விவரங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வேலை வாய்ப்புத்துறை முதல்வர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். முழுமையான விண்ணப்பங்கள், 29–2–1972-லிருந்து, தொழிற்பயிற்சி நிறுவனங்கள் முதல்வர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். தொழிற்பயிற்சி நிறுவனங்களின் முதல்வர்களால் மனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி.

(த. 47)

பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 23,700-ல் 2 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையரவர்களால் 13–3–72-ம் தேதி, மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகிறது. தகுந்த முன்வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் எவ்வித முகாந்திரமுமின்றி நிராகரிக்கப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 76)

இராசிபுரம் நகராட்சி

இராசிபுரம் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்காக நகல்கள் எடுக்கும் இயந்திரம் (Duplicator) ஒன்று விநியோகம் செய்ய இராசிபுரம் நகராட்சி ஆணையாளராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ 13–3–72-ஆம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிக்கான நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெ. பாலசுப்ரமணியம்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
இராசிபுரம்,
(த. 81)

கிருஷ்ணகிரி நகராட்சி

இந் நகராட்சியின் பொதுச் சுகாதாரப்பிரிவிற்கு 1972–73ஆம் ஆண்டிற்குத் தேவையான கீழ்க் குறிப்பிட்ட பொருள்களை வழங்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் 10–3–72ஆம் தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். இதர ஒப்பந்த நிபந்தனைகள் கட்டுத் தொகை செலுத்துதல் போன்ற இதர விவரங்கள் அடங்கிய அறிவிப்பை நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை செலுத்தாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

தேவையான பொருள்களின் விவரம்.

(1) பினாயில் ; (2) பிளீச்சிங் பவுடர் ; (3) மண்வெட்டி 10" ; (4) கடப்பாறை—5·6" ; (5) கொங்காணி ; (6) வாளி ஜி.ஐ. 10" ; (7) கயிறு வகைகள் ; (8) இரும்பு முறம், வாணலி ; (9) மாதிரி உணவெடுக்கும் பாட்டில்கள் ; (10) டிராக்டர், டிரெயிலர் டயர் டியூப்புக்கள் ; (11) உணவு மாதிரி எடுக்கும் மரப் பெட்டிகள் ; (12) டயர் புதுப்பித்தல் டியூப்பஞ்சர், வல்கனைசிங் ; (13) டிராக்டர், டிரையிலர் குப்பை வண்டிகளுக்குப் பெயின்ட் அடித்தல் ; (14) கக்கூஸ் கை வண்டிகள், டிரம்கள் சப்ளை செய்தல் ; (15) குப்பை வண்டி, கக்கூஸ் வண்டி டயர் டியூப், களுடன் (Adv. Equipments) ; (16) பருத்திக்கொட்டை, கொள், உப்பு,சூப்பர்மின்டிப், பச்சைப்புல், முதலியன ; (17) குப்பைத்தொட்டிகள் ; (18) நகராட்சியின் டிராக்டர், டிரெயிலர், லாரி ரிப்பேர் செய்தல் (19) பிக்காஸ் ; (20) 14 லிட்டர் கொள்ளளவு உள்ள அமெரிக்கன் ஜனதா ஸ்பிரிங் ஸ்பிரேயர்களுடன் ஸ்பிரேயர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் வழங்குதல்.

துரை. குருநாதன்,
பி.ஏ., பி.டி.,
ஆணையர்.

கிருஷ்ணகிரி,

(த. 82)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.

இன்றைய வெற்றி!
கடந்த ஐந்தாண்டுகளில் அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளால் உணவு உற்பத்தியில் தமிழ் நாடு முன்னணியில் திகழ்கிறது!
இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் 1970-71-ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் சராசரி நெல் விளைச்சல் 1134 கிலோகிராம்!
இதுபோன்ற வெற்றிகள் எல்லாத் துறைகளிலும் உருவாக, உறுதுணையாக அமைவது அளவான குடும்பம்!
குடும்ப நலத் திட்டம்
வீட்டுக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!
குடும்பநலத்துறை
தமிழ்நாடு அரசு



வண்ணமிகு படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

வர்ண மய உலகம். அதுவே
கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்.
பட்டுகள், பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும்.
குர்தாக்கள், பெல் பாட்டம்
கள், லுங்கிகள், சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும்
சிருஷ்டிகள். கோ-ஆப்டெக்ஸ்
படைப்புகள்.

காலப் போக்குக்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் ...
கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், சென்னை-8.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு

Criterion CO 2575TM.

தமிழரசு

1972 மார்ச் 16 . 35 காசு

K.K. NL 11/3/58/72

அரசு - மிகவுயர்ந்த தரமானது

போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மறுபெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட். குடியிருப்பு; இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புகள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வளப்பும் வாய்ந்தது

AC-16



"நின்கடற் பிறந்த
ஞாயிறு பெயர்த்தும்
நின்வெண் தலைப்புணரி
குடகடல் குளிக்கும்"

என்று இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், மன்னன் ஒருவனின் மாண்பினைத் தமிழ்ப் புலவர் ஒருவர் பாராட்டிப் பாடி மகிழ்ந்தார். அவ்வாறு பாடப்பெற்ற வரிகளின் தெளிபொருள் விளக்கமாகக் கடலில் எழுகின்ற காய்கதிர்ச்செல்வன், கடலிலேயே மூழ்கும் கவினார்ந்த காட்சியினை இன்றும் நாம் கன்னியாகுமரியில் கண்டு மகிழ்கிறோம். கதிரவன் கடலில் எழுந்து, கடலிலே மூழ்கும் இக்காட்சியினை நாம் கன்னியாகுமரியில் மட்டுமே காணமுடியும்.

"வடக்கில் இமயமலை பாப்பா—
தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா;
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—
அதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா"

என்று இந்திய நாட்டின் எல்லையை இளஞ்சிறுவர் சிறுமியர்க்கும் உணர்த்தும் பாரதியார்,

"நீலத் திரைக்கட லோரத்திலே
—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை
—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே
—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

எனத் தாய்த் தமிழகத்தின் புகழ் பரவிக் கிடந்ததை— சிறந்து விளங்கியதைத் தெளிவுறப் பாடி மகிழ்கிறார்.

தொல் புகழ் கொண்ட தமிழகத்தின் எல்லையினை விளக்கப் புகுந்த பழந்தமிழ்ப் புலவர் பனம்பாரனார்,

" வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம் "

என்றார்.

அண்ணல் காந்தியடிகள் ஒரு சமயம் கன்னியாகுமரிக்கு வந்திருந்த போது, "முக்கடல்கள் இணையும் இடம் இங்கன்றி வேறெங்குமில்லை; கப்பல்கள் வந்து கலவாத கவினார்ந்த துறை இதுவே ." என்று பாராட்டியுள்ளார்.

குமரி, தொன்று தொட்டு வரலாற்றுப் புகழ் உடையது. தென்றலும், தெவிட்டாத தேன்மொழியும் உலவும் தமிழகத்தின் தென் பகுதியில் குமரியாறு, பஃறுளியாறு என்னும் ஆறுகளும், குமரி என்னும் மலையும் ஒரு காலத்தே இருந்தன என்றும், தமிழ் வளர்த்த முதற் சங்கமும் இடைச் சங்கமும் இருந்த காலத்தே அப் பகுதி இருந்ததென்றும், பின்னர் அத் தென்பகுதி கடற்கோளுக்கு இரையாகி மறைந்ததென்றும் தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

"பஃறுளி யாற்றுடன்
பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள . . ."

என்றார் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள். பஃறுளியாறும், பழந்தமிழ்க் குமரிமுனையும் அழிந்துபட்டபின், எஞ்சிய—இப்போதுள்ள குமரி முனையினையே நாம் 'குமரி' என்றும், கன்னியாகுமரி என்றும் வழங்குகிறோம். குமரித் துறையைக் கொண்ட இப்பகுதியை உள்ளடக்கிய மாவட்டத்தையே நாம் 'கன்னியாகுமரி மாவட்டம்' என்கிறோம்.

முன்னர், குமரி மாவட்டத்தின் ஒரு பகுதி (நாஞ்சில் நாடு) பாண்டியர்களால் ஆளப்பட்டு வந்தது. பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குப் பிறகு அது புறத்தாய நாடு, நாஞ்சில் குடியரசு, வேணாடு என முப்பிரிவாயிற்று. இன்றையக் கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும் புறத்தாய நாடு என்றும், இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகத்தீசுரம், தோவாளை வட்டங்களில் புறத்தாய நாடு நீங்கிய பகுதிகள் நாஞ்சில் குடியரசு என்றும், இன்றையக் கல்குளம், விளவங்கோடு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டது வேணாடு என்றும் வழங்கப்பட்டு வந்தன.

தொன்மைச் சேர மரபினர் வேணாட்டை ஆண்டு வந்தனர்; நாஞ்சில் குடியரசும், அதனைச் சார்ந்த புறத்தாய நாடும், பல்வேறு படையெடுப்புக்களுக்கு இலக்காயின. சோழர்கள், பாண்டியர்கள், விஜய நகரத்து வேந்தர்கள் ஆகியோர் இப் பகுதிகளில் ஆட்சி புரிந்துள்ளனர். பின்னர் 18-ஆம் நூற்றாண்டில் இப் பகுதி ஆர்க்காட்டு நவாப்பின் ஆட்சிக்கு உட்பட்டது. அவன் இதனை,



வேணாட்டு வேந்தர்க்குப் பரிசிலாக வழங்கினான். அதிலிருந்து இப்பகுதி வேணாட்டுடன் சேர்ந்து, அகண்ட திருவிதாங்கூர் நாட்டிலும் இணைந்தது.

பின்னர் மொழிவழி நாட்டமைப்பில் பெரு வேட்கை கொண்ட அப்பகுதி மக்கள், உரிமைக் கிளர்ச்சி தொடங்கினர். பேரறிஞர் அண்ணா அதனை ஆதரித்து ஆணையிட்டதற்கிணங்க, பல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். அதன் பயனாக, 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள், இப்பகுதி திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் பிறந்தது. ஆம்! கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இப்போது பதினாறு வயதாகிறது.

குமரி மாவட்டத்தின் வடக்கிலும், வடகிழக்கிலும் திருநெல்வேலி மாவட்டமும், வடமேற்கில் கேரள மாநிலமும், மேற்கிலும் கிழக்கிலும் நீலக் கருங்கடல்களும் எல்லைகளாக உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டக் கடலோர மணல்களில் 'இல்மனைட்'டும், 'மோனஸைட்'டும் கிடைக்கின்றன. இங்குக் கிடைக்கும் 'மோனஸைட்'டில் தோரியம் மிகுதியுள்ளது. இந்தியாவிலேயே இல்மனைட் கிடைக்கும் மாநிலங்கள் இரண்டு: ஒன்று கேரளா; இன்னொன்று தமிழ்நாடு; அதுவும் குமரி மாவட்டம்தான்! கார்னெட் மணல், கல்குரியஸ், சுண்ணாம்புக் கற்கள் முதலியனவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருமளவில் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில் ரப்பர்க் காடுகள் உள்ள மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமே.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோட்டாறு, வடசேரி, இரணியல் முதலான இடங்களில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் கயிறு பல அந்நிய நாடுகளுக்கும், அயல் மாநிலங்களுக்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கையெழில் கொழிக்கும் மாவட்டம். எனினும், தமிழ்நாட்டிலேயே மிகச் சின்னஞ் சிறிய மாவட்டம் இந்தக் கன்னியாகுமரி மாவட்டமே. இந்த மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 1,665 ச.கி.மீ. இதில் பயிர் செய்யப்படுகிற பரப்பு 2,01,075 ஏக்கர்; காடுகளின் பரப்பு 1,25,712 ஏக்கர்; மேய்ச்சல் தரை 3,071 ஏக்கர்; மாவட்டத்தின் சராசரி மழை அளவு 1,326 மி.மீ. இங்குப் பருவ மழை தொடங்குவதைச் 'சாரல் தொடங்கிவிட்டது' என்று குறிப்பிடுவார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மக்கள் தொகை 99,70,000;

இவர்களில் 5,04,000 ஆண்கள்; எஞ்சியோர் பெண்கள். இங்கு, எழுத்தறிவு பெற்றவர்கள் ஏறத்தாழ 10 இலட்சம் பேர். இம்மாவட்டம் தமிழகத்திலேயே மிகச் சின்னஞ் சிறிய மாவட்டம் என்றாலும், கல்வியறிவு பெற்றவர் விழுக்காடு அதிகமாக உள்ள மாவட்டமும் இதுதான் என்பது குறிப்பிடத் தக்கது.

கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீசுரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மலைகளில் குறிப்பிடத் தக்கவை அசம்புமலை, மகேந்திர மலை, மருந்துவாழ் மலை, இரண்டாம் வரிமலை ஆகியன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க முக்கியமான ஆறுகள், பறளையாறு, தாமிரபரணி, கோதையாறு, பழையாறு, முல்லையாறு, வள்ளியாறு ஆகியன.

6.17 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கியத் துறைமுகங்கள், குளச்சல், தேங்காய்ப்பட்டினம், மணக்குடி, வீபுரம், கோவளம் ஆகியன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைகளில் தேயிலை, காப்பி, தென்னை, மிளகு முதலியன பயிர் செய்யப்படுகின்றன. பள்ளத்தாக்குப் பகுதிகளில் பாக்கு, நெல், வாழை முதலியன பயிர் செய்யப்படுகின்றன. மலைச் சரிவுகளில் மரவள்ளிக் கிழங்கும், சமவெளிப் பகுதிகளில் நெல், மரவள்ளிக் கிழங்கு, தென்னை, காய்கறி முதலியனவும் பயிர் செய்யப்படுகின்றன. கிணற்றுப் பாசனத்தால் வாழை, ராகி, மிளகாய், புகையிலை முதலியன விளைவிக்கப்படுகின்றன. ஏராளமான பழத் தோட்டங்களும் உள்ளன. கூட்டுறவுத் துறையில் மார்த்தாண்டத்தில் அன்னாசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை நிறுவத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

முக்கடல்கள் கூடும் மூவாச் சிறப்புப் பெற்ற கன்னியாகுமரி மாவட்டம், மா, பலா, வாழை என்னும் முக்கனிகளையும், எக்காலமும் தந்து மகிழ்ஊட்டும் ஏற்றமிக்க மாவட்டமுமாகும்.

எலும்புக் கூட்டின் இன்னிசை

சுடுகாடு!

மண்டையோடுகளும், எலும்புகளும் சிதறிக் கிடக்கின்றன. பாம்புப் புற்றும், பட்டமரமும் தென்படுகின்றன. அம்மரத்தில் ஆந்தை ஒன்று வட்டவிழிகளைக் காட்டி ஓலமிடுகின்றன. ஒரே இருட்டு. பயங்கரமான சூழ்நிலை.

திடீரென்று மெய்சிலிர்க்க வைக்கும் மரண ஓலம். மங்கிய ஒளியில் எலும்பு மனிதர்கள் மூன்று பேர் காட்சி தருகிறார்கள். எங்கிருந்தோ ஓர் இசை மெல்லக் கேட்கிறது. உற்றுப் பார்த்தால், முதல் எலும்பு மனிதன் பிடில் வாசித்துக் கொண்டு பாடுவது நன்கு தெரிகிறது. இரண்டாவது எலும்பு மனிதன் ஜம்மென்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பாட்டுக்கேற்றபடி காலில் தாளம்போட்டுக் கொண்டே மேளம் வாசிக்கிறார். மூன்றுமவர் சிதார் வாசிக்கிறார் மிக இனிமையாக.



வெறும் எலும்புக்கூடு உயிருள்ளமனிதனைப்போலத் தாடைகளை அசைத்துப்பாடி, இசை எழுப்பும் இந்தக் காட்சியைச் சென்னை மருத்துவக் கண்காட்சியில் கண்டு களித்தனர்.

இதனைஏற்பாடு செய்தவர்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஐவர். மருத்துவக் கல்லூரியில் பரிசோதனைக்காக உள்ள எலும்புக் கூடுகளை வைத்தே இந்தப் பேய்களின் இன்னிசைக் கச்சேரியை உருவாக்கி யிருக்கிறார்கள். இதை அமைக்க நான்கு நாட்கள் பிடித்ததாம். இது பொம்மலாட்டம் போல மின்சாரத்தால் இயங்குகிறது. ஒரு மின்சாரப் பொத்தானை அழுத்தினால், மூன்று எலும்புக் கூடுகளும் இயங்குகின்றன. இதனை உருவாக்க ஆன செலவு ரூ. 500.

மாணவர் திறமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் இது போன்ற காட்சி தஞ்சை, மதுரை மருத்துவக் கண்காட்சிகளில் காண்பிக்கப்பட்டு பாராட்டுதல்கள் பெற்றுள்ளன. இக்காட்சிகளில் நடித்தவை, ஆங்காங்குள்ள எலும்புக் கூடுகளே.

சமதர்மம் மலர, சமுதாயம் செழிக்க முதல்வர் கலைஞர் அளித்த 1972-73 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை

வெற்றிமாலை, நியாயத்தின்
கழுத்தில் விழுந்தே
தீரும் என்பதற்கேற்ப
இந்தியத் திருநாடும்—
உரிமை முழக்கம் தொடக்
கத்திலே அலட்சியப்படுத்தப்
பட்டாலும் ஒருநாள் அதற்
கான உயர்ந்த மரியாதை
கிடைத்தே தீரும் என்பதற்கு
அடையாளமாகப் புதிய
வங்கதேசமும்—

உலக அரங்கில் கம்பீரமாகத் தலைதூக்கிப் புன்னகை சிந்தும் எழுச்சிமிகு காட்சி கண்டு இதயம் பூரித்தவாறு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பேரவையின் சார்பில் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் திருமுன் வைத்து, அவர்களின் பேராதரவை என்றும் போல் இன்றும் இறைஞ்சி நிற்கின்றேன்.

1972–73-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும், 1970–71-ஆம் ஆண்டின் கணக்குகளையும், 1971–72-ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளையும், இன்று உங்கள் பால் வழங்குவதில் உவகையடைகிறேன்.

நடந்து முடிந்த போரில் கிழக்கு வங்கத்தின் குரலுக்கு ஜனநாயக உணர்வோடு காது கொடுத்து, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் செயல்பட்ட திறனையும், இந்தியத் தளபதிகள், வீரர்கள் காட்டிய வியத்தகு ஆற்றலையும் எத்தனைமுறை இந்த அவையில் பாராட்டிப் புகழ்ந்திடினும் தெவிட்டுவதே இல்லை.

நாட்டுப் பாதுகாப்பிற்கு நமது மாநிலத் தமிழ் மறவர்கள் சிந்திய இரத்தம்—மாநில அரசின் மூலம் மாநில மக்கள் எல்லா வகையிலும் அளித்த ஆதரவு, இந்திய ஒருமைப்பாட்டில், தமிழகத்திற்கு உள்ள உளமார்ந்த நம்பிக்கையின் அடையாளங்களாகும்.

மூன்று மாத கால அளவில் 3·30 கோடி ரூபாய் நாட்டுப் பாதுகாப்பு நிதியாகத் திரட்டியிருப்பதும், அதற்குத் தமிழ் மக்கள் மனமுவந்து அள்ளித் தந்திருப்பதும், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் நமது ஒன்றுபட்ட தேசிய முழக்கம், எதிரியின் செவிப்பறையைக் கிழித்திடச் செய்யும் என்பதற்கு மற்றுமொரு உதாரணமாகும்.

பகைப்புலத்தை வேரறுப்பதில் இந்திய மக்கள் காட்டிய ஒற்றுமை மேலும் வலுப்பெற வேண்டுமென்பதில் இந்த அரசு தணியாத ஆர்வம் கொண்டுள்ளது. அதே நேரத்தில், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்திய ஜனநாயகத்தின் வலிமை என்ற பேருண்மையை யாரும் மறந்துவிடக்கூடாது. ஒற்றுமை என்றால் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று பொருளல்ல. ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் பல்வேறு கருத்துக்களுக்கும், பல்வேறு கொள்கைகளுக்கும் சுதந்தரமளிக்கப்பட வேண்டும். இந்த நாடு சமதர்மம், ஜனநாயகம் மலர வேண்டியதை முழு மனத்துடன் ஒப்புக் கொண்டாலும், அந்த நோக்கத்தை எந்த வழி வகைகளில் இந்நாட்டின் பல பகுதிகளிலும் எய்திடுவது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்யும். இந்தியாவின் பல மாநிலங்களும் ஒரே வழியில்தான் செயல்பட வேண்டுமென்றும், அறநெறி பிறழாது வேறு வழிகளில் சென்று இந்த நன்னோக்கத்தை அடைந்திட முயற்சித்தல் கூடாதென்றும் தடைக் கற்களைப் பரப்புவது, நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஏற்றதாக அமையாது. இந்த உண்மையை உள்ளத்தில் நிறுத்தி, பரந்த இந்தியப் பூபாகத்தின் எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனைகளை உலவவிடுவது இன்றியமையாத ஒன்று என்பது, இந்த நிதிநிலை அறிக்கையின் முன்னுரைப் பகுதியாக அமைகிறது.



1971–72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அவை முன் வைத்து நான் உரையாற்றுங்கால், சமதர்ம வளங்கொழு சமுதாயத்தினை ஏற்படுத்துவது நமது பொறுப்பாகும் எனச் சுட்டிக் காட்டினேன். சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும். சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம், புண்ணை மறைத்துப் பொன்துகில் அணிந்து கொள்கிற கதையாக முடிந்துவிடும்.

பொருளாதாரத் துறையில் மட்டும் நவீன கால முன்னேற்றங்களை நடமாட விட்டுவிட்டுச் சமுதாயத் துறையில் பகுத்தறிவற்ற கொள்கைகளைப் படமெடுத்தாட அனுமதித்து விட்டால், சமதர்மம், புயல் நுழைந்த பூங்காவாகத்தான் தோற்றமளிக்கும்.

இந்தக் கருத்துக்களை நெஞ்சத்துச் சித்திரங்களாக்கி, நாடு வாழ, நலிவு தீர, சமுதாயக் கேடு களைய, 1967-ஆம் ஆண்டு தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் பொறுப்பேற்று, தொடர்ந்து 1971-லும் மக்களின் பேராதரவோடு பயணம் நடத்தும் இந்தத் தமிழக அரசு, தேர்தல் காலத்து வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட வேண்டியவை என்று கருதாமல், அவைகளைக் கல்மேல் எழுத்தெனக் கொண்டு இயன்ற

வரையில் கடமை ஆற்றி வருறது.

*சென்னை ராஜ்யம்
சென்றது;
தமிழ்நாடு எனும்பெயர்
வென்றது;
*எங்கும் எதிலும்
தமிழ்;
இறைவனுறையும்
இடத்திலும் தமிழ்;
*சுயமரியாதைச்சீர்திருத்தத்
திருமணங்கள் சட்டச்
சம்மதம் பெற்றது;
*அர்ச்சகர் நியமனம்,
தகுதி அடிப்படையில்
அனைவர்க்கும் பொருந்துமெனக்
கூறியது;



*பின்தங்கியோர் நலக்குழு;

*பிச்சைக்காரர் மறுவாழ்வு;

*குடிசை மாற்று வாரியம்;

*குடிநீர் வாரியம்;

*கல்லூரிப் புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி;

*நில உச்ச வரம்பும்; விதி விலக்குகள் நீக்கமும்;

*விவசாயத் தொழிலாளருக்குக் குடியிருப்பு மனைகள்; நியாயக்கூலி நிர்ணயம்;

*ஏழையெளியோர், அரிசனங்கள், பின்தங்கிய மக்களுக்கு இலட்சக் கணக்கில் நிலப்பட்டா—மனைப் பட்டா;

*பேருந்துகள் உச்சவரம்பு—அதனைத் தொடர்ந்து நாட்டுடைமையாக்கும் திட்டம்;

*இளைஞர் அணி வாயிலாகப் பட்டதாரி மாணவர்க்கு வேலை வாய்ப்பு; பட்டிதொட்டி எல்லாம் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகள்;

*உணவுக் கட்டுப்பாடு நீக்கம்;

*ஊரெல்லாம் மின்னொளி மயம்;

*மாநிலத் திட்டக் குழு;

*நிருவாகச் சீர்திருத்தக் குழு;

*மத்திய-மாநில உறவு பற்றி ஆராய மற்றுமோர் குழு;

*காவலர்க்குச் சலுகைகள்;

*கைத்தறியாளர் துயர் நீக்கத் திட்டங்கள்;

*தொழிலாளர் நலநிதி அமைப்பு;

*ஆசிரியர்களுக்குச் சலுகைகள், வேலை வாய்ப்பு;

*அரசு அலுவலாளர்க்கு ஊதிய உயர்வு;

*அரசியல் விருப்பு வெறுப்பின்றி ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தியாகிகளுக்கு மாதாந்தர நிதி உதவி;

இவைகளன்றியில் ஒவ்வொரு துறையின் சார்பாகவும், ஆற்றிய பணிகளை எண்ணிப் பார்த்தும், ஆற்றிட வேண்டிய பணிகளை எடுத்துரைத்தும், மேலும் சில குறிப்புகளைத் தருவதற்கு முன்பு, நமது மாநில நிதி நிலை பற்றிக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

வரவு-செலவுத் திட்டம்

1971—72 திருத்த வரவு-செலவுத் திட்டத்தை அளித்த போது, வருவாய்க் கணக்கில் ரூபாய் 342·65 கோடி வரவு இருக்குமென்றும், ரூபாய் 358·52 கோடி செலவிருக்குமென்றும், இதன் விளைவாக வருவாய் பற்றுக்குறை ரூபாய் 15·87 கோடி இருக்குமென்றும் நாம் கருதினோம். இப்போதுள்ள நிலைமையில், வரவு ரூபாய் 377·41 கோடியாக இருக்குமென்றும், செலவு ரூபாய் 375·67 கோடியாக இருக்குமென்றும், வருவாய் உபரி ரூபாய் 1·74 கோடியாக இருக்குமென்றும் கருதப்படுகிறது.

பேரவையின்முன் வைக்கப்படும் 1972—73 வரவு-செலவுத் திட்டப்படி, வருவாய்க் கணக்கில் செலவு ரூபாய் 394·78 கோடியாகவும், வரவு ரூபாய் 397·27 கோடியாகவும் இருக்குமென்றும், இதன் விளைவாக வருவாய் உபரி ரூபாய் 2·49 கோடி கிடைக்குமென்றும் கருதியுள்ளோம்.

கடன் சுமை

மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் சுமையினால் நமக்கு ஏற்படுகிற இடர்ப்பாட்டினையும், இப்பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972—73-ஆம் ஆண்டில் திட்ட வகையிலும், பிற வகையிலும் மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் கடன் தொகை ரூபாய் 45·80 கோடியாகும். ஆனால், இதே ஆண்டில் மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை ரூபாய் 53·38 கோடியாகும். மத்தியத் அரசிடமிருந்து நாம் பெறுவதைவிட, நாம் திருப்பித் தருகிற தொகை ரூபாய் 8 கோடி கூடுதலாக இருக்கிறது. எனவே, மூலதனக் கணக்கில் வளர்ச்சிப் பணிகளுக்கான செலவு முழுவதையும் இம் மாநில அரசின் நிதியிலிருந்தே செய்ய வேண்டி வருகிறது. வட்டி வீதத்தைக் குறைத்தும், கடன் தவணைக் கால அளவை நீட்டித்தும், கடனைத் திருப்பித் தருவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்று நாம் மத்திய அரசைப் பலகாலம் வேண்டி வருகிறோம். மாநில அரசின் இந்த நியாயமான முறையீட்டுக்கு மத்திய அரசு இணங்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திட்டச் செலவு அதிகப் பற்று

1968—69-ஆம் ஆண்டில் ரூபாய் 93·49 கோடி அளவுக்கு நாம் திட்டத்தை நிறைவேற்றியிருக்க, 1969—70-ஆம் ஆண்டில் ரூபாய் 72·00 கோடி நாம் செலவிடுவதற்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வாறு குறைவான தொகை ஒதுக்கினால், வளர்ச்சி வேகம் தடைப்பட்டுப் பின்னோக்கிப் போகும் என நாம் சுட்டிக் காட்டினோம். எனினும், 1970—71-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 79·30 கோடியாகவும், 1971—72-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 80·20 கோடியாகவும் அமைக்க வேண்டுமென மத்திய அரசு நம்மை வலியுறுத்தியது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூபாய் 575 கோடியாவது செலவிட வேண்டுமெனவும், ஆண்டொன்றுக்கு ரூபாய் 100 கோடி முதல் ரூபாய் 125 கோடி அளவிலேனும் செலவிட வேண்டுமெனவும், நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். இதற்காக மத்திய அரசு நமக்கு அளிக்கும் நிதி உதவியாகிய ரூபாய் 202 கோடியை ரூபாய் 250 கோடியாக உயர்த்துவது; நிதி ஆணைக்குழு நமக்கிழைத்த அநீதியைப் போக்குவது; கடன் தவணைக் கால அளவை மாற்றி அமைப்பது; இவைபற்றி நாம் விடுத்த வேண்டுகோளைப் பரிவுடன் கருதிப் பார்க்க வேண்டுமென மத்திய அரசை நாம் வேண்டினோம். இக் கோரிக்கைகள் மத்திய அரசின் ஆய்வில் இருப்பதை யொட்டித்தான், 1969—70-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 87·05 கோடி அளவிலும் 1970—71-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 97·45 கோடி அளவிலும், நிறைவேற்றி, 1971—72-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 114·98 கோடி அளவிலும் செயல்படுத்தி வருகிறோம். இதற்காக நம்மால் முடிந்தவரை கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். அதே நேரத்தில், திட்டத்தின் கீழ் வராத செலவினங்களை நாம் எவ்வகையிலும் உயர்த்திவிடவில்லை. ஊதிய ஆணைக்குழு பரிவுரைகளின் விளைவினை நீக்கி விட்டுப் பார்த்தால், திட்டத்தின் கீழ் வராத செலவின் அளவு, கடந்த சில ஆண்டுகளாக, 1968—69-ஆம் ஆண்டில் இருந்ததைவிடப் பெருமளவு உயர்வு இன்றி இருப்பதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம். எனவே, செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் நம்மால் ஆனதைச் செய்துள்ள இந்நிலையில், இந்த அளவுத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றியது நியாயமேயாகும். நாம் எதிர்பார்த்த இவ்வுதவி கிட்டாத சூழ்நிலையில், திட்டச் செலவின் விளைவாகவே ரிசர்வ் வங்கியிடம் நமக்கு அதிகப்பற்று ஏற்பட்டிருக்கிறது. நடப்பாண்டு திட்ட அளவினைக் குறித்தும், நமது பொதுவான நிதிநிலைமையினைக் குறித்தும், மத்திய நிதி அமைச்சருடனும் மத்திய திட்ட அமைச்சருடனும் திட்ட ஆணைக் குழுவுடனும் கடந்த டிசம்பர்த் திங்களில் நான் கலந்து பேசினேன்; இம் மாநிலத்தின் 1972—73-ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவு ரூபாய் 117 கோடியாக இருக்கவேண்டுமென்றும், நடப்பாண்டுத் திட்டச் செலவு ரூபாய் 114—115 கோடியாக இருக்கலாம் என்றும் அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப, உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தின்படி, நடப்பாண்டில் ரூபாய் 114·98 கோடி திட்டத்திற்கும், 1972—73ஆம் ஆண்டில் ரூபாய் 116·63 கோடி திட்டத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அப் பேச்சுக்களின் அடிப்படையில், 1971—72-ஆம் ஆண்டிற்குரிய திட்டத்திற்குத் தேவையான செலவின் விளைவாக ஆகும் அதிகப்பற்றைச் சரி செய்ய மத்திய அரசின் வழி வகை முன்பணமாக ரூபாய் 66·33 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இதில், ரூபாய் 1·99 கோடி இந்த ஆண்டிலேயே மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். 1972—73-ல் ரூபாய் 9·95 கோடி திருப்பிக் கொடுக்கப்படும். அசல் வகையிலும் வட்டி வகையிலும் இந்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய இந்தத் தொகைக்காக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை

பார் முழுதும் ஏர் முனையில் எனினும் அதனை ஏற்றமிகு முனையாக ஆக்கப் பசுமைப் புரட்சி நடத்துகிறோம். கவின் பெறும் வசதிகளை விரிவுபடுத்தியும், பாசன வாய்ப்புகள், உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லிகள் முதலியன எளிதாகக் கிட்டும் வண்ணம் செயல்பட்டும் வருகிறோம். மிகு பயன் தரும் பயிர் வகைகள் நடப்பாண்டில் 57 இலட்சம் ஏக்கரில் விளைவிக்கப்பட்டுள்ளன. 1972—73-ஆம் ஆண்டின் இதற்கான இலக்கு 66 இலட்சம் ஏக்கராகும். சத்துணவில் சிறப்பிடம் பெற்றுள்ளவைகளில் ஒன்றான புரதம் மிகுந்த பயறு வகைகளை 1967—70-ஆம் ஆண்டில் 11 இலட்சம் ஏக்கரில்

விளைவித்ததற்கு மாருக, 1971–72-ஆம் ஆண்டில் 14 இலட்சம் ஏக்கரில் விளைவித்து வருகிருேம். குடுமியா மலையில் பயறு விதைப் பண்ணை ஒன்றைத் தொடங்கியுள்ளோம். பயறு உற்பத்தி பெருகுமேயாளுல், நமது மாநிலத்தில் அதன் விலை கட்டுப்படுத்தப்பட வழி ஏற்படும்.

வேளாண்மையில் புதிய முறைகள்

உழவர் பிரச்சினைகளை ஆராய்ச்சியாளர்களுக்கு எடுத்துரைத்து, ஆராய்ச்சியாளர்கள் கண்ட புதிய முறைகளை உழவர்களிடம் அறிமுகப்படுத்துவதே வேளாண்மை விரைந்து முன்னேறுவதற்கான சிறந்த வழியாகும். குடுமியா மலையிலும், ஏனைய ஆராய்ச்சி நிலையங்களிலும் இந்தப் பணி தீவிரமாக்கப்படும். நெல், பருத்தி, பயறு ஆகியவற்றின் புதிய வகைகளின் மேம்பாட்டில் முனைப்புடன் பணி தொடங்கிவிட்டது. நெட்டிழைப் பருத்தியின் வளர்ச்சியில் இப் பல்கலைக் கழகம் விரைந்து கவனம் செலுத்தி அந்தப் பருத்தியின் இறக்குமதியையே நாம் பெரிதும் நம்பியிருப்பதை மட்டுப்படுத்துமெனக் கருதுகிறேன்.

வேளாண்மைத் தொழிற் கழகம்

வேளாண்மைத் தொழிற் கழகம் ஏற்படுத்தியுள்ள பணி நிலையங்களின் வளர்ச்சி மகிழத்தக்க வகையில் அமைந்துள்ளது. இதுவரையில் டிராக்டர் பழுது பார்க்கும் நிலையங்கள் ஐந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மைத் தொழிற் கழகம் மூலமாக 1971–72-ல் இதுவரை 1,080 டிராக்டர்கள் கொடுக்கப்படும். பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிப்போடு மட்டுமல்லாமல், பல்வேறு வேளாண்மை பயிரிடு பொருட்கள் வழங்குவதிலும் இக் கழகம் கவனம் செலுத்தக் கருதியுள்ளது.

வேளாண்மைக் கடன் வசதி

கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக்கென 1966–67-ல் ரூபாய் 31·41 கோடியும், 1970–71-ல் ரூபாய் 44·43 கோடியும் குறுகிய கால, மத்திய காலக்கடன்வசதி அளித்துள்ளதை ஒப்புநோக்கின், நமது சாதனையின் வெற்றி வெள்ளிடைமலையென விளங்கிடும். 1971–72-ல் ரூபாய் 50 கோடியும், 1972–73ல் ரூபாய் 61 கோடியும் கடன் வசதியளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாக வழங்கப்பெறும் நீண்ட காலக் கடன் வசதி 1966–67-ல் ரூபாய் மூன்று கோடி அளவிலிருந்து 1968–69ல் ரூபாய் 15·48 கோடியாகவும், 1970–71-ல் ரூபாய் 22·66 கோடியாகவும் உயர்ந்தது; 1971–72-ல் ரூபாய் 29·40 கோடிக்கு உயரும். 1972–73-ல் அதற்கு மேலும் உயருமென எதிர்பார்க்கிருேம்.

கால்நடை வளர்ப்பு

கால்நடை மருத்துவப் பணியின் சீரமைந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. 1972–73-ல் பத்து புதியகால்நடை மருந்தகங்கள் உருவாகும். ஒருசில மாவட்டங்களில் கால்நடை வளர்ச்சிச் சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். கோழிப் பண்ணையும், பன்றி வளர்ப்பும் சீராக விரைந்து நடைபெறுகிறது. 1970–71-ல் ரூபாய் 3·06 கோடி என்று இருந்ததற்கு மாருக, 1972–73-ல் கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பில் ரூபாய் 4·30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பால் வழங்கு திட்டம்

பால் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தியும், பால் சேகரிப்பு, பாலைப் பதப்படுத்துதல், எடுத்துச் செல்லுதல் போன்றவற்றில் வசதிகளை ஏற்படுத்தியும் நகரங்களின் கூடுதல் பால் தேவையை நிறைவு செய்து கிராமப் பகுதிகளில் வருமானத்தைப் பெருக்கத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், இந்தியப் பால் பண்ணைக் கழகம் இம் மாநிலத்தில் பால்பண்ணைச் சீரமைப்பிற்கு ரூபாய் 8·87 கோடி ஒதுக்கியுள்ளது, இது பால்பண்ணைக்குரிய இயல்பான திட்டங்களுக்கு மேற்பட்ட சிறப்புத் திட்டமாகும். 1967–68-ல் 33,000 லிட்டர் பாலை நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்த மாதவரம் பால் பண்ணை, இப்போது 70,000 லிட்டர் என்ற நிலையை எய்தியுள்ளது. பால் உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின்கீழ், சென்னை மாநகருக்கு வழங்கும் பால் அளவு, மூன்று இலட்சம் லிட்டர்களாக ஐந்தாண்டுளில் உயர்த்தப்படும். ரூபாய் 55 இலட்சம் செலவில் சென்னையில் இரண்டாவது பால்பண்ணை அமைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பால்பண்ணைத் தொழில் விரிவடைவதன்மூலம், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், கோவை, நீலகிரி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் பகுதிகளில் உள்ள குடியானவர்களுக்குக் கணிசமான கூடுதல் வருவாய் கிடைக்கும். இத்திட்டங்கள் செம்மையாகச் செயல்படுத்தத் தமிழ்நாடு பால் பண்ணைக் கழகம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

பாசன வசதி

பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு, 1966–67-ல் ரூபாய் 7·89 கோடியிலிருந்து 1971–72-ல் ரூபாய் 14·23 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது 1972–73-ல் ரூபாய் 14·28 கோடியாக அமையும். இந்த நிதியைக் கொண்டு காவேரி, அமராவதி, வைகை, தாமிரபரணி போன்ற ஆற்றுப் பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பு வேகமாகச் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளைத் தக்க முறையில் மாற்றி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆய்ந்து செயல்பட்டு வருகிறது. தஞ்சைப் பாசன ஏற்பாட்டைப் புதுமைப் படுத்தும் நமது செயற்குறிப்புகளுக்கு உலக வங்கி மதிப்பீட்டுத் தூதுக் குழுவினர் ஒப்புதல் அளித்திருந்த போதிலும், மத்திய அரசு, தொழில் நுட்ப அனுமதியை வழங்கியிருந்த போதிலும், நாம் எண்ணியவாறு புதுமைப் படுத்தும் பணிகள் நடைபெற முடியாமல் தடைப்பட்டு விட்டன. வேளாண்மை உற்பத்தி நலனையும், நீர் வளத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதையும் எண்ணிப்பாராமல் இன்றியமையாத இத் திட்டத்தின் செலவை ஒதுக்கி வைப்பது, பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் விவேகமுடையதல்ல என்பதைப் பன்முறையெடுத்துச் சொல்லியிருக்கிருேம். இத்தகைய நேரங்களில் மத்திய அரசு தலையிட்டு மாநிலங்களுக்கிடையே உள்ள தண்ணீர்த் தகராறுகளுக்கு நியாயமான தீர்வு காணவேண்டுமென்றே எவரும் விரும்புவர்.

கங்கை-காவிரி இணைப்பு

மாநிலங்களுக் கிடையில் தண்ணீர்த் தகராறுகள் ஏற்படாமலே இருக்கவும், எழுந்த பிரச்சினைகள் எளிதில் தீர்ந்திட ஏற்ற வழியாகவும், கங்கை நதி தீரத்திலிருந்து காவிரி நதி தீரம் வரையில் வளங்கொழிக்கச் செய்யும் திட்டமாகவும், இந்தியப் பெருநாட்டின் ஒற்றுமைச் சங்கிலியாகவும், காவிரியுடன் கங்கையை இணைக்கும் மகத்தான திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் மத்தியத்திட்ட அமைச்சருடனும், நீர்ப் பாசனத்துறை அமைச்சருனுடம், நான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். அந்த மிகப் பெரிய திட்டத்தில் கங்கை காவிரி இணைப்புக் கிடையே கோதாவரி, கிருஷ்ணு போன்ற நதிகளும் இணைக்கப்படும். முதலில் காவிரியுடன் அந்த நதிகளை இணைத்தும், அதேபோல வடக்கே மகாநதி போன்றவைகளைக்கங்கையுடன் இணைத்தும், அதன் தொடர்பாகக் கங்கை—காவிரி நதியை இணைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டால், படிப்படியாகத் தொடர்புடைய மாநிலங்கள் பயன்பெற்று, ஓரிடத்தில் வெள்ளப்பெருக்கும் பிறிதோரிடத்தில் வறட்சியும் என்கிற ஏற்றத்தாழ்வான நிலையும் மாறிடக் கூடும். அதற்கான ஆரம்பப் பணிகளை மத்திய அரசு மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய பாசனத் திட்டங்கள்

மாநிலம் முழுவதும் பாசன வசதி பெறும் பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தவும், புதுப் பாசனம் பெறும் ஆயக்கட்டுகளைப் பெருக்கிடவும் தொடங்கப்பட்ட சின்னுறு, பரப்பலாறு, பாலாறு—பொரந்தலாறு, தண்டரை, நந்தன் கால்வாய், கருப்பாநதி, பொன்னணியாறு, பிளவுக்கல் ஆகிய திட்டங்களுக்கு, 1772–73-ஆம் ஆண்டு ரூபாய் 3·90 கோடி செலவழிக்கப்பட இருக்கிறது; இது உட்பட பாசன வசதிகள் ஏற்படுத்த ரூபாய் 8·17 கோடி மூலதனக் கணக்கில் திட்டத்தில் செலவிடப்பட இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



மின் வசதி

மின்னெளி வசதி இல்லாத கிராமங்களே தமிழகத்தில் இல்லாத நிலைமையை உருவாக்குவோம் என்று இந்த அரசு மேற்கொண்ட சூளுரையின் அடிப்படையில் 1971–72-ஆம் ஆண்டு இறுதியில் மின்வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 50,900 என இருக்குமென மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கொள்கிறேன். 1972–73-ஆம் ஆண்டு இறுதியில் நமது குறிக்கோள் தமிழகம் முழுவதும் பெருமளவில் நிறைவேறிவிடும்.

அதிக அளவு மின்சார உற்பத்திக்கான திட்டங்களை நாம் உடனடியாக வகுக்க வேண்டியுள்ளது. தூத்துக்குடியில் அனல் மின்நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் நம்மிடம் உள்ளது. இத் திட்டத்திற்கு விரைவில் இந்திய அரசு அனுமதி வழங்கும் என நம்புகிருேம். நெய்வேலி அனல் மின் உற்பத்தி இயந்திரச்சாலையை முழுவதும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலை இன்றியமையாததாகிறது. கல்பாக்கம் திட்டத்தின் வேலைகளையும் இந்திய அரசு விரைவுபடுத்துமென நம்புகிறேன். நமது மின்னிணைப்பில் 100 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளும் வகையில் பாண்டியாறு-புன்னப்புழா திட்டத்திற்குக் காலம் தாழ்த்தாது ஒப்புதல் அளிக்குமாறு கேரள அரசை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகள், போக்குவரத்து வசதி

வரும் ஆண்டில், சாலை மேம்பாட்டிற்கான புதிய செலவுக்காக ரூபாய் 3·68 கோடிக்கும், சாலைப் பராமரிப்புக்காக ரூபாய் 6·63 கோடிக்கும் வகை செய்துள்ளோம். இது தவிர, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 1971–72-ல் ரூபாய் 5·44 கோடி நம் மாநிலத்தில் செலவிடப்படும். இந் நிதிநிலை அறிக்கையில் அடங்கியுள்ள அர

F4

ஒன்று 1,000 மைல் நீள்முள்ள பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசு மேற்கொள்ளுவது பற்றியதாகும். இதனை இந்த அவை வரவேற்குமென நம்புகிறேன். இந்த அவையின் முன் நான் அறிவிக்க விரும்பும் இன்னொரு முக்கியமான செய்தி, ரூ. 5·33 கோடி செலவாகும் பாம்பன் பாலத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதாகும். இதனையொட்டி, நெடுநாட்களாக நாம் வேண்டிவரும் சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கும் மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்குமென நம்புகிறேன்.



கிராம முன்னேற்றம்

சமதர்ம அரசின் முதன்மையான பணிகளில் ஒன்று, நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வை அகற்றுவதாகும். அந்த அடிப்படையில் நமது அரசு கிராமப்புற முன்னேற்றத்தில், கிராம மக்களின் நல்வாழ்வில் தொய்வில்லாத அக்கறையைத் தொடர்ந்து காட்டிவருகிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி என்பதைப் போல, எல்லாக் கிராமங்களிலும், எல்லா வசதிகளும் இருந்திடச் செய்ய வேண்டுமென்பதே அரசின் குறிக்கோளாகும். பெரும்பாலான கிராமங்களில் இணைப்புச் சாலைகள் இல்லை. குடி நீர் வசதியில்லை. இந்தத் தொல்லை தீரப் பல்லாண்டுக் காலமாகத் தவம் கிடக்கும் பட்டிக்காட்டுப் பாமர மக்களை மகிழச் செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பு சாமான்ய மக்களின் பிரதிநிதிகளான நமக்குத்தான் உண்டு என்பதை நாடறியும். சிற்றூர்கள் அனைத்துக்கும் சீர்மிகு சாலைகள் அமைத்திடவும், குடிநீர் வசதி அளித்திடவும், 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமெனினும், அதனை எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டேயிருந்தால் அந்த நல்ல காரியத்திற்கான தொடக்க விழாவில் கூட, நம்மால் அடியெடுத்து வைக்க முடியாமல் போய்விடும். அந்தப் பயன்மிகு காரியத்தைப் படிப்படியாகச் செய்து முடித்திட வேண்டுமென உறுதி செய்து, முதற்கட்டமாக ஐந்தாண்டுக் காலத்தில் மாநிலம் முழுவதும் 1,500 மக்களும், அதற்கு மேம்பட்டவர்களும் வாழ்கின்ற கிராமங்களை முக்கியச் சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகளை அமைப்பதென்றும், அதற்கிடையே உள்ள சிறிய கிராமங்களை இணைக்கும் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்றுவதென்றும், அதற்காகும் செலவிற்கு மோட்டார் வாகன வரி மீது 10 சத வீதம் உபரி வரி விதிப்பதென்றும் முடிவு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காகக் கிராமச் சாலை வளர்ப்பு நிதியொன்று அமைக்கப்படுகிறது. இதற்கு மேலாக, ஒன்றியங்கள் தங்கள் பகுதியிலுள்ள சிற்றூர்களை இணைப்பதற்கான சாலைகளை அமைப்பதற்காகவும், குடிநீர் வசதியைப் பெருக்குவதற்காகவும் ஊரகத் தீர்வை மேல்வரி (Local Cess sur-charge) 1½ ரூபாய் வரை விதிக்கலாம் என்று இப்போதிருப்பதை 2½ ரூபாய் வரையில் விதிப்பதற்கு ஒன்றியங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். அரசுக்குள்ள நிதிப் பற்றுக்குறையின் காரணமாகவும், அதே நேரத்தில் தீவிரத் திட்டமிட்டு இணைப்புச் சாலை வசதிகளையும், குடிநீர் வசதிகளையும், எல்லாக் கிராமங்களும் பெற வேண்டுமென்பதற்காகவும் இத்தகைய ஏற்பாடு செய்யப்படுகிறது. குடிநீர் வாரியம் செயல்படுத்துகிற நகர் குடிநீர் வழங்கும் திட்டத்தில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியைப் பெறுவது போலவே கிராமப் பகுதி குடிநீர் வழங்கு திட்டத்திற்கும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியை நாடியுள்ளோம்.

மக்கள் நல்வாழ்வு

மக்கள் நலம் பேணுவதற்கும் பொதுவான புறத்தூய்மை அமைவதற்கும் இந்த அரசு எடுக்கும் முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றன — பரவலாக்கப்படுகின்றன — என்பதற்கு எடுத்துக்காட்டாக 1966–67-ஆம் ஆண்டில் ரூபாய் 16·75 கோடி ஒதுக்கீடும், 1971–72-ஆம் ஆண்டில் ரூபாய் 33·38 கோடி ஒதுக்கீடும், 1972–73-ஆம் ஆண்டில் ரூபாய் 34·69 கோடி ஒதுக்கீடும் செய்யப் பட்டிருப்பதை ஒப்பு நோக்கிட வேண்டுகிறேன்.

மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரி மேம்படுத்தும் புதிய ஏற்பாடுகள்—

குடந்தை, ஆத்தூர், திருப்பத்தூர், தென்காசி ஆகிய இடங்களில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைப் பிரிவுகளைக் கட்டுதல்—

தானிப்பாடி, திட்டக்குடி, வள்ளிபுரம், காரைக்குடி, மேட்டூர் அணை ஆகிய இடங்களில் மருத்துவமனைப் படுக்கைகளை அதிகப்படுத்துதல்—

ஆகியவை இந்த ஆண்டு மேற்கொள்ளும் திட்டங்களாகும். இந்தத் துறையில் புதிய வளர்ச்சித் திட்டமொன்றை அறிவிக்க விரும்புகிறேன். மாவட்டக் கழகங்கள் ஏற்கெனவே நடத்தி, ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்த இருநூற்றுக்கு மேற்பட்ட மருந்தகங்களை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்ற ஊராட்சி ஒன்றியங்களின் நீண்டநாள் முறையீட்டை ஏற்றுக் கொண்டு, முதற்கட்டமாக 1972–73-ஆம் ஆண்டில் 45 ஒன்றிய மருந்தகங்களை இந்த அரசு எடுத்துக் கொள்ள முன்வந்துள்ளது.

கல்வி

1967-68-ஆம் ஆண்டு 'கல்வி' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கிய தொகை ரூபாய் 53·56 கோடியென்பதற்கு மாறாக, 1972-73-ஆம் ஆண்டு ரூபாய் 89·85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் முன்னேறியுள்ள நாடுகளின் கல்விச் செழுமையை நமது அறிவுக் கூடங்களில் மணங்கமழ்ந்து மலரச் செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் நிபுணர் குழு ஒன்றினை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழகத்தை விட்டு வெளியேறி வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பல்வேறு நிறுவனங்களில் பலர் பணி புரிகின்றனர். அவர்களில் சிலர் தமிழகத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அழைக்கப்பட்டு, அவர்கள் கற்றுள்ள புதிய மேம்பாட்டு முறைகளை இங்குள்ள நிலையங்களில் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக ஒரு புதிய திட்டத்தை அரசு மேற்கொள்கிறது. அத்தகையோரில் தகுதி படைத்த ஐம்பது பேருக்கு உயர்பணி உதவித்தொகை (Fellowship) அளிக்கப்படும். அதற்குத் தமிழ்நாடு உயர்பணி உதவித்தொகைத் திட்டம் (Tamil Nadu Fellowships Scheme) எனப் பெயர் இடப்படும். ஆறு திங்கள் முதல் ஓராண்டுக் காலம்வரை, அவர்கள் நம் நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் பணியாற்ற இத்திட்டம் வாய்ப்பளிக்கும்.

அரிசன, பிற்பட்ட வகுப்பினர் நலன்

அரசின் மேம்பாட்டுத் திட்டங்களிலே, அரிசன, பிற்பட்ட வகுப்பினரது நலன்களுக்கான திட்டங்கள் முக்கிய இடத்தைத் தொடர்ந்து பெற்று வருகின்றன. 1966–67-ல் ரூபாய் 3·59 கோடி மாநில அரசு ஒதுக்கியிருந்ததற்கு மாறாக, 1972–73-ஆம் ஆண்டில் ரூபாய் 8·41 கோடி அரிசன வகுப்பினர் மேம்பாட்டிற்காக மொத்தம் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதற்கெனத் தனித்த நிதிஒதுக்கம் நிறுத்தப்பட்டுவிட்ட போதிலும், இந்நிதி ஒதுக்கத்தை நாம் செய்துள்ளோம். இவ்வரசு பொறுப்பேற்ற நிலையில் 2,400 அரிசனக் குடியிருப்புகள் மின் வசதி பெற்றிருந்தன ; நாம் எடுத்த தீவிர முயற்சிகளின் பயனாக, இன்று 15,600 அரிசனக் குடியிருப்புகள் மின்னொளி பெற்றுத் திகழ்வதை மகிழ்வுடன் இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். பிற்பட்ட வகுப்பினர் நலன்களுக்காக 1966–67-ல் ரூபாய் 0·91 கோடி மாநில அரசு செலவிட்டதற்குப் பதிலாக, 1972–73-ல் மொத்தம் ரூபாய் 4·68 கோடி செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள்

நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்கள் நலன்களுக்கான திட்டநிதி ஒதுக்கம் 1966–67-ல் ரூபாய் 1·82 கோடியாக இருந்ததற்கு மாறாக, 1971-72-ல் ரூபாய் 2·03 கோடியாக உயர்த்தப் பட்டது ; 1972–73-ல் ரூபாய் 2·34 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. கைத்தறித்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளை அரசு விரைவில் பெற்று, ஆய்ந்து முடிவுகள் எடுக்கும்.

தொழிலாளர் நலன்

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் தொழிலாளர்கள் பிரச்சினையில் உருவாயிற்றெனினும், மாநிலமெங்குமுள்ள தொழிலாளர் நலனில், இந்த அரசு மிகுந்த அனுதாபத்துடன் அக்கறை காட்டி வந்துள்ளது. இந்தியாவின் வேறு பல பகுதிகளோடு ஒப்பிடும் போது, தமிழகத்தில் தொழிலாளர் பிரச்சினைகளில் அரசு கடைபிடித்து வரும் நிதானப் போக்கினை நடுநிலையாளர் உணர்ந்து பாராட்டவே செய்வர். வன்முறையாளர்களும், சமூக விரோதிகளும், சில கிளர்ச்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் போது சட்டம், ஒழுங்கினைக் காத்து அமைதி நிலவிடச் செய்யும் பொறுப்பை இந்த அரசு தட்டிக் கழித்துவிட இயலாது.



கோவையில் மூடப்பட்ட ஐந்து ஆலைகளைத் தொழிலாளர் நலனுக்காக ஏற்கெனவே இந்த அரசு திறந்ததும், அதற்கு முன்பு வேலையின்றிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இரண்டு இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை அளித்ததும், இப்போதும் மூடப்பட்ட ஆலைகளைத் திறந்திட மத்திய அரசோடு வாதாடுவதோடு நில்லாது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மூன்று இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை அளிக்க முன் வந்ததும், ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை அளித்ததும், தொழிலாளர் நலனுக்காகவே கோவை டெக்ஸ்டூல்ஸ், சதர்ன் ஸ்டரக்சரல்ஸ், லாஸ்கோ ஆகிய தொழிற் சாலைகளை அரசு பொறுப்பேற்று நடத்த முன் வந்ததும் அவர்கள்பால் அரசு கொண்டுள்ள அன்பின் அடையாளங்களேயாகும்.

பொருளாதாரக் குவியல் முறையை அகற்றிச் சமதர்ம சமுதாயத்தை நிறுவிட, கூட்டுறவுத் துறை, அரசுத் துறைகளில் தொழில் வளர்ச்சி காணவேண்டும், இந்தத் துறைகளில் நடைபெறும் தொழில்களில், தொழிலாளர்களுக்கு நிருவாகத்திலும், பங்கு மூலதனத்திலும் இடம் அளித்து நிருவாகிகளும், தொழிலாளிகளும் சேர்ந்து தொழிலை நிருவகிப்பதற்கும் வழிவகை காண்பது ஒரு புதிய கொள்கைத் திட்டமாகும். இதில் தொழில் சீருறவும், தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படவுமான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஒரு குழு நியமிக்கப்படும்.

தொழில் வளம்

தமிழக அரசு இடைவிடாது எடுத்துள்ள முயற்சிகளின் பயனாக மத்திய அரசு, சேலம் உருக்காலைக்கான ஆக்கப்பணிகளை விரைவு படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதற்கு நன்றி கூறுவதோடு, சேலம் திட்டத்திற்குத் தடைகளாக இடையில் வந்த சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதற்கும் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் மாநில அரசின் தொழிற்

கொள்கையும், தொழில் வளர்ச்சிக்கு அரசு எடுத்த நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றிகளும் விரிவாக இடம்பெற்றதைப் பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1971-ஆம் ஆண்டில் இதுவரையில் மத்திய அரசிடமிருந்து, நமது அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக 40 அனுமதிக் கடிதங்களும், 45 உரிமங்களும் புதிய தொழில்கள் தொடங்குவதற்குக் கிடைத்துள்ளன.

அரசு அலுவலாளர்கள்

அரசு எடுக்கும் முடிவுகளைச் செயல்களாகத் தொடுக்கும் அரசு அலுவலாளர்களின் வாழ்வில் நிம்மதியிருக்க வேண்டுமென்ற குன்றா விழைவுடன், இரண்டாவது ஊதியக் குழு அமைத்து, ஆண்டொன்றுக்கு ரூபாய் 23 கோடி அளவுக்கு ஊதிய உயர்வு அளித்துள்ள இந்த அரசு, அண்மையில் அவர்களது மிக முக்கியமான முறையீடு ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது. பல்லாண்டுக் காலமாக அவர்களை அடிமை மனப்பான்மையுடன் நடத்தி வருவதாக அவர்களால் கருதப் பட்டதும், எடுத்துச் சொல்லப்பட்டதுமான இரகசியக் குறிப்பேட்டு முறையை அடியோடு ரத்து செய்து விட்டோம். பதவி உயர்வுகளுக்கு, அலுவலர்கள் மீது வெளிப்படையாகச் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, அதற்கான ஆதாரக் குறிப்புகள் இருந்தால் அவைகளை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டால் போதுமானது. இரகசியக் குறிப்போ, திறந்த குறிப்போ தேவையில்லை.

ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் வீட்டு வாடகைப்படி விகிதங்களை மேலும் உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட விரும்புகின்றேன். இதன் பயனைச் சென்னை நகரில் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், ஊதியத்தில் 12 சத வீதமும், கோவை, மதுரையில் 8 சத வீதமும், இரண்டாம் நிலைப் பகுதிகளில் 6 சதவீதமும், மூன்றும் நிலைப்பகுதிகளில் 4 சதவீதமும் ஆக வீட்டு வாடகைப்படி உயர்த்தப்படுகிறது. இதன் விளைவாக ரூபாய் 1·82 கோடி ஆண்டொன்றுக்குக் கூடுதல் தொடர் செலவை அரசு மேற்கொண்டுள்ளது.

நிதி இடர்ப்பாடுகள் மிகுந்த இந் நிலையிலும் தனது அலுவலாளர்கள்பால் அரசுக்குள்ள ஆழ்ந்த அக்கறையை இம் முடிவுகள் எடுத்துக்காட்டுமென நான் நம்புகிறேன். மேலும், அரசு அலுவலாளர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும், இரண்டாவது ஊதியக் குழுவில் தங்களுக்கேற்பட்டுள்ள முரண்பாடுகளைக் (Anomalies) களைவதற்காக இதுவரை அளிக்கப்பட்டுள்ள முறையீடுகளைப் பரிசீலித்து, ஆறு திங்களுக்குள்ளாக அரசுக்குப் பரிந்துரைகளை வழங்க அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும்.

தமிழ்நாடு வாணிபக் கழகம்

ஏறிவரும் விலைவாசிகளுக்குக் காரணம், மக்களிடம் 'வாங்கும் சக்தி' உயர்ந்திருக்கிறது என்று கூறி நிம்மதி பெற்றுவிட முடியாது. வாங்கும் சக்தியை எட்டிப் பார்க்க முடியாத ஏழை எளிய மக்கள் ஏராளமாக, வாழ்ந்திடும் நாட்டில் இந்தப் பிரச்சினை அனைத்திந்திய அளவில் பரிசீலித்துத் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பொருள் வாங்கி வழங்கும் கழகம் (Civil Supplies Corporation) ஒன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பணி, அரிசி முதலிய ஒன்றிரண்டு பொருள்களை ஓரளவு வாங்கித் தேக்கி வைத்து, விலையேறும்போது நியாய விலையில் மக்களுக்கு வழங்குவது என்பதாகும். குறிப்பிட்ட அளவில் தொடங்கியுள்ள இந்த முயற்சியை மேலும் விரிவுபடுத்தி, மாநில ரீதியாக நம்மால் முடிந்த அளவு விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு வாணிபக் கழகத்தை நிறுவுவதற்கு விரைவான நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்குள்ளாக எடுக்கப்படும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு

ஏற்பது இகழ்ச்சி என்றாள் தமிழ் மூதாட்டி. இகழ்ச்சி யாருக்கு? ஏற்பவருக்கு அல்ல! அவர்கள் ஏற்பது; அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்குத்தான் இகழ்ச்சி. தமிழகத்தில் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட பிச்சைக்கார சகோதர சகோதரிகளும், ஆறாயிரத்துக்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்களும் நம் உடன் பிறப்புக்களே யாவார். அவர்கள் வறுமைச் சகதியில் நெளியும் புழுக்களாய் வாடிடும் கொடுமை காணச் சகியாது, இந்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக, நமது தமிழகத்தில் சென்ற ஆண்டு ஜூன் திங்கள் மூன்றும்நாள் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி தொடங்கப் பெற்றது. என் பணிவான வேண்டுகோளுக்கிணங்க, கருணையுள்ளங் கொண்ட பொதுமக்கள் சில மாதங்களிலேயே ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாகப் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியினை வாரி வழங்கினர். பரனூர், உளுந்தூர்ப்பேட்டை, பருகூர் ஆகிய மூன்று இடங்களில் தொழுநோய் இரவோர்க்கான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்தம் அவதி நீக்கிடும் வண்ணம் தீவிரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நமது மாநிலத்தில் பிச்சைக்காரரே இல்லையென்னும் புதுநிலை ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. அதற்குத் தொடர்ந்து நல்லகம் வாய்த்தோர் நிதி குவித்திட வேண்டுகிறேன். அத்துடன் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் மேலும் அமைத்திடவும், அவர்களுக்குச் சிகிச்சை அளித்திடவும், அவர்களைப் பராமரித்திடவும் அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளித்திடவும் ஆகிய செலவுகளுக்காக, அன்பளிப்பு நிதிகள் மட்டும் போதுமானவையல்ல என்ற நிலையில், குதிரைப் பந்தயவரி, பந்தயம் பிடிப்போர், பந்தயக் கணக்கு இயந்திரம் மீது 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், மற்றவர்கள் மீது 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் உயர்த்தப்படும். இதன் வாயிலாக ஆண்டுக்கு ரூபாய் ஐம்பது இலட்சத்திற்குக் குறையாமல் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூடுதல் வருவாய் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளிக்கப்படும்.

நிலச் சீர்திருத்தம்

சமதர்ம வழியில் நடைபயிலும் இந்த அரசு, நிலப் பிரபுக்கள் முறையைக் களையெடுத்து உச்ச வரம்புச் சட்டத்தின் உண்மைப் பயனை அறுவடை செய்ய, முனைந்து முன்னேறுவதை அனைவரும் உணர்வர். 1961-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட உச்ச வரம்புச் சட்டம், விரிவான நீண்டகால எச்சரிக்கை விளம்பரத்துடன் கொண்டு வரப்பட்டதால், சட்டம் வருவதற்கு முன்னே அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரங்களில் நிலக் குபேரர்கள் ஈடுபட்டு, பினாமி முறையிலும்—ஏராளமான தங்கு தடையற்ற விதிவிலக்கு வாய்ப்புக்களிலும் தங்கள் பரந்த நிலப்பரப்பை மறைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றார்கள். சட்டமோ நாணிக் கோணித் தலைதாழ்த்திக் கொண்டது. அந்த நிலையை மாற்ற அரசு, 1970-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு உச்ச வரம்புச் சட்டத்தை - பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற அளவில் திடுமென அறிவித்து, அதன் தொடர்பாகக் கரும்பு, மேய்ச்சல் காடுகளுக்கான விதிவிலக்குகளை ரத்து செய்துள்ளது. இந்தப் புரட்சிகரச் சட்டம் பேரவையில் நிறைவேறி, குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்து அதற்கான பணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. பல்லாண்டுக் காலமாக வீட்டுமனை சொந்தமற்றிருந்த விவசாயத் தொழிலாளிகளுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க நாம் நிறைவேற்றிய சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்து அந்தப் புனிதப் பணியும் தஞ்சைத் தரணியில் சென்ற திங்கள் 27-ஆம் நாள் திருவையாற்றில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நிலச் சீர்திருத்தத்தின் மற்றொரு கட்டமாகப் புதிய அறிவிப்பு ஒன்றினைச் செய்ய விரும்புகிறேன். நில உச்ச வரம்புச் சட்டத்தில் உள்ள விதிவிலக்குகளின் மூலம் ஏராளமான நிலங்கள், அரசு கையகப்படுத்த முடியாத நிலையில் உள்ளன. நமது அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் ஏற்கெனவே கரும்பு, மேய்ச்சல் நில விதிவிலக்குகளை நீக்கியிருக்கிறோம். அதனைத் தொடர்ந்து, அரசியல் சட்டம் செயல்படத் தொடங்கிய 1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் நாளுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளில்(Trusts) கல்வி, மருத்துவம் ஆகிய பெயரால் உள்ள அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களில் அந்த அறக்கட்டளைகளுக்கென ஒரு குறிப்பிட்ட அளவு விதிவிலக்கு அளித்துவிட்டு, 1950—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாளுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட ஏனைய அறக்கட்டளைகளுக்குள்ள நிலங்களுக்கான விதிவிலக்குகள் அனைத்தும் அறவே நீக்கப்படும் என்றும் இந்த மாமன்றத்தில் அறிவிக்கிறேன். இதற்குரிய சட்டம் இந்தக் கூட்டத்தொடரிலேயே கொண்டு வரப்படும்.

இஃதன்னியில் ஒரு குடும்பத்துக்கு அதிக அளவு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்திருக்கலாம் என்ற அளவை, 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் இன்று முதல் மாற்றியமைக்க, வேண்டிய திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்படும்.

கடன் நிவாரணச் சட்டம்

நாட்டுப் பொருளாதார வளர்ச்சியெனும் தருவுக்கு, கிராமப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைதான் வளமூட்டும் வேர்களாகத் திகழ்கின்றன. நிலத்தை நம்பி வயிற்றைக் காக்கும் எண்ணிறந்த ஏழை விவசாயப் பெருங்குடி மக்களை, கடன் சுமை கழுத்தை அழுத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் அதிக வட்டிக்குத் தனிப்பட்டோரிடம் கடன்கள் பெறுவதும், அந்த வட்டியே முதலைவிட அதிகமாகப் பெருகிப் பயமுறுத்துவதும், திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுவதும் நம் கண்ணெதிரே காணும் காட்சியாகும். அதே போல் குறைந்த வருமானமுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலர்கள், தனிப்பட்டோரிடம் கடன்கள் பெற்றுத் தாங்கவொண்ணா வட்டி விகிதத்தால் கடன் பளு தலைக்கேறத் தவித்திடுகின்றனர்.

இந்த அவல நிலை போக்குவதற்கு, 1938-ஆம் ஆண்டு விவசாயிகள் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையில் கடன் நிவாரணங்களை விவசாயிகளுக்கு அளிக்கப் புதியசட்டம் கொண்டு வரப்படுவதோடு, மேலும் குறைந்த வருவாயுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலாளர்கள் ஆகியோருக்கும் நிவாரணம் வழங்குகிற வகையில் அவர்களது கடன் சுமையைக் குறைக்கவும், சட்டம் கொண்டு வரப்படுமென்பதைக் களிப்புப் பொங்கிட அறிவிக்கிறேன்.

இது தவிர, நிலக் குத்தகைதாரர்கள், நில உடமையாளர்களுக்குத் தர வேண்டிய பழைய நிலுவையை நான்கு ஆண்டுகளில், ஆண்டுக்கொரு தவணையாகச் செலுத்திட வேண்டு

மென்று, குத்தகைக்காரர்களுக்கு வசதியாக 1968—ஆம் ஆண்டில் சட்டம் இயற்றியுள்ளோம். இந்தத்தவணைக் காலச் சலுகை கிடைத்தும் கூடக் குத்தகைதாரர்கள் நில உடைமையாளர்களுக்குச் செலுத்திட வேண்டிய பழைய நிலுவைகளை முழுதும் செலுத்த முடியாமல் இடர்ப்படுவதால் அவர்கள் துயரைத் துடைக்கும் வகையில், இந்த நடப்புப் பசலிக்குத் தர வேண்டிய குத்தகையைப் பாக்கியின்றித் தந்திருப்பவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் முடிய (1380 வது பசலி முடிய) செலுத்த வேண்டிய பழைய குத்தகை நிலுவை அனைத்தும் ரத்து செய்யப்படுவதற்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதை மிக்க மகிழ்வுடன் அறிவிக்கின்றேன்.

மாநில சுயாட்சி

ஏழை நடுத்தர வர்க்கத்தினரின் நல் வாழ்வினையே மையமாகக் கொண்டு, அந்தச் சாமானிய மக்களின் பிரதிநிதிகளாக ஆளும் பொறுப்பிலிருந்து, எத்தனையோ எதிர்ப்புக்கிடையேயும், உயர் மட்டத்திலிருப்போரின் உறுமல்களுக்கிடையேயும், '' இதுகள் ஆள்வதா?'' என்ற ஏகடியங்களுக்கிடையேயும்—மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கொண்டு, பழைய அந்தஸ்துக்கள், குடும்பப் பெருமைகள், குலப்பெருமைகள் எதுவுமற்ற பராரிகளின் தோழர்களாய், அரசுக்கடமையாற்றி, இருக்கின்ற அதிகாரங்கள், வசதிகள், வாய்ப்புக்களை அடிப்படையாக வைத்துச் சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுந்திக் கிடக்கும் மனித தெய்வங்களை ஆராதனைக்குரியவர்களாக ஆக்க, இந்நிதிநிலை அறிக்கை வாயிலாகவும், இதற்கு முன்பு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், திட்டங்கள் வாயிலாகவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எங்களைத் தாழ்வாகக் கருதிடினும், எங்கள் முற்போக்கு எண்ணங்களைத் தாழ்வாகக் கருதிடாதவர்கள், காய்தல் உவத்தலின்றிச் சிந்தித்திடுவர் என நம்புகிறேன்.

நமதரசுக்குள்ள அதிகார வரம்புகளுக்கேற்றவாறு, பின்னடைந்தோர், தாழ்த்தப்பட்டோர், தவித்து நிற்போர் நெஞ்சுயர்த்த ஆவன செய்துள்ளோமெனினும், உடனடியாகச் சந்தித்துத் தீர்வு காண வேண்டிய பல்வேறு பிரச்சினைகளுக்கு அதிகாரமோ, நிதியாதாரமோ, குறைந்த பட்ச உரிமைகளோ கூட இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறோம்.

இதற்குத் தலையாய காரணம் இந்திய அரசமைப்பு, கூட்டாட்சி என்று கூறப்பட்ட போதிலும், ' ஒன்றியம் ' என்ற சொல்லே அரசமைப்புச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, அதன் தொடர்பாக ' கூட்டாட்சி ' கோட்பாடுகளுக்கு முரணான பல வகையுரைகள் சேர்க்கப்பட்டுவிட்டன. ஒன்றியம் என்பது பெயரளவுக்காகி, ஒற்றையாட்சிப் போக்கு மிகுந்து விட்டதென்பதை யாரும் மறுக்க இயலாது. அதிகாரப் பிரிவில் மத்திய அரசின் பக்கம் தான் தராசுத்தட்டு தாழ்ந்து நிற்கிறது. உயர்ந்து நிற்கும் தராசுத் தட்டை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விடும் நிலைதான் மாநிலங்களுக்கு !



“மாநில விவகாரங்களில் மைய அரசு தலையிடப் பெருமளவு வாய்ப்புக்கள் காண்கின்றன. இதன் மூலம் மாநிலங்களின் சுயாட்சி உரிமை பாதிக்கப்படுகின்றது.”

என்று இராஜமன்னார் குழுவினர் அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

இப்போதுள்ள அமைப்பில் மாநிலங்களில் சட்ட மன்றங்கள் இருப்பதும், முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள் இருப்பதும் சுயாட்சிதானே என வாதிடுவோர் உண்டு. தனக்குத் தேவையற்ற அதிகாரங்கள் பலவற்றை மத்திய அரசு மாநில அரசிடமிருந்து பறித்துக் கொண்டும்—மாநில அரசுகளுக்குத் தேவையான பல அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காமலும் இருக்கின்ற நிலை சுயாட்சித் தத்துவத்தின் முழுமையைக் காட்டுவதாகாது. கால தாமதமின்றி மக்கள் தேவைகளை நிறைவு செய்திடவும், நிதிக் கூறுகளை விரிவாக்கி மாநிலங்களின் வளம் பெருக்கிடவும், அந்தந்த மாநில மக்களின் உணர்வுகளுக் கேற்பச் செயல்படவும், மத்திய அரசு எஜமானாகவும், மாநில அரசுகள் ஏவல் கேட்போராகவும் மாறுகிற நிலையொழிந்து தோழமை உணர்வு வலுப் பெற்றிடவும், மாநிலங்களுக்கு முழு சுயாட்சி வேண்டுமென்று கருதுகிறோம். இந்தியாவின் பாதுகாப்பு, மத்திய அரசு வலிமையுடன் இருந்திட வேண்டுமென்பதில்தான் உள்ளதென்பதில் இரு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

விழுதுகள் வலிவடைவதால், ஆலின் அடிமரம் வலிவிழந்து விடுவதில்லை. விழுதுகளும் சேர்ந்துதான் ஆல மரத்திற்குப் பெருமை—அழகு !

'' மாநிலத்தில் சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சி '' என்பது பிரிவினை வாதமல்ல; ' கூட்டாட்சி ' என்பதற்குப் பதிலாக 'ஒன்றியம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகவும்; ஒன்றியம் என்ற சொல்லைப் பயன் படுத்தியிருந்தாலும் நமது அரசியல் அமைப்பு, கூட்டாட்சி முறையில்தான் அமைந்திருக்கிறதென்றும் அரசமைப்புச் சட்டமியற்றியவர்களில் தலைமையானவராகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே கூறியிருக்கிறார். அந்தக் கூட்டாட்சியும், சுயாட்சிகளும் சொல் அளவில்தான் இருக்கின்றன. அவை முழுமைபெற வேண்டும்—உண்மையான சுயாட்சியாக மலர்ந்து, இந்தியக் கூட்டாட்சி மணம்பரப்ப வேண்டுமென்றால், அப்படிச் சொல்கிறவர்கள் தோட்டத்துக்கே விரோதிகள் என்று கூறுவது பொருத்தமாகாது. 1947—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22—ஆம் நாளன்று அரசமைப்புச் சட்ட மன்றத்தின் முன் வைத்த பண்டித ஜவகர்லால் நேரு

அவர்களின் வரலாற்றுப் புகழ் மிக்க தீர்மானத்தில் ; ''சுதந்தர இந்தியாவில் அமைந்திடும் மாநிலங்களும், பிற ஆட்சிப் பகுதிகளும் சுயாட்சி (Autonomy) உரிமை பெற்று, மாநிலங்கட்கும் மத்திய அரசுக்கும் எனக் குறிப்பிட்ட அதிகாரங்கள் நீங்கலான எஞ்சிய அதிகாரங்களுடன் (Residuary Powers) அமைந்து செயல்படும் '' என்று கூறியிருக்கும் கருத்தினை உற்று நோக்கின் மாநில சுயாட்சி என்பது நாட்டு ஒற்றுமைக்கு விரோதமான கோரிக்கையல்ல என்பது தெளிவாகும்.

மாநில சுயாட்சி என்பது அதிகார உரிமைகளை மாநிலங்கள் பெறுவது என்பது மட்டுமல்ல ! தங்குதடையின்றி வளமிகு திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வாயில்களை, மத்திய அரசிடமிருந்து பெற்றிட வேண்டுமென்பதும் இன்றியமையாத ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி (Corporation Tax) மற்ற வருமான வரிகளைப்போல் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படவில்லை. பொது வருமான வரி மீது மத்திய அரசு விதித்த உபரி வரியும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மீது மாநிலங்களுக்கு நிருவாகப் பொறுப்பில் பங்கு சிறிதளவு கூட இல்லை. இவைகள் ஒன்றிரண்டு உதாரணங்கள். இந்த நிலைமைகளில் மாநிலங்கள் முழுப்பயன் அடையத்தக்க மாறுதல்கள் தேவையென்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

'' உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கைகொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே, தமிழகத்தின் கப் படுகின்றனவென்றால், [illegible] குத் தவம் இடப்போர் மாநிலத்திலும்—தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால் மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கிறைத்த நீராகும் ''. என்று நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது எடுத்துக் கூறியதை இப்போதும் நினைவூட்டுகிறேன்.

ஆகவே, மத்தியிலும்—மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல் மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலேயே நிலைபெறவும், வலுப்பெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும்.

இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றிடும் என்ற நம்பிக்கையுடன், இந்த அரசு தன்னாலியன்ற தகவுறு திட்டங்களைத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குத் தீட்டியுள்ளது.

[மார்ச் முதல் நாளன்று தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில் அறிவித்த 1972–1973-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை.]

வெண்பாப் போட்டி-31

ஈற்றடி :
கலையுயர்த்தும் திட்டமிது காண்

முடிவுத் தேதி 1-4-1972

பரிசு : ஓராண்டு “தமிழரசு” அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
‘ தமிழரசு ’ அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

ரப்பர்த் தோட்டங்களிலே...... !

தமிழ்நாட்டில் நீண்ட நாளாக ரப்பர் பயிரிடப்பட்டு, ரப்பர் தோட்டங்கள் அதிகமாக உள்ள மாவட்டம், குமரி மாவட்டம் ஒன்றே.

கடந்த ஆண்டில் மட்டும் குமரி மாவட்டத்தில் 247·60 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் செடி நடப்பட்டது. மொத்தம் இந்த மாவட்டத்தில் 2,548·40 ஹெக்டேர் நிலப் பரப்பில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 500 ஹெக்டேரில் ரப்பர் புதிதாகப் பயிரிடப்படும்.

புதிய ரப்பர்த் தோட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் காடு வெட்டுதல், தளப்படுத்துதல் ஆகிய முன் வேலைகள் நடைபெறுகின்றன. இங்கு நடுவதற்கு வேண்டிய ரப்பர்ச் செடிகள் 1971-ஆம் ஆண்டிலிருந்து நாற்றங்காலில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னர் நடப்பட்டுள்ள ரப்பர்த் தோட்டங்களில் களையெடுத்தல், ரப்பர் மரங்களுக்கு உரமிடுதல், சிறுதைகளுக்குக் கூடை வைத்து நிழல் கொடுத்தல் ஆகிய வேலைகள் நடைபெற்றன.

ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகள் மற்றும் கண்காணிப்பாளர்கள், நடத்துநர்கள், களப் பணியாளருக்கான வீடுகள், சிற்றூர், மணலோடை, காளிதேசம், கீரிப்பாறை, பரளியாறு பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன.

1960-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டு வரை உள்ள ரப்பர்த் தோட்டங்களிலிருந்து சுமார் 430·60 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் பால் சேகரிக்கப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட ரப்பர்ப் பால் கீரிப்பாறை கோட்டத் தொழிற்சாலையில் பதனிடப்பட்டுக் கச்சா ரப்பர் விரிப்புகளாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

1–4–1971 முதல் 31–1–1972 முடிய உள்ள இடைக்காலத்தில் விற்பனை செய்யப்பட்ட பலரகக் கச்சா ரப்பரின் எடை 87,250 கிலோ கிராம். இதன் மூலம் அரசுக்குத் கிடைத்த வருமானம் ரூ. 4,43,085.

1966-ஆம் ஆண்டு ரப்பர்த் தோட்டங்களிலிருந்து பால் சேகரிப்பதற்கான முன் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்தில் ரப்பர்த் தோட்டங்கள் நிறுவுவதோடு இலங்கையிலிருந்து வரும் தாயகம் குடி பெயர்ந்தோருக்குப் புகலிடம் அளிக்க வேண்டிய வேலை வாய்ப்பு உண்டாகும் நோக்கோடு சுமார் 800 ஹெக்டேர் பரப்பில் ரப்பர்த்தோட்டம் நிறுவும் திட்டமும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1970–71-ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட 272·60 ஹெக்டேர் பரப்பும் மொத்தப் பரப்பான 2,548·60 ஹெக்டேரில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி 333 தாயகம் குடி பெயர்ந்தோர் குடும்பங்கட்குப் புகலிடம் அளிக்கப்படும். இது மத்திய அரசின் கடனுதவியுடன் செயலாக்கப்படும் திட்டமாகும். ஏறத்தாழ 125 இலட்சம் ரூபாய் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படவிருக்கிறது. இதுவரை 62 இலங்கை அகதிகளுக்குப் பலதரப்பட்ட வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அப

மாங்கனி குலுங்கும் ஆராய்ச்சிப் பண்ணை

கன்னியாகுமரியில் மிகப் புகழ் ாய்ந்த பழ ஆராய்ச்சிப் ண்ணை ஒன்று உள்ளது.

முதன் முதலில் இது பழப் ண்ணையாகத் தொடங்கப்பட் து. 1922-ஆம் ஆண்டில் ருவிதாங்கூர் மன்னரால் தாடங்கப்பட்ட இந்தப் ண்ணை, 1956-ஆம் ஆண்டில் மரி மாவட்டப் பகுதிகள் மிழகத்துடன் இணைந்த பாழுது இப்பண்ணையும் ணைந்தது.

1960-ஆம் ஆண்டில் இப் ழப் பண்ணை பழ ஆராய்ச்சி லையமாக மாற்றி அமைக்கப் ட்டது. தொடங்கப்பட்ட பாழுது இதன் பரப்பளவு ·64 ஏக்கர்தான். ஆனால், ·22 ஏக்கர் நிலம் 1964-ஆம் ண்டில் சேர்த்துக் கொள்ளப் ட்டது.

இந்தப் பழப் பண்ணை பழ ராய்ச்சி நிலையமாக மாற்றப் ட்டது ஏன் தெரியுமா ?

ஆண்டு முழுவதும் இந்தப் ழப் பண்ணையில் மாங்கனிகள் லுங்கும்.

எல்லாப் பருவங்களிலும் ங்கே மாங்காய் கிடைக்கும். ங்குள்ள தட்பவெப்ப நிலை ரணமாகவே இப்படிக் காய்க் ன்றது என்று சொல்கிறார்கள். ந்தப் பழ ஆராய்ச்சிப் பண்ணை ல் மாங்கனிகள் தவிர காய்யா, திராட்சை, எலு ச்சை மற்றும் பல்வகையான ழங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

1960-ஆம் ஆண்டில் இந்தப் ழப் பண்ணையில் 29 வகையான ாங்கனிகள் பயிர் செய்யப் ட்டன. ஆனால், இப்பொழுது ராளமான மா வகைகள் பிராகின்றன.

இங்குப் பயிராகும் மாங்கனி ள் விவரம் வருமாறு :

நீலம், பங்களூரா, ருமானி, பரி, தில்பஸந்த், அலிபஸந்த், ரங்குடி, மல்கோவா, அதி துரம், சொர்ண ரேகா, காடூர், ரஸம், ரவுலி, சின்னக் காத்துக்காய், சொர்ண ஜகாங் ர், பாதிரி, ஓலூர், பாபக்காய் லாபாணி, அல்பான்ஸே, லுக்காய்ச்சி, சேலம், பெங்க ரா, காடன், கல்கண்டு, குதாதாத், கிருஷல்வாபேட், சிறுமணி, அம்மிணி, கே. ஓ. 5/5, பங்கணப்பள்ளி, பீத்தர் பஸந்த், இமாயூதின், கே. ஓ. 9/7, கே. ஓ. 4/3, கன்னியா குமரி செலக்ஷன், பஞ்சசதுர கலசம், பேனாட் அல்பன்ஸோ, செறுக்குரசம், இரி பச்சரி, ஆலந்தூர் பெனேஷான், பஞ்ச வர்ணம், மோகன்தாஸ், கே.ஓ. 2/16, கே. ஓ. 3/1, லாங்ரா, ஜெயிலடர், பட்டாளம், முண் டப்பா, கே.ஓ. 11, கே.ஓ. 8, ராஸ், பில்போ ரஜுமானு. இப்படி 60-க்கு மேற்பட்ட பழங்கள் இங்கே பயிரிடப்படுகின்றன.

புதிய

MF காம்ப்ளெக்ஸ் 17-17-17
அமோக விளைச்சலுக்கு
அருமையான உரங்கள்

புதிய MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 நெற் பயிருக்கு மிகவும் உகந்தது. உயர் விளைச்சல் ரகமானாலும் சரி, மற்ற சாதாரண உள்ளூர் ரகமானாலும் சரி.

புதிய MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 ஒரே சீரான குருணை வடிவில் உள்ளது. அதில் உள்ள பயிருணவுகள் நீரில் கரைந்து, பயிர்களுக்கு உடனடியாக கிடைக்கின்றன.

புதிய MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 மற்ற பயிர்களான கரும்பு, பருத்தி, வாழை, சிறுதானியங்கள், மற்றும் மிளகாய் இவற்றிற்கும் சால உகந்தது.

MF காம்ப்ளெக்ஸ் உரங்களும் யூரியாவும் கிடைக்கும் இடங்கள்:

- ஷாவாலஸ் & கம்பெனி லிமிடெட்
- E.I.D.-பாரி லிமிடெட் ஆகியோரின் உர வியாபாரிகள்
- கூட்டுறவுச் சங்கங்கள்.

மண் செழித்து, பொன் விளைய —
MF காம்ப்ளெக்ஸ் 17-17-17

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட், மணலி, சென்னை-68

கட்டுமரத்தில் எஞ்சின்

எங்கும் காணாத அதிசயம்!

முட்டத்தில் ஒரு திட்டம்

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குபவர், 'ரெவரெண்ட் பாதர் டி. ஜேம்ஸ்'. "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதற்கோர் சான்று இலங்குவது 'இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம்.'

ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனமான உணவு, வேளாண்மை நிறுவனம் (F.A.O.). கட்டு மரங்களின் மேலே இயந்திரங்களைப் பொருத்தி, கட்டு மரங்களைக் கொண்டு மீன் பிடிக்கும் தொழிலை இயந்திர மயமாக்கும் திட்டத்தை 1964-ஆம் ஆண்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் செயல் படுத்தியது. ஆனால், அந்தத் திட்டம் தோல்வியுற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கோட்டார் சமுதாயப் பணிக்கழகம் (Kottar Social Society) கட்டுமரங்களின் மேல் இயந்திரத்தைப் பொருத்தும் திட்டத்தைப் புதுப்பிக்க முயற்சி செய்தது. தோல்வி கண்டு துவண்டு விடாத ரெவரண்ட் பாதர் டி. ஜேம்ஸ் அவர்கள் அக்கழகத்தின் நிருவாக இயக்குநர். அவர் டெல்லியிலுள்ள கத்தோலிக்க அறக்கட்டளை நிறுவனம், ஆஸ்டிரியாவிலுள்ள காரிடாஸ் (Caritas of Austria), மிசெரீரீ (Miserere), ஆக்ஸ்பாம் (Oxfam) முதலிய அறக்கட்டளை நிறுவனங்களின் உதவியை நாடி இத்திட்டத்திற்குரிய கட்டடம் கட்டுவதற்கும் கருவிகள் வாங்குவதற்கும் நிதி உதவி பெற்றார். அதனால் ஏற்பட்டதே இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம். தென்னிந்தியாவில் கட்டு மரங்களின் மேலே அமைக்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்தியது இத்திட்டமே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் கிராமத்தில் நடைபெற்று வருகிறது.

இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டத்தின்கீழ், திட்டமிடுதல், செயல்படுத்துதல் ஆகியவை ஒருமைப் படுத்தும் குழு (Co-ordination Committee) ஒன்றின் நேரடிப் பார்வையில் நடைபெற்று வருகிறது. தமிழ் நாடு மீனளத்துறை இயக்குநர் அவர்கள் ஒருமைப்படுத்தும் குழுவின் தலைவராக விளங்குகிறார். அக் குழுவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்டார் சமுதாயப் பணிக் கழகத்தின் நிருவாக இயக்குநர் ரெவரெண்ட் பாதர் டி. ஜேம்ஸ், இத்திட்டத்தின் மேலா

ளர் கேப்டன் எஸ். ஜோவாசிம் பெ[illegible]ணாண்டோ, முட்டம் கிராமத்திலுள்ள ஒரு மீனவரும், கன்னியாகுமரி மாவட்ட மீனவர் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவருமான வி. லீன் அலெக்சாண்டர் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, முட்டம் கிராமத்தில் 100 கட்டு மரங்களின் மேல் இயந்திரங்களைப் பொருத்தி மீன் பிடிக்கும் சோதனை நடத்திப் பார்க்கவும், அதன் பயன்களை விளக்கிடவும் திட்டமிடப்பட்டது. ரெவரெண்ட் பாதர் ஜேம்ஸ் அவர்கள் தன்னுடைய தாய் நாடான பெல்ஜியம் நாட்டின் உதவியை வேண்டினார். அந்த நாட்டினரின் ஒத்துழைப்பையும், உதவியையும் பெறுவதில் அவர் வெற்றி பெற்றார். பெல்ஜியம் காரிட்டாஸ் (Belgium Caritas) நிறுவனம் முதற் கட்டப் பணிக்குரிய துவக்க நிதியை அளித்ததுடன், 100 இயந்திரங்களையும், (Cut-Board Engines) தேவையான உதிரிப் பொருள்களையும் (Spare Parts) இலவசமாகவே கொடுத்து உதவியது. ஆனால், இனாமாக வந்த அந்த இயந்திரங்களுக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டது. கோட்டார் சமுதாயப் பணிக்கழகம், முதல் 50 இயந்திரங்களுக்குரிய சுங்க வரியைக் கட்டியது. பின்பு அவ்வியந்திரங்களை நன்கொடையாக அளித்த நிறுவனங்களே, சுங்க வரித் தொகையையும் கொடுத்து விட்டன.

இந்தியப் பசிப்பிணி விடுதலை இயக்கம் (Indian Freedom From Hunger Compaign) இரண்டாம் தடவையாக வரப்பெற்ற 50 இயந்திரங்களுக்குரிய சுங்க வரியைச் செலுத்துவதற்குக் கடன் கொடுத்து உதவ முன் வந்தது. அக்கடன் தொகையை மீனவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

கட்டுமரங்களை இயந்திர மயமாக்குவதன் மூலம், மீன் பிடிப்பை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பெல்ஜியத்திலிருந்து பெறப்பட்ட 100 இயந்திரங்களில், 92 இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. இரண்டு இயந்திரங்கள் இத்திட்டத்தின் கீழ் மீட்பு வேலைகளுக்காகவும், கட்டு மரங்களில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் பழுதுபட்டால் அவைகளைக் கடலிலேயே பழுது பார்த்துச் செப்பனிடும் பணியை மேற்கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. 6 இயந்திரங்கள் பழுது பார்க்க முடியாத அளவுக்குப் பாழடைந்து விட்டன.

கட்டு மரங்களை இயந்திர மயமாக்கியதனால் முட்டம் கிராம மீனவர் வாழ்வின் பல்வேறு கூறுகளில் ஏற்பட்டுள்ள பயன்களை அறிய 1969 ஜூலை முதல் 1970 டிசம்பர் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இயந்திர மயமாக்கப்பட்ட கட்டு மரங்களைப் பயன்படுத்திய மீனவர்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு நன்மை பெற்றுள்ளனர் என்பது ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.



மீனவர் வாழ்வை மேம்படுத்தும் இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம்

இயந்திர மயமாக்கப்பட்ட கட்டு மரங்கள் காற்றையும், நீரோட்டத்தையும் எதிர்த்துச் செல்லக் கூடியவை. அவை காற்றை நம்பியிருக்கத் தேவையில்லை. இயந்திரம் பொருத்தப்பட்ட மரங்களில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் [illegible] நேரம் குறைந்துவிட்டது. அவைகளில் செல்லும்போது, துடுப்பைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லையாதலின், மீனவர்கள் களைப்படையாமல் அதிக அளவு மீன்களைப் பிடிக்க முடிகிறது. ஐயத்திற்கிடமின்றி அதிக அளவு மீன்களைப் பிடிக்க, இயந்திர மயமாக்கப்பட்ட கட்டு மரங்கள் உதவி வருவதால், இத்திட்டத்தின் இலட்சியம் வெற்றிகரமாக நிறைவேறி விட்டது எனலாம்.

இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டத்தின் அடுத்த நோக்கமாகப் பல்வேறு உருவ அமைப்புக் கொண்ட கட்டு மரங்களில், இயந்திரத்தை அமைத்துப் பயன்படுத்திப் பார்க்கப்பட்டது. உணவு வேளாண்மை நிறுவனக் கப்பல் நிர்மாணகர்த்தரால் கொடுக்கப்பட்ட வடிவ அமைப்புப்படி, அலைகளைத் தாண்டிச் செல்லும் படகு ஒன்று ஒட்டுப் பலகையினால் (Plywood) கொச்சியில் அமைக்கப்பட்டது. அப்படகில் அலைகளைத் தாண்டிச் செல்வதற்குரிய சாதனம் பொருத்தப்பட்டுள்ளதனால், பருவ மழைக் காலங்களில் தோன்றும் பேரலைகளைத் தாண்டிச் செல்வதற்கு ஏற்றதாக இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது

கண்ணாடி இழைகளினால் செய்யப்பட்டுள்ள படகு ஒன்றும் வாங்கப்பட்டு, அதில் இயந்திரம் பொருத்திக் கடலில் செலுத்தப்பட்டது. அப்படகு 2 பேர்களுடன் விரைந்து செல்கிறது. கட்டு மரங்களில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களுக்கு ஆகும் எரிபொருள்களை விடக் குறைவாகவே கண்ணாடி இழைப் படகுகளுக்கு ஆகிறது.

இயந்திரங்களை அவ்வப்பொழுது, தூய்மைப்படுத்துவதற்காகக் கீழ் முட்டத்தில் ஒன்றும், மேல் முட்டத்தில் ஒன்றுமாக, 2 பணிமனைகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. மீன்பிடிக்கச் சென்று திரும்பி வந்தவுடன் ஒவ்வொரு முறையும் மீனவர்கள் இயந்திரத்தைப் பணி மனைக்குக் கொண்டு வரவேண்டும். கடல் நீர் பட்டதனால் ஏற்பட்டுள்ள உப்புகளை அகற்றப் பணிமனைகளில் நல்ல தண்ணீர் கொண்டு, இயந்திரங்கள் தூய்மைப்படுத்தப் படுகின்றன. அதன்பின் இயந்திரங்களுக்கு எண்ணெய், கிரீஸ் முதலியன இடப்பட்டுப் பணிமனையில் வைக்கப்படுகின்றன. இயந்திரத்துக்கு உரியவர் மீன் பிடிக்கச் செல்லும்போது, இயந்திரத்தை எடுத்துச் செல்லலாம். இயந்திரம் பழுதடைந்தபொழுது மீனவர்கள் திட்டக் கிடங்கிலிருந்து தேவையான உதிரிப் பொருள்களைப் பெற்று, பணிமனையில் இயந்திரத்தைப் பழுது பார்த்துக் கொள்ளலாம்.

மீன் பிடிப்பவர்களுக்கு திருந்திய 'கியர்' (Improved gear) கொடுக்கப்படுகி[illegible] நைலான நூ[illegible] இலாப நோக்கமில்லா அடிப்படையில் விற்கப்படுகிறது. சென்ற ஆண்டு மட்டும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நைலான் நூல் வாங்கப்பட்டு, விற்பனை செய்யப் பட்டுள்ளது. மீன பிடிக்கும் வலை பின்னும் நிலையங்களில் நைலான் வலைகள் பின்னப்படுகின்றன. அந்நிலையங்கள் பன்னூறு மீனவப் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றன. முட்டம், கடையப்பட்டினம், கன்னியாகுமரி, மேல மணக்குடி, குளச்சல், அலாஞ்ஜி, மிடாலம், ஏனையம், தூத்தூர் ஆகிய இடங்களில், வலைபின்னும் நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்கள் மீனவப் பெண்களின் பண்பாட்டுக் கூடமாகவும், அவர்களை மேம்படுத்தும் நிலையமாகவும் இயங்கி வருகின்றன.

இத்திட்டம் மீனவ இளைஞர்களுக்கு, இயந்திரத்தை எண்ணெய் விட்டுத் தூய்மைப் படுத்தல், தேவையான பொருள்களைச் செய்தல் போன்றவைகளில் பயிற்சி அளிக்கிறது. இதுவரை சுமார் 100 பேர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

இந்தியப் பசிப்பிணி விடுதலை இயக்கத்தின் கூடுதல் செயலாளரான திரு ஜே. சி. மத்தூர், ஐ.சி.எஸ். அவர்கள் கூறியபடி, சில மாதங்கள்வரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மீனவர்களின் கூட்டம் நடத்தப் பெற்றது. அந்தக் கூட்டத்தில், கடற்பயணம் மேற்கொள்ளுதல், மீன் பிடிக்கும் நவீன முறைகள் ஆகியவை பற்றிய வகுப்பு நடத்தப்பெற்றதுடன், பற்றியும் [illegible]கப்பட்டன.

நைலான் மூலம் 'கியர்' மேம்படுத்தப்பட்டதனால், அதிக அளவு மீன்கள் கிடைத்து வருகின்றன. கட்டுமரத்தை இயந்திரத்தின் மூலம் இயக்குவதால், [illegible] குறைந்து விட்டது.

அதிக இடவசதியுள்ளதும், பாதுகாப்பு மிகுந்ததுமான சிறு படகுகளைப் பயன்படுத்தி, கட்டு மரங்களை வழக்கொழியச் செய்வதே அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும். வேண்டிய இயந்திரங்கள் (Vala டீசல் Penta) பொருத்தப்பட்ட 4 பிரான்சு நாட்டு டோரி (Dory) படகுகள் வாங்கப் பட்டுப் பரிசோதனைகள் செய்யப் பட்டு வருகின்றன. 'டோரி' படகுக்கு எரிபொருள் மிகவும் குறைவாகவே தேவைப்படுகிறது. மீன் பிடிப்பதற்கு 'டோரி' படகு மிகவும் ஏற்றதாக இருக்கிறது. மீன்பிடித்த பிறகு அப்படகில் இணைக்கப் பட்டுள்ள சாதனத்தைப் பயன்படுத்தி 'புரபெல்லரை' படகுக்கு உள்ளே உயர்த்திவிட்டுப் படகுகளை நாள்தோறும் கடற்கரைக்குக் கொண்டு வந்து விடலாம். மீன்பிடிக்கச் செல்லும்போது படகில் 'புரபெல்லரைத்' தாழ்த்தி விட்டு விடவேண்டும்.

கட்டுமரங்களுடன் ஒப்பிடும் போது, 'டோரி' படகுகளின் மூலம் அதிக மீன்கள் கிடைப்பதால், மீனவர்களிடையே 'டோரி' படகுகள் [illegible] பெற்றுள்ளன. அந்த 4 படகுகளில், 3 படகுகள் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீனவர்கள் அவைகளுக்குரிய விலையை 7 ஆண்டுகளில் தவணைகளில் செலுத்த வேண்டும். நான்காவது படகு இந்தியாவின் மேலைக் கடலில் சோதனை [illegible]பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. [illegible] சாதகமாக இல்லாத நிலையிலும் அப்படகின் மூலம் 3 மாதகாலத்திற்குள் 2,403 ரூபாய் நிகர இலாபம் கிடைத்துள்ளது.

பிரான்சு நாட்டு 'டோரி' படகுகளைப் போல் நம்நாட்டி இயந்திரங்கள் இணைக்க பெற்ற 50 படகுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ரஸ் டன் இயந்திரம் பொருத்தப் பெற்ற ஒரு படகு தூத்துக் குடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இரண்டு



[illegible]
நாஞ்சில் நாடு

வஞ்சிநா டதனில் நன்செய்
நாடெனச்
செந்தமிழ் வழங்கும் தேய
அந்தமில் பெருவளம் அறி
யார் யாரே
மருதமும் நெய்தலும்
மயங்கியங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற
வளரும்
வேயென வளர்ந்த சாய்குலைச்
சாலியில்
உப்பார் பஃறி ஒருநிரை
பிணிப்பர்
இப்பெருந் தேயத்து எங்கும்
தப்பினும் [illegible] இராப்பகல்
தவறு"

கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

கட்டு மரங்களையும், சிறு படகுகளையும் இயந்திரமயமாக்கிய பின்பு, ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு வழிவகை காணுவதே அடுத்த கட்டப் பணியாகும். முட்டத்திலிருந்து தெற்கே 35 மைலில் 'வாட்ஜ் பாங்க்' (Wadge Bank) எனப்படும் மீன் பிடிப்பதற்குச் சிறந்த இடம் இருக்கிறது. அப்பகுதியைத் தற்பொழுது ஜப்பானிய மற்றும் இலங்கை இழுவைப் படகுகள் (Trambers) பயன்படுத்திக் கொள்கின்றன. திரு ஜே. சி. மத்தூர், ஐ.சி.எஸ். அவர்கள் கூறியதற்கிணங்க, தமிழ்நாடு மீன்துறை இயக்குநர் இழுவைப 42 அடி நீளமுள்ள 'பங்க்' என்னும் பகுதியில் சோதனை மீன்பிடிப்பு செய்வதற்காக, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் வழங்கினார். பெரிய படகின் இயந்திரம் தொல்லை கொடுத்தால், குளச்சலில் கட்டு மரங்களுடன் இணைத்துச் செல்வதற்காகவும் மற்றுமொரு 32 அடி நீளமுள்ள அரசாங்க படகு கொடுக்கப்பட்டது. 4 கட்டு மரங்கள், ஒரு 'கண்ணாடி இழைப்படகு, ஒரு டோரி' படகு ஆகியவைகள் 32 அடி படகுடன் இணைக்கப்பட்டு வாட்ஜ் பேங்க்' பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டன. இழுவைப் படகிலும் இயந்திரத் தொல்லை ஏற்பட்டது. அதில் ஐயர் இல்லாததாலும், குடிப்பதற்குத் தேவையான தண்ணீர் தேக்கி வைப்பதற்குரிய தொட்டி இல்லாததாலும், ஒரு நாளைக்கு மேல் அங்கு மீன் பிடிக்க இயலவில்லை. 'வாட்ஜ் பேங்க்' பகுதியின் முழுப்பயனையும் அடைய இயலவில்லை. இழுவைப்படகைப் பயன்படுத்த அங்குப் பெரும் இடம் இருப்பினும், அதை அங்குப் பயன்படுத்த முடியவில்லை.

தற்பொழுது காலநிலை வாய்ப்பாக அமையவில்லையாதலின் மீனவர்கள் பெரும் தொல்லையடைந்து வருகின்றனர். எனவே, இந்த ஆண்டில் 'வாட்ஜ் பேங்க்' பகுதியில் மற்றொரு முயற்சி மேற்கொள்ள எல்லா வசதிகளும் அடங்கிய இழுவைப்படகு ஒன்று அளிக்குமாறு தமிழ்நாடு மீன்துறை இயக்குநர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஒரு இழுவைப் படகைக் கட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளது. அதற்காகும் செலவில் 50 சத அளவைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளும். திட்டமிடப்பட்டுள்ள பெரோசி மெண்ட் இழுவைப் படகைச் சென்னையிலுள்ள அரசினர் படகு கட்டும் நிலையத்தில் கட்டப்படவிருக்கிறது. அதில் அமைப்பதற்குரிய இயந்திரத்தை இந்திய-பெல்ஜிய திட்டம் வழங்கும். அரசுடன் இதற்கான ஒப்பந்தம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய இழுவைப் படகின் உதவியுடன் கட்டுமரங்களை இணைத்துப் பிழைப்புக்கு வழியற்ற காலத்தில் 'வாட்ஜ்பேங்க்' பகுதியில் மீன் பிடிக்க இயலும்.

முட்டம் கிராமத்தில் நடத்தப்பெற்ற சோதனையின் பயனாகக் கடலோரக் கிராமங்களில் உள்ள மீனவர்கள் புத்துணர்வு பெற்றுள்ளனர். அவர்கள் தங்கள் கட்டு மரங்களில், இயந்திரங்களைப் பொருத்துவதற்கு மிகவும் ஆர்வத்துடன் உள்ளனர். எனவே, இயந்திரங்கள் வேண்டி ஏராளமான மனுக்கள் மீனவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. மீனவர்களின் வாழ்வை மேம்படுத்துவதில் பேரார்வம் காட்டி வரும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ. பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ். அவர்கள் பல கூட்டுறவுத் திட்டங்களையும், வங்கிகளையும் ஏற்பவத்தி அவைகளின் மூலம் இயந்திரங்களை வாங்கி, மீனவர்களுக்கு வழங்க ஆவன செய்துள்ளார். அவ்வியந்திரங்களின் விலையைச் சுலபத் தவணைகளில் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இத் திட்டம் பெல்ஜியம், இந்தியா ஆகிய இரு நாடுகளின் பசிப்பிணி விடுதலை இயக்கத்தின் உதவியுடனும், இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, ஆகியவைகளின் உதவியுடன் நடைபெறுகிறது. கோட்டார் பிஷப்பின் கீழ் பணியாற்றும் கோட்டார் சமூகப் [illegible]க் கழக நிருவா[illegible] உதவியுடன், இத் திட்டத்தின் மேலாளர் மீனவர்களின் நீண்டநாள் தேவைகளை நிறைவேற்ற அவரால் ஆன உதவிகளைச் செய்கிறார். எனவே, கன்னியாகுமரி மீனவர்களுக்கு ஒளி[illegible] எதிர்காலம் [illegible]த்திருக்கிறது என்று நம்பப்படுகிறது.

கோட்டார் சமூகப் பணிக் கழகக் கட்டுப்பாட்டின் கீழ் பல முனைப் படிப்புப் பிரிவுகள் கொண்ட ஒரு உயர்நிலைப் பள்ளியை இத் திட்டம் துவக்கவிருக்கிறது. மாணவர்கள் விருப்பப் பாடத்தின் கீழ் அப்படிப்புகளைப் பயிலலாம். ஒன்பதாம் வகுப்பிலிருந்து பதினொன்றாம் வகுப்பு வரை, பாடத்திட்டத்தில் கண்ட படிப்புகளுடன்கூட, கப்பலோட்டுதல், மாலுமிகள் பற்றிய பயிற்சியும், மீன் பிடிக்கும் தொழில் நுட்பப் படிப்பும், வலை பின்னுதல், படகு மற்றும் வலைகளுடன் மீன் பிடித்தல், பொறியியல் ஆகியவற்றில் பயிற்சியும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. மீன் பிடிக்கும் தொழில் வளர்ச்சியுறவும், மீன் பிடிக்கும் அளவு பெருகவும் இவை வழிவகுக்கும்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம் தமிழ் நாட்டில் நீலப் புரட்சி (Blue Revolution) தோன்றுவதற்கு வித்திட்டுள்ளது என்பது உண்மை.

குமரி மாவட்டத்தில் பிற்பட்ட மக்களுக்கு அரசு அளிக்கும் சலுகைகள்

குமரி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமான சலுகைகளை அரசு அளித்து வருகிறது.

குமரி மாவட்டத்தில் காணிக்கர்கள் என்ற மலைவாழ் மக்களும் வாழ்கின்றனர். அவர்களுக்கும் அரசு ஏராளமான சலுகைகளை அளித்து வருகிறது. கடந்த ஓராண்டில் அளித்துள்ள சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

உயர்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் அரிசன மாணவ, மாணவிகளுக்கு 1971-72-ல் உதவிச் சம்பளம் வழங்க ரூ. 3,91,000 ஒதுக்கப்பட்டதில் 31—1—1972 வரை ரூ. 3,58,350 செலவிடப்பட்டுள்ளது. மொத்தம் 29,079 மனுக்கள் வரப் பெற்றதில் முழுவதும் தீர்வு செய்யப்பட்டு உதவிச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் பயின்று வரும் அரிசன மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க நடப்பு ஆண்டில் ரூ. 1,82,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 31—1—1972 வரையில் ரூ. 72,887-25 செலவிடப்பட்டுள்ளது. கல்லூரிப் படிப்புக்கான உதவிச் சம்பளம் கோரி மொத்தம் வரப்பெற்ற 677 மனுக்களில் முழுவதும் தீர்வு செய்யப்பட்டு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் கல்லூரியில் பயிலும் அரிசன மற்றும் மலை ஜாதி மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க இந்திய அரசினால் அனுமதிக்கப்பட்ட தொகை மொத்தம் ரூ. 2,64,500 ஒதுக்கப் பட்டுள்ளது. இந்திய அரசு உதவிப் பணம் கோரி மொத்தம் வரப்பெற்ற 483 மனுக்களையும் தீர்வு செய்யப்பட்டு ரூ. 94,537·50 வழங்கப் பட்டுள்ளது.

பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ. 1,43,900 ஒதுக்கப் பட்டுள்ளது. 6,768 மனுக்களுக்கு ரூ. 1,42,890 வழங்கப் பட்டது.

கல்லூரியில் பயின்று வரும் பின் தங்கிய மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ. 5,46,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 4,103 மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் ரூ. 4,62,075 வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் பரம்பரையைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க மொத்தம் ரூ. 25,200 ஒதுக்கப்பட்டதில் ரூ. 18,054 செலவு செய்யப்பட்டது. மொத்தம் 66 மனுக்கள் வரப் பெற்று முழுவதும் தீர்வு செய்யப்பட்டு உதவிச் சம்பளம் வழங்கப் பட்டுவிட்டது.

குமரி மாவட்டத்தில் அரிசன மாணவ, மாணவியரின் நலனுக்காகக் கீழ்க்காணும் விடுதிகள் அரிசன நலத் துறையின் பொறுப்பில் நடத்தப்படுகின்றன.

1. மாணவர் விடுதி, நாகர்கோவில்.
2. மாணவர் விடுதி, பூதப்பாண்டி.
3. மாணவர் விடுதி, தக்கலை.
4. மாணவர் விடுதி, குழித்துறை.
5. மாணவியர் விடுதி, மார்த்தாண்டம்.
6. மாணவியர் விடுதி, கன்னியாகுமரி.
7. மாணவியர் விடுதி நாகர்கோவில்.

8. தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, நாகர்கோவில்.

9. கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில்.

தவிர மலைஜாதியினர் நலனுக்காகப் பத்துக்காணியில் மாணவியர் இல்லம் ஒன்று 1-7-1971-ல் துவக்கப்பட்டது.

இந்த விடுதிகள் பராமரிப்புச் செலவுக்காக ரூபாய் 1,29,000 ஒதுக்கப்பட்டதில் இன்றுவரை ரூ.1,26,450 செலவு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டுக்கு மேலும் ரூபாய் 34,200 அதிகப்படியாகக் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் புதிய விடுதி

இவைகள் மட்டுமல்ல, கல்லூரியில் படிக்கும் பிற்பட்டோர் மாணவியர் விடுதி ஒன்று 27—10—1971 அன்று நாகர்கோவிலில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவைப் பிறபட்டோர் நலத்துறை ஏற்றுள்ளது.

பள்ளிக்கூடங்கள்

மலைஜாதியினர் குழந்தைகள் படிப்பு வசதிக்காகப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி என்ற இடங்களில் இரண்டு தங்கிப் பயிலும் பள்ளிகளும் பத்துக்காணியில் ஒரு தொடக்கப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. இவைகள் பராமரிப்புக்காக ரூ. 35,950 ஒதுக்கப்பட்டு, ரூ. 48,800 செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 14,400 அதிகமாகக் கோரப்பட்டுள்ளது.

கல்வியறிவில்லாத அரிசனங்களுக்கு எழுத்தறிவூட்ட ஒன்பது இரவுப் பள்ளிகளும் 23 நூல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதற்கென இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபாய் 7,000. இன்று வரை ரூபாய் 5,000 செலவிடப்பட்டுள்ளது.

கற்காடு, தாழக்குடி ஆகிய இடங்களில் சமுதாய நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இதற்கு ரூபாய் 13,879 செலவிடப்பட்டுள்ளது. தீபாவளிக்கும், பொங்கலுக்கும் இங்குள்ள குழந்தைகளுக்குத் துணிகள் வழங்கப்படுகிறது. இந்நிதியாண்டுக்கு மேலும் ரூபாய் 4,800 அதிகமாகக் கேட்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்கள்

குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் ஒரு தையல் நிலையமும், ஒரு நெசவுப் பயிற்சி நிலையமும், மலைவாழ் மக்கள் நன்மைக்காக அரிசன நலத் துறையின் பொறுப்பில் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ரூபாய் 10,45[illegible] செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 3,400 அதிகமாகக் கேட்கப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பனரின் நலனுக்காகப் பாகோட்டில் ஒரு தும்புப் பயிற்சி நிலையமும், ஒரு பிரம்புப் பயிற்சி நிலையமும், பிற்பட்டோர் நலத்துறை பொறுப்பில் இயங்கி வருகின்றன. இதற்காக ரூபாய் 25,150 செலவிடப்பட்டுள்ளது.

தொழிற் கருவிகள் வாங்க இந்த நிதியாண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ரூபாய் 8,000-ம், பின் தங்கிய வகுப்பினருக்கு ரூபாய் 15,190-ம், மலைஜாதியினருக்கு ரூபாய் 5,100-ம் ஒதுக்கப் பட்டுள்ளது. தகுதியோர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு கீழ்க் குறிப்பிடும் கருவிகள் விரைவில் வழங்கப்பட இருக்கின்றன.



தையல் இயந்திரம்—24.

சவரத் தொழிற் கருவி—163.

சலவைத் தொழிற் கருவி—62.

தோல் தைக்கும் கருவி—1.

தச்சுத் தொழிற் கருவி—1.

அரிசன விவசாயிகளுக்கு இலவசமாக உழவு மாடுகள் வழங்க இந்நிதியாண்டில் ரூ. 6,000-ம், மலைவாழ் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ. 8,400-ம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 18 மலைஜாதியினருக்கும், 13 அரிசனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் உழவுமாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயத்திற்குக் கிணறு வெட்ட மானியம் கேட்டு வரப்பெற்ற மனுக்களுக்கு ரூபாய் 2,000 அளிக்கப் பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் அரிசனங்கள் நலனுக்காகக் குடிதண்ணீர் கிணறுகள் வெட்ட ரூ. 57,000-ம், மலைவாழ் மக்கள் நலனுக்காக ரூ. 3,000-ம் ஒதுக்கப் பட்டுள்ளது. 26 அரிசனக் குடியிருப்புகளில் கிணறுகள்வெட்டும் வேலை நடந்து வருகின்றன. 31 — 1 — 1972-ல் ரூ. 31,649 செலவு செய்யப்பட்டுள்ளது. மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் பத்துக் காணியில் ரூ, 3,000 மதிப்பீடு உள்ள தொகையில் ஒரு குடிதண்ணீர்க் கிணறு தோண்டப்படுகிறது.

இந்த நிதியாண்டில் வேலைக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 32,000-ல், இதுவரை ரூ. 26,700 செலவிடப்பட்டுள்ளது. இத் தலைப்பின் கீழ் முட்டைக்காடு குடியிருப்புக்கு ஒரு சாலையும், நெட்டாங்கோடு, பத்தரை முதலிய குடியிருப்புகளில் உள்ள சாலைகளில் பழுது பார்த்தல் முதலிய வேலைகள் செய்து முடிக்கப் பட்டன. தவிர சாலை அமைத்தல் தடுப்புச் சுவர் கட்டுதல், வடிகால் கட்டுதல், பாலம் கட்டுதல் ஆகிய 9 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மண்டபங்கள்

செண்பகராமன் மண்டபம், வீரபாண்டியன் மணிமண்டபம் உதய மார்த்தாண்ட மண்டபம், இடபமண்டபம்-இம்மண்டபங்கள் எங்கே உள்ளன? சுசீந்திரம் ஆலயத்தில்தான்.

கம்பன் காவியம்

வால்மீகி இராமாயணத்தில் அசுவமேத யாகமும், சீதையை இராவணன் கரங்களால் தூக்கிச் செல்வதும் குறிக்கப் படுகின்றன அல்லவா? ஆனால், சுசீந்திரம் ஆலயத்தேயுள்ள சிற்பங்களில் இராமாயணக் கதை காட்டப்படுகிறது; அதில் அசுவமேத யாகத்தைக் காட்டும் சிற்பங்கள் இல்லை. சீதையை இராவணன் தேரில் வைத்துச் செல்லும் சிற்பமே காணப் படுகிறது; இது ‘மண்ணொடும் அகழ்ந்து சென்றான்’ என்ற கம்பன் தமிழ்ப் பண்பில் செதுக்கப்பட்ட சிற்பம் என்பது புலனாகிறதல்லவா?

குமரிக் கடற்கரையில் காந்தி மண்டபம்

கன்னியா குமரிக் கடற்கரையில் காந்தியடிகளின் நினைவு மண்டபம் பொலிவுடன் காட்சி தருகிறது.

காந்தியடிகளின் எலும்பில் ஒரு பகுதி குமரிக் கடலில் கரைப்பதற்காகக் கொண்டு வரப்பட்டு, மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த இடம் தான் - நினைவு மண்டபமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

மண்டபத்தின் முகப்பில் காந்தியடிகளின் கோட்பாடுகள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

வாய்மை, இன்னா செய்யாமை, அமைதி, இவைதான் அங்கு எழுதி வைக்கப் பட்டுள்ள கோட்பாடுகள்.

இந்நிதியாண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரிசனங்களுக்குப் பயன்படும் சாலை, பாசனம் ஆகிய வேலைகளுக்கு மானியம் கொடுப்பதற்கு ரூபாய் 6,000- அனுமதிக்கப் பட்டு முழுத் தொகையும் வழங்கப் பட்டது.

வீடுகள் கட்ட நிலம் உள்ள ஏழை அரிசனங்களுக்கு மானியமாக வழங்குவதற்கு ரூ. 8280 கடன் அளிக்க ரூ. 3,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது. 12 பயனடைவோர்களைத் தேர்ந்தெடுத்து ரூ.250-ம் மேற்படி பன்னிரண்டு நபர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது . மீதி மானியத் தொகை தலா ரூ. 190-ம் வீடுகள் கட்டி முடித்ததும் அவர்களுக்கு வழங்கப்படும்.

தீண்டாமை ஒழிப்பதில் முன்னணியில் நிற்கும் கிராமங்களுக்குப் பரிசளிக்க ரூபாய் 1,500 ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் பரிசு ரூ. 1000-ம்; இரண்டாம் பரிசு ரூ. 500-ம் கொடுக்கப்படவேண்டும். கல்குளம் வட்டத்தில் செம்பொன்காரை என்ற கிராமம் தீண்டாமை ஒழிப்பதில் முதலாவதாகவும், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் பாதிரிகோடு கிராமம் இரண்டாவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் சுத்தமாக வைத்திருக்கும் குடிலுக்கு ஒவ்வொரு வானொலிப் பெட்டி வழங்க ரூ. 900 ஒதுக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வானொலிப் பெட்டி வழங்க நடவடிக்கையில் உள்ளது.

இந்த நிதியாண்டில் நாகர்கோவில், மார்த்தாண்டம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் 238 மாணவியர்களுக்குத் தீபாவளி, பொங்கல் திருநாட்களையொட்டி ரூ. 4,000 சீருடைகள் அளிக்கப் பட்டன.

மலைவாழ் மக்களுக்காக உள்ள பேச்சிப் பாறை, பெருஞ்சாணி, பத்துக்காணி பாடசாலைகளில் பயின்று வரும் மலைவாழ் மக்களின் மாணவ மாணவிகளுக்குச் சீருடைகள், புத்தகம் முதலியவை வாங்கி அளித்த வகையில்

உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2
SANKAR CEMENT
I C
மலிவு விலை நகர்ப்புற வீடு
உறுதியானது, நிலையானது ஆனாலும் மலிவானது
சங்கர் சிமெண்ட்
பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், துன் பில்டிங், சென்னை-2
25



ரூ. 4,025 செலவிடப் பட்டுள்ளது.

தவிர அரிசன நலத்துறைப் பொறுப்பிலும், மற்றுமுள்ள பல துறைகளின் பொறுப்பிலும் பல திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவைகளின் விவரங்கள் கீழ் வருமாறு :—

கண்ணன்சேரி கைக்காகித உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

சாமித் தோப்பு சுண்ணாம்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

செண்பகராமன்புதூர் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

தும்பவிளை செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

செம்முதல் சுண்ணாம்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

கிராத்தூர் சுண்ணாம்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

ஆறுமுகபுரம் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம்.

அரசர்கோணம் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம்.

கோட்டூர் கோணம் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம்.

குரல் பயிற்சி தொழில் நிலையம், கரியமாணிக்கபுரம்.

தையல் பயிற்சி நிலையம். அண்டூர்.

தையல் பயிற்சி நிலையம், மருங்கூர்.

பனை ஓலைப் பொருள் உற்பத்தி நிலையம், இடைக்கோடு.

மணல் ஏற்றுமதி

இந்தியாவிலேயே சிறந்த கிராமம் என்று குமரி மாவட்டத்திலுள்ள மணவாளக் குறிச்சியைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்துள்ளது மைய அரசு. குருத்தங்கோடு ஒன்றியத்திலுள்ள மணவாளக் குறிச்சியில் மணல் ஆலைஒன்று இயங்கிவருகிறது. இந்த ஆலையில் 1,500 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். கடற்கரையைச் சுற்றியுள்ள சுமார் இரண்டு மைல் தொலைவுள்ள கடல் மணலை எடுத்து அந்த மண்ணில் இருந்து இல்மனைட், மோனேசைட், சர்க்கனைட், ருட்டைல், பார்னட் ஆகிய உலோகப் பொருட்கள் பிரித்து எடுக்கப்படுகின்றன. இல்மனைட்டிலிருந்து டைட்டேனியம் டி ஆக்ஸைடு தயாரிக்கப்படுகின்றது. இப்பொருள் பெயின்ட், ரப்பர் சாமான்கள், டெரிலின் துணிகள் போன்றவைகள் தயாரிக்கத் தேவைப்படுகிறது. டைட்டானியம் உலோகமும் தயாரிக்கப்படுகிறது. இந்த உலோகம் மிகச் சக்தி வாய்ந்ததாகும்.

மோனேசைட் அணுசக்தி உற்பத்திக்கும், கார்னேட் மேன்டில் தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது. மின்சார அடுப்புகள் தயாரிக்கச் சார்க்கனேட் பயன்படுத்தப்படுகிறது. தேய்ப்புத்தூள், உப்புத்தூள் தயாரிக்கக் கார்னட்டும் பிளேட் பாலிஸ் செய்ய இல்மனேட்டும் உபயோகிக்கப்படுகிறது.

இந்த மணல் வகைகள் மணவாளக் குறிச்சியில் மிக அண்மையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க குளச்சல் துறைமுகத்திலிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி பெறப்படுகிறது.

சீரணியின் மாபெரும் சாதனை

மடிச்சல் கால்வாய்

குமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்திலுள்ளது மேல்புரம் ஊராட்சி ஒன்றியம்.

மேல்புறம் ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,01,859 ஆகும். ஆனால், இவ்வொன்றியத்தில் முக்கால் பகுதி மலைகள் நிறைந்ததாக உள்ளது, இந்த வட்டாரத்தின் தென் பகுதி நெய்யாற்றின் இடக்கரைக் கால்வாயின் மூலம் பாசன வசதி பெற்றுள்ளது.

ஆனால், 'களியக்காவிளை முதல் மடிச்சல் பகுதி வரையில் 431 ஏக்கர் பாசன வசதிபெற ஒரு தனிக்கால்வாய் வெட்ட வேண்டும்' என்ற திட்டம் நெடுநாளாக இருந்தது. ஆனால், நிதி நிலை காரணமாக இந்தத் திட்டம் நிறைவேறாமல் இருந்தது.

நெய்யாறு இடக்கரைக்கால்வாயிலிருந்து வெட்டப்படவேண்டிய மடிச்சல் கிளைக்கால்வாய்க்கு ரூபாய் 4.25 இலட்சம் செலவாகும் என்று பொதுப்பணித் துறையினர் மதிப்பிட்டுள்ளனர். ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பொதுப்பணித் துறையினர் கொடுத்திருந்த இந்தச் செலவு இன்று மேலும் அதிகமாகும் சூழ்நிலைதான்.

ஆனால், இந்தத் திட்டத்தைச் சீரணியினர் தங்கள் அரும்பணியால் நிறைவேற்றி வருகின்றனர்.

சீரணியின் மாபெரும் பணியால் உருவாகியுள்ள மடிச்சல் கால்வாயைக் காணும் எவரும் வியக்காமல் இருக்கமுடியாது.

நெய்யாறு இடக்கரைக் கால்வாயிலிருந்து வெட்டப்படும் மடிச்சல் கிளைக் கால்வாயின் நீளம் இரண்டரை மைல் ஆகும். இடத்தின் தன்மையைப் பொறுத்து இக் கால்வாயின் ஆழம் அமைந்துள்ளது. சில இடங்களில் ஆறு அடி ஆழம் உள்ள மடிச்சல் கிளைக்கால்வாயில் 35 அடி ஆழம் வரை வெட்டப்பட்டுள்ளது.

முப்பத்தைந்து அடிவரை ஆழமுள்ள இடங்களைக் காணும் பொழுது பாறைகளில் குறுக்கே கால்வாய் வெட்டப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுதும் இக்கால்வாயை வெட்டியுள்ளவர்களை மனமாரப் பாராட்டத் தோன்றும்.

சீரணியின் திட்டத்தில் உருவாகியுள்ள மடிச்சல் கிளைக் கால்வாய் இதுவரை பெறப்பட்டுள்ள அரசின் உதவித் தொகை ரூ. 11,337 ஆகும். இதன் மூலம் ஒரு மைல் ஆறு பர்லாங் நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இக் கால்வாயில் இப்பொழுதே ஒரு மைல் ஐந்து பர்லாங் தொலைவுக்குத் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

கால்வாய் நீளமான இரண்டரை மைலில் வெட்டி முடிக்கப்பட்டுள்ள ஒரு மைல் ஆறு பர்லாங் தவிர மற்றப் பகுதிகளை வெட்ட அரசு இப்பொழுது ரூபாய் 52,600 உதவி வழங்க முன்வந்துள்ளது. கடுமையான பாறைப் பகுதிகளையும், மேடான பகுதிகளையும் வெட்ட வேண்டியிருப்பதால் மீதியுள்ள பகுதிகளை வெட்ட முன்னர்ச் செலவிட்டதை விடச் சிறிது அதிகமாக ஆகும். எப்படிப் பார்த்தாலும் சீரணித் திட்டத்தில் உருவாகியுள்ள இந்தக் கால்வாய் பெருமைக்குரியதும் பிரும்மாண்டமானதுமாகும்.

இக் கால்வாயை வெட்டச் சீரணியினருடன் ஒத்துழைத்த பொது மக்களும் பெரும் பாராட்டுக் குரியவர்கள் ஆவார்கள்.

விளவங்கோடு வட்டத்தில் வறட்சி நிறைந்த இடமாகக் காணப்பட்ட 431 ஏக்கர் நிலங்களும் பசுமை குலுங்கும் இடமாக மாறி வருகிறது.

சீரணித் திட்டத்தில் உருவான மடிச்சல் கிளைக்கால்வாயே இதற்குக் காரணம் என்று மேல்புறம் ஒன்றியத்தின் தென் பகுதி மக்கள் அனைவரும் நன்றியறிதலோடு சொல்லுகின்றனர்.

சுந்தரசோழ சதுர்வேதி மங்கலம்

இது நாஞ்சில் நாட்டில் இருக்கிறது எனும்போது வியப்பு ஏற்பட தல்லவா? இங்கு ஏழு நிலைகளையுடைய வானளாவிய கோபுரம் உள சிற்பக்கலை சிறந்த ஆலயம் உண்டு; ஏழிசை காட்டும் கற்றூண்கள் இக் கின்றன. பேருருவம் படைத்த அனுமன் உருவமும் இங்குக் காணலாம். இது எந்த ஊர்? இதுதான் சுசீந்திரம் என வழங்கப்படும் அழ சிற்றூர். இங்குள்ள ஆலயப் பணிகளில் சோழ, பாண்டிய, கேரள, விசயநகர மன்னர்கள் பலரும் பங்கு கொண்டுள்ளனர்; ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட கல் வெட்டுக்கள் இக்கோவிலின் சுவரிலும், மற்ற புறத்திலும், காறைகளிலும் காணப்படுகின்றன. ஒன்பதும் நூற்றாண்டில் வாழ்ந்த மாறன்சடையன் காலத்திய கல்வெட்டே மிகப் பழமையானதெனக் கருதப்படுகிறது. இ.பி. 906–ல் அரசுக் கட்டிலேறிய ஆதித்தன் புதல்வனாகிய முதற் பராந்தகன் கல்வெட்டும் இங்கு உள்ளது. இ.பி. 985–ல் அரசேறிய முதல் இராச இராசனின் ஆட்சியிலும் இவ்வூர் இருந்தது. ஆனால், பன்னிரண்டாம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் பாண்டியர் ஆட்சியில் இது வந்தது. பாண்டியன் மாறவர்மன் இதனை ஆண்டான். எனவே, சுந்தரபாண்டிய சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரால் இவ்வூர் அழைக்கப்பட்டது.

சுசீந்திரம் கோவிலுக்குள் பல மன்னர்களின் சிலைகள் உள்ளன; திருமலை நாயக்கரின் சிற்பத்திறன் அமைந்த இரு சிலைகளும், விசயநகர மன்னர்களின் சிலைகளும் கண்கவரும் வகையில் அமைந்துள்ளன.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அரசு அளிக்கும் கல்விச் சலுகை

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குப் பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை உதவித் தொகை வழங்கி வருகிறது. இவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை இருவகைப்படும். ஒன்று ‘உண்டி-உறையுள் தவித் தொகை’ (Residential Scholarship) மற்றொன்று ‘சம்பள உதவித் தொகை’ (Non-Residential cholarship) ஆகும்.

இச்சலுகைகள் 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று ண்டு வருமானம் ரூ. 2,000-க்கு மேற்படாத டும்பத்தைச் சேர்ந்த பின் தங்கிய வகுப்பு மாணவர் ள் அனைவருக்கும் உண்டு.

உண்டி-உறையுள் சலுகை பின்தங்கிய வகுப்பி ருக்கு கல்லூரிப் படிப்புக்கு மட்டும் கொடுக்கப் டும். 9, 10,11-ஆம் வகுப்புகளில் படிக்கும் ன்தங்கிய மாணவர்களுக்குக் கட்டணங்கள் (fees) த்தகச் செலவு, தனிக் கட்டணங்கள் (Special fees) குலியவை ஈடு செய்யப்படுகின்றன. இவர்களுக்கு ண்டி, உறையுள் சலுகை கிடையாது.

ரூ. 1,500-க்கு உட்பட்ட வருமானமுள்ள பின் ங்கிய வகுப்பு மாணவர்களுக்குக் கல்வித் துறையினர் அரைச் சம்பளச் சலுகை அளிக்கின்றனர். மீதியுள்ள அரைச் சம்பளத்தைப் பின் தங்கிய வகுப்பினர் துறை அளிக்கிறது. ரூ. 1,500-க்கு மேல் ரூ. 2,000 வரை ருமானமுள்ள பின்தங்கிய மாணவர்களுக்குப் ற்பட்ட வகுப்பினர் நலத் துறை அரைச் ம்பளச் சலுகை அளிக்கிறது. குறிப்பிட்ட சில டெக்னலஜிக்கல் (Technological) படிப்புகளுக்கு முழுச் ம்பளச் சலுகை அளிக்கப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்று வரும் ற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குக் கல்வித் துறை யினரால் கொடுக்கப்படும் உதவித் தொகை (Stipend) போகப் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறையும் கீழ்க் கண்டவாறு உதவி அளித்து வருகிறது.

Elementary Grade Junior Rs. 15 per annum, Senior Rs. 18 per annum; Secondary Grade Junior R. 35 per annum, Senior Rs. 25 per annum. அல்லது B. T. அல்லது B. Ed. பயிலும் மாணவர்களுக்கு உண்டி-உறையுள் (Residential) உதவித்தொகையும், அது அல்லாத உதவித் தொகையும் அளிக்கப்படுகி றது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் கல்விக்கு உதவித் தொகை அளிக்க நடப்பு ஆண்டில் ரூ. 275.96 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கியவகுப்பு மாணவர்கள் தங்கிப் படிக்க 28 விடுதிகள் அரசினரால் நடத்தப்படுகின்றன. 1971-72-ஆம் ஆண்டில் 50 விடுதிகள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதில் உறையும் மாணவர்களுக்கு உணவுக்கு மாதம் ஒன்றுக்குத் தலைக்கு ரூ. 25 வீதம் செலவிடப்படுகிறது.

மேற்சொன்ன அரசினர் விடுதிகளைத் தவிரத் தனியாரால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதமொன்றுக்குத் தலைக்கு ரூ. 20 வீதம் மானியமாக அளிக்கப்படுகிறது.

(சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிக்கை)

சுசீந்திரம் கைமுக்கு

இது என்ன மூக்கா? முக்கா? அன்று; நீதி வழங்கிய பழைய முறை.

பிழையிழைத்த நம்பூதிரியினத்தார்க்கு நீதி சுசிந்திரத்தில் வழங்கப் பட்டு வந்தது; செண்பகராமன் மண்டபத்தில் மேலே ஒரு சதுர வெளி ஒன்று உள்ளது. அதன் வழியாகக் கதிரவன் தலைக்கு மேல் வந்த நடுப்பகலை அறியலாம். அங்குக் கதிரவனைச் சாட்சியாகக் கொண்டு, குற்றமிழைத்தோர் சோதனை செய்யப்படுவர்; அகன்ற பெரிய பாத்திரத்தில் நெய் நன்றாகக் காய்ச்சப்படும்; ஒருவிதப் பச்சிலை கொண்டு அந்நெய்யின் சூட்டை அறிந்து கொள்வர்; பின்னர் அந்நெய்யிலே பொன்னால் ஆக்கப்பட்ட நந்தியை இடுவர்; குற்றவாளி என ஐயுறப்பட்டவர் அவையோர் முன்னிலையில் கொதிக்கும் அந்நெய்யில் கையிட்டு அதனை எடுப்பர்; நெய்யால் கை வெந்து போகவில்லையானால் அவர் குற்றமற்றவரெனக் கருதப் படுவாராம். இதுதான் சுசிந்திரம் கைமுக்காகும்.

ஆலயமும் ஆண்டவனும்

ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான். ஆண்டவன் பழனியில், மதுரையில், காஞ்சியில் இருக்கலாம். ஆனால், உண்மையாக இருக்கும் இடம், ஏழையர் இல்லத்தில் தீபத்தை ஏற்றிவைக்கப் பாடுபடுகிறவன் உள்ளத்திலும், உணர்விலுமே!

* * *

தொண்டுதான் பக்தி யென்றால், நாங்களும் பக்தர்களே! நான் செல்லும் ஆலயம், பிச்சைக்கார விடுதிகள். நான் வணங்கும் தெய்வங்கள் பிணியாளர்கள்.

—முதல்வர் கலைஞர்



தமிழ் நாட்டில் சுற்றுலாவுக்கு ஒரு மாவட்டம் நீலகிரி மாவட்டம் தானே என்கிறீர்களா? இப்பொழுது தமிழ் நாட்டில் அந்தப் பெருமையைப் பெற்றுவரும் இன்னொரு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்.

இந்திய பூபாகத்தின் தென்கோடியில் முக்கடலும் முத்தமிட அமைந்துள்ள குமரிமுனை, சமயப் பெருமைகளுடன் வரலாற்றுச் சிறப்புகளும் மிக்கதாக விளங்கியதால் இந்தியாவில் உள்நாட்டில் சுற்றுப் பயணம் செய்பவர்களுக்கு ஒரு முக்கிய இடமாகத் திகழ்ந்தது, அந்நிலை இன்று மேலும் வளர்ந்துள்ளது.

உள்நாட்டுச் சுற்றுலாக்காரர்களையும் வெளிநாட்டுச் சுற்றுலாக்காரர்களையும் இன்று கன்னியாகுமரி பெருமளவில் கவரும் இடமாக வளர்ந்துள்ளது. இதன் முக்கிய காரணங்களில் ஒன்று—

விவேகானந்தர் நினைவு மண்டபம்

கனடா நாட்டிலிருந்து கன்னியாகுமரிக்கு வந்திருந்த வெளிநாட்டுக்காரர் ஒருவர் சொன்னார், “நான் இந்தியாவுக்கு வரும்பொழுது தாஜ் மகாலைப் பார்க்காவிட்டாலும் விவேகானந்தர் நினைவு மண்டபத்தைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் வந்தேன். இந்த நாட்டுக்கு வரும் ஒவ்வொரு வெளிநாட்டவரும் பார்க்க வேண்டிய இடம் விவேகானந்தர் நினைவு மண்டபம்” என்று.

இந்த அளவுக்கு அயல்நாட்டவர் மனத்தையெல்லாம் கவர்ந்துள்ளது விவேகானந்தர் நினைவுப் பாறையில் கட்டப்பட்டுள்ள நினைவு மண்டபம். 1892-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் அன்று கன்னியாகுமரிக் கரையிலிருந்து 1600 அடி தொலைவிலுள்ள ஸ்ரீபாத பாறையை நோக்கி நீந்திச் சென்று அங்கு அமர்ந்து தியானத்தில் இருந்தார் விவேகானந்தர்.

இதனைக் “கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலில் இந்தியாவின் கடைசித் துண்டுப் பாறையில் இருந்தபோது என்னுள்ளத்தினுள் ஒரு திட்டம் தோன்றியது” என்று விவேகானந்தர் அவர்களே கூறியுள்ளார்கள்.

அந்தத் திட்டத்தால் உலக அறிஞர் பெருமக்களில் ஒளிச் சுடராய்த் திகழ்ந்தார் விவேகானந்தர். அருளொளி பெற்ற பாறையில் அந்த அறிஞர் பெருமகன் நினைவு மண்டபம் எழுப்ப 1964-ஆம் ஆண்டு தமிழக அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டு நினைவு மண்டபம் கட்டத் தொடங்கினார்கள்.

நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 1970-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாளன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி திறந்து வைத்தார்கள்.

எண்பது லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த நினைவு மண்டபம் திராவிடக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் பேளூரில் உள்ள ராமகிருஷ்ண ஆலயம் போன்றும் அமைக்கப் பட்டுள்ளது. மொத்தத்தில் இந்தியக் கலைகள் அனைத்தும் ஒருங்கே இணைக்கப் பட்டுள்ளன.

தேசியச் சின்னமான இந்த நினைவு மண்டபத்திற்கு எல்லா மாநில அரசுகளும் ஏராளமான உதவிகளை அளித்துள்ளன. தமிழ்நாடு அரசு பெருமளவில் உதவி அளித்துள்ளது.

மூன்று ஏக்கர் பரப்பளவும் கடல் மட்டத்துக்கு மேல் 55 அடி உயரமுமுள்ள இப்பாறையில் கட்டப்பட்டிருக்கும் நினைவு மண்டபம் தமிழகக் கட்டடக்கலை வல்லுநர்களின் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மழையினால் கிடைக்கும் நீரைத் தேக்கி வைக்கப் பெரிய நீர்த்தொட்டிகளும் ஹெலிகாப்டர் விமானம் இறங்குவதற்குத் தளமும் இப்பாறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் எட்டடி உயரமுள்ள விவேகானந்தர் வெண்கலச் சிலையின் கம்பீரம் காண்பவர் அனைவரையும் கவரும் தன்மை உடையது.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவில் உப்புக்காற்றால் பொரிந்து பொரிந்து காணப்படுகிறதே, அது போன்ற நிலை விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு ஏற்படாதவாறு மண்டபம் அமைந்திருக்கும் வண்ணத்தில் ஆறு திங்களுக்கு ஒருமுறை இரசாயனப் பூச்சுப் பூசுகிறார்கள்.

விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் காணப்படும் துப்புரவு எல்லா ஆலயங்களுக்கும் வழிகாட்டியாக உள்ளது.

காலை முதல் மாலைவரை எல்லா இந்திய மொழிகளிலுமுள்ள பாடல்களையும் ஒலிபரப்புகிறார்கள்.

கரையிலிருந்து விசைப்படகு மூலம் நினைவு மண்டபத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். கட்டணம் கிடையாது. ஆனால் மண்டபத்திற்குச் செல்பவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் அவர்களால் முடிந்த தொகையைப் படகுப் போக்குவரத்துக்கு ஆகும் செலவுகளுக்காக நன்கொடை தருகிறார்கள். யாரிடமும் குறிப்பிட்ட அளவில் கட்டணம் வசூலிப்பதில்லை!

விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் படங்கள் கொண்ட கண்காட்சியையும் விவேகானந்தர் நினைவு மண்டபக் குழுவினர் வைத்துள்ளனர். இக்கண்காட்சியை நிரந்தரமாக அமைத்தால் அனைவருக்கும் பயனளிக்கும் என்று தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதற்கிணங்க இக்கண்காட்சியை நிரந்தரமாக வைத்துள்ளனர்.

விவேகானந்தர் பாறையைக் காண வருபவர்களின் வசதிக்காக விவேகானந்தபுரம் என்ற அழகிய குடியிருப்புகளையும் அமைத்துள்ளனர். இங்குத் தங்கக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

விவேகானந்த புரத்திலுள்ள தென்னஞ் சோலைகளிலே அமர்ந்து விவேகானந்தர் மண்டபத்தைக் காணும் காட்சி மிக அருமையான காட்சியாகும்.

விவேகானந்தர் நினைவு மண்டபத்தின் தென் கோடியில் நின்று தென் திசையை நோக்கினால் கண்ணில் தெரியும் நீர்ப்பரப்பில் பூமிப்பந்தின் தெற்குக் கோடிவரை நிலப்பரப்பே இல்லையாம். ஆமாம் பதினைந்தாயிரம் மைல் தொலைவு வரை–குமரி முனைக்கு நேராக வேறு நிலப்பரப்புக் கிடையாது.

இந்தப் பெருமைகளோடு குமரி முனைக்குரிய பழம்பெருமை மிக்க ஆலயமும் சுற்றுலாக்காரர்களை ஈர்க்கின்றது.





186 ஏக்கர் பரப்பளவில் கல்குளம் கோட்டை கி. பி. 1601 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அதற்கு முன்னரே அங்கு அரண்மனை கட்டப்பட்டிருந்தது என்று அறிகிறோம்.

குன்றுகளுக்கும் ஆறுகளுக்குமிடையே அமைந்த கல்குளம் கோட்டையின் மையத்தில் அரண்மனை கட்டப்பட்டுள்ளது.

கன்னிக்கோட்டையிலிருந்து இளவரசர்கள் அகதிகளாக வந்து திருவனந்தபுரத்தில் தங்கியதால், இங்கிருந்து தலைநகரைத் திருவனந்தபுரத்துக்கு வேணாட்டு அரசர் மார்த்தாண்ட வர்மா 1744 ஆம் ஆண்டில் மாற்றிய பொழுது கல்குளம் கோட்டையையும் அரண்மனையையும் அனந்தைத் திருமால் பத்மநாப சுவாமிக்கு அர்ப்பணித்துவிட்டாராம். அன்று முதல் கல்குளம் பத்மநாபபுரமாகிவிட்டது.

64 மூலிகை மரங்களாலான கட்டில் இது

அரண்மனையில் உள்ளது!

நாகர்கோவிலிலிருந்து வடக்கே பத்துமைல் தொலைவில் உள்ளது பத்மநாபபுரம்.

1744-ஆம் ஆண்டுவரை இவ்வூர் கல்குளம் என்றே அழைக்கப்பட்டதாகக் கல் வெட்டுகள் கூறுகின்றன.

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே கட்டப்பட்ட அரண்மனை இங்கு உள்ளது. வேணாடு என்று அழைக்கப்படும் முன்னாள் திருவிதாங்கூர் இராச்சியத்தின் தலைநகராக கல்குளம் கி. பி. 1550 ஆம் ஆண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை விளங்கியுள்ளது.

பத்மநாபபுரம் பல மாட மாளிகைகளோடு சிறப்புற விளங்கியதாக 'சாதக சந்தேசம்' என்ற வடமொழி நூல் கூறுகிறது. "கிழக்கிந்தியத் தீவுகளுக்கு ஒரு பயணம்" என்னும் நூலை எழுதிய பாலினோ பார்த்தலோமியோ எனும் பாதிரியார் 1783-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 23-ஆம் நாளிலிருந்து பதினாறு நாட்களுக்குப் பத்மநாபபுரம் அரண்மனையில் விருந்தினராகத் தங்கியிருந்தாராம்.

ஊறுகாய்ப்பானை!

அரண்மனை முன்னேயுள்ள அழகிய பூந்தோட்டத்தில் இருக்கும் மணிக்கூண்டு இந்தியாவிலேயே மிகவும் பழமையான மணிக்கூண்டுகளில் ஒன்றாகும்.

மணிக்கூண்டிலுள்ள கடிகாரம் ஒரு கிராமத் தொழிலாளியால் செய்யப்பட்டது. இது ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டது. இதன் ஓடும் சக்தி தொங்கவிடப்பட்டுள்ள இரு கற்களினின்றும் பெறப்படுகின்றது. இக்கற்கள் உள் சக்கரத்திலிருந்து சுமார் 9 மீட்டர் நீளமுள்ள சங்கிலியால் தொங்கவிடப்பட்டுள்ளன. வாரந்தோறும் தூக்கப்படுகின்ற பளுவினாலும் ஐந்து அங்குலமுள்ள பெண்டுலத்தினாலும் இக்கடிகாரம் ஓடுகிறது. பெரிய மணியோடு அதன் நாக்கு மோதுவதால் ஏற்படும் ஓசை மூன்று கிலோ மீட்டர் தொலைவு வரை கேட்குமாம்.



பழமையான ஆயுதங்களும் 1741-ஆம் ஆண்டிலிருந்து குளச்சல் துறைமுகத்திலே டச்சுக்காரர்களைப் போரிலே வெற்றி பெற்று அவர்களிடமிருந்து கவர்ந்த மேனாட்டு ஆயுதங்களும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் உள்ளன.

வழிபாட்டு அறையிலுள்ள தீபம் ஆண்டாண்டுக்காலமாக அணையாமல் பாதுகாக்கப்படுகிறது. சுவர் முழுதும் சித்திரங்களால் அழகுப்படுத்தப்பட்டுள்ளன.

முழுதும் மரங்களால் ஆகிய அறைகள், கூடங்கள் இந்த அரண்மனைக்கு அழகூட்டுவனவாக அமைந்துள்ளன.

உப்பரிகை மாளிகைக்கு மேற்கேயுள்ள நவராத்திரி மண்டபம் ஒரு விசாலமான அறையாகும். இதிலுள்ள மிக அழகிய கற்றூண்களும் அவைகளின் பூமுனைகளும் நாயக்கர் காலத்துக் கட்டடப் பாணியை நினைவூட்டுகின்றன.

வேணாட்டு மன்னர்கள் நாள்தோறும் 2000 பேர்களுக்கு இலவசமாக உணவு அளிப்பார்களாம். இந்த அரண்மனையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள ஆளுயர ஊறுகாய் ஜாடிகளைப் பார்த்தாலே தெரியும், ஒவ்வொரு நாளும் இந்த அரண்மனையில் உணவுக்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பது.

நாள்தோறும் தமிழகத்திலிருந்து செல்லும் ஏராளமான சுற்றுலாக்காரர்களின் முற்றுகைக்கு ஆளாகும் இந்த அரண்மனை தமிழகத்திலுள்ள குமரி மாவட்டத்தில் இருந்தாலும், கேரள அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பொறுப்பில் இருக்கின்றது.

இவைமட்டுமல்ல...

பெருஞ்சாணி, பேச்சிப்பாறை அணைகள் கோதையாறு மின்சாரத் திட்டங்கள் போன்றவையும் குமரி மாவட்டத்தில் காணவேண்டியவைகளாகும்.

திற்பரப்பு என்று இப்பொழுது சொல்லப்படும் திருப்பரப்பு அருவியும் அதன் அருகிலுள்ள மகாதேவர் ஆலயமும் காணவேண்டியவைகளாகும்.

மற்றும் இம்மாவட்டத்தில் புகழ்வாய்ந்த ஆலயங்கள் பல உண்டு. தாணு, மால், அயன் மூவருக்கும் சேர்ந்து அமைந்துள்ள சுசீந்திரம் ஆலயம் முதலியவையும் காண வேண்டிய இடங்களே.

மருந்துவாழ் மலை.

மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கு முனை, குமரி மாவட்டத்தில் தான் உள்ளது. இந்த இடம் இப்பொழுது மருந்து வாழ் மலை என்று அழைக்கப்படுகிறது.

அனுமான் சஞ்சீவி பர்வதத்தை எடுத்து வந்த பொழுது சிதறிய துண்டு இது என்று கதை சொல்லுபவர்களும் உண்டு. மருந்து வாழ் மலை பாறை போன்று காட்சியளித்தாலும் இங்கு இன்றும் ஏராளமான மூலிகைகள் உள்ளன.

ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

17. 'சர்க்கரைப் பொங்கலா?

தனிமையோ தணலாக எரிக்க, அதிலே சாம்பலாகக் கருகிக் கொண்டிருந்தாள் அந்தத் தளிர்க் கொடி.

சுவர்க் கடிகாரம் 'டண் டணார் டண் டணார்' —என்று இரண்டு தடவை ஓலமிட்டு விட்டது.

அகிலம் முழுவதுமே ஆழ்ந்த உறக்கக் கடலில் அமிழ்ந்த வண்ணம் இருக்கும் அந்த வேளையிலும், தனக்கு மாலையிட்ட மணாளன் வந்துவிட மாட்டானா என்றே அவள் எதிர்பார்த்தாள்—ஏங்கித் துடித்தாள்.

காலிலே பலமான அடிதான் என்றாலும், தன் தமக்கையை மருத்துவர்கள் கவனித்துக் கொள்ள மாட்டார்களா என்கிற மனத்தெளிவு வேண்டாமா மாதவனுக்கு? தன் தாய் தங்கியிருப்பது போதாதென்று தானும் ஏன் மருத்துவ மனையிலேயே குடியாய்க் கிடக்க வேண்டும்?

தனக்காக ஒரு பெண்புறா தவியாய்த் தவித்துக் கிடப்பதை உணர்ந்து தெளிந்து அவன் மட்டும் அந்த மாடி அறையினுள் இப்போது அடிவைக்கட்டுமே! உடனே ஓடிப் போய் அவனுடைய கால்களில் விழுந்து, கைகளில் பிணைந்து, மார்பினில் புதைந்து, மவுனத்தில் நெளிந்து தன்னைத் தானே அவனுக்குக் காணிக்கையாகத் தந்துவிட மாட்டாளா தேன்மொழி?

ஆனால், அவன் எங்கே அந்த நள்ளிரவுக்குப் பிறகு வந்து அவளை அள்ளிக் கொள்ளப் போகிறான் ஆசையோடு?

' உம்..எதற்குமே கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?'

—பெரு மூச்சுக்களைச் சிதற விட்டு என்னதான் தன்னைத் தானே தேற்றிக் கொள்ள முயன்றாலும்—தலைவிதியின் மீது பாரம் பழியைப் போட்டாலும்—மழைவிழுந்த மணல்மேடா மனக்கூடு—பதப்பட்டு அடங்கிப்போக?

அந்தப் பொருமலில்—புழுக்கத்தில்—எரிச்சலில்— ஏமாற்றத்தில்—இதயமே விண்டு வெடித்துவிடும் போல் இருக்கிறது தேன்மொழிக்கு?

அவளால் படுக்கையில் கிடக்கவே முடியவில்லை; அது நெருப்பாகவே சுடுகிறது.

அவளால் இமைக் கதவை மூடவே முடியவில்லை; இரும்புலாடமாகவே அது அழுத்துகிறது.

ஊதுவத்தியின் நறுமணத்தோடு போட்டியிடும் மல்லிகை மலர்கள் வெண்பட்டுக் கம்பளமாக அந்த வெல்வெட்டு மெத்தையிலே எவ்வளவுதான் விரிந்து கிடந்தென்ன? இறைந்து சிரித்தென்ன? அவற்றிலே தன் பூவினும் மெல்லிய மேனியை எவ்வளவு நேரந்தான் புரட்டி எடுப்பது? முகத்தைப் புதைப்பது?''

உண்மையில் உள்ளப் புழுக்கத்தைத் தாங்க முடியாமல் அவளுடைய உடம்பு முழுவதும் இப்போது வெப்பக் கூடாகவே வெலவெலத்துப் போய்விட்டது.

அறைப் புழுக்கத்தைப் போக்க மின்விசிறியைச் சுழலவிட்டால் போதும்.

ஆனால், மனப் புழுக்கத்தைப் போக்க எந்த விசிறியால் இயலும்—மாதவனின் மதுர முகம் ஒன்றைத் தவிர?

கட்டிலை விட்டு இறங்கினாள் தேன்மொழி. திருமணத்திற்காக வந்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் தங்கள் உற்றார் உறவினரையெல்லாம் தாண்டிக் கொண்டு, தங்கள் மாளிகை இல்லத்தின் மொட்டை மாடிக்குச் சென்றாள்.

அங்கே பூந்தொட்டிகளைத் தாங்கிய கட்டைச் சுவர் மீது குப்புறப் படுக்காத குறையாகக் கால்களை முட்டுக் கொடுத்த வண்ணம் சாய்ந்து நின்றாள் அவள். வலக்கரத்தால் மோவாயைத் தாங்கியவாறு தலையைச் சற்றே நிமிர்த்தி, வானக் கூடாரத்தின் மேல் தன் பார்வையைப் படரவிட்டாள்.

அங்கோ, விண்வெளியின் குத்துவிளக்கான நிலவுத் தலைவியைக் காணவில்லை; அகல் விளக்குகளான தாரகைத் தோழிகளே கண் சிமிட்டின.

மனித வாழ்க்கையே முழுநிலவாக வளர்வதற்கு— ஒளிர்வதற்கு— ஆசைப்பட்டுக் கடைசியில் வெறும் நட்சத்திரமாக நலிந்து, மெலிந்து— அதுவும் எரி நட்சத்திரமாகவே உதிர்ந்து அழிந்து போவது தானே?

கீழே தெருப்பக்கத்தில் மனிதக் குரல்களின் சலசலப்பு.

அப்போதுதான் கடைசி ஆட்டத் திரைப்படம் முடிந்திருக்கும் போலும். ' அவற்றைப் பார்த்து விட்டுத் திரும்பிய உற்சாகத்தில் ' இளசுகள் ' சில சீட்டியடிப்பதும் பாட்டுப் பாடுவதும் கேட்டன. அவற்றையும் மீறிக் கொண்டு திரைப்படத்தைப் பற்றிய திறனாய்வுகள்; தேவையில்லாத விவாதங்கள். நடு நடுவே, கைவளையல்களின் குலுங்கல்; ' களுக் ' என்னும் சிரிப்பு; யாராவது புதிதாக மணமானவர்கள் இடித்துக் கொண்டு—

சிரித்துக் கொண்டு— செல்வார்களோ?

தேன்மொழியின் நெஞ்சம் விம்மித் தாழ்கிறது.

அவளுடைய கனவுகள்—கற்பனைகள்—எப்படியெல்லாம் கருச்சிதைவு அடைந்து விட்டன!

சட்டென்று அவளது பார்வை நெட்டிலிங்க மரங்களையும், தென்னை மரங்களையும் ஊடுருவிக் கொண்டு அடுத்த தெருவிலுள்ள ஒரு வீட்டுப் பக்கம் நீள்கிறது. காரணம், அங்கே பளிச்சென்று தெறித்த வெளிச்சந்தான்.

அந்த வீட்டுக்கு ஒரேயொரு மாடி அடுக்கு; அதனால், தங்கள் இல்லத்தின் மூன்றாவது அடுக்கிலே நிற்கும் தேன்மொழிக்கு அங்கே நடப்பவையெல்லாம் தெளிவாகவே தெரிய முடியும்.

அங்கே குடியிருப்பவர்களும், அப்போதுதான் திரைப்படம் பார்த்துவிட்டுத் திரும்பியிருப்பார்களோ, என்னவோ? இல்லையென்றால், அந்த நள்ளிரவில் தெளிந்த முகத்தோடு பளபளக்கும் உடைகளோடு அவர்கள் அப்படி நடமாடத் தேவை இல்லையே!

சற்றைக்கெல்லாம், தலை நிறைய மலர்களைச் சூடிய இளம் பெண்ணொருத்தி படுக்கையை விரித்துப் போடுகிறாள் சட்டையைக் கழற்றிக் கொடியிலே மாட்டிவிட்டுப் பனியனும், வேட்டியும் அணிந்த அவளது கணவன் அந்தச் செப்புச் சிலையின் பின்னால் செல்கிறான். நீலச் சேலை உடுத்துக்கொண்டிருந்த அவளது செழுமையான தோளைத் தொடுகிறான்; முறுவலை வழியவிட்டவாறே அவளும் முகத்தைத் திருப்பி அவனை நிமிர்ந்து நோக்குகிறாள் தீர்க்கமாக....

தன் மனத்துக்கினிய மாதவனும் இப்படித் தன் முதுகுப்புறம் வந்து— தோள்களைத் தொட்டு —தன் முகத்தை அப்படியே தன் இரு உள்ளங்கைகளாலும் ஏந்திக் கொண்டு........

விழிகள் குளமாகின்றன தேன்மொழிக்கு.

எங்கோ நாய்கள் அழுகின்றன ஊளையிட்டு.

* * *

மாதவனின் தமக்கை வள்ளியம்மைக்கு மறுபடியும் அப்படியொரு சோதனை வந்திருக்க வேண்டாம்.

அவளுடைய அங்கங்கள் அடைந்திருந்த சிதைவுகள்— செல்லரிப்புகள்— போதாது என்று அவளுடைய கால்களுள் ஒன்றையும் முழங்கால் வரை எடுத்தே ஆகவேண்டும் என்று முடிவு கூறிவிட்டனர் டாக்டர்கள்.

அந்த முடிவினைக் கேட்டு மாதவனும் அவன் தாயும் குமுறிய குமுறல், கதறிய கதறல் கொஞ்ச நஞ்சமல்ல.

தொலைபேசியில் கம்ப்யூட்டர்

ஒரே நேரத்தில் 18,000 தொலைபேசித் தொடர்புகளைக் கையாளக்கூடிய தொலைபேசித் தொடர்பகம் ஒன்று இலண்டன் நடுவில் அமைக்கப்படுகிறது. உலகிலேயே மிகப் பெரிதாக அமையும் இந்தத் தொடர்பகம் உருவாக 10 மிலியன் பவுன்கள் செலவாகும்.

ஆறு கம்ப்யூட்டர்களும் இந்தத் தொடர்பகத்தில் இருக்கும். இவை தொலைபேசி அழைப்புகளை அனுப்பிவைத்து இணைப்பு ஏற்படுத்தித் தருவதோடு, கட்டணங்களையும் சரியாகக் கணக்கு வைத்துக் கொள்கிறது. அனைத்துலகத் தொலைபேசித் தொடர்பில் வினாடி வழுவாமல் நேரப்படி கட்டணத்தைக் கணக்கிட்டுத் தருவது இதன் சிறப்பு.

இரும்பு நெஞ்சம் படைத்தவர் என்று பெயர் எடுத்த பேரின்பமுத்துவினாலேயே தம் கண்கள் கலங்குவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தம்முடைய மகளின் திருமணத்தை முன்னிட்டுத்தான் சிங்கப்பூரில் தம்மை முற்றுகையிட்டிருந்த பல்வேறு அலுவல்களையும் அப்படி அப்படியே போட்டு விட்டு அவர் தமிழகத்திற்கு ஓடோடி வந்தார்; என்றாலும், அவருடைய வருகையால் மிகவும் பயன் பெற்றவள் வள்ளியம்மையே.

தன் தமக்கைக்கு ஏற்பட்ட விபத்தினைக் கண்டு, மாதவன் மனம் இடிந்து போய்விட்ட நிலையில், பேரின்பமுத்துவின் அயராத முயற்சியும் அளவில்லாத செல்வாக்குமே அவளது உயிரைக் காப்பாற்றியது எனக் கூறலாம்.

அவர் இல்லையென்றால், மருத்துவத் துறையில் மாபெரும் புலிகளாகத் திகழும் அவ்வளவு உயர்ந்த டாக்டர்கள் எல்லாரும் வந்து அவளுக்குச் சிகிச்சையளிக்க முற்பட்டிருப்பார்களா?

ஆனால், நீண்ட நாட்கள் பேரின்பமுத்துவினால் தமிழகத்திலேயே தங்கியிருக்க முடியவில்லை. வள்ளியம்மையின் கால் எடுக்கப்பட்ட பிறகு, அவளது உயிருக்கு ஊறு வராது என்று உறுதியாகத் தெரிந்த உடனேயே மீண்டும் சிங்கப்பூருக்குச் சிட்டாய்ப் பறந்து விட்டார் அவர்.

தேன்மொழியைக் கவனித்து வழி நடத்த வேண்டிய பொறுப்பைப் பூங்கொடியின் தலையிலேயே சுமத்தி விடவும் அவர் தவறவில்லை.

* * *

திருமண விழா நிகழ்ந்த பிறகு, மாதவனின் தமக்கையின் மீதே தானும் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருந்ததால், தேன்மொழியின் வீட்டுக்கு வந்து முன்போல ஆர அமரப் பேசிக் கொண்டிருக்கவே நேரங் கிட்டவில்லை பூங்கொடிக்கு.

இதற்கிடையில், சிங்கப்பூர் திரும்பிச் சென்ற பேரின்பமுத்து, அவளுக்கு முக்கியமான கடிதம் ஒன்றை வரைந்திருந்தார். அதைப்பற்றிக் கலந்து பேசுவதற்காக ஒரு நாள் பிற்பகல் தன் அலுவல்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தேன்மொழியைத் தேடி வந்தாள் டாக்டர்.

அப்போது சமையற்காரி சண்பகம் மட்டுந்தான் அவளை வரவேற்றாள்.

'' தேன்மொழி எங்கே?''
—என்று கேட்டதற்கு,

'' டேபிள் டென்னிஸ் ஆடுறதுக்காகத் தங்கப்பன் வந்து அழைச்சுக்கிட்டுப் போனார்.''
—என்றாள் சண்பகம்.

'' தங்கப்பனா? யார் அது?''
—திகைப்புடன் வினவினாள் பூங்கொடி.

'' என்ன டாக்டரம்மா, அதுக்குள்ளே அவரை மறந்திட்டீங்க? அன்னிக்குச் சின்னய்யாவோட அக்கா மோட்டார் சைக்கிளிலே அடிப்பட்டு விழுந்தப்போ 'நான் பாத்துக்கிறேன்; நீ போய்த் தாலியைக் கட்டு'ன்னு சொல்லிட்டு உங்களோடேயே ஆஸ்பத்திரிக்கும் வந்தாரே, ஞாபகம் இல்லையா?''

'' ஓ...... அவரா?''

'' ஆமா, அவரேதான். இப்ப ஏதோ பெரிய போட்டி நடக்குதாம். கல்கத்தா, பம்பாய், டில்லி—இன்னும் எங்கெங்கேயிருந்தோ எல்லாம் ஆட்டக்காரங்க வந்திருக்காங்களாம். அவங்களோட விளையாடத்தான் சின்னம்மாவும் தங்கப்பனும் போயிருக்காங்க.''

'' ஏன், மாதவன் ஆடவில்லையா?''

'' தன் அக்கா அடிபட்டுக் கிடக்கிறப்போ அவராலே எப்படிக் கவலை இல்லாமே விளையாட முடியும்?''

'' அவருடைய அக்காளுக்குத்தான் ஆபத்தான கட்டம் எல்லாம் எப்போதோ தாண்டிவிட்டதே! இன்னுங் கொஞ்ச நாளில் மருத்துவ மனையை விட்டே கூட வந்துவிடலாமே?''

'' அது என்னமோ அம்மா! தன் அக்கா மேலே உள்ள பாசத்தினாலே, டேபிள் டென்னிசை மட்டும் இல்லே, நம்ம தேன்மொழி அம்மாவையே அவர் மறந்திட்டாக் கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்.''

'' ஆமா, மாதவன் இங்கே தானே தங்கியிருக்கிறார்?''

'' அவர் ஏம்மா இங்கே வந்து தங்குறாரு? வழக்கம் போல அவர் அந்த வாடகை வீட்டிலே தான் குடியிருக்கிறாரு; அங்கே தான் அவரோட அம்மாவும் இருக்கிறாங்க; அங்கே இருந்து தான் அவர் அக்காவுக்குச் சோறும் போவுது ஆஸ்பத்திரிக்கு.''

'' நீ சொல்வதற்கும் சிங்கப்பூரிலிருந்து கடிதம் வந்திருப்பதற்கும் அப்படியே சரியாக இருக்கிறதே!''

'' பெரியய்யா கடிதாசி போட்டிருக்காங்களா? என்னம்மா எழுதியிருக்காங்க?''

—ஆர்வம் கொப்புளிக்கக் கேட்டாள் சமையற்காரி.

'' மாதவனுடைய குணத்தைப் பற்றி அப்படியே படம் பிடித்த மாதிரி எழுதி இருக்கிறார். சின்ன வயதாக இருந்தாலும் மனப்பக்குவம் மிகுந்தவராம் அவர்; மற்றவர்கள் பொருளுக்கு இச்சைப் படவே மாட்டாராம். தன்மான உணர்வும் உள்ளவராம். அதனாலே மாமனார் வீட்டிலே போய் மருமகன் குடியிருப்பதா என்று இங்கே வந்து அவர் தங்க மறுக்கலாமாம். அதே சமயம் தேன்மொழியாலும் வசதி குறைவான இப்போதுள்ள வாடகை வீட்டிலே அவரோடு வாழ்வதற்கும் கடினமாக இருக்குமாம். ஆகையால், ஒரு நல்ல வீடாக வாடகைக்கே எடுத்து அவர்களுக்குத்

தனிக்குடித்தனம் அமைத்துக் கொடுக்கணும் என்று எழுதியிருக்கிறார்.''

'' அப்போ இந்த வீடு என்னம்மா ஆகிறது ? ''

'' இதை வாடகைக்கு விட்டு விட வேண்டியதுதான். ''

'' அய்யோ, இதை விட்டுப் பிரியறதுக்குச் சின்னம்மாவுக்கு மனசே வராதே ! எனக்கென்னமோ இப்போதைக்கு இந்த வீடு மாத்துற சேதியை அவங்க காதிலே போடுறது அவ்வளவு நல்லது இல்லேன்னு தான் எனக்குப் படுது. இப்பவே அவங்க ஏதோ விரக்தியா வெறுப்பா நடந்துக்கிறாங்க. அதிலே இந்த வீட்டையும் விடணும்னா அவங்க நெஞ்சே வெடிச்சுப் போகும். ''

'' அப்படியா சொல்றே ? ''

'' ஆமாம்மா, அப்புறம் இன்னொண்ணைச் சொன்னாக் கோவிச்சுக்க மாட்டீங்களே ? ''

'' அதெல்லாம் கோபிக்கமாட்டேன், சும்மா சொல் ''

'' போன தடவை பொங்கலுக்கு இங்கே நீங்க விருந்து சாப்பிட வந்தப்போ, என்ன சொன்னீங்கன்னு ஞாபகம் இருக்கா ? ''

'' என்ன சொன்னேன் ? ''

'' உங்களுக்கு அது மறந்துதான் போயிருக்கும் ; ஆனா, நான் அதை மறக்கலே : ' அடுத்த பொங்கலுக்குள்ளே நம்ம தேன்மொழிக்குத் திருமணம் நடந்திடும் ; அவங்க வாழ்க்கை சர்க்கரைப் பொங்கல் மாதிரி எப்போதும் தித்திச்சுக்கிட்டே இருக்கணும் ''—— அப்படின்னு வாழ்த்துனீங்க ! ''

'' ஓ, ஆமா . . . . . .! ''

'' அந்த மாதிரிச் சக்கரைப் பொங்கலாத்தான் சின்னம்மாவோட வாழ்க்கை இனிச்சுக்கிட்டு இருக்கிறதா நீங்க நினைக்கிறீங்களா, டாக்டரம்மா?''

'' நீ என்ன சொல்றே, சண்பகம் ? ''

—திகைப்புத் தெறித்தது டாக்டரின் கேள்வியில்.

'' நான் என்ன சொல்ல வந்தேன்னா, பொங்கல் பானைக் கழுத்திலே மஞ்சள் கொத்தைக் கட்டினா மட்டும் போதுமா ? காலா காலத்திலே பானையை அடுப்பிலே ஏத்த வேணுமா ? அரிசியைப் போட வேணுமா ? வெல்லம், பால், திராட்சை, முந்திரிப் பருப்பு எல்லாத்தையும் அதிலே கொட்டவேணுமா? இவ்வளவும் செய்யாமே வெறும் பானையாப் போட்டுட்டு வாழ்க்கை சர்க்கரைப் பொங்கலா இனிக்கணும் சர்க்கரைப் பொங்கலா இனிக்கணும் அப்படின்னு வாழ்த்தினா மட்டும் இனிச்சிடுமா ? ''

தமிழ் நீட்டலளவு முறை

பழந்தமிழகத்தில் பழக்கத்திலிருந்த நீட்டலளவு வாய்பாடு கீழே தரப்பட்டுள்ளது. காதம் அல்லது காவதம் என்று வழங்கப்பட்ட இந்த அளவு தற்காலத்திய ஆங்கிலேய முறையான மைல் அளவு போன்று காணப்படுகிறது.

12 விரல்	..	1 சாண்
2 சாண்	..	1 முழம்
4 முழம்	..	1 கோல்
500 கோல்	..	1 கூப்பீடு
4 கூப்பீடு	..	1 காவதம்
8,000 முழம்		1 காவதம்

—சமையற்காரியின் இந்த வார்த்தைகளைக் கேட்டு அப்படியே வாயடைத்துப் போனாள் டாக்டர் பூங்கொடி.

'' நான் எதுக்குச் சொல்ல வந்தேன்னா, அது அது அந்த அந்தக் காலத்திலே கனியலேன்னா அப்புறம் ரெண்டு பேருக்குமே ஒட்டோ, உறவோ எப்படிம்மா இருக்கும் ? நான் உங்க மாதிரிப் படிச்சவ இல்லே : அதனாலேதான், நான் சொல்றது உங்களுக்கு அருவருப்பா பிடிக்காமே கூட இருக்கலாம். ஆனா, அந்த வள்ளியம்மா அடிபட்டு விழுந்ததையே ஒரு சறுக்கா வச்சுக்கிட்டு இந்தப் புதுப் பொண்ணைப் புறக்கணிக்கிறது ரொம்பத் தப்பு இல்லையா ? எத்தனை நாளைக்குத்தான் சின்னம்மாவும் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாமே வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடப்பாங்க ? அதனாலேதான், அந்தத் தகப்பனா, இல்லே, வேறே பித்தனை அப்பனோ—யார் வந்து அழைச்சாலும் ' டேபிள் டென்னிஸ்' ஆட வெளியே கிளம்பிடுறாங்க''.

'' ஆமா, மாதவன் இங்கே வருகிறாரா இல்லையா ? ''

'' ஓ, வாராரே—ஆடிக்கு ஒரு தரம், அமாவாசைக்கு ஒரு தரம்! அப்படியே வந்தாலும் ஒரு அரை மணி நேரமாச்சும் தங்குவாரா ? மாட்டாரே ! எனக்கென்னமோ டாக்டரம்மா ரொம்ப ரொம்ப பயமா இருக்கு! இந்தக் காலமோ, பொல்லாத காலம் ! படிச்ச பொண்ணுங்க-- அதுவும் பணக்கார வீட்டுப் பொண்ணுங்க—நாகரிகம் என்கிற பேராலே பயம் தெளிஞ்சு தாங்க நினைக்கிறபடியெல்லாம் நடக்கிற காலமாவும் போச்சு ! நம்ம சின்னம்மாவைப் பொறுத்து இந்த விநாடி வரைக்கும் ஒரு அப்பழுக்குச் சொல்ல முடியாதுதான். ஆனா, பள்ளம் படுகுழியிலே நாமாத்தான் கண்ணை மூடிக்கிட்டு விழணும்னு இல்லையே! மத்தவங்க திருட்டுத்தனமா தள்ளி விட்டும் விழலாம் இல்லையா ? ''

——சண்பகத்தின் சொற்களைக் கேட்டுத் ' திகீர் ' என்று ஓர் அதிர்ச்சியே உண்டாயிற்று பூங்கொடியின் இதயத்தில்.

சமையற்காரியே மேலும் தொடர்ந்தாள் :

'' ஏம்மா, நாம இப்படி ஒரு ஏற்பாடு செஞ்சா என்ன ? ''

'' என்ன ஏற்பாடு ?''

(வளரும்)

வெண்பாப் போட்டி

28. மையை மறவாமை மாண்பு

கையைப் பிசைந்து கருவிழியில் நீர்வடித்து
மெய்யாய் விரைவில் திரும்புகளன்—றையத்தால்
பைய மொழிந்தனளே பாவை, அவளாற்ரு
மையை மறவாமை மாண்பு.

—சிவ. நடராசன், மாமல்லபுரம்.

செய்கையிலும் வாக்காலும் சிந்தையிலும் மூச்சாலும்
மெய்வருந்தும் நந்தமிழர் மேன்மையுறச்—செய்துவரும்
ஐயன் கலைஞன் அருந்தமிழ வேள்தலை
மையை மறவாமை மாண்பு

— பா. மன்றோ சாமுவேல், அமராவதி நக .

வங்கக் கடலோரம் வண்மைத் தமிழ்பாடும்
பொங்கு புனலாடும் பூமகன்—தங்காய் நீ
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தான், தமிழ்ப்புல
மையை மறவாமை மாண்பு.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

அசைபார்த்துச் சீராக்கி அல்லுபகல் எண்ணி
நசையுடனே நாமெழுதும் வெண்பா—மிசை, நல்லோ
சையைப் பொருளைத் தவழும் விதிமுறை
மையை மறவாமை மாண்பு.

—பொன். அயிலன், பி.எஸ்சி., பி.டி., குருவிக்குளம்.

கண்ணழகுக் காளைதன் கைப்பிடித்த நாள்தொட்டு
மண்ணுலகில் இன்னுயிர்தான் மாயுமட்டும்—
திண்ணமாய்க்
கையை நொடிக்காமல் கண்மூடாப் பேணும்தாய்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் சீனி. கருப்பையா, திங்களூர்.

புண்ணியராய் வாழ்ந்த புனிதராம் காந்தியாரும்
கண்ணியத்தைக் காத்துக் கடன்புரிந்த — அண்ணாவும்
செய்திட்ட நேர்மைச் செயலளிக்கும் சீர்பெரு
மையை மறவாமை மாண்பு.

—புலவர் கு. மங்கையர்க்கரசி, திருச்செங்கோடு.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு. சிவ. நடராசன்,
அரசினர் சிற்பக் கல்லூரி,
மாமல்லபுரம்—செங்கை மாவட்டம்.

பாராளு மாங்கிலமும் பைந்தமிழு மேயிளைஞர்
தாரான மாய்பயிலச் சட்டஞ்செய் — சீராளர்
கையை வலிவுபெறக் காண்போம் அவர்திற
மையை மறவாமை மாண்பு.

—கே. எஸ். ஆறுமுகம்பிள்ளை, கோயம்புத்தூர்-1.

உண்ணக் கனிகொடுப்பேன் உற்ற நிழல்கொடுப்பேன்
எண்ண மதிலுதவி ஏற்பேனோ ? — மண்ணிலென்கொள்
கையை மனிதன்கைப் பற்றினால் அன்னவர்தன்
மையை மறவாமை மாண்பு.

—கலைப்பிரியன் மு. நாராயணன், சத்திரப்பட்டி.

நற்கருத்து சொற்செறிவு நல்லோசை பெற்றிலங்கும்
அற்புதவெண் பாக்களையே ஆய்ந்தெடுத்து—நற்கவிமேன்
மையைப் பரப்பும் ' தமிழரசே ' உன்திற
மையை மறவாமை மாண்பு.

—இராஜாமணி, ஆரூர்.

போரிலே ஆண்மையை, பூவையர் பெண்மையை,
ஊரிலே எந்நாளும் ஒற்றுமையைப்—பாரில்நேர்
மையை மனத்தில்உண் மையை வளரும்தாய்
மையை மறவாமை மாண்பு.

—ஜே. திலகவதி, சென்னை-13.

மாற்றானின் தோட்டத்து மல்லிகையே யானாலும்
ஏற்றிடும் நன்மணமே என்றிவண்—போற்றும்நேர்
மையை நமக்களித்த மாமேதை சொன்னஉண்
மையை மறவாமை மாண்பு.

—மெணசி"கோ" சிலம்பகம்.

கல்லெடுத்துப் போட்டவரின் காதினிலே கற்கண்டாய்ச்
சொல்லெடுத்துப் போட்டுச் சிரித்திட்ட—நல்'அண்ணன்'
கையை விரல்கொண்ட பேனா எழுதிவிட்ட
மையை மறவாமை மாண்பு.

—அ. சு முருகேசன், கொடுங்கியம்.

துன்பத்தைக் கண்டு துயருற்று மாளாதே
இன்பமும் ஓர்நாள் எதிர்வருமே—என்னும்உண்
மையை உறுதியுடன் பற்றுக; நாளும்வாய்
மையை மறவாமை மாண்பு.

—ச. காளியப்பன், மத்தியச் சிறை, எண். 7483, சென்னை-3.

பெற்று வளர்த்துப் பெயரிட்டு நற்றமிழைக்
கற்றுக் கவிபாடக் காண்பித்தே—உற்றநன்
மையைப் பெருக்கி வளமிளித்த தாயாமம்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் மூத்துசண்முகன், பி.ஏ., மதுரை.

பற்றொழிலால் வையம் பயனளிக்க முந்தினுமோர்
நற்றொழிலின் றென்றால் நடக்குமோதான் ?—பெற்றசீர்
மையை யுவந்தளிக்கும் மாசில் திருவேளாண்
மையை மறவாமை மாண்பு.

– குருசிதம்பரம், நெடுங்குளம்.

கண்ணகி மாதவி கன்னித் திலகவதி
எண்ணரும் பெண்டிர் எழில்சேர்த்தார்—மண்ணுலகில்
தையல்நல் வாழ்வு தழைத்தோங்கக் கற்பாம்பெண்
மையை மறவாமை மாண்பு.

—மு, ஆவுடையப்பன், பழையூர்.

உள்ளும் புறமும் ஒன்றாகி உள்ளிருக்கும்
கள்ளத்தை மாய்த்தே கனிவோடு—சொல்லினி
மையைக் கடைப்பிடித்து வாழ்வினில் நாளும்வாய்
மையை மறவாமை மாண்பு.

—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

செம்மை இனிமை செழுந்தண்மை சேர்ந்தமொழி
எம்மை யுலகத்தும் யார்கண்டார்—நம்முயிரே
மெய்யை மறந்தாலும் மேலாம் தமிழ்மொழித்தொன்
மையை மறவாமை மாண்பு.

—சிவ. கிருட்டிணன், கனியூர்.

யாரே உரைகேளார் யார்யார்தான் பின்வாரார்
பாரே தொழில்கேட்கும், பண்பாளா ! — தேருங்கால்
கையசைக்க நாடசையும் காண்அண்ணா நின்தலை
மையை மறவாமை மாண்பு.

—உ. சி. சுந்தரவரதாச்சாரி, சென்னை-23.

தாயகத்தின் தொல்பேர் 'தமிழ்நா' டெனச்சூட்டி,
ஆயகலை ஆட்சிமொழி அஃதாக்கித்—தேயதமிழ்
வையத்தை நன்காண்ட மாமேதை அண்ணாமேன்
மையை மறவாமை மாண்பு.

—சு. பொன்னுடு, வடவள்ளி.

ஓங்கு புகழும் உயர்ந்த பதவிகளும்
தாங்குந் திரவியந் தழைத்தாலும்—ஏங்கியே
வையத்தில் நித்தம் வதைபடும் ஏழைவறு
மையை மறவாமை மாண்பு.

—என். ஜி. கே. மணிமேகலை, சென்னை-56.

வெண்பாக்கள் நானெழுதி அச்சேறு மென்றிருந்தும்
என்பா தமிழரசார் ஏற்றிலரே—இன்னும்நான்
கையை எழுதுகின்ற காகிதத்தை என்பேனா
மையை மறவாமை மாண்பு.

—சு. கிருட்டிணன், திருப்பூர்–1.

ஈன்றாள் பசித்திருக்க ஏப்பமெழ உண்ணுபவன்
நான்காப்பேன் நாட்டையெனில் நம்புவரோ—வான்
மழைபோல்
வையம் புரப்போரே வாழ்வளிப்பர் என்றவுண்
மையை மறவாமை மாண்பு

—புலவர் க. முத்துக்கருப்பன், நகரம்.

அண்மை நடந்தபோர் ஆண்மை புகழ்ந்தபோர்
பெண்மை யதுவாழ்த்தப் பெற்றபோர்—உண்மையினை
வைய மறியும்அவ் வாழ்த்துதலைப் பெற்றகட
மையை மறவாமை மாண்பு

—ந. தெய்வசிகாமணி, கோவை-12.

மாரியும் பொய்யாகப் போனதனால் மக்களெல்லாம்
நீரின்றிப் பட்டணத்தில் நிற்கையில்—பேரரசு
ஓய்வின்றி வீதியெல்லாம் ஊற்றுக் குழாய்கொடுத்த
மையை மறவாமை மாண்பு.

—த. உலகம்மாள், பறக்கை.

பொய்யும் புனைச்சுருட்டும் புல்லறிவோர் பண்பாகும்
செய்யும் வினைப்பாட்டில் சீர்த்திபல—எய்துவரோ
வையத்தார் உள்ளத்துள் வாழ்வதற்(கு) என்றும்வாய்
மையை மறவாமை மாண்பு.

—ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம்.

எண்ணறிந்தும் ஏனை எழுத்தறிந்தும் எத்தொழிலுந்
திண்மையுடன் செய்யுந் திறமையதை—நண்ணிடினும்
நையு மிடைமாதர் நாணமெனும் பெண்மையின்நீர்
மையை மறவாமை மாண்பு.

—கு. ப. தாயுமானசாமி, குகை.

முந்தி எழுதி முடித்தபல வெண்பாக்கள்
எந்த இதழிலும் இன்றுவரை—வந்ததில்லை
ஐயகோ! என்செய்வேன்! அன்பன்யான்; என்நிலை
மையை மறவாமை மாண்பு.

—அத்தி ஆதி அரசமணி, அத்திவெட்டி.

தாய்மை பிறவிதரத் தந்தை அறிவுதரத்
தூய்மை வழிநடத்த வையத்தில்—வாய்மைநேர்
மையைக் கடமையைக் காலத்தால் செய்தநன்
மையை மறவாமை மாண்பு.

—சு. ப. சங்கர நாராயணன், பி.ஏ., ஆத்தூர்.

உள்ளம் உணர்வதுவே உண்மையாம் நம்செயலிற்
கள்ளம் கலவாமை மென்மையாம்—கள்ளமின்
மையை உரைப்பதுவே வாய்மையாம் என்றுமித்தூய்
மையை மறவாமை மாண்பு.

—க. கிருட்டிணமூர்த்தி, அரிமளம்.

குன்றெனச் செல்வம் குவித்திடும் நோக்குடன்
என்னரும் தோழரே ஈயத்தைப்—பொன்னென்றும்,
காயைக் கனியென்றும் காட்டாதீர் என்றும்நேர்
மையை மறவாமை மாண்பு.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

தென்றலாய்த், தண்ணிலவாய்த், தெள்ளமுதாய்ச், செந்தேனும்
கன்னலாய்த், தீங்கனியாய்க், கற்கண்டாய்,—அன்னையாய்த்
தையல் தரும்சுகமாய்த் தோன்றும் தமிழினி
மையை மறவாமை மாண்பு.

—எழில்வேந்தன். சென்னை-28.

தீயதைச் செய்தாரும் சிந்தை திருந்திடவே
ஆயதைச் செய்திடுதல் அன்புடைய—தூயவர்கள்
வையம் துலங்கிடத்தம் வாழ்நாளில் செய்திடும்நன்
மையை மறவாமை மாண்பு.

– புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

பூவை மறவாமை பொன்வண்டின் பண்பாடு!
சாவை மறவாமை சால்பாகும்—நாவரசர்
வையமுணர் அண்ணாவின் மேன்மை வழியுடை
மையை மறவாமை மாண்பு

– புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

வாட்டுந் துயரிலும் வாட்டாமுறு நம்கலைஞர்
நாட்டுத் துயர்களைய நாட்டமுற்றுத்—தீட்டினார்
ஐயமிலாத் திட்டங்கள் ஆயிரம்; அப்பெரு
மையை மறவாமை மாண்பு.

—ஆ. இராசரத்தினம், பி.எஸ்சி.,பி.டி., தாமரங்கோட்டை.

கற்பை மறவாமை காசினியில் என்றென்றும்
பொற்புடை மாதர்க்குப் புண்ணியமாம்—அற்புதஞ்சேர்
வையத் திளைஞரெல்லாம் துய்யமனத் தோடுதாய்
மையை மறவாமை மாண்பு.

—ப. வே. இராமசாமி, மானாமதுரை.

ஞாயிறுதிங் கள்செவ்வாய் நல்லபுதன் பின்வியாழன்
போய்வெள்ளி யும்சனியும் பூவுலகில்—வாய்த்தவொரு
வையத்தின் நாள்ஏழாய் வைத்தநம்முன் னோர்சான்றாண்
மையை மறவாமை மாண்பு.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

செந்தமிழ்ப் பேர்காக்கச் சேர்தண்ட வாளத்தும்
நொந்ததமிழ்ப் பாவலர்க்கும் தந்தலையைத்—தந்தவண்
மையை யுடையாரை யெண்ணியவர் பேராண்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் சி. முத்து, கடையம்.

வளமான வளர்ச்சிக்கும்
அதிக உற்பத்திக்கும் சிறந்தவை
ரோவிமிக்ஸ்
டிரேட் மார்க்
மற்றும்
ரோவிஸால் ஓரல்
டிரேட் மார்க்

ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:
உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் குறைந்த செலவிலும் அளிக்க கனிஜங்களால் கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு:
ஒட்டுண்ணிகள் அல்லது தொத்து நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிகச் சூடு, அதிகக் குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்
ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
28, தார்தேவ் ரோட், பம்பாய்-34WB.



மேலே கால்வாய்

கீழே சாலை...!

தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்திலும் காண முடியாத காட்சிகளைக் குமரி மாவட்டத்தில் காணலாம். அதிலே ஒன்றுதான்—

கீழே சாலை—

மேலே கால்வாய்!

இந்தக் காட்சி, பார்க்கும் நமக்கு அதிசயமாக உள்ளது. ஆனால், குமரி மாவட்டத்தில் இது சாதாரணக் காட்சியாக உள்ளது. நான்கைந்து இடங்களில் இதுபோன்று பார்க்கலாம்.

படத்தில் நீங்கள் பார்க்குமிடம் நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள வில்லுக்குறி என்ற ஊரில் உள்ள பாலமாகும்.

வில்லுக்குறியை வில்லுக்கீறி என்றும் சொல்கிறார்கள்.

சாலையின் குறுக்கே செல்லும் பாலத்தில் கால்வாய் ஓடுகிறது. அதில் மக்கள் குளிக்கும் காட்சியையும் பார்க்கிறீர்கள்.

பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைக்கட்டுப் பகுதிகளிலிருந்து வரும் கால்வாய்கள் இப்படி ஓடிவருகின்றன. மலைப்பாங்கான பகுதிகள் இருப்பதால் இதுபோன்று கால்வாய்கள் ஓடுகின்றன.

சில இடங்களில் சாலையை ஒட்டிப் பக்கத்திலேயே சாலையைவிட இருபது அடி, முப்பது அடி உயரத்தில் கால்வாய்கள் ஓடுவதும் இங்கே சாதாரணக் காட்சிதான்!

குமரி மாவட்டத்திற்குத் தமிழக அரசின் பரிசு!

கோதையாறு நீர் மின்திட்டம் தமிழ்நாட்டில் மின்சார வாரியத்தினால் சுமார் 14·81 கோடி ரூபாய் செலவில் நிருமாணிக்கப்பட்ட ஒன்பதாவது நீர்மின் திட்டமாகும். இத்திட்டம் குமரி மாவட்டத்திற்குப் பெருமளவு பயன்படும். கோதையாறு முத்துக் குழிவயல் பீடபூமிக்குத் தென் சரிவில் உற்பத்தியாகிப் பேச்சிப்பாறை அணையில் போய்ச் சேர்ந்து கொண்டு இருக்கிறது. இந்த ஆற்றுநீரின் இடையே 2 அணைகள் கட்டித் தேக்கி ஒரு இலட்சம் கிலோ வாட் மின் சாரத்தை உற்பத்தி செய்துவிட்டு, மறுபடியும் முன்போல் பேச்சிப்பாறை நீர்த் தேக்கத்தில் தண்ணீர் சேர்த்து விடப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நிருமாணிக்கப்பட்ட, மணிக்கு 60 ஆயிரம் கிலோவாட் மின்சார உற்பத்தி செய்யவல்ல முதல் மின்நிலையம் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிச் சுமார் 8 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளது.

மணிக்கு 40 ஆயிரம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவல்ல இரண்டாம் மின் நிலையம் 17—11—1971 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள பைகாரா மின் நிலயத்தைக் காட்டினும், 100 அடி உயர நீர் வீழ்ச்சியைக் கொண்டு மின் உற்பத்திசெய்யும் முதல் மின்நிலயம் இதுதான். ஆசியாவிலேயே அதிகஉயரமுள்ள நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தும் மின் நிலயமும் இதுவேயாகும்.

இத்திட்ட மின் நிலயங்கள் நாகர்கோவிலிலிருந்து சுமார் 65 கி.மீ. தூரத்தில் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டு இருக்கும் போது சுமார் 10,000 தொழிலாளர்களும், 200-க்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களும் மேல் கோதையாற்றிலும், கீழ்க் கோதையாற்றிலும் இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 39 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தியாகும்.

கோதையாறு மேல்அணை

கோதையாறு மேல் அணை குமரி மாவட்டத்தில் முத்துக் குழி அரண்மனைக்குப் பக்கத்தில், கடல் மட்டத்திற்கு மேல் 4,200 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

இவ்வணை சுமார் 275 அடி உயரமும், உச்சியில் 600 அடி நீளமும், 4,300 மில்லியன் கன அடி கொள்ளளவும் உடையது. இத்தேக்கம் சுமார் 11·25 சதுர மைல் பரப்பளவில் பெய்யும் மழைநீரைத் தேக்க வல்லது.

நீர்ச்சுரங்கம் 1

மேல் அணையிலிருந்து தண்ணீர் 7 அடி விட்டமும் 11,000 அடி நீளமும் வினாடிக்கு 290 கனஅடி தண்ணீர் பாய்ச்சக் கூடியதான சுரங்கப் பாறையைக் குடைந்து அமைக்கப் பட்டுள்ளது. இச்சுரங்கம் 20 அடி விட்டமும் 440 அடி ஆழமும் உள்ள தேக்கக் கிணற்றில் முடிகிறது.

நீர் அழுத்தக்குழாய்(பென்ஸ்டாக்) 1

நீர்த்தேக்கக் கிணற்றிலிருந்து சுமார் 7,100 அடி நீளமுள்ள நீர் அழுத்த எஃகுத் குழாய் மூலமாக 3,192 அடி ஆழத்திற்குத் தண்ணீர் முதலாவது மின் நிலயத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

இந்த எஃகுக் குழாய் ரஷ்யாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட எஃகுத் தகடுகளினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

ுகளைக் குழாய்களாகக்
உள்ள பின்னிகம்பெனி
ப்யப்பட்டுக் கோதை
ருமாணிக்கப்பட்டது.

ல் மின்நிலயம்

ன் நிலயத்தில் ஒரு
பத்தி இயந்திரம்
ட்டர் " நிறுவப்
சுவிட்சர்லாந்து
இஞ்ஜினியரிங்
ரால் டர்பைனும்,
ேதசத்து " ஆலுஸ்
வனத்தாரால் ஜென
நிருமாணிக்கப்

ணிக்கு 60 ஆயிரம்
ன்சாரம் உற்பத்தி
து.

இந்த மின் நிலயம் சுமார் 1,180 அடி கடல் மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது.

கோதையாறு கீழ்அணை

முதல் மின் நிலயத்திலிருந்து மின் உற்பத்தி செய்த பின் வெளிவரும் தண்ணீரையும், கீழ்க் கோதையாற்றுப் படுகையில் சுமார் 11 சதுர மைல் பரப்பிலுள்ள மழை நீரையும் தேக்கி, இரண்டாவது மின் நிலயத்தில் மின் உற்பத்தி செய்வதற்காக "மீன்முட்டிக்கு" அருகாமையில் கோதையாற்றுக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

இதன் உயரம் சுமார் 200அடி; நீளம் 500 அடி; கொள்ளளவு 31 மில்லியன் கன அடி.

இது சுமார் 1,000 அடி கடல் மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது.

நீர்ச்சுரங்கம் 2

கீழ்க்கோதையாற்றுநீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் 9 அடி விட்டமும் 8,000 அடி நீளமும் வினாடிக்கு 690 கன அடி தண்ணீரைப் பாய்ச்சும் சுரங்கம், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கிறது.

இச்சுரங்கம் 20அடி விட்டமும், சுமார் 400 அடி ஆழமும் உள்ள நீர்தேக்கக் கிணற்றில் முடிகிறது.

நீர்அழுத்தக் குழாய் (பென்ஸ்டாக்) 2

நீர்த் தேக்கக் கிணற்றிலிருந்து சுமார் 1,000 அடி நீளமுள்ள நீர் அழுத்த எஃகுக் குழாய் மூலமாக 840 அடி ஆழத்திற்குத் தண்ணீரை இரண்டாவது மின் நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

சிந்தைகவர் சிற்பங்கள்!

சுசீந்திரம் கோவிலில் உள்ள சிற்பங்களில் நாயக்க மன்னர்களின் சிலைகள் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடையன. முத்துக்கோவைகள் தொங்கும் இச்சிற்பங்கள் வழுவழுப்பானவை; கருநிறம் வாய்ந்தவை. இரும்பினால் ஆக்கப்பட்டதெனத் தோற்றமளிக்கும் கடாரியும், தூக்கிய வாளும் அச்சமூட்டுவன. சிலையின் மூக்கின் இடப்பக்கம் மெல்லிய குச்சியை விடின் அது வலப்பக்கக் காது வழியாக வரும்; வலப்பக்க மூக்கில் குச்சியை விடின் அது இடப்பக்கச் செவி வழியாய் வரும்.

இந்த எஃகுக் குழாய்கள் திருச்சி காவேரி ஸ்டஸ்க்சுரல் நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்டுக் கோதையாற்றில் நிருமாணிக்கப்பட்டன.

இரண்டாவது மின்நிலையம்

இந்த நிலையத்தில் ஒரு மின் உற்பத்தி இயந்திரம் (ஜெனரேட்டர்) நிறுவப்பட்டுள்ளது.

யூகோஸ்லாவியா தேசத்து ‘‘ இன்க்ரா ’’ கம்பெனியாரால் டர்பைனும், ஜெனரேட்டரும் நிருமாணிக்கப்பட்டுள்ளன.

இது மணிக்கு 40 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யவல்லது.

இந்த மின் நிலையம் சுமார் 330 கனஅடி மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்நிலையத்திலிருந்து மின் உற்பத்தி செய்த பின் வெளிவரும் தண்ணீர் சுமார் 2 பர்லாங்கு நீளமுள்ள கால்வாய் வழியாகப் பேச்சிப்பாறை நீர்த் தேக்கத்தில் போய்ச் சேருகிறது.

கல்வி சிறந்த குமரி

இந்தியாவிலே அதிகமாகக் கல்வி கற்றவர்கள் வாழும் ஊர் திருவனந்தபுரம் என்கிறார்கள். அந்த ஊருக்கு அடுத்த நிலையில் படித்தவர்கள் அதிகமாக வாழும் பெரிய ஊர் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவில்.

தமிழ்நாட்டில் ஒரு சிறிய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிமூன்று கல்லூரிகள் உள்ளன. ஆண்களேயன்றி பெண்களும் அதிகமாகக் கல்வி கற்ற மாவட்டமாகும் இது. குமரி மாவட்டத்திலுள்ள கல்லூரிகள் விவரம் வருமாறு :—

1. விவேகானந்தா கல்லூரி—அகத்தீசுவரம்.
2. ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி—குழித்துறை.
3. கிருத்தவக் கல்லூரி—மார்த்தாண்டம்.
4. ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி—ஆளூர்.
5. ஹோலி கிராஸ் மகளிர் கல்லூரி—நாகர்கோவில்.
6. பயோனியர் குமாரசாமி கல்லூரி—நாகர்கோவில்.
7. தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி—நாகர்கோவில்.
8. ஸ்காட்டு கிருத்தவக் கல்லூரி—நாகர்கோவில்.
9. லட்சுமிபுரம் கலை, விஞ்ஞானக் கல்லூரி—நெய்யூர்.
10. அறிஞர் அண்ணா கல்லூரி—ஆரல்வாய் மொழி.
11. அன்ன விநாயகர் தேவஸ்தானம் கல்லூரி—கணபதிபுரம்.
12. ஸ்ரீதர் இந்துக் கல்லூரி—தூத்தூர்.
13. தி.என்.வி.கே.எஸ். ஆசிரியர் கல்லூரி—ஆத்தூர் மார்த்தாண்டம்.

இந்தக் கல்லூரிகளில் ஆரல்வாய் மொழியிலுள்ள அறிஞர் அண்ணா கல்லூரி, கணபதிபுரத்திலுள்ள அன்ன விநாயகர் தேவஸ்தானம் கல்லூரி, ஆளூரிலுள்ள ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, தூத்தூரிலுள்ள ஸ்ரீதர் இந்துக் கல்லூரி முதலியன 1967-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கப்பட்ட கல்லூரிகள்.

கேளுங்கள் கொடுக்கப்படும்!

வினா : எங்களுக்கு 6 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 3 ஏக்கரில் தண்ணீர் பாயும். மொத்தத்தில் 1,500 ரூபாய்க்காக நாங்கள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறோம். கடன் வாங்கிக் கட்ட முடியாமல் தவிக்கிறோம். ஏழைகளின் அரசு உதவி செய்வதாக அறிந்தோம். நாங்கள் பிழைக்கவும், விவசாயம் செய்யவும், கடன் அடைக்கவும் வழி சொல்லுங்கள். பண வசதியில்லை. சாப்பாட்டிற்குக் கூட வசதியில்லாமல் ஊர் ஊராய் அலைகிறோம். தமிழரின் அரசு ஆவன செய்யும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—எம். ஈஸ்வரன்,
வெல்பேக் எஸ்டேட்,
லவ்டேல் அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்.

விடை : தங்களுக்கு 6 ஏக்கர் நிலமிருப்பதாகவும், அதில் 3 ஏக்கரில் தண்ணீர் பாயும் என்றும் கூறியுள்ளீர்கள். மானாவாரி நிலம் 3 ஏக்கரிலும், ஜுன்-ஜுலை மாதங்களில் டி.எம்.வி. 2 அல்லது டி.எம்.வி. 10 மணிலா பயிரிடலாம். அதன் பின் அக்டோபர் மாதத்தில் எச்.பி. 3 கம்பு விதைக்கலாம். எச்.பி. 3 கம்பு விதைத்தாலே ஏக்கருக்குக் குறைந்தது 400 ரூபாய் நிகர இலாபம் 3 மாதத்தில் கிடைக்கும். தண்ணீர் வசதியுள்ள 3 ஏக்கரிலும் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் சி.எஸ்.எச். 1 சோளம் அல்லது எச்.பி. 1 கம்பு அல்லது டி.எம்.வி. 7 மணிலா பயிரிட்டு அதன் அறுவடை முடிந்து ஐ.ஆர். 8, கருணா போன்ற நெல் ரகங்களைப் பயிரிட்டு, அறுவடைக்குப் பின் மீண்டும் ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22 நெல் ரகங்களைப் பயிரிடலாம். முன் கூட்டியே திட்டமிட்டு நாற்று விட்டு நெல் ரகங்களை நடவு செய்தால், மேற்கூறிய முறையில் தண்ணீர் வசதியுள்ள நிலத்தில் ஒரே ஆண்டில் 3 பயிர் செய்யலாம். இவ்வாறு செய்தால், ஒரே ஆண்டில் உங்களுடைய கடனையெல்லாம் அடைத்து விட்டு, குறைந்தது ரூபாய் 2,000 மீதப்படுத்தலாம். சாகுபடிச் செலவுக்கான கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தீவிர உரக்கடன் மூலமாகவும் (ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகவும்) பெறலாம். உங்களுக்குத்தேவை வேளாண்மையில் ஆர்வமே. அந்த ஆர்வம் இருக்குமானால், 6 ஏக்கரை வைத்துக்கொண்டு பாடுபடாமல் வேறு வேலை தேடி அலைய மாட்டீர்கள். முன்பு வாங்கியுள்ள கடனை அடைப்பதற்காகத் தற்போது கடன் கொடுக்கப்படவில்லை. சாகுபடிச் செலவுக்கும், கிணறு வெட்டுதல், பம்புசெட் வைத்தல் போன்றவைகளுக்கும், நில வள வங்கிகள் கடன் கொடுத்து உதவுகின்றன. முயற்சி செய்யுங்கள். நிலத்தில் சற்று கடுமையாக உழைத்தால் முன்னேறலாம்.

வினா : நான் பட்டப்படிப்புப் படித்த மாணவன். வேளாண்மைத் தொழில் செய்வதில் மிகவும் ஆர்வமும், அக்கறையும் உடையவன். எனினும், வேளாண்மைத் தொழில் செய்ய நிலமும் மேற்கொண்டு படிக்கப் பணமும் இல்லாது தவிக்கும் எளியவன். எனவே, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட விரும்பும் யான் என்ன செய்ய வேண்டும்?

—எ. மாசிலாமணி,
பொன்னம்பலம் கிராமம்.

விடை : தங்களுக்கு நிலமும், மேற்படிப்புப் படிக்கப் பணமும் வேண்டும் என்று கேட்பது போல் இருக்கிறது தங்கள் கேள்வி. பணம் கிடைத்தால் மேற்படிப்புக்குத்தான் போக நினைப்பீர்களே ஒழிய, நிலத்தில் பாடுபட நினைப்பீர்களா என்பது ஐயத்திற்குரியதே. எனவே, முதலில் நிலம் பெற முயற்சி செய்து அதில் பாடுபட்டுச் சம்பாதித்துக்கொண்டு பின்பு வேண்டுமானால் மேற்படிப்புக்குச் செல்லுங்கள். அதுவே நல்லது. உங்களுக்கு நிலப்பட்டா கொடுக்கும்படி உங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மனு அனுப்புங்கள். நிலப்பட்டா கிடைப்பதற்குள் நீங்களே வாரம் அல்லது குத்தகைக்கு நிலம் பிடித்துச் சாகுபடி செய்யலாம். வீட்டுத் தோட்டமிருப்பின் காய்கறி பயிர் செய்துகூட நல்ல வருவாய் ஈட்ட



லாம். பல பட்டதாரிகள் காய்கறித் தோட்டம் வைத்தே முன்னேறியுள்ளனர் என்பது உண்மை. அண்மையில் கல்கத்தாவில் ஒரு பட்டதாரி ஒரு ஹெக்டேரில் காய்கறி பயிரிட்டு ரூபாய் 5,000 இலாபம் எடுத்ததாகவும், அதனால் இனிமேல் வேலை தேடும் முயற்சியில் ஈடுபடாமல், காய்கறிச் சாகுபடியிலேயே தீவிரக் கவனம் செலுத்தப் போவதாகவும் கூறியிருந்தது நாளேடுகளில் அண்மையில் வெளி வந்துள்ள சுவையான செய்தியாகும். தகர டப்பா, மட்பாண்டங்கள், மரப்பெட்டிகள் ஆகியவற்றில் கூட மண்ணையும், எருவையும் இட்டு நிரப்பிக் காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம். உங்களுக்கு வேளாண்மையில் ஆர்வமிருப்பின் உடனடியாகக்குத்தகைக்குஅல்லது வாரத்திற்கு நிலம்பிடித்துச் சாகுபடி செய்ய முயலுங்கள். புன்செய் நிலத்தில் கூட ஒரே வருடத்தில் இரு பயிர் செய்து பெரும் பயன் பெறலாம். நிலப்பட்டா கிடைத்த பின்பு நீங்களே சொந்தச் சாகுபடியில் ஈடுபடலாம். 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதை மறந்துவிடாதீர்கள்.

வினா : நான் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்டு, 1956-ல் இந்தியா வந்து சேர்ந்தேன். விவசாயத்திற்கான நிலமில்லாது கஷ்டப்பட்டு, நீலகிரியில் தற்பொழுது எஸ்டேட்டில் வேலை செய்து வருகிறேன். திருச்சி மாவட்டம் வெள்ளனூர் கிராமத்தில் ஏதாவது பட்டா வழங்குவதற்கான நில வசதிகள் இருக்குமா? அப்படியானால் யாரை அணுகவேண்டும்.?

—டி. எஸ். ஜேசுதாஸ்,
கோத்தகிரி,

விடை : திருச்சி மாவட்டம் வெள்ளனூர் கிராமத்தில் தங்களுக்குப் பட்டாநிலம் கிடைக்குமா இல்லையா என்பதை, 'தமிழரசு' அலுவலகத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடியாது. உங்கள் நிலைமையைத் தெரிவித்து, நிலப்பட்டா வேண்டும் என்ற வேண்டுகோளையும் எழுதி, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். வெள்ளனூர் கிராமத்தில் தான் பட்டா வேண்டுமென்று கேட்டால், உங்களுக்குப் பட்டா கொடுக்க அந்த ஊரில் நிலம் இல்லாவிட்டால் என்ன செய்ய முடியும்? எனவே, எந்த ஊரில் பட்டா கிடைத்தாலும் ஏற்றுக் கொண்டு பாடுபட்டு முன்னேற முயற்சி செய்யுங்கள். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனு அனுப்பிப் பட்டா கேட்கலாம். ஆனால், 2 இடத்திலும் பட்டா கேட்காதீர்கள்!

வினா : நான் கிணறு வெட்டி 2 வருடங்கள் ஆகிறது. இதன் தண்ணீரைக் கொண்டு ஒரு மகசூலும் எடுக்கவில்லை. நெற்பயிருக்கு அத்தண்ணீரைப் பாய்ச்சினேன். பயிர் சரியாக வளரவில்லை. மறுவருடம் அந்த நிலத்தில் சோளம் விதைத்தேன். நன்றாக மகசூல் கிடைத்தது. இந்தத் தகவலை நீர் ஆராய்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்களிடமிருந்து ஒரு வருடம் ஆகியும் பதில் வரவில்லை. ஆகவே, அவருடைய முகவரி தெரிவிப்பதுடன், அவரைக் கலந்து ஆலோசனை கூறுவீர்களா?

—பி. சின்னச்சாமி,
நகர் கிராமம்,
தென்னார்க்காடு மாவட்டம்.



விடை : கிணற்றுத் தண்ணீரைப் பரிசோதனை செய்து பார்த்தால்தான், அதில் உள்ள குறைகள் தெரியும். தண்ணீரைப் பாட்டிலில் அடைத்துப் பரிசோதனைக்கு அனுப்பினீர்களா இல்லையா என்ற விவரத்தைத் தாங்கள் தெரிவிக்கவில்லை. எனவே, தாங்கள் கேட்டுள்ள முகவரி எது என்று எப்படிக் கூற முடியும்? பாசன நீர் பற்றிய விவரம் அறியத் தங்கள் கிணற்று நீரை வேளாண்மைத் துறையின் மண் பரிசோதனை நிலையங்களுக்கே அனுப்ப வேண்டும்.

உங்கள் கிணற்றுத் தண்ணீரை முழு அளவில் இறைக்க முடியாது என்று கூறியுள்ளீர்கள். எனவே, தண்ணீர் இறைக்கும் பம்புசெட் வைத்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம். அவ்வாறு அமைந்திருந்தால், சுமார் 15 நிமிடங்களுக்குக் கிணற்றுத் தண்ணீரை இறைத்துவிட்டு, அதன் பின்னர் இறைக்கப்படும் தண்ணீரைக் கொண்டு கண்ணாடி பாட்டிலை நன்கு கழுவி விட்டு சுமார் 250 மில்லி லிட்டர் தண்ணீரைப்பாட்டிலில் நிரப்பி நன்கு மூடி. விவரங்களையும் எழுதி வைத்துக் கடலூரில் உள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். பரிசோதனைக்குப் பிறகு முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். அதில் உங்கள் கிணற்றுத் தண்ணீரில் என்ன குறையுள்ளது, அதைப் போக்க என்ன செய்ய வேண்டும், என்னென்ன பயிர்களைச் சாகுபடி செய்யலாம் என்ற விவரங்கள் அடங்கியிருக்கும். அதற்கு ஏற்பப் பயிரிடுவதே நல்லது. கிணற்றுத் தண்ணீரைப் பரிசோதனைக்கு அனுப்ப உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள். ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமே, பரிசோதனைக்குத் தண்ணீரை அனுப்பலாம்.

நோயை வெல்வோம்!



சமுதாயத்தில் மனிதன் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவற்றுள் நோயும் ஒன்று! எத்தனையோ விதமான நோய்கள் அவனைப் பிடித்து ஆட்டிப்படைக்கின்றன. சில வகை நோய்களோ அவனை மரணக்குழியில் தள்ளுகின்றன. இத்தகைய நோய்களுள் இருதய நோயை இங்கே முக்கியமாகக் குறிப்பிடலாம். இதயம்தானே மனித நடமாட்டத்துக்கு மூல காரணம்? அதன் துடிப்பு நின்றுவிட்டால். அதே மனிதனுக்குப் பெயர், பிணம்!

இந்த இதயத்தில் உதயமாகும் செய்கைகள்தாம் எத்தனை! எத்தனை! இந்த இதயம்தான் காதலைப் பொழிகிறது; கட்டுப்பாட்டையும் மீறுகிறது; இந்த இதயம்தான் கருணை காட்டுகிறது; கழுத்தையும் அறுக்கிறது; இந்த இதயம்தான் அமைதியையும் நாடுகிறது; ஆர்ப்பாட்டத்தையும் நடத்துகிறது!

விலை மதிக்க முடியாத இந்த இதயத்துக்கு நாம் என்ன செய்தோம்? இதைக் கவனிக்கிறோமா? இதயத்தில் கைவைத்துச் சொல்லுங்கள்!

நம் உடலை நாம் கவனிக்காததால் எத்தனைக் கோளாறுகள் உண்டாகின்றன? இதோ இருதய நோய், இது எப்படி நம் இதயத்தை இறுக்கி விடுகிறது?

''கரொனரி திராம்போசிஸ்'' அல்லது 'மாரடைப்பு' என்று சொல்லப்படும் நோய் இன்றையச் சமுதாயத்தில் அதிகமாகிக் கொண்டே வருகிறது. நவ நாகரிக வாழ்விற்கு நாம் அளிக்கும் 'காணிக்கை'யாக இது இருந்து வருகிறது.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 18 இலட்சம் மக்கள் இந்த நோயினால், தாக்குண்டு மடிகிறார்கள். இந்தியாவில் சுமார் 2½ இலட்சம் மக்களாவது இந்த நோயினால் உயிர் இழக்கிறார்கள். சென்னை நகரை எடுத்துக்கொண்டால் குறைந்தது 20 பேரிலிருந்து 25 பேராவது இதனால் நாள்தோறும் இறக்கிறார்கள்.

இந்த கொடிய நோயின் காரணம் என்ன? இருதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் தமனிகளில் அடைப்பு ஏற்படுவதால் இந்த நோய் ஏற்படுகிறது.

இதைத் தடுக்க முடியுமா ?

1. அதிகமாகப் புகைப் பிடித்தல், 2. பெருந்தீனி தின்னல், 3. உட்கார்ந்த இடத்திலேயே அத்தனை அலுவல்களையும் பார்க்கும் வேலை அமைப்பு. 4. அதிகமான மனச்சங்கடங்கள். 5. கட்டுப்படாத நீரிழிவு, இரத்த அழுத்தம், உடற்பெருக்கு போன்ற நோய்கள். இவைகளைத் தவிர்த்தால் இந்த நோயையும் தவிர்க்கலாம்.

10 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நோயாளிகளில் 40 சதவீதம் இறந்தனர். அதுவும் நோய் தாக்கப்பட்டு 4 அல்லது 5 நாட்களில். ஆனால், இன்று அது 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் , தீவிர இருதய நோய் கவனிப்பு முறையாகும்.

இம்முறையில் இந்த நோயினால் ஏற்படும் சிக்கல்களை எதிர்பார்த்து அதைத் தவிர்த்து அவைகளால் நோயாளிகள் மாண்டு போகாமல் காப்பாற்றுவதுதான் முக்கிய அம்சமாகும்.

இருதய அடைப்புடன் நோயாளி வந்தவுடன், தீவிர இருதய நோய்க் கவனிப்புப் பகுதியில் சேர்க்கப்படுவார். அங்கு வேலையிலிருக்கும் செவிலியரும், மருத்துவர்களும் மிக நுட்பமான கருவிகள் கொண்டு. அந்த நோயாளியின் இருதய ஓட்டத்தை 24 மணி நேரமும் கவனித்து வருகிறார்கள். ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் உடனே அந்தக் கருவிகள் தெரிவிக்கும். அடுத்த வினாடியில் வேண்டிய சிகிச்சை அளிக்கப்பம்.

இதில் தேர்ச்சி பெற்ற செவிலியர்தாம் இரவும் பகலும் அந்த நோயாளிகளின் அருகில் இருப்பார்கள். இந்தச் செவிலியர், மருத்துவர் குழுதான் இந்த நோயாளிகளைக் காக்கும் பணியில் முக்கியமானவர்கள். இவர்களால்தான் இறப்பு சதவீதம் 15 ஆகக் குறைத்துக் கொண்டுவரப்பட்டது.

இம்மாதிரியான அமைப்பினைத் தமிழ்நாடு அரசு, சென்னை பொது மருத்துவமனையில் ரூபாய் 5 இலட்சம் செலவில்

அமைத்துள்ளது. 6 நோயாளிகளை ஒரே சமயத்தில் கவனிக்க இதில் வசதி உள்ளது. மிக நவீனமான கருவிகள் இந்தப் பகுதியில் உள்ளன.

இதைத் தவிர தீவிர இருதய கவனிப்பு அமைப்புப் பொருத்தப்பட்ட ஒரு நடமாடும் வண்டியை டி. வி. எஸ். நிறுவனமும், சென்னை ரோட்டரி சங்கமும் அன்பளிப்பாகக் கொடுக்க முன் வந்திருக்கிறது. இந்த வண்டி மூலம் நகரில் எப்பகுதியில் இருக்கும் மாரடைப்பு நோயாளியையும் உடனே அணுகி வேண்டிய சிகிச்சை அளித்து, மருத்துவ மனையில் இருக்கும் தீவிர இருதய நோய் கவனிப்பு அமைப்பிற்குக் கொண்டுவந்து விடலாம்.

மனிதனுக்கு வரும் கொடிய நோய்களில் இதுவும் ஒன்று. தக்க சமயத்தில் தக்க சிகிச்சை செய்து கொண்டால் முழுக் குணம் பெறலாம்.

நமக்குச் சக்தி அளிப்பது உணவு; உணவிலுள்ள மாவுச் சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து, தாதுச்சத்து வைட்டமின் உயிர்ச் சத்து முதலிய சத்துக்கள் நம் உடலுக்குச் சக்தி அளித்து இயங்குகின்றன.

உணவுச் சத்துக்களில், குறிப்பாக மாவுச் சத்து ''குளுகோஸ்' எனப்படும் சர்க்கரைப் பொருளாக மாறி உடல் நுண்ணறைகளில் புகுந்து எரிபொருளாகிச் சக்தி அளிக்கிறது. மிகுதியாக உள்ள ''குளுகோஸ்'' ஈரலில் சேமித்து வைக்கப்படுகிறது.

சிலருக்கு உடலின் நுண்ணறைகளில் 'குளுகோஸ்'' நுழைந்து எரிபொருளாவதில்லை; 'அதற்கு வேண்டிய 'இன்சுலின்' எனப்படும் சுரப்பிநீர் போதுமான அளவு சுரப்பதில்லை. அவ்வாறு போதுமான இன்சுலின் உடலில் கிடைக்காத போது சர்க்கரைப் பொருள் இரத்த ஓட்டத்தில் கலக்கிறது ; இரத்தத்தில் சர்க்கரை அளவு மிகுதியாகிறது; சிறுநீரகங்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே, சிறுநீருடன் மிகுதியான சர்க்கரைப் பொருள் வெளியேறுகிறது ; இவ்வாறு சிறுநீரில் சர்க்கரைச் சத்து வீணாக வெளியேறும் நிலையில் உள்ளவரே நீரிழிவு நோயாளியாவார்.



நீரிழிவு நோயைப் பின்கண்ட அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம் :—1. அளவுக்கு மீறிய தாகம், 2. அடிக்கடி சிறுநீர்க் கழித்தல், 3. மிகுதியான சிறுநீர்க் கழித்தல், 4. வேகமாக எடை குறைதல், 5. மிகுதியான பசி 6. மெலிவு, 7. பலவீனம், 8. சோர்வு, மயக்கம், 9. கட்டிகள் முதலிய தோல் நோய்கள், புண்கள்.

நீரிழிவு நோய் ஆண், பெண் அனைவருக்கும் வரலாம். எல்லா வயதினருக்கும் வரலாம் ; ஆனால், முதியவர்களுக்கு மிகுதியாக வரும். இனிப்பு முதலிய தின்பண்டங்களையும், மாவுச் சத்து மிக்க உணவுகளையும் மிகுதியாக உட்கொள்பவர்களுக்கு வரும். எடை மிகுதியாக உள்ளவர்களுக்கும், நோயாளிகளுடன் இரத்தத் தொடர்புடைய உறவினர்களுக்கும் இது வரலாம்.

இதற்கு என்ன செய்ய வேண்டும் ?

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த அதாவது நம் இரத்தத்தில் சர்க்கரைப் பொருள் சம அளவில் சாதாரண நிலையில் இருக்க ; உணவுக் கட்டுப் பாடும், உடற்பயிற்சியும்—மிகவும் முக்கியமாகும். மேலும், உடலில் ஏற்படும் '' இன்சுலின் '' குறைபாட்டை ஈடுசெய்யும் வகையில் செயற்கை '' இன்சுலின் '' ஊசி மூலம் செலுத்திக் கொள்ளலாம். மிறைப்படி ''இன்சுலின்'' செலுத்திக் கொள்வதன் மூலம் நீரிழிவைக் கட்டுப்படுத்தி, இயல்பான வாழ்வு வாழலாம்.

மற்றும் மருத்துவர் கொடுக்கும் மருந்துகளையும் உட்கொள்வது நல்லது. போதை தரும் குடிவகைகளையும், புகைப் பழக்கத்தையும் கைவிடுவது நல்லது.

நீரிழிவு நோய் அறிகுறி தோன்றினால்—உடனே மருத்துவரை அணுகிச் சிறுநீர்ப் பரிசோதனை செய்து கொண்டு உடலுக்குத் தேவைப்படும் '' இன்சுலின் '' அளவை அறிந்து உடலில் செலுத்திக் கொள்ளத் தவறாதீர்!

சிறுநீர் பரிசோதனை, உரிய இரசாயனக் கலவை கொண்டு நீங்களே அடிக்கடி வீட்டில் செய்து பார்த்துக் கொள்ளலாம். மருத்துவரின் யோசனைப்படி நீங்களே '' இன்சுலின் '' ஊசி செலுத்திக் கொள்ளலாம்.

சீரான உணவும், எளிய உடற்பயிற்சியும் நீரிழிவு நோயாளிக்கு நிறைவாழ்வளிக்கும். தேவையானால் தேவையான அளவு '' இன்சுலின் '' செலுத்திக் கொள்ளலாம். '' நீரிழிவு ஏனைய நோய்களைப்போல் உங்களைச் செயலற்றவர்களாக்கி விடாது. எனவே, உரிய உணவும், பழக்கமும், எச்சரிக்கையும் உங்கள் வாழ்வை நிறைவாழ்வாக்கும்.



537

முக்கடல்கள் கூடியலை ஆடிகவி பாடி
முழுமதியைக் கீழ்த்திசைக்கண் முத்தமிடும் போது
செக்கர்நிற ஞாயிறெனும் வானவனும் மேலைச்
செழுங்கடலில் மறையுமொரு சித்திரநற் காட்சி
ஒக்கவொரு பொழுதினிலே நிகழுகின்ற மாட்சி
உலகிதன்கண் பிறிதெங்கும் காணாத காட்சி
தெக்கணத்தின் வதனமெனத் திகழுகின்ற நாடு
தென்குமரி மாவட்டச் செந்தமிழ்நா டிதே !

மீன்வளமும் கான்வளமும் மிகமலிந்த நாடு
மேற்குமலைத் தொடர்மழையால் மேன்மைபெறு நாடு
தேன்பலவும் மாங்கனியும் தெங்கினொடு வாழை
திசையெங்கும் கண்குளிரத் திகழுவன நாடு
கூன்பிறையை முடியணிந்து குன்றுநிமிர்ந் தோங்கும்
குன்றாத சோலைசெறி குமரியெனும் நாடு
மான்பிணையோ டிடிகளி கூடிவிளை யாட
மந்தியது கண்டுகிளை தாவுகின்ற நாடு.

இத்திக்கும் சிலம்பளித்த சேரனாண்ட நாடு
தென்னவனும் பாண்டியனின் சிந்தைகவர் நாடு
முத்தமிழின் இலக்கணந்தொல் காப்பியத்தை முன்னன்
முறைமையொடு மதுரையின்கண் அரங்கேற்றும் போது
எத்திசையும் தமிழ்பரவத் தலைமைகொளும் ஆசான்
இருந்தருளும் அதங்கோட்டைத் தன்னகத்தே கொண்டு
முத்தினொடு பவளமணி திரைக்கரங்கள் வீச
முடிசூடும் மும்மன்னர் ஆண்டதிரு நாடு.

இதமுறுபன் மொழிப்புலவன் எமதப்பாத் துரையை
இடிமழைநேர் 'ஜீவா'வை ஈன்றுவக்கும் நாடு
புதியகவி மலரளித்த புத்தேரித் 'தேவி'
புரட்சிமிகும் சீர்திருத்தக் கருத்துக்கள் சேர்த்துப்
புதுமைபல செய்திட்ட கலைவாணர் மற்றும்
புகழார்ந்த அவதான ஆறுமுகம் வாழ்ந்த
பதியமைந்த வளம்மலிந்த செழுங்குமரி வட்டம்
பாவலராம் சேகுதம்பி தமிழ்வளர்த்த நாடு.

தேக்கினொடு சந்தனமும் இறப்பர்த் தோப்பும்
தேயமெங்கும் வளங்கொழிக்கச் செய்யுமணி நாடு
மாக்கடலும் நுரைமலரைத் திரைக்கரத்தில் ஏந்தி
மலையரசை முத்தமிட்டு மகிழுமெழிற் குமரி
பாக்கள்பல பாவாணர் பாடிக்களி கொள்ளப்
பழந்தமிழும் புதுத்தமிழும் பழகுதிரு நாடு
நீக்கமற நஞ்சையொடு புஞ்சைகொஞ்சிக் கூடி
நிலமகட்குப் பச்சையுடை போர்த்திருக்கும் நாடு.

தொல்புவியில் தமிழகமே தொன்மைபெற்ற தென்ன
சொலற்கினிய பஃறுளியும் குமரியும்கொள் நாடு
வில்லினொடு கயல்புலியும் விளங்குதிரு நாடு
வித்தைகளும் தத்துவமும் விரிவடைந்த நாடு
நல்வகையில் கல்லூரி பதின்மூன்று திகழும்
நலம்கனிந்த செழும்பதிகள் நானிலமே வாழ்த்த
கல்வியிலே இந்தியாவில் தலைநிமிர்ந்து நிற்கும்
கன்னியா குமரியெனும் கலைகொழிக்கும் நாடே!

வித்துவான் பா.சொ.லிங்கம்

குமரிப் பெருமை

'நாஞ்சில் அல்லது படையும் அறியார்,' என்னும் புறநானூற்றடி குமரி மாவட்டத்திலுள்ள தோவாளை, அகத்தீசுவரம் ஒன்றியப் பகுதிகளைக் காணும் போது நம் நினைவுக்கு வரும்; நாஞ்சில் என்பது கலப்பை-ஏர் எனும் பொருள்படும்; நாஞ்சில் நாட்டில் பார்க்குமிடமெல்லாம் நீக்கமறப் பச்சைப் பசேலென விளங்கும் நஞ்சைப் பயிர்களைக் காணலாம்; இயற்கையன்னை பச்சைப் பட்டுப் போர்த்து மிளிருவதுபோல இந்நாடு பொலியும்.

இந்நாட்டை நாஞ்சில் வள்ளுவன் என்பான் ஆண்டான். இவன் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவன்; புறநானூற்றுப் புலவர்களாகிய மருதன் இளநாகனார், ஔவையார், கருவூர்க் கதப்பிள்ளை ஒருசிறைப் பெரியனார் போன்ற புலவர்களால் பாடப்பெற்றவன். 'நாஞ்சில் பொருநன்,' எனவும் இவன் போற்றப்படுகிறான்; இவன் நாடு நானில வளம் பெற்றது; இவனது நாட்டில் நீலமணி போன்ற ஆறுகள் பொன்னிற முடைய வேங்கைப் பூக்களைத் தாங்கிக் கருங்கடல் நோக்கிப் பாய்ந்து செல்லும்; கயங்களில் விழுந்த வித்துக்கள் கரும்பு போல் செழித்து ஓங்கி வளரும்; கொடிய கோடையிலும் மங்கையர் கண்கள் போலக் குவளை மலர்கள் பூக்கும் பள்ளமான இடங்கள் நிறைந்தது எனக் கூறப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் சோழ, பாண்டியரின் ஆட்சியிலே அவ்வப்போது இருந்து வந்தது என்பதற்கு இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் பல இருக்கின்றன. கோட்டாறான மும்முடிச் சோழபுரம், கோட்டாறான சோழபுரம், தோரான அழகிய சோழநல்லூர், சுசீந்திரமான சுந்தரபாண்டிய சதுர்வேதிமங்கலம், சுசீந்திரமான சுந்தரசோழ சதுர்வேதி மங்கலம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தே பாயும் ஆறுகளில் ஒன்று பழையாறு; 'பஃறுளியாற்று மணலினும் பலவே,' எனப் புறநானூற்றில் குறிக்கப்படும் பஃறுளியாறே பழையாறென மருவிற்றென அறிஞர்கள் கருதுகின்றனர்.

'பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,' என்பது சிலப்பதிகாரம்.

இவ்வாறு மலையில் தோன்றி, கோட்டாறு, சுசீந்திரம் முதலிய ஊர்களின் வழியாகத் தெற்கு நோக்கிப் பாய்ந்து கன்னியாகுமரிக்குச் சற்றுத் தொலைவில் உள்ள மணக்குடிக் காயலில் கலக்கிறது.





கேரள நாட்டிலுள்ள கோவில்களுக்குள் செல்லும் பொழுது ஆண்கள் மேலுடை அணிந்து செல்ல முடியாது. அதுபோன்று குமரி மாவட்டத்திலுள்ள கோவில்களுக்குச் செல்லும் பொழுதும் ஆண்கள் மேலுடை அணிந்து செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.



குமரிப் பெருமை

நாகர்கோவிலில் பெரும்பாலான கடைகளுக்கு வெள்ளிக்கிழமைதான் விடுமுறை. ஞாயிற்றுக்கிழமை கடை வீதிக்குச் சென்று எல்லாப் பொருள்களையும் வாங்கலாம்.

ஏரோத்தோதனஸ் என்பார் பெரிப்ளஸ் என்னும் பயண நூல் எழுதியவர்; அவர் தம் அரிய நூலில் ‘‘குமரி எனப்படும் இடம் இதற்கப்பால் உள்ளது. அங்கே குமரிமுனையும், துறைமுகமும் உள்ளன; தமது இறுதி நாட்களைக் கழிக்க எண்ணுவார் பலர் இங்கு வருகின்றனர்; மேலும் அலைகடலில் நீராடவும், புலன்களை அடக்கி வாழவும் இங்குப் பலர் வருகின்றனர்; மங்கையரும் இதன் பொருட்டு இங்கு வருகின்றனர்’’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் தற்பொழுது ப்பர் தோட்டங்கள் உள்ள மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமே!

குமரி மாவட்டத்திலுள்ள தாடகை மலைச் சரிவிலும் குறத்தியறை என்னும் ஊரிலும் ஔவையாருக்கு ஆலயங்கள் உள்ளன. அன்றியும் வட்டெழுத்தில் ஒரு கல்வெட்டும், சில சிலைகளும் குறவன் தட்டுவிளையில் இருக்கின்றன. இவ்வூரின் வடபாலுள்ள பாறையில், பாறையைக் குடைந்து ஆக்கப்பட்ட சிறியதோர் ஆலயமும் உள்ளது. அதனுள்ளே ஔவையாரைப் போன்று உருவம் காணப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை இரயில் பாதை கிடையாது. மாவட்டத்திலுள்ள எல்லா வழித்தடங்களிலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளே ஓடுகின்றன. பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை ஆக்கப்படுவதற்கு முன்னர் மாவட்டம் முழுமையும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் ஓடிய மாவட்டம் குமரி மாவட்டம்தான்!

குமரி மாவட்டத்து நாஞ்சில் நாட்டை ஆண்டவருள் நாஞ்சில் வள்ளுவனும் ஒருவனாவான். இவனது வரையா வண்மைபற்றி ஔவையார் அழகுறக் கூறுகிறார்:

‘‘ஆக்கிய கீரைமீது தூற்றுவதற்கு அரிசி தர வேண்டினேம்; அவனோ குன்றுகள் போன்ற யானைகளை எங்களுக்கு வழங்கிவிட்டான்; அவன் கொடை மடம்படும் தன்மையை என்னவென்று கூறுவேன்’’ எனப் பாடுகிறார் ஔவையார்.

திருக்குறளில் கல்வி, கல்லாமை, ‘கேள்வி’ என அதிகாரங்கள் காணப்படுகின்றன. நாஞ்சில் நாட்டில் ‘கேள்வி’ என்று சில அலுவலகங்கள் உள்ளன. பழங்காலத்தில் மன்னவர்கள் மக்கள் குறைகளை நேரிலே கேட்டு நீக்கும் இடங்கள் ‘கேள்வி’ என அழைக்கப்பட்டன. இப்போது இவை ‘கேள்விக்’ கச்சேரி எனச் சொல்லப்பட்டு நிலவரி செலுத்தும் இடங்களாக மாறியுள்ளன.

இந்தியாவிலேயே சிறந்த கிராமம் என்று மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ள மணவாளக்குறிச்சி, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்ததேயாகும்.

உயர்ந்த

நாளையத் தலைமுறை

‘‘அண்ணா! அண்ணா! இங்கே காந்தி, அண்ணா, நேரு, கென்னடி படம் எல்லாம் மாட்டியிருக்கின்றன. இப்போது புதிதாக ஒரு படத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, இந்தப் படத்திலே இருப்பவர் யாரண்ணா?’’

‘‘அவரா, அவர்தான் ஆப்!’’

‘‘ஆப்பா? இப்படியும் ஒரு பெயரா?’’

‘‘ஆமாம், இவரை ஆப் என்றுதான் வீட்டில் அன்பாக அழைப்பார்கள். இவரது முழுப்பெயர் அபிரகாம் லிங்கன் என்றான் படத்தைக் காட்டி இளங்கோ.

‘‘ஓகோ! இவர் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இவர் வரலாறுதான் எனக்குத் தெரியவில்லை … …’’ என்றாள் கண்ணகி.

‘‘அதைத்தான் இப்போது சொல்லப் போகிறேனே’’ என்று இளங்கோ சொன்னதும், கண்ணகி காதைத் தீட்டிக் கொண்டாள்.

‘‘லிங்கன் ஓர் ஏழையின் மகன். தந்தை பெயர் தாமஸ் லிங்கன். தாய், நான்சி ஹாங்க்ஸ். ஒரே ஒரு சகோதரி பெயர் சாரா. லிங்கன் நல்ல உயரம். பார்க்கக் கொஞ்சம் விகாரமாக இருப்பான் … . .’’

‘‘விகாரமாக இருந்தால் அதற்கென்ன அண்ணா? திறமை தானே முக்கியம்!’’

‘‘அப்படிச் சொல் கண்ணகி. லிங்கன் சின்னஞ்சிறு வயதிலேயே நல்ல திறமைசாலி. உழைப்பாளி. சோம்பல் என்றால் அவனுக்குப் [illegible]க்கவே பிடிக்காது. லிங்கனின் அம்மா நாள்தோறும் பைபிளிலிருந்து குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாள். நல்ல நினைவுச் சக்தி இருந்ததால் லிங்கன் பைபிளை அநேகமாக மனப்பாடம் செய்து கொண்டு விட்டான்.’’

‘‘பிள்ளை என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? ம் . . …மேலே சொல்லுங்கள் அண்ணா’’

‘‘லிங்கனுக்கு வயது பத்து இருக்கும். அவனது தாய் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். லிங்கனால் இந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஒவ்வொரு நாளும் அவன், தாயார் புதைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று அழுது வந்தான். இதிலிருந்து லிங்கனுக்குத் தன் தாயிடத்தில் எவ்வளவு அன்பும், மரியாதையும் இருந்தது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.’’

‘‘ஆமாம், அண்ணா! அவருக்கு ஒரு சகோதரி இருந்தாளே அவள்தான் லிங்கனுக்கு ஆதரவாக இருந்தாளா?’’

‘‘இல்லை. லிங்கனுக்கு வயது இருபது இருக்கும்போது, அவரது சகோதரி சாராவும் இறந்து விட்டாள். இதனால் மேலும் மனமுடைந்து போனார் லிங்கன்.’’

‘‘ஐயோ, பாவம்! அப்புறம்?’’

‘‘லிங்கனுக்குப் புத்தகம் என்றால் கொள்ளை ஆசை!’’ ‘யாத்திரிகர்களின் முன்னேற்றம்’ என்ற கதைப் புத்தகத்தைப் அவர் பலமுறை படித்து மனப்பாடமேசெய்து விட்டார்; பென்சமின் பிராங்களின் போன்ற கதைப் புத்தகங்களை இரவல் வாங்கி வந்து ஆழ்ந்து படித்தார். பிறகு தான் கிணற்றுத் தவளையாக இருந்த லிங்கனுக்கு வெளியுலகம் என்று ஒன்று இருப்பது புலப்பட்டது.’’

‘‘அப்படியா? பிறகு அவர் எப்படியெல்லாம் வாழ்க்கையில் முன்னேறினார்? அதைச் சொல்லுங்கள் அண்ணா!’’

‘வாஷிங்டனின் வாழ்க்கை’ என்னும் புத்தகத்தைப் படித்த லிங்கனுக்குப் புதுத் தெம்பே ஏற்பட்டது. ஒருநாள் பலத்த மழை பெய்ததில், இரவல் வாங்கி வந்த அந்தப் புத்தகம் நனைந்து போய்விட்டது. லிங்கன் பயந்து கொண்டே அந்தப் புத்தகத்தை உரியவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தார். பிறகு, நாள் ஒன்றுக்கு இருபத்தைந்து ‘சதம்’ வீதம் மூன்று நாட்கள் கூலி வேலை செய்து, அத்தொகையைப் புத்தகத்திற்கு இழப்பீடாகக் கொடுத்துவிட்டு, புத்தகத்தை தனதாக்கிக் கொண்டார்!’’

‘‘புத்தகம் படிப்பதில் எத்தனை ஆர்வம் பார்த்தீர்களா? இந்தப் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும் இல்லையா?’’

‘‘ஆமாம், லிங்கன் படிப்பதில் மட்டுமல்ல; பல துறைகளிலும் விருப்பமுள்ளவர். இளம் வயதிலேயே கதைகள் சொல்வதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவராக விளங்கினார். கவிதைகள் எழுதுவதிலும், விளையாட்டுகளிலும் அவர் சிறந்து விளங்கினார். அவர் இளம் வயதில் எவ்வளவோ துன்பங்களையெல்லாம் அனுபவித்திருக்கிறார். அவற்றையெல்லாம் பொறுமையாகச் சமாளித்துக் கொண்டதால்தான் வாழ்க்கையில் படிப்படியாக அவரால் முன்னேற முடிந்தது. வேலை

இல்லையே என்று அவர் சும்மா இருந்ததே இல்லை. எந்த வேலை கிடைத்தாலும் அதைக் கூச்சமில்லாமல் செய்துவந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக லிங்கன் மிகவும் நேர்மையாளராகத் திகழ்ந்தார்....''

''வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால், நாம் இவர்களைப் போல உழைத்தால்தான் முன்னேற முடியும்! இல்லையா அண்ணா?''

''ஆமாம் கண்ணகி. உழைத்தால்தான் முன்னுக்கு வர முடியும். லிங்கன் ஒரு பண்டகச் சாலையில் நிருவாகியாக வேலை பார்த்தார். அங்கு வரும் வாடிக்கைக்காரர்களிடம் மிகவும் நாணயமாக நடந்துகொண்டார். ஒரு சமயம், கடைக்கு வந்த ஒரு பெண்மணியிடம், தான் கொடுத்த பொருளுக்கு அதிகமாகப் பணம் வாங்கிவிட்டதைப் பிறகுதான் உணர்ந்தார். உள்மனம் அவரை உறுத்தியது. கடை மூடியதும் இரவு வேளை என்பதையும் தான் பொருட்படுத்தாமல், இரண்டு மூன்று மைல் தூரத்திலுள்ள அந்தப் பெண்மணியின் வீட்டிற்குச் சென்று, அதிகமாக வாங்கிய பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார்!''

''இப்படியும் ஒரு மனிதரா? அபிரகாம் லிங்கனை ஒரு விந்தை மனிதர் என்றே சொல்லலாம்''

''நன்றாகச் சொன்னாய் கண்ணகி. லிங்கன் தன் பேச்சுத் திறமையை வளர்த்துக் கொள்ள விரும்பினார். ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஓர் ஊரில் இலக்கணப் புத்தகங்கள் விலைக்குக் கிடைக்கும் என்பதை அவர் அறிந்தார். உடனே அவர் கால்நடையாகவே அந்த ஊருக்குச் சென்று, ஒரு புத்தகத்தை வாங்கி வந்தார். இரவில் இந்தப் புத்தகத்தை ஊன்றிப் படிப்பார். அந்தக் காலத்தில் மெழுகு வத்திகளின் விலை அதிகமாக இருந்ததால், அவர் ஒவ்வொரு மெழுகுவத்தியில் ஒவ்வொரு துண்டாகக் கொளுத்தி வைத்துக்கொண்டு படித்தார். இன்னொரு நல்ல பழக்கமும் இவரிடம் இருந்தது....''

''என்ன அது? பொய் பேசமாட்டாரா?''

''அது மட்டுமல்ல. எந்தப் புத்தகம் கிடைத்தாலும் அதை ஊக்கமுடன் ஆழ்ந்து படிப்பார். அதிலிருந்து குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்வார். லிங்கன் படிப்பவர் மட்டுமல்ல, படை வீரராகவும் திகழ்ந்தார். ஒரு சமயம் சாக்ஸ் என்னும் இனத்தினரின் தலைவரான பிளாக்ஹாக் மீது போர் தொடுத்திருந்தனர். போரில் குதிக்கும்படி இல்லினாய்ஸ் ஆளுநர் மக்களுக்கு அறிக்கை விடுத்திருந்தார். அமெரிக்காவிலுள்ள நியூசேலத்தில் படை ஒன்று திரட்டப்பட்டது. அதற்கு நேர்மையாளரான லிங்கன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

''எப்படி இவர் எல்லாவகையிலும் சிறந்தவராக விளங்கினார்?''

''ஊக்கமும் உழைப்பும்தான் காரணம். லிங்கன் அரசியலிலும் ஈடுபட்டுச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கிடையில் அவர் ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொள்ளப்பட்டார். தன்னிடம் வந்துள்ளது உண்மையான வழக்கேதான் என்று திருப்தி ஏற்பட்டால் தான் அவர் அந்த வழக்கில் வாதாட ஒப்புக் கொள்வார். லிங்கனின் பேரும் புகழும் நாளுக்கு நாள் எங்கும் பரவியது. அவர் மேலும் உழைத்துக் கொண்டே இருந்தார். ஏராளமான வாக்குகள் பெற்று, அமெரிக்கக் காங்கிரஸ் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது நாட்டில் நிலவிவந்த அடிமை வழக்கத்தை ஆணித்தரமாகக் கண்டித்தார். அதனை ஒழிக்க அரும்பாடுபட்டார்.''

''ஐயோ, பாவம்! உழைத்து உழைத்து இப்படி ஓடாய்ப் போய் விட்டாரே!'' என்றாள் கண்ணகி, படத்தைச் சுட்டிக் காட்டியவாறே. இளங்கோ மேலும் தொடர்ந்தான்.

''அமெரிக்கக் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு லிங்கன் போட்டியிட்டார். போட்டி மிகக் கடுமையாக இருந்தது. இந்தத் தேர்தலில் லிங்கன் போட்டி இடுவதை ஒரு சாரார் எதிர்த்தார்கள். ஒரு சாரார் வரவேற்றார்கள். கடைசியில் லிங்கன் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, அமெரிக்க நாட்டின் தலைவர் ஆனார்; லிங்கனின் உழைப்பு வீணாகவில்லை. அது அவரைக் குடியரசுத் தலைவர் அளவுக்கு உயர்த்திவிட்டது''.

''உழைப்புக்கு என்றாவது ஒருநாள் நிச்சயம் வெற்றி உறுதி என்பதற்கு லிங்கனின் வாழ்வு ஒரு சான்று அல்லவா?''

''ஆமாம், லிங்கன் இரண்டாவது முறையும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவர் தன் தாயை மறவாமல், ''நான் இன்று அடைந்துள்ள நிலைமைக்கும், இனி அடையவிரும்பும் நிலைமைக்கும் அடிப்படை என் தெய்வத் தாய்தான்'' என்று குறிப்பிட்டார். இப்படி மக்கள் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மாபெரும் தலைவர் அபிரகாம் லிங்கன் ஒரு நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்....''

''ஐயோ, பாவம்! அவர் நம்மைவிட்டுப் பிரிந்தாலும், அவர் எல்லா நாட்டு மக்கள் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றுவிட்டார். வாழ்க அவர் புகழ்!'' என்று கண்ணகி லிங்கனின் திருவுருவப்படத்தைச் சுவரிலே மாட்டி வணங்கி நின்றாள்.


18
அண்ணன் காட்டிய வழி!
கதை: நம்பியின் தம்பி
படம்: இமார்
முத்து! எல்லாரும் இருக்கீங்க! இப்ப நானாகவே உண்மையைச் சொல்லிடுறேன். முத்துவை ராஜினாமாச் செய்யச் சொன்னது நான்தான்!
இவர் கேட்டுக்கொண்டபடி நானல்லவா சொன்னேன்!
நீங்கள் நினைத்ததையே நானும் நினைத்தேன்! முத்துவிடம் நான் சொன்னதை யாரிடமும் சொல்ல வேண்டாமென்று சொன்னேன். நாம் நினைத்ததற்கு நேர்மாறாக எல்லாம் நடக்க ஆரம்பிச்சுது
அதனால்தான் முத்துவின் அப்பாவிடம் மறுபடியும் முத்து எல்லாப் பொறுப்புகளையும் வகிக்கச் சம்மதம் கேட்டேன் அவர் மறுத்து விட்டார்!
அண்ணா! எங்களை இப்ப என்ன செய்யச் சொல்றீங்க?
நானும் இந்தத் தவறுகளுக்குக் காரணம்! உடனடியாக இதற்கு முடிவு கட்டணும்
வேலனும் அவன் சிநேகிதர்களும் திருந்தவில்லையே! நான் காட்டிய வழி தவறாகப் போய் விட்டது!
அண்ணா! நீங்கள் காட்டிய வழி நல்லவழி! ஆனால்.. வேலனும் செல்வனும், செந்தாமரையும் குறுக்கு வழியில் போனா நம் தவறாதமா?
அப்போது ஒருவன் வந்து ஏதோ சொல்கிறான்
என்ன.... விபத்தா?

மருத்துவ மனையில்....
நம்ம திட்டங்கள் எல்லாம் தெரிஞ்சு போச்சு.... இப்படிக் கடையாணியைக் கழட்டி விட்டு எல்லாரையும் ஏற்றி விடுங்க
சரி... நேரமாகுது வாங்க போவோம்!
ஆ....
ஐயோ... அம்மா!
தீயவை எண்ணாதே!
தீயவை செய்யாதே
தன்வினை தன்னைச் சுடும்!
முற்றும்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

மின்சார வாரியம்

சாற்றுக் குறிப்பெண்: எஸ். 28

சென்னை நகர ரயில் நிலையங்களிலிருந்தும், பார உந்து வண்டி நிலையங்களிலிருந்தும், சென்னை மின்சார விநியோக அமைப்புப் பண்டக சாலைகளுக்கு 1–4–1972 முதல் 31–3–1973 வரை சாமான்களை ஏற்றிவர மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி கீழ்க் கையொப்பமிட்டவரால் 22–3–1972 பகல் 12 மணி வரை வரவேற்கப் படுகிறது. மூடி முத்திரையிட்ட உறையின்மேல் "சென்னை மின்சார விநியோக அமைப்புப் பண்டகசாலைகளுக்கு 1–4–1972 முதல் 31–3–1973 வரை சாமான்களை ஏற்றி வர ஒப்பந்தப் புள்ளி," என்று எழுதி அனுப்பவேண்டும். வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளி உறைகள் 22–3–1972 மாலை 3-மணி அளவில் திறக்கப்படும். குறிப்பிட்டத் தேதி நேரம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

குறிப்பிடுகை மற்றும் ஒப்பந்தப் புள்ளி நகல் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூபாய் ஐந்து மட்டும் (ரூ. 5) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின்சார விநியோக அமைப்பு, 155, அண்ணாசாலை, சென்னை–2 என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ அல்லது டிமாண்டு டிராப்ட்டாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. அஞ்சலில் ஒப்பந்தப் புள்ளிகள் தவற நேரிட்டாலோ அல்லது கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலோ, அவற்றிற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது. ஒப்பந்தப் புள்ளி நகல் சாதாரண அஞ்சலில் தான் அனுப்பப்படும். கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) மேலே குறிப்பிட்டுள்ள அக்கௌண்ட்ஸ் ஆபீசரிடம் ரொக்கமாகச் செலுத்திப் பெற்ற ரசீதோ அல்லது அந்தத் தொகைக்கு டிமாண்டு டிராப்ட்டோ ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். கட்டுத் தொகை செலுத்திய ரசீதோ அல்லது டிராப்ட் இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப் படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வை மின்பொறியாளர்,
சென்னை மின்சார விநியோக அமைப்பு.

155, அண்ணா சாலை,
சென்னை–2.

(த. 56)

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் மூன்று வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துக் கழகம், கீழ்க்கண்ட பணிமனைகளில் கடைகள் குத்தகைக்கு விடப்படும்.

கடை நம்பர்—2—மந்தவெளி பேருந்து நிலையம்—பலசரக்கு வியாபாரம்.

கடை நம்பர்—3—பெரம்பூர் பேருந்துநிலையம்—துணிவகை ரகங்கள் விற்பது.

முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2, அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் 30—3—1972 மாலை 3 மணி வரை வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 30—3—1972 மாலை 3—15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விதி முறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1-04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 45)

சேலம் வீட்டு வசதிப் பிரிவு (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை)

எண்: 2/71-72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் 24—3—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை கீழ்க் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனாக்களைக் கோட்டக் கணக்காளரிடமிருந்து 15—3—1972-ஆம் நாளிலிருந்து 23—3—1972-ஆம் நாள் வரை கீழே குறிப்பிட்ட தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத்தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 24—3—1972-ஆம் நாள் பிற்பகல் 1-00 மணி வரை தான் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 24—3—1972-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில், ஒப்பந்தப் புள்ளி செய்தவர்கள் முன்னிலையில் நிருவாகப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்-வீட்டு வசதித் திட்டம் ஏற்காடு மலைப்பகுதி-சேலம்

வரிசை எண்.	வேலையின் விவரம்.	வீடுகளின் எண்ணிக்கை.	வேலையின் சுமார் மதிப்பீடு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி நமூனாக்களின் விலை.
	கீழ்க்கண்ட எஸ்டேட்களில் வீடுகள் கட்டுவது—		ரூ.	ரூ.	
1.	கலிடோனியா எஸ்டேட்.	15	52,500	800	ரூ. 10, 3½ சதவீதம். விற்பனை வரி
2.	ஹோப்பி புல்லி எஸ்டேட்	20	70,000	1,050	ஷை
3.	வேவர்லி எஸ்டேட்	50	1,75,000	2,625	ஷை
4.	அப்பாவு எஸ்டேட்	50	1,75,000	2625	ஷை
5.	தில்லாக்கம் எஸ்டேட்	5	17,500	270	ரூ. 5 3½ சதவீதம் விற்பனை வரி.
6.	ஜான்வலி எஸ்டேட்	5	17,500	270	ஷை
7.	கிரீன்லேண்டு எஸ்டேட்	15	52,500	800	ரூ. 10, 3½ சதவீதம் விற்பனை வரி.

பி. செங்கோடன்,
நிருவாகப்பொறியாளர்.
சேலம் வீட்டு வசதிப்பிரிவு.

அலுவலகம் :
11/22, திவான் பகதூர் சாலை,
இரத்தினசபாபதிபுரம் (அஞ்சல்)
கோயம்புத்தூர்-2.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

போக்குவரத்துத் துறை, சென்னை-2.

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை, அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3-00 மணி வரை கீழே ஒன்பதாவது பத்தியில் குறிக்கப்பெற்ற தேதிகளில் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலை விவரம்.	ஒப்பந்தத்தின் வகை.	முன்வைப்புத் தொகை.	பாதுகாப்பு வைப்புத் தொகை.	ஒப்பந்த விதிகளின் விலை விற்பனை உட்பட.	முடிக்கும் காலம்.	நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி.		ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ள, மற்றும் திறக்கப் படும் தேதி.
						முதல்	முடிய.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
		ரூ.	ரூ.	ரூ.				
1 சென்னை "போக்குவரத்து இல்லம்" பணிமனையில் கான்கிரீட் தளம் அமைத்தல்.	மொத்தத் தொகை ஒப்பந்தம்.	6,900	6,900	20·80	4 மாதங்கள்	15-3-1972	30-3-1972	31-3-1972.

ஒப்பந்தங்கள், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2, அவர்களால் ஒன்பதாவது பத்தியில் கூறிய அதேநாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைபடங்கள், முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேற்கூறிய வேலைக்கு மேற்கூறிய தொகையைக் கட்டி மேற்கூறிய தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை "நிருவாகப் பொறியாளர்", தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தப் பாரத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

சி. சிவானந்தா,
தலைமைப் பொறியாளர்.

(த.54)

வனத்துறை
வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை "வனப்பொறியாளர், திருச்சி", தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

கோனலார்—கவுன்சி சாலை இரண்டாம் மூன்றும் பிரிவின் மேம்பாடு வேலை கொடைக்கானல் சரகம், மதுரை வடக்கு கோட்டம்.

முன்பணம் (இ.எம்.டி.) ரூ. 825.
ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 20-3-1972 நேரம் முறையே மாலை 3·00 மணி, 3·05 மணி.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை "வனப்பொறியாளர், 1-எ, ராயல் ரோட், கன்டோண்மெண்ட், திருச்சி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1·04 பணமாகவோ, அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்திய பின் விண்ணப்பத்தின் பேரில் 1-3-1972 முதல் 18-3-1972 வரை எல்லா வேலைநாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப்பொறியாளர், திருச்சி.

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ் குறிப்பிட்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர் பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்தில் 29—3—1972 அன்று மாலை 3·00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—திருப்பத்தூர், அரசு கலைக் கல்லூரியில் மூன்றும் ஆண்டு பட்டப் படிப்பு மாணவர்கள் படிப்பு வசதிக்கு மேலும் சட்டடங்கள் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் .. .. மொத்தத் தொகை.
கட்டுத் தொகை .. .. ரூ. 12,000.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, வரைபடத்துடன் விற்பனைவரி உட்பட. ரூ. 20·70.
வேலை முடிக்க வேண்டிய காலம் .. 10 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், நிருவாகப் பொறியாளர், அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களுக்கு எழுதி மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, 15—3—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம். தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

(த.18)

எம்.எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
நீலகிரி வட்டம், கோயம்புத்தூர்-1.

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்தில் 23—3—1972 அன்று மாலை 3·00 மணிவரை, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்—கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் சிறுநீர்பாசன விடுதிக்கு துணைக்கூடம் (Floor) கட்டுதல்.

1 ஒப்பந்த வடிவம் .. .. .. மொத்தத் தொகை.
2 கட்டுத் தொகை .. .. .. ரூ. 4,100
3 ஒப்பந்தப் பத்திரங்கள் விலை .. .. ரூ. 10·35.
வரைப்படத்துடன் விற்பனை வரி உட்பட.
வேலை முடிக்க வேண்டிய காலம் .. 6 மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள், மேலாளர், நிருவாகப் பொறியாளர் அலுவலகம் கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர், அவர்களுக்கு எழுதி! மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, 23—3—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

எம்.எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப்பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

(த.19)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு மாநில போக்குவரத்துத்துறை,
சென்னை-2.

இந்தத் துறையில் கன்னியாகுமரி மற்றும் சென்னை வட்டாரங்களில் போர்மேன், மற்றும் எலெக்ட்ரிகல் போர்மேன் நியமனம் செய்வதற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருப்பவர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

போர்மேன் : 35 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். டிப்ளமா டி.எம்.ஐ.டி. (ஆட்டோமொபைல்) அல்லது பி.ஈ. (மெகானிகல்) முதல் வகுப்பு பெற்றிருக்க வேண்டும். (Valid) செல்லத்தக்க ஓட்டுநர் அத்தாட்சியும், எச்.டி. வண்டிகளை ஓட்டுவதற்கான எண்டார்சுமெண்டும் இருக்க வேண்டும். ஆட்டோமொபைல் பள்ளிக்கூடத்தில் முன் அனுபவம் உள்ளவர்கள் விருப்பத்தக்கவர்கள்.

எலெக்ட்ரிகல் போர்மேன் : 35 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். டிப்ளமா எல்.ஈ.ஈ. முதல் வகுப்புப் பெற்றிருக்க வேண்டும். (Valid) செல்லத்தக்க ஓட்டுநர் அத்தாட்சியும் எச்.டி. வண்டிகளை ஓட்டுவதற்கான எண்டார்சுமெண்டும் இருக்க வேண்டும். ஆட்டோமொபைல் பணிகூடத்தில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கவர்கள்.

(த.24)

ஒப்பந்தப் புள்ளி

1972-73-ஆம் ஆண்டில் மேல்பாக்கத்தில் (ஆவடிக்கு அருகில்) உள்ள அரசினர் பாதுகாப்பு முகாமுக்கும் (Government Care camp, Melpakkam) மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள பாதுகாப்பு இல்லத்திற்கும் (Spec'al Care Home) மளிகை சாமான்கள் மற்றும் பிற பொருள்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி.

1. 1972-73-ஆம் ஆண்டில் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய உள்ளகாலத்திற்கு அரசினர் பாதுகாப்பு முகாம், மேல்பாக்கம் (ஆவடி அருகில்) மற்றும் அரசினர் பாதுகாப்பு இல்லம், அம்மன்கார தெரு, சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் ஆகியவற்றுக்கும் மளிகை சாமான்களையும் பிற பொருள்களையும் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு யூனிட்டுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

2. இந்த ஒப்பந்தப் புள்ளிகள் போலீஸ் சூபரின்டெண்ட் பொறுப்பாளர், செங்கை மாவட்டம் (கிழக்கு), பரங்கிமலை, சென்னை-16.) விலாசத்திற்கு (திரு மு. இராமநாதன், பி. எ., மாவட்ட கண்காணிப்பாளர், அவர்களுக்கு விலாசமிட்டு அவரிடத்தில் 10-3-1972 அன்று பிற்பகல் 2 மணிக்குச் சேருமாறு அனுப்பப்படவேண்டும். ஒப்பந்தப் புள்ளி அனுப்பும் உறையின்மீது "1972-73-க்கு மளிகை சாமான்கள் மற்றும் பிறபொருள்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிட வேண்டும்.

3. பொருள்களின் ஜாபிதாவுடன் கூடிய ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஒப்பந்தப் படிவங்களை போலீஸ் சூபரின்டெண்ட் அலுவலகம், பரங்கிமலை, சென்னை-16, விலாசத்திலிருந்து எல்லா வேலை நாட்களிலும் காலை 10-30 மணியிலிருந்து மாலை 4 மணிவரையில் பெறலாம். 10-3-1972 அன்றோ அல்லது அதற்கு பிறகோ கருவூலம் அல்லது அரசாங்க பாங்கிலோ ஒன்றில் "XIX Police Miscellaneous Receipts Cost of tender forms for Supply of ration articles" என்ற தலைப்பில் ரூ. 5-ம் மற்றும் தனியாக விற்பனை வரிக்காக 13 பைசாவும் செலுத்தி பெற்ற இரண்டு சலான்களை தாக்கல் செய்தாலே ஒப்பந்தப் படிவங்கள் வழங்கப்படும். இந்தத் தொகைகள் எந்த சந்தர்பத்திலும் திருப்பித் தரப்பட மாட்டாது. ஜில்லா போலீஸ் அலுவலகத்தில் ரொக்கம் எதுவும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

4. எந்த ஒப்பந்தப் புள்ளிதாரர்களாவது பாரங்களை தபால் மூலம் பெறவிரும்பினுல் அவர்கள் சுய விலாசம் எழுதி தபால் தலைகள் ஒட்டிய கவர் ஒன்றை இணைத்து அனுப்பவும்.

போலீஸ் சூபரின்டெண்ட்,
செங்கற்பட்டு (கிழக்கு) மாவட்டம்,
சென்னை-16.

(த.42)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை
வைகைச் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்கள் சார்பிலும். கீழ்க்காணும் வேலைகளுக்காக கே. 2 ஒப்பந்த வகையில், அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம் மதுரை-2-ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் 29-3-1972 அன்று மாலை 3·00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பெறும். அதே நாள் மாலை 4·00 மணிக்கு, பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், அப்போது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	முன் வைப்புத் தொகை.
	ரூ.
1. மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே வைகைநதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டருக்கு இடது புறம் தலை மதகு கட்டுதல்.	7,500
2. மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டருக்கு இடது புறம் மணல் போக்கியும் அதைச் சார்ந்த சுவரும் கட்டுதல்.	8,500
3. மதுரை மாவட்டம், மதுரை வட்டம் விராகனூர் அருகே வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள், 1, 2, 3, முதலியன கட்டுதல்.	12,000
4. மதுரை மாவட்டம், மதுரை வட்டம் விராகனூர் அருகே வைகை நதியில் குறுக்கே, அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 4, 5, 6, முதலியன கட்டுதல்.	12,000
5. மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே வைகை நதியின் குறுக்கே, அமையவிருக்கும் ரேகுலேட்டரில் பகுதிகள் 7, 8, 9 முதலியன கட்டுதல்.	12,000

ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் பத்திரங்களின் விலையான ரூ. 20·00-ஐ P. W. III O. R என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை வைகைச் சீரமைப்பு கோட்டம், மதுரை-20 அவர்கள் வாயிலில் சேரும்படியும், மேற்கண்ட ஒவ்வொரு ஒப்பந்தப் பத்திரங்களின் விலைக்கான விற்பனை வரி ரூ. 0·75-ஐ XII Sales Tax (d) Miscellaneous என்ற தலைப்பிலும் தனித்தனியே அரசுக் கருவூலங்களில் செலுத்தி அதற்கான ரசீதுகளைக் கொடுத்து, மதுரை வட்ட (பொ.ப.து.) மேற்பார்வைப் பொறியாளர், மதுரை-2 அலுவலகத்தில் 22-3-1972 முதல் 27-3-1972-க்குள், மேற்கண்ட ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையும், கருவூல சீட்டு வடிவிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "கால் டிபாசிட்" வகையிலோ அல்லது செட்யூலடு வங்கிகளின் "டிமாண்ட் டிராப்டு" களாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடுகள் குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வ. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை,
மதுரை வட்டம், மதுரை-2.

(த.43)

மின்சார வாரியம்

இந்த அலுவலகத்தின் கீழ்க்கண்ட ஸ்பெசிபிகேஷனில் அடங்கியுள்ள வேலைகளுக்குத் தனித்தனியான முத்திரையிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், வேலூர் மின் திட்டம், தமிழ்நாடு மின்சார வாரியம் எண். 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு, வட ஆர்க்காடு மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள அவர் தம் அலுவலகத்தில் 20—3—1972 அன்று பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஸ்பெசிபிகேஷன் எண்ணும் வேலை பற்றிய குறிப்புகளும்—

1. ஓ.டி.எஸ். 50/71-72—தமிழ்நாடு மின் வாரியத்தைச் சேர்ந்த எல்லா பொருள்களையும் (ஆர்.சி.சி. கம்பங்கள் நீங்கலாக) தமிழகத்தில் உள்ள எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லுதல் (அந்தந்த இடங்களில் பொருள்களை ஏற்றுதல் இறக்குதல் உட்பட) வேலையின் மதிப்பு (சுமாராக) ரூ. 45,000.

முடிவு தேதி—20—3—1972.

2. ஓ.டி.எஸ். 51/71-72—9.14 மீட்டர் (30'), 8.22 மீட்டர்(27'), 7.31 மீட்டர் (24') நீளமுள்ள ஆர்.சி.சி. கம்பங்களை இந்த மின் அமைப்பைச் சேர்ந்த மேற்படி கம்பங்கள் செய்யுமிடங்களிலுமிருந்தும், இந்த மின் திட்டத்திற்குட்பட்ட ஒப்பந்ததாரர்கள் கம்பங்கள் செய்யுமிடங்களிலிருந்தும் (அதாவது இந்த மின் திட்டத்திற்குட்பட்ட கிளைப்பண்டக சாலைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு) கொண்டு செல்லுதல்(அ)இதர மின் திட்டங்களிலிருந்து ஆர்.சி.சி. கம்பங்களை இந்த மின் திட்டத்தைச் சார்ந்த பணியிடங்களுக்குக் கொண்டு வருதல் (அந்தந்த இடங்களில் கம்பங்களை ஏற்றுதல், இறக்குதல் உட்பட) வேலையின் மதிப்பு (சுமாராக ரூ. 60,000).

முடிவு தேதி—20—3—1972.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் நகல்கள், ஸ்பெசிபிகேஷன்கள் ஆகியவற்றை ரூ. 5 வீதம் செலுத்தி 13—3—1972 முதல் 20—3—1972 வரை பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை ரொக்கமாகச் செலுத்த வேண்டும். அல்லது மணியார்டர் மூலமாகத் தலைமைக் கணக்காயர், வேலூர் மின் திட்டம் எண். 10 கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு (அஞ்சல்) வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பவேண்டும். மணியார்டர் கூப்பனில் தேவையான ஸ்பெசிபிகேஷன் எண்ணை விவரமாகக் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப் பட மாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பும் போது முன்பணமாக ரூ. 200 (ரூபாய் இருநூறு) முடிவு தேதிக்குள் கட்டவேண்டும். ஒப்பந்தப் புள்ளி ஸ்பெசிபிகேஷன்கள் சாதாரணத் தபாலில்தான் அனுப்ப வேண்டும். அஞ்சல் துறையினால் ஏற்படும் இழப்புக்கு இந்த மின் வாரியம் பொறுப்பேற்காது.

மேற்பார்வைப் பொறியாளர்,
வேலூர் மின்சார திட்டம்.

(த. 52)

வனத்துறை
வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை "வனப்பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"களக்காடு—செங்கல்தேரி சாலை அமைத்தல்—2·481 கி.மீ. நாங்குனேரி வனச்சரகம்—திருநெல்வேலி தெற்குக் கோட்டம்".

முன்பணம் (இ.எம்.டி.) ரூ. 4,170 ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளவும் திறக்கவும் கடைசிநாள் 20-3-1972 நேரம் முறையே மாலை 3·00 மணி; 3·05 மணி.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை "வனப்பொறியாளர் 1-ஏ ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1 என்ற முகவரியிலிருந்து ரூ. 1·04 பணமாகவோ அல்லது பணஆணை மூலமாகவோ செலுத்திய பின் விண்ணப்பத்தின் பேரில் 1-3-1972 முதல் 18-3-1972 வரை எல்லாவேலை நாட்களிலும் அலுவலக வேலை நேரத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

(த.41)

ச. சண்முகசுந்தரம்,
வனப் பொறியாளர்,
திருச்சி.

வளர்க கூட்டுறவு
(ஸ்தாபிதம் 1946)

வாழ்க கைத்தறி
போன் 315

"தேவா டெக்ஸ்"

குறைந்த விலை, உயர்ந்த ரகம், நீடித்த உழைப்பு, கண் கவர் டிசைன், உத்தரவாதமுள்ள சாயம், ஒருங்கே நிறைந்தது.

தங்கள் வருகையை எதிர்பார்க்கும்

Q 227, அருப்புக்கோட்டை தேவாங்கர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

உயர்ந்த ரக புதுப்பட்டு ஜவுளி உற்பத்தி & விற்பனையாளர்
சவுண்டம்மாள் கோயில் தெரு, அருப்புக்கோட்டை.

எங்களிடம் பாவாடை துண்டுகள், பெம்பர் சேலைகள், சர்ட்டிங் ரகங்கள் செயற்கைப்பட்டு 5½, 6, 7, 8, 9 கெஜம் சேலைகள் தயாராகின்றன.

கிளை :நூல் கடை பஜார்- அருப்புக்கோட்டை.

N.B:—எங்கள் சங்க ஜவுளி தினுசுகள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

R. வீரையா,
மேலாளர்.

செ. மு. ச. தில்லைச்சங்கரன்,
தலைவர்.

சின்கோனா துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பாக, சின்கோனா, அரசு குயினா (Quinine Factory) தொழிற்சாலைக்கு, விறகு வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 10—4—1972 மாலை 3.00 மணி.

மற்ற விவரங்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகள் பெற, ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை விற்பனை வரி உட்பட தொகை ரூ. 2.07 காசுடன் கீழே கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பிக்கவும்.

இயக்குநர், சின்கோனா துறை,
அ.பெ. எண். 6, உதகமண்டலம்—1,
நீலகிரி.

இயக்குநர்,
சின்கோனா துறை,

(த. 39)

தேவகோட்டை நகராட்சி

நகராட்சி தண்ணீர்க் குழாய்கள் அமைக்கும் வேலைகளுக்குக் கீழ் கண்ட விபரப்படி ஜி. ஐ. குழாய்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—3—1972-ஆம் தேதி மாலை 4.00 மணி வரை ஆணையரால் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4.30 மணிக்கு திறக்கப்பட்டு பின்னர் குறிப்பிடும் தேதிகளில் முடிவு செய்யப்படும். தேவையான பிற விவரங்களை அலுவலகத்தில் நேரிலோ, கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

சிறப்புக் குறியீடு.

2" ஜி. ஐ. குழாய்கள் பி. பிரிவு 100 மீட்டர்.

1½" ஜி. ஐ. குழாய்கள் பி. பிரிவு 100 மீட்டர்.

1" ஜி. ஐ. குழாய்கள் பி. பிரிவு 400 மீட்டர்.

¾" ஜி. ஐ. குழாய்கள் பி. பிரிவு 50 மீட்டர்.

கட்டுத் தொகை ரூ. 240.

வெ. முத்துகுமாரசாமி,
தேவகோட்டை,
ஆணையர்.

(த. 49)

திருப்பூர் நகராட்சி

திருப்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் லாரியில் டேங் வைத்து அதன் மூலம் அவ்வப்பொழுது குறிப்பிடும் இடங்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை தினசரி தண்ணீர் விநியோகம் செய்ய நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திருப்பூர் நகராட்சி ஆணையர் அல்லது அவர்களால் அங்கீகாரம் பெற்றவரால் 22—3—1972-ஆம் தேதி மாலை 4.30 மணி வரை வரவேற்கப்படுகிறது. மற்ற விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆர். சீனிவாசன்,
ஆணையர்.

(த.50)

உணவு—வழங்கு துறை

உணவு வழங்கு ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5, தமிழ்நாடு ஆளுநர் சார்பாக, படலம், முண்டியம்பாக்கம், நெல்லிக்குப்பம், பாண்டிச்சேரி, ஆம்பூர், பெண்ணடம் மற்றும் மூங்கில் துறைப்பட்டு ஆகிய இடங்களிலுள்ள சர்க்கரை தொழிற்சாலையிலிருந்து சென்னை மாநகருக்கு, அரசுக் கணக்கில் மார்ச்சு 1972 முதல் ஓராண்டுக் காலத்திற்கு, சர்க்கரை எடுத்துச் செல்லுவதற்காக, ஒப்பந்ததாரர்கள் நியமனம் செய்வதற்காகக் குறிப்பிடப்பட்ட படிவத்திலுலான ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்கின்றனர்.

ஒப்பந்தப் புள்ளிகள் உணவு வழங்கு துணை ஆணையர்(Distribution) அவர்களால் எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5-ல் 31—3—1972 அன்று மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள், ஒப்பந்த நிபந்தனைகள், உணவு வழங்கு ஆணையர் அலுவலகத்தில் ரூ. 10ஐ (தொகை திருப்பித் தரப்பட மாட்டாது) ரிசர்வ் பேங் ஆப் இந்தியா, சென்னையில் "XXI Miscellaneous Department receipts-(e) civil supplies Department 3 (ii) Miscellaneous Receipts" என்ற தலைப்பிலும், விற்பனை வரி ரூ. 0.30 காசை "XII Sales Tax (d) Miscellaneons Madras Gearal Sales Tax Act 1959" என்ற தலைப்பிலும் செலுத்திச் செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

(த. 47)

அரசினர் மனநல மருத்துவமனை சென்னை-10.

மருந்து சரக்குகள் (Drugs and Medicines) வழங்குவதற்கான 1—5—1972 முதல் 31—8—1972 வரையிலுள்ள ஒப்பந்த அறிவிப்பு காலத்தில், புகழ் பெற்ற உள்ளூர் வட்டார நிறுவனங்களிடமிருந்து "Tender for the Supply of Medicines due on 7—4—1972" என்று உறையின் மீது தலைப்பிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்பு 7—4—1972 அன்று மாலை 3.00 மணி வரை வரவேற்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்புப் படிவம் கீழே கையொப்பமிட்ட அலுவலகத்தில் 6—4—1972 வரை எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் இடைக்கும். ஒப்பந்த அறிவிப்புப் படிவத்தின் விலையான ரூபாய் 3 பணத்தை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் "XXII Medical-J. Misc. other Receipts" என்ற தலைப்பில் செலுத்தி அந்தச் சலானை அலுவலகத்தில் தாக்கல் செய்து ஒப்ப அறிவிப்புப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். 11 காசு செலுத்தி வேறு ஒரு சலானும்" XII Sales Tax—Receipts under State Sales Tax Act—M. G S. T. for Sales as Tender Forms" என்ற தலைப்பில் கட்டவேண்டும்.

மேற்கண்ட தலைப்புகளில் கட்டிய கட்டணம் எவ்வித சூழ்நிலையிலும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

எம். சாரதா மேனன்,
கண்காணிப்பாளர்,
அரசினர் மன நல மருத்துவ மனை,

(த. 40)

தாராபுரம் நகராட்சி

தாராபுரம் நகராட்சி, சுகாதாரப் பிரிவிற்கு கீழே கண்ட தளவாடங்கள் தேவைப்படுகின்றன. அவற்றினை வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையரால் அல்லது அதிகாரம் பெற்றவராலோ 30—3—1972 மாலை 4·15 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. உரிய காப்புத்தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இதர விவரங்கள் வேண்டின் அலுவலகத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

தேவையான தளவாடங்கள் பெயர்.	தேவையான இனங்கள்.	செலுத்த வேண்டிய காப்புத் தொகை.
1 ஒற்றைமாண்டு மலவண்டிகள்	4	200
2 கையால் இழுக்கும் குப்பைவண்டிகள்	6	600
3 மண்வெட்டிகள்	12	200
4 சாக்கடை வழிப்பான்கள்	24	
5 மலார்கள் (Malars)	60	
6 இரும்பு சட்டிகள்	6	
7 எச்சில் துப்பும் தொட்டிகள்	6	
8 சிமெண்ட் குப்பைத் தொட்டிகள்	30	150

ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தாராபுரம்.

(த·31)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாட்சி நகராட்சி

இ1/18531/71

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 28—3—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் வேண்டுவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5·00ம் விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 25—3—1972 தேதி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு மராமத்துப் பொறியர் அவர்கள் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.

வ.எண்.	கட்டின் நடப்பு எண்.	வேலை விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	முன்வைப் புத்தொகை.	வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.
			ரூ.	ரூ.	
1	இ1/18531/71	காந்தி சந்தையில் "ஏ1" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	8,025	202	2 மாதம்.
2	,,	காந்தி சந்தையில் "ஏ2" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	9,900	248	,,
3	,,	காந்தி சந்தையில் "பி1" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	9,273	232	,,
4	,,	காந்தி சந்தையில் "பி2" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	9,273	232	,,
5	,,	காந்தி சந்தையில் "சி1" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	5,610	140	,,
6	,,	காந்தி சந்தையில் "சி2" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	5,610	140	,,
7	,,	காந்தி சந்தையில் "டி" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	7,029	175	,,
8	,,	காந்தி சந்தையில் "இ1" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,435	160	,,
9	,,	காந்தி சந்தையில் "இ2" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,435	160	,,
10	,,	காந்தி சந்தையில் எப்1" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,105	153	,,
11	,,	காந்தி சந்தையில் "எப்2" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	6,105	153	,,
12	,,	காந்தி சந்தையில் "ஜி1" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	7,920	198	,,
13	,,	காந்தி சந்தையில் "ஜி2" பிளாக் பகுதிக்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	7,920	198	,,
14	,,	காந்தி சந்தையில் மாட்டிறைச்சிக் கடைகளைச் சுற்றிலும் உள்ள இடத்திற்குக் கிணற்று மண் விநியோகம் செய்தல்.	11,507	288	,,
15	இ1/14382/71	செல்லக்குமார கவுண்டர் வீதி கற்கள் செட்டி வீதி அய்யாவுச்செட்டி வீதி ரயில்வே லைன் சந்து ஆகியவற்றில் சாக்கடை மராமத்துச் செய்தல், மற்றும் ரயில்வே சந்துக்கு வடபுற ரோடுக்குத் தார் தளம் போடுதல்.	16,335	404	3 மாதம்.
16	இ1/16263/71	நகராட்சி தினசரி காய்கறிச் சந்தையில் புதிய லேய்வுட் பிரகாரம் பாதைகளுக்குச் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல்.	7,304	183	2 மாதம்.
17	இ1/8859/71	கோட்டாறப்பட்டி வீதி எண். 4-க்கு தார்தளம் போடுதல், மற்றும் சாக்கடை மராமத்துச் செய்தல்.	7,198	180	,,
18	இ1/522/72	காந்தி சந்தையில் "எ" பிளாக் கடைகளுக்கு மராமத்துச் செய்தல்.	6,847	172	,,
19	இ1/6995/70	சுப்புப் பிள்ளை சந்துரோடுக்குச்சாக்கடைச் சுவர் கட்டுதல் மற்றும் தார்தளம் போடுதல்.	7,327	184	,,
20	இ1/16262/71	தினசரி காய்கறிச் சந்தையில் நடைபாதை சாக்கடை காம்பவுண்ட் கேட் முதலியன செய்தல்.	17,361	434	,,
21	இ1/8677/71	ஊத்துக்காடு ரோடில் நவீன அரிசி ஆலையிலிருந்து கிழக்கே தடுப்புச் சுவர் மற்றும் ஒரு சிறுபாலம் கட்டுதல்.	9,284	232	,,
22	இ1/13887/71	நேதாஜி ரோடிலிருந்து மேற்கே கள்ளுக்கடை ரோடுக்கு தடுப்புச் சுவர் விரிவுபடுத்துதல்.	7,593	187	,,
23	இ1/20416/71	குமரன் நகரில் டக. 118/1-ல் உள்ள கிணற்றுக்குத்தடுப்புச்சுவர் கட்டுதல் மற்றும் பம்ப் ரூம் கட்டுதல்.	7,850	196	,,
24	இ1/20303/71	தினசரி காய்கறிச் சந்தையில் பிரதான படைகளுக்கு இடையில் புதிதாக 4 கடைகள் கட்டுதல்.	11,956	299	3 மாதம்.
25	இ1/19498/70	வடுகபாளையம் இடையர் வீதிக்குத்தார்த்தளம் போடுதல் மற்றும் ஒரு சிறு பாலம் கட்டுதல்.	13,942	349	,,
26	இ1/13042/72	மரப்பேட்டை சுண்ணாம்புக் காளவாய் இட்டேரி ரோடுக்கு ஓடையிலிருந்து தெற்கே ரயில்வே லைன் வரை கருங்கல் காப்பிப் போட்டு தார்த்தளம் போடுதல்.	8,510	213	,,

(த·25).

ஜி. ராஜமன்னார்,
ஆணையர் பொறுப்பு.

வேலை வாய்ப்பு

மின்சார வாரியம்

இளநிலை உதவியாளர்கள், காசாளர்கள், தட்டச்சர்கள் பதவிகள் நியமனம் செய்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில், மனுக்கள், தமிழ்நாடு மின் வாரியத்தினால், 25 மார்ச்சு 1972 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பதவிகளின் பெயர்.	பதவிகளின் எண்ணிக்கை.	சம்பள விகிதம்.
1 இளநிலை உதவியாளர்கள்	1600	*126–8–150–10–250
2 காசாளர்கள்	800	*126–8–150–10–250
3 தட்டச்சர்கள்	200	*126–8–150–10–250

(தட்டச்சுக்கான சிறப்பு ஊதியத்துடன்).

* பட்டதாரிகளுக்கு இந்த ஊதிய விகிதத்தில் மாதம் 150 ரூபாயில் சம்பளம் தொடங்கப்படும்.

மேலே சொன்ன சம்பளம் தவிர்த்து, வாரியத்தின் பணியாளர்களுக்கு உள்ளவாறு வழக்கமான அகவிலைப்படி மற்ற படிகள், எவையேனும் இருந்தால், அவை வழங்கப்படும்.

குறைந்தபட்ச தகுதி :—

இளநிலை உதவியாளர், காசாளர்கள்:—

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியுடன், எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாக இருக்க வேண்டும். அதாவது, எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் அல்லது அதற்குச் சமமான எதாவது ஒரு தகுதியில் ஒவ்வொரு பாடத்திலும் நிர்ணயிக்கப்பட்ட சதவிகித மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும்.

தட்டச்சர்கள்:—

குறைந்த பட்ச பொதுக் கல்வி தகுதியுடன், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேறியவர்களாகவும், தட்டச்சில் ஆங்கிலத்தில் ஹையர் கிரேடும், தமிழில் லோயர் கிரேடும் அல்லது அதற்குச் சமமான வேறு தட்டச்சு தகுதி பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும்.

தட்டச்சர்கள் பதவிகளுக்கு, இதைவிட குறைந்த தகுதி படைத்தவர்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை அவை, ஷெட்யூல் வகுப்பினர், ஷெட்யூல் பழங்குடியினர்களிடமிருந்து இருந்தால் மட்டுமே கவனிக்கப் படும். முழு விவரங்களையும் மனு வடிவங்களையும், "தலைமை மின் பொறியாளர், 157, அண்ணா சாலை, சென்னை-2"-லிருந்து பெற்றுக் கொள்ளலாம். Accounts Officer, Madras Electricity System, Madras-2 க்கு வழங்குமாறு உள்ள ஒரு ரூபாய் மதிப்புள்ள ஒரு கோடிட்ட அஞ்சல் ஆணையும் (Postal Order) 20 காசு அஞ்சல் வில்லையும் அத்துடன் அகதிகள் நிவாரண நிதிக்கான 5 காசு அஞ்சல் வில்லையும் ஒட்டப் பட்டு 23 ·செ.மீ. 10 செ.மீ. அளவில் தன் முகவரி எழுதியுள்ள ஓர் உறையையும் மனு வடிவங்கள் கோரும் கடிதத்துடன் வைத்து அனுப்ப வேண்டும். ஒரு ரூபாய்க்கான அஞ்சல் ஆணையானது 25–2–1972 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெறப்பட்டதாக இருக்க வேண்டும். அப்படிக் கோரப்படும் உறையின் மேல் REQUISITION FOR APPLICATION FORM எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட அறிவிப்பில் கூறிய முழு விவரங்களையும் மனு படிவங்களையும் "தலைமை மின் பொறியாளர், 157, அண்ணாசாலை, சென்னை-2" அலுவலகத்திலிருந்து மட்டுமல்லாமல் கீழ்க்கண்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம் :—

1 செங்கை மின் திட்டம், காஞ்சிபுரம்
2. வேலூர் மின் திட்டம், காட்பாடி.
3. தென்னார்க்காடு மின் திட்டம், விழுப்புரம்.
4. மேட்டூர் மின் திட்டம், மேட்டூர்.
5. ஈரோடு மின் திட்டம், ஈரோடு.
6. தருமபுரி மின் திட்டம், தருமபுரி.
7. தஞ்சை மின் திட்டம், தஞ்சாவூர்.
8. பைகாரா மின் திட்டம், கோயம்புத்தூர்.
9. திருச்சி மின் திட்டம், திருச்சிராப்பள்ளி.
10. மதுரை மின் திட்டம், மதுரை.
11. இராமநாதபுரம் மின் திட்டம், மதுரை.
12. திருநெல்வேலி மின் திட்டம், திருநெல்வேலி.

அப்படிப் பெறுவதற்கு அறிவிப்பில் கூறப்பட்டது போல் ஒரு ரூபாய் மதிப்புள்ள ஒரு கோடிட்ட அஞ்சல் ஆணை "Accounts Officer, Madras Electricity System, Madras-2" வாங்கி மேற்கண்ட அலுவலகங்களில் கொடுக்கவேண்டும்.

சி. ஜி. இரங்கபாஷ்யம் ஐ.ஏ.எஸ்,
தலைவர்.

(த. 53)

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—நாகப்பட்டினத்தில் மாவட்டப் பதிவாளருக்கு அலுவலகங்கள் கட்டுதல் பற்றி.

பார்வை:—இவ்வலுவலக எண். நக. 43035/71/வ3 நாள் 28-12-1971.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 29–3–1972 அன்று மாலை 3 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 28–3–1972 அன்று மாலை 5 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் எவ்வித மாறுதலும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த· 55)

ஒப்பந்தப் புள்ளி

திருநெல்வேலி நகராட்சி

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைக்கு நெல்லை நகர்மன்ற ஆணையர் அவர்களால் 30—3—1972 மாலை 4 மணி வரை நெல்லை நகர் மன்ற அலுவலகத்தில் வைத்துப் பெற்றுக்கொள்ளப் படும். இதர விவரங்களுக்கு நகர்மன்றப் பொறியாளர் அவர்களிடம் அறியவும்.

"மத்தியப் பேருந்து நிலையத்தில் புதிதாகக் கட்டியுள்ள குளியல் அறைக்கும் கக்கூசுக்கும் தண்ணீர் இணைப்புச் சாமான்கள் வழங்க" கட்டுத் தொகை ரூ. 100.

தெ. ரா. கனகசபாபதி,
ஆணையர்.

(த.37)

ஏல விற்பனை

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம்

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் கோட்டத்தைச் சேர்ந்த மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட ஜீப் எம்.எஸ்.எக்ஸ். 2791 (வில்லீஸ் ஜீப்) தற்போதுள்ள நிலைமையில் உள்ளது உள்ளபடி கீழே கையொப்பமிட்டுள்ளவரால் 27—3—1972-ஆம் தேதி திங்கட்கிழமை பகல் 3 மணிக்கு புவனகிரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும் என அறிவிக்கப் படுகிறது. ஏலம் கேட்க விருப்பமுடையோர் ஏல நிபந்தனைகளுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

கோட்டாட்சியர், சிதம்பரம், தென்னார்க்காடு மாவட்டம்.

அ. ந. தியானேசுவரன்,
கோட்டாட்சியர்.

(த· 38)

அருப்புக்கோட்டை நகராட்சி

இந்நகராட்சி ஆழக்குழாய் பைப்புகளுக்குத் தேவையான உதிரி உறுப்புகள் வழங்க, மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18-3-1972ஆம் தேதி மாலை 4-00 மணி வரை, கீழே கையொப்பமிடப்பட்டவரால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களை, எல்லா வேலை நாட்களிலும். இவ்வலுவலகத்தில் கேட்டுக் கொள்ளலாம்.

எம். புகழும்பெருமாள், பி. காம்,
ஆணையர்.

(த. 26)

பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சியிலுள்ள துப்புரவு மாடுகளுக்கு 1972-73ஆம் ஆண்டுக்குத் தேவையான கீழ்க்காணும் தீவனங்கள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27-3-1972ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற நபராலோ பெற்றுக் கொள்ளப்படும்.

இது சம்பந்தப்பட்ட விதிகள் நேரிலோ அல்லது சுகாதார அதிகாரிக்கோ விண்ணப்பித்தோ பெற்றுக் கொள்ளலாம்.

1. வைக்கோல் (சம்பா ரகம்).
2. சோளக்கட்டு.
3. பருத்தி விதை (கம்போடியா).
4. கடலை புண்ணக்கு (ரோட்டரி).
5. (எ) அரிசித் தவிடு (பாலிஷ்).
   (பி) உளுந்துக் குருணை.
6. மசால் தழை.

(த. 27)

ஆணையர் பொறுப்பு.

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்—சோளிங்கர் குடிநீர் வழங்கு திட்டம்—முதல்நிலை 6·00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. உயர்மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல் மற்றும் தேவையான குழாய் இணைப்பு, வால்வு பிட்ஸ் மற்றும் "சம்ப்" முதலியன பொருத்தல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலைக்காக, இத்துறையில் அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களால், 52, கங்குரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8 அவர்தம் அலுவலகத்தில் 24—3—1972 அன்று மாலை 3·00 மணிவரை, துறைக்குரிய சரியான படிவத்தில், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·30 மணிக்குப் பிறகு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை-அவர்களால் திறக்கப்படும்.

1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2 கட்டுத் தொகை	ரூ. 3,300.

(கருவூலச் சலான் வடிவிலோ அல்லது ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள, ஏதேனும் ஒரு ஏற்கத்தக்க வடிவில் கட்டுத் தொகையைச் செலுத்த வேண்டும்).

3 ஒப்பந்தப்பத்திரங்கள் விலை	ரூ. 10·35.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், செங்கல்பட்டு அவர்தம் கணக்கில் " **P. W. III. O- R** " என்ற தலைப்பிலும், விற்பனை வரியை " **XXII Sales Misc. I. Genl. Sales Tax** " என்ற தலைப்பிலும் தனிதனி சலானில் செலுத்த வேண்டும்.

4 ஒப்பந்தப்பத்திரங்கள் கிடைக்கும் இடம் ..	நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 24, பெரிய மணியக்காரர் தெரு, செங்கற்பட்டு.
5 வேலை முடிக்க வேண்டிய காலம்	..8 மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

(த. 10)

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்)
(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள)

800 மி.மி. அகலமுள்ள பெல்ட் கன்வேயர்களைப் பேக்கிங் பிளாண்டில் ஃபேப்ரிகேசன், நிறுத்தி, மற்றும் ஓட்டி வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—3—1972 வரை வரவேற்கப்படுகின்றன.

விளக்கமான குறிப்புகள், ஒப்பந்தப்பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள், பொதுமேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், அஞ்சல், (வழி) ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டத்தில் 1—3—1972 முதல் ரூ. 25·90 மணியார்டர் மூலமாகச் செலுத்தி பெறலாம். தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

பொது மேலாளர்.
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் (அஞ்சல்) (வழி),
ராஜபாளையம்.

(த. 13)

குடிநீர், வடிகால் வாரியம்-வீராணம் திட்டம்

வேலையின் பெயர்—அழுத்தப்பட்ட காங்க்ரீட் குழாய்களைத் தென் ஆர்க்காட்டிலுள்ள கடிலம் ஆறு மேலாகத் தூக்கிப் பிடிக்கும் வகையில் காங்க்ரீட்டினால் ஒரு பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலைக்காக, பொதுப்பணித்துறை அல்லது அரசு நிறுவனங்களின் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், சென்னை-5 அவர்களால் அவரது அலுவலகத்தில் 20—3—1972 அன்று மாலை 3·00 மணிவரை துறைக்குரிய சரியான படிவத்தில், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·30 மணிக்குத் திறக்கப்படும்.

1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2 கட்டுத் தொகை	ரூ. 10,000.
3 ஒப்பந்தப்படிவத்தின் விலை	ரூ. 10·00+0·37 விற்பனை வரி.
4 வேலை முடிக்க வேண்டிய காலம் ..	10 மாதங்கள்

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை, அரசுக் கருவூலத்திலோ, அல்லது ரிசர்வ் பேங்க்ஆப்இந்தியாவிலோ "**III Suspense G. Remittance III Other Remittances TWAD Board Funds**" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம் வடக்கு அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில், தொகை செலுத்திக் சலானைக் கொடுத்து 2—3—1972 முதல் 15—3—1972 வரை பெற்றுக் கொள்ளலாம்.

தனித் தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,

(த. 21)

அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்
சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு— ④ சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!

தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.

கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு, வீட்டு வசதி வாரியத்தின் கிளை

எண் : 65/71-72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் 22—3—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை கீழ் கையொப்ப மிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனக்களை, கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நா களில் 15—3—1972-ஆம் நாளிலிருந்து 21—3—1972-ஆம்நாள் வரை கீழே குறிப்பிட்ட தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் கட்டுத்தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேர வேண்டிய நாளான 22—3—1972-ஆம் நாள் பிற்பகல் 1-00 மணிவரைதான் பெற்றுக்கொள்ள படும். ஒப்பந்தப் புள்ளிகளை 22—3—1972 ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில், ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் நிருவாக பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

சேரி அபிவிருத்தித் திட்டம்—பேரூர் சாலை தென் பகுதி, கோயம்புத்தூர்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	வேலையின் சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி நமூனக்களின் விலை.
	ரூ.	ரூ.	ரூ.
I. (a) பன்னிரண்டு குடியிருப்புக்களுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக் கட்டடம் (12·ல் 1) ஒன்றும், பதினெட்டு குடியிருப்புக்களுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக்கட்டடங்கள் (18–ல் 1) இரண்டும் கட்டுவது [பேரூர் சாலை தென் பகுதியில் மூன்றும் கட்ட வேலை]			
(1) குருப் 1	2,01,500	3,030	ரூபாய் 15·00 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவீதம்.
(2) குருப் 2	2,01,500	3,030	ஷை
(3) குருப் 3	2,01,500	3,030	ஷை
(4) குருப் 4	2,01,500	3,030	ஷை
(b) பன்னிரண்டு குடியிருப்புக்களுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக் கட்டடங்கள் (12-ல் 1) இரண்டும், பதினெட்டு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக் கட்டடம் (18-ல் 1) ஒன்றும் கட்டுவது [பேரூர் சாலை தென்பகுதியில் மூன்றும் கட்ட வேலை]			
(5) குருப் 5	1,78,500	2,680	ரூபாய் 10 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவீதம்.
II. தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீட்டுவசதித் திட்டம்—சர்ச்ஹில் பகுதி—உதகமண்டலம்— இரண்டு குடியிருப்புக்களுக்கான ஒரு அறை கொண்ட ஒற்றை மாடிக்கட்டடங்கள் எட்டு (8 பிளாக்குகள்) கட்டுவது	1,87,000	2,820	ரூபாய் 10 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவீதம்.
III. தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித்திட்டம் திருப்பூர்— நான்கு குடியிருப்புக்களுக்கான ஒரு அறை கொண்ட இரண்டு மாடிக்கட்டடங்கள் (4-ல் 1) ஐந்து (5 பிளாக்குகள்) திருப்பூரில் கட்டுவது குருப் A	1,00,000	1,500	ரூபாய் 10 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவீதம்.

11/22, திவான் பகதூர் சாலை, இரத்தினசபாபதிபுரம் (அஞ்சல்)
கோயம்புத்தூர்-2.

இல. அரங்கநாத சாஸ்திரி,
நிருவாகப் பொறியாளர்,
கோவை வீட்டு வசதிப்பிரிவு.

(த. 12)

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் தமிழக பொதுப்பணித் துறை, தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 29—3—1972 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்:—"மன்னியாற்றின் தலைப்பில் தூர் வெளியேற்றும் பொறி மதகு கட்டுதல்."

2. ஒப்பந்த வகை.—லே. 2

3. வைப்புத் தொகை.—ரூ. 10,000

4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங்களில் பொதுப் பணித் துறை செலுத்துத் தொகை என்ற தலைப்பில் செயற் பொறியாளர் காவேரிக் கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்:— ரூ. 25-00

5. விற்பனை வரி (அரசினர் கருவூலங்களில் XII விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்)—ரூ. 0·88.

6. ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள்:— 13—3—1972

(த. 28)

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை சென்னை-2

தலைவர் பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் கட்டடப் பொறியாளரால் வரும் இரண்டு வருடத்திற்கு, பாடிகார்டு சாலையிலுள்ள "போக்குவரத்து இல்லம் பணிமனையில்" சிற்றுண்டிசாலை ஒன்று குத்தகைக்கு விடப்படும். அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில், கட்டடப் பொறியாளர், அவர்களால், ஒப்பந்தப் புள்ளிகள் 31–3–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 31–3–1972 மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த புள்ளிப் விதிமுறைகள் கட்டடப்பொறியாளர் அலுவலகத்தில், எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1.04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 32)

பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு— வடார்க்காடு பெருவட்டம்.

வேலூர்-1.

வேலையின் பெயர்—செங்கற்பட்டு மாவட்டம், பரனூரில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தொழு நோய் பிச்சைக்காரர்கள் தங்கும் விடுதிகள் எட்டு பிரிவுகள் (இரண்டு யூனிட்ஸ்) கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்த தாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 24–3–1972 மாலை 3.00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 351 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை:—மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை:—ரூ. 4,800.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்:—
ரூ.20 விற்பனை வரி 3½ சதவீதம்.
ஒப்பந்தப் புள்ளிமுடிக்கவேண்டிய காலம்:—நான்கு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 4–3–1972 தேதி முதல் 23–3–1972 தேதிவரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தர படமாட்டாது) கருவூலம் அல்லது, ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D. Remittances III Other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக்கோட்டம், காஞ்சிபுரம், என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts, Under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப் படவேண்டும் மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புளளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச்சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர். பொ. ப. து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். . முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து. செங்கற்பட்டு-
வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 33)

பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1

வேலையின் பெயர் :—செங்கற்பட்டு மாவட்டம், செங்கற்பட்டிலுள்ள தலைமை மருத்துவ மனையில் வெளியிலிருந்து வந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் கட்டடத்திற்கு மேல் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கும் விடுதிக்கான கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்த தாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற் குறிப்பிட்டபணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 29—3—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
முன்வைப்புத் தொகை—ரூ. 5,400.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரை படங்களுடன்:—
ரூ. 20·70. விற்பனை வரி 3½ சதவீதம் சேர்த்து.
முடிக்க வேண்டிய காலம்:—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 10—3—1972 தேதி முதல் 27—3—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D. Remittances III other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax [b] Receipts, Under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம். அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்த வடிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 34)

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித்துறை

திருச்சிராப்பள்ளி வட்டம், த. பெ. எண் 55

திருச்சிராப்பள்ளி–1

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை திருச்சி வட்டம், திருச்சி, அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

தனித்தாளில்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் XXXVII Public works—State Revenue—Miscellaneous மற்றும் "XII—Sales Tax (b) Receipts Under the State Sales—Tax Act—General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வேலையின் பெயர்.	ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்.	பிணைப் பொறுப்புத் தொகை.	ஒப்பந்த முறை.	முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை.	விற்பனை வரி.	ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.	விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
		ரூ.	ரூ.		ரூ.			
1. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக படுக்கைக் கூடம் கட்டுதல்—கூடம் எண் 1.	31–3–1972 மாலை 3–00 மணி.	2,500	மொத்தத் தொகை.	6 மாதங்கள்.	25	0–88	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
2. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக படுக்கைக் கூடம் கட்டுதல்—கூடம் எண் 2.	31–3–1972 மாலை 3–00 மணி.	2,500	மொத்தத் தொகை.	6 மாதங்கள்.	25	0–88	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
3. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக படுக்கைக் கூடம் கட்டுதல்—கூடம் எண் 3.	31–3–1972 மாலை 3–00 மணி.	2,500	மொத்தத் தொகை.	6 மாதங்கள்.	25	0·88	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
4. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில், தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக படுக்கைக் கூடம் கட்டுதல்—கூடம் எண் 4.	31–3–1972 மாலை 3–00 மணி.	2,500	மொத்தத் தொகை.	6 மாதங்கள்.	25	0·88	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
5. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக மருத்துவ மனையும் நிருவாகக் கட்டடமும் கட்டுதல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	1,900	மொத்தத் தொகை.	6 மாதங்கள்.	25	0·88	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
6. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காகக் கழிப்பிடக் கூடம் அமைத்தல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	500	மொத்தத் தொகை.	4 மாதங்கள்.	15	0·53	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
7. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக சமயலறை கட்டடம் கட்டுதல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	450	மொத்தத் தொகை.	4 மாதங்கள்.	15	0·53	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
8. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக வேலைக் கூடம் கட்டுதல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	950	மொத்தத் தொகை.	4 மாதங்கள்.	15	0·53	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
9. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக மேற்பார்வையாளரின் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	400	மொத்த தொகை.	4 மாதங்கள்.	15	0·53	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
10. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காக மருந்து கொடுப்பவருக்கும் செவிலியருக்கும் இரண்டு குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	380	மொத்தத் தொகை.	4 மாதங்கள்.	15	0.53	15–3–1972	31–3–1972 மாலை 3–30 மணி.
11. திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்காகக் கடைநிலை ஊழியருக்குக் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்.	31–3–1972 மாலை 3–00 மணி.	700	மொத்தத் தொகை.	4 மாதங்கள்.	15	0·53	15–3–1972.	31–3–1972 மாலை 3–30 மணி.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த· 15)

பொதுப்பணித் துறை

எண் வ1/3024/72·3 நாள் 19–2–1972

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் (கால்வாய் வட்டம்).

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக, 30—3—1972 அன்று மாலை 3-00 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், கால்வாய் வட்டம். மாக்கினாம்பட்டி (அஞ்சல்), வழி பொள்ளாச்சி, அவர்களால், அவர் தம் அலுவலகத்திற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

எண், வேலையின் விவரம்.	கட்டுத் தொகை.	ஒப்பந்த வடிவம்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (விற்பனை வரி உட்பட.)
	ரூ.		ரூ.
1 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 0/0-ல் இருந்து 1/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	3,100	கே. 2	5·18
2 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 1/0-ல் இருந்து 2/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	4,800	கே. 2	5·18
3 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 2/0-ல் இருந்து 3/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	4,700	கே. 2	5·18
4 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 3/0-ல் இருந்து 4/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	5,000	கே. 2	5·18
5 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 4/0-ல் இருந்து 5/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	4,700	கே. 2	5·18
6 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 5/0-ல் இருந்து 6/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	4,850	கே. 2	5·18
7 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 6/0-ல் இருந்து 7/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	5,050	கே. 2	5·18
8 அமராவதி பிரதான வாய்க்கால் மைல் 7/0-ல் இருந்து 8/0 வரை லைனிங் (Lining) செய்தல்.	4,950	கே. 2	5·18

2. ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே (30—3—1972) உடனடியாக மேற்குறிப்பிடப்பட்ட இடத்தில் ஒப்பந்ததாரர்கள், அல்லது அவர்கள் ஏஜண்டுகள் முன்னிலையில் திறக்கப்படும்.

3. ஒப்பந்தம் குறித்த நிபந்தனைகளும், ஒப்பந்தப் பத்திரங்களும், மேலாளர் நிருவாகப் பொறியாளர் அலுவலகம், உடுமலைக் கோட்டம், உடுமலை அவர்களிடம் இருந்து, நேரிலோ, அல்லது, தபால் மூலமாகவோ வேலை நாட்களில், அலுவலக நேரத்திற்குள் 28—2—1972 முதல், 28—3—1972 வரை, எழுத்து மூலமாக விண்ணப்பித்து அதனுடன் ஒப்பந்தப் புள்ளிப், பத்திரங்களின் விலைக்காக ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்கியிலோ "P. W. Remittances III-Other Remittances" என்ற தலைப்பில் நிருவாக பொறியாளர், உடுமலைக் கோட்டம், உடுமலை, அவர்கள் கணக்கிலும், ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களுக்கும் விற்பனை வரி சர்சார்ஜ் உட்பட ரூ. 0·18-ஐ "XII Sales Tax (b) receipts under Sales Tax Act, General Sales Tax" என்ற தலைப்பிலும் செலுத்தி சலான்கள் அனுப்பி, பெற்றுக் கொள்ளலாம்.

28—3—1972-க்குப் பின் வரப் பெற்ற ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் பொதுவாக கவனிக்கப்படமாட்டாது.

4. கூடுதலான தகவல்கள் எதும் தேவையெனில், இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில், வேலை நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
ப.ஆ.தி. கால்வாய் வட்டம்,
பொள்ளாச்சி.

(த. 16)

தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடிமுத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப்புள்ளிகள் 29–3–1972 அன்று மாலை 4 மணி வரை ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4.30 மணிக்குத திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியாளர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

	முன்வைப்புத் தொகை. ரூபாய்.
1. ஜெயராஜ் ரோட்டில் புதிதாக ஆர்ஜிதம் செய்த பகுதியை விரிவு படுத்தும் வேலை ..	300
2. எஸ். எஸ். பிள்ளை தெரு சந்தையில் கக்கூஸ் கட்டும் வேலை ..	125

கே. என். கிருஷ்ணமூர்த்தி,
பொறியாளர்.

(த.2)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடார்க்காடு மாவட்டம்—வாலாஜா பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 22—3—1972 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 22—3—1972 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணி அளவில் அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 7—3—1972 முதல் 20—3—1972 வரை அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்.

(த.35)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திற்காகவும், அதன்சார்பிலும் கீழ் காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் எண் 17 சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியசெயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 22-3-1972 பிற்பகல் 3.00 மணிவரைபெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—இரும்பு வால்வுகள் வழங்குதல் சம்பந்தமாக.
ஒப்பந்த வகை:—மொத்த தொகை.
முன்வைப்புத் தொகை:—ரூ. 600 (ரூபாய் அறுநூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சிஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப் படவேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—மூன்று மாதங்கள்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 5.18 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து, 14, ராமமூர்த்தி ரோடு, சின்ன சொக்கிகுளம், மதுரை என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17-3-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம், மதுரை-2.

(த.3)

பொதுப்பணித்துறை
ரத்துச் செய்தல்

வேலையின் பெயர்:—வடார்க்காடு மாவட்டம் செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்குறிப்பிட்ட வேலைக்காக அழைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு ரத்து செய்யப்படுகின்றது.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்.

(த.14)

பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2 அவர்கள் சார்பில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம் அவர்களால் வரும் இரண்டு வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துத் துறையிலுள்ள மத்திய தொழில் பட்டறை, குரோம்பேட்டையிலுள்ளது, சிற்றுண்டிசாலை ஒன்று குத்தகைக்கு விடப்படும். அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் 31-3-1972 மாலை 3 மணி வரை கட்டடப் பொறியாளரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும், ரூ. 1·04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித்தரப்பட மாட்டாது.

(த. 11)

நிருவாக இயக்குநர்.

பொதுப்பணித் துறை
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்

பார்வை எண்: த.எ. 11610-70-வபி/வ10/நாள் 18-2-1972.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை காவிரி வளர்ச்சி பணி வட்டம், தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 23-3-1972 மாலை 4-00 மணி வரை கீழ்க் கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தவகை கே. 2.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	பிணைப் பணம்.	ஒப்பந்தப் பத்திரம்	விற்பனை வரி.
	ரூ.	ரூ.	ரூ.
1 இட்டியனை உப்பனூர் ஆற்றை எஸ். 0 மீ. லிருந்து 2,000 மீ. வரை அபிவிருத்தி செய்தல்.	800	10·00	0·35
2 இட்டியனை உப்பனூர் ஆற்றை எஸ். 2,000 மீ. லிருந்து 4,000 மீட்டர் வரை அபிவிருத்தி செய்தல்.	1,300	10·00	0·35
3 இட்டியனை உப்பனூர் ஆற்றில் எஸ். 7184 மீட்டரில் ஒழுங்கை கட்டுதல்.	4,700	10·00	0·35

1 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்—7-3-1972.

2 பிணைப்பணம் (EMD) நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை திட்ட ஆய்வுக்கோட்டம் மாயூரம் அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட், என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். விவரமான ஒப்பந்த அறிக்கையில் கண்டுள்ள இதர வகைப்படியும் பிணைப்பணம் கட்டலாம்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை" என்னும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திட்ட ஆய்வுக் கோட்டம், மாயூரம் என்னும் கணக்கில் கட்டப்படவேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் XII விற்பனை வரி "பி" பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் "பொது விற்பனை வரி" என்னும் தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 21-3-1972 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின் நேர் உதவியாளர் காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். அதன் பிறகு வரும் விண்ணப்பங்கள் பொதுவாக கவனிக்கப்படமாட்டாது.

அ. சேஷாத்ரி.
தனி மேற்பார்வைப் பொறியாளர்.

(த.9)

உழவர் பெருமக்களுக்குத் தொண்டு செய்யத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் அடைந்திருக்கும் புதியதொரு வாய்ப்பு

பூச்சி மருந்து உற்பத்தித் திட்டத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் உயர்திரு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 17-2-1972-ஆம் தேதி துவக்கிவைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மை
தொழில் கழகம்

சுமார் 10 இலட்சம் ஏக்கருக்காகத் தயாராகும் என்ட்ரின் 20 சதக் கலவையின் முதற் பகுதி விற்பனைக்காக வேளாண்மைத் துறையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

மறு ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை
சென்னை வட்டம், சென்னை-5

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23—3—1972 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	முன்வைப்புத் தொகை.
1 பூஞ்சேரியிலிருந்து சதுரங்கப்பட்டினம் கூரப்பன் சாலையை இணைக்கும் கிழக்கு கடற்கரை சாலையை (கி.மீ. 0·0 முதல் 8·4 வரை) மேம்பாடு செய்தல்	ரூ. 5,740

ஒப்பந்தங்கள் 23—3—1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைபடங்கள் முதலியனவற்றை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 25·75 செலுத்தி 15—3—1972 முதல் 22—3—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ் வங்கி" யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

ஜி. ஜார்ஜ்ஜேகப்,

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை)
சென்னை வட்டம்.

(த. 22)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் தமிழக பொதுப் பணித் துறை தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 29—3—1972 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(1) வேலையின் பெயர்:—நண்டலாற்றிலிருந்து பிரியும் எ. 14 இடியார் கால்வாய் 0/0 கி.மீ. முதல் 7·520 கி.மீ. வரை நவீனப்படுத்துதல்.

(2) ஒப்பந்த வகை.— கே. 2.

(3) வைப்புத் தொகை.—ரூ. 3,000.

(4) ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித் துறை செலுத்துத் தொகை என்ற தலைப்பின் செயற் பொறியாளர் காவேரி கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்)—ரூ. 20.

(5) விற்பனை வரி (அரசினர் கருவூலங்களில் XII. விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்)—ரூ. 0-70.

(6) ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள்—13—3—1972.

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 20.)

ஒப்பந்தப் புள்ளி

வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிட்ட உறையில், எண் 17, சா.பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரிய மேற்பார்வை யாளர்கள் அவர்களால் 29—3—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.

வரிசை எண், வேலையின் பெயர்.	ஒப்பந்த வகை.	முன் வைப்புத் தொகை. ரூ.	வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.	ஒப்பந்தப் படிவங்களின் விலை.
1 மதுரை வடிகால் திட்டம் சுட்டமண் தனி உறுப்புகள் (S. W. upright and upleft) வழங்குதலும் ஒப்படைத்தலும்.	மொத்தத் தொகை.	1,100	6 மாதங்கள்.	ரூ. 15·56
2 திருச்சி வடிகால் திட்டம் சுட்டமண் தனி உறுப்புகள் (S. W. upright and upleft) வழங்குதலும், ஒப்படைதலும்.	டி	2,050	டி	ரூ. 15·56

முன்வைப்புத் தொகையைக் கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் வரிசை எண் ஒன்றுக்கு, மதுரை நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்) பெறும் வகையிலும், வரிசை எண் இரண்டிற்கு திருச்சி நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம்) பெறும் வகையிலும் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்த வடிவங்கள் வேண்டுவோர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரிடமிருந்து 19, இராமமூர்த்தி சாலை, சின்னசொக்கிகுளம், மதுரை என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் வரிசை எண் ஒன்றுக்கும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் பி-15, தில்லை நகர் மெயின்ரோடு, தில்லைநகர், திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் வரிசை எண் இரண்டிற்கும், அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 23—3—1972 மாலை 5 மணி வரை ஒப்பந்தப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்.

குடிநீர் வடிகால் வாரியம்,
செயல்வட்டம், மதுரை-2.

(த. 17)

ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் அச்சகத் துறை, சென்னை-1.

தமிழ்நாடு அரசினர் எழுதுபொருள் அச்சகத்துறைக்காக "படச் சுருள்" (**Process films**) விற்பனை செய்வதற்கான அரசு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி எழுதுபொருள் அச்சகத் துறை இயக்குநரால் 31—3—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தப்பட்ட முழு விவரங்களைத் தேவை உள்ளவர்கள் மேற்படி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்.

அரசாங்க எழுது பொருள் அச்சுத்துறை
இயக்குநர் அலுவலகம், சென்னை-1

(த. 7)

காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்

பார்வை எண் ந. எ. 11203/70/வ்பி/வ10 நாள் 18–2–1972.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை, காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 24–3–1972 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த வகை கே. 2.

எண்ணும் வேலையின் விவரமும்.	பிணைப்புப் பணம். ரூ.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. ரூ.	விற்பனை வரி. ரூ.
மஹிமாலயார் உப்பனார் வடிகாலை எல். எஸ். 0 மீட்டரிலிருந்து 6,000 மீட்டர் வரையும் கண்ணப்ப மூலை வடிகாலையும் சீர்திருத்த வேலை செய்தல் பற்றி.	7,600	10	0.35

1 ஒப்பந்தப் பத்திரங்கள் இடைக்க ஆரம்பிக்கும் நாள் 6–3–1972.

2 பிணைப்பணம் **EMD** நிருவாகப் பொறியாளர், பொதுப்பணி
துறை வடிகால் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கி
அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யு டெபாசிட்" என்ற தலைப்பி
கட்டப்பட வேண்டும். அல்லது விவரமான ஒப்பந்த அறிக்கையி
கண்டுள்ளபடியும் பிணைப்பணம் கட்டலாம்.

3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொது
பணித் துறை—செலுத்துத் தொகை மற்றையச் செலுத்து
தொகை" என்னும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொது
பணித் துறை, வடிகால் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கி
செலுத்த வேண்டும்.

4 விற்பனை வரி அரசாங்க கருவூலத்தில் X11-விற்பனை வரி "பி
பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் "பொ
விற்பனை வரி" தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5 ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 22–3–1972 தேதிக்கு
தனி மேற்பார்வைப் பொறியாளரின் நேர் உதவியாளர், காவி
வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்
வேண்டும். அதன் பிறகு வரும் விண்ணப்பங்கள் பொதுவாக
கவனிக்கப்பட மாட்டாது.

அ. சேஷாத்ரி,

தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர்.

(த. 6)

ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்., A 1601

தலைமை அலுவலகம்: 12, கீழச் சாத்தாத் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.

தபால் பெட்டி எண்: 20
தந்தி: 121
தொலைபேசி எண்: 67
ஸ்தாபிதம்: 1942
சேம நிதி ரூ. 4,31,078
செலுத்தப்பட்ட பங்குத் தொகை ரூ. 2,35,989

குறைந்த விலை! கெட்டிச் சாயம்!! நீடித்த உழைப்பு!!!

எங்களிடம் 20S 40S 60S 80S 2/40S 2/60S 2/80S 2/100S வேஷ்டி ரகங்களும், கைலி வேஷ்டி, துண்டு, கர்ச்சீப் ரகங்களும், நூல் & ரயான் கலர் பீஸ் சேலை ரகங்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

எங்கள் சரக்குகள் சென்னை மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கோ. பெருமாள்,
தலைவர்.

சு. ஆணிமுத்து,
செயலாளர்.

அ. நாராயணன்,
உப-தலைவர்.

டைரக்டர்கள்:

L.S.K. மாரிமுத்து, அ. குருவையா, மா. ஆறுமுகம், நா. கலிசன், ஆ. கைலாசசுந்தரம்.

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :

**செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்**

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி :' BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புளியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்**
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரவை
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarash

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரி லிருக்கும் அவரது அலுவலகத்தில் 29–3–1972 மாலை 3–00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரை காப்புச் செய்யப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்:—கல்லணைக் கால்வாயின் தலைப்பில் "தூர் வெளியேற்றும் பொறி மதகு" கட்டுதல்.

2. ஒப்பந்த வகை:— கே. 2

3. வைப்புத் தொகை.—ரூ. 10,000.

4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசாங்கக் கருவூலங்களில் "பொ. பா. செலுத்துத் தொகை III. மற்றைய செலுத்துத் தொகை" என்ற தலைப்பில்—செ. பொ. க. கா. கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கணக்கில் கட்டவேண்டும்.—ரூ. 25.

5. விற்பனை வரி அரசாங்கக் கருவூலங்களில் "ஓ XII விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு—மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ். பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.—ரூ. 0.88.

6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்:—13—3—1972 முதல் 28—3—1972 வரை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 5)

ஏல விற்பனை

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள உபயோகமுள்ள ஜீப் எம். டி. எம். 2654 வாகனம் 22–3–1972-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளர் கூடுதல் தனி உதவியாளர் அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏல சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி

(த. 1)

வேலை வாய்ப்பு

அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்
தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுநருக்குட்பட்ட 6 கிராம மருத்துவ மனைகளுக்கு "ஏ" பிரிவு மருத்துவர்கள் நியமனம் செய்யத் தகுதியுடைய "ஏ" வகுப்பு மருத்துவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 21—3—1972-க்குள் அழைக்கப் படுகின்றன.

மாத சம்பளம்—ரூ. 150.

"ஏ" வகுப்பு மருத்துவர் என்பதற்கு சான்றிதழ் உடையவரும் திடமான ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

பேட்டிக்கு அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டால் வேலையில் வந்து சேருவதற்கு பிரயாணப்படி எதும் இல்லை.

தி. சீனிவாசன், பி. ஏ.,
ஆணையர்,
அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,

(த. 29)

தந்தி : பீவிடெக்ஸ் ஸ்தாபிதம் : 1947

போன் : ஆபீஸ் : 24016
காலனி : 24035

A. 1883, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

18-19, சின்னக்கடை முத்தையாப் பிள்ளை சந்து (தெற்கு வாசல்), மதுரை-1.

- நவீன ரகம், உறுதியானது
- உத்திரவாதமுள்ள சாயம்
- குறைந்த விலை
- யாவருக்கும் நம்பிக்கையும் திருப்தியும் தருவது

—எங்கள்—

கைத்தறி சேலைகள்

நமது சங்கத்தில் சொந்தத்தில் சாயம் போடப்பட்டு, கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 80 நிர்., 100 நிர்., நூல் & கோடம்பாக்கம் சேலை தினுசுகள் 5, 6, 7, 8, 9, & 10 கெஜங்களில் கிடைக்கும். மற்றும் எங்கள் தினுசுகள் சென்னை ராஜ்ய எல்லாக் கோவாப்-டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், கைத்தறி மாளிகைகளிலும், கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளிலும் கிடைக்கும்.

டைரக்டர்கள் :
குஜ"லுவா. வெ. ரெங்காச்சாரி
ராணி. சு. ஹரிகிருஷ்ணன்
தக்கு. பா. ஜெகந்நாதன்
K. S. கிருஷ்ணமூர்த்தி
T. S. வேதாந்தாச்சாரி

கெஞ்சி ராமலிங்கய்யர்,
தலைவர்.
K. N. ராமமூர்த்தி,
உப-தலைவர்.
C. R. சுந்தரராமன், காரியதரிசி.

தந்தி முகவரி : புளி கோ-ஆப்
நிறுவியது : 19—7—1939

தொலைபேசி எண் : 213
அஞ்சல் பெட்டி எண் : 4

ஏ. 1364, புளியம்பட்டி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

அருப்புக்கோட்டை

இராமநாதபுர மாவட்டம் (தமிழ்நாடு)

திறமை மிக்க எங்கள் சங்க மெம்பர்களால் சொந்தக் கைத்தறியில் தயாரித்த சோமன் சேலை, பருத்தி நூல் ரகங்கள், பட்டு நூல் ஸ்டேபிள் ரகங்களும் மிக நேர்த்தியான முறையில் உள்ளன. ஆந்திரா, ஒரிசா, மைசூர் ஆகிய மாநிலங்களில் எங்கள் சங்க ஜவுளிகள் மிகுந்த நற்பெயர் பெற்றுச் சிறப்புடன் விற்பனையாகி வருகிறது. வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

வித்துவான் சோ. சுந்தரமகாலிங்கம்,
தலைவர்.

பி. குமாரபாண்டியன், பி.ஏ.,
கைத்தறி ஆய்வாளர்-காரியதரிசி.

நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஐவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி-1

FDSNLC946TM

பசுமைப்
புரட்சிக்கும்
பச்சைச்
சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனுக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.

தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19



ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை அதன் முக உறையின்மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம், 34எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என்று முகவுரை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3-00 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னல் திறக்கப்படும்.

எண்ணும் வேலையின் பெயரும்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (விற்பனை வரி உட்பட) ரூ.	கட்டுத் தொகை ரூபாய்	ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசித தேதி
கே.சி. 298எ—கோதையாறு மேல் தங்கலில் உள்ள சின்னக் குட்டியாறு அணையில் ch740' முதல் 890' வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் **(Excavation for Foundation)** பிளாக்கு நெம்பர் **VIII**-லும் **IX**-லும் **ch704'** முதல் 890' வரை அணைக்கப்பட்டு மேல்தளம்வரை கட்டுமான வேலை **(Building Masonry)** செய்தலும்	10-35	20,000	4-4-1972

2. ஒப்பந்தப் புள்ளி செட்டுகளின் நகல்களை (மாற்றத்தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது

3. இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகை **(Earnest Money Depost)** ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் **(cheques)** ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை **(Demand Draft)** முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகளுடன் அனுப்பக்கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்ட நிபந்தனைகள்படி அல்லாத முழுமை பெருத ஒப்பந்தப் புள்ளிகள், கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுடன் கட்டுத் தொகை கட்டியதை இணைத்துக்கொள்ளக் கூறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ, நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணுமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்.

(த. 8)

ஏல விளம்பரம்

ஆலந்தூர் நகராட்சி

கீழ்க்கண்ட குத்தகைகள் ஆலந்தூர் நகராட்சி ஆணையரால் நகராட்சி அலுவலகத்தில் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் தேதி காலை 11-00 மணிக்குப் பகிரங்கமாய் ஏலத்தில் விடப்படும்.

		பொறுப்புத் தொகை. ரூபாய்.
1	ஆடு அறுக்கும் தொட்டி	300
2	மார்க்கட் சந்திலிருக்கும் நகராட்சிக் கடை ஒன்று	50
3	நகராட்சி பெட்டிக் கடைகள்—24	50

வி. ஆர். வரதராசன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
ஆலந்தூர்.

(த.30)

ஒப்பந்தப் புள்ளி

ஆலந்தூர் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்காகவும் பொருட்கள் வழங்குவதற்கும் தனித் தனியாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

		பொறுப்புத் தொகை. ரூபாய்.
1.	நகராட்சி மாடுகளுக்கு வைக்கோல முதலிய தீனிப் பொருட்கள் வழங்குதல்.	2,000
2.	சுகாதார இலாக்காவிற்கு வேண்டிய சுண்ணும்பு நீர் வழங்குதல்.	200
3.	வண்டி வாகனம் இவைகளுக்கான உரிமையாணை தகடுகள் வழங்குதல்.	25
4.	சுகாதாரப் பிரிவிற்கான சாமான்கள் வழங்குதல்	100
5.	நகராட்சிக்குத் தேவையான பாரங்கள் நோட்டீஸ்கள் அச்சு பைண்டிங் வேலை செய்ய.	100
6.	அலுவலகத்திற்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள் வழங்குதல்.	200
7.	நகராட்சி மாடுகளுக்கு லாடம் அடித்தல்	25
8.	பொதுப்பணித் துறைக்கு வேண்டிய சாமான்கள் வழங்தல்.	50
9.	நகராட்சி வண்டிகளை ரிப்பேர் செய்தல்	10

வி. ஆர். வரதராசன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
ஆலந்தூர்,

(த.30அ)

ஒப்பந்தப் புள்ளி

சிவகாசி நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை நகர் மன்ற ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 5—4—1972-ஆம் தேதி புதன் கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். கிடைக்கப்பெறும் ஒப்பந்தப் புள்ளிகள் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்கள் அடங்கிய பட்டியலை ரூ. 10-30 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் விவரம்—சர்வே எண். 301/1, பாகத்தில் நகர் மன்றம் கூடமும், பதிவு வைப்பறையும் மதிப்பீட்டில் உள்ளபடி கட்டுதல், மதிப்பீடு—ரூ. 1,60,000 கட்டுத் தொகை, முதல் தவணை—ரூ. 3,500 இரண்டாம் தவணை—ரூ. 3,500.

எம். அரங்கநாதன், எம். ஏ.
ஆணையர்,
சிவகாசி நகராட்சி.

(த. 28)

முன்னேற்றத்திலும்
செழிப்பிலும்
எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

TANSI

தொழில்
- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இனமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்
- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை யேற்றங்கள்
- கரும்பாலை
- வடிகாலக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்
(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

மின்சார வாரியம்

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்,
வேலூர்-6.

டி. எல்.சி. ஸ்டோர் கொரட்டூர், சென்னை-50 பண்டக சாலையில் "இருக்கும் நிலையிலேயே" விற்கப்படுவதற்காக உள்ள கீழே விவரித்துள்ள பழைய வாகனங்களை வாங்குவதற்கும், மற்றும் அகற்றுவதற்கும் ஆன முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் அழைக்கப்படுகின்றன.

	வரிசை எண்ணும், சாற்றுக் குறிப்பு எண்ணும்.	விவரம்.	எண்ணிக்கை.
1	வி.சி.சி. 1/1972–73	5 டன் லாரி பென்ஸ்.	1 (ஒன்று).
2	வி.சி.சி. 2/1972–73	5 டன் லாரி பெட் போர்ட்.	1 (ஒன்று).
3	வி.சி.சி 3/1972–73	1 டன் பர்கோ வேன்.	1 (ஒன்று).
4	வி.சி.சி. 4/1972–73	பர்கோ வேன்.	1 (ஒன்று).
5	வி.சி.சி. 5/1972–73	"பர்கோ வேன்".	1 (ஒன்று).
6	வி.சி.சி. 6/1972–73	Condemned வில்லிஸ் வேன்.	1 (ஒன்று).
7	வி.சி.சி. 7/1972–73	வில்லிஸ் வேன்.	1 (ஒன்று)

கட்ட வேண்டிய முன் தொகை, வாகனங்களைப் பார்வையிடல் ஆகிய விவரங்கள் அடங்கிய குறிப்புப் பிரதிகளை பிரதி யொன்றுக்கு ரூ. 5 வீதம் செலுத்தி 30-3-1972 தேதி 3 மணி வரை தலைமைக் கணக்காயர், விழுப்புரம் நிர்மான வட்டம், எண் 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு, வடார்க்காடு எண்ணும் முகவரியில் நேரில் பணம் கொடுத்தோ, பணவிடை மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். விலை-ஒப்பந்தங்கள் பெறுவதற்கான கடைசி தேதி 30–3–1972 நேரம் 3 மணி.

மேற்பார்வைப் பொறியாளர்,
விழுப்புரம் நிர்மான வட்டம்
காட்பாடி நகர் விரிவு.

(த. 73)

மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம், ஈரோடு மின் இட்டத்திற்குச் சொந்தமான கீழ்க்கண்ட 1972–73-ஆம் ஆண்டுக்கான வேலைகளுக்கு மூடி முத்திரை இடப்பட்ட ஒப்பந்த விவரங்கள் அடங்கிய உறையின் மேல் "சாமான்களை கையாளுதலும், போக்குவரத்து செய்வதற்குமான ஒப்பந்த விவரம்" என்று எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் 29–3–1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

வேலை எண் 1—ஈரோட்டில் புகை வண்டி நிலையத்திலிருந்தும் போக்குவரத்து லாரி நிலையத்திலிருந்தும் (Lorry Booking Offices) சாமான்களை ஈரோட்டிலுள்ள வாரியத்தின் பண்டக சாலைக்கு கையாளுதலும், சாலை வழியே போக்குவரவு ஏற்றிச் செல்லலும்.

வேலை எண் 2—தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு இடங்களுக்கு இடையே சாமான்களைக் கையாளுதலும், சாலை வழியே போக்கு வரவு ஏற்றிச் செல்லலும்.

ஒப்பந்த விவரங்கள் (Tenders) மேற்பார்வைப் பொறியாளர், ஈரோடு மின் திட்ட அமைப்பு ஈரோடு அவராலேயோ அவரால் அங்கீகரிக்கப் பட்ட அதிகாரிகளாலேயோ மேற்கூறிய அதே நாளில் அதாவது 29–3–1972 மாலை 4 மணி அளவில் அந்த நேரத்தில் அங்கு வந்திருக்கும் குத்தகைதாரர்களின் (Tenderers) முன்னிலையில் திறக்கப்படும்.

குத்தகைக்கான விரிவான எல அறிவிப்பு விவரங்களை (Detailed Tender Notice) தலைமைக் கணக்கர், மின்திட்ட அமைப்பு, 124–ஏ பெருந் துறை சாலை, ஈரோடு-1 அவர்களிடம் விண்ணப்பதாரரின் சரியான தபால் விலாசத்துடன் ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) நேரில் ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் மூலமோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பண அஞ்சல் மூலம் பணத்தை மேற்குறிப்பிட்டவரால் கடைசியாக பெற்றுக்கொள்ளும் தேதி 24–3–1972. இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்படி எல அறிவிப்புகள் மனுதாரர்களுக்கு சாதாரண அஞ்சலில்தான் அனுப்பி வைக்கப்படும். அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட எல அறிவிப்புகள் மனுதாரருக்கு எவ்வகையிலேனும் கிடைக்கப் பெறுமலோ அல்லது தவறிலோ அதற்கு வாரியம் எவ்விதப் பொறுப்பும் ஏற்காது. மேற்படி எல அறிவிப்புகள் மாற்றத்தக்கவையல்ல.

மேலே குறிப்பிட்ட தேதி நேரத்திற்கு முன்பு வந்து சேராத ஒப்பந்த விவரங்களும் (Tender) குறிப்பிட்ட முன் வைப்புத்தொகை (Earnest money deposit) இல்லாமல் வரக்கூடிய ஒப்பந்த விவரங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கீழ்க் கையொப்பமிட்டவர் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்றுக்கொள்ள கட்டுப்பட்டவரல்ல. ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லா ஒப்பந்த விவரங்களையோ (Tenders) எந்தக் காரணமும் காட்டாது நிராகரிக்க கீழ்க் கையொப்பமிட்டவருக்கு முழு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
ஈரோடு மின் திட்ட அமைப்பு
ஈரோடு.

(த. 72)

வருவாய்த் துறை

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தமிழக அரசு அலுவலகங்களில் உள்ள கழிவுக் காகிதங்களை 1972–73-ம் வருடத்திற்குக் கொள்முதல் செய்வதற்கும் அந்தந்த அலுவலகங்களிலிருந்து அகற்றுவதற்கும் ஒப்பந்ததாரர் (Contractor) தேர்ந்தெடுப்பதற்கான மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இராமநாதபுரம் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிக்கு 1972-ம் வருடம் மார்ச்சு மாதம் 25-ம்தேதி பிற்பகல் 2-மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பிவைக்கவேண்டும். முத்திரை வைத்த ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ம் வருடம் மார்ச்சு மாதம் 25-ம் தேதி மாலை 4-மணிக்கு மாவட்ட வருவாய் அதிகாரி அவர்கள் முன்பாக வாவது அல்லது தனி உதவியாளர் முன்பாகவாவது உடைத்துப் பரிசீலனை செய்யப்படும். நிபந்தனைகளும் மற்ற விவரங்களும் இராமநாதபுரம் மாவட்ட அரசிதழ் 14–2–1972-ம் தேதிய சிறப்பு வெளியீட்டைப் பார்க்கவும்.

மாவட்ட வருவாய் அதிகாரி

(த. 70)

மதுரை வீட்டுவசதிப் பிரிவு
(தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மதுரை வீட்டு வசதிப் பிரிவு செயல்படுத்தும் மதுரை கிழக்குப் புறநகர் பகுதியாகிய தல்லாகுளத்தில் 80 அடி சாலையைப் பார்வையாக கொண்டு, 8 வீடுகள் அடங்கிய இரண்டு நான்கு மாடிக்கட்டடங்கள் சகல வசதிகளுடன் நடுத்தர வருமானமுள்ளவர்களுக்குத் தவணை முறையிலும் முழுமை விலையிலும் விற்பதற்குக் கட்டவிருக்கின்றன. வேண்டுவோர் குறிப்பிட்ட மனு படிவத்தில் (எல்லா அலுவலக நாட்களிலும் ரூபாய் ஐந்து செலுத்தி நேரிலும் ரூபாய் ஆறு செலுத்தி தபால் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.). ரூபாய் 750 வைப்புத் தொகையுடன் 15—4—1972 தேதிக்குள் மனுச் செய்யலாம்.

வீட்டின் விவரம்.

வைப்புத் தொகை	ரூ. 750.
மொத்த உத்தேச விலை	ரூ. 31,754.
மாதத் தவணை (25 சதவிகிதம் விலையும் பராமரிப்புத் தொகையும் தவிர).	ரூ. 224.
விஸ்தீரணம்	925 ச. அடி.
கட்ட வேண்டிய வருடங்கள்	20 வருடங்கள்.

நிருவாக அதிகாரியும்,
நிருவாகப் பொறியாளரும்.

ஜவகர் தெரு, காந்திநகர்,
மதுரை-20.

மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

(த.61)

பயிற்சி

கல்வி

சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, சேலம் மாவட்டம் குமாரபாளையம் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுள் தமிழாசிரியர் பயிற்சி வகுப்புச் சேர்க்கை பற்றிய விவரங்களடங்கிய அறிக்கை.

1. சைதை ஆசிரியர் கல்லூரி, குமாரபாளையம் அரசினர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுள் தமிழ்ப்புலவர் பயிற்சி வகுப்பிற் சேர ஆடவ மாணவர்களிடமிருந்து (Men Candidates) மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. அவ்வகுப்பு 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து தொடங்கும்.

2. பயிற்சிக் காலம் :—ஜூன் திங்கள் முதல் தேதி தொடங்கி அக்டோபர் திங்கள் 31-ஆம் தேதி முடிய ஐந்து திங்களாகும்.

3. சேர்வதற்குரிய தகுதிகள் :—முன்பே மொழியாசிரியராகப் பணியாற்றுமல் விண்ணப்பிப்பவர் உயர்நிலைப் பள்ளி நிறைவு வகுப்புத் தேர்வில் கல்லூரியிற் சேர்வதற்கான தகுதியுடன் வெற்றி பெற்றிருப்பவராகவோ, அதற்கான சான்றிதழ் நிறைவு (Completed) பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். முன்னரே பணியாற்றியுள்ள புலவர்களுக்கெனச் சிறப்பான தொரு பொதுக் கல்வித் தகுதி குறிக்கப்பெறவில்லை. ஆனல் அவர்தம் ஆசிரியப்பணி புரிந்த காலமும் பொதுக் கல்வித் தகுதியும் அத்தகையவர்க்கும் பயிற்சிக்கு இடமளித்தல் பற்றிக் கருதப்பெறும். தமிழாசிரியர் பணியில் அமர்த்துவதற்காக அமைக்கப்பெற்றுள்ள தமிழ்நாட்டுக் கல்வி பற்றிய 13-ஆம் விதிகூறும் தகுதிகளையும் விண்ணப்பிப்பவர் மேற்குறித்த தகுதிகளுடன் பெற்றிருத்தல் வேண்டும்.

4. வயது வரையறை :—பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கு விண்ணப்பிப்பவர் 1972-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதியில் 45 ஆண்டு நிறைவுக்குமேல் வயதுடையவராய் இருத்தல் கூடாது.

5. பகுதிக்காலப் பணியாளர்கள் சேர்க்கைக்குத் தகுதி பெருதவராவர்.

6. 1956 டிசம்பர்த் திங்கள் 12-ஆம் தேதியிட்ட டி. எண். 2217 எண்ணுள்ள அரசாணையின்படி, தமிழ்ப்புலவர் பயிற்சி பெறும் அட்டவணைப்படுத்தப்பட்ட வகுப்பு (S. C.) தாழ்த்தப்பட்ட பின்தங்கிய வகுப்பு (B. C.) மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 (இருபது ரூபாய்) உதவித் தொகை (தேவையான சான்றிதழ் களைச் சமர்ப்பிப்பதின் பேரில்) வழங்கப்பெறும்.

7. வெளிமாநிலத்திலிருந்து சேர்க்கப்பெறும் புலவர் மாணவர் பயிற்சி முழுமைக்கும் கட்டணமாக ஐம்பது ரூபாய் கட்டவேண்டும்.

8. பயிற்சியின் முடிவில் நடைபெறும் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்க்கு அதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கப்பெறும். கல்லூரி வேலை நாட்களில் 75 சதவிகிதம் வகுப்புக்கு வாராத மாணவர்களும், புலவர் பயிற்சி வகுப்புப் பொறுப்புப் பேராசிரியர், கல்லூரி முதல்வர் ஆகியோர் தம் நற்கருத்தையும் உளநிறைவையும், பெறும் வகையில் நடந்து கொள்ளாதவரும் பயிற்சியை முழுமையாகவும் குறையின்றியும் பெற்றவர்களாகக் கருதப்பெறமாட்டார்கள்.

9. பயிற்சிபெறும் மாணவர்க்குப் பயிற்றும் பயிற்சி உண்டு. அவர்கள் கல்விச் சுற்றுலா, பாசறைப் பயிற்சி முதலியவற்றையும் மேற்கொள்ளல் வேண்டும்.

10. கீழே குறித்துள்ள சான்றிதழ்களின் படிகள் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரின் ஒப்புதல் (Attested) செய்யப்பெற்று இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்பெற வேண்டும்.

1. பொதுக்கல்வித் தகுதிச் சான்றிதழ்.
2. பள்ளி இறுதிவகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் சான்றிதழ்.
3. இனச்சான்றிதழ் Community Certificate.
4. வித்வான்/பண்டிதம் சான்றிதழ்.
5. பண்டிதம்/வித்வான் படிப்பில் பெற்ற தேர்வுநிலைக்கான சான்றிதழ்.
6. பணிச்சான்றிதழ்.

11. கல்லூரியுடன் இணைந்த மாணவர் இல்லத்தில் இடம் இருப்பின் மாணவரில்லக் காவலரது முடிவின்படி தகுதிக்குரிய மாணவர்கட்கு இடம் வழங்குவது பற்றிக் கருதப்பெறும்.

12. போதிய தபால் தலைகள் ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதிய உறை ஒன்றை இணைத்தனுப்புவதன் மூலம், விண்ணப்படிவத்தை இக்கல்லூரி அலுவலகத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

13. 5—4—1972-ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டும்

" முதல்வர், சைதை ஆசிரியர் கல்லூரி, சென்னை-15 ".

கே. ஆர். மாணிக்கம்,
முதல்வர், சைதை ஆசிரியர் கல்லூரி.

(த. 65)

ஒப்பந்தப் புள்ளி

கதர் கிராமத் தொழில் துறை

கதர் கிராமத் தொழில் துறையின்கீழ் இயங்கும் தையல் அலகுகளுக்கு 1972–73-ஆம் ஆண்டுக்குத் தேவையான தையல் பொருட்கள் விநியோகம் செய்ய அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 14—4—1972 பிற்பகல் 5 மணி வரை கீழ்க்கண்ட அலுவலரால் ஏற்கப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் 15—4—1972 முற்பகல் 11 மணியளவில் திருப்பூரில் கீழ்க்கண்ட அலுவலரால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி சம்பந்தமான இதர விவரங்கள் அடங்கிய பத்திரங்களை ரூ. 5-ம் அதற்கான விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் ஆகியவைகளை ரொக்கமாகவோ அல்லது கிராஸ்டு வங்கி வரைவாகவோ செலுத்த கீழ்க்கணட அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மண்டலத் துணை இயக்குநர்,
கதர் கிராமத் தொழில்கள்,
18, ஜி. அவனுசி ரோடு,
குமாரன் நகர், திருப்பூர்.

(த·63)

ஏல விளம்பரம்

வனத்துறை

20—3—1972-ஆம் தேதி காலை 10 மணியிலிருந்து மேட்டுப் பாளையம், அரசினர் மரக்கிடங்கில் மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ கீழ்க்காணும் தடிமரத் துண்டுகள் ஏலமிடப்படும்.

1. தேக்கு	509 —	254·961 கனமீட்டர்.
2. வேங்கை	26	12·561 ,,
3. கருமருது	3 —	3·673 ,,
4. அயினி ..	7	9·303 ,,
5. அல்பிசு	32 —	12·006 ,,
6. நிர்கடம்பை	4 —	1·715 ,,
7. தேக்காங்கள் ..	313	

(i) 30 செ. மீட்டர் கீழ்—86.
(ii) 31 செ. மீட்டரிலிருந்து 45 வரை—19.
(iii) 46 செ. மீட்டரிலிருந்து 60 வரை—81.
(iv) 61 செ. மீட்டரிலிருந்து 90 வரை—127.

மற்ற விவரங்களுக்கு மாவட்ட அலுவலர், மத்திய கோவை, கோவை-18 அல்லது வனச்சரக அலுவலர், அரசினர் மரக்கிடங்கு, மேட்டுப்பாளையத்திற்கோ எழுதிப்பெறவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர்,
மத்திய கோவை.

(த. 63)

அறிக்கை

மின்சார வாரியம்

சுருளியாறு நீர் மின்சாரத் திட்டம் பற்றிய அறிக்கை

மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் வட்டத்தில் சுருளியாறு நீர் மின்சாரத்திட்டம் என்னும் ஒரு நீர் மின்சாரத் திட்டத்தைச் செயல் படுத்தத் தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தேசித்துள்ளது. இத் திட்டத்தின்படி, சுருளியாற்றின் முக்கிய உபநதியான எரவாங்கலாறு என்னும் நதியின் வலது கரையில் 35 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள ஒரு மின்சார நிலையம் நிறுவப்படும்.

இத்திட்டத்தின் கீழ்க்கண்ட அணைகளும் நீர்ச் சுரங்கப்பாதைகளும் மற்றும் நீர் அழுத்தக் குழாய்களும் நிறுவப்படும் :—

1. ஹைவேவீஸ் ஆற்றின் கிழக்குப் பகுதியில் ஒரு நீர்த்தேக்க அணை.

2. ஹைவேவீஸ் ஆற்றில் ஹைவேவீஸ் அணைக்குக் கீழ்ப் பகுதியில் ஒரு திசை திருப்பு மதகு.

3. மணலாற்றில் ஒரு நீர்த்தேக்க அணை.

4. வெந்நீராற்றில் ஓர் அணை.

5. வெந்நீராற்றில் ஒரு திசை திருப்பு மதகு.

6. எரவாங்கலாற்றின் முன் அமைவான ஓர் அணை.

7. மேற்குறிப்பிட்ட அணைகள், மதகுகள் ஆகியவைகளை ஒன்றோடொன்று இணைக்கத் திருப்பு நீர்ச் சுரங்கப் பாதைகள், ஹைவேவீஸ் மதகிலிருந்து ஹைவேவீஸ் அணைக்கு நீரேற்றுக் குழாய்கள் ஆகியவை.

8. முன் அமைவான அணையிலிருந்து ஸர்ஜ் ஷாப்டு வரை செல்லும் அதிக அழுத்த நீர்ச் சுரங்கப் பாதை, ஸர்ஜ் ஷாப்டிலிருந்து வால்வு நிலையம் வரை செல்லும் குழாய் பதித்த நீர்ச்சுரங்கப்பாதை ஆகியவை.

9. வால்வு நிலையத்திலிருந்து மின்சார உற்பத்தி நிலையம் வரை செல்லும் பென்ஸ்டாக் குழாய்கள் ஒரு வரிசை.

10. 35 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு மின்னுற்பத்தி இயந்திரமும் அதன் துணைக்கருவிகளும் கொண்ட ஒருமின்சார நிலையம் ஆகியவை.

இந்த மின்சார நிலையம் 110 கிலோவோல்ட் மின் பாதை மூலமாகப் பெரியாறு என்னுமிடத்தல் தமிழ்நாட்டு மின்சாரக் கூட்டிணைப்புடன் இணைக்கப்படும்.

இந்தத் திட்டத்திக்கு ரூ. 656 இலட்சம் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு நிகர வருமானம் ரூ. 54·01 இலட்சம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1948-ஆம்ஆண்டின் மின்சாரம் வழங்குதற் சட்டத்தின் 29(1)-வது பிரிவின்படி அந்த அறிக்கை பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப் படுகிறது. இத்திட்டத்தால் ஈடுபாடுடையவர்கள் இதுபற்றித் தங்கள் கருத்துக்கள் ஏதேனும் இருந்தால் அவற்றைத் தலைமை மின்சாரப பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், 157, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு, இவ்வறிக்கை வெளியான இரண்டு மாதங்களுக்குள், எழுத்து மூலமாகத் தெரிவிக்கலாம்.

தலைமை மின்சாரப் பொறியாளர்,
157, அண்ணா சாலை
சென்னை-2.

(த.77)

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27-3-1972 மாலை 4 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன.

வேலையின் பெயர்:—நகர மன்ற நூற்றாண்டுவிழா மண்டபத்திற்கு உட்காரும் வசதிகள் செய்ய ஒப்பந்தப்பத்திரத்தின் விலை ரூ. 3.
வேலையின் மதிப்பு:—ரூ. 40,000.
வைப்புத்தொகை:—ரூ. 940.

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

(த.83)

பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர்.—சென்னை அண்ணா நகரில் காலியாக உள்ள இடத்தில் கிடங்கு ஒன்று அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுனருக்காகவும். அவர் சார்பிலும், மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 24-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. சென்னை செங்கற்பட்டு மாவட்டம், சேப் பாக்கம், சென்னை-5 அவர்களால் 24-3-1972 மாலை 3-15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் படிவம்—மொத்தத்தொகை.

2. முன்வைப்புத் தொகை—ரூ. 2,500.

3. ஒப்பந்தப்பத்திரங்களின் விலை—ரூ. 20. 3½ சதவீத விற்பனை வரி.

4. முடிக்க வேண்டிய காலம்—3 மாதங்கள்.

5. ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை–செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5ல் கிடைக்கும் நாட்கள்—17-3-1972 முதல் 23-3-1972.

6. ஒப்பந்தப்பத்திரங்கள் பெறப்படும் கடைசி நாள்—24-3-1972.

7. ஒப்பந்தப்பத்திரங்களுக்குரிய விலை "P.W.D. Rmittances III other remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் கட்டிடக் கோட்ட எண் 11 அவர்கள் கணக்கிலும் விற்பனைவரி "XII Seles tax b. receipt under State Sales tax Act—General Sales tax" என்ற தலைப்பிலும் ஒரே சலானில் அரசாங்கக்கருவூலங்களிலோ (அ) இரிசர்வ் பாங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப்பத்திரங்கள் சலானைக் கொடுத்தப் பின்னர்தான் வழங்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப்பத்திரங்களின் விலை திருப்பித் தரமாட்டாது.

8. மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து. சென்னை–செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் ஒப்பந்தப்பத்திரங்களை எவ்விதக் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை தனக்கு வைத்துக் கொண்டுள்ளார்.
9. மற்ற விரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை–செங்கற்பட்டு வட்டம்.

(த. 75)

பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்கு வரத்துக் கழகம் சார்பில், நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அவர்களால், வரும் மூன்று வருடத்திற்கு, பெரம்பூர் பேருந்து நிலையத்திலுள்ள கடை நம்பர் 1–ஐ குத்தகைக்கு, அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், போக்குவரத்து இல்லத்தில், 30-3-1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அந்தக் கடை நம்பர் 1ல் வியாபாரம் நடத்தப்படுவது "டீ வியாபாரம்" . ஒப்பந்தத்திற்கான விதிகள், நிபந் தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப்பொறியாளர், பல்லவா போக்குவரத்துக்கழகம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1-04 கட்டி, எல்லா அலுவலக நாட்களிலும் " பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகளை அதே நாள் 30-3-1972 மாலை 3-30 மணிக்குத் திறக்கப் படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தர மாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 74)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித்துறை

சென்னை செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர் :—சென்னை மருத்துவக் கல்லூரியில் சிற்றுண்டிச் சாலைக்காகக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பில் பொதுப்பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் சென்னை–செங்கற்பட்டு வட்டம் அவர்களால் மேற்கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 28–3–1972 மாலை 3 மணி வரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தகுந்த வகுப்பில் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை–செங்கை வட்டம் அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த விவரம்—மொத்தத் தொகை.—
2. கட்டுத்தொகை.—ரூ. 3,125.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.—ரூ. 20, விற்பனைவரி 3½ சதவீதம்.
4. வேலையை முடிக்கவேண்டிய காலம்.—4 மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் கிடைக்கும் காலம்.—17–3–1972லிருந்து 27–3–1972 வரை.
6. ஒப்பந்தப் புள்ளி பெறும் நாள்.—28–3–1972.

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை விற்பனைவரி ஆகியவை அரசுக்கருவூலத்திலாவது ரிசர்வ் பாங்கியிலாவது **P. W. Remittances III other remittances to the credit of the Exe. Engr. N.P. Division, Madras-5.** என்ற தலைப்பில் கட்ட வேண்டும். விற்பனை வரியும் அதே சலானில் **"XII Sales tax B. receipts under State Sales Tax Act—General Sales Tax"** என்ற தலைப்பில் கட்ட வேண்டும். மேற்கண்ட சலானைக் கொடுத்தால்தான் ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் வழங்கப்படும். இச்சலானின் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ (அல்லது) எல்லாவற்றையுமோ நிராகரிக்கும் உரிமை மேற்பார்வைப் பொறியாளர், சென்னை–செங்கை வட்டம் அவர்களுக்கு உண்டு.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை–செங்கை வட்டம் அவர்கள் அலுவலகத்தில் வேலை நேரங்களில் வந்து அறிந்து கொள்ளவும்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை–செங்கை வட்டம்.

(த.80)

ஏல விற்பனை

மாவட்ட கதர் கிராமத் தொழில்

சென்னை மாவட்ட கதர் கிராமத் தொழில் அலுவலகத்திற்குரிய டெம்போ எம்.எஸ்.எக்ஸ். 7870, 1972 மார்ச்சு 22–3–1972-ஆம் தேதி சென்னை இயக்குநர், கதர் கிராமத் தொழில் அலுவலகம், நெ. 2, சர் தேசிகாச்சாரி சாலை, சென்னை–4 கட்டடத்தில் பிற்பகல் 3 மணிக்குப் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்படி டெம்போவைப் பார்வையிட விரும்புவர்கள் மேலே சொன்ன அலுவலகக் கட்டடத்தில் எல்லா வேலை நாட்களிலும் பார்வையிடலாம். ஏல சம்பந்தமாக விதிகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வ. நயினார் பாண்டியன்,
மாவட்டக் கதர் கிராமத் தொழில்
அலுவலர், சென்னை–32.

(த.79)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22–3–1972-ஆம் தேதி மாலை 3 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கிடரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயர்.	கோட்டம்.	முன்வைப்புத் தொகை.
		ரூ.
1 சேலம் நகராட்சி எல்லைக்குள் சேலம்–திருச்சிராப்பள்ளி சாலையில் மைல் 1/8-ல் திருமணிமுத்தார் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப் படுத்துதல்.	சேலம்.	3,450
2 எட்டிமடை ரயில்வே பீடர் சாலை மைல் 0/2-ல் ஒரு பாலம் கட்டுதல்.	கோயம்புத்தூர்	3,485
3 மதுக்கரை செட்டிப்பாளையம் சாலையில் மைல் 5/1-ல் ஒரு பாலம் கட்டுதல்.	,,	2,975

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்த கோட்டப்பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20 உடன் விற்பனை வரியும் செலுத்தி 15–3–1972 முதல் 21–3–1972 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்த கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகை பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர ரிசர்வு பாங்கு ஆப் இந்தியாவில் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கவேண்டும். தவறினால்ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்–2.

ப. சேக்உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.)

(த.78)

ஒப்பந்தப் புள்ளி

மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 27–3–1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, அஞ்சலிலோ கோரிப் பெறலாம்.

வேலையின் விவரம்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டடங்கள் (9 வேலைகள்).	ரூ. 40,800	ஒவ்வோரு வேலைக்கும் மதிப்பீட்டுத் தொகையில் 5 சத வீதம்.
புதிய பேருந்து நிலையத்தில் புதை சாக்கடைக்கான சாமான்கள் சப்ளை செய்வது மற்றும் கட்டி முடிப்பது.	ரூ. 7,990	

கோ. முருகன், பி. ஏ.,
ஆணையர்.

(த. 84)

ஒப்பந்தப் புள்ளி

குடிசை மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலைக்காக, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிட மிருந்து, நிர்வாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். 2, 35/37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது லேன் பீச், சென்னை–1 அவர்களால், 25–3–1972 அன்று மாலை 3–00 மணி வரை, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும், குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அச் சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். 2 அவர்களால் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் படிவத்தின் விலை (+) விற்பனை வரி (திருப்பித்தர தரப்பட மாட்டாது).
		ரூ.	ரூ.	ரூ.
1. மாநகராட்சிக் கோட்டம் 53-ல் மாதவரம் அய்ரோடில் மேற்கில், டான்பாஸ்கோ உயர்நிலைப் பள்ளியிலிருந்து ஒரு பர்லாங் தெற்கில் மாதவரம் அய்ரோடில் ஜமிலா சந்தில் நான்கு அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.—				
(எ) பிரிவு "எ" ஒன்றில் 16 குடியிருப்புகள் (ஒரு பிளாக்)	4 மாதங்கள்	மொத்தத் தொகை	1,350	15 (+) விற்பனை வரி.
(பி) பிரிவு "பி" ஒன்றில் 24 குடியிருப்புகள் (ஒரு பிளாக்)	9 மாதங்கள்	,,	3,960	20 (+) விற்பனை வரி.
(சி) பிரிவு "சி" ஒன்றில் 32 குடியிருப்புகள் (இரண்டு பிளாக்குகள்)	9 மாதங்கள்	,,	5,235	20 (+) விற்பனை வரி.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். 2, 35/37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது லேன் பீச் சென்னை–1 அவர் தம் அலுவலகத்தில், எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி முதல் மாலை 3–00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை விலை விற்பனை வரியுடன் செலுத்திய ரிசிப்ட் சலானைக் கொடுத்துப் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை, **Personal Deposit Account C.P.D. A/c of the Executive Engineer, Slum Clearance Board, Division II** என்ற தலைப்பிலும், விற்பனை வரியை **"XII Sales Tax B. Receipts under State Sales Tax Act—General Sales Tax** என்ற தலைப்பிலும், ஸ்டேட் பேங் ஆப் இந்தியா, சைதாப்பேட்டை, சென்னையில் செலுத்தலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள், துறையில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட படிவத்திலேயே கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக வந்தாலோ, தவறிப் போய் விட்டாலோ துறை பொறுப்பேற்காது.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமை உண்டு.

கட்டுத்தொகை ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு வடிவத்திலேயே இருக்க வேண்டும். இம்மாதிரிக் கட்டுத் தொகை யில்லாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

எம். ஆத்மநாதன்,
நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 2.

(த. 94.)

ஒப்பந்தப் புள்ளி

அருப்புக்கோட்டை நகராட்சி

கீழே காணப்படும் வேலைகளுக்கு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 23–3–1972 மாலை 4 மணிவரை நகராட்சி ஆணையாரால் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கான விவரத்தையும் ரூ. 1-00 அனுப்பி, இவ்வலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வேலையின் விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
1. நாடார் தெப்பத்தின் கிழக்குக் கரையிலுள்ள 6" விட்ட ஆழக் குழாய்க் கிணற்றை ஆழப்படுத்த.	1,950	50
2. மதுரை ரோடு நெசவாளர் குடியிருப்பிலுள்ள 6" விட்ட ஆழக் குழாய்க் கிணற்றை ஆழப்படுத்த.	2,500	65
3. 1/14 திர் தெருவிலுள்ள குழாய்க் கிணற்றை ஆழப்படுத்த	500	15
4. 4/8 தெருவின் கிழக்குக் கடைசியிலுள்ள கை போரிங் குழாய்க் கிணற்றை ஆழப் படுத்தி குழாய் மாட்ட.	320	10
5. 4/9 தெருவின் கிழக்குக் கடைசியிலுள்ள கை போரிங் குழாயை ஆழப்படுத்தி மாட்ட.	320	10
6. கரு. சொ வீரப்பன் செட்டியார் நகராட்சிப் பூங்காவிற்குத் தென்மேற்கு மூலையிலுள்ள குழாய்க் கிணற்றை ஆழப் படுத்த.	350	10
7. நகராட்சி வார்டுகளில் 67 இடங்களில் பிளாட்பாரத்துடன் கைபோரிங்குழாய் போட.	980 (ஒவ்வொன்றுக்கும்).	25 (ஒவ்வொன்றுக்கும்).

(விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்).

எம். புகழும்பெருமாள், பி.காம்.,
ஆணையர்.

(த.37)

ஒப்பந்தப் புள்ளி

நெல்லை நகராட்சி

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் முனிசிபல் கட்டிடங்களிலுள்ள மின் விளக்குகள் பராமரிப்புக்கான மின்சார பல்புகள், குழல் விளக்குகள் முதலானவைகளை வழங்க மின்சார டீலர்களிடமிருந்து கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரால், 29—3—72-ஆம் தேதி மாலை 4—00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

தெ. ரா. கனகசபாபதி.
ஆணையர்,
திருநெல்வேலி நகராட்சி.

(த.60)

ஒப்பந்தப் புள்ளி

குற்றால நகரியம்

(திருநெல்வேலி மாவட்டம்.)

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் குற்றால நகரிய நிருவாக அதிகாரியால் 29—3—72-ஆம் தேதி மாலை 4.00 மணி வரையில் குற்றால நகரிய அலுவலகத்திற்கு 1972—73-ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருள்கள் சுமார் ரூ. 1,000 மதிப்பிற்கு வழங்கப்பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் ரூ. 25 ஒப்பந்தப் புள்ளி கட்டுத்தொகையாகச் செலுத்தவேண்டும். நல்ல தரமான சாமான்களுக்கான விலையையே ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் கொடுக்கவேண்டும். 29—3—72ஆம் தேதி மாலை 4.30 மணிக்குப் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தும் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். தேவையான எழுது பொருள்களின் பட்டியலும் மற்ற விவரங்களும் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(த.59)

சா. நா. பழனிச்சாமி, பி.ஏ.பி.எல்.,
நிருவாக அதிகாரி.

தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் மற்றும் பல ஜாதிகள்

இடம் :—அரசாங்கத் தடி மண்டி, நாகர்கோவில்.

தேதியும், நேரமும் :—28, 29—3—1972 முற்பகல் 9-00 மணி.

அளவு :—ஏறத்தாழ 1,000 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச் சிறகு அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

(த.58)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை பாம்பன் வட்டம்

ந.க. எண். 24160/71/வ3, தேதி 3—3—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் திருமானூர் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தஞ்சாவூர் அலுவலகத்தில் 24—3—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலைவிவரம்.—முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 67/0 மைல் 41/7)-ல் பாலம் கட்டுதல்

கட்டுத்தொகை.—ரூ. 7,300.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் நமூனக்கள் வரைபடங்கள் முதலியவற்றைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 25·90 செலுத்தி 15-3-1972 முதல் 23-3-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத்தொகையைத் தனிக்கோட்டப் பொறியாளர் திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் தனிக்கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக்கோட்டப்பொறியாளர் திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் பெயரில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

(த·82)

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

ஏல விற்பனை.

வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்

வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள வடக்கு வள்ளியூர், பணகுடி ஆகிய இடங்களிலுள்ள வாரச் சந்தைகளின் 1972–73-ம் ஆண்டிற்கான கட்டணம் வசூல் செய்யும் பாத்தியதையை (1-4-1972 முதல் 31-3-1973) முடிய ஒரு வருடத்திற்கு 13-3-1972-ம் நாள் திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களாலோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளாலோ பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏலம் கேட்க விரும்புபவர்கள் அடியிற்கண்ட கட்டுத் தொகையை ஒவ்வொரு சந்தைக்கும் தனித்தனியே ஏலம் கோருவதற்கு முன் ஏல நிபந்தனைப்படி இவ்வலுவலகத்தில் செலுத்தவேண்டும். மற்ற நிபந்தனைகள் இவ்வூராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். கூடுதல் ஏலம் கேட்பவருக்கு ஏலம் ஜாரி செய்யப்படும். ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனை ஷரத்துக்களுக்குட்பட்டே ஏலம் கேட்க வேண்டும்.

		கட்டுத் தொகை. ரூ.
1	வடக்கு வள்ளியூர் வாரச்சந்தை	400·00
2	பணகுடி வாரச்சந்தை	50·00

(த.66)

ஆணையர்.

ஏல விற்பனை

தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட நோயாளி வண்டி எம்.எஸ்.எக்ஸ்.6154 (வில்லீஸ் ஜீப் 1959-ஆம் வருட மாடல்) கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் கோட்டத்தீயணைப்பு அலுவலர், அலுவலகத்தில் 1972-ஆம் வருடம் மார்ச் மாதம் 27-ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வை இடலாம். விற்பனை நிபந்தனைகளை கீழேக் கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வா· ஜெயபெருமாள்,
கோட்டத்தீயணைப்பு அலுவலர்,
கடலூர்-1.

(த· 48)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

எலி கொல்லி மருந்து தூவும் பம்புகள் (சயனோகாஸ் புட் பம்புகள்) வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 20-3-1972 திங்கட்கிழமை மாலை 4 மணி வரை கோரப்படுகிறது.

விவரம் வேண்டுவோர் நகராட்சி நல அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்..

(த. 31)

ஆணையர்.

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

(மதுரை மாவட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2, நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அலுவலகத்தில் 24—3—1972-ம் தேதி (வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 3-30 (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35-க்கு திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—

தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் உள்ள கி.மீ. 414/4 (மைல் 251/3-ல்) சந்தானவாய்த்தலை ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று புதுப்பித்துக் கட்டுதல். (பழைய கி.மீ. 411/4).

கட்டுத் தொகை.—ரூ. 8,000.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் கிடைக்கும் விலாசம்—கோட்டப்பொறியாளர் —தேசிய நெடுஞ்சாலை கோட்டம்-2, திருச்சி-1.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம், (தேசிய நெடுஞ்சாலை) கோட்டம்-2, திருச்சி-1 விலாசத்திலிருந்து 17—3—1972 முதல் 23—3—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவர நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரை படங்கள் முதலியவற்றைப் பெறலாம்.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிக்கும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2.

(த. 91)

மருத்துவக்கல்லூரி, மதுரை

மதுரை மருத்துவக் கல்லூரிக்குள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அலுவலர்களுக்காக நடத்தப்படும் சிற்றுண்டி (காண்டீன்) விடுதிக்கான அரக்கு முத்திரையிட்டு உறையிடப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 25—3—1972 பிற்பகல் 3-மணி வரை கல்லூரி முதல்வர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த காலம்.—1—4—1972 அல்லது அதிகாரிகளால் குறிப்பிடப்படும் தேதி முதல் 31—3—1973 வரை.

மறு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு விவரங்களும், (விலை ரூ. 5–00 வரி ரூ. 0·18) இதர விவரங்களும் முதல்வர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளப்படும்.

எஸ். கே. கபீர்,
முதல்வர்.

(த· 91)

திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல் நகராட்சி நல அலுவலகத்திலிருக்கும் குப்பை வண்டி, மல வண்டி, தண்ணீர் வண்டி, எ.டி.வி. 5·00×19, இவைகளுக்குத் தேவையான ஸ்பேர் சாமான்கள் வழங்குவதற்கு மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27-3-1972-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4-மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும்.

தேவையான பொருட்களின் பட்டியலையும், இதர ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளையும் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

பி. வீரகேசவன், பி.ஏ.,பி.காம்.,
ஆணையர்,

(த. 87)

கோயம்புத்தூர் நகராட்சி

1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து 1973-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம நாள் முடிய ஓராண்டுக் காலத்திற்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் தேதி புதன்கிழமை மாலை 3-மணி வரை கோரப்படுகிறது. அஞ்சல் வழி அனுப்பப்பெறும் உறைகள் அக்கால வரைக்குள் வராவிடில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(1) வைக்கோல், (2) பருத்திக்கொட்டை, (உகண்டா, கம்போடியா), (3) கடலைப் புண்ணாக்கு, (4) குறுணையுடன் சேர்ந்த துவரம் பருப்புப் பொட்டு, (5) லாடம் அடித்தல்.

ஒப்பந்தப் புள்ளிகள சம்பந்தமாக விவரம் வேண்டுவோர், ரூபாய் இரண்டு நகராட்சிக் கஜானாவில் செலுத்தி, நிபந்தனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 86.)

இராஜபாளையம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு நாளது மார்ச் மாதம் 27-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அடியிற்கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 4-15 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கட்டுத் தொகை ரூ. 895 கட்டவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி படிவங்கள் ரூ. 2-ம் விற்பனை வரி 3 சதமும் கட்டி 25-3-1972 மாலை 4-00 மணி வரை நகர் மன்றப்பொறியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விவரம்:—சாலியர் வடக்குத் தெரு, புதுத் தெரு, வண்ணார் தெரு, அசோக் தியேட்டருக்கு மேற்புறம் உள்ள ரோடு, சங்கரபாண்டிய புரம் கிழமேல் ரோடு, சிவகாமிபுரம், தென் வடல் தெரு, செங்குந்தர் முதலியார் தெரு, தெற்கு வைத்தியநாதபுரம் கிழமேல் தெரு, தென் வடல் தெரு, தோப்புப்பட்டி பாவாடி தெரு ஆகியவைகளில் மெட்டல் விவரிக்க. மதிப்பீட்டுத் தொகை:—ரூ. 36,500.

டி. எஸ். சுப்பையா, பி.ஏ.,
ஆணையர்.

(த. 85)

விருதுநகர் நகராட்சி

நகரில் உள்ள பொது குடிநீர் குழாய்களில் மாட்டுவதற்குத் தேவையான 200 எண்கள் ½" இரும்பு வேஸ்ட் நாட் காக்குகள் (waste not—cocks) வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 30—3—1972 தேதி வியாழக்கிழமை மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 400 பொறுப்புத் தொகை செலுத்தப்படவேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது மனுச் செய்தோ பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. சேவுகபாண்டியன், பி.ஏ.,
ஆணையர்,
விருதுநகர் நகராட்சி.

(த.62)

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இதோ இன்னொரு சாதனை!
தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!
நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை!"
தமிழ் நாட்டில் உருவாகிறது!
தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை
குடும்ப நலத்திட்டப் பணியில்
சிற்றூர்!
குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!
பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்
தென்னார்க்காடு மாவட்டம்
பூத்துறை
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

குடிசைப்பகுதி மாற்று வாரியம்

தேதி 29-2-1972.

கடித எண். எஸ். லி. பி. 3-320-எச். டி..-72.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் புளியந்தோப்பு சாலையிலுள்ள இரேநகர் பள்ளம் குடியிருப்பு பகுதியில் பல அடுக்குக் கட்டடங்கள் (கான்கிரீட் குத்துக்கழிகளுக்கு மேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்ப மிட்டுள்ளவர் 21–3–1972 அன்று பிற்பகல் 3–00 மணிக்கு அப்பாற்படாமல் வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது வேலையின் பெயரையும், ஒப்பந்ததாரர்களின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

வரிசை எண்.	பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் தோராய மதிப்பு. ரூ.	ஒப்பந்த வடிவமும் முன் பணை வைப்புத் தொகை.	ஒப்பந்த பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்பட மாட்டாது).
1	I	40 குடியிருப்புகள் கொண்ட எ, 30 குடியிருப்புகள் கொண்ட பி 1 & பி 2 கட்டடங்கள் கட்டுதல் (கேப்பிங் பீமிற்கு மேல்).	4,20,000	எல். எஸ். ரூ. 6.300	ரூ. 15 மற்றும் விற்பனை வரி ஒவ்வொரு வகைக்கும்.
2	II	30 குடிருப்புகள் கொண்ட பி 3, பி 4 & பி 5 கட்டடங்கள் கட்டுதல் (கேப்பிங் பீமிற்கு மேல்).	3,90,000	எல். எஸ். ரூ. 5,750	ஷை
3	III	30 குடிருப்புகள் கொண்ட பி 6, பி 7 & பி 8 கட்டடங்கள் கட்டுதல் (கேப்பிங் பீமிற்கு மேல்).	3,90,000	எல். எஸ். ரூ. 5,750	ஷை
4	IV	30 குடியிருப்புகள் கொண்ட பி 9, பி 10 & பி 11 கட்டடங்கள் கட்டுதல் (கேப்பிங் பீமிற்கு மேல்).	3,90,000	எல். எஸ். ரூ. 5,750	ஷை
5	V	30 குடியிருப்புக்கள் கொண்ட பி 12, & பி 13, 20 குடியிருப்புகள் கொண்ட சி கட்டடங்கள் கட்டுதல் (கேப்பிங் பீமிற்கு மேல்).	3,40,000	எல். எஸ். ரூ. 5,100	ஷை

ஒப்பந்தப் பத்திரங்களையும் மற்றும் வரைபடங்களையும் 10—3—1972 முதல் 20—3—1972 வரை காலை 10-00 மணி முதல் காலை 4-30 மணிவரை எல்லா அலுவலக நாட்களிலும் நிருவாகப் பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண். 3, தாண்டவராயச் சத்திரம், சென்னை-10 அவர்களிடமிருந்து ஒப்பந்தப் பத்திரங்களுக்குப் பணம் அத்துடன் விற்பனை கட்டிய சலானை வழங்கிய பிறகே பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த பத்திரங்களுக்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சைதாப்பேட்டையில் பெர்சனல் டிபாசிட் அக்கவுண்ட் (பி.டி.எ.சி.) நிருவாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்றுவாரியம், கோட்டம்-3 என்ற தலைப்பிலும், விற்பனை வரியை XII விற்பனை வரி, மாநில விற்பனை வரிச் சட்டம் என்ற தலைப்பிலும் கட்டவேண்டும்.

எக்காரணமும் காட்டாமல் எல்லா ஒப்பந்தங்களையோ அல்லது எந்தவொரு ஒப்பந்தத்தையோ நிராகரிக்க நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

தாண்டவராயச் சத்திரம், கீழ்பாக்கம்,
சென்னை-10.

(த.71)

குடிசைமாற்று வாரியம்

நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கோட்டம் எண் 2.

எண். 35-37, ஜகான்கீர் தெரு, 2-வது லைன் பீச் சென்னை-1

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, உறையின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளின், கோட்டம் எண் 2 நிருவாகப் பொறியாளர், குடிசைமாற்று வாரியம், 35-37, ஜகான்கீர் தெரு, இரண்டாவது லைன் பீச், சென்னை-1 அவர்களால் 27—3—1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

வேலையின் பெயர்.—வாழை மாநகர், வரிசை எண். 208-1, மாநகராட்சிக் கோட்டம் எண். 45-ல் கடைகள் மற்றும் 214 மற்றும் ஒருவர் அறைகள் (Batchelers Room) கட்டுதல், (மூன்று அடுக்குக் கட்டடம்).

வேலை முடிக்க வேண்டிய காலம்.—8 மாதங்கள்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—ரூ. 1,600.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை + விற்பனை வரி (திருப்பித் தரப்பட மாட்டாது).—ரூ. 20 (+) விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், குடிசைமாற்று வாரியம், கோட்டம் எண். 2, 35-37, ஜகான்கீர் தெரு, 2-வது லைன் பீச், சென்னை-1 அவர்தம் அலுவலகத்தில், 20—3—1972 முதல் எல்லா வேலைநாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை, விற்பனை வரியுடன் செலுத்தியதற்கான செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களின் விலை ஸ்டேட் பேங் ஆப் இந்தியா, சைதாப்பேட்டை, சென்னையில், "Personal Deposit Account (P. D. A/c) of the Executive Engineer/Slum Clearance Board, Division II" என்ற தலைப்பிலும், விற்பனை வரி "XII Sales Tax B Receipts under State Sales Tax Act–General Sales Tax" என்ற தலைப்பிலும் செலுத்தலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள், துறையில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட பத்திரத்தில் மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

தாமதமாக வந்தாலோ அல்லது தவறிப்போய் விட்டாலோ துறை பொறுப்பேற்காது.

பெறப்பட்ட ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

கட்டுத் தொகை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு வடிவத்தில் மட்டுமே இருக்க வேண்டும். கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

எம். ஆத்மநாதன்,
நிருவாகப் பொறியாளர்.
(கோட்டம்-2).

(த. 57.)

ஏல விற்பனை

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ஆம் நாள் புதன் கிழமை மாலை 3 மணிக்கு மதுரை நகரிலுள்ள மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஜீப் பதிவு எண். எம்.எஸ்.எக்ஸ். 2778, எச்.பி.15.63, 1958 மாடல் (டிரெயிலர் இல்லாதது) மதுரை மேற்கு மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களால் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் கேட்பவர்கள் ரூ. 100 கட்டுத் தொகை கட்ட வேண்டும். மேற்கொண்டு தகவல்களைப் பெறுவதற்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மதுரை மேற்கு மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஏல நிபந்தனைகள்

1. கண்டம் செய்யப்பட்ட ஜீப் எம்.எஸ்.எக்ஸ்.2778 தற்போதுள்ள நிலையில் கண்டபடி ஏலம் விடப்படும்.

2. மேற்குறித்த ஜீப் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

3. மதுரை மேற்கு மாவட்ட வளர்ச்சி அலுவலர்களால் ஏலம் நடத்தப்படும்.

4. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்பும் நபர்கள் நேரிலோ அல்லது அவரது அத்தாட்சி (பவர் ஆப் அட்டர்னி) பெற்றவர்களோ கலந்து கொள்ளலாம்.

5. ஏலம் கேட்கும் நபர்கள் ரூ. 100 கட்டுத் தொகை கட்ட வேண்டும். கட்டுத் தொகை கட்டாதவர்கள் ஏலம் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6. உச்ச தொகைக்குக் கேள்வி கேட்பவர்கள் பேரில் சாதாரணமாக ஏலம் முடிவு செய்யப்படும். ஆனால், காரணம் எதும் கூறாமல் எந்தக் கேள்வியையும் நிராகரிக்கவும் ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

7. ஏலத்தில் வெற்றி பெறாத நபர்களுக்குக் கட்டுத் தொகை உடனடியாக வாபஸ் செய்யப்படும். ஏலம் எடுத்தவரின் கட்டுத் தொகை ஏலத் தொகைக்குச் சரிக்கட்டப்படும்.

8. உயர் அதிகாரியால் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே ஏலம் முடிவானதாகக் கருதப்படும்.

9. ஏலம் முடிந்ததும் உச்ச கேள்விதாரர் கட்டுத் தொகையுடன் ஏலத் தொகையில் 25 சதவிகிதம் உடனடியாகக் கட்டவேண்டும். மீதித் தொகையை, ஏலம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒரு வார காலத்திற்குள்ளாகக் கட்டிவிட வேண்டும்.

10. மொத்த ஏலத் தொகைக்கு நடப்பு நிலவரப்படி விற்பனை வரி வசூலிக்கப்படும்.

11. 1 முதல் 10 முடிவுள்ள ஏல நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்ட பின்னரும், உயர் அதிகாரியால் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன்பும், ஏலதார் ஏலம் விடப்பட்ட வாகனத்தின் பாகங்களையோ வாகனத்தையோ எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

12. ஏலம் எடுத்தவர் மேலே கூறப்பட்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதில் தவறினால் காரணம் எதும் கூறாமல் ஏலத்தை ரத்துசெய்துவிட்டு மறு ஏலம் நடத்த ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு மறு ஏலம் நடத்தும் பட்சத்தில் ஏற்கெனவே ஏலம் எடுத்து மேற்கூறப்பட்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறியவர் செலுத்தியுள்ள தொகைகளைப் பறிமுதல் செய்வதுடன் ஏற்கெனவே விடப்பட்ட ஏலத்திற்கும் மறு ஏலத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகையையும் வசூல் செய்யப்படும்.

ஆர். ஏ. சீத்தாராமதாஸ்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மதுரை.

(த. 98)

ஏல விற்பனை

காவல் ஆணையாளர் அலுவலகம்

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28-ஆம் தேதி, செவ்வாய்க் கிழமை காலை 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலைக் 25—3—1972 சனிக்கிழமையன்றும் 27—3—1972 திங்கட் கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வை இடலாம்.

காவல் ஆணையர்,
சென்னை-8.

(த. 92)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

திருச்சி மின் இயக்கத் திட்டம், திருச்சி.

மின் துறைப் பொருட்களை ஏற்றிச் செல்வது குத்தகை விளம்பரம்.

அடியிற் கையொப்பமிட்டவரிடம் 24—3—1972 பிற்பகல் 1-00 வரை கீழ்க்கண்ட ஒப்பந்த வேலைகளுக்கான உறையிட்ட குத்தகைகள் (Sealed Teners) வரவேற்கப்படுகின்றன.

சாற்றுக் குறிப்பெண்ணும் வேலை விவரமும்.

TRP/112-71-72,—1—6—1972 முதல் 31—3—1973 வரை கீழ்க்கண்ட இடங்களுக்குப் பொருட்களை ஏற்றிச் செல்வது திருச்சி மத்திய பண்டக சாலையிலிருந்து இதர தமிழகம் முழுவதும் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் துணைப் பண்டகசாலைகளுக்கு மேற்படி துணைப் பண்டக சாலையிலிருந்து திருச்சி மத்திய பண்டக சாலைக்கும் பொருட்களை ஏற்றிச் செல்லுதல்.

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நேரம்—24—3—1972 பிற்பகல் 3-00 மணி.

TRP 113-71-72, 1—4—1972 முதல் 31—3—1973வரை மின் துறை பொருட்களை மத்திய பண்டகசாலையில் கையாள்வதும் மின் துறைப்பொருட்களை திருச்சி ரயில்வே கிடங்கிலிருந்தும் அல்லது திருச்சி ஜங்ஷன் ரோலிங் மில், செங்கணீர்புரம், திருச்சியிலிருந்தும் அல்லது திருச்சி சுற்று வட்டாரத்திலுள்ள எந்த இடத்திற்கும் ஏற்றிச் செல்வது.

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நேரம்—24—3—1972 பிற்பகல் 3-00 மணி.

குத்தகை நிபந்தனைகள் (Tender Conditions) பற்றிய பிரதியும் படிவங்களும், (Forms) ரூபாய் ஐந்து மட்டும் (திரும்பிப் பெறத்தக்கதல்ல) ஒவ்வொரு குறிப்பிற்கும் பண அஞ்சல் மூலமாகவோ, அல்லது நேரிலோ செலுத்தி திருச்சி மின் திட்டத் தலைமைக் கணக்காயர்,(செலவுப் பிரிவு)டமிருந்து பெற்றுக் கொள்ளலாம். குத்தகை நிபந்தனைகள் சாதாரண அஞ்சல் மூலமாகத் தான் அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் பிரதி பிரயாணத்தின்போது தவறினால் மின் சார வாரியம் பொறுப்பு ஏற்காது. குத்தகை நிபந்தனைகள் மாற்றித் தரத்தக்கதல்ல. குத்தகைகள் வந்து இருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 24—3—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி அளவில் திறக்கப்படும். குத்தகை நிபந்தனைகள் 10—3—1972-ஆம் தேதியிலிருந்து 20—3—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருச்சி மின் இயக்கத் திட்டம், திருச்சி-1.

(த. 95)

ஒப்பந்தப் புள்ளி

தமிழகச் சிறைத்துறை

கோவை மத்திய சிறை தச்சுப் பிரிவிற்குக் கீழ்க்காணும் இயந்திரங்கள் வாங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அச்சிறை கண்காணிப்பாளரால் 7—4—1972 பகல் 3-00 மணி வரை வரவேற்கப்பட்டு 8—4—1972 காலை 11-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. **Band Saw 30":1.**
2. **Combined planning, thicknessing, surfacing, Jointing moulding and Rabetting machine : one**

3. ஒப்பந்தப்புள்ளிகள் நியமனம் செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் தான் அனுப்பவேண்டும். ஒரு ஒப்பந்தப்புள்ளி பத்திரத்தின் விலை ரூ. 5-20. ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 300 க்கு முன் வைப்புத் தொகையுடன் அனுப்பவேண்டும்.

4. மேற்கொண்டு விவரங்கள் அச்சிறை கண்காணிப்பாளரிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். வாசுதேவன்,
கண்காணிப்பாளர்.

மத்திய சிறை,
கோவை-18.

(த. 93)

ஒப்பந்தப் புள்ளி

காவல் துறை

தமிழ்நாடு காவல்துறைக்கு, 1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள காலத்திற்குத், தேவையான துணி மற்றும் கருவிகள் பல்வேறு வகைப்பொருட்கள் வழங்க, ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள், மூடி முத்திரையிட்ட உறையில் " சென்னை காவலர்களுக்குத் தேவையான துணி மற்றும் கருவிகள் பல்வேறு வகைப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி " என்று குறிப்பிட்டு, திரு ஸ்ரீகுமாரமேனன், ஐ.பி.எஸ்., உதவி இன்ஸ்பெக்டர்—ஜெனரல் ஆப் போலீஸ்- II, சென்னை-4—க்கு அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, 25—3—1972 சனிக்கிழமை மாலை 4-00-க்குள் வந்துசேருமாறு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரம், ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் தேவையான பொருட்களின் அட்டவணை, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அலுவலகம், சென்னை-4ல், ரூ. 2·06 காசு செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அனுமதிக்கப்பட்ட மாதிரிகள் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அலுவலகம், சென்னை-4ல் எந்த வேலை நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை பார்க்கப்படும்.

மாதிரிகள் அனுப்பியதற்கு ரயில்வே ரசீதுகள் ஏதாவது இருந்தால் உதவி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களுக்கு பதிவும் பெயரைக் குறிப்பிட்டு விலாசமிட்ட பதிவுத் தபாலில் மட்டும் தனியாக அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள், அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 25—3—1972 அன்று மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

கே. ஸ்ரீகுமாரமேனன்,
உதவி இன்ஸ்பெக்டர்-
ஜெனரல்-ஆப் போலீஸ்-II

இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ்
அலுவலகம்,
த.பெ. எண். 601,
சென்னை-4.

(த. 97)

திருவாகப் பொறியாளர் அலுவலகம்,
பொதுப் பணித் துறை,
சிறப்பு கிராம நலப்பணித் திட்டக் கோட்டம்,
தருமபுரி.

நாள் : 2—3—1972.

த.வ.ந.க. எண் : 11479/72.

1. வேலையின் பெயர் பட்டியலில் உள்ளபடி.

2. வேலையை முடிக்கவேண்டிய காலம் பட்டியலில் உள்ளபடி.

3. ஒப்பந்த முறை கே.-2 கோட்டம், தருமபுரி (பொதுப்பணி) சிறப்பு கிராம நலப் பணித் திட்டம், தருமபுரி-3.

4. வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சென்னை ஆளுநர் அவர்கள் சார்பிலும் திருவாகப் பொறியாளர் (பொதுப் பணி) சிறப்புக் கிராம நலப் பணித் திட்டக் கோட்டம் அவர்களால் தருமபுரியிலுள்ள அவர்களுடைய அலுவலகத்தில் 4—4—1972 அன்று மாலை 4-மணி வரை வரவேற்கப்படும்.

5. ஒப்பந்தப் புள்ளி அறிக்கை வேலையின் விவரங்கள் பெற மேலாளர் (பொதுப் பணித்துறை) சிறப்பு கிராமப் பணித் திட்டம், தருமபுரி அவர்களுக்கு விண்ணப்பித்து ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் புள்ளி பாரத்தின் விலையான ரூ. 5-ஐ P.W.D. III O.R. என்ற தலைப்பில் பொதுப் பணித் துறை சிறப்பு கிராமநல பணித்துறை இட்ட கோட்டக் கணக்கிலும், 0·18 பைசாவை XII. S.T. என்ற தலைப்பிலும் கட்டி இரண்டு செலானையும், விண்ணப்பத்துடன் இணைத்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பிப்பெறலாம். ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணத்தைக்கொண்டும் எந்த சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது.

6. ஒப்பந்தப் புள்ளி அறிக்கை பெற விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு 1—4—1972-க்குள் வரவேண்டும். இந்தத் தேதிக்குப் பிறகு விண்ணப்பங்கள் பொதுவாகப் பெறப்படமாட்டாது. ஒப்பந்த பாரங்கள் 20—3—1972-ஆம் தேதி முதல் இடைக்கும். இந்த இலாகாவினால் கொடுக்கப்பட்ட பாரங்களில் மட்டும் தான் ஒப்பந்தம் சமர்ப்பிக்க வேண்டும்.

7. ஒப்பந்த கவருள் இட்டு ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி முத்திரையிட வேண்டும். கவரின் மேல் வேலையின் பெயரை எழுத வேண்டும்.

8. இந்த வேலைக்கான ஒப்பந்த அறிக்கையிலும் பட்டியலிலும், கண்டுள்ள தொகையைக் கட்டுத் தொகையாக ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்டிப் பணம் செலுத்தி ரசீது ஒப்பந்த அறிக்கையுடன் எழுதப்பெற்று சமர்ப்பிக்க வேண்டும். பிரைஸ் பாண்டுகள், செக்குகள் கட்டுத்தொகையாக ஏற்கப்படமாட்டாது.

9. உட்பிரிவில் 8-ல் கூறிய நிபந்தனைகளின்படி இல்லாத ஒப்பந்தம் தள்ளுபடி செய்யப்படும்.

10. எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணமேதும் காட்டாமல் நிராகரிக்க திருவாகப் பொறியாளர் உரிமை அளிக்கப்படும்.

11. ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்ததாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் முடிவு பெற்ற பிறகுதான் திருப்பி அளிக்கப்படும்.

12. ஒப்பந்தம் பெற்றுக்கொண்டபின் வேலையைச் செய்ய வேண்டிய மொத்த மதிப்பில் 2½ சத வீதம் கையெழுத்திடுமுன் செலுத்த வேண்டும்.

13. கட்டுத் தொகை அரசினர் கடன் பத்திரம் சென்னை மின்சார போர்டின் கடன் பத்திரம் 12 வருட தேசிய பாதுகாப்புப் பத்திரங்கள் 20 வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள் இவைகள் அதன் மதிப்புக்கு 25 சத விகிதம் குறைவாகத்தான் ஒப்புக்கொள்ளப்படும்.

14. கட்டுத் தொகை கடன் பத்திரங்கள் மூலம் கொடுத்தால் அதை திருவாகப் பொறியாளர் (பொதுப் பணி) சிறப்பு கிராமப் பணித் திட்டம் கோட்டம், தருமபுரி அவர்கள் பெயருக்கு மாற்றி சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலக ஒப்புதலுடன் ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அப்படி செய்யாவிட்டால் பொதுவாக தள்ளுபடிசெய்யப்படும்.

வேலையின் பெயர்—கேதிரெட்டிப்பட்டி கிராமத்தின் அருகே செட்டி பள்ளத்தின் குறுக்கே இருக்கும் குட்டையைப் பழுதுபார்த்தல்.

கட்டுத் தொகை சலான் மூலம்—ரூ. 3,020.

பத்திரங்கள் மூலம்—ரூ. 3,780.

வேலையைச் செய்து முடிக்கவேண்டிய காலம்—12 மாதங்கள்.

டி. பி. அரங்கநாத ராவ்,
திருவாகப் பொறியாளர், (பொ.ப.து.)
சிறப்பு கிராமப் பணித் திட்ட கோட்டம், தருமபுரி.

(த. 101)

பட்டுக்கோட்டை நகராட்சி

1972—73-ம் ஆண்டுக்கு அலுவலகத்திற்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள், துப்புரவு மாடுகளுக்குத் தேவையான வைக்கோல், தவிடு, பருத்தி விதை, கடலைப் புண்ணாக்கு, மற்றும் நீத்த சுண்ணாம்பு, தெரு விளக்குப் பராமரிப்புக்குத் தேவையான 4 அடி ஒற்றை டியூப், இரட்டை டியூப் லைட்டு பிட்டிங்ஸ், 2 அடி டியூப் லைட்டுகள், பிட்டிங்குகள் போக்கஸ் லைட்டுகள், மர்குரி லைட்டுக்குத் தேவையான பல்பு, கண்டன்சர், சோக், முதலியனவும் மற்றும் தேவையான சகல உபரிப் பொருட்களும், தெரு விளக்குகளுக்குத் தேவையான சகல உபரிப் பொருட்களும், வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18—3—1972-ம் தேதி சனிக்கிழமை மாலை 4-மணி வரையில் நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற இதர அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புபவர்கள் கட்டுத் தொகை செலுத்துதல், மற்றும் இதர நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப் புள்ளி விளம்பரத்தை எழுதிக் கேட்டு அல்லது நேரில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. வெங்கடேஸ்வரன்,
ஆணையர்.

(த.100)

வேலைவாய்ப்பு

தேனி ஊராட்சி

தேனி ஊராட்சி ஒன்றிய தருமாபுரி கிராம வைத்தியசாலையில் மருத்துவராக ரூ. 150 உதவித் தொகையில் பணியாற்ற " ஏ " வகுப்பு (எல்.ஐ.எம்.) அல்லது அதற்கு சமமான தகுதிகள் உடைய மருத்துவர் தேவை. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி தேதி 10—3—1972.

கொ. ரா. சுப்பிரமணியம்,
ஆணையர், ஊராட்சி ஒன்றியம்,
தேனி, மதுரை மாவட்டம்.

(த. 99)

ஒப்பந்தப் புள்ளி

மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 27—3—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரிப் பெறலாம்.

வேலையின் விவரம்.	மொத்த மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.
நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டட வேலைகள். (9 வேலைகள்).	ரூ. 40,800	ஒவ்வொரு வேலைக்கும் மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவிகிதம்.
புதிய பேருந்து நிலையத்தில் புதை சாக்கடைக்கான சாமான்கள் சப்ளை செய்வது மற்றும் கட்டி முடிப்பது.	ரூ. 7,990	ஷை

நகராட்சி அலுவலகம்,
மன்னார்குடி,

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த. 89)

ஒப்பந்தப் புள்ளி

திருநெல்வேலி மார்க்கட் கமிட்டி, கோவில்பட்டி

திருநெல்வேலி மார்க்கட் கமிட்டியின் புதூர், கடம்பூர், கோவில்பட்டி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கான கீழ்க்கண்ட வேலைகள் செய்வதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, புது ரோடு, கோவில்பட்டி விலாசத்திலுள்ள திருநெல்வேலி மார்க்கட் கமிட்டி அலுவலகத்தில் செயலாளர் அவர்களால் 25—3—1972 அன்று பிற்பகல் 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அன்று பிற்பகல் 3 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலை விவரம்.	வேலை மதிப்பு.	காலம்.	கட்டுத் தொகை.
	ரூ.		ரூ.
1 கடம்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 5 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலம், 10 மீட்டர் ஆழத்தில் ஒரு கிணறு வெட்டுதல்.	10,000	மூன்று மாதம்.	250·00
2 புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 5 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலம், 10 மீட்டர் ஆழத்தில் ஒரு கிணறு வெட்டுதல்.	9,500	மூன்று மாதம்.	237·50
3 கோவில்பட்டி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு '120' X 40' அளவில் ஒரு விற்பனைக் கூடம் கட்டுதல்.	1,00,000	ஆறு மாதம்.	2,50-0

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் பாரங்களையும் மற்ற நிபந்த இவ்வலுவலகத்தில் 20—3—1972 முதல் அலுவலக நேரத்தி இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 88)

இரா. பட்டாபி,
செயலாளர்.

மறு ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை

வனப்பொறியாளர் கோட்டம்.

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் " வனப்பொறியாளர், திருச்சி " தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வ வேற்கிறார்.

" சிவகிரி—சிவகிரி சாப்ட் உட் பிளான்டேஷன் சாலை அமைத்தல், 6·1 கி.மீ. சங்கரன் கோயில், வனச்சரகம், திருநெல்வேலி வடக்கு வனக் கோட்டம்."

அச்சாரம் (இ.எம்.டி.) ரூ. 1,230 ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 20—3—1972. நேரம் முறையே மாலை 3-00 மணி ; 3-05 மணி.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை " வனப் பொறியாளர், 1-ஏ, ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1 " என்ற முகவரியிலிருந்து ரூ. 1-04 செலுத்தி வேண்டுகோளின் பேரில் 10-3-1972 முதல் 18-3-1972 வரை அலுவலக வேலை நேரங்களில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 102)

ச. சண்முகசுந்தரம்,
வனப்பொறியாளர், திருச்சி.

ஒப்பந்தப் புள்ளி

வருவாய்த் துறை

நிலவரித்திட்ட " அ " பதிவேடுகள் அச்சடிக்க ஒப்பந்தப்புள்ளி கேட்டல்.

1397 ஊர்களின் நிலவரித்திட்ட " அ " பதிவேடுகள் அச்சடிப்பதற்காக (Foolscap folio-44X68 cm. Pica 10 Point Tamil) சென்னை நகர் மற்றும் வெளியூர்களில் உள்ள தனியார் அச்சகங்களிலிருந்து முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ஆம்) நாள் பிற்பகல் 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி அடங்கிய முத்திரையிட்ட உறையின் மீது " நிலவரித்திட்ட " அ " பதிவேடுகள் அச்சடிக்க ஒப்பந்தப் புள்ளி எனக் குறிப்பிட்டு, நிலஅளவை நிலவரித்திட்ட இயக்குநர், இரண்டாம் தளம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 " என்ற முகவரி எழுதி அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிக்கான நிபந்தனைகள் அடங்கிய படிவங்கள் மற்றும் இதர விவரங்களை இவ்வலுவலகத்திலிருந்து அலுவலக வேலை நாட்களில் காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. சுப்ரமணி,
நில அளவை நில வரித்திட்ட இயக்குநர்,
சென்னை-5.

(த. 108)

ஒப்பந்தப் புள்ளி

புதிய மற்றும் பழைய மெஷின்களுக்கு டான்சி வரவேற்றுக் கொடுக்கிறது.

மர வேலைகள்.—திக்னஸ் பிளான்ஸ், மர வேலை லேத்துகள், சர்குலர்சா, சேண்டிங் மெஷின், டிஸ்க் சேண்டர்.

பவுண்டரி மெஷின்கள்.—குபோலஸ், சேண்டிங் மிக்ஸர்ஸ், டில்டிங் பர்னாஸ், மோல்டிங் மெஷின்கள்.

மெஷின் சாமான்கள்.—லேத்துகள், மில்லிங் மெஷின்கள், டிரில்லிங் மெஷின்கள், பவர் பிரஸ்கள், சேப்பிங் மெஷின்கள், வெல்டிங் மெஷின்கள்.

மற்றவைகள்.—அரைக்கும் மெஷின்கள், போர்ஜ் ஹேம்மர்கள், பவர் ஹாக்சா, ஏர் கம்ப்ரஸர்கள், பர்னாசஸ், டீசல் என்ஜின் மற்றவைகள்.

ஒப்பந்தப் படிவம் மற்றவைகளுக்கு.—துணை மேலாளர் (விற்பனை), தமிழ்நாடு சிறு தொழிற்சாலைகள் கழகம், 35·2, உட்ஸ் சாலை, சென்னை-2க்குத் தொடர்பு கொள்ளவும். கடைசி நாள் 3—4—1972 12-00 மணி மதியம்.

(த. 69)

தொழில் நுட்பக் கல்வித்துறை, கிண்டி, சென்னை-25

பொறியியல் கல்லூரியில் பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பில் சேருதல்

சென்னை, மதுரை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கீழ்க்கண்ட எட்டுப் பொறியியல் கல்லூரிகளில், 1972–73ஆம் ஆண்டில் பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பில் சேருவதற்கு, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. அரசு பொறியியல் கல்லூரிகள்—
   (1) பொறியியல் கல்லூரி, கிண்டி, சென்னை-25.
   (2) அரசு தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்-13.
   (3) அரசு பொறியியல் கல்லூரி, சேலம்.
   (4) அழகப்ப செட்டியார் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி.

2. தனியார் பொறியியல் கல்லூரிகள்—
   1 பி. எஸ். ஜி. தொழில் நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.
   2 கோயம்புத்தூர் தொழில் நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர்.
   3 தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை-15.

3. மண்டலப் பொறியியல் கல்லூரி—
   1 மண்டலப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-15.

2 மேற்கூறப்பட்ட படிப்பில் (course) சேருவதற்கான மனு படிவங்கள் மேற்கூறப்பட்ட பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்களிடம் நேரில் ரூ. 1.00-க்கு கிராஸ் செய்யப்பட்ட அஞ்சல் ஆணையை (1—3—1972-ஆம் தேதிக்கு முந்தியதாக இருக்கக்கூடாது) தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்கள் பெறும் வகையில் செலுத்தி சுய விலாசமிட்ட 33 செ. மீ. 10 செ. மீ. உள்ள உறையில், 65 காசு 5 காசு அஞ்சல் வில்லையும் ஒட்டி உடன் வைத்து அனுப்பப் பெறலாம்.

3. சேர்வதற்கான தகுதி—

கீழ்க்கண்ட தேர்வுகளில் தேறியிருப்பவர்கள் மட்டுமே மேற்கண்ட படிப்பில் சேர்வதற்குக் கவனிக்கப்படுவார்கள்—

1 தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி மாநிலக் குழுவின் சிவில், மெகானிகல் அல்லது எலெக்ட்ரிகல் டிப்ளமோத் தேர்வு அல்லது சென்னை-மதுரை பல்கலைக் கழகத்தில் அதற்குச் சமமாக அங்கீகரிக்கப்பட்ட எந்தத் தேர்வுகளாவது.

2 டிப்ளமா பெறுவதற்கான மற்றும் தகுதி பெற்ற பிறகு அங்கீகாரம் பெற்ற தொழிற்சாலை அல்லது அமைப்பில் 5 ஆண்டு கால செய்முறைப் பயிற்சி அனுபவம்.

குறிப்பு.—இந்தப் படிப்பில் சேரும் நோக்கில் மனுதாரர்கள் ரெகுலர் வேலை வாய்ப்பில் நிரந்தரமாக இருக்கவேண்டும். மற்றும் அந்த வேலை வாய்ப்பில் தங்கள் படிப்புக் காலம் முழுதும் தொடர்ந்து இருக்க வேண்டும்.

எந்தக் கல்லூரியில் மனுதாரருக்கு அட்மிஷன் கிடைக்கிறதோ, அங்கிருந்து 30 கி. மீ. தூரத்திற்கு அப்பால் தங்கியிருப்பார்களானால் யாரும் படிப்பிற்கு சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

4 வயது வரம்பு.—இந்தப் படிப்பிற்கு வயது வரம்பு குறிப்பிடப்படவில்லை.

5 (ஏ) தமிழ் நாட்டைச் சேர்ந்த மனுதாரர்கள் மட்டுமே சேருவதற்கு கவனிக்கப்படுவார்கள்.

(பி) மாநில அரசில் வேலை செய்பவர்கள் இந்த மாநிலத்தில் வசிக்காதவர்களும் விண்ணப்பிக்கலாம். தாங்கள் இங்கு வசிக்காததைக் கவனியாமல் மற்ற மனுதாரர்களுடன் அட்மிஷனுக்குப் போட்டியிடலாம். விண்ணப்பம் தரும் நேரத்தில் இந்த மாநிலத்தில் அவர்கள் பணியாற்றுவார்களேயானால், மனுதாரருக்கு வேலை கொடுத்தவரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி மனுவுடன் வைத்து அனுப்பவேண்டும்.

(சி) இந்த மாநிலத்தில் வாழாத மனுதாரர்கள், பதிவு செய்யப்பட்ட ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளில், தனியார் அல்லது பொது மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிலோ வேலை செய்து வருபவர்கள், மனுக்கள் கொடுக்கும்பொழுது நிர்வாகத்திடமிருந்து பண்ணை அல்லது நிறுவனத்தில் நிரந்தரமாக வேலை செய்பவர் என்பதற்கான சர்டிபிகேட் வாங்கி மனுவுடன் வைத்து அனுப்பி இந்த மாநிலத்தில் வேலை செய்பவர்களைப் போல், தங்கள் இங்கு வாழாததைக் கவனியாமல் மற்ற மனுதாரர்களைப் போலவே போட்டியில் கலந்து கொள்ளலாம்.

(டி) மற்ற மாநிலங்களில் படித்த மனுதாரர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தால், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான சர்டிபிகேட், குறிப்பிடப்பட்ட மனு வடிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

6 மனுதாரர் எங்கு சேர்வதற்கு விரும்புகிறாரோ, அங்கு மேற்கூறப்பட்ட மனுக்கள் பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்களால், மனுக்கள் பெறுவதற்கு 14—4—1972 மாலை 5-00 மணிக்குக் கடைசி நாளாகும்.

மனுதாரர்கள், தங்கள் மனுக்களைச் சரியாகப் பூர்த்தி செய்து, மனுக்கள் பெறுவதற்குக் கடைசித் தேதிக்கு முன்கூட்டியே, சம்பந்தப்பட்ட முதல்வர்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுரை வழங்கப்படுகிறார்கள்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை-25.

(த. 76)

அருப்புக்கோட்டை நகராட்சி

டயர், டியூப்களுடன் கூடியதும், 100 காலன் கொள்ளளவு உள்ளதும் தேக்கு மரத்திலான கேடன் கூடிய (6-00 X 19 ADV. Equipment-disc with 5 holes and 2" square axle)யுமான, 5 தண்ணீர் வண்டிகள் வழங்க மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23-3-1972 மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையரால் வாங்கப்படும். கட்டுத்தொகை ரூ. 100.

எம். புகழும் பெருமாள், பி.காம்.,
ஆணையர்.

(த. 67அ)

ஏல விற்பனை

போடி நாயக்கனூர் நகராட்சி

இந்நகராட்சி லாரி எம். டி. ஏ. 9974-ஐ டிஸ்போஸ் செய்ய முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25-3-1972-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணிவரை ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் 4-30 மணிக்குத் திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 1,00. லாரியைப்பற்றி பார்க்க வேண்டிய வேறு விவரங்களும், ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளும் அலுவலகத்தில் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம், போடிநாயக்கனூர்,

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

(த. 68)

அறிவிப்பு

கல்வித் துறை

அரசப் பட்ட மேற்படிப்பு பேசிக் பயிற்சிக் கல்லூரியில் பி.டி. (Basic) படிப்பில் சேருதல், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.

1972-73-ஆம் ஆண்டில், அரசு பட்ட மேற்படிப்பு பேசிக் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டத்தில், பி.டி. (Basic) படிப்பில் சேருவதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15-ல், 5—6—1972 அன்று மனுக்கள் பெறக் கடைசி நாளாகும்.

அச்சடிக்கப்பட்ட மனு படிவங்களையும் மற்றும் படிப்பு சம்பந்தப்பட்ட புராஸ்பெக்ட்ஸ் (Prospectus) களையும் பெற, மனுதாரர்கள் 50 காசு மணியார்டர் மூலமாகவோ, (எந்தக் காரணத்திற்காக மணியார்டர் அனுப்பப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்) அல்லது முதல்வர், பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15 அவர்கள் பெறும் வகையில் 50 காசு கிராஸ் செய்யப்பட்ட அஞ்சல் ஆணைகளையோ (1—4—1972 ஆம் தேதிக்கு முந்திய தேதியுள்ள அஞ்சல் ஆணைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) அல்லது கல்லூரி அலுவலகத்தில் பணமாகவோ செலுத்தி (1) இரசீது அல்லது 50 காசு செலுத்தியதற்கான அஞ்சல் ஆணை மற்றும் (2) சுய விலாசமிட்ட தேவையான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட (9"X4") உறையையும் உடன் வைத்து சொல்லப்பட்ட கல்லூரி முதல்வருக்கு எழுதி அனுப்பி வைக்கவும்.

இக்கட்டணம் " XXII. Education—F. General (E) Miscellaneous (iii) Other items " என்ற தலைப்பில் செங்கற்பட்டு மாவட்டக் கருவூலத்திலும் செலுத்தலாம், மற்றும் சலான் ரிசிப்ட் விண்ணப்பக் கடிதத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.

எம். பார்த்தசாரதி,
முதல்வர் (பொறுப்பு)
பயிற்சி கல்லூரி,
சைதாப்பேட்டை.

(த. 81 அ)

பயிற்சி
69599

கல்வித் துறை

இந்த மாநிலத்தில் [illegible]களுக்கான குறிப்பிட்ட அரசு[illegible] பயிற்சிக் கல்லூரிகளில் பி.டி. [illegible]படிப்பில் சேருதல்.

1972—73ஆம் [illegible] இந்த மாநிலத்தில் ஆண்க[illegible]ன கீழ்க் கண்ட அரசப் பயிற்சிக் [illegible]களில் பி.டி. பட்டப் படி[illegible]ருவதற்கு 5—6—1972 வரை ம[illegible] வரவேற்கப்படுகின்ற[illegible]

1 ஆசிரியர் கல்லூரி, [illegible]தாப்பேட்டை, சென்னை-15
2 அரசு பயிற்சிக் கல்லூ[illegible] கொமார[illegible]யம் [illegible]லம் மாவட்டம்.
3 அரசு பயிற்சிக் கல்லூ[illegible]
4 அரசு பயிற்சிக் கல்லூரி, [illegible]ண்சிப், வேலூர்-6.

ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15-ல் 5—6—1972 அன்று மனுக்கள் பெறக் கடைசி நாளாகும்.

அச்சடிக்கப்பட்ட மனுபடிவங்களையும் மற்றும் படிப்பு சம்பந்தப் பட்ட புராஸ்பெக்ட்ஸ் (Prospectus) களையும் பெற, மனுதாரர்கள் 50 காசு மணியார்டர் மூலமாகவோ, (எந்தக் காரணத்திற்காக மணியார்டர் அனுப்பப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்) அல்லது முதல்வர், பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை-15 அவர்கள் பெறும் வகையில் 50 காசு கிராஸ் செய்யப்பட்ட அஞ்சல் [illegible] (1—4—1972-ஆம் தேதிக்கு முந்திய தேதியுள்ள அஞ்சல் ஆணைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) அல்லது கல்லூரி அலுவலகத்தில் பணமாகவோ செலுத்தி (1) இரசீது அல்லது 50 காசு செலுத்தியதற்கான அஞ்சல் ஆணை மற்றும் (2) சுய விலாசமிட்ட தேவையான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட (9"×4") உறையையும் உடன் வைத்து சொல்லப்பட்ட கல்லூரி முதல்வருக்கு எழுதி அனுப்பி விண்ணப்பிக்கவும்.

இக்கட்டணம் XXII Education —'F' General (E) Miscellaneous III Other items " என்ற தலைப்பில் செங்கற்பட்டு மாவட்டக் கருவூலத்திலும் செலுத்தலாம். மற்றும் சலான் ரிசிப்ட் விண்ணப்பக் கடிதத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.

என். பார்த்தசாரதி,

முதல்வர் (பொறுப்பு),
பயிற்சிக் கல்லூரி,
சைதாப்பேட்டை.

(த. 81)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—மதுரையில் ஸ்ரீ மீனாட்சி கலைக் கல்லூரியிலுள்ள மகளிர் நிலையான விடுதிக் கட்டடத்தின் மேல் தளம் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை - அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 5-4-1972 மாலை 3 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு, மாலை 4 மணிக்குத் திறக்கப்படும். 27-3-1972 முதல் 3-4-1972 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை:—மொத்த தொகை.

முன்வைப்புத் தொகை:—ரூ. 8,800.

முடிக்கவேண்டிய காலம்:—6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வு வங்கி ஆகியவற்றில் " P. W. Remittances-III other Remittaces" என்ற தலைப்பின்கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடங்கள் கோட்டம், மதுரை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0-75 (காசுகள் எழுபத்தைந்து மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் " XII Sales Tax (d) Miscellaneous " என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்வைப்புத் தொகையையும் கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது " செட்யூல்ட் வங்கிகளின் கால ரசீது டெபாசிட்டு " வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் டிமாண்ட் டிராப்டுகளாகவோ " ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வ. துரைராஜ்.

மேற்பார்வைப் பொறியாளர்
(பொறுப்பு) பொதுப்பணித்துறை,
மதுரை வட்டம், துரை.

(த. 96)

JV
V211m,N72
N72.2
3056

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.

"நீலவான் ஆடைக்குள்
நடமாடும் விண்மீன்கள்;
வண்ணங்கள் பலகோடி
எண்ணங்கள் இன்பம் தரும்:
தறியில் பிறக்கின்ற.
ஆடைகளைக் கண்டிடுவீர்!
உங்களைக் கவர்ந்திடும் ஓர்
கோ-ஆப்டெக்ஸ் புடவை!"

கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

எனக்குப் பிடித்தது

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுதான்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை வாங்குவதே எனது பழக்கம்.

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு லட்சம் ரூபாய் பரிசு பெறுங்கள். *

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,50,000

மொத்த பரிசுகள் 3198

மொத்த வரிசைகள் : மூன்று

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய் (ஒவ்வொரு வரிசைக்கும்)



குலுக்கல் நாள்: 30-3-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/- தான்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 278 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!

[illegible] தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

*3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.